144706

JL
V21154:
19(3m)m.N35
N14.2

ஜப்பானிய சைனியங்கள்.—மார்ஷல்ஸ் (Marshalls).
படகுகள்.—நியூ கினியா கடற்கரை (New Guinea).

பர்மா (Burma).
துருப்பு ஏற்றிய படகுகள்.—ஐராவதி (Irrawaddy).
(12 படகுகள் மூழ்கடிக்கப்பட்டன).
பாலங்கள், போக்குவரத்து இலக்குகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

20—5—44. (சனிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).
பகல்.—ஜெர்மன் விமான நிலயங்கள்—பாரிஸ் (Paris).
ரயில்வே தளங்கள்.—ரெய்ம்ஸ் (Rheims).
விமான நிலயம்.-சாம்பாக்னி (Champagne).
இரவு.—இலக்குகள்—மேற்கு ஜெர்மனி (Western Germany).
சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

இதாலி (Italy).
(6 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).
உதவி.—முன்னேறித் தாக்கும் தரைப்படைகள்.
எதிரி போக்குவரத்துகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.
பாலம்.—ரோமிற்கு வடகிழக்கு.
கப்பல்கள்.—டால்மேஷியன் கடற்கரை.
தொழிற்சாலைகள்.—காஸ்டிகிலியின்ஸிலோ (Castiglioncello).

ருஷ்யா (Russia).
(52 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).
விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).
ஒரு தகவலும் இல்லை.

பர்மா (Burma).
விமான உதவி.—யுத்தம் செய்யும் தரைப் படைகள்.
இலக்குகள்.—பாமோ (Bhamo).
ராணுவ இலக்குகள்.—அரக்கான் (Arakan), கலடான் (Kaladan), மாயூ (Mayu), கொஹிமா (Kohima) பிரதேசங்கள்.

## *விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.*

15—5—44. (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).
2 இடங்கள் இங்கிலாந்தின் தென்கரை.

ருஷ்யா (Russia),
தூரக்கிழக்கு (Far East).
எதிரி விமான நடவடிக்கை இல்லை.

16—5—44. (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia).
தூரக்கிழக்கு (Far East).
எதிரி விமான நடவடிக்கை இல்லை.

17—5—44. (புதன்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia).
எதிரி விமான நடவடிக்கை இல்லை.

தூரக்கிழக்கு (Far East).
ஒரு தகவலும் இல்லை.

18—5—44. (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia),
தூரக்கிழக்கு (Far East).
ஒரு தகவலும் இல்லை.

19—5—44. (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia),
தூரக்கிழக்கு (Far East).
ஒரு தகவலும் இல்லை.

20—5—44. (சனிக்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia).
எதிரி விமான நடவடிக்கை இல்லை.

தூரக்கிழக்கு (Far East).
விமான நிலயம்.—மித்கினு (Myitkyina).

21—5—44. (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia),
தூரக்கிழக்கு (Far East).
எதிரி விமான நடவடிக்கை இல்லை.

# யுத்தக் குறிப்புகள்.

**இதாலியப் போர்முனை.** இதாலியப் போர்முனையில் சுறுசுறுப்பு ஏற்பட்டுவிட்டது. அநேக காலமாக சமாளித்து நின்ற காஸினோவும் சந்நியாசி மடமும் விழுந்துவிட்டன. கஸ்டாவ் அரணுக்காக நடைபெற்ற போரில் நேச தேசத்தார்களுக்கு வெற்றி கிடைத்துவிட்டது. அடுத்தபடியாக ஹிட்லர் அரணும் அநேக இடங்களில் பிளக்கப்பட்டிருக்கிறது. அதுவும் கூடிய சீக்கிரத்தில் விழுந்துவிடும். இனிமேல் ரோமுக்குச் செல்லும் மார்க்கத்தில் இயற்கையான இன்னல்கள் கிடையாது. கிலி பிடித்த ஜெர்மானியர்கள் ஸ்விச் கொடு என்ற மற்றொரு தற்காப்பை அமைத்துவருகிறார்கள்.

இந்த வெற்றி நடவடிக்கையில் அநேக படைகள் ஒத்துழைத்தன. 8-வது படை லிரிப் பள்ளத்தாக்குத் தற்காப்புகளை நொருக்கிற்று. 5-ம் படை ஸான்டா மேரியா

இன்பாண்டாவைப் பிடித்தது. பிரெஞ்சுப் படைகள் ஸான்ஜார்ஜியா, கிரோசியா, ஸாண்டாலூசியா, லேபோர்ஷி முதலிய இடங்களைப் பிடித்தன. கஸ்டாவ் அரணைத் துளைத்தன. போலிஷ் படைகள் சந்நியாசி மடத்தைத் தாக்கிப் பிடித்தன.

ஹிட்லர் கோட்டுக்குச் சமீபத்திலுள்ள பிக்னுடோரா என்னும் கோட்டையைப் பிடித்த புகழ் இந்தியப் படைகளுக்கு உரித்ததாகும். இந்தப் படைகளைப் பாராட்டும் முறையில் 5-ம் படையின் சேனாதிபதியான ஜெனரல் கிளார்க் பின்வருமாறு பேசியிருக்கிறார்.

"கடுமையான குளிரையும், மழையையும் அனுபவித்து, தைரியத்தையும், தியாகத்தையும் வெளிப்படுத்தி இதாலியிலுள்ள இந்தியத் துருப்புகள், நம்முடைய இறுதி வெற்றிக்குத் தயக்கமன்னியில் பூர்ணமான உதவி செய்துவருகிறார்கள். அநேக இதர நேசதேச சேனைகளுடன் கலந்துநின்று அவர்களுக்கு ஏவப்பட்ட அலுவல்களை திறமையுடனும், ஊக்கத்துடனும், ஆயாசமன்னியிலும் அப்படைகள் நடத்திவருகின்றன. ஊக்கமாக போர்புரியும் எதிரியையும், பிரதேச அமைப்பின் அசௌகரியத்தையும், கால நிலைமையின் கடுமையையும் கண்டு கலங்காமல் இந்தியத் துருப்புகள் நல்ல ஒழுங்கு முறை, நாயகம், தனிப்பட்டவர்களின் சொந்த திறம் ஊக்கம் இவைகளிலிருந்து தோன்றும் முன்னேறித் தாக்கும் சக்தியை வெளிப்படுத்திவருகிறார்கள்."

வி வி வி வி வி

**8-ம் படையின் சேவை.** அநேக நாட்களாக அமைதியுடன் சும்மாவிருந்துவிட்டு இப்பொழுது திடீரென்று தாக்க ஆரம்பித்துவிட்டது. இதைப்பற்றி சிறிது வியாக்யானம் செய்யவேண்டியது அவசியமாகும்.

1943-ம் வருஷம் மே மாதம் 12-ம் தேதியன்று டூனிஸியா யுத்தம் முடிந்தது. வட ஆபிரிக்காவிலிருந்து இதாலிய ஜெர்மன் படைகள் விரட்டியடிக்கப்பட்டுவிட்டன. இந்த நடவடிக்கையில் 8-ம் படை ஆபிரிக்கப் பாலைவனங்களில் துரிதமாக முன்னேறி அதிகப் புகழ் பெற்றது. டூனிஸும், பிஸர்ட்டாவும் விழுந்தபின் இதாலிய ஜெர்மன் படைகள் சரண் புகுந்தன. எதிரி பக்கத்தில் 9,17,000 ஜனங்கள் உயிர்துறந்தார்கள். மே மாதம் 12-ம் தேதிக்குப்பின் மத்தியதரைக்கடல் திறக்கப்பட்டது. பாண்டலேரியா, லாம்படூஸா, ஸிஸிலி பிடிபட்டன. இந்த நடவடிக்கைகளில் 8-ம் படை விசேஷப் பங்கெடுத்துக்கொண்டது.

ஸிஸிலி யுத்தத்திற்குப்பின் 8-ம் படை இதாலியில் படையெடுத்தது. இதாலியின் மூன்றில் ஒரு பாகத்தைக் கைப்பற்றுவதிலும் அது விசேஷப் பங்கெடுத்துக்கொண்டது.

லிரிப் பள்ளத்தாக்கில் முகப்பிலுள்ள காஸினோவை 5-ம் படை பிடிக்கமுடியவில்லையென்று ஏற்பட்டபொழுது 8-ம் படை என்ன செய்யப்போகிறதென்று உலகம் பூராவும் ஆவலுடன் கவனித்து வந்தது. ஜெனரல் மாண்ட் காமரி, லெப்டினண்ட் ஜெனரல் லீஸ்ஸிடம் பொறுப்பை ஒப்படைத்தபின் 8-ம் படை அபினைன்ஸ் வழியாகக் கள்ளத்தனமாகச் சென்று காஸினோப் போர்முனையிலுள்ள 5-ம் படையுடன் சேர்ந்துகொண்டது. வடக்கு ஆபிரிக்க சமவெளிகளைப்போல இங்கு போக்குவரத்து சுலபமானதல்ல. இதாலியில் படைகளைக் கொஞ்சம் கொஞ்சமாக மலைகளிலுள்ள பாதைகள் வழியாகவும், அபாயம் பொருந்திய குறுகலான பாகங்கள் வழிகள் மூலமாகவும் கொண்டுபோகவேண்டும். அமைப்புத் திறமையாலும் விமானப்படை உதவியாலும் 8-ம்படையின் துருப்புகள் யாதொரு நஷ்டமன்னியிலும் ராபிடோ நதிக் கரையை அடைந்தன.

இப்பொழுதுதான் காஸினோவுக்கும், டிரேனியன் கடற்கரைக்கும் மத்தியிலுள்ள 30 மைல்கள் கொண்ட போர்முனையில் இரண்டு டிவிஷன் துருப்புகளையும் உபயோகிக்க ஜெனரல் அலெக்ஸாண்டருக்கு சந்தர்ப்பம் ஏற்பட்டது.

ஜெர்மானியர்களும் சும்மாவிருக்கவில்லை. வரப்போகும் சுழல் காற்றை அவர்கள் அறியக்கூடவில்லை. அவர்கள் கஸ்டாவ் அரணை நம்பியிருந்தார்கள். விலாப்பக்கங்களிலும் எங்கு பார்த்தாலும் மலைகள் நிரம்பிய இந்தப் பிரதேசம் எதிரியின் முக்கியமான அரணாக இருந்தது. அதற்குப் பிறகு அடால்ப் ஹிட்லர் அரண் என்ற மற்றொரு தற்காப்பு அமைப்பை ஜெர்மானியர்கள் கட்டியிருக்கிறார்கள். கடற்கரை வழியாக நேசதேசப்படைகள் முன்னேறுதபடி தடுக்க பாண்டைன் சதுப்பு நிலங்களின் ஒரு பாகத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்படுத்திவிட்டான். வட்ரியாடிக் கடற்கரையிலிருந்த துருப்புகளின் ஒரு பகுதியையும் காஸினோவுக்கு எதிரி கொண்டுபோனான். இவ்வளவு தூரம் ஆயத்தம் செய்த பின்னும் அவர்கள் நேசதேசத்தாரின் தாக்குதல்களை சமாளிக்க முடியவில்லை.

50 டிவிஷன் துருப்புகளும், 80,000 குடைத் துருப்புகளும் தென்கிழக்கு இங்கிலாந்தில் படையெடுப்புக்குத் தயாராகயிருக்கின்றனவென்று நடுநிலைமை வகிக்கும் உற்றுநோக்காளர்கள்



அபிப்பிராயப்படுகிறார்கள். படைகளின் பலத்தைப்பற்றி குறிப்பான புள்ளி விவரங்கள் வெளிவரவில்லை. ஆகிலும் இதன் சங்கியை 95,00,000 என்று மிஸ்டர் லிட்டில்டின் மதிப்பிடுகிறார். தேசங்கள் கீழ்கண்டவாறு படைகளை அனுப்பியிருக்கின்றன.

| | |
|---|---|
| கனடா ... | ... 7,50,000 |
| நியூஸிலாந்து ... | ... 1,97,000 |
| தெற்கு ஆபிரிக்கா... | ... 27,000 |
| ஆஸ்திரேலியா ... | ... 8,00,000 |

சாம்ராஜ்ய நாட்டுப் படையில் 2 மிலியன் இந்தியர்கள் கலந்துகொண்டிருக்கிறார்கள். குடியேற்ற நாடுகள் 2½ லக்ஷம் துருப்புகளை அனுப்பியிருக்கின்றன. இதைப்போல வேறு எந்த நாட்டிலும் படைகளிருக்கின்றனவாவென்பது சந்தேகாஸ்பதமாகயிருக்கிறது. இவைகளுடன் 14 மிலியன்களுள்ள அமெரிக்கப்படைகளையும், 20 மிலியன்களுள்ள ருஷ்யப் படையையும் நாம் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

மன்னர் பிரிடிஷ் கடற்படையைப் பார்வையிட்டார். போக்குவரத்துக் கப்பல்களும் சாமான் கப்பல்களும், படைகளையிறக்கும் படகுகளும் ஏராளமாக குவிக்கப்பட்டிருக்கின்றன. பிரிடிஷ் விமானந்தாங்கிக் கப்பல்களில் செல்லும் விமானங்கள் பிரிடிஷ் கடற்படையின் துணைகொண்டு நார்வேக்கு அருகில் இருக்கும் சமுத்திரங்களில் ஜெர்மன் கப்பல்களைத் தாக்குகின்றன.

வி வி வி வி வி

**ஜெர்மனியின் ஆயத்தம்.** பீதி அடைந்த ஜெர்மானியர்கள் அவர்களுக்குத் தெரிந்த ஆயத்தங்களைச் செய்துவருகிறார்கள். ஆகிலும் அடிகள் எந்த இடத்தில் விழுமென்று அவர்கள் அறியமுடியவில்லை. மேற்குப் பக்கத்தில் தற்காப்பின் பொறுப்பாளியான ரண்ஸ்டெட் படையெடுப்பு எந்த நிமிஷத்திலும் துவங்கும் என்று ஒலிபரப்பில் வெளியிட்டிருக்கிறார். ஜெர்மனியிலுள்ள அயல்நாட்டு வேலைக்காரர்கள் கலகம் செய்துவிடுவார்களோ என்று பயந்து வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகிறார்கள். பிரெஞ்சு தொழிலாளர்கள் போலந்துக்கும் ஸெக்கோஸ்லாவேக்கியாவுக்கும், ஆக்கிரமிப்பு ருஷ்யாவுக்கும் அனுப்பப்படுகிறார்கள். படைகள் இறங்கக்கூடிய கடற்கரையின் தற்போதைய நிலைமையைப் பற்றி ஒரு கண்ணோக்காளர் பின்வருமாறு விவரித்திருக்கிறார்.

"படையெடுப்பு கரைக்குப் பின்பக்கத்தில் 30 முதல் 50 மைல்கள் வரை தேசம் பாழாகயிருக்கிறது. நேசதேச விமானங்கள் அந்த இடங்களில் சஞ்சாரம் செய்கின்றன. ஹிட்லரின் ஐரோப்பிய அரணின் இந்தப் பிராந்தியத்தில் ரயில் வண்டிகள் கிடையாது. ஜன நடமாட்டம் கிடையாது. பீரங்கிகளும் இல்லை. ஜெர்மன் விமானப்படை மறைந்துவிட்டது.

"இப்பொழுது காணப்படும் நிலைமை மிகவும் திருப்திகரமானது. எதிரியை அவனுடைய ஸ்தானங்களிலிருந்து நாம் வெற்றிகரமாக துரத்தியடித்திருக்கிறோம். ஒரு பெரிய பிராந்தியத்திலுள்ள விமான தளங்களையும் விமான எதிர்ப்பு நிலயங்களையும் எதிரி கைவிட்டு பின்வாங்கிவிட்டான்.

"அரை மணிக்கு முன்னால் இந்தப் பிராந்தியத்தில் நான் விமானத்தில் சென்றேன். இங்கு ஜன நடமாட்டம் இல்லை. எதிரியின் சண்டை விமானங்கள் எங்களை எதிர்க்கவில்லை. எங்கள் விமானம் மட்டும்தான் ஆகாயத்தில் சஞ்சாரம் செய்தது. சில மாதங்களுக்கு முன்பு நாங்கள் இருப்புப் பாதைகளை நொருக்கச் சென்றபொழுது பல்வேறு லக்ஷியங்கள் எங்களுக்குக் கிடைத்தன. இன்று எங்கு பார்த்தாலும் பாழாக இருக்கிறது. உடைபடாத இருப்புப் பாதைகளில் நடமாட்டம் இல்லை. பொது ஜனங்கள் வெளியேறி விட்டார்கள். ராணுவப் படைகள் தான் அங்கு பலமாக ஊன்றியிருக்கவேண்டும்.

"எல்லா சாதனங்களும் அப்புறப்படுத்தப்பட்டிருக்கின்றன. ரகசிய ஆயுதங்கள் வைத்திருக்கும் நிலயங்கள் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. படையெடுப்பு ஏற்படும்பொழுது அவைகளும் வெடிகுண்டுகளால் தாக்கப்படும். இன்று நம்முடைய விமானங்கள் உண்டுபண்ணியிருக்கும் குழிகள் தான் எங்கு பார்த்தாலும் காணப்படுகின்றன."

மற்றொரு விவரம் பின்வருமாறு: "எதிரிகளின் தேசத்திற்குள் செல்லுவதைவிட நமது தேசத்தைக் காலி செய்வதுதான் கஷ்ட சாத்யமானது. சண்டை விமானங்களும் கனமான வெடி விமானங்களும், லேசான வெடி விமானங்களும் அடிக்கடி போய்த் திரும்பி வருவதால் ஆகாயத்தில் எப்பொழுதும் விமானங்கள் சஞ்சாரம் செய்கின்றன. அவைகளுடன் மோதிக் கொள்ளாமல் நாம் ஜாக்கிரதையாகச் செல்ல வேண்டியிருக்கிறது."

**விஷி நிர்வாகம் பாரிஸுக்கு மாற்றப்படும்.** இதுவும் ஜெர்மன் தயாரிப்புகளில் ஒன்று. பிரான்ஸ் வீழ்ச்சிபெற்றபொழுது பிராசீனமான பிரெஞ்சு தலைநகரத்தைக் காலி செய்யும்படி பிடேன் கட்டாயப்படுத்தப்பட்டான் என்று ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள். இப்பொழுது நாஸிகளின் கட்டாயத்தின் பேரில் பாரிஸில் தலைநகரத்தை அமைக்க திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. மார்ஷல் பிடேன் விஷியை விட்டுப் புறப்பட்டு பாரிஸுக்குச் சமீபத்திலுள்ள ஓரிடத்திற்குச் சென்றிருக்கிறான்... இந்த மாறுதலுக்கு அநேக காரணங்கள் உண்டு. வரப்போகும் வாரங்களில் உண்டாகும் அபாயத்திலிருந்து தப்பித்துக்கொள்ள 'பிடேன் பத்திரமான இடத்திற்குச் சென்றிருக்கிறான். பாரிஸைக் காபந்து செய்ய பத்து டிவிஷன் துருப்புகள் இருப்பதால் விஷியைக் காபந்து செய்ய வேறு படைகள் கிடையாது.

வி வி வி வி வி

**நான்கு வருஷத்திற்கு முன்பும், இப்பொழுதும்.** யுத்தத்தின் முற்போக்கையும், வருங்காலத்தோற்றத்தையும் மதித்துப் பார்ப்பதற்கு யுத்தத்தின் பழைய சம்பவங்களை விமர்சனம் செய்வது அவசியமாகும். 1940-ம் ௵ மே௴ 9௳ அன்று மேற்கு ஐரோப்பா பூராவும் ஹிட்லர் வசம் வந்துவிட்டது. அதே மாதம் அதே பிராந்தியத்தில் படையெடுப்பு ஏற்படும் பீதி உண்டாகியிருந்தது. இந்த நான்கு வருஷ யுத்தத்தில் அநேக ஏமாற்றங்களும் தோல்விகளும் கடலிலும், ஆகாயத்திலும் ஆபிரிக்கா, இதாலி, ருஷ்யா போன்ற தரைப்போரிலும் இகழ்ச்சிகளும் எதிரிகளுக்குக் கிடைத்திருக்கின்றன. ஜெர்மனியை எதிரி விமானங்கள் தாக்கமுடியாது என்ற நாஸித் தலைவர்களின் உறுதிமொழிகள் வீணாய்ப் போய்விட்டன. ஜனங்கள் மனதில் பீதி குடிகொண்டிருக்கிறது. தொழிற்சாலைகளும், ஜன சமூக அமைப்புகளும் நிலைகுலைந்து அழிக்கப்பட்டுவிட்டன.

ஜெர்மனியின் பொருளாதார நிலைமையும் சீர்கெட்டு வருகிறது. அலக்ஷியபுத்தியினால் கவனக்குறைவு ஏற்பட்டிருக்கிறது. ஜனங்கள் கோரமுடிவின் கடைசிக் கட்டத்தை எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் களைத்துப்போய் சோர்வுற்று தோல்வி மனப்பான்மையுடன் இருக்கிறார்கள். இப்பொழுது உணவுப் பிரச்னையும், ஆடைகளும் தான் அவர்கள் முன் நிற்கின்றன. கிழக்கிலும், தெற்கிலும், மேற்கிலும் உள்ள போர்முனைகளைப்பற்றி அவர்கள் கவனம் செலுத்தவில்லை.

ஆகிலும் தலைவர்கள் விடாமுயற்சியுடன் கடைசிவரையில் போராடுவார்கள். அவர்களுக்கு வேறு வழியில்லை. ஜெர்மன் ராணுவத்தினிடம் அவர்களுக்கு இன்னமும் அபார நம்பிக்கை இருக்கிறது.

1918-ம் வருஷத்தைப்போல ஜெர்மனியின் மனவுறுதி குலைந்து வருகிறது. ஆகிலும் இப்பொழுதும் ஜெர்மனியில் கலகம் ஏற்படாதபடி ஹிம்லரும் அவனுடைய ரகசியப்போலீஸும் நாட்டை அடக்கி ஆண்டு வருகின்றனர்.

வி வி வி வி வி

**மூன்று பக்கத்திலிருந்து தாக்குதல்.** சாம்ராஜ்ய பிரதம மந்திரிகளின் மகாநாட்டிற்காக இங்கிலாந்துக்கு வந்திருக்கும் ஜெனரல் ஸ்மட்ஸ், இந்த வாரத்தில் பர்மிங்ஹாமில் ஆற்றிய சொற்பொழிவில் "இரண்டாம் போர்முனை" என்ற பதங்களின் அர்த்தத்தை தெளிவு படுத்தினார். ருஷ்யாவில் முதல் போர்முனை நடைபெற்று வருகிறதென்றும் இரண்டாவது இதாலியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதென்றும் அவர் சொன்னார். இங்கு நேசதேசப் படைகள் முன்னேறித் தாக்கத் துவக்கம் செய்துவிட்டன. இதின் மூலம் அபாரமான விளைவுகள் கிடைக்கக்கூடும். மேற்கு ஐரோப்பாவில் மூன்றாவது நடவடிக்கையும் ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டது. இங்கு மகத்தான விமான நடவடிக்கை நடந்து கொண்டிருக்கிறது. கூடிய சீக்கிரம் தரைப் போரும் துவக்கப்படும்.

போர் முனைகள் தனிப்பட்ட நடவடிக்கைகள் என்று எண்ணுவது தவறென்றும் அவர் வற்புறுத்தினார். அவைகள் ஒரே நடவடிக்கையின் பற்பல பாகங்கள். ஹிட்லரின் ஐரோப்பியக் கோட்டை என்ற முக்கோணத்தின் மூன்று பக்கங்களிலும் கிழக்கில் ருஷ்யாவும், தெற்கில் மத்தியதரைக்கடல் பக்கத்திலிருந்து பிரிடிஷ் அமெரிக்க வெடிவிமானங்களும், மேற்கில் அட்லாண்டிக் கடல் பக்கத்திலிருந்து வெடிவிமானங்களும் தாக்கிவருகின்றன. மேற்குப் பக்கத்தில் தரைப் போரைத் துவக்கினால் ஒரு போர்முனையில் நடவடிக்கை பூர்த்தியடையும். மேற்குப் போர்முனை நடவடிக்கை மட்டும் வெற்றியை சம்பாதித்துவிட முடியாது. மூன்று போர்முனை நிகழ்ச்சிகளும் ஒன்றுபட்டுத்தான் வெற்றியை சம்பாதிக்கக் கூடும். ஆகையால் இரண்டாம் போர்முனையைப்பற்றி மட்டும் நாம் அதிக கவலைப்படுவது சாவதானமில்லையென்று ஜெனரல் ஸ்மட்ஸ் எச்சரிக்கை செய்தார். தாக்குதல் மூன்று பக்கங்களிலிருந்து நடைபெறும். இந்தப் புகழை எல்லோரும் பகிர்ந்து கொள்ளுவார்கள்."



**விமான நடவடிக்கை இரண்டாம் போர்முனையா?** இரண்டாம் போர்முனை என்பது விமான நடவடிக்கை செய்தால் போதுமாவென்று வியவகாரம் தெரியாத ராஜீய வாதிகள் விவாதம் செய்து வரலாம். அவர்கள் விமான நடவடிக்கையின் அழிக்கும் சக்தியை அறியவில்லை என்றுதான் நாம் சொல்ல வேண்டும்.

வி வி வி வி வி

**உணர்ச்சியை அளக்கும் கருவி.** இரண்டாம் போர்முனையைக்கண்டு ஜெர்மனியின் மனோநிலையில் ஏற்பட்டிருக்கும் மாறுதல்களை கவனித்தால் இரண்டாம் போர்முனையிலிருந்து அதற்கு உண்டாகியிருக்கும் அபாயத்தை மதித்துப் பார்த்துவிடலாம். சென்ற யுத்தத்தைப்போல இந்த யுத்தத்தில் இரண்டாம் போர்முனை ஏற்படாதென்று நான்கு வருஷத்திற்கு முன் ஜெர்மனி நினைத்திருந்தது. 1939-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதத்தில் ஒரு போர்முனைதான் இருக்கக்கூடுமென்றும் படையெடுப்பென்பது பிரிடனில்தான் நடைபெறுமென்றும் கோயரிங் சொன்னான். 1940-ம் வருஷத்தில் "அமைதியுடன் இருங்கள். நாங்கள் இங்கிலாந்துக்கு வந்துவிடுவோம்" என்று ஹிட்லர் சொன்னான். 1941-ம் வருஷத்தில் ருஷ்யாவில் ஜெர்மனிக்குத் தோல்விகள் ஆரம்பமானபொழுது ஹிட்லர் மேற்குப் பக்கத்தில் மற்றொரு போர்முனை ஏற்படுமென்று அஞ்சி "ஐரோப்பிய அரண்" என்று பிரசாரம் செய்யத் தொடங்கினான். படையெடுப்பு ஐரோப்பாவில் ஏற்படுமென்று பயந்து அதை எதிர்த்து நிற்க பலமான பிரசாரம் செய்யப்பட்டது. 1939-ம் வருஷத்தில் நடைபெற்ற டிப்பி நடவடிக்கை ஜெர்மன் மக்களுக்கு நேசதேசத்தாரின் வீண் பிரயத்தன அறிகுறியாகச் சுட்டிக் காட்டப்பட்டது. ஸிஸிலி வீழ்ச்சி பெறுமுன் ஐரோப்பிய அரணுக்கு மத்தியதரைக்கடல்தான் தெற்குக் கோட்டை என்று ஜெர்மனி சொல்லிவந்தது. அதேவிதமாக இப்பொழுது அட்லாண்டிக் கடல் மேற்கு மதில் சுவர் என்று சொல்லப்படுகிறது.

இதாலியில் படைகளிறங்கி அதன் மூன்றில் ஒருபாகம் நேசதேசத்தார் வசமானபொழுது நாஸிகளின் பிரசாரத்தின் த்வனி மாறிவிட்டது. நேசதேசத்தார்கள் இரண்டாம் போர்முனையை ஆரம்பிப்பது என்று தீர்மானித்துவிட்டார்கள் என்றும் அந்தத் தாக்குதலை ஜெர்மனி எதிர்பார்த்து நிற்கிறதென்றும் சொல்லப்பட்டது. நேசதேசத்தார்கள் தாக்குதலைத் தாமதமன்னியில் துவக்க புரோத்சாகம் செய்யும் முயற்சிகளும் செய்யப்படுகின்றன. அவ்விதம் படையெடுப்பு ஏற்பட்டால் அது இகழ்ச்சி பெற்றுவிடக்கூடுமென்று எதிரி நம்பியிருக்கிறான். மேலும் முதல் தாக்குதல் முறியடிக்கப்பட்டால் நேசதேசத்தாரின் புகழும் அழிந்துவிடுமென்றும் எதிரி நம்பியிருக்கிறான்.

இந்த முறையில்தான் ஜெர்மன் பிரசாரம் இப்பொழுது நடைபெறுகிறது. இரண்டாம் போர்முனையை ஆரம்பிப்பதில் ஏற்பட்ட தாமதத்தை மன்னிப்பு செய்யவேண்டுமென்று கேட்க மிஸ்டர் ஈடன் ருஷ்யாவுக்குச் சென்று இரண்டு நாட்கள் தங்கியிருந்தாராம். இரண்டாம் போர்முனையில் வெற்றிகிடைப்பது நிச்சயம் என்ற மனப்பான்மையில் பிரிடிஷ் உத்தியோக, உத்தியோகப்பற்றற்றவர்களின் மனப்பான்மை மாறிவிட்டதென்றும் சொல்லப்படுகிறது. மிஸ்டர் சர்ச்சிலின் தாமதத்தை அவநம்பிக்கையென்றும் சந்தேகம் என்றும் சொல்லிவருகிறார்கள். ஈஸ்வரனுடைய சிக்ஷை சாவதானமாக ஏற்பட்டாலும் அது உறுதியுடன் நடைபெறுமென்பது மிஸ்டர் சர்ச்சிலின் நம்பிக்கை என்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள்போலும். பிரதம மந்திரிகள் மகாநாட்டின் முடிவில் அவர் ஒரு செய்தியை விடுத்தார்.

"நாம் எவ்வளவு முயற்சி செய்யவேண்டுமென்பது புலப்படவில்லை. எவ்வளவுகாலம் கழித்து நமக்கு வெற்றிகிடைக்குமென்றும் நமது ஜனங்கள் எவ்வளவு தியாகம் செய்ய வேண்டுமென்றும் நாம் அறியக்கூடவில்லை. ஆகிலும், சோதனை எவ்வகைப்பட்டபோதிலும் ஜனங்கள் அவைகளை சமாளித்து நிற்பார்கள். யுத்தம் முடிவடைந்தவுடன் உலக சரித்திரத்திலேயே புகழ் பெற்றிருக்கும் நமது அந்நியும், திட்டமும் நமது ஒத்துழைப்பில் நிலை பெற்றிருக்கும். ஐந்து வருடங்களுக்குமுன் நமக்கு ஆபத்து ஏற்பட்டபொழுது நாம் பொறுமையுடன் அதை சமாளித்து நின்றபொழுது நாம் ஒத்துழைத்ததுபோல மானிட வர்க்கத்தின் துயரங்களை நிவர்த்தி செய்வதிலும் ஒன்றுபட்டு நிற்போம்."

இது அவநம்பிக்கையா அல்லது அளவுகடந்த சிறந்த நம்பிக்கையா என்று கவனித்துப் பாருங்கள்.

வி வி வி வி வி

**வரை.** இங்கு மறுபடியும் சுறுசுறுப்பு ஏற்பட்டிருக்கிறது. மஞ்சள் நதி பள்ளத்தாக்கில் முன்னேறிவரும் ஜப்பானியப் படைகள் உள்நாட்டுக்குச் செல்லும் போக்குவரவு மார்க்கங்களைத் துண்டிப்பதற்காக

லோயாங்கைச் சுற்றிவளைத்து வருகிறார்கள். சென்ற வருடத்தில் அவர்கள் நெல் களஞ்சிய பிரதேசத்தை அடைய முயன்றார்கள். இது நாசவேலை செய்யும் யுத்தம். சாமான்களைக் கொண்டுவரும் மார்க்கங்களை அழிக்க இப்பொழுது பிரயத்னம் செய்யப்படுகிறது.

ஜப்பானியர்கள் சைனாவில் படையெடுத்து மஞ்சூரியாவைப் பிடித்தபின் 13 வருடங்கள் சென்றுவிட்டன. 5 வருடங்களுக்குப்பின் மறுபடியும் ஜப்பான் தாக்கி வடக்கு சைனாவைக் கைப்பற்றிவிட்டது. இப்பொழுது சைனாவின் நான்கில் ஒருபங்குதான் சியாங்கை ஷேக்கின் ஆட்சிக்குட்பட்டிருக்கிறது. இந்தக் காலத்தில் சைனா அநேக கஷ்டங்களுக்குள்ளாகியிருக்கிறது. அதன் நகரங்கள் குண்டுவீச்சுக்குட்பட்டன. தற்காப்புகள் கிடையாது. அங்கு வெள்ளப்பெருக்கும் வருமையும் ஏற்பட்டது. பர்மா ரஸ்தா மூடப்பட்டதிலிருந்து அதன் சிரமங்கள் அதிகரித்துவிட்டன. சைனாவிலுள்ள பொதுவுடமைக்கட்சி சுங்கிங் நிர்வாகத்தை ஆதரிக்கவில்லை. சைனர்களிடம் திறமையின்மையும், லஞ்சம் வாங்குவதும் குடிகொண்டிருக்கின்றன.

சைனாவின் நிலைமை மோசமாகிவிட்டதென்று டெயிலி மெயில் பத்திரிகையில் எழுதப் பட்டிருக்கிறது. மார்ஷல் சியாங்கை ஷேக் உதவி தேவையென்று நேசதேசத்தார்களுக்கு வேண்டுகோள் செய்துகொண்டிருப்பதிலிருந்து இது ஊர்ஜிதமாகிவிட்டது.

ஆகிலும் சீனர்கள் இரண்டு போர்முனைகளில் போர் நடத்திவருகிறார்கள். லோயாங்க் பிரதேசத்தில் ஜப்பானியர்களைத் துறத்தியடித்துக்கொண்டு, ஜெனரல் ஸ்டில்வெல்லுடன் சேர்ந்துகொள்ள யூனன் பிரதேசத்தில் முன்னேறிவருகிறார்கள்.

தீரமாகப் போர்புரியும் சைனாவுக்கு சகலவிதமான உதவியையும் நாம் செய்யவேண்டும். அமெரிக்காவின் வைஸ் ஜனாதிபதியான ஹென்ரி வாலஸ் தகவல்களை அறிந்துகொள்ள சைனாவுக்குப் புறப்பட்டுவிட்டார் என்பதைக்கேட்டு சந்தோஷப்படுகிறோம். பர்மாவின் சதுப்பு நிலங்களும், ஹிமாலய மலைகளும், ஜப்பானிய யுத்தக் கப்பல்களும் சகிப்புத் தன்மையுள்ள ஜனங்களுக்கு ஸப்ளைகளை அமெரிக்கா அனுப்புவதைத் தடைசெய்ய முடியாதென்று அவர் தைரிய மூட்டக்கூடிய செய்தியை வெளியிட்டிருக்கிறார்.

**பர்மா.** பர்மாப் போர்முனையில் போர் திருப்திகரமாக நடைபெறுகிறது. ஆகிலும் வெற்றிகள் சாவதானமாகத்தான் கிடைத்துவருகின்றன. மிட்கினா என்ற முக்கியமான ஸ்தானம் பிடிபட்டது. இந்தப் போர்முனையில் பங்கர்ஸ்களிலும் பெட்டிகளிலும் சண்டை நடைபெறுகிறது. கொஹிமா தாக்கப்பட்டபொழுது நேசதேசப் படைகள் இந்த பெட்டிகளுக்குள் நுழைந்துகொண்டு எதிர்த்துப் போராடினார்கள். கொஹிமாவைப் பிடித்துக்கொண்டதாக டோகியோ விளம்பரம் செய்தபொழுது நேசதேசப்படைகள் இந்தப் பெட்டிகளுக்குள் பத்திரமாக இருந்தன.

**ஜப்பானின் கொடுமை.** இந்தியத் துருப்புகளை ஜப்பானியர் நடத்தும் முறைகளைப் பற்றி பின்னும் சில தகவல்கள் கிடைத்திருக்கின்றன. நியூ கினியாவில் ஹாலந்தியாவைப் பிடித்தபொழுது அமெரிக்கர்கள் 460 இந்தியர்களை விடுவித்தார்கள். இவர்கள் பசிப்பிணிக்குட்பட்டிருந்தார்கள். கக்கூஸ் வசதிகூட அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அட்மிரால்டி தீவுகளிலிருந்துவந்த மற்றொரு இந்திய கோஷ்டியார்கள் 2,000 பேர்களை ஆடுமாடுகளைப்போல் கப்பலின் மேல்தட்டுக்குக் கீழ்அடைத்து இங்கு கொண்டுவந்தார்களென்று சொன்னார்கள். அவர்களில் 15 பேருக்கு நோய் உண்டாகிற்று. அவர்களுக்கு மரணம் உண்டுபண்ணக்கூடிய மருந்து செலுத்தப்பட்டு அவர்கள் கொலை செய்யப்பட்டார்கள்.

---

# பிரிடனில் ஸ்டெட்டினியஸ்ஸின் அலுவல்கள்.

## லண்டன் சம்பாஷணைகளின் விரிவான விஷயங்கள்.

(எட்வர்ட் மாண்ட் கமரி).

ஏறக்குறைய மூன்று வாரங்களாக லண்டனில் அநேக விஷயங்களைப்பற்றி அமெரிக்க உதவி காரியதரிசியான மிஸ்ட்டர் எட்வர்ட் R. ஸ்டெட்டினியஸ்ஸுக்கும் அவருடைய ஸமஸ்தான இலாகா உத்தியோகஸ்தர்களுக்கும் பிரிடிஷ் நேசதேச ராஜ தந்திரிகளுக்கும் நடைபெற்றுவரும் சம்பாஷணைகள் இறுதி கட்டத்தை அடைந்துவிட்டன. அவைகளின் முடிவை விளக்கிக் காட்டக்கூடிய ஒரு அறிக்கை இவ்வாரக் கடைசிக்குள் வெளியிடப் படுமென்று எதிர்பார்க்கலாம். அறிக்கையில் பொதுப்படையாக ஏற்பட்ட முடிவுகளைக் கண்டு இருதரப்பார்களும் திருப்தி அடைந்தார்கள் என்று சொல்லுவதைத் தவிர வேறு



விஷயங்கள் காணப்படுமா என்பது சந்தேகமாயிருக்கிறது. அப்படி எதிர்பார்ப்பதற்கும் முடியாது. ஏனெனில் சம்பாஷணைகளின்மூலம் குறிப்பிட்ட விஷயங்களில் உருவான உடன்படிக்கைகளை ஏற்படுத்திக்கொள்ள இந்தச் சம்பாஷணைகள் நடைபெறவில்லை.

சம்பாஷணைகள் ஆராய்ச்சி செய்யவும், தகவல்களை அறிந்துகொள்ளவும்தான் நடைபெற்றன. குறிப்பிட்ட விஷயங்களைப்பற்றிப் பேசவேண்டுமென்பதற்கு விஷயக்குறிப்பு ஒன்றும் ஏற்படுத்தப்படவில்லை. இருதரப்பாரும் மற்றொருவருடைய அபிப்பிராயத்தை அறிந்து கொள்ள எந்த விஷயத்தையும் விவாதத்திற்குக் குறிப்பிடலாம். அபிப்பிராய வெளியீடுகள் அந்தரங்க சுத்தியாகச் செய்யப்பட்டன. சில விஷயங்களுக்கு முகான்மை அளிக்கப் பட்டது.

### நேசநேசந்தாரின் கொள்கைகளில் ஒற்றுமை.

விரிவாகச் சொல்லுமளவில் சம்பாஷணைகள் பெரும்பாலும் ஐரோப்பிய யுத்தத்தின் பரப்பு, கால அளவு, திட்டம் முதலியவற்றைப் பொருத்து நடைபெற்றன. இந்த விஷயம் இரண்டு பெரிய பாகங்களாக பிரிக்கப்பட்டது. இவைகளை வேறுபடுத்தும் கால அளவுக்கு எக்ஸ்டே என்று சொல்லப்பட்டது. வெகுவாக ஜெர்மனியின் பூர்ணமான தோல்வி ஏற்படும் காலத்தை இது குறிக்கலாம். அந்த கால அளவுக்கு இப்பக்கத்தில் நேசதேசத்தாரின் ஒன்றுபட்ட ராஜீய விஷயங்களெல்லாம் ராணுவ யுத்த தந்திரத்தின் அவசியத்துக்காக ஈடுபடுத்தப்படவேண்டும். எக்ஸ்டே என்று சொல்லப்படும் நாள் வந்தபின் அநேக அவசியமான பிரச்னைகள் தோன்றும். அந்தப் பிரச்னைகள் அப்பொழுது விரிவாக விசாரம் செய்து விவாதிக்க முடியாதவை. அந்தப் பிரச்னைகளை நாம் முன்கூடியே மதிக்குமளவில் பிரிடிஷ் அமெரிக்க நிர்வாகங்கள் அவைகளை முன்கூடியே தயாரித்து இருதேசங்களின் மனப்பான்மையையும் உணர்ந்து விடுவார்கள். சரியான சமயம் வரும்பொழுது சீக்கிரமாகவும், நம்பிக்கையுடனும் முடிவுக்கு வர இந்த நடவடிக்கைகள் உபயோகமுள்ளதாயிருக்கும். நேசதேசத்தார்களுக்கு பூரா விவரங்களும் அறிவிக்கப்பட்டன.

### நேசநேசங்களுக்கெல்லாம் பூரா தகவல்.

எல்லா விஷயங்களிலும் பிரிடிஷ் அமெரிக்க நிர்வாகங்கள் தங்களுடைய நலத்தைக் கருதுவதுடன் மற்ற எல்லா நேசதேசங்களின் அக்கரைகளையும் கவனிக்கவேண்டும். விவாதங்களின் ஒவ்வொரு கட்டத்திலும் ருஷ்ய, சீன நிர்வாகங்களுக்கும் லண்டனில் இருக்கும் ஐரோப்பிய நிர்வாகங்களுக்கும் தகவல்கள் அனுப்பப்பட்டன. லண்டனில் இருந்தபொழுது மிஸ்ட்டர் ஸ்டெட்டினியஸ் ருஷ்ய அயல்நாட்டு தூதரான M. கௌஸ்வியையும் சீன அயல்நாட்டு தூதரான Dr. வெல்லிங்டன் கூவையும் அநேக தடவை கண்டு பேசினார். அங்கிருக்கும் மற்ற ஐரோப்பிய தேச நிர்வாகப் பிரதிநிதிகளையும் கண்டு விவாதம் செய்திருக்கிறார்.

அயல்நாட்டு வியவகாரங்களிலும யுத்த தந்திர முறையிலும் பிரிடனின் நடவடிக்கை நிறுவும் மிஸ்ட்டர் சர்ச்சில் முதற்கொண்டே பிரிடிஷ் அங்கத்தினர்களுடன் அவர் குறிப்பிட்ட விஷயங்களை விவாதித்திருக்கிறார். அவர்களுடைய சிப்பந்திகள் அயல்நாட்டு காரியாலயத்திலுள்ள தங்களுக்குச் சமமான அந்தஸ்துள்ள அங்கத்தினர்களுடன் உலகத்தின் ஒவ்வொரு பாகத்திலும் பிரிடனுக்கும் அமெரிக்காவுக்கும் உள்ள சம்பந்தங்கள் பூராவையும் விவாதித்துப் பேசியிருக்கிறார்கள். மிஸ்ட்டர் ஸ்டெட்டினியஸும் அவருடைய சிப்பந்திகளும் மூன்று வாரங்களாக சந்தித்து விரிவான விவாதங்கள் நடத்திய பிரிடிஷ் தேச ராஜதந்திரிகள் நிபுணர்களின் ஜாப்தாவைக் குறித்தோமானால் நேசதேச யுத்த முயற்சியில் எவ்வளவு பிரமுகர்கள் ஈடுபட்டார்கள் என்று நன்றாய் விளங்கும். மேலும் அந்த ஜாப்தாவிலிருந்து விவாதங்கள் எவ்வளவு விரிவாகவும் சவிஸ்தாரமாகவும் நடைபெற்றன என்றும் புலப்படும்.

### பூர்ணமான திருப்தி.

சம்பாஷணைகளின் முடிவுகளைப்பற்றியும் மிஸ்ட்டர் ஸ்டெட்டினியஸ்ஸின் தூதின் பூர்ண வெற்றியைப்பற்றியும் பிரிடனில் பூரணமான திருப்தி ஏற்பட்டிருக்கிறதென்று லண்டனில் உள்ள விஷயமறிந்த உற்று நோக்காளர்கள் சந்தேகமற சொல்லுகிறார்கள். சம்பாஷணையின் விளைவுகளின் முக்கியத்வம் இப்பொழுது வெளிவராது. காலம் வரும் பொழுது விவாதிக்கப்பட்ட விஷயங்கள் சம்பந்தமாக செய்யப்பட்ட முடிவுகள் பகிரங்கமாக பிரகடனம் செய்யப்படும். சில விஷயங்கள் 'எக்ஸ்டே' வந்து ஐரோப்பாவின் சமாதானத்தையும், க்ஷேமத்தையும் அமைக்கும் மகத்தான நடவடிக்கைகள் துவக்கப்படும் வரையிலும் வெளிவரமாட்டா. பல்வேறுபட்ட ராஜீய பொருளாதார ஜனசமூக பிரச்னைகளைத் தீர்க்க விரிவான கொள்கைகளைப்பற்றி நேசதேசத்தார்கள் சிந்தித்துக்கொண்டு இருக்கவேண்டுமென்பதும் அவசியமாகும். அதுவரையில் சென்ற மூன்று வாரங்களாக செய்யப்பட்ட வேலையின் பிரயோஜனத்தை நாம் மதிக்க இயலாது. ஆகிலும் சரியான காலம் வரும்பொழுது இந்த விவாதங்கள் இந்த யுத்தத்தில் மிகவும் உபயோகமுள்ளதும் முக்யத்வம் உள்ளதுமான பேச்சுகள் என்று லண்டனிலுள்ள உற்றுநோக்காளர்கள் நம்பிக்கையுடனிருக்கிறார்கள்.

# யுத்த காலத்திலும், சமாதான காலத்திலும் ஒற்றுமை.

## சாம்ராஜ்ய பிரதம மந்திரிகளின்முன் நிற்கும் பிரச்னைகள்.

*(டைம்ஸ் பத்திரிகை).*

சாம்ராஜ்ய பிரதம மந்திரிகளின் மகாநாடு நல்ல மனப்பான்மையுடன் துவக்கமாகிற்று. சாம்ராஜ்ய நாடுகளின் பிரதம மந்திரிகளான மிஸ்டர் சர்ச்சிலும், மிஸ்டர் மாகன்ஸி கிங்கும், ஜெனரல் ஸ்மட்ஸூம், மிஸ்டர் கர்டினும், மிஸ்டர் பிரேசரும் சொற்பொழிவாற்றினார்கள். இந்த மகாநாடு கூட்டியதின் மூலம் அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டதென்று அவர்கள் தங்களுடைய திருப்தியை வெளியிட்டபின் யுத்த காலத்திலும் சமாதான காலத்திலும் அவர்கள் ஒற்றுமையுடனிருப்பார்களென்றும் அவர்கள் வற்புறுத்தினார்கள். இந்தக் கூட்டம் ரகசியமாக நடைபெற்றது. ஆகிலும் அதில் கலந்துகொண்ட எல்லோரும் ஒருமைப்பட்ட லக்ஷியத்துடனிருந்தார்களென்று நிச்சயமாகச் சொல்லலாம்.

மகாநாட்டின் முக்கியமான லக்ஷியம் தெளிவாகப் புலப்படுகிறது. அதில் விவாதிக்கப்படவேண்டிய பிரச்னைகளை பின் குறிப்பிட்ட அயிட்டங்களாகப் பிரிக்கலாம்.

**யுத்தம்.**—சர்ச்சில் யுத்த விமர்சனம் செய்தபின் யுத்தத்தில் மேற்கொண்டு ஜெர்மனியையும், ஜப்பானையும் குறித்து எவ்வித நடவடிக்கைகளைத் துவக்குவதென்பதைப்பற்றி எல்லா பிரதம மந்திரிகளும் விவாதம் செய்வார்கள். தளவாட ஸப்ளை பிரச்னையும் நன்கு பரிசீலிக்கப்படும்.

**அயல்நாட்டு வியவகாரம்.**—யுத்த நிறுத்த ஷரத்துக்களைத் தீர்மானம் செய்வதிலும் பொதுஜன நீதிமுறையை நிலைநாட்டக்கூடிய ஸ்தாபனத்தை அமைக்கும் திட்டத்தை நிறுவுவதிலும் சர்ச்சை செய்யப்படும். மிஸ்டர் ஈடன் பிரிடிஷாரின் நடவடிக்கையை வெளியிடுவார். இந்த விவாதத்தின் பயனாக மற்ற நாடுகளுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளுவதில் பிரிடனின் நடவடிக்கையைப்பற்றி முடிவான அபிப்பிராயங்கள் ஆமோதிக்கப்படும். இந்தக் கூட்டத்தில் மாஸ்கோ ஒப்பந்தத்தின் 4-வது விதியை அமுலுக்குக் கொண்டுவரும் முறைகளைப் பற்றியும் விவாதம் நடைபெறும்.

"சமாதானத்தை விரும்பும் நாடுகளின் சுய ஆக்ஷி உரிமையை அடிப்படையாகக் கொண்ட பொதுப்படையான சர்வதேச சங்கத்தைக் கூடிய சீக்கிரத்தில் அமைத்துவிடவேண்டியது அவசியமென்பதை மூன்று வல்லரசுகளும் ஒப்புக்கொள்ளுகிறார்கள்."

**குடியரசு நாடுகள்.**—தற்காப்பு, அயல்நாட்டு வியவகாரங்கள், பொருளாதார முன்னேற்றம் சம்பந்தமாக குடியரசு நாடுகளுடன் கலந்து ஆலோசிப்பதை விருத்திசெய்ய அநேக ஆலோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. எல்லா சாம்ராஜ்ய நாடுகளின் பிரதிநிதிகளடங்கிய நிரந்தரமான காரியதரிசிகளுள்ள ஒரு கமிட்டியை நியமிக்கலாமென்று மிஸ்டர் கர்டின் தெளிவான யோசனையை விடுத்திருக்கிறார். பிரதம மந்திரிகள் அடிக்கடி கூடிப்பேசவேண்டுமென்று மற்றொருவர் யோசனை கூறுகிறார். மாகன்ஸி கிங் ஆற்றிய சொற்பொழிவுகளில் குடியரசு நாடுகளுக்கிடையே விரிவான ஒற்றுமையமைப்பை ஏற்படுத்துவது விரிவான உலக ஸ்தாபனத்துக்கு எதிர் முறையான நடவடிக்கையாகயிராதாவென்று அவர் கேட்டுவருகிறார்.

இந்த ஏற்ற வித்தியாசங்கள் மகாநாட்டின் இறுதியில் தீர்ந்துவிடும்.

குடியேற்ற நாடுகளின் க்ஷேம அபிவிருத்தியைப்பற்றி நடைபெறும் பொது சர்ச்சையில் குடியேற்ற நாடுகளை சில பகுதிகளாக ஒன்றுபடுத்தி அவைகளில் சிலவற்றை சமீபத்திலுள்ள சாம்ராஜ்ய நாட்டின் அமுலுக்கு உட்படுத்திவிடலாமென்று ஜெனரல் ஸமட்ஸூம் மற்றவர்களும் கூறும் திட்டம் விவாதிக்கப்படும். முக்கியமான அக்கரைகளுள்ள குடியேற்ற நாட்டு வல்லரசுகளும், இதரர்களும் ஒரு குறிப்பிட்ட குடியேற்ற நாடுகளின் தொகுதியில் தற்காப்பு, பொருளாதார அபிவிருத்தி சம்பந்தமான பொதுவான திட்டத்தை நிறுவக்கூடிய சர்வதேச கமிஷன்களை நியமிப்பதும் விரிவான திட்டமாகும். அந்தந்த நாடுகளின் பொதுமக்களின் க்ஷேமத்தை அபிவிருத்தி செய்யக்கூடிய திட்டங்களும் ஆராய்ச்சி செய்யப்படும்.

**குடியரசு நாடுகளின் வியாபாரம்.**—சாம்ராஜ்ய நாடுகளின் சாமான்களுக்கு சலுகை காட்டவேண்டிய பிரச்னை உண்டாகுகிறது. பரஸ்பர உதவி உடன்படிக்கையின் 7-வது விதியில் சொல்லியிருக்கும் திட்டத்திலிருந்து குடியரசு நாடுகளில் சாம்ராஜ்ய சாமான்களுக்குச் சலுகை காட்டப்படமாட்டாது என்று ஏற்படவில்லை. விரிவான நோக்கத்துடன் கவனிக்கும்பொழுது சாம்ராஜ்ய நாடுகளிலுள்ள முக்கியமாக, கனடாவிலுள்ள, தொழிற்சாலைகளின் அபிவிருத்தியை யுத்தம் நிலைநாட்டியிருக்கிறது. பழமையான ஏற்றுமதி இறக்குமதி முறைகளிலும் விசேஷ மாறுதல்கள் ஏற்படவேண்டும்.



**அயல்நாடுகளுக்குப் போவது.**—சாம்ராஜ்ய நாடுகளிலுள்ள தொழிற் ஸ்தாபனங்களுக்கும், விவசாயத்துக்கும் இல்லற வாழ்க்கைக்கும் அநேக ஆடவர்களும் ஸ்திரீகளும் தேவைப்படும். யுத்தத்தில் வெற்றிபெற்றபின் மூவகைப்பட்ட சேவைப்படைகளிலிருந்தும் யுத்த தளவாட உற்பத்திசாலைகளிலிருந்தும் திரும்பிவரும் மக்களுக்கு அலுவல்களை நாம் தேடவேண்டும். ஆகையினால்தான் அவர்கள் சென்ற வருஷத்தில் பிரிடிஷ் அரசாங்கம் அனுப்பிய கேள்விகளுக்கு இதுவரையில் பதிலனுப்பவில்லை. தங்கள் நாட்டின் யுத்தத்துக்குப் பிந்திய அமைப்பைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று அவர்கள் பிரியப்படுகிறார்கள். சில நாடுகள் சென்ற வருஷத்தில் விசாரணைக் கமிஷன்களை ஸ்தாபித்திருக்கிறார்கள்.

பிரிடிஷ் படைகளில் சேர்ந்து வேலை செய்யும் ஆடவர்கள் யுத்தத்துக்குப் பின் தங்களுடைய சொந்த நாடுகளில் ஒரு வருஷம் சுகமாக வாழ்க்கையை நடத்திவிட்டுப் பிறகு அயல்நாடுகளுக்குச் செல்ல பிரியப்படுவார்களென்பதையும் அவர்கள் மதிக்காமலில்லை.

இதே விதமாகத்தான் யுத்த தளவாட உற்பத்திசாலைகளில் வேலை செய்துவரும் தொழிலாளர்களும் நடந்துகொள்ளுவார்கள். பயிற்சி பெறும் முறையைத் தவிர, பிரிடனிலுள்ள அநேகர்கள் தங்களுடைய சொந்த நாடுகளுக்குச் சென்று தங்களுடைய திறமையைக் காட்ட பிரியப்பட்டாலும் தங்களுடைய லாபங்களை தொழிற்சாலைகளிலும் இன்ஷூரன்ஸ் திட்டங்களிலும் தியாகம் செய்யத் தயாராகயில்லை. இந்த சிரமத்தை நிவர்த்திக்க அநேக மார்க்கங்கள் கற்பிக்கப்படும்.

**போக்குவரத்து.**—மகாநாட்டில் கடற்படை, விமானப்படை போன்ற சகல விதமான போக்குவரத்து சாதனங்களும் விவாதிக்கப்படும்.

**கல்வி.**—சாம்ராஜ்ய நாடுகளிலுள்ள ஜனங்களுக்கிடையே நெருங்கிய நல்லுணர்ச்சியை விருத்தி செய்ய சாம்ராஜ்ய நாடுகள் பூராவிலும் கல்வியை அபிவிருத்தி செய்யும் முறைகள் சர்ச்சை செய்யப்படும்.

பிரதம மந்திரிகள் சர்ச்சை செய்யக்கூடிய விஷயங்களில் இவைகள் முக்கியமானவை. சில விஷயங்கள் சர்வ சாம்ராஜ்ய கமிட்டிகளின் நுட்பமான ஆராய்ச்சிக்கு அனுப்பப்படும்.

---

# யுத்தத்திற்குப்பின் உலகை ஒழுங்கு படுத்தல்.

## அகில உலகின் நிலை.

(விக்ஹாம் ஸ்டீட்).

பிரிடனில் தற்காலத்தவர்களின் கருத்தில் வேறுபாடு காணப்படுகிறது. ஒரு சாரரது எண்ணம், மற்றொரு சாரரின் கருத்து உலகத்திலேயே யுத்தத்திற்குப்பின் ஒழுங்குபடுத்துவதில் இருக்கிறது. அதிலுள்ள வேறுபாடு வெளிப்படை. ஒன்றுபட்ட முறையிலேயிருந்து ஆரம்பித்து, யுத்தத்தில் வெற்றியடையும் நம்பிக்கையுடன், வெற்றியடைந்த நேசதேசக் கக்ஷியினர் அகில உலகில் ஒரு நாகரீகமான ஒழுங்கை நியமிக்க நினைக்கிறார்கள்.

ஐரோப்பாவில் துருப்புகளை இறக்கவேண்டுமென்று கருதுவோர், ரகசியமான தபால்களையும், பிரிடனிலிருந்து தெரியாமல் பிரயாணம் செய்வதையும், பிரிடிஷ் இதாலிய தளங்களிலிருந்து எதிரிகள் போக்குவரத்துகளையும், யுத்த உற்பத்திசாலைகளையும் தாக்குவதைத் தடுப்பதில் நோக்கம் செலுத்துகிறார்கள். எல்லாம் யுத்தத்தின் முடிவை குறிப்பதன்னியில் யுத்தத்தின் நீடிப்பையும் குறிப்பிடுகிறது. இக்காரியங்களை எதிர் பார்க்கும்போதே, இவைகளின் முடிவையும் எதிர்பார்க்கப்படுகிறது. அகில உலக நாணய பண்டு ஒன்று ஏற்படுத்தி, நேசதேச நிபுணர்கள், யுத்தம் முடிந்த உலகில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார தேவைகளைக் கவனிக்க விரும்புவதும் இவைகளில் குறிப்பிடத்தக்க விஷயமாகும். இது போல் முக்கியமான மற்றொரு விஷயமாவது, அமெரிக்கர்களும், பிரிடிஷாரும் ஒன்றுபட்டு இனியுள்ள யுத்தகாலத்தில் உழைப்பதும் ஒரு விஷயமாகும்.

### மிகவும் போற்றத்தக்க ஒப்பந்தம்.

பிரிடிஷ் மந்திரிகளும், அமெரிக்க, குத்தகைக்கடன் மந்திரியான எட்வர்ட் ஸ்டெட்டினியஸ் தங்களுக்குள்ளாக கருத்தை வெளிப்படுத்திகொள்வதாவது அவர்களுக்குள்ள ஒப்பந்தத்தின் ஒற்றுமையை வெளிப்படுத்துகிறது. அதே சமயத்தில் பிரிடனின் லேபர் கட்சியினர் அகில உலக ஒழுங்குபடுத்தும் தங்கள் கருத்தையும் வெளிப்படுத்தியுள்ளார்கள். இந்த யுத்த முடிவைப்பற்றி அவர்கள் நினைக்காவிட்டாலும் அதன்படி நடக்காவிட்டாலும், இந்த வார்த்தைகளுக்கும், ஒப்பந்தங்களுக்கும், விளக்கங்களுக்கும் மதிப்பில்லை என்றே சொல்லவேண்டும். சமாதான அவசியத்தை முன்யோசனையினால்

தான் தெரிந்துகொள்ளலாம். சென்ற யுத்தம் முடிய ஆறு வாரங்களுக்கு முன்பு நேசதேச
அரசாங்கம் யுத்தம் இன்னும் ஒரு வருஷம் நடக்கும் என நினைத்தனர். அவர்களுக்குள் ஒரு
சமநிலை. இந்த சமயத்தில் சமாதான முறையில் பல பல கெடுதல்கள் ஏற்பட்டன. நேசக்
கட்சியைச்சேர்ந்த அரசாங்கங்கள் எதுவும் இந்த யுத்தம் எப்போது முடியும் என்றே
தெரிந்துகொள்ளவில்லை. ஆனால் எல்லோரும் இதன் முடிவை விரும்புகிறார்கள். இதன்
பிறகு திடீரென எடுத்துக்கொள்ளப்பட்டார்கள்.

எனவே பிரிடனின் மேம்பட்டவர்களின் ஒரே வழியில் இரு கருத்துகளை காண்பிக்கின்
றன. ஸெக்கோஸ்லாவாக்கியாவின் பிரதிநிதியான டாக்டர் பென்ஸ் என்பவர் மேற்கிலிருந்து
ஐரோப்பாவிற்குள் படைகள் இறங்கிய 3-ம் மாதத்தில் ஜெர்மனி நசுக்குண்டுபோய்விடும்
எனக்கருதுகிறார். நேசதேசத் தலைவர்களும் அவரும் நன்கு அறிந்தவராதலால் அவர்
கருத்தும் கவனிக்கத்தக்கது. அவர் குறிப்பு சிறிது முன்பின் இருந்தாலும், இப்பொழுது
செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடுகளின்படி ஜெர்மானியர்கள் நெடுநாள் தங்களை தற்காத்துக்
கொள்ளவேண்டும் அல்லது திடீரென அழியவேண்டும்.

### வியர்த்தமான நம்பிக்கை.

பின்லாந்து, ருமேனியா, பல்கேரியா, ஹங்கேரி இவைகளின் மேல்தான் ஆதிக்கத்தை
செலுத்த ஜெர்மன் நினைத்திருப்பது நம் தாக்குதல்களால் நாசமாக்கப்படும்போது ஜெர்
மனியின் நாடுகளில் நேசதேச விமானத்தாக்குதல்கள் ஜெர்மனியின் தொழிற்சாலைகளை
நாசப்படுத்தியதன்னியில் ஜெர்மனிக்குள்ளே அவர்களை தற்சாத்தலால் பயனில்லை
என்பதைத் தெளிவுப்படுத்தியது. மேற்கில் இறங்குவது முடியாதுபோய்விடும் என்று ஜெர்
மானியர்கள் நினைக்கலாம். மேற்கில் நேசக்கட்சி தோல்வியுற்று இதனால் சமாதானமடைந்த
பின், ஜெர்மனியைத் திரும்பவும் பலப்படுத்தி இன்னுமொரு யுத்தத்திற்கு தயா
ராக்கலாம் என ஜெர்மானியர் நினைக்கலாம்.

இந்த நம்பிக்கை வியர்த்தமான நடவடிக்கைகள். வேகமாகவோ, மெதுவாகவோ, நடக்க
லாம். ஆனால் இந்த நம்பிக்கை குலைந்துவிடும். பிரிடனாவது அல்லது நேசநாடாவது, அல்
லது ருஷ்யாவாது ஒரு சமாதானத்தை விரும்பவில்லை. எல்லோரும் நாஸிக்கட்சியை நாச
மாக்கக்கருதியிருக்கின்றனர். எல்லோரும் பிரஷ்ஷிய ராஜீய விஷயத்தைக் குலைத்து அதனை
இனிமேல் யுத்தம் நடக்காது செய்யத் தீர்மானத்துள்ளார்கள். இதில் முயற்சிகள் பெரிதா
யினது. தியாகங்கள் அதிகமாகயிராது. நாஸிஸத்தையும், பிரஷியா ராணுவ விஷயத்தை
யும் இவர்கள் மறந்தாலல்லது கெடுதல் ஏற்படுவது திண்ணம். அவர்களின் முடிவு செய்வ
திலே உள்ளது அவர்களின் விதி. ஹிட்லரின் சேனை அழியப்பட்டபின் அவர்கள் ஏதாவது
முடிவு செய்தால் அது பிரயோஜனமற்றதாகும்.

---

## பிரெஞ்சு கொரில்லாப் படைகளுக்கு முஸ்தீப்புகள்.

லிபரேடர் (அப்ஸர்வர்).

மேற்கு முனை போருக்குத் தயாராகி வருகிறது. இங்கிலாந்திலுள்ளவர்கள் அதன் தியா
கங்களை அறிவார்கள். இந்தப் போர்களின் முடிவுதான் ஐரோப்பாவின கதியை நிர்ணயிக்
கும். இந்த மகத்தான போரில் வெற்றி பெறுவதற்கு உயர்வான முயற்சிகளும் மனித
நஷ்டமும் ஏற்பட்டுத்தான் ஆகவேண்டும். யுத்தத்தில் மனித நஷ்டமென்பது ஒரு சிக்ஷை.
நமக்கு விமான பலமும், கடல் பலமும், சிறந்த ராணுவத் தலைவர்களுமிருப்பதால் ஸோம்
நதிப் போரில் ஏற்பட்ட நஷ்டங்கள் இப்பொழுது நமக்கு ஏற்படாது.

இதற்கு மாறான நம்பிக்கையுடன் ஐரோப்பாவில் ஜெர்மனி தற்காப்புகளைத் தயார்
செய்துவருகிறது. அவர்கள் பிரான்ஸில் அமைத்திருக்கும் தற்காப்புகளை கவனிக்கும்
பொழுது ஆன்ஸியோ போன்ற முன்னேறும் வாசலை ஏற்படுத்த நேசதேசத்தார்களை
அனுமதித்துவிட்டு அதன்பின் அப்படைகளை நொருக்கிவிடுவதென்று ஜெர்மனி உத்தேசித்
திருக்கிறது. ஆகையால் போர் துவக்கப்படும் பிராந்தியம் எல்லோருக்கும் புலப்பட்டு
விட்டது. அதற்குத் தகுந்த ஆயுதங்களும் செய்யப்படுகின்றன. பிரிடிஷ் அமெரிக்க வெடி
விமானங்கள் பிரான்ஸிலுள்ள ஜெர்மன் லக்ஷியங்களைக் கடுமையாகத் தாக்கி வருகின்றன.
இதற்குப் பதிலாக ராணுவ, ராஜீய, பொருளாதார முறையில் அநேக கடுமையான உத்தரவு
களை ஜெர்மனி பிறப்பித்திருக்கிறது.

மார்ஸேயில்ஸிலிருந்த பழைய துறைமுகம் அழிக்கப்பட்டபின் தங்களுடைய தற்காப்பு
ஏற்பாட்டுக்கு அனுகூலமாக பிரான்ஸைக் கடுமையாக அழித்துவிடும் நடவடிக்கையை மேற்



கொள்ளவேண்டுமென்று ஜெர்மனி உத்தேசித்திருக்கிறது. சென்ற வாரத்தில் அவர்கள்
மத்தியதரைக்கடலில் கடற்கரையிலுள்ள பிரதேசங்களைக் காலிசெய்துவிடும்படி உத்தர
விட்டார்கள். அந்த கோலாகலத்தை ஒரு கண்ணேக்காளர் வெளியிட்டிருக்கிறார்.

“கடற்கரையிலுள்ள நகரங்களை விட்டுப் புறப்பட்டு பொது ஜனங்கள் துக்கமும் நாச
மும், நிறம்பிய பிரதேசங்களுக்குச் சென்றார்கள். வரிசை வரிசையாக வந்துகொண்டிக்கும்
இவாகுவிகளைக் கண்டு மத்திய பிரான்ஸிலுள்ள விவசாயிகள் கைகளைக்கூப்பி கடவுளைப்
பிரார்த்திக்கிறார்கள்.”

பிரெஞ்சுக்காரர்களின் கஷ்ட அனுபவத்திற்கு நேசதேசத்தார்கள் பொறுப்பாளிகள்
என்று பொருள்படும்படியாகச் செய்து நேசதேசத்தாரிடம் துவேஷ புத்தி உண்டாகும்படி
செய்ய ஜெர்மானியர்கள் எந்த முறையையும் கையாளுவார்கள். 1940-ம் வருஷம் பிணையாளி
களைப் பயமுறுத்தியதுபோல் இப்பொழுது கடற்கரையிலுள்ள பிரெஞ்சு மக்களைத்
துறத்தியடித்ததும் மனதாரச் செய்த நடவடிக்கையாகும். ஏற்படப்போகும் இரண்டாம்
போர்முனையை இப்பொழுதே பிரான்ஸ் வெறுக்கவேண்டுமென்று ஜெர்மானியர்கள்
முயற்சி செய்துவருகிறார்கள்.

சமாதான கமிஷன் போட்ட கடைசி உத்தரவுகளின்படி ஜெர்மன் யுத்த தொழிற்
சாலைகளுக்குத் தேவையான முஸ்தீப்புகளைத் தயாரித்துவந்த பிரெஞ்சு தொழிற்சாலைகள்
அக்கக்காகப் பிரிக்கப்பட்டு அவைகள் ஜெர்மனிக்கு அனுப்பப்பட்டுவிட்டன. சமீபகாலத்
தில் கால்நடைகளையும் மற்ற உணவுப்பொருள்களையும் ஜெர்மனியிடம் ஒப்படைத்துவிட
வேண்டுமென்ற உத்தரவு ராணுவ முறையிலும், பொருளாதார முறையிலும் முக்யத்வ
முள்ளது. பிரான்ஸ் துடைக்கப்படுகிறது. பிரெஞ்சு தேசத்தில் வெகுகாலம் யுத்தம்
நடைபெற்றால் அந்த சமயத்தில் பிரெஞ்சுக்காரர்கள் தங்களுடைய தேவைகளுக்கு ஜெர்
மனியைப் பூராவாக நம்பியிருக்கவேண்டுமாம். அதாவது படையெடுக்கும் படைகள்
தங்களுடைய தேவைக்கும், விடுதலைபெறும் நாடுகளின் தேவைக்கும் அவசியமான உணவுப்
பொருள்களை அவர்களே கொண்டுவரவேண்டும்.

பொருளாதார முறையில் பிரான்ஸ் சூன்யமாகிவிடும். ஆகிலும் ராஜீய, ராணுவ
முறையில் அந்த கதியை அடைந்துவிடாது. அங்குள்ள 4,00,00,000 ஜனங்கள் ஜெர்மன்
ஆக்கிரமிப்புப் படைகளை வெறுக்கிறார்கள். அங்குள்ள ஒரு சிறு பகுதியார்கள் எதிர்ப்பு யுத்தத்
தைத்துவக்கி அதை பலப்படுத்தி வருகிறார்கள். பிரான்ஸில் நடைபெறும் ராணுவ எதிர்ப்பு
மேற்கு ஐரோப்பாவில் இது வரையில் நடைபெற்றதைவிட வேறு விதமானது.

சதிகளைப் போல பொதுமக்களின் கிளர்ச்சிகளைச் சுலபமாக அடக்கிவிடமுடியாது.
அவைகள் புரட்சி செய்ய ஆரம்பித்துவிட்டால் அவைகளின் விளைவுகள் அபாரமாகயிருக்கும்.
பிரெஞ்சுக்காரர்களும், ஜெர்மானியர்களும் இதை அறிவார்கள். இந்த எதிர்ப்பு இயக்கம்
பகிரங்கமாக நடைபெறும்படியாகத் தூண்டிவிட சமீபகாலத்தில் ஜெர்மானியர்கள் முயற்சி
செய்து வருகிறார்கள். இந்த விஷயத்தில் பிரான்ஸில் எதிர்த்துப் போராடும் படைகளுக்கு
வேறு மார்க்கமில்லை. சரியான காலம் வரும்வரையில் பொருத்திருங்கள் என்று அவர்களிடம்
சொல்லுவதில் பயனில்லை. ஜெர்மானியர்களும் விஷி நிர்வாகிகளும், மற்ற ஒற்றர்களும் ஒரு
மாகாணத்தைச் சுற்றி வளைத்துக்கொள்ளும்பொழுது புரட்சிக்காரர்கள் வெளியேவந்து போர்
புரிவதைத் தவிர வேறு வழியில்லை. ஆயுதம் பூண்ட படைகளின் எதிர்ப்பு ஏற்படுமென்று
புலப்படும் பொழுதும் ஸோல்ஜர்களும் ஆக்கிரமிப்பு அதிகாரிகளும் தாக்கப்படும் பொழுதும்
ஜெர்மானியர்கள் ஒரு பிராந்தியத்திலிருந்து தனிப்பட்ட ஜெர்மானியர்களை அப்புறப்படுத்தி
விடுகிறார்கள். சிறிது காலம் வரையில் அந்தப் பிரதேசம் கொரில்லாப்படைகளின் வசமாகி
விடுகிறது. அதன் பிறகு ஜெர்மானியர்கள் திரும்பி வருகிறார்கள். பிரெஞ்சு ரக்ஷகப்படை
களும், ராணுவமும் ஒன்று திரட்டப்பட்டு ஏராளமான ஒற்றர்களுடனும் நவீன யுத்த முஸ்தீப்பு
கள் கொண்ட ஜெர்மன் ராணுவத்துடனும் டாங்குகள் பீரங்கிகளின் உதவியுடனும் அந்த
இடத்துக்கு வந்துவிடும்.

இரவு நடமாட்டத் தடை கடுமையாக அமுல் நடத்தப்படும். ஆகையால் இந்த
உத்தரவு போலீஸ் மோட்டாரிலுள்ள ஒலிபெருக்கும் கருவிமூலம் அநேகம் தடவைகளில்
பகிரங்கப்படுத்தப்படுகிறது. ஒரு நகரம் பூராவும் காலி செய்யப்படுகிறது. ஜனங்கள் வீடு
களில் அடைபட்டிருக்கவேண்டும். தெருக்களில் நிலைபெறும் விளக்கணைப்பு நிவர்த்திக்கப்
படும். தெருக்களில் விளக்கு ஏற்றப்பட்டு ரோந்து செய்யப்படும். ஜெர்மன் ரகசியப்
போலீஸும், போலீஸ்காரர்களும், S.S. துருப்புகளும் ராணுவமும் தெருவில் நடமாட்டத்தைக்
கவனித்துவருவார்கள். அவர்களுடைய காவல் பலமாகயிருப்பதால் அனுமதிச் சீட்டு பெற்று

தெருவில் நடமாடுவது கூட சாவதானமற்றது. இதே சமயத்தில் ஜெர்மன் ராணுவம் திடீ
ரென்று தோன்றி ஏராளமான ஜனங்களைக் கைது செய்துவிடும்.

இந்நிலைமையில் உணர்ச்சியற்று ஒருவரும் இருக்க முடியாது. ஆகிலும் பிரெஞ்சு மக்கள்
அவ்விதம்தான் இருந்து வரவேண்டியிருக்கிறது. அக்கம்பக்கத்து நாடுகளிலிருந்து கிடைத்து
வரும் தகவல்களிலிருந்து பிரெஞ்சு கொரில்லாப் படைகளிடம் டாமித் துப்பாக்கிகள்தானிருக்
கின்றனவென்று சொல்லப்படுகிறது. டாமி துப்பாக்கிகள் சமீப தூரத்திலுள்ள லக்ஷியங்
களைத்தான் சுட லாயக்குள்ளவை. ஏராளமான படைகளுடனும், கனமான யுத்த
தளவாடங்களுடனும், டாங்கிகளுடனும் தோன்றும் ஜெர்மானியர்களை எதிர்க்க அவைகள்
சக்தியற்றவை. பிரெஞ்சுக்காரர்கள் சரியான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டுமென்று
நாம் நினைத்தால் அவர்களுக்குச் சரியான ஆயுதங்களையும், முஸ்தீப்புகளையும் நாம் வழங்க
வேண்டும்.

இரண்டாம் போர்முனை பிரெஞ்சு கொரில்லாப் படைகளை எட்டிவிட்டது. அவர்கள்
இப்பொழுது அதை நடத்திவருகிறார்கள். நேசதேசப் படைகள் தாக்க ஆரம்பிக்குமுன்
அவர்களை நிர்மூலமாக்கி பின்புறத்திலிருந்து அபாயம் ஏற்படாமல் செய்துவிடவேண்டுமென்று
ஜெர்மனி எண்ணம் கொண்டிருக்கிறதென்பது நிச்சயம். பிரெஞ்சு எதிர்ப்புப் படைகளுக்கு
ஏராளமான சிலாக்கியமான ஆயுதங்களை அனுப்ப வேண்டுமென்று நாமும், எண்ணம் கொண்டி
ருக்கிறோம். அவர்கள் பழிக்குப்பழி வாங்கும் தருணம் வந்துவிட்டது. இதை அவர்கள்
பயன்படுத்திக்கொள்ளும்படியாக நாம் உதவியளிக்கவேண்டும்.

## கிரீட்டைப் பற்றிய குறிப்புகள்.

1913-ம் வருஷம் இலையுதிர் காலத்திற்குப்பின் கிரீட் தீவைப்பற்றி நாம் அதிகமாகக்
கேள்விப்படாதபோதிலும் கிரீஸிலுள்ள ஸ்தலங்களிலிருந்து ஏஜியன், அயோனியன் கடல்களி
லும் அங்கிருந்து ஐரோப்பாவுக்கு ரக்ஷணையளித்துவரும் தூரதேசத் தற்காப்புகளுக்கும் செல்
லும் ஜெர்மனியின் போக்குவரத்து மார்க்கங்களை நேசதேசத்தாரின் கடுத்தரமான, கனமான
வெடிவிமானங்கள் இடைவிடாது நொருக்கி வருகின்றன.

சமீபகாலத்தில் பிரிடிஷ் கமாண்டோ படைகள் கிரீட்டிலிறங்கி அங்கிருந்த ஜெர்மன்
ஜெனரலைக் கைது செய்ததிலிருந்து கிரீட் மறுபடியும் ஜனங்களின் முன் தோன்றிவிட்டது.
கமாண்டோப்படைகளிறங்கி ஜெர்மன் ஜெனரலைக் கைப்பற்றியது மிகவும் சந்தோஷமளிக்கிற
தென்றாலும் இந்த நடவடிக்கையைப்பற்றி மிகையாகச் சொல்லுவதற்கில்லை. குறிப்பிட்ட
லக்ஷியத்தை கமாண்டோப்படை வெற்றிகரமாக அடைந்ததென்றுமட்டும் சொல்லக்கூடும்.
வடஆபிரிக்கப் போரில் எதிரியின் படை வரிசைகளுக்குப்பின் இறங்கிய பிரிடிஷ் கமாண்டோ
படைகள் ரோமலைப் பிடிக்கமுடியவில்லை என்பதை ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள். ஆனால்
அச்சமயம் ரோமல் தலைமை காரியாலயத்திலிருக்கவில்லை. நேசதேசத்தாரின் சமீப தளத்
திலிருந்து 200 மைல்களுக்கப்பாலுள்ள கிரீட்டிலுள்ள படைகளின் தலைவரைக் கைது செய்த
நடவடிக்கை கம்மாண்டோ படைகளின் யுத்த தந்திரத்தின் மேன்மையும் மத்தியதரைக்
கடலில் நேசதேசத்தாரின் கடல், விமான ஆதிக்கத்தையும் ருஜூப்பிக்கிறது.

ராணுவ முறையில் கிரீட்டிலுள்ள ஜெர்மன் ராணுவ அமைப்புகள் அழிக்கப்பட்டதுடன்
இந்த நடவடிக்கையின் மூலம் ஜெர்மானியர்களுடையவும் கிரீட் ஜனங்களுடையவும் மன உறுதி
குலைந்துவிடும். ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவில் புதிய மகத்தான நேசதேச
ராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமாகுமென்று எதிர்பார்க்கப்படும்பொழுது இந்த நடவடிக்கை
பால்கன் நாடுகளிலுள்ள எல்லைப்புற தற்காப்புகளின் சிதைவை உண்டுபண்ணுமென்று
எதிரிக்கு பீதி உண்டாகக்கூடும். கிரீட்டிலிருந்து நேசதேசத்தார் பின் வாங்கியபின் மூன்று
வருடங்கள் கிரமித்து இப்பொழுது விடுதலையை எதிர்பார்த்து நிற்கும் கிரீட் ஜனங்களுக்கும்,
கிரேக்கர்களுக்கும் உத்சாகம் ஏற்படும்.

கிரீட்டின் காடு முரடான மலைக் குன்றுகள் உள்ள கடற்கரை பூராவிலும் கடல் மார்க்கத்
திலிருந்து ஏற்படக்கூடிய படையெடுப்பைத் தடுக்க பீரங்கிகளும், கோட்டைகளும் அமைக்கப்
பட்டிருக்கின்றன. வடக்கு/ஆபிரிக்காவை நோக்கியிருக்கும் கடற்கரையில் நல்ல துறைமுகங்
கள் கிடையாது. மலைகளும் சமுத்திரத்திலிருந்து செங்குத்தாக ஓங்கி நிற்கின்றன. இது
கிரீஸுக்கு தென்கிழக்கில் 100 மைல்களுக்கப்பாலிருக்கிறது. ஏஜியன் கடலுக்குப் போகும்
மார்க்கத்தையும் கிழக்கு மத்தியதரைக் கடலையும் காபந்து செய்து வருகிறது. ஆகிலும்
பால்கன் நதிகளுக்குச் செல்ல அது சிறந்த பாய்ச்சல் ஸ்தலம்.



## பிரிடிஷ் கடற்படை பலம் நேசதேச வெடிவிமானங்களின் மேன்மைக்கு உதவுகிறது.

(*A. J.* மாக்வின்னி).

ஐரோப்பாவின் விடுதலைக்காக நேசதேசத்தார்கள் உபயோகிக்கப்போகும் ஆயிரக்கணக்
கான கப்பல்களுக்கும், விமானங்களுக்கும், டாங்கிகளுக்கும் மோட்டார்களுக்கும்,
தேவைப்படும் எண்ணெய் பிரிடனில் எண்ணெய் கிட்டங்கிகளில் சேமித்து வைக்கப்பட்டிருக்
கிறது. சென்ற வருஷத்தில் நூற்றுக்கணக்கான பிரிடிஷ், நேசதேச எண்ணெய்க் கப்பல்கள்
பிரிடிஷ் துறைமுகங்களுக்கு பத்திரமாக வந்து சேர்ந்திருக்கின்றன. அவைகளில் எதிரியின்
பிரதேசங்களைப் படையெடுப்புக்குமுன் நொருக்க எண்ணெய் கொண்டுவரப்பட்டதுடன்
பட்டையெடுப்புக்கும் அதன்பின் ஸப்ளை, போக்குவரத்து மார்க்கங்களை பரிபாலிப்பதற்கும்
தேலவயான மிலியன்கள்கணக்கான டன்கள் எடைமானமுள்ள எண்ணெயும் பெட்ரோலும்
கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

நேசதேச விமானப் படையின் ஹிட்லரின் ஐரோப்பாவைத் தாக்கும் நடவடிக்கைகள்
திடுக்கிடும்படியாகயிருந்து வருவதால், கடற்படை பலமில்லாவிடில் நேசதேசத்தார்களின்
வெடிவிமானங்களும் சண்டை விமானங்களும் தளங்களிலிருக்கும் நிலயங்களை விட்டு வெளிப்
புறப்படமுடியாதென்ற விஷயத்தை நாம் மறந்துவிடுகிறோம். கடலாதிக்கத்தினால்தான்
பிரிடிஷ், அமெரிக்க வெடி விமானங்கள் 1,000-க் கணக்காகச் சென்று பெர்லினையும் மற்ற
முக்கியமான லக்ஷியங்களையும் தாக்க வசதிபெற்றன.

ஒவ்வொரு 1,000 வெடி விமானங்களின் விமான நடவடிக்கைக்கும் ஒரு எண்ணெய்க்
கப்பல் பிரிடனுக்கு சரக்குகளுடன் பத்திரமாக வந்து சேரவேண்டுமென்பதற்குச் சில புள்ளி
விபரங்களை வெளியிடுவோம். பெர்லினுக்குச் செல்லும் ஒரு கனமான வெடி விமானம்
2,000 காலன் பெட்ரோலை அழித்துவிடும். ஆயிரம் வெடி விமானங்களுக்கு 2 மிலியன்
காலன் எண்ணெய் தேவைப்படும். அதாவது 7,390 டன்கள் எடைமானமுள்ள எண்ணெய்
அவசியமாகும். இத்துடன் பிரிடனிலிருக்கும் விமான தளங்களிலிருந்து பறந்துசெல்ல
நேசதேச விமானிகளுக்கு அளிக்கப்படும் பயிற்சிக்கு விமான எண்ணெயும் தரைப்படை
களின் உபயோகத்துக்கும் துறைமுகங்களிலிருந்து விமான தளங்களுக்கு எண்ணெயைக்
கொண்டுபோவதற்கும் தேவையான பெட்ரோலையும் சேர்த்துக்கொண்டால் பெர்லினைத்
தாக்கிவரும் 1,000 வெடி விமானங்களுக்கும் சாதாரணமான ரக எண்ணெய்க் கப்பல் கொண்டு
வரக்கூடிய 10,000 டன்கள் எடைமானமுள்ள எண்ணெய் உபயோகப்படுத்தப்படவேண்டும்.

### யூ படகுகள் முக்கியமாக எண்ணெய்க் கப்பல்களைத் தாக்கி வருகின்றன.

ஹிட்லர் பிரிடனுடைய கடற்படை சக்தியைச் சரியாக மதித்துப்பார்க்கவில்லை. அட்
லாண்டிக்கிலுள்ள கடல் மார்க்கங்களை அழித்துவிட்டால் பிரிடனில் எண்ணெய், உணவுப்
பொருள்கள், யுத்த தளவாடங்களின் குறைவு ஏற்பட்டுவிடுமென்று ஹிட்லர் நம்பியிருந்தான்.
எண்ணெய்க் கப்பல்களைத்தான் யூ படகுகளும் ஜெர்மன் கொள்ளைக் கப்பல்களும், ஜெர்மனி
யின் வெகு தூரம் செல்லும் வெடி விமானங்களும் முக்கியமாகத் தாக்கிவருகின்றன.

ஜெர்மானியர்களின் கடல் போர் திட்டம் பயன்படவில்லையென்பதற்கு ருஜு வேண்டு
மானால் யூ படகுகளின் ஏப்ரல் மாதத்திய நடவடிக்கைகளைப்பற்றி ஜெர்மன் ஒவர்ஸீஸ்
அறிக்கை நிலயத்தின் வெளியீட்டைக் கவனித்தால் போதும். இந்த மாதத்தில் 59,000
டன்கள் மொத்த எடைமானமுள்ள ஒன்பது சாமான் கப்பல்களை யூ படகுகள் மூழ்கடித்தன
வென்றுதான் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. மார்ச்சு மாதத்தில் 1,19,000 டன்கள்,
பிப்ரவரியில் 97,185 டன்கள், ஜனவரியில் 1,20,000 டன்கள் மொத்த எடைமானமுள்ள
கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டனவென்று ஜெர்மனி பாத்யம் கொண்டாடிற்று.

இந்த யுத்தத்தில் சில சமயங்களில் ஒரு மாதத்தில் 10,00,000 டன்கள் மொத்த எடை
மானமுள்ள நேசதேசக் கப்பல்களை ஜெர்மனி மூழ்கடித்ததென்று அது பாத்யம் கொண்டா
டிய நாட்களுமுண்டு. பூராவும் எண்ணெய் நிரப்பிய அநேக கப்பல்கள் மூழ்கிவிட்டனவென்
பதை வெளிப்படுத்துவதில் ஜெர்மனிக்கு ஆனந்தம் ஏற்பட்டதுமுண்டு. இது கொழுத்த
வேட்டையென்று அவர்கள் சொல்லிவந்தார்கள். எண்ணெய்க் கப்பல்களை பிரிடிஷ் துறை
முகங்களுக்கு வரவொட்டாமல் தடுத்துவிட்டால் ஜெர்மன் யுத்த தொழிற்சாலைகளும் ராணுவ
ஸ்தாபனங்களும் தங்குதடையன்னியில் தங்களுடைய யுத்த முயற்சிகளைப் பூர்த்திசெய்
திருக்கும். பிரிடிஷ், அமெரிக்க வெடி விமானங்கள் வரிசையாக ஒவ்வொரு ஜெர்மன் நகரத்
தையும் நொருக்கியிருக்க முடியாது. ஜெர்மன் பொதுமக்கள் பத்திரமாகத் தூங்கியிருப்
பார்கள். "பெர்லின் ஒருபொழுதும் வெடி விமானங்களால் தாக்கப்படாதென்று"
கோயரிங்கும் தாடஸ்தியமாக வெளியிட்டுவரலாம்.

# வெகுதூரம் செல்லும் பிரிடிஷ் சண்டை விமானங்கள்.

## விமான யந்திர சக்தி அமைப்பின் முன்னேற்றம்.

(விங்க் கமாண்டர் L. V. பிரேசர்).

வெகுதூரம் செல்லுவதற்காக பெட்ரோல் டாங்கிகள் அமைக்கப்பட்ட ஸ்பிட்பயர் விமானக் கூட்டமொன்று ஜெர்மனிக்குச் சென்று தரையிலுள்ள விமானங்களையும் ஸ்டாட்கார்டுக்கு அருகில் சாமான் ஏற்றிச் சென்ற ரயில் வண்டியையும் தாக்கின என்ற விஷயம் முக்கியத்வம் உள்ளது. விமானங்கள் 700 அல்லது 800 மைல்கள் சென்றன. பிரிடனுக்காக யுத்தம் நடந்த காலத்தில் ஸ்பிட்பயர் 415 மைல்கள்தான் செல்லக்கூடியவை. சண்டை விமானம் அதன் தளத்திற்கு சமீபத்தில்தான் எதிரியைத் தாக்கக்கூடும். இதற்கு முன் பிரிடனில் கட்டப்பட்ட ஒரு எஞ்ஜின் உள்ள எந்த விமானமும் ஜெர்மனியைத் தாக்கச் சென்றிருக்க வில்லை. அநேக காலமாக பிரிடிஷ் சண்டை விமானங்கள் ஜெர்மனி ஆக்கிரமித்து இருக்கும் ஐரோப்பாவுக்குச் சென்றிருக்கின்றன. ஸ்பிட்பயர்களின் தற்போதிய நடவடிக்கை நூதனமானது.

### சண்டை விமானங்கள் தாக்குதல் செய்ய கடல் தாண்டிச் செல்லுகின்றன.

பிரிடனுக்காக நடைபெற்ற யுத்தத்தில் ஸ்பிட்பயர், ஹரிகேன் விமானங்களின் வீரச் செய்கைகளிலிருந்து சண்டை விமானங்கள், வெடி விமானங்களின் தாக்குதலை சமாளிக்கத்தான் சக்தியுள்ளவை என்று கருதப்பட்டது. சமீபகாலம் வரையிலும் சண்டை விமானங்கள் தற்காப்பு சாதனம்தான் என்று பொதுஜனங்கள் நினைத்துவந்தார்கள். வெடி விமானங்களுக்கு ஒத்தாசை செய்ய விசேஷ அமைப்புகள் பெற்ற சண்டை விமானங்களை அனுப்புவது என்ற நேசதேச விமான தந்திரம் மூன்று வருஷத்திற்கு முன்பே கையாளப்பட்டு வந்தது.

யுத்த ஆரம்பத்தில் சண்டை விமானங்களின் நடவடிக்கைக்கு அளவு உண்டு. எதிரி விமானங்கள் தாக்க வந்தவுடன் அவைகளை பலமாகத் தாக்கும் வரையில் சண்டை விமானங்கள் ஆகாயத்திலேயே வெகுநேரம் வரையில் சஞ்சாரம் செய்யும். சண்டை விமானங்களின் யுத்த தந்திரத்துடன் ரேடியோ லொகேட்டர் என்ற சாதனங்களின் உதவியும் ஒன்று பட்டிராவிட்டால் 1940-ம் வருஷம் ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற விமானப் போரில் ஜெர்மனி வெற்றி பெற்று இருக்கும். ரேடியோ லொகேட்டர்களின் மூலம் பிரிடிஷ் சண்டை விமானங்கள் சரியான சமயத்தில் சரியான ஸ்தலத்திற்கு குறைவான எண்ணெய்ச் செலவுடன் வந்துவிட்டன. அக்காலத்தில் உபயோகப்பட்ட ஸ்பிட்பயர் விமானங்கள் 415 மைல்கள் செல்லக்கூடும். ஆகாயத்தில் 1.4 மணிகள் தங்கியிருக்கக்கூடும். ஹரிகேன் விமானங்கள் 335 மைல்கள் சென்றன. ஆகாயத்தில் 1 மணி 4 நிமிஷம் தங்கியிருந்தன.

இந்தப் புதிய திட்டம் 1941-ம் வருஷம் ஜனவரிமீ ஆரம்பமாயிற்று. அதன் பிறகு வேகமாக முன்னேற்றமடைந்திருக்கிறது.

இந்தத் திட்டம் சம்பவங்களிலிருந்து நிருவப்பட்டது. யுத்த ஆரம்பத்தில் சண்டை விமானங்கள் தற்காப்பு யுத்தம்தான் செய்துவந்தன. ஆகிலும், யுத்தத்தின் முதல் எட்டு மாதங்கள் வீணாகக் கழிக்கப்படவில்லை. அக்காலத்தில் விரிவான பயிற்சி அளிக்கப்பட்டது. பிரான்ஸுக்காக நடந்த போர் மேமீ 10உ அன்று துவங்கியபொழுது ஹரிகேன் விமானிகள் எதிரியைத் தாக்க தினசரி 7 தடவைகள் சென்றார்கள். முதல் நாளன்று தங்களுக்கு யாதொரு நஷ்டமின்றியிலும் அவர்கள் எதிரியின் 49 விமானங்களை சுட்டுத்தள்ளினார்கள். ஸ்பிட்பயர் விமானங்கள் பிரான்ஸுக்குச் செல்லவில்லை. அவைகள், உள்நாட்டிலிருந்து கொண்டு கடுமையான சேவையைச் செய்யத் தயாராக வைக்கப்பட்டன.

### போக்குவரத்து விமானங்கள்.

பிரிடனுக்காக நடைபெற்ற யுத்தத்திற்கு முன் சில வாரங்களில் விமானங்களின் குறைவும் விமானங்களின் பறந்து செல்லும் சக்தியும் குறைவாக இருந்ததால் சண்டை விமானங்களின் ரக்ஷணைக்குட்பட்ட பிராந்தியத்தை விஸ்தாரப்படுத்த தாத்காலிகமான உபயோகமுள்ள சில நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. உதிரி பாகங்களையும் தரையில் வேலை செய்கிறவர்களையும் கொண்டுபோகும் போக்குவரத்து விமானங்கள் சண்டை விமானங்களின் துணை கொண்டு பிரிடனின் கிழக்குக் கரையின் பல பாகங்களுக்குச் சென்றன. இவ்விதமாக சலன சக்தியுள்ள ஒரு அமைப்பு விரிவான அநேக தேசங்களுக்குச் சேவை புரிந்து வந்தது.

ஐரோப்பாவில் சண்டை விமானங்களின் முன்னேறித் தாக்கும் நடவடிக்கைகள் பலப்பட்டுவந்தன. 65 மைல்கள் செல்லக்கூடியதும் 2.8 மணிகள் ஆகாயத்தில் நிலைபெற்றிருக்கக் கூடியதுமான ப்ளென்ஹீம் விமானங்கள் ஐரோப்பாவை இரவில் தாக்க ஆரம்பித்தன.



ஒன்று அல்லது இரண்டு ஜோடி ஹரிகேன் விமானங்களும் பாய்ந்து சென்று தாக்குதல் செய்து வந்தன.

1941-ம் வருஷம் ஜூன்மீ த்திற்குள்ளாக ஜெர்மன் ஆக்கிரமிப்பு ஐரோப்பாவை சண்டை விமானங்கள் தினசரி தாக்கிவந்தன. விமானங்களுக்கு வெகுதூரம் செல்லுவதற்காக எண்ணெய் டாங்கிகள் அமைக்கப்பட்டன. பிரான்ஸின் மீதும் ஹாலந்தின் மீதும் விமானப் போர்கள் நடைபெற்றன. இந்த நடவடிக்கையின் முதல் கட்டத்தில் பிரிடிஷ் விமானப் படை 1,000 எதிரி விமானங்களை சுட்டுத்தள்ளிற்று. அதற்கு 644 விமானங்கள் நஷ்டம். 76 விமானிகள் பத்திரமாய் வந்துசேர்ந்தார்கள். அதற்கு முந்திய வேனிர்காலத்தில் பிரிடனை ஜெர்மனி தாக்கியபொழுது ஏற்பட்ட நஷ்டத்தைவிட இப்பொழுது நமக்கு ஏற்பட்ட நஷ்டம் இரண்டுக்கு ஒன்று என்பது குறிப்பிடத்தகாது.

1941-ம் வருஷத்தில் சண்டை விமானங்கள் 55,500 தடவை பறந்து சென்றன. அதாவது தினசரி 153 தடவை சென்றிருக்கின்றன. துணைக்காவல் புரியும் கப்பல்களிலிருந்து 8,000 தடவை தாக்குதல் செய்யப்பட்டன. ஒரு நாளைக்கு 18 சாமான் கப்பல் கூட்டங்களுக்கு துணைக்காவல் அளிக்கப்பட்டது.

1942-ம் வருஷத்தில் ஆரம்பத்தில் ஸ்பிட்பயர் விமானத்தில் 30 காலன் எண்ணெய் நிரப்பக் கூடிய உபரி டாங்கி அமைக்கப்பட்டது. அதன் பின் ரயில் வண்டித் தொடர்களைத் தாக்குவது தினசரி நடைபெற்றது. அவ்வருஷம் மார்ச்சுமீ முடிய மாதாமாதம் 150 எஞ்ஜின்கள் நாசம் செய்யப்பட்டன அல்லது பழுதாக்கப்பட்டன என்று மதிப்பிடப்பட்டது.

இரண்டு எஞ்ஜின் உள்ள சண்டை விமானமும் சண்டை வெடிவிமானமும் குறிப்பிடத் தக்க முறையில் திருத்தி அமைக்கப்பட்டன. அநேகமாக மரத்தினால் கட்டப்பட்ட மஸ்கிடோ விமானம் முதலில் 900 மைல்கள்தான் சென்றது. இப்பொழுது அது 1,200 மைல் செல்லக்கூடியதாகவும் ஆகாயத்தில் 5 மணி நேரங்களுக்குமேல் தங்கியிருக்கக்கூடியதாகவும் அமைக்கப்பட்டது. யுத்தம் ஆரம்பித்த முதல் மாதத்தில் இந்த விமானத்தைப் பற்றி படம்தான் வரைந்துகொண்டிருந்தார்கள். இன்று ஒரு மஸ்கிடோ விமானம் 1940-ம் வருஷத்தில் ஏற்பட்ட கனமான வெடி விமானத் தாக்குதலைப்போல பலமான நாசத்தை அழைத்துவிடும்.

### சண்டை விமானத்தின் தாக்கும் சக்தி அதிகரித்துவிட்டது.

சண்டை விமானத்தின் தாக்கும் சக்தி ஒவ்வொரு வருஷமும் அதிகரிக்கப்பட்டது. 1943-ம் வருஷம் செப்டம்பர் மீ த்தில் பகல் சண்டை விமானங்கள் ஒரு மாதத்திய போரில் பிரிடிஷ் கால்வாயைத் தாண்டி எதிரிப் பிரதேசத்தில் 132 விமானங்களைச் சுட்டு வீழ்த்தின. வழிமறிக்கும் விமானங்கள் எதிரியின் 20 விமானங்களை நாசம் செய்தன. அவ்வருஷ நடவடிக்கைகளில் ஜெர்மனியார்கள் இரண்டு விமானங்களை இழந்தபொழுது பிரிடன் ஒரு சண்டை விமானத்தை இழந்தது. வெற்றியில் 80 சதவிகிதம் ஐரோப்பாவில் கிடைத்தன.

மத்தியதரைக்கடலில் நேசதேசப்படை 250 விமானங்களின் உதவிகொண்டு தாக்குதலை ஆரம்பித்தது. இங்கும் தற்காப்பிலிருந்து முன்னேறித் தாக்கும் போர் கையாளப்பட்டதென்பது தெளிவானது. இது ரோமலின் இறுதி பின்வாங்குதலுக்கு காரணமாயிருந்தது. எதிரிகள் அதிவேகமாகப் பின்வாங்கியதால் வெடி விமானங்களைவிட எளிதில் சலனம் செய்யக்கூடியதும் கனமான முஸ்தீப்புகளும் இல்லாத சண்டை விமானங்கள் எட்டாம் படையின் முன்னணிப்படைகளாக இருந்து பின்வாங்கும் எதிரியைத் தாக்கிவந்தன. நேசதேச முன்னேற்றத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் விமானதளங்கள் துரிதமாக அமைக்கப்பட்டன. ஜெர்மன் படைகளின் இறுதி வீழ்ச்சிக்குக் காரணமான சிதைவை உண்டுபண்ணுவதிலும் சண்டை விமானங்கள் பெரும் பங்கு எடுத்துக்கொண்டன.

ஆபிரிக்காவில் ஹரிகேன் விமானம் டாங்கிகளை நொருக்குவது என்ற மற்றொரு நடவடிக்கையையும் கையாண்டது.

ஜெர்மனிக்கு ஸ்பிட்பயர் விமானங்கள் சென்றதென்பது ஒரு புதிய நடவடிக்கை. 1940-ம் வருஷத்தில் இந்த ஸ்பிட்பயர் விமானத்தைவிட அதிகவேகம் பொருந்திய விமானங்கள் முதன் முதலில் ஜெர்மனிக்கு வெற்றிகரமாகச் சென்றிருக்கின்றன. இந்தச் சண்டை விமானத்தின் சேவைக்கு மற்றொரு புதிய சந்தர்ப்பமும் வாய்த்திருக்கிறது.

இதே சமயத்தில் பிரிடனின் விமானங்கட்டும் நிபுணர்கள் நேசதேச வெற்றியைத் துரிதப்படுத்த புதிய முறைகளைக் கண்டுபிடிக்க பிரயத்னம் செய்துவருகிறார்கள். யுத்தத்திற்கு உபயோகமுள்ளதாக இருந்த அவர்களின் ஆராய்ச்சிகள் சமாதான காலத்திலும் ஆகாய ஆதிக்கம் பெற பேருதவி செய்யக்கூடும்.

# ருஷ்ய வெற்றியின் ஞாபகார்த்தங்கள்.

(கோனிவும் ராட்மிஸ்ட்ராவும்).

ருஷ்ய யூக்ரேனிய அரங்கத்தில் போரிடும் பெரும் தலைவர்கள் இருவரில் ஐவான்ஸ் டேபாஞேவிட்ச் கோனிவ் என்ற ஸோவியட் யூனியன் மார்ஷல் தான் முன்னையவர் என்று மாஞ்செஸ்டர் கார்டியன் பத்திரிகையின் பிரத்தியேக நிருபர் கூறுகிறார். மாஸ்கோவிற்காக நடந்த யுத்தத்தில் காலினின் அரங்கத்தில் இவர் படைகளுக்குத் தலைமை வகித்தபோது, பேவல் அலெக்ஸியாவிட்ச் ராட் மிஸ்ட்டர் ராவ் என்றவர்! அதே அரங்கத்தில் 3-ம் பாது காப்பு டாங்கிப் படையைச் செலுத்திய கர்னல் ஆவர். இருவரும் அங்கு சந்தித்தார்கள் அதன் பிறகு இன்றையதினம் ராட் மிஸ்ட்டர் ராவும் ஒரு தலைவராக கோனிவின்கீழ் பெரும் டாங்கிப்படையொன்றிற்கு கிழக்கு அரங்கத்தில் விளங்குகிறார்.

மார்ஷல் கோனிவ் அவர் உடுப்புகளின் மேல் அலங்காரமின்றி பெரும் கோட் ஒன்று அணிந்திருக்கிறார். அவரது தலைஅணி அவரது புருவங்களின்கீழ் தள்ளி வைக்கப்பட்டுள்ளது. அவர் முகங்கள் கோடிட்டப்பட்டிருக்கின்றன. கோனிவ்தான் உயிரை திரணமாய் மதிப்பதில்லை. 30 மாதங்கள் போரிட்டதில் அவர் உடல்நிலை கெட்டுப்போயிற்று. இருப்பினும் அவரது பிரகாசம்பொருந்திய கண்கள் அவர் இன்றும் எச்சரிப்பாகவே இருக்கிறார் என்பதை தெள்ளெனத் தெளிவுபடுத்துகிறது.

## குறி தவறுதிருப்பதிலேயே விருப்பம்.

மார்ஷல் கோனிவ் ஒருவித குணம்படைத்து சிலவார்த்தைகளே பேசுவார். ஒரு நாளைய உத்தரவைப்பற்றிய உத்தரவுக் கடிதத்தை கையில்வாங்கியதும் முக்கிய இடத்தைக் குறிப்பிடவில்லை என்றுகூறி, அவைகளைத்திருத்தி அமைத்து சுலபமான புரியும்படியான வகையில் சரியாய் எழுதுவார். அவருக்குவேண்டிய தேவைகள் மிகவும் சாதாரணமானவைகளே. சிறிய குடிசை, அதிலுள்ள ஆடம்பரமானவைகளும் இதர சாமான்களை நீக்கியும் அது அவருக்கு தலைமை ஸ்தாபனமாய் இருக்கும். குறிதவறுதிருப்பதே அவரது குறிக்கோள். அவர் வேலைகளில் அவர் எண்ணித்துணிவர். அவர் தன் அறைக்குள் நுழையும் போதும், தன் கைகளைப் பின்புறமாய்கட்டி மிகவும் சிந்தனையுடனேயே தான் நுழைவார். அவர் தன்படை வீரர்களுக்குள் உறவை உண்டுபண்ணி அவர்களுக்குள் "சகோதரத்வத்தை" நிலவும்படி செய்கிறார்.

ராணுவ சரித்திரமும் அதுபற்றிய விஷயங்களையும் அவர் செவ்வனே அறிந்துள்ளார். அதுபற்றிய புத்தகங்களும் அவரிடம் அதிகம் உண்டு. அவருக்கு ஜெர்மன் பாஷையும் ஆங்கில பாஷையும் படிக்கத்தெரியும்; 28 வருஷங்களுக்குமுன் ஸாரின் இரண்டாம் பெரும் பீரங்கிப் படையில் உழைத்தபோது, முதல் அவர் செம்படை பயிற்சிக் கழகங்கள் ராணுவ விஷயங்களைப்பற்றிய படிப்பதிலேயே கவனம் செலுத்தியிருக்கிறார். உள்நாட்டுக் கலகத்தில் தூரக்கிழக்கில் ஒரு சேனைக்குத் தலைமை வகித்து, 1930-ல் இரண்டாம் செங்கொடிப்படையைச் செலுத்த வந்து சேர்ந்தார். இப்பொழுது அவரது 48-ம் வயதில் அவரது புத்திரர் ஒரு சண்டை போடும் விமானத்தில் விமானியாயும் அவரது புத்திரி விமானப்படையைச் சேர்ந்த கழகத்திலுமாக இருக்கிறார்கள். இவர் வேட்டையில் விருப்பமுடையவர்.

## ஸ்டாலினின் சாமர்த்தியமான யுத்த தந்திரம்.

ராணுவத்தைச் சேர்ந்தோர்கள் கோனிவ் மாஸ்கோ யுத்த ஆரம்பத்தில் தன் முறைகளைக் கையாண்டு படைகளைச் செலுத்தினார் என்றும் இம்முறைகளே ஸ்டாலினின் சாமார்த்தியமான யுத்த தந்திரம் என்றும் இதனை இவர் கையாண்டார் என்றும் சொல்லுகிறார்கள். அதாவது தாக்குதலில் தைரியமும், இலக்கின்மேல் எதிர்பாராது தாக்குதலுமாகும். காலினின், இவைகளை கைப்பற்றியபோதும், ராஸிப், டாரோபெட்ஸ் இவைகளின்மேல் சென்றபோதும் கோனிவ், துரிதமானதும், எதிர்பாராததும், துருப்புகள் இதுவரை கையாளாததுமான புது முறைகளை கையாண்டு தன் திறனை வெளிப்படுத்தியிருக்கிறார்.

மேற்கு அரங்கத்தில் அதாவது ஸ்டெப்பீஸ் புல்தரைகளான அரங்கத்திலே ஒரு புது ராணுவத்தை செலுத்துமாறு ஒப்புவித்தபொழுதுதான் கோனிவின் உண்மையான சாமர்த்தியம் வெளிப்பட்டது. அந்த இடங்கள் காலினின் மாகாணத்திலிருந்து மிகவும் வேறுபட்டதாக இருந்தது. காடுகள் சதுசதுப்புகள் அல்லது மணல்பாங்கான பிரதேசங்கள் இவைகளுக்குப் பதிலாக மத்திய யூக்ரேனில் புல் நிறைந்திருந்தது. தொடர்ச்சியான கிராமங்கள் தொடர்ச்சியற்ற ரஸ்தாக்கள் இவைகளுக்குப்பதிலாக ரஸ்தாக்கள் நிறைந்திருந்தன. குளிர்காலம் குறைவாயும் முக்கியமாய் ஒரு நிலையற்ற காலநிலையும் உள்ளது. ஆனால் நதிகள் பரந்தும் வளைந்தும் வளைந்தும் உயரமான மேற்கில், உடோனெட்ஸ், யார்ஸ்க்லா, சியான், டினீபர், பக் முதலிய கரைகளும் உள்ளன.



## அழிவினின்றும் காப்பாற்றப்பட்டது.

யூக்ரேனிய பட்டணங்களிலும் கிராமங்களிலும் தோல்வியுற்று ஓடும் ஜெர்மன் படைகள் இழைத்த அழிவுகள் தெற்கில் அதிகமாகவும் இவர் முன்னேறிச்சென்ற கிராமங்களில் மிகவும் குறைவாகவும் இருந்ததே இவர் அப்படைகளுக்குத் தலைமைவகித்ததின் முக்கியத்வத்தை வெளிப்படுத்துகிறது. கார்க்கோவின் விடுதலைக்காக அவர் செய்தது அவரின் போக்கிலே ஏற்பட்ட விடுதலை. எதிரி நகரைவிட்டு ஓடவும், ஜெர்மனியின் சுரங்கவெடி பாவும் சைனியங்களும், விளக்குப்படைகளும் தங்கள் தங்கள் வேலையைக் கார்க்கோவில் செய்தாலும்கூட மார்ஷல் கோனிவின் முயற்சியில் மெரிபாவும் அதன் அருகிலுள்ள இதர நகரங்களும் அழியாமல் காக்கப்பட்டன.

அதே சாமர்த்தியத்துடன் வியுபாடின் மார்ஷலை அவர் ஒரு இடமாகத்தேர்ந்தெடுத்து துருப்புகளை வோர்ஸ்க்லாவிடம் கொணர்ந்து, பிடர்திக்ரேட், பதின்மூன்றும் சார்லஸை தோற்கடித்த போல்டாவா என்ற அதே இடத்தில் ஜெர்மானியர்களைத் தோற்கடித்தார். தாக்குதல் மிகவும் கொடூரமாய் நடந்தேறியது. ஜெர்மனியர்கள் தங்களுக்கு முக்கியமெனக் கருதிய கிராஸ்ஞேகிராட், கிரெமென்சக் ஆகிய இரு இடங்களையும் காலிசெய்யும்படி செய்யப்பட்டனர்.

டினிப்பரை அடைந்தும், எதிரிகள் எதிர்பார்த்ததற்கு நேர்மாறாக 60 மைல்கள் பரந்த பிரதேசத்தில் 18 இடத்தில் தன் படைகளை அணிவகுத்தனர். ஆனால் எதிரிகள்! ருஷ்யப் படைகளை ஒரே இடத்தில் நிறுத்தி தாக்குதல் நடத்தப்படும் என நினைத்தனர்.

## டாங்கி யுத்தத்தில் நிபுணர்.

மார்ஷல் ராட் மிஸ்ட்ராவும், மார்ஷல் கோனிவைப்போல, செம்படையில் கீழ்த்தரத்திலிருந்து மேல்தரமாய் எல்லா உத்தியோகங்களையும் படைத்தவர். கோல்ட்டாக்கில் நடவடிக்கைகள் நடத்துவதில் இவர் தான் முதல். பிறகு இவர் பிரன்ஸ் கழகத்தில் பட்டம் பெற்றார். இங்குதான் டாங்கிகளைப்பற்றி நிபுணரானார். அவைகளை கையாளும் முறைகளை நன்குபடித்தும் புல்லர், டிகால், காடெரியன் முதலியவர்கள் எழுதிய புத்தகங்களையும் படித்தார். டாங்கி யுத்தத்தைப்பற்றியும் அவ்வேலையைப்பற்றியும் "மலைப்பாங்கான இடங்களில் நடக்கும் யுத்தத்தில் டாங்கிகளின் பிரயோஜனம்" என்ற புத்தகத்தை எழுதியிருக்கிறார்.

முதன் முதலில் காலினின் அரங்கத்தில் கர்னலாக ஆக்கப்பட்டார். யெலெட்ஸ் என்ற இடத்தில் இவர் படைகள் 3 ஜெர்மன் படைப்பகுதிகளை நிர்மூலமாக்கியது. ஸ்டாலின்கிராடில் தற்காப்பு யுத்தத்தில் முனைந்திருந்தார். இவரது 3-ம் பாதுகாப்பு டாங்கிப்படை அதனை இரண்டு நாள் கோடல் நிகோவின் தென்மேற்கில் படையெடுத்ததற்காக "மானிக்" என்ற பட்டம்பெற்றது.

## பெரிய ஆர்மடா.

1943-ம் வருஷம் ஜூலை மாதம், 1918-ல் ஜெர்மனியர்கள் அடைந்த கிழக்கு முனையானதால் முக்கியத்வமுடைய புரோகாரேவ்கா என்ற இடத்தினருகில் நல்ல பலமுடைய ஜெர்மன் படையை எதிர்த்து பெரிய ருஷ்ய டாங்கிப்படையை இவர் நடத்தினார்.

கோனிவைப்போலில்லாமல் ராட் மிஸ்ட்ராவும், யுத்தகளத்தில் முழு உடையையும் உடுத்தி நல்ல தலைஅணியும் அணிந்திருப்பார். இவர் செம்படையைச் சேர்ந்த தலைவர்களில் மிகவும் முதன்மை பெற்றவராவர். அவர் படையைச் சேர்ந்தோர்களிடத்தில் அவருக்கு ஒரு தனிப்பட்ட அன்பு உண்டு. அவர்படையிலிருந்து வாழ்க்கையில் பயன்படாமல் போனவர்களை நடத்துவதிலிருந்தே நாம் அறியலாம். அவரது புத்திசாலித்தனமும் பரந்ததாகும். கொர்ஸன் யுத்தத்தின்போது இவரை சந்தித்த நிருபர் ஒருவர், ஆங்கிலத்தின் தற்கால முன்னேற்றத்தைப்பற்றி இவருடன் வெகுவாய் சம்பாஷித்தார்.

---

# பஸிபிக் யுத்தம் அநேக பாகங்களுள்ளது.

## ஜப்பானியர்கள் எல்லாவிடங்களிலும் முன்னேறிய்நாக்கும் பலத்தை இழந்துவிட்டார்கள்.

பஸிபிக் யுத்தம் துண்டு துண்டாக்கப்பட்ட ஒரு படத்தைப்போல் தற்பொழுது காணப்படுகிறது. வெளிப்படையான துண்டுகள் அமைக்கப்பட்டுவிட்டன. ஆகிலும் மத்தியபாகமுள்ள அமைப்பு தெளிவாயில்லையென்று கிளாஸ்கோ ஹெரால்டின் நிருபர் எழுதுகிறார்.

அந்தப் பத்திரிகை மேலும் சொல்லுவதாவது: டச்சு நியூ கினியாவில் போராட்டம் முன்னேற்றமடைந்து வருகிறது. பரிஷ்காரமாக ஆராய்ச்சி செய்யப்படாததும் மலைப்பாங்காகவும் சிரம சாத்தியமாகவுமுள்ள ஒரு பிரதேசத்தில் வேகமாக முன்னேற்றம் ஏற்படுமென்று எதிர்பார்ப்பதற்கில்லை.

இந்தத் தீவின் கிழக்குப் பகுதியில் ஜப்பானியர்கள் வீவாக் என்னும் கோட்டையை ரக்ஷித்து வருகிறார்கள். நேசதேசக் கடற்படையைச் சேர்ந்த ரோந்துப் படைகளும், விமானப் படையும் எதிரியின் கடைசி தற்காப்பான இந்த தளத்தைப் பலஹீனப்படுத்திவருகின்றன.

நியூ பிரிடனில் உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கையற்று ஒரு பெரிய எதிரிப்படை அகப்பட்டுகொண்டிருக்கிறது. இரண்டு வருஷங்களுக்குமுன் ஜப்பானியர் ஆக்கிரமித்த போர்ச்சுகீஸ்த் தீவான டிமோரில் நேசதேசத்தார்கள் ஒரு தாக்குதலை ஆரம்பித்திருக்கிறார்கள். அதன் விளைவுகள் இன்னும் வெளிவரவில்லை.

அலூஷியன் தீவுகளிலுள்ள கடற்படை தளங்களிலிருந்து குரையில்ஸ் தீவுக்கூட்டங்கள் இருதடவை வெடி விமானங்களால் தாக்கப்பட்டன. இது ஜப்பானுக்கு பீதியுண்டாக்கக்கூடிய போதிலும் முக்கியமான தாக்குதல் மத்திய பஸிபிக்கில் மார்ஷல்ஸ், காரொலைன்ஸ் தீவுகள் வழியாகத்தான் நடைபெறக்கூடும்.

### அமெரிக்கர்கள் டிரக்த் தீவை நாசம் செய்துவிட்டார்கள்.

பிளக்கமுடியாத தற்காப்புகளுள்ளதென்று சொல்லப்பட்ட டிரக் தீவை அமெரிக்க வெடி விமானங்கள் ஜப்பானின் மூர்க்கமான எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் நாசம் செய்திருக்கின்றன. ஆகிலும் காரொலைன்ஸ் தீவுகளில் இயற்கையான தற்காப்புகள் பலமாயிருப்பதினால் முதல் தாக்குதலுக்குப்பின் எதிர்பார்த்ததைவிட நீண்டகாலம் அது சமாளித்து நிற்குமென்று தோன்றுகிறது.

இவ்விதமான கதம்பமான உண்மைகளிலிருந்து ஒரு முடிவு ஏற்படுகிறது. எல்லாப் போர்முனைகளிலும் ஜப்பானியர்கள் முன்னேறித்தாக்கும் சக்தியை இழந்துவிட்டார்கள். அக்கிரமப் போரைத் துவக்கும் ஒருவர் இந்த சக்தியை இழந்துவிட்டால் அவன் யுத்தத்தில் நிச்சயமாக வெற்றிபெறமாட்டான். ஆகிலும் தோல்வியைத் தவிர்க்கலாமென்று அவன் எண்ணியிருக்கலாம். இதே காரணத்தினால்தான் ஜப்பானியக் கடற்படை போர் புரியாமல் நின்றுகொண்டிருக்கிறது. அதன் நடமாட்டமும் ரகசியமாக வைக்கப்பட்டிருக்கிறது. வெகுதூரத்திலுள்ள பாகங்களில் நடத்திய போர்களுக்காக துருப்புகளைக் கொண்டுபோன கப்பல்களுக்குத் துணைக்காவல் சென்ற சஞ்சாரிகளையும், நாசகாரிகளையும் ஜப்பான் ஏராளமாக இழந்துவிட்டது. ஆகிலும் அவர்கள் இந்த நஷ்டத்தை மதிக்காமல் சண்டைக் கப்பல்களையே பூராவும் நம்பியிருக்கிறார்கள். சஞ்சாரிகளின் நஷ்டங்களை ஈடுசெய்வதென்பது சாத்தியமில்லை. பேர்ல் துறைமுக நடவடிக்கைக்குப்பின் ஜப்பான் ஏராளமான யுத்தக் கப்பல்களைக் கட்டியிருக்கிறது. அவைகளைப்பற்றிய விவரங்களை உலகத்தார் இன்னும் அறியக்கூடவில்லை. இந்தக் கப்பல்கள், ஜப்பானிய விமான தளங்களிலுள்ள விமானப் படைகளின் உதவிகொண்டு ஜப்பானுக்குச் சமீபத்திலுள்ள சமுத்திரங்களில் மகத்தான தற்காப்புப் போரை நடத்துவதென்று ஜப்பான் உத்தேசித்திருக்கிறது. அந்த சந்தர்ப்பம் இன்னும் சில மாதங்கள் வரையில் கிட்டிவிடாது. இந்து மகா சமுத்திரத்திலும் பஸிபிக் கடலிலும் அவர்களைத் தாக்க ஏராளமான பிரிடிஷ் அமெரிக்கப்படைகள் குவிந்துவருகின்றனவென்பதை ஜப்பான் நன்கு அறியும். இந்த மத்தியமான நடவடிக்கையை உத்தேசித்துத்தான் வட்டத்தின் ஓரத்தில் பலமான நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றனவென்றும் எதிரி சுலபமாக அறியக்கூடும்.

---

## ஜப்பான் ஆக்கிரமித்திருக்கும் நாடுகளின் உள்நாட்டு நிலைமை.

ஆக்கிரமிப்பு ஆசியாவை ஆச்வாசப்படுத்துவது என்ற நடவடிக்கைகள் ஓய்ந்துபோய் விட்டன. நேசதேசத்தாரின் முன்னேற்ற வேகத்தைக்கண்டு ஜப்பானிய ராணுவம் கடுமையான நடவடிக்கைகளைத் துவக்கியிருக்கிறது. ஐரோப்பாவில் ஆதீனத்துக்குட்பட்ட நாடுகளை ஜெர்மனி ஆக்கிரமிப்பதுபோல டோஜோவும் ஹிட்லரைப் பின்பற்றிச் செல்லுகிறான்.

ஜப்பானுக்கும் ஜப்பான் ஆக்கிரமித்திருக்கும் நாடுகளிலுள்ள பொம்மை நிர்வாகங்களுக்குமுள்ள ஆனந்தக்களிப்பு முடிவடைந்துவிட்டது. சென்ற வருஷத்தில் இனிமையாகச் சொல்லப்பட்ட சில நடவடிக்கைகளுக்கும் முடிவு ஏற்பட்டது. ஸ்வதந்திரம் என்ற பேச்சு வெளிவரவில்லை. அதற்குப் பதிலாக நெருக்கடியான நிலைமை, கட்டாயச் சேவை, பொம்மை உத்தியோகஸ்தர்கள், அநியாய லாபம் சம்பாதிக்கிறவர்களைப் பொருத்து கடுமையான அடக்குமுறைகள் தோன்றிவிட்டன. அபூர்வமாக ஜப்பானிய பிரசாரர்கள் ஸ்வதந்திரம் என்று பேசும்பொழுதெல்லாம் நாய்கள் எலும்பைக் கடிப்பதுபோல அதை பிரயோகிக்கிறார்கள். பெரிய கிழக்கு ஆசியா திட்டம் என்ற பேச்சு மறைந்துவிட்டது.



அட்லாண்டிக்கடல் சாசனத்தைத் தூஷிக்க பிரசாரர்கள் முயன்றபொழுது அது பிரபலமாகவும் விரிவாகவும் பேசப்பட்டுவந்தது. இரண்டு திட்டங்களை ஒப்பிட்டுச் சொல்லும் முறையில் ஜப்பான் எடுத்துக்கொண்ட கடுமையான பிரயாசையை கவனிக்கும்பொழுது அதையும் புதைகுழியில் தள்ள ஜப்பான் தயாராகயிருந்ததென்று நினைக்கவேண்டியிருக்கிறது.

டோக்கியோவிலுள்ள பிரசாரர்களைவிட ஸ்தலத்திலிருக்கும் அதிகாரிகள் முக்கியத்வமுள்ளவர்கள். இந்தக் கபடமான நடவடிக்கைகளைக் கையாள அவர்களுக்கு அவசியமேற்படவில்லை. டோஜோவும் அயோகியும் ஆக்கிரமிப்பு பிராந்தியங்களிலுள்ள தலைவர்களுக்குக் கண்ஜாடை காண்பிக்கவேண்டிய அவசியமே கிடையாது. மேலும் ஜப்பானிலுள்ள ராஜதந்திரிகளுக்கு ஸ்வதந்திரமென்பது ஒருவர்மேல் மற்றொருவருக்குள்ள பற்று என்றும், சமத்வமென்பது சூரிய தேவதைக்குட்பட்டு ஜப்பானியர்களிடம் ஸ்தானங்களை வகிப்பது என்றும் மதவித்தியாசங்களை ஒழிப்பதென்பது மேற்குப்பக்கத்தில் வேறு மதஸ்தர்களை ஒன்றுபடுத்துவதிலிருந்து வேறுபட்டதென்றும் ஸ்வதந்திரமென்பது அரசாக்ஷி அடிமையிலிருந்து உலகத்தை விடுவிப்பது என்றும் இதற்கும் மேற்கு நாடுகளின் நடவடிக்கைகளுக்கும் வித்தியாசம் உண்டென்றும் அவர்கள் இப்பொழுது சொல்லவேண்டிய தேவையில்லை. இனிமேல் ஆசியாவும் ஜப்பானும் ஒன்றென்றும் அவர்கள் சொல்லவேண்டியதில்லை.

பிலிப்பைன்ஸ் தீவுகளில் அமெரிக்கர்களின் ராஜீய சொத்தான ஸ்வதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் ஜப்பான் மதிக்கவேண்டியதாயிற்று. இங்கே பரிகாச நாடகம் ஒன்றைத் துவக்கி அதை அமிதமான சொற்பொழிவுகளுடன் துடுக்கான பேச்சுகளுடனும் பிரகடனம் செய்துவந்தார்கள். அந்த நடவடிக்கையும் ஓய்ந்துவிட்டது. லாரல் தன்னுடைய எஜமான்களின் வேண்டுகோளுக்கிணங்க தேசத்தில் நெருக்கடியான நிலைமை உண்டாகிவிட்டதென்று வெளியிட்டான். ஜப்பானியர்களின் சார்பில் எல்லா அதிகாரத்தையும் அவன் ஏற்றுக்கொண்டு பொம்மை பிரசாரர்களின் கட்டுக்கதைகளை அழிக்கும் வகையில் உத்தரவுகளைப் பிறப்பித்தான். இவ்விதமான புதிய உலக அமைப்புள்ள ஜனநாயகம் சில மாதங்கள் வரையில் நிலைபெற்றிருந்தது. சென்ற வேனீர் காலத்தில் ஐந்து மணி நேரங்கள் வரையில் அனுப்பப்பட்ட உத்தரவுகள் மூலம் யதேச்சாதிகாரத்தைப்பெற்ற பர்மாவிலுள்ள பாமாவைப்போல லாரலின் நிலைமையும் மோசமாகிவிட்டது.

ஸ்தலத்திலுள்ள ஜப்பானியக் கமாண்டர்கள் சம்பந்தப்பட்டமட்டில் இரண்டு கம்பெனி தலைவர்களும் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட பொம்மை ராஜீயவாதிகளும் மகாநாடுகள் கூடிப்பேசுவார்கள். ஜப்பானியர்கள் பிறருடன் சேர்ந்து மகாநாடு கூடிப்பேசுவதில் சம்மதப்படுவதில்லை.

பிலிபினோக்களுக்கு வெகு காலத்துக்கு முன்பே கடுமையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுமென்று ஜப்பானிடமிருந்து எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. பிரமுகர்கள் எதிர்வாதம் செய்யும் கட்சியினரை நிந்தித்து வருகிறார்கள். அயல் நாட்டார்கள் நிறுவும் திட்டங்கள் எல்லாம் கொடுங்கோல் மன்னர்களின் உபயோகத்துக்காக ஜனங்களை நசுக்கக் கூடியவை என்று எதிர்தரப்பார்கள் சொல்லிவருகிறார்கள்.

பிலிபினோக்களின் அபிப்பிராயத்தை இதைவிட அழகாகச் சொல்லியிருக்கமுடியாது. ஆகையினால்தான் அவர்களின் எதிர்ப்புக்கு இனிமேல் இடமில்லை என்று அவர்களுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது.

பிலிப்பைன்ஸில் நடைபெறுவது போல்தான் மற்ற நாடுகளிலும் நடைபெறுகிறது. எதிர்ப்பைத் தவிர்க்க ஜப்பானியரிடம் ஒரே ஒரு மருந்துதான் உண்டு. அதை ஒழித்துவிடுவது. நேசதேசத்தாருக்கு வெற்றிக்குமேல் வெற்றிகிடைத்து வருவதால் எதிர்ப்பு மனப்பான்மையும் ஆக்கிரமிப்பு நாடுகளில் அதிகரித்துவிட்டது. இதே சமயத்தில் ஜப்பானியர்களின் கொடுமையும் அதிகரித்துவிட்டது. விடுதலை என்ற இடைகால நடவடிக்கைக்குப்பின் பலமான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன.

ஜப்பானைப்போல மற்ற ஆக்கிரமிப்பு நாடுகளிலும் பொருளாதாரத்தை அடக்கியாளுவதற்கும் பலமான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. வங்க சிங்க்வெயின் ஆட்சியின் நான்காவது வருஷப்பூர்த்தி தினமன்று மூன்று முக்கியமான லக்ஷியங்களில் பொருளாதார அடக்குமுறையும் ஒன்று என்று சொல்லப்பட்டது. தூஷணை செய்த உத்தியோகஸ்தர்கள் கைது செய்யப்பட்டுவிட்டார்கள். இருவர் கொலை செய்யப்பட்டார்கள். நான்கிங்கில் சென்ற டிசம்பர் மாதத்தில் அவருக்கு ஏற்பட்ட சிகிச்சைக்குப் பின் வாங்க சிங்க்வே மௌனம் சாதித்து வருகிறான். இதற்குக் காரணம் பின்வருமாறு. அவன் முதுகிலிருந்த தோட்டாவை அப்புறப்படுத்தியபின் வாங்க் சிங்க் வேயிக்கு ஜுரமும் குளிரும் வந்து அவன் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறானும். மார்ச்சு மாதம் 3-ம் தேதியன்று அவனை ஜப்பானுக்குக் கொண்டுபோய் முதுகெலும்பு வீக்கத்துக்காக ஜப்பானிய வைத்திய நிபுணர்களால் பரிசோதிக்கப்பட்டு மறுநாள் மறுபடியும் அவனுக்கு ஆபரேஷன் நடந்தது.

டோக்கியோ ஆஷாகி என்னும் பத்திரிகையில் பத்திராதிபதிர் கட்டுரையில் ஜப்பானியர்கள் வாங் சிங்வேயைக் கைதுசெய்து நாங்கிங் நிர்வாகத்தின் நல்ல நடத்தைக்கு அவனைப் பிணையாளியாக வைத்துக்கொள்ள உத்தேசித்திருக்கிறார்கள் என்று சந்தேகிக்க இடமிருக்கிறதென்று எழுதப்பட்டிருக்கிறது. பஸிபிக் கடல் தாண்டி சீனக்கடற்கரைக்குச் செல்ல நிமிட்ஸ் செய்துவரும் முயற்சியைப்பற்றி பிரமாதமாக விளம்பரம் செய்யப்படுகிறது. ருஷ்யாவின் தாக்குதலிலிருந்து ஹிட்லருக்கு அதிர்ச்சி ஏற்பட்டிருப்பதுபோல நிமிட்ஸ் முன்னேற்றத்திலிருந்தும் சைனாவிலுள்ள அமெரிக்க விமானப்படையினிடமிருந்து உண்டாகும் பீதியும் ராணுவ அதிகாரிகளைக் கலக்கிவிட்டன. விடுதலைசெய்ய முன்வந்திருப்பதாகச் சொல்லுவதை நிறுத்திவிட்டு இப்பொழுது ராணுவம் அதனுடைய இயற்கையான குணங்களைக் கையாளத் துவக்கிவிட்டது.

ஜப்பானியர்கள் உத்தேசித்ததெல்லாம் வாங் சிங்வே, சுங்கிங்கை ஜப்பானின் பெரிய கிழக்கு ஆசியா சாம்ராஜ்யத்தில் சேர்த்துவிடவேண்டுமென்பதுதான். அவர்கள் ஜாக்கிரதையாகயில்லாவிடில் சுங்கிங்வாங்கிங்கைச் சேர்த்துக்கொண்டு அச்சுநாடுகளுக்கு எதிராக கட்சியைப் பலப்படுத்திவிடும் என்று ஜப்பானியர்கள் பீதியடைந்தார்கள். ஆகிலும் ஜெனரல் டாயிஹரா இன்னும் ஸ்வதந்திரத்துடனிருந்து வருகிறான்.

ஜப்பானிய சபையின் மார்ச்சு மாதக் கூட்டத்தில் பேசியபொழுது தோல்விக்குப்பின் ஏற்பட்ட ஹிட்லரின் நடவடிக்கைகளை டோஜோ ஜப்பானியர்களுக்கு எடுத்துக்காட்டினான். ஆக்கிரமிப்பு நாடுகளில் ஜப்பானியர்கள் மறுபடியும் கடுமையான நடவடிக்கைகளைக் கையாள ஆரம்பித்துவிட்டார்கள். சந்தோஷகரமான மத்தியகால ஸ்வதந்திரப் பேச்சுக்குப்பின் அவர்கள் இந்த நடவடிக்கைகளை அதிகப்படுத்தவேண்டும். இந்த நடவடிக்கைகளைக்கண்டு பொது ஜனங்கள் கண்டிப்பாய் அதிருப்தி அடைவார்கள்.

## பஸிபிக்கில் ஜப்பானியக் கடற்படையின் நடமாட்டம்.

ருஷ்ய கருங்கடல் கடற்படை மறுபடியும் சஞ்சாரம் செய்ய முன் வந்துவிட்டது. ஸெபாஸ்டபூலுக்கருகில் அது நடவடிக்கைகளை ஆரம்பித்து ருஷ்ய விமானப் படையுடன் ஒன்றுபட்டு அதிலிருக்கும் எதிரியின் துருப்புகளைத் துண்டிக்கும் வேலையிலீடுபட்டிருக்கிறதென்று ஸண்டே டைம்ஸ் பத்திரிகையின் கடற்படை நிருபரான காப்டன் ரஸ்ஸல் கிரென்பெல் எழுதுகிறார்.

அவர் மேலும் சொல்லுவதாவது:—1942-ம் வருஷம் ஸெபாஸ்டபூலிலிருந்து துரத்தியடிக்கப்பட்ட ருஷ்ய கடற்படை இது வரையில் நடமாடாமலிருந்ததென்பது தளத்தை இழந்த கடற்படை எவ்வளவு கஷ்டங்களுக்குள்ளாக வேண்டுமென்பதை வெளிப்படுத்துகிறது. கடற்படைக்கு தளங்கள் அவசியமென்பது பஸிபிக் போரில் வேறு விதமாகப் புகட்டப்படுகிறது. ஜப்பானியக் கடற்படை டிரக் தீவைவிட்டு ஓடிவிட்டது. காரொலைன்ஸ் பாஸி பிராந்தியத்திலிருந்து கிளம்பி பார்மோஸோ—போர்னியோ கோட்டிற்கு மேற்குப் பக்கத்திற்கும் அது சென்றுவிட்டது.

அது எங்கு சென்றிருக்கிறதென்று நாம் குறிப்பாகச் சொல்லமுடியாது. நான்கு யுத்தக் கப்பல்களும் மூன்று சஞ்சாரிகளும் மற்ற வகைக் கப்பல்களும் கொண்ட நமது கடற்படையுடன் இந்து மகா சமுத்திரத்தில் கடல் போரை நடத்த அவைகள் சென்றிருக்கின்றனவென்று ஜப்பானிய பிரமுகர்கள் சொல்லுகிறார்கள். இதிலிருந்து 10 சண்டைக் கப்பல்களுள்ள ஒரு கடற்படையை ஜப்பானியர்கள் சிங்கப்பூரில் திரட்டி வைத்திருக்கிறார்களென்று சொல்லிவிடலாம். பிரிட்டிஷாரின் கடற்படையை ஜப்பானியர் மதித்திருப்பது உண்மையாகயிருக்கும் பக்ஷத்தில் ஜப்பானுக்கு இந்தப் போர் பெரும் ஆசையை உண்டுபண்ணக்கூடும். உயர்வான அமெரிக்க கடற்படை பஸிபிக்கின் குறுக்கே மேற்கு நோக்கி முன்னேறிவரும் பொழுது காரொலைன்ஸிலும், அதற்குச் சமீபத்திலுள்ள கப்பற் தளங்களுக்கு ஏராளமான கப்பல்களை ஜப்பான் அனுப்புமென்று எதிர் பார்ப்பதற்கில்லை. அவ்விதம் செய்யாவிட்டால் இந்த தளங்களின் முக்யத்வம் போய்விடும். ஏனெனில் கடற்தளமில்லாத கப்பற்படையை விட கப்பற்படையில்லாத கடற்தளம் அபாயம் பொருந்தியதல்ல. பஸிபிக்கில் விசாலமான கடலில் அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பல்களின் பலம் மிகுதியாகயிருப்பதால் டிரக்கும் மற்ற ஜப்பானியத் தீவுகளும், மத்தியதரைக்கடலில் செல்லும் கப்பல்களுக்கு ஜெர்மனி வசமுள்ள க்ரீட் தொந்தரவளிப்பதுபோல, அமெரிக்கக் கடற்படையின் முன்னேற்றத்துக்கு இன்னல்களை இழைக்கமுடியாது. சமீபகாலத்தில் அமெரிக்கர்கள் டிரக், பொனபி, மற்ற ஜப்பானிய தளங்களின்பேரில் அதிக கவனம் செலுத்திவருகிறார்கள். ஆகிலும் அமெரிக்கர்கள் ஒவ்வொரு முக்கியமான தளமாகப் பிடித்து அதை பலப்படுத்தியபின்தான் அடுத்த தளத்தை பிடிக்க முயலுவார்கள் என்று ஜப்பானியர்கள் ஏமாந்து நிற்கட்டுமென்பதற்காக இந்த நட-



வடிக்கைகள் கையாளப்பட்டிருக்கலாம். ஆனால் பார்மோஸா, பிலிப்பைன்ஸ் அல்லது மற்ற எந்த இடத்திற்கோ கப்பல்களை நேராடி அனுப்பிவிடுகிறதென்பதுதான் அமெரிக்காவின் உண்மையான எண்ணம்.

நாம் நினைப்பதற்கு மாறாக வெகுதூரம் செல்லவேண்டுமென்பது பிரதானமான பிரச்னை இல்லை. தூரத்தைக்காட்டிலும் கடற்படைதான் மிகவும் முக்கியமான பிரச்னை. மேற்கு முகமாகச் செல்லும் மார்க்கத்திலுள்ள ஜப்பானிய தளங்களைத் துடைத்துவிடுவதுதான் சிறந்த நடவடிக்கையாகும். சிறந்த நடவடிக்கையை கையாளவேண்டுமானால் காலஹரணம் ஏற்படக்கூடும். இவ்வளவு விலையுயர்ந்த சாதனத்தை அவசியமேற்பட்டாலொழிய அமெரிக்கர்கள் விநியோகம் செய்யத்தயாராகயில்லை.

## பர்மா போர் முனையைப்பற்றி ஸர் ஸையத் சுல்தான் ஆமத்தின் அபிப்பிராயங்கள்.

முன்னணிப் போர்முனைக்கு விஜயம் செய்துவிட்டு வந்த இந்திய அறிக்கை விளம்பர இலாகா மெம்பரான கனம் ஸர் சுல்தான் ஆமத் பத்திரிகாசிரியர்கள் மகாநாட்டில் ஆற்றிய சொற்பொழிவின் விவரம்.

கிழக்குப் போர்முனையில் உள்ள முன்னணி ஸ்தானங்களுக்கு நான் விஜயம் செய்யப் புறப்படுமுன், நான் திரும்பி வந்தவுடன் பத்திரிகாசிரியர்கள் மகாநாட்டைக் கூட்டுவதாக வாக்களித்திருந்தேன். அந்த வாக்குறுதியை இன்று நிறைவேற்ற நான் இங்கு வந்திருக்கிறேன். கிழக்குப் போர்முனையில் நமது வலிமை மிகவும் அதிகரித்திருக்கிறதென்பதை எனது விஜயம் சந்தேகமற ஊர்ஜிதப்படுத்திவிட்டது என்று சொல்ல விரும்புகிறேன். நமது போக்குவரத்து மார்க்கங்களின் வலிமை யுத்த தளவாடங்களும் ஸப்ளைகளும் கிழக்குப் போர்முனைக்குத் தாராளமாக தினசரி போய்க்கொண்டிருப்பதிலிருந்து வெளிப்படுகிறது. உயர்தர ராணுவ அதிகாரிகள் தினந்தோறும் போர் முனைகளைப் பார்வையிடுகிறார்கள். திட்டம் போட்ட உடன் காலத்திலேயே இந்த விஜயங்கள் ஏற்படுகின்றன. இந்தியத் துருப்புகளின் உயர்வான மன உறுதி என்னுடைய மனதைக் கவர்ந்தது. ஜப்பானியர்களை விரட்டியடித்து அவர்களுக்கு படுதோல்வியை உண்டுபண்ணும் வரையில் அவர்கள் தாயகம் திரும்பமாட்டோமென்று என்னிடம் அடிக்கடி சொன்னார்கள்.

நாங்கள் மே மீ 5உ வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு டில்லியிலிருந்து புறப்பட்டு 14-வது சேனையின் தலைமை காரியாலயத்துக்கு குறிப்பிட்ட கால அளவுக்கு அரை மணி முந்தியே போய்ச் சேர்ந்தோம். உடனே தகவல் அறிவிக்கும் உத்தியோகஸ்தரை நான் சந்தித்தேன். வடக்கிலும் மணிப்பூர் ஸமஸ்தானத்திலும் பொதுமக்களின் மன உறுதி நன்றாகவும் உயர்வாகவும் இருக்கிறதென்று அவர் என்னிடம் சொன்னார். அகில—இந்தியா—ஒலிபரப்பு தகவல்களை ஒலி பெருக்குவதில் ஒத்தாசை செய்திருக்கிறது. முன்னணி ஸ்தலத்திலுள்ள ஸோல்ஜர்கள் அவர்களுக்காக ஒலி பெருக்கப்பட்ட விசேஷ நிகழ்ச்சிகளை ஆவலுடன் கேட்டிருக்கிறார்கள். துருப்புகளின் மனப்பான்மையும் சிலாக்கியமாக இருந்தது. அநேக மைல்களுக்கு அப்பால் உள்ள அவர்களுடைய குடும்பத்தாரின் க்ஷேமத்தைப்பற்றி அவர்கள் கவலை கொண்டார்கள். அவர்களுடைய கிராமங்களில் நடைபெறும் சம்பவங்களைப்பற்றி அவர்களுக்கு நாங்கள் அதிக தகவல்களைக் கொடுக்கக்கூடவில்லை. ஆகிலும் அதன் மூலம் ஜப்பானை முறியடிக்கவேண்டுமென்பதில் அவர்களுடைய தீர்மானமும் நம்பிக்கையும் பாதிக்கப்படவில்லை. மாகாண நிர்வாகங்களும் மத்திய அரசாங்கமும் அவர்களுடைய குடும்பத்தாரின் க்ஷேமத்தை கவனிக்கச் செய்திருக்கும் ஏற்பாடுகளை இந்திய ஸோல்ஜர் ஆவலுடன் கவனித்து வந்தார். நில விவகாரத்தில் அவன் வெளியே இருப்பதனால் அவனுடைய கட்சி பரிகரிக்கப்படாமல் பார்த்துக்கொள்ளப்படுமென்றும் அவனுடைய குடும்பத்தாருக்குத் தேவைப்பட்டபொழுது அவசியமான வைத்திய வசதி அளிக்கப்படுமென்றும் அவர்களுக்கு நியாயமான விலையில் போதுமான உணவுப்பொருள்கள் வழங்கப்படுமென்றும் அவனுக்கு உறுதி கூறவேண்டுமென்று அவன் எண்ணினான். அறிக்கை ஆபீஸர் மேலும் சொன்னதாவது:—இந்திய ஸோல்ஜரும் இந்தியப் பொதுமக்களும் இனிமையான தகவல்களை அறிய விரும்பவில்லை. அவர்களின் தற்போதைய மனவுறுதியை நிலைநாட்டவேண்டுமானால் பொய் வதந்திகள் கிளம்பு முன் தகவல்களை உடன் காலத்திலேயே வெளிப்படுத்திவிடவேண்டும்."

யுத்தத்தை நடத்தும் ஆபீஸர் நம்முடையவும் எதிரிகளுடையவும் படையமைப்புகளை விவரித்துக் கூறினர். எதிரியிடமிருந்து நாம் என்றும் பயப்படவேண்டியதில்லை என்றும் நம்முடைய படைகளுடன் போர் தொடுத்தால் எதிரிக்கு என்ன கதி நேரிடுமென்றும் அவர்கள் அறிவார்களென்றும் அவருடைய விருத்தாந்தத்திலிருந்து புலப்பட்டது. பெரும்பாலும்.

ஒளிந்துகொண்டிருக்கும் அடர்த்தியான காடுகளிலிருந்து அவர்கள் ஏதாவது ஒரு சமயத்தில் தாக்குதல் செய்கிறார்கள். உணவுப்பொருள்களை கொள்ளையடித்துப் போன உள்நாட்டுப் பொதுஜனங்களிடமிருந்து ஜப்பானியர்கள் யாதொரு உதவியையும் எதிர் பார்க்கமுடியாது. மேலும் நமது துருப்புகளின் இருப்பிடத்தைப்பற்றி தகவல்களை அறியும் ஜப்பானியர்கள் அந்தப் பொதுமக்களை மிகவும் மிருகத்தன்மையான கொடுந்துன்பத்துக்கு உள்ளாக்கியிருக்கிறார்கள்.

சிற்றுண்டிக்குப் பின் நான் ஸப்ளை இலாகாவில் உள்ள உயர்தர ராணுவ அதிகாரியுடன் வெகு காலம் சுவாரசியமான சம்பாஷணை செய்தேன்.

புதிய உணவுப்பொருள்களை அந்நாட்டிலேயே உற்பத்திசெய்ய அவர்கள் உத்தேசித்திருக்கிறார்கள் என்று அவர் சொன்னார். விவசாய அபிவிருத்தியையும் கால்நடையின் பெருக்கையும் அவர்கள் ஆதரித்து வருகிறார்கள். பீடபூமிகளில் பிரிடிஷ் ரக காய்கறிகளும் இந்திய காய்கறிகளும் பயிர் செய்யப்படுகின்றன. சீனாவில் பறவைகள் உமியில் குஞ்சு பொரிக்கும் முறையை அனுஷ்டித்து பறவைகளை விருத்திசெய்யும் முறைகள் இங்கும் கையாளப்பட்டு பறவை இனங்கள் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன. கால் நடைகளுக்கு வைக்கோலும் நேபியர் புல்லும் நல்ல ஆகாரம் என்று அவர்கள் பரீக்ஷை செய்து கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்த ரக புல்லை வளர்க்க அவர்கள் போட்டிருக்கும் திட்டங்களின் மூலம் 10,000 வாகன்களில் செல்லும் பொருள்கள் மீதப்படும். விவசாய சம்பந்தமாக அப்படைகள் கையாளும் நடவடிக்கைகள் உற்பத்தி முறைகளை தலைகீழாக மாற்றிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நவீன யந்திர சாதன முறைப்படி வங்காளத்தில் 1,300 ஏகரா கொண்ட பிரதேசம் சாகுபடிக்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. விமான தளங்களுக்கு சமீபத்தில் உள்ள 24,000 ஏகராக்கள் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. கால் நடைகளை வண்டியில் ஏற்றி வருவதில் அதிக நஷ்டம் ஏற்பட்டது. ஆகையால் உள்நாட்டிலேயே ஆடுகளை வளர்க்கும் திட்டம் கையாளப்பட்டது. மீன் ஸப்ளையையும் படைகள் ஏற்பாடு செய்தன. உப்பிடப்பட்ட மீன் இப்பொழுது தாராளமாகக் கிடைத்துவருகிறது. அதை வேகப் போட்டபின் அது புதிய மீன் போல ருசியாக இருக்கும். கல்வி, சுகாதார, விவசாய இலாகாவும் வங்காள, அஸ்ஸாம் நிர்வாகங்களும் அவர்களுக்கு உதவி செய்ததை அவர் ஒப்புக்கொண்டார். இந்த நடவடிக்கைகளின் மூலம் முன்னணியிலுள்ள அமெரிக்கப் படைகள் உள்பட்ட எல்லா சேனைக்கும் தேவைப்படும் பொருள்களில் 75 சத விகிதம் அங்கேயே சம்பாதிக்கப்பட்டுவிடும்.

அன்று சாயங்காலம் வைஸிராயின் கமிஷன் பெற்ற உத்தியோகஸ்தர்களுடன் நான் விருந்துண்டேன். ஆகாரங்கள் நன்றாகயிருந்தன. உத்தியோகஸ்தர்களின் உத்ஸாகமும் ஜாஸ்தியாக இருந்தது. அவர்களை முதன் முதலில் பார்வையிட வந்த வைஸிராயின் நிர்வாக சபை அங்கத்தினர் என்று என்னை ஹிந்துக்களும் முஸ்லீம்களும் சீக்கியர்களும் வரிசையாக வரவேற்றார்கள். அவர்களுடைய மாகாணங்களின் நிலைமையைப்பற்றி அவர்கள் என்னை பிரச்னம் செய்தார்கள். எனக்குத் தெரிந்த வரையில் நான் அவர்களுக்குப் பதிலுரைத்தேன். ஜப்பானியர்களை முறியடித்து விடுவோம் என்று பூர்ண நம்பிக்கையுடன் அவர்கள் என்னிடம் சொன்னது அன்று காலையில் என்னிடம் அறிக்கை உத்தியோகஸ்தர் வெளியிட்ட உண்மையை பலப்படுத்தியது. இந்திய சிப்பாய் ஒவ்வொருவரும் ஜப்பானியரைவிட திண்ணமாக உயர்வானவன் என்று அவர்கள் சொன்னார்கள். போர் புரியும் சக்தியுடன் அவர்களுக்கு உயர்வான ஆயுத பலமும் விமானப்படை உதவியும் இருக்கின்றன. இந்த சௌகரியங்களினால் வெற்றி கிடைப்பது நிச்சயம். எங்களுடைய ராணுவ ஐதீகம் பேர் போனது. நாங்கள் பின் வாங்கமாட்டோம். அவ்விதம் செய்தால் எங்கள் குடும்பத்திற்கும் எங்கள் கிராமத்திற்கும் எங்கள் தேசத்திற்கும் அவமானம் ஏற்படும் என்று ஒரு சுபேதார் மேஜர் என்னிடம் சொன்னார். ஜப்பானியர்களை பூராவாக முறியடிக்கும் வரையில் நாங்கள் தாய் நாட்டிற்குத் திரும்பப் போவதில்லை என்று எங்களுடைய தேசத்தார்களிடம் சொல்லுங்கள் என்று அவர் என்னிடம் சொன்னார். ஜப்பானியர்களை அவர்கள் தீரமாக எதிர்த்துப் போராடுவதில் நாங்கள் பெருமை கொண்டிருக்கிறோம் என்றும் ஜப்பானியப் படைகளை நொறுக்கி அவர்களை விரட்டி அடிக்க அவர்களுக்கு சக்தி உண்டு என்ற நம்பிக்கை எங்களிடம் குடிகொண்டிருக்கிறதென்றும் நான் சொன்னேன். இதற்குமுன் நான் ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்தபொழுது நோய்வாய்ப்பட்டவர்களுடையவும் காயம் பட்டவர்களுடையவும் மன உல்லாசத்தைக் கண்டேன். நமது சகோதரர்களுக்கு சிகிச்சை செய்து அரிய சேவை செய்து வரும் இந்தியத் தாதிகளையும் ஸ்திரீ டாக்டர்களையும் நான் சந்தித்துப் பேசினேன்.

மறு நாள் காலையில் நாங்கள் 14-வது சேனை தலைமைக் காரியாலயத்திலிருந்து புறப்பட்டு இம்பாலுக்குச் சென்றோம். நாங்கள் விமானதளத்தில் இறங்கியபொழுது பர்மா நடவடிக்கைகளில் இந்திய சிப்பாயின் உயர்வான போர் புரியும் குணங்கள் வெளியாகின என்று ஜெனரல் ஸ்லிம் என்னிடம் சொன்னார். அவர்கள் எல்லோரும் முதல் தரமானவர்கள்.



ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் வந்தவர்கள் திறமையுடன் போர் புரிவார்கள் என்று அவர் சொன்னார். முந்தின இரவு இம்பாலுக்கு எங்களுடைய வருகையை ஜப்பானிய ஒலிபரப்பு வெளியிட்டிருந்ததால் நாங்கள் பலமான சண்டை விமானங்களின் துணையுடன் சென்றோம். யாதொரு சம்பவமுமன்னியில் நாங்கள் இம்பாலுக்குச் சென்றோம். இரண்டு மணி நேரத்துக்கு முன் இருபது ஜப்பானிய விமானங்கள் இம்பாலைத்தாக்கினவென்றும் அவைகளில் 7 சுட்டு வீழ்த்தப்பட்டதென்றும் நாங்கள் கேள்விப்பட்டோம். எங்களுடைய விஜயத்திலிருந்து அதிருஷ்டம் உண்டாகிவிட்டதென்று ஜெனரல் ஸ்லிம் என்னிடம் சொன்னார். நாங்கள் ஒரு மோட்டாரில் ஏறிக்கொண்டு சமதை இல்லாத ரஸ்தா வழியாகச் சென்றோம். சில சமயங்களில் எங்களுடைய தலைகள் காரின் உச்சியில் மோதிக்கொண்டன. நாங்கள் ராணுவ தலைமை காரியாலயத்திற்கு சென்றபொழுது யுத்த நடவடிக்கைகளின் பூரா விவரங்களும் எங்களுக்கு அறிவிக்கப்பட்டன. ஒவ்வொருவரும் அவரவருடைய வேலையை உத்ஸாகத்துடனும் திறமையுடனும் கவனித்து வருவதைக் கண்டு நான் மகிழ்ச்சியுற்றேன். இம்பால் விழுந்துவிட்டதென்றும் அது அவர்கள் வசமாகி விட்டதென்றும் ஜப்பான் அடிக்கடி பாத்தியம் கொண்டாடுவதைக் கண்டு நான் வியப்புற்றேன். நமது படைகள் இம்பாலில் பத்திரமாக இருக்கிறதென்பதும் ஜப்பானியர்கள் ஒளிந்து இருக்கும் காடுகளிலிருந்து அவர்கள் சமவெளிகளுக்கு வெளி வந்தவுடன் அவர்களைத் தாக்க நமது படைகள் தயாராக இருக்கின்றனவென்பதும் உண்மையான நிலைமை. அதன் பிறகு அங்கிருந்து புறப்பட்டு பொதுஜன சம்பந்த இலாகா டிரக்டெரின் அங்குள்ள பிரதிநிதிகளையும் ஸிட்னி மார்னிங் ஹெரால்ட் பத்திரிக்கையின் யுத்த நிருபரான மிஸ்டர் கார்ட்னரையும் கண்டு பேசினோம். வெட்ட வெளியில் சிறிது நேரம் சம்பாஷணை செய்தபின் நான் மணிப்பூர் ஸமஸ்தானத்திலுள்ள ராஜப்பிரதிநிதியைக் கண்டு அந்நாட்டு ஜனங்களின் மனப்பான்மை, பொருளாதார நிலைமையைப்பற்றி விவாதித்தோம். ஜனங்களின் மன உறுதி சிலாக்கியமாக இருக்கிறதென்றும் அந்த நிலைமையைப் பரிபாலிக்குவர ஏதாவது செய்யவேண்டுமென்றும் அதற்காக அஸ்ஸாம் மாகாணத்தில் உபயோகித்து வருவதுபோல ஒலிபெருக்கும் கருவி உள்ள ஒரு வண்டியை தயார் செய்யவேண்டுமென்றும் அவர் அபிப்பிராயப்பட்டார். சிற்றுண்டிக்கு முன் ரண வைத்தியம் செய்யப்படும். 1,000 படுக்கைகள் உள்ள ஆஸ்பத்திரிகளை நான் பார்வையிட்டேன். பிரிடிஷ் இந்திய வியாதியஸ்தர்கள் சிலருக்கு படுகாயம் ஏற்பட்டிருந்தபோதிலும் அவர்கள் சந்தோஷத்துடனிருந்தார்கள். ஆஸ்பத்திரியில் சில ஜப்பானிய கைதிகளும் சிகிச்சை பெற்று வந்தார்கள். ஒருவர் அத்தியாவஸ்தையிலிருந்தார். ஒரு சச்சரவில் ஜப்பானியரிடமிருந்து நமது துருப்புகள் கைப்பற்றிய ஒரு கொடியையும் நான் பார்த்தேன். சிற்றுண்டி சாப்பிட்டுக்கொண்டிருக்கும்பொழுது பிஷன்பூர் பகுதியில் நான்கு ஜப்பானிய பீரங்கிகள் கைப்பற்றப்பட்டன என்ற தகவல் கிடைத்தது. நாங்கள் இம்பாலுக்கு விஜயம் செய்த பாக்கியத்தினால் ஏழு ஜப்பானிய விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டனவென்றும் நான்கு ஜப்பானிய பீரங்கிகள் கைப்பற்றப்பட்டனவென்றும் அவர் மறு முறை சொன்னார். அரக்கானில் இதைவிட சிலாக்கியமான நடவடிக்கைகள் நடக்குமென்று ஜெனரல் ஸ்லிம் சொன்னான். அரக்கானுக்கு நாங்கள் மறு நாள் செல்லுவதாக உத்தேசித்து இருந்தோம். அன்று சாயங்காலம் நாங்கள் தலைமை காரியாலயத்துக்கு வந்தோம். பொதுஜன சம்பந்த டிரக்டரேட் ஆபீஸில் உள்ள அதிகாரிகள் எங்களுக்கு விருந்தளித்தார்கள். வெகு தூரத்திலுள்ள எல்லைப்புற ஸ்தானங்களில் அந்த உத்தியோகஸ்தர்கள் உத்ஸாகத்துடன் வேலை செய்து வருவதைக் கண்டு நான் சந்தோஷமடைந்தேன்.

ஏழாம் தேதி காலையில் எங்களில் மூன்று பேர் மட்டும் அரக்கானுக்கு விமானம் மூலம் சென்றோம். எங்களுடைய விமானத்திற்குச் சண்டை விமானங்கள் துணைக்காவல் புரிந்தன. விமானதளத்தில் எங்களை ஒரு ஆபீஸர் வரவேற்று மோட்டாருக்கு அழைத்துச் சென்றார். 3-மணி நேரத்தில் நாங்கள் அந்தப் பிராந்தியத்திலுள்ள போர்முனை தலைமைக் காரியாலயத்திற்கு சென்றோம். இங்கே ஆபீஸர்களும் வேலைக்காரர்களும் இடுப்பு வரையில் ஆடைகளை தூக்கிக்கொண்டு வேலை செய்து வந்தார்கள். அவர்களிடத்திலும் நம்பிக்கையும் திறமையும் காணப்பட்டது. அங்கிருந்த அறிக்கை உத்தியோகஸ்தரும் பொதுமக்களுடையவும் துருப்புகளுடையவும் மனப்பான்மை உயர்வாக இருக்கிறதென்றும் உள்நாட்டு ஜனங்களை கலவரப்படுத்த ஜப்பானியர்கள் செய்த முயற்சிகள் எல்லாம் வீணாகிவிட்டன என்றும் சொன்னார்.

இங்கும் நாங்கள் ஆஸ்பத்திரிக்குச் சென்று பார்வையிட்டோம். அந்த சமயத்தில் காயமடைந்தவர்களின் கூட்டம் ஒன்று அங்கு வந்தது. நோயாளிகள் இருக்கும் முகாம்களை நான் சுற்றிப்பார்த்தேன். ஒருவனுக்கு ரணச் சிகிச்சை நடந்துகொண்டிருப்பதையும் கவனித்தேன். அந்தக் கூட்டத்தில் படு காயம் பட்டவர்கள் அதிகமாக இல்லை. அன்று சாயங்காலம் நாங்கள் 14-வது சேனையின் தலைமை காரியாலயத்திற்கு வந்து சேர்ந்தோம். ஜெனரல் கிப்பார்டும் அவருடைய உத்தியோகஸ்தர்களும் எங்களுக்குக் காண்பித்த அன்புக்கும் மரியாதைகளுக்கும் அவருக்கு எங்களுடைய வந்தனத்தைத் தெரிவித்துவிட்டு

நான் புறப்பட்டேன். என்னுடைய விஜயத்தை எல்லோரும் வரவேற்றார்கள் என்று அவர் சொன்னார். அவர் என்னுடன் கைகுலுக்கியபொழுது பின் வருமாறு சொன்னார்:—

"இதை உபசார வார்த்தை என்று நீங்கள் நினைக்கவேண்டாம். நீங்கள் எப்பொழுது இங்கு மறுபடியும் வர உத்தேசித்திருக்கிறீர்கள். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை நான் செய்கிறேன் என்று அவர் சொன்னார். அவருடைய அழைப்புக்காக அவருக்கு நன்றி செலுத்திவிட்டு நான் விமான மூலம் கல்கத்தாவுக்குப் புறப்பட்டேன்.

மூன்று நாட்கள் பர்மா போர் முனைக்கு விஜயம் செய்ததில் எனக்கு ஐந்து முக்கியமான தோற்றங்கள் ஏற்பட்டன. முதலாவதாக நம்பிக்கையுடனும் தைரியத்துடனும் ஊக்கத்துடனும் நமது படைகள் எதிரியுடன் போர் புரியும் சமயத்தை எதிர் பார்த்து நிற்கிறார்கள். இரண்டாவதாக எங்கு பார்த்தாலும் ஏராளமான முஸ்தீப்புகளும் கவசம்பூண்ட மோட்டார் படைகளும் காணப்படுகின்றன. மூன்றாவதாக எதிரி திருட்டுத் தனமாக செய்யும் விமான நடவடிக்கையைத் தவிர நமது விமானப் படைக்கு ஆதிக்கமேற்பட்டிருக்கிறது. நான்காவதாக ஜப்பானியர்கள் பொறியில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பருவகால மழைக்கு முன் அவர்கள் பின் வாங்கி ஓடவேண்டும், அல்லது அழிக்கப்படவேண்டும். ஐந்தாவதாக போர் முனையில் உள்ள நமது படைகளுக்கு நாம் செய்யவேண்டிய கடமை. ஜப்பானியர்கள் பூரணமாக முறியடிக்கப்படுவார்களென்றும் இந்தியாவுக்கு படையெடுப்பு பயமே இல்லை என்றும் நான் பூரணமான நம்பிக்கையுடன் திரும்பி வந்திருக்கிறேன்.

ஏழாம் தேதி இரவை கல்கத்தாவில் கழித்துவிட்டு பாட்னாவில் சிறிது காலம் தங்கிவிட்டு 8-ம் தேதி சாயங்காலம் நாங்கள் டில்லிக்குத் திரும்பி வந்தோம்.

**பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.**

**அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டென்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.**

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 199. (3-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 27- 5-44 முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை 6.00 | 31- 5-44 மழையூர் | ... மாலை 7.00 |
| 28- 5-44 சூரக்காடு | ... " 7.00 | " கரம்பக்குடி | ... " 7.30 |
| " கோட்டைக்காடு | ... " 7.30 | 1- 6-44 வானரமாணிக்கம் | ... " 7.00 |
| 29- 5-44 தென்னதிரயன்பட்டி | ... " 7.00 | " ஏம்பல் | ... " 7.30 |
| " விசலூர் | ... " 7.30 | 2- 6-44 விராலிமலை | ... " 7.00 |
| 30- 5-44 ராமச்சந்திரபுரம் | ... " 7.00 | " பொருவாய் | ... " 7.30 |
| " ராயவரம் | ... " 7.30 | | |

### பிரஸங்கம் 200. (4-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 3- 6-44 முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை 6.00 | 7- 6-44 கார்த்தாமலை | ... மாலை 7.00 |
| 4- 6-44 கீரப்பழனி | ... " 7.00 | " உப்பிலியக்குடி | ... " 7.30 |
| " ஆலூர் | ... " 7.30 | 8- 6-44 அண்டக்குளம் | ... " 7.00 |
| 5- 6-44 புத்தாம்பூர் | ... " 7.00 | " கிள்ளனூர் | ... " 7.30 |
| " வைத்திக்கோவில் | ... " 7.30 | 9- 6-44 கொடும்பாளூர் | ... " 7.00 |
| 6- 6-44 வடவாளம் | ... " 7.00 | " விராலூர் | ... " 7.30 |
| " சம்மட்டிவிடுதி | ... " 7.30 | | |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | |
|---|---|
| 27— 5—44 திருமெய்யம். | 3— 6—44 வெட்டன்விடுதி. |
| 28— 5—44 மருதன்கோன்விடுதி. | 4— 6—44 ஏம்பல். |
| 30— 5—44 குடுமியான்மலை. | 6— 6—44 பேராம்பூர். |
| 31— 5—44 தேனிமலை-புதுப்பட்டி. | 7— 6—44 கரம்பக்குடி. |
| 1— 6—44 ஆலங்குடி. | 8— 6—44 குழிபிறை. |
| 2— 6—44 புதுக்கோட்டை. | 9— 6—44 பாப்பாபட்டி. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—30-5-44.


# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1944-ம் வருஷம் ஜூன் மீ 3உ [நெ. 200


**தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.**

பிரஸங்கம் CC.

## இதாலியப் போர்முனை.

இதாலியப் போர்முனையின் ஸ்தல சன்னிவேசத்தைப்பற்றி லண்டனிலுள்ள வியாக்யானிகள் பின்கண்ட விவரங்களை வெளியிடுகிறார்கள்.

### கஸ்டாவ் அரண்.

இது இயற்கையான தற்காப்பே ஒழிய செங்கல் சுண்ணாம்பினால் கட்டப்பட்ட அரண் அல்ல. அதிலிருக்கும் கிராமங்களும், பண்ணைகளும் பலப்படுத்தப்பட்டு வலுவான ஸ்தலங்களாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இது மிகவும் கனமாகயிருக்கிறது. அதன் எல்லைப்புற தற்காப்புகள் காஸினோவிலிருந்து ராபிடோ நதி வழியாகச் சென்று இதுவும் லிரியும் சேர்ந்து காரிக்ளியானோ நதியாக ஓடும் இடம் வரையில் செல்லுகின்றன. இந்த முனைக்குத் தெற்கில் கஸ்டாவ் அரண் காரிக்ளியானோ நதியின் வடக்குக்கரை வழியாக ஸாம்பிரோகியோ, காஸில்போர்டே வழியாகச் சென்று மின்டார்னோவுக்குச் சமீபத்திலுள்ள கடற்கரைக்குச் சென்று விடுகிறது.

### ஹிட்லர் கோடு.

அது கஸ்டாவ் அரணிலிருந்து பின்வாங்கினால் தற்காப்புக்காக அமைக்கப்பட்டிருக்கும். இந்த அரண் காஸினோவுக்கு வடமேற்கில் மாண்டிகெயிரோவிலிருந்து தென்மேற்கு முகமாக பாயின்டி கார்வோ, பிகோ, பாண்டி வழியாக டெர்ராஸினாவுக்குச் சமீபத்திலுள்ள கடலுக்குச் செல்லுகிறது.

### போர் நடக்கும் பிரதேசம்.

இந்த சன்னிவேசங்களை ஞாபகப்படுத்திக்கொண்டால் போர் நடைபெறும் பிரதேசம் முக்கோண வடிவமுள்ளது. அதன் மூலை காஸினோ பிரதேசம். அதன் அடிவாரம் மத்திய தரைக் கடலிலிருக்கிறது. தெற்குப்பக்கத்திலுள்ள இந்த முக்கோணத்தின் கோட்டை நாம் முன்னேறி வடக்குப் பக்கமாக இழுத்துச் செல்லுகிறோம்.

### லிரி பள்ளத்தாக்கு.

இதன் அகலம் நாலு முதல் ஒன்பது மைல்கள் வரையிலுள்ளது. இதன் குறுக்கே லிரி நதியில் போய் சங்கமமாகும் அநேக ஓடைகளிருக்கின்றன. இந்தப் பள்ளத்தாக்கில் நுழைய முடியாதபடி ராபிடோ நதி நமக்கு இன்னல்களை விளைவித்தது. இந்தப் பள்ளத்தாக்கு சமமாக இல்லை. இதில் அடர்ந்த காடுகளும் சில பிரதேசங்களில் காணப்படுகின்றன. ரஸ்தாக்களின் ஓரங்களில் அநேக மரங்களிருக்கின்றன. அதற்குப் பக்கத்தில் அநேக வயல்களுமிருக்கின்றன.

### போக்குவரத்துக்கள்.

இந்த முக்கோணத்தில் இரண்டு முக்கியமான ரஸ்தாக்களிருக்கின்றன. முதலாவது காஸினோ-ஆர்ஸி ரஸ்தா. இது லிரி பள்ளத்தாக்கைத்தாண்டிச்செல்லுகிறது. இதுதான் 6-ம் ந.

ரஸ்தா. இதை ஜெர்மானியர்கள் மாண்டி கெயிரோவிலிருந்தும் அதன் பக்கத்திலுள்ள குன்றுகளிலிருந்தும் காபந்துசெய்து வருகிறார்கள். இரண்டாவதாக கடற்கரை வழியாகச் செல்லும் மார்க்கம். இதை நாம் கடலிலிருந்து காபந்து செய்துவருகிறோம். ஆகிலும் ஆருன்ஸி, மாஸிப், டொராஸிணாவுக்கு அப்பாலிலுள்ள மலைகளிலிருக்கும் ஜெர்மானியர்கள் இதன் பேரில நேராக செய்யலாம். பீரங்கி பிரயோகம் செய்யலாம்.

லண்டனிலுள்ள வியாக்யானிகள் பின்கண்ட முடிவுகளுக்கு வந்திருக்கிறார்கள்.

1. இந்தப் போர் பிராந்தியம் டாங்கிகள் செல்ல லாயக்கற்றது. லிரி பள்ளத்தாக்கு சமமாகயில்லை. இதிலிருந்து தரைப்படைப் போர்தான் முக்கியமாக நடைபெறவேண்டும் என்று புலப்படுகிறது. அக்காரணத்தினால் முன்னேற்றம் வேகமாக நடைபெறுமென்று நாம் எதிர்பார்க்க முடியாது.

2. போக்குவரவு மார்க்கங்கள் குறைவாகயிருப்பதால் முன்னேற்றம் வேகமாக நடைபெறுமென்று எதிர்பார்ப்பதற்கில்லை. சாதாரணமான சந்தர்ப்பங்களில் போர் புரியும் ஒரு டிவிஷன் துருப்புகளுக்கு தினசரி 300 டன்கள் எடைமானமுள்ள ஸப்ளைகள் தேவைப் படும். இப்பொழுது நடைபெறும் மகத்தான தாக்குதலில் ஈடுபட்டிருக்கும் இரண்டு டிவிஷன் படைகளும் ஒரு டிவிஷன் பீரங்கிப் படைகளும் ஒரு நாளைக்கு 1,000 டன் எடைமானமுள்ள வெடி மருந்துகளை உபயோகிக்கக்கூடும்.

3. லிரி பள்ளத்தாக்கிலும், கடற்கரையோரமாகவும் எதிரி போக்குவரத்து மார்க்கங் களின் பக்கத்தில பலமாகக் காபந்து செய்துவருவதால் நாம் முன்னேறும்பொழுது எதிரியை ஒவ்வொரு குன்றிலிருந்தும் நாம் துரத்தியடிக்கவேண்டும். ஒவ்வொன்றையும் பிடிப்பதற்கு நாம் ஒரு சிறிய முற்றுகையைப் போடவேண்டும்.

4. நமக்கு போக்குவரத்து மார்க்கங்களின் சிரமங்களிருப்பதுபோல, ஜெர்மானியர் களுக்குப் போக்குவரவு சிரமங்களிருக்கின்றன. அவர்களைத் தொந்திரவு செய்ய நமக்கு விமான ஆதிக்கமிருப்பதுபோல அவர்களிடம் நம்மைத் துன்புறுத்த விமானப்படை கிடையாது.

---

## வார யுத்தச் செய்திகள்.

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 22—5—44 (திங்கட்கிழமை). | மன்னர் படையெடுப்புப் படைகளைப் பார்வையிட்டார். |
| 23—5—44 (செவ்வாய்க்கிழமை). | நேசதேசப்படைகள் இதாலியில் இரு பக்கத்திலிருந்து தாக்கி வருகின்றன. சீனப் படைகள் பர்மா ரஸ்தாவிலுள்ள செபாங்கைப் பிடித்தன. |
| 24—5—44 (புதன்கிழமை). | நேசதேசப்படைகள் இதாலியிலுள்ள டெர்ராஸினாவை ஆக்கிரமித்தன. நேசதேச வெடிவிமானங்கள் பெர்லின், வியன்னா, ஸாகிரப் என்ற முக்கியமான அச்சுத் தலைநகரங்களைத் தாக்கின. |
| 25—5—44 (வியாழக்கிழமை). | நேசதேசப்படைகள் இதாலியில் சிஸ்டெர்னாவைப் பிடித்தன. |
| 26—5—44 (வெள்ளிக்கிழமை). | ஜெர்மானியர்கள் இதாலியில் லிரி பள்ளத்தாக்கு போர்முனையிலிருந்து அலங்கோலமாகப் பின்வாங்கினார்கள். |
| 27—5—44 (சனிக்கிழமை). | நேசதேசப்படைகள் தென்மேற்கு பஸிபிக்கில் வியாக் தீவிலிறங்கின. |
| 28—5—44 (ஞாயிற்றுக்கிழமை). | 2,500 நேசதேச விமானங்கள் ஐரோப்பாவிலுள்ள நாஸிப் போக்குவரத்துகளையும் தொழிற்சாலைகளையும் நொருக்கின. |
| 29—5—44 (திங்கட்கிழமை). | நேசதேசப்படைகள் ரோமுக்குத் தெற்கிலுள்ள வெப்பட்ரியை நோக்கி முன்னேறுகின்றன. |



### (B)-செய்திச் சுருக்கம்.

**ருஷ்யா.**—வேனிற்கால முன்னேற்றத்துக்கு ஆயத்தம் செய்யப்பட்டு வருகிறது. எதிரி களை ருஷ்ய பீரங்கிகளும், சட்டி பீரங்கிகளும் தாக்கி வருகின்றன. ருஷ்ய விமானப் படை யும் எதிரியை அடிக்கடி தாக்கி வருகிறது. பிரிடிஷ்—ருஷ்ய ஒப்பந்தத்தின் இரண்டாவது ஆண்டு பூர்த்தி விழாவன்று ருஷ்ய விமானப் படையும் மற்ற நேசதேச விமானப்படையும் பால்கன் நாடுகளில் குண்டுமாரி பொழிந்தன. ருஷ்யக் கடற்படை ரிகா வளைகுடாவிலும், பின்லாந்து வளைகுடாவிலும் சென்ற எதிரியின் போக்குவரத்துகளைத் தாக்கின.

டிராஸ்போல் பகுதியில் ஊன்றிக்கொள்ள எதிரி செய்த பிரயத்னம் வீணாகிவிட்டது.

**இதாலி.**—நேசதேசப்படைகள் எதிரியை இரு முறைகளில் தாக்கி வருகின்றன. ஒன்று ஆன்ஸியோ முனையிலும், மற்றொன்று ஹிட்லர் அரணிலும் நடைபெற்று வருகிறது. ஹிட்லர் அரண் அழிக்கப்பட்டுவிட்டது. ஹிட்லர் அரணே இருந்திருக்கவில்லையென்று எதிரி பாசாங்கு செய்கிறான். ரோமுக்குச் செல்லும் ஆன்ஸியோ—ஆல்பானோ ரஸ்தா துண்டிக்கப் பட்டுவிட்டது. ஜெர்மானியர்கள் ரோமுக்குச் செல்லுமுன் கடைசி தற்காப்பு நிலயமான வெல்லட்ரி—வால்மோண்டேன் கோட்டிற்குத் துரத்தியடிக்கப்படுகிறார்கள்.

கீழ்கண்ட ஸ்தானங்கள் பிடிபட்டன :—

ஹிட்லர் அரணின் முக்கியமான அச்சாணி போன்ற பாண்டிகார்வோ, பாண்டி, மாண்டி கிராண்டி, மாண்டி மாரினோ, மாண்டி ஆண்டோன், மாண்டி காபிசியோ, சான்பியாகோ, ஹிட்லர் கோட்டின் வடக்குக் கோடி கோட்டையான பீட்மாண்டி, ஸ்விச் அரணின் தெற்குக் கோட்டையான டெர்ராஸினா, ஆன்ஸியோ முன்னேறும் வாசலிலுள்ள சிஸ்டெர்னா, லிட்டோ ரியா, டெர்ராஸினா, பாண்டைன் சதுப்பு நிலங்களிலுள்ள லிட்டோரியா, வெல்லட்ரி, கோரி, சான்கியோவாணி, வல்லாகோர்ஸா, கோலிகிராண்டி, ரோக்காசெக்கா, பாஸ்டெனா, ஆர்டனா, காரோசெட்டி என்ற ஆப்ரிலியா.

**விமான நடவடிக்கை.**—ஜெர்மனியின் போக்குவரத்து மார்க்கங்களும் உற்பத்தி நிலயங் களும் இடைவிடாது தாக்கப்படுகின்றன. ஒரு இரவு நடவடிக்கையில் 2,500 விமானங்கள் ஈடுபட்டன. பெர்லினும், வியன்னாவும், வீனர் ந்யூஸ்டாட்டும், ஆண்ட்வெர்ப்பும், பாரிஸூம், ஸாக்ரப்பும், லையான்ஸூம் முக்கியமாகத் தாக்கப்பட்டன.

**சைனா.**—சீனர்கள் யூஷான், சாங்கோ, வெயிச்வான், சினண்டியன், பெயிமாலிங், டாடாங்கட்ஸா முதலிய இடங்களைத் திருப்பிப் பிடித்துவிட்டார்கள். தென்கிழக்கு சைனாவி லுள்ள ஹூனான் மாகாணத்தில் தலைநகரமான சாங்க்ஷாவுக்கு வடக்கிலுள்ள டன்டின் ஏரிக் கருகில் கோரமான போர் நடைபெறுகிறது. அமெரிக்க 14-வது விமானப்படை சீனர்களுக்கு உதவியளித்து வருகிறது.

**பர்மா.**—நேசதேசப்படைகள் மிட்கினாவைப் பூராவாகச் சுற்றி வளைத்துவிட்டன. அதன் மூன்றின் ஒரு பாகம் நேசதேச வசமாகிவிட்டது. அதில் பலமாக ஊன்றி நிற்கும் ஜப்பானியப் படைகள் உறுதியுடன் போர் புரிகிறார்கள்.

வடக்கு பர்மாவில் ஜப்பானின் முக்கிய தளமாக உள்ள கேமியாங்கை நோக்கி சீனப் படைகள் முன்னேறி வருகின்றன. வழியிலுள்ள ஷாரா என்னும் கிராமம் பிடிபட்டது.

மோகாங்குக்கு வடமேற்கிலுள்ள எதிரியின் போக்குவரவு மார்க்கங்களிலிருந்து சிண்டிட் படைகள் பின்வாங்கின. மணிப்பூர் மலைகளிலும், பிஷன்பூருக்குத் தெற்கிலும் அரக்கான் பகுதியிலும் போர் நடைபெறுகிறது. பருவகால மழையும் துவங்கிவிட்டது.

---

### சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**21—5—44.** (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—இலக்குகள்—ஜெர்மனி (Germany).

ராணுவ ஸ்தாபனங்கள்.—பாஸ்டி கலே (Pas De Calais).

விமான நிலயம்.—பிரான்ஸ் (France).

இலக்குகள்.—பெல்ஜியம் (Belgium).

இரவு.—போக்குவரத்து ஸ்தாபனங்கள்—டியூஸ்பர்க் (Duisburg).

இலக்குகள்.—ஹனோவர் (Hanover).

விமான நிலயம்.—பெல்ஜியம் (Belgium).

சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

**இதாலி (Italy).**

எதிரி சைனியங்கள் போக்குவரத்துகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

**ருஷ்யா ((Russia).**

(17 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

**பர்மா (Burma).**

எதிரி சைனியங்கள்.—மொகாங் (Mogaung), டாலாக்கியி (Talawgyi), ஹொகாட் (Hokat).

எதிரித் துருப்புகள்.—மணிப்பூர் (Manipur), நான்யாஸிக் (Nanyaseik), காமாங் (Kamaing), மிட்கினு (Myitkyina).

**22—5—44.** (திங்கட்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

(8 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை)

பகல்.—கடற்படை தளம்—கீல் (Kiel).

ராணுவ ஸ்தாபனங்கள்.—பாஸ்டி கலே (Pas De Calais).

ரயில்வே பாலங்கள்.-பெல்ஜியம் (Belgium).

இரவு.—இலக்குகள்— டார்ட்மண்ட் (Dortmund), பிரன்ஸ்விக் (Brunswick).

ரயில்வே தளம்.—ஆர்லியன்ஸ் (Orleans), லெமான்ஸ் (Lemans).

லட்விக்ஷாபன் (Ludwighafen).

விமான நிலயங்கள்.—பெல்ஜியம் (Belgium).

இலக்குகள்.—ஸ்பெஷியா (Spezia), பியாம்பினோ (Piombino), மாரிநாடி (Marinadi), கர்ரார (Carrara), ஆவெஸ்ஸானோ (Avezzano), வால்மாண்டோன் (Valmontone).

போக்குவரத்து இலக்குகள்.—ரிமினி (Rimini), பெஸ்காரா (Pescara).

ரயில்வே பாலங்கள், மோட்டார் போக்குவரத்துகள்.—மத்திய இதாலி (Central Italy).

கப்பல்கள்.—யூகோஸ்லாவியக் (Yugoslav) கடற்கரை.

**ருஷ்யா (Russia).**

(14 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

பியாக் (Biak) தீவு.

விமான நிலயம்.—வீவாக் (Wewak) பிரதேசம்.

பாலங்கள்.—நியூ அயர்லாந்திலுள்ள காவியெங் (Kavieng).

**பர்மா (Burma).**

எதிரி ரஸ்தா நதிப்போக்குவரத்துகள்.—அக்யாப் (Akyab).

எதிரி விமான நிலயங்கள்.—ஷ்வேபோ (Shwebo).

**23—5—44.** (செவ்வாய்க்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—விமான நிலயங்கள், விமானங்கள், யுத்த தளவாடங்கள். சைனியங்கள், தயார் செய்து சேமித்துமிடங்கள் இதர இலக்குகள்.—பிரான்ஸ் (France), மேற்கு ஜெர்மனி (Western Germany).

இரவு.—சுரங்க வெடி பரவுதல் எதிரி ஜெலப் பிராந்தியங்களில்.

**இதாலி (Italy).**

தரைமீதுள்ள விமானங்கள்.—பெர்ரார (Ferrara).

மோட்டார் போக்குவரத்துகள்.—ஆரெஸ்ஸோ (Arezzo).

ரயில் தளங்கள்.-ஸியெனி (Siene) பெரெண்டினோ (Ferentino), வால்மான்டோன் (Valmontone).

**ருஷ்யா (Russia).**

(9 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

காரோலைன்ஸ் தீவிலுள்ள டிரக் (Truk).

ஸ்கௌட்டன் தீவுககூட்டத்திலுள்ள பியாக் (Biak).

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.-வீவாக் (Wewak), மிபோ (Mibo) நதிப் பிரதேசம்.

**பர்மா (Burma).**

ராணுவ இலக்குகள்.-டிடிம் ரஸ்தா (Tiddim).

எதிரி சைனியங்கள்.—கொஹிமா (Kohima), இம்பால் (Imphal), யுக்ருல் (Ukhrul), சோம்ரா (Somra).

முகாம்கள், ஸ்டோர்கள்.—காபா (Kabaw) பிரதேசம்.

மோட்டார் போக்குவரத்துகள்.—சாகெய்ங் (Sagaing), கின்வ் (Kinv), வுந்தோ (Wuntho).

**24—5—44.** (புதன்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

(77 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன; 61 நேசதேச விமானங்கள் காணபடவில்லை).

பகல்.—இலக்குகள் பெர்லின் (Berlin), பிரதேசம், வியன்னு (Vienna).

விமான நிலயங்கள்.-பாரிஸ் (Paris), பிரான்ஸிலுள்ள இதர இடங்கள் ஜாக்ரெப் (Zagreb).

எண்ணெய்க் கிணறுகள்,-அமீன்ஸ் (Amiens).

அவைசர பாலம்.—டிரான்டோ (Trento), விற்கருகில்.

ராணுவ இலக்குகள்.—ஆஸ்டிரியா (Austria), யூகோஸ்லாவியா (Yugoslavia).

இரவு.—ரயில்வே இலக்குகள் வடமேற்கு ஜெர்மனி (N. W. Germany), பெர்லின் (Berlin), பெல்ஜியத்திலுள்ள ஆண்ட்வெர்ப் (Antwerp).

ரயில் இலக்குகள்.-ஆச்சென் (Aachen).

**இதாலி (Italy).**

ரஸ்தா.—வால்மான்டோன் (Volmontone).

போக்குவரத்துகள்.—ரோம் (Rome).

**ருஷ்யா (Russia).**

(17 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

மார்ஷல்ஸிலுள்ள பொனபி (Ponape).

விமான நிலயங்கள், ஸ்தாபனங்கள்.-மார்கஸ் (Marcus), காரோலைன்ஸிலுள்ள டிரக் (Truk).

ஜப்பானிய விமான நிலயம், இதர இலக்குகள்.—நியூ கினியா (New Guinea).

**பர்மா (Burma).**

எதிரி சைனியங்கள், முகாம்கள்.—அரக்கான் (Arakan), ஹொமாலின் (Homalin).

**25—5—44.** (வியாழக்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

(9 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன; 16 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை)

பகல்.—சேனைகள், யுத்த தளவாடங்கள், தயார் செய்து சேமித்துமிடங்கள் முல்ஹௌஸ் (Mulhouse), பெல்போர்ட் (Belfort), சர்ரக்குமைன்ஸ் (Sarreguemines), மெட்ஸ் (Metz), தியான்வில்லி (Thionville), சார்லிராய் (Charleroi), பிலெய்ன்வில்லி (Blainville) ஆண்ட்வெர்ப் (Antwerp).

விமான நிலயம்.—பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium).

இரவு.—ஒரு தகவலும் இல்லை.

**இதாலி (Italy).**

எதிரி துருப்பு முகாம்கள், பீரங்கிகள், டாங்கிகள், மோட்டார் போக்குவரத்துகள் யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

பாலங்கள்.—மத்திய இதாலிய ரயில்வே (Central Italian railway).

விமான நிலயம்.—பியாசென்ஸா (Piacenza).

துறைமுகம்.—மல்பால்கோன் (Malfalcone).

எண்ணைக் கிணறுகள்.—போர்டோ மார்கொரா (Porto Marghera).

ரஸ்தாக்கள்.—வைடர்போ (Viterbo).

**ருஷ்யா (Russia).**

(18 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய தளம்.—நியூகினி (New Guinea).

படகுகள்.—நியூகினி (New Guinea) கடற்கரை.

**பர்மா (Burma).**

ராணுவ நிலயங்கள்.—மித்கினு (Myitkyina).

சேமிப்புகள்.—மாண்டலே (Mandalay), பினுமானு (Pyinamana).

மோட்டார் போக்குவரத்துகள்.—வடமேற்கு பர்மா (N. W. Burma), லபாவ் (Labaw)

**26—5—44.** (வெள்ளிக்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—ரயில்வே தளங்கள் லயான்ஸ் (Lyons).

ஜெர்மன் துருப்பு முகாம்கள்.—பிஹாக் (Bihac).

விமான நிலயம்.-ஸெமுனிக்ஸாரா (Zemunik-Zara).

போக்குவரத்துகள்.—பிரெஞ்சு ஸாவாய் (French Savoy) முதல் நீஸ் (Nice) வரை.

ரயில்வே லயன்கள்.—ரிவிரா (Riviera).

இரவு.—லட்விக்ஷாபன் (Ludwigshafen), ரோதி (Rothe).

ரயில் தளங்கள்.—ஹாச்சென் (Aachen).

**இதாலி (Italy).**

ரயில்வே தளங்கள்.—மத்திய இதாலி (Central Italy).

மோட்டார் ரயில் போக்குவரத்துகள்.—வால்மாண்டோன் (Volmontone), வெல்லெட்ரி (Velletri), ரோம் (Rome), பிராஸிமானோ (Bracciano).

எதிரி முகாம்கள்.—பிராஸ்கடி (Frascati).

**ருஷ்யா (Russia).**

(30 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

விமான நிலயம்.—மாபின் பே (Maffin Bay).

மானொக்வாரி (Monokwari), பியாக் (Biak) தீவுகள்.

ஜப்பானிய தளங்கள்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul), நியூ கினியாவிலுள்ள வீவாக் (Wewak).

**பர்மா (Burma).**

படகுகள், இதர இலக்குகள்.—பாலெட்வா (Paletwa), நிம்யா (Nimbya), பூதிடாங் (Buthidaung).

நதி பாலங்கள்.—மணிப்பூர் (Manipur).

ரயில் ரோட் போக்குவரத்துகள்.—மாண்டேலே (Mandalay).

இலக்குகள்.—பாகொக்கு (Pakokku).

**27—5—44.** (சனிக்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—(49 நாஸி விமானங்கள் நாசமாக்கப்பட்டன; 31 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

ரயில்வே தளங்கள்.—லட்விக்ஷாபன் (Ludwigshafen), மான்ஹீம் (Mannheim), காரலரூஹி (Karlsruhe), ஸார் புரக்கன் (Sarabrucken), கான்ஸ் (Konz), நியுனி (Neune), கிர்ச்சென் (Kirchen).

விமானங்கள் சரிபார்க்கும் தொழிற்சாலைகள். ஸ்டார்ஸ்பிரக் (Strasburg), மெட்ஸ் (Metz).

இரவு.—(27 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

ராணுவ டெப்போ.—போர்க் (Bourg)—லியோபோல்ட் (Leopold).

ரயில்வே தளங்கள்—.ஆச்சென் (Aachen).

இலக்குகள்.—டஸ்ஸல்டார்ப் (Dusseldorf), பெர்லின் (Berlin).

ரயில்வே தளம்.—நான்டீஸ் (Nantes).

விமான நிலயம்.—ரெக்னீஸ் (Regnes).

ராணுவ இலக்குகள்.—பிரெஞ்சு கடற்கரை (French).

ரயில்வே தளங்கள்.—மார்ஸெய்ல்ஸ் (Marseilles), ஆவிக்ஞன் (Avignon), நிமிஸ் (Nimes).

**இதாலி (Italy).**

எதிரி சைனியங்கள்.—ஆன்ஸியோவிற்கு (Anzio) வடக்கு.

பாலங்கள், பீரங்கிகள், துருப்பு முகாம்கள், ரஸ்தாக்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

ரயில் பாலங்கள்.—அரெஸ்ஸோ (Arezzo) பாண்டாஸ்ஸிவ் (Pontassieve).

கப்பல்கள்.—டால்மேஷியன் (Dalmatian) கடற்கரை.

ரஸ்தாக்கள்.—வைடெர்போ (Viterbo).

**ருஷ்யா (Russia).**

(14 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

விமானச் சந்தைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஷிமீஷு (Shimushu), மாட்ஷுவா (Matsuwa).

குஸே (Kusaie), போனுபி (Ponape).

ஜப்பானிய தளங்கள்.—நியூ கினியா (New Guinea) நியூ பிரிடன் (New Britain).

**பர்மா (Burma).**

எண்ணெய்க் கிணறுகள்.—யெனங்யாங் (Yenangyaung), பொகொக்கு (Pokokku), மியாங்கு (Myaungu).

எதிரி சைனியங்கள்.—கொஹிமா (Kohima).

படகுகள்.—வடக்கு பர்மா (North Burma).

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**22—5—44.** (திங்கட்கிழமை).

**பிரிடன் (Britain).**

(4 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

சில இடங்கள்.—இங்கிலாந்தின் தென்கரை.

**ருஷ்யா (Russia),**
**தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**23—5—44.** (செவ்வாய்க்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

**24—5—44.** (புதன்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia).**
**தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

**25—5—44.** (வியாழக்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**தூரக்கிழக்கு (Far East).**

பாலெல் (Palel). (ஒரு எதிரி விமானம் நாசமாக்கப்பட்டது; 4 விமானங்கள் நாசமாக்கப்பட்டன.)

**26—5—44.** (வெள்ளிக்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia),**
**தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**27—5—44.** (சனிக்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**தூரக்கிழக்கு (Far East).**

விமான நிலயம்.—மித்கினு (Myitkyina).

**28—5—44.** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia),**
**தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

# யுத்தக் குறிப்புகள்.

**யுத்தப் போக்கு.** ருஷ்யாவில் ஜெர்மானியர்கள் தோற்றுவிட்டார்களென்பதுடன் அவர்கள் பலமாக உதைபட்டு பலஹீனமடைந்து விட்டதால் அவர்களுடைய போர்முனையைக் குறுக்கிக்கொள்ளவும் அல்லது படைகளை மேற்கு முனைக்கு அனுப்பவும் அவர்கள் சக்தியை இழந்துவிட்டார்களென்பது தெளிவாகத் தோன்றுகிறது. சென்ற வருஷத்தில் திட்டப்படி என்று சொல்லிக்கொண்டு படைகளை இழந்துவிடாமல் ஜெர்மனி பின்வாங்கிச் சென்றது. இந்த வருஷத்தில் நீஸ்டரைத் தாண்டிய அந்தப் படை சிதறுண்டு ஒரு சிறிது நாசமடைந்தும் சென்றிருக்கின்றது. ருமேனியாவிலும், போலந்திலும் அவர்கள் போர் புரிய பிரியப்படாமல் அதைத் தவிர்க்க முயற்சி செய்து வருகிறார்கள்.

இதே சமயத்தில் வேனிர்கால யுத்தத்துக்காக ருஷ்யா ஆயத்தம் செய்து வருகிறது. எதிரியை விமானப் படை இடைவிடாது தாக்கித் தொந்தரவளித்துவருகிறது. ருஷ்யர்கள் இரவு நடமாட்டத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். ஏனெனில் 1,500 மைல்கள் நீளமுள்ள போர்முனையில் ஒரு பிராந்தியத்திலும் ஜெர்மானியர்கள் விமானத் தற்காப்புகளை அமைத்திருக்கவில்லை.

இதாலியில் ஜெனரல் அலெக்ஸாண்டர் திருப்திகரமாக முன்னேறிவருகிறார். கஸ்டாவ், ஹிட்லர் அரண்களை நொருக்கியபின் அவனுடைய படைகள் இதாலியின் தலைநகரத்தை நோக்கி முன்னேறி வருகின்றன. பேருக்குக்கூட சண்டை போடாமல் எதிரி ரோமிலிருந்து தப்பி ஓடி வடக்கு இதாலியில் ஒளிந்து கொள்ளலாம்.

மேற்கு ஐரோப்பாவில் படையெடுப்புக்கு முற்போக்காக எதிரியின் போக்குவரத்து மார்க்கங்களையும், ஸப்ளை நிலயங்களையும் தாக்கும் விமான நடவடிக்கை தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது.

ஐரோப்பியப் போர்முனை நடவடிக்கைக்கு நேசதேசத்தாரின் திட்டம் பின்வருமாறு: கிழக்கிலிருந்தும், தெற்கிலிருந்தும், மேற்கிலிருந்தும் ஒரே சமயத்தில் முன்னேற்றம் ஏற்படக்கூடும். ருஷ்யப் படைகள் ருமேனியாவுக்குள்ளும், வார்ஸாவுக்கும் முன்னேறும்பொழுது இதாலியப் படைகள் வடக்கு நோக்கி முன்னேறி பால்கன் நாடுகளையும், தெற்கு பிரான்ஸையும் தாக்க வலை வீசுவார்கள். மேற்குப் பக்கத்தில் பிரிடனிலிருந்து ஏராளமான படைகள் பலமான தாக்குதலைத் துவக்கும்.

இவ்விதமாக ஹிட்லரின் ஐரோப்பாவில் இதற்குமுன் எதிர்பாராத ஒரு புயல்காற்று வீசப் போகிறது. ராணுவ முறையில் அவன் முறியடிக்கப்பட்டு விட்டான் என்று ஹிட்லர் அறிந்து விட்டான். ஆகிலும் வணங்கா முடி மன்னனான கோயபல்ஸ் பொய் பிரசார மூலமாக வெற்றி பெற்று விடலாமென்று நம்பியிருக்கிறான்.

இந்தோ பர்மா முனையில் போரின் வேகம் தணிந்துவிடவில்லை. பருவகால மழை ஆரம்பித்துவிட்டது. எதிரி அநேகமாக முறியடிக்கப்பட்டுவிட்டான். ஆகிலும் வியர்த்தமாக இம்பால், கொஹிமா, மிட்கினு, மொகாங் முதலிய இடங்களில் இழந்த ஸ்தானங்களைத் திரும்பிப் பிடிக்க அவன் முயன்று வருகிறான்.

ஹோனானில் அவர்களுக்குக் கிடைத்திருக்கும் வெற்றிகளை ஆதாரமாகக் கொண்டு ஜப்பானியர்கள் சீனாவில் யுத்தத்தை முடித்துவிட்டதாக ஒலிபெருக்கி வருகிறார்கள். ஆனால் சீனர்கள் முன் போல இப்பொழுதும் திரும்பித் தாக்கி வருகிறார்கள். பீபிங்—ஹாங்கௌ இருப்புப் பாதையில் எதிரியை அவர்கள் துரத்தியடித்ததுடன் யூனானில் ஸால்வீன் நதி ஓரமாக அவர்கள் முன்னேறி வருகிறார்கள்.

பசிபிக்கில் ஜப்பானியர்கள் பொய் பிரசார மூலம் வெற்றி பெற உத்தேசிக்கிறார்கள். நேசதேசப் படைகள் நியூகினியாவிலிருந்து ஜப்பானியர்களை அப்புறப்படுத்தி வரும்பொழுதும் வாட்கித் தீவைப் பிடித்தபின் பிலிப்பைன்ஸ் தீவுகளை சமீபித்து வரும்பொழுதும் ஜப்பானியர்கள் வெற்றி பெறுவோமென்றும் தென் கிழக்கு ஆசியாவில் புதிய உலக அமைப்பை ஸ்தாபிப்போமென்றும் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

வி வி வி வி வி

**பிரிடனின் அயல்நாட்டு நடவடிக்கை.** இந்த வாரத்தில் யுத்தத்துக்குப் பிந்திய ஐரோப்பாவினுடையவும் உலகத்தினுடையவும் அமைப்பைப் பற்றியும், திட்டங்களைப் பற்றியும் கோடிகரிக்கக்கூடிய அநேக அபிப்பிராயங்களை பிரிடனிலுள்ள பொறுப்பு வாய்ந்த ராஜ தந்திரிகள் வெளியிட்டிருக்

கிருர்கள். ஐரோப்பிய யுத்தத்தின் இறுதிப் போர் நடந்தபாடில்லையென்ருலும் எதிரியின் பலஹீனம் தெளிவாகிவிட்டது. யுத்தத்தின் முடிவு சமீபித்துவிட்டது. நேசதேசத்தார்கள் எதிர்கால பிரச்னைகளில் கவனம் செலுத்தி திட்டங்களை நிறுவ முன்வந்துவிட்டார்கள். யுத்தத் தில் வெற்றி பெறுவதைவிட இது கஷ்ட சாத்யமான நடவடிக்கையாகும். இந்த விஷயத்தை சென்ற யுத்தம் ருஜுச் செய்தது. அப்பொழுது வெற்றி கிடைத்த போதிலும் சமாதானம் நிலைநாட்டப்படவில்லை. யுத்தத்தில் வெற்றி பெறுவதென்பது குறுகிய கால நடவடிக்கை. சாச்வதமான சமாதானத்தை அமைப்பதற்குப் போர் நடத்த வேண்டியதில்லையென்ருலும், புத்திசாலித்தனமான அழிவற்ற திட்டங்களை நிறுவி அவைகளை நடைமுறையில் அமுலுக்குக் கொண்டுவருவதுதான் முக்கியமான வேலையாகும். ஆகையால், நேசதேசத்தார்கள் அனுப வத்தை ஒட்டி இந்த வழியில் வேலை செய்யத் துவங்கி யிருக்கிருர்கள். உணவுப்பொருள், தொழிலாளர் மகாநாடுகள் நடைபெற்றன. நியூஹாம்ஷையருக்கு சமீபத்திய பிரிடன் உட்ஸில் பொருள் மகாநாடு நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. பிரிடனில் சாம்ராஜ்ய நாடுகளின் பிரதம மந்திரிகளின் மகாநாடு நடைபெற்றது. பிரிடன், நார்வே, ஹாலந்து போன்ற மற்ற ஏழு நாடுகளுடன் உடன்படிக்கை செய்துகொண்டது. யுத்தத்துக்குப்பின் உலக அமைப்புச் சங்கத்தை ஏற்படுத்த திட்டங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. ஸ்பெயினி லிருக்கும் பிரிடிஷ் அயல்நாட்டு தூதர் ஸர் ஸாமுவல் ஹோர் வெகு காலத்திற்குப்பின் இப் பொழுது ஐரோப்பாவின் எதிர்கால நிலையில் ஐரோப்பா கவனம் செலுத்தி வருகிறதென்றும் ஐக்கியமான காரியங்களுக்கான கொள்கைகளுடனில்லாமல் சுதந்திரம்,ஒழுக்கம்என்ற முறைப் படி ஐரோப்பா திருத்தியமைக்கப்படுமென்றும் சொல்ல முன் வந்திருக்கிருர். அவர் மேலும் சொன்னதாவது. "ஐரோப்பாவிலுள்ள என்னுடைய சிநேகிதர்கள் ஆலோசனைக்கும் ஆதர விற்கும் பிரிடனின் ஒத்தாசையை எதிர்பார்க்கிருர்கள். யுத்தத்திற்குப்பின் பிரிடனிடம் வலுவான ஆகாயப் படையும் ஐரோப்பாவிலேயே பலமான கடற்படையும் இருந்துவரும்."

வி வி வி வி வி

**யதேச்சாதிகாரமில்லை.** மேமாதம் 25உயன்று காமன்ஸ் சபையில் அயல்நாட்டு மந்திரியான மிஸ்டர் ஈடன் பேசியபொழுது தனிமை யாகவோ அல்லது அமெரிக்காவுடனும், ருஷ்யாவுடனும் கூட்டாகவோ கொடுங்கோல் ஆக்ஷியையோ அல்லது யதேச்சாதிகாரத்தையோ நடத்துவதாக பிரிடனுக்கு உத்தேசமில்லை என்று சொன்னர். அவர் மேலும் சொன்னதாவது "நீங்கள் இதைச் செய்யவேண்டும், நீங்கள் அதைச் செய்யவேண்டும் என்று பிரிடன் சொல்லாது. பிரிடிஷ் தீவுகளில் வசிக்கும் 45 மிலியன் ஜனங்கள் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளமாட்டார்கள்." சர்வதேச வியவகாரங்களில் பிரிடன் நடைமுறையிலும், கொள்கையிலும் உலகத்துக்கு வழிகாட்டியாக இருக்கும். அது ஆக்கிரமிப்பு நாடுகளில் நேசதேச ராணுவ ஆக்ஷியை அமைத்துவிடாது. ஜனநாயக முறையிலோ அல்லது வேறு விதத்திலோ எந்த நிர்வாகத்தையும் எந்த தேசத் திலும் அந்நாட்டு மக்களின் சம்மதமன்னியில் பிரிடன் கட்டாயப்படுத்தி அமைத்துவிடாது. ஆகிலும் பிரிடனின் செல்வாக்கு பறவக்கூடிய எந்த இடத்திலும் இழிவான பாஸிதத்வம் தலை தூக்கமுடியாது. பிரிடிஷ் சாம்ராஜ்ய நாடுகளின் சக்தியும், செல்வாக்கும் சர்வதேச ஒழுக் கத்தையும், ஒற்றுமையையும் நிலைநாட்ட திட்டங்களைப் போட உபயோகிக்கப்படும். இந்த சித்திகளை பலாத்கார மூலமாக இல்லாமல் சகோதரபாவத்துடனும், ராஜ தந்திர முறையிலும் நாம் அடையவேண்டும். மிஸ்டர் ஈடன் மேலும் சொல்லுகிருர் "மற்ற நாடுகளுடன் நமக் குள்ள சம்பந்தங்களில் யோக்கியப் பொறுப்பும், நியாயமும் சர்வ தேசங்களுக்குள் நல்லெண் ணமும் இருக்கவேண்டுமென்று நாங்கள் விரும்புகிருேம். இம்மாதிரியான நடவடிக்கையில் நாளடைவில் அழிவு ஏற்பட்டதினல்தான் இந்த யுத்தம் மூண்டது. இன்னும் அநேக யுத்தங்கள் மூளும்போலும் தோன்றுகிறது. நான்கு வருஷங்களுக்குமுன் யுத்தமானது மனமில்லாத உலகத்தை வம்புக்கு இழுத்தது. ஏனெனில் ஹிட்லரும், முஸோலினியும் நன்னடவடிக்கைகளை புறக்கணித்துவிட்டார்கள். இப்பொழுது நாம் ஐரோப்பாவின் பத்திரத்தை நல்லுணர்ச்சி மூலம் ஏற்படுத்த முயலுகிருேம். இதற்காக மூன்று வல்லரசுகளின் யதேச்சாதிகாரம் உலகில் நிலைபெறுமென்று எண்ணங்கொள்ளவேண்டாம்."

வி வி வி வி வி

**எதிரியைமுதலில் அடிக்கவேண்டும்.** இது விஷயமாக மிஸ்டர் சர்ச்சில் ஆற்றிய சொற்பொழிவு சிறந்தது. விஷயங்களைத் தெளிவுபடுத்தியது. சென்ற புதன்கிழமையன்று காமன்ஸ் சபையில் விவாதத்தை ஆரம்பித்தபொழுது தற்பொழுது உள்நாட்டு வியவகாரத்திலும், அயல்நாட்டு நடவடிக்கைகளிலும் எதிரியை முதல் முதலில் தாக்கி முறியடிப்பதுதான் பிரிடனின் முக்கியமான கொள்கை என்று ஸ்பஷ்டமாகச் சொன் ஞர். உலகமெங்கும் பொதுமக்கள் இப்பொழுது நடைபெற்றுவரும் அழிவு எப்பொழுது முடியுமென்று ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிருர்கள் என்றும் அவர் ஒப்புக்கொண் டார். ஆகிலும் பொதுமக்களில் சிலருக்கும், பத்திரிகாசிரியர்களுக்கும், ராஜ்ய வாதிகளுக்



கும் அவர் ஒரு எச்சரிக்கை செய்தார். ஆபாசமான பேச்சுகளைப் பேசினல் போர்முனையில் இருக்கும் போர்ப் படைகளுக்கும் உள்நாட்டிலுள்ள பொதுஜனங்களுக்கும் அபாயம் நேரிடும் என்று அவர் கூறினர்.

வி வி வி வி வி

**நடுநிலைமை வகிக்கும் நாடுகள் : துருக்கி.** துருக்கி பிரிடனை ஏமாற்றிவிட்டதென்று மிஸ்டர் சர்ச்சில் ஒப்புக்கொண்டார். ஆகிலும் இதற்குத் தகுந்த முகாந்திரங்களிருக்கின்றனவென்றும் அவர் சொன்னர். துருக்கி அளவுகடந்த ஜாக்கிரதையுடனிருந்துவருகிறது. ஆகிலும் பிரிடன் துருக்கிக்கு நியாய மான வாதங்களை உரைத்து அதை வழிபடுத்த முயன்றது. இது பயன்படாமல் போனபின் கோபமன்னியில் அவசியத்தை முன்னிட்டு பிரிடன் குத்தகைக் கடன் திட்டப்படி அதற்கு ஸப்ளைகளை அனுப்புவதை நிறுத்திவிட்டது. ஜெர்மனிக்கு அனுப்பப்படும் குரோம் ஸப்ளையை துருக்கி நிறுத்திவிட்டதை பிரிடன் சந்தோஷத்துடன் வரவேற்றது.

வி வி வி வி வி

**ஸ்பெயின்.** இந்த நாட்டுடனும் பிரிடனின் சம்பந்தங்கள் நெருக்கடியாக இருந்தன. இப்பொழுது அவைகள் வெற்றிகரமாக முடிந்துவிட்டன. அதைப்பற்றி கடுமையான வார்த்தைகளை எழுதுவது உசிதமில்லை. பிரிடனுக்காக விமானப்போர் நடைபெற்ற சமயத்தில் ஸ்பெயின் ஜெர்மனியின் ஆசை வார்த்தைகளுக்கு உட்பட்டு ஜிப்ரால்டருக்கு வழியைத் திறந்துவிடவில்லை. ஆகிலும் வடக்கு ஆபிரிக்காவில் நேசதேசப் படைகள் இறங்குவதற்கு ரக்ஷணையளிக்கக்கூடிய விமானப் படைகளை பிரிடன் ஜிப்ரால்டரில் குவித்துவைத்ததற்கு ஸ்பெயின் சம்மதித்தது. அதன் துறைமுகங்களிலுள்ள இதாலிய யுத்தக்கப்பல்களை நேசதேசத்தாரிடம் அது ஒப்படைத்து விட்டது. டாஞ்சியரிலிருந்த எதிரியின் அயல்நாட்டு மந்திரி காரியாலயம் மூடப்பட்டு விட்டது. ஜெர்மனிக்கு அனுப்பப்படும் உல்ப்ராம் ஸப்ளையை அது நிறுத்திவிட்டது.

வி வி வி வி வி

**இதாலி.** இதாலியின் கதை வேறு விதமானது. அது நிபந்தனையன்னியில் சரணுகதி செய்திருக்கிறது. இதாலியின் விடுதலை இன்னும் பாக்கியிருக்கிறது. இதாலியைவிட்டு எதிரி துரத்தியடிக்கப்படுமுன் அவன் எவ்விதமான நஷ்டம் விளைவிப்பானென்று சொல்லுவதற்கில்லை. இதாலி விழுந்து விட்டாலும் அதைப்பற்றி ஒன்றும் குறை கூறக்கூடாது. அதன் பலஹீனமான ஸ்திதியிலும் அது குறைவான தரைப்படைகளுடனும், கடற்படையுடனும், ஆகாயப்படையுடனும் எதிரியுடன் போர் தொடுத்துவருகிறது.

வி வி வி வி வி

**கிரீஸ்.** துக்ககரமான உள்நாட்டுக்குழப்பத்திலிருந்து அந்நாடு ஒன்றுபட்டு விட்டது. கிரேக்க கடற்படையில் கலவரமும், கக்ஷிகளுக்குள் விரோதமும் கிரீஸின் யுத்த முயற்சியை பலமாக பாதித்து வந்தன. இப் பொழுது ஒற்றுமை ஏற்பட்டுவிட்டது.

வி வி வி வி வி

**யூகோஸ்லாவியா.** யூகோஸ்லாவியாவின் நிலைமையும் மோசமானதுதான். செர்பியர்களும், குரோஷியர்களும், ஸ்லவேனியர்களும், ஆல்பேனியர்களும் ஒருவரை ஒருவர் எதிர்த்து வந்தார்கள். பொதுவான அக்கறைகளிலும், பொதுவான கொள்கைகளிலும்கூட அவர்கள் ஒன்றுபடவில்லை. இங்கு ஜெனரல் மிகைலோவிச் ராஜத் துரோகியின் வேலையைச் செய்ய ஆரம்பித்தான். மார்ஷல் டிடோ நேசதேசத்தாரின் நண்பன். ஆகிலும் அவனுடைய பொது உடைமைக்கொள்கைகள் அந் நாட்டிலுள்ள விவசாயிகளுக்கு அருவருப்பை உண்டு பண்ணுகின்றன. யூகோஸ்லாவியாவிலும், கிரீஸிலும் ஜெர்மானியர்கள் செய்து வரும் அக்கிரமங்கள்தான் நேசதேசத்தாரின் ராஜ தந்திர முறைகளைவிட கிரீஸிலும், யூகோஸ்லாவியாவிலும் ஒற்றுமையை வளர்ச்சி செய்கின்றன.

வி வி வி வி வி

**போலந்து.** போலந்தில் கிழக்கு எல்லைச்சரக பிரச்னை அதிக சிரமங்களை உண்டுபண்ணுகிறது. கிழக்கு எல்லைச் சரகத்தில் போலந்து இழக்கக்கூடிய பிரதேசத்துக்குப்பதிலாக மேற்குப் பக்கத்தில் இடங்களை விட்டுக்கொடுப்பதாக நேசதேசத்தார்கள் வெளியிட்டபோதிலும் போலந்து ருஷ்யாவுடன் உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொள்ள மறுத்துவிட்டது. இந்த சந்நிவேசத்தில் பிரிடனின் நிலைமை சங்கடமாகயிருக்கிறது. போலந்தைக் காப்பாற்றத்தான் பிரிடன் யுத்தத்திலீடு

பட்டது. இதே சமயத்தில் இது ருஷ்யாவுடன் இருபது வருஷ ஒப்பந்தத்தையும் செய்து கொண்டிருக்கிறது.

கஷ்டமான நிலைமையில் போலந்து செய்திருக்கும் உபகாரத்தை பிரிடன் மறந்து விடவில்லை. போலிஷ் படைகள் நேசதேசத்தாருடன் சேர்ந்து ருஷ்யப் போர்முனையிலும் இதாலியிலும் போர் புரிந்துவருகின்றன. நேசதேசப் படைகள் போலந்துக்குள் முன்னேறியவுடன் போலிஷ் கொரில்லாப்படைகள் அவர்களுக்கு உதவி செய்யத் தயாராகயிருக்கின்றன.

வி வி வி வி வி

**பிரான்ஸ்.** இங்கு தனிப்பட்ட நிர்வாகம் கிடையாது. விஷி நிர்வாகத்தை நாம் மதிக்கவேண்டியதில்லை. பிரான்ஸ் தேசிய விடுதலைக் கமிட்டிக்கு பொதுமக்களின் ஆதரவு எவ்வளவு தூரமிருக்கிறதென்றும் புலனாகவில்லை. ஆகிலும் இதாலியில் கமிட்டியார்கள் செய்துவரும் உதவிக்கு பிரிடன் நன்றியறிவுள்ளதாகயிருக்கிறது. ரிச்லியூ போன்ற கப்பல்கள் உள்ள சக்திவாய்ந்த கடற்படை பிரான்ஸிடமிருக்கிறது. அதனிடம் பெரிய சாம்ராஜ்யமும் ஏராளமான ஐச்வர்யங்களும், பிரான்ஸில் உள்நாட்டிலேயே பலமான கொரில்லாப்படையும் இருந்துவருகின்றன.

வி வி வி வி வி

**நார்வேயும், ஹாலந்தும்.** இந்நாடுகள் நேசநாடுகளை நம்பியிருக்கின்றன. அயல்நாட்டிலுள்ள அவைகளுடைய நிர்வாகங்கள் தங்களின் தேசங்களுக்குத் திரும்பிச்செல்லும் நாளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

வி வி வி வி வி.

**பெல்ஜியம், டேன்மார்க்.** அந்நாடுகளின் மன்னர்கள் கைதிகளாகயிருக்கிறார்கள். அவைகளின் நிர்வாகங்களும் பிரிடனில் ஆக்ஷி புரிந்துவருகின்றன.

வி வி வி வி வி

**ருஷ்யா.** அதற்கு வேறு விதமான நோக்கங்களிருந்தபோதிலும் அது 20 வருஷ ஒப்பந்த மூலமாக பிரிடனின் நண்பனாக ஆகிவிட்டது. ருஷ்ய மனப்பான்மையும் மாறிவிட்டது. மிஸ்டர் சர்ச்சில் சொல்லுகிறபடி ருஷ்யாவில் மதம் புத்துயிர் பெற்றுவிட்டது. புதிய ருஷ்ய தேசிய கீதம் இந்தப் புதிய அபிப்பிராயத்தை வெளிப்படுத்துகிறது. ருஷ்யா அதனுடைய ராஜீய, ஜன சமூகக் கொள்கைகளை அந்நிய நாட்டில் கட்டாயத்தின் பேரில் அமுலுக்குக் கொண்டுவருவதாக உத்தேசிக்கவில்லை.

வி வி வி வி வி

**நேசநேசத்தார்கள்.** நேசதேசக் கக்ஷியில் சேர்ந்திருக்கும் 33 தேசங்கள் சம்பந்தமாக பிரிடனின் நடவடிக்கையானது சமத்வத்தை அடிப்படையாகக் கொண்டதாகயிருக்கும். அவர்களுக்கு எஜமானனென்ற முறையில் அது நடைபெறாது. அது சட்ட திட்டங்களை நிறுவி அமுல் நடத்தாது. பிரிடிஷ் சாம்ராஜ்யத்தை வழிகாட்டியாகச் செய்து போதனையினாலும் சம்மதத்தின் பேரிலும் பொதுவான ஒத்துழைப்பை அது நிலைநாட்டும்.

வி வி வி வி வி

**ஜெர்மனியும், ஜப்பானும்.** கிழக்கிலும், மேற்கிலுமுள்ள நாஸி தத்வம் அழிக்கப்படும். அந்நாடுகள் நிபந்தனையற்ற சரணாகதியைச் செய்ய வேண்டும். எதிரிகளுக்கு ஒரு உரிமையும் கொடுக்கப்படமாட்டாது. ஆகிலும் நேசதேசத்தார்கள் அடிபட்ட எதிரிக்கு நியாயம் வழங்காமலிருக்கமாட்டார்கள். குற்றவாளிகள் சிக்ஷிக்கப்படுவார்கள்.

வி வி வி வி வி

**உலக அமைப்பு.** பேராசை பிடித்த தேசங்களின் கொள்ளையடிப்பு மூளாமல் தடுக்க ஒரு உலக அடக்குமுறை சபையும், உலக வல்லரசுகளின் சமாஜமும், அதை அமுல் நடத்தும் அதிகாரிகளும் கொண்ட உலக அமைப்பு நிர்மாணிக்கப்படும். வருங்காலத்தில் சமாதானத்தைக் கலைக்க முற்படும் நாடுகளை அடக்கியாள தரைப்படைகளும், கடற்படையும், விமானப்படையும் நிலைபெற திட்டங்கள் போடப்படும்.

இந்த உலக அமைப்பில் பிரிடிஷ் சாம்ராஜ்யமும், சாம்ராஜ்ய நாடுகளும் நிலைபெற்றிருக்கும், பிரிடனும், அமெரிக்காவும் சகோதரபாவத்துடனிருந்து வரும். பிரிடனும், ருஷ்யாவும் ஒற்றுமையுடனிருந்து வாழும். சர்வதேசங்களின் சமஷ்டியும் நிலைபெறும்.

அவ்விதம் நடைபெற்றால் இப்பொழுது நாம் நடத்திவரும் போரும் தன் தியாகங்களும் பயன்பெற்றதாகும்.



**குத்தகைக்கடன் சில புள்ளி விவரங்கள்.** குத்தகைக்கடன் நடவடிக்கையைப்பற்றி ஜனாதிபதி ரூஸ்வெல்ட் 15-வது ரிபோர்ட்டை வெளியிட்டிருக்கிறார். இது மிகவும் ஸ்வாரஸ்யமானது. அதில் குத்தகைக்கடன் திட்டப்படி அமெரிக்கா நேசதேசத்தார்களுக்கு 17,000,000,000 டாலர்கள் பொருமானத்துக்கு மேற்பட்ட தளவாடங்களையும், 30,000 விமானங்களையும், 25,000 டாங்கிகளையும் அனுப்பியிருப்பதாகக் காணப்படுகிறது. இந்தச் செலவு அமெரிக்காவின் மொத்த யுத்தச் செலவின் 14 சத விகிதம் பாக்கியுள்ள 86 சத விகிதம் அமெரிக்கப் போர் படைகளின் உபயோகத்துக்காக செலவிடப்படுகிறது.

1942-ம் வருஷ ஆரம்பத்திற்குப்பின் இதுவரையில் பிரிடன் அமெரிக்காவுக்கு பிரதியுபகாரமாக 2,000 மிலியன் பொருமானமுள்ள சாமான்களை அனுப்பியிருக்கிறது. அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக பிரிடன் யுத்த தளவாட உற்பத்திசாலை. அமெரிக்கா ருஷ்யாவுக்கு 4,750,000,000 டாலர்கள் பொருமானமுள்ள சாமான்களையும், 8,800 விமானங்களையும், தூரக்கிழக்கு நாடுகளுக்கு 2,000 மிலியன் டாலர்கள் பொருமானமுள்ள சாமான்களையும் அனுப்பியிருக்கிறது. சைனாவுக்கும் ஏராளமான உதவி அனுப்பப்படுகிறது. ஹிமாலய மலையைத் தாண்டிச்செல்லும் ஸப்ளைகளின் மாதாந்திர சராசரி திட்டம் ஒரு வருஷத்துக்கு முன்னிருந்ததைவிட இப்பொழுது 15 மடங்கு அதிகமாகிவிட்டது.

வி வி வி வி வி

**குத்தகைக்கடனும் இந்தியாவும்.** குத்தகைக்கடன் திட்டப்படி இந்தியாவுக்கு அமெரிக்கா செய்திருக்கும் உதவியையும் நாம் இங்கு கூற வேண்டும். தற்போதைய பர்மா போருக்கும் அமெரிக்காவின் குத்தகைக்கடன் திட்டம்தான் பேருதவிசெய்தது. இந்த உதவியின் பயனாகத்தான் ஜெனரல் ஸ்டில்வெல்லிடமுள்ள சீனப்படைகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு முஸ்தீப்புகள் வழங்கப்பட்டன. லேடோ ரஸ்தா அமைக்கப்பட்டது, அமெரிக்க விமானப்படை பரிபாலிக்கப்படுகிறது. வங்காள விரிகுடாவில் டான் விமானப் படைகள் சஞ்சரிக்கின்றன. சைனாவுக்கு விமான மூலம் உதவி அனுப்பப்படுகிறது. இந்திய கப்பற் கட்டுமிடங்களுக்கும், இருப்புப் பாதைகளுக்கும், விமான தளங்களுக்கும் முஸ்தீப்புகள் அனுப்பப்படுகின்றன. இந்தியாவின் தொழிற்சாலைகளுக்கு யந்திர சாதனங்களும், ஆயுதங்களும், இயற்கைப் பொருள்களும் கிடைத்து வருகின்றன.

குத்தகைக்கடன் திட்டத்துக்கு பிரதியுபகாரமாக டாலர்கள் அனுப்பப்படாவிட்டாலும் சாமான்கள் அனுப்பப்படுகின்றன. குத்தகைக்கடன் என்பது பத்துவரவு கணக்கல்ல. அல்லது ஒரு தேசம் மட்டும் மற்றொரு தேசத்துக்கு அனுப்பும் திட்டமல்ல. இது பரஸ்பர உதவி திட்டம் இந்த மகத்தான சேவைக்காக உயிர்துறந்திருக்கும், மிலியன்கள் கணக்கான மனிதர்களும், பங்கப்படுத்தப்பட்ட ஆயிரக்கணக்கான குடும்பங்களும் குத்தகைக்கடன் திட்டப்படி செல்வவந்தர்களான நாடுகள் அனுப்பியிருக்கும் பொருள், விமானங்கள், கப்பல்களைப் போல உயர்வானவைகள்.

வி வி வி வி வி

**மற்ற முக்கியமான புள்ளி விவரங்கள்.** பாம்பர் கம்மாண்டின் ஏப்ரல் மாதத்திய நடவடிக்கைகளைப்பற்றி சில புள்ளி விபரங்களைக் கூறுவோம்.

(1) இந்த மாதத்தில் எல்லா மாதங்களையும்விட அதிகமான வெடி விமானங்கள் ஜெர்மனியையும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவையும் தாக்கின.

(2) 33,000 டன்கள் மொத்த எடைமானமுள்ள வெடிகுண்டுகள் வீசப்பட்டன.

(3) சென்ற இரண்டு வருடங்களில் 1943-ம் வருஷம் பிப்ரவரி மாதத்தைத் தவிர, இப்பொழுது நேசதேச விமான நஷ்டத்தின் சதவிகிதம் குறைவானது.

(4) தொழிற்சாலை பிரதேசங்கள் 30 நாட்களில் 28 நாட்கள் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டன.

(5) முக்கியமாக பிரான்ஸிலும், பெல்ஜியத்திலுமுள்ள இருப்புப்பாதை மார்க்கங்கள் பலமாகத் தாக்கப்பட்டன.

(6) மத்தியதரைக்கடலிலுள்ள பிரிடிஷ் விமானப்படை 10,000 தடவை பாய்ந்து சென்று 2,000 டன்கள் எடைமானமுள்ள வெடிகுண்டுகளைப் போட்டிருக்கிறது.

# ஜெர்மனியில் தனித்து நிற்கும் மனப்பான்மை வலுவடைகிறது.

## *ஐரோப்பிய நிலைமையைப்பற்றி நடுநிலைமைப் பத்திரிகைகளின் அபிப்பிராயங்கள்.*

*(நியூஸ் குரானிகிள் பத்திரிகையில் மிஸ்டர் வெர்னன் பார்ட்லட்.)*

*ஜெர்மனிக்கு ஆதீனமான நாடுகளுக்கு நேசதேசத்தார்கள் அனுப்பிய எச்சரிக்கை அவயத்தமாகவும் காம்பீர்யமற்றதாகவும் இருக்கிறதென்று இந்த வார முடிவில் ஜெர்மனியிலிருக்கும் ஒலிபரப்புகளும், ஜெர்மன் கண்காணிப்புக்குட்பட்ட ஒலிபரப்புகளும் ஆக்ரோஷமாகக் கோஷித்தன. "ஆபாசமாக தற்கொலை செய்துகொள்ளவேண்டுமென்று அழைப்பு அனுப்பப்படுகிறது" என்று ஒலிபரப்பில் சொல்லப்பட்டது.*

*அந்த எச்சரிக்கை நாஸிகள் மனவுறுதியைக் கலக்கத்தான் விடுவிக்கப்பட்டதென்று நாஸிகள் கண்டனம் செய்வதற்கு அந்த அறிக்கையில் ஞாயமிருந்திராவிடில் இவ்விதமான கோபாவேசம் ஜெர்மானியர்களுக்கு ஏற்பட்டிருக்காது. இந்தக் கோபத்தைப் பார்க்கும் அளவில் நேசதேசத்தாரின் படையெடுப்பை ஜெர்மனி தன்னந்தனியே நின்றுதான் சமாளிக்க வேண்டுமென்ற தோற்றம் ஜெர்மனியில் பலமடைந்து வருகிறதென்பது வெளியாகுகிறது.*

*நடுநிலைமை வகிக்கும் நாடுகளிலுள்ள பத்திரிகைகள் இந்த நிலைமையைப்பற்றி எழுதியிருக்கின்றன. அவைகள் டாக்டர் கோயபல்ஸின் கவனத்துக்கு வந்திருக்கக்கூடும். துருக்கி பத்திரிகையான வாடானில் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது. "ஜெர்மனியை பின்பற்றும் நாடுகள் அதன் உண்மையான நண்பர்களல்ல. அவைகள் ஜெர்மனியின் ஆக்கிரமணத்துக்குட்பட்டு ஜீவித்துவருகின்றன."*

*டான் என்ற மற்றொரு துருக்கிப் பத்திரிகை பின்வருமாறு சொல்லுகிறது. "ஜெர்மனி நடுநிலைமை வகிக்கும் நாடுகளைத் தாக்க முடியாது. இந்தத் தாக்குதலைப்பற்றி ஒருவரும் கவலைப்படவில்லை."*

### *நாஸிகளின் அமுல் குலைந்து வருகிறது.*

*டானிஸ் என்ற மற்றொரு இஸ்தான்பூல் பத்திரிகையில் நடுநிலைமை நாடுகளிலிருந்து ஜெர்மனிக்கு அனுப்பப்படும ஏற்றுமதிப் பொருள்கள் குறைந்துவிட்டதைப்பற்றி குறிப்பிடும் பொழுது பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது. "இந்த நடவடிக்கை ராணுவ, வியாபார முறையில் மட்டுமில்லாமல் ராஜீய விஷயங்களிலும் மாறுதலைக் குறிப்பிடுகிறதென்று நாஸித் தலைவர்கள் அறிவார்கள். நாஸிகளின் ஆக்ஷியிருந்த ஜெர்மனி முன்காலத்தில் சக்திவாய்ந்ததாகவும் பயங்கரமாகவுமிருந்தது. இன்று அந்த ஆக்ஷி மங்கிவிட்டது. ஒருவரும் அதைக்கண்டு பீதியடையவில்லை. இந்த சந்தர்ப்பத்தில் ஜெர்மனியின் அயல்நாட்டு ஸ்தானீகர்கள் ஹிட்லருக்கு ஒரே ஒரு ஆலோசனையைத்தான் சொல்லக்கூடும். அதாவது நிபந்தனையற்ற சரணாகதி."*

*ஸ்விட்ஸர்லந்தில் வெளிவரும் சில பத்திரிகைகளில் இந்த மனவுறுதிக் குலைக்கும் நடவடிக்கையில் பிரிடிஷார்கள் தங்களுடைய ஜனங்களின் உறுதியான மனோதிடத்தை நம்பியிருக்கலாமென்று சொல்லும்பொழுது மற்ற பத்திரிகைகள் ஜெர்மானியர்களின் மனோவுறுதியின் திடத்தை ஆக்ஷேபித்து வருகின்றன. பாஸிலில் வெளியாகும் ஆர்பீடர் ஸீடங் பத்திரிகையில் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது. "பெர்லின் பிரசாரகர்கள் தினசரி சொல்லுவதுபோல படையெடுப்பை சமாளித்து நிற்க ஜெர்மனியின் ஆயுதங்கள் 100 சதவிகிதம் திறமையுள்ளதாகவிருக்கும் பக்ஷத்தில், ஜெர்மன் யுத்தக் கைதிகளை ஜெனரல் மாண்ட் காமரி அநியாயமாகக் கொலை செய்தான் என்ற புழுகை விளம்பரம் செய்வதின்மூலம் ரோமல் ஜெர்மன் துருப்புகளின் மனோவுறுதியை பலப்படுத்தவேண்டிய அவசியமில்லை."*

### *பலமான ஜெர்மன் தோல்வி.*

*ஹாலந்தையும், பெல்ஜியத்தையும் ஜெர்மனி படையெடுத்த வருஷ விழா தினத்தைப்பற்றி அநேக கட்டுரைகள் வெளிவந்திருக்கின்றன. டிரிபூன், டீ ஜெனிவா என்னும் பத்திரிகையில் "இது ராஜீய முறையிலும், ஜனசமூகத்தின் கண்ணும் ஒரு பலமான ஜெர்மன் தோல்வி" என்று சொல்லப்பட்டிருக்கிறது.*

*நேசதேசத்தாரை ஆதரிக்காத கெஜட் டி லாஸென் என்னும் பத்திரிகையில் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது. "ஜெர்மனியின் சிறந்த படைகளும்கூட யூகோஸ்லாவியாவிலுள்ள டிடொமிலைகலோவிச்சின் சேனைகளை அழிக்கமுடியவில்லை. இந்தத் தலைவர்களைப் போல போலந்திலும், கிரீஸிலும், எந்த நேரத்திலும் விலக்கிக்கொள்ளத் தயாராகயிருக்கும்*



*பல்கேரியாவிலும் தலைவர்களிருக்கிறார்கள். நான்கு வருஷங்களுக்குப்பின் காலத்தை எதிர்பார்த்து மௌனமாகவிருந்துவந்த துன்புற்ற தேசங்களுக்கு க்ஷேமகாலம் ஏற்படும் தருணம் கிட்டிவிட்டது."*

*இதே அபிப்பிராயத்தை ஸ்விடிஷ் பத்திரிகைகளும் வெளியிடுகின்றன. ஜெர்மனியில் இப்பொழுது 15 மிலியன் அயல்நாட்டு வேலைக்காரர்களும் யுத்தக் கைதிகளுமிருக்கிறார்களென்றும் அவர்களெல்லோரும் தங்களுடைய எஜமான்களை வெறுக்கிறார்களென்றும், ஜெர்மனிக்கு தோல்வி ஏற்படும்பொழுது அவர்களுக்கு விடுதலை காலமென்று அவர்கள் நினைக்கிறார்கள் என்றும் கொட்பார்க்ஸ் போஸ்டன் என்னும் பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கிறது. அவர்கள் 50,000 பேர்கள் சிருஷ்டனை செய்யப்பட்ட அடையாளச் சீட்டுகளுடன் ஜெர்மனியில் அங்குமிங்கும் திரிந்துகொண்டிருக்கிறார்கள். சில பிரதேசங்களில் ஆடவ வேலைக்காரர்கள் கிடையாது. "ஜெர்மனியில் ஏராளமான ஐந்தாம் படையினர் இருக்கிறார்களென்று" ஜெர்மனியே ஒப்புக்கொள்ளுகிறது என்று அப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஐரோப்பாவில் நடுநிலைமை வகிக்கும் நாடுகளில் ஸ்பெயின் மட்டும்தான் ஜெர்மனி வெற்றி பெறும் என்ற அபிப்பிராயத்தை வெளியிடுகிறது.*

---

# ஜெர்மன் கடற்படையில் மனித பலக்குறைவு.

## *அயல்நாட்டு மாலுமிகள் பெர்லினை நம்பிக்கை மோசம் செய்கிறார்கள்.*

**(A. J. மாக்வின்னி).**

*ஜெர்மனியின் S. A. படையைச் சேர்ந்தவர்கள் ஜெர்மன் கடற்படையிலும் சாமான் கப்பல்களிலும் வேலை செய்ய அமர்த்தப்படுகிறார்கள். ஸ்டெட்டினில் ஒரு ரகசிய கடற்படை மகாநாடு கூட்டப்பட்டது. அந்த மகாநாட்டிற்கு விஜயம் செய்த ஜெர்மன் கடற்படை அதிகாரியிடம் ஜெர்மன் S. A. படையின் உயர்தர அதிகாரியான வில்கெல்ம் ஷெப்மான், ஜெர்மன் கடற்படையினுடையவும், சாமான் கப்பற்படையினுடையவும் மனித பல பிரச்னையை அவருடைய சங்கம் தீர்த்துவிடுமென்று உறுதி கூறினார்.*

*ஷெப்மான் தரைப்படையைச் சேர்ந்தவர். அவர் அப்படைகளின் தலைவரும் கூட. அவர் பிரிடனின் கடலாதிக்கத்தைத் தூஷித்து உருக்கமாகப் பேசினார். S. A. படையின் தலைவர் தூஷித்துவரும் கடற்படை வலிமையால் திட்டங்கள் முறியடிக்கப்பட்ட கடற்தளபதிகளுக்கு இந்தப் பேச்சுப் பிடிக்கவில்லை. முடிவுரையில் வில்ஹெல்ம் ஷெப்மான் பின்வருமாறு சொன்னான். "ஜெர்மன் கடற்படைக்கும், சாமான் கப்பற்படைக்கும் வேலைக்காரர்களை அனுப்பும் வேலையை S. A. முக்கியமாக கவனித்துவரும்."*

### *நீர்மூழ்கிகளின் மாலுமிகளுக்கு நீண்டகால பயிற்சி தேவை.*

*சென்ற வருஷத்தில் மூழ்கடிக்கப்பட்ட அநேக யூ படகுகளிலிருந்த மாலுமிகளுக்கு நஷ்ட ஈடு செய்யத்தான் S. A. படையைச் சேர்ந்தவர்கள் தேவைப்படுமென்று முதலெடுப்பில் தோன்றக்கூடும். ஆகிலும் நீர்மூழ்கியை ஓட்டிச்செல்லுமுன் மாலுமிகளுக்கு விசேஷப் பயிற்சி அளிக்கப்படவேண்டும். கடற்படை வேலையில் நீர்மூழ்கிகளை ஓட்டும் வேலைக்கு அதிகமான புத்திசக்தி வேண்டும்.*

*ஜெர்மன் கடற்படை வேலைக்கு அனுப்பப்படும் S. A. சேவைப்படைகள் முதலில் ஹிட்லரின் சாதாரண கப்பல்களில் கப்பலோட்டுவதில பயிற்சி பெற அமர்த்தப்படுவார்கள். மற்றவர்கள் கடற்கரையோரமாகச் சாமான்களைக் கொண்டுவரும் சாமான் கப்பல்களில் வேலைக்கு அமர்த்தப்படுவார்கள். இந்த நடவடிக்கைகளில் இரண்டு லாபங்களிருக்கின்றன. முதலாவதாக, பொதுவாக கப்பலோட்டுவதில் அனுபவம் வாய்ந்தவர்கள் யூ படகுகளில் பயிற்சி பெறுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அவர்களுக்குப் பர்த்தியாக S. A. படைகள் அமர்த்தப்படுவார்கள். இரண்டாவதாக அனுப்பப்படும் S. A. படைகள் கப்பலிலுள்ளவர்களின் மனவுறுதியை நிலை நாட்டவேண்டுமென்று கட்டளையிடப்பட்டிருக்கிறார்கள்.*

### *கடலில் செல்லாத கப்பல்கள்.*

*கப்பற்கட்டும் தளத்தில்தான் 1918-ம் வருஷத்தில் கலகத்துக்கு முதல் அறிகுறிகள் தோன்றினவென்று பெர்லினிலுள்ளவர்கள் மறந்துவிடமுடியாது. சரித்திரப் போக்குத் திரும்பித் திரும்பி ஒரே விதமாகத்தான் ஏற்படுமென்று லண்டனிலுள்ளவர்களும், வாஷிங்டனிலுள்ளவர்களும் நம்பாதபோதிலும் ஜெர்மனியின் கடற்படை அதிகாரிகள் இது மறுபடியும் நேரிடாதென்று முற்றிலும் நம்பியிருக்கவில்லை. போருக்குத் துணிந்து செல்லாத கப்பல்களிலுள்ள மாலுமிகள் யுத்த தளவாட தொழிற்சாலைகளிலும், ராணுவ லக்ஷியங்களி*

அள்ளவர்களும் வெடிவிமானங்களின் குண்டுவீச்சுக்குட்பட்டு ஜீவித்துவருகிறார்களென்பதைக் கேட்டு கலக்கம்தான் அடையவேண்டும். ஆகிலும் அவர்களும் அவர்களுடைய சிப்பந்திகளும் கடலுக்குச் செல்லாத அநேக பெரிய கப்பல்களில் வருஷங்கள் கணக்காக வசித்து வர வேண்டிய துர்தசையை அவர்கள் அனுபவிக்கவேண்டும். புதிதாக அனுப்பப்படுகிறவர்கள் அவர்களுக்கு உத்சாகம் ஊட்டுவார்களென்று நம்பப்படுகிறது. மனவுறுதி குலையாமலிருக் கும் மாலுமிகளும் போர்புரியத் தயாராகயிருக்கும் வேலைக்காரர்களும் யூ படகுகளில் சென்று போர்புரிய சந்தர்ப்பம் அளிக்கப்படுவார்கள்.

சென்ற பன்னிரண்டு மாதங்களில் ஆறு மாதங்களிலேனும் மூழ்கடிக்கப்பட்ட நேசதேச சாமான் கப்பல்களுக்கு அதிகமான ஜெர்மன் யூ படகுகள் மூழ்கடிக்கப்பட் டிருக்கின்றன. இந்தத் தற்கொலை நடவடிக்கையிலிருந்து அழிக்கப்படும் ஒவ்வொரு யூ பட கிலும் 50 பயிற்சி பெற்ற வேலைக்காரர்கள் நாசம் செய்யப்படுகிறார்கள். சிலர் மரணமடைந்து விடுகிறார்கள். சிலர் கைதி செய்யப்படுகிறார்கள்.

எப்படிப்பட்டேனும் அவர்களுக்கு பர்த்தியாக ஆட்களை அனுப்பவேண்டும். நீர்மூழ்கி வேலைக்காரர்களின் மூலபலம் மிகவும் பலஹீனம் அடைந்துவிட்டது. யூ படகுகளை ஏராள மாக மூழ்கடிக்க எதிரிகள் மார்க்கங்களைக் கண்டுபிடித்துவிடுவார்களென்று கடற் தளபதி டோனிட்ஸ் ஒருபொழுதும் நம்பியிருக்கவில்லை. அவனிடமிருக்கும் மூலபலம் போதுமான தென்று 1939-ம் வருஷத்தில் அவன் எண்ணம்கொண்டிருந்தான்.

## யூ படகு நஷ்டம் அதிகரிப்பு.

இப்பொழுது மூலபலம் போதுமானதல்லவென்று ஏற்பட்டுவிட்டது. அவைகளை ஈடுசெய்ய அவன் அங்குமிங்கும் நோக்குகிறான். துறைமுகங்களில் தாங்கும் கப்பல் களிலுள்ள பயிற்சிபெறாத, கடலநுபவமற்றவர்கள்தான் இப்பொழுது கிடைக்கக்கூடியவர்கள். அவர்களுக்கு அவன் அவசர அவசரமாகப் பயிற்சி அளித்து, அவர்களை சென்ற சில மாதங் களில் நஷ்டமடைந்தவைகளுக்கு பர்த்தியாக அனுப்பப்படும் யூ படகுகளை ஓட்ட அமர்த்தி வருகிறான்.

ஆகிலும் டோனிட்ஸூம் யூ படகு வேலைக்காரர்களும், யூ படகுகளைக்கட்ட ஏற்படும் கால தாமதத்தில் கால் மடங்கு காலம்தான் 1944-ம் வருஷத்தில் யூ படகுகள் நிலைபெற்றி யிருக்கக்கூடுமென்று அறிவார்கள். ஆகையால் உலகத்திலுள்ள மற்ற போர்ப் படையிலுள்ள வர்களின் வாழ்க்கைக்கு ஒப்பிட்டால் தற்போதிய ஜெர்மன் யூ படகிலுள்ள வேலைக்காரனின் வாழ்நாள் குறைவாகத்தானிருக்கும்.

ஜெர்மனியின் கடற்கரையை ஒட்டிச்செல்லும் சாமான் கப்பல்களின் நஷ்டமும் அதிகரித்து வருகிறது. நார்வேயின் வடக்கு பாகத்திலிருந்து மத்தியதரைக்கடல் வரையிலுள்ள சமுத்திரத்தில் திருட்டுத்தனமாகச்செல்லும் ஜெர்மன் சாமான் கப்பல்களை பிரிட்டிஷ் கப்பல் களும், நீர்மூழ்கிகளும், விமானப்படையும் தாக்கி மூழ்கடித்து வருகின்றன.

## அயல்நாட்டு மாலுமிகள் உத்சாகத்துடனில்லை.

கப்பல்கள் நஷ்டமென்றால் மாலுமிகளுக்கு அதிகத் தேவை ஏற்படும். அயல்நாட்டு கடற்படை வேலைக்காரர்கள் ஜெர்மனியை ஏமாற்றிவிட்டார்கள். ஜெர்மன் கப்பல்களில் வேலை செய்கிறவர்களுக்கு உயர்வான சம்பளம் வழங்கப்படும் என்று ஆசை வார்த்தைகளை வெளியிட்ட போதிலும் எதிர்பார்த்தபடி வேலைக்காரர்கள் முன்வரவில்லை. ஆகையால் சாமான் கப்பல்களில் வேலைக்கு அனுப்பப்படும் S. A. படையினர் மனித பலக்குறைவை நிவர்த்திப் பதுடன் மாலுமிகளின் மன உறுதியையும் பலப்படுத்துவார்களென்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

நார்வே கடற்கரைக்கு அருகில் வடக்கு சமுத்திரங்களிலுள்ள ஜெர்மன் கப்பல்களிலுள்ள வேலைக்காரர்களின் மனவுறுதியை பலப்படுத்துவதில் விசேஷ கவனம் செலுத்தப் படுமென்று நிச்சயமாய்த் தோன்றுகிறது. இந்த வருஷத்தில் அவைகளை இரவு காப்பாற்ற முடியாது. எங்கு பார்த்தாலும் ஒரே பிரகாசமாகயிருக்கிறது.

பிரிட்டிஷ் நீர்மூழ்கிகளும், புதிய பிரிட்டிஷ் பாரக்கூடா வெடிவிமானங்களும் விமானந் தாங்கிக் கப்பல்களும் கப்பல்களைத்தேடி ரோந்து செய்துவருகின்றன. பிரிட்டிஷ் ஸாங்க வெடிகள் புதிய அபாயத்தை உண்டுபண்ணுகின்றனவென்று ஜெர்மனி இப்பொழுது ஒப்புக் கொள்ளுகிறது. ஆகிலும் அந்த அபாயம் பொருந்திய வடக்கு சமுத்திரங்கள் வழியாக கிழக்குப் போர்முனையில் ஜெர்மனியைத் தாக்க உபயோகிக்கக்கூடிய முக்கியமான யுத்த தளவாடங்களை கப்பல்கள்மூலம் ருஷ்யாவுக்கு பிரிட்டிஷ் கடற்படை கொண்டுபோகிறது. அவைகளில் 98 சதவிகிதம் சாமான்கள் பத்திரமாக ருஷ்யாவுக்குச் சென்றுவிடுகின்றன.



# ஜெர்மனியின் உள்நாட்டு நிலைமை.

(டெயிலி டெலகிராப் பத்திரிகை).

ஹிட்லரின் ஐரோப்பிய அரணை நேச தேசத்தார்கள் தாக்கப்போகும் சமயத்தில் அநேக வதந்திகளுக்கு எதிரிடையாக ஜெர்மனியிலுள்ள நாஸிக் கக்ஷிக்காரர்கள் கவலைகொண்டு ஒன்றுபட்டிருக்கிறார்கள். ஆகிலும் கடைசி வரையில் அவர்கள் போராடுவதென்று ஊக்கத் துடனிருந்துவருகிறார்கள். இந்த பீதியின் காரணமாக கக்ஷித்தலைவர்கள் ஜெர்மன் பொது மக்களை அடக்கியாளுவதற்கும் ஊக்கம் அடைந்திருக்கிறார்கள்.

இதற்குக் காரணம் யாதெனில், யுத்தத்தில் சளைத்துப் போய்விட்டபோதிலும் ஜெர்மானி யார்கள் சரணடைவதைவிட இறுதிவரையில் போராடுவதென்று தீர்மானமாக முடிவு செய்திருக்கிறார்கள். சரணாகதி செய்தால் அவர்களை த்வையன்னியில் நிர்மூலமாக்கிவிடுவார் களென்ற எண்ணம் அவர்களுக்குண்டாகியிருக்கிறது.

சென்ற ஐந்து வருடங்களாக ஜெர்மனியில் வசித்துவந்தவர்கள் ஜெர்மனியின் உள்நாட்டு நிலைமையைப்பற்றி பின்வருமாறு சொல்லுகிறார்கள். முட்டாள்தனத்தினாலும், பயத்தினாலும் இன்றும் ஜனங்கள் நாஸிக்கக்ஷியிடம் அதிக விசுவாசத்துடனிருந்துவருகிறார்கள். நிர்வாகத் தில் ஹிட்லரின் பிடிப்புத் தளர்ந்துவிட்டதென்று சொல்லுவதெல்லாம் அபத்தமான பேச் சாகும். ஒரு வருஷத்துக்குமுன் வால்கா நதிக்கரையில் அவனுக்கு ஏற்பட்ட தோல்விக்குப் பின் அவன் செல்வாக்கையும் புகழையும் இழந்துவிட்டானென்பது வாஸ்தவம். ஜெர்மானி யார்கள் இப்பொழுது அவனை தெய்வ சக்தியுள்ளவனல்லவென்றும், சாதாரண மனிதனென் றும் எண்ணுகிறார்கள்.

ஸ்டாலின்கிராட் வீழ்ச்சிக்கு முன்னிருந்ததைவிட இப்பொழுது ஹிட்லர் அதிக அதிகாரம் செலுத்தி வருகிறான். அவன்தான் ஜெர்மனியை ஒருமைப்படுத்திவைத்துக் கொண்டிருக்கிறான். நாஸிக்கக்ஷியில் கலகம் செய்யும் கோஷ்டிகள் நாஸிக்கக்ஷியின் ஒற்று மையை நிலைநாட்டக்கூடியவன் ஹிட்லர் ஒருவன்தானென்று கண்டுபிடித்துவிட்டார்கள். வதந்திகள் உலாவுகிறபடி ஹிட்லர் அவனுடைய ராணுவ அமுலை தன்னுடைய ஜெனரல் களிடம் ஒப்படைக்கவில்லை. அவன் தலைகுனிந்து நிற்கிறான். அவன் முகம் வெளுத்து விட்டது. நரை வந்துவிட்டது. ஆகிலும் அவன் ராணுவத் தலைமை அதிகாரியென்ற பதவியை உறுதியாக வகித்துவருகிறான். போர்முனைகளிலுள்ள சேனாதிபதிகளை அடிக்கடி மாற்றுவதிலிருந்து அவனும் அவனுடைய பரிவாரமான பீல்ட் மார்ஷல் கீடலும் கிழக்குப் போர்முனையிலுள்ள அவர்களுடைய தலைவர்களிடமிருந்து சாத்தியமற்ற நடவடிக்கைகளை எதிர்பார்க்கிறார்களென்று தோன்றுகிறது. ஆகிலும் ஹிட்லரின் ஜெனரல்கள் அவனை எதிர்த்து நிற்கிறார்களென்பதில் கொஞ்சமேனும் உண்மையில்லை. "ஜெர்மனியில் ராணுவம் சிதைவு பட்டாலொழிய அங்கு புரட்சி ஏற்படாது" என்று மூன்று நாளைக்குமுன் ஜெர்மனி யிலிருந்து வந்த ஒருவர் என்னிடம் சொன்னார்.

தற்போதிய நாஸிக் கக்ஷியானது சீட்டுகளால் கட்டப்பட்ட தலைகனமுள்ள கட்டடம் போன்றது. அதை ஹிட்லரும் யுத்த அவசியமும்தான் ஒன்றுபடுத்தி ரக்ஷித்துவருகின்றன. இவற்றில் ஒன்று வீழ்ச்சிபெற்றால் அந்த கட்டடம் பூராவும் அழிந்துவிடும். திடீரென்று ஜெர்மன் சேனை தோற்றுவிட்டால் ஜெர்மன் பிரஜைகளின் பிரச்னை ஒரு நொடிப்பொழுதில் தீர்ந்துவிடும். ஆகிலும் மேற்குப்பக்கத்திய போரில் ஜெர்மனி கொஞ்சம் கொஞ்சமாக யுத்தத்தில் அழிவு பெற்றுவருமானால் நாஸிகளின் அமைப்பு திட்டம் அகாலத்திலேயே மிகவும் குழப்பமான நிலைமையை அடைந்துவிடும்.

---

# சஞ்சலமுள்ள கூட்டாளிகள்.

## ஜப்பானுக்கும், ஜெர்மனிக்குமுள்ள சம்பந்தங்களின் ஆராய்ச்சி.

(E. ஜூகாவ்).

இந்தக் கட்டுரை மாஸ்கோவில் 1944-ம் ஆண்டு ஜனவரி 1-ம் தேதி வெளிவந்த "யுத்தமும், தொழிலாளரும்" என்ற பத்திரிகையில் முதல் முதலாக வெளிவந்தது. இதற்கு ஆங்கில மொழி பெயர்ப்பு மேமாதத்தில் டில்லியில் வெளியான "ருஷ்ய அறிக்கை" என்னும் பிர சுரத்தில் வெளியிடப்பட்டது. இங்கு அதன் சுருக்கத்தை வெளியிடுகிறோம்.

ஜெர்மனிக்கும், அதன் ஐரோப்பிய பரிவார நாடுகளுக்கும் உள்ள சம்பந்தங்களைவிட அதற்கும் ஜப்பானுக்குமுள்ள சம்பந்தங்களில் சில விசேஷ குணபாகங்கள் காணப்படுகின் றன. ஜப்பான் ஒரு பொழுதும் ஜெர்மனிக்கு ஆதீனமாகயிருக்கவில்லை. ஜப்பானும் அக்கிரமப்

போரை நடத்த திட்டம் போட்டதினால்தான் அது ஹிட்லரின் சாம்ராஜ்யக்கொள்கையுடன் உடன்படிக்கை செய்து கொண்டது. இந்த உடன்படிக்கையைச் செய்துகொள்ளுவதில் ஜப்பானிய பிரமுகர்களுக்கு ஜெர்மன் நடவடிக்கைகளை கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதாகவும், ஜெர்மனியின் திட்டமான எண்ணங்களுக்கு உடந்தையாகயிருப்பதாகவும், தங்களுடைய அக்கரைகளுக்குப் பாதகம் ஏற்படக்கூடிய முறையில் நடந்து கொள்ளுவதாகவும் உத்தேசமில்லை.

பிரிட்டனையும், அமெரிக்காவையும் எதிர்த்து செய்யப்படும் போரில் ஜப்பானின் சுறுசுறுப்பான நடவடிக்கையைப் பற்றியும் ராஜீய வியவகாரங்களில் இடங்கொடுக்காத ஜப்பானின் மனோநிலையைப்பற்றியும் ஜெர்மானியர்கள் திருப்தியடையவில்லை என்பது நிச்சயம். ஜெர்மனிக்கு சாதகம் அளிக்கக்கூடிய முறையில் அமெரிக்காவினுடையவும், பிரிட்டனுடையவும் ராணுவ, பொருளாதார சக்தியை ஜப்பான் பலமாக அழித்துவரவில்லை. பஸிபிக்கின் தென்கிழக்கு பிராந்தியத்தில் மட்டும்தான் ஜப்பான் மிதமான விரிவான நடவடிக்கையை நடத்திவருகிறது. இதுதான் அது யுத்தத்தில் எடுத்துக்கொண்டிருக்கும் பங்கு. ஜப்பானுக்கு தனிப்பட்ட எண்ணங்கள் உண்டு. தென் கிழக்கு ஆசியா வியவகாரங்களை ஹிட்லரின் யுத்த திட்டங்களுடன் ஒருமைப்படுத்தி நடத்த ஜப்பான் சம்மதப்படவில்லை.

ஜெர்மனிக்கும், ஜப்பானுக்குமுள்ள பரஸ்பர சம்பந்தங்களை விமர்சனம் செய்யும் தருவாயில் 1943-ம் வருஷம் ஜுலை மாதத்தில் யெனி ஆசிர் என்ற துருக்கிய பத்திரிகை பின்வருமாறு வெளியிட்டது. "இருநாடுகளுக்கும் வெற்றிக்குமேல் வெற்றி கிடைத்து வந்த பொழுதும், ஜெர்மனியும், ஜப்பானும் யுத்த தந்திர முறையில் ஒற்றுமையைப் பெறவில்லை." அவர்கள் இதாலிய நண்பனை இழந்தபின் ஹிட்லரும், அவனுடைய கோஷ்டியாரும், பெர்லின், டோகியோ நட்பு நன்றாய் வேலைசெய்து வருகிறதென்றும் எல்லா வியவகாரங்களும் இனிது நடைபெறுகிறதென்றும் திட்டப்படி நடைபெறுகிறதென்றும் வெளிப்படுத்த முயன்று வருகிறார்கள்.

### ஜப்பானின் அபிப்பிராயம்.

ஆகிலும் பொதுவான ராணுவ நிலைமையைப்பற்றி ஜெர்மனிக்கும், ஜப்பானுக்குமுள்ள அபிப்பிராய பேதங்களை மறைத்துச்சொல்லமுடியாது. 1943-ம் வருஷத்தில் ஹிட்லரின் வேனிர் காலத்தாக்குதல் முறியடிக்கப்பட்டதிலிருந்து ருஷ்யப் போர்முனையில் ஏற்பட்ட ராணுவ நிலைமையைப்பற்றி ஜப்பானிய பத்திரிகைகளில் மிகவும் ஜாக்ரதையுடன் வியாக்யானம் எழுதியிருந்தன. கியாதிபெற்ற ஆஷாகி என்னும் ஜப்பானிய பத்திரிகையில் ஜுலை 29-ம் தேதியன்று பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

"இவ்வருஷ வேனிர் காலப்போரில் ருஷ்யப்படைகள் முன்னேறித்தாக்க ஆரம்பித்துவிட்டனவென்பது முக்கியமான விஷயம். ருஷ்ய ஜெர்மன் போரில் சென்ற இரண்டு வருஷ நடவடிக்கைகளைக் கவனித்தால் வேனிர் காலத்தில் ஜெர்மனி முன்னேறித் தாக்குமென்றும் மாரி காலத்தில் ருஷ்யர்கள் பதில் தாக்குதல் செய்வார்களென்றும் ஏற்படுகிறது. ஆகிலும், இந்த வேனிர் காலத்தில் ருஷ்யர்கள் தற்காப்பு நடவடிக்கையிலிருந்து முன்னேறித் தாக்கும் நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்கள். இதிலிருந்து ருஷ்யாவின் போர் புரியும் சக்தியை அலக்ஷியம் செய்யக்கூடாதென்று ஏற்படுகிறது. ருஷ்யா ஜெர்மன் யுத்தம் புது மாதிரியாகத் துவங்கிவிட்டது."

கியாதிபெற்ற ஜப்பானியப் பத்திரிகையில் இவ்விதமான அநுகூலமயான ஒப்புதல் ஏற்பட்டிருப்பதிலிருந்து ஜெர்மனியின் ராணுவ சக்தியைப்பற்றி மிதமான அபிப்பிராயம் ஜப்பானிலும் காணப்படுகிறதென்று வெளியாகுகிறது. இதுபோன்ற அநேக அறிக்கைகளை ஜப்பானிலுள்ள இதர பத்திரிகைகளும் வெளியிட்டன.

ஜெர்மன் ராணுவ பலத்தை தீரம் பொருந்திய செம்படை பலமாகத் தாக்கிவருவதிலிருந்து ஜெர்மனிக்கும், ஜெர்மன் அமுலுக்குட்பட்ட ஐரோப்பிய நாடுகளுக்கும் அழிவுகாலம் வந்து விட்டது. ஜெர்மனியின் ராணுவ சக்தியைப்பற்றி ஜப்பான் கொண்டிருந்த மோகம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்துவருகிறது. அமெரிக்காவுடனும், பிரிட்டனுடனும் ஜப்பான் நடத்தும் போரில் ஜெர்மனி அதற்கு அபாரமான உதவி செய்யுமென்று ஜப்பான் எதிர்பார்த்திருக்கிறது.

ஜப்பானைப்போல் ஹிட்லர் கோஷ்டியாரும் அவர்களுடைய நண்பர்களிடமிருந்து ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள். முக்கியமாக ருஷ்யாவைத் தாக்கும் ஹிட்லரின் ராணுவத் துணிவில் கலந்து கொள்ளாமல் ஜப்பான் அதனுடைய ராஜீய நாணயமின்மையை வெளிப்படுத்திற்று.

### வேறுபட்ட லக்ஷியங்கள்.

ஜப்பானுக்கும், ஜெர்மனிக்குமுள்ள சம்பந்தங்கள் ஜெர்மன் ராணுவத்தின் தோல்வியினாலும் ஹிட்லரின் பெருமையின் அழிவினாலும் நன்றாய் பாதிக்கப்படும். மேலும் ஹிட்லரின் ராணுவ இழப்புகள் ஜப்பானிய-ஜெர்மன் சம்பந்தங்களில் வேறுபட்ட அதிர்ச்சிகளை உண்டுபண்ணி வருகின்றனவென்று ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். ஒரு புறத்தில் இருநாடுகளும் மற்ற நாட்டினிடம் உள்ள நம்பிக்கையை இழந்து வருகிறார்கள். அவர்களின் இறுதி லக்ஷியங்களின் வேறுபாடுகள் நாளடைவில் தெளிவுபடுகின்றன. ஆகிலும் ஜெர்மனிக்கும், ஜப்பானுக்குமுள்ள ராணுவ நட்பு பலமாகத்தானிருக்கிறது. ஏனெனில் ஜெர்மன் சாம்ராஜ்யம் திடீரென்று முறியடிக்கப்படுவதிலிருந்து என்ன விளைவுகள் ஏற்படும் என்பதைக் கண்டு ஜப்பான் பீதியடைந்திருக்கிறது. மேலும் ஜெர்மனி அதற்கும் ஜப்பானுக்குமுள்ள ராணுவ உடன்படிக்கையை பலப்படுத்தவேண்டுமென்று அக்கரை கொண்டிருக்கிறது.



யுத்தத்தின் தற்போதைய நிலைமையில் ராணுவ நடவடிக்கைகளை உத்தம பக்ஷமாக நீடித்து நடத்தவேண்டுமென்றும் யுத்த முடிவை ஒத்திவைக்கவேண்டுமென்றும் ஜெர்மனியும், ஜப்பானும் பிரியப்படுகின்றன. யுத்தம் திடீரென்று முடிந்து விட்டால் இருநாடுகளுக்கும் பலமான ஆபத்து ஏற்படுமென்று அவைகள் அறிந்து விட்டன.

யுத்தத்தில் சில கட்டங்களில் ஜெர்மனியும், ஜப்பானும் வெற்றிகளைப்பெற்றன. இந்த வெற்றிகளுக்கு தாத்காலிகமான சாதகமான சில சௌகரியங்கள் காரணமாகயிருந்தன. துணிவுகரமான போரைத் துவக்கியபொழுது எதிரிகள் ராணுவ முறையில் தயாராகயில்லையென்பதையும் திடீர் தாக்குதல் முறையையும் அவர்களின் உயர்வையும் தோற்கமுடியாத சக்தியையும் பற்றிய பொய் பிரசாரத்தையும் ஜெர்மனியும், ஜப்பானும் நம்பியிருந்தது.

ருஷ்யாவின் விசாலமான போர்முனைகளில் ஜெர்மனி அந்த சௌகரியங்களை மீள முடியாமல் இழந்துவிட்டது. அதேவிதமாக ஜப்பானுக்குக் கிடைத்த ஆரம்ப லாபங்களும் பழங்கதையாகி விட்டனவென்று புலப்படுகிறது. ஜப்பான் முன்னேறித்தாக்கும் சக்தியை இழந்து விட்டது. கீழ்த்திசையில் விளங்கிவரும் ஒரு பழமொழியை இப்பொழுது ஜப்பான் ஞாபகப்படுத்திக்கொள்ளட்டும். "உடும்பு வேண்டாம். கையை மீட்டுக்கொண்டால் போதும்."

எந்நிலைமையிலும், ஜெர்மனி இனிமேல் ஜப்பானுக்கு உதவி செய்யுமென்று ஜப்பான் எதிர் பார்ப்பதற்கில்லை. ஜெர்மானியர்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளுவதில்தான் இப்பொழுது கவலைப்படுகிறார்கள். ஜெர்மனி இப்பொழுது மகத்தான அழிவுக்குட்படும் தருவாயிலிருக்கிறது.

---

## உலக சமாதான பரிபாலனம்.

### சாம்ராஜ்ய நாடுகளின் அலுவல்கள்.

யுத்த காலத்தில் அக்கிரமாகப் போர் புரியும் தேசங்களினால் அபகரிக்கப்பட்ட சுதந்திரத்தை மீட்பதுதான் பிரிடிஷ் சாம்ராஜ்ய நாடுகளின் முதல் அலுவலாகும். வரப்போகும் தலை முறைகளில் அந்த சுதந்திரத்தின் எல்லைகளை விஸ்தாரப்படுத்த திட்டங்களைப் போடுவதுதான் மகாநாட்டில் கூடியிருக்கும் சாம்ராஜ்ய நாடுகளின் பிரதம மந்திரிகளின் அலுவல் என்று டைம்ஸ் பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கிறது.

பிரிடிஷார்கள் இந்த யுத்த லக்ஷியம் தங்களுக்குப் போதுமான சுதந்திரத்தை சம்பாதித்துக் கொள்ளுவதென்று நினைக்கக்கூடிய போதிலும் அந்த சுதந்திரத்தை தனித்து நின்று எந்த நாடும் சம்பாதிக்கமுடியாதென்று இந்த யுத்தத்தில் ராணுவ முறையில் ஒரு படிப்பினை கற்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த யுத்தத்தில் பிரிட்டனும் மற்ற சாம் ராஜ்ய நாடுகளும் சேர்ந்து கூட தனிப்பட்ட முறையில் தங்களுடைய பத்திரத்தை உத்திரவாதம் செய்ய முடியாதென்றும் உலக யுத்தத்தை மூளாமல் தடுக்க முடியாதென்றும் வெளியாகிவிட்டது. இந்த சக்தியின்மை பிரிடிஷ் சாம்ராஜ்யத்துக்குமட்டும்தான் பொருந்துமென்று நினைக்கவேண்டும். அமெரிக்கா, ருஷ்யா போன்ற மற்ற உலக வல்லரசுகளும் தன்னந்தனியே நின்று தங்களுடைய சுதந்திரங்களை ரக்ஷித்து விடமுடியாது. ஏனெனில் பத்திரமென்பது உலகமளாவிய திட்டம். அதை பத்திரப்படுத்துவதற்கு அதை ஆதரிக்கும் எல்லா வல்லரசுகளும் ஒன்றுபட்ட ஒரு சக்தியைத் தவிர மற்றெந்த சக்தியும் பயன்படாது.

### ஒருமைப்பட்ட பந்தோபஸ்து.

சாச்வதமான சமாதானம் நிலைபெறுவதற்கு சர்வதேசங்களுக்குள் பரஸ்பர நம்பிக்கைதான் எவ்வளவைவிலும் அவசியமாக ஏற்படவேண்டும். இது விஷயத்தில் சாம்ராஜ்ய நாடுகளிலுள்ளவர்கள் பரஸ்பர உதவி செய்யக்கூடிய தங்களுக்குப்போதுமான தற்காப்புகளை அமைத்துக்கொள்ள ஆசைப்படவில்லை. அவ்வித சக்தியையும் பெறறிருக்கவில்லை. டெகரான் மகாநாட்டில் ஐக்கிய நாடுகள் முடிவுசெய்த ஒன்றுபட்ட க்ஷேமம் என்ற திட்டத்தை

நிறைவேற்ற சாம்ராஜ்ய நாடுகள் முற்போக்கான நடவடிக்கைகளைத் துவக்கத் தகுதியுள்ளவர்கள். ஒரே விதமான ஆசைகளுள்ளதும் கட்டாயத்தின்பேரில் ஒன்று படாததுமான தேசங்களுக்கிடையே சமாதானத்தை ஏற்படுத்துவதில் அந்நாடுகள் சிறந்த அனுபவம் பெற்றிருக்கின்றன. லண்டனிலும் மற்ற இடங்களிலும் ஒவ்வொரு நாடும் பொதுவான சர்ச்சையில் தங்களுடைய அபிப்பிராயத்தை வெளியிட சுதந்திரம் பெற்றிருப்பது போல, நெருங்கி ஆலோசனை செய்யும் சந்தர்ப்பம் இப்பொழுது வாய்த்திருக்கும்பொழுது தங்களுடையவும் தங்களுடைய கூட்டாளிகளுடைய அபிப்பிராயங்களையும் வெளியிடவேண்டியது அவர்களின் உரிமையும் கடமையுமாகும்.

இப்பொழுது நடைபெறும் மகாநாட்டின் முதலாக வெளிவரும் உலக சமாதான திட்டம் ராணுவ சக்தியை அமைக்கும் முறையினுல் ஒன்ருகும். பிரிடனும் சாம்ராஜ்ய நாடுகளும் இதர நேசதேசத்தார்களுடன் சேர்ந்து உலக அமைப்பின் தற்காப்பிற்காக எவ்வளவு தூரம் பொறுப்பெடுத்துக் கொள்ளுகிறதென்பதை ஒட்டி அந்த திட்டம் நிறைவேறும். ஆகிலும் யுத்தத்தைத் தடுப்பதற்கு இது ஒரு உபாயம்தான். அதற்கு அடிப்படையான காரணங்களை அகற்றுவது தான் முக்கியமான நடவடிக்கையாகும். பீதியில்லாமல் ஜீவனம் செய்யவேண்டுமென்ற சுதந்திரத்துடன் வறுமையின்மையுடன் வாழவேண்டுமென்ற சுதந்திரமும் அவசியமாகும். இந்த மகாநாட்டில் கலந்து கொண்டிருப்பவர்கள், வியாபார மார்க்கங்களையும், ஜனசமூக சம்பந்தங்களையும் சுபேச்சையுடனிருக்கப் பாடுபடும் சக்திகளுடன் ஒன்று பட்டு சேவைசெய்ய சாம்ராஜ்யத்தின் சக்திகள் ஈடுபடுமென்று உலகத்தாருக்கு அறிமுகப்படுத்தவேண்டும்.

### ஒப்பற்ற நடவடிக்கை.

சாம்ராஜ்ய நாடுகள் தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ள முடியாதென்பது அதன் இயற்கை அமைப்பிலிருந்தே தெரியவரும். பூகோள அமைப்பின் மூலம் அதன் நாடுகளும் ஜனங்களும் கோளத்தில் பலவேறுபாகங்களில் வசித்து வருகிறார்கள். சரித்திரத்தின் மூலம் அவைகளுக்குள் சிக்கலான சர்வதேச சம்பந்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன. வருங்காலத்திய நம்பிக்கைகளிலும் திட்டங்களிலும், அவைகள் இயற்கையாக அமைக்கப்பட்டிருக்கும் பிரதேசங்களைச் சுற்றியுள்ள நாடுகளில் சமாதானத்தை நிறுவவும் அதை விவரித்துச் சொல்லவும் சக்தியுள்ளதாக ஒப்பற்ற ஒரு சேவையை அந்த நாடுகள் செய்துவர வேண்டும்.

ஐயாபத்தியத்திற்கு மனப்பான்மைதான் அவசியமான ஆதாரம். சாம்ராஜ்யம் கையாளக் கூடிய நடவடிக்கைகள், அதன் தனிப்பட்ட நாடுகளிலுள்ள பலவகைப்பட்ட சக்திகளின் நடுவில் நிலைபெற்றிருக்காவிடில், சாச்வதமாகவும் சுதந்திரபாத்யமுள்ளதாகவும் நிலைபெற்றிருக்க முடியாது. சரித்திரத்தில் அது புகழ்பெறவேண்டுமானுல், அதன் உள்நாட்டு, அயல் நாட்டு சக்திகள் எல்லாம் வெற்றிகரமாக ஒன்றுபடவேண்டும். அவ்விதம் நடைபெற்ருல்தான் சமாதான காலத்திலும் விடுதலைக்குப்பின் க்ஷேமவிருத்தி பெறுவதிலும் மனிதவர்க்கம் ஒற்றுமையுடன் வாழக்கூடும்.

---

## ரயில் ஸ்தலங்களைத் தாக்குவதில் இருவித நோக்கங்கள்.

### ஜெர்மனியின் யுத்த உற்பத்திகளை நேசதேச தாக்குதல்களால் நிர்மூலமாக்கப்படுகின்றன.

(விங் காமண்டர் L. V. பிரேஸர்.)

ஜெர்மனியிலும், ஜெர்மனியர் ஆக்கிரமித்துள்ள ஐரோப்பாவிலுமுள்ள ரயில்வே ஸ்தலங்களை ஆங்கிலோ, அமெரிக்க விமானப்படை தாக்குதலுக்கென தேர்ந்தெடுத்திருக்கிறது. சென்ற 3 மாதங்களில் பகலிலும், இரவிலுமாக முக்கியமான ரயில்வே இலக்குகளை தேர்ந்தெடுக்கப்பட்டு, குண்டுகளால் தாக்கப்பட்டன. மேற்கில் தாக்கப்படும் ஸ்தலங்கள், ஜெர்மனியும் ருஷ்ய அரங்கம் வரையிலும் செல்லக்கூடியதுமான பல ரயில்வே ஸ்தலங்களாகும்.

ஜெர்மன் தலைவர்களின் திட்டங்கள் செவ்வனே நடைபெற ரயில்வேக்கள்தான் முக்கியமானவைகளாகும்.

யுத்த நீடிப்பும், பிரிடனிலிருந்து விமானத்தாக்குதல்களும் ஜெர்மனிக்குப் போக்குவரத்து விஷயத்தில் பல பிரச்னைகளை உண்டாக்கிவருகிறது. 1943-ம் வருஷ ஸெப்டம்பர் 1-ல 1,80,000 மைல்கள் பாதையையும், 65,000 நீராவி யந்திரங்களையும் உபயோகத்திலிருந்து நிறுத்தியது. அதில் 28,000 யந்திரங்களின் ஜெர்மனியைச் சேர்ந்தது, நாசமாக்கப்பட்டது அல்லது செட்டுபோனதுமான பாதைகளையும், யந்திரங்களுக்குப் பதிலாக வேறு எதுவும் உபயோகப்படுத்தாலது ஜெர்மனிக்கு மிகவும் கஷ்டமாய்ப்போய்விட்டது. தொழிற்சாலைகளில் உள்ள இதர தேவைகளை ஸப்ளை செய்யவேண்டியதாலும், ஐரோப்பா கண்டமே முற்றுகை



இடப்பட்டு ஸப்ளைகள் வெளியிலிருந்து வராமல் இருப்பதாலும், உள்நாட்டு போக்குவரத்திலும்கூட கஷ்டம் ஏற்பட்டது. சென்ற இரு வருடங்களில் ருஷ்ய அரங்கங்களில் நிறுத்தப்பட்ட காரணத்தால் ஏற்பட்ட ரயில்தண்டவாளங்கள், வண்டிகள் இவைகளின் குறைவால், மேற்கில் போக்குவரத்து விஷயத்தில் பெரும் கஷ்டம் ஏற்பட்டுள்ளது. முனைகளும், சந்திப்புகளும், நாசமாக்கப்பட்டு, உண்மையில் பாதைகள் கெடுக்கப்பட்டன. ருஷ்யர்கள் நிகோபாலைப் பிடித்துக்கொண்டதின் பலனுய் ஜெர்மானியர்களுக்கு மாங்கனீஸ் என்ற உலோகம் ஸப்ளையில்லாமல் நின்றுவிட்டது.

பிரான்ஸிலும், ஜெர்மனியிலும், வண்டிகளின் குறைவு ஏற்பட்டதன்னியில், நேசதேச குண்டு வீச்சால் அக்கஷ்டம் இன்னும் அதிகமாயிற்று.

ரிபேர் செய்யும் இடங்களுக்கு வெளியே வண்டிகள் வரிசை வரிசையாய் நிறுத்தப்பட்டிருக்கின்றன.

"மெல்சன் குண்டுகளால் தாக்கப்பட்டு நாசமாக்கப்பட்டபோது" கெடுதலான நீராவி யந்திரங்கள் ரிபேர் செய்யும் இடங்களுக்கு வெளியே நிற்கின்றன. 1942-ம் வருஷ வேனிற் காலத்தில் ரயில் போக்குவரத்தில் ஏற்பட்ட கஷ்டம் நாளுக்குநாள் மிகவும் அதிகப்பட்டது. 1941—42-ன் குளிர்காலத்திற்குப் பின் இக்கஷ்டம் மிகவும் தெளிவாய் வெளிப்படத்தெரிந்தது.

இச்சமயத்தில் புதிதாய் நீராவி யந்திரங்கள் செய்ய எத்தனம் செய்யப்பட்டது. தொடர்ச்சியான விமானத்தாக்குதல்கள், ஜெர்மானியரிடத்தில் மனிதர்களில் குறைவு, முதலிய பல கஷ்டங்கள் முதலிய ஏற்பட்டன. காஸலிலுள்ள ஹென்சென்சையும், எஸ்ஸெனிலுள்ள கிரப்ஸ் தொழிற்சாலையையும் பைவென்ஸினிலுள்ள ஸ்கெனெய்லடர்டர் கிரியுஸாட் ஆகிய இடங்களை நேசதேசத்தார் தாக்கினர். தற்போது நடத்திவரும் தாக்குதல்களோடு இந்த நாசகரமான தாக்குதல்களை ஒப்பிட்டுப்பார்த்தால் அவைகள் அவ்வளவு பெரியவைகள் அல்லவென்றே சொல்லவேண்டும். நேசதேச விமான பலம் அதிகப்பட அதிகப்பட ஜெர்மன் ரயில்வேக்கள் மிகுதியாய் தாக்கப்பட்டன. சென்ற 12 மாதங்களில் 10,000 வண்டிகள் நாசமாக்கியோ அல்லது உபயோகத்திற்கு பிரயோஜனப்படாமலோ செய்தது ராயல் விமானப்படை என்று குறிப்பிடப்படுகிறது.

கொலோன் முதல் பாரிஸ் வரையிலுள்ள எதிரிகள் ரயில்வே முறைகளை சிறிது கவனித்தால், ஜெர்மன் யுத்த யந்திரங்களை தாக்கிய இத்தாக்குதல்களின் பயன் நன்கு வெளிப்படும். மிகவும் கடுமையாய்த் தாக்கப்பட்ட நாய்விலெக் என்ற இடம் கிழக்குப் புறத்தில் தாக்குதலகளை நடத்தியதை வெளிப்படுத்துகிறது. வடமேற்கு புறத்தில் பாடிக்நோலிஸ் என்ற இடமும் இதுவேபோலவாகும். இந்த பாடிக்நோலிஸ் என்பது பாரிஸ் ஜில்லாவில் உள்ளது. இந்த இடத்தின் வழியாய்த்தான் நார்மண்டியின் கடற்கரைக்கு ரயில்கள் செல்லவேண்டும். பிரான்ஸின் வழியாயும் லோகண்ட்ரிஸ், மேற்கு ஜெர்மனி இவைகள் வழியாய் முக்கிய ரயில்வே தளங்கள் உள்ளன. இவைகள் பல மிகவும் கடுமையாய்த் தாக்கப்பட்டன. 24 மணி நேரங்களில் 23 ரயில்வே இலக்குகள் தாக்கப்பட்டன. அதற்கு முன்பு ஒரு வாரங்களுக்குமுன் 36 ரயில்வே இலக்குகள் தாக்கப்பட்டன. அவைகள் துறானஸெஸ்ட், வில்லிநியோவி, செயிண்ட் ஜார்ஜஸ, லில்லி, கெண்டு, ரேஸ், டெர்க்னியர், ஆல்நாய், லேயான், ஹெய்னி, செயிண்ட் பியரி, மான்சியா, ஹார்சான், பிலெய்ன்வில்லி, நாமூர், சார்லிரா, மாலின்ஸ், ப்ரன்ஸ்விக், கார்ல்ருகி, டாஸ்ஸல்டார்ப், ஸாம்லி, நெய்ஸ்டஸே, சலான்பெர் மார்லி.

### இலக்குகளைத் தகர்ப்பதில் முன்னேற்றம்.

ரஸ்தா ரயில் போக்குவரத்துகளன்னியில் சிறிய, பெரிதான பல பாலங்களின் மேலும் குண்டுகள் வீசப்பட்டன.

இத்தாக்குதல்கள் முக்கியத்வம் ரயில்வேயின் ஒரு சில பாகங்களை நிர்மூலமாக்குதில்லை. 1940—41-ல் பிரிடனில் நடந்த மின்னல் போரின்பின் ரயில்வேக்கள் வெகு சீக்கிரத்தில் சரி செய்யப்படுகின்றன. ரயில்வே முறைகளைத் தகர்க்கவும், பொருளாதார திட்டங்களில் சிக்கலை உண்டுபண்ணவுமே இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டுவருகின்றன. தாக்குதல்கள் இருகாரியங்களை ஒரே சமயத்தில் சாதிக்கின்றன. எதிரித்தாக்குதல்கள் புரியும் திட்டங்களை குலைக்கிறது. தொழிற்சாலை உற்பத்திகளை அதிகப்படுத்துவதையோ அல்லது ஸ்திர நிலையில் வைத்திருப்பதையோ முடியாமல் தடுக்கிறது. ஜெர்மனியின் போக்குவரத்து [illegible] அவைகளுக்கு ஏற்பட்டுள்ள கெடுதல்களும், [illegible] இதர உலோகங்கள் கிடைக்கும் ஆக்கிரமித்த ஐரோப்பா [illegible] முடியாமல் போய்விட்டது. இம்மாதிரி அனுப்புவதெனுல், வெடிமருந்துகளுக்கு வேண்

டிய மூலப்பொருள்களை, நெடுந்தூரம் ரயில்களில் ஏற்றிச்சென்று அங்கு ஒரு பத்திரமான இடத்தில் உற்பத்தி செய்து அந்தத் தளவாடங்களை சைனியங்களுக்கு அனுப்பவேண்டும். ஆனால் அத்தகைய இடங்களுக்கு நேசதேசத் தாக்குதல்களுக்கு இலக்காய் இருக்கின்றன.

### புலோயெஸ்ட்டியின் மேல் தாக்குதல்கள்.

இதாலிய தளங்களிலிருந்து குண்டுபோடும் விமானங்கள் செய்த தாக்குதல்கள், பால்கன் பிரதேசத்தில் உள்ள போக்குவரத்துகள்பற்றி பிரச்னை ஜெர்மனிக்கு இரட்டிப்பாய் செய்துவிட்டது. ரயில்வே தளங்களின்மேல் கடுந்தாக்குதல்கள் செய்யப்பட்டன. புகாரெஸ்ட், புலோயெஸ்ட்டி, பிராஸ்ஸுவ், ரேனு சொவரின், பெல்கிரேட் முதலிய ரயில்வே ஸ்தலங்கள் தாக்கப்பட்டன. இப்பிரதேசத்தில் எதிரிக்கு 3 ரயில்வே பாதைகள்தான் உள்ளன. அவைகளில் இரண்டு பல இடங்களிலும் தாக்கப்பட்டன. ருமேனிய ரயில்வேக்களில், ருமேனிய போக்குவரத்துகள் செல்லத்தக்க புலோயெஸ்ட்டிதான் முக்கிய பாகமாகும்.

ஹங்கேரியிலுள்ள முக்கிய இருப்புப்பாதை ஸ்தலம் புடாபெஸ்ட்டாகும். இங்கிருந்துதான் 3 கிளைபாதைகள் பிரிந்து வடகிழக்கு இதாலி, யூகோஸ்லாவியா, பல்கேரி முதலிய இடங்களுக்குச் செல்கின்றன. நேசதேசத் தாக்குதல்களுக்கு இங்கு பல இடங்களை தகர்த்திருக்கவேண்டும்.

இதாலியிலும் இம்முறைகள் கையாளப்பட்டு வருவதால், கெஸ்ஸல்ரிங்குக்கு ஸப்ளைகள் வருவதற்கில்லை. மார்ச்சு 24-ம்தேதி முதல் பிளாரென்ஸுக்கும் ரோமிற்கும் செல்லும் பாதை தடுக்கப்படாத நாளே இல்லை. 24 பாலங்களும் 38 பாதைகளும் ஒரே நாளில் நாசமாக்கப்பட்டன. இம்மாத ஆரம்பத்தில் இதாலியில் மட்டில் 85 பாதைகளில் கெடுதல் ஏற்பட்டன.

தெற்குப் புறமுள்ள போக்குவரத்து ஸாதனங்கள் தடுக்கப்படவே ஜெர்மன் பாதைகள் இதாலிக்கும், பிளாரென்ஸுக்குமாய் கலக்குமிடமான போசமாகான் உள்ள ரயில்வே ஸ்தலங்கள் போக்குவரத்து ஸப்ளைகள் அனுப்பப்பட முடியவில்லை. போக்குவரத்து மந்திரியான 74 வயதுடைய டார்ப்பு முல்லர் என்பவர் "போக்குவரத்துக்கு தலைவராக" நியமிக்கப்பட்டிருக்கிறான். அவன்வேலை தகர்ந்த ரஸ்தாக்களை செப்பனிடுவதாகும். அன்றாடம் நடந்து வரும் நேசதேசத் தாக்குதல் வேலையை அவ்வளவு சுலபமாய் நடத்தவிடுவதற்கில்லை.

---

## விமான நடவடிக்கை—ஒரு விமர்சனம்.

### ஐரோப்பாவில் நேசதேச விமான நடவடிக்கையின் அம்சங்கள்.

மே 13-ம் தேதியுடன் முடிவான வாரத்திய விமான நடவடிக்கையின் விமர்சனத்திலிருந்து இந்த வாரத்தில் மகத்தான நடவடிக்கைகள் நடந்தேறின என்று தோன்றுகிறது. பிரிடனிலிருந்து புறப்பட்டுச்சென்ற நேசதேச விமானங்களின் விமானத் தாக்குதல்கள் இதுவரையிலுள்ள புள்ளிவிபரங்களுக்கு மேற்போனவை.

இந்த நடவடிக்கைகளில் நான்கு முக்கிய அம்சங்கள் காணப்படுகின்றன. (1) ஆக்கிரமிப்பு நாடுகளிலுள்ள இருப்புப்பாதைகள் வெடிகுண்டுகள் மூலம் பலமாகத் தாக்கப்படுகின்றன. (2) ஸெகோஸ்லாவேக்கியாவிலும், ஜெர்மனியிலும், உள்ள சேர்மான எண்ணெய் உற்பத்தி செய்யும் சாலைகள் பலமாகத் தாக்கப்படுகின்றன. (3) பிரிடிஷ் விமான தளங்களிலிருந்து ஐரோப்பாவுக்குள் வெடிவிமானங்கள் வெகுதூரம் சென்றிருக்கின்றன. (4) தாக்கும் விமானப் படைக்குக் கோரமான எதிர்ப்பு இப்பொழுது காணப்படுகிறது.

ஜெர்மன் விமானப்படை இதுவரையில் எதிர்த்துப் போராட முன்வரவில்லை. ஜெர்மன் யுத்த முயற்சிகளுக்கு முக்கியமான எண்ணெய் பிரதேசங்கள் தாக்கப்படும் பொழுது 1,000 ஜெர்மன் விமானங்கள் எதிர்த்து நமது விமானங்களுடன் கடும் போர் செய்தன.

மே மாதம் 5-ம் தேதியன்று மகத்தான பெஸ்காரா அணையை நமது வெடிவிமானங்கள் பலஹீனமான இடத்தில் வெடிகுண்டுகளைப் போட்டு அதை உடைத்துவிட்டன. பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்த மஸ்டாங், கிட்டிஹாக் விமானங்கள் பருந்துப் பாய்ச்சல்செய்து மடை அடைப்புகளை நொருக்கிவிட்டன. அதிலிருந்த வெள்ளம் அட்ரியாடிக் கடலுக்குச் சென்று ஜெர்மனியின் சப்ளை மார்க்கங்களை அழித்தது. கெஸ்ஸல்ரிங்கின் முன்னணி ஸ்தானங்களுக்குப் பின்புறத்தில் வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது. அலெக்ஸாண்டரின் புதிய தாக்குதலுக்கு வெற்றியளிப்பதில் அதுவும் ஒரு பங்கு எடுத்துக்கொண்டது.



### பெர்லின் தாக்கப்பட்டது.

ஒன்பதாவது விமானப்படை இவ்வாரத்தில் 14 பலமான தாக்குதல்களை மேற்கொண்டது. ஐரோப்பாவில் நடவடிக்கை விரிவான பிரதேசங்களில் நடைபெற்றது. மே மாதம் 6-ம் தேதியன்று சண்டை விமானங்களின் உதவிகொண்ட அமெரிக்க கனமான வெடிவிமானங்கள் பாஸ்டிகலே பிராந்தியத்தில் ராணுவ அமைப்புகளை எதிரிகளின் சண்டை விமான எதிர்ப்பன்னியில் தாக்கின. தண்டர் போல்ட் விமானங்கள் ரென்னிஸைத் தாக்கின. பிரிடிஷ் லேசான வெடிவிமானங்கள் வடக்கு பிரான்ஸிலுள்ள ராணுவ லக்ஷியங்களைத் தாக்கின. அன்றிரவு பிரிடிஷ் வெடிவிமானங்கள் நான்டிவிலுள்ள முக்கியமான ரெயில் வண்டிகள் நிற்குமிடங்களை பலமாகத் தாக்கின. மறுநாள் பகலில் அமெரிக்க கனமான வெடி விமானங்கள் கூட்டமாகச், சென்று பெர்லினிலும், மன்ஸ்டரிலும், ஆஸ்னுபிரக்கிலுமுள்ள லக்ஷியங்களைத் தாக்கின. அன்று இரவில் பிரிடிஷ் வெடி விமானங்கள் புகாரெஸ்ட், லெவர் குசன், நான்டிஸ், ரேஸ், நார்மண்டி கடற்கரையிலுள்ள தொழிற்சாலை ராணுவ லக்ஷியங்களையும், விமான தளங்களையும் வெடிமருந்துக் குவியல்களையும் தாக்கின. மே மாதம் 8-ம் தேதியன்று தண்டர் போல்ட், மஸ்டாங், லைட்னிங் விமானங்கள் இங்கிலீஷ் கால்வாயில் ரோந்துசெய்து பெர்லினுக்கும் பிரான்ஸுக்கும் செல்லும் கனமான வெடிவிமானங்களுக்குத் துணைக்காவல் சென்றன.

### இருப்புப்பாதை நிலயங்கள் நொருக்கப்பட்டன.

மே மாதம் 9-ம் தேதியன்று எட்டாவது அமெரிக்க விமானப்படையைச் சேர்ந்த கனமான விமானக்கூட்டம் பிரான்ஸிலும், பெல்ஜியத்திலும், லக்ஸம்பர்க்கிலுமுள்ள விமானக் கூட்டங்களையும் இருப்புப்பாதைகளையும் பலமாகத்தாக்கின.

மே மாதம் 10-ம் தேதியன்று நேசதேச விமானப்படைகள் 18 தனிப்பட்ட கூட்டமாகச் சென்று பருந்துப் பாய்ச்சல் செய்து ரெயில் வண்டிகள் நிற்கும் தளங்களின்பேரில் குண்டுமாரி பொழிந்தன. ஐரோப்பிய விமான தளங்களையும் குண்டுகளால் சின்னாபின்னம் செய்தன.

சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று 1,000 அமெரிக்க வெடி விமானங்கள் பெர்லினைப் பகலில் தாக்கியதென்பது எட்டு வாரங்களுக்குள் பெர்லின் பட்டப்பகலில் எட்டாவது தடவை தாக்கப்பட்டதென்பதைக் குறிப்பிடுகிறது. இதே சமயத்தில் இதாலியிலுள்ள விமானங்கள் புகாரெஸ்டை பலமாகத் தாக்கின.

### விமான நஷ்டம்.

ஐரோப்பாவில் அச்சுநாடுகளுக்கு 14 விமானங்கள் நஷ்டம். நேசதேசத்தாருக்கு 97 விமானங்கள் நஷ்டம்.

பிரிடனில் நடைபெற்ற விமானத்தாக்குதலில் இருதரப்பாருக்கும் ஒரு விமானம்கூட நஷ்டமாகவில்லை.

மத்தியதரைக்கடலில் நேசதேச விமானப்படை மே மாதம் 11-ம் தேதியன்று இதாலியில் கஸ்டாவ் அரணைத்தாக்கிய ஜெனரல் மான்ட் காமரியிடமுள்ள ஐந்தாவது எட்டாவது சேனைகளுக்கு ஒத்தாசை செய்தது. தோற்றம் தெளிவாகயில்லாததால் மத்தியதரைக் கடலிலும் மத்தியக் கிழக்கிலும் விமான நடவடிக்கை சிறிது பாதிக்கப்பட்டது. ஆகிலும் சண்டை விமானங்கள் போர் பிராந்தியங்களில் ரோந்து வேலைசெய்து வந்தன. இருப்புப் பாதை பாலங்களும், கால்வாய்களும், சாமான் குவியல்களும், ரோம் பிரதேசத்திலுள்ள போக்குவரத்து மார்க்கங்களும் இதர லக்ஷியங்களும் வெற்றிகரமாகத் தாக்கப்பட்டன. மத்தியதரைக்கடலில் எதிரிக்கு 63 விமானங்கள் நஷ்டம். நேசதேசத்தாருக்கு 86 விமானங்கள் நஷ்டம். மத்தியக் கிழக்கில் நேசதேசத்தாருக்கு இரண்டு விமானங்கள் நஷ்டம். எதிரிக்கு நஷ்டமே கிடையாது.

வடக்கு பர்மாவில் நமக்கு விமான ஆதிக்கமிருந்து வருகிறது.

---

## சலனப் படைகள்.

இதாலியிலுள்ள எட்டாம் படையுடன் விமானத் தாக்குதலுக்குட்படாமல் மறைமுக ஏற்பாடுகள் அமைக்கப்பட்ட 25 மோட்டார் சாமான் வண்டிகள் செல்லுகின்றன. மறை பொருளில்லாதபொழுது அவைகள் முன்னேறும் படைகளுடன் செல்லும் போக்குவரத்து வண்டிகளுடன் சேர்ந்து செல்லும். ஆயினும் இந்த வண்டிகள் ஒரு விலாக்கியமான வேலையில் ஈடுபட்டிருக்கின்றன. அவைகள் நவீன யுத்தத்தில் சாதனமானவைகள். அவைகளை நெருங்கும்பொழுது அவைகளின் உயர்தர சக்தியுள்ள யந்திரங்களின் சப்தம் காதில் விழும். இவை ஒரு அச்சாலையிருக்கிறது. எதிரியின் படை வரிசை அமைப்புகளையும், பீரங்கிகளையும், போக்குவரத்து வண்டிகள், டாங்கிகளுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் பொறிகளையும் காட்டக்கூடிய விபரங்களுள்ள ஒரு புதிய தேச படத்தை அந்த அச்சாலை அச்சிடுகிறது.

நான்கு மணிகளுக்கு முன் இந்த விபரங்கள் வெளிப்படவில்லை. இப்பொழுது புதிய தாக்குதலை ஆரம்பிக்க வேண்டியதிருந்தால் கடைசியான தகவல்களை அறியவேண்டியது அவசியமாகிற்று. முதல் முதலில் வேவு பார்க்கும் விமானங்கள் எதிரியின் படை வரிசைகளை ஜாக்கிரதையுடன் கவனித்து வந்தன. முந்திய நாளின் அமைப்பிலிருந்து மாறுதலடைந்திருக்கும் ஸந்நிவேசங்களை அந்த விமானங்கள் ஒளிப்படம் பிடித்துத் திரும்பி வந்தன. இந்த ஒளிப்படங்கள் தலைமை காரியாலயத்துக்குக் கொண்டுபோகப்பட்டு அவைகள் சுத்திசெய்யப்பட்டு காபிகள் எடுக்கப்பட்டன. ஒரு மணி கழித்து படை வரிசைகளின் புதிய அமைப்புகளடங்கிய குறிப்பான விபரங்கள் தேசப் படம் அச்சிடும் சாலைக்கு வந்துவிடும். அங்கிருப்பவர்கள் துரிதமாக ஒரு படத்தைத் தயாரித்து அவைகளை அச்சுப் போடுவார்கள். நூற்றுக் கணக்கான தேசப் படங்களை அச்சிடப்பட்டு அவைகளும் வெகு சீக்கிரத்தில் படைகளுக்கு அனுப்பப்படும்.

### தேசப் படம் வரைதல்.

தேசப் படங்களை அச்சிடும் இந்த சலனப்படை அநேக சிறந்த நடவடிக்கைகளைச் செய்திருக்கிறது. அநேகம் தடவைகளில் அவைகள் வழங்கும் தேசப் படங்கள் நூற்றுக்கணக்கான மனிதர்களைக் காப்பாற்றியிருக்கின்றன. மிகவும் கடினமான பிரதேசத்தில் வெற்றிகளையும் தந்திருக்கின்றன. இது முதல் முதலில் எல் அலாமீன் யுத்தத்தில் வெற்றியளித்தது. சேனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட தேசப் படங்கள் ஜெர்மானியரின் பீரங்கி அமைப்புகளையும், சுரங்கவெடி நிரம்பிய ஸ்தானங்களையும் யந்திர பீரங்கி நிலயங்களையும் குறிப்பாக வெளிப்படுத்தின. யுத்தம் ஆரம்பிக்கும் சற்று நேரத்துக்குமுன் தேசப் படங்கள் வழங்கப்பட்டன.

தேசப்படம் அச்சிடும் படைகள் உத்தேசமான படங்களையும் விரிவான படங்களையும் ஏழு அல்லது எட்டு வர்ணங்களில் தயாரித்து விடும். எதிரியின் தேசப் படங்களையும் அவை எளிதில் காபி செய்துவிடும். தளங்களிலிருந்து முன்னேறும் படைகளை முன்னணிப் போர்முனைக்குக் கொண்டுபோக வேண்டுமென்ற புதிய யுத்த தந்திரத்துக்கு அவைகள் உதவி அளிக்கின்றன. பழைய காலத்தில் அவைகள் ஒரே இடத்தில் ஸ்தாபிதமாகயிருந்தன. இப்பொழுது அவைகள் சலனம் செய்து வருகின்றன. முன்நாளில் ஒரு வேலையை அவைகள் வெகு நாட்களில் செய்து முடித்தன. இப்பொழுது சில மணிக்குள் அந்த வேலை பூர்த்தியாகி விடுகிறது. இந்த நடவடிக்கைகள் சேனையைச் சேர்ந்த ரசாயன சாலைகளிலும், NAAFI பண்டகசாலைகளிலும், மாதாக் கோவில்களிலும் போர்முனையின் தலைமை காரியாலயங்களிலும் நடைபெறுகின்றன. அவைகளெல்லாம் இன்று அசைந்து செல்லுகின்றன. அவைகள் போர்முனைக்கு சமீபத்தில் சென்று விடும்.

ரத்தப் பரீக்ஷை செய்யும் ரசாயன சாலையும் இவ்விதமாகச் சலனம் செய்து வருகிறது. வைத்திய ஆராய்ச்சிக்கு அவைகள் சிறப்புடன் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த சாலை தொத்து வியாதிக்குட்பட்ட சிப்பாய் இருக்குமிடத்திற்குச் சென்று அந்த வியாதியைக் கண்டுபிடித்துவிடும். முன்னணி ஸ்தலத்தில் வேலை செய்யும்பொழுது அது பீரங்கிகளின் குண்டு வீச்சுக்குட்படவேண்டியிருக்கும்.

### அடக்கமான ரசாயன பரீக்ஷை சாலைகள்.

படையெடுப்பு சமயத்தில் சலனம் செய்யும் ரசாயனப் பரீக்ஷை சாலைகளின் முக்கியத்வம் அபாரமானது. யுத்தத்தின் மூலம் ஜல சப்ளை அற்றுப்போய் தேசம் பாழாகிவிட்டபொழுது வியாதிகளும் தொத்து வியாதிகளும் வெகு சீக்கிரத்தில் உண்டாகிவிடும். இச்சிறிய அடக்கமான சாலைகள் எந்த வியாதியையும் சீக்கிரத்தில் சொஸ்தம் செய்துவிடும். தொத்து வியாதிகளை சீக்கிரத்தில் துறத்தியடிப்பது தான் மெத்த அவசியம். இரண்டாம் போர்முனை துவக்கப்பட்டபின் இந்த சலன ரசாயன சாலைகளைப்பற்றி நாம் அநேக விஷயங்களைக் கேள்விப்படக்கூடும். முன்னணியிலிருக்கும் தேசப் படம் வரைகிறவர்கள் சிப்பாய்களுக்கு அவசியமான படங்களைத் தயாரித்து கொடுக்கிறார்கள். ரசாயன சாலைகள் அவர்களுக்கு வியாதி வராமல் காபந்து செய்து வருகின்றன. NAAFI பண்டகசாலைகள் முன்னணித் துருப்புகளுக்கு உணவுப்பொருள் வழங்குகின்றன. இந்த மோட்டார் படைகள் போர்முனைக்குச் சென்று துருப்புகளுக்கு வசதியளிக்கின்றன.

சில சமயங்களில் இவர்களின் சேவை கோமாளித்தனமாக முடிந்துவிடும். ஒரு சமயத்தில் நோவாவின் படகு என்று பெயர் கொண்ட NAAFI வண்டி எட்டாம் படைக்கு வெந்த முட்டைகளை விநியோகம் செய்து கொண்டிருந்தது. இந்தச் செய்தி போர்முனையில் பரவிவிட்டது. ஜனங்களும் மோட்டார் லாரிகளும் அந்த இடத்திற்கு விரைந்து சென்றன. பண்டகசாலை மோட்டாரிலுள்ளவர்கள் சமாளிக்க முடியவில்லை. அப்பொழுது அவர்கள் அடுப்புகளைப் பொட்டலில் வைத்து நெருப்பை மூட்டி நூற்றுக்கணக்காக முட்டைகளை சப்ளை செய்தார்கள். நோவாவின் படகு என்ற லாரி முட்டைகளைக் கட்டிக்கொண்டு புறப்பட்டபொழுது ஜெர்மானியர்கள் அவர்களைச் சமீபித்துவிட்டார்கள்.



## வெடிக்கும் டாங்கிகள் "பீட்டில்"

சிறிய டாங்கிகளைக்கொண்டு, ஜயித்து விடுவதாக நினைத்த இதாலியிலுள்ள ஜெர்மானியர்களின் எண்ணம், ஆன்ஸியோ முனையில் நடத்திய புது விமான இயந்திர யுத்தத்தால், தங்களது முடியாத்தன்மை வெளிப்பட்டுப்பட்டு ஏமாற்றமடைந்தது. பிப்ரவரி மாத நடுவில் வெடிக்கும் "பீட்டில்" என்ற சொல்லப்படும் டாங்கிகளை இதாலியில் ஜெர்மானியர் உபயோகப்படுத்தினர். அப்பொழுது அவர்கள் முயற்சி பலனற்றுப்போனது. ஆன்ஸியோ முனையிலும் அதேகதிதான். இதாலியில் முதன்முதல் அவைகள் தோன்றியபோது 14 டாங்கிகள் நேசதேச பீரங்கிப் படையினால் நாசமாக்கப்பட்டன. சற்று பின்பு ஒன்று சிறு பீரங்கிப் படையில் நிர்மூலமாக்கப்பட்டன.

"பீட்டில் டாங்கி மார்க் 1" என்பது சிறிய டாங்கி வண்டி, ரேடியோ அல்லது மின்சாரத் தந்தியால் நிர்வகிக்கப்பட்டது. அது 5 அடி நீளமும், 2½ அடி அகலமும், 2 அடி உயரமும் உடையது. விளையாட்டு டாங்கியைப்போன்று சிகாம் அல்லது தூபியில்லாததாகும். அது இரண்டு மின்சார மோட்டார்களால் மின்சாரம் அளிக்கப்பட்டு ரேடியோவால நிர்வகிக்கப்பட்டது. அதன் மேல் பாகம் 1,000 பவுண்டுகள் நிறையுள்ள வெடிகளால் மூடப்பட்டு, டாங்கிகளுக்கு எதிராய் விடப்பட்டன. அதன் கனத்தையும், நீளத்தையும் பொறுத்து மணிக்கு 20 மைல் வேகத்தில் ஓடக்கூடியது.

### அதிகப்பட்ட செலவு.

இந்த பீட்டில் முதன்முதலில் ருஷ்யாவில் உபயோகப்படுத்தப்பட்டு, அங்குள்ள நிர்வகிக்கும் தந்திகளை அடித்ததால் அந்த டாங்கி பிடிக்கப்பட்டது. அது பிளவு உடைக்கப்பட்டு அதன் ரகசியங்கள் எல்லாம் கண்டுபிடிக்கப்பட்டது.

கோலியாத் என்று சொல்லப்படும் இந்த சுரங்கவெடிகள், பயனற்றவையாவதன்றியில் அவைகளுக்கு நடவடிக்கைகள் பலகட்டுப்பாடுகள் உண்டு. அவைகள் பின்னால் வர முடியாது. 2½ அடி அகலமே உடையவையாதலால் கரடு முரடான பிரதேசங்களில் அல்லது பள்ளங்களில் செல்லும்போதும் சாயும் பக்கத்தில் விழுந்து விடுகின்றன. இந்த வண்டிகள் கனமாறதாய் 20 மைல் வேகத்தில் செல்லக்கூடியவை. அவை சுலபமாய் நாசமாக்கப்படக்கூடியவை. மொத்தமாய் சொல்லப்போனால் இவைகள் ஒரு அதிகப்பட்ட செலவு என்றே சொல்லவேண்டும்; ஜெர்மானியர்கள் இந்த டாங்கிகளை நடத்த அதற்கென உள்ள பாகத்தில் உள்ள ஸ்விட்சை தட்டி வெடிக்கச் செய்வதால் நேசக்கட்சிக்கும் சில தந்திகள் அறுபடலாம். ஆனால் ஜெர்மானியர்கள் இந்த சுரங்கவெடி டாங்கிகளையே இழக்கிறார்கள்.

## புத்தியீனமான ராஜ துரோகிகள்.

### லெப்டினண்ட் கர்னல் S. J. லெமின்.

(மதராஸ் அகில இந்திய ஒலிபரப்பு பிரசங்கம்.)

இந்தச் சொற்பொழிவின் இறுதியில் நாங்கள் உங்களிடம் சில வேண்டுகோள்களை அறிவிக்கப்போகிறேன். இப்பொழுது நீங்கள் ஒன்று செய்யவேண்டுமாய்க் கோருகிறேன். ஒலிபரப்புக் கருவியை மூடிவிடாதீர்கள். நான் சொல்லும் சில வார்த்தைகளுக்குச் செவி கொடுங்கள்.

என்னுடைய விஷயம் யாதெனில் அஜாக்ரதையுடன் செய்யப்படும் சம்பாஷணை. சற்றுச் செவியுறுங்கள்.

புத்தியீனமான ராஜத் துரோகிகள். இது மிகவும் அழகான தலையங்கம். ருசிகரமாகவுமிருக்கிறதென்று நினைக்கிறீர்களல்லவா? ஆகிலும் உங்களுக்குத் தெரியும்படி நான் சொல்ல விரும்புகிறேன். நான் யுத்த சேனையில் சேர்ந்திருப்பவர்களுக்கும் பொதுமக்களுக்கும் பேசவிரும்புகிறேன். ஏனென்றால் என்னுடைய அனுபவத்திலிருந்து கவசம் பூண்ட படைகளிலும் பொதுமக்களிலும் அநேக புத்தியீனமான ராஜத்துரோகிகளிருக்கிறார்களென்று நான் அறிவேன்.

## பத்திரத்துக்காக படங்கள்.

யுத்தத்தின் ஆரம்ப காலத்தில் பத்திரத்துக்காக சில படங்கள் தீட்டப்பட்டு விநியோகம் செய்யப்பட்டன. அவைகளை பௌகாஸ் என்ற சித்ரம் வரைபவர் எழுதினர். அவைகளைக் கண்டு எங்களுக்குச் சிரிப்பு உண்டாகிறது. ஹிட்லரின் உருவப்படம் டெலிபோன் பெட்டிகளிலும், ரெயில்வே வண்டிகளிலும் படத்தின் சட்டங்களிலும், வர்ணவேலை செய்கிறவர்போலும் மெழுகுதிரியைச் செப்பிறவர் போலும், வெண்ணைச் சட்டியிலுள்ள புழுப்போலும் வரையப்பட்டிருந்தது. அவனுக்கு இந்தத் தகவல்கள் எட்டின. அந்த நாட்களிலும் சாரர்களிருந்தார்களென்று தெரியவருகிறது. அவர்கள் தங்களுடைய பேச்சுரிமையைப் பயன்படுத்தி வந்தார்கள். நமது சிறிய தீவில் நடைபெறும் நடவடிக்கைகளைப்பற்றி அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக ஹிட்லர், முஸோலினியின் அறிக்கை இலாகா அதிகாரிகளுக்குத் தகவல்களை அனுப்பி வந்தார்கள். இந்தத் தகவல்களை ஒன்று சேர்த்தால் அதிலிருந்து அர்த்தமுள்ள சில விஷயங்கள் புலப்படும். இந்த விநோதமான படங்களுக்குப்பின் மற்றொரு விதமான படம் டிராம்களிலும், சிற்றுண்டிசாலைகளிலும் ரெயில்வே ஸ்டேஷன்களிலும் காணப்பட்டது. இந்தப் படம் மிகவும் உயர்வானது. அதில் நமது கப்பல் ஒன்று மூழ்குகிறது. தண்ணீரில் நூற்றுக்கணக்கான கருமையான சிறிய புள்ளிகள் தோன்றுகின்றன. அதன் அடியில் அஜாக்ரதையான சம்பாஷணையின் மூலம் அநேகர் உயிர் துறந்தார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த நூற்றுக்கணக்கான கரும் புள்ளிகள்—ஆடவர்கள், ராஜவிசுவாசமுள்ள ஜனங்கள், புருஷன்கள், தகப்பனார்கள், பிள்ளைகள், கணவர்கள், எல்லோரும் போர் புரிவதில் ஈடுபட்டார்கள். துரதிருஷ்டவசமாக அவர்கள் ஜீவதிசை முடிந்து விட்டது. இந்தப் படத்திலிருந்து ஒரு உண்மை வெளிப்பட்டது. ராஜ விசுவாசமுள்ள ஜனங்களின் வாய்மொழியாக வெளிவந்த தகவல்களை எதிரியின் ஏஜண்டுகளும் சாரர்களும் செவியுற்று எதிரிக்குத் தெரிவித்து எதிரி நடவடிக்கைகளை நடத்த சாதகம் ஏற்பட்டுவிட்டது. பிரசார முறையைத் திருத்தியமைத்தார்கள். முதலில் வரையப்பட்ட படங்கள் தெளிவாக எடுத்துக் காட்டிய போதிலும் அஜாக்கிரதையான பேச்சுகளிலிருந்து உண்டாகும் கெடுதலை ஜனங்களுக்கு நன்றாய் அறிவூட்டக்கூடவில்லை. நாளடைவில் படங்கள் அதிக நஷ்டங்களை வெளியிட்டுவந்தன. ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒருவர் சேவைக்குச் சென்றிருப்பதாலும் இந்த வாதத்தின் உண்மையை புத்திசாலியான ஒவ்வொருவரும் அறிவார்களென்று மதித்தும் இவ்விதமான படங்கள் வரையப்பட்டன. ஜனங்களின் பெரும்பான்மையோர் இதுவிஷயத்தில் சிறிது முயற்சி எடுத்துக்கொண்டார்கள். க்ஷேமத்தின் பங்கத்தை விளைவித்த உயர்தர அதிகாரிகள் வேலையிலிருந்து நீக்கப்பட்ட பொழுதும், பொதுமக்கள் ஜெயிலுக்கு அனுப்பப்பட்டபொழுதும், அவர்கள் சற்று விழித்துக்கொண்டார்கள். அதே சமயத்தில் ஆபீஸர்களும் ஸோல்ஜர்களும் அஜாக்ரதையாக சம்பாஷணை செய்ததற்கு ராணுவ முறையில் சிக்ஷிக்கப்பட்டார்களென்றும் பத்திரிகைகளில் வெளிவந்தன.

ஜனங்களில் பெரும்பான்மையோர் ஜாக்ரதையுடனிருந்தார்கள் என்று சொன்னேன். இன்னும் சிலர்கள் தாத்காலிகமாக பிறருடைய கவனத்தைக் கவர்ந்து முக்கியத்வம் பெற பிரியப்படுகிறார்கள். இந்த புத்தியீனமுள்ள துரோகிகள் அவர்களுக்கு விஷயம் தெரிந்தது போல் பிரகடனம் செய்யப் பிரியப்படுகிறார்கள். அவர்கள் மூவகைப் படைகளிருக்கும் ஸ்தானங்களில் வசிக்கும் வசதி பெற்றிருப்பதாலும் விஷயங்களை அறிந்துகொள்ளும் சக்தி பெற்றிருப்பதாலும் அவர்கள் சில விஷயங்களை அறியக்கூடும். ஆகிலும் அவர்களுக்குத் தெரிந்த விஷயங்களை எதிரி அதற்குமுன்கூட்டியே அறிந்திருப்பான். ஆகிலும் அவன் வெளியிட்டால்தான் நமது ராஜ விசுவாசமுள்ள ஜனங்கள் அவைகளை அறியக்கூடும். இது ஒரு அற்ப புத்தியாகும். நாள் முழுவதும் திரை வழியாக எதிர்த்த வீட்டிற்கு யார் செல்லுகிறார்களென்று கவனித்து அதை தோட்டத்தின் சுவர் வழியாக பிறருக்குச் சொல்லும் ஒரு ஸ்திரீயின் நடவடிக்கைக்கு இதை ஒப்பிடலாம். ஆகவே அஜாக்ரதையாகப் பேசும் ஒருவர் அபகீர்த்தியை சம்பாதிக்கிறதுடன் இது நின்றுவிடவில்லை.

ஆகிலும் நான் சொல்லுவதை அன்யதாகிரஹணம் செய்துவிடாதீர்கள். ஸ்திரீகள்தான் இதில் முக்கியமான குற்றவாளிகள் என்று நான் சொல்லவில்லை. ஸ்திரீகளை அறிந்த எவரும் ஸ்திரீகள்தான் ரகசியத்தை வெளியிடமாட்டார்களென்று நன்றாய் அறிவார்கள்.

இவ்விதமாக அஜாக்ரதையான சம்பாஷணை செய்யக்கூடாது என்ற படிப்பு சுமாராக வெற்றிகரமாக நடைபெற்றது. இதற்காகச் சிலர் பயிற்சியும் அளிக்கப்பட்டார்கள். கடைசியில் நான் தப்பித்துக்கொண்டேன் என்று அவர்கள் திருப்தியடைந்தார்கள்.

இதுதான் என்னுடைய முதல் குறிப்பு. எதிரிக்கு உதவியளிக்கக்கூடிய விஷயங்களைப் பற்றி பொது ஜனங்கள் பேசாமலிருப்பது எவ்வளவு அவசியமென்று யுத்தத்தை நடத்துகிறவர்கள் அறிவார்கள். பொக்கிஷ இலாகா அதிகாரிகள் அஜாக்ரதையான வதந்திகளைப் பேசா



மல் தடுக்கவேண்டிய நடவடிக்கையில் மிலியன்கள்கணக்கான பொருள்களைச் செலவிட்டிருக்கிறார்கள். உத்தியோக முறையில் செலவிடக்கூடிய பொருளை சம்பாதிப்பதற்காக நாம் எவ்வளவு பிரயாசைப் படவேண்டுமென்பதை அறிந்தால் இந்த விஷயம் தெளிவுபடும்.

எதிரிக்கு உதவக்கூடிய தகவல் என்று நான் சொல்லியிருக்கும் பதங்கள் அநேக ஜனங்கள் நினைப்பதுபோல் அவ்யக்தமானதல்ல.

## எதிரியின் ஏஜண்டுகள்.

முதலெடுப்பில் எதிரியின் ஏஜண்டுகள் இருக்கிறார்களென்று நீங்கள் ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். அவர்கள் யார். நீ எவரையும் கண்டுபிடிக்கமுடியுமா? எதிரியின் அறிக்கை இலாகாவில் ஒரு ஆபீஸராக நீ இருந்தால் நீ ஏஜெண்டுகளை நியமித்து விடுவாயா அல்லது கூட்டத்தாருடன் கலந்து நின்று ஒருவராலும் அறிய முடியாத ஒருவரை அனுப்புவாயா என்று கேட்கிறேன். சரியான பொருத்தமான ஆளைத்தான் நீ தேர்ந்தெடுப்பாய். மேலும் துருப்புகளும், கப்பல்களும், விமானக்கூட்டங்களும், தொழிற்சாலைகளும், பீரங்கி நிலயங்களுமுள்ள இடங்களில் ஏஜண்டுகளை அமைத்து விடாமல் நீ போய் விடுவாயா? உண்மையை உரைப்பாயாகில் நீ அவ்விதம் செய்யாமல் இருக்க முடியாது. எதிரியின் ஏஜண்டுகள் இருக்கிறார்களென்பதை நீ ஒப்புக்கொள்ள வேண்டியதுதான்.

புத்திசாலியான சீமானும் சீமாட்டியும் “போலீஸ்காரர்கள் என்ன செய்கிறார்கள்” என்று கேட்கலாம். போலீஸார்கள் என்ன நடவடிக்கைகளைக் கையாண்டு வருகிறார்களென்று எனக்குத் தெரியும். அவர்கள் அரிய சேவைகளைச் செய்திருக்கிறார்கள். இப்பொழுதும் அநேக நடவடிக்கைகளைக் கையாண்டு வருகிறார்கள். ஆகையால் புத்திசாலியான சீமானும் சீமாட்டியும் அவர்களுடைய ஆபாசமான சிறு குழந்தைகளும் இவ்விதமான மனப்பாலைக் குடித்துக்கொண்டிருக்கட்டும். எதிரியின் ஏஜெண்டுகளிடம் செய்திகளை அறியவும் அவைகளை ஒலிபெருக்கவும் ரேடியோக்களிருக்கின்றன. இப்பொழுது நான் பேசுவதையும் எதிரியின் ஏஜண்டுகள் செவிகொடுத்துக் கேட்டுக் கொண்டிருக்கிறார்களென்று அறிந்து கொள்ளுங்கள்.

“எதிரிக்கு உதவக்கூடிய தகவல்” என்ற விஷயத்தை மறுபடியும் ஆராய்ச்சிசெய்வோம். அவர்கள் எந்தத் தகவல்களை அறிய விரும்புகிறார்களென்று காட்டக்கூடிய ஒரு ஜாபிதா என்னிடமிருக்கிறது. அது ஒரு நீளமான தஸ்தாவேஜு. எதிரிகளிடமிருந்து நாம் அறிய உத்தேசிக்கும் தகவல்களிலிருந்து கணிக்கப்பட்டது. அதை நான் வாசிக்கப்போவதில்லை. அது வீணாகக் காலத்தை ஓட்டிவிடும். எதிரிகள் நமது துருப்புகளின் சலனத்தையும், அவைகளின் அமைப்பு ஸ்தானங்களையும், எங்கிருந்து புறப்பட்டு அவைகள் எங்கு செல்லுகின்றனவென்றும் அறிய முயலுவார்கள். நம்முடைய யுத்த தளவாடங்கள், ஸப்ளைகள், நமது நஷ்ட விபரங்கள், கப்பல்களின் புறப்பாடு, வருகை, துருப்புகளின் பயிற்சி முகாம்கள், பயிற்சி முறைகள், மற்ற கடற்படை, ராணுவம், விமானப்படை சம்பந்தமான சகலவிதமான தகவல்கள் எல்லாவற்றையும் பற்றி அறிய எதிரி பிரியப்படுவான். பயன் படாமல் போய்விடுமென்று நினைத்து ரிபோர்ட் செய்ய பயப்படாதே. விசாரணை செய்யப்பட்ட கேஸ்களில் 99·5 சதவிகிதம் பயன் படுவதில்லை. ஆகிலும் 5 சத விகிதம் வெற்றிகரமாக முடியும்.

நீ செய்ய வேண்டிய கடமை தெளிவானது. அஜாக்ரதையுடன் நீ பேசாதே. உன் முன்னிலையில் பிறரையும் அவ்விதம் பேச அனுமதிக்காதே. எதையும் எழுத்து மூலமாக அனுப்புமுன் தீர்க்காலோசனை செய்து பார். கடிதங்களைத் தபாலில் போடுமுன் மறுபடியும் ஆலோசனை செய்து பார். இது விஷயமாகப் பேசவேண்டியதற்காக நான் வருந்துகிறேன். ஆகிலும் அதற்கு நான் ஜவாப்தாரியல்ல.

ஐந்துவருட காலமாக அனாவசியமான பேச்சுகளைப் பேசாதே என்று சொல்லும் படங்களும், புகைப்படங்களும், ஒலிபரப்பு பிரசங்கங்களும் உனக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. யுத்தத்துக்குமுன் அவைகள் வேறு வழியில் உபயோகிக்கப்பட்டன. அப்பொழுது, ஸோப், மார்கரைன், சாகலேட் முதலியவைகளுக்கு விளம்பரம் செய்ய அவைகள் உபயோகிக்கப்பட்டன. அவைகள் ஏராளமாக விற்பனை செய்யப்பட்டன. ஏனெனில் நீ அவைகளை வாங்க பிரியப்பட்டாய். அதே விதமாக எதிரிக்கு உதவியளிக்கக்கூடாத தகவல்களை வெளியிடாமல் பத்திரப்படுத்தும் இயக்கத்தில் நீ சிறிது பங்கெடுத்து கொண்டால் நமது வாலிபர்களும் அதில் ஈடுபடுவார்கள்,

## துணிவுகரமாகச் செய்யாதே.

“இதைச் செய்யாதே, அதைச் செய்யாதே” என்று சுலபமாகச் சொல்லிவிடலாம். யுத்தம் உலகமாளாவியிருக்கும்பொழுது ராணுவ விஷயங்களைப் பேசாமலிருப்பது மிகவும்

கஷ்டசாத்யமான காரியமென்றும் சொல்லவேண்டும். சவம் சமக்கும் குத்தகைக்காரர்களிடமிருந்து ஒருவனுக்கு அவனுடைய மாமியார் இறந்துவிட்டதாகவும் சவத்தை என்ன செய்வதென்று உத்திரவுகள் தந்தி மூலமனுப்பவேண்டுமென்று கோரி ஒரு கடிதம் வந்தது. "தைலமிட்டுக் காப்பாற்றுங்கள், தகனம் செய்யுங்கள், புதைத்துவையுங்கள். ஆகிலும் துணிவுகரமாகச் செய்யாதே" என்று அவர் பதில் தந்தியடித்தார். அவருடைய நடவடிக்கையை நீங்கள் பின்பற்ற வேண்டும்.

ஒவ்வொரு ஸ்திரீயும் பத்திரம் அவசியமென்று சொல்லிவந்தாள். பத்திரமென்பது வாயையும் எழுதும் சக்தியையும் அடக்கியாள வேண்டுமென்பதுதான்.

குற்றவாளியாக நிற்கும்பொழுது எதிரி தரப்பு வக்கீல் இவர் ராஜ விசுவாசமுள்ளவர் என்று மன்றாட வேண்டிய அவசியமில்லை. நீங்கள் எல்லோரும் ராஜ விசுவாசிகள்தான். ஆகிலும் இது உபயோகப்படாது. நீ அஜாக்ரதையாகப் பேசியபொழுது எதிரிக்கு உதவியளிக்கக்கூடிய தகவல்களை நீ வெளியிடவில்லையென்று உன்னுடைய வக்கீல் ருஜுச் செய்யவேண்டும். இது மிகவும் சிரம சாத்யமான காரியமென்று நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.

நீ குற்றவாளியென்று கண்டுபிடிக்கப்பட்டால் உனக்குக் காவல் தண்டனையும், அபராதமும் அல்லது இரண்டு தண்டனைகளும் விதிக்கப்படுமென்பது நிச்சயம்.

இவ்விதமான அஜாக்ரதையான பேச்சுகளிலிருந்து அநேக சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றனவென்று என்னுடைய யுத்த அனுபவமென்று நான் சொல்ல விரும்புகிறேன். இதற்கு அமிதமான சிக்ஷையாகுமா? இதன் பயனாக உயிர்துறந்தவர்கள் தங்களுடைய அபிப்பிராயங்களை வெளியிடக்கூடுமானால் இது பிரமாதமானதல்ல.

அஜாக்ரதையுடன் பேசும் அநேகர்களைத் தூக்கிலிட்டு அவர்களின் சரீரம் கயிற்றின் நுனியில் தொங்கிக்கொண்டு அவர்களின் நாக்குகள் வெளியில் துருத்திக்கொண்டிருக்கும். ஒரு பிரதேசத்தைச் சுற்றி இறந்தவர்களின் ஆன்மாக்கள் மேதினக் கொண்டாட்டத்தைப்போல் தாண்டவம் ஆடி வந்தால் அவர்களின் ஆன்மா சாந்தியடையுமென்று நான் நினைக்கிறேன். வந்தனம்.

---

## பொதுமக்களின் கணிதம்.

"இப்பொழுது இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கு பதிலாக அயல் நாடுகளிலிருந்து பாக்ஸைட்டை இறக்குமதி செய்தால் 7,000 உபரி விமானங்களை ஜப்பான் கட்டி விடலாம். இந்த 7,000 விமானங்களும் அமெரிக்காவின் 70,000 அமெரிக்க விமானங்களை சமாளித்து நிற்கும் ஆகையால் நாம் அமெரிக்காவின் உற்பத்தியுடன் போட்டிக்கு நிற்கலாம்". ஜப்பானியப் பதிப்பு—நவம்பர் 1943. "பிரிடனும், அமெரிக்காவும், ஜப்பானையும் அதன் பெரிய கிழக்கு ஆசியாவையும் முறியடிக்க வேண்டுமானால் 300 வருடங்கள் வரையில் போராட வேண்டும். 30 மிலியன் டாலர்களைச் செலவிடவேண்டும். இவ்வித தியாகம் செய்தாலும் அவர்கள் எல்லா ஜப்பானியர்களையும் அழித்துவிட முடியாது. ஏனென்றால் ஜப்பானில் ஒரு நிமிஷத்தில் இரண்டு குழந்தைகள் பிறந்து விடுகின்றன. ஒரு வயது முதிர்ந்தவர் மாண்டு போகிறார். ஜப்பானியர்களைப்போல ஐந்து மடங்கு நஷ்டம் நேசதேசங்களுக்கு ஏற்படுகிறது. ஆகையால் புள்ளி விபரங்களைக்கண்டு மயங்குவதினால் யுத்தத்தில் வெற்றிபெற முடியாது." ஜப்பானிய ஒலிபரப்பு—ஏப்ரல் 1944.

---

## உங்களுக்குத் தெரியுமா?

1943-ம் வருஷம் கிராமப் பெண்கள் பிரிடனின் 76,446-ம் மக்களுக்கு ஒரு வருஷத்துக்குப் போதுமான ஜாம் (Jam) என்ற பழரஸத்தை பழங்களிலிருந்து தயார் செய்திருக்கின்றனர்.

பிரிடனின் முக்கிய போக்குவரத்தான தென் ரயில்வே 2,000,000க்கு மேற்பட்ட சவரக்கத்திகளை சேகரித்திருக்கிறார்கள். அதன் மூலம் 700 பவுன்கள் ராயல் விமானப்படை நன்மை நிதிக்கு கொடுக்கப்பட்டுள்ளது.



சமாதானமான காலத்தில் பிரிடனில் 250,000 டன்கள் நிறையுள்ள வெங்காயங்களை சாப்பிட்டனர். இவைகளில் 6,000 டன்கள்தான் பிரிடனில் விளைவிக்கப்பட்டவை. பூவரசும் மஞ்சள் பூக்களும் பயர்செய்தோர்கள் இவைகளை நிறுத்தி வெங்காயம் உற்பத்தி செய்ய வேண்டப்பட்டனர். 1943-ம் வருஷம் 95,000 டன்கள் வெங்காயம் உற்பத்தி செய்யப்பட்டது.

விடுதலைக்குப்பின் ஆக்கிரமித்த ஐரோப்பிய நாடுகளின் தேவைகள், உணவுப்பொருள், மூலப்பொருள்கள், அன்றியும் இதரதேவைகள், 45,855,000 டன்கள் எனக்கணக்கிடப்பட்டிருக்கிறது.

சென்ற 12 மாதங்களில் லங்காஸ்டர் குண்டுபோடும் விமான உற்பத்திக்கு வேண்டிய மனிதர்கள், நேரங்கள், இவைகள் 100-க்கு 38·2 சதவிகிதம் குறைவு பட்டிருக்கிறது.

யுத்தம் ஆரம்பித்த முதல் நான்கு வருஷங்களில், உற்பத்திகள், 100-க்கு 20 சதவிகிதம் அதிகப்பட்டு, 120,000 வேலையாட்கள் செய்ய வேண்டிய வேலை இப்போது 100,000 ஆட்களால் செய்யப்படுகிறது.

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனுமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டென்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 200. (4-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3- 6-44 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | 7- 6-44 | நார்த்தாமலை | ... மாலை | 7.00 |
| 4- 6-44 | சீர்ப்பழனி | ... ,, | 7.00 | ,, | உப்பிலியக்குடி. | ... ,, | 7.30 |
| ,, | ஆலூர் | ... ,, | 7.30 | 8- 6-44 | அண்டக்குளம் | ... ,, | 7.00 |
| 5- 6-44 | புத்தாம்பூர் | ... ,, | 7.00 | ,, | கிள்ளனூர் | ... ,, | 7.30 |
| ,, | வைத்திக்கோவில் | ... ,, | 7.30 | 9- 6-44 | கொடும்பாளூர் | ... ,, | 7.00 |
| 6- 6-44 | வடவாளம் | ... ,, | 7.00 | ,, | விராலூர் | ... ,, | 7.30 |
| ,, | சம்மட்டிவிடுதி | ... ,, | 7.30 | | | | |

### பிரஸங்கம் 201. (5-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 10- 6-44 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | 14- 6-44 | புலியூர் | ... மாலை | 7.00 |
| 11- 6-44 | ஆலங்குடி | ... ,, | 7.00 | ,, | கண்ணங்குடி | ... ,, | 7.30 |
| ,, | ராசியமங்கலம் | ... ,, | 7.30 | 15- 6-44 | நல்லூர் | ... ,, | 7.00 |
| 12- 6-44 | திருமெய்யம் | ... ,, | 7.00 | ,, | மாத்தூர் | ... ,, | 7.30 |
| ,, | மேலூர் | ... ,, | 7.30 | 16- 6-44 | பள்ளிவாசல் | ... ,, | 7.00 |
| 13- 6-44 | அன்னவாசல் | ... ,, | 7.00 | ,, | பில்லமங்கலம் | ... ,, | 7.30 |
| ,, | கீழக்குரிச்சி | ... ,, | 7.30 | | | | |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 3—6—44 | வெட்டன்விடுதி. | 10—6—44 | பொன்னமராவதி. |
| 4—6—44 | ஏம்பல். | 11—6—44 | கொடும்பாளூர். |
| 6—6—44 | பேராம்பூர். | 13—6—44 | கோனுபட்டு. |
| 7—6—44 | கரம்பக்குடி. | 14—6—44 | ராயவரம். |
| 8—6—44 | குழிபிறை. | 15—6—44 | கீழாநிலை. |
| 9—6—44 | பாப்பாபட்டி. | 16—6—44 | புதுக்கோட்டை. |

## நூல் சாமான்கள். (4)

### உங்களுக்குத் தெரியுமா?

### I

ஸ்டாண்டர்ட் துணி வியாபாரத்தினால் சாதாரண மனிதன் தன்னால் கொடுக்க முடிந்த பணத்தைக்கொண்டு துணிகளைப் பெறுகிறார்.

ஏழைகள் துணிவாங்க முடியாது கஷ்டப்பட்டகாலத்தில் நாட்டில் துணிப் பஞ்சம் ஏற்படாமல் ஸ்டாண்டர்ட் துணி தடுத்தது.

துணிகளின் விலையில் கட்டுப்பாடு ஏற்படுத்து முன்னரே பொதுவாய் துணிகளின் விலையில் குறைவு ஏற்படுத்தியது இந்த ஸ்டாண்டர்ட் துணிகளாகும்.

1944-ம் வருஷம் மார்ச்சு மாதம் முடிவுடன், 12 கோடி ரூபாய்களுக்குமேல் பொருமானமுள்ள ஸ்டாண்டர்ட் துணிகள் வியாபாரமாயிருக்கின்றது.

ஸ்டாண்டர்ட் துணியானது இப்பொழுது இன்னும் நயமானதாயுள்ளது இருப்பினும் அதன் விலை முன்போலவேயுள்ளது.

### II

ஸ்டாண்டர்ட் துணி வியாபாரம் 1943-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. துணிகளின் விலை அதிகமாயுள்ள காலத்தில் ஏழை ஜனங்களுக்கு குறைந்த விலையில் துணிகள் ஸப்ளை செய்யவே இது ஆரம்பிக்கப்பட்டது. நூல் சாமான்கள் தயாரிக்கும் ஒவ்வொரு தொழிற்சாலையிலும் 100-க்கு இத்தனை சதவிகிதம் என்று குறிப்பிட்ட ஒரு அளவு ஸ்டாண்டர்ட் துணிகள் தயாரிப்பதாய் வாக்குறுதி எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இம்மாதிரி தயாரித்த ஸ்டாண்டர்ட் துணிகளை அரசாங்கம் அல்லது ஸ்டேட் இவர்களிடம் குறைந்த விலைக்கு கொடுப்பதாயும் ஒத்துக் கொண்டுள்ளார்கள்.

இந்தத் துணியை பல வியாபாரியின் மூலம் உற்பத்தியாவதற்கான செலவுக்கு மேல் 100-க்கு 6¼ சதவிகிதம் லாபம் சேர்த்து, கொடுக்கப்படுகிறது.

ஸ்டாண்டர்ட் துணி வியாபாரம்தான் முதன் முதல் உயர்ந்த விலையைத் தடுத்தது.

இந்த முறை ஆரம்பித்ததுமுதல் 266,000,000 கஜம் துணி 13 கோடி ரூபாய்க்கு 1944-ம் வருஷம் ஏப்ரல் மாத முடிவோடு விற்கப்பட்டது. இதர துணிகளைவிட ஸ்டாண்டர்ட் துணிதான் இப்பொழுது விலை குறைந்துள்ளது. அதில் விலை குறைச்சலாயுள்ளது 100-க்கு 50 சதவிகிதம் குறைச்சலாயுள்ளது.

### III

ஸ்டாண்டர்ட் துணியை உபயோகியுங்கள்.

வியாபாரமாகும் இது போன்ற துணிகளைவிட ஸ்டாண்டர்ட் துணிதான் விலை குறைவாயுள்ளது.

எல்லோர் மனதிற்கும் பிடித்ததாய் பல ரகங்களில் 100 வித துணிகளுக்கு மேல் உள்ளன.

இதர துணிகள் வாங்கினால் ஸ்டாண்டர்ட் துணிகளுக்கு கொடுக்கும் விலையை விட 15 முதல் 50 சதவிகிதம் அதிகப்பட்ட விலை கொடுக்கவேண்டும்.

வேலைச் செலவைக் கட்டுவதற்காக உற்பத்தி விலைக்குமேல் ஒரு சிறிது லாபம் சேர்த்து ஸ்டாண்டர்ட் துணிகள் விற்கப்படுகின்றன. ஆனால் இதர நூல்களில் 100-க்கு 20 சத வீதம் லாபம் வைக்கிறார்கள்.

**எல்லா கோவாபரேட்டிவ் ஸ்டோர்களிலும் சொஸைடிகளிலும் ஸ்டாண்டர்ட் துணி விற்கப்படும்.**

Sri Brihadamba Stato Pross, Pudukkottai. 1,750—8-6-44.


புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1944-ம் வருஷம் ஜூலை மீ 1 உ [ந. 204


தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CCIV.

## ஹிட்லருக்கு நாம் போதித்த பாடம்.

### எட்டாம்படைச் செய்தி.

(ஜார்ஜ் E. மார்கஸ்).

அடால்ப் ஹிட்லர் யுத்தம் ஆரம்பித்தபோது அவனிடத்தில் ஒரு ஆயுதம் இருந்தது. அதாவது டோடலிடேரிய முறை. மொத்தமான யுத்தத்தை உண்டாக்கப்போவதாக இந்த டோடலிடேரிய முறையேயாம்.

ஸ்வதந்திர தேசம் எதும் விரும்பாத வழிகளில், ஹிட்லர் ஜெர்மனியைத் தூண்டி ஜெர்மனியை யுத்த இயந்திரமாக்கி, மின்னல் சண்டைகளைக்கொண்டு உலகை ஜெயித்து, அதனால் மூலப்பொருள்களை அதிகப்படுத்தியும், ஜனங்களை அடிமைப்படுத்தவும் அந்த ஜெர்மானியரின் இஷ்டத்திற்கு நடத்தவும் முயலுகிறான்.

ஹிட்லர் இன்றையதினம் வெறுக்கப்படுகிறான். ஹிட்லர் டோடலிடேரிய முறைகளைக் காண்பித்தான். மொத்தமான யுத்தத்தை உண்டாக்கி விட்டான்.

இப்பொழுது அவனும் ஜெர்மன் மக்களும் நடத்த முடியும் என்று நினைக்காத சில காரியங்களை அனுபவிக்கின்றனர். அதாவது பொதுஜனங்கள் அனைவரும் இவனை எதிர்த்து ஒவ்வொரு ஆணும், பெண்ணும் சுயநலம் விடுத்து உலகவிடுதலைக்காக போரிடுவதாகும்.

### பொருந்நச் செய்நல்.

இந்த ஒன்றுபட்ட உணர்ச்சியும், தியாகமும் எவ்வாறு உண்டானது? சிலர் டன்கர்க்கும், இன்னும் நாம் அடைந்துள்ள உணர்ச்சிகளுமாகும் என்று கூறுகின்றார்.

ஆனால் இதற்குக் காரணம் லேசில் பொருந்தத்தக்கதும், பலராலும் போற்றத்தக்கதுமான இந்த குடியரசுதான் இம்மாதிரி ஊக்கத்தை அளித்திருக்கிறது என்றும் கெஸ்டபோ முறைகளால் இதைக்குலைக்க முடியாது என்றும் நினைக்கிறேன்

பிரிடனிலும், அமெரிக்காவிலும் இந்த டோடலிடேரிய முறையை எதிர்த்துள்ளோம். அன்னியில் இந்த டோடலிடேரிய முறையானது விடுதலையன்றியும் நாகரீகத்தை அடக்கியதாயுமுள்ளது.

அமெரிக்காவில் இந்த கொடும் யுத்த முயற்சி ஐரோப்பாவின் மேல் பகலில் ஏற்படும் தாக்குதலின்றும் வெளிப்படுத்தப்படுகின்றது. அத்தகைய முயற்சிகள் பலம் நிறைந்த தேசத்தில் முடிந்தவரை சிக்கனமாயும், நல்ல உற்பத்தியாலும்தான் உண்டாக்கியிருக்கிறது. அதுவுமன்னியில் உள்நாட்டுத் தேவைகளையும் சிறிதும் பாதிக்கவில்லை.

பிரிடனிலும் இதே பயன்கள அனுபவிக்கப்பட்டுள்ளன. அதிகப்பட்ட உற்பத்தியாலும், குறைவாய் தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்வதாலும், பொருளை சேமித்ததிலிருந்து எடுத்தும், 100 சதவீத முயற்சியெடுத்துக்கொண்டும் இவைகள் அடையப்பட்டன.

யுத்தகாலச் செலவு.

இந்த விலையுயர்வுகளைக் கருதியும், ஜனத்தொகையையும் கருதியும், 1944—45-ம் வருஷக் குறிப்பில் 100,000 டாலர்கள் யுத்தத்திற்கு செலவுகளை குறிக்கப்பட்டிருப்பது பிரிடிஷ், அமெரிக்க உற்பத்தி முயற்சிகளை ஒரே மாதிரியுள்ளதை தெரிவிக்கிறது.

1939-ம் வருஷ முதல் அமெரிக்க தேசவருவாய் இருமடங்காயுள்ளது. அதில் 100-க்கு 50 சதவீதம் யுத்தத்திற்கு செலவிடப்படுகிறது.

மொத்தமாய் சொல்லப்போனால் அமெரிக்காவில், நாட்டிற்கு வேண்டிய சாமான்களுடன் யுத்த தேவைகளும் உடனுக்குடன் உற்பத்தி செய்யப்படுகிறது என்றுதான் சொல்ல வேண்டும். யுத்த உற்பத்தியும், சமாதான உர்பத்தியும் உடனுக்குடன் செய்யப்படுகிறது. பிரிடனில் இப்படி இல்லை.

பிரிடனில், ருஷ்யா, அமெரிக்கா போல மூலப்பொருள்கள் அதிகமாய் இல்லாததால் உற்பத்தி அதிகமாய் செய்ய முடியாமல் தன் நாட்டுத்தேவை யுத்தத்திற்கு முன்போல வைத்துக்கொண்டு அதிகப்படாமல் மட்டும் இருக்குமாறு செய்துள்ளது.

ஹிட்லருக்கு இவ்விதமாய் குடியரசு போல சர்வாதிகாரம் ஒரு தேசத்தின் மூலம் பொருள்களை முற்றிலும் பெறமுடியாது என்று போதித்தது இப்போதுதான்.

ஆண்களும், பெண்களும் தொழிற்சாலைகளுக்குச் செல்லுகின்றனர். கிழவர்கள், ஸ்திரீகளும் செல்லுகின்றனர். பிரிடிஷார் கூரிய புத்தி புதுப்புது முறைகளைக் கையாளுகின்றனர். அதில் முக்கியமானதும், ஹிட்லர் அறிந்துகொள்ள இயலாததுமான மனித சக்தி, யந்திரங்கள், மூலப்பொருள்கள் இவைகளில் கட்டுப்பாடுதான் முக்கியமாய் உலகில் யாரும் காண முடியாதபடி உற்பத்தியை அதிகம் செய்வதுமாகும்.

தேவைக்குரிய சாமான்கள் கிடைக்காதபோது ஜனங்களிடம் அதிகப்படை உளது.

ஸ்திரீகள் ஒரு புதுத்தொப்பிக்கு எத்தனை வேண்டுமோனாலும் கொடுக்கத்தயாராயுளர், அதிக லாபம் சம்பாதிப்பவர் இதை அடைய விரும்புகிறார்கள். இதனால் அதிக உப்பல் ஏற்படும்.

முழுமனதுடன் முயற்சி.

இந்தக் கஷ்டத்தை சமாளிக்க யுத்தம் ஆரம்பித்தவுடன் விலைக்கட்டுப்பாடும் ஏற்படுத்தப்பட்டது.

இந்த விலைக்கட்டுப்பாடு ஏற்பட்டபின் 1939 ஸெப்டம்பரில் இருந்ததைவிட 1941 ஏப்ரலில் 30 சத வீதம் வாழ்க்கையில் நிலை அதிகப்பட்டுள்ளது.

இதைத் தடுப்பது வரியால் மட்டும் அல்ல. பிரிடனால் இன்று ஏற்பட்டிருப்பது போன்ற விலைக்கட்டுப்பாடும் ஸப்ளைக்கட்டுப்பாடும்தான். இம்மாதிரி வேறுநாடுகளில் கண்டதுமில்லை.

மொத்தமான இந்த யுத்தம் என்னவென்பதை பிரிடன் ஹிட்லருக்கு காண்பித்துள்ளது இந்த யுத்தம் மக்களின் முழுமன முயற்சியுடன் இங்கிலாந்தில் போரிடப்படுகிறது.



# வார யுத்தச் செய்திகள்.

## (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 19—6—44 (திங்கட்கிழமை). | நேசதேச வெடிவிமானங்கள் பிரான்ஸிலுள்ள ஓட்டியில்லா விமான தளங்கள் பேரில் குண்டுகளைப் போட்டன. |
| 20—6—44 (செவ்வாய்க்கிழமை). | எல்பாவில் ஜெர்மானியரின் எதிர்ப்பு ஓய்ந்தது.<br>ருஷ்யர்கள் பின்லாந்தில் வைபோர்க்கைப் பிடித்தார்கள்.<br>ஜப்பானியப்படைகள் சைனாவில் செங்ஷாவுக்குள் புகுந்தன.<br>14-வது சேனை இந்தியாவில் கொஹிமாப் பகுதியில் 17 மைல்கள் முன்னேறிற்று. |
| 21—6—44 (புதன்கிழமை). | நேசதேசப் படைகள் பிரான்ஸில் வாலோன்ஸையும், மாண்டிபர்க்கையும் விடுவித்தன.<br>ருஷ்யர்கள் ஸ்விர் நதியைத் தாண்டினார்கள்.<br>நேசதேசப் படைகள் மாரியனாஸ் தீவுக்கருகில் ஜப்பானியக் கடற்படையை எதிர்த்தன.<br>நேசதேச கடற்படையைச் சேர்ந்த வெடிவிமானங்கள் அந்தமான் தீவுகளிலுள்ள பிளேர் துறைமுகத்தைத் தாக்கின. |
| 22—6—44 (வியாழக்கிழமை). | நேசதேசப்படைகள் பிரான்ஸில் செர்பர்க்கைப் பிடிக்க இறுதித் தாக்குதலை ஆரம்பித்தன.<br>நேசதேசப்படைகள் இம்பாலிலிருந்த படைகளின் சிரமங்களை நிவர்த்தித்தன.<br>நேசதேசப் படைகள் ஜப்பானிய கடற்படைக்கு படுதோல்வியை இழைத்தன. எதிரியின் 14 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன அல்லது பழுதாக்கப்பட்டன. |
| 23—6—44 (வெள்ளிக்கிழமை). | அமெரிக்கர்கள் பிரான்ஸில் செர்பர்க்கின் எல்லைப்புறங்களை அடைந்தார்கள்.<br>செம்படை வெண்மை ருஷ்யாவில் நாஸிகளின் தற்காப்புகளை ஊடுருவிச் சென்றது. |
| 24—6—44 (சனிக்கிழமை). | அமெரிக்கர்கள் பிரான்ஸில் செர்பர்க் பிராந்தியத்தில் எதிரியின் இரண்டு மைல்கள் உள்ள தற்காப்புகளை நொருக்கினார்கள்.<br>ருஷ்யர்கள் வைடப்ஸ்கிலுள்ள தற்காப்புகளை நொருக்கினார்கள். |
| 25—6—44 (ஞாயிற்றுக்கிழமை). | நேசதேசப்படைகள் இதாலியில் பெசியாவையும், சியனோவையும் பிடித்தன.<br>நேசதேசப் படைகள் பர்மாவில் மோகாங்கைப் பிடித்தன. |
| 26—6—44 (திங்கட்கிழமை). | நேசதேசப் படைகள் பிரான்ஸில் செர்பர்க்கைப் பிடித்தன. |

## (B)-செய்திச் சுருக்கம்.

**பிரான்ஸ்.**—செர்பர்க் என்ற முக்கியமான துறைமுகம் விழுந்துவிட்டது.

அதற்குமுன் செர்பர்க் தீபகற்பத்தில் முன்னேறிவரும் அமெரிக்கப்படைகள் ட்யூர் தெவில்லா—ஹேக், அக்வெவில்லி, ஸெயிண்ட் பியரி எக்ஸின், நோவென்வில்லி முதலிய இடங்களை பிடித்தன.

செர்பர்க்கில் ஸ்டாலின்கிராட்டைபோல் சிறிய நடவடிக்கை மூண்டது. இறுதிவரையில் போராடவேண்டி உத்திரவிடப்பட்ட ஜெர்மானியர்கள் கடுமையாகப் போர்புரிந்தார்கள். நார்மண்டியில் படைகளிறங்கிய 20 நாட்களுக்குப்பின் 26-ம் தேதி இரவில் நகரத்தில் வடமேற்கு பாகத்தில் கடும்போர் நடைபெற்றபின் அந்த நகரம் வீழ்ச்சிபெற்றது.

இந்தப் போரில் எதிரிக்கு நான்கு காலாட்படை டிவிஷன்களும் அநேக கடற்படையைச் சேர்ந்தவர்களும் நஷ்டமாகின.

செர்பர்க்கிலிருந்த ஜெர்மன் படைகளின் கமாண்டரான லெப்டினண்ட் ஜெனரல் கார்ல்வான் ஷ்லீபெனும், நார்மண்டியை தற்காப்பு செய்யும் கடல் கமாண்டரான கடற்தளபதி கோண்டர் ஹென்னக்கியும் பிடிபட்டார்கள்.

ஜெர்மானியர்களுக்கு 30,000 பேர்கள் நஷ்டமாகிவிட்டன. செர்பர்க்குக்குக் கிழக்கிலுள்ள மாபெர்டியஸ் விமானதளத்திலும் தீபகற்பத்தில் வடமேற்கு மூலையிலும் எதிர்த்து நிற்கும் ஜெர்மன் படைகள் துடைக்கப்படுகின்றன.

தீபகற்பத்தின் மற்றொரு மூலையில் டில்லி-கெயின் பிராந்தியத்தில் போர்புரிந்து வந்து ஸெயிண்டு ஹோனோரினுவையும், ஹாட்டாட்டையும் விடுவித்த பிரிடிஷ் கனடியப் படைகள் 'முன்னேறித்தாக்க' ஆரம்பித்துவிட்டன. அவைகள் ஒடான் நதியை அடைந்துவிட்டன. அவைகள் கெயன் வில்லர்ஸ்—போகாக் இருப்புப்பாதையைக் கடந்துவிட்டன. டில்லிக்கு சமீபத்தில் ஷ்யூக்ஸ், ஸெயிண்ட் மாவீ, ஜூவிக்னி, லாகாலி முதலிய இடங்களைப் பிடித்திருக்கிறார்கள். ஒடான் நதிக்கு வடக்கிலுள்ள கோல்வில்லியைச்சுற்றி கடும் போர் நடைபெறுகிறது.

பிரான்ஸின் தேசாபிமானிகளின் எதிர்ப்பு வலுவடைந்து வருகிறது. லோரைனில் பிணையாளிகள் ஏராளமாகக் கைது செய்யப்படுகிறார்கள்.

பெரிய நாசவேலை மூலமாக கோபன்ஹேகனிலுள்ள டான்ஸ்க் ரெகில் சண்டிகாட் ஆயுத உற்பத்திசாலை தூளாகிவிட்டது. திங்கட்கிழமையன்று ஜெர்மன் ஆக்கிரமிப்புச் சேனையை எதிர்த்து கலவரம் உண்டாகிற்று.

**இதாலி.**—மத்திய இதாலியில் பெருகியாவுக்குப் பின்னும் டிராஸிமென்ஸ் ஏரியைச்சுற்றியும் எதிரியின் எதிர்ப்பு பலமாகயிருப்பதால் நேசதேசத்தாரின் முன்னேற்றம் தாத்காலிகமாக தடைபட்டிருக்கிறது. ஆகிலும் கீழ்கண்ட இடங்களை நேசதேசப்படைகள் கைப்பற்றின. ஸ்ட்ராடா, ஸான்பாடுக்கியோ, மாண்டிகியோகா, கார்சியானோ, சின்ஸி, கியோவெல்லா, போர்டோ. சின்ஸியைப் பிடித்துவிட்டதால் ப்ளாரென்ஸுக்குப் போகும் வழி திறக்கப்பட்டுவிட்டது.

ஏட்ரியாடிக் பகுதியில் நேசதேசப்படைகளும், இதாலிய விடுதலைப்படைகளும் ஒன்றுபட்டு ரோசரா அம்ப்ரா, சான்மார்கே, காமரினோ முதலிய இடங்களைப்பிடித்தபின் அங்கோனா துறைமுகத்தை நோக்கி முன்னேறுகின்றன.

மேற்குப் பக்கத்தில் டிரேனியன் கடற்கரைப் பகுதியில் 5-ம் படை 173 ரஸ்தாக்கள் வழியாக துரிதமாக முன்னேறி லெக்ஹார்னை சமீபித்துவிட்டது. இதற்குமுன் அது ஸான்வின்சென்ஸ், ஸாஸெட்டா, சின்ஸ்டினோ, மாண்டியரி முதலிய இடங்களைப் பிடித்தது.

**ருஷ்யா.**—ருஷ்யர்கள் ஆர்க்டிக்கிலும், வெண்மை ருஷ்யாவிலும் புதிய தாக்குதலை ஆரம்பித்துவிட்டார்கள்.

பின்னிஷ் போர்முனையில் ருஷ்யப்படைகள் லாடோகா, ஒனிகா ஏரிகளுக்கு மத்தியில் ஸ்விர் நதியைத் தாண்டிவிட்டார்கள். ஒலோனட்ஸ், ஸோல்டோசெரோ, மெட்வெழி கோராவையும் கோயிவிஸ்டோ, ஜூலான்சாரி என்ற தீவுகளையும் ருஷ்யர்கள் கைப்பற்றினார்கள். ஜெர்மன் படைகள் ஹெல்ஸிங்கியைத் தற்காப்பு செய்வதற்காக அதற்குள் நுழைந்துவிட்டன.

வெண்மை ருஷ்யாவில் ஜெர்மனியின் வடக்கு தெற்கு அரண்களான வைடப்ஸுக்கும் சிலோபினும் மொகிலெவும் விழுந்துவிட்டன.

**ஐரோப்பா பேரில் விமான நடவடிக்கை.**—1,000 சண்டை விமானங்கள் துணைக்காவல் கொண்ட 1,000 அமெரிக்க வெடிவிமானங்கள் ஜூன் மாதம் 2-ம் தேதியன்று பெர்லின் பேரிலும் பெர்லினைச் சுற்றியுள்ள பாஸ்டாப்பேரிலும் வெடிகுண்டுகளைப் போட்டன.

இந்த வாரத்தில் கீழ்கண்ட இடங்கள் பேரிலும் வெடிகுண்டுகள் வீசப்பட்டன.

ஷால்ஸ்விக்—ஹோல்ஸ்டீன், ஹானோவர், ஹாம்பர்க், பிரன்ஸ்விக், போலந்தில் டிரோஹோபேயஸ், ருமேனியாவில் போலஸ்தி, கிர்க்யூ, யூகோஸ்லாவியாவில் பிரோட், நிஷ்.



**பஸிபிக் போர்.**—அமெரிக்க வெடிவிமானங்கள் ஜப்பானிய கடற்படையை ஜூன் மாதம் 19-ம் தேதி திங்கட்கிழமையன்று மாரியனஸ் தீவுகளுக்கும், பிலிப்பைன்ஸிலுள்ள லூசானுக்கும் மத்தியில் எதிர்த்தன. எதிரியின் நான்கு அல்லது ஐந்து யுத்தக் கப்பல்களும் ஐந்து அல்லது ஆறு விமானந்தாங்கிக் கப்பல்களும், 5 எண்ணெய்க் கப்பல்களும் இன்னும் கணக்கிட முடியாத சஞ்சாரிகளும் நாசகாரிகளும் தாக்கப்பட்டன. எதிரியின் இரண்டு விமானம் தாங்கிக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. ஒன்று தீப்பற்றி எறிந்துகொண்டிருந்தது. ஒன்றின்பேரில் வெடிகுண்டுகள் நேராடி விழுந்தன. ஒரு யுத்தக் கப்பலும், ஒரு சஞ்சாரியும், நான்கு நாசகாரிகளும், ஐந்து எண்ணெய்க் கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன அல்லது தீப்பற்றி எறிந்துகொண்டிருந்தன. 353 விமானங்கள் அழிக்கப்பட்டன.

எதிரி போரிலிருந்து விலகிக்கொண்டு பார்மோஸாவுக்கும், லூசானுக்கும் மத்தியில் இரவில் ஓடிவிட்டான்.

அமெரிக்க டாஸ்க் படைகள் ஜப்பானின் உள்நாட்டு தற்காப்பு அரணுனதும் யோகஹாமாவுக்குத் தென்கிழக்கில் 560 மைல்களுக்கப்பாலிலுமுள்ள போனினைத் தாக்கின.

அவைகள் மாரியனத் தீவுக்கூட்டத்தைச் சேர்ந்த காஸான், டினியாவ், பாகாவ், ரொடா தீவுகளையும் தாக்கின.

அமெரிக்கத் துருப்புகள் மாரியனஸ் தீவுக் கூட்டத்தைச் சேர்ந்த சைபான் தீவிலுள்ள மௌண்ட் நாயுடானையும், மௌண்ட் டாப்ஸ்ட்சாவையும் காக்மான் தீபகற்பத்தையும் பிடித்தன.

**பர்மா.**—கோஹிமா ரஸ்தா வழியாகச் சென்ற படைகள் இம்பாலின் கஷ்டத்தை நிவாரணம் செய்தன. அதற்கு அடுத்தார்போல் வட பர்மாவிலுள்ள ஜப்பானிய ஸப்ளை தளமான மோகாங்கை சீனப் படைகளும் சிண்டிட்டுகளும் பிடித்துவிட்டார்கள். மோகாங் பிடிபட்டபின் மிட்கினாவில் ஜப்பானியரின் தாக்குதலின் வலிமை குறைந்துவிட்டது.

இப்பொழுது சீனப் படைகளும், அமெரிக்கப் படைகளும் பர்மாவுக்குள் 300 மைல்கள் முன்னேறியிருக்கிறார்கள்.

சீனாவிலிருந்து முன்னேறிவரும் சீனப் படைகள் பர்மா ரஸ்தாவை நாங்ஷிக்கருகில் துண்டித்துவிட்டன.

**இந்தியா.**—கிழக்குப் போர்முனையிலுள்ள கப்பல்களிலிருந்து விமானங்கள் அந்தமான் தீவுகளிலுள்ள பிளேர் துறைமுகத்தைத் தாக்கின. ஹிப்ஜிஸ்மானிலுள்ள மின்சார உற்பத்தி நிலயமும், படாவ்லானி தளமும் பழுதாக்கப்பட்டன. விமானந்தாங்கிகளில் சென்ற விமானங்கள் 10 நிமிஷங்கள் வரையில் குண்டுகளைப் பொழிந்தன.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்ரெமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**18—6—44.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—ரயில்வே தளங்கள்—ரென்னிஸ் (Rennes).

இலக்குகள்.—பாரெஸ்ட் டாண்டெய்ன் (Forest Dandaine).

போக்குவரத்து இலக்குகள்.—எதிரி அரண்களுக்குப்பின்.

ரயில்வே இலக்குகள்.—மாண்ட்ரியூல் பெல்லே (Montreuil Bellay), ஸாமூர் (Saumur).

எண்ணெய்க்கிணறுகள்.—வடமேற்கு ஜெர்மனி (N. W. Germany), ஹாம்பர்க் (Hamburg).

இரவு.—போக்குவரத்துகள், போக்குவரத்து பாலங்கள், ரயில்வே இலக்குகள்.—பிரான்ஸ் (France).

**இதாலி (Italy).**

எதிரி சைனியங்கள், போக்குவரத்துகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

**ருஷ்யா (Russia).**

(36 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

காரோலைன்ஸிலுள்ள டிரக் (Truk).

ஜப்பானிய சைனியங்கள்.—செய்பான் (Saipan) தீவு.

**பர்மா (Burma).**

எதிரி சைனியங்கள், துருப்பு முகாம்கள், போக்குவரத்துப் பிரதேசங்கள்.—தென்கிழக்கு கொஹிமா (S.E. Kohima) ஸாபார்மெய்னா (Safarmaina), காபா (Kabaw).

உதவிகள்.—மித்கினா (Myitkyina) விற்கருகிலுள்ள தரைப்படைகள் மொகாங் (Mogaung).

**19—6—44.** (திங்கட்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—விமானியில்லாத விமான தளங்கள்—பாஸ் டி கலே (Pas De Calais) பிரதேசங்கள்.

விமான நிலயங்கள்.—தென்மேற்கு பிரான்ஸ் (S. W. France).

வேவுபார்த்தல்.-கடற்கரையிலும் கால்வாய்ப் பிரதேசம் (Channel).

எதிரித் துருப்புகள் சைனியங்கள்.—செர்பர்க் (Cherbourg) தீபகற்பம்.

இரவு.—போக்குவரத்துகள்—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

எதிரி தற்காப்புகள்.—செர்பர்க் (Cherbourg) துறைமுகம்.

**இதாலி (Italy).**

ஒரு தகவலும் இல்லை.

**ருஷ்யா ((Russia).**

(36 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.-டப்ளின் (Dublon), ஈடன் (Eten), பாரம் (Param).

ஜப்பானிய சைனியங்கள்.—மத்திய பஸிபிக்கிலுள்ள மாரியனுஸ் (Marianas).

**பர்மா (Burma).**

எதிரி சைனியங்கள், துருப்பு முகாம்கள், மோட்டார் போக்குவரத்துகள்.—பிஷென்பூர் (Bishenpur) பிரதேசம்.

மோட்டார் போக்குவரத்துகள், படகுகள்.—அலான் (Alon), (Ye-u,) ஷுவேபோ (Shwebo), பிங்கெய்ங் (Pyingaing).

**20—6—44.** (செவ்வாய்க்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—பாலம்—நாண்டீஸுக்கு (Nantes) அருகில்.

ரயில்வேப் பாலம்.-கிரென்வில்லி (Granville).

சேமிப்புகள் மோட்டார்ப் போக்குவரத்துகள்.—டிராப்ஸ் (Trappes).

ரயில்வேப் பாதைகள்.—சார்ட்ரெஸ் (Chartres).

இரவு.—ரயில்வே ஸ்தலங்கள்—மேஸிடான் (Mezidon), சார்ட்ரெஸ் (Chartres).

எதிரி துருப்புகள், துருப்பு சைனியங்கள்.—செர்பர்க் (Cherbourg).

**இதாலி (Italy).**

எதிரித்துருப்புகள், சைனியங்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

**ருஷ்யா (Russia).**

(24 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய தளங்கள்.-ஷிமுஷு (Shimushu), பாராமுஷிரோ (Paramushiro).

காரோலைன்ஸ்தீவிலுள்ள போனுபி (Ponape).

மீதமாயுள்ள ஜப்பானிய தளங்கள்.—மார்ஷல்ஸ் (Marshalls).

**பர்மா (Burma).**

எதிரி சைனியங்கள், சேமிப்பு திரவியங்கள், டாங்கிகள்.—மாரம் (Maram) அருகில், இம்பாலிற்கு தென்கிழக்கு (Imphal).

இலக்குகள்.—உக்ருல் (Ukhrul), டிடிம் (Tiddim).

**21—6—44.** (புதன்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—இலக்குகள்—பெர்லின் (Berlin), தென்மேற்கு ஜெர்மனி (N. W. Germany).

எதிரி சைனியங்கள்.—செர்பர்க் (Cherbourg).

விமானியில்லாத விமான தளங்கள்.—பாஸ் டி கலே (Pas De Calais) பிரதேசம்.

இரவு.—போக்குவரத்துகள், மோட்டார்ப் போக்கு வரத்துகள், பீரங்கி சைனியங்கள்—யுத்தம் நடக்கும் பிரதேசங்களுக்கு அருகில்.

**இதாலி (Italy).**

கப்பல்கள், படகுகள்.—எட்ரியாடிக் கடற்கரை, இதாலி (Italy).

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

இலக்குகள்.—டிரக் (Truk).

விமான நிலயங்கள்.—ரபால் (Rabaul).

**பர்மா (Burma).**

ரயில்வேப் பாலங்கள்.—போங்யாங் (Bongyang).

எதிரி சைனியங்கள், ஸ்டோர்த்திரவியங்கள்.—மாரம் (Maram).

அந்தமான் தீவிலுள்ள போர்ட் பிளேர் (Port Blair).

**22—6—44.** (வியாழக்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europo).**

பகல்.—விமானியில்லாத விமானங்களின் தளம்—பாஸ் டி கலே (Pas Do Calais).

ஜெர்மன் தற்காப்புகள்.—செர்பர்க் (Cherbourg).

இரவு.—ரஸ்தா ரயில் போக்குவரத்துகள், படகுகள்—கடற்கரைக்கும் பாரிஸுக்கும் (Paris) இடையில்.

ரயில்வே ஜங்ஷன்கள்.—லில்லி (Lille), கெண்ட் (Ghent).

ஸ்டீல் தொழிற்சாலைகள்.—கேயென் (Cacu) னிற்கு அருகில்.

பாலங்கள்.—பாரிஸுக்கு அருகில்.



ரயில் ஸ்தலங்கள்.—ரெய்ம்ஸ் (Rheims), லேயான் (Laon), லிஸியுக்ஸ் (Lisieux), டிரெக்ஸ் (Dreux), யூரெக்ஸ் (Eurex).

திரவியங்கள்.-பர்கெட் டி காஞ்செஸ் (Forget de Conches), பாக்னேல்ஸ் (Bagnoles).

**இதாலி (Italy).**

ரஸ்தாப் போக்குவரத்துகள், தொழிற்சாலை, இதர இலக்குகள்.—வடக்கு இதாலி (Northern Italy).

ரயில் தளங்கள்.—பார்மா (Parma), மொடேனு (Modena), பார்னேவா (Fornova), டிடாரோ (Ditaro), போலோக்னு (Bologna), பெர்ராரா (Ferrara).

பாலங்கள்.—ரிமினி (Rimini), டிரியுஸோ (Treuiso).

இலக்குகள்.-யூகோஸ்லாவியா (Yugoslavia), அல்பேனியா (Albania).

பியட் தொழிற்சாலைகள்.—டூரின் (Turin).

**ருஷ்யா (Russia).**

(ஜுன் 21-ந்தேதி 22-ந்தேதியில் 117 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய தளங்கள்.-டிரக் (Truk), பொனுபி (Ponape), மார்ஷல்ஸ் (Marshall) தீவுகள்.

**பர்மா (Burma).**

எதிரி ஆக்கிரமித்த கிராமங்கள், படகுகள்.—அக்யாபிற்கு (Akyab) வடக்கு.

எதிரி முகாம்கள்.—பாலெல்லிற்கு (S. of Palel) தெற்கு.

மோட்டார் போக்குவரத்துகள்.—டிடிம் (Tiddim) ரஸ்தா.

ரயில்வேப் பாலம்.—மொகாங்கிற்கு (Mogaung) அருகில்.

**23—6—44.** (வெள்ளிக்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—ரயில் இலக்குகள். பிரான்ஸில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களுக்கு அருகில்.

ரயில்வே தளங்கள்.-மெஸிடான் (Mezidon).

ஜங்ஷன்.—லெமான்ஸிற்கு (Lemans) வடக்கு.

பாலங்கள், பாதைகள்.—நாண்டீஸ் (Nantes), லாரோச் (Laroche), ஸாமூர் (Saumur), நியோர்ட் (Niort).

நீராவி யந்திரங்கள் இதர ரயில் இலக்குகள்.—பாரிஸ் (Paris), செட்டியாபிரயண்ட் (Chateaubriand).

இரவு.—சுரங்கவேடி பாவுதல்—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.

**இதாலி (Italy).**

பீரங்கிகள்.—லா ஹெயுடியூ பியூட்ஸ் (La Hayedu Puits) வடக்கு.

போக்குவரத்துகள், பாலங்கள்.-யுத்தம் நடக்கும் பிரதேசங்களுக்குப் பின்.

ரயில் தளங்கள்.—செய்ண்டீஸ் (Saintes), லிமொக்கஸ் (Limoges).

பிரேமென்.—(Bremen).

ரஸ்தா, ரயில் லயன்கள், பாலங்கள்.—வடமேற்கு இதாலி (N. W. Italy), எட்ரியாடிக் (Adriatic) கடற்கரை.

**ருஷ்யா (Russia).**

(54 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய தளங்கள்.—போனின் (Bonin) தீவு.

தீவுகள்.—மாரியானுஸ் (Marianas) தீவு.

**பர்மா (Burma).**

எதிரி சைனியங்கள் போக்குவரத்து லயன்கள் மோட்டார் போக்குவரத்துகள், டாங்குகள்.—அரக்கான் (Arakan), மணிப்பூர் (Manipur) டிடிம் (Tiddim), ரஸ்தா.

ரயில்வே இலக்குகள்.-மொகாங் (Mogaung).

**24—6—44.** (சனிக்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—ரயில்வேப் பாலங்கள்.—ஸாமூர் (Saumur), டூர்ஸ் (Tours).

விமான நிலயங்கள்.-செட்டோடென் (Chateaudun) ஆர்லியான்ஸ் (Orleans).

ரயில்வேக்கள்-சார்ட்ரிஸ்க்கு கிழக்கு, மேற்கு.

ரயில்வே தளங்கள்.—வடக்கு பிரான்ஸில் பல இடங்கள்.

பாலங்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

ராணுவ இலக்குகள்.—பாஸ் டி கலே (Pas De Calais) பிரதேசம்.

எண்ணெய்க் கிணறு ஸ்தாபனங்கள்.—ருமேனியாவிலுள்ள புலோயெஸ்ட்டி (Ploesti).

ரயில் பாலங்கள்.—ஆல்டல் (Oltul) நதி.

இரவு.—(23 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

ராணுவ ஸ்தாபனங்கள்—வடக்கு பிரான்ஸ் (North France).

இலக்குகள்.—பெர்லின் (Berlin).

சுரங்கவேடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

**இதாலி (Italy).**

ரயில் ஸ்தலங்கள்.-யூகோஸ்லாவியாவிலுள்ள நிஷ் (Nish).

கப்பல்கள்.—எட்ரியாடிக் (Adriatic).

போக்குவரத்துகள், எதிரி சைனியங்கள்.—எதிரி வரிசைகளுக்குப்பின்.

**ருஷ்யா (Russia).**

(48 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய தளங்கள்.—டிமோர் (Timor), நியூ கினியா (New Guinea), நியூ பிரிடன் (New Britain), டிமோர் (Timor), மாரியானுஸிற்கு தெற்மேற்கிலுள்ள யாப் (Yap).

**பர்மா (Burma).**

இலக்குகள்.—டிடிம் (Tiddim), ரஸ்தா. எதிரி சைனியங்கள், முகாம்கள் போக்குவரத்துகள்.—யுக்ருல் (Ukhrul), பாலெல் (Palel) பிரதேசங்கள்.

ராணுவ இலக்குகள்.—மொகாங் (Mogaung).

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**19—6—44.** (திங்கட்கிழமை).

**பிரிடன் (Britain).**

சில இடங்கள்.—இங்கிலாந்தின் தென் கிழக்குக் கரை.

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

**20—6—44.** (செவ்வாய்க்கிழமை).

**பிரிடன் (Britain).**

இடங்கள்.—தென் இங்கிலாந்து (South England), ஸ்காட்லந்து (Scotland).

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**21—6—44.** (புதன்கிழமை).

**பிரிடன் (Britain).**

பிரிடனின் தென் கிழக்குக் கடற்கரை.

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**22—6—44.** (வியாழக்கிழமை).

**பிரிடன் (Britain).**

இடங்கள்.—தெற்கு இங்கிலாந்து (South England).

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**23—6—44.** (வெள்ளிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

ஒரு இடம்.—தென் இங்கிலாந்து (South England).

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**24—6—44.** (சனிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**25—6—44.** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain).**

இடங்கள்.—தென் இங்கிலாந்து (South England).

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

# யுத்தக் குறிப்புகள்.

**செர்பர்க்கின் வீழ்ச்சி.** சரித்திரத்திலேயே மிகவும் கோரமான போருக்குப்பின் செர்பர்க் விழுந்தது. செர்பர்க் பிடிபட்டதென்று உத்தியோக முறையில் ஜூன் மாதம் 27-ம் தேதியன்று வெளியிடப்பட்டது. ஐரோப்பாவில் நேசதேசப்படைகளிறங்கியதிலிருந்து மூன்று வாரத்திலும் செர்பர்க்கை ஜெர்மனி ஆக்கிரமித்து நான்கு வருஷங்களுக்குப் பின்னும் இந்த சம்பவம் நேர்ந்தது. 15,000 ஜெர்மானியர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். செர்பர்க்கிலிருந்த ஜெர்மன் படைத்தலைவர்களும், நார்மண்டியில் தற்காப்பு செய்துவந்த படைத்தலைவர்களும் கைதுசெய்யப்பட்டார்கள்.

செர்பர்க் துறைமுகமும், கப்பற் துறைகளும், கப்பல் கட்டும் தளங்களும் நமது வசமாகி விட்டதென்பது மகத்தான லாபமாகும். அதில் இரண்டு கப்பற் துறைகளும் துறைமுக மேடையுமிருக்கின்றன. பெரிய சாமான் கப்பல்களையும் அவைகளில் நங்கூரம் பாய்ச்சி நிறுத்திவிடலாம். செர்பர்க் பிடிபட்டபின் படையெடுப்பின் இரண்டாவது கட்டம் முடிந்துவிட்டது. தங்குதடையின்றியில் சர்பராக்களையும், உதவிப் படைகளையும் கொண்டுவர துறைமுகம் கிடைத்துவிட்டது. நவீன யுத்தத்தில் முன்னேறும் வாசல்கள் சாவதானமற்றவை. படைபலத்தை பெருக்கிக்கொள்ள துறைமுகம் அவசியமானது.

கதியற்ற ஜெர்மானியர்கள் செர்பர்க் துறைமுகத்தை அழித்துவிட்டதாகத் தெரிய வருகிறது. ஆகிலும் துறைமுகத்தின் முக்கியத்வம் அதிலுள்ள கட்டடங்களைப் பொருத்திருக்கவில்லை. கடற்கரைக்கடுத்தாற்போல் கப்பல்கள் வரக்கூடிய ஆழமான கடலிருப்பது தான் முக்கியமானது. இந்த சௌகரியம் செர்பர்க்கில் இருந்து வருகிறது. எதிரியின் ஆக்ரோஷத்தினால் இழைக்கப்படும் எவ்விதமான தீங்கும் இந்த சௌகரியத்தை அழித்து விட முடியாது. ஜெர்மானியர்கள் கால்வாய்களையும் கப்பற் துறைகளையும் அடைத்திருக்கலாம், அழித்திருக்கலாம். ஆகிலும் நவீன கால என்ஜினியர்கள் அழித்த காலத்திற்குள்ளாகவே அதிசீக்கிரத்தில் அவைகளைப் பழுதுபார்த்து விடுவார்கள்.



செர்பர்க்கைப் பிடித்த கௌரவத்தை அமெரிக்கர்கள் அடைந்தார்கள். அமெரிக்க ஒன்பதாவது படை செர்பர்க் தீபகற்பத்தின் குறுக்கே சென்று மாண்டிபர்க்கிலிருந்து செயிண்ட் சாவியர் வழியாக கார்டரெட், பார்ன்வில்லுக்கு ஒரு பாதையை அமைத்தது. ஜெர்மானியர்கள் பலமாக எதிர்த் தாக்குதல்கள் செய்தார்கள். ஆகிலும் இது பயன்படவில்லை. அவர்கள் செர்பர்க்குப் பின்வாங்கி அங்கு தற்காப்பு யுத்தம் செய்ய உத்தேசித்தார்கள்.

ஆகிலும் அமெரிக்கர்கள் அவர்களைச் சும்மா விட்டுவிடவில்லை. அமெரிக்கப் படைகள் வாலோக்னீஸ் வழியாக முன்னேறினார்கள். தீபகற்பத்தைத் துண்டித்த நான்கு நாட்களுக்குள் ஆடர்வில்லியிலிருந்து செயிண்ட் பியரி வரையில் பிறை வடிவாக ஜெர்மானியர்களை வளைத்துக்கொண்டார்கள். அதன் பிறகு செர்பர்க்கை துருப்புகளும், விமானங்களும், பீரங்கிகளும், கடற்படையும் தாக்கின. எதிரிகள் முறியடிக்கப்பட்டார்கள். இந்த அரிய செய்கைகளில் பிரிடிஷ், கனடியத் துருப்புகளின் பங்கும் முக்கியமானதுதான். இந்த பிராந்தியத்திற்கு மற்றொரு புறத்தில் அதாவது பேயோவுக்கும், கேயனுக்கும் காரண்டானுக்குத் தெற்கிலும், செயிண்ட்லோவுக்கு சமீபத்திலும் பிரிடிஷ் கனடியத் துருப்புகள் எதிரியின் துருப்புகளை எதிர்த்து நின்றன. அவ்விதம் செய்யாதிருந்தால் அவைகள் செர்பர்க்கிலுள்ள படைகளுக்கு உதவியளிக்கச் சென்றிருக்கும். ஆகிலும் இந்த நடவடிக்கையில் நேசதேசத்தாருக்கு குறிப்பிடத்தக்க ஒரு லாபமும் கிடைக்கவில்லை.

வி வி வி வி வி

**பறக்கும் வெடிகுண்டுகள்.** ஜெர்மன் படை பலஹீனத்தைப்போல ஜெர்மனியின் பிரசாரமும் நொருங்கிவருகிறது. அது இப்பொழுது அபத்தமாகயிருக்கிறது. செர்பர்க்கின் வீழ்ச்சியை மறைத்துச் சொல்ல பிரெஞ்சுக் கடற்கரையில் எதிரிகளையிறங்கும்படி செய்ய உத்சாகப்படுத்தவும் பிறகு அவர்களை வளைத்துக்கொள்ளும் உத்தேசத்துடன் சில இடங்கள் ரக்ஷணை செய்யப்படவில்லையென்றும் செர்பர்க்கை இழந்ததும் ஜெர்மன் யுத்த தந்திரமென்றும் ஜெர்மன் பொதுஜனங்களுக்குப் பிரசாரம் செய்யப்படுகிறது. வேறு ஒன்றும் சொல்ல முடியாமல் கோயபல்ஸ் ஓட்டியில்லா விமானங்களின் நடவடிக்கைகளை சிலாகித்துப் பேசி வருகிறான். ஓட்டியில்லா விமானங்கள் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் பாஸ் டி கலேயை நமது வெடி விமானங்கள் நொருக்கி வருகின்றன. டெம்பஸ்ட் விமானங்கள் விமான எதிர்ப்பு பீரங்கியின் குண்டுவீச்சுக்கு அகப்படாத விமானங்களை சுட்டுத்தள்ள அனுப்பப்பட்டிருக்கின்றன.

இந்த ஓட்டியில்லா விமானங்கள் அல்லது பறக்கும் வெடி குண்டுகள் ராணுவ முறையில் ஒரு தீங்கையும் இழைக்க முடியாது. பிரிடிஷாரின் மன உறுதியை இந்த குண்டுவீச்சு கொஞ்சமேனும் தளர்ச்சி செய்துவிடவில்லை. ஆகிலும் லண்டன் தீப்பற்றி எரிகிறதென்ற அபத்தமான கதைகள் பெர்லினில் பரவியிருக்கின்றன. பெர்லினிலுள்ளவர்கள் இவ்விதமான அநேக அபத்த புராணத்தைக் கேட்டிருக்கிறார்களென்றும் எல்லா ஜனங்களையும் ஏமாற்றிவிட முடியாதென்றும் நினைத்தோம். ஆகிலும் பெர்லின் மக்களை ஏமாற்றுவது சுலபமென்று தோன்றுகிறது.

வி வி வி வி வி

**ஓட்டியில்லா விமானமும், ஜெர்மன் விமானப்படையும்.** ஓட்டியில்லா விமானங்கள் தோன்றியதிலிருந்து ஜெர்மன் விமானப் படையின் பலஹீனம் புலப்பட்டு விட்டது. நார்மண்டியில் போர் புரிந்துவரும் ஜெர்மன் படைகளுக்கு உதவ ஜெர்மன் விமானப்படை ஏன் வரவில்லை? அதிகமான விமானங்கள் தேவையென்று ரோமலும், ரண்ட்ஸ்டெட்டும் சொல்லமாட்டார்களா? ஏராளமான ஓட்டியில்லா விமானங்கள் இங்கிலாந்தின் சமவெளிகளிலும், கடல்களிலும் பறந்து செல்லுகின்றன. ஆகிலும் நார்மண்டியில் சண்டைபோடும் விமானங்கள் ஒரு இடத்திலும் காணப்படவில்லை. ஓட்டியில்லா விமானங்களைக்கட்டும் ஆதாரத்தில் வெற்றிக்கு அவசியமான சண்டை விமானங்களையும் வெடி விமானங்களையும் கட்டுவதை ஹிட்லர் நிறுத்திவிட்டானென்று தெரியவருகிறது.

வி வி வி வி வி

**டைபூன் விமானங்கள்.** இதற்குப் பரிகாரமாக பிரிடன் ஆகாச வாணத்தைக் கொண்டுபோகும் சண்டை விமானமான டைபூன் என்னும் புதிய விமானங்களை உபயோகித்து வருகிறது. அவைகளுக்கு "டின் ஆபரேடர்கள்" என்ற பெயரும் வழங்கப்பட்டது. அவைகள் குறி தவறாமல் அடித்துகவசத்தைப் பிளக்கக்கூடிய சக்தி பெற்றவை. மற்றெல்லா முஸ்தீப்புகளையும்விட ஆகாச வெடிகள்தான் நார்மண்டியில் பதில் தாக்குதலைச் செய்ய ரோமல் டாங்குகளைக் குவிக்காமல் தடுத்து விட்டானென்று சொல்லப்படுகிறது.

**செர்பர்க்கின் வீழ்ச்சிக்குப்பிறகு நேசநேசத்தாரின் நடவடிக்கை என்ன?** பிரிடிஷ் துருப்புகள் கேயன் பிராந்தியத்தில் டில்லி சூர்சியூல்ஸில் நுழைந்துவிட்டதாகச் சொல்லப்

படுகிறது. இப்பொழுது நார்மண்டிக்காக நடைபெறும் போர் நெருக்கடியான கட்டத்தை அடைந்துவிடும். கடும் போர்கள் நடைபெறக்கூடும்.

நார்மண்டிக்காக நடைபெறப்போகும் போருக்கும், வட ஆப்பிரிக்கா, இதாலிக்காக நடைபெற்ற போருக்கும் வித்தியாசமுண்டு. இங்கே இயற்கையாக இன்னல்களும், பாலைவனங்களும் கிடையாது. நதிகளையும், மலைகளையும் தாண்டவேண்டிய அவசியமிருக்காது. ஆகிலும் நார்மண்டியில் அநேக கிராமங்களிலிருந்து பொதுஜனங்கள் அப்புறப்படுத்தப்பட்டு அவைகளில் காங்கிரீட்டினால் கட்டப்பட்ட அநேக தற்காப்பு முகாம்களும், டாங்கி எதிர்ப்பு இடையூறுகளும் தற்காப்பு அரண்களும் அமைக்கப்பட்ட அநேக ஸ்தானங்களிருக்கின்றன. அவைகளுக்குப் பின் கவசம் பூண்ட படைகளும் ஜெர்மன் மூலப்படைகளுமிருக்கின்றன. கடற்கரையிலிருக்கும் தற்காப்புப் படைகளைவிட மூலபலமாகயிருக்கும் படைகள் ஹிட்லரிடமுள்ள மிகவும் சிறந்த போரை நடத்தக்கூடியவைகள்.

**அநற்கு அடுத்த நடவடிக்கை என்ன?** பாரிஸைப் பிடிக்கவோ, அல்லது தெற்கு பிரான்ஸை ஆக்கிரமிக்கவோ அல்லது பெர்லினை நோக்கி முன்னேறவோ நடவடிக்கைகள் துவக்கமாகும். இப்பொழுது ஆரம்பிக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் டெகரானில் திட்டம் போடப்பட்ட முடிவுகளின் ஒரு பாகமென்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். அத்திட்டத்தின் உலகமளாவிய பரிமாணத்தில் செர்பர்க்கும் நார்மண்டியும் முக்கியத்வமுள்ளவை. ஐரோப்பாவில் எதிரியைச் சுற்றி வளையம் நெருங்கி வருகிறது. மேற்குப் பக்கத்திலும், கிழக்குப் பக்கத்திலும், தெற்கிலும் எதிரிக்கு நெருக்கடியான நிலைமை உண்டாகி விட்டது.

ஜெர்மனி ஏன் இன்னமும் போரை நடத்தி வருகிறதென்ற ஒரு பிரச்னை சமயோசிதமானது. இது வீணை ஜோஸ்யம் சொல்லுவதென்று நினைக்கவேண்டாம். அந்த பிரச்னைக்குப் பதிலுரைக்க வேண்டுமானால் நாம் எதிரியின் நிலைமையை மதித்துப் பார்க்க வேண்டும்.

ஜெர்மானியர்கள் பிடிவாதமுள்ளவர்களென்பதை ஒருவரும் மறுக்கமுடியாது. ஆகிலும் அதற்கு ஜெர்மன் தேசமே அழிந்துவிடுமென்ற பீதிதான் காரணமென்பது தெளிவானது. அவர்களின் அந்தரங்கத்தில் அவர்களை ருஷ்யர்கள் பழிவாங்கி விடுவார்களென்ற கவலையும் மிகுதியாகயிருக்கிறது. தோல்வி நிச்சயமென்று அறிந்த பின்னும் ஜெர்மன் தளகர்த்தர்கள் போரை நடத்தி வருகிறார்கள். நேசதேசத்தார்களிடம் அயர்வோ அல்லது பிளவோ ஏற்பட்டுவிடுமென்று அவர்கள் நம்பியிருக்கிறார்கள். இடைவிடாது அநேக வருஷங்களாகப் போர் நடத்தியபின் நேசதேசப்படைகள் சோர்வடைந்துவிடுமென்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். யுத்தத்தைப் பின்னும் இரண்டு வருஷங்களுக்கு இழுத்துவிட்டால் நேசதேசப்படைகளிடம் ஒற்றுமை குலைந்துவிடுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. வெற்றிபெறச் சக்தி பெற்றிருக்காவிட்டாலும் ஜெர்மனியின் பலம் அயர்வை உண்டாக்கிவிடும். இதற்குள்ளாக அமெரிக்க ஜனாதிபதி தேறுதல் பிரச்னையும் கிளம்பிவிடும். இவ்விதமான எண்ணங்கள் ஹிட்லர் மனதில் குடிகொண்டிருக்கின்றன.

ஆகிலும் நேசதேசத்தார்கள் புத்திசாலிகள். அவர்களின் எண்ணங்கள் வேறு விதமானவை. மனித இயல்பை நோக்குங்கால் நேசதேச சமஷ்டி கலைந்து விடாதென்றும் இறுதி வரையில் போராடுவதென்ற அவர்களின் நோக்கமும் குலைந்துவிடாதென்றும் அவர்கள் அறிவார்கள். நார்மண்டியில் ருஷ்ய யுத்தக் கைதிகள் ஜெர்மனிக்காகப் போர் புரிவதிலிருந்தும் பீரங்கிகளைச் சுட ஜெர்மன் ஸ்திரீகள் அமர்த்தப்பட்டதிலிருந்தும், ஒரே ஜெர்மன் படை ருஷ்யாவிலும், பிரான்ஸிலும் போர் புரிந்து வருகிறதென்று சொல்லப்படுவதிலிருந்தும் ஜெர்மன் சேனையின் வலுக்குறைந்துவிட்டதென்று புலப்படுகிறது. ஜெர்மனியின் விசாலமான, விரிவான தற்காப்புகள் பிளக்கமுடியாதவையல்லவென்றும் ஐரோப்பியக் கோட்டையில் செர்பர்க், மார்னிகாப்ஸ் போன்ற அநேக பலஹீனமான பாகங்களிருக்கின்றனவென்றும் அவர்களறிவார்கள். ஐரோப்பா பூராவிலும் இந்த பலஹீனமான ஸ்தானங்களைக் கண்டுபிடிக்க நேசதேசத்தார்கள் முயற்சி செய்து வருகிறார்கள். ஜெர்மன் பிரசாரர்கள் அதை ஒளித்துவிட முயற்சி செய்து வருகிறார்கள்.

இதாலியப் போர் விளையாட்டல்லவென்றும் கவனத்தை வேறுபக்கம் இழுக்கும் நடவடிக்கையல்லவென்றும் தெளிவுபட்டுவிட்டது. அது பொதுவான திட்டங்களின் ஒரு அம்சமாகும். மத்தியதரைக் கடலில் நடைபெறும் நடவடிக்கைகளுக்கும் ருஷ்யாவுக்கும் தொடர்பு ஏற்பட்டுவிட்டது. எல்பாவில் படைகளிறங்கியது. இதாலி கார்சிகாவுடனும், பிரான்ஸுடனும் தொடர்பு ஏற்பட்டுவிட்டது. இதாலியில் நேசதேசப் படைகள் முன்னேறிவரும் சமயத்தில் நேசதேசத்தார்கள் யூகோஸ்லாவியாவுக்கு அனுப்பிவரும் உதவியும் அதிகரித்து வருகிறது.



**இதாலி.** ஜெனரல் அலெக்ஸாண்டர் ரோமுக்குப் பிறகும் எதிரியைத் துரத்தியடித்துவருகிறான். அவன் எதிரியின் வலது பக்கத்லைதத் தாக்கி வருவதினால் ஜெர்மன் படைகள் அபினைன் மலைகளுக்கு ஓடிவிட்டன. பின்வாங்கும்பொழுது வலது பக்கத்தை தற்காப்பு செய்வதற்காக கெஸ்ஸல்ரிங் அவனிடமிருக்கும் மூலபலத்திலிருந்து மூன்று டிவிஷன் துருப்புகளை போர் முனைக்கு அனுப்பியிருக்கிறான்.

வி வி வி வி வி

**ருஷ்யா.** கிழக்குப் போர் முனையில் ருஷ்யாவின் புதிய தாக்குதல்கள் வெற்றிகரமாக நடைபெறுகின்றன. ருஷ்ய பூமியிலிருந்து ஜெர்மானியர்களை அப்புறப்படுத்த இடையூறுகயிருப்பவைகள், வெண்மை ருஷ்யாவிலுள்ள வைடப்ஸ்க், ஆர்ஷா, போகிலேவ், முதலிய இடங்கள். இவைகள் பிடிபட்டன. இந்தப் பிராந்தியம் பிடிபட்டபின் ருஷ்யர்கள் வெண்மை ருஷ்யாவின் தலைநகரமான பின்ஸ்கை நோக்கியும், மத்திய போலந்தை நோக்கியும் முன்னேறுகிறார்கள்.

வைபோர்க் பிடிபட்டதிலிருந்து பின்லாந்தின் தலைநகரமான ஹெல்சிங்கிக்குப்போகும் மார்க்கம் திறக்கப்பட்டுவிட்டது. பின்லாந்து ஜனங்கள் அமைத்திருக்கும் பொம்மை தற்காப்பு அரண்கள் மார்ஷல் கோவராவின் முன்னேற்ற வேகத்தைத் தடுக்க இயலாது.

ஒருலக்ஷம் ஜெர்மன் துருப்புகள் ஆர்க்டிக் கடல் துறைமுகமான பெட்ஸாமோவை ரக்ஷிக்க வடக்கு பின்லாந்தில் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. ருஷ்யர்களுக்கு இந்த பிராந்தியத்தில் வெற்றி கிடைத்துவிட்டால் செம்படை நார்வேயின் எல்லைச் சரகத்துக்கு வந்துவிடும். அப்பொழுது பால்டிக்கிலுள்ள ஜெர்மன் ஸ்தானங்களுக்கு அபாயம் ஏற்படும்.

பின்லாந்து தோல்வியுற்றாலும் ஜெர்மனிக்கு மகத்தான கெடுதல்தான் உண்டாகும். கரிலியன் பூசந்தியை ருஷ்யர்கள் கைப்பற்றிக்கொள்ளும்படி ஜெர்மனி விட்டுவிட்டதிலிருந்தே ஜெர்மனியின் பலம் குறைந்துவிட்டதென்று சொல்லவேண்டியிருக்கிறது.

வி வி வி வி வி

**ஜூன் 22உ.** இந்த தினம் 1941-ம் வருஷம் ஜூன் மாதம் 22-ம் தேதியன்று ஹிட்லர் ருஷ்யா பேரில் போர் துவக்கிய நாளை ஞாபகப்படுத்துகிறது.

ஈசுவர சங்கல்பம் வேறுவிதமாகயிருக்கிறது. 1941-ம் வருஷம் ஜூன் மாதம் 22-ம் தேதியன்று யுத்தப்போக்கு மாறியது. அன்று பிரிடன் ருஷ்யாவுக்கு உதவி செய்ய முன் வந்தது. பிரிடிஷ் பிரதம மந்திரி அப்பொழுது பின்வருமாறு சொன்னார். "ருஷ்யாவிற்கு ஏற்பட்டிருக்கும் அபாயம் நமக்கும் அமெரிக்காவுக்கும் ஏற்பட்டதுதான். நாம் ஜெர்மனி பேரில் பகலிரவாக வெடிகுண்டுகளை வீசுவோம்." இந்த வாக்குறுதியை பிரிடன் யதார்த்தமாக நிறைவேற்றியிருக்கிறது. இந்தப் பேருதவியை ஸ்டாலின் அநேக தடவைகளில் பகிரங்கமாக ஒப்புக்கொண்டிருக்கிறார். ருஷ்யாவும் அபூர்வமான தீரத்துடன் போர்புரிந்திருக்கிறது. முதலில் அது எதிரியை சமாளித்து நின்று பிறகு அவனை அநேக இடங்களில் முறியடித்திருக்கிறது. ஸ்டாலின்கிராட், கார்காவ், ஓரல், வியாஸ்மா, ஸ்மாலென்ஸ்க், லெனின்கிராட், விபார்க், வைடெப்ஸ்க் முதலிய வெற்றிகள் ருஷ்யாவுக்கு அழியாப் புகழை சம்பாதித்து விட்டது.

ஜெர்மனி ருஷ்யாவைத் தாக்கியபின் மூன்று வருஷங்கள் முடிவடைந்துவிட்டன. இந்த மூன்று வருடங்களில் நம்பிக்கையுடனிருக்கக்கூடிய எதிர்கால அமைப்பை நிறுவ சர்வதேச ஒற்றுமை விருத்தியடைந்திருக்கிறது. இந்த காலஅளவில் ருஷ்யா அதன் அயல்நாட்டுக் கொள்கைகளிலிருந்த பிசகான எண்ணங்களை அகற்றிவிட்டது. தவறான அபிப்பிராயம் கொண்ட உலகம் ருஷ்யாவின் நிலைமையைப்பற்றி சரியான எண்ணங்கொண்டது. 1941-ம் வருஷத்தில் நாஸிகளை போருக்கு இழுத்ததினால் அது பிரிடனைக் காப்பாற்றிற்று. 1942-ம் வருஷத்தில் ருஷ்யா, பிரிடன், அமெரிக்கா மூன்றும் சேர்ந்து காகஸஸுக்கும் மத்தியக் கிழக்குக்கும் ஜெர்மனி முன்னேறுவதைத் தடுத்தன. 1943-ம் வருஷத்தில் இம்மூன்று வல்லரசுகளும் முன்னேறித் தாக்க ஆரம்பித்தார்கள். இன்று ஹிட்லரின் ஐரோப்பியக் கோட்டை மூன்று பக்கங்களிலிருந்தும் தாக்கப்படுகிறது.

வி வி வி வி வி

**இம்பாலின் கஷ்ட நிவாரணமும், மோகாங்கின் வீழ்ச்சியும்.** இம்பால் விடுவிக்கப்பட்டதென்றும் கோஹிமா ரஸ்தா மூலமாக நேசதேசப் படைகள் மணிப்பூர் ஸமஸ்தானத்தின் தலைநகருக்கு வந்துவிட்டனவென்றும் கேள்விப்பட்டு இந்தியர்களுக்கு சந்தோஷமும் ஆறுதலும் உண்டாகும். பர்மாவின் மத்தியிலுள்ள மோகாங் வீழ்ந்துவிட்டதென்ற தகவலும் வந்துவிட்டது.

மூன்று மாதங்களுக்குமுன் ஜப்பானியர்கள் மூன்று டிவிஷன் படைகளைக் கொண்டு இந்தியாவைப் பிடித்துவிடுவதென்ற மனக்கோட்டையுடன் அஸ்ஸாம் போர்முனையில் தாக்குதலை ஆரம்பித்தார்கள். பர்மாவிலும், சைனாவிலும் போர்புரிந்து வரும் படைகளுக்கு சாமான்களையும் உதவிப் படைகளையும் அனுப்ப வசதியுள்ள அஸ்ஸாம் இருப்புப்பாதையிலுள்ள டிமாப்பூரைப் பிடித்து விடுவது என்று எதிரி திட்டம் போட்டிருந்தான். டிமாபூருக்குப் போகும் வழியில் இம்பால் குறுக்கிட்டதால் ஜப்பானியர்கள் டிடிம், டாமு வழியாக மணிப்பூர் ரஸ்தாவைத் தாண்டிச் சென்று மணிப்பூருக்கு ஸப்ளைகள் போகாமல் துண்டித்து விட்டார்கள்.

இதே சமயத்தில் டிடிமிலுள்ள 17-வது இந்திய டிவிஷனும் அரக்கானிலிருந்த 5-வது இந்தியப்படையும் இம்பாலுக்குச் சென்றன. இம்பாலைப் பாதுகாக்க நான்கு டிவிஷன் துருப்புகளிருந்தன. சர்பாராக்கன் விமானமூலம் வந்துகொண்டிருந்தன.

அதன்பின் நேர்முகமாக இம்பாலைக் கைப்பற்ற முடியாதென்று அறிந்த எதிரி அதை முற்றுகை செய்வதென்று நினைத்து அதற்கு வடக்கிலுள்ள கோஹிமாவையும் தெற்கிலுள்ள ஸில்சர், பிஷன்பூர், டாமு–டிடிம் பிராந்தியங்களை ஆக்கிரமித்துக்கொண்டான்.

முதலில் கொஹிமாவை மணிப்பூர் ரஸ்தா வழியாக வந்த பிரிடிஷ்படை விடுவித்தது. மே மாதம் 5-ம் தேதியன்று கோஹிமாக்குன்றுக்காக பலமான போர் நடந்தது. அதில் நேசப் படைகளுக்கு வெற்றி கிடைத்தது. இதற்குப்பின் யுத்தப்போக்கு மாறிவிட்டது. ஜப்பானியர்கள் அதற்குப்பின் முன்னேறித் தாக்கவுமில்லை. தற்காப்பு யுத்தமும் செய்யவில்லை. ஒவ்வொரு இடமாகக் காலி செய்துவந்தார்கள். டிரெஷரிக் குன்று, நாகா கிராமங்கள், ஆரதூராஸ்பர், மே ஸான்ஸாங்க் முதலிய இடங்களிலிருந்து பின்வாங்கி சிண்ட்வினைத் தாண்டி ஓடினார்கள். இதே சமயத்தில் கொர்ஸானிலும் ஜெஸ்ஸாமியிலுமுள்ள நேசதேசப்படைகள் ஜப்பானியர்களுக்கு சாமான்கள் வரும் மார்க்கங்களைத் துண்டித்து விட்டன. ஜப்பானியர்கள் இதற்குப்பின் தலைவிரிகோலமாக ஓட ஆரம்பித்தார்கள். இவ்விதமாக இம்பாலின் கஷ்டம் நிவாரணம் செய்யப்பட்டது.

மணிப்பூர் ஸமஸ்தானத்தின் மாகூதி தங்கிய மகாராஜா கீழ்கண்ட வந்தனோபசாரத்தை அனுப்பியுள்ளார்.

"உலகத்திலிருந்து மணிப்பூர் துண்டிக்கப்பட்டு முற்றுகைக்குள்ளாகியிருந்ததை நமது படைகள் விடுவித்தன என்பதைக் கேட்டு நான் பரமானந்தம் அடைகிறேன்.

"இந்த முடிவை நான் வெகு காலமாக எதிர்பார்த்திருந்தேன். நமது நடவடிக்கைகள் இவ்விதமாக இறுதியில் இனிது முடிவடையுமென்றும் எனக்கு பூர்ணமான நம்பிக்கையுண்டு.

"எதிரி பின்வாங்கி ஓடியதும், மணிப்பூர் ஸமஸ்தானத்தைப் பிடிக்கவேண்டுமென்ற எதிரியின் எண்ணம் வீணாகிவிட்டதும் எதிரிக்கு எதிர்காலத்தில் கிடைக்கப்போகும் தோல்விகளுக்கு ஆரம்பத்தைக் குறிப்பிடுகின்றன.

"இந்த முற்றுகையை தைரியத்துடன் சமாளித்து நின்ற என்னுடைய குடிகள் இந்தச் செய்தியைக் கேட்டு நிச்சயமாய் குதூகலப்படுவார்கள்."

வி வி வி வி வி

**தூரக்கிழக்கு.** ஐரோப்பாவில் நேசதேசத்தார் நடத்திவரும் போரினால் தூரக்கிழக்கிலுள்ள நடவடிக்கைகள் பாதிக்கப்படவில்லையென்பது புலப்படுகிறது. ஜப்பானியத் தாய்நாட்டை சமீப காலத்தில் வெடிவிமானங்கள் தாக்கியது மிஸ்டர் சர்ச்சிலும், மிஸ்டர் ரூஸ்வெல்டும் கஸபிளாங்கா மகாநாட்டில் போட்ட திட்டப்படிக்கும் ஐரோப்பிய நடவடிக்கையின்பொழுது தூரக்கிழக்குப் போரையும் நாங்கள் அலக்ஷியம் செய்துவிட்டோமென்றும் அவ்விருவரும் சியாங்கேஷேக்குக்குக் கொடுத்த உறுதிமொழிப்படிக்கும் நடைபெற்றதாகும். தூரக்கிழக்கில் படையெடுப்புக்குப் பூர்வாங்கமாக படைகள் மாரியனாஸ் தீவுகளிலிறங்கிவிட்டன. தீவுதீவாகப் பிடிப்பதைவிட ஒரே தாண்டலாகத் தாண்டுவது என்ற ஜெனரல் மாக் ஆர்தரின் புதிய கொள்கையும் ஒரே லக்ஷியத்தை மேற்கொண்டது. மாரியனாஸிலுள்ள ஸைபானிலிருந்து ஜப்பான் வரையிலுள்ள தீவுகளை நொருக்கி வருவதிலிருந்து முன்னேறத் தாக்கும் நடவடிக்கை எவ்வகைப்பட்டதென்பது புலப்படும். இரண்டு வருஷங்களுக்கு முன் டோக்கியோவை லேிட்டில் விமான மூலம் தாக்கியபின் இப்பொழுது சூபர் பறக்கும் கோட்டை விமானங்கள் யாவாடாவைத் தாக்கிய நடவடிக்கை விமான நடவடிக்கையிலும் விசேஷ கவனம் செலுத்தப்பட்டு வருகிறதென்பதை குறிப்பிடுகிறது. ஏற்கனவே நடைபெற்ற தாக்குதல் ஜப்பானின் மன உறுதியைக் குலைக்க முயன்றது. இப்பொழுது ஜப்பானின் முக்கியமான தொழிற்சாலை பிரதேசங்களை அழிக்க முயற்சிக்கப்பட்டது.

மாரியனாஸ் தீவிலுள்ள ஸைபானுக்கும், பிலிப்பைன்ஸ் தீவுக்கூட்டத்தைச் சேர்ந்த லூசானுக்கும் மத்தியில் நடந்த கடற்போரில் ஜப்பானிய கடற்படை கலந்துகொள்ளும்படி



யாக நேர்ந்துவிட்டது. ஆகிலும் அது பத்திரத்துக்காக தப்பி ஓடிவிட்டது. அதற்கு அபாரமான நஷ்டம் ஏற்பட்டது. இதற்கு முன் ஜப்பானியப்படை துணைக்காவல் புரிவதற்கும் இறங்கும் படைகளுக்கு தற்காப்பு செய்வதற்கும் முன்வந்தது. இப்பொழுது அது தன்னைக் காப்பாற்றிக்கொள்ள போர் புரியவேண்டியிருக்கிறது. விமானந்தாங்கிக் கப்பல்களில் சென்ற இருதரப்பாரின் விமானங்களும் விமானப்போர் செய்தன.

வி வி வி வி வி

**சைனாவின் ஒத்துழைப்பு.** சைனாவின் ஒத்துழைப்பும் உபயோகமுள்ளதாகயிருந்தது. ஜப்பானுக்குச் சென்ற விமானங்கள் தங்கியிருந்த சீன விமான தளங்களை 5,00,000 தொழிலாளர்கள் யந்திர சாதனமன்னியில் அமைத்தார்களென்று சொல்லப்படுகிறது. இது வரையில் இவ்வளவு பெரிய தொழிலாளர் படை ஒரு இடத்திலும் வேலை செய்ததில்லை. 1943-ம் வருஷத்தில் துவக்கப்பட்ட இந்த வேலை இவ்வருஷம் ஜனவரி மாதத்தில்தான் முடிவுபெற்றது.

வி வி வி வி வி

**ஜெர்மன் அட்டூழியம்.** 23-ம் தேதி வெள்ளிக்கிழமையன்று, கோலிட்ஸ்–ஸடாலாக் லப்ட் 3 என்ற ஜெர்மன் ரகஸியப் போலீஸ் முகாமில் 50 நேசதேச விமான ஆபீஸர்கள் கொல்லப்பட்ட கொடுமையைப்பற்றி காமன்ஸ் சபையில் மிஸ்டர் ஈடன் வெளியிட்டார். அவர்கள் தப்பிஓட இரண்டாவது முறை முயற்சித்ததாலும், திரும்பிக் கைது செய்வதை எதிர்த்துப் போராடியதாலும் அவர்கள் சுடப்பட்டார்களென்று ஜெர்மனி சொல்லிவருகிறது. இது கட்டுக்கதை. நம்பத்தக்க ஆதாரங்களிலிருந்து இந்த ஆபீஸர்கள் ஒரு கிளர்ச்சியிலும் சம்பந்தப்படவில்லையென்றும் தப்பி ஓட அவர்களிடம் சக்தி இல்லையென்றும் தெரியவருகிறது. அவர்களுடைய சவங்களைப் பரிசோதனை செய்ததில் அவர்கள் எதிர்த்து நின்றதாகச் சொல்லப்பட்டபோதிலும் அவர்கள் சரீரத்தில் யாதொரு காயங்களும் காணப்படவில்லையென்றும் அந்த முயற்சியில் அவர்கள் சுட்டுக்கொள்ளப்படவில்லையென்றும் புலப்படுகிறது. அவைகளுடைய சில சவங்கள் குற்றத்தை மறைத்து விடுவதற்காக தகனம் செய்யப்பட்டிருக்கின்றன. இறந்தவர்களின் சங்கியையும் 41 முதல் 50 வரையில் வித்தியாசப்படுகிறது. அந்த ஆபீஸர்களைப் பல தகுதிகளாகக் கொண்டுபோய் சுட்டுக்கொன்றார்களென்பது நிச்சயம். அவர்கள் செய்த படுகொலை சர்வ தேச ஒழுங்கு முறைக்கு முரணானது. குற்றவாளிகளைக் கண்டுபிடித்து கடுமையான சிக்ஷைக்குட்படுத்துவார்கள். அநியாயச் செய்கைகளுக்குத் தகுந்த சிக்ஷையளிக்கப்படும்.

---

## ஆரம்ப நடவடிக்கைகளில் விமானப்படையின் பங்கு.

இந்தப் பெரிய ஐரோப்பிய யுத்தத்தில் நம் படைகள் 11,000, விமானங்களுடன் கூடித்து போர் நடக்கும் என்று பொதுமக்கள் சபையில் கூறும்போது எப்போதுமுள்ள உற்சாகமான வார்த்தைகளோடு பேசினார்.

இந்தப்பெரிய யுத்தத்தில் விமானப்படையின் பலம் மிகவும் முக்கியமானதாகும். 4-வருஷங்களுக்கு முன் நினைக்கக்கூட முடியாதவாறு இவைகள் மும்முரமாய் வேலை செய்கின்றன.

1940-லிலிருந்து நினைக்க முடியாத அளவு அமெரிக்க விமானங்களும், பிரிடிஷ் விமானங்களும் விரிவடைந்துள்ளன. ஆனால் அதிகப்பட்ட நம்பரும் அதிகப்பட்ட கனமும் உள்ள இவைகளால் மட்டும், இந்தக் கடற்கரையில் இறங்கியுள்ளபோது, மிகவும் தீவிரமாய் நடக்கும் எதிர்ப்பை சமாளித்தல் முடியாது. நல்ல முயற்சியும் வேண்டியபடி தயாரிப்பும், குறிப்பிடுதலும், நடப்பில் ஒற்றுமையும் அத்தியாவசியம்.

நேசதேச விமானப்படைக்கு தலைவர் கூறியுள்ள வேலைகள் உண்மையில் நானாவிதமானதே. பாராப்படைகளையும், கிளைடர்களையும் தரையில் இறக்க போக்குவரத்துகளன்னியில் யுத்த இயந்திரங்களுக்கு காவலும் புரியவேண்டியிருக்கிறது. கப்பல்களை கடலில் காத்தல், கடற்கரையில் இறங்கும் படைகளைக் காத்தல் போக்குவரத்தைக் காத்தல், பிரிடிஷ் துறைகளில் உள்ள யுத்த சாமான்களைக் காத்தல் தாக்குதல் புரிதல் ஆகிய இந்த வேலைகளும் செய்யவேண்டியுள்ளது.

நொடற்சியான தாக்குதல்.

எதிரி தற்காத்தல் செய்வதைத் தடுக்க சிலர் ஏவப்பட்டும், மணிக்கணக்கற்ற நேரத்தில் கடைசி நிமிஷம் வரையிலும் யுத்தக் கப்பல்கள் விடப்பட்டும் ஜெர்மனியின் போக்குவரத்துகளை ரயில், ரஸ்தாக்களில் தாக்கப்பட்டன. மற்றவைகள் தொடர்ச்சியான படையெடுப்புகள் "இடையிற் புகுந்து செய்யும் முறையும்" இந்த கஷ்டமான காலத்தில் விமான தளங்களில் தரைமேலுள்ள லப்ட்வாப் விமானங்களைத் தாக்கியும், துணைக்காவலோடு எதிரிகளின் விமானத்தாக்குதலின்றிபோகும் கப்பற் கூட்டமும், கடற்கரைமேலுள்ள படைகளுமே அவைகளின் வெற்றிக்குப்போதிய சான்றாகும்.

இந்த ஆரம்ப நடவடிக்கைகளை பலர் சேர்ந்தே செய்திருக்கின்றனர். எதிரிகள் கடற்கரைப் பாதுகாப்பு முதல் போக்குவரத்துகள் வரையில் உள்ள போக்குவரத்து குறிப்பிடுதலையும், எதிரிகளின் தற்காப்பு முறைகளை நன்ருய் கவனித்தாலும், இடையே வேலைசெய்யும் படைகளுக்குப் போதுமான உதவியும், சற்று விடுதலையளித்தலும், சிக்கல் ஏற்படாமலும் நடவடிக்கையில் ஒரு நிமிஷம் தாமதித்தால் அதனால் தோல்வி ஏற்பட்டாலும் ஏற்படலாம் எனக்கருதி சரியான பாதைகளைக்கண்டு பிடித்தலும், ஆகிய இவைகள் எல்லாம் செவ்வனே குறித்து கவனமாய்ப் பார்த்து ஒத்திகைகளின் மேலும் இந்நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டன.

பழைய நடவடிக்கைகளினின்றும் சில பாடங்களை அறிந்தும் விமானப்படைகள் வேலை செய்கின்றன.

பெரிய யுத்தத்தில் நேசக்கக்ஷியின்செயல்கள் பலவற்றை பொருத்திருக்கின்றன. ஸ்பெயின் நதிக்கரையில் பாலங்கள் தகர்த்தல், எதிரிகளிடம் இறங்குதல் லப்ட்வாப் படைகள் முன்னேற விடாமல் செய்தல் ஆகிய இவைகள் நற்குணங்களாகும். டார்டனல்ஸ் கடற்கரையில் ஏற்பட்ட சிக்கலை அறிந்த பிரிடிஷ் சேனையில் ஆபீஸர்களும் சென்ற யுத்தத்தைப் பற்றிய இந்நடவடிக்கையில் செய்யவேண்டியதையும் உணர்வார்கள்.

---

## படைகளையிறக்கும் முறை.

### பால முனைகளை ஏற்படுத்த முதன்மையான நடவடிக்கை.

(பிரிடிஷ் கடற்படை ஆபீஸர்.

தாக்குதல் செய்கிறவர்களின் முன்னணி கடற்கரைக்குச் செல்ல முயலும். பால முனைகளை ஏற்படுத்தும் முன்னும், படைகளையிறக்குமுன்னும் இதுதான் முக்கியமான நடவடிக்கை. தாக்குதல் எவ்விதம் செய்யப்படுகிறது, கடற்கரை எதிரிகளில்லாமல் சுத்தி செய்யப்பட்டு துருப்புகள் இறங்க வசதியளிக்கப்படுகிறது என்ற விவரங்கள் இக்கட்டுரையில் காணப்படும்.

சமுத்திரத்தில் அநேக மைல்களுக்கப்பாலிலிருக்கும் படையெடுப்புக் கப்பல்களிலிருந்து முன்னணி துருப்புகளை ஏற்றிச்செல்லும் படகுகள் மிதக்க விடப்படும். இந்தப் படைகளுடன் உதவிப் படகுகளும், பீரங்கிகளுள்ள படகுகளும் வரும். படைகள் கரையிலிறங்கும்பொழுது அவைகளுக்கு பீரங்கிகள் குண்டுகளை பிரயோகம் செய்து ரக்ஷணையளிக்கும்.

இந்தப் படைகளுடன் கடற்படையைச் சேர்ந்த கடற்கரை கமாண்டோப் படைகள் வரும். பட்குகளும் வரும்.

தண்ணீரில் செல்லக்கூடிய டாங்கிகள் கரைசேர்ந்து பீரங்கிப் பிரயோகம் செய்ய ஆரம்பித்த உடன பிரதேசத்தை சுத்தப்படுத்தும் படைகள் வேலை செய்ய முற்படுவார்கள். புல்டோசர் போன்ற கனமான யந்திரங்கள் கடற்கரையை சுத்தம் செய்யும். எஃகு, கான்கிரீட் முட்டுக் கட்டைகளை நொருக்கும். முள்ளுக்கம்பிகளை பஞ்சைப்போல் அலக்ஷியமாக அப்புறப்படுத்தும்.

இதே சமயத்தில் கடற்படையைச் சேர்ந்த கடற்கரை கோஷ்டிகள் கடற்கரை எவ்வளவு தூரம் சுத்தி செய்யப்பட்டிருக்கிறதென்பதையும் படகுகள் வருவதற்கு எந்த மார்க்கம் சௌகரியமானதென்பதையும் காட்ட த்வஜங்களை நட்டுவிடுவார்கள்.

ஆரம்ப நடவடிக்கைகள் வெற்றிகரமாக முடிந்துவிட்ட சிறிது காலத்திற்குள் கடலிலிருக்கும் கப்பல்களுக்குத் தகவல்கள் அனுப்பப்படும். அதன்பின் குறிப்பான கால அட்டவணைப் படி படைகள் வரிசை வரிசையாக வந்திறங்கும்.

கடற்கரையிலுள்ள நிபுணர்கள் சமுத்திரத்தில் ஆழமில்லாத இடங்களைக் கண்டுபிடித்து பல ரகப் படகுகளைக் கடற்கரைக்குக்கொண்டுவர எந்த இடங்கள் சௌகரியமானவை என்று கண்டுபிடித்து விடுவார்கள். இவைகளிலெல்லாம் கொடிகள் நாட்டப்பட்டுவிடும். படகுகள் ஆட்களை இறக்கியபின் ஏராளமாக வந்துகொண்டிருக்கும் படகுகளுக்கு இடவசதியளிக்க மறுபடியும் கடலில் சென்றுவிடும்.

இந்த கட்டத்தில் கடற்கரை பேரில் எதிரி யந்திர பீரங்கிப் பிரயோகம் செய்துகொண்டிருப்பான். நிச்சயமாக எதிரியின் பீரங்கிகளும் குண்டுகளை வர்ஷித்து வரும். ஆகிலும் படைகளிறங்குவது ஓயாது. தற்காப்புகளைத் துளைத்துக்கொண்டு தரைப்படை முன்னேறும் பொழுது பெரிய படகுகள் கடற்கரைக்கு வரப்புறப்படும். இந்தப் படகுகளினால் தான் டாங்கிகளும், நூற்றுக்கணக்கான காலாட் படைகளும், மோட்டார்களும், பீரங்கிகளும் உபரி வெடி மருந்துகளும் கொண்டுவரப்படும்.

சில மணி நேரங்களுக்குள்ளாக ஆயிரக்கணக்கான டன்கள் எடைமானமுள்ள யுத்த தளவாடங்களும் கரைக்கு வந்துவிடும். இந்த கட்டத்தில் எல்லா சாமான்களும் அசைய ஆரம்பித்துவிடும். டாங்கிகளும், மோட்டார்களும் வைக்கப்படாத சாமான்களை மனிதர்கள் தூக்கிச் செல்லுவார்கள்.



இதுதான் முதல் கட்டம். அதைப் பின்பற்றி சமையல் சாமான்களும், உணவுப் பொருள்களும், வெடி மருந்துகளும், உபரித் துருப்புகளும், டாங்கிகளும், பீரங்கிகளும் சென்று கொண்டேயிருக்கும். இவ்விதமாகத்தான் ஒரு பெரிய தரைப்படை திரட்டப்படும். அற்பமான ஆரம்பத்திலிருந்து சில மணி நேரத்திற்குள் சக்திவாய்ந்த ஒரு பெரிய போர் செய்யும் படை திரட்டப்படுகிறது. இந்த நடவடிக்கையில் கடற்படை சகலவிதமான முஸ்தீப்புகளையும், மனிதர்களையும் கரைசேர்த்துவிடுகிறது.

---

## சண்டைக் கப்பல்களை விமானப்படை பலப்படுத்துகிறது.

### பிரிடனின் கடல்—விமான முறை.

(A. J. மாக்வென்னி).

பிரான்ஸின் கடற்கரையில், ராட்னி, நேல்ஸன், வார்ஸ்பெட் என்ற யுத்தக்கப்பல்கள் ஜெர்மன் படைகளின்மேல் குண்டுகளைப் பொழிவதை நான் ஒரு பிரிடிஷ் நாசகாரியின் மேல் இருந்து பார்வையிட்டேன். இந்தத் தாக்குதல்புரிவதில் சில கொடுமையும், தடுக்க முடியாததாயும் இருந்தது. ஒவ்வொரு இலக்கும் மற்றதின்மேல் செல்லுவதற்கு முன் சரியாய்த் தாக்கப்படுகிறது.

கப்பல்களிலிருந்து செய்யப்படும் தாக்குதல்கள், விமானத் தாக்குதலைவிடக் கொடூரமாய் மிகவும் கஷ்டத்தை உண்டாக்கும். விமானங்கள் சப்தித்து குண்டுகளால் தாக்கி நீங்கள் ஒன்றுசேருவதற்குள் குண்டுகளைப் போடுகிறது. ஆனால் யுத்தக்கப்பல்கள் ஒரே இடத்தில் இருந்து 57 டன்கள் நிறையுள்ள வெடிகுண்டுகளை நிமிஷத்துக்கு நிமிஷம் கக்கியும், அவசியமிருந்தால் மணிக்கு மணி கக்கிக்கொண்டும் உளது.

இந்தக் கொடும், 15, 16 அங்குல பீரங்கிகளாலும், இந்த தளவாடங்களாலும் செய்யப்படும் தாக்குதல்களை நான் கவனிக்கும்போது "பயப்படுத்தப்பட்டோர் நெடுநாள் வாழ்வார்" என்ற பழமொழியை கப்பலின் செய்கைகள் வெளிப்படுத்துகின்றன என்பதை அறிந்தேன். மீன் வெடிகளை கண்டுபிடித்தபின் சிலர் பெருங்கப்பல்களின் நாள் மறைந்துபோயிற்று, இனி எப்போதும் கப்பல்களால் பயமில்லை என்றே கூறினர். ஆனால் பிரிடிஷார் மேலுக்கு மேல் பெருங்கப்பல்களை உற்பத்திசெய்வதிலேயே கண்ணுங்கருத்துமாயிருந்தனர். கண்ணுக்குத் தெரியாமலிருப்பதால் நாசமாக்கப்படமுடியாத ஸப்மரீன்களால் இனிமேல் பெருங்கப்பல்களுக்கு ஒரு முடிவு ஏற்பட்டுவிடும் என்றும் ஒரு சிலர் கருதினர். ஆனால் பெருங்கப்பல்கள் வந்துகொண்டும், கடலில் மிதந்துகொண்டும்தான் இருக்கின்றன.

பிறகு விமான பலம் வந்தது. அப்போதும் ஹிட்லரும், இன்னும் பலரும் கப்பல்கள் அழிக்கப்படுவதில் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை எனக் கூறினர். பிரின்ஸ் ஆப் வேல்ஸூம், ரிபல்ஸூம் மூழ்கடிக்கப்பட்டதானது அந்த நம்பிக்கையை பலப்படுத்தியது. ஆனால் அவைகள் அவ்வாறு போனதற்கு காரணம் விமானப் பாதுகாப்பு இன்மையேயாகும். சிறிது சிந்தித்தால், யுத்தக்கப்பல்கள் போதுமான விமானஉதவியோடு, விமானங்களைவிட 10 மடங்கு கொடூரமானவை என்பது தெரியும். பரந்த சமுத்திரங்களிலே கப்பல்கள் ஆயிரக்கணக்கான சதுர மைல்கள் செல்லுகின்றன. வேகமாய்ச் செல்லும் குரூயிஸர்கள் போலல்ல. விமானங்களால் பாதுகாக்கப்பட்டு ஒரு யுத்தக்கப்பல் எதிரியின் துறையிலிருந்து 2 மைல்கள் தூரத்தில் நிற்கலாம். ஸாலர்னோவும், இன்றையதினம் ஒவ்வொரு நாளும் நார்மண்டியிலும் இதுவேபோலதான் நடந்துவருகிறது.

இந்நடவடிக்கைகளால் யுத்தக்கப்பல்களோடு மிதக்கும் கோட்டை மிகுந்த பலமுடையது என்பது வெளிப்படுத்துகிறது. 2,000 மைல்கள் தற்காப்புக்கு வேண்டியவைகளை உற்பத்தி செய்யவேண்டிய அவசியத்தை ஹிட்லருக்கு அளித்துள்ளது. இந்த நெடுந்தூரத்தில் 16 அங்குல பீரங்கிகளை நிறுத்த முடியாது. இதனால் என்ன முடிவு ஏற்படும் என்றால் விமானங்களால் பாதுகாக்கப்பட்டு கப்பல்கள், குரூயிஸர்களுடனும், நாசகாரிகளுடனும், வந்து, அடிமைகளால் 4 வருஷங்களில் செய்யப்பட்டவேலை, சில மணி நேரங்களில் நாசப்படுத்தும். இனி வருங்காலத்திற்கு கடல்—விமான பலம்தான் யுத்த தளவாடமாகும். நேசக் கட்சியாரிடம் கப்பல்கள், விமானந்தாங்கிகள், விமானங்கள் அத்தனையும் உள. நாஸிகளின் முடிவின் ஆரம்பமான ஐரோப்பியக் கோட்டையைத் தகர்த்த செயலானது இந்த மாதிரியான கடல் விமானபலத்தால்தான். நேசதேசப் படைகள் ஹிட்லர் கடல் விமான பலத்தைப் பற்றி நன்கு அறியப்படுத்தியேதான் இந்த கடல் விமான நடவடிக்கை அதிகமாக நடக்கும். அதுவேபோலத்தான் யுத்தம் கிழக்கு நாஸிகளான ஜப்பானியர்களுக்கு எதிராகவும் நடைபெறும்.

## பிரான்ஸிலுள்ள நேசதேச விமான தளங்கள்.

### பிரிடிஷ் விமானப்படையைச்சேர்ந்த தரை வேலைக்காரர்களின் சேவை.

(டெயிலி டெலிகிராப்பில் ஜார்ஜ் பைப்).

இனிமேல் நேசதேசத்தார்களின் விமானங்கள் இங்கிலாந்திலுள்ள தளங்களிலிருந்து நடவடிக்கைகளை ஆரம்பிக்கவேண்டியதில்லை. இப்பொழுது அவைகள் எதிரிக்கு சமீபத்திலுள்ள விமான தளங்களிலிருந்து புறப்பட்டுச்செல்லுகின்றன.

உண்மையை உரைத்தால் இரண்டாவது டாக்டிகல் விமானப் படை ஆகாயத்தில் மற்றொரு முன்னேறும் வாசலை ஏற்படுத்தியிருக்கிறது. அதாவது கடல் தாண்டிச்செல்ல வேண்டிய சிரமம் குறைந்துவிட்டது.

இது வரையில் செர்பர்க் தீபகற்பத்துக்குச் சென்ற சண்டை விமானங்கள் போர் முனைக்குச் செல்ல வெகுதூரம் தாண்டிப்போகவேண்டியிருந்தது. சுற்றிவளைத்துக்கொண்டு அவைகள் 200 மைல்கள் தூரம் செல்லவேண்டியிருந்தது.

சில நாட்களுக்குமுன் தினசரி இங்கிலாந்திலிருந்து புறப்பட்ட விமானப் படைகள் இப்பொழுது போர்முனையில் நிலைபெற்றிருக்கின்றன. அவைகள் தேவைப்படும்பொழுது ஆகாயத்தில் பறந்துசென்று காலதாமதமன்னியில் நடவடிக்கையை ஆரம்பித்துவிடும்.

இப்பொழுது இங்கிலாந்திலுள்ள விமான தளத்திலிருந்து புறப்படும் விமானங்கள் இங்கிலாந்திலுள்ள தளங்களுக்குத் திரும்பி வரவேண்டிய அவசியம் கிடையாது. தாய் நாட்டிலுள்ள விமானத்தைப்போல பிரான்ஸில் அமைக்கப்பட்டிருக்கும் விமான தளங்களில் அந்த விமானிகள் இறங்கிவிடுவார்கள். இந்த அவகாசத்தை அவர்கள் கடலில் செலவழிக்கக் கூடும்.

இந்த சௌகரியத்தை ஏற்படுத்தியது திறமுள்ள பிரிடிஷ் விமானப் படையைச்சேர்ந்த சேவை கமாண்டோ படைகளும், பிரிடிஷ் விமானப்படை ரெஜிமெண்டும் மற்ற பிரிடிஷ் விமானப் படை சமிக்ஞை கோஷ்டிபோன்ற படைகளும் தான். படைகளிறங்கியபொழுது சேவை கமாண்டோ படைகள் தங்களுடைய அலுவல்களை ஆரம்பித்தன. பிரிடிஷ் விமானப் படையைச்சேர்ந்த சமிக்ஞைப் பண்டயினரில் குறிப்பானவர்கள் முதல் தரமான வேலையைச் செய்து முடித்தார்கள். ஊக்கமுள்ள இந்தப் படைகளை எந்த இடையூரும் தடை செய்ய முடியாது.

#### வேகமும், சாதுர்யமும்.

அவர்களின் வேலையின் வேகமும் சந்தர்ப்பத்தை உபயோகித்து சாமர்த்தியமாக நடந்து கொண்டதும்தான் அதையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்குச் சாதகம் ஏற்படுத்தின.

விமானப்போரில் தரைப் படைகள் விமானிகளுக்காக இவ்வளவு சிறந்த வேலையை இது வரையில் செய்ததில்லை.

இவ்வளவு துரிதமாக விமான தளங்களை ஏற்படுத்திய தீரச் செய்கையை நாம் மதிக்க வேண்டுமானால் நவீன முறையில் கட்டப்படும் விமானதளத்தின் சிக்கலான அமைப்பை நாம் கவனித்துப் பார்க்கவேண்டும். சமாதான காலத்தில் சாமான்களை அப்புறப்படுத்துவதற்கு அநேக வாரங்களோ அல்லது மாதங்களோ ஆகும். யுத்த காலத்தில் ஒரு சில நாட்களுக்குள் அந்த வேலை முடிந்துவிட்டது. விமான நடவடிக்கைக்கும் யாதொரு குந்தகமும் ஏற்பட வில்லை.

புதிய தளங்களிலிருந்து திறமையுடன் நாம் புறப்பட்டுச் செல்லுகிறோமென்பது நம்முடைய விமானப் படையின் உயர்வை நடைமுறையில் வெளிப்படுத்துகிறது. இந்தப் புதிய ஏற்பாட்டில் முகாண்மையாக நிற்பதில் கனுடிய விமானிகள் பெருமை கொள்ளுகிறார்கள். அவர்கள் சிறப்புடன் போர் புரியும் பகுதியைச்சேர்ந்தவர்கள். எல்லோரும் கனுடிய விமானப் படையைச் சேர்ந்தவர்கள்.

இந்த நடவடிக்கைகளுக்கு ஸ்பிட்பையர்கள்தான் தகுதியானவைகளென்று பொறுக்கியெடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த விமானிகளில் பிரிடனுக்காக நடைபெற்ற விமானப் போரில் ஈடுபட்டு கீர்த்தி பெற்ற ஒன்று இரண்டு மாலுமிகளும் சேர்ந்திருக்கிறார்கள். இந்தப் படைக்கு மிகவும் அனுபவம் வாய்ந்த காப்டன் W. R. மாக்பிரயன் தலைமை வகிப்பதாலும் கியாதி பெற்ற ஆகாயப் போர் நடத்தும் விமானிகளிருப்பதினாலும் இந்த விமானப் படை அச்சமில்லாமலும் திறமையுடனும் போர் நடத்தும்.

---

## வெடிகுண்டு வீச்சும், தரைப்போரும்.

ஆக்கிரமிப்பு பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலந்துபேரில் படையெடுப்புக்குமுன் வெடி விமானத் தாக்குதல் நடைபெற்றபொழுது நேசதேச வெடி விமானங்கள் ஜெர்மனியையும், ஜெர்மனியிலுள்ள பெரிய தொழிற்சாலை நிலயங்களையும், யுத்த தளவாட உற்பத்திசாலைகளையும் நொருக்கி வந்தன. 1943-ம் வருஷத்திலும், 1944-ம் வருஷத்திலும் நடைபெற்ற மகத்தான வெடி விமானத்தாக்குதலின் விளைவிலிருந்து புத்துயிர் பெறுமல் எதிரிகளைத் தடுக்க இந்த நடவடிக்கை அவசியமானதுதான். மேலும் ஜெர்மன் தொழிற்சாலைகளுக்கு ஆச்வாசப்படுத்திக்கொள்ள அவகாசம் அளிக்கப்படக்கூடாதென்பது மெத்த அவசியம்.



ஜெர்மனியின் யுத்த தொழிற்சாலைகள் புத்துயிர் பெறுமல் தடுக்கப்படுமானால் எதிரியின் முன்னணி ஸ்தலத்திலுள்ள ஸப்ளைகளுக்கும், போக்குவரத்துகளுக்கும் ஏற்படும் நாசம் அமிதமான பயனையளிக்கக்கூடுமானதால் விமானத்தாக்குதல் இடைவிடாது நடைபெற வேண்டியது அவசியமாகும். எஸ்ஸனிலுள்ள கிரப்ஸ் தொழிற்சாலை கொஞ்சம் கொஞ்சமாக பழுது பார்க்கப்பட்டு வருகிறது. அது ஜெர்மனியின் மகத்தான முக்கியமான எஞ்ஜினியரிங் ஆயுத உற்பத்திசாலை. அதில் மறுபடியும் ரெயில்வே எஞ்ஜின்களையும் பீரங்கிக் குண்டுகளையும் உற்பத்தி செய்தால் வடக்கு பிரான்ஸில் அழிக்கப்பட்ட வெடிமருந்துக் கிட்டங்கிகளுக்கு பதில் சாமான் வந்துவிடும். மார்ச்சு மாத ஆரம்பத்திலிருந்து மே மாதம் ஆரம்பம் வரையில் பிரான்ஸிலும், பெல்ஜியத்திலும் அழிக்கப்பட்ட அல்லது பலமாகப் பழுதுபட்ட 450 ரயில்வே எஞ்ஜின்களுக்குப் பதிலாகப் புதிய எஞ்ஜின்கள் கொண்டு வரப்பட்டுவிடும்.

#### எஸ்ஸன் பலமாகத் தாக்கப்படுகிறது.

ஏப்ரல் மாதம் 26-ம் தேதியன்று பிரிடிஷ் விமானப்படையைச் சேர்ந்த பாம்பர் படைகள் எஸ்ஸனை பலமாகத் தாக்கி கிரப்ஸ் தொழிற்சாலைகளை மறுபடியும் அழித்துவிட்டன. ருருக்காக நடைபெற்ற விமானப்போரில் கடைசியாக எஸ்ஸனை வெடி விமானங்கள் 1943-ம் வருஷம் ஜூலை மாதம் 25-ந் தேதியன்று தாக்கியபொழுது ஏற்பட்ட நிலைமை இப்பொழுதும் ஏற்பட்டுவிட்டது. அதேவிதமாக பிரான்ஸிலும், ஹாலந்திலுமுள்ள முன்னணி விமான தளங்கள் அழிக்கப்பட்டபொழுது அமெரிக்க விமானப்படையும், பிரிடிஷ் விமானப்படையைச் சேர்ந்த பாம்பர் படையும், ஜெர்மனியிலுள்ள விமானம் கட்டும் தொழிற்சாலைகளையும் விமான உற்பத்தி தொழிற்சாலைகளுள்ள நிலயங்களையும் தாக்கி வந்தன. ஜெர்மனிமேரில் வெடி குண்டுகளை வீசுவது மேற்குப் போர்முனையிலுள்ள ஜெர்மன் படைகளுக்குச் செல்லும் ஸப்ளைகளையும் போக்குவரத்து மார்க்கங்களையும் அழிப்பதற்கு முற்போக்கான நடவடிக்கையாகயிருப்பதுடன் அதற்கு ஒத்தாசையும் செய்யக்கூடியதாகும். இவ்விதமாக யுத்த தந்திர முறையில் வெடி விமானங்களால் தாக்குவதென்பது, ஜெர்மனியை விமானமூலம் தாக்குவதின்மூலம் எல்லாப் போர் முனைகளிலும் போரைத் துவக்க நாம் ஆயத்தம் செய்ததற்கு அனுகூலமான நடவடிக்கையாகும்.

ஜெர்மன் யுத்த தளவாட உற்பத்தி தொழிற்சாலைகளின் முயற்சி விமான நடவடிக்கை மூலம் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டிருக்கின்றதென்பதை ஜெர்மனிக்கு ஏற்பட்ட வேலை செய்யும் நேர நஷ்டத்தையும் 1943-ம் வருஷம் மார்ச்சு 1-ம் தேதி முதல் டிசம்பர் மாதம் 31-ம் தேதி முடிய ஜெர்மனியிலுள்ள 29 பெரிய நகரங்களை பிரிடிஷ் பாம்பர் படை 96 தடவை பலமாகத் தாக்கியிருக்கிறதென்பதையும் கவனித்தால் தெரியவரும். விமான நடவடிக்கை மூலம் எதிரிக்கு 2,400 மிலியன் மணிகள் அல்லது ஒரு மிலியன் வருஷம் ஒருவர் செய்யக்கூடிய வேலை நின்றுவிட்டதென்று மதிப்பிடக்கூடியது. இந்த நஷ்டம் பெர்லின் உள்பட 29 நகரங்களில் ஏற்பட்டதென்று வைத்துக்கொண்டால் அவைகளின் உற்பத்தியில் 36·1 சத விகிதம் ஒன்பது மாதங்களில் குறைந்துவிட்டதென்று சொல்லலாம். அதாவது ஒரு வருஷத்தில் அவைகளில் 30 சத விகித உற்பத்தி குறைந்துவிட்டதென்பது நிச்சயம். இந்தப் புள்ளி விபரங்கள் அதம பக்ஷமாகத்தான் சொல்லப்பட்டிருக்கின்றன. நிர்வாகத்தின் சிதைவினால் ஏற்படக்கூடிய உற்பத்திக் குறைவை நாம் கணக்கிட முடியவில்லை.

#### ஜெர்மனியின் யுத்த தளவாட உற்பத்தியின் குறைவு.

தாக்கப்பட்ட 29 நகரங்கள் குற்றுமதிப்பாக லக்ஷியமாகப் பொருக்கப்படவில்லை. அவைகளில் ஏராளமான யுத்த தளவாட உற்பத்திசாலைகளிருந்ததால் அவைகள் தாக்கப்பட்டன. அவைகள் ஜெர்மனியில் உற்பத்தி செய்யப்பட்ட மின்சார எஞ்ஜினியரிங் சாமான்கள், யந்திர ஆயுதங்கள், ரப்பர் சாமான்களில் பாதிக்கு மேற்பட்ட பாகத்தையும் விமான எஞ்ஜின்களில் ஏறக்குறைய பாதி பாகத்தையும் உற்பத்தி செய்தன. ஆகையால் மிகவும் நெருக்கடியான காலத்திற்கு முன் சென்ற வருஷத்தில் பெரிய, சிறிய முக்கியமான தொழிற்சாலைகளிலுள்ள தொழிலாளரின் நான்கு மாதத்திய உற்பத்தி குறைந்துவிட்டது. நான் வெளியிட்ட புள்ளி விவரங்களின் கால அளவிற்கு மூன்று மாதங்களுக்குப்பின் இவ்வருஷத்தின் வசந்த காலத்தில் ஜெர்மனியின் அதிக உற்பத்தி நிலயமான பெர்லினில் உற்பத்தி அளவு ஒரு வருஷத்திற்கு முன்னிருந்ததைவிட 40 சத விகிதம் குறைந்துவிட்டதென்று மதிப்பிடப்படுகிறது.

இந்தப் புள்ளி விபரத்தில் ஜெர்மன் நகரங்களில் பொதுஜன தற்காப்பிற்காக அமர்த்தப்பட்ட 30,00,000 ஆடவர்களால் உற்பத்தி செய்யக்கூடிய சாமான் நஷ்டம் சேர்க்கப்படவில்லை.

போர்முனையில் ஏற்படக்கூடிய ஆயுத நஷ்டம் சுலபமாகக் கண்டுபிடிக்க வேண்டிய கூடியதில்லை. ஏனென்றால் ஆயுதக் குறைவு ஏற்பட்டபின் எதிரி தற்காப்பு யுத்தத்தை மேற்கொள்ள ஆரம்பித்துவிடுவான். எல்லாப் போர்முனைகளிலும், கடலிலும், ஆகாயத் திலும், தரையிலும் எதிரி தற்காப்பு முறையைக் கையாளுவதற்கு நேசதேச விமானத் தாக்குதல்தான் காரணமென்பதில் ஐயமில்லை. மேலும் விமானத் தாக்குதலின் பயனாக எதிரியின் பான்ஸர் படைகளின் டாங்கிகளின் சக்தியை நிலைநாட்டக்கூடவில்லையென்பதில் எதிரிக்கு அதிக சிரமம் ஏற்பட்டிருக்கிறதென்பதற்கு சமீப மாதங்களில் ருஜுக் கிடைத்திருக் கிறது.

அமெரிக்க வெடிவிமானங்கள் எதிரியின் விமான உற்பத்தி தொழிற்சாலைகளையும் பிரிடிஷ் வெடி விமானங்கள் விமானங்களின் உருப்புகளைச் செய்யும் தொழிற்சாலைகளுள்ள நகரங்களையும் நொருக்கியதால் எதிரியின் விமானப்படையில் குறைவு ஏற்பட்டிருக்கிறதென்று சொல்லத் தேவையில்லை.

ஜெர்மனிபேரில் நேசதேச வெடிகுண்டு வீச்சினால் ஏற்பட்ட முக்கியமான ராணுவ விளைவும் சமீப காலத்தில் அதிலிருந்து நமக்குக் கிடைக்கக்கூடிய லாபமும் யாதெனில் அது ஜெர்மன் விமானப்படையின் அமைப்பையும் விநியோகத்தையும் பாதித்திருப்பதுதான். 1942-ம் வருஷத்தில் ஜெர்மன் விமானப் படையில் வெடி விமானங்களும் சண்டை விமானங் களும் சமமான எண்ணிக்கையுடனிருந்தன. 1943-ம் வருஷம் நடைபெற்ற விமானத் தாக்கு தல் இதை சாத்தியமில்லாமல் செய்துவிட்டது. ருஷ்யாவிலும் மத்தியதரைக்கடலிலுமுள்ள ஜெர்மன் படைகளுக்கு விமான ரக்ஷணையும் விமானப்படை உதவியும் அற்றுப்போய் விட்டது.

### ஜெர்மன் விமானப்படை இப்பொழுது தற்காப்புப் போரை நடத்திவருகிறது.

பாம்பர் கமாண்டைச் சேர்ந்த வெடி விமானங்கள் ஜெர்மன் விமானப்படையை நிலை குலைத்து, அவைகளை தரைப்படைகளின் முன்னேற்றத்துக்கு உதவி செய்யாதது போக தற் காப்பு யுத்தத்தைக் கையாளும்படியாகச் செய்துவிட்டதால் எதிரிகள் இரண்டு எஞ்ஜின் களுள்ள, திறமை வாய்ந்த ஆயிரக்கணக்கான இரவு சண்டை விமானங்களைக் கட்டி இரவு விமான நடவடிக்கையைத் தடுக்க அவைகளை உபயோகிக்கும்படியான சிரமம் ஏற்பட்டு விட்டது. இந்தப் படையை அதிகரிக்க ஜெர்மானியர்கள் இரண்டு எஞ்ஜின்களுள்ள ஏராள மான வெடி விமானங்களை இராச்சண்டை விமானங்களாகத் திருத்தியமைத்து விட்டார்கள். சமீப காலத்தில் வெடி விமானத்தில் செல்லும் பயிற்சிபெற்ற விமானிகளை சண்டை விமானங் களை ஒட்ட அமர்த்தும்படிக்கு நேரிட்டுவிட்டது.

தற்பொழுது இதிலிருந்து இரண்டு விளைவுகள் உண்டாகுகின்றன. மேற்குப் போர் முனையிலுள்ள எதிரியின் சண்டை விமானங்களில் பாதி பாகம் மிகவும் நேர்மையாகக் கட்டப்பட்ட விமானங்கள். அவைகள் இரவில் வெடி விமானங்களின் தாக்குதலை சமாளிக்க உதவுமேயல்லாது வேறு ஒன்றுக்கும் பிரயோஜனப்படாதவை. இரண்டு எஞ்சின்களுள்ள ஜெர்மன் சண்டை விமானங்கள் பகற்காலத்தில் ஒரு எஞ்ஜினுள்ள சண்டை விமானத்தை எதிர்த்துப் போராட முடியாது. கடைசியாக வேறு கதியில்லாவிட்டால அவைகளை சேனை யுடன் ஒத்துழைக்கும் வேலையில் ஈடுபடுத்தலாம். போர்புரியும் ஜெர்மன் படைகளுக்கு உதவி அவசியம் வேண்டிய மகத்தான சக்திவாய்ந்த வெடி விமானப் படைக்குப் பதிலாக எதிரியிடம் இப்பொழுது அற்பமான சக்திக் குறைவுள்ள விமானப்படைதான் இருந்து வருகிறது. இந்த இரவு சண்டை விமானங்களைக் காப்பாற்ற எதிரி செய்துவரும் ஜாக்கிரதை கள் மூலம் ஒரு எஞ்ஜினுள்ள சண்டை விமானங்களைக் கட்டிவரும் நடவடிக்கை பாதிக்கப்படு கிறது. பகல் சண்டை விமானங்களைக் கட்டவேண்டிய அவசியமேற்பட்டிருக்கும்பொழுது எதிரியின் தொழிற்சாலைகள் இரவு சண்டை விமானங்களைக் கட்டுவதில் தங்கள் கவனத்தைக் செலுத்தவேண்டியிருக்கிறது.

---

## ஒட்டியில்லாத விமானம்.

### "உபயோகமுள்ள ராணுவ ஆயுதமல்ல."

(டைம்ஸ் பத்திரிகை.)

ஜெர்மானியர்கள் புதிதாக உபயோகித்துவரும் ரகஸிய ஆயுதத்தைப்பற்றிய சர்ச்சையில் அரசாங்கத்தாரும் பொதுஜனங்களும ஏகோபித்து விட்டார்கள்.

ஒட்டியில்லா விமானம் யாதொரு கெடுதலன்னியிலும், வழிமறிப்பன்னியிலும் நேராகச் சென்றால் அந்த விமானத்தின் குண்டுகள் குறிப்பிட்ட பிரதேசத்திலும் பெரிய நகரங்களிலும் விழுந்து விடக்கூடுமென்று ரேடியோமவை கண்ட்ரோல் செய்கிறவர்கள் நிச்சயமாக நம்பியிருக் கலாம்.

இந்த விமானத்தின் நடவடிக்கையை ஜாக்கிரதையுடனும் அடிக்கடியும் கவனித்து வர வேண்டும். குறைவுபட்டு சிரமப்பட்டுக்கொண்டிருக்கும் ஜெர்மன் விமானப் படைக்கு இது மிகவும் கஷ்ட சாத்தியமான அபாயம் பொருந்திய வேலையாகும். அவ்விதம் கண்காணிப்பு



இல்லாவிட்டால் ஒட்டியில்லா விமானங்கள் ராணுவ முறையில் அதிக நஷ்டத்தை ஏற்படுத்தி விடுமென்று எதிர்பார்க்கமுடியாது. அதன் நடவடிக்கையின் விளைவைப்பற்றி அறிந்து கொண்டு அதன் அமைப்பும் குண்டு வீசும் சக்தியையும் அபிவிருத்தி செய்ய எதிரி முயற்சி செய்வானாகையால் அவனுக்கு சில விஷயங்களை நாம் எடுத்துரைக்கவேண்டும்.

### அதன் சக்திக்கு எல்லை.

ராணுவ முறையில் ஒட்டியில்லா விமானம் யுத்தத்தின் போக்கை எவ்விதத்திலும் பாதிக்கமுடியாது. பொதுமக்களுக்கு அது நஷ்டத்தை உண்டுபண்ணக்கூடும். அதுதான் அது செய்யக்கூடியவேலை. அதற்கு மேல் அது ஒன்றும் செய்யமுடியாது.

இந்தத் தொந்தரவு தாக்குதல் மூலம் எதிரி பிரிடிஷ் மக்களின் மன உறுதியைக் குலைக்கப் பார்க்கிறான். ஆனால் பிரிடிஷ் மக்களின் மன உறுதி எப்பொழுதும் இருந்ததைவிட இப்பொழுது அதிக பலமாகயிருக்கிறது. ஜெர்மன் மக்களையும் ஒருவாறு திருப்தி செய்ய் முயற்சிக்கப்படுகிறது. பெரிய தொழிற்சாலைகளுள்ள நகரங்களிலுள்ள பிரதேசங்களை அவர் கள் இழந்துவிட்டார்கள். எல்லாப் போர் முனைகளிலும் அவர்கள் தோல்வியைத்தான் காண் கிறார்கள். இந்நிலைமையில் அவர்களின் தோல்வியைத் தவிர்க்க அவர்கள் ஏதாவது ஒரு புதிய ஆயுதத்தைக் கண்டுபிடிக்கவேண்டுமென்று பிரியப்படுகிறார்கள். அவ்விதமான ஆயுதம் கண்டு பிடிக்கப்பட்டுவிட்டது.

அவர்களுடைய புதிய ஆயுதத்தைப் பரிக்ஷை செய்ய யுத்தத்தின் இந்தக் கட்டத்தை அவர்கள் தேர்ந்தெடுத்தார்களே என்பது ஆச்சரியமாகயிருக்கிறது. எல்லாப் போர்முனை களிலும் வெற்றிக்கு மேல் வெற்றி கிடைத்து வருவதையும் பிரான்ஸில் படைகள் வெற்றிகர மாக இறங்கியதையும் கண்டுகளிப்புற்றிருக்கும் பிரிடிஷ் மக்கள் கண்மூடித்தனமாக பல பட்டரையாக நடைபெறும் விமானத் தாக்குதலைக் கண்டு நடுங்கிவிடுவார்களென்று எண்ணி னால் இது அருவருப்பைத்தான் உண்டுபண்ணும். 1940—41-ம் வருஷத்தில் பிரிடனின் நேச தேசம் முறியடிக்கப்பட்டபொழுதும் கடல்மார்க்கங்களுக்கும் அபாயமேற்பட்டபொழுதும் பிரிடனை ஜெர்மன் விமானங்கள் தாக்கியதுடன் தற்போதய நடவடிக்கையை ஒப்பிட்டால் இது எம்மாத்திரம். இந்த முயற்சி, கொடுங்கோன்மையுள்ள ராஜீய எண்ணங்களுக்காக ராணுவ முறையில் பயமுறுத்தும் நடவடிக்கையை நிர்பயமாக உபயோகிக்கும் திட்டத்தை அறவே ஒழித்திட வேண்டுமென்று பிரிடிஷ் மக்களின் மனதில் அதிக ஊக்கத்தை வளர்ச்சி செய்யும்.

### நேசதேசத்தாரின் வீரமும் அதிகரிக்கப்படும்.

பிரான்ஸிலுள்ள நேசதேசப் படைகளின் முன்னேற்றத்தை ஒட்டியில்லா விமான நட வடிக்கையை பாதித்து விடாது. அவர்களின் ஊக்கத்தைத்தான் அது அதிகரிக்கும். நேச நாடுகளிலும், நடுநிலைமை வகிக்கும் நாடுகளிலும் ஆக்கிரம யுத்தத்தை நடத்தும் ஜெர்மனியை தடுக்க முயன்ற ஒரு தீவுக்கு ஹிட்லர் விளைவித்த கடைசியான நாச வேலை என்றுதான் இந்த முயற்சியை வியாக்யானம் செய்வார்கள்.

நேசதேச விமானத் தாக்குதல்கள் உயர்தரமான ராணுவ நாசத்தை லக்ஷியமாக உள் ளவை. சமீப காலத்தில் அமெரிக்க சூபர் பறக்கும் கோட்டை விமானங்கள் ஜப்பானைத் தாக்கிய முறை இதற்குச் சிறந்த உதாரணமாகும். நாசம் விளைவிக்கும ஆயுதங்களை ஏராள மாக உபயோகித்து பீதியை உண்டாக்கும் முறைகள் தாத்காலிகமாக சிறிது காலத்திற்குத் தான் யுத்தப் போக்கை மாற்றி விடுமென்ற உண்மையை நேசதேசத்தார்கள் அறிந்திருக்கிறார் கள். ஒட்டியில்லா விமானம் அந்த ரகத்தைச் சேர்ந்ததில்லை. ஜெர்மானியர்கள் இந்த உண்மையை இன்னும் அறிந்துகொள்ளவில்லை.

இவ்விதமாக ஈவு இரக்கமன்னியில் மனதார ராட்டர்டாமை வெடி குண்டுகளால் அழித்ததிலிருந்து குறைவான ஆயுதங்களும் தண்டிக்கப்பட்டதுமான டச்சுப் படையின் சரணாகதி துரிதப்படுத்தப்பட்டிருக்கலாம். அதன் விளைவு யாதெனில், டச்சு மக்களின் ஆக்ரோஷம் அதிகரித்து எதிரியை எந்த விதத்திலும் எதிர்த்துப் போராட வேண்டுமென்ற ஊக்கம் அவர்களிடம வலுவடைந்தது. ஜெர்மனியின் திடமான கொடுமைச் செய்கைகளுக்கு ஐரோப்பா பூராவிலும் இவ்விதமான எதிர்ப்புதான் வலுவடைந்துவிட்டது.

---

## ஆகாயமூலம் சென்ற 6-வது டிவிஷன் துருப்புகள்.

ஆகாயமூலம் சென்ற 6-வது டிவிஷன் துருப்புகள் D. தினத்தன்று முதன்முதலில் நடவடிக்கையை ஆரம்பித்தன. அதற்குப்பின் அப்படையின் கீர்த்தி உலகமெங்கும் பரவி யிருக்கிறது. 6-வது டிவிஷன் படையில் இருப்பவர்கள் யார், இதை திரட்டியது யார். இந்த டிவிஷனைப்பற்றி ரொனால்ட் காம்ப் ந்யூஸ் கிரானிகிள் பத்திரிகையில் சில விவரங்களை வெளியிட்டிருக்கிறார்.

கட்டப்பட்டிருக்கும் செர்பர்க் துறைமுகம் இருக்கிறது. இந்தப் போர் அமெரிக்க விமானங்கள் மூலம் சென்ற படைகள் ஸெயிண்ட் மேரி எக்ளிஸியையும் அங்கிருந்து கிழக்குக் கரைக்குச் செல்லும் குறுகலான பிரதேசத்தையும் கைப்பற்றியபொழுது துவங்கிற்று. அதன் தொடர்ச்சியாக நேசதேசப் படைகள் தீபகற்பத்தின் அடியிலுள்ள கோரண்ஷான் நாச்சந்தி ரஸ்தாவை ஆக்கிரமித்து, எதிர்த்தாக்குதல்களைத் துரத்தியடித்து மேற்கு முகமாக முன்னேற ஆரம்பித்தார்கள்.

### விமானப்படை ஆதிக்கம்.

ஜெர்மானியர்களும், அவர்களுடைய வலிமையை பலப்படுத்த முயலுவார்கள். நேசதேசத்தார்களைவிட எதிரிக்கு இது விஷயத்தில் அதிக சௌகரியமேற்பட்டிருக்கிறது. எதிரியிடம் சிறந்த ரஸ்தாக்களிருக்கின்றன. மற்றொரு புறத்தில் சிரமமும் ஏற்பட்டிருக்கிறது. நேசதேசத்தாரின் விமான ஆதிக்கத்தையும் சமாளித்து அவர்கள் ஆயத்தம் செய்யவேண்டும். சமீபகாலத்திய கால நிலை அசௌகரியம். எதிரிக்கு சாதகமாகயிருந்தது. ஜூன் 17-ம் தேதியன்று கால நிலையில் தெளிவு ஏற்பட்டது. அப்பொழுது நேசதேச விமானப் படை மறுபடியும் மகத்தான விமான நடவடிக்கையைத் துவக்கம் செய்தது. இதன் மூலம் எதிரிக்கு ஏராளமான நஷ்டமும் காலதாமதமும் ஏற்படும். ஆகிலும் அவன் போதுமான ஊக்கத்துடன் முயற்சி செய்தால் ஏராளமான படைகளைக் குவித்துவிடலாம்.

இது வரையில் ரோமல் தன்னுடைய படைகளை கொஞ்சம் கொஞ்சமாகக் குவித்து வருகிறனென்று தோன்றுகிறது. அநேகம் படைகளை போர் முனைக்கும் அனுப்பியிருக்கிறன். ஆகிலும் ஜெனரல் மாண்ட் காமரியைப்போல் இது வரையில் அவன் மகத்தான தாக்குதலை நடத்தியதில்லை. ஜெர்மானியர்கள் ஒன்றன்பின் ஒன்றாகச் செய்த தாக்குதல்கள் நேசதேச தற்காப்புகளைப் பிளக்கமுடியவில்லை. அவர்களுக்குக் கிடைத்த சிறிய வெற்றிகளும் முக்யத்வமுள்ளவையல்ல. நேசதேசத்தாரின் எண்ணங்களைச் சரிவர அறிய முடியாமல் அவர்கள் தயங்கி நிற்கிறார்கள். தங்களிடமுள்ள ஏராளமான மூலப்படைகளில் எந்த அளவை போரில் ஈடு படுத்தலாமென்றும் அவர்களுக்குப் புலப்படவில்லை. ஆகிலும் நடைபெற வேண்டிய முடிவான போரில் படைபலத்தின் குறை ஏற்படுமென்றாவது அல்லது படைகளைச் சரிவர எதிரி நடத்த மாட்டானென்றாவது எண்ணுவதற்கில்லை. எதிரிக்கு முக்கியத்வமுள்ள ஒரு பிரதேசத்தில் நேசதேசப் படைகள் எதிரிக்கு சவால் விடுத்திருக்கிறார்கள். இந்த பிரதேசத்தில் எதிரியிடம் நன்றாகப் பயிற்சி பெற்ற, சிறந்த முஸ்தீப்புகளுள்ள படைகளிருக்கின்றன. போர் கடுமையாகவும் கோரமாகவும் நடைபெறக்கூடும். அதன் கஷ்டமான கட்டம் இனிமேல்தான் வரப்போகிறது. மகத்தான இடையூறுகளைத் தாண்டியதில் காணப்பட்ட நாயகமும் தீரமும் வருங்காலத்தில் ஏற்படும் சிரமங்களையும் சுலபமாகத் தாண்டிவிடுமென்ற நம்பிக்கைகொள்ள ஞாயமிருக்கிறது.

---

## பிரிடனின் முதல்தரமான வைத்தியப்படை.

### சலனம் செய்யக்கூடிய படைகளின் அபிவிருத்தி.

(பிரிடிஷ் வைத்திய இலாகா சந்திகை.)

"சிறந்த ஜெனரல் வைத்திய இலாகாவை மதித்துப் பார்க்கிறார். ஜெனரல் மாண்ட் காமரி யுத்த முயற்சியைப்போல மானிட வர்க்கத்தினிடம் அனுதாபத்தையும் காட்டி வருகிறார்."

படைகள் முதல் முதலிலிறங்கிய சில மணி நேரங்களுக்குள்ளாக பிரிடனுக்குக் காயம் பட்டவர்கள் திரும்பி வந்தார்களென்பது ஆச்சரியப்படத்தக்கது. இவ்விதமாக துரிதமான நடவடிக்கைக்கு நான்கு வருஷ யுத்தத்தில் பிரிடிஷ் சேனையைச் சேர்ந்த வைத்திய இலாகா அநுபவத்தை ஒட்டி வைத்திய வசதிகளை அபிவிருத்தி செய்திருப்பதுதான் காரணமாகும்.

ரண வைத்தியத்தையும் மற்ற விசேஷ சிகிச்சை முறைகளையும் போர்முனைக்கு சமீபத்தில் கூடுமானவரையில் அமைத்துவிட வேண்டுமென்று அவர்கள் முக்கியமாகக் கண்டுபிடித்தார்கள். இதை ஒட்டித்தான் சலன வைத்தியப்படைகள் தயாரிக்கப்பட்டன.

சிகிச்சைக்கு வேகம்தான் அத்யாவசியமானது. ஒவ்வொரு ஸோல்ஜர்களுக்கும் காயங்களைக்கட்டும் துணிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவைகளை உபயோகிக்க அவனுக்குப் பயிர்சியும் அளிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு படைக்கும் ஒரு வைத்தியர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் போர்முனையில் ஒரு சிறிய ஆஸ்பத்திரியை அமைத்து விடுகிறார். டோலி தூக்குகிறவர்கள் ஸோல்ஜர்களுடன் போர்முனைக்குச் செல்லுகிறார்கள். காயம்பட்டவர்களை அவர்கள் உடன்காலத்தில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லுவார்கள். அங்கு அவர்களுக்கு புதிய ரத்தம் செலுத்தப்படும். பெனிஸிலின் மருந்து ஏராளமாக வழங்கப்படும். அவசியமான சஸ்திரங்களும் உபயோகித்து வைத்தியம் செய்யப்படும்.



### முக்கியமான தொடர்புகள்.

பாரசூட் மூலமாக இறங்கும் வைத்தியப் படையில் எட்டு அல்லது பத்து வைத்தியர்கள், மருந்து கொடுப்பவர்கள், தாதிகள், டோலி தூக்குகிறவர்கள், முஸ்தீப்புகள், சஸ்திரங்களை உபயோகிக்கும் நோயாளி படுத்துக்கொள்ளும் மேஜைகள் எல்லாம் குடைகள் மூலம் கொண்டு வரப்படும்.

இப்பொழுது நேசதேசப் படைகள் கடற்கரைக்கருகில் போர்புரிந்துவருவதினால் காயம் பட்டவர்களை சிறந்த வைத்தியத்துக்காக பிரிடனுக்குக் கொண்டுபோகிறார்கள். ஆகிலும் போக்குவரத்து மார்க்கங்கள் விஸ்தாரமாகும்பொழுது பிரெஞ்சு தேசத்தில் அமைக்க ஒரு முதல்தரமான வைத்தியப்படை தயாராகயிருக்கிறது.

படைகளுடன் செல்லும் முதலுதவி முகாமுக்கும் ஜெனரல் வைத்திய இலாகாவுக்குமிடையே படை வரிசைகளுக்கு இரண்டு மைல்களுக்குப்பின் மகத்தான சஸ்திர வைத்தியங்களும் செய்யக்கூடிய ரணவைத்தியம் செய்யும் நிலயங்களுமிருக்கின்றன. இந்த நிலயத்துக்கும் போர்முனையிலுள்ள வைத்தியப் படைக்கும் ரேடியோ மூலம் தகவல் போய்க்கொண்டிருக்கின்றது. போர்முனையில் மூன்று கோஷ்டிகளிருக்கின்றன. ஒவ்வொன்றினிடமும் ஏராளமான மோட்டார்களிருக்கின்றன. சில மணிகளுக்குள்ளாக காயம்பட்டவர்களை இருபது மைல்களுக்கு அப்பாலிலுள்ள ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் விடுவார்கள். அங்கு நோயாளியின் சகல தேவைகளும் கவனிக்கப்படும். ஏனென்றால் இந்த ஆஸ்பத்திரியில் நவீன விஞ்ஞான சாஸ்திர முறைப்படி சகலவிதமான சிகிச்சை முறைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

### ரத்தம் புகட்டுவது.

உயிரைக் காப்பாற்றுவதற்கு மூன்று முறைகளிருக்கின்றன. (1) ரத்தம் புகட்டுவது: பிரிடிஷ் சேவையில் ரத்தம் புகட்டும் சேவைப்படைகள் 1940-ம் வருஷம் மே மாதத்தில் ஸ்தாபிக்கப்பட்டன. அதன்பின் அது அபிவிருத்தியடைந்திருக்கிறது. மத்தியக் கிழக்கில் போர் ஆரம்பிக்கப்பட்டு, ரத்தத்தை வெகுதூரம் கொண்டுபோய் சேமித்து வைக்கவேண்டிய அவசியமும் ஏற்பட்டபொழுது நிரந்தரமாகயிருக்கக்கூடிய ரத்தத்தைக் கண்டுபிடிக்கவேண்டிய அவசியமேற்பட்டது. பிரிடனிலுள்ள 5 லக்ஷம் பொது ஜனங்கள் தங்களுடைய ரத்தத்தை அர்ப்பணம் செய்திருக்கிறார்கள். சென்ற வருஷத்திற்குப்பின் 25,000 பைண்டுகளுள்ள ரத்தம் ஒவ்வொரு மாதமும் தயாரிக்கப்பட்டிருக்கிறது. பிரிடிஷ் வைத்தியப் படையைச் சேர்ந்தவர்கள் மிகவும் உபயோகமுள்ள ஒரு முறையைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். நோயாளியை போர்முனையிலிருந்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகிறதற்குள் ரத்தம் புகுத்தப்படுகிறது. இதனால் நோயாளிக்கு யாதொரு தேக சிரமமும் ஏற்படுவதில்லை.

(2) பெனிஸிலின்: பிரான்ஸிலிருந்து காயம்பட்ட ஸோல்ஜர்கள் பிரிடனுக்குத் திரும்பி வந்த முதல் தினத்தன்று அநேக உயிர்களைக் காப்பாற்றிவரும் இந்த சிறந்த ஔஷதத்தைக் கண்டு பிடித்த பிரிடிஷ் விஞ்ஞான சாஸ்திரிகளுக்கு "நைட்" அந்தஸ்து வழங்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

### முன்னணியிலுள்ள தாதிகள்.

(3) தாதிவேலை: காயம்பட்டவர்கள் ஸ்திரீகளிடம் வைத்தியம் செய்துகொள்ள துரிதமாக அனுவாதம் செய்கிறார்களென்பது உண்மைதான். மற்ற எந்தப் போர்புரியும் நாட்டு ஸ்திரீகளையும் விட யுத்தத்தில் அதிகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் பிரிடிஷ் ஸ்திரீகள் முன்னணியில் தாதி வேலைசெய்து வருகிறார்கள். சேனையைச் சேர்ந்த தாதிகள் ஆஸ்பத்திரிக் கப்பல்களில் பிரான்ஸின் கடற்கரைக்கருகில் நின்றுகொண்டு போக்குவரத்து விமானங்களிறங்கக்கூடிய வசதியான ஸ்தலம் எப்பொழுது கிடைக்குமென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஸ்திரீகளின் உதவி ஆகாயப்படையைச் சேர்ந்த மாதர்கள் விமானத்தில் செல்லும் துருப்புகளைப் போல் அபாயங்களை மேற்கொண்டு உயிர்களைக் காப்பாற்ற உதவி செய்யத் தயாராகயிருக்கிறார்கள்.

பிரிடிஷ் ராணுவ வைத்திய இலாகா டாக்டர்கள் பரிஷ்காரமாக அமைத்திருக்கும் வைத்திய வசதிகள் மத்தியக் கிழக்குப் போரில் நோயாளிகளுக்குப் பேருதவி செய்திருக்கின்றன. 1912-ம் வருஷம் ஏப்ரல் மாதத்திலிருந்து 1943-ம் வருஷம் மார்ச்சு மாதம் முடிய 2·1 சத விகிதம்தான் உயிர்ச் சேதமேற்பட்டிருக்கிறது. சென்ற யுத்தத்தில் 10·45 சதவிகிதம் சேதம் ஏற்பட்டது.

---

## ஸ்திரீகள் கடற்படைக்கு உதவி செய்கிறார்கள்.

"கடற்படை—அது ஆண்களின் வேலை" இவ்வாறு பலர் கருதுகிறார்கள். நல்ல திறமையான கடற்படையில் சேர்ந்தோரை அவர்களின் வேலையையும் நினைத்து அவ்வாறு கூறுகிறார்கள்.

கடற்படையின் வேலை ஒருகாலத்தில் ஆண்களுக்கெனமட்டும் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் கிரேட் பிரிடனில் ஸ்திரீகள் ராயல் கடற்படையும் (சுருக்கமாக ரென்ஸ்), மிகவும் பாடுபட்டு, யுத்த வேலையில் உழைக்கும் ஆண்களுக்குச் சிறிது உழைப்பைக் குறைத்தது. இதையே

தான் ராயல் இந்திய கடற்படையும் பின்பற்றியது. இதில் ஸ்திரீகள் உத்தியோகஸ்தர்களாகவும் இதர வேலைகளிலும் உழைக்கிறார்கள். அவர்கள் வேலை செய்யும் இடங்களில் கராச்சி ஒன்றாகும். அங்கு பீரங்கிப்படை பயிற்சியில் கொடுக்கப்படும் பயிற்சிகளைப் பெறுகிறார்கள். சிலர் விமான எதிர்ப்பு பீரங்கிகள் சுடுவதில் உள்ள குறியைக் கணக்கெடுக்கிறார்கள். அதனால் பீரங்கிப் படையினர் அவர்கள் அடைந்துள்ள பயனை செவ்வனே அறிய ஏதுவாயுள்ளது.

இவைகள் எல்லாம் ஒரு பெரும் முன்னேற்றத்தைக் குறிப்பிடுகின்றன. சண்டைகளுக்கு முன் ஆணும் பெண்ணும் பம்பாயிலுள்ள மெஜஸ்டீன் இந்திய சிக்னல் ஸ்கூலில் பயிற்சி அடைந்தனர். அவர்களுடன் இன்று ஸ்திரீகளும் சேர்ந்துகொண்டு, வெண்மையான உடை உடுத்தியோ, அல்லது கடற்படை உடையுடுத்தியோ பயிற்சி பெறுகின்றனர்.

ஸ்திரீகள் ஆக்ஸிலியரிகோரில் கடற்படைப் பகுதியைச்சேர்ந்தவர்கள். இவர்கள் கடற்படை இயக்கத்தின் ஆரம்பத்தில் இரண்டு வாரங்கள் சைகைப் பயிற்சிபெற்றும், செய்தி போக்குவரத்து விஷயமாய் வேலைசெய்ய நியமிக்கப்பட்டால் சில குறிப்புகளைக் கொண்டு 6 வாரஙகளுக்கு தனிப்பட்ட பயிற்சியும் அளிக்கப்படுகிறார்கள்.

கடற்படையில் பெரும் மாறுதல் ஏற்பட்டுள்ளது. ஸ்திரீகள் தங்கள் வேலையை மிகவும் அக்கரையுடன் கவனிக்கிறார்கள். பயிற்சி பெறுவதில் மிகவும் அக்கரையாய் இருக்கிறார்கள் என்ற கியாதியும் அடைந்துள்ளார். அவர்களின் வகுப்பினை அவர்கள் கவனிக்கிறார்கள். பிறகு அன்றையவேலை முடிந்ததும் கடற்கரைக்கடுத்தாற்போலும், மலபார் மலைக்கு சின்னட்களுக்கு வடக்கிலும் உள்ள அவர்கள் விடுதியில்போய் களைப்பாறுகிறார்கள்.

இம்மாதிரி துணைப்படையில் 6 மாதஙகள் உழைத்தபின், கமிஷன் (உயர்ந்த பதவி) பெற மனுச்செய்து கொள்ளலாம். அந்த ஸ்திரீ கெட்டிக்காரியாயும், நல்ல உழைப்பாளியாகவும் தெரிந்தால் இன்னும் முன்னமே கமிஷனுக்கு சிபார்சு செய்யப்படலாம். ராயல் இந்திய 'கடற்படை உத்தியோகஸ்தர்களுக்கென பயிற்சி அளிக்கப்படும் ஸ்தாபனம் பம்பாயில் உள்ள H. M. I. S. பிரோஸில் பிறகு 2 வாரங்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். அதுவும் ஒரு பெரும் மாறுதலே; ஏனெனில் W. A. C. (I) கடற்படை பகுதி ஏற்படுமுன் ஒரு ஸ்திரீயும் இந்த விதமாய் வேலை செய்யவில்லை.

W. A. C. (I) கடற்படைப் பகுதியில் சேர்ந்து உழைக்கும் ஒவ்வொரு ஸ்திரீயும், இந்தியாவில் உள்ள கடற்கரைப் பிரதேசத்திலோ அல்லது நியூ டில்லியில் உள்ள கடற்படை தலைமை ஆபீஸிலோ வேலை ஒப்புக்கொண்டு ஒவ்வொரு மனிதனை வேறு காரியங்களுக்கு நேரே போர்புரிவதற்கு அனுப்புகிறார்கள்.

துணைப்படை பலவித வழிகளில் சைகையையும், குறிப்பாய் செய்தி அனுப்புவதையும் செவ்வனேசெய்து உலகம் முற்றிலும் கடற்படை விஷயமாய் செய்திகள் அனுப்புதல் செவ்வனே செய்து வருகிறார்கள். மற்றவர்கள் இதர ஆபீஸ் உத்தியோகங்களும், பீரங்கி பயிற்சிகளில் உதவியும் தொண்டாற்றுகிறார்கள். வேலை உயர்வென்றால் அக்கரை அதிகம் கடற்படை தலைமைக் காரியாலத்திலும் இதர இடங்களிலும் வேலை செய்யவேண்டும்.

கடற்படைப் பகுதியில் உழைக்கும் ஸ்திரீகள் மதராஸ், வங்காளம், ரஜபுதானம், பஞ்சாப், பம்பாய் ராஜதானி இதர ராஜதானிகள், இந்திய சமஸ்தானங்கள் முதலிய இடஙகளிலிருந்து வந்தவர்கள். அவர்களில் ஹிந்துக்களும், முஸ்லிம்களும், பாரசீகர்களும், கிருஸ்துவர்களும் உ.ள்ளர்.

இந்திய மனிதப் படையின் உதவிக்காக அதிகப்பட்ட ஸ்திரீகள் தேவையாயுள்ளது. அவர்கள் உள்நாட்டிலே வேலை செய்யவோ அல்லது துறைகளிலே, அல்லது கடற்படை தலைமைக்காரியாலயத்திலோ உழைக்க முன்வருவார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது.

---

## ருஷ்ய—ஜெர்மன் போரின் முக்கிய அம்சங்கள்.

## 1941.

ஜூன் 22வ :—ஜெர்மனி ருஷ்யா பேரில் படையெடுத்தது.

ஜூலை 12வ :—ஜெர்மனியை எதிர்த்து நிற்பதில் பரஸ்பர உதவி செய்வதென்றும், தனிமையாக ஒருவரும் ஜெர்மனியுடன் சமாதானம் செய்துகொள்ளக்கூடாதென்றும் பிரிடனும், ருஷ்யாவும் மாஸ்கோவில் உடன்படிக்கை செய்துகொண்டன.

20வ :—M. ஸ்டாலின் ருஷ்யாவின் தற்காப்பு அதிகாரியானார்.

ஸெப். 19வ :—ஜெர்மனி கீவை ஆக்கிரமித்தது.



அக்டோ. 8வ :—ருஷ்யர்கள் ஓரலைக் காலிசெய்ததாக வெளியிட்டார்கள்.

16வ :—ருஷ்யர்கள் ஒடெஸ்ஸாவைக் காலிசெய்தார்கள்.

20வ :—ருஷ்ய நிர்வாகம் குபிஷேவுக்குச் சென்றுவிட்டதாகச் சொல்லப்பட்டது. ஸ்டாலின் மாஸ்கோவிலேயே இருந்தார்.

24வ :—ஜெர்மனி கார்காவைப் பிடித்தது.

நவம்பர் 1வ :—ஜெர்மனி கிரிமியாவின் தலைநகரமான ஸிம்பராபோலைப் பிடித்தது. மார்ஷல் ஷாபோஷ்னிகெவ் ருஷ்ய ராணுவ அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

14வ :—ருஷ்யர்கள் மாஸ்கோவிற்குத் தெற்கிலும், வடக்கிலுமிருந்த ஜெர்மன் படைகளைத் துரத்தியடித்தார்கள்.

22வ :—ஜெர்மானியர்கள் ராஸ்டாவுக்குள் நுழைந்தார்கள்.

26வ :—மார்ஷல் டிமோஷென்கோ யூக்ரேனில் 70 மைல்கள் முன்னேறி ராஸ்டாவிலுள்ள எதிரியின் விலாப்பக்கத்துக்கு அபாயம் உண்டுபண்ணினார்.

28வ :—ருஷ்யர்கள் ராஸ்டாவைத் திருப்பிப்பிடித்தனர். ஜெர்மன் படைகள் சின்னாபின்னமாகப் பின்வாங்கின.

டிசம்பர் 10வ :—ருஷ்யப் படைகள் ருஷ்யப் போர்முனை பூராவிலும் முன்னேறித் தாக்க ஆரம்பித்தன.

16வ :—ஜெர்மன் படைகள் கிழக்கு போர்முனை பூராவிலும், பின்வாங்கின. அவைகள் மாஸ்கோவைப் பிடிக்கமுடியவில்லை.

19வ :—ருஷ்யப் போர்முனையில் சேனாதிபத்தியத்தை ஹிட்லர் தானே ஒப்புக்கொண்டான்.

## 1942.

ஜனவரி 18வ :—மார்ஷல் டிமோஷென்கோ 65 மைல்கள் முன்னேறினார்.

பிப்ரவரி 24வ :—ருஷ்யப் படைகள் ஸ்டர்யா ரஸ்ஸா மாகாணத்தில் 96,000 துருப்புகள் உள்ள ஜெர்மன் 16-வது படையை சுற்றி வளைத்துக்கொண்டன.

மார்ச்சு 1வ :—ருஷ்யர்கள் கிரிமியாவில் புதிய தாக்குதலைத் துவக்கினார்கள்.

மே 13வ :—ருஷ்யர்கள் கார்காவ் பகுதியில் தாக்குதலைத் துவக்கினார்கள்.

26வ :—யுத்த சமயத்திலும் யுத்தத்துக்குப் பின்னும் பூர்ணமாக ஒத்துழைப்பதென்று பிரிடனும் ருஷ்யாவும் 20 வருஷ ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

ஜூன் 10வ :—வான்பர்க் புதிய தாக்குதலைத் துவக்கினார்.

ஜூலை. 1வ :—ஜெர்மன் படைகள் செபாஸ்டபூல் நகரத்தையும், துறைமுகத்தையும் கைப்பற்றின.

27வ :—ருஷ்யர்கள் ராஸ்டாவைக் காலிசெய்துவிட்டதாக வெளியிட்டார்கள்.

ஆகஸ்டு 9வ :—ஜெர்மன் படைகள் முன்னேறும்பொழுது ருஷ்யர்கள் காகஸஸ் பிரதேசத்தில் பின்வாங்கிச் சென்றார்கள்.

21வ :—ஜெர்மானியர்கள் காகஸஸ் பிரதேசத்தில் முன்னேறுகிறார்கள். ஸ்டாலின்கிராட் பகுதியில் கடும்போர் நடைபெற்றது.

ஸெப். 16வ :—ஸ்டாலின்கிராட்டின் சுற்றுப்புறங்களில் கடும்போர்.

23வ :—ருஷ்யர்கள் ஸ்டாலின்கிராட்டுக்கு வடமேற்கில் முன்னேறித்தாக்க ஆரம்பித்தார்கள்.

அக்டோ. 18வ :—ஸ்டாலின்கிராட் பகுதியில் கோரமான போர்.

நவம்பர் 22வ :—ருஷ்யர்கள் ஸ்டாலின்கிராட்டில் முன்னேறித்தாக்க ஆரம்பித்தார்கள்.

29வ :—ஸ்டாலின்கிராடில் ருஷ்யர்கள் பலமாகத் தாக்கினார்கள். 66,000 ஸோல்ஜர்கள் கைது செய்யப்பட்டார்கள். 1,397 டாங்கிகளும் 2,000 பீரங்கிகளும், நவம்பர் 19-ம் தேதிக்குப் பின் நமது வசமாகின.

டிசம்பர் 16 முதல் ருஷ்யர்கள் டான் நதியின் மத்திய பிரதேசத்தில் 60 மைல் பரப்பில் 20 வரை. முன்னேறித் தாக்க ஆரம்பித்தார்கள். 13,500 ஜெர்மானியர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

31வ :—ஸ்டாலின்கிராட்டுக்குத் தென்மேற்கில் ருஷ்யப்படைகள் முன்னேறும்பொழுது முக்கியமான ஜெர்மன்படைகள் பின்வாங்கின.

# 1943.

ஜனவரி 1வ :—கடும்போருக்குப் பின் ருஷ்யர்கள் வெலிகிலூகியைக் கைப்பற்றினார்கள்.
3வ :—காகஸஸ் பகுதியில் ருஷ்யர்கள் மாஸ்டாக்கையும், மால்கோவெக்கையும் பிடித்தார்கள்.
18வ :—லெனின்கிராட் முற்றுகையிலிருந்து விடுவிக்கப்பட்டது.
30வ :—ருஷ்யர்கள் ஸ்டாலின்கிராட்டில் வெற்றி பெற்றார்கள். பீல்ட் மார்ஷல் பவுலஸ்ஸும் இன்னும் 16 ஜெனரல்களும் கைது செய்யப்பட்டார்கள்.
பிப்ரவரி 2வ :—ஸ்டாலின்கிராடில் எஞ்சிய படைகளும் சரண்புகுந்தன.
8வ :—ருஷ்யர்கள் குர்ஸ்க்கை கைப்பற்றினார்கள்.
12வ :—ருஷ்யர்கள் குபான் தீபகற்பத்தின் தலைநகரமான கிராஸ்னோடாரைப் பிடித்தார்கள்.
14வ :-ருஷ்யர்கள் ராஸ்டாவையும்,வோராஷிலாவ்கிராட்டையும்திரும்பிப்பிடித்தனர்.
16வ :—ருஷ்யர்கள் கார்காவைப் பிடித்தார்கள்.
மார்ச்சு 12வ :—ருஷ்யர்கள் வியாஸ்மாவை ஆக்கிரமித்தார்கள்.
15வ :—ருஷ்யர்கள் மறுபடியும் கார்காவைக் காலிசெய்தனர்.
ஜூலை 5வ :—ஜெர்மானியர்கள் ஓரல், குர்ஸ்க், பேயலோகிராட் முதலிய இடங்களில் முன்னேறித் தாக்க முயன்றார்கள்.
15வ :-ருஷ்யர்கள் ஓரலுக்கு வடக்கிலும் கிழக்கிலும் பதில்தாக்குதலைத் துவக்கினார்கள்.
ஆகஸ்டு 4வ :—ருஷ்யர்கள் ஓரலைப் பிடித்தார்கள்.
6வ :—ருஷ்யர்கள் கார்காவை நோக்கி மறுபடியும் முன்னேறினார்கள்.
23வ :—கார்காவைப் பிடித்துவிட்டோமென்று மார்ஷல் ஸ்டாலின் அறிக்கையை வெளியிட்டார்.
30வ :—ருஷ்யர்கள் ஆஸாவ் கடற்கரையிலுள்ள டான்ராக்கைக் கைப்பற்றினார்கள்.
ஸெப். 1வ :—டாகன்ராக்கில் அகப்பட்டுக்கொண்ட ஜெர்மன் சேனை அழிக்கப்பட்டது.
17வ :—பிரியான்ஸ்க் பிடிபட்டதென்று ஸ்டாலின் வெளியிட்டார்.
25வ :—ருஷ்யர்கள் ஸ்மாலென்ஸ்க்கைப் கைப்பற்றிவிட்டார்கள் என்ற விசேஷ அறிக்கை வெளிவந்தது.
அக்டோ. 7வ :—ருஷ்யர்களின் புதிய தாக்குதல். நீபர்நதி மூன்று இடங்களில்கடக்கப்பட்டது.
23வ :—ருஷ்யர்கள் மெலிடோபோலைப் பிடித்தார்கள்.
27வ :—நீபர் நதியின் தாழ்வரைக்கும், ஆஸாவ் கடலுக்கும் மத்தியில் ருஷ்யர்கள் ஊடுருவிச் சென்றார்கள்.
நவம்பர் 6வ :—கீவ் மறுபடியும் ருஷ்யர் வசமாயிற்று.
13வ :—ருஷ்யர்கள் ஜிடோமீரைப் பிடித்தார்கள்.
19வ :—ஜெர்மானியர்கள் கீவ் முன்னணி ஸ்தலத்தில் பதில் தாக்குதலைத் துவக்கிய பொழுது ஜிடோமீரிலிருந்து செம்படை பின் வாங்கிற்று.
26வ :—செம்படை கோமலைப் பிடித்தது.
29வ :—மிஸ்டர் சர்ச்சில் ஸ்டாலின்கிராட் கௌரவக் கத்தியை ஸ்டாலினுக்கு டெஹரானில் வழங்கினார்.
டிசம்பர் 14வ :—ருஷ்யர்கள் புதிய தாக்குதலை ஆரம்பித்துவிட்டார்களென்று ஜெர்மனி அறிக்கை செய்தது.
15வ :—கொடுமைகளைச் செய்த ஜெர்மன் குற்றவாளிகளின் விசாரணை கார்காவில் ஆரம்பமாயிற்று.
31வ :—ருஷ்யர்கள் ஜிடோமீரைத் திருப்பிப்பிடித்தார்கள்.

# 1944.

ஜனவரி 4வ :—செம்படையைச் சேர்ந்த ரோந்துப் படைகள் பழைய போலிஷ் ருஷ்ய எல்லைச்சரகத்தைக் கடந்தன. ஜெர்மானியர்கள் சிதறுண்டு பின் வாங்கினார்கள்.
6வ :—யூக்ரேனில் ருஷ்யர்கள் வேகமாக முன்னேறினார்கள்.
8வ :—இரண்டாவது யூக்ரேனியப் போர்முனையில் ஜெனரல் கோனியேவிடமுள்ள படைகள் கிரோவோகிராட்டைப் பிடித்தன.
12வ :—ஜெனரல் வாடுடின் பழைய போலிஷ் எல்லைச் சரகத்திற்கு மேற்கில் 35 மைலுக்கப்பாலிலுள்ள சார்னியைப் பிடித்தார்.
27வ :—லெனின்கிராட் ஜெர்மன் முற்றுகையிலிருந்து பூராவாக விடுவிக்கப்பட்டது.
பிப்ரவரி 3வ :—செம்படை எஸ்தோனியாவுக்குள் ஆறு மைல்கள் முன்னேறிவிட்டது.
8வ :—நாலாவது யூக்ரேனியப் போர்முனையில் ஜெனரல் டோல்புகினிடமுள்ள செம்படை நிகோபோலைப் பிடித்தது.



13வ :—லெனின்கிராட் பகுதியில் ஜெர்மனியின் கடைசி தற்காப்பு நிலையமான லூகாவை செம்படை கைப்பற்றிற்று.
17வ :—கோனியேவ் பகுதியில் அகப்பட்டுக்கொண்ட ஜெர்மன் படைகள் துடைக்கப்படுகின்றன. 52,000 பேர்கள் மாண்டார்கள். 11,000 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள்.
27வ :—ருஷ்யர்கள் கிரிவாய்ராக்கைப் பிடித்தார்கள்.
மார்ச்சு 18வ :—ருஷ்ய-ஜெர்மன் யுத்தம் துவக்கி 1,000 நாள் பூர்த்தியாயிற்று. ஜெர்மன் படைகள் எல்லாப் பகுதிகளிலும் பின்வாங்குகின்றன.
26வ :—செம்படை ருமேனிய எல்லைச்சரகத்துக்கு வந்துவிட்டது.
ஏப்ரல் 3வ :—ருஷ்யப் படைகள் பிரத் நதியைத் தாண்டி ருமேனியாவுக்குள் பிரவேசித்தன.
8வ :—ருஷ்யர்கள் ஸெக்கோஸ்லோவாகியா—ருமேனியா எல்லைச் சரத்தை அடைந்தன. கார்பேதியன் மலை அடிவாரங்களில் ஜெர்மனி தோல்வியுற்றது.
செம்படை ஒடெஸ்ஸாவை தரைமார்க்கமாக முற்றுகைக்குள்ளாக்கிற்று.
10வ :—ஒடெஸ்ஸா மறுபடியும் ருஷ்யர் வசமாகிவிட்டது.
11வ :—ருஷ்யர்கள் கெர்ச்சைப் பிடித்தார்கள்.
13வ :—ருஷ்யர்கள் பியோடோஸியா, ஸிம்பராபூல், யூபாடோரியா முதலிய இடங்களைப் பிடித்தார்கள்.
14வ :—கீவில் ஜெனரல் வாடுடின் இறந்தார்.
மே 9வ :—ருஷ்யர்கள் செபாஸ்டபூலைப் பிடித்தார்கள். 20,000 ஜெர்மானியர்கள் மாண்டார்கள். 24,000 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். கிரிமியா பூராவும் விடுவிக்கப்பட்டது.
20வ :—பிரிட்டனிலிருந்து சென்ற 2,50,000 டன்கள் மொத்த எடைமானமுள்ள துணைக்காவல்கொண்ட சாமான் கப்பல்கள் ஒரு சாமான் கப்பல்கூட நஷ்டமன்னியில் ருஷ்யாவுக்குச் சென்றன.

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 204. (2-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1-7-44 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | 5-7-44 | கொன்னையூர் | ... மாலை | 7.00 |
| 2-7-44 | குடுமியாமலை | ... „ | 7.00 | „ | மேலவேகுப்பட்டி | ... „ | 7.30 |
| „ | பரம்பூர் | ... „ | 7.30 | 6-7-44 | பனையப்பட்டி | ... „ | 7.00 |
| 3-7-44 | நச்சாந்துபட்டி | ... „ | 7.00 | „ | ராங்கியம் | ... „ | 7.30 |
| „ | விராச்சிலை | ... „ | 7.30 | 7-7-44 | வெங்களூர் | ... „ | 7.00 |
| 4-7-44 | குழிபிறை | ... „ | 7.00 | „ | கோனாபட்டு | ... „ | 7.30 |
| „ | செவலூர் | ... „ | 7.30 | | | | |

### பிரஸங்கம் 205. (3-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 8-7-44 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | 12-7-44 | மழையூர் | ... மாலை | 7.00 |
| 9-7-44 | ஞாரக்காடு | ... „ | 7.00 | „ | காம்பக்குடி | ... „ | 7.30 |
| „ | கோட்டைக்காடு | ... „ | 7.30 | 13-7-44 | வாளரமாணிக்கம் | ... „ | 7.00 |
| 10-7-44 | தென்னதிரையன்பட்டி | ... „ | 7.00 | „ | எம்பல் | ... „ | 7.30 |
| „ | விசலூர் | ... „ | 7.30 | 14-7-44 | விராலிமலை | ... „ | 7.00 |
| 11-7-44 | ராமச்சந்திரபுரம் | ... „ | 7.00 | „ | பொருவாய் | ... „ | 7.30 |
| „ | ராயவரம் | ... „ | 7.30 | | | | |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 1—7—44 | பொன்னமராவதி. | 8—7—44 | திருமெய்யம். |
| 2—7—44 | மருதன்கோன்விடுதி. | 9—7—44 | எம்பல். |
| 4—7—44 | குடுமியாமலை. | 11—7—44 | பேராம்பூர். |
| 6—7—44 | கிழாநிலை. | 12—7—44 | ஆலங்குடி. |
| 7—7—44 | பாப்பாபட்டி. | 14—7—44 | புதுக்கோட்டை. |

## நெசவு துணி விற்பனை அடக்குமுறை சங்கத்தாரின் விளம்பரம்.

### எல்லாத்துணி வியாபாரிகளுக்கும்.

டெக்ஸ்டைல் கமிஷனர் சமீபத்தில் பிரசுரித்திருக்கும் விளம்பரத்தில் கண்டபடி 1944-ம் வருஷம் எப்ரல் மாதத்திலும் அதற்கு முன்னதாகவும் டெக்ஸ் மார்க்குகளுடன் மூட்டையாகக் கட்டப்பட்டிருக்கும் துணியும், விலை குறிக்கப்படாத கைத்தறித்துணியும் விலைக்குறியும் டெக்ஸ் மார்க்குமில்லாத மற்ற எந்தத் துணியும் 1944-ம் வருஷம் டிசம்பர் மாதம் 31-ம் தேதிக்குள் இறுதியில் விக்ரயம் செய்யப்படவேண்டும்.

துணிகளை வாங்க அநேகர்கள் தயாராகயிருக்கிறார்கள். துணிகளின் ஸ்டாக்குகளை வைத்திருக்கும் முதலாளிகள் தங்களுடைய சுயநலத்தை உத்தேசித்தும், போக்குவரவிலுள்ள தாமதத்தை உத்தேசித்தும் அவைகளை உடன்காலத்திலேயே சில்லரை வியாபாரிகளுக்கு விற்றுவிடவேண்டும். விற்பனையில் தாமதம் ஏற்பட்டால் சில்லரை வியாபாரிகள் அவைகளை வாங்கிக்கொள்ள முன்வரமாட்டார்கள். ஏனெனில் அவர்களுக்குத் துணியை விற்பனை செய்யப் போதுமான அவகாசம் இருக்காது. அப்பொழுது துணிகள் முதலாளிகளிடம் தங்கிவிடும். சில்லரை வியாபாரிகளை தண்டனைக்குட்படுத்தும் நடவடிக்கை தள்ளுபடி ஆகிவிடுவதுடன் முதலாளிகள் தங்களுடைய சரக்குகளையும் இழந்துவிட நேரிடும்.

மிகவும் அத்தியாவசியமான காரணங்களுள்ள கேஸ்களைத் தவிர இதரர்கள் விஷயத்தில் டெக்ஸ்டைல் கமிஷனர் இந்த விளம்பரத்தில் கண்டபடி அமுல் நடத்தாமல் சலுகை காட்டமாட்டார். ஆகையால் துணிகளை இப்பொழுதே விற்பனை செய்துவிடுங்கள்.

*T. V. பாட்டலி,*
ஆக்டிங் சேர்மன்,
டெக்ஸ்டைல் அடக்குமுறை சங்கம்.

## குறிப்பு.

டெக்ஸ்டைல் கமிஷனர் வெளியிட்டிருக்கும் விளம்பரத்தில் கண்டபடி நெசவுத் துணியைப்போல கைத்தறி துணிமணிகளையும் அதில் குறிப்பிட்ட கால அளவிற்குள் விற்பனை செய்துவிடவேண்டும். மாகாண நிர்வாகம் கைத்தறித் துணிகளின் விலையை நிர்த்தாரணம் செய்யவேண்டுமென்றும் அவர் வேண்டிக்கொண்டிருக்கிறார். இந்தத் துணிகளுக்கும் விலைவாசியைக் குறிக்கக்கூடிய முத்திரை குத்தப்படும். இந்த ஏற்பாடுகள் கூடிய சீக்கிரம் அமுலுக்கு வந்துவிடும்.

(2) 1944-ம் வருஷம் டிசம்பர் மாதம் 31-ம் தேதிக்குள் 1944-ம் வருஷம் எப்ரல் மாதத்திலும் அதற்கு முன்னதாகவும் டெக்ஸ் மார்க்கு போடப்பட்டு மூட்டையாகக் கட்டப்பட்ட துணிகளையும், 1944-ம் வருஷம் எப்ரல் மாதத்திலும் அதற்கு முன்னதாகவும் மாகாண நிர்வாகங்களால் T. C. B. மார்க் போடப்பட்ட கைத்தறித் துணிகளையும் விற்றுவிடவேண்டுமென்று ஒரு விளம்பரம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கால அளவு மாகாண நிர்வாகம் அனுமதித்திருக்கும் விலை நிர்த்தாரணம் செய்யப்படாத டெக்ஸ் மார்க் இல்லாத சில்லரை வியாபாரிகளிடமுள்ள துணிமணிகளுக்கும் அன்வயிக்கும். டிசம்பர் மாதம் 31-ம் தேதிக்குள் துணி ஸ்டாக்குகளை பெரிய முதலாளிகள் விற்றுவிடவேண்டுமானால் அவர்கள் இப்பொழுதே அவைகளைச் சில்லரை வியாபாரிகளிடம் ஒப்படைத்து விடவேண்டும்.

25—5—44.

*M. K. வெல்லோடி,*
டெக்ஸ்டைல் கமிஷனர்.

Sri Brihadamba State Press, Pudukkottai, 1,750—4—7—44.


# புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1944-ம்வூ ஜூலைமீ 8உ [ரு. 205


தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CCV.

## ஜெர்மனியின் உண்மையான நிலைமை.

(கென்னத் டீ கோர்னி).

(இல்லஸ்டிரேடட் வீக்லி ஆப் இந்தியாவிலிருந்து எடுக்கப்பட்டது)

ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் ஜெர்மனியின் தற்காப்பு வலிமை உயர்வானதென்று ஜெர்மன் மக்களுக்கு இடப்படுத்த அபாரமான பிரசாரம் செய்துவருகிறார்கள். படையெடுப்பை சமாளிப்பதற்கும் அல்லது முறியடிப்பதற்கும் எதிரி இந்த ஒரு சாதனத்தைத் தான் நம்பியிருக்கிறானென்பது தெளிவுறக்காணப்படுகிறது. இதுவிஷயத்தில் தங்களுடைய ஆத்மீய குணங்களை பிரசாரர்கள் ஏராளமாகச் செலவிட்டிருக்கிறார்கள்.

1940-ம் வருஷத்தில் பிரிட்டனுக்கு படையெடுப்பு அபாயம் ஏற்பட்டபொழுது, அது இவ்விதமாக பகிரங்கமாக நிராகூரபேனையான வாக்குறுதிகளைச்செய்து பிரசாரம் செய்யவில்லை. இந்த விஷயத்தில் ஜெர்மன் தலைவர்கள் எவ்வளவு சிரத்தை எடுத்துக்கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. நேசதேசத்தாருக்கு வெற்றிகள் கிடைத்துவருவதிலிருந்து அந்த பிரசாரங்களின் ராஜீய மதிப்பும் இரட்டித்திருக்குமென்பதில் சந்தேகமில்லை.

பெர்லினிலிருக்கும் ரகசிய உற்று நோக்காளர் ஜெர்மன் பொது மக்களின் மனவுறுதி ஆறுமாதங்களுக்கு முன்னிருந்தது போலத்தானிருக்கிறதென்று சொல்லுகிறார். ஆகிலும் லண்டனை ஓட்டியில்லா விமானங்கள் தாக்கிவருவதிலிருந்து அவர்களின் மனவுறுதி பலப்படுத்தவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

பொதுமக்கள், விசேஷமாக வெடிகுண்டு வீசுக்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள பொதுஜனங்கள், தங்களுடைய சொந்த அலுவல்களைக் கவனிக்கத்தான் அவகாசமிருக்கிறது. துணிமணிகளையும், உணவுப்பொருள்களையும், குடித்தனத்துக்குவேண்டிய தட்டுமுட்டு சாமான்களையும், பழுதுபட்ட கட்டடங்களை புனருத்தாரணம் செய்யத் தேவைப்படும் சாமான்களையும் சம்பாதிப்பதில்தான் அவர்கள் தங்களுடைய காலத்தையும், புத்தி சக்தியையும் உபயோகித்துவருகிறார்கள்.

இடைவிடாது நாசம் விளைவிக்கக்கூடிய வெடிகுண்டு வீச்சிலிருந்து நாஸிகளை எதிர்த்து நிற்பவர்களிடம் இரண்டு விளைவுகள் ஏற்பட்டன. முதலாவதாக, அமைப்புள்ள கோஷ்டிகள் கலைக்கப்பட்டன, பல்வேறுபட்டவர்கள் ஒன்றுசேரக்கூடிய தொடர்பு கஷ்ட சாத்தியமாகிவிட்டது. ராஜீய முறைகளில் சந்தேகிக்கப்படக்கூடியவர்கள் சுலபமாகத் தப்பி ஓடிவிட சௌகரியமேற்பட்டது. இரண்டாவதாக, சாதாரணமான தொழிலாளர்களுக்குச் சொந்த பிரச்னைகள் ஏராளமாக உண்டாகிவிட்டபடியால் ஒரு வருஷத்திற்கு முன்னிருந்ததுபோல் அவன் இப்பொழுது ராஜீய வியவகாரங்களில் அதிகமாகத் தலையிடுவதில்லை. அவனுக்கு அவகாசமும் கிடையாது. அதற்குத்தகுந்த சக்தியும் அவனிடமில்லை.

ஜெர்மனி எங்குபார்த்தாலும் துக்கசாகரத்தில் மூழ்கியிருக்கிறது. ஜெர்மானியர்களுக்கு வெறுப்பு உண்டாகிவிட்டது. எங்குபார்த்தாலும் தோல்வி மனப்பான்மை காணப்படுகிறது. நாஸிகளின் வட்டாரங்களில்கூட பூர்ணமான வெற்றியும் சரணாகதியும் ஏற்படக்கூடுமென்று பேசத் தொடங்கிவிட்டார்கள். பிரசார இலாகாவிலுள்ள சொற்பொழிவாளர்களும் இதை ஒப்புக்கொள்ளுகிறார்கள். அவர்கள் பிரசார மேடையிலிருந்து அப்பேர்ப்பட்ட மனப்பான்மை உள்ள நாஸித்தலைவர்களை பகிரங்கமாக நிந்தித்துவருகிறார்கள்.

சேனையின் மனவுறுதி திடமாகத்தான் இருந்துவருகிறது. சமீப சில வாரங்களில் அதில் சிறிது குலைவு காணப்படுகிறது. இதை அறிந்தவர்கள் இந்த சோர்வு கிழக்குப் போர்முனையை விட மேற்குப் போர்முனையில் பலமாகயிருக்கிறதென்று காண்கிறார்கள். நிச்சயமாக ஸோல்ஜர்கள் சேனையிலிருந்து தப்பி ஓடிவிடுகிறார்கள். பெர்லின் பிராந்தியத்தில் மட்டும் 10,000 ஸோல்ஜர்கள் ஓடிவிட்டார்களென்று கணக்கிடப்படுகிறது. பெர்லின் பூராவிலும் இது சம்பந்தமான படங்கள் சுவர்களில் ஒட்டப்பட்டிருக்கின்றன.

சமீபகாலத்தில் பொதுமக்களில் சிலரை சேனைக்குத் தேர்ந்தெடுத்தபொழுது இது வரையில் ராணுவத்துக்கு லாயக்கில்லாதவர்கள் என்று கருதப்பட்ட ராஜீயக் கைதிகளும் குற்றவாளிகளும் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மிகவும் கடுமையான பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்களைக் கடும் போர் நடக்கும் போர்முனைக்கு அனுப்புகிறார்கள்.

### ஜெர்மன் விமானப்படை.

ஜெர்மன் விமானப்படை பலமும் பலமாக அழிந்திருக்கிறது. அது அற்றுப்போய் விட்டதென்று சொல்லுவது மிகையாகும். அதன் நடவடிக்கை நிகழ்ச்சி குறைக்கப்பட்டிருக்கிறது. ஜெர்மன் சண்டை விமானப்படைகள் ஒருமாதத்திற்கு குறிப்பிட்ட தடவைகள் தாக்குதல் செய்யச் செல்லவேண்டும். இந்தத் தடவைகள் முன்னதாகவே வரையறுக்கப் பட்டுவிடும். சில சமயங்களில் பிரிடிஷ், அமெரிக்க விமானப்படைகளுக்கு ஜெர்மன் சண்டை விமானங்களின் எதிர்ப்பு ஏற்படாததற்கு இதுதான் காரணமாகும்.

பகல் தாக்குதல் சாத்யமானபொழுது இது ஜெர்மனிக்கு அதிக நஷ்டத்தை உண்டு பண்ணிவிட்டது. ஜெர்மனியின் உற்பத்தி அளவு பலமாக பாதிக்கப்பட்டது. ஆகிலும் ஜெர்மனி இன்னும் ஏராளமான பொருள்களை உற்பத்தி செய்துவருகிறது. மேலும் நெருக்கடியை உத்தேசித்து திட்டங்களும் நிறுவப்பட்டு அவைகளும் அமுலுக்குக் கொண்டுவரப் பட்டிருக்கின்றன. இதை நாம் புறக்கணிப்பது முட்டாள்தனமாகும்.

ஆகாயப்படையின் நூதன யந்திர உற்பத்தியில் இருதேசமும் ஒன்றோடொன்று போட்டி போட்டுக்கொண்டிருக்கிறது. இது நீடித்து நடைபெறும். இருதரப்பிலுள்ள விஞ்ஞான சாஸ்திரிகளும் முறைகளையும் பதில் முறைகளையும் கண்டுபிடிப்பதில் அதிக சிரத்தைகாட்டிவருகிறார்கள். சில சமயங்களில் ஜெர்மன் விமானப்படை அளவுகடந்த நம்பிக்கை கொள்ளுகிறது. இந்த நம்பிக்கைதான் ஜெர்மன் மனவுறுதியை சில சமயங்களில் பலப்படுத்தி மாறுதல்களையும் உண்டுபண்ணுகிறது. இந்த யுத்தத்தில் நூதன யந்திர ஆராய்ச்சிப் போரும் சரித்திரத்தில் ருசிகரமான ஸ்வாரஸ்யமான பகுதியாயிருக்கும்.

### விலைவாசி அதிகரிப்பு.

செலாவணிப்பெருக்கு அதிகரித்துவருகிறது. கள்ள வியாபாரம் செய்யும் பண்டகசாலையில் ஒரு உடுப்பை வாங்க 1,000 மார்க்குகளையும், ஒரு ஜோடி பாதரக்ஷைகளை வாங்க 250 மார்க்குகளையும், ஒரு ராத்தல் வெண்ணெயை வாங்க 200 மார்க்குகளையும் ஜெர்மானியர்கள் செலவிடுகிறார்கள். சுருட்டுகள் ஒன்று 1 ஷில்லிங், 6 பென்ஸ் வீதம் விற்கப்படுகின்றன. ஜெர்மன் பொருள் வருங்காலத்தில் செலாவணியிலிருக்குமென்று அநேக ஜனங்கள் நம்பிக்கை கொள்ளவில்லை.

ஜெர்மன் ரகசியப் போலீஸாரின் கொடுமையும் கடுமையான நடவடிக்கைகளும் அதிகரித்துவிட்டன. இதனால் ஜெர்மன் ஆக்ஷியை எதிர்த்துப்போராடுவது அதிக கஷ்ட சாத்யமாக ஆகிவிட்டது. இப்பொழுது எதிர்த்துநிற்கவே இயலாது. சேனையின் உதவியன்னியில் நாஸிகளுக்கு விரோதமான எந்த பொதுஜன கிளர்ச்சியும் இப்பொழுது தலையெடுக்க முடியாதென்று தகவல்கள் கிடைத்துவருகின்றன. மேலும் எதிர்த்துநிற்கும் கக்ஷியின் திட்டங்களும் சிலாக்கியமானவையல்ல, உபயோகமுள்ளவையல்ல, அவைகளின் சில நோக்கங்கள் சிறுபிள்ளைத்தனமாகயிருக்கின்றன.

ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஒவ்வொரு நாட்டிற்கும் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டுத் திரும்பிவந்துள்ள ஒருவர் ஹிம்லரின் சக்தி அதிகரித்துவிட்டதென்றும் அதை அவன் திறமையுடன் உபயோகித்துவருவதால் நாஸி கக்ஷிக்காரர்கள் அவனைப் போற்றுகிறார்களென்றும் அவன் அவர்களின் அன்பை சம்பாதித்துவிட்டானென்றும் சொல்லுகிறார்.



சிறந்த திறமையைக்காட்டக்கூடிய எவரையும் நாஸிகள் சாதாரணமாகக்கொண்டாடுவார்கள். இது அவர்களை வசீகரப்படுத்தும். ஆங்கிலேயர்களுக்கு இது அருவருப்பை உண்டுபண்ணும். உள்நாட்டிலும் அயல்நாடுகளிலும் ஆடம்பரம் செய்கிறவர்களை ஆங்கிலேயர்கள் பாராட்டுவதில்லை.

படைத்தலைவர்கள் உள்நாட்டுப் போர்முனையின் தைரியத்தை நம்பியிருக்கிறார்கள். இதைப் பரிபாலித்துவிடுவேனென்று ஹிம்லர் நடைமுறையில் காண்பித்துவருகிறான். ஆசையினால் அவர்களுக்கும் நாஸிக்கக்ஷிக்குமுள்ள சம்பந்தங்கள் தாத்காலிகமாக பலப்பட்டு வருகின்றன.

---

## வார யுத்தச் செய்திகள்.

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 26—6—44 (திங்கட்கிழமை). | ருஷ்யர்கள் லைடப்ஸ்கையும் சிலோபினையும் கைப்பற்றினார்கள்.<br>இந்தியப் படைகள் இதாலியில் பெருகியாவுக்கு வடகிழக்கில் மேலும் இரண்டு கிராமங்களைப் பிடித்தன. |
| 27—6—44 (செவ்வாய்க்கிழமை). | நேசதேசப் படைகள் பிரான்ஸில் செர்பர்க்கைப் பிடித்தன.<br>நேசதேசப்படைகள் பர்மாவில் மோகாங்கைப் பிடித்தன. |
| 28—6—44 (புதன்கிழமை). | ருஷ்யர்கள் ஆர்ஷாவைப் பிடித்தார்கள்.<br>நேசதேசப்படைகள் மத்திய இதாலியில் சியூஸியையும், பர்மாவில் நம்டியையும் கைப்பற்றினார்கள். |
| 29—6—44 (வியாழக்கிழமை). | ருஷ்யர்கள் மோகிலெவ், குளொவ், பைகோவ் முதலியவற்றைப் பிடித்தார்கள்.<br>நேசதேசப்படைகள் நியூகினியாவில் ஹான்ஸா விரிகுடா பூராவையும், இதாலியில் காஸ்டாக்னெடோவையும் ஆக்கிரமித்தார்கள். |
| 30—6—44 (வெள்ளிக்கிழமை). | ருஷ்யர்கள் பொப்ருயிஸ்கை ஆக்கிரமித்தார்கள்.<br>நேசதேசப்படைகள் இதாலியில் காஸ்டிகிளியோனை ஆக்கிரமித்தன.<br>அமெரிக்கா பின்லாந்துடன் உறவை ரத்து செய்தது. |
| 1—7—44 (சனிக்கிழமை). | ருஷ்யர்கள் ஸ்லட்ஸ்கை ஆக்கிரமித்தனர்.<br>கோபன்ஹேகனில் தொழிலாளர் வேலை நிறுத்தம்.<br>ஜெர்மானியர்கள் இதாலியில் சியண்டி அரணைக் காலி செய்தார்கள். |
| 2—7—44 (ஞாயிற்றுக்கிழமை). | ஜெனரல் மாண்ட்காமரி பிரான்ஸில் கேயன் போர்முனையில் தாக்குதலைத் துவக்கினார்.<br>ருஷ்யர்கள் கிராஸ்னுயியையும், விலேய்காவையும் ஆக்கிரமித்தார்கள்.<br>நேசதேசத்தார்கள் செகினாலை ஆக்கிரமித்தார்கள். |
| 3—7—44 (திங்கட்கிழமை). | ருஷ்யர்கள் வெண்மை ருஷ்யாவின் தலைநகரமான மின்ஸ்கைக் கைப்பற்றினார்கள்.<br>நேசதேசப்படைகள் சினாவை ஆக்கிரமித்தன.<br>அமெரிக்கப்படைகள் வியாக் தீவுக்கு சமீபத்திலுள்ள நோயம்பூர் தீவில் இறங்கின. |

### (B)-செய்திச் சுருக்கம்.

பிரான்ஸ்.—மேற்குப்பகுதி செர்பர்க் தீபகற்பம்.—இங்கு ஜெர்மனியின் எதிர்ப்பு நின்றுவிட்டது. தீபகற்பம் பூராவும் விடுவிக்கப்பட்டது. காப்டிலாஹேக்கும் மாபெர்டஸ் விமானதளமும் பிடிபட்டன. செர்பர்க்கிலிருந்து தெற்கு முகமாக முன்னேறும் அமெரிக்கப்படை

கள் ஸெயின்ட் ரெமிடிலாண்டிஸையும் லாபோடரீயையும் பிடித்தபின் லாஹேபூட்வை நோக்கி வந்துகொண்டிருக்கின்றனர். காரண்டிஹுக்குத் தெற்கிலுள்ள அமெரிக்கப்படை கள் டென்னவில்லியையும் ஸெயின்ட் ஜோர்ஜையும் பிடித்தன.

**கிழக்குப் பகுதி.**—இதுதான் பிரிடிஷ் படைகள் போர்புரியும் பிராந்தியம். ஜெனரல் மான்ட் காமரி கேயனைப் பிடிக்கப் போர் தொடுத்திருக்கிறார். ஒடான். நதியைத் தாண்டி ஒரு முன்னணி ஸ்தானம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கார்பிகெட்டும் வெர்ஸானும் பிடி பட்டன. கேயனிலுள்ள மாதாக் கோவில்களின் கோபுரங்கள் திருஷ்டிகோசரமாகின்றன. இந்தப் பகுதியில் கனடியத் துருப்புகளுக்கும், பிரிடிஷ் துருப்புகளுக்கும் தொடர்பு ஏற்பட்டுவிட்டது. ஜெர்மானியர்கள் படைகளைக் குவித்து ஊக்கமாகப் போர்புரிகிறார்கள்.

இவ்வாரத்தில் கேயனுக்கு சமீபத்திலுள்ள கீழ்க்கண்ட இடங்களும் பிடிபட்டன. ராரே, பாரன், டெல்ஸல், ரெட்டவில்லி, மேனுயிர், கிரைன்விலி, மாண்ட்ரேயின்வில்லி.

**இதாலி.**—எதிரியின் காலம் கடத்தும் தந்திரத்தையும், பலமான எதிர்ப்பையும் பொருட் படுத்தாமல் நேசதேசப் படைகள் முன்னேறி வருகின்றன.

இடது பக்கத்தில் லெக்ஹார்னுக்குத் தெற்கிலுள்ள செசினவும், ப்ளாரென்ஸுக்குத் தெற்கிலுள்ள ஸீயனவும் விழுந்துவிட்டன. லெக்ஹார்ன் 13 மைல்கள் தூரத்திலிருக்கிறது. ப்ளாரென்ஸ் ராணுவ ரக்ஷணையற்ற நகரமென்று ஹிட்லர் சொல்லிவிட்டான்.

உள்நாட்டுப் பகுதியில் பெருஜியா, டிராஸிமெனோ ஏரிப் பகுதிகளிலிருந்து எதிரி விரட்டியடிக்கப்பட்டிருக்கிறான். கார்டோனு பிடிபட்டது. எதிரியின் கேந்திரஸ்தானமான அரெஸ்ஸோ தாக்கப்படுகிறது. பெருஜியாவுக்கு வடக்கில் ஸான்ஜியோவானியும் மாண்டி அக்கிடோவும் பிடிபட்டன.

வட்ரியாடிக் கடல் பக்கத்தில் ஜியண்டி நதியை நேசப்படைகள் கடந்துவிட்டார்கள். முஸ்ஸோனி நதியை அடைந்துவிட்டார்கள்.

கீழ்க்கண்ட இடங்கள் பிடிபட்டன.—ஸான்வின்ஸென்ஸோ (மேற்குக் கரை), உள்நாட் டில் மாண்டால் ஜினல்லோ, மாண்டிஜியானோ, போம்ரான்ஸ், செவெரினு, மெடரிகா, டிராஸிமேனு ஏரிக்கருகில் பாட்ரிக்னுனோ, மாக்கோனு.

**ருஷ்யா.**—வெண்மை ருஷ்யாவில் ருஷ்யாவின் முன்னேற்றம் நிற்கவில்லை. மோகிலேவ், ஷ்கிலோவ், பைகோவ், போட்ருயிஸ்க், மினோ, போரிஸோவ், ஸ்லட்ஸ்க், ல்யூபான், கிராஸ் கோயி முதலிய இடங்கள் ஒன்றன்பின் ஒன்றாக விழுந்தன. இந்த வாரக் கடையில் வெண்மை ருஷ்யாவின் தலைநகரமான மின்ஸ்க் விழுந்தது. அது போலந்துக்கும் பால்டிக் நாடுகளுக்கும், கிழக்கு பிரஷ்யாவுக்கும் வாசற்படி போன்றது. செம்படையின் முன்னணிப் படைகள் அதன்பின் 40 மைல்கள் சென்று நாக்லேல், பூவிமோவிசி மியாரி முதலியவற்றைக் கைப்பற்றிவிட்டன.

ஜெர்மனி பின்லாந்துக்குச் சொந்தமானதும் ஸ்வீடனுக்கும் பின்லாந்துக்கும் மத்தி யிலுள்ள ஆலாந்து தீவுகளைப் பிடித்தது.

ஜெர்மானியர்கள் பட்டாளம் பட்டாளமாகச் சரணடைந்து வருகிறார்கள்.

வைடப்ஸுக்கு வடமேற்கில் போலோட்ஸ் பிராந்தியத்தில், பெகோமல், பிளைஷ் செனிட்ஸி, ஷார்கோவ்ஷ் ஜிசனு, பினிஸ்க் ஸ்டட்ஸ்க், பியோரி முதலிய இடங்கள் பிடிபட்டன.

**பின்லிஷ் போர்முனையில்.**—பின்லாந்தில் கரீலியாவின் குடியரசு ஆட்சியின் தலைநகரமான பெட்ரோஸாவோட்ஸ்க்கும், ஒனிகா, லடோகா ஏரிகளுக்கும் மத்தியிலுள்ள ஸ்பாஸ்காயா கூபாவும் விடுவிக்கப்பட்டன. ருஷ்யர்கள் கரீலியன் பூசந்தியில் மற்றொரு தாக்குதலைத் துவக்கியிருக்கிறார்கள்.

**விமானப்போர்.**—மேகங்கள் அடர்த்தியாகவும் மழை பலமாகவும் இருந்தபோதிலும் விமான நடவடிக்கை குறைவுபடவில்லை. பிரான்ஸிலுள்ள போக்குவரவு மார்க்கங்களும், துருப்பு சேமிப்புகளும், சாமான்கள் குவியல்களும், யந்திர பீரங்கி நிலயங்களும் முக்கியமாகத் தாக்கப்படுகின்றன.

பிரிடனின் இரண்டாவது டாக்டிகல் விமானப்படை பறக்கும் வெடி குண்டுகளின் நிலயமான பாஸ் டி கலே பேரில் வெடிகுண்டுகளைப் பொழிந்தன.

ருஷ்ய தளங்களிலிருந்து புறப்பட்ட அமெரிக்க 8-வது விமானப்படை போலந்திலுள்ள டிரோ கோபியையத் தாக்கியபின் இதாலிக்குச் சென்றன.

1,500 விமானங்கள் ஸார்பிரக்கனிலுள்ள தொழிற்சாலைகளைத் தாக்கின.

புடாபெஸ்டும் இவ்வாரத்தில் தாக்கப்பட்டது.



**பஸிபிக் போர்.**—ஆஸ்திரேலியப்படைகள் நியூகினியா கடற்கரை வழியாக முன்னேறி ஹான்ஸா விரிகுடா பூராவையும் ஆக்கிரமித்துவிட்டன.

கடற்படை பாராமுஷிரோத் தீவின் தெற்கு முனையிலுள்ள காராப்ழி போரில் பீரங்கி பிரயோகம் செய்தது. அமெரிக்க வெடி விமானங்கள் பார்மோஸாத் தீவிலுள்ள டாகோத் துறைமுகத்தைத் தாக்கின.

முன்னேறிவரும் நேசதேசப்படைகள் மாரியனஸ் தீவுக்கூட்டத்தைச் சேர்ந்த சைபான் தீவிலுள்ள கார்பானையும் டாஜுபாகையும் கைப்பற்றின.

நேசதேசப்படைகள் டச்சு நியூகினியாவுக்கு அப்பாலிலுள்ள ஷௌடன் தீவுக்கூட்டத் திலுள்ள வியாக் தீவுக்கு மேற்கில் 100 மைல்களிலுள்ள நோயம்பூர் தீவிலிறங்கிவிட்டன. அங்குள்ள கோர்னுஸோசன் என்ற முக்யமான விமானதளம் நேசதேச வசமாகிவிட்டது.

**சைனு.**—திங்கட்கிழமையன்று ஜப்பானியர்கள் ஹெங்கியானைப் பிடித்துவிட்டார்கள். சீனப் படைகள் ஹெங்கியானிலிருந்து நூறுமைல்கள் தூரத்திலுள்ள பிங்வாங்கைத் திரும் பிப் பிடித்தன.

**அஸ்ஸாம்—பர்மாப் போர்முனை.**—மிட்கினுவுக்குத் தெற்கிலுள்ள மியன்கிங் விழுந்து விட்டது. மிட்கினுவுக்கும் சைனுவின் எல்லைச்சரகத்துக்கும் இப்பொழுது 64 மைல்கள் தானிருக்கிறது.

மோகாங் வீழ்ச்சிபெற்றபின் அதற்கு வடகிழக்கிலுள்ள நாம்டியும், சாரேகாங்கும், இம்பாலுக்கு வடகிழக்கிலுள்ள உக்ருலும் பிடிபட்டன. உக்ருல் இம்பாலுக்கும் சின்ட்வின் பிராந்தியத்திற்கும் செல்லக்கூடிய பகேந்திர ஸ்தானம்.

---

### சத்துருவினுடையவும், சத்துருவினுல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**25—6—44.** (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—ரயில்வே தளங்கள் எண்ணெய்க் கிணறு ஸ்தாபனங்கள்—ஸீட் (Sete).

பாலுரத் எண்ணெய்க் கிணறு ஸ்தாபனங் கள்.—ஸீட் (Sete) டிற்கு சில மைல்கள் மேற்கு.

ரயில்வே தளங்கள், பாலங்கள்.—பிரான் ஸிலுள்ள அவிக்னுன் (Avignon).

ராணுவ இலக்கு.—லெபென்டி (Lepente).

ரயில்வே தளங்கள், பாதைகள். பாலங்கள், டன்னல்கள், சேமிப்புகள்.—பிரான்ஸில் யுத்தம் நடக்கும் அரங்களுக்குப்பின்.

சேமிப்புகள்.—ட்ருயெக்ஸ் (Dreux).

ஸ்டீல் தொழிற்சாலைகள்.—இஜ்முடென் (Ijmuiden).

ரயில்வே தளங்கள்.—போவாஸ் (Beauvais), ஹாஜ்புரொவ்க் (Hazebrouck).

எலக்டிரிக் ஸ்விட்சிங் ஸ்டேஷன்கள்.—பொலோனு (Boulogne)க்கு அருகில்.

படகுகள்.—கிழக்குக் கால்வாய்.

இரவு.—லக்ஷியங்கள்—ஹங்கேரியிலுள்ள புடாபெஸட் (Budapest).

தொழிற்சாலை இலக்குகள்.—ஜெர்மனியிலுள்ள ஹாம்பர்க் (Hamburg).

இதாலி (Italy).

ரஸ்தா, ரயில் இலக்குகள்.—ஜேனுவா (Genoa) விற்கும் ஸ்பெஷியா (Spezia) விற்குமிடையில்.

கப்பல்கள்.—வட்ரியாடிக் (Adriatic) கடல்.

ருஷ்யா ((Russia).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமா னங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழு வதும்.

தூரக்கிழக்கு (Far East).

இறங்குமிடங்கள், ஸப்ளைக் கட்டடங்கள், கப்பல்.—குவாம் (Guam), ரோடா (Rota) தீவுகள்.

ஜப்பானியச் சைனியங்கள்.—ஸெய்பான் (Saipan) தீவு.

பர்மா (Burma).

எதிரி சைனியங்கள், துருப்பு முகாம்கள், ரஸ்தா நதிப்போக்குவரத்துகள்.—அரக்கான் (Arakan), மணிப்பூர் மலைகள் (Manipur).

ரயில்வே லைன்.—லாஷியோ (Lashio), முதல் மாண்டலே (Mandalay) வரை.

**26—6—44.** (திங்கட்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—எண்ணெய்க் கிணறுகள் விமானத் தொழிற்சாலைகள், ரயில்வே தளங்கள்—வியென்னு (Vienna).

ஜெர்மன் எண்ணெய் நிலயங்கள்.—கிழக்கு போலந்திலுள்ள ட்ரோஹோபூஸ் (Drohobucz).

இரவு.—ஒரு தகவலும் இல்லை.

இதாலி (Italy).

இலக்குகள்.—ஜினேவா (Genoa) விற்கும் ஸ்பெஷியா (Spezia) விற்குமிடையில்.

எண்ணெய்க் கிணறுகள்.—டிரியெஸ்ட்டி (Trieste).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

பர்மா (Burma).

துருப்பு முகாம்கள், ரஸ்தா, நதிப் போக்கு வரத்துகள்.—மாயு (Mayu), அரக்கான் (Arakan), கலடான் (Kaladan), இம்பால் (Imphal), உக்ருல் (Ukhrul) பிரதேசங்கள்.

படகுகள்.—காலிவா (Kalewa) முனிவாப் (Monywa) பிரதேசங்கள்.

27—6—44. (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—இலக்குகள், போக்குவரத்துகள்.—செர்பர்க் (Cherbourg), லா ரோச் சர் யான் (La Roche Sur Yonne).

இரவு.—ரயில்வே ஸ்தலங்கள்—பிரான்ஸி லுள்ள மெட்ஸ் (Metz), பிலெய்ன்வில்லி (Blainville).

ரயில்வே ஸ்டேஷன்கள்.—பின்ஸ்க் (Pinsk), போரிஸாவ் (Borisov), ஆஸிபோவிச்சி (Osipovichi)

இதாலி (Italy).

ரஸ்தாக்கள், ரயில்வேக்கள், பாலங்கள்.—வடக்கு இதாலி (North Italy).

பீரங்கி ஸ்தாபனங்கள், மோட்டார் போக்கு வரத்துகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

கப்பல் ஸ்தலங்கள்.—ஸ்காஸ்ட்ரி லெவாண்டி (Sestri Levante).

இலக்குகள்.—யூகோஸ்லாவியா (Yugoslavia).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய தளங்கள்.—மாரியனாஸ் (Marianas) காரோலீன்ஸ் (Carolines).

பர்மா (Burma).

துருப்புகள், முகாம்கள், மோட்டார் போக்கு வரத்துகள், டாங்கிகள், விரதுக் குவியல்கள்.—பாலெல் (Palel), டாமு (Tamu), ஷ்வேகின் (Shwegyin), பிஷென்பூர் (Bishenpur), டாமு (Tamu) பிரதேசங்கள்.

28—6—44. (புதன்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—விமான நிலயம்.—குய்ரான் (Couyron), ஆதிஸ் (Athies), ஜுவின்கோர்ட் (Juvincourt).

ரயில்வே தளங்கள்.—சார்பிரக்கன் (Saarbrucken).

ராணுவ இலக்குகள்.—பாரிஸிற்கும் (Paris) லேயானிற்கும் (Laon) அருகில்.

ரயில்வே ஸ்தாபனங்கள்.—பாஸ் டி கலே (Pas De Calais) பிரதேசம்.

ரயில்வே தளங்கள், பாலங்கள், விமான நிலயங்கள்.—பிரான்ஸ் (France).

எண்ணெய்க் கிணறுகள்.—ருமேனியாவிலுள்ள புகாரெஸ்ட் (Bucharest).

இரவு.—ஜெர்மனியிலுள்ள சார்பிரக்கன் (Saarbrucken).

எண்ணெய்க் கிணறு :—எஸ்ஸினிற்கு (Essen) வடக்கு.

சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

இதாலி (Italy).

ரயில் இலக்குகள் மோட்டார் போக்குவரத்துகள்.—வட இதாலி (Italy).

கப்பல்கள், லக்ஷியங்கள்.—யூகோஸ்லாவியா (Yugoslavia).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

பர்மா (Burma).

படகுகள், எண்ணெய்க் கிணறுகள், துருப்பு முகாம்கள் :—அரக்கான் (Arakan), மாயு (Mayu), கலடான் (Kaladan) பிரதேசங்கள்.

பாலம்.—காலிவா (Kalewa)விற்கருகில்.

29—6—44. (வியாழக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—எண்ணெய்க் கிணறு, இதர தொழிற்சாலை இலக்குகள்.—மத்திய ஜெர்மனி (Central Germany).

பறக்கும் குண்டு நிலயங்கள்.—பிரெஞ்சுக் கடற்கரை.

ரயில்ரோட் பாலங்கள்.—லாஸ்பெஷியா (Laspezia)விற்கும் தென் பிரான்ஸிற்கும் (Southern France)இடையில்.

ரயில் தளங்கள்.—ராவென்னு (Ravenna), செஸேனு (Cesena).

ரயில்வே லயன்கள், சேமிப்புகள்.—பிரான்ஸ் (France).

இரவு—ராணுவ இலக்குகள்—பிரான்ஸ் (France).

விமான நிலயம்.—பூயெர்ஸ்ப்ரன் (Feursbrunn).

இதாலி (Italy).

தரைமீதுள்ள விமான நிலயங்கள், ராணுவ நிலயங்கள்.—வட இதாலி (Northern Italy).

விமான நிலயங்கள், தரைமீதுள்ள விமானங்கள், போக்குவரத்துகள்.—யூகோஸ்லாவியா (Yugoslavia).



ருஷ்யா (Russia).

(29 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

இலக்குகள்.—நியூ கினியிலுள்ள யாகாமுல் (Yakamul).

விமான நிலயங்கள்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul).

இலக்குகள்.—பொகய்ன்வில்லி (Bougainville).

பர்மா (Burma).

ஸ்டோர் குவியல்கள்.—காலிவா (Kalewa).

எதிரி துருப்புகள், போக்குவரத்துகள்.—டாமு உக்ருல் (Tamu-Ukhrul) பிரதேசங்கள்.

போக்குவரத்து, நதிப்போக்குவரத்து.—மேல் சிண்ட்வின் சமவெளி (Upper Chindwin).

பாலங்கள்.—முனிவா (Monywa), மித்கினு (Myitkyina).

30—6—44. (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—விமான நிலயங்கள்,—பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium).

பறக்கும் படகுகள், தளங்கள்.—பிரான்ஸிலுள்ள பாஸ் டி கலே (Pas De Calais) பிரதேசம்.

எதிரி நடவடிக்கைகளை தடுத்தல்.—நார்மண்டி (Normandy).

ரஸ்தா, ரயில் சந்திப்புகள்.—பீஸிடென்னிற்கும் (Biezidon), பாலெய்ஸிற்கு (Falaise) மிடையில்.

களஞ்சியங்கள்.—ஆர்வில்லி (Arville).

பீரங்கி நிலயங்கள்.—ஆர்லியான்ஸ் (Orleans) பிரதேசம்.

இரவு.—ரயில் ஸ்தலம்—பிரான்ஸிலுள்ள வியெர்ஸான் (Vierzon).

இதாலி (Italy).

போக்குவரத்துகள், துருப்புகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

கடற்கரை வரிசைகள்.—நியூ அயர்லாந்து (New Ireland).

இலக்குகள்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul).

கப்பல்கள்.—வயாக்கிற்கு (Wiak) அருகில்.

பர்மா (Burma).

எதிரி சைனியங்கள்.—பாலெல்லிற்கு கிழக்கு (East of Palel).

துருப்பு முகாம்கள், ரஸ்தா, நதிப் போக்கு வரத்துகள்.—அரக்கான் (Arakan), கலடான் (Kaladan), சிண்ட்வின் (Chindwin) சமவெளிப் பிரதேசங்கள்.

பட்டணம்.—மாண்டலே (Mandalay).

எண்ணெய்க் குழாய் லயன்கள்.—மின்லா (Minhla).

1—7—44. (சனிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—பறக்கும் குண்டு ஸ்தாபனங்கள்.—வடக்கு பிரான்ஸ் (North France).

எதிரி ஸப்ளை லயன்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

விமான நிலயங்கள்.—பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium).

இரவு.—சுரங்கவெடி பாவுதல்—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

இதாலி (Italy).

ரஸ்தாவில் போக்குவரத்துகள்.—வட இதாலி முழுமையும் (North Italy).

ரஸ்தா, மோட்டார் போக்குவரத்துகள், பீரங்கி ஸ்தாபனங்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

மோட்டார் போக்குவரத்துகள் சேமிப்புகள்.—யூகோஸ்லாவியா (Yugoslavia).

ருஷ்யா (Russia).

(35 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய ஸ்தாபனங்கள் கப்பல்கள்.—பரந்த பிரதேசம்.

விமான நிலயம்.—டிமோரிலுள்ள டில்லி (Dilli).

படகுகள்.—நியூ கினிக் கடற்கரை.

ஜப்பானிய சைனியங்கள்.—மாரியானஸ் (Marianas), மார்ஷல்ஸ் (Marshalls).

பர்மா (Burma).

ரயில் தளங்கள், பாதைகள்.—மாண்டலே (Mandalay), முனிவா (Monywa).

பட்டணம்.—பாகொக்கு (Pakokku).

ஜப்பானிய தலைமைக் காரியாலயம்.—டாமு (Tamu).

பல இலக்குகள்.—யுக்ருல் (Ukhrul), அதன் அருகில்.

பெட்ரோல் ஸ்தாபனங்கள்.—யெனங்யாங் (Yenangyaung).

படகுகள்.—யெனங்யாங் (Yenangyaung)கிற்கும், சாக்கிற்கும் நடுவில் (Chauk).

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**26—6—44.** (திங்கட்கிழமை).
பிரிடன் (Britain).
சில இடங்கள்.—தென் இங்கிலாந்து (South England).
ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).
எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**27—6—44.** (செவ்வாய்க்கிழமை).
பிரிடன் (Britain).
சில இடங்கள்.—தெற்கு, தென் கிழக்கு இங்கிலாந்து (S. & S. Eastern England).
ருஷ்யா (Russia).
எதிரி விமான நடவடிக்கை இல்லை.
தூரக்கிழக்கு (Far East).
நேசதேசப் போக்குவரத்துகள்.—மத்திய பஸிபிக் (Central Pacific).

**28—6—44.** (புதன்கிழமை).
பிரிடன் (Britain).
சில இடங்கள்.—இங்கிலாந்தின் தென் கடற்கரை (S. Coast of England).
ருஷ்யா (Russia).
எதிரி விமான நடவடிக்கை இல்லை.
தூரக்கிழக்கு (Far East).
நேசதேச சைனியங்கள்.—மாரியானுஸ் (Marianas).

**29—6—44.** (வியாழக்கிழமை).
பிரிடன் (Britain).
சில இடங்கள்.—தென் இங்கிலாந்து.
ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).
எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**30—6—44.** (வெள்ளிக்கிழமை).
பிரிடன் (Britain).
சில இடங்கள்.—தெற்கு, தென் கிழக்கு இங்கிலாந்து (South and South-East Coast of England).
ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).
எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**1—7—44.** (சனிக்கிழமை).
பிரிடன் (Britain).
சில இடங்கள்.—தென் கிழக்கு இங்கிலாந்து (South Eastern England).
ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).
எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**2—7—44.** (ஞாயிற்றுக்கிழமை).
பிரிடன் (Britain).
தென் கடற்கரை இங்கிலாந்து (England).
ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).
எதிரி விமான நடவடிக்கை இல்லை.

---

# யுத்தக் குறிப்புகள்.

**ராணுவ நிலைமை.** சமீபகால சம்பவங்களான செர்பர்க்கின் ஆக்கிரமணம், ரோமுக்கு வடக்கில் முன்னேற்றம், பின்லாந்திலும், வெண்மை ருஷ்யாவிலும் துரிதமான முற்போக்கு, இவைகளிலிருந்து சில முடிவுகளைச் செய்யக்கூடும்.

முதலாவது, ஜெர்மன் வலிமை மிகுதியாகத் தோன்றினாலும் மூன்று பக்கத்திய தாக்குதல்களைச் சமாளிக்கப் போதுமானதல்ல;

இரண்டாவதாக, நேசதேசத்தாரிடம் ஐரோப்பிய போர்முனைகளில் முன்னேறித் தாக்கவும், தூரக்கிழக்கில் நடவடிக்கைகளை நடத்தவும் போதுமான சக்தியிருக்கிறது;

மூன்றாவதாக, எதிரியுடையதைவிட நேசதேசத்தாரின் யுத்த தந்திரம் சிலாக்கியமானது. சாத்தியமல்லாததென்று நினைத்த பிரெஞ்சுக் கடற்கரையில் படைகளிறங்கியதும், ரோமைப் பிடித்ததும் இழந்து விட்டோமென்று நினைத்த இம்பாலை திரும்பிப் பிடித்ததும், பிளக்க முடியாதவைகள் என்றெண்ணிய வெண்மை ருஷ்யாவைப் பிடித்ததும் இதை ருசுப்பிக்கின்றன.

வி வி வி வி வி

**சிறந்த யுத்த தந்திரம்.** நேசதேசத்தாரின் யுத்த தந்திரம் சிறப்பானதென்று சொல்லுவதற்கு நியாயமிருக்கிறது. கோரென்டின் தீபகற்பத்தில் படைகளிறங்கி செர்பர்க்கையும் பிடித்ததுபோன்ற வெற்றிகரமான நடவடிக்கை சரித்திரத்தில் இது வரையில் நடைபெற்றதில்லை. சிங்கப்பூரின் கதி ஏற்படக்கூடாதென்று நினைத்து ஜெர்மானியர்கள் தற்காப்புகளை பலமாக அமைத்திருந்த செர்பர்க் 10 நாட்களில் விழுந்துவிட்டது. டாங்கர்க்கில் பின்வாங்கியதற்குப்பின் நிறுவப்பட்ட நேசதேச யுத்த தந்திரம் சாதாரணமானது. ஆகிலும் மிகவும் சிறந்தது. முதலில் மூன்று வருஷங்களாக இடைவிடாத விமானத் தாக்குதலால் எதிரியின் யுத்த சக்தி குலைக்கப்பட்டது. அதன் பயனாக இப்பொழுது ஜெர்மன் படைகளுக்குப் போதுமான தளவாடங்களும் விமான ரக்ஷணையும் கிடைக்கவில்லை. அடுத்தபடி படையெடுக்கக்கூடிய பிராந்தியங்களிலுள்ள வயல்களும், இருப்புப்பாதைகளும், பாலங்களும், ரஸ்தாக்களும் நொருக்கப்பட்டன. இதனால் எதிரிக்கு



உதவிப் படைகளைக் கொண்டுவரும் சக்தி குறைந்துவிட்டது. இந்த தந்திரத்தில் மிகவும் முக்கியமான பாகம் யாதெனில் கேயனைப் பிடித்துவிடுவதாக ஜெனரல் மாண்ட் காமரி ரோமலுக்குப் பீதியை உண்டாக்கி அவனை கேயனைத் தற்காப்பு செய்யும்படி தூண்டியும் செர்பர்க்கை அலக்ஷியம் செய்யும்படிக்கும் செய்ததுதான். இவ்விரண்டு ஜெனரல்களும் தங்களுடைய யுத்த தந்திரத்தை ஆபிரிக்காவில் பரீக்ஷை செய்துபார்த்திருக்கிறார்கள். செர்பர்க்கில் மறுபடியும் நேசதேசத்தாருக்கு வெற்றி கிடைத்துவிட்டது கேயன் ஒரு கேந்திரஸ்தானம். அதைச்சுற்றி ஏராளமான விமான தளங்களும், இருப்புப்பாதைகளும், ரஸ்தாக்களும், கால்வாய்களும் செல்லுகின்றன. ரோமல் இங்கு நிறுத்திவைக்கப்பட்டபொழுது ஜெனரல் பிராட்லியிடமுள்ள அமெரிக்கப்படைகள் எதிர்ப்பின்றியில் செர்பர்க்கை நோக்கி முன்னேறினார்கள்.

வி வி வி வி வி

**செர்பர்க்.** ஜூன் மாதம் 23-ம் தேதியன்று ஜெர்மானியர்கள் பின்வருமாறு பீத்திக்கொண்டார்கள். "கடற்கரை ஓரத்திலுள்ள செர்பர்க் அரணை சென்ற நான்கு வருஷங்களில் நாங்கள் பெரிய தற்காப்பு தளமாக அமைத்துவிட்டோம். அதன் மத்திய பாகத்தைச்சுற்றி ஏராளமான தற்காப்புகள் அமைக்கப்பட்டிருக்கின்றன."

அது வீழ்ச்சி பெற்றபொழுது அதன் மதிப்புக் குறைந்துவிட்டது. அது இப்பொழுது புராணத்துக்குரியது என்று சொல்லப்படுகிறது. அது வீழ்ச்சி பெருமுன் அது பிளக்க முடியாததாகயிருந்தது. அதன் வீழ்ச்சிக்குப்பின் அதைத் தற்காப்பு செய்வது வியர்த்தமானதென்று சொல்லப்படுகிறது.

ஜப்பானியர்களும் இதுபோல் பிரட்டாகப் பேசிவருகிறார்கள், படைகளிறங்குமுன் பிரெஞ்சுக் கடற்கரையில் எந்த இடத்திலும், எந்த சமயத்திலும் படைகளிறங்க முடியாதென்று டோக்கியோ சொல்லிவந்தது. படைகளிறங்கிய தினத்தன்றும்கூட அட்லாண்டிக் அரண் பிளக்கமுடியாததென்று சொல்லப்பட்டது. டோக்கியோவில் குதூகலமேற்பட்டு அவர்கள் பின்வருமாறு கோஷம் செய்தார்கள். "பிரிடனும், அமெரிக்காவும் பொறிக்குள் அகப்பட்டுக்கொண்டுவிட்டன. இந்த சந்தர்ப்பத்தைத்தான் ஜெர்மனி எதிர்பார்த்துத் தயாராகயிருந்தது. தெய்வசக்தி இப்பொழுதுதான் செர்பர்க் கடற்கரையில் தோன்றியிருக்கிறது."

ஜூன் 7-ம் தேதிக்குப்பின் நேசதேசத்தார்கள் கடற்கரைகளில் ஊன்றிக்கொண்டு விட்டார்களென்றும் தூரக்கிழக்குப் போரிலும் தளர்ச்சி ஏற்படாதென்றும் தெளிவானவுடன் ஜப்பானின் பிரசாரத்வனி மாறுதலடைந்தது. இப்பொழுது டோக்கியோவில் வெளியாகும் பத்திரிகைகளில் முதல் பக்கத்தில் செர்பர்க்கின் வீழ்ச்சி அச்சிடப்பட்டிருக்கிறது. ஜப்பானியர்களுக்கும் வருங்காலத்தில் அபாயம் ஏற்படக்கூடுமென்ற எச்சரிக்கையும் பத்திரிகைகளில் அச்சிடப்பட்டிருக்கிறது.

பெர்லின் தத்வத்தை உணர்ந்துவிட்டது. "செர்பர்க் வீழ்ச்சி மற்றொரு ஸ்டாலின் கிராட் நடவடிக்கையென்றும்" "செர்பர்க்கை ஐசன்ஹவர் மூன்று வாரங்களுக்குப்பின்தான் கைப்பற்ற இயன்றதென்றும்" அபத்தமான பிரசாரம் நடைபெற்று வந்தபோதிலும் நிலைமையின் நெருக்கடியை ஜெர்மனி உணர்ந்துவிட்டது. டாஸ்ரெக் என்னும் பத்திரிகையில் சமீபத்தில் வெளிவந்த இதழில் டாக்டர் கோயபல்ஸ் பின்வருமாறு எழுதுகிறான்.

"நாம் ஜீவித்திருக்கப் போர் புரிகிறோம் என்று சொல்லுவது அர்த்தமில்லாத பேச்சல்ல. எதிரிகளிடம் நம்மைவிட மிகுதியான படைகளும் யுத்த தளவாடங்களுமிருக்கின்றன. ஆகையால் ஜெர்மனியிடமுள்ள மனிதர்களையும், தளவாடங்களையும் இதுவரையில் உபயோகித்ததுபோலில்லாமல் இப்பொழுது ஜாக்கிரதையாக உபயோகப்படுத்தவேண்டும். பூர்ணமான யுத்தமென்பது ஒரு பெரிய சிக்ஷகன். எதிரியின் பயங்கரமான லக்ஷத்திலிருந்து அதன் வலுவும் தன்மையும் அதிகரித்துவிட்டது. அவர்கள் ஒருபொழுதும் நிபந்தனைக்குட்பட மாட்டார்கள். யுத்தத்தில் சமாதானமென்பதே கிடையாது."

மற்றும் சிலர்கள் விசனத்துடன் பின்வருமாறு எழுதுகிறார்கள். "ஜெர்மனியின் அந்திய காலம் சமீபித்துவிட்டது. ஜெர்மனியைச் சுற்றியிருக்கும் நிலைமை பயங்கரமாகயிருக்கிறது. "ஜெர்மானியர்களுக்கு ஒரு முறைதான் உண்டு. அவர்கள் கடைசி வரையில் போராட வேண்டும்."

கடைசி மேற்கோளைக் கவனிக்கும்பொழுது நமக்கு செர்பர்க்கிலிருந்த ஜெர்மன் கமாண்டரான லெப்டினண்ட் ஜெனரல் கார்ல்வான் ஷிபனுடைய உத்தரவுகள் ஞாபகத்துக்கு வருகின்றன. "உயிர் துறக்கும் வரையில் போராடுங்கள்" என்று அவன் துருப்புகளுக்கு உத்தரவிட்டான். அவன் கொஞ்சம்கூடச் சண்டை போடவில்லை. போரில் உயிர்துறக்கவுமில்லை.

எதிரி வசம் கைதியாகிவிட்டான். அவன் உபதேசம் செய்தானே ஒழிய அனுபவத்தில் அதை நடத்திக்காட்டவில்லை.

செர்பர்க்கின் ஆக்கிரமணம் பூர்த்தியாகிவிட்டது. காப்டிலாஹேக்கிலிருந்த சிறிது எதிர்ப்பும் நின்றுவிட்டது.

ஜெர்மானியர்கள் சிரமப்பட்டு அழித்த கப்பற்கட்டும் தளங்களையும், கப்பற்துறைகளையும் அமெரிக்க எஞ்ஜினியர்கள் அதிவேகமாகப் பழுதுபார்த்து புனருத்தாரணம் செய்து வருகிறார்கள்.

வி வி வி வி வி

**நார்மண்டிக்காகப் போர்.** செர்பர்க்குக்காக நடந்த போர் முடிந்துவிட்டது. நார்மண்டிக்காக போர் நடைபெற்றுவருகிறது. நேச தேசப் படைகள் கேயனுக்கு வடகிழக்கில் ஆர்ன் நதியின் முகத்துவாரத்தில் இறங்கிவிட்டன. அமெரிக்கப்படைகள் கோரண்டின் தீபகற்பத்தின் மேற்குக் கரையில் புதிய தாக்குதலைத் துவக்கியிருக்கிறார்கள். முக்கியமாகப் போர் கேயனுக்குத் தென்மேற்கில் எவரஸியிலும் ஓடான் நதியைத்தாண்டி எஸ்குவேயிலும் நடைபெறுகிறது. இங்கு ஜெனரல் மாண்ட் காமரியிடமுள்ள பிரிடிஷ் படைகள் முன்னேறித் தாக்க ஆரம்பித்துவிட்டன. இந்த பிரதேசத்திற்கு ஹிட்லர் ருஷ்யப் போர்முனையிலிருந்து ஒரு பான்ஸர் டாங்கிப்படையை அனுப்பியிருக்கிறான். இந்தப் போரில் ரோமல் ஜெர்மன் படைகளுக்குத் தலைமை வகிப்பதுடன் அவனுடைய உயர்தரமான மூலபலத்தையும் ஈடுபடுத்தியிருக்கிறான். யுத்தப்போக்கு நேச தேசத்தாருக்கு வெற்றிகரமாக முடிந்துவருகிறது. முதல் மூன்று நாட்களில் ஓடான் நதியைத் தாண்டியிருக்கும் பிரிடிஷாரின் முன்னணி ஸ்தானத்தைத் தாக்கிய ஜெர்மனியின் 24 பதில் தாக்குதல்களும் தூரத்தியடிக்கப்பட்டன. ஒவ்வொரு தடவையிலும் எதிரிக்குப் பலமான நஷ்டம் ஏற்பட்டது. முன்னேறித் தாக்கும் சக்தி நேசதேசத்தாரிடம் இருந்து வருகிறது. ரோமலுக்கு தடுமாட்டம் ஏற்பட்டுவிட்டது. அடுத்த அடி எந்த இடத்தில் விழுமென்று அவனுக்குப் புலப்படவில்லை.

வி வி வி வி வி

**உள்நாட்டு எதிர்ப்பு** பிரான்ஸில் ஜெர்மானியர்கள் மற்றொரு எதிர்ப்பை சமாளிக்கவேண்டியிருக்கிறது. டென்மார்க்கில் கோபன்ஹேகனில் 4,00,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்துவிட்டார்கள். ஜெர்மானியர்கள் அந்நகரத்தை முற்றுகைக்குள்ளாக்கிவிட்டார்கள். சமரசமும் ஏற்பட்டுவிட்டது. உள்நாட்டுப் படைகளுக்கு தளகர்த்தராக ஜெனரல் கோனிக்கை ஆல்ஜியர்ஸ் நிர்வாகம் நியமித்தபின் பிரான்ஸில் உள்நாட்டு எதிர்ப்பு வலுத்துவிட்டது. ஜூன் 22-ம் தேதியன்று தேசாபிமானப்படைகள் எதிரியின் தலைப்படைகளையும், விமானங்களையும், கவசம் பூண்ட படைகளையும் மற்றொரு பக்கத்தில் போர் புரியும்படி செய்து நார்மண்டியில் நடைபெறும் நடவடிக்கைகளுக்குப் பேருதவி செய்தன. மாக்விகள் என்று சொல்லப்பட்ட இந்த தேசாபிமானப்படைகளில் ஜெர்மனிக்கு அடிமை வேலைக்குச் செல்ல மறுத்த தொழிலாளர்கள் இதுவரையில் சேர்ந்திருந்தார்கள். இந்தப் படையில் இப்பொழுது எல்லா வகுப்பினரும் மனப்பான்மையுள்ளவர்களும் சேர்ந்துவிட்டார்கள். ஆரம்பத்தில் குறைவான ஆயுதங்களுடனும் ஆகார வசதிக்கு பொதுமக்களை நம்பியுமிருந்த மாக்விப்படைகள் லவாலின் சேனையை சமாளித்து நின்றன. இப்பொழுது அவைகள் ஜெர்மன் சேனைக்கு சவால் விடுகின்றன. இந்தப் படைகள் இப்பொழுது ஏராளமாக எல்லா இடங்களிலும் இருந்துகொண்டு நேசதேசத்தார் முன்புறத்தில் தாக்கும்பொழுது பின்புறத்தில் தாக்கிவருகின்றன.

வி வி வி வி வி

**பறக்கும் வெடிகுண்டுகள்.** ஓட்டியில்லா விமானங்களின் அட்டகாசம் நின்றுவிட்டதென்று நாம் இன்னும் கேள்விப்படவில்லை. ஆகிலும் அவைகளுக்குக் காலம் குறுகிவிட்டது. ஒருநாள் அதன் வெடிகுண்டுகள் குழந்தைகள் பேரிலும் மற்றொரு நாள் ஆஸ்பத்திரிகள் பேரிலும் விழுகின்றன. அவைகளினால் ராணுவ உபயோகம் ஒன்றும் கிடையாது. அவைகள் குறிப்பிட்ட லக்ஷியத்தை அடிக்கக்கூடியவை அல்ல. அவைகள் கண்மூடித்தனமாகப் பறந்து செல்லுகின்றன. ஆகிலும் அதன் வெற்றியைப் பற்றி ஜெர்மானியர்கள் பீத்திக்கொள்ளுகிறார்கள். அவைகளுக்கு "அதிவிதாரணியான வால் நக்ஷத்திரம்" என்ற புதுப் பெயரை ஜெர்மனி வழங்கியிருக்கிறது. ஜப்பானியர்கள் அதைவிட ஒருபடி அதிகமாக அதை சிலாகித்துப் பேசுகிறார்கள். அவைகள் பெர்லினிலுள்ள தளங்களுக்குத் திரும்பி வந்துவிடுகின்றன என்று டோக்கியோ சொல்லிவருகிறது. அவைகள் விமானங்களுமில்லை, அவைகளுக்கு ஓட்டிகளுமில்லை. ஆகையால் அவைகள் திரும்பி வராதென்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள். இது விமானங்களில்லாமலும் விமானிகளில்லாமலும் பிரிடனை மறுபடியும் கவண்ட்ரியைப்போல் அழிக்க வெடிகுண்டுகளை வீச ஹிட்லர்



செய்திருக்கும் ஒரு உபாயம்தான். அவைகள் பதில் நடவடிக்கைகள். ஆகிலும் இந்தப் புதிய ஆயுதத்தையும் நாம் சீக்கிரம் அழித்துவிடுவோம். காந்த வெடிகள் சென்ற வழியே அவைகளும் சென்றுவிடும்.

பிரான்ஸில் படைகளிறங்குமுன் ஹிட்லர் அவைகளை படையெடுப்பை எதிர்க்கும் விமானங்கள் என்று அழைத்து படையெடுப்புப் படைகள் குவிக்கப்பட்டிருந்த தெற்கு இங்கிலாந்துக்கு அவைகளை அனுப்பி வந்தான். அவைகளையும் லக்ஷியம் செய்யாமல் நேசப் படைகள் இறங்கிய பின் அவனுடைய வாண வேடிக்கைக்குரிய வெடிகுண்டுகள் நேசதேச விமானங்கள் ஐரோப்பாவைத் தாக்குவதை நிறுத்திவிடும்படி செய்து ஜெர்மனிக்கு ஆச்வாசம் ஏற்படும்படி செய்யுமென்று ஹிட்லர் நம்பியிருந்தான். செய்கோன் ஒலிபரப்பில் பின் வருமாறு சொல்லப்பட்டது. "இனிமேல் முன்போல் நார்மண்டி பேரிலும் ஜெர்மனி பேரிலும் பிரிடிஷ் அமெரிக்க விமானப் படைகள் வெடி குண்டுகளை வீசமுடியாது. ஜெர்மனியின் நூதன பறக்கும் வெடி குண்டுகள் புறப்படும் ஸ்தானங்களான, டோவருக்கு அப்பாலுள்ள பிரெஞ்சுக் கடற்கரையைத் தாக்க விமானங்களை நேசதேசத்தார்கள் உபயோகிக்க வேண்டும்." இந்த ஜோஸ்யம் சொல்லப்பட்ட தினத்தன்றே 1,300 கனமான அமெரிக்க வெடி விமானங்கள் ஹாம்பர்க்கை பலமாகத் தாக்கின. ஜூன் மாதம் 15-ம் தேதியன்று 1,500 வெடி விமானங்கள் பிரான்ஸிலுள்ள இருப்புப்பாதை ரஸ்தாக்களை அழிக்க இங்கிலாந்தை விட்டுச்சென்றன. ஜூன் மாதம் 16-ம் தேதியன்று 1,300 வெடி விமானங்கள் பெர்லினையும், கெல்ஸன் கெர்ச்சனையும் பலமாகத் தாக்கின. ஜூன் மாதத்தில் பிரிடிஷ் வெடி விமானப்படைமட்டும் ஜெர்மனியிலுள்ள லக்ஷியங்கள் பேரில் 56,000 டன்கள் மொத்த எடைமானமுள்ள வெடி குண்டுகளைப் பொழிந்தன. 77,000 தடவை பாய்ந்து சென்றிருக்கின்றன. உற்பத்தி நிலயங்களையும், விமான தளங்களையும் போக்குவரத்து மார்க்கங்களையும் அழிக்கும் நடவடிக்கைகள் பறக்கும் வெடிகள் தோன்றியதற்குப்பின் அதிகரித்துவிட்டன. அறிவில்லாத ஹிட்லரின் மோட்டுப்பூச்சிகள் சாகும் வரையில் கடித்துத்தான் தீரும். பிரிடனுக்கு எவ்வளவு ஓட்டியில்லா விமானங்கள் வருகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு ஐரோப்பியப் போரில் எதிரியின் விமானங்கள் குறைந்துவிடும்.

வி வி வி வி வி

**மின்ஸ்கின் வீழ்ச்சி.** ருஷ்யாவில் ஜெர்மனியின் கடைசி அரண், வெண்மை ருஷ்யாவின் தலைநகரமான மின்ஸ்கின் வீழ்ச்சியை மாஸ்கோ 324 பீரங்கிகளிலிருந்து 24 தடவை குண்டுகளைப் பிரயோகித்துக் கொண்டாடிற்று. மின்ஸ்க் 1939-ம் வருஷத்திய போலிஷ் எல்லைச் சரகத்திலிருக்கிறது. பால்டிக் நாடுகளும், போலந்தும், பிரஷ்யாவும் அதற்கு சமீபத்திலிருக்கின்றன.

இதற்குமுன் ஜெர்மனி ருஷ்யா பேரில் படையெடுத்தபொழுது "மின்னல் தாக்குதலென்றும், இடுக்கித் தாக்குதல்" என்றும் கேள்விப்பட்டிருக்கிறோம். இப்பொழுது ஜெர்மனியைத் தாக்குவதில் அந்த முறைகளையே நேசதேசத்தார்கள் வெண்மை ருஷ்யாவின் காடுகளிலும், சதுப்பு நிலங்களிலும் கையாண்டு வருகிறார்கள். ஸ்டாலின்கிராட்டைவிட பலமான நடவடிக்கைகளை ஆரம்பிக்க ருஷ்யர்கள் துருப்புகளைச் சலனம் செய்து வருகிறார்கள். 2,00,000 ஜெர்மானியர்கள் மின்ஸ்கில் தப்பி ஓடும் வழி துண்டிக்கப்பட்டு அகப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எதிரியின் ராஜ்ஜியத்தைப் பிடிப்பதைவிட எதிரியின் மனித பலத்தையும் தளவாடங்களையும் அழித்துவிடுவதுதான் முக்கியமென்று செம்படை எண்ணம் கொண்டிருக்கிறது. ஆங்காங்கு சிறிய பகுதிகளில் ஜெர்மானியர்களை வளைத்துக்கொள்ளுவதுதான் ருஷ்யாவின் யுத்த தந்திரமாக புலப்படுகிறது. இடுக்கிகள் விரிவாகவும், பெரியதாகவும் அநேக கிளைகளுள்ளதாகவும் மாறிவிட்டன. ஆகையினால்தான் முன்னேறித்தாக்கும்பொழுது ருஷ்யர்கள் அநேக முனைகளிலிருந்து புறப்பட்டு எதிரியின் படைவரிசைகளுக்குப் பின் சேர்ந்துவிடுகிறார்கள்.

வி வி வி வி வி

**ஒப்பாரி.** ஸ்டாக்ஹோமில் வெளியாகும் டிட்னிஞ்சன் என்னும் பத்திரிகையில் ஜெர்மனியிடம் அபிமானமுள்ள நிருபரான மிஸ்டர் ஜேடர்லண்ட் பின்கண்ட பெர்லின் வியாக்யானத்தை மறுமுறை பிரசுரித்திருக்கிறார். "பீல்ட் மார்ஷல் வான்ஜோடில் ருஷ்யா வழியாகப் பின்வாங்கி போலந்துக்குள் வெகு தூரமும் வந்துவிடுவார். ஸ்தானங்களுக்குப் பின்வாங்குவதுதான் அவனுடைய முக்கியமான யுத்த தந்திரம். இந்த தந்திரத்தின் மூலம் ஜெர்மானியர்கள் கிழக்குப்போர் முனையில் மாதக்கணக்கில் காலதாமதம் செய்யக்கூடும். ஸ்டாலின்கிராட்டுக்கு ஜெர்மானியர்கள் வந்தபொழுது ருஷ்யர்கள் தோல்வியடையாததுபோல், ருஷ்யர்கள் வார்ஸாவுக்கு வந்துவிட்டாலும் ஜெர்மனி யுத்தத்தில் தோற்றுவிடாது."

**இதாலி.** ஜூலை 3-ம் தேதியன்று ஸீனா விழுந்தது. இப்பொழுது நேசதேசப் படைகள் ப்ளாரென்ஸுக்கு 31 மைல்களுக்குள் வந்துவிட்டன. ஜெனரல் அலெக்ஸாண்டரின் படைகள் எதிரியின் பலமான எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் முன்னேறி வருகின்றன. கெஸ்ஸல்ரிங்க், ரிமினிக்கும் பைஸாவுக்கும் மத்தியில் அநேக மாதங்களாக டாட் சங்கத்தார் அமைத்திருக்கும் பலமான தற்காப்பு அரணை கோதிக் அரணுக்கு ப்ளாரென்ஸ் வழியாகப் பின்வாங்கிவருகிறான். இதுவரையில் ஜெர்மன் படை வரிசைகள் அழிவுபடவில்லை. ஆகிலும் அவைகள் சிதைவுபட்டு வருகின்றன. கெஸ்ஸல்ரிங்க் நின்று போராடவேண்டும் அல்லது போராடிக்கொண்டே பின்வாங்கவேண்டும். இதைத் தவிர அவனுக்கு வேறு கதியில்லை. நிலைத்து நின்று அவன் போர் புரிய முடியாது. அவன் பின்வாங்கினாலும் வடக்கு இதாலி, தெற்கு பிரான்ஸ், பால்கன் நாடுகளுக்குப் போக நேசதேசத்தார்களுக்கு அவன் வழியைத் திறந்து விடுகிறான்.

வி வி வி வி வி

**இந்தியா—பர்மா எல்லைச்சரகம், உக்ருலின் வீழ்ச்சி.** இந்த பிராந்தியத்தில் கடைசியாகக் கிடைத்த வெற்றி உக்ருலின் வீழ்ச்சிதான். இத்துடன் வட பர்மா, அஸ்ஸாம் போரின் ஒரு கட்டம் முடிவடைந்தது. மணிப்பூரை விழ்விப்பதென்ற நேசதேசத்தாரின் எண்ணம் நிறைவேறியது. லேடோ ரஸ்தாவை அமைக்கும் திட்டமும் பூர்த்தியாகிவருகிறது. மிட்கினாவும் விழுந்துவிட்டால் நேசதேசப் படைகள் சீன எல்லைச்சரகத்திலுள்ள டஙச்சங்கிலிருந்து 65 மைல்களுக்குள் வந்து விடுவார்கள். 10,000-க்கு மேற்பட்ட சதுர மைல்கள் கொண்ட பிரதேசம் திரும்பிப் பிடிக்கப்பட்டிருக்கிறது. 17,000 ஜப்பானியர்கள் உயிர் துறந்திருக்கிறார்கள்.

நேசதேசத்தாரின் வெற்றிக்குப் பல காரணங்கள் உண்டு. நேசதேசத்தாரின் ஒன்றுபட்ட முயற்சிகள். நேசதேச சேனையில் இந்தியர்களும், பிரிடிஷார்களும், அமெரிக்கர்களும், சீனர்களும், ஸ்தலத்திலுள்ள ஜாதியார்களும் சேர்ந்திருக்கிறார்கள். அடுத்தபடியாக நேசதேச விமானங்கள் எதிரியின் முன்னணி தளங்களையும் படை முகாம்களையும் வெடி குண்டுகளால் அழித்தன. சிண்டிட் படைகளும் ஏராளமாக உதவிபுரிந்திருக்கின்றன. அப்படைகள் 100 நாட்களுக்குள்ளாக பூமியின் சுற்றளவுக்கு பாதிபாகத்துக்கு மேலிருக்கக்கூடிய 14,000 மைல்களைக் கடந்து சென்றன.

---

## பிரான்ஸிலுள்ள ஜெர்மன் தளகர்த்தர்கள்.

மேற்குப்பக்கத்திலுள்ள ஜெர்மன் படைகளுக்கு பீல்ட் மார்ஷல் வான் ரண்ட் ஸ்டேட் உயர்தர தளகர்த்தர். அவரை ஜெனரல் ஈசன் ஹவருக்கு ஒப்பிடலாம். ஏனெனில் கடற்படை, விமானப்படை, தரைப்படை சேனாதிபதிகள் அவருடைய அதிகாரத்துக்குட்பட்டவர்கள்.

மற்ற இரண்டு படைத்தலைவர்களுமுண்டு. பீல்ட் மார்ஷல் ரோமல் ஹாலந்து, வடக்கு பிரான்ஸ் முதலிய தேசங்களின் தற்காப்புக்கு ஜவாப்தாரி. பீல்ட் மார்ஷல்வான் பிளாஸ் கோவிட்ஸ் பிஸ்கே விரிகுடா, மத்தியதரைக்கடல் கடற்கரையின் தற்காப்புக்கு ஜவாப்தாரியாவார்.

எதிர்க்கக்ஷியிலுள்ள தலைவர்களின் குணாதிசயங்களை ஆராய்ச்சிசெய்வது அவசியமாகும். ராணுவ சரித்திரத்தில் எதிரியின் ராணுவ அதிகாரிகளின் குணாதிசயங்களைப்பற்றிய தங்களுடைய அபிப்பிராயத்தை ஒட்டித்தான் அநேக கியாதிபெற்ற காப்டன்கள் தங்களுடைய யுத்த தந்திரத்தையும் படைவரிசை அமைப்பையும் திட்டம் வகுத்திருக்கிறார்கள். தாங்கள் எதிர்த்துப் போர்புரியவேண்டிய எதிரியின் தளகர்த்தர்களுக்குத் தக்கவாறு அவர்கள் தங்களுடைய யுத்த முறைகளையும் திருத்தியமைத்துக்கொள்ளுவார்கள். "இவ்விதமான குணாதிசயங்களும், சரித்திரப்புகழும், முறைகளும் உள்ள X என்னும் எதிரியை தற்போதிய நிலைமையில் எவ்விதம் நடந்துகொள்ளுவான்" என்ற கேள்விக்குக் கிடைக்கும் மறுமொழியை ஒட்டித்தான் நிலைமையில் நிச்சயமும் தெளிவும் ஏற்படாத சமயத்தில் தளகர்த்தர்கள் முக்கியமான வெற்றிகளைப் பெற்றிருக்கிறார்கள்.

### ரண்ட்ஸ்டேட் நாஸிகளின் பரம விரோதி.

ஆகையால் மூன்று தளகர்த்தர்களின் குணாதிசயங்களையும் அவர்களை அவர்களுடைய தோழர்கள் எவ்விதம் மதிக்கிறார்களென்பதையும் கவனிப்போம்.

ரண்ட் ஸ்டேட் தனிப்பட்ட முறையிலும் ஸோல்ஜராகவும் சிறந்தவரென்றும் ஜெர்மானியர்கள் ஒருமுகமாகச் சொல்லுகிறார்கள். லீப்பைவிட அவன் குறைவான புத்திசாதுர்யமுள்ளவன் என்றாலும் அவன் எல்லா விஷயங்களையும் அறிந்த ஜெர்மன் கமாண்டர், நல்ல



புத்திசாலி, நம்பிக்கைக்குப் பாத்திரமானவன், அமைதியுள்ளவன், தந்திரசாலி, அனுபவஸ்தன் ஊக்கமுள்ளவன், ஆத்மீய குணத்தில் அவன் ஒரு சீமான். இது விஷயத்தில் ஜெர்மனியுடையவும், பிரிடனுடையவும் அபிப்பிராயங்கள் ஒன்றுபடுகின்றனவா இல்லையா என்பது இரண்டாம் பக்ஷமான விஷயம். டாம்பீகமல்லாதவன், கபடமற்றவன். கிழக்குப் போர் முனையில் பழிக்குப்பழிவாங்கும் முறையையும் ஏராளமான ஜனங்களின் வதையையும் அவன் ஆதரிக்கவில்லை.

இந்த நடவடிக்கையில் உயர்வான நோக்கங்களுள்ள ஜெர்மன் ஸோல்ஜர்களும் உயர்வான எண்ணங்களை வெளிப்படுத்தவில்லையென்பது வாஸ்தவம்தான். பைலட்டைப்போல் அவர்கள் பொறுப்பெடுத்துக்கொள்ளுவதிலிருந்து நழுவிவிடுகிறார்கள். ரண்ட் ஸ்டேட்டைப் பற்றிய முக்கியமான விஷயம் யாதெனில், சேனையிலுள்ள உயர்தர ஆபீஸர்களில் அவன்தான் நாஸிகளின் பரம விரோதி என்றும், அவன்தான் ஹிட்லரின் வீழ்ச்சியை உண்டாக்க முயற்சி செய்யக்கூடியவனென்றும் சொல்லப்படுகிறது. ஜெர்மனியின் தோல்வி நிச்சயமென்று இரண்டு வருஷங்களுக்கு முன்பே அவன் முடிவுக்கு வந்துவிட்டானென்றும் சொல்லப்படுகிறது.

அவன் வேலைக்கு லாயக்கில்லாதவன். அவன் ஜெர்மன் சேனையை வகிக்கத் தகுதியற்றவனென்று அடிக்கடி சொல்லப்படுகிறது. அவன் முதல்தரமான ஸோல்ஜராகயிருந்த போதிலும் ராணுவ ராஜீயப் போரை நடத்த அவன் தைரியத்தை இழந்திருக்கலாம்.

ஒரு சமயத்தில் அவன் பிரான்ஸிலுள்ள படைகளை ஜெர்மனியைத்தாக்க நடத்திச் சென்று விடுவானோ என்ற பீதி உண்டாகிற்று. ஆகிலும் அவனிடம் அவ்விதமான துர் எண்ணமும் குடிகொண்டிருக்கிறது என்பதற்கு ருஜுக்கிடையாதென்றுதான் சொல்ல வேண்டும்.

ரண்ட் ஸ்டேட்டின் நிலைமையும் சங்கடமானது. அவன் நாஸிக்கக்ஷியை வெறுக்கிறான். ராணுவ வகுப்பைச் சேர்ந்தவர்களைக் காப்பாற்றவேண்டுமென்று அவன் பிரியப்படுகிறான். ஸோல்ஜர்களுக்குள் அவன் அதிகமாக ராஜீய வியவகாரங்களில் தலையிடுவதில்லை. ஆகிலும் அவனுடைய பிற்போக்கு ராஜீயக் கொள்கைக்குத் தக்கவாறு போர்முனையில் பலமான தோல்வியேற்பட்டால் வேறு ஒரு கோஷ்டி அதிகாரத்துக்கு வந்துவிடுமென்று பயந்து அவன் அதைத்தடுக்க பிரியப்படுகிறான். ஆகிலும் அவனைச்சுற்றிலும் நாஸிகளிருக்கிறார்கள். சிலர் அவனை ஜாக்கிரதையுடன் கவனித்துவருகிறார்கள். இரண்டாவதாக அவன் ஒரு சிறந்த தேசாபிமானி.

### பீல்ட் மார்ஷல் ரோமல்.

நாஸி ஸோல்ஜர்களுக்குள் ரோமல் மிகவும் சிறந்த லெப்டினண்ட். இரண்டு பேர்களையும் ஒரே இடத்தில் அமைத்திருப்பது காரணத்துடன்தான் என்று தோன்றுகிறது. ரோமலின் நடவடிக்கை பகட்டானது, அற்புதமானது, ஆனால் அதிக ருசிகரமானதல்ல.

முதன்முதலில் இந்தப் போர்முனையில் இதுவரையில் கேள்விப்படாத குறைவான முக்கியத்வமுள்ள பிளாஸ்கோவிட்ஸைப்பற்றிச் சொல்லுவோம். அவன் மிகவும் திறமை வாய்ந்தவனென்று சொல்லப்படுகிறது. ஆகிலும் மற்ற இருவர்களையும்போல அவ்வளவு கியாதிபெற்றவனல்ல. அவன் போலந்தில் திறமையுடன் போர் புரிந்தான். அவனுடைய ஜீவிய சரித்திரத்தில் முக்கியமான சம்பவம் யாதெனில் போலந்தில் கையாளப்பட்ட அக்கிரமங்களை அவன் எழுத்துமூலமாக ஆக்ஷேபித்தான். ஹிட்லர் இதைக்கண்டு அவனை உடன் காலத்தில் வேலையிலிருந்து நீக்கிவிட்டான்.

ரண்ட் ஸ்டேட்டைப்பற்றி அபிப்பிராய பேதமேயில்லாதபொழுது ரோமலைப்பற்றி கடுமையான விவாதங்கள் உண்டாகியிருக்கின்றன. அவனுடைய புகழை நிலைநாட்ட ஒப்பற்ற முயற்சிகள் செய்யப்பட்டனவென்றுமட்டும் எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். நாஸிக் கக்ஷிதான் இது விஷயத்தில் அதிக பிரயாசை எடுத்துக்கொண்டதென்றும் சொல்லப்படுகிறது.

பொதுவாகச் சொல்லுமளவில் அவன் அமைதியற்றவனென்றும், பிடிவாத புத்தியுள்ளவனென்றும் அடிக்கடி அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ளுகிறவனென்றும்சொல்லப்படுகிறது. அவனுடைய சிப்பந்திகள் அவனை சிக்ஷகன் என்று சொல்லுவார்கள். ஏனெனில் அவன் குறிப்பான உத்தரவுகளை அளிக்காமல் சிப்பந்திகளிடம் அபாரமாகப் பேசத்தொடங்கிவிடுவான். அவன் டாம்பீகமுள்ளவனென்றும், ஆபீஸர்களிடம் மதிப்புப்பெறுதவனென்றும், கீழ்தர அதிகாரிகள் காட்டும் மரியாதையை அவன் கௌரவிப்பதில்லையென்றும் அவனுக்குக் கெட்ட பெயர் உண்டு. ஆகிலும் துருப்புகளை அடக்கியாளுவதில் அவன் அபார சக்தியுள்ளவனென்பதில் ஐயமில்லை. ஆகிலும் அவன் கற்கசன் என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. இந்த விஷயத்தில் அவன் வேவிலியாவிலிருந்து ஒடனிலிருந்து நமக்கு அதிக சௌகரிய மேற்பட்டது. அவனுக்கு இணை ஒருவருமில்லையென்று ஜெர்மன் துருப்புகள் மதிக்கிறார்கள்.

### யுத்த தந்திர நிபுணர்.

அவனிடம் உத்சாகம் ஊட்டும் திறமையும் ஊக்கமும் அபாரமாகயிருக்கிறதென்று பிரசித்தமாகத் தெரியவருகிறது. அவன் யுத்த தந்திர நிபுணன். ஏமாற்றும் வித்தையில் அதிக சாமர்த்தியமுள்ளவன். சந்தர்ப்பங்களை அவன் கூடியவரையில் பிரயோஜனப் படுத்திக்கொள்ளுவான். முதல் முயற்சியில் இகழ்ச்சிபெற்றாலும் இரண்டாவது தடவையில் திட்டத்தை வேறுபடுத்தி அநேகமாக வெற்றிபெற்றுவிடுவான். ஆகிலும் அவனறியாததும் அவனுக்கு புலப்படாததுமான எந்த திட்டத்தையும் அவன் ஒப்புக்கொள்ளமாட்டான்.

அவனிடம் மற்றொரு செருக்கு உண்டு. அவன் வெற்றிகரமாக வீண் ஜம்பம் பேசினால், இதுபோன்ற வீராப்புப் பேச்சுகளை ஆறுதடவைகளில் வெற்றிகரமாகப் பேசிவிடலாமென்று அவன் நினைக்கிறான். வட ஆபிரிக்காவில் நடந்த அவனுடைய அறிய செய்கைகளை ஜெர்மன் ஸோல்ஜர்கள் ஒளிமறைவன்னியில் நன்றாகக் குறைகூறுகிறார்கள். அவனை நேசிக்காத அங்கிருந்த இதாலியர்களும் அவன் விஷயம் தெரிந்தவரென்று நினைத்தார்கள். எல் அலாமீன் விழுந்துவிடுமென்று நினைத்து அவன் அசட்டு தைரியமாக அங்கு சென்றான்.

போர்முனையில் எதிர்ப்பு உண்டானபொழுது, அவனுடைய வ்யூகரசனை சரியாகயில்லை, அவன் ஜெர்மனிக்குத் திரும்பிவந்தபொழுது ஒரு அமைப்பையும் கலைத்துவிடக்கூடாது, யந்திர பீரங்கி அமைப்பையும் மாற்றியமைக்கக்கூடாதென்று அவன் உத்தரவிட்டான். ஆகிலும் அவன் திரும்பிவரவில்லை. எதிர்காலத்தின் யுத்தப் போக்கைப்பற்றி அவன்முன் கூடி அறிந்திருக்கலாம் அல்லாது அவன் நோய்வாய்ப்பட்டிருக்கலாம். ஆகிலும் ஹிட்லர் மறுபடியும் ஆபிரிக்காவுக்குப்போகும்படி அவனுக்குக் கட்டளையிட்டான்.

### அலாமீனிலிருந்து பின்வாங்குதல்.

அலாமீனிலிருந்து படைகளை ரோமல் பின்வாங்கிச் சென்றது எல்லோராலும் புகழப் படுகிறது. அவன் டுனிஸியா எல்லைச் சாகத்தை நெருங்கியபொழுது அவனுக்கு அவநம்பிக்கை அதிகரித்து ஆதங்கமுண்டாகிற்று. அவனுடைய நன்னம்பிக்கையும் முன்னேறித்தாக்கும் ஊக்கமும் குன்றிற்று.

பிப்ரவரி மாதத்தில் டெபெஸ்ஸா பிராந்தியத்தில் அவன் நேசதேச முதல் சேனையை எதிர்த்து பதில் தாக்குதல் செய்தபொழுது அவன் மன உறுதியை இழந்தான். திடீரென்று போரை நிறுத்தியபொழுது அவனுடைய சிப்பந்திகள் வியப்புற்றார்கள். மார்ச் 6-ம் தேதியன்று அவனுக்குக் கஷ்டகாலம் ஏற்பட்டது. மெடினைக்கருகில் அவன் நேசதேச எட்டாம் படையைத் தாக்கியபொழுது அவன் முறியடிக்கப்பட்டான். ஒரு வியாக்யானி இந்தப் போரை அவன் அபத்தமாக நடத்தினானென்று சொல்லுகிறார். அதன்பிறகு அவன் மறைந்தான். அவமானத்துடன் அவன் ஜெர்மனிக்குத் திரும்பினான்.

ஆகிலும் உயர்தரமான கௌரவ அடையாளமான நைட்ஸ் கிராஸ் என்ற பதக்கம் அவனுக்கு வழங்கப்பட்டது.

இப்பொழுது நியமிக்கப்பட்டிருக்கும் வேலைக்கு அவன் தகுதியுள்ளவனாவென்பதைப் பற்றி அபிப்பிராயபேதமிருந்துவருகிறது. அவனும் ரண்ட்ஸ்டேட்டும் தகுதியான சேர்மானம் என்று சிலர் நினைக்கிறார்கள். நேசதேசப்பூண்டு பிரான்ஸிலிருக்கும் வரையில் அவன் நிம்மதியுடனிருக்கமாட்டானென்று சொல்லக்கூடிய ஒரு கமாண்டர் பிரான்ஸிலிருப்பது சிலாக்கியம்தான். அவனுக்கும் மான்ஸ்டைனுக்கும் இணையில்லையென்றும் அவன் முதல்தரமான தலைவரென்றாலும் சிறிய படைப்பகுதிகளுக்குத் தலைமை வகிக்க அவன் லாயக்கில்லாதவனென்றும் அதிக துடிதுடிப்பும் இயற்கை குணமுள்ளவனுமாதலால் ஐரோப்பாவைக் காப்பாற்ற அவன் சக்தியற்றவனென்றும் இன்னும் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

### கடினமான தோழன்.

அவன் எப்பொழுதும் கடினமான தோழனாகயிருந்திருக்கிறான். ஆபிரிக்காவில் அவனுக்கும் கெஸ்ஸல்ரிங்குக்கும் சதா மனஸ்தாபங்கள் ஏற்பட்டன. தோல்விகளுக்கும் பிற்போக்குகளுக்கும் ஒருவர் மற்றொருவர்பேரில் தோஷாரோபணம் செய்துவந்தார். யுத்தத்தின் நிர்வாக விஷயத்தைப்பற்றி அவருக்கு யாதொரு அபிப்பிராயமும் கிடையாது. சர்பரா பிரச்னையைப்பற்றி அவர் கவனம் செலுத்துவதே கிடையாது. இந்த விசித்ரமான நிம்மதியற்ற ஸோல்ஜர் சில சமயங்களில் தாத்காலிகமாக புத்தி சாதுர்யத்தை வெளிப் படுத்துவார். ஆகிலும் அவர் தன்னுடைய கோஷ்டியையே பிரமிக்கும்படி செய்வதுடன் எதிரியை திண்டாடும்படி செய்து ஏமாற்றிவிடவேண்டுமென்ற முயற்சியில் தன்னுடைய படைகளையும் சிலைகுலைந்துவிடும்படி செய்துவிடுவார். இதுதான் ஜெர்மானியர்களின் அபிப்பிராயம்.



ரண்ட் ஸ்டேட்டும் ரோமலும் ஒத்துழைத்தால் இந்த சேர்மானம் முதல்தரமான வெற்றியை அளிக்குமென்பதில் சந்தேகமில்லை. அவ்விதம் ஒத்துழைப்பு ஏற்படாவிடில் அபாரமான கெடுதல் நேரிடும்.

அவனுடைய தந்திரத்தினால் மயங்காத, கீழ்படியாதவனும் அவனை தோற்கடித்தவனுமான ஒருவருடன் ரோமல் போர்புரிய முன்வந்திருக்கிறானென்பது நேசதேசத்தாருக்கு சௌகரியம்தான். ரோமலுக்குள்ள மனோநிலையை கவனிக்கும்பொழுது பழைய நடவடிக்கைகளின் ஞாபகங்களும் அதன் விளைவுகளும் அவனைத்தூண்டி விடாமலிருக்கமுடியாது.

---

## ரோமல் தற்காப்பில் முனைந்திருக்கிறான்.

(டெய்லி எக்ஸ்பிரஸ் பத்திரிகை).

ஜெனரல் மாண்ட் காமரியின் முழு பலத்தாக்குதல் இன்னும் சின்னாட்களில் நடத்தப் படும். அதற்கு நெடு நாட்களுமாகாது. ஏனெனில் நேசதேச மனித பலமும், யுத்த தளவாட பலமும் நாளுக்குநாள் அபிவிருத்தி அடைந்துள்ளது. கோரண்டினுக்கும், டுரோயானிற்குமிடையில் உள்ள அரங்கத்தின் நிலை, இருபடைகளாலும் கோரண்டினிற்கு அருகில் குண்டுகளைப் பொழியப்பட்டு, இருபுலிகளை ஒன்றையொன்று எதிர்த்து குலைத்துக்கொண்டு தம் தம் எதிரி முதலில் தாக்குதல் ஆரம்பிக்கும் என நினைத்துக்கொண்டிருப்பதை ஞாபகப் படுத்துகிறது.

தளபதி ரோமல் தன் படைகள், செர்பர்க்கில் தேவையாயிருந்தாலும், சற்றும் நகர்த்தப் போவதேயில்லை. ஏனெனில் தன் மத்திய ஸ்தலத்தின் மீதே தாக்குதல் நடத்தப்படும் என்பதை எதிர் பார்க்கிறான். ஜெனரல் மாண்ட் காமரி தன் படைகளை லோயருக்கு (Loire) நடத்தினால் அப்பொழுது செர்பர்க்கில் நேசதேச பலம் ஸ்திரப்படுவதன்னியில், பிரெஸ்ட் தீபகற்பமும் பயப்படுத்தப்படலாம் என்று ரோமல் கூறலாம். இந்த விதமான முடிவைக்கொண்டு செர்பர்க்கின் நஷ்டத்தையும் அவன் ஒப்புக்கொள்ளவேண்டிவரும்.

தீபகற்பத்தின் வடக்கில், மேற்கு பாகத்தில் ஒரு உயர்ந்த பூமி உளது. அதனைப் பிடித்து ஸ்திரப்படுத்தியபின்தான் செர்பர்க் தாக்குதல் நடத்தலாம். அப்பிரதேசம் தற்காத்தலுக்கு இருபுறமும் சௌக்கியமானது. ஆனால் நேசதேச முன்னேற்றத்தையும் மறைவாய் செய்யவும் சாதகமானது.

ரோமல் காலாட் படைகளைக் கொண்டுவந்து பலப்படுத்தியிருந்தாலும், அவனுக்கு யுத்தத்திற்கு வேண்டிய படைகள் இன்னும் தேவையாயுள்ளது. எனவே எதிர் தாக்குதல் புரிவதற்கு பதிலாய் தற்காப்பிற்கே டாங்கிகளை அவன் உபயோகப்படுத்தவேண்டியிருக்கிறது.

நார்மண்டியில் புரிந்தபோரில் அவனுக்கு பலமற்றதான செயல் இதுவேயாம். அவனிடத்தில் தாக்குதலுக்குவேண்டிய தளவாடங்கள் இன்மையினால், அவன் எதிர் தாக்குதல் புரியாமல் இருந்தான். சரியான திட்டப்படி நடத்தாமல், தன் படை பலத்தை பலகாலும் சிறு சிறு திறப்புகள்தான் தற்காப்பு படையில் ஏற்படாமலிருக்கவே உபயோகித்துள்ளான்.

ஜெர்மனிய வியாக்கியான கர்த்தர்கள் 4,00,000 நேசதேசப் படைகளும், தளவாடங்களும் இறங்கியுள்ளன எனக் கூறுகிறார்கள். இம்மாதிரி கணக்கிடுதல், சரியான கணக்குகளைச் சொல்லலாம். இப்படை இதர பாகங்கள் கடற்கரையில் பலம் குறைந்து அபாயத்திற்கிடமானாலன்றி ரோமல் தலைமையில் செலுத்தாததும், செலுத்தமுடியாததுமான படைக்குப் பேர் பெரிதாகும். அநேகமாய் ரோமலிடம் 2,00,000 துருப்புகளும், 1,000 டாங்கிகளும் உள என்று கணக்கிடலாம். ஜெனரல் மாண்ட் காமரியைத் தடுக்க அவன் ஏதும் பலமான எதிர் தாக்குதல் புரியாததால், அவன் பலம் குறைந்து மிகவும் மோசமான நிலையில இருப்பதன்னியில் விமான உதவியின்றியும், நம் விமானங்களால் கடுமையாய்த் தாக்கப்பட்டும் இருக்கிறான் என்று கருதவேண்டியிருக்கிறது. ரோமலின் படைப் பகுதிகளில் கால்வாசிக்கு மேல் நல்லதிறம் படைத்த பகுதியில்லை என்று சொல்லலாம்.

நார்மண்டிக்காகப் போர் என்பதைப்பற்றி சிந்தித்தால் அப்போது பல விஷயங்கள் கருதவேண்டிவரும். நேசதேசத்தார் அதிகப்பட்டிருக்கும்போது நல்ல தலைவர்களால் நடத்தப்படுவதால் மிகவும் சாதகமளித்து நற்பயனைத்தர ஹேதுவுள்ளது.

# இரண்டாம் தந்திர விமானப்படை.

வட ஆபிரிக்கப் பகுதிபோல் இரண்டாம் தந்திர விமானப்படை, நடுத்தரமானதும், லேசானதுமான குண்டுபோடும் விமானங்களையும், வேட்டை விமானங்களையும், வேவு பார்க்கும் விமானங்களையும் கொண்டது. நன்றாய் பறக்கக்கூடியதும், பெரும்படை, சிறுபடை என ஆக்கக்கூடியதும் இதன் முக்கிய 2 காரியங்கள். தன் முழுபலத்துடன் வேண்டிய போது தரைப்படைக்கு உதவியாய் போரிடக்கூடியது.

இரண்டாம் தந்திர விமானப்படையின் ஆரம்பம் அதிகார பூர்வமாய் 1943ஆு ஜூன் மாதம் 1-ந்தேதியே கூறப்பட்டதானாலும், அதற்கு வேண்டியவைகளை தயார்செய்தல், பயிற்சி அளித்தல் முதலியவை சிலகாலம் முன்னரே நடந்தது. ஒரு வருஷத்திற்கு மேலாக இப்படை அதன் நிர்வாக இயக்கங்களில் ஒத்துழைத்தும் யுத்த அரங்கங்களில் உழைத்தும் வந்திருக்கிறது.

### ஆயிரக்கணக்கான தாக்குதல்கள்.

எதிகளைத் தாக்கிவரும் பழையவேட்டை விமானங்களுடன் நடவடிக்கைகள் நடத்தியும், இவைகளின் கரடுமுரடானதும் அவசரமாய் கட்டப்பட்டதுமான விமான நிலயங்களிலிருந்து பறந்து சென்றன. மனிதர்கள் கான்வாஸாலாகிய கூடாரங்களில் தங்கியும், அதன் பாரமரிப்பு வெளியிலும் சிறிதும் குறைவில்லாமல் செய்து வருகிறார்கள்.

இரண்டாம் யுத்த தந்திரப் படையின் பெருமைக்குத் தகுந்தாற்போல் பல ஆயிரக்கணக்கான வகையில் விமானங்கள் உள. அதன் படைப்பகுதிகள் பல மாதங்களாக அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபட்டு எதிரிகளை ஒவ்வொரு நாளும் தாக்கி வருகின்றன. மிட்செல், பால்டல், மஸ்கிடோ குண்டுபோடும் விமானப் பகுதிகள் பகல் நேரங்களில் படையெடுத்து எதிரிகள் ஆக்கிரமித்த பிரதேசங்களில் படையெடுத்து வருகின்றன. குண்டுபோடும் விமானங்களுக்கு உதவியாய் பிரிடிஷை சேர்ந்ததும், டொமினியன்களைச் சேர்ந்ததும், நேசதேசங்களைச் சேர்ந்ததுமான பல வேட்டை விமானங்கள் தங்கள் தங்கள் வேலையைச் செவ்வனே பார்த்து வருகின்றன. அவைகளுடன் டைபூன், ஹரிகேன் வேட்டை குண்டுபோடும் விமானங்களுடனும், முஸ்டாங் வேவு பார்க்கும் விமானங்களும் இப்படையில் பங்கு எடுத்துக்கொள்ளுகின்றன.

### அதிகப்பட்ட மாற்றுந்தன்மையுடையது.

அடிக்கடி மாற்றுந்தன்மையாய், இந்த விமானப்படையின் விமான நிலயங்கள் சக்கரங்களைக் கொண்டதென்றே சொல்லலாம். ஆபீஸ்களை வண்டிகளின் மூலம் வேறு இடங்களுக்கு சென்று ஸ்தாபிக்க முடியும். அங்கிருந்து நடவடிக்கைகளை நடத்த முடியும். கடுமையான பயிற்சியினாலும், பழக்கத்தினாலும் இந்த இரண்டாம் தந்திர விமானப்படை சீக்கிரம் ஒரு இடமிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றுந்தன்மையில் மிகவும் திருப்திகரமாய் அமைந்துள்ளது.

உணவு முதலியவை தயாரித்தலும் இதுவேபோல சுலபமாய் மாற்றக்கூடிய சமையல் கட்டுகளில் தயாராகின்றன. உத்தியோகஸ்தர்களும் இதர மனிதர்களும் வாழ்வதற்குகன கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. விமான நிலயத்திலுள்ள ஆஸ்பத்திரிகளும்கூட கூடாரங்களிலேயே அமைக்கப்பட்டுள்ளன. பல் சம்பந்தமான வியாதிக்கு திறந்தவெளியிலேயே சிகிச்சை அளிக்கப்படுகிறது.

மாற்றுந்தன்மையுடைய மின்சார நிலயங்களே விளக்கிற்கும் மற்றய தேவைகளுக்கு வேண்டிய மின்சார சக்தியை அளிக்கிறது. பெரிய ரிபேர்களைச் சரிபார்க்க சுருங்குந்தன்மையுடைய ஹாங்கர்கள் (Hangars) உபயோகப்படுத்தப்படுகின்றன.

அவசரமாய் மாற்றுவதற்கென அதிகப்பட்ட மனிதர்கள் இல்லை. வேண்டிய அளவுதான் வைக்கப்பட்டிருக்கிறார்கள். விமான ஆட்களைத்தவிர அட்ஜுடெண்டு ஒருவரும் சில முக்கியமானவர்களும்தான் உளர். ஒரு இடத்தில் நிறுத்தப்பட்டுள்ள பகுதிகளை நிர்வாகத்தையும் பாரமரிப்பையும் பார்த்து வருகிறது.

விமானநிலயங்களுக்கு வேண்டிய இடத்தைப்பொருக்கி அதினை சமப்படுத்தலே ஒருபெரும் வேலை. இப்படை அவ்வேலையை சுலபமாய் செய்து வருகிறது. இழுக்கும் இயந்திரங்களும் இதர இயந்திரங்களும், பாறைகளை சரிபடுத்தியும், ஸ்டீலாலாகிய ரோலர்கள் சமப்படுத்தியும் வேட்டை விமானங்களுக்கு லாயக்காய் இடங்களை சமப்படுத்துகின்றன.



# ஆகாச வாணவெடிகளைச்சுடும் சண்டை விமானங்கள்.

### பிரிடனுடைய டாங்கி எதிர்ப்பு ஆயுதம்.

பிரான்ஸில் நடைபெறும் தற்போதய போர்களிலும், எதிர்கால நடவடிக்கைகளிலும் ஜெர்மன் டாங்கிகளை அழிப்பதென்பது பிரிடனின் டாங்கி எதிர்ப்பு ஆயுதங்களைப் பொருத்ததாகும். இந்த விஷயத்தில் தான நாஸிகளுக்கு மிகவும் அசௌகரியமான எதிர்பாராத ஏமாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஏற்கனவேயிருந்த கியாதிபெற்ற 6 ராத்தல், 17 ராத்தல் குண்டுகளை வீசும் டாங்கி எதிர்ப்பு பீரங்கிகளுடன் சில புதிய ஆயுதங்களும் உபயோகிக்கப்படுமென்று மிஸ்டர் சர்ச்சில் உறுதி கூறியிருந்தார்.

தெற்கு டுனீஸியாவிலுள்ள உப்பு நிறைந்த சதுப்பு நிலங்களுக்கு அருகில் நடைபெற்ற பிர் எல் ஹம்மா போரில் பயன்படும்படியாக ஹரிகென் 'டின் ஓபனர்' விமானங்கள் தாக்குதல் செய்தன. அவைகளுக்கு அடுத்தார்போல் இப்பொழுது ஆகாச வாண வெடிகளைப்போடும் பிரிடிஷ் விமானப்படையைச் சேர்ந்த டைபூன் விமானங்கள் இப்பொழுது தினசரி சென்று நாசத்தை உண்டுபண்ணுகின்றன.

டாங்கிகளை எதிர்த்துத் தாக்கும் வெடிகுண்டுகளை விட ஆகாச வாணவெடிகளில் விசேஷமான மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. அவைகள் வேகமாகச் செல்லும். அதனால் பறக்கும்பொழுது கவசத்தைப் பிளக்கக்கூடிய அதன் சக்தி அதிகரிக்கிறது. இரண்டாவதாக, ஆகாச வாண வெடிகள் குறிதவறாமல் அடிக்கின்றன. இந்த உண்மை சமீபகாலத்தில் தரைதட்டிய ஜெர்மன் நாசகாரியை போஸ்டன் விமானங்கள் இங்கிலீஷ் கால்வாயில் தாக்கி 60 ஆகாசவெடிகளை அதன் பேரில் நேராகப்போட்டு விட்டதிலிருந்து வெளியாகுகிறது. இரண்டாவது தடவை வந்த விமானங்கள் தள்ளிய ஆகாச வெடிகளிலும் வெடிகுண்டுகளிலும் 60 சத விகிதம் நேராகக் கப்பலின் பேரில் விழுந்தன.

இதை விட, ஆகாசவெடிகளைப் போடும் சண்டை விமானங்கள் D. நாளுக்கு முன்பு பிரான்ஸிலிருந்த 21 ஜெர்மன் ராடார், ரேடியோ அமைப்புகளை நொருக்கியிருக்கின்றன. இதன் மூலம் கடற்கரையில் படைகளைத் திடீரென்று இறக்குவதற்கு அதிக சாதகம் ஏற்பட்டது. அநேக உயிர்களும் காப்பாற்றப்பட்டன.

### ஆகாச வாண வெடிகளை எவ்விதம் போடுவது?

டைபூன் விமானங்களைப்பற்றிய ஒளிப்படத்திலிருந்து நான்கு ஆகாச வாண வெடிகள் ஒவ்வொரு இறக்கைக்கும் அடியில் சொருகி வைக்கப்படுகின்றன. அவைகளை இரண்டு இரண்டாகவும் அல்லது ஒரே மூச்சில் எட்டு வெடிகளாகவும் உபயோகித்து விடலாம். இந்த குண்டில் வெடிமருந்தும் அதை வெடிக்கச் செய்யும் ப்ளாடினம் கம்பியும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த குண்டின் வால் புறத்தில் நான்கு சிறகுகளும் கவசத்தைப் பிளக்கும் பாகமும் அமைக்கப்பட்டிருக்கின்றன. குண்டைப் போடும் பொழுது அதிர்ச்சி ஏற்படுவதில்லை. விமானத்தின் சலனமும் பாதிக்கப்படுவதில்லை.

இந்த ஆகாச வெடிகுண்டுகளை பிரிடன் எட்டு மாதங்களில் தயார் செய்து விட்டது. இந்த குண்டுகளை இதுவரையில் காகிதங்களையும், துவிச்சக்கர வண்டிகளையும், மோட்டார் வண்டிகளையும், நெருப்பணைக்கும் கருவிகளையும், துணிமணிகளையும் உற்பத்தி செய்த பிரிடிஷ் தொழிற்சாலைகள் அபாரமாகவும் திறமையுடனும் உற்பத்தி செய்து வருகின்றன.

விமானங்களால் கொண்டு போகும் ஆகாச வாணவெடிகளைக் கண்டுபிடிக்குமுன் பிரிடன் ஆகாச வாணவெடிகள் விமானங்களைத்தாக்க உபயோகித்து வந்தது. ஆரம்பத்தில் பிரிடிஷ் விஞ்ஞான சாஸ்திரியான டாக்டர் A. D. க்ரௌவின் தலைமையில் துவக்கப்பட்ட ஆராய்ச்சி 1938-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் முடிவடைந்தது. அப்பொழுதுதான் ஆகாச வெடி வாணங்கள் தோன்றி அதற்கும் சுழன்று செல்லும் வெடிகுண்டுகளுக்குமுள்ள வித்தியாசத்தை வெளிப்படுத்தின. 1939-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் அவைகள் பரிஷ்காரம் செய்யப்பட்டு பரீக்ஷைக்குத் தயாராகயிருந்தன. பிரிடிஷ் விஞ்ஞான சாஸ்திரிகளின் ஒரு கோஷ்டி பிரிடனில் காலநிலை சௌகரியமாக இல்லாததால் ஜமேகாவுக்குச் சென்றார்கள்.

இந்த மகத்தான சிரமங்களுக்குமிடையே, ஆகாசவெடி வாணங்களின் உற்பத்தி 1940-ம் வருஷத்தில் அதிகரித்தது. அப்பொழுது ஆகாச வெடிகள் பகல் சண்டை விமானங்களைத் தாக்க பிரயோகிக்கப்பட்டன. 1941-ம் வருஷம் வசந்த காலத்தில் பிரிடிஷ் விமான எதிர்ப்பு பீரங்கிப் படைத்தலைவர் இராக்காலத்தில் அதிக உயரத்தில் பறந்துவரும் எதிரியின வெடி விமானங்களைத்தாக்க கடற்கரை பீரங்கிகளில அதை உபயோகிக்கும்படி கட்டளையிட்டார். பிரயோகிக்கப்பட்ட இரண்டாவது குண்டு ஒரு ஜெர்மன் வெடி விமானத்தைச் சுட்டு வீழ்த்தி விட்டது. அதன் விளைவு யாதெனில் உலகத்திலேயே வெடி விமானங்களைத் தாக்கும் ஆகாச வாண வெடிகள் பிரிடனில்தானிருக்கின்றன.

இந்த பீரங்கிகளை உள்நாட்டிலுள்ள பிரிடிஷ் ரக்ஷகப் படைகள்தான் கையாண்டு வருகிறார்கள். மற்ற பிரிடிஷ் விஞ்ஞான சாஸ்திர, தொழில் ரகசியங்களைப்போல இந்த ரகசிய ஆயுதத்தைப் பற்றிய தகவல்களையும் அமெரிக்காவுக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஜனவரி மாதம் 1-ம் தேதியன்று ஜெர்மன் சேனைக்கு விடுத்த புது வருஷச் செய்தியில் ஹிட்லர் பின்வருமாறு சொன்னான் "யுத்த தந்திர ஆயுதங்களைப் புதிதாகக் கண்டு பிடிப்பதில் 1943-ம் வருஷத்தில் எதிரிகள் கைமேலோங்கி விட்டது." இவ்விதம் அவன் அபிப்பிராயப்பட்டது ஐரோப்பாவைத்தாக்க பிரிடன் உற்பத்தி செய்திருக்கும் ரகசிய ஆயுதங்களைப் பற்றிய அறிவு அவனுக்கு ஏற்படுமுன் அவைகளில் ஆகாச யானைவெடிகளைத் தள்ளும் சண்டை விமானங்கள் ஒரு முக்கியமான அம்சமாகும்.

## கடற்படையின் யுத்த தந்திரம்.

### (கம்மாண்டர் ஸ்டீபன் கிங் ஹால்.)

நான்கு வருடங்களுக்குமுன் பிரிடிஷ் சேனைகள் முஸ்தீப்புகளையிழந்து, சிதறுண்டு ஆனால் மனவுறுதி குலையாமல் டங்கர்க் கடற்கரையிலிருந்து பிரிடனுக்குப் பின்வாங்கின. அப்பொழுது பிரிடனுக்கு அக்ககரமான சமயமாகயிருந்தபோதிலும் அப்பொழுதுதான் அதற்கு கீர்த்திபெற உத்சாகமளிக்கக்கூடிய காலமாகயிருந்தது.

அதே சேனைகள் 1940-ம் வருஷத்தில் கண்டுபிடிக்கப்படாத புதிய ஆயுதங்களுடனும் படை மிகுதியுடனும் மறுபடியும் பிரான்ஸுக்குத் திரும்பிவந்து ஹிட்லரின் ஐரோப்பிய அரணை ஊடுருவிச் செல்லக்கூடிய காலமும் ஏற்படுமென்று நினைப்பதற்கு அதிக நம்பிக்கை அவசியமாகயிருந்தது. இந்த நம்பிக்கை பிரிடிஷ் அரசாங்கத்தினிடமும் மிஸ்ட்டர் சர்ச்சிலினிடமும் அளவுகடந்து குடிகொண்டிருந்தது.

நம்பிக்கை மட்டுமிருந்தால் மலை போன்ற இன்னல்களையும் தீர்த்து விடலாம். ஆண்டிஸ், ஆல்ப்ஸ் மலைகளிலுள்ள ஒரு தடலை சமப்படுத்த சில புல்டோஜர்களை உபயோகிப்பதினால் பாதகமில்லை. 1940-ம் வருஷத்தில் பிரிடிஷ் மக்களும் அதன் நிர்வாகமும் சிந்தித்த பிரகாரம் நிறைவேற்றுவதற்கு இரண்டு அம்சங்கள் முக்கியமானவை. முதல் முதலாக நவீன முறையில் சேனைகளுக்கு முஸ்தீப்புகளைத் தயாரிக்க தொழிற்சாலை வசதிகள் தேவைப்படும். இரண்டாவதாக, இந்த ஐச்வர்களை பிரிடனில் சேமித்து வைத்து அதன்பின் அவைகளை அட்லாண்டிக் அரணைத் தாண்டி ஹிட்லரின் ஐரோப்பாவைத் தாக்க எடுத்துச் செல்ல திட்டம் போடவேண்டும்.

முதலாவது தேவையை பிரிடிஷ், அமெரிக்க ஒன்றுபட்ட தொழிற்சாலைகள் பூர்த்தி செய்தன. அவைகளின் உற்பத்தி ஜெர்மனியினுடையதைவிட உயர்வானது. ஜெர்மானியர்கள் பிரிடனை விமானத்தாக்குதல் மூலம் அழித்திருந்தாலும் அமெரிக்காவின் தொழிற்சாலை உற்பத்தி அளவு ஜெர்மனியினுடையதைவிட அதிகமானது.

ஆகிலும் பிரிடனிலுள்ள உற்பத்திகளையும் அமெரிக்காவின் உற்பத்திகளையும் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கும் ஐரோப்பாவுக்கும் கொண்டுபோக அவைகள் கடல் தாண்டிச் செல்லவேண்டும். ஆகையால்தான் அட்லாண்டிக் கடலில் நடைபெற்ற போர்கள் இந்த யுத்தத்தின் போக்குக்கு முக்கியமானவை. 12 மாதங்களுக்குமுன் நேசதேசத்தார்கள் அட்லாண்டிக்கில் ஆதிக்கம் பெற்ற பின் D. நாளைத் துவக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

### கடலாதிக்கம்.

பிரிடன் இதுவரையில் வெற்றிபெற்றிருக்கும் யுத்தங்களிலும் தற்போதைய யுத்தத்திலும் கடலாதிக்கத்தை நம்பித்தான் அதன் யுத்த தந்திரத்தை நிறுவியிருக்கிறது. பிரிடனில் புதிய சேனையைத் திரட்டுவதற்கும் அதற்கு வேண்டிய அவகாசத்தை சம்பாதிப்பதற்கும் கடலாதிக்கம்தான் பிரிடனுக்கு ஒத்தாசை செய்திருக்கிறது. அமெரிக்காவிலிருந்து சேனைகளும், விமானப் படையும் கடல் தாண்டி பிரிடிஷ் தளங்களுக்கு வந்து சேருவதற்கும் கடற்படைதான் உதவியளித்தது. 70 மைல்கள் அகலமுள்ள இங்கிலீஷ் கால்வாயைத் தாண்டி நார்மண்டியின் கடற்கரையில் இறங்கிய துருப்புகளைக் கடல் தாண்டி எடுத்துச் சென்றதற்கும் கடற்படைதான் பேருதவி செய்திருக்கிறது.

கடலாதிக்கம் என்பது, கடல் மார்க்கங்களை பத்திரப்படுத்தி, அவைகளை உபயோகிப்பதும் எதிரியை அவைகளில் நடமாடாமல் தடுப்பதும் என்றும் பொருள்படும். இந்த வேலையைத் திறமையுடன் செய்யவேண்டுமானால் யுத்தக் கப்பல்களுக்கு விமானங்களின் துணையும் விமானப் படையும் வேவு பார்க்கும் நடவடிக்கையும் தேவையாகும். ஆகையால் கடலாதிக்கம் என்ற பதங்களை இப்பொழுது கடல் விமான ஆதிக்கம் என்று திருத்தி எழுத வேண்டும்.



நேசதேசத்தார்களுக்கு அப்பேர்ப்பட்ட கடல் விமான ஆதிக்கமிருந்ததினால்தான் எதிரி முன்னேறித்தாக்கும் சக்தியை இழந்தான். நேசதேசத்தார்கள் முன்னேறித் தாக்கினார்கள். மத்தியதரைக்கடல் திறந்து விடப்பட்டது. இரண்டாவதாக ஐரோப்பா கண்டத்தில் நமது படைகள் போரைத் துவக்கின. நாம் நினைத்ததற்கு முன்னதாகவே நமக்கு வெற்றிகள் கிடைத்து விட்டன. இதற்கு ருஷ்யாவைத் தாக்குவது என்ற மகத்தான தவறுதலை ஹிட்லர் செய்ததுதான் காரணமாகும். ஹிட்லர் செய்த பெரும் பிழையின் லாபத்தை ருஷ்யா அடைவதற்கு கடலாதிக்கம்தான் பெரும் பங்கெடுத்துக்கொண்டிருக்கிறது.

### ருஷ்யாவுக்கு உதவி.

பிரிடன் ருஷ்யாவுக்கு 5,000 டாங்கிகளையும், மற்ற ஏராளமான சாமான்களையும் அனுப்பியிருக்கிறது. இந்த ஐச்வர்யங்களின் ஒரு பாகம் வடக்கு மார்க்கத்தின் வழியாகவும் மற்றொரு பாகம் பாரசீகத்தின் மூலமாகவும் சென்றிருக்கின்றன. மத்தியதரைக்கடலைத் திறந்துவிட பிரிடன் செய்த முயற்சிகளுக்கு பிரிடனுக்கும் தெற்கு ருஷ்யாவிற்குமிடையே உள்ள கடல் மார்க்கத்தைக் குறைத்துவிடுவதென்ற லக்ஷியம்தான் காரணமாகும்.

வடக்கு மார்க்கமாகச் சென்ற சாமான் கப்பல் கூட்டங்களை வழி மறிக்க எதிரி பகீரதப் பிரயத்னம் செய்தானென்பதிலிருந்து ருஷ்யாவின் வடக்குப் பகுதியிலுள்ள படைகளுக்கு ஸப்ளைகள் போய்ச் சேராதபடி செய்வது அவசியமென்பதை எதிரி உணர்ந்தானென்பது வெளிப்படுகிறது. வடக்கு மார்க்கமாகச் சென்ற துணைக்காவல் கொண்ட கப்பல் கூட்டங்கள் நார்வேயில் ஜெர்மானியர் ஸ்தாபித்திருந்த நீர்மூழ்கிகளையும் விமானங்களையும் சமாளித்துச் சென்றன என்பது பிரிடனின் கடற்படை சரித்திரத்தில் மிகவும் புகழ்பெற்ற நடவடிக்கையாகும்.

இப்பொழுது நேசதேசப்படைகள் பிரான்ஸின் கடற்கரையில் நன்றாய் ஊன்றிவிட்டார்கள். இதாலியில் வடக்கு நோக்கி அவர்கள் முன்னேறுகிறார்கள். நேசதேச விமானங்கள் ஐரோப்பா பூராவிலும் வட்டமிடுகின்றன. ஜெர்மனியைச் சுற்றி இரும்பு வளையம் அமைக்கப்பட்டு விட்டது. அது கூடிய சீக்கிரம் நெருங்க ஆரம்பிக்கும். இவைகளை சாதிப்பதற்கு கடல் மார்க்கங்களை பிரிடிஷ் கடற்படை பத்திரப்படுத்தியதுதான் காரணமாகும். மற்றொரு முறை கடற்படை தரைப்படையை முறியடித்துவிடுமென்று வெளிப்படுத்திவிட்டது.

## இ-படகு.

### (A. J. மாக்வின்னி.)

பிரான்ஸில் நேசதேசப்படைகள் இறங்கியபின் நார்மண்டியின் கடற்கரைக்கு கடல் தாண்டி சர்பராக்கள் தங்குதடையன்னியில் சென்றுகொண்டிருந்தபோதிலும் நேசதேசத்தார்களின் சாமான் கப்பல் நஷ்டம் மிகவும் குறைவாகவேயிருக்கிறதென்பது குறிப்பிடத்தக்கது.

நேசதேசக் கடற்படைகள் சிரமமன்னியில் செல்லுகின்றனவென்று இதிலிருந்து பொருள்படாது. ஆகிலும் பிரிடனும் அமெரிக்காவும் மேற்கு ஐரோப்பாப் படையெடுப்பில் முதலெடுப்பில் தங்களுக்கு ஏற்பட்ட கப்பல் நஷ்டங்களைப்பற்றிய விவரங்களை வெளியிடும்பொழுது எதிர்பார்த்துத் தயார் செய்ததின் ஒரு அற்பமான பாகம்தான் நஷ்டமேற்பட்டதென்று எல்லோரும் அறியக்கூடும். ஒரு பிரிடிஷ் நாசகாரியில் பிரான்ஸுக்கு ஐந்து தடவையும் நான்கு தடவை கடற்கரைகளிலும் சுற்றுப்பிரயாணம் செய்து திரும்பியபின் ஜெர்மன் கடற்தளபதி டோனிட்ஸ் ஜெர்மன் கடற்படையின் சக்தியின்மையை எவ்விதம் வியாக்யானம் செய்வானென்று எனக்கு வியப்புண்டாகிறது.

குறை கூறுகிறவர்களிடம் நேசதேசப்படைகளின் உயர்வான கடற்படைகளை எதிர்த்துப் போராட அவனிடம் யுத்தக் கப்பல்களும், மனிதர்களும், முஸ்தீப்புகளும் இல்லையென்று அவன் சொல்லுவது சரியான முகாந்திரமில்லை. 1940-ம் வருஷத்தில் பிரிடனுக்குப் படையெடுப்பு அபாயம் ஏற்பட்டபொழுது பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்த 20 நாசகாரிகளும், சிறிய படகுகளும், இழுப்புக் கப்பல்களும் உள்ள கடற்படை இங்கிலீஷ் கால்வாயைத் தற்காப்பு செய்துவந்தது. தினந்தோறும் அவைகள் ஐரோப்பிய கடற்கரைக்கு நேராகச் சென்று எதிரியின் கப்பல்களைத் தாக்க முயன்றன. அந்த காலத்தில் இப்பொழுது இருப்பதைவிட ஜெர்மனியிடம் அதிக யுத்தக் கப்பல்களிருந்தன.

### நெருக்கடியான சமயம்.

D. தினத்தன்று நமது படைகள் இங்கிலீஷ் கால்வாயைத் தாண்டியபொழுது 1940-ம் வருஷத்தில் பிரிடன் தன்னந்தனியாக நின்றபொழுது அதற்கு ஏற்பட்டிருந்த நெருக்கடியான நிலைமையை பிரிடிஷ் மக்கள் ஞாபகப்படுத்திக்கொண்டார்கள். நான் சென்ற யுத்தத்தில் ஈடுபட்டு பிரசித்திபெற்ற வெர்ஸாடைல் என்ற நாசகாரியில் கடல் தாண்டிச் சென்றேன். நான் முதலில் இறங்கிய படையுடன் சென்றேன். 4,000 கப்பல்கள் அதிகமான நஷ்ட

மன்னியில் கடல் தாண்டிச் சென்றுவிடும் என்று நான் நம்பிக்கை கொள்ளவில்லை. நாங்கள் கொஞ்சம் கொஞ்சமாக நார்மண்டி கடற்கரைக்குச் சென்றபொழுது எதிரி நூதனமான ரகசிய ஆயுதத்தை உபயோகிப்பானென்று நான் எதிர்பார்த்தேன்.

45 நாட்ஸுகளுக்கு அதிகமான வேகம் பொருந்திய மோட்டாரினால் ஓட்டப்பட்ட யுத்தக் கப்பல்களான இ-படகுகளை எதிரி உபயோகிப்பானென்று நான் எதிர்பார்த்தேன். செர்பர்க்கிலும், போலோனிலும், லாஹாவரிலும் இ-படகுகள் வைக்கப்பட்டிருக்கின்றனவென்றும் எங்களுக்குத் தெரியும். பூ படகுகளைக் கொண்டுவருவதற்குக் காலதாமதம் ஏற்படும். ஆனால் இ-படகுகள் கடுமையாக எதிர்த்துப் போராடியிருக்கக்கூடும். ஆகிலும் அவைகள் துணிவுகரமாக வெளிவரவில்லை.

இ-படகுகளைத் தாக்கப் பயிற்சி பெற்றதும் விசேஷ முஸ்தீப்புகளுள்ளதுமான பிரிடிஷ் கடற்படையுடன் ஒரு நாள் இரவில் சென்றேன். செர்பர்க்கைத் தாண்டி அமெரிக்கர்கள் இருக்குமிடத்திற்கு நாங்கள் சென்றோம். இங்கு இ-படகு தளங்களிருக்கின்றனவென்று எங்களுக்குத் தெரியும். சில மணிக்குள்ளாக பெரிய கடற்போர் மூளுமென்று நாங்கள் எதிர்பார்த்தோம்.

### செர்பர்க் ரோந்துப்படை.

முதலில் பிரிடிஷ் மோட்டார் மீன் வெடிப் படகுகள் செர்பர்க் தீபகற்பத்தின் ஓரத்தில் ஜாக்கிரதையாக ரோந்து செய்யச் சென்றன. அவைகளுக்குப்பின் போர்க் கப்பல்களும் அவைகளுக்குத் துணையாக ஸ்டேனர் என்ற சண்டைக் கப்பலும் நாசகாரிகளும் சென்றன. நான் ஸ்டேனரில் சென்றேன். இரவு 11 மணிக்கு கடற்கரையிலிருந்த எதிரியின் 6 அங்குலம், நாலு அங்குலம் வாயுள்ள பீரங்கிகள் குண்டுகளைப் போட்டன.

ஜெர்மன் பீரங்கி பிரயோகத்தின் சக்தியை ஒருவரும் குறைத்து மதிக்கவேண்டாம். அன்றிரவு போடப்பட்ட 200 குண்டுகளில் அநேகம் என்னுடைய போர்க்கப்பலுக்கருகிலும் சமீபத்திலிருந்த மோட்டார் டார்பிடோப் படகிற்கருகிலும் விழுந்தன. இரண்டு தடவை எங்கள் கப்பலைத் தாண்டி குண்டுகள் விழுந்தன. இரண்டு தடவை 10 அடி அகலத்துக்கு சமுத்திர ஜலம் ததும்பி எங்களுடைய கப்பலின் மேல் தட்டில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. பீரங்கிகளின் கடுமையான குண்டுவீச்சைக் கண்டு செர்பர்க்கிலிருந்து நமது கப்பல்கள் பின்வாங்கி விடுமென்றும் அதன் பின் இ-படகுகள் தாராளமாக கடலுக்குச் செல்லலாமென்றும் ஜெர்மனி நம்பியிருந்தது. ஆகிலும் பிரிடிஷ் கப்பல்கள் பின்வாங்கிச் செல்லவில்லை. செர்பர்க்கைப் பிடிக்க அமெரிக்கப் படைகள் தரைப்போரை நடத்தியபொழுது நாம் கடலில் போரை நடத்தினோம்.

அநேக மணி நேரங்கள் வரையில் பீரங்கி பிரயோகம் ஓயவில்லை. ஒரு பக்கத்திலிருந்த மோட்டார் மீன் வெடிப் படகுகள்பேரில் ஏராளமான குண்டுவீச்சேற்பட்டதால் அவைகள் பதில் நடவடிக்கையைச் செய்ய முடிவு செய்தன. "நாங்கள் எதிரியின் கடலுக்குச் செல்லுகிறோம்" என்று சமிக்ஞை செய்துவிட்டு அது உள்ளே புகுந்தது. அப்பொழுது ஜெர்மன் தேடுவிளக்கு அதைத் துலக்கிக் காட்டிற்று. இந்த வெளிச்சத்தைக் குறிவைத்து படகிலிருந்த பீரங்கிக் குண்டை பிரயோகித்து அந்த விளக்கை நொருக்கிவிட்டது.

அந்த சமயத்தில் செர்பர்க் முனையிலிருந்த ஜெர்மன் அமைப்புக்குக் கெடுதல் நேரிட்டது போல் தோன்றிற்று. தேடுவிளக்கு அணைந்துபோனவுடன் கடற்கரையிலிருந்த ஜெர்மன் பீரங்கிகள் ஏழு நிமிஷம் வரையில் ஒரு நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. கடற்கரையிலிருந்த தற்காப்புப் படைகளுக்கு இன்னது செய்வதென்று தெளிவுபடாமல் உத்தரவுகளைப் பிரதீக்ஷித்து அவர்கள் டெலிபோனைத் தூக்கினார்கள்.

ஜெர்மனியின் ஆலஸ்யத்தைப் பயன்படுத்திக்கொண்டு அச்சிறிய பிரிடிஷ் மோட்டார் மீன் வெடிப் படகு ஜெர்மன் பீரங்கி வைப்புகளையும், அரண்களையும் துலக்கிக் காட்டக்கூடிய வெளிச்சத்தை உண்டுபண்ணக்கூடிய நக்ஷத்திர குண்டுகளையும், கடற்கரையிலிருந்த பீரங்கிகளை அழிக்கக்கூடிய வெடிகுண்டுகளையும் பொழிந்தது.

### வேறு ஒன்றும் செய்ய முடியாது.

அவனிடமுள்ள பீரங்கியினால் ஜெர்மானியர்களை அழித்துவிடலாமென்று மோட்டார் படகின் 23 வயதுள்ள காப்டன் எண்ணிக்கொண்டிருக்கவில்லை. மறுநாள் அவனை நான் இங்கிலாந்தில் கண்டு பேசியபொழுது அவன் பின்வருமாறு சொன்னான். "தேடு விளக்கினால் அவர்கள் எங்களைக் கண்டுபிடித்துவிட்டபின் நான் வேறு ஒன்றும் செய்வதற்கில்லை. நானே பின்வாங்கி வரவேண்டியதுதான். மேலும் அந்த கடற்கரையில் எதிரியிடம் என்ன முஸ்தீப்புகளிருக்கின்றனவென்று எனக்கு தெரியவேண்டியிருந்தது. நான் அந்த இடத்திற்கு இன்றிரவு செல்லுவேன்."

இம்மாதிரியான அநேக கதைகளை ஏராளமாக வாராவாரமாகக் கூறிவிடலாம். ஜெர்மனியின் குழப்பமான நிலைமையையும் விரிவாக எடுத்துக் கூறலாம்.



ஜெர்மன் இ-படகு மாலுமிகளைப்பற்றியும், அவர்களின் இ-படகுகள், முஸ்தீப்புகளைப் பற்றியும் நான் குறை கூறப்போவதில்லை. பிரிடனின் லேசான கடற்கரைப் படைகள் செல்லும்பொழுது இ-படகுகளை முறியடித்துவிடலாமென்ற நம்பிக்கை அவர்களுக்கு உண்டாகியிருக்கிறதென்றுமட்டும் தான் சொல்லக்கூடும்.

இப்பொழுது இ-படகுகள் முறியடிக்கப்படுகின்றன என்றுதான் சொல்லவேண்டும். பிரான்ஸுக்கு ஆயிரக்கணக்கான கப்பல்கள் சாமான்களைக் கொண்டுபோகின்றன. அவைகளை இ-படகுகள் வழிமறிக்கவேயில்லை. இ-படகுகளை இங்கிலீஷ் கால்வாயில் கடல் மார்க்கங்களுக்கும் முக்கியமான துறைமுகங்களுக்கும் வராதபடி தடுத்ததன் மூலம் பிரெஞ்சு கடற்கரைக்கருகில் நேசதேசத்தார்கள் சிறந்த வெற்றியைப் பெற்றுவிட்டார்கள்.

### பலமான கடல் முற்றுகையின் பிரயோஜனம்.

இ-படகுகளை எதிர்த்துப் போராடும் நடவடிக்கையில் நேசதேசத்தார்கள் நான்கு முறைகளை அனுஷ்டிக்கிறார்கள்.

(1) வெடிவிமானங்கள் இ-படகுகளை தளங்களிலிருக்கும்பொழுதே தாக்குகின்றன.

(2) யுத்தக் கப்பல்கள் தளங்களின்பேரில் குண்டுகளைப் பிரயோகிக்கின்றன.

(3) மோட்டார் மீன் வெடிப் படகுகளும், போர்க் கப்பல்களும், நாசகாரிகளும் அவைகளைச் சதா காலமும் சுற்றி வளைத்துக்கொண்டிருக்கின்றன.

(4) தட்டுத் தடுமாறி தனிப்பட்ட இ-படகுகள் கப்பல்கள் செல்லும் மார்க்கங்களுக்கு வரக்கூடுமாகையால் அவைகளை எதிர்த்துப் போராட சாமான் கப்பல்களுக்குத் துணைக்காவல் அமைக்கப்பட்டிருக்கிறது.

சுருக்கமாகச் சொன்னால், இ-படகுகளை பிரிடிஷார்கள் பழமையான கடற்படை ஆயுதமான, நெருங்கிய முற்றுகைக்குள்ளாக்கியிருக்கிறார்கள்.

---

## அசைந்துசெல்லும் ஒளிப்படமெடுக்கும் படைகள்.

### "இருட்டறையில் வேலை செய்கிறவர்கள்" நாடோடிகளாக ஆகிவிட்டார்கள்.

ஸர் ட்ராபோர்ட் லே மாலரியின் நேசதேச விமானப்படையைச் சேர்ந்த இரண்டாவது விமானப் படைகளுக்கு ஐரோப்பாவிலுள்ள ஒவ்வொரு விமானத்திலும் ஒரு இருட்டறை இருக்கும். ஒளிப்படம் பிடிக்கும் பகுதி அசைந்து செல்லும். போர் நடவடிக்கைகளுக்கு அவசியமான ஒளிப்படங்கள் உடன் காலத்தில் எடுப்பதற்காக அவர்களிடம் முஸ்தீப்புகளும், வேலைக்காரர்களும் இருக்கிறார்கள்.

நவீன முறையில் ஒளிப்படமூலம் வேவுபார்க்கும் படை ஸ்தாபிக்கப்பட்டிருப்பதால் ஆகாயத்திலிருந்து படையெடுக்கும் நடவடிக்கை ஒரு சாஸ்திரமாக மாறிவிட்டது. அதன் ஒளிப்படம் பிடிக்கும் பெட்டிகள் எதிரிகள் ஜாக்கிரதையுடன் காபந்து செய்துவரும் ரகஸியங்களை வெளிப்படுத்திவிடும். விமானத்தாக்குதலுக்குச் செல்லுமுன் ஒவ்வொரு வெடிவிமானிக்கும் நுட்பமான விபரங்களடங்கிய லக்ஷியத்தின் படமொன்று வழங்கப்படும். வெடிகுண்டுகள் வீசப்பட்டபின் ஒளிப்படம் பிடிக்கும் பகுதியிலுள்ள பெட்டிகள் பழுதைப்பற்றி படம் பிடித்துவிடும். அவைகளிலிருந்து நாசத்தின் அளவை மதித்துவிடலாம்.

### கோர்வையில் முக்கியமான பாகம்.

விமானத்தில் செல்லும் ஒளிப்படம் பிடிக்கிறவருக்கு ஒத்தாசை செய்ய இருட்டு அறையில் வேலை செய்கிறவர்களிருக்கிறார்கள். எதிரியின் தேசத்தில் அநேக மைல்கள் தாண்டி குண்டுகளை வீசுகிறவர்களுக்கும் விமானத்தில் ஒளிப்படத்தை அன்வயப்படுத்தும் நிபுணருக்குமிடையே இந்த வேலைக்காரர்கள்தான் தொடர்பு ஏற்படுத்துகிறார்கள்.

ஒளிப்படம் பிடிக்கப்பட்டு அதன்பின் போதுமான அளவிற்கு அதை விரிவுபடுத்தி காபிகள் எடுக்கும் வரையில் அநேக சிக்கலான முறைகளைக் கையாள வேண்டியிருப்பதினால், காலதாமதம் ஏற்படக்கூடுமென்று அநேகர் நினைக்கலாம். ஆகிலும் அவைகளை நாம் சரிப்படுத்திவிட்டோம்.

போர்முனையின் ஒரு மூலையில் ஒரு ஓடைக்கருகில் கருப்பு மோரியா போன்ற ஒரு பெரிய மோட்டார் சாமான் வண்டி நின்று கொண்டிருக்கும். அதிலிருந்து ரெட்டினால் செய்யப்பட்ட தண்ணீர்த் தொட்டிக்கு ஒரு குழாய் செல்லும்.

ஏற்பட்ட தொழிற்புரட்சிதான் மூலகாரணமாகும். ஏற்கனவேயிருந்த தொழிற்சாலைகள் நம்பத்தகாத முறையில் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கின்றன. புதிய தொழிற்சாலைகளும், யந்திரங்களின் சிக்கனத்துடனும் ஏராளமான பொருள்செலவிலும் வெகுசீக்கிரத்துடனும் திறமை பொருந்தியதுமாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

உருப்புகளை முன்னதாகத் தயாரிக்கும் முறைகள்தான் அதிக சாதகமளித்திருக்கின்றன. இந்த திட்டம் இல்லாதிருந்தால் அமெரிக்காவின் யுத்த தளவாட உற்பத்தி சாத்தியமாகயிருந்திருக்காது. கப்பல்களையும் விமானங்களையும், வீடுகளையும் வெகுசீக்கிரத்தில் இசைத்துவிடும் முறை அமெரிக்காவில் வேரூன்றிவிட்டதென்பதை ஒருவரும் நம்பாமலிருக்க முடியாது. யுத்தத்துக்குமுன் அமெரிக்க கப்பற்கட்டும் தொழில் முறை ஙியாதி பெற்றதில்லை. கப்பற்கட்டும் தளங்கள் கிழக்குக்கரையிலும் மெக்ஸிகோ வளைகுடாவைச்சுற்றிலும் முக்கியமாக அமைக்கப்பட்டிருந்தன. இன்று 48 ஸமஸ்தானங்களில் 47 நாடுகள் கப்பலின் உருப்புகளை உற்பத்தி செய்கின்றன. அவைகள் இருப்புப்பாதை மார்க்கமாக கடற்கரை ஓரத்திலுள்ள கப்பற்கட்டும் தளங்களுக்குக்கொண்டு போகப்படுகின்றன. அரசாங்கத்தார் பொருள் செலவிட்டு அமைத்திருக்கும் தளங்கள் கப்பல் பாகங்களை உற்பத்திசெய்யும் சாலைகளல்ல. அவைகளுக்குக்கொண்டுவரப்படும் சாமான்கள் ஒன்று சேர்க்கப்படுகின்றன. இந்த ஏற்பாட்டினால்தான் கப்பல்கள் ஏழு நாட்களில் கட்டி முடிக்கப்பட்டு கடலுக்கு அனுப்பப்பட்டன.

கப்பற்கட்டும் திட்டத்தைப்போல விமான உற்பத்தியைப்பற்றியும் அநேக விவரங்களைச் சொல்லக்கூடும்.

அல்பமாக ஆரம்பித்து பெரிய தொழிற்ஸ்தாபனமாக மாறியவற்றில் சேர்க்கை ரப்பரும் ஒன்று. அமெரிக்காவின் முக்கியமான தளவாடங்களுக்கு நெருக்கடி ஏற்பட்ட இரண்டு வருஷங்களில் 750 மிலியன் டாலர்கள் பொருமானமுள்ள யந்திரங்கள் திருத்தி அமைக்கப்பட்டன. இப்பொழுது 50 தொழிற் ஸ்தானங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் பெரும்பாகம் வடகிழக்கு தென்மேற்கு பாகத்திலும் சில ஸ்தாபனங்கள் பஸிபிக் கடற்கரையிலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் பூடாடீன், ஸ்டிரீன், பூனல், நியூயொப்ரீன், பூடில் ரப்பர் முதலியவற்றை உற்பத்தி செய்கின்றன. சில தொழிற்சாலைகள் அவைகளின் சக்திக்கு அதிகமாகவே உற்பத்திசெய்து வருகின்றன. யுத்த விமானங்களும், டாங்கிகளும், லாரிகளும் செல்லக்கூடிய உருளைகளை அவைகள் உற்பத்தி செய்கின்றன. சென்ற வருஷத்தில் 2,34,244 டன்கள் எடைமானமுள்ள பலவகைப்பட்ட சேர்க்கை ரப்பர் உண்டுபண்ணப்பட்டது. இந்தப் புதியதொழில் துரிதமாக அபிவிருத்தியடைந்து வருவதால் இந்த வருஷம் பிப்ரவரி மாதத்தில் 53,000 டன்கள் எடைமானமுள்ள ரப்பர் உற்பத்தி செய்யப்பட்டது. 1944-ம் வருஷத்தின் முடிவில் 9,00,000 டன்கள் எடைமானமுள்ள பூனஸ் உண்டுபண்ணப்பட்டுவிடும். யுத்தத்துக்குமுன் நாம் உபயோகித்த இயற்கை ரப்பரைவிட இந்த சேர்க்கை ரப்பர் உற்பத்தி மிகுதியானது. இப்பொழுது ஆவக்கப்பட்டிருக்கும் தொழில்முறை யுத்தத்திற்குப்பின் நிலைத்திருக்கக்கூடுமாவென்பது விரிவான சர்ச்சைக்குறியது.

### விவசாயம் ஓங்கி நிற்கிறது.

அமெரிக்க விவசாயமும் யுத்த முயற்சிக்குப் பேருதவி செய்திருக்கிறது. குறைவான தொழிலாளர்களுடன் அது ஏராளமான உணவுப்பொருள்களை உண்டுபண்ணி ஸப்ளை செய்திருக்கிறது. இந்தத் தொழிலிலும் மனித பலக்குறைவு ஏற்பட்டிருக்கிறது. சென்ற வேனிற் காலத்தில் மேற்கிலும் தென்மேற்கிலுமுள்ள கனிவர்க்கங்களையும் கறிகாய் பயிர்களையும் அறுவடை செய்வதற்காக மெக்ஸிகோவிலிருந்து தொழிலாளர்களைக்கொண்டு வரலாமென்று அனுமதிக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. மேற்கு இந்தியிலுள்ள கருப்பு ஜாதியார்கள் முக்கியமாக பஹாமாத் தீவிலிருந்தவர்கள் தென்கிழக்கு நாடுகளில் அறுவடை செய்ய ஒத்தாசையளித்தார்கள். இந்த அனுஷ்டானம் இந்த வருஷத்திலும் கொண்டாடப்படும்.

விவசாயப் பொருள்களின் விலைவாசிகள் எல்லாம் அதிகரித்து விட்டன. முக்கியமான விவசாயப்பண்ணைகளிருக்கும் இடங்களிலிருந்து விவசாயிகள் ஏராளமான பொருளைச் சம்பாதித்து விட்டார்களென்று தகவல்கள் கிடைத்து வருகின்றன. அந்தப்பொருளின் பெரும் பாகத்தை யுத்தம் முடிவடைந்த உடன் யந்திர சாதனங்களை வாங்குவதில் அவர்கள் விநியோகம் செய்வார்களென்றும் தெரியவருகிறது.

யுத்த ஆரம்பத்தில் அமெரிக்காவில் ஏராளமான தான்யங்கள் முக்கியமாக சோளம் சேமித்து வைக்கப்பட்டிருந்தது. அந்த இருப்பும் இப்பொழுது வற்றிப்போகும் நிலைமைக்கு வந்து விட்டது. இதற்குப்பின் அமெரிக்கர்கள் அன்றாடம் காலக்ஷேபத்துக்குப்போதுமான அளவுக்குத்தான் தானியங்களை வைத்திருக்கமுடியும்.



## அச்சுநாடுகளுக்கு ஆதீனமான நாடுகள் கவலித்துவருகின்றன.

(எட்வர்ட் மாண்ட் காமரி.)

ஐரோப்பாவின் விடுதலைக்காக மேற்குப்பக்கத்தில் நேசதேசத்தார்கள் போரைத் துவக்கியதிலிருந்து அபாரமான ராஜீய அதிர்ச்சிகள் ஏற்படுமென்று லண்டனிலுள்ள ராஜதந்திர உற்று நோக்காளர்கள் எதிர்பார்த்தார்கள். D. தினத்திற்குப்பின் உலகத்தின் அநேக பாகங்களில் காணப்படும் நடவடிக்கைகளிலிருந்து அதன் விளைவுகள் ஏற்பட்டு விட்டனவென்று வெளிப்படுகிறது. உற்றுநோக்காளர்கள் இந்த நடவடிக்கைகளை கவனத்துடன் உற்றுநோக்கிவருகிறார்கள்.

படைபெடுப்பின்மூலம் வெகுகாலமாக தீரத்துடன் ஏராளமான எதிரிப்படைகளை எதிர்த்துப் போராடிய சீனர்களுக்கு அதிக உத்சாகம் ஏற்பட்டுவிட்டதென்று தூரக்கிழக்கிலுள்ள சைனாவிலிருந்து லண்டனுக்குத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. இது உலகமளாவிய ஏகோபித்த யுத்தம் என்று இப்பொழுது எல்லோரும் மதித்துவிட்டார்கள். மேற்கில் ஜெர்மனிக்கு விழும் ஒவ்வொரு உதையும் கிழக்கில் அவனுடைய கூட்டாளியான ஜப்பானை அடித்தது போலாகும். ஐரோப்பிய யுத்தத்தின் நீடிப்பைக் குறைக்கும் ஒவ்வொருநாளும் ஆசியாவில் ஜப்பான் நிலைத்திருக்கும் நாளில் ஒன்று குறைந்ததாகும்.

### ஐரோப்பாவில் அதிர்ச்சி.

ஆகிலும், ஐரோப்பாவிலுள்ள நடுநிலைமை வகிக்கும் நாடுகளில் படையெடுப்பின் விளைவுகள் அதிகமாகக் காணப்படுகின்றன. நார்மண்டியில் வெற்றிகரமாக இரண்டாம் போர்முனை ஏற்படுத்தப்பட்டதன் விளைவாக நடுநிலைமை வகிக்கும் நாடுகளின் தலைநகரங்களில் அதிர்ச்சிகள் ஏற்பட்டிருக்கின்றன.

இந்த அதிர்ச்சிகள் இப்பொழுது லண்டனிலிருந்து ராஜதந்திர போக்குவரத்துக் கடிதங்களுக்கு ஏற்பட்ட தடை நீக்கப்பட்டுவிட்டதால் நடுநிலைமை வகிக்கும் நாடுகளின் அயல்நாட்டு மந்திரிகள் லண்டனில் நம்பிக்கை அதிகரித்திருக்கிறது என்ற தகவல்களைத் தங்களுடைய நாடுகளுக்கு அனுப்புவதன்மூலம் பலப்பட்டுவிடும்.

ஜெர்மனியின் அமுலுக்குட்பட்ட நாடுகளிலும் இந்த ராஜீய அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. ஆகிலும் அதன் விளைவுகள் வெளிவர வெகுகாலமாகும். ஏனெனில் அவைகளை ஜெர்மன் பிரசாரமும் கடுமையான தணிக்கை முறைகளும் மறைமுகப் படுத்திவிடுகின்றன.

### பின்லாந்தின் கதி.

ஹிட்லரின் அமுலுக்குட்பட்ட நாடுகளில் முக்கியமாக பின்லாந்து இப்பொழுது அதிகமான கஷ்டத்துக்குள்ளாகிவிட்டது. செம்படை தங்குதடையன்னியில் முன்னேறிக்கொண்டு கரீலியன் பூசந்தியைத்தாண்டியபின் பின்லாந்தின் தற்காப்புகளில் பலஹீனமுள்ள விபோர்க்கையும் பிடித்துக்கொண்டு ஹெல்ஸிங்கியை நோக்கி முன்னேறிவருகிறது. பின்லாந்து ஒரு முடிவுக்குக் கூடியசீக்கிரம் வந்துவிடவேண்டும். இதுவரையில் ஹிட்லரின் வேண்டுகோளுக்கிணங்கி பின்லாந்தை யுத்தத்தில் இழுத்துவிட்டிருக்கும் முரட்டு ஸ்வபாவமும் பிடிவாதமுள்ள நிர்வாகிகளை பின்லாந்து அப்புறப்படுத்தவேண்டும். இப்பொழுதாவது வாக்குவாதம்செய்து காலதாமதம் செய்யாமலும் சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் ருஷ்யா அனுப்பும் நிபந்தனைகளை ஒப்புக்கொண்டு அதனுடன் பின்லாந்து சமாதானம் செய்து கொள்ளவேண்டும்.

சென்ற மார்ச்சு மாதத்தில் ருஷ்யாவும் பின்லாந்தும் சமாதானம் செய்துகொள்ள முயற்சி செய்ய ஆரம்பித்ததுமுதல் ருமேனியாவும், ஹங்கேரியாவும், பல்கேரியாவும் நடவடிக்கைகளை ஜாக்ரதையுடன் கவனித்துவருகின்றன. தங்களுடைய நடவடிக்கைகளை நிறுவுவதற்கு பின்லாந்து மாதிரி தேசம் என்று அவர்கள் கருதுகிறார்கள். பின்லாந்தின் சரணாகதியும் தோல்வியுற்ற நாட்டை ருஷ்ய நிர்வாகம் நடத்தும் முறையும் மற்றநாடுகள் செய்யக்கூடிய முடிவை பாதிக்கக்கூடும். சென்ற சில மாதங்களில் தடுமாட்டமடைந்திருக்கும் ஹங்கேரியை ராஜீய முறையிலும் ராணுவ முறையிலும் பரிபாலித்துவர ஜெர்மனி ஏராளமான முயற்சிகள் செய்துவந்திருப்பதிலிருந்து ஜெர்மனியில் ஏற்பட்டிருக்கும் அதிர்ச்சிகள் நன்கு புலப்படுகின்றன.

144706

## ஜப்பானிய கடற்படையின் அழிவு.

மே மாதம் 27-ம் தேதியன்று கடற்படை தினம் கொண்டாடப்பட்டபொழுது கொடிகள் எங்குபார்த்தாலும் தொங்கவிடப்பட்டன. அன்று நகரத்திலிருக்கும் ஒவ்வொரு வீட்டிலும் கிராமங்களிலிருக்கும் வீடுகளிலும், குடிசைகளிலும் கொடிகள் பறந்தன.

த்வஜ ஸ்தம்பங்களின் நுனியில் தங்க உலாம் பூசியிருந்ததுபோக இப்பொழுது துக்கம் கொண்டாடப்படுகிற முறையில் ஸ்தம்பத்தின் நுனியில் கருப்பு வர்ணம் பூசப்பட்டிருக்கிறது.

இப்பொழுது ஜப்பானுக்கு துக்கம் கொண்டாடக்கூடிய தினம். 39 வருஷங்களுக்கு முன் ருஷ்யாபேரில் கடற்தளபதி டோகோ வெற்றிபெற்றபொழுது கடற்படை தினம் முதன்முதலில் கொண்டாடப்பட்ட தினத்தை நினைத்து இப்பொழுது ஜப்பானிய பிரசாரகர்கள் துக்கிக்கிறார்கள். இந்த விபரீதம் ஜப்பானியர்களின் மனதில் நன்றாய்ப் பதிந்துவிட்டது. ஏனெனில் இப்பொழுது ஜப்பானின் எதிரிகளின் கடற்படை கடல்களில் சஞ்சாரம் செய்து வருகிறது. ஜப்பானியக் கடற்படை தப்பி ஓடுகிறது. நிச்சயமாக இது ஒளிந்துகொண்டிருக்கிறது. ஜப்பானிய பிரசாரத்தில் தற்காப்பு த்வனி காணப்படுகிறது. சரியான தருணத்தை ஜப்பானிய கடற்படை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறதென்று சொல்லப்படுகிறது.

கடற்தளபதி டோகோவை ஜப்பானின் நெல்ஸன் என்றும் சொல்லுவதுண்டு. 50 வருடங்களுக்கு முன் காப்டனாகயிருந்தபொழுது அவன் சரித்திரத்தில் புகழ்பெற்றான். அந்த சமயத்தில் கொரியா சம்பந்தமாக ஜப்பானுக்கும் சைனாவுக்கும் சச்சரவு உண்டாகி போர் மூண்டது. சம்பவங்களை பொருட்படுத்தாமல் டோகோ தீவிர புத்தியுடன் சீனாவின் துருப்பேற்றிச் செல்லும் கப்பலை மூழ்கடித்தான். சில நாட்களுக்குப்பின் ஜப்பான் போர் தொடுத்தது.

பத்து வருடங்களுக்குப்பின் காப்டன் டோகோ கடற்தளபதி பதவி பெற்றான். சீனர்களை துரோகமாக தாக்கிய சம்பவத்தை அவன் மறந்துவிடவில்லை. ஜப்பானுக்கும், ருஷ்யாவுக்குமுள்ள மனஸ்தாபங்கள் முற்றியவுடன் ஆசியா கண்டத்துக்குச் செல்லும் போக்குவரத்து மார்க்கங்களைக் கைப்பற்றவேண்டியது அவசியமென்று அறிந்து ஆர்தர் துறைமுகத்திலுள்ள ருஷ்யாவின் பஸிபிக் கடற்படையைத் தாக்கி அதை அழித்தான். அதன் பிறகு ஜப்பான் போர் தொடுத்தது.

பால்டிக் கடலிலிருந்த ருஷ்யக் கடற்படை கிழக்குப் பிரதேசத்திற்கு வந்தபொழுது அதையும் டோகோ அழித்தான். கடற்தளபதி டோகோவின் கடற்படையில் அச்சமயம் யாமமோடோ என்ற ஒருவன் வேலை செய்துவந்தான். இந்த கடல் போரில் அவன் இரண்டு விரல்களை இழந்தான். யாமமோடோவிற்கு கடற்தளபதி டோகோவிடம் அதிக பிரேமை உண்டு. அவன் கடற்தளபதியாகவும் பிறகு ஒன்றுபட்ட கடற்படையின் சேனாதிபதியாகவும் பதவி ஏற்றபொழுதும் யாமமோடோ அவனைப் பாராட்டவில்லை. 1941-ம் வருஷம் டிஸம்பர் மாதத்தில் வாஷிங்டனிலுள்ள ஜப்பானிய ராஜதந்திரிகள் இந்தோ-சைனாவில் ஜப்பானியத் துருப்புகள் நடமாடுவது சீன யுத்தத்தின் ஒரு சிறிய நடவடிக்கையென்று அமெரிக்காவினிடமும், பிரிட்டனிடமும் சொல்லிக்கொண்டிருந்தபொழுது கடற்தளபதி யாமமோடோ பெர்ல் துறைமுகத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான். போரைத் துவக்குமுன் காப்டன் டோகோ சீனத் துருப்பேற்றிச் செல்லும் கப்பலை மூழ்கடித்ததையும் 10 வருடங்களுக்குப் பின் அவன் ருஷ்யக் கடற்படையை அழித்ததையும் அவன் ஞாபகத்தில் வைத்திருந்தான். கடற்தளபதி யாமமோடோவும் மூன்றாவது நடவடிக்கையை நடத்திவிடவேண்டுமென்று திட்டம் போட்டிருந்தான். பெர்ல் துறைமுக நடவடிக்கைக்குப் பின் அவன் அவனுடைய சிநேகிதனுக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு சொல்லியிருக்கிறான். "நான் டோகோவின் போதனைகளைப் பின்பற்ற முயலுகிறேன். அதாவது என்னுடைய ஆத்மிய குணத்தை விருத்தி செய்துவருகிறேன்." பெர்ல் துறைமுகத்தில் அதிக நஷ்டம் ஏற்பட்டபொழுதும் அது மீளமுடியாத நஷ்டத்தை உண்டுபண்ணிவிடவில்லை.

1942-ம் வருஷ கடற்படை தினத்துக்கும், 1943-ம் வருஷ கடற்படை தினத்துக்குமிடையே ஜப்பானியக் கடற்படைக்கு அநேக தோல்விகள் ஏற்பட்டன. தூரதேசங்களிலிருந்து ஜப்பானியர்களைப் பின்வாங்கச் செய்ததிலிருந்து போக்குவரத்துகளை பரிபாலிக்கும் ஜப்பானிய சக்திக்கு அளவு உண்டென்று தோன்றிவிட்டது. 1943-ம் வருஷம் மே மாதத்தில் அட்டுத் தீவில் ஜப்பானுக்கு வீழ்ச்சி ஏற்பட்டது. சமீப தளங்களிலிருந்தபோதிலும் ஜப்பானியக் கடற்படை போரில் கலந்துகொள்ளவாவது படைகளைப் பின்வாங்கிச்செல்லவாவது துணியவில்லை.

அந்த வருஷம் வசந்தகாலத்தில் கடற்தளபதி யாமமோடோ விமானம் நொறுங்கியதில் கொல்லப்பட்டான் என்பதைக் கேட்டு ஜப்பானிய குணங்களையறிந்த ஒருவரும் ஆச்சரியப்படமாட்டார்கள். அவன் தற்கொலை செய்துகொண்டானா, இல்லையா என்பது நமக்குத் தெரியாது. ஆகிலும், அவன் அவ்விதம் செய்திருக்கக்கூடும். அவனுடைய தினசரிக் குறிப்பை கவனிக்கும்பொழுது அவன் அவனுடைய பொறுப்பைப்பற்றி அதிக கவலைப்பட்டான் என்று தெரியவருகிறது. பொறுப்பான நடவடிக்கையென்பது பொறுப்பின்படி நடத்த சக்தியற்றவரின் நடவடிக்கையென்று பொருள்படும். அதாவது அவர்கள் தற்கொலை செய்துகொள்ளுவார்கள்.



நேசதேசத்தாரின் இருவகைப்பட்ட நடவடிக்கைகளுக்கு வெற்றிகள் கிடைத்தபொழுதும் கடற்தளபதி டோகோ இறந்தபின்னரும் இவ்வருஷ கடற்படை தினம் கொண்டாடப்பட்டது.

ஜப்பானியக் கடற்படை இரண்டு வருஷங்களாக ஹீனஸ்திதியை அடைந்துவிட்டது. இந்த சிதைவை தடுத்துவிடலாமென்று ஜப்பானுக்கு நம்பிக்கையே கிடையாது. ஏனெனில் நேசதேசத்தாரின் கடற்படை, ஆகாயப்படையின் உயர்வு அதிகரித்துவருகிறது. அது மேன்மேலும் விருத்தியடைந்துவரும். அத்துடன் ஜெர்மனி முறியடிக்கப்பட்டபின் ஐரோப்பாவிலிருந்து உபரிப் படைகளும் குவிந்துவிடும்.

கடற்தளபதி யாமமோடோ, டோகோ போன்றவர்கள் நிலைமையை நன்கு உணருவார்கள். இதனால்தான் அவர்கள் இறந்துவிட்டார்கள். இதே சமயத்தில் 40 வருடங்களுக்கு முன் கடற்தளபதி டோகோ பெற்ற வெற்றிகளை இப்பொது துக்கத்துடன் ஜப்பானியர்கள் ஞாபகப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

---

## இந்தியாவின் பிதுரார்ஜிதம்.

### பூமியும் அதன் சிதைவும்.

(பிரிகேடியர் F. L. பிரேயின்.)

சுபிக்ஷமான இந்தியாவில் ஏழ்மைத்தனம் தாண்டவமாடுவதற்குக் காரணம் யாது? இந்திய மக்களின் புஷ்டிக் குறைவுக்கும், பஞ்சத்துக்கும் பூமியை அலக்ஷியம் செய்திருப்பது தான் காரணம். இந்தியர்கள் இந்த விஷயத்தில் சிறிது அதிகமான அக்கரை காட்டினால், இந்தியாவின் மற்ற பிரச்னைகளும் தானாகவே தீர்ந்துவிடும்.

இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்யும்பொழுது ரெயிலின் பலகணி வழியாக உற்று நோக்கினால் பூப்பிரதேசத்தின் ஏராளமான பாகம் பண்படுத்தப்படவில்லையென்பதையும், எங்கு பார்த்தாலும் பூமியின் சிதைவு ஏற்பட்டிருப்பதென்பதையும் நாம் காணக்கூடும். விலை மதிக்கக்கூடாததும் பரிகாரம் செய்யக்கூடாததுமான மண் பூப்பிரதேசத்திலிருந்து மறைந்து வருகிறது. சில இடங்களில் பசுமையான பயிர்கள் ஒரு இடத்தில் காணப்படுகின்றன. அந்த பிரதேசம் சமப்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு கேணியிலிருந்து தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. சரியானபடி பண்படுத்தினால் நல்ல அறுவடையைத் தருமென்று இந்த வயல் வெளிப்படுத்துகிறது. அதன்பின் நாம் பத்திரிகைகளை படிக்கும் பொழுது இந்தியர்களுக்குப் போதுமான உணவுப்பொருள் கிடையாதென்று குறை கூறப்படுகிறது.

#### காரணமும் அதன் விளைவும்.

புஷ்டிக் குறைவிற்கும் பஞ்சத்துக்கும் பூமியை அலக்ஷியம் செய்திருப்பதுதான். பூமியை அலக்ஷியம் செய்திருப்பதிலிருந்து வறுமையும் புஷ்டிக் குறைவும் உண்டாகியிருக்கிறது. கீர்த்திபெற்ற சத்துப்பொருள் நிபுணரான மாக்காரிஸன் சொல்லுவதுபோல செழிப்பற்ற பூமியில் உணவுப்பொருள்களை உற்பத்தி செய்தால் அவைகளின் தரம் குறைவாக இருக்கும். அவைகளை உட்கொள்ளும் மனிதர்களுடையவும் வீட்டில் வசிக்கும் பிராணிகளுடையவும் சுகாதாரம் கெடுதலையடைந்துவிடும். சாகுபடி செய்யப்படும் அல்லது சாகுபடிக்கு லாயக்குள்ள நிலங்களில் கால் பாகம்தான் சமமாகச் செய்யப்பட்டு ரக்ஷிக்கப்பட்டு வருகிறது. மற்ற பாகங்கள் சிதைவுற்று மண்ணை இழந்து செழிப்பில்லாததாக மாறிவிடுகின்றன.

இதற்குப் பரிகாரம் சாதாரணமானது. கடுமையான கல் வர்ஷமும் அநேக காலம் வரஷையுமுள்ள இந்தியாவில் இரண்டு முறைகளைக் கையாளலாம்.

(1) சாகுபடிக்கு லாயக்குள்ள நிலங்களை சமப்படுத்தி அவைகளுக்கு கரைகளை அமைத்துவிடவேண்டும். அவைகளுக்கு விழும் ஜலம் வெளியே போவதற்கும் வடிகால்கள் அமைக்கப்படவேண்டும். வயல் அதிகப் பள்ளமில்லாமலிருந்து மேடாக்க சௌகரியமில்லாவிடில் கரைகளை உயர்த்திவிடவேண்டும்.

(2) மேய்ச்சல் ஸ்தலங்களிலும், குன்றுகளின் சரிவுகளிலும் கால் நடைகளை மேய்ச்சலுக்கு அனுமதிக்கக்கூடாது. புல்லை அறுத்து உபயோகிக்க வேண்டும்.

இதைத் தவிர காடுகளை மூடிவிடவேண்டும். குழிகளைத் தோண்டவேண்டும். மரங்களை உற்பத்தி செய்யவேண்டும். ஆகிலும் எல்லாவற்றையும்விட மேய்ச்சல் ஸ்தலங்களை பத்திரப் படுத்துவதும் வயல்களுக்கு கரைகளை அமைப்பதும்தான் முக்கியமான நடவடிக்கைகள். இந்த முறைகளைக் கையாண்டால் ஆச்சரியப்படத்தக்க பலன்கள் கிட்டிவிடும். பயிர்கள் இரட்டிப்பு மடங்கு அபிவிருத்தியாகும். சில வருஷங்களில் புல்லும் அபரிமிதமாக அதிகரித்துவிடும். இந்தப் பலனை அனுபவிக்கவேண்டுமானால் அதிக பிரயாசை எடுத்துக்கொள்ளவேண்டும்.

ஆனால் முயற்சிக்குத்தக்கபடி உணவுப்பொருள்களும் பொருளும் அதிகமாகக் கிடைத்துவிடும். அதன் மூலம் வாழ்க்கை முறையும் சௌகரியப்படும். இந்தியத் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் சாமான்களும் தாராளமாக விற்பனை செய்யப்படும்.

சிதைவுக்குப் பரிகாரம் சாதாரணமானதென்று சொன்னேன். ஆகிலும் அது சுலபமானதென்று நான் சொல்லவில்லை. அநேக யுகங்களாக நிலைபெற்றிருக்கும் பழக்க வழக்கங்களை மாற்றி விடுவதற்கு அதிக பிரயத்னம் வேண்டும். ஆகிலும் முயற்சி செய்ய வேண்டியது அவசியமாகும்.

சமப்படுத்துவதினாலும், பத்திரப்படுத்துவதினாலும் அநேக லாபங்கள் கிடைக்கும். இந்த ஏற்பாட்டைச் செய்துவிட்டால் நிலங்கள் தங்களுடைய மண்ணைக் காப்பாற்றிக் கொள்ளுவதுடன் ஒவ்வொரு வருஷமும் செழிப்படைந்துவிடும். அவைகளில் ஜலம் தங்கிநிற்கும். இதேவிதமாக மேய்ச்சல் ஸ்தலங்களும் குன்றுச் சரிவுகளும் செழிப்படையும். பிரவாகத்தைப்போல் மேல் மண்ணை அடித்துச் சென்று எங்கு பார்த்தாலும் நாசத்தை விளைவிப்பதற்கு பதிலாக மழை ஜலத்தை பூமி உறிஞ்சிவிடும்.

வயல்களிலும் மேய்ச்சல் ஸ்தலங்களிலும் உள்ள பயிரையும் புல்லையும் மழை ஜலம் போஷிப்பதுடன் பூமிக்குள்ளிருக்கும் ஜல ஸப்ளையையும் அது அதிகப்படுத்துகிறது. அதன் மூலம் கேணிகளிலும், ஓடைகளிலும், நதிகளிலும் ஜலப்பெருக்கை உண்டாகுகிறது. அதன் பயனாக சாகுபடியை அதிகரிக்க அநேகர்களுக்கு சௌகரியமேற்படுகிறது. வாய்க்கால்களில் அதிக ஜலம் வந்துவிடும். உபரியாகக் கேணிகளை வெட்டி விடலாம். தண்ணீரை இறைக்கும் யந்திரங்களை அதிகமாக அமைத்துவிடலாம். வெள்ளத்தினால் சிதைவுற்ற நிலத்தை இப்பொழுது பண்படுத்திவிடலாம்.

சுபிக்ஷத்தின் கோர்வை முடிவற்றது. கொட்டிலில் இரை உட்கொண்ட கால் நடைகள் மலைச்சரிவுகளில் கண்ட புல்களை மேய்ந்துவரும் கால்நடைகளைவிட அதிகமான பாலையும், அதிகமான எருவையும் தருகின்றன. அவைகள் வேலைக்கும் அதிக வலுவுள்ளதாகயிருக்கும். கால்நடைகளைப் பொருக்கியெடுக்கும் நடவடிக்கையும் ஆரம்பமாகிவிடும். உபயோகமில்லாத பிராணிக்கு ஒருவரும் புல்லை அறுத்துக்கொண்டுபோய் போடமாட்டார்கள். பூமியிலிருந்து முளைக்க ஆரம்பித்திருக்கும் சிறிய செடிகளும் கால்நடைகளின் நடமாட்டமில்லாததால் பெரிய விருக்ஷங்களாக நாளடைவில் ஓங்கி வளரக்கூடும்.

சுருக்கம்.

இவ்விதமாக முன்னேற்றமுண்டாகும் பூசாரத்தை மற்ற ஜீவப் பிராணிகளைப்போல் போஷித்து பரிபாலித்து வரவேண்டும். இதற்கு சில அனுபந்தங்களையும் கூறலாம். சமீபத்திலுள்ள தண்ணீரை நிலத்திற்குப் பாய்ச்சவேண்டும். நிலத்தில் சிறந்த விதைகளையே தெளிக்கவேண்டும். சமையல் செய்வதற்கு வைக்கோலை உபயோகப்படுத்தவேண்டுமே யல்லாது சாணி வறட்டிகளை உபயோகிக்கக்கூடாது. ஒருவரும் சோம்பேறித்தனமாகயிருக்கக்கூடாது. நிலத்தில் கிடைக்கும் லாபத்தை முதலில் சாகுபடி செய்தவர்களை அடையவேண்டும்.

தேசிய பொருளாதார முறையில் பூமியைச் சிதைவுறாமல் நாம் பரிபாலித்துவிட்டோமானால் மற்ற விளைவுகள் தானாகவே சித்தித்துவிடும். இந்தியர்கள் இந்தியத் தாயான பூமியின்பேரில் அதிக அக்கரை காட்டினால் இந்தியாவின் அநேக பிரச்னைகள் தானாகவே தீர்ந்துவிடும்.

---

## தளபதி, ஜெனரல் ஸர் கிலாட் ஆசின்லெக் இந்திய யுவர்களுக்கு விடுத்த அறிக்கை.

ராணுவத்தில் உயர்ந்த பதவிகளில் நியமிப்பதைப் பொருத்தவரையில், எனக்கு அதிகப்பட்ட இந்திய யுவர்கள் தேவையாயுளர். எத்தனை இந்திய யுவர்கள் வந்தாலும், அவர்கள் தக்கவராய், யுத்தத்தில் சேனையை நடத்தவும் தலைமையாயிருக்கவும் தகுந்தவர்களாய் இருப்பின், அவர்களையெல்லாம் உயர்ந்த பதவிகளுக்கு எடுத்துக்கொள்வேன்.

தைரியமும், உடல் பலமும் மட்டும் இக்காலத்தில் ஒரு உத்தியோகஸ்தனுக்கு இருப்பின் அது மட்டும் போதாது. அந்த உத்தியோகஸ்தனுக்கு போதிய படிப்பும் வேண்டும். இல்லையெனில் தன்னை திறனுடையவனாக செய்துகொள்ளமுடியாது. திறமற்ற ஒரு தலைவனின் கீழ் நம் சைனியத்தின் உயிர்கள் என்றால் ஒப்படைக்க முடியாது. நம் சைனியத்தில் சேர்ந்தோர்கள் எல்லாம், நல்லோராய், திறம்படைத்தோராய் உளர். அவர்களை இம்மாதிரியான திறமற்ற தலைவர் கீழ் விடுத்து அவர்களை சேதப்படுத்த முடியாதபடி அத்தகைய உயர்ந்தவர்களாகும் இவர்கள்....



கல்வியறிவின்றி தைரியம் மட்டும் ஒருவனைத் தலைவனாக்காததுபோல, கல்வியறிவைமட்டும் கொண்டு, தைரியமும், உடல்வலிமையும், தன்னைத்தானே அடக்கும் திறனும், ஒழுங்கும், சுயமரியாதையும் அற்ற ஒருவன தலைவனாகமுடியாது என்பதையும் மறந்துவிடாதீர்கள்.

உங்கள் விலாசத்தில், அறிக்கையில், உங்களினுடையவும், இந்தியாவிலுள்ள கடற்படை, விமானப்படை, தரைப்படை இவைகளுக்கு ஆட்களை அனுப்பியும், யுத்தமிட்டுகொண்டிருக்கும் வகுப்பினரின அக்கரையையும் கவனிக்குமாறு கூறுகிறீர்கள்.

இந்தியாவிலுள்ள இந்தப் படைகள் எதிரி நிர்மூலமாக்கப்பட்டு, சமாதானம் ஏற்பட்டபின், என்னவாகுமென்று எனக்குத் தெரியாது. ஆனால் நல்ல பணிதலும், தைரியமும் உள்ளவர் எவராகிலும், வந்து சேர்ந்தோர்களுக்கு, கடற்படை, தரைப்படை, விமானப்படை இவைகளில் வேலைசெய்ய நல்ல வசதியுள்ளது என்பது மட்டும் நிச்சயம்.

ஐக்கியமே பலம் என்பதை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். இவ்வளவு பெரிய தேசமான இந்தியாவில, உதாரணமாக பஞ்சாப் என்ற ஒரு மாகாணத்திலேயே, பலவித வகையினரான மனிதர்கள் உளர். எல்லா வகையினரும் ஒன்று சேர்ந்துதான் இவ்வுலகம் ஆகிறது.

இந்த ஜில்லா, இந்த மாகாணம், இந்த தேசம் முன்னேற்றமடையவேண்டுமானால் பொறுமையும், விட்டுக்கொடுத்தல் என்ற குணங்களும் மெத்த அவசியம். நாம் எல்லோரும் இதனைப் பழக்கப்படுத்தவேண்டும். நாம் ஜயமடையவேண்டுமாய் நம் எல்லோரின் ஒன்றுபட்ட பலம் மெத்த அவசியமானது. இதனை நம்முள் சச்சரவிட உபயோகப்படுத்தக் கூடாது.

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டென்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

### புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

#### பிரஸங்கம் 205. (3-வது பிரிவு).

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 8- 7-44 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை 6.00 | | 12- 7-44 | மழையூர் | ... மாலை 7.00 |
| 9- 7-44 | சூரக்காடு | ... ,, 7.00 | | ,, | கரம்பக்குடி | ... ,, 7.30 |
| ,, | கோட்டைக்காடு | ... ,, 7.30 | | 13- 7-44 | வாளரமாணிக்கம் | ... ,, 7.00 |
| 10- 7-44 | தென்னதிரயன்பட்டி | ... ,, 7.00 | | ,, | ஏம்பல் | ... ,, 7.30 |
| ,, | விசலூர் | ... ,, 7.30 | | 14- 7-44 | விராலிமலை | ... ,, 7.00 |
| 11- 7-44 | ராமச்சந்திரபுரம் | ... ,, 7.00 | | ,, | பொருவாய் | ... ,, 7.30 |
| ,, | ராயவரம் | ... ,, 7.30 | | | | |

#### பிரஸங்கம் 206. (4-வது பிரிவு).

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 15- 7-44 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை 6.00 | | 19- 7-44 | நார்த்தாமலை | ... மாலை 7.00 |
| 16- 7-44 | கீரப்பழனி | ... ,, 7.00 | | ,, | உப்பிலியக்குடி | ... ,, 7.30 |
| ,, | ஆலூர் | ... ,, 7.30 | | 20- 7-44 | அண்டக்குளம் | ... ,, 7.00 |
| 17- 7-44 | புத்தாம்பூர் | ... ,, 7.00 | | ,, | கிள்ளனூர் | ... ,, 7.30 |
| ,, | மூட்டாம்பட்டி | ... ,, 7.30 | | 21- 7-44 | புலியூர் | ... ,, 7.00 |
| 18- 7-44 | வடவாளம் | ... ,, 7.00 | | ,, | கண்ணங்குடி | ... ,, 7.30 |
| ,, | சம்மட்டிவிடுதி | ... ,, 7.30 | | | | |

#### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 8— 7—44 | திருமெய்யம். | 15— 7—44 | வெட்டம்விடுதி. |
| 9— 7—44 | ஏம்பல். | 16— 7—44 | விராச்சிலை. |
| 11— 7—44 | பேராம்பூர். | 18— 7—44 | கோனபட்டு. |
| 12— 7—44 | ஆலங்குடி. | 20— 7—44 | கிழாநிலை. |
| 14— 7—44 | பனசோட்டை. | 21— 7—44 | [illegible] |

# குப்பனும் சுப்பனும். (4)

*(By Mr. S. Panchapagesan, Director Sri Brahadambal Gana Sabha, Pudukkottai).*

(Contributed For National War Front Propaganda).

## "VILLAGE UPLIFT (BETTER HOMES)".

(குப்பனும், சுப்பனும் சந்தையில் சந்தித்தல்).

குப்பன்.—வாண்ணே! எங்கணே போன வாரங்க காணமே.

சுப்பன்.—நாம ஏக்கனவே ரோசிச்ச சங்கதியே அண்ணே மறந்துட்டாப்லே இருக்குது.

கு.—என்னுங்க.

சு.—நாம இனிமே கொச்சையா பேசக்கூடாதுன்னு பேசிக்கிட்டமே.

கு.—ஓ! அதுங்களா சுத்தனமா மறந்துட்டேனுங்க. அது சரிங்க கொஞ்ச நேரத்துக்கு முன்னடி "ஏக்கனவே" 'ரோசிச்ச' இதுங்கள்ளாம் நீங்களே சொன்னீங்களே.

சு.—மன்னிக்கவும். முதல்லே நீங்க "எங்கணே"ன்னு ஆரம்பித்ததால் மறந்து வாய்தவறி வந்துவிட்டது. இனிமேல் ஜாக்கிரதையாகப்பேசுகிறேன்.

கு.—நானும் அவ்விதமே செய்கின்றேன். நீங்க என்னமோ ஒரு திட்டம் போடணும்னு சொன்னீங்களே.

சு.—ஆமாங்க இப்படி உட்கார்ந்துகொண்டு பேசுவோம். (இருவரும் உட்கார்தல்).

சு.—நமது கிராமங்களில் முதலில் வீடுகள் அமைத்தல் பற்றி எடுத்துக்கொள்ளுவோம்.

கு.—புதிதாகக்கட்டுவதா?

சு.—இல்லை இருக்கிற வீடுகளும் சரி, இனிப்புதிதாகக் கட்டும் வீடாகயிருந்தாலும் சரி, அவைகள் மூன்று வித சாதனங்களுக்கு உட்பட்டிருக்கவேண்டும்.

கு.—என்ன மூன்றுவித சாதனங்கள்?

சு.—முதலாவது, நல்ல வெளிச்ச முள்ளதாகயிருக்க வேண்டும். இரண்டாவது, நல்ல காற்றோட்டத்திற்கு வசதியாகயிருக்கவேண்டும். மூன்றாவதாக, அடசல்களில் லாமல் சுத்தமாக வைத்திருக்கவேண்டும்.

கு.—நீங்கள் சொல்லவது சரிதான். இந்த மூன்று சாதனங்களும் கூடிய வீட்டில் வசிப்பவர் களுக்கு வியாதி யணுகாது.

சு.—நமது கிராமங்களில் சாதாரணமாக வீடுகளுக்கு ஜன்னலே வைப்பது கிடையாது. அப்படித் தப்பித்தவறி யிருந்தாலும் அது சுவற்றில் மார்பு மட்டத்திற்குமேல் தானிருக்கும்.

கு.—அது சரிதானே. ஜன்னல் கீழாகயிருந்தால் திருட்டு பயம் ஏற்படுமே.

சு.—திருட்டு பயம் என்றால் ஜன்னலால்தான் வற வேண்டுமா? திருட்டுப்போகவேண்டு மென்று ஒருவனுக்கு ஏற்பட்டிருந்தால் திருடன் கூரையைப் பொத்துக் கொண்டாவது வந்து, கொண்டுபோய் விடுவான். இல்லாவிடில் வாயிற்படி வழியாகவே உள்ளே நுழைந்து இருட்டிடங்களில் மறைந்திருந்து கொண்டுபோய் விடுவான்.

கு.—அதுவும் சரிதான். அப்படியும் செய்யக்கூடும்.

சு.—அதனால் ஜன்னலிருந்தால் மட்டும் திருடனுக்குச் சாதகம் என்று தீர்மானிக்கக்கூடாது. தவிற ஜன்னலில்லாமலிருந்தால்தான் அவனுக்கு ரொம்ப சாதகம்.

கு.—அது எப்படி?

சு.—ஜன்னலில்லை யென்றால் இருட்டு. அவன் எவ்விடம் மறைந்திருக்கிறான் என்பது நமக்கு புலப்படாது.

கு.—அதனாலே?

சு.—அதனாலே நம்மவீட்டு ஜன்னல்களைப் பெரியதாகவும் நமது வீட்டின் அறைகளின் தரை மட்டத்திற்குமேல் ஒரு அடி உயரத்தில் வைத்தால் வெளிச்சமும் நன்றாகத் தெரிவதுடன் காற்றோட்டமும் நன்றாக ஏற்படும்.



கு.—ஆனால் ஜன்னல் இருப்பதனால் காற்றோட்டம், வெளிச்சம் திருடர் பயமில்லாதிருத்தல் ஆகிய மூன்றுவித சௌகரியங்கள் ஏற்படுகிறது போலிருக்கின்றதே.

சு.—அதற்கென்ன சந்தேகம்.

கு.—சரி, சுத்தமாயிருக்கவேண்டு மென்று சொன்னீர்களே. தினந்தோறும் உடம்பு குளிச்சு நல்ல உடை உடுத்திருக்கவேண்டியதுதானே.

சு.—அது மாத்திரமில்லை. சுத்தமென்றால்:

(1) நமது தேகத்தைதப்பற்றின சுத்தம்.

(2) உபயோகமில்லாத கந்தைத்துணிகள், கண்டனம் செய்யப்படும் சாமான்கள், இவைகளை அப்புறப்படுத்துதலினால் ஏற்படும் சுத்தம்.

(3) கழிவுத் தண்ணீரை அப்புறப்படுத்துதலினால் ஏற்படும் சுத்தம்.

(4) மலஜல விஸர்ஜ்ஜனத்தினால் ஏற்படும் சுத்தம், என நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்.

கு.—ஏது. ரொம்ப சங்கதிகள் தெரிஞ்சு வச்சிருக்காப்லே இருக்கிறதே.

சு.—இதுகளை யெல்லாம் நானாகவா சொல்கிறேன். அப்போதைக்கப்போது அதிகாரிகள் சொன்ன சமாசாரங்களை வைத்துக்கொண்டு எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துத் தான் சொல்லுகிறேன்.

கு.—இருந்தாலும் மனதுக்குப் புரியராப்போலே ரொம்பவும் நன்றாகத்தான் சொல்கிறீர்கள். சொல்லுங்கள்.

சு.—நமது தேக சுத்தத்திற்கு பிரதி தினமும் நன்றாக அழுக்குப்போகத் தேய்த்து ஸ்நானம் செய்யவேண்டும். குழந்தைகளையும் அது மாதிரியே பெண் பிள்ளைகள் ஸ்நானம் செய்யும்போது தேய்த்துக் குளிக்கச் செய்யவேண்டும். நாம் உடுக்கும் ஆடைகளை அழுக்குப்போகத் தோய்த்து வெயிலில் உலர வைத்துக்கட்டவேண்டும். நமது வீட்டுப் பெண் பிள்ளைகளுக்கு நமது குழந்தைகளைக் கவனிக்கத்தக்கப் போதுமான அவகாசம் கொடுக்கவேண்டும்.

கு.—சரி. அப்புறம் இரண்டாவதாகச் சொன்னீர்களே அது எப்படி?

சு.—உபயோகமில்லாத கந்தை, கடுதாசு, வைக்கோல்களை வீட்டின் கொல்லையில் வெகு தூரத்தில் அதிக ஆழமில்லாத குழி ஒன்று வெட்டி அதில் கொட்டிவிட வேண்டும். வாரம் ஒரு முறை அவைகளை நெருப்பு மூட்டி எரிக்கவேண்டும்.

கு.—இப்பத்தான் கடுதாசுக் கிழிசல்களை பவுண்டு முக்காலணவுக்கு ஸர்க்கார்லே எடுக்கிறார்களே

சு.—ஆமாம் அதை மறந்து விட்டேன். கடுதாசுத்துண்டுகளை அவ்விதம் பணமாக்கி விடலாம். ஆனால் கிழிசல் துணிகள் கந்தைகள் முதலியவைகளை எரித்துவிட வேண்டும். இரண்டாவதாகத் தழைகள், ஆடுமாடுகளின் எருக்கள் இவைகளையும் கொல்லைப் புறத்தில் சற்று ஆழமான குழி ஒன்றை வெட்டி, அதில் கொட்டி வரவேண்டும். அதில் தண்ணீர் விழுந்து நாற்றமெடுக்காமல் மண்ணை லேசாக அவைகளின் மீது கொட்டி மூடிவிட வேண்டும். இவ்விதம் எருக்களைச் சேமிப்பதால் நிலத்திற்கும் நல்ல எருவாகும். வீடுகளும் சுத்தமாக யிருக்கும்.

கு.—ஏற்கனவே இதைப்பற்றி விஸ்தாரமாகப் பேசிக் கொண்டோமே.

சு.—ஆமாம் அவ்வளவுதான். மூன்றாவதான கழிவுத் தண்ணீர் விஷய மென்ன வென்றால் நாம் குளித்தலினால் வரும் தண்ணீரையும் வீட்டினுள்ளிருந்து வரும் சாக்கடை ஜலத்தையும் தங்கவிடக்கூடாது. தண்ணீர் தங்கினால் கொசுக்களுக்கு இருப்பிடமாகி விடும். அதனால் கட்டடத்தால் சாக்கடைபோல் கட்டி அதை வீட்டுக்கொல்லையில் 20 அடிக்கப்பால் கொண்டுபோய் விட்டுவிட வேண்டும்.

கு.—நம்ம கிராமங்களில் டவுன்களிலிருப்பது போல் கழிவுநீர் போகும் வசதி (drainage) கிடையாதே.

சு.—இல்லாவிட்டால் என்ன. நாம் அந்தக் கழிவு நீரையும் வீணாக்காமல் நல்ல பலன் தரும் மரங்களை பயிர் செய்து அதில் இந்தச் சாக்கடையைத் திருப்பிவிட்டால் போகிறது. அதனால் நமது கொல்லைகளும் நிழல் தரும் மரங்களைப் பெறுவதுடன் அம்மரத்தின் பலனையும் நாமடையலாம்.

கு.—அதுமாதிரி செய்தால் மரத்தடியில் தண்ணீர் தங்குமே.

சு.—அதற்காகத்தான் வீட்டிற்கு வெகுதூரத்தில் இம்மாதிரி மரங்களைப் பயிர் செய்ய வேண்டும். தவிரவும் ஜலம் ஒரே இடத்தில் தங்காமல் பரவலாகப் பாயும்படி விடவேண்டும்.

கு.—சரிதான் கழிவு தண்ணீர் விஷயம் அவ்வளவுதானே.

சு.—ஆமாம் அது அவ்வளவுதான். இனி நான்காவதான மலஜல விஸர்ஜ்ஜனத்தைப் பொறுத்தது. பொதுவாகக் கிராமங்களில் குழந்தைகளைக் கண்ட இடங்களில் மலம் கழிக்க உட்காரவிடக்கூடாது. வீட்டின் கொல்லைப் புறத்தில் சற்றுத் தள்ளியே சிறு சிறு குழிகளாக வெட்டி அதில் மல விஸர்ஜ்ஜனம் செய்ய வேண்டும். அதை அப்படியே திறந்து வைத்துவிடாமல் மண்ணைமேலாகப் போட்டு உடனே மூடிவிட வேண்டும்.

கு.—ஆமாம் அப்பொழுதான் வாடையிருக்காது.

சு.—அது மாத்திரமில்லை. ஈக்கள், கொசுக்கள் இவைகளுக்கு இருப்பிடமாயிருந்து தொத்து வியாதிகளை பறவ வொட்டாமலிருக்கும். தவிர தண்ணீர் இல்லாத காலங்களில் தண்ணீர் வரத்து வாரிகளிலோ அல்லது வாய்க்கால்களிலோ உட்கார்ந்து மலம் கழிக்கக்கூடாது.

கு.—அதுவும் உண்மைதான்.

சு.—இவைகளைத் தவிர நமது ஊணிகளையும், குளம், குட்டைகளையும் சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும். கண்டபடி மாடுகளை குளியாட்டியும், மட்டைகளை ஊற வைத்தும் தண்ணீரைக் கெடுக்கக்கூடாது.

கு.—ஆமாம் அதுவும் ரொம்ப முக்யமான விஷயம்தான்.

சு.—கிணறுகளுக்குக் கைப்பிடிச் சுவர், அதைச் சுற்றிலும் உயர்ந்த கட்டடம், கழிவுத் தண்ணீர் போக கல்லினால் கட்டிய சாக்கடை இவைகள் அவசியம். இந்தக் கழிவுத் தண்ணீரும் ஒரு குளம் அல்லது குட்டைக்குப் போய்ச் சேரும்படி விடக்கூடாது.

கு.—அது சுலபமாக ஏற்கனவே சொன்னபடி நல்ல மரங்களை வைத்துப் பயிராக்கினால் போரது.

சு.—ஆம் அப்படித்தான் செய்யவேண்டும் தவிரவும் குட்டை, குளம் இவைகளுக்குக் கிராமத்தின் பக்கத்தில் நல்ல கெட்டிக்கரையாகப் போட்டு கிராமத்திலிருந்து வரும் மழைத்தண்ணீரோ மற்றெந்தத் தண்ணீரோ அவைகளுக்குச் செல்லாமலிருக்கும்படி செய்யவேண்டும்.

கு.—சரி அவ்வளவுதானே.

சு.—இன்னும் காளவாய், புதைகுழி, முதுகாடு, இவைகள் ஊருக்குச் சுமார் அரை மைலுக்கப்பாலேயாவது தள்ளியிருக்கவேண்டும்.

கு.—அப்படி இருக்கவேண்டியதுதான்.

சு.—தவிர, ஒவ்வொரு கிராமத்திலும் சிறு பையன்கள் விளையாடுவதற்கு விஸ்தாரமான விளையாட்டிடம் ஒன்று வேண்டும். அதில் அவர்கள் பலிஞ்சடுகுடு, கோலி, கண்ணு மூச்சி, கிட்டிப்புள், பச்சைக்குதிரை முதலிய நமது கிராமாந்திர விளையாட்டுகளை விளையாடச் செய்யவேண்டும்.

கு.—ஆமாம், வீட்டில் குறும்பு பண்ணாமல் இருக்க இதுவும் ஒரு நல்ல வழிதான். அதோடு விளையாடுவதனால் நல்ல பசியும் ரத்த ஓட்டமும் ஏற்படுமென்று சொன்னீர்களே.

சு.—அதான் சமாசாரம். தவிர இன்னொரு முக்யவிஷயம் என்னவென்றால் நமது கிராமாந்திர ரஸ்தாக்களை அப்போதைக்கப்போது சீர்திருத்தி நல்ல ஸ்திதியில் வைத்துக் கொள்ளவேண்டும். கூடுமான வரையில் ரஸ்தாக்கள் அகலமாகவும் நடுவில் மேடாகவும் இரண்டு பக்கங்களிலும் சரிவாகவுமிருக்கவேண்டும்.

கு.—ரொம்ப இடங்களில் நடைபாதை பள்ளமாயும், மழைத் தண்ணீர் போகும் சாக்கடையாகவும் உபயோகப்படுகிறது.

சு.—அதுதான் கூடாது. தவிர வயல் பக்கத்தில் ரஸ்தாயிருந்தால் அதிலிருந்து மண்ணை வெட்டி வயல்களுக்கு வரப்புகள் போடக்கூடாது. ரஸ்தாவின் இரு புறங்களிலும் மழைத்தண்ணீர்போக சரிவாகக் கால் வெட்டியிருக்கவேண்டும்.

கு.—இதுமாதிரி யெல்லாம் நம்ம கிராமங்களில் கவனிச்சச் செய்யணுமே.

சு.—அதற்காகத்தான் பஞ்சாயத்தார் வேண்டுமென்று ஏற்கனவே பேசிக் கொண்டோமே அதின்படி நியமிக்க வேண்டும்.

கு.—ஆமாம் வேண்டியதுதான் ரொம்பவும் பொறுப்பான காரியங்கள் நமது கிராமத்தார்களுக்கு யிருக்கின்றது

சு.—இல்லாவிட்டால் நாம் எவ்விதம் முன்னேற்றமடைவது.

கு.—சரிதான்.

சு.—ரொம்பவும் நாழிகையாகிவிட்டது. நான் ஊருக்குப் போய்விட்டு வரேனுங்க.

கு.—சரி. பாக்கியை அடுத்தவாரம் கவனிப்போம்.

[இருவரும் செல்லல்] (தொடரும்).

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—12-7-44.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1944-ம் ஆகஸ்டு 5உ [ந. 209

**அடுத்தவாரம் முதல் யுத்தத்திற்குப்பின் செய்யவேண்டிய புனருத்தாரண வேலையைப்பற்றிய கட்டுரை இந்த சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும்.**

—பத்திராதிபர்.

தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CCIX.

## ஜெர்மானியர்களுக்கு பிரசாரம்.

### நாஸித்தலைவர்களின் கவலை.

(டைம்ஸ் பத்திரிகை).

ஜெர்மனிக்குக் கிடைத்த தோல்விகளை இனிமேல் ஜெர்மானியர்களுக்கு மறைத்துச் சொல்லமுடியாது.

இவ்வருஷம் வேனிற்காலத்தில கிழக்குப் போர்முனையைப்பற்றியும் வரப்போகும் படையெடுப்பைப்பற்றியும் ஜெர்மன் அதிகாரிகள் என்ன நினைத்தார்களென்பதைச் சொல்ல முடியாது. ஏதாவது ஒரு போர்முனையில் தோல்வியைத் தவிர்த்து விடலாமென்று ஜெர்மனி நம்பியிருந்தது. இரண்டு போர்முனைகளே ஜெர்மனிக்கு பாதகமானது. படைபலத்தில் சாம்யமிருப்பதால் ஒரு போர் முனையிலிருந்து மற்றொரு போர்முனைக்குத் துருப்புகளைச் சலனம் செய்வது இயலாது. மேலும் போக்குவரத்து மார்க்கங்கள் நொருக்கப்பட்டதால் சிரமம் அதிகரித்துவிட்டது.

மேலும் இதாலியப் போர் ஜெர்மனியின் பலத்தையும் புகழையும் பலமாக அழித்து வருகிறது. டோஜோவின் மந்திரிசபை வெளியேறியபின் ஜப்பானிலும் கிலி அதிகரித்திருக்கிறதென்று புலப்படுவதால், அதுவும் ஹிட்லருக்குத் தைரியம் ஊட்டக்கூடவில்லை.

ஜூலை 19-ம் தேதி பொருளாதார யுத்த மந்திரி ஆற்றிய சொற்பொழிவில் நேசதேசத்தாக்குதலை சமாளிக்க ஜெர்மனியிடம் போதுமான ஐச்வரியமில்லை என்றுருஜுவாகிறது.

டாங்கி, கவசம்பூண்ட வண்டிகளின் உற்பத்தி குறைந்துவிட்டது. இரு போர்முனைகளிலும் உபயோகிக்கப்படும் பீரங்கிகளும், மற்ற சில்லரை ஆயுதங்களும், வெடிமருந்துகளும் பரிமாணத்திலும், தரத்திலும் சிலாக்கியமானவையல்ல. ஜெர்மன் விமானப்படையும் குறைந்துவிட்டது. உற்பத்திகள் வேறு அலுவல்களில் பிரயோகிக்கப்படுகிறதென்று சொல்லுவது சரியான முகாந்திரமல்ல. எண்ணெய் நெருக்கடியும் உண்டாகிவிட்டது. ஜெர்மன் எண்ணெய் சுத்திகரிக்கும் சாலைகள் இப்பொழுது 30 சத விகிதம்தான் வேலைசெய்கின்றன என்று அமெரிக்க விமானப்படைத் தலைவர் சில வாரங்களுக்குமுன் சொன்னார். மேலும் வாயுவினால் ஓடும் வண்டிகளுக்கு உபயோகப்படும் மொரும்பைத் தயாரிக்கும் ஜெர்மன் தொழிற்சாலைகள் ருஷ்யர் வசமாகிவிட்டன.

ஜெர்மன் பத்திரிகைகளும் வெயர்லஸ்ஸும் பொதுமக்களின் மனஉறுதியைப் பலப்படுத்தச் செய்துவரும் முயற்சிகளிலிருந்து ஜெர்மன் தலைவர்களுக்கு கவலை அதிகரித்துவிட்டதென்று அறியக்கூடும். யுத்த நிலைமை பயங்கரமாகயிருக்கிறதென்றும் இந்த சமயத்தில் ஜனங்கள் அதிக தியாகங்களைச் செய்யவேண்டுமென்றும் வற்புறுத்தப்படுகிறது.

ஜெர்மனியின் தோல்வியென்பது அழிவு என்று பிரசாரம் செய்யப்படுகிறது. ஜெர்மன் மக்களிடம் தோன்றியிருக்கும் கதியின்மையையும் அருவருப்பையும் அகற்ற ஜெர்மன் தலைவர்கள் கடும் பிரயாசை எடுத்துக்கொள்ளுகிறார்கள்.

நாஸிகள் பிரசார முறையை மட்டும் கையாளுவதில்லை. 10 வருடங்களாக ஜெர்மனி பலமான அடக்குமுறைக்குட்பட்டிருந்தது. யுத்தத்தில் தோல்வி ஏற்பட்டால் அதிலிருந்து ஏற்படும் அதோகதியையும் நாஸிகளுக்குக் கீழ்படியாவிட்டால் அதிலிருந்து ஏற்படும் தீங்கையும் கண்டு ஜெர்மன் மக்களுக்கு திகைப்பு உண்டாகியிருக்கிறது. முற்றிலும் சளைத்துப்போன தேசம் இன்னும் அதிக தியாகங்களைச் செய்யவேண்டுமாம். அவர்கள் வெடிகுண்டு வீச்சுக்குட்படவேண்டியிருக்கிறது. மேற்கிலும் கிழக்கிலும் எதிரிகள் ஜெர்மன் எல்லைச் சரகத்தை நோக்கி உறுதியாக முன்னேறுகிறார்கள்.

ஆகிலும் 1918-ம் வருஷத்தைப்போல உணவுப்பொருள் குறைவும், வருமைக்கொடுமையும் ஜெர்மனியில் ஏற்படவில்லை. நாஸிகள் ஏற்பாடாக உணவுப் பொருள்களை வழங்கி அடக்குமுறையை பகிஷ்காரமாக கையாளும் வரையில் உள்நாட்டு நிலைமையை அவர்கள் சமாளித்து வருவார்கள். நேசதேசத்தார்கள் எதிரியைப் போரில்தான் முறியடிக்கவேண்டும்.

ஆகிலும் நேசதேச வெற்றி பீதியும், ஜெர்மன் ரகசியப் போலீஸின் அடக்குமுறையும் ஜெர்மன் மக்களின் யுத்த முயற்சியை அதிகப்படுத்திவிட முடியாது. ஆகையால் நாஸி பிரசாரர்கள் நம்பிக்கையை உண்டாக்கும் சம்பவங்களைக் கண்டுபிடிக்க முயலுகிறார்கள். ஜெர்மன் சேனையின் சௌர்யத்தை மறுபடியும் நிலைநாட்ட முடியாதென்று மதித்து ஜெர்மன் மக்களிடையே நம்பிக்கையை விருத்தி செய்ய பறக்கும் வெடிகுண்டுகள் போன்ற அநேக கோரமான ஆயுதங்களை ஜெர்மனி உபயோகித்துவருகிறது. பறக்கும் வெடிகுண்டுகளின் விளைவாக பிரிடிஷ் மக்களின் மனஉறுதி கலங்கிவிட்டதென்பது ஒரு புறமிருக்க, போர் முனைக்கு அனுப்புவதற்கு இங்கிலாந்தில் சேமித்துவைத்திருந்த ராணுவ முஸ்தீப்புகளுக்குத்தான் அதிக நாசம் ஏற்பட்டதென்று சொல்லப்படுகிறது.

இன்னும் சிறிதுகாலம் ஜெர்மனி சமாளித்து நின்றால் புதிய ஆயுதங்கள் உற்பத்தி செய்யப்பட்டு நிலைமை தலைகீழாக மாறிவிடும் என்று ஜெர்மன் பத்திரிகைகளும் ஒலிபரப்பும் கோஷிக்கின்றன. இத்துடன் நேசதேசத்தார்களிடையே வேற்றுமை ஏற்பட்டுவிட்டதென்றும் மற்றும் சில ராஜீய விஷயங்கள் காலக்கிரமத்தில் ஜெர்மனிக்கு சாதகமளிக்கக்கூடுமென்றும் ஜெர்மன் வியாக்யானிகள் சொல்லுகிறார்கள். ஜெர்மனியின் பேராசைக்கும் அகாரதிக்கும் தகுந்த சிக்ஷாகாலம் வந்துவிட்டதால் அந்தசாயை ஜெர்மன் பிரசாரத்வனியில் காணப்படுகிறது. ஜெர்மனி வெற்றியை இழந்துவிட்டது. தோல்வி நிச்சயம் என்று ஏற்பட்டுவிட்டது. இந்த தத்வபோதத்திலிருந்து அகாரணமாகவும் கண்மூடித்தனமாகவும் கொடுமை விளைவிக்கப்படுகிறது. இவ்விதமாக பிரான்ஸில் ஓரடோர்—சூர்—கிளேன் என்ற கிராமம் அழிந்தது. இந்த அதிக்கிரமங்கள் ராணுவ நடவடிக்கைகளையும் ஜெர்மனியின் இறுதி வீழ்ச்சியையும் குற்றவாளிகளை சிக்ஷைக்குட்படுத்துவதையும் ஒத்திவைக்க முடியாது. இதிலிருந்து ஜெர்மனியின் பீதியும் ஜெர்மனியின் நிர்கதியும் வெளிப்படுகிறது.



# வார யுத்தச் செய்திகள்.

## (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 23—7—44 (ஞாயிற்றுக்கிழமை). | மாக்ஷிமை தங்கிய மன்னர்பிரான் அவர்கள் இதாலியிலுள்ள படைகளைப் பார்வையிடச் செல்லுகிறார். |
| 24—7—44 (திங்கட்கிழமை). | ருஷ்யர்கள் லப்ளினை ஆக்கிரமித்தார்கள். |
| 25—7—44 (செவ்வாய்க்கிழமை). | ருஷ்யர்கள் போலந்தில் பிரதேசங்களைக் கவரவில்லையென்று உறுதிகூறுகிறார்கள்.<br>நேசதேச கடற்படை சுமத்ராவுக்கு வடமேற்கிலுள்ள ஸாபாங் பேரில் பீரங்கி பிரயோகம் செய்தது. |
| 26—7—44 (புதன்கிழமை). | ருஷ்யர்கள் எஸ்தோனியாவிலுள்ள நார்வாவைப் பிடித்தார்கள்.<br>சீனர்கள் சைனுவில் லெயாங்குக்குள் புகுந்தார்கள். |
| 27—7—44 (வியாழக்கிழமை). | நாஸிப் படைகள் நார்மண்டியில் பின்வாங்கின.<br>ருஷ்யர்கள் லுவாவ், பியாலிஸ்டாக், ட்வின்ஸ்க், ஸ்டானிஸ்லாவௌ, ஸியாலூல்டியைக் கைப்பற்றினார்கள். |
| 28—7—44 (வெள்ளிக்கிழமை). | செம்படை பிரெஸ்ட்லிடாவ்ஸ்கைப் பிடித்தது.<br>நேசதேசப் படைகள் பிரான்ஸில் ஸெயிண்ட் லோவுக்குத் தெற்கில் முன்னேறுகின்றன. |
| 29—7—44 (சனிக்கிழமை). | அமெரிக்க சூபர் பறக்கும் கோட்டை விமானங்கள் மஞ்சூரியாவில் மூக்டன் பேரிலும், சைனுவில் டியண்ட்ஸின் பேரிலும் வெடிகுண்டுகளைப் போட்டன.<br>நேசதேசப் படைகள் நார்மண்டியில் கௌடன்ஸெஸ்ஸைப்பிடித்தன. |
| 30—7—44 (ஞாயிற்றுக்கிழமை). | நேசதேசப் படைகள் நார்மண்டியில் காமெண்ட் பகுதியில் புதிய தாக்குதலைத் துவக்கின.<br>இந்தோ-பர்மா எல்லையில் சில்சார் ரஸ்தாவிலிருந்து எதிரிகளை நேசதேசப் படைகள் பூராவாகத் துறத்திவிட்டார்கள். |
| 31—7—44 (திங்கட்கிழமை). | அமெரிக்கர்கள் அவ்ராஞ்சஸ்ஸையும், கிரான்வில்லியையும் பிடித்தார்கள்.<br>கடற்தளபதி சர். B. A. பிரேசர் தூரக்கிழக்கு கடற்படைகளுக்கு தளகர்த்தராக நியமிக்கப்பட்டிருக்கிறார். |

## (B)-செய்திச் சுருக்கம்.

**ருஷ்யா.**—ருஷ்யர்கள் வடக்கு, மத்திய, தெற்குப் பகுதிகளில் போரைத் துவக்கிவிட்டார்கள்.

**வடக்கில்.**—லாட்வியாவிலுள்ள முக்யதளமான ட்வின்ஸ்கும், எஸ்தோனியாவிலுள்ள நார்வாவும், லித்வேனியாவின் தலைநகரமான கோவ்னோ என்ற கௌனஸும் விழுந்துவிட்டன.

**மத்தியில்.**—வார்ஸாவுக்கான போர் துவங்கிவிட்டது. அதன் சுற்றுப்புறத்திலுள்ள பிராகாவும் தாக்கப்படுகிறது.

ஜெர்மன் எல்லைப்புறத்திலிருந்து 20 மைல்களிலுள்ள சுவாகி முக்கோணத்தை ருஷ்யப் படைகள் அடைந்துவிட்டன.

**தெற்கில்.**—செகோஸ்லோவாகியாவை நோக்கி புதிய தாக்குதல் துவக்கப்பட்டிருக்கிறது. கார்பேதியன் மலை அடிவாரங்களில் கடும் போர் நடைபெறுகிறது.

இந்த வாரத்தில் கீழ்கண்ட இடங்கள் பிடிக்கப்பட்டன. மத்திய ஐரோப்பாவுக்கும் பால்கன் நாடுகளுக்கும் வாசற்படி போன்ற துவாவ், வார்ஸாவுக்குப் போகும் வழியிலுள்ள பியாலிஸ்டாக், வார்ஸாவுக்குக் கிழக்கிலுள்ள பிரெஸ்ட்—லிடாவ்ஸ்க், கார்பேதியன் மலை அடிவாரத்திலுள்ள ஸ்டானிஸ்லாவெரி, பெர்ச்மிஸல், ஜாரோஸ்லா.

**பிரான்ஸ்.**—நார்மண்டியிலுள்ள அமெரிக்கப் படைகள் ஸெயிண்ட் லோவுக்குக் கிழக்கிலும் மேற்கிலும் புதிய தாக்குதலை துவக்கிவிட்டார்கள். கிழக்குப் பிராந்தியத்தில் மாண்ட்ராபோட்டும் பியாவிக்கும் பிடிபட்டன. ஸெயிண்டு லோவுக்கு மேற்கில் லெஸ்ஸே, பெரியர்ஸ், பெரிக்னி, ஆவ்ராஞ்சஸ், கிரான்வில்லி, பிரெஸி விழுந்தன.

அவர்கள் சீ நதியை அடைந்துவிட்டார்கள். வில்லடியூ—பார்ஸி—டாஸிப் பகுதியில் கடும் போர் நடைபெறுகிறது. டாஸி—சூர்—வைரியும் பெர்ஸியும் பிடிபட்டன.

பிரிடிஷ் 22-வது சேனை அமெரிக்கர்களுக்கு பதிலாக காமாண்ட். பிரதேசத்தில் ஜூலை 29-ம் தேதியன்று தெற்கிலும் கிழக்கிலும் போர் தொடுத்து பிரெஹால், செரென்ஸஸ், காவ்ரே, டான்டிலாரோகி, பாரட்லிவெக்வே, லெபெனிபோசேஜ் முதலிய இடங்களைப் பிடித்தது. சௌலாவர் நதியை அது தாண்டிவிட்டது. அமெரிக்கப் படைகளுடன் அந்தப் படை ஒன்றுபட்டுவிட்டது. நேசதேசப் படைகள் இப்பொழுது பிரிடானியில் போர் புரிகின்றன.

**இதாலி.**—பிளாரென்ஸுக்காகப் போர் நடைபெறுகிறது. ஜெர்மானியர்கள் ஊக்கமாகச் சண்டை போடுகிறார்கள். நகரத்திற்குத் தெற்கில் 5 மைல் தூரத்தில் கிரெவ் நதியை நோக்கியுள்ள குன்றுகளை 8-ம் படை அடைந்தது.

கீழ் கண்ட இடங்கள் பிடிபட்டன :—

ஆர்னோ போர் முனையில் சான் ரோமானோ, சான்மினியாடோ, பிளாரென்ஸுக்குத் தெற்கிலுள்ள சான் காஸினோ, அட்ரியாடிக் கடற்கரையிலுள்ள செனிகாலியா.

**தூரக்கிழக்கு.**—டினியன் தீவில் ஜப்பானின் எதிர்ப்பு நின்றது. குவாம் தீவில் அபுடா, செசா, ஒரொட் தீபகற்பங்கள் பிடிபட்டன.

சுமத்ராவுக்கு வடமேற்கிலுள்ள ஸாபாங்கும், மஞ்சூரியாவிலுள்ள முக்டனும் வெடி விமானங்களால் தாக்கப்பட்டன.

**சைனா.**—ஹாங்கௌ-காண்டன் இருப்புப் பாதையில் செங்ஷாவுக்குத் தெற்கில் 80 மைல்களிலுள்ள லேயாங்குக்குள் சீனர்கள் புகுந்துவிட்டார்கள். அமெரிக்க வெடி விமானங்கள் இந்த பிராந்தியத்தில் ஜப்பானியப் போக்குவரத்துக்களைத் தாக்கின.

**பர்மா.**—நேசதேசப் படைகள் பலேல்—டாமு ரஸ்தாவில் முன்னேறுகின்றன. டிட்டிம் ரஸ்தாவில் சூரா சண்ட்பூர் பிடிபட்டது. இம்பால்—ஸில்சார் மார்க்கம் சுத்தி செய்யப்பட்டுவிட்டது.

---

## சத்ருக்களுடையவும், சத்ருக்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**23—7—44.** (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.-எண்ணெய் சேமிப்பு டெப்போக்கள்.-டான்ஜெஸ் (Donges).

பறக்கும் வெடிகுண்டு ஸ்தலங்கள்.—வடக்கு பிரான்ஸ் (Northern France).

ரயில் இலக்குகள்.—யுத்தம் நடக்கும் ஸ்தலங்களுக்குச் செல்லும் வழியில்,

எதிரி போக்குவரத்துகள்.—யுத்தம் நடக்கும் அரங்களுக்குப் பின்.

ரயில்வேப் பாலங்கள்.—பாரிஸுக்கு (Paris) அருகில்.

எண்ணெய்த் துவியல்கள், ரயில்வே லயன்கள்.—வடக்கு பிரான்ஸிலுள்ள பல இடங்கள்.



இரவு.—கடற்படை தளம்—கீல் (Kiel).

பேர்லின் (Berlin).

இதாலி (Italy).

போக்குவரத்துகள், ரயில்வே இலக்குகள்.—வடக்கு இதாலி (Northern Italy).

ருஷ்யா ((Russia).

(36 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ரோடா (Rota) மாரியனாஸிலுள்ள தீவு,

ஜப்பானிய சைனியங்கள்.-ஆரோடி (Orote).

தரைப்படைகளுக்கு உதவி.—டிடிம் ரஸ்தா (Tiddim Road).

துருப்பு மோட்டார்ப் போக்குவரத்துகள், துவியல்கள்.—லெகா (Legau).

**24—7—44.** (திங்கட்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—விமான நிலையங்கள்.—தென்மேற்கு ஜெர்மனி (S. W. Germany).

விமான நிலையங்கள், தொழிற்சாலை, ஸ்தாபனங்கள், துறைமுகங்கள், துருப்பு முகாம்கள்.—தெற்கு பிரான்ஸ் (S. France), வட இதாலி (N. Italy), தென் யூகோஸ்லாவியா (S. Yugoslavia).

பால்பேரிங் தொழிற்சாலைகள்.—இதாலியிலுள்ள டூரின் (Turin), பீரட் (Berat).

ராணுவ இலக்குகள்.—புகாரெஸ்ட் (Bucharest).

பூரண உதவி.—பிரான்ஸில் போரிடும் தரைப் படைகளுக்கு எல்லாம்.

இரவு.—இலக்குகள்—பெர்லின் (Berlin), ஸ்டட்கார்ட் (Stuttgart).

பறக்கும் வெடி புறப்படும் ஸ்தலங்கள்.—வடக்கு பிரான்ஸ் (Northern France).

எண்ணெய் சேமிப்பு டாங்கிகள்.-டான்ஜெஸ் (Donges), செயிண்ட் நஸேர் (St. Nazaire)-க்கு அருகில்.

இதாலி (Italy).

போக்குவரத்துகள், ஸப்ளைத் துவியல்கள்.—வடக்கு இதாலி (N. Italy).

ருஷ்யா (Russia).

(36 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய தளம்.—ஹுசைல்லிலுள்ள

ஜப்பானிய ஸ்தாபனங்கள், இலக்குகள்.—நியூ கினி (New Guinea), மாரியனாஸ் (Marianas).

பர்மா (Burma).

விமான நிலையங்கள்.-அமிஸாகன் (Amisakan), ஷ்வேடோ (Shwedo), இண்டா (Indaw).

ஜப்பானிய சைனியங்கள்.—டாங்னி (Taungni).

இலக்குகள்.—மித்கினா (Myitkyina), டிடிம் (Tiddim) ரஸ்தா.

**25—7—44.** (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

(23 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன, 17 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

பகல்.—டாங்கித் தொழிற்சாலைகள்.—ஆஸ்திரியாவிலுள்ள லின்ஸ் (Linz).

ரயில்வே தளங்கள்.—ஆஸ்திரியாவிலுள்ள வில்லியா (Villiach).

பறக்கும் வெடிகுண்டு ஸ்தலங்கள்.—பாஸ் டி கலே (Pas De Calais).

டாங்கிகள், பீரங்கி ஸ்தாபனங்கள், எண்ணெய் துவியல்கள், உதவி டெப்போக்கள், ரயில்வே தளங்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

விமான தளவாட டெப்போக்கள்.-வர்சேல்ஸ் (Versailles).

இரவு.—தொழிற்சாலை இலக்குகள்—ஸ்டட்கார்ட் (Stuttgard).

பேர்லின் (Berlin).

தொடர்ச்சியான எண்ணெய்க் கிணறுகள்.—வான் ஐக்கல் (Wanne Eickel).

பறக்கும் வெடி குண்டு ஸ்தலங்கள்.—வடக்கு பிரான்ஸ் (N. France).

வார்ஸா (Warsaw), டில்ஸிட் (Tilsit).

ரயில்வே லயன்கள், பாலங்கள், ரஸ்தாக்கள், போக்குவரத்துகள், கப்பல்கள், இதர எதிரி ஸ்தாபனங்கள்.—வடக்கு இதாலி (N. Italy) யூகோஸ்லாவியா (Yugoslavia).

ருஷ்யா (Russia).

(35 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

துறைமுகம்.—ஸபாங் (Sabang).

ஜப்பானிய தளங்கள்.—காரோலின்ஸ் (Carolines).

பர்மா (Burma).

வேவு பார்க்கல்.—

தரைப்படைகளுக்கு உதவி.—ஸிடாபூர் (Sitapur) பிரதேசம்.
ரயில்வே லயன்கள்.—தாங்னிக்கு தென் மேற்கு (S. W. of Taungni).

**26—7—44.** (புதன்கிழமை).

### ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—ராணுவ ஸ்தாபனங்கள்—ஆஸ்திரியாவிலுள்ள வியென்னா (Vienna).
பீரட் குவோவ் (Berat Kucove), எண்ணெய்க் கிணறு ஸ்தாபனங்கள்.—அல்பேனியா (Albania).
ரயில்வேக்கள், ரயில்வே தளங்கள், எண்ணெய்க் கிடங்குகள், ஸப்ளை டெப்போக்கள்.—பெல்ஜியம் (Belgium) முதல் லோயர் முகத்துவாரம் வரையில்.
டாங்கிகள், பீரங்கி ஸ்தாபனங்கள், போக்குவரத்துகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.
இரவு.—ஹாம்பர்க் (Hamburg).
சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.
எண்ணெய்க் கிணறு ஸ்தாபனங்கள்.—ருமேனியாவிலுள்ள புலோயெஸ்ட்டி (Ploesti).

### இதாலி (Italy).

கப்பல்கள்.—அட்ரியாடிக் (Adriatic).
பாலங்கள், போக்குவரத்துகள், ஸப்ளைக் கிடங்குகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

### ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.
ரயில்வே ஜங்ஷன்.—டில்ஸிட் (Tilsit).

### தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியக் கப்பற்கூட்டம்.—காரோலைன்ஸிலுள்ள ட்ரக் (Truk).
ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—பாலா (Palau) தீவுக்கூட்டத்திலுள்ள பல தீவுகள்.

### பர்மா (Burma).

ஜப்பானிய சைனியங்கள், முகாம்கள், கிடங்குகள், மோட்டார்ப் போக்குவரத்துகள்.—டாமு (Tamu), காபா (Kabaw), சமவெளி சிண்ட்வின் (Chindwin) பிரதேசம்.
இலக்குகள்.—டிடிம் Tiddim) ரஸ்தா.
ஜப்பானிய சைனியங்கள்.—மித்கினா (Myitkyina).
ரயில்வே இலக்குகள்—மொனிவா (Monywa).

**27—7—44.** (வியாழக்கிழமை).

### ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—தொழிற்சாலைகள்-ஹங்கேரியிலுள்ள புடாபெஸ்ட் (Budapest).
ராணுவ இலக்குகள்.-பிரஸ்ஸல்ஸ் (Brussels), கெண்டு (Ghent).
எதிரி பீரங்கிகள், போக்குவரத்துகள், ரயில்வேக்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.
எதிரிக்கப்பல்கள்.—பாஸ் டி கலே (Pas De Calais) கடற்கரை.
போக்குவரத்து இலக்குகள்.-டுவாய் (Douai) முதல் வென்டோம் (Vendome).
எண்ணெய்க் கிடங்குகள்.—பாண்டெயனெஸ்புளு (Fontainenbleu), ஸெனஞ்செஸ் (Senonches.)
இரவு.—சுரங்கவெடி பாவுதல்—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

### இதாலி (Italy).

எதிரி சைனியங்கள், போக்குவரத்துகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

### ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

### பர்மா (Burma).

படகுகள்.—சிண்ட்வின் (Chindwin).
ரயில்வே தளங்கள்.-மாண்டலே (Mandalay)
ரயில்வே ஸ்டேஷன்.-மொனிவா (Monywa),
கிடங்கு.—மாண்டலேக்கு வடக்கு (N. Mandalay).

**28—7—44.** (வெள்ளிக்கிழமை).

### ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—எண்ணெய்த் தொழிற்சாலைகள்.—மார்ஸ்பர்க் (Morseburg).
ராணுவ இலக்குகள்.—மத்திய ஜெர்மனி (Central Germany).
விமான நிலயங்கள்.—பிரான்ஸ (France).
எண்ணெய்க் கிணறு ஸ்தாபனங்கள்.-ருமேனியாவிலுள்ள புலோயெஸ்டி (Ploesti).
ரயில்வே தலைமை ஆபீஸ்.—கிரீஸிலுள்ள பிளாரினு (Florina).
பாலங்கள், ரயில்வே இலக்குகள், ஸப்ளைக் கிடங்குகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

### இதாலி (Italy).

எதிரி போக்குவரத்துகள், ஸப்ளை லயன்கள்.-வடக்கு இதாலி (N. Italy), யுகோஸ்லாவியா (Yugoslavia).

### ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.
ரயில்வே ஜங்ஷன்.—வார்ஸா (Warsaw), ரெகா (Rega).



### தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியக் கப்பல்கள்.—சிராம்(Ceram) தீவு.
ஜப்பானிய தளங்கள்.—மார்ஷல்ஸ் (Marshalls).

### பர்மா (Burma).

ஜப்பானிய சைனியங்கள்.—டாமு (Tamu), ஹுமைன் (Humine).
இலக்குகள்.—சிண்ட்வின் (Chindwin).
பீரங்கி ஸ்தாபனங்கள், இதர இலக்குகள்.—மித்கினா (Myitkyna).
இலக்குகள்.—டாங்னி (Taungni) முதல் பின்பா (Pinbaw) வரையுள்ள ரயில்வேக்கள்.

**29—7—44.** (சனிக்கிழமை).

### ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

எண்ணெய்க் கிணறு.—மோர்ஸ்பர்க் (Morseburg).
ஸப்ளை டெப்போக்கள்.—வாட்டென் (Watten).
பறக்கும் வெடிகுண்டு ஸ்தலங்கள்.—பாஸ் டி கலே (Pas De Calais) பிரதேசம்.
நாஸி தலைமை ஸ்தாபனம்.-பிரான்ஸிலுள்ள ஸாரிட்னாக் (Soridnac).
ரயில்வே பாலங்கள்.—பாரிஸ் (Paris).
போக்குவரத்துகள், டாங்கிகள், பீரங்கிகள், ஸ்தாபனங்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.
இரவு.—ஜெர்மனியிலுள்ள பிராங்பர்ட்
பறக்கும் குண்டு ஸ்தலங்கள்.—பிரெஞ்சுக் கடற்கரை.

### இதாலி (Italy).

ரயில் ரஸ்தா பாலங்கள், போக்குவரத்துகள், கப்பல்கள், இதர இலக்குகள்.—வடக்கு இதாலி (North Italy), யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

### ருஷ்யா (Russia).

(20 விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

ஸப்ளைக் கிடங்குகள், போக்குவரத்துகள்.—பிரிடிஷ் நியூ கினியா.
இலக்குகள்.—நியூ அயர்லாந்திலுள்ள காவியெங் (Kavieng).
நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul) ஸாலமன்ஸிலுள்ள பொகெய்ன்வில்லி (Bougainville).
ஜப்பானிய சைனியங்கள்.—கூவாம் (Guam).

### பர்மா (Burma).

ரயில்வே லயன்கள்.-மாண்டலே(Mandalay) முதல் இண்டா (Indaw) வரை.
ஜப்பானிய இலக்குகள்.—டிடிம் (Tiddim), ரஸ்தா, காபா (Kabaw), சிண்ட்வின் (Chindwin).
ரயில்வே.—டாங்னி (Taungni), மோன்யின் (Mohnyin).
இலக்குகள்.—மோன்யின் (Mohnyin), ஹாபின் (Hopin).

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**24—7—44.** (திங்கட்கிழமை).

### பிரிடன் (Britain).

லண்டன் (London) பிரதேசம்.

### ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East),

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**25—7—44.** (செவ்வாய்க்கிழமை).

### பிரிடன் (Britain).

லண்டன் (London) பிரதேசம்.
சில இடங்கள்.—தென் இங்கிலாந்து (South England).

### ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**26—7—44.** (புதன்கிழமை).

### பிரிடன் (Britain).

சில இடங்கள்.—தென் கிழக்கு இங்கிலாந்து (South-East England).

### ருஷ்யா (Russia).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

### தூரக்கிழக்கு (Far East).

நேசதேச சைனியங்கள்.—பாலா (Palau) தீவு, யாப் (Yap) தீவு.

**27—7—44.** (வியாழக்கிழமை).

### பிரிடன் (Britain).

ஒரு தகவலும் இல்லை.

### ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**28—7—44.** (வெள்ளிக்கிழமை).

### பிரிடன் (Britain).

ஒரு தகவலும் இல்லை.

### ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**29—7—44.** (சனிக்கிழமை).

### பிரிடன் (Britain).

சில இடங்கள்.—தென் இங்கிலாந்து (South England).

### ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு(Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**30—7—44.** (ஞாயிற்றுக்கிழமை).

### பிரிடன் (Britain).

ஒரு தகவலும் இல்லை.

### ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

# யுத்தக் குறிப்புகள்.

**வெறி பிடித்தவன், முட்டாள், கொலையாளி ஆகிய மூவரின் நிர்வாகம்.** ஜூலை 20-ம் தேதிக்குப்பின் ஜெர்மனியின் நிர்வாகம் வெறி பிடித்த, கொலையாளியான, கோமாளியான மூவர்களின் கைகளுக்கு வந்துவிட்டது. ஹிட்லருக்கு ஆபத்து ஏற்பட்டபின் அவனுடைய கோபமும் வெறியும் அதிகரித்துவிட்டது. விசுவாசத்தை வற்புறுத்த ஐரோப்பாவின் கொலையாளி என்று பேர்பெற்ற ஹிம்லரை உள்நாட்டு சேனைத் தலைவராக நியமித்துவிட்டான். ஹிட்லர் வணக்கத்தை அவன் ராணுவத்துக்கும், பிரபுக்கள் கோஷ்டிக்கும் பயிற்சி செய்விக்கிறன். அவர்கள் சாதாரணமான பிரவியுள்ள ஹிட்லருக்கு மரியாதை காட்டவேண்டுமாம். அபாரப் புளுகனான கோயபல்ஸ் யுத்தத்திற்காகப் பூரா பலத்தையும் திரட்ட அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறன். யுத்தத்தின் ஐந்தாம் வருஷ முடிவில் படைகளைத் திரட்டுவதும் அதற்கு ஒரு கோமாளியை நியமித்ததும் ஆச்சரியப்படக்கூடியதாகயிருக்கிறது. சேனையும் அதன் கீர்த்தி வாய்ந்த தலைவர்களும் இகழ்ச்சி பெற்ருர்கள். ஜெர்மன் விமானப்படையும் அதன் புகழும் அழிந்துவிட்டது. கோயரிங்கும் மறைந்துவிட்டான். பொய்யனும், வெறிபிடித்தவனும், கொலையாளியுமான கோயபல்ஸ், ஹிட்லர், ஹிம்லர் இப்பொழுது அமுல் நடத்துகிருர்கள்.

வி வி வி வி வி

**பொய்யனின் கதை.** வழக்கம்போல கோயபல்ஸ் ஹிட்லரைக் கொல்ல செய்த முயற்சியைப்பற்றி ஒரு விருத்தாந்தத்தை வெளியிட்டிருக்கிறன். இந்த சதிக்கு பிரிடன்தான் ஜவாப்தாரி. வெடிகுண்டு பிரிடனில் செய்யப்பட்டது. இந்த முயற்சியில் முக்கியஸ்தரான ஜெர்மானியர் பிரிடனின் கையாள்.

இது அபத்த புராணம் என்று சொல்லத் தேவையில்லை. கபடமாகக் கொலை செய்வது ஜெர்மனியின் இயல்பு. இந்த மார்க்கம் பிரிடனுக்குத் தெரியாது. ஹிட்லரைக் கொன்றுவிடுவதைவிட யுத்தத்தில் முறியடித்து அவனை எல்பா, ஸெயிண்ட் ஹெலினு போன்ற தீவுக்கு அனுப்ப வேண்டுமென்பதுதான் பிரிடனின் அபிப்பிராயம். ஹிட்லர் இறந்தால் யுத்தம் நின்றுவிடாதென்றும், வெற்றி கிடைக்குமுன் ஜெர்மன் ராணுவ சக்தி அழிக்கப்படவேண்டுமென்றும் பிரிடனுக்குத் தெரியும்.

ஆகிலும் கோயபல்ஸ் அவனுடைய பாடத்தைப் படித்தே தீருவான். ஜூலை 19-ம் தேதியன்றே ஜெர்மனியிலுள்ள டெலிபோன் தந்தி போக்குவரத்துகள் நின்றுவிட்டதால இந்த முயற்சி அன்றே நடந்திருக்கக்கூடுமென்றுகூட சந்தேகிக்கக்கூடியதாகயிருக்கிறது. ஒரு நாள் பூராவும் ஆலோசனை செய்தபின் ஹிட்லர் வாய்மொழியாகவே இந்த விருத்தாந்தத்தை நாஸிகள் பகிரங்கப்படுத்தியிருக்கிருர்கள். ஹிட்லர் நடுராத்திரியில் செய்த பிரசங்கத்தில் சம்பவத்தின் காலமும், இடமும், சதி செய்தவர்களின் பெயரும் குறிக்கப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

வி வி வி வி வி

**தேசம் பூராவும் அருவருப்பு.** இந்த முயற்சியில் ஒரு சிறிய கோஷ்டியும் அதிருப்தி அடைந்த ஒன்றிரண்டு பேர்களும் வேலையிலிருந்து நீக்கப்பட்ட ஒரு ஜெனரலும் ஓய்வெடுத்துக்கொண்ட நிர்வாகியும்தான் ஈடுபட்டார்களென்று கோயபல்ஸ் சொல்லுகிறன்.

ஆகிலும் சேனைக்கும் நாஸிக்கக்ஷிக்குமுள்ள பிளவினுல்தான் ஜெர்மனி பூராவும் மனக்கொதிப்பு ஏற்பட்டிருக்கிறதென்று ருஜுவாகிறது. இந்தப் பிளவு ஆரம்பம் முதல் இருந்துவருகிறது. சேனையிலுள்ள பிரபுக்களுக்கு நாஸிகளைக் கண்டால் எப்பொழுதும் வெருப்பு உண்டு. ஹிட்லரின் அதிகாரம் ஓங்கியிருந்தபொழுது அவர்கள் சும்மா இருந்துவந்தார்கள். நிலைமை தலைகீழாக மாறி, ஜெர்மனிக்குத் தோல்விக்குமேல் தோல்வி கிடைத்தவுடன் அவர்கள் முணுமுணுக்க ஆரம்பித்தார்கள். அவர்களின் ஆலோசனையை ஹிட்லர் அலக்ஷியம் செய்தபொழுது அவனை ஒழிக்க அவர்கள் முயன்ருர்கள்.



ஜூலை 21-ம் தேதியன்று மிஸ்டர் விக்ஹாம் ஸ்டீட் ஒலிபரப்பில் சொன்னபிரகாரம் ருஷ்ய வேனிர் காலத் தாக்குதலுக்குப்பின் ஜெர்மன் தளகர்த்தர்கள் சரண் புகுந்துவிட்டார்கள். அவர்களில் ஒருவர் பின்கண்ட கடிதத்தை எழுதியிருக்கிருர்.

"ருஷ்ய வேனிர் காலத் தாக்குதலுக்கு முன் கிழக்குப் போர்முனையின் வடக்கு மத்தியப் பகுதியிலுள்ள சேனாதிபதியான பீல்ட் மார்ஷல் புஷ் என்னிடமுள்ள படை அமைப்புகளைப் பார்வையிடவந்தார். போர்முனையைக் குறுக்கிக்கொள்ள வேண்டுமென்று விரும்பினேன். ஹிட்லர் பின்வாங்கக்கூடாதென்று உத்தரவிட்டிருக்கிறன் என்று அவர் சொன்னர். இது தவருன உத்தரவென்று எனக்குத் தெரிந்தபோதிலும் அதை நான் அமுல் நடத்தவேண்டியிருந்தது."

இந்தக் கடிதம் உண்மையான தஸ்தாவேஜு. சேனையின் நடவடிக்கையைப்பற்றி அறிவூட்டுகிறது. ஹிட்லரின் ஆலோசனையை ஒப்புக்கொள்ளாத பீல்டு மார்ஷல்களையும் ஜெனரல்களையும் சமீப காலத்தில் ஹிட்லர் பர்த்தரபு செய்ததற்கும் இதுதான் காரணமாகும்.

விக்ஹாம் ஸ்டீட் மற்ருெரு விருத்தாந்தத்தையும் வெளியிடுகிருர். சமீப காலத்தில் ஆதென்ஸில் ஜெர்மன் யுத்த சபை கூடியபொழுது ஒருவரை ஒருவர் சுட்டதாகவும், ஆறு பேர்களுக்கு படுகாயம் ஏற்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. ஜெர்மன் ராணுவ அதிகாரிகளும் நாஸி தலைவர்களும் இந்த நடவடிக்கையில் கலந்துகொண்டார்கள்.

கோயபல்ஸின் ஒலிபரப்பில் பின்கண்ட புளுகுகள் காணப்படுகின்றன.

1. விமானத் தாக்குதல்மூலம் ஜெர்மனியின் தொழிற்சாலைகளுக்கு அதிக நஷ்டம் ஏற்படவில்லை.

2. ஜெர்மனி இப்பொழுதுதான் யுத்தத்தை சிரத்தையுடன் துவக்கப்போகிறது.

3. நேசதேசத்தாரின் யுத்த தந்திரம் உயர்வானபோதிலும் அது தாத்காலிகமானது.

நேசதேசத்தாரை பிரமிக்கச் செய்யக்கூடிய ரகசிய ஆயுதங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றனவென்றும் அவன் கர்ஜித்தான்.

ராணுவ உபயோகமற்றதென்று பறக்கும் வெடிகுண்டை நாம் இகழ்ச்சி செய்துவிட்டதுபோல் கோயபல்ஸின் பேச்சு வீண் ஜம்பமென்றுதான் நாம் நினைக்கிறேம். ஆகிலும் பிரிடனின் முஸ்தீப்பு நிலைமையைப் பழித்திருக்கும் கோயபல்ஸின் புளுகை நாம் கண்டனம் செய்யாமலிருக்கமுடியாது. இதைப்பற்றி விக்ஹாம் ஸ்டீட் ஒரு விருத்தாந்தத்தை வெளியிட்டிருக்கிருர்.

வி வி வி வி வி

**தயை நிரம்பிய கொள்கை.** சென்ற மார்ச்சு மாதத்தில் ஹிட்லர் ஹங்கேரியை ஆக்கிரமித்தபொழுது அங்கிருந்த 7,50,000 யூதர்களைக் கொன்றுவிடும்படி உத்தரவிட்டான். ஜூன் மாத முடிவிற்குள் ஹங்கேரியின் உதவியுடன் 4 லக்ஷம் யூதர்கள் வளைக்கப்பட்டுவிட்டார்கள். வாலிபமுள்ளவர்கள் அடிமை வேலைக்கு அனுப்பப்பட்டார்கள். மற்றவர்கள் விஷவாயு மூலமாகவும் போலந்திலுள்ள ஜெர்மன் கொலைக்களங்களுக்கு அனுப்பப்பட்டும் அழிக்கப்பட்டார்கள். விஷ வாயு மூலம் 1,00,000 யுவர்கள் உயிர் துறந்தபொழுது மிஸ்டர் ஈடனும், மிஸ்டர் கார்டல் ஹல்லும் ஆக்ஷேபனையைத் தெரிவித்து கொலையாளிகளை சிக்ஷைக்குட்படுத்துவோமென்று உறுதி கூறினர்கள்.

முக்கியஸ்தரான ஹங்கேரிய யூதர் ஒருவர் ஜெர்மன் ஆபீஸரால் பிரிடிஷாரிடம் ஒப்படைக்கத் துருக்கிக்குக் கொண்டுபோகப்பட்டார். பிரிடன் ஜெர்மனிக்கு 10,000 சேனை லாரிகளையும், இதர யுத்தத் தளவாடங்களையும் அனுப்பினுல் எஞ்சியுள்ள 3,50,000 ஹங்கேரிய யூதர்களை ஜெர்மனி கொல்லாதென்றும் அவர்களை அயல்நாடுகளுக்குச் செல்ல அனுமதிக்குமென்றும் ஜெர்மனி ஆசை வார்த்தை சொல்லிற்று. மேலும் அந்த லாரிகளையும் யுத்த தளவாடங்களையும் ஜெர்மனி ருஷ்யப் போர்முனையில் உபயோகப்படுத்துமேயல்லாது மேற்குப் போர்முனைக்கனுப்பாது என்றும் சொல்லப்பட்டது. இந்தக் கொள்கையை பிரிடன் அங்கீகாரம் செய்ய மறுத்தது. பிரிடனுக்கும், ருஷ்யாவுக்கும் யூதன்மூலம் மனஸ்தாபம்

ஏற்படுமே ஒழிய ஹங்கேரிய யூதர்கள் காப்பாற்றப்படுவார்களென்பது நிச்சயமில்லாதது. ஜெர்மனியின் கிபார்சையும் அதை பிரிடன் நிராகரித்ததையும் பிரிடன் உடன்காலத்தில் ருஷ்யாவுக்கும், அமெரிக்காவுக்கும் தெரிவித்தது. இந்த சம்பவத்திலிருந்து ஜெர்மனிக்குப் பொருளாதாரக் குறைவேற்பட்டிருக்கிறதென்றும் தோல்வியைத் தவிர்க்க ஜெர்மனி எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளுமென்றும் விளங்குகிறது.

கோயபல்ஸ் ஜெர்மனியின் பூராப் படைகளையும் திரட்ட நியமிக்கப்பட்டிருப்பதற்கும் இதுதான் காரணமாகும். தளவாடக் குறைவுக்கு நேசதேச விமானத் தாக்குதல்தான் காரணமென்பதை கோயபல்ஸ் மறைத்துச் சொல்லப்பார்க்கிறான்.

வி வி வி வி வி

**ஜெர்மனியில் பொதுஜன சேவைக் குரிய உற்பத்தி நின்றுவிட்டது.** ஜூலை 31-ம் தேதியன்று ஒலிபரப்பில் பேசியபொழுது கோயபல்ஸ் பின்வருமாறு பேசினார். பூராப்படை திரட்டு திட்டப்படி எல்லோரும் போரில் ஈடுபட வேண்டும். தங்குதடையன்னியில் ஆயுத உற்பத்தி நடைபெறவேண்டும். பொதுஜன சௌகரியத்துக்குரிய உற்பத்திகள் நிறுத்தப்படவேண்டும்.

வி வி வி வி வி

**அகாலம்.** கோயபல்ஸின் தற்போதைய முயற்சி நூதனமானதல்ல. இதேவிதமாக 1918-ம் வருஷத்தில் தோல்வி தோன்றியபொழுது லூடன்டார்ப்பும் இதே நடவடிக்கையை மேற்கொண்டான். லூடன்டார்ப் துரிதமாக சரியான சமயத்தில் உதவிப்படைகளையும், சர்பராக்களையும் அனுப்ப முடிந்தது. அப்பொழுது பலமான விமானத் தாக்குதல்களை சமாளிப்பதும் அயல்நாட்டு வேலைக்காரர்களைக் கண்காணிப்புச் செய்வதும் ஜெனரல்களின் விசுவாசமின்மையைப் போக்கவேண்டியதும் அவசியமாகயில்லை. இப்பொழுது கோயபல்ஸ் இந்த சிரமங்களை அனுபவிக்கவேண்டும். இப்பொழுது ஜெர்மனியின் அந்திய காலம் நெருங்கிவிட்டது. போர்வீரர்களையும், தொழிலாளர்களையும் திரட்ட கோயபல்ஸ் செய்யும் முயற்சி காலம் தப்பியதென்று சந்தேகிக்கக்கூடியதாகயிருக்கிறது. பொதுமக்களுக்குப் பயிற்சியளித்து அவர்களை யுத்தம் முடியுமுன் போர்முனைக்கு அனுப்பக்கூடுமாவென்பதும் புதிய ஆயுதங்கள் உசித காலத்தில் உற்பத்தி செய்யப்பட்டுவிடுமாவென்பதும்தான் முக்கியமான பிரச்னைகள்.

வி வி வி வி வி

**ஹிட்லரின் தற்போதைய நிலை.** ஈச்வரனைப்போல் நடித்த ஜூலியஸ் ஸீஸரைப்பற்றி காஸியஸ் சொன்ன வார்த்தைகள் ஹிட்லருக்கும் பொருந்தும். ஸீஸர் ஜுரத்துடன் நோய்வாய்ப்பட்ட பெண்ணைப்போல் அலறினான். டெயிலி டெலகிராப்பில் ஹிட்லரைப்பற்றி ஜெர்மன் ஆபீஸர் ஒருவர் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்.

"ஹிட்லர், ஹிம்லரால் அனுமதிபெற்ற நல்லெண்ணமுள்ள நாஸி கோஷ்டியுடன்தான் வெளியேவருவார்.

"ஹிட்லர் அறைக்குள் ரிப்பன் டிராப், கோயரிங், முஸோலினி, ஜோடில், போடன் ஷாண்ட்ஸ், ஷமண்ட், மற்ற சில நாஸிபிரமுகர்கள்தான் செல்லக்கூடும். அரசாங்க வைபவங்களில் பிரசன்னமாகும்பொழுது அவரை ஹிம்லரின் S. S. துருப்புகள் ரக்ஷணை செய்யும்.

"அரசாங்க வைபவங்களில் ஹிட்லர் போன்ற அநேகர்களை ஹிம்லர் உபயோகிப்பான். வெடிகுண்டு சம்பவத்தில் இறந்த பெர்கர் அவர்களில் ஒருவர். போலி ஹிட்லருக்கும் உண்மையான ஹிட்லருக்கும் வித்தியாசத்தை ஒருவரும்கண்டுபிடிக்க முடியாது. உயர்தரமான ரிப்பன் டிராப், கோயரிங், ஜோடில் போன்றவர்கள்தான் உண்மையை அறிவார்கள்.

"போர்ப்படைகளிலுள்ள ஆபீஸர்களுக்கும், வீரர்களுக்கும் பெர்கர்தான் சில வார்த்தைகளை சொல்லிவிட்டு கௌரவ அடையாளங்களை வழங்குவார்.

"பொதுஜன வைபவங்களுக்கு ஹிட்லர் வரும்பொழுது மெய்க்காப்பு அதிகமாகயிருக்கும். ஹிட்லரும் குறிப்பிட்ட டயத்துக்கு முந்தியே வந்துவிடுவான்."



**யுத்த விமர்சனம்.** இந்த வாரத்தில் நேசதேசத்தாரின் முன்னேற்றம் திருப்திகரமானது. ருஷ்யப்போர் முனையில் ருஷ்யத் தாக்குதல் வேகம் போலந்தின் தலைநகரமான வார்ஸாவை அணுகிவிட்டது. பிளக்க முடியாதவையென்று எண்ணப்பட்ட ஜெர்மன் அரண்கள் நவதாய ஆட்டத்தைப்போல் ஒன்றன்பின் ஒன்ருய் விழுந்துவிட்டன. லூவாவ், பியாலிஸ்டாக், ட்வின்ஸ்க், ஸ்டானிஸ்லாவாவ், ஸியாயூலியா, பிரெஸ்ட்லிடாவ்ஸ்க், பெர்ஸிமிஸல், ஜாரெளஸ்லா, காஞஸ். வார்ஸா, ரீகா, மிடா, பிரஷியாவிலுள்ள இன்ஸ்டெர்பர்க்கு முதலிய இடங்கள் வெடிகுண்டி வீச்சுக்குட்பட்டன. செம்படை செக்கோஸ்லோவாகியாவையும் நோக்கி முன்னேறுகிறது.

பிரான்ஸில் நார்மண்டிக்கான போர் கோரமாக நடைபெறுகிறது. நேசதேசப்படைகள் பிரிடனிக்குள் புகுந்தன. ஸெயின்ட் லோ, காமான்டிலிருந்து துவங்கிய தாக்குதல் திருப்திகரமாக நடைபெறுகிறது. கான்ஸ்டன்ஸ், காவ்ரே, அவ்ரான்சஸ், கிரான்வில் விழுந்தன.

இதாலியில் நேசதேசப் படைகள் பிளாரென்ஸை வளைத்து விட்டன. அதை ரக்ஷிக்க ஜெர்மனி கடும்போர் செய்து வருகிறது. கிழக்குப்போர்முனை வேகத்துடன் ஒப்பிட்டால் தெற்கில் முன்னேற்றம் குறைவாகத் தோன்றும். கரடுமுரடான மலைகளும் எதிரியின் உருக்கமான எதிர்ப்பையும் சமாளிக்க வேண்டியிருப்பதால் முன்னேற்றம் சாவதானமாகத்தான் நடைபெறும். பறக்கும் வெடிகுண்டுகள் பிரிடனை அழித்துவருகின்றனவென்றும் இதாலிய யுத்தம் பாசாங்கு நடவடிக்கையென்றும் சொல்லப்பட்டு ஜெர்மன் சேனைகள் மதிமயங்கிநிற்கின்றன.

இதாலில் சமீப யுத்தத்தில் சில ராணுவ லாபங்கள் கிடைத்திருக்கின்றன. லெக்ஹார்னும், அங்கோனாவும் பிடிபட்டதிலிருந்து சர்பராக்களை இறக்குமதி செய்ய சௌகரியம் ஏற்பட்டிருக்கிறது. அரெஸ்ஸோ பிடிபட்டபின் ஜெர்மன் தற்காப்புக்குச் செல்லும் மார்க்கம் இரக்கப்பட்டுவிட்டது. கெஸ்ஸல்ரிங் இனிமேல் அபினென்ஸ் மலைகளின் தற்காப்பைத்தான் நம்பியிருக்கவேண்டும்.

தூரக்கிழக்கில் மாரியனாஸ் தீவிலுள்ள சைபான் விழுந்தன் காரணமாக ஜெனரல் டோஜோவின் மந்திரி சபை வெளியேறியது. புதிய மந்திரிசபை அமைக்கப்பட்டது. இப்பொழுதும் ஜப்பான் குவாம், டினியன் தீவுகளை இழந்து விட்டது. தீவின் ஒரு பாகத்தை இழந்தாலும் பூராத்தீவையும் ஜப்பான் இழந்து விடும். நேசதேச விமானத்தாக்குதல் தீவு பூராவும் பரவிவிடும். ஜப்பானின் எதிர்ப்பு பலஹீனமாகயிருப்பதால் புதிதாகப் பிடிபட்ட விமான தளங்களில் விமான வேலைக்காரர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் யுத்த அனுபவம் பெறவும் அபாயமன்னியில் சௌகரியம் கிடைத்திருக்கிறது.

வி வி வி வி வி

**இந்தோ-பர்மா போர்முனை.** இம்பாலுக்கான போர் முடிவுற்றது. பலேல்-டாமு ரஸ்தாவிலும், மிட்கினாவிலும் போர் முடிவுறும் நிலைமையிலிருக்கிறது. இந்திய எல்லையைக் கடக்க ஜப்பான் செய்த முயற்சி வீணாகிவிட்டது. அரக்கான் போரில் தோல்வியுற்றபின் ஜப்பான் மூன்று டிவிஷன் படைகளுடன் இப்பால் பிரதேசத்தில் வெற்றிபெற முயன்றது. 1942-ம் வருஷத்தில் பர்மாவிலும் மலேயாவிலும் முன்னேறியது போல் சுலபமாக வெற்றிபெறலாமென்று ஜப்பான் நினைத்தது. ஆகிலும் 1944-ம் வருஷத்திற்கும், 1942-ம் வருஷத்திற்கும் அதிக வித்தியாசங்கள் உண்டு. அப்பொழுது தென்கிழக்கு ஆசியா கமாண்ட் ஏற்படவில்லை. துருப்புகள் வனாந்திரப்போரில் பயிற்சி பெற்றிருக்கவில்லை. நேசதேசத்தாரிடம் விமான பலமும் பீரங்கி பலமும் இல்லை. இப்பொழுது நிலைமை மாறிவிட்டது.

வி வி வி வி வி

**விமான நடவடிக்கை.** ஐரோப்பாவில் ஸ்டட்கார்ட், வியன்னா, லூனா, போலஸ்தி, வாட்டன் (பாஸ் டி கலே), டோகொல்னோ, டோகோல் (ஹங்கேரியின் தலைநகரமான புடாபெஸ்டுக்குச் சமீபம்) தாக்கப்பட்டன. தூரக்கிழக்கில் தென்மேற்கு பஸிபிக்கிலுள்ள தீவுகள், பர்மாவிலுள்ள லக்ஷியங்களைத் தவிர சுமாத்ராவிலுள்ள ஸாபாங்கும் மஞ்சூரியாவிலுள்ள மூக்டனும் தாக்கப்பட்டன.

கோயபல்ஸ் அபத்தமாகச் சொன்னபோதிலும், நேசதேச விமான நடவடிக்கை மூலம் பலமான அழிவு ஏற்பட்டிருப்பது உண்மை. டெயிலி மெயில் பத்திரிகையின் விசேஷ நிருபர் சொல்லுவதுபோல் நேசதேச விமான ஆதிக்கத்துக்குத் தக்கவாறு ஜெர்மனியிலுள்ள

விமானப்படை பயிற்சி முகாம்களில் பயிற்சி அளிக்கப்படவேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறதாம். இதற்காக படைகளின் சலனத்தை மறைக்க புதிய மறைமுக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றனவாம்.

ஜூன் மாதம் ஆரம்பிக்கப்பட்ட விமானத்தாக்குதலுக்குப்பின் ஜூலை மாதம் 24-ம் தேதியன்று கீல் பேரில் 3,000 டன்கள் மொத்த எடைமானமுள்ள வெடி குண்டுகளும், 25-ம் தேதியன்று ஸ்டட்கார்ட் பேரில் 2,500 டன்கள் மொத்த எடைமானமுள்ள வெடி குண்டுகளும் வீசப்பட்டன. பிரிடிஷ் வெடி விமானங்கள் 7,000 டன்கள் மொத்த எடைமானமுள்ள வெடி குண்டுகளை நார்மண்டி போர் பிராந்தியத்தில் வீசின.

வி வி வி வி வி

**துருக்கி.** ஜூலை 19-ம் தேதியன்று ஜெர்மனிக்கு சொந்தமான நீர்மூழ்கி பாஸ்பரஸுக்கு சமீபத்தில் துருக்கியின் அமுலுக்குட்பட்ட சமுத்திரத்தில் துருக்கியின் நிலக்கரிக் கப்பலை மூழ்கடித்தது. ஜூலை 20-ம் தேதியன்று மறுபடியும் 26 டன்கள் எடைமானமுள்ள துருக்கிக் கப்பல் நீர்மூழ்கி நடவடிக்கையால் மூழ்கிற்று. ருமேனிய பல்கேரிய, துறைமுகங்களிலும் கருங்கடலிலுமுள்ள துருக்கிக் கப்பல்களை துருக்கிக்கு வந்துவிடும்படி உத்தரவிடப்பட்டிருக்கிறது. அங்காராவிலிருந்து ஜெர்மானியர்கள் வெளியேறுகிறார்கள். ஹங்கேரிய, பல்கேரிய அயல்நாட்டு தூதர்கள் வெளியேறத் தயாராகயிருக்கிறார்கள். ஆக்கிரமிப்பு ஐரோப்பாவிலுள்ள துருக்கியர்கள் தாயகம் திரும்பவேண்டுமாம். ஜெர்மனிக்கும் துருக்கிக்குமுள்ள உறவு ரத்தாகிவிடும் போல் தோன்றுகிறது. (இருநாட்டிற்குமுள்ள பொருளாதார, ராஜதந்திர உறவை துருக்கி ரத்து செய்துவிட்டதென்று தகவல் கிடைத்துவிட்டது.—ப.)

வி வி வி வி வி

**மற்ற முக்கிய சம்பவங்கள்.** யுத்தத்தை வெறுக்கும் இந்த உலகத்தில் அநேக முக்கியமான சம்பவங்கள் நடைபெறுகின்றன. தேசங்களும், ஸமாஜங்களும் நேசதேசத்தாரின் உறவை நாடுகின்றன. சந்தேகிகளும், விரோதிகளும் கக்ஷி மாறுகிறார்கள். அமைதியும் ஒற்றுமையுமுள்ள ஒரு உலகம் தோன்றப்போகிறது. அதற்கு அறிகுறிகள் பின்வருமாறு:—

(1) துருக்கி, பிரிடன், அமெரிக்கா, ருஷ்யா முதலிய நாடுகளுடன் உறவாட பிரியப்படுகிறது.

(2) கருங்கடல் துறைமுகங்களை வார்னா, பர்காஸில் பல்கேரியா ருஷ்ய அயல் நாட்டு ஸ்தானிக நிலயங்களை அமைக்க உடன்படிக்கை செய்துவிட்டது.

(3) துருக்கியிலும் கெயிரோவிலுமுள்ள தூதர்கள்மூலம் சமாதானம் செய்துகொள்ள ருமேனியா முயற்சிக்கிறது.

(4) விடுதலை பெற்ற போலந்தின் ஆக்ஷியைப்பற்றி ருஷ்யா போலந்தின் தேசிய சமஷ்டிக் கமிட்டியுடன் உடன்படிக்கை செய்துகொண்டு விட்டது. லண்டனிலுள்ள போலிஷ் பிரதம மந்திரி ஸ்டாலினுடன் சம்பாஷித்து போலந்தின் எதிர்கால நிர்வாகத்தை நிறுவ முயற்சிக்கிறார்.

(5) சீனப்பொதுவுடமைக் கக்ஷியுடன் சம்பாஷித்து எதிரியை ஒன்றுபட்டு தாக்க வேண்டுமென்று சியாங் முயற்சிக்கிறான்.

(6) ஸியாமின் நிர்வாக சபை ராஜிநாமாச் செய்தது.

(7) நேசதேச விமானிகளைக் கொல்லவில்லையென்று ஜப்பான் மறுதளித்திருக்கிறது.

(8) ஆஸ்திரேலியாவின் நண்பன் என்று ஜப்பான் இப்பொழுது வெளியிட்டிருக்கிறது.

வி வி வி வி வி

**புதுக்கோட்டையில் யுத்த முயற்சி.** புதிய பதிப்புகளை பிரசுரிப்பதற்கு அனுமதி பெறவேண்டுமென்றும் பிரசுரங்களின் அளவை நிர்த்தாரணம் செய்தும் புதுக்கோட்டை ஸ்ரீ-தர்பார் அவர்கள் காகிதக்கட்டுப்பாடு உத்தரவை பிரசுரித்திருக்கிறார்கள்.



# துணிவால் நிர்மாணம் செய்யப்பட்டது. மிதமான நடவடிக்கையால் போஷிக்கப்படுகிறது.

## நமது சாம்ராஜ்யத்தை ஒன்றுபடுத்தும் உணர்ச்சி இதுதான்.

### இன்று சாம்ராஜ்யப் படைகள் பிரிடிஷ் துருப்புகளுடன் சேர்ந்து போர்புரிகின்றன.

(எல்டன் பிரபு).

(எட்டாம் படை செய்தியிலிருந்து எடுக்கப்பட்டது).

பிரிடிஷாரின் குணாதிசயங்களில் தனிப்பட்டவர்களின துணிவும் மிதபுத்தியும்தான் சரித்திரத்தில் புகழ்பெற்றவை. பிரிடிஷ் சாம்ராஜ்யத்தை அமைப்பதிலும் அதன் ராஜ்யத்தை நிறுவுவதிலும் மற்ற சில குணங்களுடன் இவைகள்தான் முக்கியத்வமுள்ளவை.

பிரிடிஷ் சாம்ராஜ்யம் தனிப்பட்டவர்களின் முயற்சியாலும் மித புத்தியாலும் ஏற்பட்டதென்பது உண்மைதான்.

### துணிவுள்ளவர்கள்.

தனிப்பட்டவர்கள் அரசாங்க ஆதரவணியில் அயல் நாடுகளுக்கு வியாபாரிகளாகச் சென்றுதான் பிரதேசங்களையும், வியாபார ஸ்தலங்களையும் சம்பாதித்தார்கள், சில சமயங்களில் அவர்கள் போர்புரியவும் நேர்ந்தது. இந்தியாவிலும் ஒரு நூற்றாண்டு வரையில் பிரிடிஷ் மக்கள் வியாபாரிகளாகத்தானிருந்தார்கள். அவசியத்தை முன்னிட்டு அவர்கள் சோல்ஜர்களாகவும், நிர்வாகிகளாகவும் மாறினார்கள்.

### அஞ்சாநெஞ்சம் படைத்தவர்கள்.

சாம்ராஜ்யத்திற்கு அஸ்திவாரம் போட்டவர்கள் 1537-ம் வருஷத்தில் சிறிய படகுகளில் அட்லாண்டிக் கடலைத்தாண்டிச் சென்றார்கள். அதில் சென்ற 17 ஸ்திரீகளும், குழந்தைகளும் மாண்டுபோயின. அடுத்தபடியாக காப்டன் ஜான் ஸ்மித் வெர்ஜீனியாவுக்குச் சென்றவர்களின் வறுமையையும், வியாதியையும், உள்நாட்டு மக்களின் அபாயத்தையும் நிவர்த்திக்க வேண்டியிருந்தது.

அடுத்தபடியாக துணிவுகரமாக கடல் தாண்டிச் சென்று காப்டன் ஜேம்ஸ் குக் ஆஸ்திரேலியாவைக் கண்டுபிடித்தார். அதன்பின் டேவிட் லிவிங்ஸ்டன் அடிமைத்தனத்தை ஒழிக்கவேண்டிய முயற்சியில் ஆப்பிரிக்காவில் பல இடங்களைக் கண்டு பிடித்தார்.

### ஜெர்மனியின் கவர்ச்சி.

பிரிடிஷ் சாம்ராஜ்யம் மட்டுமிருந்த வரையில் "சாம்ராஜ்ய ஆக்ஷி" என்ற கொள்கை தோன்றவில்லை. 1880-ம் வருஷத்திற்குப் பின் ஸீஸரின் ஆக்ஷி என்று அதற்கு பொருள் பட்டது. இதே சமயத்தில் பிஸ்மார்க்கின் கொடுங்கோலுக்குட்பட்ட ஜெர்மனி ஆப்பிரிக்காவில் தேசங்களைப் பிடிக்க முயன்றது. இதற்குமுன் ஆப்பிரிக்காவில் பாதிரியாகச் சென்ற டேவிட் லிவிங்ஸ்டன் ஆப்பிரிக்கர்களுக்காக உயிரைத் தியாகம் செய்தார்.

பிரிடனைச் சேர்ந்த லூகார்ட் பிரபு நைஜீரியாவை ஆக்கிரமித்து அதை ஒழுங்குபடுத்தி மேனாட்டு நாகரீகம் ஸ்தாபனங்களின் மூலம் சகஜமாக வளர்ச்சிபெரும்படியாக திட்டங்களை நிறுவினார்.

### நிலைத்திருப்பதற்குக் காரணம்.

சாம்ராஜ்யம் துணிவு மூலம் ஸ்தாபிக்கப்பட்டு பிற்பாடு அவசியத்தை முன்னிட்டு நிர்வாகம் அமைக்கப்பட்டதென்றால், பிரிடனின் மிதமான நடவடிக்கை அதைப் பரிபாலித்து வருகிறது. அதை நிலைநாட்ட பலாத்காரம் உபயோகிக்கப்படவில்லை. 1939-ம் வருஷத்தில் சாம்ராஜ்ய நாடுகள் நிராயுதபாணிகளாகயிருந்தன. எல்லா குடியேற்ற நாடுகளிலும் 30,000-க்கு மேற்பட்ட ஆயுதம் பூண்ட படைகள் கிடையாது.

இந்நிலைமையில் பிரிடன் நாடுகளின் விரோதத்தை சம்பாதித்திருந்தாலும் அல்லது அருவருப்பை உண்டுபண்ணியிருந்தாலும் பிரிடிஷ் கடற்படை சாம்ராஜ்யத்தைக் காப்பாற்றி இருக்க முடியாது.

### பரம ரகசியம்.

எல்லையை ஏற்படுத்திக்கொள்ளாததால் இதற்கு முன்னிருந்த சாம்ராஜ்யங்களும் பிரிடிஷ் ஜனநாயக ஆக்ஷியை ஒத்து அமைக்கப்பட்ட ஜனநாயக ஆக்ஷிகளும் மறைந்து

…ன. பிரிடிஷ் கடற்படைதான் உலகத்தைக் காப்பாற்றியது. ஆசைப்பட்டிருந்தால் எல்லா நாடுகளின் குடியேற்ற நாடுகளையும் பிரிடன் கைப்பற்றியிருக்கலாம்.

…ழு வருஷ யுத்தம் 1763-ல் வெற்றிகரமாக முடிவுற்றபொழுது சாதாம் பிரபு பிரான்ஸை …த்வமில்லாமல் செய்து ஐரோப்பிய சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்திருக்கலாம். அவருடைய …ான புத்திதான் அவ்விதம் நடைபெறுததற்குக் காரணம். அவ்விதமாக பிரிடன் …ரையும் புண்படுத்தாததால் பிரிடனுக்கு சிரமம் ஏற்படும்பொழுது எல்லா நாடுகளும் …யளிக்கின்றன.

### மனிதவர்க்கத்தின் நண்பன்.

1815-ம் வருஷத்தில் நெபோலியன் ஆரம்பித்த போர் முடிவடைந்தபொழுதும் பிரிடன் …ாய லாபம் சம்பாதிக்கவில்லை. அந்தப் போரில் பிரிடிஷ் கடற்படைதான் விசேஷ …ப் போர் புரிந்தது. காஸ்ல்ரீயும் அவனுடைய சகாக்களும் பிடித்த இடங்களை பிரான் …மும் ஹாலந்திடமும் ஒப்படைத்து விட்டார்கள். ராஜதந்திரிகளின் மிதமான நடவடிக் …ருல்தான் சாம்ராஜ்யம் நிலைபெற்றிருக்கிறது. பிரிடிஷ் சாம்ராஜ்யம் மனிதவர்க்கத்தின் …பைப் பெற்றுவிட்டது.

---

## ஐரோப்பியப் போரின் உச்சநிலை சமீபித்துவிட்டது. நாஸிகளின் வலிமை மூன்று போர்முனைகளில் பரிசை செய்யப்படுகிறது.

(ஸண்டே டைம்ஸ் பத்திரிகையில் பிரிகேடியர் ஆன்ஸ்லே.)

ஐரோப்பியப் போர் உச்சி நிலையை நெருங்கிவிட்டது. அதன் மூன்று போர்முனைகளி… போர் வெவ்வேறு விதமாக நடைபெறுகிறது. இதாலியில் வடக்கு சமவெளிகளிலுள்ள …மன் தற்காப்புகளும் நார்மண்டியிலுள்ள தற்காப்புகளும் கிழக்கில் ஜெர்மனி தற்காப்பு …யக்கூடுமாவென்பதும் பரிசோதிக்கப்படுகிறது.

…சந்நிலையிலும் பிடித்த பிரதேசத்திலும் ருஷ்யப் போர் பலமானது. ஜெர்மனியின் …டிவிஷன்களில் பாதிபாகம் 500 மைல்கள்கொண்ட போர்முனையில் பின்வாங்கிவருகிறது. …போர்முனைகளில் நேசதேசப்படைகள் 200 மைல்கள்கொண்ட பிரதேசத்தில் போர… …ின்றன. ஜெர்மனியின் பான்ஸர் படைகளின் மூன்றில் ஒருபாகம் இங்கு தாக்கப் …றது. ரோம்போருக்குப்பின் 85,000 ஜெர்மானியர்கள் கைது செய்யப்பட்டிருக் …ர்கள்.

இதாலியில் கொருக்கப்படும் 27 டிவிஷன்களும் பிரான்ஸில் தற்காப்பு செய்யும் …களும் மின்ஸ்கில் நிலைபெற்றிருந்தால் ருஷ்யப்போர் எவ்விதம் நடை பெற்றிருக்கும். …மன் படையின் சிதைவைப் பயன்படுத்தி ருஷ்யர்கள் மின்னல் வேகத்துடன் ஜெர்மன் …களை முறியடித்தார்கள். மேற்குப்போர்முனைதான் முக்கியத்வமுள்ளதென்று …மனி சொல்லிவருகிறது.

பிரான்ஸில் ஏராளமான பான்ஸர் படைகளிருப்பதால் மற்றொரு எல்அலாமீன் நட…க்கை ஏற்பட்டால் பிரான்ஸின் மத்திய பாகத்துக்கு ஆபத்து நேரிடும்.

---

## நார்மண்டிப்போர் ஹிட்லரின் கவனத்தைக் கவருகிறது.

### ஐரோப்பாவில் உபரிப்போர்கள்.

(லெப்டினண்ட் ஜெனரல் ஸர் டக்ளஸ் ப்ரௌன்ரிக்).

…கேயனில் பிரிடிஷ் படைகள் புகுந்து விட்டதால் மேற்கிலும், தெற்கிலும், கிழக்கிலும் …மனியைத் தாக்கும் போரை சரியானபடி மதிக்கலாம். நார்மண்டிப்போர் ஆரம்பத்தில் …ண்ட்காமரியின் முன்னேற்றம் ருஷ்ய, இதாலியப் போர்முனைகளைப்போல் சிலாக்கியமான …லையென்று சிலர் குறைகூறினார்கள். ஆகினும் இந்த போர்முனைகளுக்குள் அதிக …தியாசமுண்டு.



நார்மண்டியிலும், ருஷ்யாவிலும் 600 மைல்கள் நீளமுள்ள பிராந்தியத்தில் போர் நடைபெறுகிறது. ருஷ்யப் போர்முனையைவிட நார்மண்டியின் குறுகலான கடற்கரை ஓரமாக உள்ள போர்முனையில் தற்காப்பு செய்வதுதான் எதிரிக்கு சௌகரியமானது.

### ஹிட்லரின் வீண் நம்பிக்கை.

நேசதேசப் படைகள் ஒரு குறுகிய இடத்திலோ அல்லது அநேக இடங்களிலோ இறங்குமென்று ஹிட்லர் அறிந்திருக்கலாம். பல இடங்களிலிறங்கும் படைகளை அழித்து விடலாமென்று ஹிட்லர் நம்பியிருந்தான். ஜெனரல் மாண்ட்காமரியிடம் இந்த ஜம்பம் பலிக்காதென்பதையும் அவன் அறிந்திருக்கவேண்டும்.

ஸிஸிலியிலேயே இந்த அறிவு அவனுக்கு ஏற்பட்டது. மேற்கில் நேசதேசத்தார்களை முறியடித்தபின் ருஷ்யப்படைகள் ஜெர்மன் எல்லைக்கு வருமுன் ருஷ்யாவைத்தாக்கலாமென்று ஹிட்லர் உத்தேசித்திருக்கிறான். மேற்குப் போர்முனையில் அயர்வு ஏற்படுத்தி கிழக்குப் போர்முனையில் நடவடிக்கை ஆரம்பிப்பதற்காக அவன் பிரெஞ்சுக் கடற்கரை பூராவும் பறக்கும் குண்டு நிலையங்களை அமைத்து வெடி குண்டுகளை அனுப்பி பிரிடிஷ் மனஉறுதியைக் குலைக்க முயன்றான்.

இந்த திட்டப்படி நடத்த மேற்குப் போர்முனையிலும் ஹாவாவில் மார்ஷல் ஜுகாவின் முன்னேற்றத்தைத் தடுக்கவும் படைகளை அவன் குவித்தான். ருஷ்யாவில் மத்திய, வடக்குப் போர்முனைகளில் கவசம் பூண்ட படை பலம் இதன் மூலம் குறைவுபட்டது.

ஆனால் ருஷ்யா போர் துவக்கும் முனையை ஜெர்மனி சரியாக மதிக்கவில்லை. ஹிட்லர் ஊகிக்காத முனையில் ருஷ்யா போரைத் துவக்கியது. ருஷ்யாவுக்குச் சென்ற மூன்று வாரங்களில் பிரமாதமான வெற்றிகள் கிடைத்தன. இப்பொழுது போர் 600 மைல்கள் தூரமுள்ள பிராந்தியத்தில் நடைபெறுகிறது.

### அசௌகர்யங்கள்.

நார்மண்டியில் இடது பக்கத்தில் ஜெனரல் மாண்ட்காமரி வேகமாக முன்னேற முடியவில்லை. இங்கு குறுகலான இடத்தில் ஜெர்மன் கவசம் பூண்ட படைகள் எதிர்த்து மூர்க்கத்தனமாகப் போராடுகின்றன. ருஷ்யப் போர்முனை நீளமாக இருப்பதால் ஜெர்மன் தற்காப்புகளைச் சுற்றிச் சென்று விடலாம்.

இரண்டு போர்முனையிலும் படைபலமும் வித்தியாசப்படும். கிழக்கில் ருஷ்யாவுக்கு ஜெர்மனியைவிட நான்கு மடங்கு படைபலமுண்டு. அதிக டாங்குகளும், சிறந்த முஸ்தீப்புகளும் பெற்றவை.

நார்மண்டியிலுள்ள படைகளின் சக்தியைக் குறிப்பாகச் சொல்லமுடியாது. மேலும் குறுகிய பிரதேசத்தில் அதிகப் படைகளை ஈடுபடுத்துவது சாத்தியமல்ல. இருதரப்பாரின் படை பலமும் சமமாகயிருக்கிறதென்று சொல்லலாம்.

ஆகையால் நார்மண்டி, ருஷ்யப்போரை ஒப்பிட்டுப் பார்ப்பது முறையல்ல.

ஒன்றுக்கொன்று ஒத்தாசை செய்யக்கூடியது. நார்மண்டிப்போர் ஹிட்லரின் கவனத்தை இழுத்துவிட்டது. ஐக்கிய தேசத்தார்கள் போட்டி போடவில்லை. ஒன்றுபட்டுப் போர் புரிகிறார்கள்.

---

## ஹிட்லரைக் கொல்ல முயற்சி.

(டெயிலி டெலிகிராப் பத்திரிகை.)

ஹிட்லரைக் கொல்லச் செய்த முயற்சியைப்பற்றி வெளிவரும் ஜெர்மன் ரிபோர்ட்டுகளிலிருந்து யாதொரு முடிவுக்கும் வரமுடியாது.

ஹிட்லரும் அவருடைய ராணுவ ஆலோசகர்களும் கூடியிருந்த கூட்டத்தில் யாரோ ஒருவர் வெடிகுண்டு வீசியதாகவும், ஹிட்லருக்கு சிறிய காயங்கள் ஏற்பட்டனவென்றும் முஸோலினியும் கோயரிங்கும் அவரை ஆச்வாசப்படுத்தினார்களென்றும் தெரியவருகிறது.

இதில் இரண்டு விஷயங்கள் உள. ஹிட்லர் மறைந்தால் ஜெர்மனி வீழ்ச்சி பெறும். யுத்தம் முடிந்துவிடுமென்று நினைப்பது தவறு. போரில் முறியடிக்கப்பட்டால்தான் இவை கள் கைகூடும்.

ஜெர்மனியில் எல்லோரும் ஹிட்லரின் தெய்வீகத் தன்மையை ஒப்புக்கொள்ளவில்லையென்றாலும் மற்றொரு முறை ஹிட்லரைக் கொல்லச் செய்த முயற்சி வீணானதிலிருந்து உலகத்தாருக்கு உத்சாகம் குறைந்துவிட்டது.

---

## உலகத்தில் மகத்தான மெய்க்காப்பாளருள்ள புருஷன்.

### ஹிட்லரின் மரண பீதி.

(கை ராம்ஸே).

ஹிட்லர் அதிகாரத்திற்கு வந்தது முதல் சதா காலமும் மரண பயத்தினால் பீடிக்கப்படுகிறான்.

அவன் நடக்கச் செல்லும் கிராமம் சுத்தி செய்யப்பட்டு பந்தோபஸ்து செய்யப்படும். "ஹிட்லர் தனியாகயிருக்க பிரியப்படுகிறான்" என்று காரணம் சொல்லப்படும். நாய்களும் கூடச்செல்லும். சாடுகளில் 300 மெய்க்காப்பாளர்கள் இருக்கிறார்கள்.

நாடகசாலையில் அவன் இருப்பிடத்திற்குச் செல்லும்பொழுது இரு பக்கத்திலும் காவலாளர்கள் நிற்பார்கள். ஹிட்லருக்கு கௌரவத்துக்குப் படைகளில்லை. அவனுடைய பத்திரத்தை அவைகள் கோருகின்றன.

அவனுடைய விடுதியைச் சுற்றிலும் S. S. கரும்படையைச் சேர்ந்தவர்கள் வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஹிட்லர் கொலை செய்யப்பட்டால் அவர்கள் தற்கொலை செய்துகொள்ளுவதாக உறுதிமொழி கூறவேண்டும்.

ஹிட்லரின் விமானத்தை ஹான்ஸல்பார்தான் ஓட்டவேண்டும். மோட்டாரில் பிரயாணம் செய்யும்பொழுது அவனைச் சுற்றி மெய்க்காப்பாளர்கள் செல்லுவார்கள். அவனைப் பின்பற்றியும் மோட்டார்களில் அநேக ரக்ஷகர்கள் செல்லுவார்கள். மூலைகளில் வண்டிகள் அதிவேகமாகச் செல்லும்.

#### சிகாகோவிலுள்ள கொள்ளைக் கூட்டக்காரன்போல்.

ஹிட்லர் தெருக்கள் வழியாகச் சென்றால் ஒருவரும் நெருங்கிச் செல்லாதபடி சுத்தி செய்யப்படும். ஹிட்லர் ஆழ்ந்த யோசனையிலிருப்பதால் அவரை ஒருவரும் தொந்தரவு செய்யக்கூடாது. சேனையும் S. S. படையும் ஒவ்வொரு வீடாகக் காபந்து செய்யும்.

அவருடைய காரில் குண்டு நுழையாத கண்ணாடிகள் அமைக்கப்பட்டிருக்கும். தப் பாக்கியைத் தயாராக வைத்திருப்பார்கள். அவர் பெர்லினையும் விடுதியையும் விட்டு 48 நேரத்துக்கு மேல் வெளியே செல்லுவதில்லை.

ரயிலில் பிரயாணம் செய்தால் வண்டி நிற்கும்பொழுது அதைச் சுற்றிலும் முள்ளுக் கம்பி வேலி அமைக்கப்படும். S. S. படைகள் ரோந்து செய்யும்.

#### விஷத்தைப் புகுத்தி விடாமல் எச்சரிக்கை.

ஹிட்லர் புனிதமானவனாகையால் அவனுடைய ஆடைகள் பராமரிப்பு செய்யப்படும். அவனுடைய சல்லடத்தில் விஷம் தோய்ந்த முள்ளுகளிருக்கக்கூடும். புஸ்தகங்களும் கடிதங்களும் விஷ மருந்தில்லாமல் சுத்தமாகயிருக்கவேண்டும்.

ஹிட்லரிடம் விஷத்தைப் பரிசோதிப்பவர்களுமிருக்கிறார்கள். 24 வயதுள்ள ஒருவர் இந்த முயற்சியில் உயிர் துறந்தார்.

ஹிட்லர் பொதுஜன மத்தியில் வரும்பொழுது அவரை ஒருவரும் அணுகக்கூடாது. அவரை யாரும் கபடமாகக் குத்திவிடுவார்களோவென்று பயந்து அவன் கூட்டத்தில் சொல்ல மாட்டான்.

இவ்விதமாக பலமான ரக்ஷணையுள்ளவரை உலகம் பழிவாங்கிவிடும்.



## ஜெர்மன் தங்கம் ஏராளமாக துருக்கிக்கு அனுப்பப்படுகிறது.

### அச்சு வியாபாரிகளின் கவலை.

(டெயிலி எக்ஸ்பிரஸின் இஸ்தாம்பூல் நிருபர்).

ஜெர்மன் தங்கம் ஏராளமாகத் துருக்கிக்குச் செல்லுகிறது. ஜெர்மன் வியாபாரிகள் சீக்கிரமாக வெளியேறி விடவேண்டுமென்கிறார்கள். வான் பேபனின் வேலைக்காரர்களுக்கு ஊதியமாகச் செல்லும் தங்கத்தைத் தவிர சென்ற மாதத்தில் மூன்று மடங்கு தங்கம் இஸ்தாம்பூலிலுள்ள பாங்கிக்குச் சென்றிருக்கிறது.

இதன் பயனாக துருக்கியில் தங்கத்தின் விலை குறைந்துவிட்டது. ஆக்கிரமிப்பு ஐரோப்பாவில் செலாவணி நியதிகளினின்று விலக்கப்பட்டுள்ள ஸ்விட்ஸர்லாந்துக்கு ஓய்வுக்குச்செல்ல அனுமதி பெற உயர்தர அதிகாரிகளுக்கு குயிஸ்லிங் உத்தியோகஸ்தர்கள் ஆயிரம் பவுன் லஞ்சம் கொடுக்கிறார்கள். போனஸ் அயர்ஸுக்கு டெலிபோன் மூலம் மூன்று நிமிஷம் பேசுவதற்கும் அவர்கள் 100 பவுன் செலவிடுகிறார்கள்.

துருக்கிக்கு வரும் தங்கம் ஆர்ஜெண்டைனுக்கு அனுப்பப்படுவதைவிட மிகவும் குறைவானது. பீதியின்பேரில் ஜெர்மனி தங்கத்தை அப்புறப்படுத்துகிறதென்று தெரிய வருகிறது. புகாரெஸ்டிலுள்ள ருமேனிய குயிஸ்லிங் பின்வருமாறு சொல்லுகிறார்.

"ருஷ்யாவும், ஜனநாயக நாடுகளும் போர் லாபத்தைப்பற்றிச் சண்டையிடும். ருஷ்யா சோர்வடைந்து சமாதானத்தைக் கோரும். போல்ஷிவிஸத்தைக்கண்டு அமெரிக்கா பீதியுற்று ஜெர்மனி பூராவையும் நசுக்க பிரியப்படாது என்று டி தினம் வரையில் நம்பிக்கையிருந்தது. ருஷ்யர்கள் ஜெர்மன் எல்லைச் சரகத்துக்கு வந்துவிட்டால் மேற்கிலுள்ள மூலபலத்தை உபயோகிக்கலாமென்று ஜெர்மனி நினைத்தது. மேற்கில் போர் மூண்டுவிட்டதால் கிழக்குப் போர்முனையிலிருக்கும் துருப்புகள்தான் போரை அங்கு சமாளிக்கவேண்டும்.

"ஜெர்மன் வியாபாரிகள் அசைந்துகொடுக்கும் யுத்த தந்திரத்துக்கும் கிழக்கில் ஜெர்மன் தற்காப்பு நொருங்கியதற்குமுள்ள வித்தியாசத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்."

---

## ஜப்பான் ஆக்கிரமித்திருக்கும் நாடுகளின் நிலைமை.

---

கிழக்கு ஆசியாவில் ஜப்பான் ஆக்கிரமித்திருக்கும் நாடுகளில் சுதந்திரப் பேச்சுக்கு பதிலாக முற்றுகை ஏற்பட்டுவிட்டது. ஜாவாவில் முடிவான யுத்தத்துக்காக ஒரு ஸ்தாபனம் அமைக்கப்பட்டது. எவ்வித ஜனசமூக அந்தஸ்துள்ளவர்களும் போர் புரியவேண்டுமென்றும் ஜாவாவிலுள்ளவர்கள் எல்லோரும் சேனையில் சேரவேண்டுமென்றும் உத்தரவிடப்பட்டிருக்கிறது.

ஆக்கிரமிப்பு நாடுகளிலுள்ள எல்லோரும் அடிமைப் படையில் சேர்ந்துவிட்டார்கள். சில மாதங்களுக்குமுன் அவர்கள் பிரார்த்தனை தின உடுப்பில் ஒத்திகை செய்த பொழுது அவர்களுக்குச் சிறிய காகிதக் கொடிகள் வழங்கப்பட்டன. ஜப்பான் வழங்கிய சுயேச்சையையும், சுதந்திரத்தையும், அரசாட்சியையும் கொண்டாடவேண்டுமென்று உத்தரவிடப்பட்டது. இப்பொழுது வேறு விதமான ஒத்திகைக்குள்ளாகிவிட்டார்கள். ஆடையன்னியில் துப்பாக்கியன்னியில் மிகுதியான கவலையுடன் அவர்கள் தடுமாட்டத்துடன் செல்லுகிறார்கள்.

இப்பொழுது ஜப்பான் அவர்களை அடக்கியாளுகிறது. மஞ்சூரியாவில் 200 சதவிகிதம் யதேச்சாதிகாரம் வந்துவிட்டதென்று சைனு சொல்லிற்று. ஜப்பானியர்களின் குணங்களை சைனு சரியாக மதிக்கவில்லை. ஜப்பான் இப்பொழுது அவசர கிரிமினல் சட்டத்தை நிறுவியிருக்கிறது. எல்லாம் குற்றமாகும். நினைப்பது கூட குற்றம். படைகள் செல்லும்பொழுது தெருவில் குறுக்கே செல்லுவது குற்றமாகும். மற்ற சட்ட திட்டங்களும் திருத்தியமைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த முறைகள் மற்ற நாடுகளுக்கும் பரவும். மஞ்சுகோதான் மற்ற நாடுகளுக்கு மாதிரி நிர்வாகம் என்று சொல்லப்பட்டது. பிலிபினோக்கள் அதைப் பின்பற்றவேண்டுமென்று நினைத்தார்கள். அங்கிருந்து சோளத்தையும் மற்ற தானியங்களும் வருவதற்கு பதிலாக அவர்கள் ஜப்பானுக்கு அரிசி ஸப்ளை செய்த பின், தேங்காய், சர்க்கரை வள்ளிக்கிழங்கு முதலியவற்றை உட்கொள்ளவேண்டும் மஞ்சுகோவில் நடைபெறும் நடவடிக்கைகள் பிலிப்பைன்ஸில் அமுலுக்குக் கூடிய சீக்கிரத்தில் வந்துவிடும். மேதாவிகளுக்கு காராகிருகங்களும், வாலிபர்களுக்குப் பயிற்சி முகாம்களும், அமைக்கப்படும். ஆயுதப் பயிற்சியன்னியில் அடிமைப் பயிற்சி அளிக்கப்படும். உரிமைகளையும் கௌரவத்தையும் ராஜ்ய பாரத்தையும் அவர்களிழந்து ஜப்பானியர்களின் உத்தரவின்படி நடக்கவேண்டும். இல்லாத போனால் உயிர் துறக்கவேண்டும்.

இந்த முறைகள் எங்கும் துவங்கிவிட்டன. ராஜாங்க சபை போய்விட்டது. சொற்பொழிவாளர்கள் மௌனமாகயிருக்கிறார்கள். அந்தத் தீவை ஒன்பது பகுதிகளாகப் பிரித்துவிட்டார்கள். ஒவ்வொன்றிலும் ஒரு அதிகாரியிருக்கிறார். போலீஸார் ஜப்பானின் அதிகாரியின் அமுலுக்குட்பட்டுவிட்டார்கள். ஜெர்மன் ரகசியப் போலீஸ் மணிலாவுக்கும், மஞ்சுகோவுக்கும் வந்துவிட்டது.

இந்த முறைகள் ஆக்கிரமிப்பு சைனாவுக்கும், ஸியாமுக்கும் வந்துவிட்டன. ஷாங்கேயிலுள்ள போலீஸ் படை டோகியோ முதலிய இடங்களுக்குச் சென்று ஜப்பானிய அக்கிரம முறைகளில் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. ஜப்பான் மறையுமுன் சமக்ஷேம ஏற்பாட்டின்படி தேசம் பூராவும் ஸ்வர்க்கமயமாக ஆகப்போகிறது. யுத்தக் கொடுமைகளை பெற்றோர்களுடன் குழந்தைகளும் அனுபவிக்கப் போகிறார்கள்.

மதத்திலும் அவர்களுக்கு ஆறுதல் கிடைக்காது. ஜப்பானிய கல்வி இலாகா மந்திரி பின்வருமாறு சொன்னார். "சாம்ராஜ்யத்தை விருத்தி செய்யவேண்டுமென்ற கொள்கையை நமது மதம் அடிப்படையாகக் கொண்டது. ஜப்பானின் மதம் ஐக்கிய அபிவிருத்திக் குறியது." ஜெஹோல் எல்லைச் சரகத்தில் பௌத்தகுருக்கள் தொழிற்சாலைகளுக்கு வேலைக்கு அனுப்பப்படுகிறார்கள். கோவில்களை அழித்து அந்த தளவாடங்களை யுத்த முயற்சிக்கும் உபயோகப்படுத்துகிறார்கள். யுத்தத்தைத் தவிர மற்றொன்றும் புனிதமானதல்ல. எல்லோரும் அடிமைகளாகவேண்டும்."

விடியற்காலத்துக்கு முன் இருட்டு அதிகமாகயிருக்கும். ஏழு வருஷ யுத்தத்துக்குப் பின் ஷாங்கேயிலுள்ள சீனர்கள் நடு மத்தியானத்தில் ஸ்நேகிதர்களை குசல பிரச்னம் செய்வதில்லை. "சீக்கிரம் நல்ல காலம் பிறக்கவேண்டும்" என்று அவர்கள் கடவுளிடம் வழிபடுகிறார்கள்.

ஹாங்காங்கிலுள்ள கவர்னர் கோபத்துடன் பின்வருமாறு சொன்னார் "சீனர்களுக்கு ஒளிகளைக் கட்டுவதில் பிரயோஜனமில்லை. அவர்கள் அதற்குள் செல்லமறுக்கிறார்கள். நேசதேச வெடி விமானங்களின் வருகையை ஆவலுடன் வரவேற்கிறார்கள்."

ஜப்பான் ஆக்கிரமித்திருக்கும் நாடுகளில் இந்த மனப்பான்மைதான் காணப்படுகிறது.

## காகித பாணங்கள்.

(எட்டாம் படை செய்தி).

நேசதேச வெடி விமானம் ஓட்டிகளுக்கு இறுதியில் ஐரோப்பாவில் துண்டு பிரசுரங்களைப் போடும் பயிற்சியும் அளிக்கப்படும். இதனால் புதிய விமானிகளுக்கு விமானம் ஓட்டும் பயிற்சி கிடைத்துவிடும்.

துண்டு பிரசுரங்களை வீச விமானங்கள் சென்ற பொழுது அவைகள் இரண்டாம் பக்ஷமான வேலையிலீடுபட்டு அபாயத்துக்குட்படுகின்றன என்று அநேகர் நினைத்தார்கள். வெடி குண்டுகள் தான் ஜெர்மன் யுத்த சாதனங்களை அழித்து யுத்த காலத்தைக் குறைக்கக்கூடும்.

ஹிட்லரின் 80 மிலியன் ஜனங்கள் ஐரோப்பாவில் சிறிய கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் என்று நினைக்கிறோம்.



நேசதேச துண்டு பிரசுரங்கள் தோல்விகளுக்குப்பின் ஜெர்மன் மனவுறுதியைக் குலைத்ததுடன் ஐரோப்பாவிலுள்ள நமது நேசநாட்டு மக்களுக்கும் தைரியம் ஊட்டியிருக்கின்றன.

மார்ச்சு மாதத்தில் மட்டும் பிரிடிஷ் விமானப்படை 56 மிலியன் துண்டு பிரசுரங்களையும், சிறிய பத்திரிகைகளையும் ஐரோப்பாவில் போட்டிருக்கிறது.

ஐரோப்பாவில் எதிர்த்துப் போராடும் படைகள் நம்பிக்கை ஊட்டக்கூடிய செய்திகளை அனுப்ப இனிமேல் சிரமப்படவேண்டியதில்லை. இனிமேல் அவர்கள் ரகசியமாக துண்டுப் பிரசுரங்களை உன்னதமான கட்டங்களில் அமைத்து அவைகளைக் காற்று சிதற அடித்து ஜனங்களுக்கு வழங்குமென்று எதிர்பார்க்கவேண்டியதில்லை.

நம்முடைய துண்டு பிரசுரங்களை வீசும் முறை ஐரோப்பிய படையெடுப்புக்குப் பின் விஸ்தாரமடைந்துவிட்டது. நாலாவது புஜம் போன்ற பிரசுரவி நியோகம் இனிமேல் பலமாக நடைபெறவேண்டும்.

ஐரோப்பிய மக்களை விடுவிக்கப்போகிறோமென்று அவர்களிடம் சொல்லவேண்டும். நமது பீரங்கிப் பிரயோகத்தின் மூலம் நாம் புதிய உலக அமைப்புக்கு வழிதேடுகிறோமென்று உறுதிகூறவேண்டும்.

நியூ யார்க் டைம்ஸ் பத்திரிகை சொல்லுகிறபடி படையெடுப்பின் பொழுது 125 மிலியன் துண்டு பிரசுரங்கள் வீசப்படும். ஆயுதங்களையும், முஸ்தீப்புகளையும் போட துண்டு பிரசுரங்களையும் சாதுர்யமாக வீசவேண்டும். உறைவாளுடன் பிரசாரத்தை ஒப்பிடமுடியாத போதிலும் நமது ஆயுதசாலையில் துண்டு பிரசுரங்களும் ஒரு முக்கிய ஆயுதமாகும்.

## மார்ஷல் டிடோவிடம் 36 டிவிஷன் படைகளிருக்கின்றன.

1941-ல் ஹிட்லர் யூகோஸ்லாவியாவைத் தாக்கியபொழுது ஏற்பாடான எதிர்ப்பு கிடையாது. இன்று மார்ஷல் டிடோவிடம் 36 டிவிஷன் படைகளிருக்கின்றன. இதைத் தவிர அநேக கொரில்லாப்படைகளுமிருக்கின்றன.

சென்ற மூன்று வருஷங்களில் யூகோஸ்லாவிய தேசாபிமானப்படைகள் அநேக கஷ்டங்களைத் தாண்டியிருக்கிறார்கள். துப்பாக்கிகளும், டாங்கிகளும், பீரங்கிகளுமில்லாத படைகளை டிடோ ஒன்று சேர்த்தான். ஒவ்வொரு படையிலும் 3,000 முதல் 5,000 பேர்களிருக்கிறார்கள். 25 முதல் 50 கொரில்லாப்படைகள் அவைகளுக்கு உதவி செய்கின்றன.

இந்த தேசிய விடுதலைப்படை 19 ஜெர்மன் டிவிஷன்களை எதிர்த்துப் போராடுகிறது.

மார்ஷல் டிடோ ஜெர்மன் போக்குவரத்துகளையும், மார்க்கங்களையும் நொருக்கியதால் ஸ்லவேனியாவில் டிரஸ்டி மார்க்கத்தில் 40 ரயில் வண்டிகளுக்குப் பதிலாக தினசரி நான்கு வண்டிகள்தான் இப்பொழுது செல்லுகின்றன. லண்டனிலுள்ள ராணுவ கோஷ்டியின் தலைவரான ஜெனரல் வெலபிட் பின்வருமாறு சொல்லுகிறார்.

"மூன்று வருஷங்களில் நிராயுதபாணிகளான யூகோஸ்லாவியர்கள் இடைவிடாது போராடி சேனையைத் தயாரித்து தேசத்தின் பெரும்பாகத்தை மீட்டு பொதுஜன சபையை ஏற்படுத்தியிருக்கிறார்கள்."

டெயிலி டெலகிராப்பின் ராணுவ நிருபர் பின்வருமாறு எழுதுகிறார். "ஜெர்மனியின் இரண்டாவது பான்ஸர் படையைச் சேர்ந்த 12 டிவிஷன்களை யூகோஸ்லாவியாவில் கொரில்லாப்படைகள் எதிர்த்து நாசம் செய்வதால் நேசதேசக் கக்ஷிக்கு அதிக சௌகரிய மேற்படுகிறது."

டிடோவிடம் இப்பொழுது 3 லக்ஷம் துருப்புகளிருக்கின்றன. ஜெனரல் விளாடிமீர் வெலெபிட் நியாயவாதியாக இருந்து டிடோவின் ராணுவ கோஷ்டியில் சேர்ந்து கொண்டார். அவர் அநேக நடவடிக்கைகளிலீடுபட்டிருக்கிறார்.

மத்தியதரைக்கடல் போர் பிராந்தியத்தின் உயர்தர சேனாதிபதியான ஜெனரல் ஸர் ஹென்றி மெயிட்லாண்டு வில்ஸன் மார்ஷல் டிடோவுக்கு பின்கண்ட செய்தியை அனுப்பியிருக்கிறார்.

"மால்ஜெத், கோர்குலாத்தீவைத் தாக்கியதில் எங்களுடைய பாராட்டைத் தெரிவிக்கிறேன். வெற்றிகரமாகப் போர்புரிந்த சேனைத்தலைவர்களுக்கும், போர் வீரர்களுக்கும் என்னுடைய ஆசியைக் கூறுகிறேன்."

---

# பிரிடனில் தேசீய சேமிப்பு இயக்கம்.

## தேச யுத்த முயற்சியில் ஏழைகளின் பங்கு.

### ஊதியம் பெறுத வேலைக்காரர்கள்.

### பிரிடனின் தேசீய சேமிப்பு கமிட்டித் தலைவரான கிண்டர்ஸ்லி பிரபு.

யுத்த ஆரம்பத்திற்குப் பின் பிரிடனின் யுத்த முயற்சியைப் பற்றிச் சொல்லியிருக்கிறோம். இப்பொழுது தேசிய சேமிப்பு திட்டத்தைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன்.

பிரிடனின் யுத்த முயற்சியில் இரண்டு அம்சங்களிருக்கின்றன. முதலாவதாக தொழிலாளர்களையும், தளவாடங்களையும் உபயோகமுள்ள முறையில் உற்பத்தியிலீடுபடுத்துவது. மற்றொன்று செலாவணியின் பெருக்கையும் ஸ்வதைரியத்லதயும் அபிவிருத்தி செய்வது.

உத்தமபக்ஷமான உற்பத்தி செலாவணியைப் பொருத்தது. பொதுமக்கள் தேவைகளைக் குறைத்துக் கொண்டால் நிர்வாகத்தின் உபயோகத்துக்கு மிகுதியான பொருள்களும் ஆட்களும் கிடைத்துவிடும்.

மூவகைப்பட்ட படைகளுக்கு ஏராளமான மனித பலம் உபயோகப்பட்டபோதிலும் உற்பத்தியை அதிகரிக்க பிரிடிஷ் நிர்வாகம் அநேக ஏற்பாடுகளைச் செய்து தேசத்தின் ஐச்வரியங்களைத் திரட்டியிருக்கிறது.

### கட்டுப்பாடு முறைகள்.

யுத்த ஆரம்பத்தில் தொழிலாளர்கள், தொழிற்சாலைகள், இயற்கைப் பொருள்கள் முதலியவற்றைக் கட்டுப்பாடு செய்ய அரசாங்கம் அநேக ஏற்பாடுகளைச் செய்தது. உணவுப் பொருள்கள் பங்கீடு செய்யப்பட்டன. ஊதியம் அதிகரிக்கப்பட்டது, செலவைக் குறைக்க வரி விகிதங்கள் போடப்பட்டன. சில சாமான்களுக்கு உபரி வரி விதிக்கப்பட்டது. ஏற்றுமதி, இறக்குமதி, சாமான்களின் உற்பத்தி, விநியோகம் முதலியவை கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டன.

செலாவணிப் பெருக்கைக் குறைக்க வரிகள் போடப்பட்டு, விலைவாசிகள் அதிகரிக்காமல் தடைசெய்யப்பட்டது.

### தன்னிச்சையாக சேமிப்பு.

வரி விகிதத்துடன் கடன்தாண்டி உள்ள முதலீடுகளையும் பங்கு முதல்களையும் உபயோகிக்க திட்டம் செய்யப்பட்டது. அரசாங்கம் சேமித்துவைத்திருக்கும நபர்களிடமிருந்தும், ஸ்தாபனங்களிலிருந்தும் கடன்களைப் பெற்று செலாவணியைப் பெருக்கிக்கொண்டது.

முக்கியமாக அரசாங்கம் கட்டாய சேமிப்பை அதிகமாக ஆதரிக்கவில்லை. தன்னிச்சையாக சேமிப்பு செய்வதுதான் அதிக உபயோகமுள்ளதென்று அரசாங்கம் நம்பியிருக்கிறது.

செலாவணிப் பொருள் அநேக வருடங்களாக ஏழைமக்களிடம் குவிந்துவருகிறது. 1912-ம் வருஷத்தில் வருமான வரி போக பாக்கியுள்ள பொருளில் 83 சத விகிதம் வருஷத்துக்கு 500 பவுன் வருமானமுள்ளவரிடம் சிக்கிக்கொண்டது. அவர்களைக் கட்டாயப்படுத்திக் கடன் கொடுக்கும்படி வற்புறுத்துவது நியாயமற்றது. கட்டாய சேமிப்பை வற்புறுத்தினல்



பொது ஜனங்கள் விகிதத்தைத் தவிர்க சேமிக்காமல் பழைய சேமிப்புகளை அழிக்க முற்படுவார்கள்.

ஜனங்கள் தானாக யுத்த கடனுக்கு பொருளீட்டுவதை உணரும்படி செய்ய போதனையும் கல்வி அபிவிருத்தியும் ஏற்படவேண்டும். 45 மிலியன் ஜனங்களுக்கு போதனை செய்யும் வேலையை தேசிய சேமிப்பு இயக்கம் மேற்கொண்டிருக்கிறது.

### 5 லக்ஷம் ஊதியம் பெறுத வேலைக்காரர்கள்.

இந்த இயக்கம் சென்ற யுத்தத்தில் துவக்கமாகி சமாதான காலத்திலும் வேலை செய்தது. யுத்தத்துக்குப் பின் அது அபிவிருத்தியடைந்து நாடெங்கும் பரவியிருக்கிறது.

இதில் இப்பொழுது 5,00,000 ஊதியம் பெறுத வேலைக்காரர்களிருக்கிறார்கள். 1,320 சேமிப்புக் கமிட்டிகளிருக்கின்றன. கிராமங்களிலும், நகரங்களிலும் சப் கமிட்டிகளிருக்கின்றன. வேலை தளங்களிலும், பள்ளிக்கூடங்களிலும் ஜன சமூக சங்கங்களிலும், போர்ப் படைகளிலும், பொதுஜன தற்காப்பு சேவைகளிலும் உள்ள 3,20,000 சேமிப்பு சங்கங்களின் 18 மிலியன் மெம்பர்கள் வாராவாரம் பொருளை மீதப்படுத்துகிறார்கள். அவற்றில் 1,26,000 சங்கங்கள் தெருக்களிலும், கிராமங்களிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. வசூல் செய்கிறவர்கள் நிகுதியாக கிராமங்களுக்குச் சென்று தொகையை வசூல் செய்துவருகிறார்கள்.

வேலை முகாம்களில் 83,000 சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. 100 வேலைக்காரர்களுள்ள 10,000 வியாபார ஸ்தலங்களிலும் சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. வேலைக்காரர்களின் சம்மதத்தின்பேரில் சம்பளத்திலிருந்து சிறிது தொகையை ஒதுக்கிவைத்து அவைகளை அரசாங்கப் பத்திரங்களிலும், ஸேவிங்ஸ் பாங்குகளிலும் பத்திரமாக போட்டுவிடுகிறார்கள். அதிகநேரம் வேலைசெய்வதற்கும் சில்லறை வேலைகளுக்கும் வழங்கப்படும் உபரி ஊதியத்தை வியாபார முதலாளிகள் ஒன்று திரட்டி பத்திரங்களை வாங்குவதில் உபயோகிக்கிறார்கள். பிரிடிஷ் முதலாளிகள் சமஷ்டியும் வியாபார ஐக்கிய சங்க பொது சபையும் சேமிப்பு திட்டத்தை ஆதரித்து சேமிப்பு ஆலோசனை சபைக்கு பிரதிநிதிகளை அனுப்பியிருக்கிறார்கள்.

சேமிப்பு கோஷ்டிகள் பள்ளிக்கூடங்களில் அமைக்கப்பட்டு பிரசாரம் செய்துவருகின்றன. நகரபரிபாலன சபையும் கல்வி இலாகா அதிகாரிகளும் இந்த இயக்கத்துக்குப் பேருதவி செய்திருக்கிறார்கள்.

### சேமிப்பு வாரங்கள்.

"யுத்த ஆயுத வாரம்," "யுத்தக் கப்பல்கள் வாரம்," "ஆகாயப்படை வாரம்," "சேனைக்குப் பாராட்டு வாரம்" போன்ற அநேக வைபவங்களும் ஏற்பாடு செய்யப்படுகின்றன. பிரிடனிலுள்ள 1,320 சேமிப்பு கமிட்டிகளும் தங்களுடைய ஜில்லாக்களில் வாரங்களை ஏற்பாடு செய்கிறார்கள்.

இந்த திட்டத்தின் மூலம் சிறிய சேமிப்பாளரும் பெரிய சேமிப்பாளரும் ஒன்றுபட்டுவிட்டார்கள். போர்ப்படைகளின் தேவைகளை ஜனங்கள் உணர்ந்து மன உறுதியுடன் அவர்கள் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுவதற்கும் இந்த இயக்கம் உதவியிருக்கிறது.

இந்த இயக்கத்தில் நீதிமுறையும் ஊக்கமும் ததும்புகிறது. இதன் நீதிமுறைதான் யுத்தத்துக்கு ஏராளமான பொருளைத் திரட்ட உத்சாகமளித்திருக்கிறது. தேசத்தின் பொருளாதார நிலைமையையும் இது பலப்படுத்தும்.

யுத்த ஆரம்பத்திற்குப்பின் அரசாங்கம் 6,746 மிலியன் பவுன்களைக் கடன்வாங்கியிருக்கிறது. அதில் 40 சதவிகிதம் ஏழைமக்களிடமிருந்து வாங்கப்பட்டது. 1,75,00,000 ஜனங்கள் சேமிப்புப்பத்திரங்களை வாங்கியிருக்கிறார்கள். 2,10,00,000 ஜனங்கள் ஸேவிங்ஸ் பாங்கில் பணத்தைப் போடுகிறார்கள்.

### சேமிக்கும் வழக்கம்.

ஜனங்களிடமுள்ள மூலப்பொருள் தேசத்தின் எதிர்கால க்ஷேமத்திற்கு உதவும். சேமிக்கும் வழக்கம் வேரூன்றிவிட்டதால் அது சீக்கிரத்தில் மறைந்துவிடாது.

சிறிய சேமிப்பு திட்டம் சொல்பமான பொருளுள்ளவர்களுக்குப் பொருந்தும். 15 ஷில்லிங்ஸ் பொருமானமுள்ள சேமிப்பு பத்திரங்களும், மூன்று சத விகித வட்டியுள்ள தற்காப்புப் பத்திரங்களும், ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. பொருளை போஸ்ட்டாபீஸ் ஸேவிங்ஸ் பாங்கிலும், டிரஸ்டி ஸேவிங்ஸ் பாங்கிலும் போடலாம்.

இந்த பத்திரங்களுக்கு வரி விகிதம் கிடையாது. 500 பவுனுக்கு மேல் தனிப்பட்டவர் பத்திரங்களில் பொருளீட்டக்கூடாது. 5 பவுனோ அதன் பெருக்கமாக உள்ள தொகைக்கோ தனிப்பட்டவர் 1,000 பவுன் பொருமான உள்ளவரையில் தற்காப்புப் பத்திரங்களை வாங்கலாம். போஸ்ட்டாபீஸ் ஸேவிங்ஸ் பாங்கில் ஒருவருஷத்தில் ஒருவர் 500 பவுன்களை டிபாஸிட் செய்யலாம். பெரிய சேமிப்பு திட்டப்படி ஸ்தாபனங்களும் வியாபார ஸ்தலங்களும் 2½ சதவிகிதம் வட்டியுள்ள தேசிய யுத்தக் கடன் பத்திரங்களிலும், மூன்று சத விகித வட்டியுள்ள சேமிப்பு பத்திரங்களிலும் பொருளைப் போடலாம்.

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 209. (1-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5- 8-44 | முனிஸிபல் ஆபீஸ் ... | மாலை 6.00 | 9- 8-44 | C. S. M. பள்ளிக்கூடம் ... | காலை 10.00 |
| 6- 8-44 | கீரனூர் ... | „ 7.00 | „ | ராணி பெண் பாடசாலை ... | „ 10.45 |
| „ | நாஞ்சூர் ... | „ 7.30 | „ | பூங்குடி ... | மாலை 7.00 |
| 7- 8-44 | பூவரசகுடி ... | „ 7.00 | „ | சத்தியமங்கலம் ... | „ 7.30 |
| „ | வேங்கடக்குளம் ... | „ 7.30 | 10- 8-44 | மிரட்டுநிலை ... | „ 7.00 |
| 8- 8-44 | பெருங்களூர் ... | „ 7.00 | „ | அரிமளம் ... | „ 7.30 |
| „ | ஆதனக்கோட்டை ... | „ 7.30 | 11- 8-44 | உடையாளிப்பட்டி ... | „ 7.00 |
| 9- 8-44 | காலேஜ் A இங்கிலீஷ் ... | காலை 11.00 | „ | கிள்ளுகோட்டை ... | „ 7.30 |
| „ | காலேஜ் B தமிழ் ... | „ 11.00 | | | |

### பிரஸங்கம் 210. (2-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12- 8-44 | முனிஸிபல் ஆபீஸ் ... | மாலை 6.00 | 16- 8-44 | C. S. M. பள்ளிக்கூடம் ... | காலை 10.00 |
| 13- 8-44 | குடுமியாமலை ... | „ 7.00 | „ | ராணி பெண் பாடசாலை ... | „ 10.45 |
| „ | பரம்பூர் ... | „ 7.30 | „ | குழிபிறை ... | மாலை 7.00 |
| 14- 8-44 | வெங்களூர் ... | „ 7.00 | „ | செவலூர் ... | „ 7.30 |
| „ | கோனாபட்டு ... | „ 7.30 | 17- 8-44 | கொன்னையூர் ... | „ 7.00 |
| 15- 8-44 | நச்சாந்துபட்டி ... | „ 7.00 | „ | மேலவேகுப்பட்டி ... | „ 7.30 |
| „ | விராச்சிலை ... | „ 7.30 | 18- 8-44 | பனையப்பட்டி ... | „ 7.00 |
| 16- 8-44 | காலேஜ் A இங்கிலீஷ் ... | காலை 11.00 | „ | ராங்கியம் ... | „ 7.30 |
| „ | காலேஜ் B தமிழ் ... | „ 11.00 | | | |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 5—8—44 | திருமெய்யம். | 12—8—44 | பொன்னமராவதி. |
| 6—8—44 | மருதன்கோன்விடுதி. | 13—8—44 | ஏம்பல். |
| 8—8—44 | ராமச்சந்திரபுரம். | 15—8—44 | வடகாடு |
| 10—8—44 | ஆலங்குடி. | 17—8—44 | குழிபிறை. |
| 11—8—44 | புதுக்கோட்டை. | 18—8—44 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750 ...

புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1944-ம் வருஷம் ஆகஸ்டு மீ 12உ [ந. 210

தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CCX.

## யுத்தத்துக்குப்பின் உலக சீர்திருத்தம்.

### 1. சமாதான ஊக்கம்.

சீர்திருத்தம் அடிக்கடி நடைபெறுகிறது. யுத்த காலத்திலும் சரி, சமாதான காலத்திலும் சரி, ஜனங்களும், தேசங்களும் மாறுதலடையும் சந்நிவேசத்துக்குத் தக்கவாறு மாறுதலடைகிறார்கள். அவசியமிருந்தால் நாசமும், சிதைவும் ஏற்படுவதால் சீர்திருத்தம் ஜன சமூகத்தின் பிராணன்போன்றது.

மனிதவர்க்கத்துக்கும் தேசங்களுக்கும் நெருக்கடி ஏற்படக்கூடும். ஒவ்வொரு விபத்தின்பொழுதும் சீர்திருத்தத்துக்கு அதிக உற்சாகம் ஏற்படும். யுத்தம் அவ்விதமான ஒரு விபத்து.

யுத்தம் நடந்து கொண்டிருக்கும்பொழுது யுத்தத்துக்குப் பிந்திய அலுவல்களைப் பற்றி யோசிப்பது காலம் தப்பியதல்லவாவென்றும் இது கவனக் குறைவை ஏற்படுத்தாதாவென்றும், அனேகர்கள் கேட்கிறார்கள்.

சிறந்த முறையில் போர்புரிவதற்கு உயர்வான லக்ஷியங்கள் இருக்கவேண்டும். யுத்தத்துக்குமுன் நடைபெற்ற உலக சீர்திருத்தங்களிலெல்லாம் இந்த லக்ஷியம் புலப்படுகிறது. கூலிகளைப்போல் நாம் செல்வத்துக்கும், ஆதிக்கத்துக்கும் சண்டையிடவில்லை. மனிதவர்க்கத்தின் க்ஷேமத்தைய அபிவிருத்தி செய்வதுதான் நமது லக்ஷியம்.

சீர்திருத்தமென்ற பேச்செல்லாம் அபத்தமானது. ஏற்கனவே அனேக ஆகாசக் கோட்டைகள் கட்டிவிடவில்லையா! ஜனாதிபதி வில்ஸனின் 14 நிபந்தனைகளும் சர்வதேச சங்கமும் எங்கு சென்றன" என்று இன்னும் சிலர் கேட்கிறார்கள்.

ஆனால் இந்த இகழ்ச்சிகளைப் படிப்பினையாகக்கொண்டு இந்தத் தடவை சிறந்த ஏற்பாடு களைச் செய்யவிரும்புகிறோம்.

யுத்தத்தில் வெற்றிபெற முயலுவதுபோல் நிரந்தரமான சமாதானத்தை நிலை நாட்டவும் நாம் முயலுவோம். இந்த நடவடிக்கையும் சிரமசாத்தியமானதுதான். நாம் இப்பொழுதே திட்டங்களை நிறுவி ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். நம்முடைய ராஜதந்திரிகளும் தலைவர் களும் நமக்கு நியந்தாவாகயிருப்பார்கள்.

யுத்த வெற்றிகளைவிட சமாதான நிலைப்பு புகழ்ச்சிகளைப் பெறக்கூடியது சாசுவதமானது. பீதியின்மை, வறுமையின்மை, அபிப்பிராயத்தை வெளியிடும் உரிமை, செயலுரிமை ஆகிய நான்கு சுதந்திரத்துக்கும் நாம் பாடுபடுவோம்.

இந்த நடவடிக்கைகள் ஒவ்வொரு தேசத்திற்குரிய வகையிலும், சர்வதேச க்ஷேமத்திற் குரியவகையிலும் நடை பெறவேண்டும்.

சர்வதேசங்களுக்குரிய நடவடிக்கைகள் நமக்கு குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அட் லாண்டிக் சாஸனம், ஹாட் ஸ்பிரிங்ஸ் மகாநாடு, பிரெட்டன்வுட்ஸ் மகாநாடு முதலியவை கள் மிஸ்டர் பெவின் சொல்லுகிறபடி சமாதானத்துக்குரிய பரம ஔஷதங்கள். உயிரைக் காப்பாற்ற அங்கத்தைச் சோதிப்பது அதம பக்ஷமான உபாயமாகும். சீர்திருத்தத்தின் மூலம் ஆயுளையும் தேகத்தையும் காப்பாற்றிவிடலாம். சர்வதேசங்களின் பிரச்னை மிகவும் கஷ்ட சாத்தியமானது. உலக சமஷ்டியும் மனிதவர்க்கத்தின் சமாஜமும் இன்றியமையாத வைகள்.

தேசிய யுத்த முன்னணி பகட்டன்னியில் வேலை செய்தபோதிலும் அதன் அலுவல்கள் முக்கியத்வமுள்ளவை. தனிப்பட்டவர்களின் மேன்மையான வாழ்க்கையையும் தேசங்களின் க்ஷேமத்தையும் அது கோரவேண்டும். சர்வதேச ஸ்தாபனம் ஒரு தேசத்தின் அமைப்பைப் பொருத்தது. உலக சமாஜமும் அங்கத்தினர்களின் பலத்தைப்பொருத்து உறுதியுடனி ருக்கும்.

ஒவ்வொரு தேசத்தின் பலத்தையும் அதிகரிக்கவேண்டுமென்று தேசிய யுத்த முன்னணி பாடுபடவேண்டும்.

இந்தியா சம்பந்தப்பட்டமட்டில் நமது சோல்ஜர்களும், மாலுமிகளும், விமானிகளும் வெற்றிக்காகப் பாடுபடுகிறார்கள். உள் நாட்டிலுள்ள நாம் சமாதான ஏற்பாடுகளைச் செய்யா மல் தூங்குவது சரியல்ல. இந்தியாவின் தேவை அதிகம். இந்தியாவிற்கு விஜயம் செய் திருந்த A. V. ஹில் என்ற ஆசிரியர் பின்வருமாறு சொன்னார்:—

'இந்தியாவின தேக ஆரோக்கியமும் ஜனசமூகச் சேவைப் படைகளும் மேநாடுகளுடன் ஒப்பிடப்பட்டால் கேவலமான ஸ்திதியிலிருக்கின்றன. மேநாட்டின் அந்தஸ்துக்கு இந்தி யாவை உதாரணம் செய்யவேண்டுமானால் ஏழுமடங்கு டாக்டர்களும், 70 மடங்கு சுகாதார விஸிட்டர்களும், 100 மடங்கு அதிகமான தாதிகளும் தேவைப்படும். இந்தியாவின் சுகா தார நிலைமை மிகவும் கேவலமாகயிருக்கிறது. இங்கிலாந்திலும் வைத்திய நிபுணர்களும் மற்ற சேவைப் படைகளும் எடுத்துக்கொண்டுள்ள பிரயாசையினால் இந்தியாவின் ஜனத் தொகை யுத்தத்துக்கு முந்திய 10 வருஷங்களில் 50 மிலியன் கூடுதலாகயிருக்கிறது. மிகுதி யான ஜனத்துடன் மேன்மையான ஆரோக்கியமும் புஷ்டியான உணவுமிருந்தால் 30 வருடங் களுக்குள் இந்தியா 700 மிலியன் மக்களைப் போஷிக்க வேண்டி ஏற்பட்டுவிடும். சிசுக்கள் மரணமும், பஞ்சமும், நோயும் இந்தியாவின் ஜனத்தொகையை அழித்துவிட்டன. அவை கள் இன்னும் தாண்டவமாடுகின்றன. மேநாட்டு நடவடிக்கை மூலம் அவைகளை நாம் சமாளிக்க முயன்று ஜனத்தொகையின் குறைவைத்தேக்கி வருகிறோம்'.

"ஜனங்களின வாழ்க்கைமுறையை அதிகரிக்கவேண்டுமென்றால் இருபது வருடங்களுக் குள் இந்தியாவின் உற்பத்தி மூன்று மடங்கு அதிகரிக்கவேண்டும். இது பிரம்மாண்டமான காரியம். இந்தியாவின் தொழிற்சாலை உற்பத்தி ஆறு மடங்கு அதிகரிக்கவேண்டும். விவ சாய முறைகளில் விசேஷ மாறுதல்கள் ஏற்பட்டு உற்பத்தி இரட்டிக்கவேண்டும்."

இந்திய தேசிய முன்னணி, அஞ்ஞானம், வறுமை, வியாதி இவைகளைப் போக்குவதில் கவனம் செலுத்தினால்தான் வாழ்க்கைமுறை உயர்ந்து இந்தியாவின் அபிவிருத்தி ஏற்படும்.

JL
V211Q4!19(3,0) m,139
N44?



# மிஸ்டர் சர்ச்சிலின் யுத்த விளக்கம்.

(1944-ம்௵ ஆகஸ்டு௴ 3௳).

## எதிரி எல்லாப் போர்முனைகளிலும் பின்வாங்குகிறான்.

ஆகஸ்டு 2-ம் தேதியன்று பிற்பகலில் நான் சபைக்கு மொத்தத்தில் நல்ல ரிபோர்ட் சமர்ப்பிக்கமுடிகிறது. உலகெங்கும் ஒவ்வொரு போர்முனையிலும் நேசதேசப் படைகள் முன்பு ஜெர்மன், ஜப்பானியப் படைகள் பின்வாங்கி வருகின்றன. நாம் விமானம், கடல், சப்மரீன் படைகளில் ஸ்திரமான ஆதிக்கம் பெற்றிருக்கிறோம். இந்த ஆதிக்கம் விடாமல் அதிகரித்துவருகிறது.

## யூ படகுகள்.

1944-ம்௵த்தில் எதிரி சப்மரீன்களால் ஏற்பட்ட சேதத்தை முன்வருஷச் சேதத் துடன் ஒப்பிட்டுப் பார்த்தால் ஒன்றுமே இல்லை எனலாம். கிழக்கிலும், மேற்கிலும் விரோதி களது கடற்படை பலம் க்ஷீணித்துவருகிறது. அவர்களது கடற்படை பெரிதும் இயங்கக் கூடியதாக இல்லை. அதற்கு நாம் விளைவித்த சேதத்தில் பாதிகூட நமது கடற்படைக்கு எதிரிகளால் ஜூன் மாதத்துடன் முடியும் 6 மாதங்களில் விளைவிக்கப்படவில்லை.

## பஸிபிக்கில் வெற்றிகள்.

பஸிபிக்கில் நேசதேசத்தினருக்கு வெற்றி ஏற்பட்டு வருவதால் தூரக் கீழ்த்திசைப் போர் துரிதமாக உச்ச ஸ்திதியை அடைய ஹேது ஏற்படுகிறது. கடல் விமானப் படைபலம் மேன்மேலும் குறைந்து பலஹீனம் அதிகரித்து வருவதாலும், விமானப்படை பலவிடங் களிலும் பிரித்து வைக்கப்பட்டிருக்கிறதென்ற உணர்ச்சியாலும், உள்நாட்டுப் பொருளாதாரக் கஷ்டங்களாலும் ஜப்பானின் முக்கியமான யுத்தத் தலைவரான அட்மிரல் டோஜோவும் வாஷிங்டனில் யுனைடெட் ஸ்டேட்ஸுக்குத் தமது சமாதான நிபந்தனைகளை எடுத்துரைப்ப தாக ஒரு சமயம் பெருமை பேசிக்கொண்ட அட்மிரல் யாமமோடோவும் (டோஜோவின் நெருங்கிய சகா) வீழ்ச்சியுற்றனர். ஜப்பானில் இந்தப் பெரிய ராஜீய ராணுவ நடுக்கத்தை உண்டாக்கிய சக்திகளையும் அவற்றின் அளவையும் நாம் இங்கிருந்து அளந்தறிய முடியாது. ஆனால் இவ்விருவரும் நினைத்தபடி இவர்களது திட்டங்கள் கைகூடிவருகின்றன என்ற நம்பிக்கை ஏற்பட்டிருந்தால் இம்மாதிரி நிகழ்ந்திராதென்று சொல்லமுடியும்.

நான் ஒரு சமயம் நினைத்ததைவிட ஹிட்லர் தோல்விக்கும் ஜப்பானின் தோல்விக்கு மிடையிலுள்ள இடைக்காலம் வெகு குறைவாக இருக்குமென்ற உணர்ச்சி எனக்கு அதிகமாய் வருவதை நான் சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

## அஸ்ஸாம் பர்மா போர்.

ஓயாமல் நடந்த சண்டையினாலும் பிரதேசத்தின் சிக்கலான தன்மையினாலும் பர்மாப் போரின் விவரங்களைக் கூர்மையாக அறிவது கஷ்டமாக இருந்திருக்கிறது. பொதுப்படை யாகப் பேசுமிடத்து கியூபெக்கில் சென்ற இலையுதிர் காலத்தில் சீனுக்குப்போகும் பெரிய அமெரிக்க விமானப் பாதைக்கு அதிகப் பாதுகாப்பளிப்பதற்காக வட பர்மாவுக்குள் படை யெடுத்துச் செல்லுவதென முடிவுசெய்து லார்டு மவுண்ட் பேட்டன் தலைமையில் 2½ லக்ஷம் பிரிடிஷ் ஏகாதிபத்தியத் துருப்புகளை ஈடுபடுத்தினோம். ஆனால் இந்தியாமீது படை யெடுத்து வருவதற்காகவும் அமெரிக்க விமானப் பாதையை துண்டிப்பதற்காகவும் எதிர் திசையிலிருந்து வந்த ஜப்பானியப் படைகளுடன் ஆரம்பத்திலேயே 1,200 மைல் அகல முள்ள போர்முனைப் பலவிடங்களில் போராட்டமேற்பட்டது. இந்த அஞ்சாத, உக்ரமான போரில் ஒவ்வொரு இடத்திலும் ஜப்பானியரைப் பின்னடையச் செய்திருக்கிறோம். வட பர்மாவில் முக்கியமானவிடங்களில் வடக்கிலிருந்து ஜெனரல் ஸ்டில்வெல் தலைமையில் வந்த படைகளும் சீனப் படைகளும் பிரிடிஷ் செயிந்தாரப் படைகளும் பல முக்கியமானவிடங் களைப் பிடித்தன.

இந்த யுத்தத்தில் மிகக் கஷ்டமான வேலையைச் செய்த பிரிடிஷ் 14-வது படைக்கு நாம் நன்றி செலுத்தவேண்டும்.

### பிரான்ஸில் போர்.

அட்லாண்டிக் கரையில் முன்னேறும் முதலாவது அமெரிக்கப்படை செலூனே நதியை அடைந்திருக்கிறது. பிரெஸ்ட் தீபகற்பத்தின் மத்தியிலுள்ள ரென்னெஸ் என்ற முக்கியமான ரெயில்வே ஸ்டேஷனை அது அடைந்திருக்கக்கூடும். [ரென்னெஸ் விழுந்து விட்டது.—ப.]

ஆள் பலம், ஆயுத பலம், விமான பலம் இவற்றில் நாம் எதிரிகளை வெகுவாக மிஞ்சி இருக்கிறோம். போர்முனை திறக்கப்பட்டால் நமது படைகள் நடமாடுவதற்கு அதிக வசதி இருக்குமென்பதிலும் எனக்குச் சற்றும் சந்தேகமேற்படவில்லை. 40-வருஷங்களில் கண்டிராத பெரும் புயல்களும் ஜெர்மன் சுரங்க வெடிகளும் நூற்றுக்கு அதிகமான ஜெர்மன் சப்மரீன்களும், மோட்டார் டார்பிடோ வெடிகளும் இருந்தபோதிலும் 100-மைல் தூரத்திற்குக் கால்வாயைக் கடந்து ஓயாமல் கப்பல்கள் போகும்படி செய்து மிகப் பெரியதாயும் சக்திவாய்ந்ததாயும் சிறந்த ஆயுத சாதனங்களைக் கொண்டதாயுமுள்ள படையை பிரெஞ்சுக் கரையில் இறக்கியிருக்கிறோம்.

### இதாலியப் போர்.

இதாலியில் நேசப்படை ரோமை எல்லா அபாயங்களிலிருந்தும் பாதுகாத்து விரோதிகளை பிரென்ஸுக்கு முன்பு துரிதமாகத் தள்ளிச் சென்றிருக்கிறது. இலையுதிர்காலமெல்லாம் ஜெனரல் அலெக்ஸாண்டர் தீவிரமாகப் போர் நடத்துவார் என்று நாம் நம்பலாம். [பிளாரன்ஸை நேசதேசப்படை ஆக்கிரமித்தது.—ப.] இது நேசதேசத்தார் நடத்தும் போராகும். அமெரிக்க ஜப்பானியரும் கிரேக்கரும் வேறு பல தேசத்தினரும் தீவிரமாக நம்முடன் சேர்ந்து போராடுகின்றனர். வீரமுள்ள இந்தியர்கள மிகக முக்கியமான பங்கு கொள்ளுகிறார்கள். இதாலிய பூமியை சுத்தபபடுத்துவதில் சகல தேசத்தாரும் ஈடுபட்டிருக்கின்றனர்.

### கிழக்குப் போர்முனை.

ஜெர்மன் ராணுவத்தின் பலத்தைக் குலைக்கும் முக்கிய வேலையை ருஷ்ய ராணுவமே செய்தது. (கரகோஷம்). கடல் ஆகாயம் இவற்றில் நாம் நம்மைப் பராமரித்துக் கொண்டிருக்கக் கூடும். ஆனால் ருஷ்யப்படை ஜெர்மன் படையைக் கிழித்து அதற்குப் பெரும் ஆள் சேதத்தை உண்டாக்கியதுபோல உலகில் வேறு எந்தப் படையினாலுமே முடிந்திராது. ஸ்டாலினுக்கு நான் வந்தனஞ் செய்கிறேன். (கரகோஷம்). அவர் ருஷ்யாவின் பெரிய வீரராவர். நாம் ருஷ்யாவுடன் செய்த 20-வருஷ ஒப்பந்தம் ஐரோப்பாவின் சமாதானம், ஒழுங்கு, முன்னேற்றம் இவற்றைப் பாதுகாப்பதற்கு மிக்க ஸ்திரமான உதவியாக இருக்குமென உறுதியாக நம்புகிறேன்.

கார்ப்போரல் ஹிட்லரது ராணுவ முறை ருஷ்யாது வெற்றிக்கு ஓரளவு புரிந்திருக்கலாம். அவரது செயலிலுள்ள சில குற்றங்களை ராணுவ முட்டாள்கள்கூட காணாமலிருக்க முடியாது. தற்போது வடபின்லாந்தில் 10 ஜெர்மன் டிவிஷன் படைகளும், பால்டிக் நாடுகளில் 20 அல்லது 30 டிவிஷன்களும் அணிக்கப்பட்டிருக்கின்றன. மூன்று அல்லது நான்கு மாதங்களுள் இவற்றை ஆயுத சாதனங்களுடன் திருப்பிக் கொண்டுவந்து ருஷ்யாது முன்னேற்றத்தை அவர் தடுத்திருக்கலாம்.

### ஜெர்மனியின் உள்நாட்டு நிலைமை.

நிலைமை, ஜெர்மன் படைகள் எல்லாப் போர்முனைகளிலும் பின்வாங்குவதுடன் உள்நாட்டில் ஏற்பட்ட சம்பவங்கள் ஜெர்மானியர்களின் நம்பிக்கையையும் படைகளின் விசுவாசத்தையும் பாதித்துவிட்டன.

ஜெர்மனியிலுள்ள உயர்தர பிரமுகர்கள் ஒருவரை ஒருவர் கொலை செய்கிறார்கள், அல்லது அதற்காக முயற்சி செய்கிறார்கள். இவைகள் உள்நாட்டில் நிலைமை மோசமாய் விட்டது என்பதை வெளிப்படுத்துகின்றன. இந்த சம்பவங்களே யுத்தத்தை முடிவுசெய்து விடுமென்றாவும் அவைகளை நாம் பூராவும் நம்பியிருக்கக்கூடாது. நமது படை பலமும் தீர்மானமும் தான் நமக்கு வெற்றியளிக்கக்கூடும்.



## வார யுத்தச் செய்திகள்.

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 1—8—44 (செவ்வாய்க்கிழமை). | நேசதேசப் படைகள் நார்மண்டியில் லெபெனி போகேஜைப் பிடித்தன. |
| | ருஷ்யர்கள் பால்டிக்கடல் பிராந்தியத்திலுள்ள ஜெர்மன் படைகளைத் துண்டித்துவிட்டார்கள். |
| 2—8—44 (புதன்கிழமை). | அமெரிக்கப் படைகள் ரோடாத் தீவில் இறங்கின. |
| | ருஷ்யர்கள் லிதுவேனியாவில் விஸ்டிடியாவைப் பிடித்தார்கள். |
| | அமெரிக்கப் படைகள் பிரான்ஸில் பிரிட்டானிக்குள் புகுந்தன. |
| | துருக்கி ஜெர்மனியிடம் கொண்டிருந்த ராஜ தந்திர பொருளாதார உறவுகளை ரத்து செய்தது. |
| 3—8—44 (வியாழக்கிழமை). | அமெரிக்கப் படைகள் பிரான்ஸில் ரென்னஸைக் கைப்பற்றின. |
| | போலிஷ் தேசாபிமானப் படைகள் பகிரங்கமாகக் கலகம் செய்து வார்ஸாவின் சில பாகங்களைக் கைப்பற்றின. |
| | செம்படை விஸ்டுலா நதியைத் தாண்டிவிட்டது. |
| | நேசதேசப் படைகள் பர்மாவில் மிட்கிஞலைக் கைப்பற்றின. சீனப்படைகள் டெங்சங்குக்குள் புகுந்தன. |
| 4—8—44 (வெள்ளிக்கிழமை). | ஜெர்மன் சேனையைக் களைந்துவிடும்படி ஹிட்லர் உத்தரவிட்டான். |
| | பிரிடிஷ் படைகள் பிரான்ஸில் வில்லியர்ஸ் போசேஜை ஆக்கிரமித்தன. |
| | அமெரிக்கப் படைகள் பிரான்ஸில் போகேஜைப் பிடித்தன. |
| 5—8—44 (சனிக்கிழமை). | பிரான்ஸில் பிரிட்டானியிலுள்ள ஜெர்மன் படைகள் தப்பி ஓட வழியன்றியில் சூழப்பட்டன. |
| | ருஷ்யப்படைகள் கிழக்கு பிரஷ்யா எல்லைச் சரகத்தை அடைந்தன. கார்பேதியன் மலைகளிலுள்ள ஸ்ட்ருஜ் என்ற அரணையும் கைப்பற்றின. |
| | நேசதேசப்படைகள் இதாலியில் பிளாரென்ஸுக்குள் புகுந்தன. |
| 6—8—44 (ஞாயிற்றுக்கிழமை). | ருஷ்யர்கள் ருஷ்யாவில் டுரோகோபியாவைக் கைப்பற்றினார்கள். |
| | 14-வது இந்தியப்படை மணிப்பூர் எல்லைச் சரகத்துக் கருகில் பர்மாவுக்குள் புகுந்தது. |
| | நேசதேசப்படைகள் லவால், மாயெனி, சாட் கோஸ்டியா முதலிய இடங்களைப் பிடித்தன. |
| 7—8—44 (திங்கட்கிழமை). | செம்படை போலந்திலுள்ள முக்கியமான எண்ணெய் பிரதேசமான போரிஸ்லாவைக் கைப்பற்றிற்று. |
| | பிரிடிஷ் படைகள் நார்மண்டியில் வைரியை விடுவித்தன. |

### (B)-செய்திச் சுருக்கம்.

**மேற்குப் போர்முனை (பிரான்ஸ்).**—மேற்குப் போர்முனையில் அவ்ராஞ்செஸிலிருந்து தெற்கே முன்னேறிய அமெரிக்கப் படைகள் சீ நதியிலுள்ள பிரெசியையும், முக்கிய ரயில்வே ஜங்ஷனான பாண்டார்ஸனையும், ஸெயின்ட் மாலோ விரிகுடாவின் கடற்கரை ஓரமாக பூ படகு

களுக்கு வடமேற்கே பத்து மைல் தூரத்திலுள்ள ரென்னிஸ் விமான தளத்தையும் டால், பெளகர்ஸ், பாரெண்டான், மார்டேன், ஸெயிண்ட் ஹிலேர், ஸெயிண்ட் பாயிஸ், லாவால், மாயெனி, சாட் கோண்டியர் முதலிய இடங்களையும் கைப்பற்றின.

ஒரு வாரத்திற்குள்ளாக படைகள் லுவார் நதிக்கு முன்னேறுகின்றன. பிரெஸ்ட், லோரியெண்ட், ஸெயிண்ட் நாசரேயை நோக்கிக் குவிந்து வருகின்றன.

மார்டேயினிலிருந்து சௌர்டவால் வரையிலுள்ள பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமையன்று ஜெர்மனி செய்த பலமான எதிர்த் தாக்குதலைத் தகர்த்தடித்துவிட்டோம்.

செவ்வாயன்று மார்டேனுக்குக் கிழக்கில் ஆறு மைல்களிலுள்ள பாரண்டானுக்குள் அமெரிக்கப்படை நுழைந்தது. இது புதிய முன்னேற்றமாகும். எதிரியின் பதில் தாக்குதலைக் கண்டு அஞ்சாமல் அமெரிக்கப் படைகள் பிரிட்டனிக்குக் கிழக்கிலும் மாயென்னி நதிக்குக் கிழக்கிலுள்ள பிரதேசம் மூலமாக பாரிஸை நோக்கி முன்னேறுகின்றன.

**காமாண்டுக்குத் தெற்கில்.**—பாரெட் லே எவாக்வியைச் சுத்தி செய்த பின் சாலியூவர் நதியைத் தாண்டிவிட்டு நேசதேசப்படைகள் லா பெனி போகேஜ், கிரான்வில்லி, வைரி, மாண்ட் பின்கன், கின்காம்பு, பிரியூக், செர்டே வானௌஸ், ரெடான், டௌசேயைப்பிடித்தன.

**கேயன் பிரதேசம்.**—பிரிடிஷ் படைகள் ஸெயிண்ட் ஓயட், வில்லர்ஸ் போகேஜ், நோயர்ஸ் எஸ்குவே, எவ்ரெஸி, 112, 113 குன்றுகள், 237, 359 முனைகளைப் பிடித்தனர். ஜெர்மானியர்கள் வில்லேடியூ பெர்ச்சி முனையிலிருந்து பின்வாங்கிவிட்டார்கள். ஆர்ன் நதியின் மேற்குக் கரையிலும் ஆவ்னேக்கு வடக்கிலுள்ள பிரதேசத்திலும் நேசதேசப்படைகள் நிலைபெற்றிருக்கின்றன.

**கிழக்குப் போர்முனை.**—

**வடக்குப் பகுதி.**—லித்வேனியாவின் பழைய தலைநகரமான கோவ்னோ என்ற கௌனஸும் பிரஷிய எல்லைச் சரகத்திலுள்ள விர்பலிஸ் என்ற வீர்பாலனும் பிடிபட்டன. கிழக்கு பிரஷ்யாவிலிருந்து பால்டிக் நாடுகளுக்குப் போகும் தரைப் போக்குவரத்துகள் துண்டிக்கப் பட்டுவிட்டன.

**வார்ஸா.**—வார்ஸாவுக்கான போர் நடைபெறுகிறது. ருஷ்யர்கள் வார்ஸாவுக்குத் தென் கிழக்கிலுள்ள ஸான்டோமியர்ஸைப் பிடித்தார்கள். வார்ஸாவிலுள்ள போலிஷ் தேசாபிமானப் படைகள் பகிரங்கமாகப் புறப்பட்டு ஜெனரல் போஸ்டாபீஸ்களையும், வாயு உற்பத்தி சாலைகளையும் மின்சார உற்பத்தி நிலையத்தையும் கைப்பற்றின.

**செக்கோஸ்லோவாகியா எல்லைச் சரகம்.**—செக்கோஸ்லோவாகியாவுக்குப் போகும் வழியில் முக்கிய எண்ணெய் பிரதேசமான போரிஸ்லா என்ற போலிஷ் நகரம் கைப்பற்றப்பட்டது.

**தெற்குப் பகுதி.**—ஜாராஸ்லாவுக்கு மேற்கிலுள்ள ரெஸெஸ்ஸௌ, மிலெக், டுரோஹோபிக்ஸ், சாம்பார், கிரோ, கார்பேதியன் கணவாய்களுக்குச் செல்லும் டிப்ளானி, மெடெனிகி, கார்பேதியன் மலைகளின் வடக்குச் சரிவுகளிலுள்ள பெஸ்கிடெஸ் கணவாயும் பிடிபட்டன.

**இதாலி.**—நேசதேசப்படைகள் சரித்திரப் புகழ்பெற்ற பிளாரென்ஸை ஆக்கிரமித்தன. பிளாரென்ஸுக்குக் கிழக்கிலும் மேற்கிலும் ஆர்னோ நதியின் தெற்குக்கரை ஓரமாகக் கடும் போர் நடைபெறுகிறது.

பிளாரென்ஸுக்கு சமீபத்தில் கீழ்கண்ட இடங்கள் பிடிபட்டன. ஸடோர்டா, போனடா, ஜினெஸ்ட்ரா, இம்ப்ராநேடா, மாண்டிபோனி, இன்சிசா, பான்டாஸீவ், வாலுஸ்ஸோ, பாக்னோ, அரிபோலி, ரிக்னோனோ.

**ஏட்ரியாடிக் பகுதி.**—போலிஷ் துருப்புகள் ஸஸ்ஸபெஸ்ஸானோவுக்குள் புகுந்துவிட்டன.

**விமான நடவடிக்கை.**—கீழ்கண்ட இடங்கள் தாக்கப்பட்டன. சார்பிரக்கன், முல்ஹௌஸ், ஸ்ட்ராஸ்பர்க், மெர்க் வில்லர், பீனமுண்டி, ஆன்கிளாம், ராஸ்டாக், கீல், பிரெமென், பெர்லின், ஹாம்பர்க், கீல், ராக்மெல் (போலந்து).

**தூரக்கிழக்கு.**—அமெரிக்கப் படைகள் தென்மேற்கு பஸிபிக்கில் மாரியனாஸ் தீவுக் கூட்டத்திலுள்ள ரோடாத் தீவில் இறங்கின.



குவாம் தீவில் கீழ்கண்ட இடங்கள் பிடிபட்டன. இடாரு, பாடோ, பூலான், நாயிட், டியான், சாகியோ, டாட், டிமோனக்.

பிலிப்பைன்ஸ் தீவுகளில் டாவோபேரில் வெடிகுண்டு வீச்சேற்பட்டது.

**சைனா.**—ஜப்பானியர்கள் ஹெங்கியாங்கைப் பலமாகத் தாக்கினார்கள். அமெரிக்க விமானப்படை ஹாங்காங்கையும், ஷாங்கேயையும் தாக்கின.

**பர்மா.**—ஒரு மாத காலமாக சமாளித்து நின்ற மிட்கினா என்ற ஜப்பானிய தற்காப்பு அரண் விழுந்துவிட்டது.

பாலேல் டாமு ரஸ்தா வழியாகப் பின்வாங்கி ஓடும் ஜப்பானியர்களைப் பின்பற்றி செல்லும் நேசதேசப்படைகள் பர்மா எல்லைச் சரகத்தைத் தாண்டி டாமு அபாஷா என்ற நகரத்தைக் கைப்பற்றின. இந்த நகரம் மணிப்பூர் எல்லைச் சரகம் தாண்டி $1\frac{1}{2}$ மைலில் உள்ளது.

நேசதேசத்தார்கள் தற்காப்பு முறையை விட்டு முன்னேறித் தாக்கும் போரைத் துவக்குகிறார்கள்.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**30—7—44.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.-விமானத் தொழிற்சாலைகள்.-ஹங்கேரியிலுள்ள டுனா (Duna).
விமான நிலையம்.-ஹங்கேரியிலுள்ள டோகோல் (Tokol).
எண்ணெய்க் கிணறுகள்.—தென்மேற்கு ஹங்கேரி (S. W. Hungary).
ரயில்வே தளங்கள்.-யூகோஸ்லாவியாவிலுள்ள பிராட் (Brod).
ஸப்ளை டெப்போ.—பிரான்ஸிலுள்ள வாட்டெனு (Watten)க்கு அருகில்.
ரயில் பாலங்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்களுக்குப் பின்.
இரவு.—பறக்கும் வெடி ஸ்தலங்கள்.-பிரான்ஸிலுள்ள பாஸ் டி கலே (Pas De Calais) பிரதேசம்.

**இதாலி (Italy).**

(6 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன. 9 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).
எதிரி போக்குவரத்துகள் ஸப்ளை லயன்கள்.-வடக்கு இதாலியில் யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.
ரயில் பாலம்.—போ (Po) சமவெளி.

**ருஷ்யா ((Russia).**

(32 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய முகாம்கள்.—யாகாமுல்லிற்கு (Yakamul) தெற்கே.
ஸப்ளை லயன்கள்.—வீவாக்கிற்கு கிழக்கே (East of Wewak). நியூ பிரிடனிலுள்ள வொலெய் (Wolcai), ரபால் (Rabaul).
விமான நிலையங்கள்.—டிமோர் (Timor), டச்சு நியூ கினியா (Dutch New Guinea).
கிராமங்கள்.-மோரோடை (Morotai) தீவின் கடற்கரைக்கு கிழக்கு

**பர்மா (Burma).**

ஸப்ளைக் குவியல்கள்.—சின்ட்வின் சமவெளியின் கீழ்கரை.
விமான நிலையம்.—டாமு (Tamu).
டாங்கிகள் ரஸ்தா போக்குவரத்துகள்.-டிடிம் (Tiddim) ரஸ்தா.
படகுகள்.—சின்ட்வின் (Chindwin).
இலக்குகள்.—பாமோ (Bhamo).
குவியல்கள், முகாம்கள், மோட்டார்ப் போக்குவரத்துகள், முகாம்கள்.-டாஙனி முதல் (Taungni), ஷாமா (Sahmaw) வரை.
ரயில்வே சாமான்கள், மோட்டார் போக்குவரத்துகள், நிராவி யந்திரங்கள், விமான நிலையங்கள்.—மத்திய பர்மா.

**31—7—44.** (திங்கட்கிழமை).

பகல்.-இலக்குகள்.—மியூனிச் (Munich). லட்விக்ஷேபன் (Ludwigshafen).
விமான நிலையங்கள்.—பிரான்ஸ் (Franco).
எண்ணெய்க் கிணறு ஸ்தாபனங்கள்.-ருமேனியாவிலுள்ள புகாரெஸ்ட் (Bucharest), புலோயெஸ்டி (Plocsti).
பாலங்கள், போக்குவரத்துகள், இதர இலக்குகள்.—பிரான்ஸ் (France).
இரவு.—கடற்படையைச் சேர்ந்த கப்பல்கள்.-லெ ஹாவ்ரி (La havre).
ரயில்வே ஸ்தலம்.—லா ரோச்சி (La Roche)
சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

**இதாலி (Italy).**

எதிரி போக்குவரத்துகள், ஸப்ளை லயன்கள், இதர இலக்குகள்.—*வடக்கு இதாலி* (North Italy), *யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.*

மோட்டார்ப் போக்குவரத்துகள், ரயில்வே இலக்குகள்.—*யூகோஸ்லாவியா* (Yugoslavia).

**ருஷ்யா (Russia).**

(28 *விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன*).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.*

**தூரக்கிழக்கு (Far East).**

டிரக் (Truk) *தீவு.*

எதிரி சைனியங்கள்.—*மார்ஷல்ஸ்* (Marshalls), *காரொலின்ஸ்* (Carolines), *கூவம்* (Guam).

**பர்மா (Burma).**

இலக்குகள்.—*டிடிம்* (Tiddim), *டாமு* (Tamu) *ரஸ்தாக்கள்.*

காபா (Kabaw) *சமவெளி சிண்ட்வின்* (Chindwin) *பிரதேசம்.*

ரயில்வேக்கள்.-*மோகாங்கிற்கும்* (Mogaung) *மோன்யினிற்கும்* (Mohnyin) *இடையில்.*

**1—8—44.** (*வியாழக்கிழமை*).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல் :—ராணுவ இலக்குகள்.—*யுத்தம் நடக்கும் பிரதேசங்களுக்குப்பின்.*

பறக்கும் வெடி குண்டு ஸ்தலங்கள்.—*பாஸ் டி கலே* (Pas De Calais) *பிரதேசம், மெரி* (Mery).

எண்ணெய்க் கிடங்குகள்.-*செஸ்ன் செயிண்ட் குவென்* (Sens. St. Quen), *கென்னிவில்லியர்ஸ்* (Gennevilliers).

பாலங்கள்.—*லோயர்* (Loire) *சமவெளி.*

**இதாலி (Italy).**

ராணுவ இலக்குகள்.—*வடக்கு இதாலி* (N.Italy) *யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.*

**ருஷ்யா (Russia).**

(76 *எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன*).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.*

**தூரக்கிழக்கு (Far East).**

*ஒரு தகவலும் இல்லை.*

**பர்மா (Burma).**

ஜப்பானியத் துருப்புகள், ரஸ்தா போக்குவரத்துகள், கிடங்குகள்.-*காபா* (Kabaw) *சமவெளி, டாமு* (Tamu), *சிண்ட்வின் பிரதேசங்கள்.*

எதிரி சைனியங்கள்.—*ஷாமா* (Sahmaw).

பாலம்.—*மோன்யின்* (Mohnyin).

ரயில்வே சாமான்கள், மோட்டார் போக்குவரத்துகள்.—*மத்திய பர்மா* (C. Burma)

**2—8—44.** (*புதன்கிழமை*).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—(7 *எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன; 17 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை*).

பறக்கும் குண்டு புறப்படும் ஸ்தலங்கள்.—*பாஸ் டி கலே* (Pas De Calais).

4 பாலங்கள்.—*பாரிஸுக்கு* (Paris) *அருகில்.*

இலக்குகள்.—*பிரான்ஸ்* (France).

பாலங்கள், கவசம் பூண்ட வண்டிகள், யுத்த தளவாடங்கள், எண்ணெய்க் கிடங்குகள், ரஸ்தா ரயில் போக்குவரத்துகள், எதிரிக் கப்பல்கள்.-*பெல்ஜியம்* (Belgium) *முதல் பிஸ்கே வளைகுடா* (Bay of Biscay) *வரை.*

**இதாலி (Italy).**

எதிரி சப்ளை வரிசைகள், இதர லக்ஷியங்கள்.-*வடக்கு இதாலி, மத்திய இதாலி.*

**ருஷ்யா (Russia).**

(81 *எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன*).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.*

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானியக் கப்பல்.—*ஸீரம்* (Ceram).

ஜப்பானிய சைனியங்கள்.—*போனின் தீவு* (Bonin).

**பர்மா (Burma).**

இலக்குகள்.—*மாண்டலே முதல் இண்டா வரை, ரயில்வே லயனில் முக்கியமாக சகெயங* (Sagaing), *யுவாடாங்* (Ywataung), *ஷ்வேபோ* (Shwebo), *வுந்தோ* (Wuntho). *இண்டா* (Indaw) *முதலிய பல இடங்கள்.*

பாலங்கள், ரஸ்தா, நதிப்போக்குவரத்துகள், துருப்பு முகாம்கள்.-*டிடிம் ரஸ்தா* (Tiddim) *சாஸ்ஸட்* (Chassad), *டாமு* (Tamu), *காபா* (Kabaw), *சின் நதி* (Chin)*ப் பிரதேசங்கள்.*

**3—8—44.** (*வியாழக்கிழமை*).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—சேனைகள், யுத்த தளவாடங்கள், தயார்செய்து சேமிக்குமிடங்கள்.-*ஸார்பிரக்கன்* (Saarbrucken), *முல்ஹௌஸ்* (Mulhouse), *ஸ்ட்ராஸ்பர்க்* (Strasbourg).

எண்ணெய் சேமிப்புக் கிடங்குகள்.-*மெர்க்வில்லர்* (Merkwiller).

பறக்கும் வெடி ஸ்தலங்கள்.—*பாஸ் டி கலே* (Pas De Calais).

தொடர்ச்சியான எண்ணெய் ஸ்தாபனங்கள்.-*ஹார்னஸ்* (Harnes).



எண்ணெய் சேமிப்பு டெப்போக்கள்.-*கௌர்ச்செலெட்ஸ்* (Courchelettes).

இலக்குகள்.—*பாரிஸ்* (Paris), *பிரஸ்ஸெல்ஸ்* (Brussels) *பிரதேசம்.*

தொழிற்சாலை இலக்குகள்.-*ஜெர்மனியிலுள்ள பிரைடரிக்ஷாபனுக்கு* (Friedricshafen), *அருகில்.*

பாலங்கள்.—*பிரென்னர் கணவாய்* (Brenner Pass).

படகுகள்.—*ஸீன்* (Seine).

தளவாடக் கிடங்குகள்.-*கேயன்னிற்கு தென் கிழக்கே* (S. E .Caen),

பாலங்கள்.—*பாரிஸ்* (Paris), *ஆர்லியன்ஸ்* (Orleans), *ரூயன்* (Rouen).

எதிரி E-படகுகள்.—*டி லி ஹவெர் முனை* (De Le Havre).

ரயில் தளங்கள்.—*லெஸ் வாலன்ஸ்* (Les Valence).

**இதாலி (Italy).**

ரயில் ரஸ்தா பாலங்கள்.—*நைஸ்* (Nice) *பிரதேசம்.*

துறைமுக ஸ்தாபனங்கள், கப்பல்கள், விமானங்கள்.—வடக்கு *இதாலி* (N. Italy).

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.*

**தூரக்கிழக்கு (Far East).**

காலன் கப்பற்கட்டுந்துறைகள்.—*ஹாங் காங* (Hong Kong).

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—*நாருத்தீவு* (Nauru).

ஜப்பானிய தளம்.—*டிரக்* (Truk).

**பர்மா (Burma).**

எதிரி துருப்புகள்.—*இம்பால் பிரதேசத்தில் பின்வாங்கும் படைகள்.*

ஜப்பானிய மிகுதிகள்.—*மித்கினா* (Myitkyina).

இலக்குகள்.—*மத்திய பர்மா* (Central Burma).

**4—8—44.** (*வெள்ளிக்கிழமை*).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—பரிக்ஷார்த்த நிலயங்கள்.—*பீனிமண்டி* (Peenemunde).

விமான நிலயம்.—*ஆங்க்லம்* (Anklam).

விமானங்கட்டும் இடங்கள்.—*ரோஸ்டாக்* (Rostock).

துறைமுக ஸ்தாபனங்கள்.—*ரோஸ்டாக்* (Rostock).

கடற்படை தளம்.—*கீல்* (Kiel).

எண்ணெய் சுத்திசெய்யுங் கிடங்குகள்.—*பிரெமென்* (Bremen).

பறக்கும் வெடி குண்டு ஸ்தலங்கள், பீரங்கி ஸ்தாபனங்கள்.—*பாஸ் டி கலே* (Pas De Calais).

விமான நிலயம்.—*லில்லி* (Lille), *ஆசியெட்* (Achiet).

ரயில்வே தளங்கள்.—*மாண்ட்போர்ட்* (Montfort), *போவாய்* (Beauvais).

ரயில்வேப் பாலம்.—*எபர்னான்* (Epernon).

தளவாடம் நிறைந்த ரயில்.—*போர்டோ* (Bordeaux)*விற்கருகில்.*

எண்ணெய்க் கிடங்குகள்.-*ஆங்கர்ஸ்*(Angers).

படகுகள்.—*ஸீன்* (Seine).

இரவு.—ரஸ்தா, ரயில் போக்குவரத்துகள், துருப்பு முகாம்கள்.—*யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.*

எண்ணெய்த் தொழிற்சாலைகள்.—*காஸ்ட்ராப் ராக்ஸால்* (Castrop Rauxol).

**இதாலி (Italy).**

ரயில் லயன்கள், பாலங்கள், துருப்பு முகாம்கள்.—*வட இதாலி* (North Italy), *யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.*

ராணுவ இலக்குகள்.-*அல்பேனியாவிற்கு தெற்கு* (South Albania).

**ருஷ்யா (Russia).**

(85 *எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன*).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.*

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய சைனியங்கள்.—*போனின்* (Bonin)*தீவு.*

**பர்மா (Burma).**

நீராவி யந்திரங்கள், இதர இலக்குகள்.—*மத்திய பர்மா* (Central Burma).

**5—8—44.** (*சனிக்கிழமை*).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.-யுத்த தொழிற்சாலைகள், இதர இலக்குகள்.—*ஜெர்மனி* (Germany).

பறக்கும் வெடிகுண்டு ஸ்தலங்கள்.-*பாஸ் டி கலே* (Pas De Calais).

யூ படகுகள்.—*பிரெஸ்ட்* (Brest).

ரயில்வே பாலங்கள்.—*சட்டாப்பிள்ஸ்* (Eataples).

கடற் பாதைகள்.—*அமியென்ஸ்* (Amiens) *முதல் பெல்ஜியம்* (Belgium)*வரை.*

ரயில் இலக்குகள், பாலங்கள்.—*வடக்கு பிரான்ஸ்* (North France).

எண்ணெய் சேமிப்பு டெப்போக்கள்.—*பாஸ்ஸென்ஸ்* (Bassens), *பிலேய்* (Blaye).

8 ரயில்வே பாலங்கள்.—*ஸீனிலுள்ள* (Seine) *எல்பாவிலிருந்து* (Elbeau) *பிரயோலே* (Briolay) *வரை.*

ரயில்வே தளங்கள்.-காம்பெய்னி (Compiegne), செர்குவே (Serquex), வெர்னியூல் (Verneuil).
நீராவி யந்திரங்கள், கப்பல்கள்.—சார்ட்ரெஸ் (Chartres), ஆர்லியன்ஸ் (Orleans) பிரதேசங்கள்.

### இதாலி (Italy).

ரஸ்தாக்கள், ரயில்வேக்கள், எதிரி சைனியங்கள்.—வட இதாலியில் யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.
கப்பல்கள்.—ஜிநோவாக்குடா (Gulf of Genoa), அட்ரியாடிக் (Adriatic).
ராணுவ இலக்குகள்.—யூகோஸ்லாவியா (Yugoslavia).

### ருஷ்யா (Russia).

(108 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).
விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

(12 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன).
ஜப்பானியத் துணைக்காவலோடுகூடிய கப்பல்கள்.—போனின் (Bonin) தீவு.
தரைமீதுள்ள ஸ்தாபனங்கள்.—வால்கனோ (Volcano) தீவு.
கப்பற் கூட்டங்கள்.-அம்பாய்னா (Amboina).

### பர்மா (Burma).

போக்குவரத்துகள்.—காபா (Kabaw) சமவெளி, சிண்ட்வின் (Chindwin) பிரதேசம்.
படகுகள்.—மாயு (Mayu), கலடான் (Kaladan).
இலக்குகள்.—ஷாமா (Sahmaw) முதல் பின்பா (Pin baw) வரை.
ரஸ்தாக்கள்.—மோன்யின் (Mohnyin), பாமோ (Bhamo), மித்கினா (Myitkyina).
ரயில்வே ஷெட்டுகள், ரிப்பேர் பார்க்குமிடங்கள், நீராவி யந்திரங்கள்.—மத்திய பர்மா (Central Burma).

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**31—7—44.** (திங்கட்கிழமை).

### பிரிடன் (Britain).

லண்டன் (London) பிரதேசம்.
சில இடங்கள்.—தென் இங்லாந்து (South England).

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East),**
எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**1—8—44.** (செவ்வாய்க்கிழமை).

### பிரிடன் (Britain).

லண்டன் (London) பிரதேசம்.
இதர இடங்கள்.—தென் இங்கிலாந்து (South England).

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**
எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**2—8—44.** (புதன்கிழமை).

### பிரிடன் (Britain).

சில இடங்கள்.—தென் கிழக்கு இங்கிலாந்து (South East England).

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**
ஒரு தகவலும் இல்லை.

**3—8—44.** (வியாழக்கிழமை).

### பிரிடன் (Britain).

இங்கிலீஷ் கால்வாய் (English Channel).
சில இடங்கள்.—இங்கிலாந்தின் தென் கிழக்குக் கடற்கரை (S-E. coast of England).

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**
எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**4—8—44.** (வெள்ளிக்கிழமை).

### பிரிடன் (Britain).

லண்டன் (London) பிரதேசம்.
சில இடங்கள்.—தென் கௌண்டிஸ் (South Counties).

### ருஷ்யா (Russia).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

### தூரக்கிழக்கு (Far East).

நேசதேசப் படைகள்.—ஹுனான் (Hunan), யுத்த அரங்கங்கள்.

**5—8—44.** (சனிக்கிழமை).

### பிரிடன் (Britain).

இடங்கள்.—தென் இங்கிலாந்து (South England), லண்டன் (London), பிரதேசம்.

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**
எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**6—8—44.** (ஞாயிற்றுக்கிழமை).

### பிரிடன் (Britain).

சில இடங்கள்.—தென் இங்கிலாந்து (South England).

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**
எதிரி விமான நடவடிக்கை இல்லை.



# யுத்தக் குறிப்புகள்.

**கௌரவக் கோர்ட்டு.** உள்நாட்டுப் படைத்தலைவராக ஹிம்லரை நியமித்தபின் சேனையில் சந்தேகப்படக்கூடியவர்களைப் பரிசீலனை செய்வதற்காக ஹிட்லர் ஜனங்களின் கோர்ட்டை நிர்மாணம் செய்தான். சேனையில் கலகம் செய்யும் நோக்கமுள்ளவர்களை ஒழித்துவிடவேண்டுமென்று சேனையே பிரியப்படுகிறதாம். அதன் எண்ணம் எவ்விதமிருப்பினும். இது ஒரு பேடிஜம். ஏனெனில் நியாயாதிபதிகளெல்லாம் ஹிட்லரின் கையாள்கள். அதன் முடிவுகள் ஹிட்லரின் அங்கீகாரம் பெறவேண்டும், சேனையைச் சுத்திசெய்ய முயற்சிக்கப்படுகிறது.

அநேக காலமாக ஹிட்லருக்கும் அவனுடைய படைத்தலைவர்களுக்கும், ஹிட்லரின் தெய்வீக போதனைக்கும், தலைவர்களின் ராணுவ அனுபவத்துக்கும் இடையே அபிப்பிராய பேதங்களிருந்துவந்தன. ஆயினும் ஹிட்லர் அவனுடைய இஷ்டப்படி, லீப், லிஸ்ட், பாக், பிராசிட்ஸ், பாக்கன் ஹாஸன், ரண்ட்ஸ்டெட் முதலிய அநேக ஜெனரல்களை பர்த்தரபுச் செய்தான். ஹிட்லர் தொந்தரவு ஒழிந்துவிடும் என்று நினைத்தான். ஆனால் அது அடிப்படையில் முற்றிவிட்டது. ராணுவ நிபுணர்கள் ஜெர்மனிக்குத் தோல்வி நிச்சயமென்று அறிந்து ஹிட்லரைக் கொலை செய்தாவது ஜெர்மனியை ரக்ஷிப்பதென்று முடிவு செய்தார்கள். ஹிட்லரும் இந்த சூழ்ச்சிகளை அறிந்தான். ஜூலை 1-ம் தேதியன்று டியட்டின் பிரேத அடக்க வைபவத்தில பேசியபொழுது சேனையை சுத்தி செய்யப்போவதாக வெளியிட்டான். சதி செய்தவர்கள் வெடிகுண்டை எறிந்து அவனைக் கொலை செய்யச் செய்த முயற்சி பலன் படவில்லை. ஹிட்லர் பழிவாங்கும் உத்தேசத்துடன் ஜனங்களின் கோர்ட்டை நிர்மாணம் செய்தான்.

ஹிட்லர் அதிகாரத்துக்கு வந்தபொழுது வெறுப்பு மனப்பான்மையுள்ள ரோம், ஷ்லீசர் முதலிய நாஸிகளையும் அவனை எதிர்த்த சேனைத்தலைவர்களையும் கொலை செய்தான். இப்பொழுது இரண்டாவது தடவை சுத்திசெய்ய முயலுகிறான். உண்மையை உரைக்கும் எவரும் நேசதேசத்தாருடன் நட்பு கொள்ள பிரியப்படும் எவரும் ஹிம்லர், கௌரவக் கோர்ட்டின் சூழ்ச்சிக்குட்படாமல் தப்ப முடியாது.

வி வி வி வி வி

**திட்டப்படி நடப்பு.** ஜெர்மனியின் உள்நாட்டு விவகார விளைவு எவ்விதமிருப்பினும் அதிலிருந்து யுத்தப்போக்கு மாறிவிடாது. பிப்ரவரி மாதத்தில் நிறுவப்பட்ட திட்டப்படி D. தினத்திற்குப் பின் 50 நாளைக்குள் பிரெஸ்டுக்குச் செல்லவேண்டும். 60 நாளைக்குள் பிரிட்டானியைப் பிடித்துவிடவேண்டும். இந்த திட்டம் நிறைவேறிவிட்டது. இந்தப் பகுதியிலுள்ள 35 ஜெர்மன் டிவிஷன்களில் 13 நிர்மூலமாக்கப்பட்டுவிட்டது.

பிரிட்டானியை இழந்ததிலிருந்து ஜெர்மனி உபயோகமுள்ள யூ படகு தளங்களை இழந்துவிட்டது. பாரிஸுக்குப்போகும் மார்க்கம் திறக்கப்பட்டுவிட்டது. ஹிட்லர் புதிய தந்திரத்தைக் கற்பனை செய்யவேண்டும்.

வி வி வி வி வி

**பிரெஞ்சுப் போர்.** மாரத் அரணைப்போல் கேயன் பகுதியிலும் மாண்ட் காமரி ரோமலையும் வான்குளுக்கையும் முறியடித்து விட்டான். சமீப காலத்தில் ரோமல் காயமடைந்தானென்று கேள்விப்பட்டோம். மாரத் அரணில் மாண்ட் காமரி ரோமலை முதலில் மத்தியப்பகுதியிலும் வலது விலாவிலும் தாக்கினான். இதை ரோமல் வெற்றிகரமாக எதிர்த்துப் போராடினான். பிறகு ரோமலின் இடது விலாப்பக்கத்தைத் தாக்கி ரோமலுக்குப்பின் சென்று அவனைச் சுற்றி வளைத்துக்கொண்டான்.

கேயனிலும் இதே மாதிரி நடைபெற்றது. செர்பர்க் தீபகற்பத்தில் படையெடுப்புப் படைகளை அடைத்துவிடும் உத்தேசத்துடன் ஜெர்மன் படைகள் ஆவ்ராஞ்சஸிலிருந்து கேயன் வரையில் தற்காப்பு செய்துவந்தன. கேயன் ஜெர்மன் படை வரிசைகளுக்குச் சுழலாணி போன்றது. ஜெர்மன் படைகள் கேயனிலிருந்து அங்குமிங்கும் நடமாடின. கேயனிலிருந்து ஒரு பக்கத்தில் பாரிஸுக்குப்போகும் ரஸ்தாவும் மற்றொரு பக்கத்தில் பறக்கும் வெடிகுண்டுகளின் புறப்படும் நிலையமான பாஸ் டி கலேக்குச் செல்லும் ரஸ்தாவும் இருக்கின்றன. ரோமல் இங்கு படைகளையும் டாங்கிகளையும் குவித்தான். ஆகஸ்டு மாத ஆரம்பத்தில் கேயன் பிராந்தியத்தில் தாக்குவதுபோல் மாண்ட்காமரி பாசாங்கு செய்தான்.

அமெரிக்கர்கள் செர்பர்க் தீபகற்பத்திலுள்ள ஜெர்மனியின் இடது விலாப்பக்கமான பலஹீனமான பாகமான ஆவ்ராஞ்சஸைத் தாக்கினார்கள். ஜெர்மானியர்கள் ஏமாற்றமடைந்து முறியடிக்கப்பட்டார்கள். அமெரிக்கர்கள் முன்னேறிவிட்டார்கள். அவர்கள் பிரிட்டானியை ஆக்கிரமித்து பிரெஸ்ட், நாண்டிஸ், ஸெயிண்ட் நாஸேர், லோரியான் முதலிய இடங்களைத் துண்டித்துவிட்டார்கள். பினிஸ்டைர் முனைக்கருகிலுள்ள பிரெஸ்ட் துறைமுகம் பிரான்ஸின் முக்கியமான கடற்படை தளம். அதில் கப்பல் கட்டும் நிலையங்களும் கப்பல் சுத்தி செய்யும் சாலைகளுமிருக்கின்றன. பிரெஞ்சு கிழக்கிந்தியா கம்பெனியில் வியாபாரத்துறை என்று பெயர்பெற்ற லோரியான் பிரான்ஸின் முக்கியமான கப்பற்கட்டும் நிலையம். நாண்டிஸ் பிரிட்டானியில் அழகிய நகரம். முதல்தரமான துறைமுகமுள்ளது. அதற்கு வடக்கில் லூவார் நதியின் முகத்துவாரத்தில் ஸெயிண்ட் நாஸேர என்ற துறைமுகமிருக்கிறது. இங்கிருந்து அட்லாண்டிக் கடலுக்குச் சுலபமாகச் செல்லலாம்.

மாண்ட் காமரியின் யுத்த தந்திரம் இன்னும் பூராவாக வெளிப்படவில்லை. அமெரிக்கர்கள் பிரிட்டானியில் முன்னேறும்பொழுது மாண்ட்காமரி சில படைகளை காமெண்டுக்கு அனுப்பி, கேயனுக்குத் தெற்கில் புதிய தாக்குதலை ஆரம்பித்து வைரிக்குச் சென்று அமெரிக்கர்களுடன் ஒன்றுசேர்ந்து வில்லடியூ-பெர்ஸி-டெஸ்ஸிப்பகுதியிலுள்ள ஜெர்மன் படைகளைத் துண்டித்துவிட்டான்.

மாண்ட்காமரி கேயனுக்குத் தெற்கில் போகேஜ் பிராந்தியத்தில் பலமாகத் தாக்கி வருகிறான். அவன் ஆர்ன் நதியை அடைந்து வில்லெஸ் போகேஜையும், எஸ்க்வேயையும், எவ்ரஸியையும், ஆனேயையும் பிடித்துவிட்டான்.

பாரிஸை நோக்கி ஸேயன் நதி ஓரமாக அமெரிக்கர்கள் ஐந்து இடங்களில் கிழக்கு நோக்கித் தாக்குகிறார்கள்.

வி வி வி வி வி

**ருஷ்யப் போர்முனை.** ரீகா நதிக்கு வடக்கில், லாட்வியாவிலும், எஸ்தோனியாவிலும், பிரஷ்யாவின் எல்லைச் சரகத்திலும், வார்ஸாவிலும், கிராகௌ பிராந்தியத்திலும் ருஷ்யர்கள் முன்னேறித் தாக்குகிறார்கள். ஹிட்லரின் பிடிவாதத்தினால் பால்டிக் பிராந்தியத்தில் 20 ஜெர்மன் டிவிஷன்கள் துண்டிக்கப்பட்டுவிட்டன. அவைகள் கடல் மார்க்கமாகத் தப்பி ஓடினாலொழிய நிர்மூலமாக்கப்படும்.

வார்ஸாவுக்கான யுத்தத்துக்கு ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன. தற்காப்பு செய்ய ஜெர்மன் படைகள் குவிக்கப்படுகின்றன. ஜெர்மன் விமானப்படை தலைகாட்டத்துவங்கி விட்டது. ருஷ்யப் படைகள் பக்கிலிருந்து வடமேற்காகவும் விஸ்டுலா நதியிலிருந்து தென்மேற்காகவும் குவிந்து வருகின்றன. போலிஷ் தேசாபிமானப் படைகள் பகிரங்கமாகக் கலகம் செய்து நகரங்களின் சில பாகங்களைப் பிடித்தன. தெற்குக் கோடியில் ருஷ்யர்கள் விஸ்டுலா நதியை ஸாண்டோ மியர்ஸுக்கருகில் தாண்டிவிட்டனர். ஸைலீஷியா என்ற முக்கிய ஜெர்மன் தொழிற்சாலை மாகாணத்தின் வாசற்படி போன்ற கிராகோவை நோக்கி முன்னேறுகின்றனர். அதற்கும் தெற்கில் ருஷ்யப்படைகள் கார்பேதியன் மலையடிவாரத்திலுள்ள ஸ்டரியஜ்ஜைக் கைப்பற்றியபின் செக்கோஸ்லோவாகியாவுக்குச் செல்லும் பெஸ்கிட்ஸ் கணவாயைத் தாக்கி வருகின்றார்கள்.

இதாலியின் கீர்த்திவாய்ந்த கலைச் சின்னங்களுள்ளதும் டஸ்கேனியின் தலைநகருமான பிளாரென்ஸ் பிடிபட்டது.

பர்மாவில் மிட்கினா விழுந்தது. இது ஒரு அரிய செய்கையாகும். மாரிகாலத்தில் ஆரம்பித்த போரை டில்வெல் துரிதமாக நடத்தி பர்மாவுக்குள் புகுந்துவிட்டார். வட அஸ்ஸாமிலுள்ள லேடோரிலிருந்து அவர் புறப்பட்டார். போகும்பொழுதே ரஸ்தாவை அமைத்துச் சென்றார். காமியாங், மோகாங்கை சின்டிட்டுகளின் உதவியுடன் கைப்பற்றிவிட்டு ஹுகாங் பள்ளத்தாக்கு வழியாகச் சென்று மிட்கினாவுக்குச் சென்றார். பலமான தற்காப்புள்ள மிட்கினா வேனிற் காலம் முழுவதும் சமாளித்து நின்றது. ஜப்பானியர்கள் பலமாக ஊன்றியிருந்தபோதிலும் ஜெனரல் ஸ்டில்வெல் உறுதியுடன் கொஞ்சம் கொஞ்சமாக ஊடுருவிச் சென்றார். இப்பொழுது அந்த நகரம் விழுந்துவிட்டது. 3,000 ஜப்பானியர் நஷ்டமாகிவிட்டார்கள். பர்மாப் பாதையின் வடக்குப் பகுதியிலிருக்கும் டெங்சுங்கும் விழுந்துவிட்டது.

மணிப்பூர் முனையில் டாமுவும் டிட்டிமும் விழுந்தன. சின்ட்வினுக்குக் கிழக்கில் போர் அநேகமாக நின்றுவிட்டது. இந்தியாவிலிருந்து ஜப்பானியர்கள் பூர்ணமாகத் துரத்தியடிக்கப்பட்டார்கள்.



**காலப்போக்கு** என்ற படம் லண்டனில் காட்டப்படுகிறது. டோக்கியோவுக்குச் செல்லும் கொல்லை வாசற்படி என்றும் அதற்கு மற்றொரு பெயருண்டு. இந்தப்படத்தில், பர்மாவுக்கு விமான மூலம் ஸப்ளைகள் அனுப்பப்பட்டது. பர்மாவுக்குள் படையெடுப்பும், ஜப்பானைக் கடல் மார்க்கமாக அணுகிச் செல்லுவதும், ஹிமாலய பர்வதம், காடுகளின் ஒளிப்படங்களும் காணப்படுகின்றன. இதில் முக்கியமான ஜெனரல் ஸ்டில்வெல், ஜெனரல் வின்கேட் சின்டிட்டுகள் சீனத்துருப்புகளின் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

வி வி வி வி வி

**மேலும் ஜம்பம்.** உலகத்தின் எல்லா பாகங்களிலும் நேசதேசப் படைகள் அச்சுநாடுகளை வளைத்து வரும்பொழுது அச்சுத்தலைவர்கள் ஜனங்களை அதிக முயற்சி எடுத்துக்கொள்ளும்படி உற்சாகப்படுத்துகிறார்கள். ஜெர்மன் மக்கள் ஒன்றுபடவேண்டுமென்று ஹிம்லர் உத்திரவிட்டிருக்கிறான். உங்கள் கதியை நீங்கள் தீர்மானித்துக் கொள்ளவேண்டுமென்று கோயபல்ஸ் ஆக்ஞையிட்டிருக்கிறான். உறுதியுடனிருந்தால் வெற்றி நிச்சயமென்று டாக்டர் ஸ்பீயார் உறுதி கூறுகிறான். மூடமான நம்பிக்கை வேண்டுமென்று ஹிட்லர் வற்புறுத்துகிறான்.

இதே சமயத்தில் ஹிட்லரின் ரகசிய ஆயுதங்களும் அதிகரித்துவிட்டன. பறக்கும் வெடிகுண்டுகளுக்குப்பின் ஓட்டியில்லாத டாங்கிகளும், பாம்பர் சண்டை விமானங்களும் தோன்றிவிட்டன. இந்த ஓட்டியில்லா டாங்கை பாதிதூரம் ஆள் ஓட்டுவது, பின்பு வயர்லஸ் மூலம் சென்று அது எதிரிகளைத் தாக்கும். வெடிகுண்டு பைடர் விமானத்தை விமானி ஓட்டியுள்ள ஒரு சண்டை விமானம் இழுத்துச்செல்லும். போர் பிராந்தியத்துக்குச் சென்றவுடன் வெடிவிமானம் அவிழ்த்துவிடப்படும். அதன்பின் அது வயர்லெஸ் மூலம் ஓட்டப்படும். போர் விமானத்திலுள்ள விமானி அதன்பின் திரும்பிவந்துவிடுவான். இந்த ஓட்டியில்லா ஆயுதங்கள் மனிதர்களின் சாதுர்யத்துக்கும் தீரத்துக்கும் பதிலல்ல. இதன் விளைவுகள் ஒன்றுமில்லை. படைபலக் குறைவு ஏற்பட்டிருக்கிறதென்பதை அவைகள் வெளிப்படுத்துகின்றன.

வி வி வி வி வி

**பூராப்படைத் திரட்டு.** தூரக்கிழக்கில் ஜப்பானியர்கள் கூடி பூராப்படைத் திரட்டுக்குத் திட்டம் வகுக்கிறார்கள். யுத்தத்தை நடத்தவும் பொது மக்களை ஆயுதபாணிகளாக்கவும் ஒரு உயர்தர சபை நிர்மாணம் செய்யப்பட்டிருக்கிறது. ஜப்பான் பாக்கியிருக்கும் ஆட்களைத் திரட்டுவதுபோல் தோன்றுகிறது. ஏற்கனவே 12 முதல் 50 வயது வரையிலுள்ள ஆண்களையும், 12 முதல் 40 வயது வரையிலுள்ள விவாகமாகாத பெண்களையும் ஏற்கனவே திரட்டிவிட்டபின், என்ன மீதமிருக்குமென்று புலப்படவில்லை.

வி வி வி வி வி

**துருக்கி.** சென்ற வாரத்தில் துருக்கி ஜெர்மனியுடன் கொண்டிருந்த பொருளாதார ராஜதந்திர உறவை ரத்து செய்துவிட்டதென்று சொன்னேனும். இது ஆகஸ்ட் மாதம் 2-ம் தேதி நடைபெற்றது. துருக்கி எப்பொழுதும் பிரிடனுடைய நண்பன். வடக்கு ஆபிரிக்காவிலும், ருஷ்யாவிலும் நெருக்கடி ஏற்பட்ட சமயத்தில் துருக்கி பிரிடனை ஆதரித்து நடுநிலைமை வகித்தது. ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்கும் செல்ல துருக்கிதான் முன்னேறும் வாசல். துருக்கி அச்சு நாட்டின் சூழ்ச்சிக்குட்பட்டிருந்தால் வட ஆபிரிக்காவுக்கும் ருஷ்யாவுக்கும் அபாயம் ஏற்பட்டிருக்கும். துருக்கி நடுநிலைமை வகித்ததால் நேசதேசத்தார்களுக்கு வெற்றி கிடைத்தது. இந்தப் பேருதவிக்காக நேசதேசத்தார்களின் நன்றியறிவை மிஸ்டர் சர்ச்சில் அடிக்கடி வெளியிட்டிருக்கிறார்.

பிரிடனுடன் உறவாடியபோதிலும் அது நடுநிலைமை வகித்து ஜெர்மனிக்கு குரோம் முதலிய பொருள்களை அனுப்பிவர வேண்டியிருந்தது. ஏனெனில் கருங்கடலில் ஜெர்மனி ஆதிக்கம் பெற்றிருந்தது. ஜெர்மானியர்கள் எகிப்திலிருந்தும், பால்கானிலிருந்தும் பின்வாங்கிய பொழுது மிஸ்டர் சர்ச்சில் அடானுவுக்குச் சென்று கெயிரோவில் சம்பாஷணைகளை நடத்த சந்தர்ப்பம் ஏற்பட்டது. அதில் ருஷ்யாவும் கலந்துகொண்டது. துருக்கியின் தற்போதைய நடவடிக்கைக்கு கிழக்குப்போர் முனையிலும், மேற்குப்போர் முனையிலும் ஏற்பட்ட வெற்றிகள்தான் காரணங்கள். ஜெர்மனியிடம் துருக்கிக்கு இனிமேல் பயமில்லை. அதை ஜெர்மனி வெடிகுண்டுகளால் தாக்கக்கூடும். ஆகிலும் அதற்கு பதிலாக நேசதேசப்படைகள் பழிவாங்கவும் துருக்கியை ரக்ஷிக்கவும் தயாராகயிருக்கிறார்கள்.

# ஜெர்மன் ராணுவத் தலைவர்களின் தோல்வி.

## தோல்விக்கு சமாதானம்.

(டைம்ஸ் பத்திரிகை).

ருஷ்யாவில் துணிவுகரமாக முன்னேறிய பிரதேசங்களிலிருந்து ஜெர்மன் படைகள் பின்வாங்கிவிட்டன. 1813-ம் வருஷத்திய சம்பவம் மறுபடியும் நடைபெறும்போல் தோன்றுகிறது.

இதற்கு சமாதானமாக ஜெர்மன் மக்கள் பொறுமையுடனிருக்கவேண்டுமென்றும் நார்மண்டியில் நேசதேசத்தாரை துரத்தியடித்தபின் ஜெர்மன் பலம் பூராவையும் உபயோகப்படுத்தி ருஷ்யர்களை வென்றுவிடுவோமென்றும் சொல்லப்படுகிறது. இந்த யுத்த தந்திரத்தை அன்வயப்படுத்தினால் நார்மண்டிப் போரை நீடித்து நடத்த அளவுகடந்த முயற்சி எடுத்துக்கொள்ளப்படுமென்றும் கிழக்குப் போர்முனையிலுள்ள படைகளை அலக்ஷியம் செய்துவிடுவார்களென்றும் தோன்றுகிறது.

போலந்திலுள்ள எதிர்ப்பு இயக்கத்திலிருந்து வெளிவரும் தகவல்களை நோக்கினால் வார்ஸாவிலுள்ள எதிரிப் படைகளிடம் பீதி உண்டாகிவிட்டதென்று தெரியவரும். நகரத்தை காலிசெய்துவிட ஆயத்தங்கள் அவசரமாக நடைபெறுகின்றன. மத்தியிலுள்ள ருஷ்யப் படைகளுக்கு 100-மைல்கள் அளவில் விஸ்டுலா நதி பெரிய இடையூறாக இருந்தது. அதைத் தாண்டிவிட்டால் போலந்தின் மத்திய பாகத்திலுள்ள சமவெளி வழியாகச் செல்லும் ரஸ்தா வழியாக ஜெர்மனியின மத்திய பாகத்துக்குச் சென்றுவிடலாம். வார்ஸாவிலிருந்து 320-மைல்களிலுள்ள பெர்லினுக்குச் செல்ல இதுதான் நேரான ரஸ்தா.

வாராவாரம் இடைவிடாது தோல்விச் செய்திகளைச் செவியுற்றுவரும் ஜெர்மன் மக்களிடம் பெர்லினிலுள்ள ராணுவ பிரமுகர் ஜூலை 26-ல் மூன்றுவிதமான சமாதானங்களை விடுத்தார். ருஷ்யாவின் நூதனமான யுத்த தந்திரம் ஜெர்மன் ராணுவ அதிகாரிகளை முறியடித்துவிட்டது. நமது சேனைகள் சமாளிக்க முடியாத எதிர்ப்புகளுடன் போர் புரியவேண்டியிருக்கின்றது. சேனைத் தலைவர்கள் படைகளைப் பிறர் கையில் காட்டிக்கொடுத்துவிட்டார்கள். முதல் ஜவாப்பு ஆறுதலளிக்காததால் கோயபல்ஸ் அவனுடைய சொற்பொழிவில் மூன்றாவது விஷயத்தை விரிவுபடுத்தி இரண்டாவது அசௌகரியத்துக்குப் பரிகாரம் தேடிவிடலாமென்று ஒலிபெருக்கினான். ஜெர்மனியில் விஷயமறிந்த ஒரு சிறிய பகுதியார்கள் ஜெர்மனியின் யுத்த முயற்சிகள் உச்ச நிலையை ஏற்கனவே அடைந்துவிட்டதென்றும், ஜெர்மனியின் யுத்த தளவாட உற்பத்தியும் போர்முனையில் மனித பல அதிகரிப்பும் ஒன்றை மற்றொன்று மதிக்காமல் நடைபெறுகிறதென்றும் அறிவார்கள். இந்த முயற்சியை பந்தயத்திலீடுபட்ட படகோட்டி துடுப்புகளின் அடிகளை அதிகரித்து படகின் வேகத்தைக் குறைத்துவிடுவதற்கு ஒப்பிடலாம்.

ஆயினும் இந்த சொற்பொழிவின் பயனை புறக்கணித்துவிட முடியாது. கோயபல்ஸ் ஜெர்மன் மக்களை நன்கு அறிவார். அவருடைய சொற்பொழிவிலிருந்து ஜெர்மானியர்களிடையே உணர்ச்சியை உண்டுபண்ணுமென்றும் ஹிட்லருக்காகவும், நாஸிக் கக்ஷிக்காகவும் யுத்த முயற்சியை அதிகரிக்க மக்களின் மனஉறுதி பலப்படுமென்றும் மதிக்கப்படுகிறது. அலசிப்பார்த்தால் இந்த முயற்சி பயன்படாதென்பது தெளிவானபோதிலும் ஜெர்மன் பொது ஜனங்கள் விஷயங்களைப் பரிசீலனை செய்யும் சக்தி பெற்றிருக்கவில்லை. அப்படி பகுத்தறிவு இருந்தாலும் உண்மைகள் அவர்களின் அறிவிற்கு எட்டவில்லை. ராணுவ வெற்றிக்கு கக்ஷியிடம் விசுவாசம் அவசியமென்றாலும் அதன் பலஹீனம் பின்வருமாறு. இந்த கோஷ்டி ராணுவ விஷயமறிந்தவர்கள் செய்துவரும் ஆக்ஷேபனைகளை தலையணியில் அடக்கி தங்களுடைய பிடிப்பை பலப்படுத்திவருகிறது. அதாவது யுத்த நெருக்கடியைத் தீர்க்காமல் அதை அலக்ஷியம் செய்து ஒற்றுமை நிலைநாட்டப்படுகிறது. ஹிட்லரைக் கொல்ல செய்யப்பட்ட சதிக்குக் காரணமான யுத்த நெருக்கடியைத் தீர்க்கவேண்டுமானால் ஜெர்மனியிலும் ஜெர்மன் கக்ஷியிலுமேற்பட்டிருக்கும் பிளவுகளை அகற்றவேண்டும். இதுதான் நேசதேசத்தாரின் தாக்குதலுக்குச் சரியான சமயம்.



# நாஸி அமைப்பில் சிதைவு.

## முக்கிய சம்பவங்கள்.

(லிவர்பூல் போஸ்ட்டு).

ஜெர்மனியில் நடைபெற்ற சம்பவங்கள் மறைப்பொருளாகயிருந்தபோதிலும் அவைகளின் முக்கிய சம்பவங்களை ஒளித்துவிட முடியாது.

தகவல்களை ஒளிக்க முயலுவதிலிருந்தே நாஸி அமைப்புக்கு முதலில் ஏற்பட்ட சிதைவின் கோரம் புலப்படுகிறது. ஜெர்மன் மக்களின் மனப்பான்மையை சீர்தூக்கிப் பார்க்கக்கூடியவர்கள் காட்டியுள்ள தோல்வி மனப்பான்மையையும் நடவடிக்கைகளையும் ஹிட்லர் சமாளிக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். பிராசிஷ், லீப் லிஸ்டு, ஹால்டர் முதலிய பிரமுகர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இந்த சம்பவத்திற்கு மாஸ்கோவில் கைது செய்யப்பட்டிருக்கும் ஜெர்மன் கமிட்டிதான் காரணமாகும். நாஸிகளை எதிர்க்கும் இந்த கோஷ்டி ஜெர்மனியில் ஏற்பட்டிருக்கும் அறிக்கை தணிக்கையை மீறி துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும், கபடமாக அனுப்பப்பட்ட பத்திரிக்கைகளின் மூலமாகவும் யுத்தத்தைப்பற்றி உண்மையான தகவல்களை ஜெர்மானியர்களுக்கு அறிமுகப்படுத்தியது. ருஷ்யாவில் கைதியாகயிருக்கும் ஜெனரல் வான் ஹோட் மெஸ்டர் சொல்லுகிறபடி ஜெர்மனியில் அதன் கிளை ஸ்தாபனம் ஒன்று இருக்கிறது.

உள்நாட்டுப் போர் முனை சீர்கெட்டுவிட்டதற்கு கீழ்கண்ட போர் முனையில் தோல்வி பயமேற்பட்டதுதான் காரணமாகும்.

(1) கிழக்கில் ஜெர்மனிக்குப் படுதோல்வி.

(2) ஜெர்மன் படை 800 மைல்கள் பின்வாங்கி ஜெர்மனியின் எல்லைச் சரகத்துக்கு, ஈடு செய்யக்கூடாத நஷ்டத்துடன் வந்துவிட்டது.

(3) வடக்குப் பக்கம் நீங்கலாக இதாலியை ஜெர்மனி இழந்தது.

(4) மேற்குப் போர் முனையில் நேசதேசத்தார் வெற்றி பெற்றுவிட்டார்கள். இன்னும் பலமான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும். ஐந்து வாரங்களுக்குள் குறுகிய போர் முனையில் ஜெர்மனி 1,60,000 பேர்களை இழந்தது. ஜெர்மன் படைகள் முன்னேறித் தாக்காமல் பின்வாங்குகின்றன.

(5) விமான நடவடிக்கை ஜெர்மனியின் ஐச்வர்யங்களையும் மனஉறுதியையும் குலைத்துவிட்டது.

(6) படைகள் திறமையுடன் போர் புரிந்த போதிலும் அதன் தலைவர்கள் தோல்வி நிச்சயமென்று உணர்ந்து நாஸிக் கக்ஷியை ஒழித்தாவது சேனையைக் காப்பாற்ற வேண்டுமென்று எண்ணம் கொண்டிருக்கிறார்கள்.

ஆறுவது ஐட்டத்தில் கண்ட நடவடிக்கையை கிழக்குப் போர் முனையிலுள்ள தளகர்த்தர்கள் துவக்கியிருக்கிறார்கள். கிழக்குப் போர் முனையில் பின்வாங்கிய ஜெர்மனியைத் தற்காப்பு செய்யவேண்டுமென்று அவர்கள் சிபார்சு செய்தார்கள். ஹிட்லர் அதற்குச் செவி கொடுக்காமல் மறுதளித்துவிட்டதால் அவனை ஒழிக்க அவர்கள் நடவடிக்கையை மேற்கொண்டார்கள்.

கெஸ்ஸல்ரிங்கும், ரண்ட்ஸ்டெட்டும், கிடேயும் கிழக்குப் போர் முனை சேனையை ஆதரித்தார்கள். ஹிட்லர் அடக்கு முறையை ஆரம்பித்தான். நிர்வாக அதிகாரியான கிடேயும், மேற்குப் போர் முனைத் தலைவரான ரண்ட்ஸ்டெட்டும், மறைந்தார்கள். அவர்களுக்குப் பதிலாக புதிய அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

படைப் பகுதிகள் தலைவர்களும் கூட அகற்றப்படுகிறார்கள். ரோமலின் நிலைமைகூட பத்திரமானதல்ல. அவன் வகித்த ஜெர்மன் தற்காப்பு அமுலை ஹிம்லர் வகிக்க முற்பட்டுவிட்டான். அவனிடமுள்ள கவசம் பூண்ட படைகளின் இரண்டு தலைவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள்.

சேனைக்கும் நாஸிக் கக்ஷிக்கும் நடைபெறும் யுத்தத்தின் முதல் கட்டம் நடைபெறுகிறது. அதன் முடிவைப்பற்றி ஒன்றும் சொல்ல முடியாது. அதன் தலைவர்களை ஹிட்லர் நிர்மூலமாக்கியபோதிலும் 1918-ம் வருஷத்திய நெருக்கடி மறுபடியும் நிலவும்போல் தோன்றுகிறது. ஜெர்மனியிலுள்ள எதிர்ப்புக் கோஷ்டி அடுத்த நடவடிக்கைக்குத் தயார் செய்து வருகிறார்கள். மற்றொரு நிர்வாகத்தை அமைப்பதாகவும் சொல்லப்படுகிறது.

## பிரான்ஸில் நடைபெறும் போரைப்பற்றிய விளம்பரம்.

(இல்லஸ்டிரேடட் வீக்லி அப் இந்தியாவிலிருந்து எடுக்கப்பட்டது).

உலகம் பூராவும் பிரசித்திபெற்ற பிரிடிஷ் ஒலிபரப்பு நிலையம் D. தினத்திற்குப்பின் அதிக கியாதி பெற்றது. அது இப்பொழுது தனிப்பட்டவர்களின் தினசரி வாழ்க்கையின் ஒரு முக்கிய அம்சமாக மாறிவிட்டது. உற்றுக் கேட்பவர்கள் அதிக ஆவலுடன ஒவ்வொரு நிருபரின் விளம்பரங்களுக்கும் செவி கொடுக்கிறார்கள்.

எல்லா நிருபர்களும் அவர்கள் இப்பொழுது தகவல்களை விளம்பரம் செய்யும் பகுதிகளுடன் சென்று பயிற்சி பெற்றவர்கள். ஒவ்வொரு சேனைப் படையுடனும் நிருபர்கள் செல்லுகிறார்கள். ஹவார்ட் மார்ஷல் என்ற பெயரைக் கேட்டமாத்திரத்திலேயே பிரிடிஷ் ஒலிபரப்பு நிலையத்தின் நிருபர் டி தினத்தன்று பிரான்ஸில் இறங்கி அன்று தினம் சாயங்காலமே திரும்பி கால்வாயில் இரண்டு தரம் மூழ்கியபின் நனைந்த உடுப்புகளுடன் தகவல்களை அறிவிக்க வந்துவிடுகிறான்.

நிருபர்கள் போரின் தினசரி நடவடிக்கைகளை பகிரங்கப்படுத்துவதுடன் அவர்களுக்கு ஏற்பட்ட தோற்றங்களையும் அவர்கள் வெளியிடுகிறார்கள். விடுதலைபெற்ற பிரெஞ்சு மக்களின் உணர்ச்சியும், கைதிகளின் அபிப்பிராயங்களும், போரில் திறமையுடன் போர் புரிந்த வீரர்கள், பிராணிகள், இயற்கை அமைப்பு முதலிய வர்ணனையும் அவர்களின் கவனத்துக்குட் பட்டவை. நார்மண்டியில் சோர்வுற்றிருக்கும் பசுக்கள், வெள்ளப் பெருக்கினால் சிதளமான அகழ்கள், பாராத் துருப்புகளின் தேச அனுபவமும், துருப்புகளின் உத்சாகமும் சலனமும், எல்லா விஷயங்களும் உற்றுக்கேட்பவருக்கு விளக்கிச் சொல்லப்படுகின்றன.

சில தகவல்கள் சில மணி நேரங்களுக்குப்பின்தான் ஒலி பெருக்கப்படுகின்றன. படையெடுப்புக்கு 15 நாட்களுக்குப்பின் இதே இஞ்ஜினியர்கள் நேர்முகமாக ஒலி பெருக்குவதற்காக பிரான்ஸிலேயே ஒலி பெருக்கும் கருவியை அமைத்து நடப்புத் தகவல்களை ஒலிபெருக்கி வந்தார்கள்.

பிரிடிஷ் சாமான் கப்பல்களின் சேவையைப்பற்றிய விருத்தாந்தங்கள் வெளியிடப்பட்டன. காயம்பட்டவர்கள் விமானம் மூலம் அகற்றப்பட்டார்கள். மிச்சல் வெடி விமானத்தில் சென்ற பிரிடிஷ் ஒலி பரப்பு உற்றுநோக்காளர் படையெடுப்புப் படையின் தோற்றத்தை வெளிப்படுத்தினார். படையெடுப்புப் படகுகளில் கூட்டமாகச் செல்லுவதும், சண்டை சஞ்சாரிக் கப்பல் பீரங்கிப் பிரயோகம் செய்வதும் எவ்விதமென்று அறிந்துகொண்டோம். நார்மண்டிப் போர் உள்ளது உள்ளபடி நமது மனதில் பதிந்துவிட்டது. நாம் ஒலிபரப்பைக் கேட்கும்பொழுது போரில் நேரடி நாம் ஈடுபடுவது போல் தோன்றுகிறது.

---

## கவசமணிந்த ரயில் வண்டித் தொடர்.

### ஹிட்லரின் தலைமை காரியாலயத் தோற்றம்.

(டெயிலி ஹெரால்டில் வில்லி பிரிஸ்க் ஆயர்).

ஹிட்லரைக் கொல்ல செய்யப்பட்ட முயற்சியை பகிரங்கப்படுத்திய ஹிட்லரின் தலைமைக் காரியாலயத்தை உற்று நோக்குவோம். இந்த நடவடிக்கையை ஹிட்லரின் பத்திரிகை ஆசிரியரும் சகாவுமான டாக்டர் ஆட்டோ, டீட்ரிக் பின்வருமாறு பிரகடனம் செய்திருக்கிறார்.

ஹிட்லரின் தலைமைக் காரியாலயம் இப்பொழுது பிரான்ஸிலாவது, போலந்திலாவது இருக்கக்கூடும். யுத்த ஆரம்பத்திற்குப்பின் இது ஆறு வண்டிகள் உள்ள கவசம் பூண்ட ரயில் வண்டித் தொடர்தான். ஒன்றில் ஹிட்லர் வாசம் செய்கிறான். ரயில் வண்டி நின்ற உடன் நிபுணர்கள் அதை மறைமுகப்படுத்துவார்கள். அதைச் சுற்றிலும் பாரா அமைக்கப்படும். அவர்கள் ஹிம்லரின் S. S. கரும்படையைச் சேர்ந்த லீப்ஸ்டாண்டார்டேயைச் சேர்ந்தவர்கள். மற்ற பகுதிகள் எல்லாம் போர்முனைகளிலும் போரை நடத்துகின்றன.



ஹிட்லரின் வாசஸ்தல வண்டியில் ஒரு படுக்கை அறையும் ஆபீஸ் ரூமுமிருக்கிறது. ஆபீஸ் அறையில் ஒரு ருஷ்ய மாதும், ஜெர்மன் மாதும், ஹிட்லரின் உத்திரவுகளை மெய்க் காப்பாளருக்கு அனுப்ப கார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவருடைய மெய்க்காப்பாளரும் கொலை முயற்சியில் காயப்பட்டவருமானவர்கள் மேஜர் ஜெனரல் ஷ்மண்ட், கடற் தளபதி பட்காமர், விமானப்படை ஜெனரல் போடன் ஸ்சாண்ட்ஸ், கர்னல் ஜெனரல் ஜோடில் ஹிட்லரின் தலைமை காரியாலயத்தில் பிராணஸ்நேசிதனானவரும் ஹிட்லரிடம் செல்வாக்குள்ளவருமான ப்ருக்னர் ஒரு பெரிய நாஸி கொள்ளைக்காரர். அடுத்தபடியாக ஹிட்லரைப் பின்பற்றுகிறவரான ஷாட் இப்பொழுது S. S. படைகளின் ஜெனரலாக நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் அநேக வருஷங்கள் வரையில் ஹிட்லரின் மோட்டார் ஓட்டியாகயிருந்தார். மற்றவர்களின் ஜாபிதா பின்வருமாறு டாக்டர் மோரல், ஹிட்லரின் டாக்டர், கர்னல் ஏஞ்சல் போக்கு வரத்து நிபுணர். ஹீன்ரிக் ஹாப்மான், நண்பர் ஒளிப்படம் பிடிப்பவர். இவர் அதிக பணம் சம்பாதித்துவிட்டார்.

இதற்குமுன் ஹிம்லர் அநேக காலம் ஹிட்லரின் தலைமை காரியாலயத்தில் வசிப்பதுண்டு. மேஜர் ஜெனரல் ஸ்டாக் ஹிட்லரின் தலைமை காரியாலயத்திலிருந்து அனுப்பப்படும் தகவலைக்கொண்டுபோகும் வண்டியைக் காபந்து செய்கிறார். தகவல்கள் விமான மூலமாகவும் ரேடியோ மூலமாகவும், தந்தி மூலமாகவும் அனுப்பப்படுகின்றன. S. S. படையின் தலைவரான வ்யூன்ஷி பரம ரகசியமான உத்திரவுகளைக் கொண்டுபோவார். விமான எதிர்ப்பு பீரங்கிகளுள்ள வண்டியை ராட்டர் குருபர் காபந்து செய்கிறார். சமீப காலத்தில் தலைமை காரியாலய வண்டித்தொடரில் கனமான பீரங்கிகளுள்ள ஒரு வண்டியும் சேர்க்கப்பட்டிருக்கிறது. பகலில் ஹிட்லர் ஜோடில் போன்ற முக்கிய ஆலோசகர்களுடன் தனியாகக்காலம் கடத்துவான். தலைமைக் காரியாலயத்துக்கு, வார்மான் ஹெஸ் என்ற நாஸித்தலைவரும் பீல்ட் தளபதிகளும், பீல்ட் மார்ஷல்களும் ஜெனரல்களும் வருவார்கள். அவர்களுடன் ஜெர்மன் ராணுவ நிர்வாகியான கர்னல் ஜெனரல் ஸீட்ஸ்லரும் வருவார். சில சமயங்களில் ஹிட்லரைப்பேட்டி காணவரும் ஹிட்லரின் ஆதிக்கத்துக்குட்பட்ட நாடுகளின் ராஜதந்திரிகளை டாக்டர் டோர்மான் அறிமுகப்படுத்துவார். விசேஷமான பிரமுகர்கள் வரும்பொழுது டாக்டர் லாமர்ஸ், மீஸ்னர் என்ற ஜெர்மன் மந்திரிகளும் கூடயிருப்பார்கள்.

ஹிட்லர் முகாம் செய்யுமிடத்தில் மூன்று சதுர மைல்கள்கொண்ட பிரதேசம் காபந்து செய்யப்படும். அந்த வட்டாரத்திலுள்ள ஜனங்கள் துரத்தியடிக்கப்படுவார்கள். கடைசியாக ஹிட்லரின் தலைமை காரியாலயங்களிருக்குமிடத்தைப்பற்றி ஒன்றுக்கொன்று முரணான தகவல்கள் வந்திருக்கின்றன. அவைகளை நாம் அளவுகடந்து நம்பிவிடக்கூடாது. அது பிரான்ஸுக்கு வந்துவிட்டதாகச் சொல்லப்பட்டது. ஆனால் இப்பொழுது அது ஜெர்மனியின் உள்நாட்டு அரணுக்குள்தான் இருக்கிறதென்று சொல்லவேண்டும்.

---

## ஜெர்மனிக்கு தினசரி நான்கு கப்பல்கள் நஷ்டம்.

### எஞ்சியுள்ள மூலபலத்தை ஜெர்மனி அபாயத்துக்குட்படுத்துகிறது.

(A. J. மாக் வின்னி).

ஜெர்மன் கடற்படையில் பாக்கியுள்ள பலத்தை கடற்கரையிலுள்ள ஜெர்மன் படைகளுக்கு சாமான்களைக் கொண்டுபோகும் கப்பல்களுக்குத் துணைக்காவல் புரிய கடற் தளபதி கார்ல் டோனிட்ஸ் உபயோகித்து வருகிறான்.

பால்டிக் கடலுக்கு வெளியில் எந்த சமுத்திரத்திலும் ஒரு சில நாசகாரிகளைத் தவிர வேறு பெரிய கப்பல்கள் ஜெர்மனியிடமில்லை. ஆகையால் துறைமுகத்திலிருந்து வெளியே போகும் சாமான் கப்பலுக்கும் எண்ணெய்க் கப்பலுக்கும் சிறிய யுத்தக் கப்பல்களடங்கிய ஒரு கூட்டத்தை துணைக்காவலுக்கு டோனிட்ஸ் அனுப்பி வருகிறான். ஒரு எண்ணெய்க் கப்பலுக்கு 8 அல்லது 9 இ படகுகளும் R. படகுகள் என்ற ரோந்துப் படகுகளும் உதவிப் படகுகளும் துணையாகச் செல்லுகின்றன.

ஆகிலும் ஜெர்மன் கப்பல்களின் சலனத்தை பிரிடிஷ் கடற்படையும் விமானப்படையும் ஜாக்கிரதையுடன் கவனித்து வருகின்றன, கடற்கரை ஓரமாகச் செல்லும் ஜெர்மன் துணைக்

காவல்கொண்ட சாமான் கப்பல் கூட்டம் அபாயத்துக்குட்படாமல் கரைசேருவதென்பது மிகவும் துர்லபம்.

சில வாரங்களாக ஜெர்மன் கப்பல்களை நேசதேசத்தார்கள் சராசரி அதிகமாகவே அழித்து வருகிறார்கள்.

### D. தினத்திற்குப்பின் ஜெர்மன் நஷ்டங்கள்.

ஏழு வாரங்களில் ஜெர்மனி எல்லாப் பகுதிகளிலும் சேர்ந்து 231 கப்பல்களை இழந்து விட்டது. இவைகளில் 95 மூழ்கடிக்கப்பட்டன. 25 மூழ்கியிருக்கலாம். 111 பழுது பட்டன. நஷ்டக் கணக்கு தினசரி நான்கு கப்பல்களுக்கு அதிகமாகயிருப்பதால் ஜெர்மன் கப்பற் கட்டும் சாலைகள் இந்த நஷ்டத்தை ஈடு செய்யமுடியாது.

வெடிகுண்டு வீச்சினால் ரஸ்தாக்களுக்கும் இருப்புப்பாதைகளுக்கு மேற்பட்ட சிரமத்தை நிவர்த்திக்க, எவ்விதமான அபாயமிருந்தபோதிலும் கப்பல்களை உபயோகிக்கவேண்டுமென்று ஜெர்மனி உத்தரவிட்டிருக்கிறது. நார்வேயிலிருந்து தெற்கு பிரான்ஸ் வரையிலுள்ள கடற் கரை பிரதேசத்திலும் வடக்கு இதாலியிலிருந்து டொடிகானிஸ் தீவுவரையிலுமுள்ள இடங்களி லும் சர்பராக்களை இரக்கவேண்டும். டோனிட்ஸ் கீழ்படிந்து நடக்கவேண்டும்.

சமீபகாலத்தில் ஹேலிகோலாந்திலிருந்து 9 ஜெர்மன் சாமான் கப்பல்கள் 30 கப்பல்கள் கொண்ட துணைக்காவலுடன் புறப்பட்டன. பிரிடிஷ் போபைடர் விமானங்கள் தாக்கி ஒவ்வொரு கப்பல் பேரிலும் வெடிகுண்டுகளைப்போட்டன. இரண்டு கப்பல்கள் மூழ்கும் தருவாயிலிருந்தன. ஐந்து கப்பல்கள் தீப்பற்றி எறிந்து கொண்டிருந்தன.

மற்ற கப்பல்கள் ப்ரிஷியன் தீவுகளுக்கு சமீபத்தில் மறைந்து செல்ல முயன்றன. அவைகளையும் போபைடர் விமானங்கள் துறத்தியடித்தன. கவசமுள்ள இழுப்புப் படகு களின்பேரில் மீன் வெடிகளும், ஆகாச குண்டுகளும், பீரங்கிக் குண்டுகளும் போடப் பட்டன.

ஆஸ்டெண்டிலிருந்து 10 மைல்கள் தூரத்தில் கடற்கரை விமானங்கள் இரண்டு யூ படகுகளைத் தாக்கின. டான்டியர் முனைக்கருகில் மூன்று ஜெர்மன் R. படகுகள் பலமாகப் பழுதாக்கப்பட்டன. ஒன்று தீப்பற்றி எறிந்தது. இது வரையில் எந்த தேசமும் இவ்வித மான முற்றுகைக்குட்பட்டதில்லை. ஜெர்மனியைப்போல் எந்த தேசமும் அதனுடைய படைகளுக்குத் தேவையான சர்பராக்களைக் கொண்டுபோக இவ்வளவு கஷ்டங்களை அனு பவித்ததில்லை.

### சங்கியையிலும் ரகத்திலும் மேன்மை.

நேசதேசப்படைகள் சங்கியையிலும், ரகத்திலும், பீரங்கி அமைப்பிலும் உயர்வானவை என்று அறிந்தபோதிலும் டோனிட்ஸுக்கு பாக்கியாகவுள்ள மூலபலத்தை உபயோகிப்பதைத் தவிர வேறு கதியில்லை.

பிரிடிஷ் கடற்படை ஹிட்லரை உலகத்திலிருந்து துண்டித்துவிட்டது. அவனுடைய சர்பரா பிரச்னை தினசரி கேவலமாகி வருகிறது. தரையில் நேசதேசப்படை முன்னேற ஏற அவனுக்கு யுத்த தளவாடங்களை அனுப்பும் சிரமம் அதிகரித்துக்கொண்டேயிருக்கிறது. தரை மார்க்கமாகச் செல்லும் சர்பராக்களை நேசதேச விமானப் படையும் கடல் மார்க்கத்தில் நேசதேச யுத்தக் கப்பல்களும் விமானப் படையும் செல்லவொட்டாமல் தடுத்துவிடுகின்றன.

இதுதான் பூர்ணமான முற்றுகை. நேசதேசத்தாரின் குறவளைப் பிடிப்பு ஜெர்மனி யைக் கூடிய சீக்கிரத்தில் அடிபணியும்படி செய்துவிடும்.

வெற்றிபெற இயலாதென்று சில ஜெர்மன் ஜெனரல்கள் வெளிப்படுத்திவிட்டார்கள். உலகத்தின் சாமான்கள் அவர்களுக்குக் கிட்டாமல் செய்யப்பட்டுவிட்டதுடன் ஜெர்மனியி லிருந்தும் அவர்களுக்குச் சாமான்கள் வரக்கூடவில்லை.

நேசதேசத்தாரிடம் அபரிமிதமான படைகளும் டாங்கிகளுமிருந்ததினால்தான் வட ஆபிரிக்காவை இழக்கும்படி நேரிட்டதென்று ஜெர்மனி ஒப்புக்கொண்டது. படைகளைக் கொண்டுபோவதற்கு பிரிடிஷ் கடற்படைதான் பேருதவி செய்தது.



யுத்தத்தைப்பற்றி சரித்திரம் வரையப்படும்பொழுது நேசதேச யுத்த முயற்சிக்கு கடல் பலம்தான் முக்கியத்வமுள்ளதென்பது குறிப்பிடப்படும். பிரிடனின் கடலாதிக்கத்தை குறைவான பலமுள்ள கடற்படையுடன் சமாளித்துவிடலாமென்று நினைத்து ஹிட்லர் போரை ஆரம்பித்தபொழுதே அவன் வெற்றியை இழந்துவிட்டானென்பது நிச்சயம்.

---

## இதாலியிலுள்ள துருப்புகளை மன்னர் பார்வையிடுகிறார்.

### இந்திய சிப்பாய்க்கு விக்டோரியா பதக்கம் வழங்கப்பட்டது.

(எரிக் லிங்க் லேடர்).

இதாலியிலுள்ள எட்டாவது படையைப் பார்வையிட்ட இரண்டு நாட்களில் மாளிகை தங்கிய ஆறுவது ஜார்ஜ் மன்னர் ரஸ்தா மார்க்கமாகவும், ஆகாய மார்க்கமாகவும் நூற்றுக் கணக்கான மைல்கள் பிரயாணம் செய்தார். அம்பிரியாவிலுள்ள செழிப்பான சமவெளி களிலும், மலைக்குன்றுகளிலும், டஸ்கெனியிலுள்ள உன்னத பிரதேசங்களிலும் கணவாய்கள் வழியாகவும் சென்றபொழுது, தாக்குகிறவர்களுக்கு சகலவிதமான இடையூறுகளையும் தற் காப்பு செய்கிறவர்களுக்கு பலவித சௌகரியங்களையும் அளிக்கும் நாட்டில் முன்னேறும் படைகளுக்கு ஏற்பட்டிருக்கும் இயற்கைச் சிரமங்களைக் கண்ணுறக் கண்டார்.

மன்னர் செங்குத்தான வளைவாகவுள்ள ஒரு ரஸ்தா வழியாக அநேக மைல்கள் ஒரு மோட்டாரில் பிரயாணம் செய்தார். இந்த ரஸ்தா இந்தியரால் அமைக்கப்பட்டது. மலை களிலுள்ள இறங்குமிடத்திலிருந்து ஒரு அழகிய லேசான விமானத்தில் விமான தளத்திற்குச் சென்றார். இதில்தான் படைத் தலைவர்கள் வேவு பார்ப்பதற்கும், பீரங்கிப் படைகள் உற்று நோக்குவதற்கும் செல்லுவதுண்டு.

மன்னரின் விஜயத்தின்பொழுது அவரை பலவகைப்பட்ட துருப்புகள் வந்தனம் செய்து வரவேற்றனர். ரஸ்தாக்களின் இரு பக்கங்களிலும் மைல்கள் கணக்காக ஸோல்ஜர்கள் குழுமியிருந்தார்கள். ஒரு இடத்தில் படைப் பகுதியும் மற்றொரு இடத்தில் தனிப்பட்ட பாராக்காரரும் இருந்தார்கள். அதற்கு அடுத்தாற்போல் ஒர்க்ஷாப் படையும் பீரங்கி நிலயங் களும் காணப்பட்டது. அதன் பின் மலைச் சரிவில் படைகள் வசித்து வந்தன அல்லது ரஸ்தா ஓரத்தில் நின்று கொண்டிருந்தன. எல்லோரும் நல்ல பயிற்சி பெற்று திடகாத்திர முள்ளவர்களாகவும் குதூகலத்துடன் நம்பிக்கையுள்ளவர்களாகவும் காணப்பட்டார்கள். இந்தப் படைகளில் நியூஸிலாந்திலிருந்து கனடா வரையிலுள்ள குடியேற்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள் இருந்தார்கள்.

### கியாதி பெற்ற படைகள்.

மன்னர் சமீப காலம் வரையில் எதிரிவசமிருந்த மாகாணங்கள் வழியாகச் சென்றார். நாம் அவைகளைப் பிடிப்பதற்கு கடுமையான பீரங்கிப் பிரயோகம் செய்தோம். பிரிடிஷ் இஞ்ஜினியர்கள் அதே சமயத்தில் ரஸ்தாக்களையும் பாலங்களையும் பழுது பார்த்தார்கள். அவைகளைப் பிடித்த புகழ் சேனையிலுள்ள சில கியாதிபெற்ற படைகளுக்கு உரித்ததாகும். மன்னர் இதாலியில் சென்றபொழுது இரு பக்கத்திலும் நின்றவர்கள் மார்ல்பரோவின் கீழும், அதற்குப் பிறகும் அநேக போர்களில் ஈடுபட்ட வீரர்களின் சந்ததியார்கள். அவர்கள் இயற்கையான மனோதிடத்துடன் எட்டாம் படையின் ஸிஸிலிய, இதாலிய நடவடிக்கை களில் அரிய சேவை செய்திருக்கிறார்கள்.

சாம்ராஜ்யப் படைகளில் பலவிதமான தேசஸ்தர்களிருப்பது நன்றாய் விளங்கிற்று. தாடியுள்ள சீக்கியர்களும், ஒல்லியான மராட்டியர்களும், பஞ்சாபைச் சேர்ந்த முஸ்லீம்களும், மதராஸ் வாசிகளும், எல்லைப் புறத்தைச்சேர்ந்தவர்களும், நேபாலிலிருந்து வந்த குள்ளமான ஸோல்ஜர்களும் காணப்பட்டார்கள். ஸீக்கியர்களும், பஞ்சாபிகளும், முஸ்லீம்களும், எல்லைப் புர பட்டாளத்தைச் சேர்ந்த பாதான்களும் தொன்று தொட்டு போர் வீரர்கள்.

சுற்றுப் பிரயாணத்தின்பொழுது வழங்கப்பட்ட மூன்று விக்டோரியா பதக்கங்களில் ஒன்று கமல் ராம் என்ற இந்திய சிப்பாய்க்குக் கொடுக்கப்பட்டது. சமீப வருஷங்களில் உலகத்தின் செலவாணியின் மதிப்புக் குறைவுபட்டிருந்தபோதிலும் விக்டோரியா பதக்கத்தின் மதிப்பு உயர்ந்துவிட்டது.

நியூஸிலாந்து, தெற்கு ஆபிரிக்கா, கனடாவிலிருந்து வந்துள்ள ஸோல்ஜர்களையும் மன்னர்பிரான் பார்வையிட்டார். முன்னணி ஸ்தானங்களையும் மன்னர்பிரான் பார்வையிட்டார். முன்னணி ஸ்தானங்கள் இல்லாததும் சில்லரை நடவடிக்கைகளால் சாதிக்கக்கூடியதுமான இதாலிய யுத்தத்தில் மன்னரும் அவருடைய பரிவாரங்களும் சுலபமாக கவனிக்கக்கூடிய ஒரு குன்றை இந்திய காலாட்படை டாங்கிகள், பீரங்கிகளின் உதவியைக்கொண்டு தாக்கியதை மன்னர் பிரான் கண்ணுறக் கண்டார். சென்ற சில வாரங்களில் இதேவிதமாக அநேக நடவடிக்கைகள் நிகழ்ச்சி பெற்றன.

அம்பிரியாவிலும், டஸ்கனியிலும் மன்னர் பிரான் சுற்றுப் பிரயாணம் செய்தபொழுது இதாலியில் ஸோல்ஜர்கள் அவரை உரக்க வரவேற்றதுமல்லாமல் தங்களுடைய ராஜ விசுவாசத்தையும், மன்னரிடமுள்ள அன்பையும் நிதர்சனம் செய்தார்கள்.

---

## போரின் குருத்வம் தூரக்கிழக்குக்குச் சென்றுவிட்டது.

### நேசதேசக் கடற்படையின் யுத்த தந்திரம்.

(டைம்ஸ் பத்திரிகை).

கிழக்குப் போர் கப்பற்படைக்கு கடற்தளபதி ஸர் ஜேம்ஸ் சோமர்வில்லுக்கு பதிலாக கடற்தளபதி ஸர் ப்ரூஸ் பிரேசர் தலைவராக நியமிக்கப்பட்டிருப்பதிலிருந்து இந்த உலக யுத்தத்தின் கடற்படை தந்திரத்தின் குருத்வம் அட்லாண்டிக், பிரிடிஷ் கடல்களிலிருந்து தூரக்கிழக்குச் சென்றுவிட்டதென்பது வெளிப்படுகிறது.

1939—40-ம் வருஷத்தில் பிரிடன் தன்னுடைய கடற்படையின் சக்தியைத் தான் நம்பியிருந்தது. நேசதேசக் கப்பல்களை அழிக்க எதிரி யூ படகுகளைக் கட்டுவதில் அதிக கவனம் செலுத்தி வந்த போதிலும் அவனிடம் பிஸ்மார்க், ஷார்ன்ஹார்ஸ்ட், நீஸ்நா என்ற மூன்று யுத்தக் கப்பல்களும் அநேக கனமான சஞ்சாரிகளுமிருந்தன. சாமான் கப்பல்களுக்கு துணைபுரிவதிலும் சேர்ந்து நடவடிக்கையிலும் பிரிடிஷ் கடற்படை கவனம் செலுத்தி வந்ததால் காலக்கிரமத்தில் யூ படகுகள் முறியடிக்கப்பட்டு பிரிடிஷ் கடற்படையின் கடலாதிக்கம் ஸ்தாபிதம் செய்யப்பட்டது. அட்லாண்டிக் கடலில் ஷார்ன்ஹார்ஸ்டும் நீஸ்நாவும் ஒன்றும் செய்ய முடியாததிலிருந்தும், பிஸ்மார்க் மூழ்கடிக்கப்பட்டதிலிருந்தும் இது வெளிப்படுகிறது. 1941-ம் வருஷ இறுதியில் கடற்படை பலம் மிகுதியாக உள்ள ஜப்பான் அச்சுக் கக்ஷியில் சேர்ந்த பொழுதும் ஐரோப்பிய நிலைமை முக்கியத்வமுள்ளதாகயிருந்ததால் கடற்படையில் இரவில் ஒரு மாறுதலும் செய்யக்கூடவில்லை.

இன்று நிலைமை மாறிவிட்டது. யூ படகுகள் மிகுதியாகயிருந்த போதிலும் அவைகளை நாம் சமாளித்துவிட்டோம். அவைகளை அழிக்க முற்பட்டிருக்கும் சாதனங்களை அவைகள் எதிர்த்துப்போராட முடியவில்லை. ஜெர்மன் கடற்படையிலுள்ள ஷார்ன்ஹார்ஸ்ட் வடக்கு முனையில் மூழ்கிக்கிடக்கிறது. நீஸ்நா பால்டிக் துறைமுகத்தில் சிதைவுற்றிருக்கிறது. டிர்பிட்ஸ் அதற்கு ஏற்பட்ட பழுதை சரிபார்த்துக்கொள்ள ஜெர்மனியிலுள்ள கடற்தளத்திற்குச் செல்ல சமயத்தை எதிர்பார்த்து வருகிறது.

1942-ம் வருஷத்தில் ஒத்திவைக்கும்படி நேரிட்ட வேலையை நாம் இப்பொழுது மேற்கொள்ளலாம். பிரிடிஷ் கடற்படையின் முக்கியமான கடற்தளபதியை இந்து மஹா சமுத்திரத்திலுள்ள கடற்படைக்கு நியமித்திருப்பதிலிருந்து தூரக்கிழக்கிலுள்ள கடற்படையின் பலமும் உச்ச நிலையை அடைந்துவிடுமென்று எதிர்பார்க்கலாம். கடற்படை பலம் அதிகரிப்புடன் கால அளவில் விமானப் படைகளும் தரைப் படைகளும் தூரக்கிழக்கில் குவிந்துவிடும். கடற்தளபதி சோமர்வில் முதல்தரமான போர் வீரர் தான். ஆகிலும் அவர் 1940-ம் வருஷம் வேனிர்காலம் முதல் தொண்டு செய்திருக்கிறார். புதிதாக நியமிக்கப்பட்டிருப்பவரைவிட அவர் ஏழு வயது மூப்பானவர். ஸர் புரூஸ் பிரேசரை நியமித்ததிலிருந்து அவருக்கு அபப்ரதை ஏற்பட்டதென்பது இல்லை. அவர் சேவை இத்துடன் ஒழிந்ததென்பதில்லை. கூடிய சீக்கிரத்தில் அவர் மற்றொரு உத்தியோகத்தை ஏற்றுக்கொள்ளுவார்.



## ஜப்பானில் பருத்திக் குறைவு.

### சமத்வமில்லாத ஐசுவரியங்கள்.

(ஜோஸப் கால்மர்).

ஜப்பானில் பருத்திக் குறைவு ஏற்பட்டிருக்கிறது. ஜப்பானிலும், ஜப்பான் ஆக்கிரமித்த நாடுகளிலும் உணவுப்பொருள் உற்பத்தியை நிறுத்தி பருத்தி சாகுபடியை ஆரம்பித்ததிலிருந்து இது வெளியாகுகிறது.

சமாதானகாலத்தில் ஜப்பான் ஏராளமான பருத்தி சாமான்களை ஏற்றுமதி செய்து வந்ததால் பருத்தி சம்பந்தப்பட்டமட்டில் ஜப்பானில் நிலைமை திருப்திகரமானதென்று எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் உண்மையாக ஜப்பான் ஒழுங்கு படுத்தப்படாத பருத்தியை இறக்குமதி செய்து அவைகளை சாமான்களாக ஏற்றுமதி செய்தது. உதாரணமாக, ஜப்பான் ரப்பர் உற்பத்தியாகும் பிரதேசங்களில் 90 சத விகிதத்தை ஆக்கிரமித்திருக்கிறபோதிலும் மோட்டார் வண்டிகளுக்கும், விமானங்களுக்கும் தேவையான ரப்பர் டயர்களை உற்பத்தி செய்யக்கூடவில்லை. ஏனெனில் உற்பத்திக்கு அவசியமான பருத்தி ஜப்பான் வசமில்லை.

### கப்பற் குறைவு.

ஜப்பான் சாமான்களின் சமத்வத்தை சம்பாதிக்கவில்லை. ஒரு இயற்கைப்பொருள் மிகுதியாகவும் மற்றொன்று குறைவாகவுமிருக்கிறது. செம்பு, நிக்கல், பருத்தி, ரோமம் குறைவாகயிருப்பதால் சங்கடம் ஏற்பட்டிருக்கிறது. ஜப்பான் ஆக்கிரமித்த நாடுகளின் க்ஷேமம் அவைகளின் ஏற்றுமதியைப்பொருத்திருக்கிறது. இப்பொழுது ஜப்பானிலுள்ள தொழிற்சாலைகளுக்கே போதுமான சாமான்கள் கிடைக்கவில்லை. இயற்கைப் பொருள்களிருந்தபோதிலும் அவைகளைக் கொண்டுபோகக் கப்பல்கள் கிடையாது.

1943-ம்வருஷமுடிவில் வங்காளக்குடாக்கடலிலும் பஸிபிக் சமுத்திரத்திலும் நேசதேச கடற்படை நடவடிக்கை மூலம் யுத்தத்துக்குமுன் ஜப்பானிடமிருந்த 75,00,000 டன்கள் மொத்த எடைமானமுள்ள கப்பற்படை 20 சதவிகிதம் குறைந்துவிட்டது. அதற்குப் பிறகும் நஷ்டம் அதிகரித்துவருகிறது. நஷ்ட ஈடு செய்ய ஜப்பானிடம் கொஞ்சம்கூட சக்தியில்லை. தற்போது ஜப்பானுக்கு தேவையான பருத்தி சாமான்களின் கால் பாகத்தை ஆக்கிரமிப்பு நாடுகளிலிருந்து சீர்படுத்தாத பருத்தியை இறக்குமதி செய்வதன் மூலம் பூர்த்தி செய்துவருகிறது. இறக்குமதிகள் கட்டாயத்தின் பேரில் நடைபெறுவதினால் சமக்ஷேம பிராந்தியத்திலுள்ள நாடுகளில் திவிலைகூட பாக்கி கிடையாது. ஜப்பானில் சேர்மானப்பட்டு மிகுதியாக உபயோகிக்கப்படுகிறது. மலேயா, அன்னம், ஸியாமிலுள்ளவர்களுக்கு சேர்மானப்பட்டு கிடைப்பதில்லை. பருத்தி சாமான்களும் அபூர்வமாகிவிட்டன.

### ஏற்றுமதிக் குறைவு.

1930-ம் வருஷம் முடிய ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளின் வியாபாரிகளை பாதிக்கக் கூடியவரையில் ஜப்பான் ஏராளமான பருத்தி சாமான்களை ஏற்றுமதி செய்தது. இதுதான் ஜப்பானின் ஏற்றுமதியில் கிட்டத்தட்ட பாதிபாகம் பொருமானமுள்ளது. அதற்குப்பின் ஏற்றுமதி குறைந்தது.

1938-ல் பருத்தி சாமான்களின் ஏற்றுமதி மொத்த ஏற்றுமதியில் 17·3 சதவிகிதம் தான் நடைபெற்றது. சமாதான காலத்திலும் ஜப்பான் பருத்தி விளையும் நாடுகளை கைப்பற்ற ஆசைப்பட்டது.

1933-ம் வருஷத்தில் ஜப்பான் அபிஸீனியாவில் சலுகைகளை சம்பாதிக்க முயன்றது. டச்சு நியூ கினியாவில் அது ஒரு தோட்டத்தை அமைத்தது. ஆகிலும் புதிய பருத்தி பிரிடிஷ் இந்தியாவிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும்தான் இறக்குமதி செய்யவேண்டியிருந்தது. இந்த வரத்தும் நின்றுவிட்டது.

### ஆக்கிரமிப்பு நாடுகளிலுள்ள பருத்தி.

ஆக்கிரமிப்பு நாடுகளில் சீனாவில்தான் ஏராளமான பருத்தியை சாகுபடி செய்யக்கூடும். இந்த விளைவும் ஜப்பானின் சமாதானகால இறக்குமதியின் பத்தில் ஒரு மடங்கைக்கூட திருப்தி செய்யமுடியாது. இப்பொழுது இந்த அளவுக்குக்கூட வடக்கு சைனாவிலிருந்து

கிடைக்காது. ஏனெனில் வடக்கு சைனாவிலுள்ள நிலங்கள் மழையின்மையாலும், வெள்ளப்பெருக்கினாலும் பாழாகிவிட்டன. அவர்களுக்குத் தேவையான கோதுமையும், தான்யங்களும் இறக்குமதி செய்யப்படுகின்றன. மேலும் இந்த பிரதேசத்தில் விளையும் பருத்தி அல்பாயுசு உள்ளது. வடக்கு சைனாவிலும் மஞ்சூரியாவிலும் பருத்தி விளையும் பிரதேசங்களை அதிகரிக்க ஜப்பான் முயற்சித்தது. சீதோஷ்ண ஸ்திதி பருத்திக்குப் பிரதிகூலமானதால் முயற்சி வீணாகிவிட்டது.

டச்சு இந்தீஸிலும், ஸியாமிலும், இந்தோ-சைனாவிலும், மலேயாவிலும் பருத்தி உற்பத்தியை அதிகப்படுத்தலாமென்று ஜப்பான் எண்ணியிருந்தது. மஞ்சூரியாவில் கடும் குளிரென்றால் இந்த பிரதேசங்களில் கடுமையான உஷ்ணம் காணப்படுகிறது. பருத்திக்குச் சிறிது ஜலம் அவசியமென்றாலும் அதிக சீதத்தை அது பொருத்து நிற்காது. எகிப்திலும், சூடானிலும் விளையும் பருத்தி சிலாக்கியமாகயிருப்பதற்கு அதன் சீதோஷ்ணத்தின் வாகுதான் காரணமாகும். பிலிப்பைன்ஸ் தீவிலுள்ள எல்லா கரும்பு சாகுபடியாகும் வயல்களிலும் பருத்தி சாகுபடி செய்தாலும் 50,000 மெட்ரிக் டன்கள் எடைமானமுள்ள பருத்திக்கு மேல் விளையாது. ஜப்பான் ஆக்கிரமித்திருக்கும் நாடுகள் மட்டும் யுத்தத்துக்குமுன் 1,75,000 மெட்ரிட் டன்கள் எடைமானமுள்ள சாமான்களை இறக்குமதி செய்திருக்கின்றன.

டச்சு இந்தீஸ் தீவுகளில் சுற்றுப்புறத்திலுள்ள பிராந்தியங்களில்தான் பருத்தி விளையக்கூடும். ரப்பர் உற்பத்தி செய்யப்படும் தோட்டங்களில் பருத்தி பயிரிடுவது சாத்தியமில்லையென்று நிபுணர்கள் கருதினார்கள். ஸியாமிலும், இந்தோ-சைனாவிலும், மலேயாவிலும் இதே நிலைமைதான். இங்கு பருத்தி விளையும் பிரதேசமும் சொல்பமானது.

அநேக வருடங்களாக ஜப்பான் பருத்திவிளையும் பிரதேசங்களை விஸ்தாரப்படுத்தியிருக்கிறபோதிலும் நேசதேசத்தார்கள் அதற்கு இன்னல்கள் இழைத்துவிடுகிறார்கள். மேற்கிலிருந்தும், தென்கிழக்கிலிருந்தும் நேசதேசத்தாக்குதல் பலமாகயிருப்பதினால் ஜப்பானின் சிரமங்களும் கவலைகளும் அதிகரித்துவிட்டன. டச்சு நியூ கினியாவிலிருந்த தோட்டம் அழிந்துவிட்டது. சேனைக்கும், பொது ஜனங்களுக்கும் ஆடைகள் அவசியம். ஆகையால் ஆக்கிரமிப்பு நாடுகளிலும், ஜப்பானிலும் உள்ள பொதுமக்களின் தேவைகளைப் பொருட்படுத்தாமல் உணவுப் பொருளை உற்பத்திசெய்யும் பூமியில் பருத்தி சாகுபடிசெய்யப்படுகிறது.

## நான்காவது வருஷ யுத்தத்தில் இந்தியாவின் சேவை.

1942-43-ம் வருஷ யுத்தத்தை விமர்சனம் செய்யும் பொழுது இந்தியா நியாயமான பெருமையுடன் அதன் ஸோல்ஜர்களைப் பாராட்டக்கூடும். நேசதேசத்தார்கள் அச்சுநாடுகளுக்கு அநேக தோல்விகளை விளைவித்த வருஷத்தில் இந்தியர்கள் முக்கியமான பங்கெடுத்துக் கொண்டார்கள்.

வடக்கு ஆபிரிக்காவில் கியாதிபெற்ற நான்காவது இந்தியப்படையின் அரிய சேவைகள் சரித்திரப்புகழ் பெற்று விட்டன. இந்த ஸோல்ஜர்கள் வெகுகாலம் வரையில் அபாயங்களையும் கஷ்டங்களையும் அனுபவித்தார்கள். ஸ்வதந்திரம் நிலைபெற்றிருப்பதற்காக அநேகர்கள் உயிர்துறந்தார்கள். இன்னும் சிலர் எதிரிகள் கையில் அகப்பட்டுக்கொண்டார்கள். எல்லோரும் சேர்ந்து இந்திய ராணுவ சரித்திரத்தில் கீர்த்திவாய்ந்த ஒரு அத்தியாயத்தை எழுதிவிட்டார்கள்.

டுனிஸியாவில் போர் புரிந்த வீரர்களுடன் இந்தியாவிலுள்ள தொழிலாளர்களும், விவசாயிகளும் இந்தியாவை ஒரு பெரிய ஆயுதக்களஞ்சியமாகச் செய்ய பாடுபட்டிருக்கிறார்கள்.

இந்தியாவின் கிழக்கு எல்லைச்சரகத்தில் 1942-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் ஆரம்பித்து 1943-ம் வருஷம் மே மாதத்தில் மாங்டாவிலிருந்தும், பூதேடாங்கிலிருந்தும் நமது



படைகள் பின்வாங்கியதுடன் முடிந்த அரக்கான் போர் ஒரு பிற்போக்கான நடவடிக்கையாம். ஆகிலும் இந்த அற்பமான நடவடிக்கையிலும் நாம் அரியசேவை செய்திருக்கிறோம். ஆசியாவைக் கைப்பற்றுவதென்ற எண்ணம் நிறைவேறாவிட்டாலும் எதிரியின் யுத்த தந்திரத்தில் நமக்கு சிறந்த அனுபவம் ஏற்பட்டது. இந்திய, பிரிடிஷ் படைகள் அநேக ஜப்பானியர்களை நாசம் செய்தார்கள்.

### வின்கேட்டின் துணிவு நடவடிக்கை.

இந்த வருஷத்தில் எதிரி வசமுள்ள பர்மாவுக்குள் இந்தியாவிலிருந்து சகல முஸ்தீப்புகளுமுள்ள ஒரு தனிப்பட்ட கோஷ்டி துணிவுடன் சென்றது. பிரிகேடியர் வின்கேட்டிடமுள்ள கூர்க்கா, இந்தியப்படைகள் பாலங்களைத் தகர்த்தன. இருப்புப்பாதைகளைத் துண்டித்தன. எதிரிகளைத் தாக்கின. அவர்களைக் கண்டுபிடிக்க ஜப்பானியப்படைகளை அங்குமிங்கும் ஓடும்படியாகவும் அவர்கள் செய்துவிட்டார்கள்.

இந்த வருஷத்தில் இந்தியாவின் யுத்த முயற்சி பன்மடங்காக அதிகரித்துவிட்டது. போர்ப்படை விஸ்தாரமடைந்தது. சேனையின் சங்கியை 2 மிலியனுக்கு அதிகரித்துவிட்டது. சென்ற வருஷத்தைவிட இவ்வருஷத்தில் 8 லக்ஷம் துருப்புகள் அதிகமாகயிருக்கிறது.

இந்திய கடற்படையும் அபிவிருத்தியடைந்து விட்டது. யுத்த ஆரம்பத்திலிருந்ததைவிட இப்பொழுது கடற்படையில் பத்துமடங்கு அதிகமான ஆபீஸர்களும் வேலைக்காரர்களும் இருக்கிறார்கள்.

அரக்கான் போரில் பிரிடிஷ் கடற்படையும், இந்திய கடற்படையும் அரக்கான் கடற்கரையோரமாகவும் மாயூ நதியிலும் சென்ற ஜப்பானிய சர்பாராக்களையும் உதவிப்படைகளையும் வழிமறித்து அழித்துவிட்டன.

மத்தியதரைக்கடலில் 1943-ம் வருஷம் ஜூலை மாதம் இரண்டாவது வாரத்தில் வட ஆபிரிக்கா கடற்கரையிலிருந்து ஸிஸிலியின் தென் கிழக்குக் கடற்கரைக்குச் சென்ற போக்குவரத்துக் கப்பல்களுக்கும் படைகளையிறக்கும் படகுகளுக்கும் இந்திய கப்பற்படை துணைக்காவல் புரிந்தது. கடல் தாண்டிச் சென்றபொழுது குறைவான கப்பல் நஷ்டமேற்பட்டதற்கும், சர்பாராக்களும் உதவிப் படைகளும் தங்குதடையன்னியில் இடைவிடாது பத்திரமாகப் போய்ச் சேர்ந்ததற்கும் திறமையுடன் வேலை செய்த பிரிடிஷ் கடற்படை, இந்திய கடற்படை, நேசதேச கடற்படையை நாம் பாராட்ட வேண்டும்.

1943-ம் வருஷம் ஏப்ரல்மீ முதல்தேதியன்று பத்து வருஷங்கள் பூர்த்தியான இந்திய விமானப்படையும் மிகுதியாக விருத்தியடைந்திருக்கிறது. அதில் இரண்டு முக்கிய அபிவிருத்திகள் காணப்படுகின்றன, இந்தியர்களால் நிர்வாகிக்கப்பட்ட விரிவான இந்திய விமானப்படையை அமைக்க திட்டம்போட இன்ஸ்பெக்டர் ஜெனரல் நியமிக்கப்பட்டார். கோஹாட்டிலுள்ள விமானப் படைத் தலைவராக கல்கத்தாவாசியான S. முகர்ஜி நியமிக்கப்பட்டார். இந்தியருக்கு இதுதான் முதல் முதலில் வழங்கப்பட்ட விமானப்படை உயர்தர அதிகாரம்.

ஒரு விமானப்படை பகுதி பர்மாவில் வேவு பார்க்கும் வேலையிலீடுபட்டது. அவர்கள் எதிரியின் பிரதேசத்துக்குள் சென்று முக்கியமான ஒளிப்படங்களுடன் திரும்பிவந்தார்கள். வடமேற்கு எல்லைச் சரகத்தில் இந்திய விமானப்படை காவல் வேலை புரிந்தது.

இந்தியத் தற்காப்பு சேவைப்படையில் இரண்டு உபரி சேவைச் சங்கங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஒன்று இந்திய சேனை வைத்தியப்படை, மற்றொன்று இந்திய மின்சார தொழிற் பயிற்சிபெற்ற எஞ்ஜினியர் படை. முதலாவது சேவைப்படையில் I.M.S., I. M. D., I. H. C. என்ற தனிப்பட்ட ஸ்தாபனங்கள் ஒன்றுபடுத்தப்பட்டன. I. M. D-யைச் சேர்ந்த மெம்பர்கள் ராணுவக்கமிஷன்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மேலும் பொதுஜன சேவையிலீடுபட்ட வைத்தியர்களுக்கும் அவசரக் கமிஷன் உத்தியோகங்கள் வழங்கப்பட்டன.

இந்திய மின்சார மெகானிக்குகள், எஞ்ஜினியரிங் படை இந்திய சேனை பீரங்கிப்படை செய்த அலுவல்களையும் வேலைக்காரர்களையும் சேர்த்துக்கொண்டது. உத்தியோகம் ஏற்றுக்

கொள்ளத்தயாராகயிருந்த இந்திய வாலிப எஞ்ஜினியர்களுக்கு 1943-ம் வருஷம் மே மாதம் முதல் தேதியன்று அமைக்கப்பட்ட இந்தச் சேவை சங்கம் சந்தர்ப்பமளித்தது.

உள் நாட்டிலும் அயல் நாட்டிலும் தேவைப்படும் சாமான்களை அனுப்ப இந்திய சர்பரா சேவைப்படையும் விஸ்தாரமடைந்து வட ஆபிரிக்க வெற்றிக்கு இந்தியா செய்த ஸப்ளை உதவி குறிப்பிடத்தக்கது.

நேசநேசத்தாரின் படைகளையும், முஸ்திப்புகளையும் தவிர இந்தியா ரயில்வே சாமான் வண்டிகள் முதல் படைகளையிறக்கும் படகுகள், மின்சார விளக்குகள் போன்ற அநேக சாமான்களை ஏராளமாக அனுப்பியிருக்கிறது. ஆயிரக்கணக்கான எஃகுக் குடிசைகளும் பயிற்சிபெறும் துருப்புகளின் வாசத்துக்குரிய கொட்டகைகளும், ராணுவ மோட்டார் தங்குமிடங்களும், வைத்திய முகாம்களும், விமானம் நிற்குமிடங்களும் இந்தியாவில் எஃகினால் அமைக்கப்பட்டு அனுப்பப்பட்டன. வைத்திய மருந்துகளும், கூடாரங்களும், முஸ்திப்புகளும், வெடி மருந்துகளும் ஏராளமாக இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்டன.

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் ஸுபரின்டென்டென்ட் அவர்களுக்கனுப்பவேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 210. (2-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 12- 8-44 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | 16- 8-44 | C. S. M. பள்ளிக்கூடம் | ... காலை | 10.00 |
| 13- 8-44 | குடுமியாமலை | ... ,, | 7.00 | ,, | ராணி பெண் பாடசாலை | ... ,, | 10.45 |
| ,, | பரம்பூர் | ... ,, | 7.30 | ,, | குழிபிறை | ... மாலை | 7.00 |
| 14- 8-44 | வெங்களூர் | ... ,, | 7.00 | ,, | செவலூர் | ... ,, | 7.30 |
| ,, | கோனாபட்டு | ... ,, | 7.30 | 17- 8-44 | கொன்னையூர் | ... ,, | 7.00 |
| 15- 8-44 | நச்சாந்துபட்டி | ... ,, | 7.00 | ,, | மேலவேகுப்பட்டி | ... ,, | 7.30 |
| ,, | விராச்சிலை | ... ,, | 7.30 | 18- 8-44 | பனையப்பட்டி | ... ,, | 7.00 |
| 16- 8-44 | காலேஜ் A இங்கிலீஷ் | ... காலை | 11.00 | ,, | ராங்கியம் | ... ,, | 7.30 |
| ,, | காலேஜ் B தமிழ் | ... ,, | 11.00 | | | | |

### பிரஸங்கம் 211. (3-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 19- 8-44 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | 23- 8-44 | C. S. M. பள்ளிக்கூடம் | ... காலை | 10.00 |
| 20- 8-44 | குளக்காடு | ... ,, | 7.00 | ,, | ராணி பெண் பாடசாலை | ... ,, | 10.45 |
| ,, | கோட்டைக்காடு | ... ,, | 7.30 | ,, | மழையூர் | ... மாலை | 7.00 |
| 21- 8-44 | தென்னதிரையன்பட்டி | ... ,, | 7.00 | ,, | கரம்பக்குடி | ... ,, | 7.30 |
| ,, | விசலூர் | ... ,, | 7.30 | 24- 8-44 | வாளரமாணிக்கம் | ... ,, | 7.00 |
| 22- 8-44 | ராமச்சந்திரபுரம் | ... ,, | 7.00 | ,, | ஏம்பல் | ... ,, | 7.30 |
| ,, | ராயவரம் | ... ,, | 7.30 | 25- 8-44 | விராலிமலை | ... ,, | 7.00 |
| 23- 8-44 | காலேஜ் A இங்கிலீஷ் | ... காலை | 11.00 | ,, | பொருவாய் | ... ,, | 7.30 |
| ,, | காலேஜ் B தமிழ் | ... ,, | 11.00 | | | | |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 12— 8—44 | பொன்னமராவதி. | 19— 8—44 | வெட்டம்விதி. |
| 13— 8—44 | ஏம்பல். | 20— 8—44 | விராச்சிலை. |
| 15— 8—44 | வடகாடு | 22— 8—44 | குடுமியாமலை. |
| 17— 8—44 | குழிபிறை. | 24— 8—44 | ஆலங்குடி. |
| 18— 8—44 | புதுக்கோட்டை. | 25— 8—44 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai, 1,750—16-8-44.


# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1944-ம் ஞு ஆகஸ்டுமீ 19உ [ந. 211


தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CCXI.

## யுத்தத்துக்குப் பின் உலக சீர்திருத்தம்.

### 2. தேசங்களிடையே பராதீனம்.

யுத்தத்துக்குப் பிந்திய உலக அமைப்பில் ஜன சமூகத்தின் நலத்தைக் கருதுவது முக்கியமான லக்ஷியமென்பதினால் அதை சாதித்துக் கொள்ளுவதற்கு தேசிய, சர்வதேச அக்கரைகளை ஒழுங்குபடுத்துவது அவசியமாகும். தேசிய உணர்ச்சி சுதந்திரத்தைக் கோருகிறது. சர்வதேச ஒற்றுமைக்கு தேசங்களிடையே பராதீனம் அவசியமாகும். உலகத்தின் க்ஷேமத்திற்கு சுதந்திரத்தில் ஒற்றுமையும், ஒற்றுமையில் சுதந்திரமும் இன்றியமையாதவை. பொது உடமைக்காரராகிலும், குடியரசுக் கக்ஷியாராகிலும், ஜனநாயகக் கக்ஷியாராகிலும் உலகத்திலுள்ள நாடுகள் ஒன்றுபடவேண்டும். சில தேசங்கள் பெரிதாகவும் வல்லமையுள்ளதாகவும், சில சிறிதாகவும் பலஹீனமாகவுமிருக்கின்றன. ஆகிலும் சிங்கமும், ஆடும் ஒற்றுமையுடன் இருந்து ஓநாயையும், நரியையும் அழிக்கவேண்டும். மிகவும் பலஹீனமுள்ள தேசம் அதன் கலைகளையும் சமாதான கால திட்டங்களையும் வளர்ச்சி செய்ய சுதந்திரம் பெறவேண்டும்.

முதலெடுப்பில் தோன்றுவதுபோல உலகம் ஒற்றுமைக்குறைவுடனிருக்கவில்லை. புதிய உலகமேற்படப்போகிறதென்று சொல்லுவது அபத்தமாகும். பழைய உலகம்தான் மறுபடியும் விருத்தியடையப்போகிறது. குடியேற்ற நாடுகளிலுள்ளவர்கள் ஐரோப்பாவைவிட்டு வெளியே சென்றவர்கள்தான். இதாலியிலுள்ள படைகள் பல தேசங்களிலிருந்து வந்திரளாகும். உலகக் கூட்டாளிகளாக சர்வதேசங்களையும் ஒன்றுபடுத்துவது சிரம சாத்தியமான வேலையே ஒழிய அசாத்தியமான காரியமில்லை.

பிரிடன் இதற்கு வழிகாட்டியாகயிருக்கிறது. அதன் சாம்ராஜ்யத்தில் அநேக தேசங்களும், அநேக ஜாதியார்களும், மதஸ்தர்களும், பிரஜைகளும் சேர்ந்திருக்கிறார்கள். ஆகிலும் அது ஒன்றுபட்ட சாம்ராஜ்யமாகவும் ஒழுங்கும் பிராபல்ய சமத்வமுள்ள சமஷ்டியாகவும், மிகவும் சக்திவாய்ந்த வல்லரசாகவும் ஆகிலும் சமாதான லக்ஷியங்களை அடைய முயற்சிப்பதாகவும் இருந்துவருகிறது.

சர்வதேச சங்கம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறதென்பது குறிப்பிடத்தக்கது. எதிர் கால அவசியத்துக்குறியது நல்லெண்ணமுள்ள அநேகர்களின் சமஷ்டி மட்டுமல்ல. வல்லரசுகள் ஒன்றுபட்டு உலக சமாதானத்தை நிலைநாட்டவேண்டும். அதன் க்ஷேமத்தையும் அபிவிருத்தி செய்யவேண்டும்.

இந்த எண்ணத்துடன்தான் திட்டங்களை நிறுவ வாஷிங்டனில் நான்கு வல்லரசுகள் மகாநாடு கூட்டப்படுகிறது. அக்கிரம யுத்தம் ஆரம்பிப்பவர்களை எவ்விதம் அடக்கி ஆண்டு சீர்திருத்துவது, பொதுவாக எவ்வளவு ராணுவத்தை வைத்துக்கொள்ளுவது, அவைகள் சர்வ தேசஸ்தர்கள் அடங்கியதா, அல்லது ஒவ்வொரு தேசமும் சேனையைப்பெற்று ஒன்றுபட்ட தலைவருக்குட்படவேண்டுமா, என்ற பலவகை பிரச்னைகளை ஆலோசனை செய்யவேண்டும்.

இதே சமயத்தில் ஒவ்வொரு தேசமும் அவரவர்களின் நாட்டிலுள்ள பிரச்னைகளைக் கவனிக்கவேண்டும். உலக ஸமஷ்டியில் தேசங்களுக்குள்ள பொறுப்பைப்போல, தனிப்பட்டவர்களும், நாட்டிலுள்ள ஜாதி, ஜன சமூக, மதாபிமானமுள்ள கோஷ்டிகளும் பொருப்பேற்றுக் கொள்ளவேண்டும். இங்கே 'தனிப்பட்டவர்களுக்குள்ளும், கோஷ்டிகளின் சுதந்திரத்திற்கும் பொதுஜன நன்மைக்குமிடையே சச்சரவுகள் நடைபெறுகின்றன. சர்வதேச பராதீனமில்லாமல் சுயேச்சை கிட்டாது. இந்தியாவில் ஜாதி, மத வித்தியாசங்களினால் இந்த பிரச்னை அதிக சிக்கலாகிவிட்டது. மேலும் நகரத்திலுள்ளவர்களும், கிராமவாசிகளும், செல்வந்தர்களும், ஏழை மக்களும், உற்பத்தி செய்கிறவரும், வாங்கிச் சாப்பிடுபவர்களும் தங்களுடைய வித்தியாசங்களைப் பாராட்டுகிறார்கள். இந்த முரணான கோஷ்டிகளை ஒன்று சேர்க்க ஒத்துழைப்பு அவசியமாகும். பொதுஜன வாழ்க்கையும் ராணுவ வாழ்க்கைக்கு சமானமுள்ளது. இங்கேயும் ஒழுக்கமும் அமைப்பும், நாயகமும், சகோதரபாவமும் அவசியமாகும்.

யுத்தம் என்பது அழுக்கானதுதான். அதிலிருந்து ஒழுக்கம், சகோதரபாவம் என்ற படிப்பினைகள் ஏற்பட்டிருக்கின்றன. போர்முனையிலுள்ள இந்திய ஸோல்ஜர் சீக்கியர், துலுக்கர், ஹிந்து, என்ற வித்தியாசத்தைப் பாராட்டுவதில்லை. ஒவ்வொருவரும் தான் இந்தியன் என்று நினைத்திருக்கிறார்கள். அவன் அநேக தேசங்களுக்குச் சென்றிருக்கிறான். புதிய அனுபவமும் சாமர்த்தியமும் பெற்றிருக்கிறான். அவன் உயர்வான ஜீவனம் செய்து அறிவும் ஆரோக்கியமும் பெற்றிருக்கிறான். அவனுடைய கிராமத்தின் ஸ்திதி எவ்விதமிருக்குமென்பதை எல்லோரும் அறிவார்கள். ஆகையால் மேன்மையான நிலைமையை ஏற்படுத்துவதுதான் தற்போதிய முக்கியமான வேலை. அதை நிறைவேற்றுவதற்கு ஒழுக்கமும் பரஸ்பர பராதீனமும் அவசியமாகும்.

இந்தியாவில் ஏராளமான சீர்திருத்தம் ஏற்படவேண்டும். இதற்கு அழுக்கும், வியாதியும், ஏழ்மைத்தனமும், அஞ்ஞானமும், அலக்ஷிய புத்தியும், ஆலஸ்யமும் இடையூராக இருக்கின்றன. ஒழுங்கு முறையும் சகோதரபாவமுமிருந்தால் வெற்றி நிச்சயம்.

---

## ஜெர்மனியைப்பற்றிய 12 விஷயங்கள்.

(லார்ட் வான்ஸிட்டார்ட்).

போரிடவேண்டிய ஜெர்மனி எத்தகைத்தது என்பதை அறியாமல் நாம் அதனுடன் எப்படி போரிடுவது என்பதை நிச்சயிப்பதில் ஏதும் பயனில்லை. விஷயம் சரியாய் விளங்கவில்லை. இதற்குள் சில விஷயங்களை நான் கூறுகிறேன்.

ஜெர்மனியின் நியாயம் சன்மார்க்கமானதில்லை. ஜெர்மனியிலுள்ளோர் யாவரும் ராணுவத்தைச் சேர்ந்தோராயும், அகந்தையுடைய பிரபுக்களாயும், தொழிலாளர்களாயுமாக, யுத்தத்தினையே விரும்புவோர்களாயுளர். எல்லோரையும் ஒன்றுபட்ட ஒருவகையினராயும், அரசியல் துறையில் உழைப்போராயும் ஒன்றுபடுத்தவேண்டும்.

ஜெர்மனியில் உள்நாட்டுப் போலீஸ் சிப்பந்திகள் தவிர வேறு ராணுவப் படையில்லாமல் இருக்குமாறு செய்யவேண்டும். இந்த அகந்தையுடன் கூடிய பிரபுக்கள் உரிமையை ஒழித்து அவர்களின் பெரும் நிலங்களையும், இதரவைகளையும் பாகுபடுத்தி சிறிது சிறிதாய் பலருக்கும் கொடுக்கவேண்டும். பெரும் தொழிற்சாலை முதலாளிகளையும் அவர்களின் உரிமையை அழிக்கவேண்டும். அவர்களின் தொழிற்சாலைகளை அரசாங்கத்தோடு பிணைக்க வேண்டும். அவ்வாறு செய்தாலும் ராணுவத்தையும் அரசாங்கத்தோடு பிணைக்காத வரையில் ஏதும் பிரயோஜனமில்லை. முதன்மையாய் சர்வதேசப் பராமரிப்புதான் பத்திரமளிக்கும். இவர்களில் யாருக்கும் ஏதும் ஒரு அல்லவன்ஸ் கொடுக்கக்கூடாது. தனிமையில் பொருள் இருந்தால் அவர்கள் திரும்பவும் அரசியல் துறையில் இறங்குவார்கள்.



ஜெர்மனியில் ஒரு சாரரைவிட மற்றொரு சாரர் சிறிது சிலாக்கியமுள்ளோராயுளர். நான் ஜெர்மனியில் ஜனநாயகத்தை விரும்புவோரை விரும்புகிறேன். முதலாளிகளை விரும்பவில்லை. இருப்பினும் அவர்களையும் நம்பமுடியாது. அவர்கள் 1914-ம் வருஷ யுத்தத்தில் இறங்கி ஜனங்களின் யுத்தம் எனச் சொல்லிக் கொள்ளுகின்றனர். 1891 முதல் 1900-வருஷத்திற்குள் ஜெர்மனி சமாதானக் கக்ஷியினர் 71 அங்கத்தினர்களையும் £ 50 பொருளையும் கொண்டேயிருந்தனர். வெய்னரின்கீழ் எல்லாப் பகுதியினரும் 35,000 அங்கத்தினர்களே யாவர். ஏன்? எனெனில், ராணுவ ஆட்சி தேசத்தில் பிணைக்கப்பட்டது. அத்துடன் ஜனசமூக ஆட்சி, அங்கத்தினர்களை இந்தக் கட்சியில் சேருவதைத் தடுத்தது. 1914-லோ அல்லது 1939 இலோ வேறு ஜெர்மனி இல்லை.

1918-ல், ஜெர்மனியிலுள்ள அபேதவாதக் கட்சியைச் சேர்ந்தவர்கள் ராணுவத்துடன் சேர்ந்துகொண்டு புது யுத்தத்திற்கு தயாரானார்கள். 1925-ல் ஜெர்மானியர்கள் அரண்களுக்கெனவும் பீரங்கிகளுக்கெனவும் 1913-ல் செலவிட்டதுபோல் ஏராளமாய் சிலவு செய்தனர். கீல் கப்பற்கட்டும் துறைகளில் யுத்தக் கப்பல்கள் 100-க்கு 90 சத விகிதம் கட்டினர். 1930-ம் வருஷத்திலும் 1931 முதல் சிலவருஷங்கள் வரை கீல் தொழிலாளிகள் இதன் காரணத்தை உணரவில்லை. ஆனால் யாரும் இதற்கு மாறாக ஏதும் கூறவில்லை. ஏன்? ஹிட்லர் அப்போது இல்லை. டாக்டர் புரூயெனிங் என்பவர் பதவியில் இருந்தார்.

பிரையெட்ரிக் எபெர்ட், அபேதவாதக் கட்சியின் தலைவர், ராணுவத்துடன் நடவடிக்கைகள் வைத்துக்கொண்டிருந்தவர் 1925-ம் வருஷத்தில் இறந்தார். ஜெர்மன் மக்கள் ஜனநாயகத்தைச் சேர்ந்த ஒருவரை நியமனம் செய்திருக்கலாம். ஆனால் அவர்கள் பீல்ட் மார்ஷல் வான் ஹிண்டன்பர்க்கை திரும்ப நியமனம் செய்தனர். 1932-ம் வருஷத்தில் இரண்டு தேர்தல் நடந்தன. அதில் நாஸிக் கட்சியினர் 37 சதவிதமும், 33 சதவிதமும் பெற்றனர். பிரிடிஷ் தொழிலாளர் கக்ஷி 29 சதவீதம் பெற்று அதிகாரம் பெற்றது. பிரிடிஷ் மக்களின் பிரதிநிதித்வம் இல்லை என்பதை யாரும் வெளிப்பட சொல்லமுடியவில்லை. ஜெர்மனியின் ஜனநாயகக் கட்சியினர் ஹிட்லரை பதவி ஏற்பதை தடுக்கமுடியவில்லை. 1933-ம் வருஷத்தில் மே மாதம் ஹிட்லர் பதவிக்கு வந்தான்.

கோவில்களும் ராணுவ ஆட்சிக்கு கட்டுப்பட்டு நடத்த வேண்டியதாயிற்று. ராணுவத்தின் துர்க்ருத்தியங்களை அவைகள் கண்டிக்கவில்லை. பாடம் கற்பிக்கும் வேலையுடையோரின் நிலை இதனிலும் மோசமாயிற்று 1866-ம் வருஷ யுத்தத்தில் வெற்றி பெற்றதால் மேலும் அப்படியே நடக்கும் எனச் சொல்லப்பட்டது. 35 சதவிகிதம் நாஸிகளின் மேன்மை கௌரவப்படுத்தப்பட்டது.

இந்த ஜெர்மன் நிலையைத்தான் நாம் மாற்றவேண்டும். கீழே குறிப்பிடப்படும் 12 விஷயங்களும் அதன் கிளைகளையும் முறையில் கொண்டு வந்தால் அது தானாகவே நடைபெறும்.

### பன்னிரண்டு விஷயங்கள்.

1. ஜெர்மனியும் இதர அச்சுப் பதவிகளும் நிபந்தனையற்ற சரணாகதி யடையவேண்டும்.
2. ஜெர்மனியில் அரசாங்கத்தார் தேவையல்லவென்று சொல்லும்வரையில் நேசதேச சைனியங்களும் விமானப்படையும் நிலைப்படுத்தி சர்வதேச சபை ஒன்றும் ஏற்படுத்தி ஆட்சி நடத்துவது.
3. யுத்தம்பற்றி குற்றம் புரிந்தோரைப் பிடித்து தண்டிப்பது. பொது நாட்டினரை இந்த யுத்தக் குற்றவாளிகளுக்கு இடம் கொடுக்காதிருக்குமாறு எச்சரிப்பது.
4. ஜெர்மானியப் படையிடம் ஏதொருவித தளவாடமுமின்றி செய்வது, ராணுவத்தைக் குலைப்பது, ஜெர்மன் கப்பற்படையும், விமானப்படையும் கூட சரணாகதியடையச்செய்வது. இதே முறையை மற்றைய அச்சு நாடுகளுக்கும் கையாளுவது.
5. போலீஸ் படைகள் ஜெர்மனியில் அந்தந்த இடங்களில் நியமிப்பது. மத்திய கட்டுப்பாடின்றியிருப்பது. ராணுவமின்றியிருப்பது.
6. ஜெர்மனியில் ராணுவப் பயிற்சி எந்த வயதுடையோர்க்கும், எந்தவிதமானதுமான பயிற்சி கொடுக்கக்கூடாது. ஆபீஸர்கள் படை, பயிற்சிப்படை ஆகிய இவைகளையும் அழிக்க வேண்டும்.
7. அச்சுப் படைகள் கைக்கொண்ட எல்லா நாடுகளிலிருந்தும் அவர்களை விரட்டுவது.
8. இவர்கள் கொள்ளையிட்டதையோ அல்லது யந்திரங்கள் தளவாடங்கள் முதலியவைகளை அப்புறப்படுத்தியதையோ அல்லது நாஸமாக்கியதையோ, திரும்பவும் ஏற்படுத்தல் அல்லது அதற்கு ஏதாகிலும் பதில் செய்தல். தொழிற்சாலை அல்லது வியாபார நஷ்டத்திற்கும் பதில் செய்தும் கொடுத்தலும் அவசியம்.

9. சரியான கட்டுப்பாடு, எங்கு தேவையோ அங்கு ஜெர்மனியின் யுத்த சாமான்களை நிர்மூலமாக்குவதும், விமானங்களையும் அப்படியே செய்தலும் முக்கியம்.

10. நேசதேசத்தாரின் அனுமதியின்றி ஜெர்மனிக்கோ இதர அச்சு நாட்டிற்கோ பொருளுதவியோ கடனோ கொடுக்கக்கூடாது.

11. பொதுவாய் சர்வதேச நன்மைக்குமானமுறையில் ஜெர்மன் மக்களிடையே அறிவு ஏற்படும்வரை பள்ளிக்கூடங்களையும், இலாகாக்களையும் நேசதேசக் கட்டுப்பாட்டில் வைத்து இவர்களின் புத்திமதியின் கீழ் நடத்தவேண்டும்.

12. ஜெர்மன் ரேடியோக்களும் இதர பிரசாரங்களும் நேசதேசத்தாரின் கண்காணிப்பின் கீழ் தேவையுள்ளவரை இருக்கவேண்டும்.

இதில் முதல் விஷயத்தை சிறிது விரித்துரைக்கவேண்டும். பல கக்ஷியினர்கள் சென்ற யுத்தத்திற்குப் பின் பெருமைப்படுத்தி ஜெர்மனியை இரண்டாம் உலகயுத்தத்திற்கு தூண்டிய தான பாழ்படுத்தும் ஜெர்மனின் தோல்வியுருத் தன்மை என்ற கட்டுக்கதையை தகர்ப்பது இதுதான் வழி.

இரண்டாவது விஷயம் தெளிவாயிருக்கிறது.

மூன்றாவது விஷயம் பற்றி, மாஸ்கோ ஆலோசனையில் முடிவுகட்டப்பட்டதான குற்றமுள்ள உத்தியோகஸ்தர்கள் மட்டுமின்றி, குற்றமுள்ள ஒவ்வொருவரும் என்பதை நான் சிந்திக்கிறேன். நேசதேசத்துக்குற்றவாளிகளின் தொகை பெரிதாயிருக்கும். அத்துடன் கெஸ்டபோக்களையும், பாராப் படைகளையும் சேர்த்துக்கொள்ளவேண்டும் ஏனெனில் இவர்கள் ஒரு நாடு முழுவதையும் பட்டினிபோட்டு சாகவைத்துள்ளார்கள், சிறைப்பட்டோர்களை கொன்றிருக்கின்றனர், அடிமைகளைச் சித்திரவதை செய்துள்ளார்கள். இதுமட்டுமல்ல பெண்களையும் கற்பழித்துள்ளார்கள். சென்ற யுத்தத்திற்குப் பின்னிருந்த சில கொடியவர்கள் இருந்துகொண்டு ஜெர்மனியின் நல்ல நிலைமையும், உலகின் சமாதான வாழ்க்கையையும் பாழ்படுத்தினர். வெளிநாட்டில் பல லக்ஷக்கணக்கான மக்களைக் கொல்லுமுன் உள் நாட்டிலே பல ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்றிருக்கின்றனர். மறுபடியும் அவர்கள் தண்டிக்கப்படாமல் இருந்தால் இன்னும் அதிகமான கஷ்டங்களையும் இன்னல்களையும் ஏற்படுத்துவார்கள்.

நான்காவது விஷயம் மிகவும் விரிவுபடுத்த வேண்டியது அவசியம். ஜெர்மனியின் ராணுவங்களை முற்றிலும் அழித்துவிட்டால் ஆக்கிரமிக்கும் சைன்யமும், சிறிதாயிருக்கும். நேசதேசத்தாரும் ஜெர்மனியாரும் இக் குறைவினால் லாபமடைவார்கள். இப்படி செய்வதென்றால் சென்ற யுத்தத்திற்குப் பின் செய்ததை விட தீவிரமாய் செய்து முற்றிலும் தளவாடங்களின்றி செய்தல் அவசியம்.

ஐந்தாவது விஷயம்பற்றி, சென்ற யுத்தத்திற்கும் இந்த யுத்தத்திற்கும் இடையேயுள்ள காலத்தில் ஜெர்மன் போலீஸார் அநியாயமாய் சேனைகளுக்குப் பயிற்சியளித்தனர் என்பதைச் சொல்லவேண்டும். அவர்களில் பலர் அதிகப்பட்ட ஆயுதங்களைக் கொண்டும், சிலர் ராணுவ நிலயங்களில் ஸ்தாபிக்கப்பட்டும் உளர். அப்படைகள் மாறுருவமகாட்டும படைகளாகும். அவைகளுக்கு ஒரு முடிவு ஏற்படுத்தவேண்டும். அவைகளை ஒவ்வொரு இடங்களில் அநாகரகுறிய ஸ்தாபிக்கவேண்டும். அவைகள் முறைப்படி நடந்துகொள்ளும்வரை அவைகளுக்கு உதவியாய் ஆக்கிரமிக்கும் நம் படை இருந்தேயாகவேண்டும்.

ஆறாவது விஷயமும் முக்கியமானதே. ஜெர்மனி உணர்ச்சியுடனும், பலட வரிசையிலும், குறைக்கப்படவேண்டும். இதை இளைஞர்களும், விளையாட்டுச் சங்கங்களுமேதான் செய்யும். எல்லா வழிகளிலும் ஜெர்மானியர்களுக்கு எல்லாவிதமான விளையாட்டுகளும் கொடுக்கலாம். ராணுவப் பயிற்சியைமட்டும் நிறுத்தவேண்டும்.

ஏழாவது விஷயம் விவரிக்கவேண்டிய அவசியமில்லை.

எட்டாவது விஷயத்தில் கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களையும் தளவாடங்களையும் அந்தந்த நாடுகளில் திருப்பவும் கொடுத்தாலன்றியும் அவ்வாறு செய்யமுடியாத இடங்களில் கட்ட வேண்டியவைகளையும் கட்டுதல் அவசியம். இது, தொழிற்சாலைகளையும், நூல் நிலயங்களையும், ரசாயன ஆராய்ச்சிசாலைகளையும், கண்காக்ஷி சாலை இதர வீடுகளுமாகும். விரும்பி நாசமாக்கிய ஜெர்மானியர்களே அதனைக் கட்டவேண்டும் என்று சென்ற யுத்தத்திற்குப் பின் தீர்மானிக்கப்பட்டது. ஜெர்மானியர்களுக்கு கொடுத்த பாடம் மறக்க முடியாதாம். அது மறு யுத்தத்தை தவிர்த்திருக்கலாம். ஆனால் பிரெஞ்சு தொழிலாளர்கள் இதனை மறுத்தார்கள். ஏனென்றால் அவர்களின் காரணத்தைக் கருதவில்லை. அதே காரணத்தை நாம் திரும்பவும் கருத முடியாது. ருஷ்யர்கள் எவ்விதமும் ஜெர்மானியர்களை அதே வேலையைச் செய்யுமாறு கட்டாயப்படுத்துவார்கள். இதர ஐரோப்பிய நாடுகளும் அம்மாதிரியே செய்யும்.



ஒன்பதாவது விஷயமாக, ஜெர்மனிய யுத்த முயற்சியையும் யுத்த தளவாட உற்பத்தியையும் குலைத்தது. சமாதான முறைகளுக்கு வேண்டி தயார் செய்தலைக் கூறலாம். ஜெர்மனியில் ஏதும் யுத்த தளவாட உற்பத்தி இருக்கக்கூடாது. வியாபாரத்திற்கு வேண்டியவைகளை வாங்கிக்கொள்ளலாம். பேபர் பெட்ரோல் முதலியவைகளை ஜெர்மனி உற்பத்தி செய்யக்கூடாது. யுத்தத்திற்கு வேண்டியவைகளைச் சேகரிக்கக்கூடாது. நிக்கல், தாமரம் முதலிய உலோகங்களை ஜெர்மனிக்கு அனுப்புவதிலும் கட்டுப்பாடு இருக்கவேண்டும்.

பத்தாவது விஷயம் ஏதும் சொல்லாமலே வெளிப்பட நிற்கின்றது. சென்ற யுத்தத்திற்குப் பின் ஜெர்மனி சுமார் £ 1,500,000,000 கடன் வாங்கியது. திரும்பப் பலப்படுத்திக் கொண்டது. 55 சதவிகிதம் அமெரிக்காவிலிருந்து வாங்கியதாகும். ஆனால் அதே முறையை நாம் திரும்பவும் கையாள விரும்பவில்லை.

பதினொன்று, பன்னிரெண்டு ஆகிய இவ்விரு விஷயங்களையும் நான் ஒன்றாய் எடுத்துக் கொள்ளுகிறேன். சென்ற யுத்தத்திற்குப்பின் பண சம்பந்தத்திலும், பொருள் சம்பந்தமாயும் நம்மை ஏமாற்றிவிட்டது. இம்முறை நேசதேசத்தைச் சேர்ந்த ஒரு அதிகாரி நியமிக்கப்படவேண்டும். அவருக்கு உதவியாய் 1,000 பேர்கள் கொண்ட ஒரு ஆபீஸ் வேண்டும். அவருடைய வேலை யுத்தத்தைத் தடுக்கவேண்டும். ஊர் ஊராய்ச் செல்லும் அதிகாரிகளும் திடீரெனச் செல்லவேண்டும். அங்கு அதனால் ராணுவப் பயிற்சி தடுக்கப்படும். இதனாலேயே பிரசாரங்களும் குறையும். தவறு இல்லை.

ஜெர்மனியப் பிரச்னைகளைக் கையாள மேற் கூறப்பட்டது ஒரு திட்டமாகும். அதில் ஏதும் மிகையில்லை. இதுதான் பெரிதானாலும், மிலேச்சத்தனமானதும் ஆகும். இதனை மீண்டும் ஏற்படாமல் செய்யவேண்டியதற்கான முறைகளைக் கையாளவேண்டும்.

---

## வார யுத்தச் செய்திகள்.

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

**8—8—44 (செவ்வாய்க்கிழமை).**
நேசதேசப் படைகள் பிரான்ஸில் கேயன் பகுதியில் முன்னேறுகின்றன.
பின்லாந்தில் புதிய பின்னிஷ் நிர்வாகம் அமைக்கப்பட்டது.

**9—8—44 (புதன்கிழமை).**
அமெரிக்கர்கள் பிரிட்டானியிலுள்ள ஸெயின்ட் மாலோவையும் லெமான்ஸையும் பிடித்தனர்.
நேசதேசத்தார்களின் இரண்டு உயர்தர கமாண்டின் தலைமை காரியாலயங்கள் ஐரோப்பாவுக்கு மாற்றப்பட்டிருக்கின்றன. ஜெனரல் ஈசன் ஹவர் ஐரோப்பாவுக்கும் ஜெனரல் வில்ஸன் இதாலிக்கும் காரியாலயத்தை மாற்றிவிட்டார்கள் நேசதேசப் படைகள் மட்டிம் ரஸ்தாவிலிருந்து ஜப்பானியர்களைப் பூராவாகத் துரத்திவிட்டார்கள்.

**10—8—44 (வியாழக்கிழமை).**
நேசதேசப் படைகள் பிரான்ஸில் நான்டிஸையும் ஆன் கெர்ஸையும் அடைந்துவிட்டன. சூபர் பறக்கும் கோட்டை விமானங்கள் ஜப்பானைத் தாக்கின.
ஜனாதிபதி ரூஸ்வெல்ட் ஹானலூலுவில் ஜெனரல் மாக் ஆர்தருடன் கூடிப் பேசினார்.
குவாம் தீவில் ஜப்பானியரின் எதிர்ப்பு நின்றது.

| | |
|---|---|
| 11—8—44 (வெள்ளிக்கிழமை). | மிஸ்டர் சர்ச்சில் இதாலிக்கு விஜயம் செய்தார். மிஸ்டர் ரூஸ்வெல்ட் அலூஷியன் தீவிற்கு விஜயம் செய்தார். |
| | செம்படை எஸ்தோனியாவுக்குள் 15 மைல்கள் முன்னேறி விட்டது. |
| 12—8—44 (சனிக்கிழமை). | நேசதேசப்படைகள் இதாலியில் பிளாரென்ஸை விடுவித்தன. |
| 13—8—44 (ஞாயிற்றுக்கிழமை). | ஜெர்மன் படைகள் நார்மண்டியில் பின்வாங்க ஆரம்பித்துவிட்டன. |

## (B)-செய்திச் சுருக்கம்.

**பிரான்ஸ்.**—அமெரிக்க, பிரிடிஷ், பிரெஞ்சுப் படைகள் தெற்கு பிரான்ஸில் கெனேசுக்கும் லேனுக்கும் மத்தியில் 120 மைல் அளவுள்ள பிரதேசத்திலிறங்கின. அநேக மைல்கள் தூரம் உள்நாட்டில் முன்னேறியிருக்கிறார்கள். ஹைரஸ் விரிகுடாவிலுள்ள போர்ட் கிராஸூம் லெவாண்டும் ஐரோப்பாவிலுள்ள காப்னெக்ராவும் பிடிபட்டன. கானேக்கும் ஹைரஸுக்கும் மத்தியில் போர் நடைபெறுகிறது.

மேற்குப் போர்முனையில் அமெரிக்கப் படைகள் மெயின் நதியிலிருந்து உள் நாட்டில் முன்னேறி பாரிஸுக்குப் போகும் வழியிலுள்ள லேமான்ஸைப் பிடித்தார்கள். லேமான்ஸிலிருந்து வடக்கு நோக்கிச் சென்று அவர்கள் பாலேயை நெருங்கிவிட்டார்கள்.

வடக்கிலிருந்து பிரிடிஷ் கனேடியத் துருப்புகளும் பாலேயை நோக்கி முன்னேறுகின்றன. ரென்ஸை லேமான்ஸ்—கேயன் முக்கோணத்திலுள்ள 20 டிவிஷன் ஜெர்மன் படைகளைத் துணிப்பதுதான் நேசதேசப் படைகளின் லக்ஷியம்.

அமெரிக்கர்கள் பாலேக்கு சமீபத்திலுள்ள ஆர்கெண்டானின் ஒரு பாகத்தைக் கைவசப்படுத்தினார்கள். பாலேக்கும் ஆர்கெண்டானுக்கும் மத்தியில் 12 மைல்கள் கொண்ட இடைவெளியிருக்கிறது. இங்கு ஜெர்மானியர்கள் கடும்போர் செய்கிறார்கள். (பாலே விழுந்துவிட்டதாகக் கடைசிச் செய்தி கிடைத்திருக்கிறது. பத்திராதிபர்.)

ஆர்ன் பகுதியிலிருந்து முன்னேறிய பிரிடிஷ் படைகள் செந்தியூ ஸெயிண்ட் எயினையும் பிரெட்டவில்லே—சூர்—லேஸையும் பிடித்தன. தரி ஹார் கோர்ட்டும் மார்டேயினும் அடிக்கடி கைமாறிவிட்டன.

பிரிட்டானியில் டினார்டையும் பிரெஸ்டையும் கைப்பற்றப் போர் நடைபெறுகிறது. ஸெயிண்ட் மேலோ, நாண்டிஸ், ஆன்கெர்ஸ் விழுந்துவிட்டன.

**ருஷ்யா.**—ருஷ்யர்கள் வார்ஸாவைச் சுற்றியுள்ள பிராகாவில் போர் புரிகிறார்கள். ஜெர்மானியர்கள் எதிர்த்துத் தாக்குகிறார்கள். சாண்டோமியர்ஸுக்கு வடமேற்கிலும் மேற்கிலும், கிராகொவுக்கு சமீபத்தில் சானேக்குக்கு மேற்கிலும், எஸ்தோனியாவில் பெட்சாரிக்கு வடக்கிலும் மேற்கிலும், கௌனஸுக்கு சமீபத்தில் ராஸெல்னியாவிலும் போர் நடைபெறுகிறது.

கிழக்கு பிரஷ்யா எல்லைச் சரகத்தில் ஜெர்மன் எதிர்ப்பு அதிகரித்து வருகிறது.

கீழ்கண்ட இடங்கள் பிடிபட்டன.

ட்வின்ஸ்க்குக்கு வடமேற்கில் கெரெட்டாவும், மாடோனாவும், மிடாவுக்குத் தென்மேற்கில் வெகெர்வேயும், குருபேயும், வார்ஸாவுக்குக் கிழக்கில் சொகோலௌ—போட்லியாஸ்கியும், கார்பேதிய மலையடிவாரத்தில் ஸ்கோலும், லித்வேனியாவில் ருஷ்யாவைச் சேர்ந்த ராசீனியாயி; கிழக்கு பிரஷ்யாவுக்குச் செல்லக்கூடிய மார்க்கத்திலுள்ள ஆசோவியக்கும், பெஸ்காவுக்கு தென் மேற்கில் ஆண்ட்ஸூவும்.

**இதாலி.**—பிளாரென்ஸ் ஆக்கிரமிக்கப்பட்டது. போ நதிப் பள்ளத்தாக்குக்குப் போகும் வழியை மறித்திருக்கும் ஜெர்மனியின் கோதிக் அரணைத் தாக்க ஆயத்தம் செய்யப்படுகிறது. நேசதேசப்படைகள் பிளாரென்ஸுக்கு மேற்கிலுள்ள மாண்டலூபோவையும், அர்னோ பாங்கியானோ இருப்புப் பாதையிலுள்ள பிராண்டோனேயும், மாண்டெவெக்கியோவையும் பிடித்தன.



**விமானப் போர்.**—கீழ்கண்ட இடங்கள்பேரில் குண்டுகள் வீசப்பட்டன.

ஹங்கேரியில் ஆல்பாஸ் பூரிடோ, வியன்னாவுக்கருகில் கியார், பெர்லின், போர்டோ, லா பால்டிஸ், டீ ஜான், போலஸ்தி, லோஸ், கிட்னியா, போலந்தில் டொர்கிபினு, ருமேனியாவில் சிலிஸ்டியா, பாசா, மிட்ஸ், பிரான்விக், ரஸ்ஸல்ஸ், லீயிம், கில், பிராங்க்பர்ட், வீஸ்காடன் எர்பன்ஹீம், பிராஙக்பர்ட் எஸச்பார்ன்.

**பசிபிக்.**—பிரிடிஷ் நியூகினியாவில் அயிடாப் வேவாக் பகுதியில் ஜப்பானியரின் எதிர்ப்பு நின்றது. சூபர் பறக்கும் கோட்டை விமானங்கள் கியூஷூ என்ற ஜப்பானியத் தீவிலுள்ள நாகசாகியையும் சைனாக் கடலிலுள்ள பார்மோசாத் தீவிலுள்ள டாகோத் துறைமுகத்தையும் வெடிகுண்டுகளால் தாக்கின. நியூகினியாவுக்கும் பிலிப்பைன்ஸ் தீவுகளுக்கும் இடையிலுள்ள ஹால்மாஸாராத் தீவும் சுமத்ராவிலுள்ள பாலம்பாங்கும் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டன.

**சைனா.**—தெற்கு சைனாவில் ஹூனானில் முக்கியமான ரஸ்தா, இருப்புப்பாதை ஜங்ஷனான ஹெங்கியாங்கை ஜப்பான் கைப்பற்றிற்று.

**பர்மா.**—மொகாங்குக்குத் தென்மேற்கிலுள்ள ஷாம்வாவும், மொகாங்குக்குத் தென் மேற்கில் ஏழு மைல்களிலுள்ள பர்மா இருப்புப் பாதையிலுள்ள டாங்க்னியும், சின் மலைகளிலுள்ள டெங்டாம் பள்ளத்தாக்கும் மியட்கினா பாமோ ரஸ்தாவில் காசுவும் நேசதேச வசமாகின.

14-வது சேனை டிட்டிம் ரஸ்தா வழியாக துரிதமாக முன்னேறுகிறது. அதன் சேர்ந்தப்படைகள் இந்தோ-பர்மா எல்லைச் சரகத்தை அடைந்துவருகின்றன.

---

### சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**6—8—44.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.-ரயில்போக்குவரத்துகள், ஸ்டோர்கள்-ரோன் சமவெளி (Rhone Valley).

ஸப்மரீன் தளங்கள்.—டூலான் (Toulon).

ரயில் தளங்கள்.—மாராமாஸ் (Maramas).

எண்ணெய்க் கிணறுகள்.—பிரான்ஸிலுள்ள லெ பாண்டென் (Le Ponten).

2 விமான நிலயங்கள்.—ரோன் (Rhone).

ரயில்வேப் பாலங்கள், தளவாடங்கள், எண்ணெய்க் குவியல்கள்.-பிரான்ஸ் (France).

இரவு.—ஸப்மரீன் தளங்கள்—பிரான்ஸில் உள்ள லோரியெண்ட் (Lorient).

டாங்கிக்ள்.—ஸாமுருக்கருகில்.

**இதாலி (Italy).**

எதிரி போக்குவரத்துகள், இதர இலக்குகள்.-வடக்கு இதாலி (North Italy).

**ருஷ்யா (Russia).**

(ருஷ்ய விமானங்களால், 117 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

விமான நிலயங்கள், ரயில்வே ஸ்டேஷன்கள்.-கிழக்கு பிரஷ்யா (East Prussia).

**தூரக்கிழக்கு (Far East).**

விமான நிலயங்கள்.—காரோலேன்ஸிலுள்ள யாப் (Yap).

ஜப்பானிய சைனியங்கள்.—தென்மேற்கு பஸிபிக் (S. W. Pacific) பிரதேசம்.

**பர்மா (Burma).**

எதிரி பகுதிகள்.—டாமு (Tamu) பிரதேசம்.

இலக்குகள்.—காபா (Kabaw) சமவெளி, சிண்ட்வின் நதி (Chindwin)ப் பிரதேசம்.

ரயில்வே ஜங்ஷன்.—தாஸி (Thazi).

நீராவி யந்திர ஷெட்டுகள்.—மேமியோ (Maymyo).

இலக்குகள்.—மாண்டலே (Mandalay).

**7—8—44.** (திங்கட்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

(22 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

பகல்.—விமானத் தொழிற்சாலைகள்—ராமெல் (Rahmel).

2 தொடர்ச்சியான எண்ணெய்க் கிணறுகள்.—பிலெச்சாமெர் (Blechhamer).

இலக்குகள்.—வடக்கு யூகோஸ்லாவியா (N. Yugoslavia).

எண்ணெய்க் கிணறு ஸ்தாபனங்கள்.—நோவி ஷாட் (Novi Sad).

ராணுவ பாதைகள்.—பாரீஸ் (Paris).

தளவாடக் குவியல்கள்.-லிவாரட் (Livarot), லாஸொல்லிப்பியெர்ரி (Lasollepierre), பாச்செஸ் (Bauches).

கப்பல்கள்.—பிரெஸ்ட் (Brest) துறைமுகம்.

பாலங்கள்.—நோகெஸ் (Noges), லெராய் (Leroi).

இரவு.—இலக்குகள்—பிரான்ஸின் அருகிலுள்ள கேயன் (Caen), ஜெர்மனியிலுள்ள கொலோன் (Cologne).

**இதாலி (Italy).**

எதிரி டாங்கிகள் சைனியங்கள்.—இதாலியில் யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

**ருஷ்யா ((Russia).**

(46 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஹால்மஹேரா (Halmahera) தீவு.

ஜப்பானியத் தீவுகள்.—நியூ கினியிலுள்ள அய்டாபி-விவாக் (Aitape-Wewak).

ஜப்பானிய தளங்கள்.—குரைல்ஸ் (Kuriles).

**பர்மா (Burma).**

இலக்குகள்.—டிடிம் (Tiddim) ரஸ்தா, காபா (Kabaw) சமவெளி.

ரயில்வேக்கள்.—மொகாங் (Mogaung).

பாலம்.—ஸான்வி (Hsonwi).

**8—8—44.** (செவ்வாய்க்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்:—விமான நிலயங்கள்—பூஸா ஸிலிஸ்டீ (Zilistea).

விமான நிலயங்கள், எண்ணெய்த்துவியல்கள், பாலங்கள், இதர இலக்குகள்—பிரான்ஸ் (France).

எண்ணெய் டாங்கிகள்.—பான்டெய்ன்புலு (Fontainebleu)விற்குத்தெற்கு.

இயந்திரந்தாங்கி.—டிஜோன் (Dijon).

எதிரி போக்குவரத்துகள் பீரங்கி ஸ்தாபனங்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

சுரங்கவெடி அறுக்கும் கப்பல்கள்.—பிஸ்கே (Biscay).

இரவு.—பறக்கும் வெடி ஸ்தலங்கள்—பெல்ஜியம் (Belgium), பிரான்ஸ் (France).

**இதாலி (Italy).**

எதிரி போக்குவரத்துகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள், வட இதாலியில் யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

**ருஷ்யா (Russia).**

(38 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய சைனியங்கள்.—வீவாக் (Wewak), டிரக் (Truk), பொனேபி (Ponape), நாரு (Nauru).

இதர தீவுகள்.—மார்ஷல்ஸ் (Marshalls).

**பர்மா (Burma).**

இலக்குகள்.—டிடிம் (Tiddim) ரஸ்தா, காபா (Kabaw), சிண்ட்வின் (Chindwin).

இலக்குகள்.—பாமோ (Bhamo).

விமான நிலயங்கள்.—ஷுவேபோ (Shwebo).

காலின் (Kawlin).

இண்டா (Indaw).

ரஸ்தா, ரயில் ஸ்தாபனங்கள்.—காலிவா (Kalewa) முதல் இண்டா (Indaw) வரை.

**9—8—44.** (புதன்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—எண்ணெய்க்கிணறு ஸ்தாபனங்கள்.—ஆல்மாஸ் புஸிடோ (Almas Fuzito).

விமானத் தொழிற்சாலைகள்.—கியார் (Gyor).

விமான நிலயங்கள்.—வெஸ்காஸ் (Vescos), டோகொல் (Tokol).

பறக்கும் வெடி குண்டு ஸ்தலங்கள்.—வடக்கு பிரான்ஸ் (N. France).

எண்ணெய் சேமிப்பு.—வாலென்ஸியென்னிஸ் (Valenciennes).

ஸ்டீமரின் தளங்கள்.—லா பாலிஸ் (La Pallice).

பாலங்கள், ரயில் ஜங்ஷன்கள் தளவாடங்கள்.—பிரான்ஸ் (France).

துறைமுக ஸ்தாபனங்கள்.—பிரெஸ்ட் (Brest).

பீரங்கி ஸ்தாபனங்கள் சேமிப்புகள்.—ஸீன் (Seine).

இரவு.—எண்ணெய் டெப்போக்கள்.—சாடெல்லெர்ரால்ட் (Chatellerault).

எண்ணெய்க் கிணறுகள்.—ருமேனியாவிலுள்ள புலோயெஸ்ட்டி (Ploesti).

**இதாலி (Italy).**

எதிரி போக்குவரத்துகள், இதர இலக்குகள் வட இதாலி (N. Italy).

**ருஷ்யா (Russia).**

(24 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய விமானங்கள்.—பிலிப்பைன்ஸிலுள்ள டாவோ (Davao).

காரோலைன்ஸிலுள்ள டிரக் (Truk).

பொனின் தீவுகளிலுள்ள இவோ ஜிமா (Iwo Jima).

நாருத்தீவு (Nauru) த் தீவு.

**பர்மா (Burma).**

இலக்குகள்.—காலிவா (Kalewa).

ஸ்டீமர்கள்.—சிண்ட்வின் (Chindwin).

எதிரி சைனியங்கள்.—மொகாங்கிற்கு தென் மேற்கு, தாங்னி (Taungni) ஹாபின் ரயில்வேக்கள்.



**10—8—44.** (வியாழக்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

எண்ணெய்க் கிணறு ஸ்தாபனங்கள்.—புலோயெஸ்ட்டி (Ploesti).

ராணுவ இலக்குகள்.—பிரான்ஸ் (France) முற்றிலும் ஸீன் (Seine), ஸார்பிரக்கன் (Saarbrucken).

இரவு.—பேர்லின் (Berlin).

எண்ணெய் சேமிப்பு டெப்போக்கள்.—போர்டோ (Bordeaux), லாபாலிஸ் (La Pallice).

ரயில்வே ஜங்ஷன்.—டிஜான் (Dijon).

சுரங்கவெடி பாவுதல்.—டார்ட்மண்ட் எம்ஸ் கால்வாய் (Dortmund-Ems canal).

**இதாலி (Italy).**

எதிரி போக்குவரத்துகள், பாலங்கள்.—வட இதாலியில் யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

**ருஷ்யா (Russia).**

(29 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

தொழிற்சாலை நகரம்.—ஜப்பானிலுள்ள நாகஸாகி (Nagasaki).

ஒரு எண்ணெய்க்கிணறு ஸ்தாபனம்.—ஸுமத்ராவிலுள்ள பாலெம்பாங் (Palembang).

போனின் தீவுகளிலுள்ள இவோஜிமா (Iwo Jima).

**பர்மா (Burma).**

டிடிம் ரஸ்தாவிலுள்ள டான்ஸாங் (Tonzang).

படகுகள்.—யாவா (Yawa).

இலக்குகள்.—காலிவா (Kalewa).

மோட்டார் வண்டிகள்.—காபா (Kabaw) சமவெளி.

ரயில்வே ஸ்டேஷன்.—மிங்கான் (Mingon).

மோட்டார் போக்குவரத்துகள், சேமிப்புகள், படகுகள், இதர இலக்குகள்.—சிண்ட்வின் (Chindwin).

**11—8—44.** (வெள்ளிக்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—துறைமுகத் தற்காப்புகள்—பிரான்ஸிலுள்ள பிரெஸ்ட் (Brest).

ரயில் குவியல்கள்.—செயிண்ட் பிலாரெண்டின் (St. Florentin), பாலாய் (Palay), ஸ்டார்ஸ் போர்கியா (Strasbourgia), பாலிஸ் (Pallice), போர்டோ (Bordeaux).

ரயில்வே தளங்கள்.—ஸ்டாரெஸ்போர்க் (Strasbourg), முல்ஹௌஸ் (Mulhouse), பெல்போர்ட் (Belfort), ஸார்பிரக்கன் (Saarbruken), சினி (Cene), டோய் (Douai), கிவோர்ஸ் (Givors).

விமான நிலயங்கள்.—வில்லாரோப்லே (Villaroublay), டேஸ்லஸ் லி நோபில் (Tousls Le Noble), கோல்மியர்ஸ் (Coulmiers).

ஸப்மரின் தளங்கள்.—லா பாலிஸ் (La Pallice).

நீராவி யந்திர ஷெட்டுகள்.—ஸொமய்ன் (Somain), எட்டாபில்ஸ் (Etaples).

கப்பல்கள் கடற்கரை ஸ்தாபனங்கள்.—நார்வே (Norway).

இரவு.—பறக்கும் வெடிகுண்டு ஸ்தலங்கள்.—பாஸ் டி கலே (Pas De Calais).

**இதாலி (Italy).**

கடற்கரைப் பிரதேசங்கள்.—வடமேற்கு இதாலி (N. W. Italy).

கப்பல்கள்.—எட்ரியாடிக் (Adriatic).

போக்குவரத்துகள் பாலங்கள்.—வடக்கு இதாலி (North Italy).

**ருஷ்யா (Russia).**

(46 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—ஹால்மகோரத் (Halmahera) தீவு.

பிலிப்பைன்ஸ் தீவிலுள்ள டாவோ (Davao).

**பர்மா (Burma).**

தாக்குதல்கள்.—சிண்ட்வின் (Chindwin) நதி, ஸிட்டாங் முதல் (Sittaung), கின் (Kin) வரை.

மோட்டார் போக்குவரத்துகள், படகுகள்.—டிடிம் (Tiddim), காபா (Kabaw), சிண்ட்வின் (Chindwin).

**12—8—44.** (சனிக்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—விமான நிலயம்—பிரான்ஸிலுள்ள டுலூஸ் (Toulouse).

எதிரி தளங்கள்.—பிரெஞ்சு ரிவிரா (French Riviera).

ரயில்வே இஞ்ஜின்கள் கார்கள் பாதைகள் இதர வண்டிகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

இரவு.—துருப்பு முகாம்கள்—பலேய் (Falaise).

துருப்புகள்.—பாரிஸ் (Paris) முதல் ரோவன் (Rouen) வரை, சார்ட்ரெஸ் (Chartres), ஆர்லியன்ஸ் (Orleans).

பிரன்ஸ்விக் (Brunswick).

ருஸ்ஸல்ஹீம் (Russelheim).

எதிரிக் கடற்படை தளம்.—கீல் (Kiel).

சுரங்கவேடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.
பறக்தும் வேடிகுண்டு ஸ்தலம்.—வடக்கு பிரான்ஸ் (N. France).

### இதாலி (Italy).

(2 எதிரி விமானங்கள் காணப்படவில்லை).
விமானச் சண்டைகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

### ருஷ்யா (Russia).

(66 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய சைனியங்கள், பீரங்கிகள்.—குரைல்ஸிலுள்ள பாராமுஷிரோ (Paramushiro)முதல் மார்ஷல்ஸ் தீவுக்கூட்டங்கள் வரையுள்ள ஜப்பானியத் தளங்கள்.
பிலிப்பைன்ஸ் தீவிலுள்ள டாவா (Davao).
கப்பல்கள்.—பிலிப்பைன் (Philippine) நதிகள்.

### பர்மா (Burma).

எதிரி சைனியங்கள், தளவாடங்கள், துவியல்கள் படகுகள்.—மாயு (Mayu), ரஸ்தா (Road), கலடான் (Kaldan).
இலக்குகள்.—பாமோ (Bhamo).
மோட்டார் போக்குவரத்துகள்.—மத்திய பர்மா (C. Burma).

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**7—8—44.** (திங்கட்கிழமை).
பிரிடன் (Britain).
லண்டன் (London) பிரதேசம்.
சில இடங்கள்.—தென் இங்கிலாந்து (South England).
ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).
எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**8—8—44.** (செவ்வாய்க்கிழமை).
பிரிடன் (Britain).
சில இடங்கள்.—தென் கிழக்கு இங்கிலாந்து (South East England).
ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).
எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**9—8—44.** (புதன்கிழமை).
பிரிடன் (Britain).
லண்டன் (London) பிரதேசம்.
சில இடங்கள்.—இங்கிலாந்தின் தென்கரை.
ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).
எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**10—8—44.** (வியாழக்கிழமை).
பிரிடன் (Britain).
சில இடங்கள்.—தென் இங்கிலாந்து.
ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).
எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**11—8—44.** (வெள்ளிக்கிழமை).
பிரிடன் (Britain).
எதிரி விமான நடவடிக்கை இல்லை.
ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).
ஒரு தகவலும் இல்லை.

**12—8—44.** (சனிக்கிழமை).
பிரிடன் (Britain).
லண்டன் (London) பிரதேசம்.
சில இடங்கள்.—தென் இங்கிலாந்து.
ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).
எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**13—8—44.** (ஞாயிற்றுக்கிழமை).
பிரிடன் (Britain).
ஒரு தகவலும் இல்லை.
ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).
எதிரி விமான நடவடிக்கை இல்லை.

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**புதிய போர் முனை.** இரண்டாம் போர்முனையைக் கண்டு அஞ்சிய ஹிட்லர் மற்றொரு போர்முனையை சமாளிக்கவேண்டியதாகி விட்டது. அமெரிக்க, பிரிடிஷ், பிரெஞ்சுப் படைகள் தெற்கு பிரான்ஸில் கானேயுக்கும் லோனுக்கும் மத்தியில் இறங்கிவிட்டன. ஹைரீஸ் விரிகுடாவிலுள்ள போர்ட் கிராஸ், லெவாண்ட் தீவுகளும், ஐரோப்பாவில் கெப்ரேகரும் கைப்பற்றப்பட்டன. வட ஆபிரிக்காவிலிருந்து நேசதேச தலைமைக் காரியாலயம் இதாலிக்கு மாற்றப்பட்டதென்றும் தெற்கு பிரான்ஸ் கடற்கரைப் பிரதேசத்தில் பலமான குண்டு வீச்சேற்பட்டதென்றும் மன்னர்பிரானும் மிஸ்டர் சர்ச்சிலும் இதாலிக்கு விஜயம் செய்தார்களென்றும் கேள்வியுற்றதின் முக்யத்வம் பலிதமாகிவிட்டது.



**வளையம் நெருங்கி வருகிறது.** இந்தப் படையெடுப்பு எதிரியை நெருங்கி வரும் வளையத்தின் தெற்கு கிடுக்கி யாகும். மேற்குப் போர்முனையில் நேசதேசத்தார்களைக் கடலுக்குள் விரட்டியடித்து விடலாமென்று ஜெர்மனி நினைத்தது போக இப்பொழுது அவன் பிரான்ஸின் மத்திய பாகத்துக்குப் பின்வாங்கும்படி நேர்ந்துவிட்டது. பாரிஸுக்கான யுத்தம் கூடிய சீக்கிரத்தில் துவக்கமாகுமென்றும் முன் நடவடிக்கையாக பிடேயன் விஷியிலிருந்து வெளியேறிவிட்டானென்றும் ஜெர்மன் ஒலிபரப்புகள் ஓலமிடுகின்றன.

இதாலியில் கோதிக் அரணைத்தாக்க ஆயத்தம் செய்யப்படுகிறது. கிழக்குப் போர்முனையில் போர் உச்ச நிலைமையை அடைந்துவிட்டது. வடக்குப் பகுதியில் பால்டிக் கடலிலுள்ள ஜெர்மன் 16-வது 18-வது சேனைகள் தரைமார்க்கங்களிலிருந்து துண்டிக்கப்பட்டுவிட்டன. லாட்வியா, லித்வேனியா, எஸ்தோனியாவிலுள்ள ஜெர்மன் படைகளும் துண்டிக்கப்பட்டுவிட்டன. மத்தியில் ருஷ்யப்படைகள் விஸ்டுலாவைத் தாண்டி ஜெர்மன் எல்லைச் சரகத்தை நோக்கி முன்னேறுகின்றன. தெற்குப் பகுதியில் செகோஸ்லாவோகியாவைத் தாக்குவதும் கார்பேதியன் மலைக் கணவாய்களை ஊடுருவிச் செல்லுவதும், திருப்திகரமாக நடைபெறுகின்றன. இதாலியில் டிடோவும் மிஸ்டர் சர்ச்சிலும் சந்தித்துப் பேசியதிலிருந்து தென் கிழக்கு ஐரோப்பாவில் மற்றொரு போர்முனையும் ஏற்படலாம். ஜெர்மனியைச் சுற்றி வளையம் எல்லாப் பக்கத்திலும் நெருங்கி வருகிறது.

வி வி வி வி வி

**சுத்தி.** இந்த சமயத்தில் ஜெர்மானியர்களைப் புதிய யுத்த முயற்சிகளைச் செய்யவேண்டுமென்று நாஸிகள் தூண்டி வருகிறார்கள். ஹிட்லரைக் கொல்லச்செய்த சதி வீணாகிவிட்டதிலிருந்து இதற்கு உத்சாகம் ஏற்பட்டிருக்கிறது. சேனையின் வேண்டுகோளின்படி சுத்தி செய்வதாகச் சொல்லி இந்த சந்தர்ப்பத்தை பிரயோஜனப்படுத்திவருகிறார்கள். ஜனங்களின் கோர்ட்டுகள் என்று பெயர் வழங்கப்படும் கோர்ட்டுகள் உண்மையில் சேனையிலுள்ள ஆபீஸர்களின் குற்றங்களைப் பரிசீலனை செய்யும் கோர்ட்டுகள்தான். ரண்ட்ஸ்டெட் தேசிய அபேதவாதிகளில் குரூரமான கிடலின் பார்வைக்குட்படுத்தப்பட்டிருக்கிறார்.

வி வி வி வி வி

**சிக்ஷா காலம்.** சுத்தி முறைகள் கடுமையாக ஆக ஆக சிக்ஷா காலமும் நெருங்கிவிடும். கோர்ட்டின் பரிசீலனைக்குட்படும் ஒவ்வொருவரும் சதி செய்தவர்கள் ஒரு சிறிய பகுதியல்லவென்று நிரூபித்துவிடுவார்கள். விசாரணை செய்யப்பட்டவர்களின் முதல் கோஷ்டியில் பொருப்புள்ள ஸ்தானங்களை வகித்தவர்களும் ஜெர்மன் நிர்வாகத்திலிருந்த முக்கியஸ்தர்களும் சேர்ந்திருக்கிறார்கள். அவர்களில் சிலருக்கு ஜெர்மனியின் உள்நாட்டு நிலைமையும் யுத்தத்தின் வருங்காலப் போக்கும் நன்றாய் விளங்கும். யுத்தத்தை நிறுத்த இடையூறாகயிருக்கும் ஹிட்லரை ஒழிக்க அவர்கள் சதி செய்தார்கள். இந்த உண்மைகளை ஜெர்மன் பொதுமக்கள் அறியாதபடி கோயபல்ஸின் பிரசார மூலமாகவும் ஹிம்லரின் போலீஸின் அடக்குமுறையினாலும் ஜனங்களின் கோர்ட்டின் நடவடிக்கை மூலமாகவும் செய்துவிடலாம். ஆகிலும் உண்மையை வெகு காலம் வரையில் ஒளித்துவைக்கமுடியாது. நேசதேசத்தார்களின் அடிகள் அதிகரித்து வரும்பொழுதும் சுத்திக்குட்படாதவர்கள் வெளிப்படுத்தும் தகவல்கள் மூலமும் ஜெர்மன் பொதுமக்கள் உண்மைகளை அறிவார்கள்.

வி வி வி வி வி

**பாலஸின் ஒலிபரப்பு.** ஜெர்மனியின் பலஹீனத்தை வெளிப்படுத்தும் முறையில் இரண்டு வருஷங்களுக்குமுன் ஸ்டாலின்கிராட்டைத் தாக்கித் தோல்வியுற்ற ஜெர்மன் தலைவரான பிரிட்ரிக் பாலஸ் ஒலிபெருக்கியுள்ளார். மாஸ்கோவிலிருந்து ஜெர்மானியர்களுக்கு அனுப்பிய செய்தியில் ஜெர்மனிக்குத் தோல்வி நிச்சயமென்றும், ஜெர்மனியை அணுகிவரும் ருஷ்யர்களையும் பிரிடிஷ் அமெரிக்கப் படைகளையும் தடுத்துப் போராட ஹிட்லரிடம் போதுமான மூலபலமில்லையென்றும், ஆகிலும் அவனுடைய அகம்பாவத்தைத் திருப்தி செய்ய ஹிட்லர் போரை நடத்திவருகிறானென்றும் அவர் சொன்னார். ஜெர்மானியர்கள் அநியாயமாக படுகொலைக்குட்படுத்தப்படுகிறார்கள்.

வி வி வி வி வி

**டாக்டர் நேடர்லாஜ்.** ஹெல்ஸிங்கியிலுள்ள மற்றொரு ஜெர்மன் கிருபான ஆண்டன்வான் நிபாலன் நாஸிகளைப்பற்றி மற்றொரு ரகசியத்தை வெளியிட்டிருக்கிறார். தோல்வி நிச்சயமென்றறிந்து ஜெர்மனியின் மலை

பிராந்தியங்களில் கொரில்லாப்படைகளைத் தயாரித்து வருகிறார்கள். ஒளி மறைவாக நின்று அவர்கள் கபடமாக நேசதேசப் படைகளைத் தாக்கி வருகிறார்கள்.

அப்ஸர்வர் பத்திரிகை குறிப்பிடுவதுபோல இந்தப் பித்துப் பிடித்த முயற்சிகளின் மூலம் ஜெர்மனி சீர்கெட்டு, தேசமக்களின் துயரம் அதிகரிக்கப்போகிறது.

வி வி வி வி வி

**மேற்குப் போர்முனை.** உச்ச நிலைமையை அடைந்துவிட்டது. சென்ற வாரத்தில் சொன்னதுபோல ஜெர்மன் படைகளின் சுழலாணி கேனியிலிருந்து அவராஞ்சஸ் வரையில் பரவியிருந்தது. மாரத் அரண் யுத்த தந்திரத்தை மேற்கொண்டு மாண்ட்காமரி கேயனிலும் அவ்ராஞ்சஸ்ஸிலும் பலமாகத் தாக்கினார். இதன் பயனாக நேசதேசப் படைகள் பிரிட்டானியில் விரிவான நடவடிக்கையைத் துவக்கி மேற்குப் பக்கத்தில் கடற்கரைக்கும் கிழக்குப் பக்கத்தில் மேயனி வழியாக லேமான்ஸுக்கும் முன்னேறினார்கள். லாமான்ஸ் கேயனுக்குத் தெற்கிலும் பாரிஸுக்கு மேற்கிலுமிருக்கிறது. பாரிஸுக்குப்போகும் நடவடிக்கையை நிறுத்திவிட்டு அமெரிக்கப்படைகள் திடீரென்று கேயனை நோக்கிச் சென்றன. கேயனிலிருந்த பிரிடிஷ் கனடியப் படைகள் அலெங்கானைத் தாண்டி தெற்கு நோக்கிச் சென்று பாலேயிக்கும் வைரிக்கும் மத்தியில் மலை பிராந்தியத்திலுள்ள ஜெர்மன் சேனையை நெருங்கினார்கள்.

ஜெர்மானியர்கள் கிடுக்கியின் இருபுஜங்களுக்குள் அகப்பட்டுக்கொண்டார்கள். பதில் தாக்குதல் செய்யும் முறையில் ஜெர்மனி அவ்ராஞ்சஸ்ஸை நோக்கி முன்னேறி கடலுக்குச் செல்ல முயன்றது. ஐந்து மைல்கள் கொண்ட பிரதேசத்தில் 4 ஜெர்மன் பான்சர் படைகள் ஈடுபட்டு மார்டேனைப் பிடித்தன. ஆகிலும் இந்த வெற்றி நீடித்திருக்கவில்லை. நேசதேசத்தாரின் விமான ஆதிக்கம்தான் இதற்குக் காரணம். பான்சர் படைகள் விமானத் தாக்குதலை சமாளிக்க முடியவில்லை. வயல்களிலும் ரஸ்தாக்களிலும் சிக்கிக்கொண்ட ஜெர்மன் டாங்கிகள் அழிக்கப்பட்டன. மார்டென் திரும்பிப் பிடிக்கப்பட்டது. அவ்ராஞ்சஸுக்கு ஏற்பட்ட அபாயம் நீங்கிற்று.

ஜெர்மானியர்கள் பெலேயுக்கும் ஷேர்கென்டானுக்கும் மத்தியிலுள்ள இடைவெளியில் இன்னும் விடாப்பிடியுடன் நின்றுகொண்டிருக்கிறார்கள். பாரிஸுக்கும், பாஸ் டீ கலேக்குப் போவதற்கும் இது வாசற்படி போன்றது. நேசதேசத்தார்கள் இடைவெளியைக் குறுக்கி வருகிறார்கள். கனடியப் படைகள் பெலாயையும் பிரிடிஷார்கள் காண்டியையும் கைப்பற்றி விட்டார்கள். பிரிடிஷ் கனடியப் படைகள் ஒன்றுபட்டுவிட்டன.

அமெரிக்கப் படைகள் பிரிட்டானி வழியாக முன்னேறி கடற்கரையிலுள்ள நான்கு ஜெர்மன் படைகளை வளைத்துக்கொண்டன. ஸெயின்டு மேலோ ஆக்கிரமிக்கப்பட்டது. டினார்ட், லோரியான், ஸெயின்டு நாசரே தாக்கப்படுகின்றன. நாண்டிஸும் ஆன்செர்ஸும் கைப்பற்றப்பட்டன.

ஸெயின்டு மாலோ சானல் தீவுகளிலுள்ள ஜெர்மன் படைகளைப் போஷிக்க முக்யத்வமுள்ளது. இதை இழந்ததினால் ஜெர்மனிக்குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. பிரெஸ்டு துறைமுகத்தை பிரான்ஸின் ஜிப்ரால்டரென்று சொல்லுகிறார்கள். இங்கு ஷார்ன்ஹார்ஸ்ட் நீஸ்நாவும் தங்கியிருந்து பிறகு தப்பி ஓடின. இது யூ படகுகள் நிற்கும் இடம். பிரெஸ்டை வசப்படுத்திக்கொள்ளக்கூடியவர் பிரிட்டானியின் ஸ்வான்தார் என்று சொல்லப்படுகிறது. இனிமேல் நேசதேசக் கடற்படைகள் இந்தத் துறைமுகத்துக்குச் சென்று ஏராளமான சர்பாரக்களையும் உதவிப்படைகளையும் குவித்துவிடும். சென்ற யுத்தத்திலும் அமெரிக்கப் படைகள் பிரெஸ்டில்தான் தளத்தைப் பெற்றிருந்தன.

வி வி வி வி வி

**தூரக்கிழக்கு.** மகத்தான நடவடிக்கைகளுக்கு ஏற்பாட்டம் செய்யப்படுகிறது. பஸிபிக்கு பிராந்தியத்திற்கு ஜனாதிபதி ரூஸ்வெல்டும், யுத்த உதவி காரியதரிசியான மிஸ்டர் ராபர்ட் பாபர்ஸனும், ஸபலை இலாகா கமாண்டரான லெப்டினண்ட் பிரேகன் சோமர் வெல்லும் விஜயம் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. மிஸ்டர் சர்ச்சில் பிரான்சுக்கு விஜயம் செய்ததும் ஜெனரல் ஐசன்ஹவர் கொரில்லா படைகளுக்கு வேண்டுகோள் செய்ததும் தெற்கு பிரான்ஸில் மற்றொரு போர்முனைக்கு ஆதாரமானது போல். ஜனாதிபதி ரூஸ்வெல்டின் விஜயத்திலிருந்து தூரக்கிழக்கில் புதிய நடவடிக்கை துவக்கப்படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. காலிபோர்னியாவிலுள்ள ஸான்டிகோவிலிருந்து புறப்பட்டு அவர் பேர்ல் துறைமுகத்தைப் பார்வையிட்டபின் ஜெனரல் மாக் ஆர்தர், கடற்தளபதி நிமிட்ஸ், கடற்தளபதி ஹால்ஸி, கடற்தளபதி லீஹியுடன் சம்பாஷணை



செய்தார். பிலிப்பைன்ஸ் தீவுகளை விடுவிக்க ஆயத்தங்கள் பூர்த்தியாகி விட்டனவென்று அவர் பத்திரிகை நிருபர்களிடம் சொன்னார். பசிபிக் கடற்படையில் இப்பொழுது 100 சஞ்சாரிகளும் ஆயிரக்கணக்கான கடற்கரைப் படகுகளும் தயாராகயிருக்கின்றனவென்றும், அவர் வெளியிட்டார். ஜனாதிபதி ரூஸ்வெல்ட் அலூஷியன் தீவுகளையும் பார்வையிட்டார்.

இதே சமயத்தில் உதவி கடற் தளபதி டர்னர் பசிபிக் கடற்படை தலைமை காரியாலயத்தை பேர்ல் துறைமுகத்திலிருந்து சைபானுக்கு மாற்றிவிட்டார். ஜப்பானின் உள்நாட்டு அரண்கள் ஊடுருவிச் செல்லப்பட்டன. மௌண்ட் பேடன், மாக் ஆர்தர், நிமிட்ஸிடமுள்ள படைகளின் மூன்று புஜமுள்ள கிடுக்கித் தாக்குதல்தான் பாக்கியிருக்கிறது.

வி வி வி வி வி

**யூ படகுப் போர்.** ஜெர்மன் விமானப் படையைப்போல ஹிட்லரின் யூ படகுகளும் முறியடிக்கப்பட்டுவிட்டன. ஜனாதிபதி ரூஸ்வெல்டும், மிஸ்டர் சர்ச்சிலும் வெளியிட்ட சமீபக் கூட்டறிக்கையில் யுத்த ஆரம்பம் முதல் இது வரையில் 500 யூ படகுகள் அழிக்கப்பட்டுவிட்டதாகச் சொல்லப்படுகிறது. பிரான்ஸிலுள்ள நேசதேசப் படைகளுக்கு வரும் சர்பராக்களை யூ படகுகளின்மூலம் வழிமறிக்கச் செய்த முயற்சி பயன்படவில்லை. யூ படகுகள் இப்பொழுது வேட்டையாடப்படுகின்றன. ஜூன், ஜூலை மாதங்களில் படையெடுக்கும் படைகளும் அவைகளுக்கு உதவியாகச் சென்ற படைகளும் பத்திரமாகக் கடல் தாண்டிச் சென்றிருக்கின்றன.

---

## பிரிட்டானியிலுள்ள ஜெர்மன் படைகளின் கதி.

### கைதிகள் சோர்வடைந்து கஷ்டப்படுகிறார்கள்.

(ந்யூஸ் க்ரானிகிள் பத்திரிகை).

இந்த யுத்தத்தில் எந்த இடத்திலும் நடைபெறாதவண்ணம் அமெரிக்க கவசம் பூண்ட படைகள் முன்னேறுகின்றன.

அழிக்கப்பட்ட படைகளின் மீதமும் தப்பி ஓட முயலும் கவசம் பூண்ட யந்திரங்களும் தான் ஜெர்மன் படையில் மிஞ்சியிருக்கின்றன. அவைகளின் முயற்சி இது வரையில் பலிக்கவில்லை.

தப்பிஓடும் படைகளைப் பின்பற்றி வளைத்து விடுகிறார்கள். அவைகள் சரணடையாவிட்டால் நிர்மூலமாக்கப்படுகிறார்கள். ஒரு ஜெர்மன் படையிலுள்ள டாங்கிகள் முதல் மோட்டார் சாமான் வண்டிகள் உள்பட எல்லாம் அழிக்கப்பட்டன. ஒருவர்கூட பிழைத்திருக்கவில்லை.

கவசம் பூண்ட யந்திரங்களுடன் நமது காலாட் படைகள் போட்டி போடுகின்றன. இரவு பகலாக யுத்தமும் எஞ்ஜினியரிங் வேலையும் நடைபெறுகின்றன. ரஸ்தாக்கள் பாழான நகரங்கள் வழியாகவும், காடுகள் வழியாகவும் அமைக்கப்படுகின்றன.

உள்நாட்டிலுள்ள வாலிபருள்ள பிரெஞ்சுப் படைகள் ஜெர்மன் படைகளைத் தாக்கி வருகின்றன. பாண்டார்ஸனில் நான் ஒரு மாக்விப்படையாளைக் கண்டேன். அவனுடைய கைத்துப்பாக்கியையும் யந்திர பீரங்கியையும் அவன் தட்டிக் கொடுத்தான்.

அவன் பின்வருமாறு சொன்னான் :—

இந்தப் பழைய துப்பாக்கி எனக்கு நன்றாய் வேலை செய்திருக்கிறது. இது இருபது பாக்குகளைக் கொன்றது. ஜூலை 31-ம் தேதி முதல் நான் யந்திர பீரங்கியை உபயோகித்து வருகிறேன். உங்களுடைய கவசம் பூண்ட படைகள் துரத்தியடித்து காடுகளில் ஒளிந்து கொண்டிருக்கும் ஜெர்மானியர்களை நாங்கள் வேட்டையாடி அழித்துவருகிறோம்.

இந்தப் போர்முனையிலுள்ள ஜெர்மன்படை தோல்வி மனப்பான்மையுடனிருக்கிறது. கைதிகள் மனவுறுதி குலைந்து சோர்வுற்றிருக்கிறார்கள். தலைவர்கள் அவர்களைக் கைவிட்டுச் சென்றுவிட்டதாக நினைத்து அவர்கள் தலைவர்களை நிந்திக்கிறார்கள்.

---

## கடல் மார்க்கமாக ரோமலுக்கு வரும் சர்பராக்கள் அழிக்கப்படுகின்றன.

### போபைடர் விமானங்களின் முக்கிய சேவை.

(விங்க் கமாண்டர் L. V. பிரேசர்).

1944-ம் வருஷம் ஜூலை மாதத்தில் யூ படகுகளைத் தவிர மற்ற லக்ஷியங்களை பலமாகத் தாக்கி விட்டோமென்று பிரிடிஷ் விமானப் படையைச்சேர்ந்த கடற்கரை கமாண்டு பெருமை

கொள்ளக்கூடும். வடக்கு ஐரோப்பிய கடற்கரையிலுள்ள ஜெர்மன் கப்பல்கள்தான் முக்கியமாக தாக்கப்பட்டன. கடற்கரை கமாண்டைச்சேர்ந்த போபைடர் விமானங்கள் அடிக்கடி மீன் வெடிகளையும், ஆகாசவாணங்களையும், பீரங்கிக் குண்டுகளையும் போட்டு யந்திர பீரங்கிப் பிரயோகமும் செய்து தாக்கி வருகின்றன. பிரான்ஸில் போர் நடப்பதால் லக்ஷியங் களுக்குக் குறைவேயில்லை. கடற்கரை ஓரமாக சர்பராக்களைக்கொண்டு போகும் ஜெர்மன் சாமான் கப்பல்கள் அடிக்கடி தாக்குதலுக்குட்படவேண்டியிருக்கிறது.

உள் நாட்டிலுள்ள இருப்புப்பாதைகளும், ரஸ்தாக்களும் இந்த வருஷம் வசந்தகாலம் முதல் நேசதேச வெடி விமானங்களால் அழிக்கப்பட்டுவிட்டதால் ஜெர்மனியின் போக்கு வரத்துக்கள் ஆக்கிரமிப்பு ஐரோப்பாவின் கடற்கரை ஓரமாக நடைபெறுகின்றன.

சாமான்கள் பலவகைப்பட்ட படகுகளிலும் கொண்டுபோகப்படுகின்றன. பிரிடிஷ் போபைடர்களின் நடவடிக்கையால் அவைகளுக்கு அபாரமான நஷ்டம் ஏற்படுவதால் ஜெர்மன் போக்குவரத்து நடவடிக்கை மறுபடியும் உள்நாட்டு சாதனங்கள் மூலம் நடைபெறக்கூடும்.

### போபைடர்களின் அரிய சேவை.

போபைடர் விமானங்களுக்கு மிகுதியான இலக்குகள் கிடைத்திருப்பதற்கு மற்றொரு காரணமுண்டு. மேற்குப் போர்முனை ஏற்பட்டுவிட்டதால் கால்வாயில் பலவகைப்பட்ட கப்பல்கள் ஏராளமாக சஞ்சாரம் செய்து வருகின்றன. கப்பல்களும், யுத்தக் கப்பல்களும், சாமான் கப்பல்களும் பிரெஞ்சுக் கடற்கரைக்கு சமீபத்தில் செல்லுவதால் அவைகள் நாஸி களின் தாக்குதலுக்கு ஆசை காட்டுகின்றன. ஜெர்மன் விமானப் படை சக்தியற்றிருப்பினும் இ-படகுகள், R. படகுகள், சுரங்கவெடிகளின் உதவிகொண்டு நேசதேசக் கப்பல்களுக்குத் தொந்தரவளிக்கலாமென்று ஜெர்மனி முயற்சிக்கிறது. இந்த முயற்சியில் அதிக லாபங்கள் கிடைக்காது. ஆனால் எதிரிகள் பிரிடிஷ் போபைடர்களின் தாக்கும் வட்டாரத்துக்குட்பட்டு விடுகிறார்கள். இந்த விமானங்கள் சந்தர்ப்பத்தை நன்றாய் பயன்படுத்திவிட்டன. அவைகள் ஜெர்மன் சுரங்க வாரிக் கப்பல்களையும் அநேகம் தடவை தாக்கியிருக்கின்றன.

ஜூலை 21-ம் தேதியன்று கடற்கரை கமாண்டைச்சேர்ந்த விமானப் படை ஹெலி கோலாந்துக்கு சமீபத்தில் 40 ஜெர்மன் கப்பல் கூட்டத்தை பலமாகத் தாக்கின. அந்தக் கூட்டத்தில் 9 சாமான் கப்பல்களும், 30 துணைக்காவல் கப்பல்களுமிருந்தன.

நடவடிக்கைக்குப்பின், வேவு பார்க்கும் விமானங்கள் ஒளிப்படம் பிடித்தபொழுது நான்கு சாமான் கப்பல்களின்மீது மீன் வெடிகள் விழுந்தனவென்றும் அவைகளில் இரண்டு மூழ்கிக்கொண்டிருந்தனவென்றும் தெரியவந்தது. போபைடர் விமானங்கள் பிரிட்டனுக்குத் திரும்பியபொழுது 5 துணைக்காவல் கப்பல்கள் தீப்பிடித்து எரிந்துகொண்டிருந்தன. பீரங்கிக் குண்டுகளாலும், ஆகாசவாணங்களாலும் தாக்குண்ட மற்ற துணைக்காவல் கப்பல் களில் புகை கிளம்பிற்று. துணைக்காவலிலுள்ள ஒவ்வொரு கப்பல்மீதும் பீரங்கிக் குண்டுகள் விழுந்தன. ஒரு போபைடர் விமானம்கூட நஷ்டமாகவில்லை.

பலமாகத் தாக்க முயன்றபொழுது விமானங்கள் கப்பல்களின் பீரங்கிப்பிரயோகத்தையும் கடற்கரை பீரங்கிகளின் குண்டு வீச்சையும் சமாளிக்கவேண்டியிருந்தது. திரும்பி வந்த ஒரு விமானத்தின் இறக்கையில் 50 கெஜ எஃகுக் கம்பி சுற்றப்பட்டிருந்தது. வால்பக்கத்தின் ஒரு பாகம் அகற்றப்பட்டிருந்தது.

விமானிகள் நஷ்டத்தை வர்ணித்தார்கள். கப்பல்கள் கரும்புகை சூழ்ந்து நின்றன. அக்னி ஜ்வாலைகள் எங்கு பார்த்தாலும் தென்பட்டன. மீன் வெடி பாயிலரில் அடித்ததன் காரணமாக ஒரு கப்பல் சுக்கு நூறுகச் சிதறுண்டது. போபைடர் இம்மாதிரியான வேலைகளைச் செய்து வருகிறது. தற்காப்பு, முன்னேறி அடிப்பது என்ற இருநடவடிக்கைகளை அது மேற் கொள்ளுகிறது. ஜெர்மனி கடல் மார்க்கமாகக்கொண்டு போகும் சர்ப்பராக்களையும், கப்பல் களையும் அவைகள் அழித்துவருகின்றன. நார்மண்டிக்கு சரமாரியாக துருப்புகளையும், தளவாடங்களையும் கொண்டுபோகும் நேசதேசக் கப்பல்களுக்கு அவைகள் துணைக்காவல் புரிகின்றன.

---

## இது உலகமளாவிய யுத்தம்.

---

யுத்த இலாகா உதவி காரியதரிசி பிரிடிஷ் துருப்புகள் இந்த யுத்தத்தில் 22 போர் முனைகளில் சண்டையில் ஈடுபட்டனவென்று சொல்லுகிறார். அவை பின்வருமாறு.



(1) நார்வே, (2) பிரான்ஸ், பெல்ஜியம், (3) சோம் நதிக்குத் தெற்கு, (4) கிழக்கு ஆபிரிக்கா, (ஸோமாலிலாந்து), (5) வடகிழக்கு ஆபிரிக்கா (எரிட்ரியா, சூடான்), (6) ஈராக், (7) ஸிரியா, (8) மேற்கு ஆபிரிக்கா, (9) கிரீஸ், (10) கிரீட், (11) டுனிஸியா, (12) ஸிஸிலி, (13) இதாலி, (14) ஆன்ஸியோ, (15) மடகாஸ்கர், (16) ஹாங்காங, (17) சிங்கப்பூர், (18) தெற்கு பர்மா, (19) அரக்கான், (20) மணிப்பூர், (21) சிலோன், (22) இந்திய எல்லைச்சரகம்.

---

## எதியோபியா நிலைநாட்டப்பட்டது.

### மூன்றுவருட பிரயாசை.

### (டைம்ஸ் பத்திரிகை).

அபிஸீனியாவின் தலைநகரமான அடிஸ் அபாபாவுக்குள் ஹெயில் ஸெலாஸி மன்னர் பிரவேசித்து மூன்று வருடங்களாகின. அவர் நாட்டை விட்டு ஓடியபின் வெள்ளிக்கிழமை யன்று ஐந்து வருஷங்கள் பூர்த்தியாகின்றன. கெனியாவிலிருந்தும், எரிட்ரியாவிலிருந்தும் சென்ற பிரிடிஷ் படைகளும், அபிஸீனிய தேசாபிமானப் படைகளும், பர்மாவில் சமீபத்தில் உயிரிழந்த கர்னல் வின்கேட்டும், கர்னல் ஸாண்ட் போர்டும் ஒரு வருடத்திற்குள் இதாலிய சாம்ராஜ்யத்தை அழித்து விட்டார்கள். பிரிடிஷ் ராணுவ ஆக்ஷிக்குப்பின் அபிஸீனிய சக்ரவர்த்தியின் ஆக்ஷிஉரிமை அங்கீகாரம் செய்யப்பட்டது. 1942-ம் வருஷத்தில் ஏற்பட்ட உடன்படிக்கை மூலமும் ராணுவ சம்பிரதாயப்படிக்கும் அபிஸீனியாவிலுள்ள பிரிடிஷ் துருப்புகளின் உரிமைகளும், அதிகாரங்களும் வரையறுக்கப்பட்டன. அபீஸீனியப் பொதுஜன நிர்வாகத்தை மறுபடியும் அமைக்க பொருளுதவியும், மனித உதவியும் செய்ய திட்டங்கள் போடப்பட்டன. இந்த உடன்படிக்கை இரண்டு வருடங்களுக்கு அமுலிலிருக்கும். அதன் பின் அதை ரத்து செய்யலாம் அல்லது புதிப்பித்துக்கொள்ளலாம்.

ரோமல் லிபியாவிலிருந்தான், ஆபிரிக்கக் கடற்கரையில் ஜப்பானியப் படைகள் இறங்கக்கூடிய பீதியும் ஏற்பட்டது. ஆகையால் கேந்திர ஸ்தானங்களை ஆக்கிரமிக்கும்படி பிரிடிஷ் படைகளுக்கு உத்தரவிடப்பட்டது. ஆபீஸர்களும், கமிஷன் பெறாத ஆபீஸர்களு முள்ள ஒரு பிரிடிஷ் ராணுவ கமிஷன் கிழக்கு ஆபிரிக்க கமாண்டின் அமுலுக்குட்பட்டு அபிஸீனிய சேனையைத் தயாரிக்க அனுப்பப்பட்டது.

மறுபடியும் சிங்காசனம் ஏறிய மன்னர் அநேக கஷ்ட சாத்தியமான வேலைகளை மேற் கொள்ளவேண்டியிருந்தது. இதாலியர்கள் ஆக்கிரமணம் செய்திருந்த ஐந்து வருடங்களில் ஜனங்களின் உறுதி அழிக்கப்பட்டு அவர்கள் ஊழியர்களாக ஆகிவிட்டார்கள். நாட்டை விட்டு ஓடாத பிரமுகர்களை இதாலியர்கள் கொலைசெய்தார்கள் அல்லது காவற்படுத்தினார் கள். நாட்டிலுள்ள பள்ளிக்கூடங்களில் இதாலியர்களுக்கு மட்டும் பாடம் கற்பிக்கப்பட்டது. இழிவான விரிவான துரைத்தனம் அமைக்கப்பட்டது. 120 மிலியன் பவுன்கள் செலவு செய்யப்பட்டதால் பொது வாழ்க்கைச்செலவு அதிகரித்ததே ஒழிய நவீன முறையில் ஜனங் களுக்கு ஒரு சாதகமும் ஏற்படவில்லை. 80 மிலியன் பவுன்களை அழகான மோட்டார் ரஸ்தாக்களை அமைப்பதிலும், தொழிற்சாலை பிரதேசங்களிலும், படை முகாம்களிலும், விடு திகளையும், வைத்திய வசதிகளை அமைப்பதிலும் செலவிட்டார்கள். அவர்களை நாட்டைவிட்டுத் துரத்தியபொழுது ரஸ்தாக்களைத் தவிர வேறு பயன்கள் காணப்படவில்லை. ஆஸ்பத்திரி களில் டாக்டர்கள் கிடையாது, பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்களில்லை, தொழிற்சாலைகளில் யந்திரங்களும், தொழிலாளர்களுமில்லை, ஆபீஸ்களில் குமாஸ்தாக்களில்லை.

### சாவதானமான முன்னேற்றம்.

1942-ம் வருஷ ஒப்பந்தப்படி சீர்திருத்தத்தின் ஆரம்ப காலத்தில் சக்ரவர்த்திக்கு பிரிடிஷ் ஆலோசகர்கள் ஒத்தாசை செய்யவேண்டும். உள்நாட்டு, செலாவணி, நியாயம், கல்வி, வியாபாரம், மராமத்து இலாகாக்கள் பிரிடிஷ் அதிகாரிகள் வசமிருந்தன. நிர்வாக இலாகா வுக்கும், நியாய இலாகாவுக்கும் பிரிடிஷ் உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டார்கள். பிரிடிஷ் ஆசிரியர்கள் ஆண் பெண் பள்ளிகளில் கல்விகற்றுக்கொடுத்தார்கள். தனிப்பட்ட இரண்டு பிரிடிஷ் ஸ்தாபனங்கள் உபயோகமுள்ள சேவை புரிந்து வந்தன. பிரிடிஷ் சபை ஆங்கிலேய கல்வி சாலையை ஏற்படுத்தி அதில் அடிஸ் அபாபா வாசிகளுக்கும், மற்றவர்களுக் கும் ஆங்கிலம் போதிக்கப்பட்டது. ஜன சமூக ஒற்றுமையை உண்டாக்க பிரிட்டிஷ் அபிஸீனிய விளையாட்டுச் சங்கங்களும் ஏற்படுத்தப்பட்டன. பொது ஜனங்களின் வைத்தி யம், சுகாதாரம், ஜனசமூகத்தேவைகளைக் கவனிக்க சேனையுடன் ஒரு உதவி மோட்டார்

படையும் அனுப்பப்பட்டது. இந்த கோஷ்டியில் டாக்டர்களும், வைத்தியகல்வி மாணவர்களும், ஆசிரியர்களும், ஜன சமூகத்தொண்டில் ஈடுபட்டவர்களும் சேர்ந்திருந்தார்கள். எல்லோரும் ஊதியமன்னியில் சேவை செய்ய ஆவலுள்ளவர்கள். ராஜீய விவகாரங்களில் தலையிடுகிறவர்களல்ல. சென்ற மூன்று வருடங்களில் அநேகத் துறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஆகிலும் பிரிடிஷ் ஆலோசகர்களின் சிபார்சுக்குத் தக்கபடி முன்னேற்றம் போதிய அளவுக்கு ஏற்படவில்லை. வரவு செலவு திட்டத்துக்கு உபரியாகவே கல்வியிலும் ஜன சமூக சீர்திருத்தத்திலும் பொருள் செலவிடப்படுகிறது. இதாலிய ஆக்கிரமணத்துக்கு முன்னிருந்ததுபோல் சக்ரவர்த்தி மாகாணங்களிலுள்ள ஜமீன் ஆட்சியை ஒழித்து மத்தியில் பலமான அரசாங்கத்தை அமைக்கவேண்டுமென்று பிரியப்பட்டார். இதற்கு ஆங்காங்கு எதிர்ப்பு ஏற்பட்டது. பிரிடிஷ் ஆபீஸர்கள் கொண்ட அபிஸீனிய சேனை இரண்டு தடவைகளில் கலகத்தை அடக்கும்படி நேர்ந்தது. சக்ரவர்த்தியின் அமுலுக்கு சேனை அத்தியாவசியமாகிவிட்டதுடன் பொதுஜன பத்திரத்தையும் அது நிலைநாட்டி வருகிறது. பிரிடிஷ் கமிஷன் ஏற்படுத்தியிருக்கும் ராணுவ கலாசாலைகளில் அபிஸீனியர்கள் சேனைக்குத் தலைமை வகிக்கும் பயிற்சியைப் பெற்றுவருகிறார்கள்.

விவசாயம் மிகுந்த நாட்டில் உணவுப்பொருள் அதிகரித்து விட்டதால் யுத்த முயற்சிக்கு ஒத்தாசை கிடைத்து வருகிறது. மத்திய கிழக்கு சர்பரா சபையும், பிரிடிஷ் வியாபார சங்கமும் தங்களுடைய வியாபாரத்திற்கு அபிஸீனியாவையும் சேர்த்துக்கொண்டு விட்டன. அவர்கள் அயல்நாடுகளுக்கு கோதுமையையும், தோலையும் ஏற்றுமதி செய்ய ஏற்பாடு செய்து வருகிறார்கள். ஏராளமான காடுகளில் இயற்கை ரப்பரைத்திரட்ட முயற்சி செய்யப்பட்டிருக்கிறது. வாழைநாரிலிருந்து கோணிப்பைகளும், கயிறும் தயாரிக்கப்படுகிறது. எகிப்திலிருந்து கிடைக்கும் பருத்தியைக் கொண்டு நெசவுத் தொழில் நடைபெறுகிறது. சக்ரவர்த்தியின் அழைப்புக்கிணங்க, விவசாய, பொருளாதார, தாதுப் பொருள், போக்குவரத்து அபிவிருத்தி முறைகளை ஆராய்ச்சி செய்ய அமெரிக்க நிபுணர்களின் கோஷ்டி அங்கு வருமென்று வெளியிடப்பட்டது.

ஒழுங்கான முறையில் நியாயம் வழங்குவதற்கும் சிறந்த முறையில் சீர்திருத்தங்கள் செயயப்பட்டிருக்கின்றன. உயர்தர நியாய ஸ்தலம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் நிரந்தரமாக நியமிக்கப்பட்டிருக்கும் நீதிபதிகள் எல்லோருடைய குற்றங்களையும், பரிசீலனை செய்து வருகிறார்கள். இதாலியர்கள் ரத்து செய்த ஒப்படைப்பு ஏற்பாடுகள் மறுபடியும் அமுலுக்குக் கொண்டுவரப்படாத போதிலும் அயல்நாட்டைச் சேர்ந்தவர் பிரிடிஷ் நியாயாதிபதி உள்ள கோர்ட்டாரால் பரிசீலனை செய்யப்படவேண்டுமென்று வேண்டிக் கொள்ளலாம். குற்றவாளிகள் சம்பந்தமான சட்ட திட்டங்களும் அமுலிலிருந்து வருகின்றன. பொதுஜன விவகாரத்துக்குறிய சட்டங்கள் கிடையாது. ஜனங்களின் பழக்க வழக்கத்தை ஒட்டியும் நீதிமுறைப்படிக்கும் தான் நீதிபதிகள் தீர்ப்புக்கூறுகிறார்கள். நியாயவாதிகள் சொல்பம் தான். அயல் நாட்டுக்காரர்களும் உள்நாட்டுக்காரர்களும் சேர்ந்து 12 பேர்களுக்கு மேலிராது. அதாவது மிலியனுக்கு ஒருவர் வீதம் கணக்காகிறது.

### நன்றியறிவும் மனவருத்தமும்.

கல்வியிலும் சக்ரவர்த்தி அதிக சிரத்தை எடுத்துக்கொள்ளுகிறார். தேசத்தின் சீர்திருத்தத்திற்கும் நவீன நிர்வாகத்துக்கும் அதுதான் அடிப்படையானதென்று அவர் நன்கு அறிவார். அடிஸ் அபாபாவிலும் மற்ற நகரங்களிலும் ஆரம்பக் கல்வி பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. தலைநகரத்தில நிர்வாகிகள், பொதுஜன சேவகர்கள், ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்க கல்விசாலையும் அமைக்கப்பட்டிருக்கிறது. கல்வி, ஆங்கில பாஷையில் கற்பிக்கப்படுகிறது. ஆசிரியர்களும் பிரிடிஷார்கள் தான். யந்திரப் பயிற்சிக்காக தொழிற் கற்பிக்கும் பள்ளிக்கூடங்களும் நெசவு, மண் பாண்டம் உற்பத்திகளை அதிகப்படுத்த தொழிற் பள்ளிக்கூடங்களும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. பிரிடிஷ் ராணுவ கோஷ்டியிலுள்ள பாலஸ்தி டைரக்டர்களும், பிரிடிஷ் பொதுஜன வைத்திய இலாகாவைச் சேர்ந்த டாக்டர்களும் எதியோபியர்களை ரணம் கட்டுவதிலும் தாதிகளாகவும் பயிற்சி செய்விக்கிறார்கள்.

1942-ம் வருஷத்தில் ராணுவ சம்பிரதாயத்துக்கும் ஒப்பந்தத்துக்கும் பதிலாக புதிய உடன்படிக்கைகள் ஏற்படுமென்று சக்ரவர்த்தி நம்புகிறார். அவைகளின் ஷரத்துக்கள் ஆபிரிக்காவை விட்டு போர் மறைந்து விட்டதால் இனிமேல் நிலைமைக்கு ஒத்ததாக இருக்காது. இப்பொழுது கிடைப்பதைவிட அதிகப் பொருளுதவி வேண்டுமென்று அபிஸீனிய சக்ரவர்த்தி அபிப்பிராயப்படுகிறார். ஒப்பந்தப்படி பிரிடனின் நன்கொடை வரவரக் குறைந்துவிடும். வரிவிதித மூலம் வருமானம் அதிகரித்து வந்தாலும் நன்கொடையின் குறைவை



அது சரிக்கட்ட முடியவில்லை. அபிஸீனியாவின் சுதந்திரத்தையும் செலாவணிக் குறைவையும் எப்படி ஒன்றுபடுத்துவதென்பதுதான் தற்போதய பிரச்னை. சக்ரவர்த்தியின் நன்றியறிவுடன் சில குறைகளும் கலந்திருக்கின்றன.

1942-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் அபிஸீனியா நேசநாடுகளுடன் ஒன்றுபட்டது. கடன் குத்தகை திட்டத்தையும் அட்லாண்டிக் சாஸனத்தையும் அது ஆதரிக்கிறது. அமெரிக்காவில் நடைபெற்ற உணவுப் பொருள், கஷ்ட நிவாரண மகாநாடுகளில் அது கலந்து கொண்டது. சர்வதேச சங்கத்தில் அது அங்கத்தினராக இருந்தது. அயல் நாட்டாரின் உதவி அவசியமென்று அபிஸீனியா அறிந்திருக்கிறது. அபிஸீனியாவின் விவசாய உற்பத்தியின் உதவியுடன் நேசதேசத்தாரின் நண்பனாகயிருந்து சாத்தியமான உதவியளித்துவருகிறது. உலகக்ஷேமத்தை பிரிடனும் அமெரிக்காவும் நிலைநாட்ட வேண்டுமென்றும் அபிஸீனியா விரும்புகிறது.

---

## பஸிபிக் கடற்படை சபாங்கைத் தாக்கியது.

### கண்நோக்காளரின் விருத்தாந்தம்.

(டெயிலி டெலகிராப்.)

நேசதேச பஸிபிக் கடற்படை சபாங் துறைமுகத்தின்மீதும் ராணுவ அமைப்புகள் பேரிலும் பலமான பீரங்கிப் பிரயோகம் செய்தபின் மலாக்கா ஜலசந்தியிலுள்ள முக்கியமான ஜப்பானிய கடற்தளமான சபாங் எங்கு பார்த்தாலும் கரும்புகை சூழ்ந்து பாழாகிவிட்டது.

குண்டுவீச்சை முதல் முதலில் நடத்தியதும் தாக்குதலில் முக்கியமான பங்கெடுத்துக் கொண்ட கப்பலிலிருந்து சபாங் நடவடிக்கையை நான் உற்றுநோக்கியபொழுது மற்றொரு பெர்ல் துறைமுக நடவடிக்கை ஜப்பானுக்கேற்பட்டதென்று நினைத்தேன்.

சுமத்ராவின் வடமேற்குக்கோடியிலுள்ள வீத்தீவிலுள்ள சபாங் ராணுவ முக்கியத்வமுள்ளது. மலேயாவுக்கும் கிழக்கிந்தீஸ் தீவுகளுக்கும் செல்லும் வழியை இது காபந்து செய்கிறது. இடிந்துபோன தற்காப்புகளைப் பழுதுபார்த்து அதை முன்னிருந்த ஸ்திதிக்குக் கொண்டுவர ஜப்பானுக்கு அதிக காலம் பிடிக்கும்.

இதற்குமுன் சபாங்கை விமானந்தாக்கிக் கப்பலில் சென்ற வெடிவிமானங்கள் தாக்கியிருக்கின்றன. அதை மறுபடியும் விமானங்களும் கப்பல்களும் தாக்கவேண்டுமென்று தீர்மானித்து அதைத் தாக்கியபொழுது எதிரி கொஞ்சம்கூட எதிர்த்துப் போராடவில்லை. இந்த உறுதியான நடவடிக்கையில் ஒரு சஞ்சாரியும், மூன்று நாசகாரிகளும் ஈடுபட்டன. இந்தக் கப்பல்கள் துணிவுடன் துறைமுகத்திற்குள் சென்றன. கடற்கரைக்கு அப்பாலில் நின்ற யுத்தக் கப்பல்கள் பீரங்கிப் பிரயோகம் செய்தபொழுது துறைமுகத்துக்குச் சென்ற கப்பல்களிலிருந்த பீரங்கிகள் ஜப்பானிய பீரங்கிகளை நொருக்கின. அதன்பின் துறைமுகத்தை அழிக்க ஆரம்பித்தன. மீன் வெடிகளைப்போட்டு இரண்டு கப்பற்துறைகளை நொருக்கின. ஒரு சாமான் கப்பலை மூழ்கடித்தன.

நாசகாரியின்பேரில் சில குண்டுகள் விழுந்தன. சிறிது நஷ்டமேற்பட்டது. இருவர் மாண்டனர். டச்சு சஞ்சாரிக் கப்பலுக்கு சொல்பமான பழுது ஏற்பட்டது. அதன் துணிவான செய்கைக்கு இந்த நஷ்டம் பிரமாதமானதல்ல.

தூரத்திலிருந்து பீரங்கிப் பிரயோகம் செய்த யுத்தக்கப்பல்களுக்கும், சஞ்சாரிகளுக்கும் யாதொரு எதிர்ப்புமில்லை. நானிருந்த கப்பலும் மற்ற சஞ்சாரிகளும் கடற்கரையின் பீரங்கி குண்டு வீச்சு வட்டாரத்துக்குள் சென்றன. லக்ஷியத்தின்பேரில் சுட்டுப் பயிற்சிபெறுவது போல் நாங்கள் 15 நிமிஷங்கள் வரையில் பீரங்கிப் பிரயோகம் செய்தோம். தாக்குதலை நாங்கள் திறமையுடன் வெற்றிகரமாகச் செய்து முடித்தோம்.

விடியற்காலையில் பாரகூடா மீன்வெடி வேவு பார்க்கும் விமானங்களும், கார்ஸேர் சண்டை விமானங்களும் சுமத்ராவிலுள்ள விமான தளங்களையும் சபாங்குக்கு சமீபத்திலுள்ள விமானமிறங்கும் ஸ்தலத்தையும் தாக்கின. இந்த நடவடிக்கையின் பயனாக எதிரி விமானங்கள் நமது கடற்படையைத் தாக்க வரவில்லை. தரையில் நான்கு விமானங்கள் நின்றுகொண்டிருந்தன. அவைகளும் ராடார் ஸ்டேஷனும், விமானம் வைக்கும் கூடாரமும் அழிக்கப்பட்டன.

அதன்பின் யுத்தக் கப்பல்கள் ஒரு டன் எடைமானமுள்ள குண்டுகளை பிரயோகித்தன. கப்பற்கட்டும் துறைகளும், முகாம்களும், ஓர்க் ஷாப்புகளும், சாமான் கிடங்குகளும் தவிடு பொடியாகிவிட்டன.

பின்னும் நான்கு கப்பல்கள் துணிவுகரமாக துறைமுகத்திற்குள் சென்றன. இதே சமயத்தில் என்னுடைய கப்பலும் மற்ற இரண்டு சஞ்சாரிகளும் வடக்குக் கடற்கரையைச் சுற்றிச்சென்று அங்கிருந்த வெயர்லஸ் நிலயத்தையும் பீரங்கிகளையும் நொருக்க முயன்றன. ஒன்றன்பின் ஒன்ருக கட்டடங்கள் நொருங்கின. பீரங்கிப்பிரயோகமும் ஓயவில்லை. நாம் எதிரியைத் திடீரெனத் தாக்கிவிட்டோம்.

துறைமுகத்துக்குப் பின்புறத்தில் எண்ணெய்க் கிட்டங்கி தீப்பற்றி எறிந்தது. சண்டை விமானத்திலிருந்த பாரசூட் மூலம் குதித்த விமானியை சஞ்சாரிக் கப்பல் காப்பாற்றிற்று. எதிரியின் கடல் விமானம் ஒன்றை வழிமறித்து சுட்டுத் தள்ளினேம். 10 மணி நேரங்களுக்குப்பின் பதில் நடவடிக்கையைத் துவக்க ஜப்பானியர் விமானப் படையைத் திரட்டினர்கள். இரண்டு சீரோ விமானப்படைப் பகுதிகள் திரும்பிச் சென்று கொண்டிருந்த யுத்த கப்பல்களைத் தாக்கின. மூன்று விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன, மற்றவைகள் நெருங்கி வாராமலேயே முதுகுகாட்டி ஓடிவிட்டன.

---

## கடற்தளபதி ஸர் ப்ரூஸ் பிரேசர்.

### தூரக்கிழக்குக் கடற்படையின் புதிய தலைவர்.

(ஸிட்னி ஹார்னிப்ளோ)

தூரக்கிழக்குக் கடற்படையின் புதிய கடற்தளபதியாக நியமிக்கப்பட்டிருக்கும் ஸர் ப்ரூஸ் பிரேசர் பிரிடிஷ் கடற்படையில் சிறந்த பீரங்கி நிபுணர்.

யுத்த ஆரம்பத்தில் மூன்ருவது கடல் பிரபுவாகவும், கடற்படை கண்ட்ரோலராகவும், இருந்த அவர் யுத்தக் கப்பல்கள் முதல் லேசான, வேகம் பொருந்திய மோட்டார் மீன் வெடிப்படகுகள் உள்பட சகலவிதமான கலங்களையும் கட்ட அவர் திட்டம் போட்டார்.

1940-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் கடும் குளிரில் வடக்கு பிரிடனில் ஒரு கப்பல் கட்டும் தளத்தில் ஒரு பெரிய யுத்தக் கப்பல் மிதக்கவிடத் தயாராக இருந்தது. கப்பலின் முன்பக்கத்தில் ஒரு மேடையில் 84 வயதுள்ள ஒரு சிறிய ஸ்திரீ நின்று கொண்டிருந்தாள். அவள் கப்பலை மிதக்கவிடும் வைபவத்தைத் துவக்கினுள். கப்பல் மெதுவாக ஓடும் வழியாகச் சென்று தண்ணீருக்குள் இறங்கும்பொழுது அவள் ஆசி கூறினுள்.

ஸர் புரூஸின் திட்டப்படி கட்டப்பட்ட முதல் கப்பல் இதுதான். அதை மிதக்க விட்டவள் அவருடைய தாயார்.

ஸர் புரூஸின் தகப்பனுர் பிரிடிஷ் எஞ்ஜினியர்படையில் ஜெனரலாகயிருந்தார். புரூஸ் பிராட்பீல்டு கல்லூரியில் கல்வி கற்றபின் 14 வயதில் பிரிட்டானியா என்ற பயிற்சிக்கப்பலில் 1902-ம் வருஷத்தில் காடெட்டாகச் சேர்ந்து கொண்டார்.

### நுட்ப புத்தி.

அவருடைய ஜீவ்ய சரித்திரத்தில் புரூஸ் பிரேசர் அவருடைய உருவான திட்டங்களை வெளியிட்டிருக்கிறுர். லெப்டினெண்ட். பரிக்ஷையில் எல்லாப் பாடங்களிலும் அவர் முதல் தரமாக பரிக்ஷையில் தேறினுர். முதலாவது உலக யுத்தம் ஆரம்பமாகுமுன் அவர் பீரங்கிப் பிரயோகத்தில் பயிற்சி பெற்ருர். அந்த யுத்தத்தில் அவர் முதலில் லெப்டினெண்டாகவும், பிறகு மினர்வா என்ற சஞ்சாரியிலும் லெப்டினெண்ட் கமாண்டராகவும், பீரங்கிப்படை ஆபீஸராகவும் டார்ட்னஸிலிலும், கிழக்கு இந்தீஸிலும் கடற்படையில் ரெஸலூஷன் என்ற கப்பலில் பீரங்கிப் படைத்தலைவராகவும் வேலை செய்தார்.

1919-ல் அவர் கமாண்டர் பதவிக்கு நியமிக்கப்பட்டார். என்ஸெலி கோஷ்டியுடன் சேவை புரிவதற்காக அவர் கான்ஸடாண்டிநோபிலிலுள்ள தளத்திற்கு அனுப்பப்பட்டார். 1926-ம் வருஷத்தில் காப்டனுக நியமிக்கப்பட்டபொழுது மத்தியதரைக்கடலில் கடற்தளபதி ஸர் ரோஜர் கீஸின் வேலைக்காரர்களில் பீரங்கிப்படை ஆபீஸராக வேலை பார்த்தார்.

அதற்குப்பின் மூன்று வருடங்கள் வரையில் அவர் கடற்படையின் டாக்டிகல் பகுதியின் தலைவர் பதவியிலிருந்தார்.

அதன்பின் அவர் எப்பிங்காம் என்ற கப்பலின் பிளாக் காப்டனுகவும் கிழக்கிந்திய காரியாலயத்தின் தலைவராகவும் நியமிக்கப்பட்டார். அங்கு மூன்று வருஷம் சேவை செய்த பின் மறுபடியும் கடற்படை பீரங்கிப் படையின் டிரெக்டராக நியமிக்கப்பட்டார்.

அதன்பிறகு மத்தியதரைக்கடல் கமாண்டின் தலைமை உத்தியோகஸ்தராக நியமிக்கப்பட்டார். 1939-ம் வருஷத்தில் அவர் இங்கிலாந்தில் மூன்ருவது கடல் பிரபுவாகவும் கடற்படை கண்ட்ரோலராகவும் ஆனுர். கப்பல்களைக் கட்டுவதற்கும் தளவாடங்களை உற்பத்தி செய்வதற்கும் அவர் பொருப்பேற்றுக் கொண்டார்,



### ஷார்ன்ஹார்ஸ்ட்டை மூழ்கடித்தார்.

கப்பல்களைக் கட்டும் திட்டம் நிறுவுவதில் நிபுணரான இவர் 1942-ம் வருஷத்தில் பிரிடனிலுள்ள கடற்படையின் இரண்டாவது கமாண்டராக நியமிக்கப்பட்டார். அடுத்த வருஷத்தில் அவர் கமாண்டர் பதவியை ஏற்ருர். அந்த சமயத்தில்தான் அவர் ஷார்ன் ஹார்ஸ்ட்டை துரத்தி மூழ்கடித்தார். டிர்பிட்ஸ் என்னும் கப்பலை இரண்டு தடவை தாக்கி அதைப் பழுதுபடுத்தினுர்.

உத்தியோகப் புகழைத்தவிர பிரேஸரின் ஆத்ம குணங்கள் என்னவென்று கவனிப்போம். சிறந்த கடற்படை ஆபீஸர்களைப்போல் அவருடைய அவயவ அமைப்புகள் அவ்வளவு சிலாக்கியமானவைகளல்ல. அவர் பறந்த முகமுள்ளவர். அவருடைய கண்களில் தீர்க்காலோசனை காணப்படுகிறது. அவருடைய வாய் சுவையறிவுள்ளது. அவர் சந்தோஷமும், அன்பும் மிகுந்தவர். விருந்துக்குப்பின் குறிப்பான சொற்பொழிவாற்றக்கூடியவர்.

கடற்தளபதி பிரேஸர் ஆகாய கடல்போரில் மிகவும் கியாதி பெற்றவர். ஒப்பற்ற திறமுள்ளவர். தளவாடங்களை ஏராளமாகச் சேமித்து விடுங்கள் என்று அவர் அடிக்கடி சொல்லுவதுண்டு.

---

## விசேஷ மாறுதலைக் குறிப்பிடும் முடிவு.

1942-ம் வருஷத்தின் மத்தியில்தான் சாமான் கப்பற் படைக்கு ஏற்பட்ட சிரமத்தை நிவர்த்திக்க ஜப்பான் மரக்கலங்களைக் கட்டும் முறையை ஏற்றது. இப்பொழுது மற்ருெரு விசேஷ திட்டத்தை ஜப்பான் நிறுவியிருக்கிறது. தெற்குப் பகுதிகளிலிருந்து எண்ணெய், மீன் பிடிக்கும் படகுகளில் கொண்டுவரப்படவேண்டுமென்று முடிவு செய்திருப்பதாக கொரியாவிலுள்ள நிர்வாகம் வெளியிட்டது.

விசேஷ மாறுதலுக்கும் மீன் படகுகளுக்கும் என்ன சம்பந்தமென்பது புரியவில்லை. மேலும் நேசதேச நீர்மூழ்கிகளாலும் கடல் விமானங்களாலும் மூழ்கடிக்கப்படும் சாமான் கப்பல் நஷ்டங்களை ஜப்பான் மறைத்துச் செல்ல முயன்றுவருகிறது. ஜப்பானிடமிருந்த 7 மிலியன் டன்கள் எடைமானமுள்ள சாமான் கப்பல்களில் மூன்றில் ஒரு பாகம் மூழ்கடிக்கப்பட்டுவிட்டதென்று ஜூலை 5-ம் தேதியன்று அமெரிக்க கடற்படை காரியதரிசி வெளியிட்டார். இவைகளில் 640 கப்பல்களை அமெரிக்க நீர்மூழ்கிகள் மூழ்கடித்தன.

### கப்பல்களும் அரிசியும் கிடையாது.

ஜப்பானின் ராஜுவ அதிகாரிகள் இந்த நஷ்டத்தின் விளைவுகளை நன்கு உணர்ந்திருக்கிறுர்கள். இப்பொழுது ஒவ்வொருவருக்கும் தினசரி 300 கிராம் அரிசிதான் பங்கிடு செய்யப்பட்டிருக்கிறது. யோகஹாமாவிலுள்ள போர்ட் கம்பெனியில் மாஜி ஜெனரல் மானேஜரான மிஸ்டர் பென்கோப்ஸ் சொல்லுகிறபடி சர்க்கரை கிடைப்பது அரிதாகிவிட்டது. பர்மாவில் ஏராளமான அரிசி கிடைக்கிறதென்று ஜப்பான் சொல்லிவருகிறது. மலேயாவிலும், பிலிப்பைன்ஸ் தீவுகளிலும் ஏராளமான இரும்பு உலோகம் கிடைத்தபோதிலும் ஜப்பானின் எஃகு தொழிலும் அபிவிருத்தியடையவில்லை.

### பர்மியர்களுக்கு ஜப்பானிய கலைஞானம்.

பர்மாவுக்குப் போலி சுதந்திரம் வழங்கப்பட்ட சமயத்தில் ஜப்பானிய அயல் நாட்டு ஸ்தானிகரான ரென்சோ ஸ்வாடா இரு தேசங்களுக்குமிடையே ஒப்பந்தங்கள் அவசியமில்லை என்று சொன்னுன். ஜப்பான், பர்மா கலைஞான சங்கத்தின் ஸ்தாபன தினத்தன்று மற்ருெரு முக்கியமான அறிக்கை வெளியிடப்பட்டது. ஜப்பானிய கலைகளை நன்கு கற்று அவைகளை பர்மிய நாகரீகத்தின் ஒரு பகுதியாகச் செய்துவிடவேண்டுமென்று அவன் சொன்னுன். இவ்விதம் செய்தால் பர்மா ராஜ்யமும் சமக்ஷேம திட்டமும் புத்துயிர் பெறுமென்றும் அவன் வற்புறுத்தினுன். பர்மியர்கள் சமக்ஷேம திட்டத்துடன் ஒற்றுமைத்து மிலியன்கள் கணக்கான ஜனங்களின் ஐகபத்யத்தை நிலை நாட்டவேண்டுமாம். ஒத்துமை, ஒத்துழைப்பு என்ற வேண்டுகோள்களின் சுருக்கத்தை ஆசிரியர் யோமாகி 1942-ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் விளக்கிக் காட்டியிருக்கிறுர். "ஆசியாவிலுள்ள ஜாதியார்கள் ஜப்பானிய ஜாதியைச் சேர்ந்தவர்கள். ஜப்பானிய மன்னர்தான் சர்வ தேசங்களின் சக்ரவர்த்தி. உலகத்தில் சாச்வதமான சமாதானத்தை அமைப்பதுதான் ஜப்பானின் கடமையும் உரிமையுமாகும். ஜப்பானின் ஆட்சிக்குள் உலகம் ஒன்றுபடவேண்டும். அதாவது உலகத்தில் ஜப்பானிய சாம்ராஜ்யம் நிலை பெற்றிருக்கவேண்டும்". 1943-ம் வருஷம் ஜனவரி மாதம் 20-ம் தேதியன்று டோக்கியோ ஒலிப்பரப்பில் பின்வருமாறு சொல்லப்பட்டது. "பெரிய கிழக்கு ஆசியா சமக்ஷேம திட்டத்தை நிறுவ ஜப்பானிய ஜாதியின் உயர்வுதான் முக்கியமான வேலையாகும்".

# யுத்தத்துக்குப்பின் உலக பத்திரம்.

டைம்ஸ் பத்திரிகை.

உலக க்ஷேமத்தைக் கோரும் ஒரு பொதுவான திட்டத்தை நிறுவுவதுதான் நேசதேசத்தாரின் முக்கியமான கொள்கை. இந்த லக்ஷியத்தை நேசதேசத்தார்கள் முக்கியமாக பெரிய வல்லரசுகளின் பரஸ்பர ஆலோசனையின் மூலம்தான் நிறைவேற்ற முடியும்.

பிரிடனுக்கு ருஷ்யாவுடனும், அமெரிக்காவுடனும் பாந்தவ்யமிருக்கிறது. அவ்விரு நாடுகளும் பிரிடனின் க்ஷேமத்தைக் கோருகின்றன. இந்த ஒன்றுபட்ட அக்கரைகளை அடிப்படையாகக்கொண்டு உலக க்ஷேமத்திற்கு நிறுவப்படும் திட்டங்களில் பிரிடன் அமெரிக்காவுடையவும் ருஷ்யாவினுடையவும் ஆதரவைப் பெறும். உலகச் சீர்திருத்த ஏற்பாட்டின்பொழுது பிரிடனுடைய பத்திரத்தை அது அலக்ஷியம் செய்யமுடியாது. அல்லது உலக சீர்திருத்த திட்டம் பூர்த்தியாகட்டுமென்று காத்துக்கொண்டும் இருக்கமுடியாது. இறுதி ஒப்பந்தங்கள் எவ்வகையாயினும் அவர்களுடைய சொந்த நாட்டின் பத்திரத்தையும் க்ஷேமத்தையும் கோரி அந்நாடுகள் ஒத்துழைக்கவேண்டுமென்று எண்ணும் வல்லரசுகள் தங்களுடைய சொந்த அலுவல்களை ஒழுங்குபடுத்தினால்தான் உலக ஒப்பந்தம் சுலபமாக பூர்த்தியாகிவிடும்.

பிரிடிஷ் ருஷ்ய நட்பு ஒப்பந்தத்தின் லக்ஷயம் இதுதான். நிறுவப்படும் சமாதான திட்டத்தில் தேசீய அக்கரைகளை பலப்படுத்தும் முறைகளும் அமைக்கப்படவேண்டும். உலக திட்டத்தில் ஒன்றுபட்டு அதைமட்டும்தான் போஷிப்பதென்றால் தனிப்பட்ட தேசங்கள் தன்னந்தனியே நிற்கும் நிலைமை ஏற்பட்டுவிடும். சர்வதேச சங்கம் இதற்கு படிப்பினையைக் கற்பிக்கிறது. சிதைவுற்ற சர்வதேச அமைப்பைப் பலப்படுத்த வேண்டுமானால் அதில் சர்வதேச பத்திரத்துக்குறிய சாஸ்வதமான சில சிலாக்கியமான சந்திலிக் கோர்வைகளிருக்கவேண்டும்.

பிரிடனின் பத்திரமும் க்ஷேமமும் பிரிடனுக்கும் சாம்ராஜ்ய நாடுகளுக்கும் ஐரோப்பாவின் மேற்குக் கடற்கரை நகரங்களுக்கும் உள்ள சம்பந்தங்களைப் பொருத்திருக்கிறது. 1940-ம் வருஷத்தில் பிரிடனின் யுத்த முயற்சிக்கு சாம்ராஜ்ய நாடுகள் உதவி செய்ததென்பது எதிரியின் தாக்குதலை பிரிடன் தன்னந்தனியாக நின்று சமாளித்தபொழுது அதிக முக்யவத்வமுள்ளவை. பிரிடன் வீழ்ச்சி பெற்றிருந்தால் சாம்ராஜ்ய நாடுகளும் அதன் பயனை அனுபவித்திருக்குமென்றும் சாம்ராஜ்ய நாட்டிலுள்ள பிரமுகர்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன் பிரிடனுக்குள்ள சம்பந்தங்களும் இதே லக்ஷியங்களை உடையவை. அவைகளின் பத்திரமும் நட்பும்தான் ஐரோப்பிய நடவடிக்கைக்கு ஆதாரமுள்ளவை. ஐரோப்பாவிலும் சுயேச்சை ஆளுகை உள்ள அநேக நாடுகள் யுத்த முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றன. இந்த ஒத்துழைப்பு சமாதான காலத்திலும் நிலைபெற்றிருக்க வேண்டியது அத்யாவசியமாகும்.

---

# இந்திய வீரர்களுக்குப் பாராட்டு.

விக்டோரியா கிராஸ் பதக்கத்தை சிலாக்கியமான தைரியசாலிகள்தான் பெறமுடியும்.

முக்கியமாக ஒன்பது இந்தியர்கள் இந்தப்பதக்கத்தைப் பெற்றார்கள். அவர்கள் பின்வருமாறு:—பிரெமிந்திரா ஸிங்க்தாபா பகத், ரிச்பால் ராம், செல்லுராம், பார்காஷ் சிங், லால் பகதூர்—காஜேகேல், நந்தசிங், அப்துல் ஹபீஸ், கமால்ராம்.

இவைகளில் கடைசி இருவர்களுக்கும் சமீபத்தில்தான் இந்தப்பதக்கம் வழங்கப்பட்டது. இந்த யுத்தத்தில் முதல் முதலாக அந்தப்பதக்கம் பெற்ற அப்துல் ஹபீஸின் கதை பின்வருமாறு:—

### இந்திய எல்லைச் சரகம்.

இம்பாலுக்கு வடக்கில் பத்துமைல் தூரத்தில் ஜப்பானியரின் தாக்குதலை சமாளித்து இந்தியாவைக் காப்பாற்ற முயன்றதில் ஜமேதார் அப்துல் ஹபீஸ் உயிர்துறந்தான். இந்த சம்பவம் ஏப்ரல் மாதம் 6-ம் தேதி நடைபெற்றது. அதன் உத்தியோகமுறை அறிவிப்பு பின்வருமாறு:—

"தாக்குவதற்குமுன் அவனிடமிருந்த படைகளைக்கூட்டி அவைகள் முறியடிக்க முடியாதவைகள் என்று அவன் சொன்னான். எதிரியின் தாக்குதல் கோரமாகயிருந்த போதிலும் அவனுடைய படைகள் உறுதியுடன் எதிர்த்துத்தாக்கியதால் எதிரி மற்றொரு பக்கத்திலிருந்த மலைச்சரிவு வழியாக ஓடிவிட்டான்.



"அவனுடைய உயிரையும் லக்ஷியம் செய்யாததும் எப்பாடு பட்டும் அந்தஸ்தானத்தைக் காப்பாற்றிவிட வேண்டுமென்று அவன் உறுதி கொண்டதும் எல்லோருக்கும் சிறந்த படிப்பினையாகும்.

"எதிரியைத் தாக்கும் நடவடிக்கையில் அப்துல் ஹபீஸுக்குக் காலில் காயம்பட்டது. யந்திர பீரங்கி பிரயோகத்தையும் பொருட்படுத்தாமல் அவன் தாக்கிவந்தான். அவனுக்கு மார்பில் பலத்த காயம் பட்டது.' அவன் இறக்கும் தருவாயில் பின்வருமாறு சொன்னான். 'நீங்கள் திருத்தியமைத்துக் கொள்ளுங்கள். நான் உங்களுக்குக் காபந்து செய்கிறேன்.' அதன் பிறகு அவன் உயிர்துறந்தான்."

### சிப்பாய் கமால்ராம்.

"இந்த 19 வயதுள்ள வீரர் இதாலியில் காரிநதியைத் தாண்டும்பொழுது புகழ் பெற்றார். மே மாதம் 12-ம் தேதியன்று கமால்ராம் தன்னந்தனியாகச் சென்று இரண்டு யந்திர பீரங்கி நிலயங்களை அழித்தான். மற்றொன்றை அழிக்க உதவியளித்தான். தன்னைக் கொல்ல முயற்சித்த ஜெர்மன் ஆபீஸரை சுட்டுக் கொன்றான். பத்துப்பேர்களைக் கைது செய்தான்.

"எதிரிகளின் கனமான நான்கு யந்திர பீரங்கிகள் நமது படைகளின் முன்னேற்றத்தைத் தடுத்தன. இந்த பீரங்கிகளை நொருக்கவேண்டியிருந்தது. கமால்ராம் அவைகளில் ஒன்றை அழிக்க முற்பட்டான். தன்னந்தனியாக முள்ளுக்கம்பிகள் வழியாக ஊர்ந்து சென்று பீரங்கி நிலயத்தைத் தாக்கி அதிலிருந்த பீரங்கியாளரைச் சனியனால் குத்திக்கொன்றான். அங்கிருந்த ஜெர்மன் ஆபீஸரையும் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றான்."

"மறுபடியும் மற்றொரு பீரங்கி நிலயத்தைத் தாக்கச்சென்றான். பீரங்கியாளரைக் கொன்றவுடன் மற்ற ஜெர்மானியர்கள் சரணடைந்தார்கள். அதன் வரலாறு பின்வருமாறு:—அவனுடைய தீரத்தினாலும், நடவடிக்கையினாலும், திடசித்தத்தினாலும் அவனுடைய படைகள் முன்னேறி முக்கியமான ஸ்தானத்தைப் பிடிக்க முடிந்தது. அவனுடைய விடாமுயற்சியும், தீரமும் நெருக்கடியான நிலைமையை சமாளித்து விட்டன."

---

# ஏற்ற இலாபந்தரத்தக்க முதலீடு.

1958-ம் வருஷத்திய அரசாங்க 100-க்கு 3 வட்டி கடன் பத்திரங்கள் 1944-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 15-ம் தேதி காலை 10-மணி முதல் விற்கப்படும். இது ஏற்றதோர் முதலீடு. எப்படியென்றால், சென்னை மாகாண வருஷாந்தர வரி வசூல் தொகையான ரூ. 30 கோடியும் இதற்கு ஈடாயிருக்கிறது. இப்போது பணம் எளிதில் கிடைக்கிறது. பணம் வைத்திருக்கிறவர்கள் யாருக்குக் கடன் கொடுக்கலாமென்று தேடியலைந்துகொண்டிருக்கிறார்கள். இந்தச் சமயத்தில் 100-க்கு 3 வட்டி கிடைக்கும் முதலீடு விரும்பத்தக்கதுதான். ஒரு முதலீடு ஏற்றதாகவும் விரும்பத் தக்கதாகவும் மட்டுமிருந்தால் போதாது. முதலீடு செய்கிறவர் மனம் திருப்தியடைகிறதற்கு இன்னும் பல அம்சங்கள் உண்டு. இந்தக் கடனுக்கு 100-க்கு 3 வட்டி என்பதே இதற்கு போதுமான சிபார்சாகும்.

கடன் வாங்கப்படும் தொகைகள் இலாபந்தரத்தக்க துறைகளிலேயேதான் செலவு செய்யப்பட வேண்டுமென்பது தான் சென்னை மாகாண அரசாங்கத்தின் கொள்கையாகும். இதையொட்டியேதான் கடன் வாங்கப்படுகிறது. இந்தியா அரசாங்கத்தார் சென்னை அரசாங்கத்திற்குக் கொடுத்திருக்கும் கடனுக்கு வட்டி வருஷத்திற்கு 100-க்கு $4\frac{1}{2}$. 1937-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 1-ம் தேதிக்கு முன்பு பலன் தரத்தக்க அசல் செலவுகளை முன்னிட்டு வாங்கப்பட்டவை, இந்தக் கடன்கள். இப்போது வாங்கப்படும் கடன் தொகை முழுவதையும் கொண்டு இந்தக் கடன் உளவடைக்கப்படும். அந்தக் கடனில் 164·54 லக்ஷந்தான் இன்னும் பாக்கியிருக்கிறது. அந்தக் கடன் 1937-38 முதல் அரை வருஷத்திற் கொருமுறை தவணையாகத் திருப்பிக் கொடுக்கப்பட்டுவருகிறது.

அரை வருஷத்திற் கொருமுறை திருப்பிக் கொடுக்கப்படும் தொகைகள் மட்டுமன்றி, 1942-43, 1943-44-ம் வருஷங்களில் 250·10 லக்ஷங்கள் முன் பணமாகக் கொடுத்திருக்கிறது. பாக்கியிருக்கும் தொகையை அரை வருஷத்தவணையாக ரூ. $25\frac{1}{2}$ லக்ஷம் வீதம் செலுத்திக்கொண்டே வந்தால், கடன் முழுவதும் உளவடைந்துவிடும். இந்தக் கடன்கள் முழுதும் தீர்ந்து போய்விட்டால், இந்த மாகாண வருவாயிலிருந்து இப்படிப்பட்ட பெருஞ்செலவுகள் இராது. இந்தக் கடனில் போடும் முதலுக்கும் பழுதில்லை. அதற்கு வட்டியும் காலா காலத்தில் வந்துகொண்டிருக்கும். ஆகையால் புத்திசாலிகளாயுள்ள முதலீட்டுக்காரர்கள், விரைவில் இதில் முதலீடு செய்வார்களாக!

## தேசீய சேமிப்புப் பத்திரங்கள்.

நல்ல வட்டி : பொருளும் பத்திரம்.

விவரம்.—ரூ. 10, ரூ. 50, ரூ. 100, ரூ. 500, ரூ. 1,000 எல்லா போஸ்டாபீஸுகளிலும் கிடைக்கும்.

12 வருஷத்தில் பூர்த்தியாகும். நடுவில் வேண்டுமானால் மூன்று வருஷத்துக்குப்பின் கூடிய தொகையை பெற்றுக்கொள்ளலாம்.

வட்டி :—4 1/6 சத விகிதம். வருமானவரி (இன்கம்டாக்ஸ்) கிடையாது. ரூ. 10 12-வருஷத்தில் ரூ. 15 ஆகிறது.

தேசீய சேமிப்பு பத்திரங்களின் மூலம் நீங்களும் சேமித்து இந்தியாவிற்கும் நல்ல செல்வமளிக்கிறீர்கள்.

**எதிர்காலத்தின் க்ஷேமத்தை இன்றே கோறுங்கள்.**

**தேசிய சேமிப்புப் பத்திரங்களை உடனே வாங்குங்கள்.**

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

### புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

#### பிரஸங்கம் 211. (3-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 19- 8-44 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | 23- 8-44 | C. S. M. பள்ளிக்கூடம் | ... காலை | 10.00 |
| 20- 8-44 | ரூக்காடு | ... ,, | 7.00 | ,, | ராணி பெண் பாடசாலை | ... ,, | 10.45 |
| ,, | கோட்டைக்காடு | ... ,, | 7.30 | ,, | மழையூர் | ... மாலை | 7.00 |
| 21- 8-44 | தென்னதிரயன்பட்டி | ... ,, | 7.00 | ,, | கரம்பக்குடி | ... ,, | 7.30 |
| ,, | விசலூர் | ... ,, | 7.30 | 24- 8-44 | வாளரமாணிக்கம் | ... ,, | 7.00 |
| 22- 8-44 | ராமச்சந்திரபுரம் | ... ,, | 7.00 | ,, | வம்பல் | ... ,, | 7.30 |
| ,, | ராயவரம் | ... ,, | 7.30 | 25- 8-44 | விராலிமலை | ... ,, | 7.00 |
| 23- 8-44 | காலேஜ் A இங்கிலீஷ் | ... காலை | 11.00 | ,, | பொருவாய் | ... ,, | 7.30 |
| ,, | காலேஜ் B தமிழ் | ... ,, | 11.00 | | | | |

#### பிரஸங்கம் 212. (4-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 26- 8-44 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | 30- 8-44 | C. S. M. பள்ளிக்கூடம் | ... காலை | 10.00 |
| 27- 8-44 | கீரப்பழனி | ... ,, | 7.00 | ,, | ராணி பெண் பாடசாலை | ... ,, | 10.45 |
| ,, | ஆதனூர் | ... ,, | 7.30 | ,, | காரத்தாமலை | ... மாலை | 7.00 |
| 28- 8-44 | புத்தாம்பூர் | ... ,, | 7.00 | ,, | உப்பிலியக்குடி | ... ,, | 7.30 |
| ,, | வைத்திக்கோவில் | ... ,, | 7.30 | 31- 8-44 | அண்டக்குளம் | ... ,, | 7.00 |
| 29- 8-44 | வடவாளம் | ... ,, | 7.00 | ,, | இள்ளனூர் | ... ,, | 7.30 |
| ,, | சம்மட்டிவிடுதி | ... ,, | 7.30 | 1- 9-44 | கொடும்பாளூர் | ... ,, | 7.00 |
| 30- 8-44 | காலேஜ் A இங்கிலீஷ் | ... காலை | 11.00 | ,, | விராலூர் | ... ,, | 7.30 |
| ,, | காலேஜ் B தமிழ் | ... ,, | 11.00 | | | | |

#### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 19— 8—44 | வெட்டன்விடுதி. | 26— 8—44 | திருமெய்யம். |
| 20— 8—44 | விராச்சிலை. | 27— 8—44 | தீத்தான்விடுதி. |
| 22— 8—44 | குடுமியாமலை. | 29— 8—44 | பேராம்பூர். |
| 24— 8—44 | ஆலங்குடி. | 31— 8—44 | கீழாநிலை. |
| 25— 8—44 | புதுக்கோட்டை. | 1— 9—44 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—24-8-44.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1944-ம் வருஷம் ஆகஸ்டுமீ 26உ [ந. 212

தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CCXII.

## பாரிஸ் விடுவிக்கப்பட்டது.

## மார்செயில்ஸ் விழுந்தது.

## ருமேனியா நேசதேசக் கக்ஷியில் சேர்ந்துவிட்டது.

### யுத்தத்துக்குப்பின் உலக புனரமைப்பு.

### (3) திட்டம்.

யுத்தத்துக்குப்பின் உலகத்தின் சமாதானத்தையும், க்ஷேமத்தையும் நிலைநாட்ட உலகம் திட்டம் போட்டுவருகிறது. சீர்திருத்தமேற்படுவதற்கு புத்திசாலித்தனமான திட்டமும் ஜாக்கிரதையான இயக்கமும், திட்டத்தை உபயோகமுள்ள வரையில் அமுல் நடத்துவதும், முக்கியமாகும்.

இந்தியாவில் உத்தியோகபற்றற்ற வரையில் அநேக திட்டங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. காங்கிரஸ் கோஷ்டியைச் சேர்ந்த எட்டு பிரபல முதலாளிகள்—அவர்களில் பிரமுகர்களான G. D. பிர்லா, J. R. D. தாதா, கஸ்தூரிபாய் லால்பே, முக்கியஸ்தர்கள்—பம்பாய் தேசிய அபிவிருத்தி திட்டத்தை நிறுவியிருக்கிறார்கள். அதன் விவரங்களைப் பூர்த்திசெய்ய அவர்கள் பிரிடனுக்குச் சென்று வருவார்கள்.

ஜனங்களின் வாழ்க்கை முறைகளை—அதாவது புஷ்டிப்பொருள்—ஆடை, வாசஸ்தலம், சுகாதாரம், முதலியவற்றை உயர்த்துவது, வாழ்நாளை சுகமாகக்கழிக்க வசதிகளை ஏற்படுத்துவது, கலைகளை வளர்ச்சிக்க சாதனங்களைக் கண்டுபிடிப்பதுபோன்ற அலுவல்களில் அவர்கள் ஈடுபடுவார்கள். இது 15 வருஷ திட்டம்.

இந்த திட்டத்திற்கு 10,000 கோடி ரூபாய்கள் செலவாகுமென்றும், நடை முறையில் இது இரட்டித்து விடுமென்றும் சொல்லப்படுகிறது. இந்தப்பொருளை சேமிப்பு மூலமும், ஸ்டெர்லிங் இருப்புமூலமும், கடன்மூலமும், மற்ற வகைகளிலும் சேமிக்கவேண்டும்.

இது மிகவும் பெரிய பிரயத்தனம். இதை நிறைவேற்றுவதற்கு தேசியப் பொருளாதார மும் தனிப்பட்டவர்களின் வருமானமும் 15 வருடங்களுக்குள் இரட்டிக்கவேண்டும். இதே சமயத்தில் ஜனத்தொகையும் வருஷத்திற்கு 5 மிலியன் வீதம் அதிகரித்துவரும்.

பத்து வருஷத்தில் 15,000 கோடி ரூபாய் செலவில் தேசத்தின் அபிவிருத்தியைக் கோரும் ஒரு திட்டத்தை முஸ்லிம் லீகும் கொண்டுவந்திருக்கிறது. இந்தியத் தொழிலாளர் சமஷ்டியும், பொதுவுடைமைக் கொள்கையின்மூலம் இந்தியாவின் க்ஷேமத்தை அபிவிருத்தி செய்ய திட்டம் போட்டிருக்கிறது.

மத்திய மாகாண, ஸமஸ்தான நிர்வாகங்களும் சும்மாயிருக்கவில்லை. மத்திய நிர்வாகம் உத்தியோக முறையில் பிரமுகர்களையும், உத்தியோகப்பற்றற்றவர்களையும் அனுப்பி பம் பாயிலுள்ள 8 பிரமுகர்களையும் கலந்து தகவல்களைச் சேகரித்து வருகிறது. அதன் உத்திரவின் படி மிஸ்டர் ஜான் ஸார்ஜண்ட் 40 வருஷ திட்டமாகவும், 312 கோடி ரூபாய்கள் செலவிலும் இந்தியாவின் கல்வி அபிவிருத்தி திட்டத்தை நிறுவியுள்ளார். ஜோஸப் போர் 50 வருஷ திட்டமாக சுகாதார அபிவிருத்தி திட்டத்தைக்கொண்டு வந்திருக்கிறார்கள். விவசாயம், காட்டு இலாகா, மீன் வியாபாரம் முதலியவற்றை அபிவிருத்திசெய்யவும், 10 வருடங்களில் 400,000 மைல்கள்கொண்ட ரஸ்தாவை அமைக்கவும், தொழிலபிவிருத்திக்குரிய ஐச்வர்யங்களை அதிகரிக்கவும் திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. ரெயில்வே சங்கமும், யுத்தத்துக்குப் பின் உலக புனருத்தாரணமும், அபிவிருத்தி முதலியவற்றிற்கான ஏற்பாடுகளைச் செய்திருக் கிறது. தபால், தந்தி இலாகாவும், விமான இலாகாவும் இந்தியாவில் 10,000 மைல்கள்கொண்ட பொதுஜன ஆகாய மார்க்கத்தைத அமைக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள்.

அர்சாங்கத்தாரின் ஐந்து வருஷ திட்டத்தை நிறைவேற்ற 1,000 கோடி ரூபாய்கள் செலவாகும். பொருளை வரிவிதிதம், கடன், தனிப்பட்டவர்கள் முதலீடுமூலம் திறட்டு வதென்று உத்தேசித்திருக்கிறார்கள்.

எல்லா திட்டங்களையும் ஒன்றுபடுத்தவும் அவைகளில் பூரா கவனத்தையும் செலுத் தவும் இந்தியா கவர்ன்மெண்டார் வைஸ்ராயின் நிர்வாக சபையின் அங்கத்தினர் ஒருவரின் அமுலுக்குட்பட்டு திட்டம் போடுவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் ஒரு இலாகாவை அமைத்திருக்கிறார்கள். "அனுபவம் வாய்ந்த தொழிலாளியான ஸர். அர் தேஷிர் டாலால் இந்த ஸ்தானத்தை வகிக்கும்படி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

திட்டங்கள் நீண்ட காலத்துக்கும் குறுகிய காலத்திற்கும் பொருந்தக்கூடியவை. யுத்தத்திலீடுபட்டிருக்கும் 2 மிலியன் ஜனங்கள் யுத்தத்துக்குப்பின் இந்தியாவுக்கு வந்து விடுவார்கள். மேலும் யுத்த முடிவில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலையில் லாமல் போய்விடும். அவர்களுக்கு வேலை கொடுக்கவேண்டும். அவர்களைப் போஷிக்க வேண்டும். நிலத்தின் விளைவை அதிகப்படுத்தவேண்டும். புதிய நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவரவேண்டும். விவசாய அபிவிருத்தி திட்டத்தை நிறுவும்பொழுது நிலத்தின். செழிப்புக்குறைந்துவிட்டதென்றும், அதைச்சீர்படுத்துவது ஏழ்மைத்தனமுள்ள விவசாயியின் சக்திக்கு மீறியதென்றும் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். இப்பொழுது நடைபெறும் சாகுபடி வாழ்க்கைக்குத்தான் போதுமானது. அதுவும் சிறந்த முறையில் நடைபெறவில்லை. அரசாங்கத்தாரின் அமுலுக்குட்பட்ட கூட்டுறவு நடவடிக்கை அவசியமாகும்.

மேலும் மனித பிரயாசைக்கும் யந்திர சக்திக்குமுள்ள வித்தியாசத்தையும் கவனிக்க வேண்டும். நாம் ஒன்றையும் அதிகமாக ஆதரிக்கவில்லை. இரண்டும் விவசாய அபிவிருத் திக்கு அவசியமானவை. இந்தியாவில் யந்திர சாதனத்தை உபயோகித்து அறுவடையை அதிகரித்துக் கொள்ளலாம். விவசாயிகளுக்குத் தகுதியான அலுவல்களைக்கண்டு பிடிக்காத வரையில் அவர்களை வெளியேற்றுவது பிரயோஜனப்படாது. அவர்கள் சோம்பேறிகளாகவும் ஆகிவிடுவார்கள். இந்தியாவின் கிராமவாசிக்கு உணவுப்பொருள்களையும் அலுவலையும் நாம் வழங்கவேண்டும்.

தொழிலபிவிருத்தி ஒரு முறையில் சிறந்ததென்றாலும் விவசாயத்துக்கு அது மாற்றல்ல. தொழிலபிவிருத்திமூலம் பம்பாய் போன்ற புதிய நகரங்கள் தோன்றலாம். ஆகிலும் அழகிய கிராமங்கள் காலியாகி அழிந்தும் போகலாம்.



# வார யுத்தச் செய்திகள்.

## (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 14—8—44 (திங்கட்கிழமை). | ருஷ்யர்கள் ஆசோவியக்கைப் பிடித்தார்கள். நேசதேச ரோந்துப்படைகள் டிடிம் ரஸ்தா வழியாக இந்தோ பர்மா எல்லையை அடைந்தன. |
| 15—8—44 (செவ்வாய்க்கிழமை). | நேசதேசப்படைகள் பிரான்ஸின் தெற்குக் கரையிலிறங்கின. நேசதேச வெடிவிமானங்கள் பார்மோஸா பேரிலும், ஹால்மேஹராபேரிலும் வெடிகுண்டுகளைப் பொழிந்தன. |
| 16—8—44 (புதன்கிழமை). | நேசதேசப் படைகள் நார்மண்டியில் பாலையப் பிடித்தன. ருஷ்யர்கள் விஸ்டுலாநதிக்கரையிலுள்ள சாண்டோமியர்ஸுக்குள் ஊடுருவிச்சென்றார்கள். |
| 17—8—44 (வியாழக்கிழமை). | நேசதேசப்படைகள் வட பிரான்ஸில் சார்டர்ஸ், ஆர்லியன்ஸ், ட்ரூக்ஸ் முதலிய இடங்களைக் கைப்பற்றினார்கள். |
| | தெற்கு பிரான்ஸில் 20-மைல்கள் முன்னேறின. |
| | இந்தியாவிலிருந்து ஜப்பானியர்களை பூண்டில்லாமல் நேசதேசப்படைகள் துறத்தியடித்தன. |
| 18—8—44 (வெள்ளிக்கிழமை). | நேசதேசப்படைகள் நார்மண்டிக்கான போரில் வெற்றி பெற்றார்கள். |
| | நேசதேசப்படைகள் லேன் என்ற பிரெஞ்சு கடற்படை தளத்தைத் துணித்துவிட்டன. ருஷ்யர்கள் வார்ஸாவில் 30,000 ஜெர்மானியர்களை வளைத்துக்கொண்டார்கள். |
| 19—8—44 (சனிக்கிழமை). | நேசதேசப்படைகள் பாரிஸுக்குச் சமீபத்திலுள்ள வெர்ஸேல்ஸை அடைந்தார்கள். |
| | நேசதேசப்படைகள் பர்மாவில் மாண்டலேயை நோக்கி மறுபடியும் முன்னேறத்துவங்கின. |
| 20—8—44 (ஞாயிற்றுக்கிழமை). | நேசதேசப்படைகள் பாரிஸுக்கு வடக்கிலும் தெற்கிலும் ஸெயின் நதியைத்தாண்டின. |
| | பால்டிக் நடை பாதையில் கடும்போர்கள் நடைபெறுகின்றன. வளைக்கப்பட்ட படைகளை விடுவிக்க ஜெர்மனி கடுமையாக பிரயத்னம் செய்துவருகிறது. சூபர் பறக்கும் கோட்டை விமானங்கள் ஜப்பானை ஏழு மணிகளுக்குள் இரண்டுதடவை தாக்கின. |
| 21—8—44 (திங்கட்கிழமை). | நேசதேசப்படைகள் பாரிஸின் சுற்றுப்புறத்தை அடைந்தன. |
| | நேசதேசப்படைகள் தெற்கு பிரான்ஸில் லேனுக்குள் பிரவேசித்தன. |

## (B)-செய்திச் சுருக்கம்.

**பிரான்ஸ்.—**

**பாலெப்பகுதி.**—பாலெ பிடிபட்டது. பாலெ-ஆர்கெண்டான் இடைவெளி மூடப்பட்டது. பாலெப்பகுதியில் இரண்டு ஜெனரல்கள் உள்பட 30,000 ஸோல்ஜர்கள் கைது செய்யப் பட்டார்கள். கிழக்கில் ஸெயின் நதிக்கும், மேற்கில் கால்வாயிக்கும் தப்பி ஓடக்கூடிய மார்க் கங்கள் மூடப்பட்டன.

கீழ்க்கண்ட இடங்கள் பிடிபட்டன.

புடாங்கஸ், காண்டி, டிஞ்செப்ராவ், பிளேர்ஸ், கொச்சவில்லி, டாம்பிராண்ட், கெர், லா பெர்டாமேஸ் யவ்ரானய்ஸ்.

**பாரிஸ்.**—பிரெஞ்சு விடுதலைப் படைகள் நான்கு நாட்கள் போர் செய்தபின் பாரிஸை விடுவித்தன. [யுத்தக் குறிப்பின் 10-வது பக்கத்தைப் பார்க்கவும்.—பத்திராதிபர்.]

நேசதேசப் படைகள் கீழ்கண்ட இடங்களைப் பிடித்தன. சார்டர்ஸ், ஆர்லியன்ஸ், ட்ருக்ஸ், ஸெயிண்ட் ஆண்ட்ரி டெல்யூரி, நோஜன்கோர்ட், வெர்ன்யூவில், சென்ஸ், பிதிவியர்ஸ், எடாம்ஸ், லிஸியூக்ஸ், ஹெஸல்செட், வில்லர்ஸ்-ஸூர்-மெர், கிரைனேபின்.

கனடிய சேனாதிபதியின் கீழ் போர் புரியும் பெல்ஜியத் துருப்புகள் ட்யூவில்லி, காபூர்கைப் பிடித்தன. லெமான்ஸிலிருந்து தெற்கு முகமாகச்சென்ற அமெரிக்கப்படைகள் டூர்ஸைத்தாண்டிச்சென்று வெண்டோமைப் பிடித்தன.

**போர்டோ.**—அமெரிக்கப்படைப்பகுதி நாண்டிஸுக்குத் தெற்கிலும் போர்டோவுக்குக் கிழக்கிலுமுள்ள ஆன்கோலிம் வழியாக ஸ்பானிஷ் எல்லைச் சரகத்தை நோக்கிச்செல்லுகிறது. இப்பொழுது போர்டோ பிடிபட்டது.

போர்டோவுக்குத் தென் மேற்கில் ஆர்கெசானில் நேசதேசப் படைகள் இறங்கி விட்டன என்று ஸ்பெயினிலிருந்து சில தகவல்கள் கிடைத்திருக்கின்றன. இது ஊர்ஜிதமாகவில்லை.

பிரெஞ்சு உள்நாட்டுப் படைகள் ரோன் நதிக்கும், கிரெளன் நதிக்கும் இடையிலுள்ள 14 இடங்களைப் பிடித்தார்கள்.

**தெற்கு பிரான்ஸ்.**—நீலன் பிடிபட்டது. நேசதேசப் படைகளின் முன்னணி மார்செல்ஸுக்கு 3 மைல்களுக்குள் வந்து விட்டன.

கீழ்கண்ட இடங்கள் பிடிபட்டன.

**டூலன் பிரதேசம்.**—சான்டிரொபெஸ், சான்மாக்ஸிமென், ஸெயின்ட் ராபெல், லா லாவான்டூ, லா ம்யூலி, லக்லார்க், கொலார் பிரியர்ஸ், லாநெபொலி, டிராகுயிக்னன், விடாபன் பெஸலி, சூயர்ஸ், ஹெயர்ஸ்.

**மார்செயில்ஸ் பிரதேசம்.**—சோளியஸ், பாண்ட், லா ரோகல் ருஸ்ஸென், ஸெயிண்ட் காரியூல்ட், பிரிக்னோல்ஸ், வின்ஸ், ஸாலர்னிஸ், வயிஎன் பிராவின்ஸ்.

**ருஷ்யா.**—ருஷ்யர்கள் ருமேனியப் போர்முனையில் இரண்டு இடங்களில் புதிய தாக்குதலைத் துவக்கியிருக்கிறார்கள். ஒரு இடத்தில் கருங்கடற்கரையிலுள்ள கான்ஸ்டன்ஸாவுக்குப் போகும் வழியிலுள்ள ஜேஸன் என்ற முக்கியமான ருமேனிய நகரம் பிடிபட்டது. டெர்குருமாஸும் அககெனியும் விழுந்தன. மற்றொரு முனையில் காசேனியும் டாபேரினேவும் பிடிபட்டன.

**கிழக்குப் பிரஷ்ய முனை.**—ஜெர்மனி மிடாலவையும் டுகுமையும் திரும்பிப் பிடித்தது. வடக்கு லித்வேனியாவில் சியாயுலியே, எஸ்தோனியாவில் டார்பாட் டைச் சுற்றிக் கடும்போர் நடைபெறுகிறது.

ருஷ்யர்கள் எஸ்தோனியாவில் பைல்வா, வியூஸு, ரூபின் முதலிய இடங்களைப் பிடித்தார்கள்.

ஜெர்மன் வெற்றிகள் ருஷ்யர்களின் முன்னேற்றத்தை பிரயோஜனமற்றதாகச் செய்து விடும்போல் தோன்றுகிறது.

வார்ஸாவுக்கான போர் நடைபெறுகிறது.

**இதாலி.**—பிளாரென்ஸ் பூராவும் விடுவிக்கப்பட்டது. நகரத்துக்குக் கிழக்கிலும் மேற்கிலும் ஆர்னோ நதியை படைகள் தாண்டிவிட்டன. எட்ரியாடிக் பகுதியில் காசினோவுக்கும் மெடாடோ நதிகளுக்கும் இடையில் நேசதேசப்படைகள் முன்னேறி வருகின்றன.

**தூரக் கிழக்கு.**—ஜப்பானியப் படைகள் ஹால்மாஹேராவிலிருந்து வெளியேறுகின்றன. அமெரிக்க சூபர் பறக்கும் கோட்டைகள் ஜப்பானிலுள்ள கியூஷு பேரிலும் மேற்கு சொகு கோட் பேரிலும் பட்டப் பகலில் 7 மணி நேரத்திற்குள் இரண்டு தடவை வெடிகுண்டுகளை



வீசின. அங்கு தொழிற்சாலைகளுள்ள சுகோகாவும், யாவாடாவும் தாக்கப்பட்டன. எதிர்ப்பு பலஹீனமாக இருந்தது. 15 ஜப்பானியப்போர் விமானங்கள் அழிக்கப்பட்டன. 13 அநேகமாக நாசமாகியிருக்கலாம். 12 பழுது பட்டன. முதல் தாக்குதலில் நேசதேசத்தாருக்கு நான்கு விமானங்கள் நஷ்டம், இரண்டாவது நடவடிக்கையில் ஒரு விமானம்கூட நஷ்டமில்லை.

**சைனா.**—யாங்ட்டீஸ் நதியிலுள்ள சீனப்படைகள் ஹாங்கோவுக்கு வடக்கிலுள்ள இச்சாங் என்ற ஜப்பானியத் துறைமுகத்தைத்தாக்க முயலுகிறார்கள். பர்மா ரஸ்தாவிலுள்ள லுங்கிங்குக்குத் தென்கிழக்கிலுள்ள லோடங்போவை சீனப்படைகள் தாக்கிப் பிடித்தன.

**பர்மா.**—காபா பள்ளத்தாக்கிலிருந்து பர்மாவிலுள்ள சிண்ட்வினை நோக்கி டாமு-சிட்டாங் வழியாகவும், டாமுவுக்கு வடகிழக்கு முகமாகவும் நேசதேசப் படைகள் முன்னேறுகின்றன. 14-வது சேனை பர்மாவுக்குள் ஒரு மைலிலிருக்கும் குயியம் என்ற நகரத்தை ஆக்கிரமித்து விட்டது.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**13—8—44.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—பெரும் ரஸ்தாக்கள், ரஸ்தா சந்திப்புகள்—ஸீனின் (Seine) இரு மருங்கும்.

ரயில் பாலங்கள்.—பிரோனி (Feronne), பொடார் (Beautor), டோலென்ஸ் (Doullens), செரிஸி (Cherisy).

ரயில் சாதனங்கள்.—கார்பெயல் (Corbeil).

பீரங்கி ஸ்தாபனங்கள்.—பலேஸ் (Falaise) பிரதேசம்.

யூ-படகு விடுதிகள்.—பிரெஸ்ட் (Brest).

எண்ணெய்க் கிணறு டெப்போக்கள்.—போர்டோ (Bordeaux).

நீராவி யந்திரங்கள், ரயில் வண்டிகள், மோட்டார்ப் போக்குவரத்துகள்.—வடமேற்கு பிரான்ஸ், மத்திய பிரான்ஸ் (Central France).

டாங்கிகள், மோட்டார் போக்குவரத்துகள், துருப்பு முகாம்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

பாலங்கள், ராணுவ ஸ்தாபனங்கள்.—தென் பிரான்ஸ் (Southern France).

சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

**இதாலி (Italy).**

போக்குவரத்துகள், துருப்புகள்.—வடக்கு இதாலி (Northern Italy).

**ருஷ்யா (Russia).**

(22 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

விமான நிலயம் ஸ்தாபனங்கள்.—ஹால்மஹேரா (Halmahera).

**பர்மா (Burma).**

எதிரி சைனியங்கள், துவியல்கள், படகுகள்.—அரக்கான் (Arakan), மாயூ (Mayu), சிண்ட்வின் (Chindwin), காபா (Kabaw) சமவெளி.

ரயில்வே லயன்கள், பாலங்கள்.—மாண்டலே (Mandalay), இண்டா (Indaw).

வண்டிகள்.—மத்திய பர்மா (Central Burma).

**14—8—44.** (திங்கட்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—இலக்குகள்—லட்விக்ஷாபன் (Ludwigshafen), மான்ஹீம் (Mannheim), ஷான்டோபன் (Sandhofen), செடர்டிங்கென் (Echterdingen).

விமான நிலயம்.—கிழக்கு பிரான்ஸ் (Eastern France), வடகிழக்கு பிரான்ஸ் (N. E. France).

பாலங்கள்.—பாரிஸுக்கு வடக்கு (North of Paris).

ரயில்வே தளங்கள்.—பிரான்ஸிற்கு மேற்கு (W. of France).

ஸ்தாபனங்கள்.—பிரான்ஸின் தென்கரை (South coast of France).

எதிரி வண்டிகள், டாங்கிகள், துருப்புகள்.—பலேஸ் (Falaise).

இரவு.—பேர்லின் (Berlin).

சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.

துறைமுகம்.—மார்ஸேல்ஸ் (Marseilles).

**இதாலி (Italy).**

துறைமுகஸ்தாபனங்கள்.—கப்பல்கள் ஜினோவா (Genoa).

**ருஷ்யா (Russia).**

(29 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

எதிரிசைனியங்கள்.—ஹால்மஹேரா (Halmahera).

**பர்மா (Burma).**

இலக்குகள்.—சிண்ட்வின் நதி (Chindwin)-யிலுள்ள மாலெபக் (Mawlaik) முதல் மிங்கின் (Mingin) வரை.

ஜப்பானியமுகாம்கள், விடுதிகள்.—டிடிம் (Tiddim) ரஸ்தா.

துருப்புகள், ஸப்ளைகள் —மியோதிட் (Myothit), நாலாங் (Nalong).

**15—8—44.** (செவ்வாய்க்கிழமை).

ஜேர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

(29 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன. 24 நேசநேச விமானங்கள் காணப்படவில்லை).

பகல்.—ஜேர்மன் விமான நிலயங்கள்.—பெல்ஜியம் (Belgium), ஹாலந்து (Holland), ஜெர்மனி (Germany).

ஜேர்மன் யுத்தக் கப்பல்கள்.—கிரோண்டி (Gironde).

பாலங்கள், ரயில்வே ஜங்ஷன்கள்.-பிரான்ஸ் (France).

கப்பல்கள், துறைமுக ஸ்தலங்கள்.—பிரெஸ்ட் (Brest).

விமான நிலயங்கள்.—பிரான்ஸ் (France).

ரயில்வே தளங்கள்.—செய்ன்டிஸ் (Saintes).

ரஸ்தா, ரயில் இலக்குகள்.—ஸீனின் (Seine) இருகரையிலும்.

எதிரி துருப்புகள், பீரங்கிகள், டாங்கிகள், மோட்டார் போக்குவரத்துகள்.—பலேஸ் (Falaise) வழியாய் பின்வாங்கும் படைகள்.

எதிரி தற்காப்புகள், போக்கு வரத்துகள்.—தென் பிரான்ஸ் (South France).

இரவு.—விமான நிலயம்.—வாலென்ஸ் (Valence).

பேர்லின்.—(Berlin).

கீல்.—(Kiel), ஸ்டெட்டின்.—(Stettin).

**இதாலி (Italy).**

எதிரிப் போக்குவரத்துகள்.—வட இதாலியில் யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்,

**ருஷ்யா (Russia).**

(66 ஜெர்மன் விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—ஹால்மஹேரா (Halmahera).

ஜப்பானியதளம்.—கரோலைன்ஸிலுள்ள டிரக் (Truk).

துறைமுகம்.—பார்மோஸாத் துறைமுகத்திலுள்ள டாகோவா (Takao).

**பர்மா (Burma).**

ரயில்வே ஸ்டேஷன் தளங்கள்.—யுவாடங் (Ywantung).

மோட்டார் போக்குவரத்துகள், ஜப்பானிய சைனியங்கள், படகுகள்.—சிண்ட்வின் (Chindwin)பிரதேசம்.

இலக்குகள்.—ஹாபின் (Hopin)முதல், நாபா (Naba)வரை.

ரயில்வே ஜங்ஷன்.—யமேதின் (Yamethin).

இலக்குகள்.—பெகு (Pegu), கியாக்டோ (Kyaikto), மியோதிட் (Myothit).

**16—8—44.** (புதன்கிழமை).

ஜேர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல் :-விமானத் தொழிற்சாலைகள், இஞ்சின் சாலைகள், எண்ணெய்க் கிணறுகள், விமான நிலயங்கள், முக்கியமான ஸ்தாபனங்கள்.—கொலோன் (Cologne), ஆஸ்தீம் (Ostheim), வெயஸ்பாடென் (Veisvadan) பிராங்பர்ட் (Frankfurt).

விமானப்படை ஸ்டேஷன்.—ஜெர்மனி (Germany), ஹாலந்து (Holland), பெல்ஜியம் (Belgium).

எதிரி துருப்புகள், டாங்கிகள், மோட்டார் வண்டிகள்.—பலேஸ் (Falaise) வழியாய் பின்வாங்கும் படைகள்.

எதிரிஸ்தாபனங்கள்.—தென் பிரான்ஸின் தென்கரை.

இரவு.—துறைமுகங்கள்—கீல் (Kiel), ஸ்டெட்டின் (Stettin).

பேர்லின் (Berlin).

சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்கள்.

எண்ணெய்க் கிணறுகள்.—புலோயெஸ்ட்டி (Ploesti).

**இதாலி(Italy).**

போக்குவரத்துகள், துருப்பு முகாம்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

**ருஷ்யா (Russia).**

(63 எதிரி ஸைனியங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானியவிமான நிலயங்கள்.—மிதி (Miti), ஹால்மஹேரா (Halmahera).



**பர்மா (Burma).**

ஜப்பானியப் படைகள்.—டிடிம் (Tiddim) ரஸ்தாவில் பின் வாங்கும் படைகள், காபா (Kabaw) சமவெளி, சிண்ட்வின் (Chindwin).

ரயில்வேப் பாலம் படகுகள்.—ரங்கூன் வரை.

ரயில்வே தளங்கள், எதிரி சைனியங்கள்.—பின்பா (Pinbaw) முதல், நாபா (Naba) வரையிலும்.

விமான நிலயம்.—லாஷியோ (Lashio).

**17—8—44.** (வியாழக்கிழமை).

ஜேர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—ராணுவ ஸ்தாபனங்கள்.—புலோயெஸ்ட்டி (Ploesti).

விமான நிலயம்.—யூகோஸ்லாவியாவிலுள்ள நிட்சி (Nich).

ஜேர்மன் போக்குவரத்துகள்.—பலேஸ் (Falaise)இருபுறமும்.

ரஸ்தாமேல் செல்லும் சாமான் வண்டிகள்.—கிழக்கு பாரிஸ், டிஜான் (Dijon).

பாலங்கள்.—ரீஸலி நதிக்கரை.

தளவாடக் குவியல்கள்.-ரோயென் (Rouen).

இரவு.—சந்திப்புகள்.—ஸின் (Seine).

ரஸ்தா போக்குவரத்துகள்.—டிஜான் (Dijon), ஜெர்மனியிலுள்ள மான்ஹிம் (Mannheim).

சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்கள்.

**இதாலி (Italy).**

எதிரி போக்குவரத்துகள் இதர இலக்குகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசஙகள்.

ருஷ்யா ((Russia).

(98 எதிரி விமானஙகள் நாசமாக்கப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

நியூ கினியிலுள்ள கேயோ (Kaoe).

விமான நிலயம்.—லியானிங் (Lianing), ஹாரோக்கோ (Harokoe).

விமான நிலயம்.—ஹால்மஹேரா (Halmahera).

**பர்மா (Burma).**

படகுகள்.—சிண்ட்வின் (Chindwin), மாயு (Mayu), கலடான் (Kaladan), நதி.

எதிரி சைனியங்கள்.—மோகாங (Mogaung), மாண்டலே (Mandalay).

எதிரி விமானங்கள்.—லாஷியோ (Lashio).

**18—8—44.** (வெள்ளிக்கிழமை).

ஜேர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—தளவாட டெப்போ.—லிஸ்லி ஆடம் (Lisle Adam).

பிரேஞ்சு யுத்தக் கப்பல்.—ஸ்டார்ஸ்பர்க் (Strarsbourg), தூலன் (Touloon).

விமான நிலயங்கள்.—பிரான்ஸ் (France).

கப்பல்கள்.—பிரெஸ்ட் (Brest) துறைமுகம்.

ரயில்வே லயன்கள்.—பெல்ஜியம் முதல் பிரான்ஸ் வரை (Belgium to France).

ரஸ்தா போக்குவரத்துகள்.-நார்மண்டி (Normandy).

டாங்கிகள், துருப்பு முகாம்கள், போக்குவரத்துகள்.—ஸீன் (Seine).

இரவு.-துறைமுகம்.—ஜெர்மனியிலுள்ள பிரமென் (Bremen), தொடர்ச்சியான எண்ணெய்க் கிணறு ஸ்தாபனங்கள்.-ஸ்டேர்கிரேட் (Sterkrade) ஹோல்ட்டன் (Holten) ஜெர்மனியில் உள்ள கொலோன் (Cologne).

சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.

பேர்லின் (Berlin).

எண்ணெய்க் கிணறு.—பெல்ஜியத்திலுள்ள ரீம் (Rieme), ரயில்வே மத்திய ஸ்தலம் கன்னன்டிர் (Connantre).

**இதாலி (Italy).**

ரஸ்தா ரயில் இலக்குகள்.—வடக்கு இதாலி (N. Italy), யூகோஸ்லாவியா (Yugoslavia).

விமான நிலயம்.—யூகோஸ்லாவியா (Yugoslavia).

**ருஷ்யா (Russia).**

(48 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

**பர்மா (Burma).**

எதிரி போக்குவரத்துகள்.—டிடிம் ரஸ்தா, (Tiddim), காபா (Kabaw), சிண்ட்வின் (Chindwin).

எதிரி சைனியங்கள்.-டான்ஸாங் (Tonzang) கலிவா (Kalewa), யூனு (Yuna), காலிமியோ (Kalemyo).

ரயில்வே தளங்கள்.-யாமிதின் (Yamethin).

எதிரி சைனியங்கள்.—தாங்னி (Taungni), ஹாபின் (Hopin), பாமோ (Bhamo).

**19—8—44.** (சனிக்கிழமை).

ஜேர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.-எண்ணெய்க் கிணறுகள்.—புலோயெஸ்ட்டி (Ploesti).

எதிரி துருப்புகள், போக்குவரத்துகள், விமான நிலயங்கள், போக்குவரத்து சாதனங்கள், ஸப்ளை ஸ்தலங்கள்.—பிரான்ஸ் (France).

எதிரி துருப்புகள், டாங்கிகள், வண்டிகள்.—பலேஸ் (Falaise) இருபுறமும்.

எண்ணெய் சேமிப்புகள்.—போர்டோ (Bordeaux).

ஸப்மரீன் விடுதிகள்.–லாபாலிஸ் (Lapallice).

எண்ணெய் சேமிப்புகள்.–கெண்டி (Ghent)ற் கருகில்.

யுத்த தளவாடக் தவியல்கள், ரயில் ஸ்தாபனங்கள்.—பிரான்ஸில் (France) பல இடங்கள்.

இரவு.–பறக்கும் வெடிகுண்டு ஸ்தாபனங்கள்.–பாஸ் டி கலே (Pas De Calais) பிரதேசம்.

எதிரி படைகள்.—பலேஸிலிருந்து பின்வாங்கும் படைகள்.

**இதாலி (Italy).**

போக்குவரத்துகள், டாங்கிகள்.—இதாலியில் யுத்தம் நடக்கும் பிரதேசங்கள் எல்லாம்.

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய சைனியங்கள்.—ஹால்மஹேரா (Halmahera).

**பர்மா (Burma).**

ஒரு தகவலும் இல்லை.

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**14—8—44.** (திங்கட்கிழமை).

**பிரிடன் (Britain).**

சில இடங்கள்.—தென் இங்கிலாந்து (South England), லண்டன் (London).

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**15—8—44.** (செவ்வாய்க்கிழமை).

**பிரிடன் (Britain).**

லண்டன் (London) பிரதேசம்.

**ருஷ்யா (Russia).**

ருஷ்ய சைனியங்கள்.–பிராகா (Praga) பகுதி.

**தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**16—8—44.** (புதன்கிழமை).

**பிரிடன் (Britain).**

சில இடங்கள்.—தென் கிழக்கு இங்கிலாந்து (South East England), லண்டன் (London) பிரதேசம்.

**ருஷ்யா (Russia).**

ருஷ்ய சைனியங்கள்.–பிராகா (Praga) பகுதி.

**தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

**17—8—44.** (வியாழக்கிழமை).

**பிரிடன் (Britain).**

சில இடங்கள்.—தென்கிழக்கு இங்கிலாந்து (S. E. England).

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**18—8—44.** (வெள்ளிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**19—8—44.** (சனிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

சில இடங்கள்.—தென் இங்கிலாந்து (S. England), லண்டன் (London) பிரதேசம்.

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

**20—8—44.** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain).**

ஒரு தகவலும் இல்லை.

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

---

# யுத்தக் குறிப்புகள்.

---

## பாரிஸ் விடுவிக்கப்பட்டது. ருமேனியா நேசநேசந்நாருடன் சேர்ந்தது.

---

**நார்மண்டிக்கான போர்.** இந்தப் போர் வெற்றிகரமாக முடிந்தது. பாலே விழுந்தது. தப்பி ஓடும் மார்க்கத்தை நேசதேசப் படைகளும், பீரங்கிகளும் மூடிவிட்டன. இந்தக் கஷ்டத்துக்குட்பட்டு எஞ்சிய ஜெர்மன் படைகள் தப்பி ஓட முயலுகின்றன.

இதைப்பற்றி மாண்ட் காமரி பின்வருமாறு சொல்லுகிறார் :—

"நமக்கு மிகுந்த தொந்தரவளிக்கும் ஜெர்மன் படையை நாம் அழிக்கவேண்டுமென்று ஆகஸ்ட் மாதம் 1-ம் தேதியன்று சொன்னேன்.



"வடமேற்கு பிரான்ஸிலுள்ள ஜெர்மன் படைகளுக்கு பலமான தோல்வி கிடைத்தது. நார்மண்டிப் பகுதியிலுள்ள எதிரியின் வண்டிகளும், முஸ்தீப்புகளும் பலமாக அழிக்கப்பட்டு வருகின்றன. தப்பிப்போகும் எந்த ஜெர்மன் படையும் அநேக மாதங்கள் வரையில் போர் புரியக்கூடாத நிலைமைக்குட்படுத்தப்படும்.

"பிரான்ஸில் ஜெர்மன் ராணுவ அமுல் முடிவு பெறுவதற்கு வடக்கு பிரான்ஸில் ஸெயின் நதிக்குத் தெற்கில் ஏற்பட்ட வெற்றி ஆரம்பத்தைச் சூசிப்பிக்கிறது. நாம் இன்னும் அநேக போர்களை நடத்தவேண்டும். நாம் அவைகளைச் சுலபமாக நடத்திவிடலாம். இங்கு நமக்கு, உருவான, பூர்ணமான, முடிவான வெற்றி கிடைத்திருக்கிறது.

"நமக்கு ஈஸ்வரனின் கிருபையால் வெற்றி கிடைத்தது."

வி வி வி வி வி

**மற்ற காரணங்கள்.** நார்மண்டியில் ஜெர்மனிக்கு ஏற்பட்டிருக்கும் நிலைமைக்குக் காரணங்கள் எவை? என்று கேட்டு லெப்டினண்ட் ஜெனரல் ஸர் டக்ளஸ் ப்ரௌன்ரிக் பின்கண்ட மறுமொழியை விடுத்துள்ளார். "பான்ஸர் படைகள் சுலபமாகச் சலிக்க முடியாததற்குப் பலகாரணங்கள் உண்டு. முதலாவது கடல் மார்க்கமாக எண்ணெய் வாராதபடி பிரிடிஷ் கடற்படை ஐந்து வருஷங்களாக ஜெர்மன் கடற்கரையை முற்றுகைக்குட்படுத்தியது. பிரிடிஷ் வெடி விமானங்களும், அமெரிக்க வெடி விமானங்களும் ஜெர்மனியின் சேர்மான எண்ணெய் உற்பத்தியை அழித்திருக்கின்றன. நேசதேசக் கடற்படையும், விமானப் படையும் முற்றுகை மூலமாகவும், வெடி குண்டு வீச்சு மூலமாகவும் ஜெர்மனியின் சலன சக்தியை கொஞ்சம் கொஞ்சமாக அழித்துவிட்டன."

ஜெர்மானியர்கள் இப்பொழுது வண்டிகளை இழுக்கக் குதிரைகளை உபயோகப்படுத்தி வருவதால் ரஸ்தாக்களில் போக்குவரத்து நெருக்கடி உண்டாகிவிட்டது.

வி வி வி வி வி

**எதிரிக்கு ஏராளமான நஷ்டம்.** பாலெப் பகுதியில் 25,000 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். அநேகமாக 50,000 பேர்கள் கொலை செய்யப்பட்டிருக்கலாம். ஆகஸ்ட் மாத ஆரம்பத்திலிருந்து இது வரையில் ஜெர்மனிக்கு 1,09,575 பேர்கள் நஷ்டமாகியிருக்கிறது.

வி வி வி வி வி

**வதை.** இந்த வாரம் பூராவிலும் நேசதேச தரைப்படைகளும், பீரங்கிகளும், டாங்கிகளும், விமானப் படையும் பாலெப் பகுதியில் தற்காப்பு செய்துவரும் ஜெர்மானியர்கள் பேரில் குண்டுகளைப் பொழிந்தன. வார முடிவில் இடைவெளி தகர்க்கப்பட்டு மூடப்பட்டது. பாலெ, டிரன், ஆர்கெண்டான் வழியும் மூடப்பட்டது. நேசதேச விமானங்கள் காலநிலையின் சௌகரியத்துடன் ஜெர்மன் மோட்டார்கள் பேரில் குண்டுகளைப் பொழிந்தன. சென்ற வெள்ளிக்கிழமையன்று 3,800 போக்குவரத்து வண்டிகளும், 200 டாங்கிகளும் அழிக்கப்பட்டன. மூன்று நாட்களில் 5,000 வண்டிகளும், 300 டாங்கிகளும் அழிக்கப்பட்டன.

நார்மண்டியில் ஜெர்மன் எதிர்ப்பு குலைந்தது. ஸெயின் நதியை நோக்கி எதிரி பின் வாங்குகிறான். நேசதேசப் படைகள் பின்பற்றிச் செல்லுகின்றன.

வி வி வி வி வி

**தப்பி ஓடுவது.** ஜெர்மானியர்கள் தப்பி ஓடாமல் பாலெ இடைவெளியை ஏன் முன்னதாகவே அடைத்திருக்கக்கூடாதென்று குறை கூறுகிறவர்கள் கேட்கலாம். எதிராளி ஒருவன் உண்டென்பதை நாம் மறந்து விடக்கூடாது. எதிரி ஏராளமான உதவிப் படைகளைக் குவித்து படைகளை தப்பி ஓடும் வரையில் ஆர்கெண்டானிலுள்ள வழி அடைபடாதபடிக் காபந்து செய்துவந்தான்.

வி வி வி வி வி

**கஷ்டம் நிவர்த்தியாகவில்லை.** ஜெனரல் மாண்ட் காமரி சொன்ன பிரகாரம் "எதிரிகள் இன்னும் அபாயத்தை விட்டுச் சென்றுவிடவில்லை." ஜெர்மனி மற்றொரு தடவை வளைக்கப்பட்டுவிடும்.

கிழக்கிலுள்ள அவ்ராஞ்சஸ்ஸைப் பிடித்த அமெரிக்கப் படைகள் ஸெயின் நதியை பாண்டெனப்ளுக்கருகில் தாண்டி பாரிஸுக்குச் சமீபத்தில் வந்துவிட்டன. இந்த வார ஆரம்பத்தில் பாரிஸுக்குத் தெற்கிலுள்ள சார்ட்ரஸையும், ட்ருக்ஸையும் அவர்கள் பிடித்து ஸெயின் நதியின் கிளை நதியான யூரியில் ஒரு முன்னேறும் வாசலை ஸ்தாபித்தார்கள். பாரிஸுக்கு வடக்கில் ஸெயின் நதியிலுள்ள மாண்டிஸையும், வெர்னையும் அடைந்துவிட்டார்கள். பிரெஸ்ட் தீபகற்பத்திற்குள் சென்ற மற்ற அமெரிக்கப் படைகள் திரும்பி அழைக்கப்பட்டன. இந்தப் படைகளும் கிழக்கு நோக்கி முன்னேற ஆரம்பித்தன. அவைகள் ஆர்லியன்ஸுக்குள் புகுந்துவிட்டன. பிரெஞ்சுப் படைகளுடன் ஒன்றுசேர அவைகள் முன்னேறி வருகின்றன. ஜெர்மானியர்கள் ஸெயின் நதியைத் தாண்டி வரும்பொழுது மற்றொரு தடவை வலையில் அகப்பட்டு இகழ்ச்சி பெறுவார்கள்.

வி வி வி வி வி

**பாரிஸ்.** பாரிஸ் விடுவிக்கப்பட்டது. தலைநகருக்குள் நுழைந்த பிரெஞ்சுப் படைகள் ஜெர்மானியர்களுடன் யுத்த நிறுத்த உடன்படிக்கை செய்துகொண்டன.

நான்கு வருஷங்களுக்குமுன் பாரிஸ் ஜெர்மனிக்கு அடிபணிந்தது. ஜெர்மன் துருப்புகள் தெருக்களில் ரோந்து செய்தார்கள். அது முதற்கொண்டு ஆடவர்களும் ஸ்திரீகளும் விடுதலை பெரும் நாளை எதிர்பார்த்து பிரார்த்தனை செய்துவந்தார்கள்.

[குறிப்பு:—உடன்படிக்கையை மீறி ஜெர்மானியர்கள் பாரிஸில் போர் புரிந்து வருகிறார்களென்று கடைசியாகத் தகவல் கிடைத்திருக்கிறது—பத்திராதிபர்].

வி வி வி வி வி

**எதிர்ப்பு இயக்கம்.** நான்கு வருடங்களுக்கு முன் பிரான்ஸ் வீழ்ச்சியுற்றது. எதிர்த்துப் போராட உத்தேசித்த லியான் பிளமும், டலாடியரும் கைது செய்யப்பட்டார்கள். பிடேன் அவமானமான ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டான். லவால் பிரெஞ்சுக்காரர்களை ஜெர்மானியர்களிடம் அடிமை வேலை செய்யும்படி கட்டாயப்படுத்தினான்.

ஆகிலும் பிரான்ஸின் ஆன்மா அழியவில்லை. ஜெனரல் டிகால் எதிர்ப்புத் திட்டத்தை கீழ்கண்ட மேற்கோளுடன் ஆரம்பித்தார். "நாம் ஒரு சிறிய போரை இழந்துவிட்டோம்." ஆகிலும் யுத்தத்தில் வெற்றிபெறுவோம். பிரான்ஸில் எதிர்ப்பு இயக்கம் ஆரம்பித்தது. அந்தப் படைகள் இப்பொழுது பிரான்ஸின் மூன்றில் ஒரு பாகத்தை வசப்படுத்திவிட்டன. அவைகள் பாரிஸையும், பிரிட்டானியிலும் ஆல்ப்ஸிலும், பிரினீஸிலும், மாசிப்பிலுமுள்ள எட்டு இலாகாக்களையும் விடுவித்து விட்டன. 2,265 ஜெர்மானியர்களைக் கைது செய்தன. 2,236 பேர்கள் கொலை செய்யப்பட்டார்கள், அல்லது காயமுற்றார்கள்.

வி வி வி வி வி

**பிடேனும் லவாலும்.** பிடேன் கட்டாயத்தின்பேரில் விச்சியை விட்டு வெளியேறி விட்டான். அவனுடைய கதி எவ்விதமிருப்பினும் லவாலின் முடிவு நிச்சயம். அவனுக்கும் டீட்டுக்கும் வெகு காலமாக உள்ள விரோதங்கள் மறுபடியும் கிளம்பிவிட்டன. லவால் நடுநிலைமை வகிக்க பிரியப்படுகிறானென்று சொல்லப்படுகிறது. டீட்டைப்போல் அவன் துரோகம் செய்ய எண்ணவில்லையாம். பிதேயன் அவ்விதம் செய்திருக்கிறானாம். எதிர்த்து அடிக்காமல் நார்மண்டியைக் காலி செய்துவிட்டானென்று டீட் அவனைத் தாவிக்கிறான். நடுநிலைமை வகிப்பதாகப் பாசாங்கு செய்து நேசதேசத்தாரின் தயவை சம்பாதித்துவிடலாமென்று லவால் முயற்சி செய்து வருகிறான். இதுதான் குயிஸ்லிங்குகளின் நடைமுறை.

வி வி வி வி வி

**ரிவிராவில் படையெடுப்பு.** இந்தப் படையெடுப்பு இனிது முடிந்திருக்கிறது. நாம் திடீர் தாக்குதல் செய்தோமென்று சொல்லுவதற்கில்லை. படையெடுப்பு ஏற்படுமென்று வெகு நாட்களாகச் சொல்லப்பட்டது. ஆயிரக் கணக்கான கப்பல்கள் கடல் தாண்டிச் சென்றபொழுதும், படைகளிறங்கும்பொழுதும், கடற்கரை வழியாக உள்நாட்டிற்குள் செல்லும்பொழுதும் எதிரி தாக்க முன்வரவில்லையென்பது ஆச்சரியமாகயிருக்கிறது. கடற்கரையிலும் பலமான தற்காப்புகள் இல்லை.



ஏற்பட்ட எதிர்ப்பும் பலமாக இல்லை. வழக்கம்போல துறைமுகத்திலுள்ள தற்காப்புகள் கேன்ஸிலும், நைஸிலும் அழிக்கப்பட்டன.

ஜெர்மனியின் பலஹீனத்திற்கு இரண்டு காரணங்களைக் கூறலாம். (1) படையெடுப்பு ரோன் நதியின் முகத்துவாரத்துக்கு வெகு தூரம் மேற்கே நடைபெறுமென்று ஜெர்மனி எதிர்பார்த்தது. (2) தெற்குப் பகுதியிலுள்ள படைகளை நார்மண்டிப் போருக்கு உதவியாக அனுப்பியதால் தெற்குப் பிராந்தியத்தில் பலஹீனம் ஏற்பட்டது.

கோடர் ஆசூரில் இறங்கியபின் படைகள் லே லாவண்டின், ஸெயிண்ட் மாக்ஸிம், ஸெயிண்ட் டுரோபெஸ், ஸெயிண்ட் ராபேல், வாலென் ஸோல், பெர்டின்ஸ் முதலிய இடங்களைப் பிடித்தன. அவர்கள் டேலனைப் பிடித்தபின் மார்ஷெல்ஸைத் தாக்க முன்னேறுகிறார்கள்.

வி வி வி வி வி

**கிழக்குப் போர்முனை.** இங்கும் எதிரிகளுக்குத் தோல்விதான். கிழக்குப் பிரஷ்யாவில் 100 மைல்கள் கொண்ட போர்முனை ஏற்பட்டிருக்கிறது. இன்ஸ்டெர்பர்க் இடைவெளி என்று சொல்லப்பட்டதும், கௌனஸ்—கோனிக்ஸ்பர்க் ரஸ்தாவிலுள்ளதுமான மரியான்போல் பகுதியில் நடைபெற்ற போரில் எதிரி முறியடிக்கப்பட்டான். மாசூரியன் ஏரிகளுக்குத் தெற்கில் ருஷ்யர்கள் ஆசோவியக் என்ற கோட்டையைப் பிடித்தார்கள். அதற்கும் தெற்கில் ருஷ்யர்கள் பக் நதி ஓரமாக வார்ஸாவை நோக்கி முன்னேறுகிறார்கள். ஸீட்லிஸிக்கு வடக்கிலுள்ள ஜெர்மன் கப்பல் ஸ்தலம் தகர்க்கப்பட்டபின் வார்ஸாவுக்கு அபாயம் நெருங்கிவிட்டது. வார்ஸாவின் சுற்றுப்புறத்திலுள்ள பிராகாவில் கடும் போர் நடைபெறுகிறது.

வி வி வி வி வி

**ருமேனியா.** புதிய தாக்குதலின் காரணமாக ருமேனியா அச்சுக் கக்ஷியிலிருந்து விலகி நேசக்கக்ஷியில் சேர்ந்துகொண்டது.

வி வி வி வி வி

**இதாலி.** இதாலி போர்முனையாக மட்டுமில்லை. தெற்கு பிரான்ஸில் படையெடுப்பதற்கும், அது பாய்ச்சல் ஸ்தலமாக ஆகிவிட்டது.

பிளாரென்ஸின் வீழ்ச்சிக்குப்பின் வடக்கு இதாலியில் போர் மூளுமென்று தோன்றுகிறது. லம்பார்டி சமவெளிக்குச் செல்ல பிளாரென்ஸ் வாசற்படி போன்றது. நேசதேசப் படைகள் ஆல்ப்ஸ் மலைகளுக்குச் சென்றுவிட்டால் அங்கிருந்தே பிரான்ஸுக்கும், யூகோஸ்லாவியாவுக்கும் படைகளை அனுப்ப சௌகரியமேற்படும்.

வி வி வி வி வி

**பல்கேரியா.** பல்கேரியாவும் அச்சுக்கக்ஷியை விட்டு விலகிக்கொள்ள முயன்று வருகிறது. உண்மையில் பல்கேரியா போரில் ஈடுபடவில்லையென்றும், பெரிய வல்லரசுகளுக்குள் நடைபெறும் போரில் குறுக்கிடவில்லையென்றும், பார்லிமெண்டு சபையில் பல்கேரிய பிரதம மந்திரி பேசினார். பல்கேரியாவின் அயோக்கியத்தனத்தை நேசதேசத்தார்கள் நன்கு அறிவார்கள். பல்கேரியா ஜெர்மனிக்கு உதவியளித்து போரில் கலந்துகொண்டதென்று அவர்களுக்குத் தெரியவரும். ருஷ்யாவுடன் அது போர் தொடுக்கவில்லையென்ற காரணத்தினால் ருஷ்யாவின் ஸ்நேகத்தையும், அனுதாபத்தையும் பெற்றுவிடலாமென்று அது எண்ணியிருக்கிறதென்று தோன்றுகிறது. ஆகிலும் தற்போதய யுத்தத்தில் வார்த்தைகளில் ஒன்றுமில்லை. நடவடிக்கைதான் முக்யத்வமுள்ளவை.

வி வி வி வி வி

**ஜெர்மனியின் நிலைமை.** ஆகஸ்டு 17-ம் தேதி வெளிவந்த டைம்ஸ் பத்திரிகையில் ஜெர்மனியின் உள்நாட்டு நிலைமையைப்பற்றிப் பின்கண்ட விபரம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

"1918-ம் வருஷத்தில் ஜெர்மன் ஜெனரல்கள் தங்களுடைய இழச்சிக்கு பொதுமக்கள் தான் காரணமென்று குற்றம் சாட்டினார்கள். இப்பொழுது தோல்விகளுக்குக் காரணம் நாஸிக்கக்ஷியல்ல, தளகர்த்தர்கள் தான் காரணம் என்று முடிவு செய்ய நாஸிக்கக்ஷிக்காரர்கள் பகீரதப் பிரயத்தனம் செய்து வருகிறார்கள்.

"நாஸிகளின் நடவடிக்கைகளில் இந்த அபிப்பிராயம் குடிகொண்டிருக்கிறதென்பதற்கு இகழ்ச்சி பெற்ற லேயின் அறிக்கையே போதுமானது. ஸ்டாலின்கிராட்டிலிருந்து, வில்னு, வார்ஸா வரையில் ஜெர்மன் படைகள் பின்வாங்கியதற்கு ஜெனரல்களின் துரோகம் தான் காரணமென்று அவர் சொல்லுகிறார்.

"நிபுணர்களின் ஒத்தாசையை இழந்து விடக்கூடியதும், ஜெர்மன் யுத்த முயற்சிக்கு அபாயம் விளைவிக்கக்கூடியதுமான நடவடிக்கைகளை ராணுவ அதிகாரிகளின் விசுவாசக் குறைவு ஏற்படாமல் போனால் இவ்வளவு திண்ணமாக ஜெர்மனி கையாண்டிராது. கிழக்குப் போர்முனையில் அநேக ஜெர்மன் ஜெனரல்கள் எதிரியிடம் சரண் புகுந்துவிட்டார்கள். ருஷ்யாவில் கைதியாக உள்ள ஜெனரல்களும், நேசதேசத்தாரின் மிகுதியான சக்தியை எதிர்த்துப்போராடுவது பிரயோஜனமற்றதென்று மற்ற சகோதரர்களுக்கும் உபதேசம் செய்து வருகிறார்கள். இவ்விதமாக ஜெர்மனியின் தற்காப்புகளில் பிளவு ஏற்பட்டிருப்பதினால் நாஸித்தலைவர்கள் ஜெர்மன் ராணுவ அதிகாரியிடம் நம்பிக்கையை இழந்துவிட்டார்கள். ஆகிலும் அவருக்குக் கீழ்படிந்து நடக்கவேண்டுமென்று அடக்குமுறை மூலம் வற்புறுத்தி வருகிறார்கள்.

"எல்லோரிடமும் நம்பிக்கைக் குறைவு காணப்படுகிறதென்பது சந்தேகமற்றது. ஏனெனில் எஞ்சியுள்ள ஜெனரல்களும் மற்றவர்களுக்கேற்பட்ட அவமானத்திலிருந்து தப்பிவிட முடியாது. ராணுவ நிலைமையின் உண்மையை அவர்கள் வெளியிட்டால் அவர்கள் பேரில் சந்தேகம் உண்டாகிவிடும். ஆகையால் சுயநலத்தைக் கருதி வருங்காலத்தில் அவர்கள் நாஸிகளின் தலைவருக்கு ருசிகரமான ஆலோசனைகளைத்தான் விடுக்கவேண்டும். ஆகையால் இதற்குப்பின் ஜெர்மன் யுத்த தந்திரத்தை ராஜீய வெறி பிடித்தவர்களும் ராணுவ சாஸ்திரத்தில் அற்பமான அறிவுமுள்ள அனுபவ மற்ற ஒரு கோஷ்டியார்கள் நிறுவி வருவார்கள். மிகவும் சௌகரியமான சந்நிவேசத்திலும் பரஸ்பர அவநம்பிக்கை கொண்ட தலைவர்கள் யுத்தத்தை உபயோகமுள்ள வகையில் நடத்தமுடியாது.

"ஜெர்மனியில் யுத்த முயற்சிக்குப் பொறுப்புள்ளவர்களிடையே ஏற்பட்டுள்ள இந்தப் பிளவு நேசதேசத்தாருக்கு சாதகமளிக்கக்கூடியது. போர்முனையில் தோல்விகள் அதிகரிக்க அதிகரிக்க இந்தப் பிளவு விரிவுபடும். ஜெர்மன் பொதுமக்கள் ஹிட்லருக்கு எதிராக ராணுவ அதிகாரிகள் கலகம் செய்ததையும் அவர்களை ஹிட்லர் பழி வாங்கியதையும் கண்ணூறக் கண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களால் ஒன்றும் செய்வதற்கில்லை.

"நாஸி ஆக்ஷியை வெளிப்படையாக எதிர்த்துப் போராடாமல் தங்களுடைய விதி என்று நினைத்து ஜனங்கள் சும்மா இருப்பதுதான் ஜெர்மன் ரகசியப் போலீஸுக்கு அதிக சங்கடத்தை விளைவிக்கிறது. எந்த முறையில் இங்கிலாந்து பேரில் வெடி குண்டுகளைப் போட்டு பொதுமக்களுக்கும், சொத்துக்களுக்கும் நாசம் விளைவித்தாலும், யுத்தப் போக்கில் மாறுதலேற்படப்போவதில்லை. இதற்கு ஜவாப்தாரியானவர்கள் நமது வெறுப்புக்குத் தான் பாத்திரமாவார்கள். ஜெர்மனியைப் படுகுழியில் தள்ளிவரும் நடவடிக்கையை ஆக்ஷேபித்துக் கலகம் செய்த ஜெனரல்களும் இந்த ஆயுதங்களின் சக்தியையும் மதித்துப் பார்த்தவர்கள்தான். அவைகளும் பயன்படாமல் போய்விட்டால் ஹிட்லரின் அமானுஷமானச் செய்கை புகழையும் ஜனங்களின் நம்பிக்கையும் எது காப்பாற்றப்போகிறது."

வி வி வி வி வி

**தூரக்கிழக்கு.** இந்த வார நடவடிக்கைகள் திருப்திகரமாக நடைபெறுகின்றன. ஜப்பான் மறுபடியும் குண்டு வீச்சுக்குட்பட்டது. ஜப்பானியர்கள் ஹால்மெஹாராவிலிருந்து சமாளிக்கமுடியாமல பின் வாங்குகிறார்கள்.

யுத்தம் ஜப்பானை நெருங்கிவிட்டது. ஆகஸ்டு 8-ம் தேதியன்று ஜெனரல் காயிசோ என்ற ஜப்பானிய பிரதம மந்திரி பின்வருமாறு ஒலிபெருக்கினார்:—"உலக யுத்தம் பிரமாதமாக வளர்ச்சிபெற்றுவிட்டது. நமது சாம்ராஜ்யத்தில் இதுவரையில் இல்லாத பலமான தேசிய சிரமங்கள் உண்டாகிவிட்டன. எதிரிகள் நமது தாய்நாட்டையும் தாக்கிவிடுவார்கள் போல் தோன்றுகிறது."

ஜப்பானுக்கு 4,000 மைல்களுக்கு அப்பாலிலுள்ள ஹவாய்த்தீவிலிருந்து ஜப்பானியரைக் கொஞ்சம் கொஞ்சமாக அழித்து வந்த நேசதேசப் படைகள் இப்பொழுது 1,275 மைல்களிலுள்ள ஸைபானிலிருந்து ஜப்பானைத் தாக்கிவருகிறார்கள்.



**சியாம்** கிழக்கிலிருந்தாலும் மேற்கிலிருந்தாலும் நாஸிகளின் அமுலுக்குட்பட்ட நாடுகளின் பிரச்னை ஒன்றுதான். ஸியாமின் மாஜி பிரதம மந்திரி பீபல் ஸாங்கிராம் ஜப்பானிடம் துரோக புத்தியுடன் தான் ராஜினாமச் செய்தானென்று வெளியாகிறது. அவன் ராஜினாமச் செய்தது கெட்ட நடவடிக்கையென்று ஆகஸ்டு மாதம் 6-ம் தேதியன்று ஸிங்கப்பூர் ஒலிபரப்பில் சொல்லப்பட்டது. உண்மையில், பீபலின் நிர்வாகம் சேனையை ஜப்பானுக்கு விரோதமுள்ள அரசாங்கத்தினிடம் ஒப்படைக்கத் தயாராக இருந்தது. புதிய பிரதம மந்திரியான மேஜர் கோவிட் அபாய்வோங்க்ஸி உள்நாட்டு சமாதானத்தையும், நாட்டில் ஒழுங்கு முறையையும் ஏற்படுத்த முயன்றுவருகிறான்.

## ஜெர்மனியில் பொதுமக்களின் நியாயஸ்தலம்: விசாரணையின் லக்ஷியம்.

*நியூஸ் குரானிகள் பத்திரிகையில் வெர்னான் பார்ட்லட் எழுதியது.*

பொதுஜன கோர்ட்டின் நடவடிக்கை மூலம் இரண்டு முரணான லக்ஷியங்களை அடைய முயற்சிக்கப்படுகிறது. பீல்ட்மார்ஷல் வான் விட்ஸ்லேபென், அவனுடைய சதிக் கூட்டாளிகளை மற்றவர்கள் பின்பற்றாமல் தடுப்பது. ஹிட்லர் தப்பித்துக்கொண்டதில் எல்லோரும் குதூகலப்படுகிறார்களென்பதை ஜெர்மானியர்களுக்கு அறிமுகப்படுத்துவது, இனிமேல். சதி செய்யக்கூடியவர்களுக்கு எச்சரிக்கை செய்ய கடுமையான சிக்ஷை விதிக்கப்படுகிறது. குற்றங்களில் ஒரு சிறிது சம்பந்தப்பட்டவர்களும் சிக்ஷைக்குள்ளாவார்கள்.

இந்த நடவடிக்கைக்குப்பின் ஜெர்மானியர்களின் சந்தேகம் அதிகரித்துவிட்டது. சென்ற 50 வருஷங்களாக ஏகமனதுடன் பொது ஜனங்கள் ஜெர்மன் அதிகாரிகளின் கடுமையான இரக்கமற்ற ஐதீகங்களை கௌரவித்து வந்தார்கள்.

ஹிட்லர் ராஜீய வியவகார முறையிலும், படைகளுக்கும் தலைவர். சேனாதிபதியிடமுள்ள பூர்ணமான விசுவாசத்தை இழந்து உயர்தர ஆபீஸர்களில் அநேகர் கலகம் செய்ய முற்பட்டதிலிருந்தே எதிர்பார்த்ததற்கு அதிகமாகவே ராணுவ நிலைமை மோசமாகிவிட்டதென்று ஜெர்மானியர்கள் அறிந்துவிட்டார்கள்.

ஜெர்மன் பத்திரிகைகள் கோர்ட்டு நடவடிக்கைகளைப் பிரசுரிக்கக்கூடாதென்று செய்யப்பட்டிருந்த தடை உத்தரவு ரத்தாகுவதற்கு 10 மணிகளுக்கு முன்னதாகவே உத்தியோக முறையில் ஜெர்மன் அறிக்கை நிலயம் தகவல்களை பகிரங்கப்படுத்திவிட்டது. இந்த வெளியீட்டில் டாக்டர் கோயபல்ஸின் சிரமங்களை நிவர்த்திக்கக்கூடிய மூன்று அம்சங்கள் காணப்பட்டன.

தொழிற்சாலை வேலைக்காரர்களின் அருவருப்பை நிவர்த்திக்க சதி செய்தவர்களைப் பிற்போக்காளர்களென்று கோர்ட்டின் தலைவர் அழைத்தார். தொழிலாளர் இலாகா மந்திரியான டாக்டர் லே அயோக்யர்களென்று சொல்லி வந்த பிரசாரத்துக்கு இது அனுகூலமானது. மனித வர்க்கத்திலேயே இழிவான இந்த கோரமான நடவடிக்கையைப்பற்றி மிகுதியான வியாக்யானம் செய்யப்பட்டது. சதி செய்த ஜெனரல்களின் எண்ணங்கள் உயர்வானவை யென்று நாட்ட பத்தியுள்ள ஜெர்மானியர்கள் நினைத்துவிடக்கூடாதாம்.

கடைசியாக பிரிடன் வெடிகுண்டைத் தயாரித்துக்கொடுத்ததென்ற அபத்தமான வார்த்தைகளைபற்றி ஜெர்மனியின் தேசாபிமானத்துக்கு வேண்டுகோள் செய்யப்பட்டது. சுலபமாக வெடிகுண்டுகளை உள்நாட்டிலேயே சம்பாதித்து விடக்கூடிய ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் எதிரிகளிடமிருந்து அவைகளைப் பெறவேண்டிய அவசியமென்ன என்பதை ஜெர்மன் மக்களுக்கு ஒருவரும் விவரித்துச் சொல்லவில்லை.

## கிழக்கு பிரஷ்யாவின் உள்நாட்டு நிலைமை.

### ஜெர்மன் பிரபுக்களின் கலக்கம்.

(வால்டர் பார்).

கிழக்கு பிரஷ்யாவிலுள்ள பிரபுக்களும், நாஸிகளும் ருஷ்யர்களை பலமாக எதிர்த்துப் போராட ஆயத்தம் செய்து வருகிறார்களென்று பிரஷ்யாவிலிருந்து சமீபத்தில் வந்தவர்கள் சொல்லுகிறார்கள்.

பல நூற்றுண்டுகளாக நிலைபெற்றிருக்கும் ஏராளமான சாமான்களுள்ள கோட்டைகளிலுள்ள முதலாளிகளும், பிரபுக்களும் இப்பொழுது இறுதிவரையில் போராடவேண்டுமென்று சொல்லுகிறார்கள்.

மற்ருெரு டானன்பர்க் போரை நடத்தி ருஷ்யர்களை முறியடித்து கிழக்கு பிரஷ்யாவை இப்பொழுதாவது காப்பாற்றிவிட வேண்டுமென்று அவர்கள் கனவு காண்கிறார்கள்.

கிழக்கு பிரஷ்யாவை ருஷ்யர்கள் கைப்பற்றக் கூடுமென்பதைப்பற்றி ஜெர்மன் பிரபுவின் அபிப்பிராயமென்னவென்று கேட்டால், அவன் அவனுடைய கண்களை சுழற்றிப் பார்த்து "ருஷ்யர்கள் வந்தால் அவர்களை சரிக்கட்டிவிடுவோம் அல்லது அவர்களுடன் சேர்ந்து வாழ்வோம். முன்போல் நமது வாழ்க்கை நடைபெறும்" என்று சொல்லுவான்.

பிரஷ்ய முதலாளிகளுக்கு அதிகக் கலக்கம் ஏற்பட்டிருந்தபோதிலும், ருஷ்யர்களையும் அடக்கியாண்டுவிடலாமென்று அவர்கள் இன்றும் எண்ணம் கொண்டிருக்கிறார்கள்.

கிழக்கு பிரஷ்யாவிலுள்ள மற்றவர்களுக்கு உண்மையான பீதி உண்டாக்கியிருக்கிறது. வெடிகுண்டு வீச்சிற்குட்பட்ட லக்ஷக்கணக்கான ஜனங்கள் கிழக்கு பிரஷ்யாவுக்கு முக்கியமாக கோனிக்ஸ்பர்க்குக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

அவர்களில் பெரும்பான்மையோர் பிரஷ்யர்களுடன் சச்சரவு செய்தார்கள். சில்லரை வியாபாரிகள் என்ற பட்டப்பெயரையும் பெற்றார்கள். அவர்கள் மறுபடியும் ஜெர்மனிக்குச் செல்லவேண்டுமென்று உத்திரவிடப்பட்டிருக்கிறது. இது ஜெர்மன் மக்களின் மனவுறுதியை பலப்படுத்தாது. கிழக்கு பிரஷ்யாவில் வீண் ஜம்பம் பேசிவரும் மாகாண நிர்வாகியான ஹெர் காக் அவர்களை நிந்தித்து வருகிறார். இந்த அகதிகள் கட்டுக்கடங்கவில்லை என்று அவன் சமீபத்தில் சொற்பொழிவுகளில் வெளியிட்டான்.

தோல்வியடைந்தால் ஜெர்மன் பிரபுக்கள் எவ்விதம் நடந்து கொள்ளுவார்கள் என்று நடுநிலைமை அதிகாரியை வினவியபொழுது அவர் சொன்னார். "அவர்களைச் சரியானபடி அடக்கியாள ருஷ்யா நடவடிக்கைகளை ஆரம்பிக்கும். இந்த யுத்தத்துக்குப்பின் பிரபுக்களின் அட்டகாசம் ஒய்ந்துவிடும்."

---

## ஆகாச வாணங்களைப்போடும் டைபூன் விமானங்கள்.

### மிகவும் உபயோகமுள்ள ஆகாய ஆயுதம்.

நார்மண்டியில் போரின் இரண்டு மாதத்திய அனுபவத்திலிருந்து பிரிடிஷ் விமானப் படையில் புதிதான உபயோகமுள்ள பயங்கரமான ஆயுதமிருக்கிறதென்று புலப்படுகிறது. இதுதான் ஒருவர் செல்லும் ஆகாச வாணங்களை வீசும் டைபூன் சண்டை விமானம். இது டைகர், பாந்தர் டாங்கிகளையும், மற்ற கடினமான லக்ஷியங்களையும், பருந்துப்பாய்ச்சல் விமானத்தைப் போல் குறி தவறாமல் நொருக்கிவிடும். மேலும் சுலபமாகவும் அழிக்கப்படக் கூடியதில்லை.

இந்த ராக்பூன் விமானப்படையின் தலைவரும் 32 வயதுள்ள கனுடியருமான பால்டாவுட் D. S. O. D. F. C. அந்த விமானத்தை பின்வருமாறு வர்ணிக்கிறார்.—விமானத்தின் இரக்கைகளுக்கடியில் ஒவ்வொன்றிலும் நான்கு ஆகாச வாணங்கள் அமைக்கப்பட்டிருக்கும். விமானி அவைகளை இரண்டாகவோ, நாலாகவோ, ஆறுகவோ அல்லது எட்டாகவோ போடலாம். அதில் நான்கு பீரங்கிகளும் உள.

அவைகள் குறி தவறுவதில்லை. அவைகளைக் கண்ட மாத்திரத்தில் ஜெர்மானியர்கள் அதன் வட்டாரத்துக்குட்படாமல் ஒளியில் பதுங்கியிருக்கவேண்டுமென்று அவர்களுக்கு உத்திரவிடப்பட்டிருக்கிறதென்று ஜெர்மன் கைதிகள் ஒப்புக்கொண்டார்கள்.

ஸ்பிட் பையர், தண்டர் போல்ட் விமானங்கள் ஜெர்மன் விமானப்படையைத் தாக்கும் பொழுது டைபூன் விமானங்கள் தரைப் படைகளுக்கு ஒத்தாசை செய்கின்றன.



கனமான டாங்கிகளை அழிக்க ராக்பூன்கள்தான் சிறந்தவையென்பது அனுபவசித்தமானது. நமது விமானிகள் எல்லாப் பக்கங்களிலிருந்தும் தாழப்பறந்து அடிக்கிறார்கள். தாக்குதலின் பலம் அபாரமானது. டாங்கிகள் நொருங்கி தீப்பிடித்துக்கொள்ளுகின்றன.

ஆகாச வாணங்கள் பலத்த சத்தம் போடுகின்றன. அதைக் கண்டு நமது துருப்புகள் குதூகலப்படுகிறார்கள். மேலும் ஜெர்மானியர்கள் ராக்பூன் விமானங்களைச் சுடுவதில் கவனம் செலுத்துவதால் படைகளுக்கு சிறிது ஆச்வாசம் ஏற்படுகிறது.

---

## தூரக்கிழக்கில் நேசதேசக் கடற்படைப்பலம் அதிகரிக்கிறது.

### ஜப்பானின் கடல் மார்க்கங்களைத் துண்டிக்க முயற்சி.

(A. J. மாக் வின்னி).

ஐரோப்பாவில் பிரிடிஷ் கடற்படை வெற்றிகரமாக நடத்திய முற்றுகை நடவடிக்கைகளை தூரக்கிழக்கிலும் பலமாகக் கையாளப்போகிறோம்.

இதற்கு அனுகூலமான அறிகுறிகள் தோன்றுகின்றன. சுமத்ராவுக்கும், ரெங்கூனுக்கும் மத்தியிலுள்ள ஜப்பானியப் போக்குவரத்துகள் பிரிடிஷாரின் பிடிப்பிக்குட்பட்டு விட்டன. பிரான்ஸின் விடுதலைக்காக அனுப்பப்பட்ட கப்பல்களைத் தவிர பிரிடன் ஏராளமான கப்பல்களை தூரக்கிழக்கிற்கும் அனுப்பியிருக்கிறது. ஜெர்மன் கடற்படையின் சக்தி அழிந்துவிட்டதால் பிரிடன் அதிகமான கப்பல்களை ஜப்பானைத் தாக்க அனுப்பக்கூடும். ஜப்பானியர்கள் கூடிய சீக்கிரத்தில் அகப்பட்டுக்கொள்ளுவார்கள். அதனபின் பிரிடிஷ் அமெரிக்க கடற்படையும், விமானப்படையும் ஒன்றுபட்டு குறவளையைப் பிடித்துவிடும்.

பஸிபிக்கில் முன்னேறும் அமெரிக்கப் படைகள் கண்டுபிடித்ததற்கு உபரியாக ஜப்பானியக் கடற்படையில் பெரிய கப்பல்களிருப்பதாக அறிகுறிகள் காணப்படவில்லை. போருக்கு வர ஜப்பானியப்படை மறுப்பதிலிருந்து ஜப்பான் அதன் பலஹீனத்தை உணர்ந்து விட்டதென்றும், கூடிய சீக்கிரத்தில் சமாதானத்தைக்கோருமென்றும் எண்ணம் கொள்ளக்கூடாது.

நேசதேசத்தார்கள் உத்தியோக முறையில் இவ்விதமான திருப்தியுடனிருப்பார்களென்று ஜப்பான் விரும்புகிறது. ஒவ்வொரு மாதமும் பஸிபிக்கில் நேசதேசத்தாரின் கடற்படைபலம் அதிகரித்து வருகிறதென்றும், ஜப்பானியக் கடற்படைபலம் பலஹீனம் அடைந்து வருகிறதென்றும் ஜப்பான் நன்ருய் அறிந்திருக்கிறது.

#### புதிய பிரிடிஷ் யுத்தக் கப்பல்கள்.

பிரிடிஷ் கடற்படையின் அமைப்புகள் ரகசியமானவை. ஆகிலும் ஐரோப்பாவில் வெற்றிகிடைத்து வருவதினால் தூரக்கிழக்குக்கு அதிக கப்பல்கள் அனுப்பப்பட்டிருக்கலாம். யுத்தக் கப்பல்களை ஆகாயப்படை உபயோகமற்றதாகச் செய்து விட்டது என்று ஹிட்லரும் மற்ற தரைப்போர் நிபுணரும் யுத்த ஆரம்பத்தில் சொல்லிவந்த போதிலும் பிரிடன் கடலாதிக்கத்தையும் ஆகாச வலிமையையும் ஒன்றுபடுத்தி புதிய யுத்தக் கப்பல்களைக்கட்டி வருகின்றதென்பதை ஜப்பான் அறியவேண்டும். மேலும் 40,000 டன்கள் எடைமானமுள்ள லையன், டெமராரி என்ற பிரிடிஷ் யுத்தக் கப்பல்களைக் கட்டுவதும் பரம ரகசியமாக வைக்கப்பட்டிருக்கிறது. அவைகள் அநேகமாகக் கட்டி முடிக்கப்பட்டு விட்டன என்று தகவல்கள் கிடைத்து வருகின்றன. ஆகிலும் லண்டனிலுள்ள கடற்படை இலாகா இதைப்பற்றி ஒரு அறிக்கையையும் வெளியிடவில்லை. அவைகளைத் தூரக்கிழக்குப் போரில் உபயோகிப்பதற்காக அவைகள் கட்டப்படுகின்றன என்று எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

சமீப எதிர் காலத்தில் ஜப்பானியக் கடற்படை போர் புரியவேண்டும் அல்லது ஜப்பான் சரணுகதி செய்யவேண்டும். மகத்தான போருக்குச் செல்லாமல் நேசதேசத்தாரின் கடல் மார்க்கங்களின் அதிகரிப்பையும் ஜப்பானிய கடல்மார்க்கங்களின் குறைவையும் எதிர்பார்த்து ஜப்பானியக் கடற்படை காலஹரணம் செய்து வருகிறது.

அதாவது நேசதேசத்தார்கள் ஜப்பானைத்தாக்க முற்படும்பொழுதுதான் ஜப்பானியக் கடற்படை போர் தொடுக்குமென்று பொருள்படுகிறது. அத்தருணம் ஜனங்கள் எதிர்

பார்ப்பதற்கு முன்னதாகவே வந்துவிடும். ஒவ்வொரு தீவாகப் பிடித்துக்கொண்டு ஜப்பானை நேசதேசத்தார்கள் அணுகுவார்களென்று இதிலிருந்து ஏற்படாது.

மகத்தான போர் துவக்கப்படும்பொழுது நேசதேசக் கப்பல்கள் வெகுதூரத்திற்குச் சென்றிருப்பதால் பலஹீனமடைந்து விடுமென்று நம்பி ஜப்பான் மனோராஜ்யம் செய்ய வேண்டாம். நேசதேசக் கடற்படைக்கு, எண்ணெய், உணவுப்பொருள், பழுது பார்க்கும் சாதனங்களெல்லாம் கப்பல்களில் கொண்டுபோகப்படுகின்றன. யுத்த ஆரம்பத்துக்குப்பின் யுத்தக் கப்பல்கள் பிரயாணம் செய்யும்பொழுது அவைகளுக்கு உதவியளிக்கக்கூடிய கப்பல்களும் கூட அனுப்பப்படுகின்றன. இது ஒரு புதிய யுத்த தந்திரம்.

---

## யூ படகு நடவடிக்கையின் தோல்வி.

### படகோட்டிகள் மிகவும் முன் ஜாக்கிரதையுடனிருந்து வருகிறார்கள்.

(டெயிலி டெலிகிராப்).

ஜனாதிபதி ரூஸ்வெல்டும், மிஸ்டர் சர்ச்சிலும் இந்த மாதத்தில் வெளியிட்டிருக்கும் கூட்டறிக்கையில் எப்பொழுதிருந்ததையும்விட திருப்திகரமான தகவல்கள் காணப்படுகின்றன.

இதுவரையில் 500-க்கு மேற்பட்ட யூ-படகுகள் மூழ்கடிக்கப்பட்டிருக்கின்றன. சென்ற யுத்தத்தில் 200 யூ-படகுகள் தான் அழிக்கப்பட்டன. இவ்வளவு நஷ்டமேற்பட்ட பின்னும் யூ-படகுப் படை மிகுதியாகயிருக்கிறது. அதன் ஓட்டிகள் முன் ஜாக்கிரதையுடன் வேலை செய்து வருகிறார்கள். ஜூலை பூராவிலும் ஜெர்மன் ராணுவ அதிகாரிகளின் ஆக்ஞைப்படி அவைகள் கால்வாயில் தொடர்ச்சியாகவும் கடுமையாகவும் தாக்கிவந்தன. ஆகிலும் இந்த மாதத்திலும் சாமான் கப்பல்களைவிட அதிக யூ-படகுகள் நஷ்டமாகியிருக்கின்றன; படைகள் ஐரோப்பாவிலிறங்கியபொழுது ஒரு கப்பலைத்தவிர மற்றெல்லா சாமான் கப்பல்களும் பத்திரமாகக் கரை சேர்ந்தன. அதன்பின் போக்குவரத்துக் கப்பல்களைத் தாக்கிய நடவடிக்கையில் 17 யூ-படகுகள் மூழ்கடிக்கப்பட்டிருக்கின்றன.

படைகளிறங்கும் ஸ்தானங்களுக்கு மேற்கில் யூ-படகுகள் குவிக்கப்பட்டிருந்தன. சில யூ-படகுகள் கால்வாயில் செல்ல முயன்றன. துறைமுகத்தைவிட்டுப் புறப்பட்டவுடனே விமானங்களும் கப்பல்களும் அவைகளை வேட்டையாடின. லோரியான், பிரெஸ்டு முதலிய வற்றிலுள்ள யூ-படகு தளங்கள் பேரில் வெடி குண்டுகள் வீசப்பட்டன. யூ-படகுத் துறைமுகம், கப்பல் கட்டும் தளமுமான ஸெயிண்ட் நாஸரேயையும் மற்ற இரண்டு தளங்களையும் நோக்கி அமெரிக்கப் படைகள் முன்னேறுகின்றன. ஸெயிண்ட் நாஸரேயில் 30 யூ-படகுகள் நிற்கக்கூடிய கோஷ்டமிருக்கிறது. லோரியானிலும் பிரெஸ்டிலும் அதற்குச் சமமான யூ-படகுகள் நிற்கக்கூடும். சென்ற வாரத்தில் நமது விமானப்படை 12,000 ராத்தல் எடைமானமுள்ள வெடி குண்டுகளைப்போட்டபொழுது எவ்வளவு யூ-படகுகள் அங்கிருந்தனவென்றும் அமெரிக்கர்கள் ஆக்கிரமிக்குமுன் எவ்வளவு யூ-படகுகள் தப்பி ஓட முடியுமென்றும் சொல்ல இயலாது.

ஸெயிண்ட் நாஸரேயிலிருந்து, போர்டோவுக்கும், யூ.வாருக்குத் தெற்கிலுள்ள ஒரு துறைமுகத்துக்கும ஆட்களையும், தளவாடங்களையும் ஏற்றிச்சென்ற ஏழு கப்பல்களை பிரிடிஷ் படை மூழ்கடித்ததிலிருந்து யூ-படகு தளங்களிலிருந்து புறப்படும் கப்பல்களைத் தாக்க கடற்படையும், விமானப்படையும் தயாராக இருக்கிறதென்பது வெளியாகுகிறது. வாக்கமுள்ள யூ-படகு மாலுமிகள் நீர்மூழ்கியை கடலுக்குள் எடுத்துச்சென்றுவிடலாம். ஆகிலும் அது தெற்குநோக்கிச்சென்றாலும் அல்லது ஸ்காட்லாந்தைச்சுற்றி ஜெர்மனிக்குச் செல்ல முயன்றாலும் அது தப்பித்துக் கொள்ளமுடியாது. வெடிகுண்டு வீச்சால் பழுதுபட்டதும் எண்ணெயும் சப்பராக்களுமில்லாததுமான அநேக யூ-படகுகளையும் மிகவும் ஜாக்கிரதையுள்ள மாலுமிகளையும் அமெரிக்கர்கள் காணக்கூடும். யூ-படகுகளின் சங்கியை எவ்விதமிருப்பினும் அட்லாண்டிக் கடலிலுள்ள தளங்களை ஜெர்மனி இழந்துவிட்டால் யூ-படகு நடவடிக்கைக்குக் குந்தகம் ஏற்படும். பிஸ்கே விரிகுடாவிலுள்ள மற்றெந்த துறைமுகமும் இவைகளைப்போல் உபயோகமுள்ளவையல்ல. பிரிட்டானியிலுள்ள தளங்களின் சௌகரியங்களிலிருந்தபொழுதே அட்லாண்டிக் போரில் யூ-படகுகள் முறியடிக்கப்பட்டன. அவைகள் நேசதேச வசமாகிவிட்டதால் ஜெர்மனியை முறியடிக்க அனுப்பப்படும் சேனைகள், ஆயுதங்கள், முஸ்தீப்புகள் தாராளமாகச் செல்லுவதை அவைகள் இப்பொழுது வழிமறிக்க இயலாது.



இரண்டாவது தடவையாக இங்கிலாந்தை வறுமைக்குள்ளாக்கி முறியடித்துவிடவும், அமெரிக்கப் படைகளை கடல்தாண்டிச் செல்லவோட்டாமல் தடுக்கவும் யூ-படகுகள் செய்த முயற்சி பயன்படவில்லை. 1918-ம் வருஷத்தைப் போல யூ-படகு மாலுமிகளின் மன உறுதியின் குலைவு ஏற்படக்கூடிய அறிகுறிகள் காணப்படுகின்றன. கோரமான மற்றொரு தாக்குதலை ஆரம்பிக்கும்படி புதிய உபாயங்கள் கண்டு பிடிக்கப்படலாம். உத்தரவு பிறப்பிக்கப்படலாம். ஆகிலும் யூ-படகுகளைத் தாக்கும் நமது விமானப்படை, கடற்படையின் வலிமையை ஜெர்மனியின் எவ்வித முயற்சியும் சமாளிக்கமுடியாது.

---

## ஐந்து கோணம்.

### அமெரிக்காவின் யுத்த தளவாட உற்பத்தி நாடி.

நியூ யார்க்கிலுள்ள ராக் பெல்லருக்குச் சொந்தமான மகத்தான கட்டடத்தைவிட வாஷிங்டனில் ஐந்து கோணமுள்ள அமெரிக்காவின் யுத்த நிலயம் அமைக்கப்பட்டிருக்கும் கட்டடம் மிகவும் பிரம்மாண்டமானது. இதை அமெரிக்கத் தரைப்படை எஞ்சினியர்கள் அமைத்தார்கள். யுத்த இலாகாக்களை அடங்கியிருக்கும் மகத்தான திட்டம் இரண்டு வருடங்களாக நடைபெற்று வருகிறது.

கியாதிபெற்ற பொடோமாக் நதியைத் தாண்டி கான்கிரீட்டினால் அமைக்கப்பட்ட வழிகள், பாலங்கள், சாதனங்கள் மூலமாகச் சென்று பார்த்தால் அந்தக்கட்டடத்திற்கு ஐந்து பக்கங்களிருக்கின்றதைக் காணலாம். ஆகையால் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு வெகு சீக்கிரமாகச்சென்று விடலாம்.

தினசரி 32,500 ஜனங்கள் அங்கு வேலைசெய்ய வருகிறார்கள். 17 மைல் நீளமுள்ள நடை பாதைகளிருக்கின்றன. இந்தக் கட்டடத்தில் மூன்று ஸ்திரீகள் குழந்தைகளைப் பெற்றார்கள்.

வழிகாட்டியில்லாமல் அந்த கட்டடத்திற்குள் நடமாடமுடியாது. பஞ்சகோணத்தில் அநேக காலமாக வேலைசெய்து வருகிறவர்கள்கூட அநேகம்தடவைகளில் தடுமாட்டம் அடைந்து விடுவார்கள். அங்கு வேலைக்கு வரும் 30,000 வேலைக்காரர்களும் நன்கு கவனிக்கப்படுகிறார்கள். அங்கிருந்து 20 மைல்களுக்கப்பாலிலுள்ள வாஷிங்டனுக்கும், தெற்கில் வெர்ஜீனியாவிலுள்ள வாசஸ்தலங்களுக்கும் தினசரி ஏராளமான மோட்டார்கள் செல்லுகின்றன.

#### தினசரி 60,000 சாப்பாடுகள்.

மோட்டார்கள் நிற்குமிடமான தாழ்வரையிலுள்ள கூடத்திற்கு மேல் தளத்தில் கடைகளிருக்கின்றன. அங்கே பஞ்ச கோணத்தில் வேலை செய்யும் தொழிலாளர்கள் சகலவிதமான சாமான்களையும் வாங்கிக்கொள்ளலாம். அங்கு சிற்றுண்டிசாலைகளும், சாப்பாடு வசதிகளும் அமைக்கப் பட்டிருக்கின்றன. 60,000 பேருக்கு சுடச்சுட சாப்பாடு தினசரி ஆறு போஜன சாலைகளில் வழங்கப்படுகிறது.

மூன்றுகால் சைகிள்களில் ஏறிச்செல்லும் நீக்ரோ ஜாதியார்கள் பஞ்சகோணத்தின் மார்க்கங்களில் சஞ்சரிக்கிறார்கள். எங்கு பார்த்தாலும் ரப்பர் அமைக்கப்பட்ட தளங்களில் வண்டிகளின் சப்தம் கேட்கும். இந்த சப்தத்தைக்கேட்ட மாத்திரத்தில் ஜெனரல்கள் ஒதுங்கி நிற்பார்கள். நீக்ரோக்கள் தகவல்கொண்டு போகிறவர்கள். அவர்கள் கொண்டு போகும் தகவலுக்கு முதல்தரமான முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும்.

அந்தக் கட்டடத்தில் அநேக நாட்கள் சுற்றிப் பார்த்தாலும் பூரா விஷயங்களையும் அறிய முடியாது. ஜன்னல்கள் வழியாக நோக்கினால் சுவரடைத்த பொட்டல்களும், விளையாட்டு ஸ்தலங்களும் காணப்படும். நடைவழிகள் வெகுதூரம் செல்லுகின்றன. விசாலமான கூடங்கள் தோன்றிக்கொண்டேயிருக்கின்றன. டைப் அடிக்கிறவர்கள் மெஷின்கள் முன் உட்கார்ந்து ஏராளமாக வேலைசெய்து கொண்டிருக்கிறார்கள். இந்த இடத்தின் தோற்றத்தை ஒருவரும் நம்பமாட்டார்கள். அமெரிக்கப் படையின் அபிவிருத்திக்கு இந்தப் பஞ்சகோணமுள்ள மத்திய நிலயம்தான் காரணம். பஞ்சகோணம் மிகவும் அழகிய கட்டடம். இது அற்புதமான எஞ்சினியரிங் திறமையை வெளிப்படுத்துகிறது. அமெரிக்காவின் யுத்த முயற்சி ஸ்தாபனமாக அது சிறந்த வேலையைச்செய்து வருகிறது.

# சினிமாப் படங்களின் முன்னேற்றம்.

நவீன யுத்தத்தில் ஒளிப்படப்பெட்டியும் முக்கியமான ஆயுதம். ஒரு ஒளிப்படம் கால அளவையும், கப்பற் செலவையும், டன்கணக்கான தளவாடங்களையும், மிலியன்கணக்கான உயிர்களையும் காப்பாற்றும்.

ஜப்பான் பெர்ல் துறைமுகத்தைத் தாக்கியபொழுது பழுதுபட்ட கப்பல்களின் ஒளிப் படங்களைத் தயார் செய்ய உத்தரவிடப்பட்டது. இந்தப் படங்கள் ஹாவாய்க்கு இரண்டு நாள்களில் கொண்டுபோகப்பட்டன. உடனே புனருத்தாரண வேலை துவக்கப்பட்டது. பெரிய படங்கள் வரையப்பட்டிருந்தால் காலதாமதம் ஏற்பட்டிருக்கும்.

தொழிற்சாலைகளுக்கும் ஒளிப்படம் மிகுதியான உதவியளித்திருக்கிறது. புதிய ரக விமானங்களைத் தயார் செய்வதுதான் விமானம் கட்டுகிறவர்களின் வேலை. புதிய வெடி விமானத்திற்கு 25,000 உருப்புகள் வேண்டும். இதற்குமுன் திட்டங்கள் காகிதங்களில் வரையப்பட்டன. இன்று ரகங்களெல்லாம் ஒளிப்படம் பிடிக்கப்பட்டு, சினிமா செல்லுலாயிடுத் தகடுகளில் மாற்றியமைக்கப்படுகின்றன. ஒரு ஒளிப்படம் பிடிப்பவர் ஒரு நாளைக்கு நூற்றுக் கணக்கான ரகங்களை வெளியிடலாம்.

இந்த நடவடிக்கை மூலம் மூன்று மாதங்களுக்குள் ஏராளமான விமானங்களைக்கட்ட சாதகம் ஏற்படுகிறது.

யுத்த தளவாடங்களும் ஒளிப்படத்தினால் கட்டுப்பாடு செய்யப்படுகின்றன. ஜோதி வர்ணக் கண்ணாடியின் உதவியால் மின்சார விளக்கினால் காய்ச்சப்படும் உலோகங்களின் ஜோதி வர்ணங்கள் படம் பிடிக்கப்படுகின்றன. சுத்தமான இரும்பின் ஜோதி வர்ணத்துடன் இதை ஒப்பிட்டுப்பார்த்தால் இதில் எவ்வளவு சேர்மானமிருக்கிறதென்று புலப்படும். சேர்மான உலோகங்களை மனிதர்களும் உயிர்களும் நம்பியிருக்கும்பொழுது ஜோதி வர்ணப்படம் தான் அவர்களுக்குப் பத்திரத்தை உத்தரவாதம் செய்யும். இந்தப் படத்தின் மூலம் ஒரு நொடியில் சேர்மானத்தின் சிலாக்கியத்தைப் பரீக்ஷை செய்துவிடலாம்.

1939-ம் வருஷத்துக்குமுன் X-ரே ஒளிப்படம் வைத்திய முறைக்குத்தான் உபயோக முள்ளதாகயிருந்தது. இப்பொழுது மிலியன் வோல்ட் ஒளியுள்ள குழாய்கள் மூலம் 8 இஞ்சுகள் கனமுள்ள எஃகுக்குள்ளும் வெளிச்சம் புகுத்தப்பட்டு அதிலுள்ள தவறுகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. ஒரு X-ரே பகுதி ஒரு நாளைக்கு 17,000 விமான எஞ்சின்களைப் பரீக்ஷை செய்துவிடும்.

பித்தளை வெடி குண்டு குழாய்களிலுள்ள மறைமுகமான வெடிப்புகள் X-ரே மூலம் கண்டுபிடிக்கப்படுகின்றன. ராண்ட்ஜன் கிரணங்கள், சேர்க்கை ரப்பர், ஜவ்வு, புதிய உலோகங்கள் முதலியவற்றை பரிசோதிக்கின்றன. சமீப காலத்தில் ஈய விஷத்தினால் பாதிக்கப்பட்டதாக சந்தேகப்படக்கூடியவர்களின் எலும்பு நிலைமையையும் அவைகள் பரிசீலனை செய்தன.

புதிய ரக விமானங்கள் புறப்படும்பொழுதும் இறங்கும்பொழுதும் ஒளிப்படம் பிடிக்கப் படுகின்றன. தரையில் செல்லும் வேகமும் சுலபமாகக் கண்டுபிடிக்கப்படுகிறது. ஒருவர் எண்ணெய் சேர்மானங்கள் எவ்விதம் வெடிக்கின்றனவென்பதைப் படம் பிடிக்கிறார். மற்றொருவர் பாயிலர் அடுப்பில் நெருப்பு ஜுவாலைகள் எவ்விதம் ஜ்வலிக்கின்றனவென்பதைப் படம் எடுக்கிறார். இதன் பயனாக நிலக்கரியை சிக்கன முறையில் உபயோகிக்க அறிவு ஏற்படுகிறது. மற்றொருவர் எஃகுக் கட்டிகளைப் படமெடுக்கிறார். எஞ்சினியர்கள் அவைகளைப் பரீக்ஷை செய்து சாரமில்லாதவைகளை முக்கியமான தொழிற்சாலைகளுக்குச் செல்லாதபடி தடுத்துவிடுகிறார்கள்.

ஒரு வெடி விமானத்துக்கு 60,000 நுட்பமான படங்கள் தேவை. ஒரு யுத்தக் கப்பலுக்கு 30 டன்கள் எடைமானமுள்ள படங்கள் தேவை. இந்தத் தஸ்தாவேஜுகள் செல்லுலாயிடுத் தகட்டில் தயாரிக்கப்பட்டு பத்திரப்படுத்தப்படுகின்றன.



ரசாயன சாஸ்திரிகள் போட்டோ எடுக்கும் பிசினை மிகவும் நுட்பமான அளவிற்குத் தயார் செய்திருப்பதினால் படங்களிலுள்ள நுட்பமான பாகங்களையும் அழிக்காமல் சேர்க்கவும் பெருக்கவும் சாதகமேற்படுகிறது. 1870-ம் வருஷத்தில் பாரிஸை முற்றுகை செய்தபொழுது. டாக்ரன் என்ற ஒளிப்படம் பிடிப்பவர் பிரஷ்யன் படைவரிசைகளுக்குள் தகவல்களை அனுப்ப பிரியப்பட்டார். தகவல்களை பெரிய எழுத்துக்களில் எழுதி சிறிய படங்களாகப் பிடித்து அவைகளில் 3,500-ஐ ஒரு புறாவின் காலில் கட்டி அனுப்பினார்.

வெடிகுண்டு வீச்சு அபாயத்திற்குட்பட்ட தொழிற்சாலைகளெல்லாம் ஒளிப்படம் பிடித்து அதை பத்திரப்படுத்தி வைத்திருக்கின்றன. லண்டனில் 1,500-ம் வருஷத்துக்கு முன் அச்சிடப்பட்டு பிரிடிஷ் கண்காக்ஷி சாலையிலுள்ள புத்தகங்கள் ஒளிப்படம் எடுக்கப்பட்டு பத்திரமான இடத்துக்கு படம் அனுப்பப்பட்டிருக்கிறது. பாங்கிகளும், இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகளும், சாமான் கிட்டங்கிகளும், பத்திரிகைகளும், உற்பத்தி செய்பவர்களும் மெம்பர் களின் பெயரையும் கணக்குகளையும் ஒளிப்படமூலம் பத்திரப்படுத்துகிறார்கள். டாக்டர் களும் பிராணி நூல் சாஸ்திரிகளும் தங்களுடைய பரீக்ஷைகளை ஒளிப்பட மூலம் ரிகார்டு செய்து விடுகிறார்கள்.

முக்கியமாக யந்திரங்களின் நடவடிக்கையை ஒரு நொடிப்பொழுதில் ஒளிப்படப் பெட்டிகள் படம் பிடித்து விடுகின்றன. ஒரு ஒளிப்படம் ஒரு நிமிஷத்தில் எண்ணாயிரம் படங்களைப் பிடித்துவிடும்.

வருங்காலத்தில் ஒளிப்படம் மிகுந்த உதவியளிக்கக்கூடும். இதற்கு சாதகமாக ஒரு மெர்க்குரி விளக்கு இருக்கிறது. அதற்கு 5,400 குதிரைகள் வேகமுள்ள மின்சார சக்தி ஒளி அமைக்கும். இந்த விளக்கு ஒரு நிமிஷத்திற்குப்பின் தவிடுபொடியாகிவிடும். ஆகிலும் இதைக் கண்டுபிடித்த விஞ்ஞான சாஸ்திரிகள் அதைரியமடையவில்லை. இந்தப் புதிய விளக்கு சாதாரணமான ஒளிப்படம் பிடிப்பவருக்கு 500 வருஷங்கள் வரையில் உபயோகப் படும். அதன் ஒளிகள் ஒரு நிமிஷத்தின் மிலியன் பாகம்தான் நிலைபெற்றிருக்கும்.

---

# தேசீய வருமானத்தை நிலைநாட்டவேண்டும்.

## பிரெட்டன் உட்ஸ் ஆலோசனைகளின் விமர்சனம்.

(டைம்ஸ் பத்திரிகை.)

பிரெட்டன் உட்ஸ் மகாநாட்டின் சிபார்சுகள் இப்பொழுது அறிக்கைமூலம் வெளியிடப் பட்டிருப்பதினால் அவைகளை நேசதேசங்கள் அலசிப்பார்க்கக்கூடும்.

அதில் காணப்படும் சிக்கலான எல்லா பிரச்னைகளையும் ஆராய்ச்சி செய்ய அவகாசம் வேண்டும். இந்த நாட்டின் ஐதிகத்தையும், அக்கறைகளையும் கவனிக்கும்பொழுது சிறந்த பொருளாதார நிலைமையை ஏற்படுத்த புதிய சர்வதேச ஸ்தாபனம் அமைக்கப்பட்டு, அது திறமையுடன் வேலை செய்யவேண்டுமென்றும் அனுதாபத்துடன் எல்லோரும் ஆதரவளித்து வருகிறார்கள். ஆகிலும் பிரிடனில் ஏராளமான ஜனங்களின் வேலையில்லாமையையும், அதன் கடன்களைத் திருப்பிக் கொடுக்க முடியாமலும் ஏற்படக்கூடிய ஒரு அபாயத்துக்கு பிரிடன் உட்படாது. அது சுயநலத்தை பாதிக்கக்கூடியதாகையால் அதை பிரிடிஷ் மக்கள் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். மே மாதத்தில் அறிக்கை வெளியிட்டபின் தேசத்தின் வருமானத்தை நிலைநாட்டுவதும், வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதும்தான் பிரிடனின் பொரு ளாதார முயற்சியாக இருந்து வருகிறது. மற்றவர்களின் க்ஷேமத்துக்குக் குந்தகம் அளிக் காமல் பிரிடனின் பொருள் நிலைமை எவ்வளவு தூரம் முன்னேற்றமடைகிறது அல்லது தடைப் படுகிறதென்பதை அடிப்படையாகக் கொண்டுதான் பிரெட்டன் உட்ஸ் திட்டத்தை நாம் மதித்துப் பார்ப்போம். அதைப் பரிசீலனை செய்வதற்கு மூன்று அம்சங்களிருக்கின்றன.

தேசிய வருமானத்தையும் வேலைத் திட்டத்தையும் உயர்த்த தனிப்பட்ட நாடுகள் செய்யும் முயற்சிக்கு இப்பொழுது விடுக்கப்பட்ட ஆலோசனை ஆதரவளிக்கவேண்டும்.

இந்த அவசியத்தைத் தவிர வியாபாரத்திலும், பண்டம் மாற்றுதலிலும் சமத்வம் ஏற்படுவதற்கும், இறக்குமதி, ஏற்றுமதிப் பொருள்களின் மதிப்பு சரிக்கட்டுவதற்கும் இந்த திட்டம் ஏற்பாடு செய்யவேண்டும்.

மூன்றாவதாக இந்த திட்டம் உலகத்தின் பொருளாதார அபிவிருத்திக்குரிய சாத்யமான முறைகளைக் கற்பிக்க வேண்டும். உலகில் எவ்வித ஆட்சிமுறையுள்ள தனிப்பட்ட நாடுகள் இருந்த போதிலும் சிறிய தேசங்கள் பொருளாதார கோஷ்டிகளாக ஒன்றுபட்டு, தனிப்பட்ட சொரூபத்தையும் காப்பாற்றி, நவீன முறையில் ஏராளமான உற்பத்தியின் பலனை அனுபவிக்க அவைகளுக்கு சந்தர்ப்பமும் உத்சாகமும் அளிக்கப்படவேண்டும்.

உலகத்தின் சமாதானமும், க்ஷேமமும் நிலைபெற வேண்டுமானால் ராஜீய விஷயங்களிலும், பொருளாதார முறையிலும் அபிவிருத்தி ஏற்படவேண்டும். பிரெட்டன் உட்ஸ் மகாநாட்டின் முடிவுகளை இந்த நோக்கங்களுடன்தான் வருங்காலத்தில் ஆராய்ச்சி செய்வோம்.

---

# "தேசிய சேமிப்பு" ஜன சமூக இயக்கம்.

## குறிப்பான "வாரங்களில்" உத்ஸாகம்.

### சேமிப்பினால் மனோபலம் அதிகப்படுகிறது.

(பிரிடன் தேசிய சேமிப்பு சங்கத்தின் சேர்மன் ஸர் ஹெரால்ட் மாகின்டாஷ்).

இந்த யுத்தத்தில் பிரிடனிலுள்ள மக்கள் அரசாங்கத்தில் 7,500,000,000 பவுன்களை சேமித்து வைத்துள்ளார்கள். சராசரி வாரத்திற்கு 32,000,000 பவுன்கள் விகிதம் சேமித்துள்ளார்கள். இத்தொகையில் 2,800,000,000 பவுன்கள் சேமிப்புப் பத்திரங்களிலும், பாதுகாப்பு பத்திரங்களிலும் சேமிக்கப்பட்டோ, அல்லது தபாலாபீஸ்களிலோ, அல்லது நம்பிக்கையுள்ள சேமிப்பு பாங்கிகளில் போடப்பட்டோ இருக்கிறது. "சிறிது சிறிதாய்" ஆண்களாலும், ஸ்திரீகளாலும் இப்பெரிய தொகை சேமிக்கப்பட்டுள்ளது.

'பெரும்' சேமிப்பு முறையில், யுத்த பத்திரங்களிலும், சேமிப்புப் பத்திரங்களிலுமாய், 4,700,000,000 பவுன்கள் சேமிக்கப்பட்டுள்ளது. இவைகள் பெரும் பாங்கிகள், இன்ஷூரன்ஸ் கம்பெனிகள், கட்டட சங்கங்கள் முதலியவைகளிலிருந்து போட்டு வைக்கப்பட்டவைகளாகும். அவைகளும் ஒரு முறையில் மக்களால் சேமிக்கப்படுபவையே.

இப்பெருந்தொகையில் ஒவ்வொரு பென்ஸும் யுத்த முயற்சிக்காக ஒவ்வொருவரும் அவரவர்கள் மனம் விரும்பி, தானாகவே கொடுக்கப்பட்டதாகும். இப்படி இருக்கிறது இதில் வெற்றி :—எவ்வாறுளது இச்செய்கை?

#### போற்றத்தக்க பொருள் நடவடிக்கை.

ஒவ்வொரு விதத்தில், தேசிய சேமிப்பு சங்கம் தன் வேலையில் முழு வெற்றி அடைந்துள்ளது என்பது வெளிப்படை. இந்நடவடிக்கை போற்றத்தக்கதே. சேமிப்பு இயக்கம் முதலாம் உலக மகா யுத்தத்தின்போது ஸ்தாபிக்கப்பட்டு, அதிர்ஷ்ட வசமாய் யுத்தம் முடிந்தபோதும், கலைக்கப்படவில்லை. எனவே யுத்தம் திரும்பவும் ஆரம்பித்ததும் 42,000 சேமிப்பு இயக்கங்கள் வேலை செய்ய ஆரம்பித்தன. யுத்தத்தின் காரணமாய் 3,00,000 இயக்கங்கள் இப்பொழுது வேலை செய்கின்றன. அவைகளில் 1,25,000 வீதிகளிலும், கிராமங்களிலும் வேலை செய்கின்றன. பிரிடனின் உள்நாட்டு இயக்கங்களில், இந்த வீதி, கிராம இயக்கங்கள்தான் மிகவும் முக்கியமானவை. இன்றைய தினம் ஜன சமூகம் என்று சொல்லப்படும் இந்த அரசாங்க இயக்கங்



களில் சுமார் 6,00,000 மனிதர்கள் தானாகவே, முன் வந்து உழைக்கின்றனர். தேசிய சேமிப்பு பிரிடனின் கஜானாக்களைச் சேர்ந்த வேலை.

இந்த இயக்கத்தில் உழைப்பவர்கள் அனைவரும் தாமாகவே, யாதொரு பிரதி பிரயோஜனத்தையும் எதிர்பாராமல் உழைப்பதால்தான் அநேகமாய் 1 சதவிகிதத்தில் 16-ல் ஒரு பகுதியை சேமிக்கின்றனர்.

இந்த சேமிப்பு திட்டம் இந்த முறையிலேயுளது. கஜானாவில் வாராவாரம், 16,000,000 அங்கத்தினர்கள் பணங்களை கொண்டுவந்து செலுத்துகின்றனர். இதைத்தவிர தனிப்பட்டவர்களும் சேமிக்கின்றனர். யுத்த தேவைகளின் காரணம் கஜானாவிலும் சில மாறுதல் வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு வருஷமும் இந்த சேமிப்பு அதிகப்பட்டுக் கொண்டே வருகிறது. இந்த சேமிப்பு முறையில் உழைத்து அதிகப்பட்ட பொருள் சேமிக்கப்படுகிறது.

இந்த வகைத் திட்டங்களில் நான்காம் விதத்தில் பிரிடன் இப்பொழுது இறங்கியுள்ளது. "ராணுவ வீரனை வந்தனம் செய்யும் முறை," யுத்த தளவாடங்கள் முதலில் 4,69,000,000 பவுன்களை அளித்தது. "யுத்தக் கப்பல்கள்" 5,46,000,000 பவுன்களை அழித்தது. "வெற்றிச் சின்னம்" ஏற்பட்டபோது சென்ற வருஷத்தில் 6,15,000,000 பவுன்கள் சேமிக்கப்பட்டது. இந்த 'வந்தன' முறையில் அதிகம் நடக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

முன்பு அமுலில் இருந்த முறைகளினின்றும் கிடைத்த அனுபவத்தைக்கொண்டே இந்த முறையும் ஆரம்பிக்கப்படுள்ளது. வந்தனம் என்றால் சேனைக்கோ அல்லது யுத்த அதிகாரிகளுக்கோ அல்லது யுத்த ஆபீஸுக்கோ வந்தனம் அல்ல. ஒவ்வொரு ராணுவ வீரனுக்கும் வந்தனம். இதில் ஒரு மனோநிலையின் வேண்டுகோள் உளது. ஏனெனில் இந்த சேனைதான் பெரிய ஸாதனமாகும். பிரிடனில் உள்ள வீடுகளில் அநேகமாய் ஒவ்வொரு வீட்டிலுமிருந்து பிரதிநிதிகள் உளர். ஒவ்வொருவரும் ஒவ்வொருவரை வந்தனம் செய்வார்கள், தன் கணவன், தன் மகன், தன் மகள், தன் சகோதரன், தன் சகோதரி ஆகிய இவர்களில் யாராவது ஒருவரை வந்தனம் செய்யவேண்டியிருக்கும். அவர்கள் எல்லாரும் இம்முறையில் பெரிதும் உழைப்பாளர்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

#### சேமிப்பு தீவிரமாயுளது.

சேமிப்பு முறைகளில் மேற்கூறிய முறை மிகவும் பெரிதாயும், லாபகரமாயும் உள்ளது. இதில் பணம் சேமிப்பதன்னியில், இதனால் மக்களின் மனோவலி அதிகமாகிறது. பிரிடனின் மனோவலியை திடப்படுத்தியது சேமிப்பு முறை என்றால் மிகையாகாது. மனோசாஸ்திரப்படி சேமிப்பு மிகவும் போற்றத்தக்கதே. பிரிடனின் ராணுவத்திற்கு போதிய வசதிகள் அளிக்கப்படுகின்றன. இப்பொழுது பிரிடனின் ராணுவத்தைச் சேர்ந்தோரின் வாழ்க்கைகளை, அங்கு நடைபெற்றுவந்த கண்காக்ஷிகளினின்றும் பிரிடனில் யாவரும் அறிவர். அவைகளைப் பற்றி விரிவாயும் வெளிப்படுத்தப்படுகிறது.

இதன் பயன் என்ன? லண்டனில் 166,629,273 பவுன்கள் குறிப்புக்குமேல் மிகவும் அதிகமாய் சேகரிக்கப்பட்டுள்ளது. எங்கும் இதேமாதிரிதான் நடந்துள்ளது.

சிறு இடங்களிலும் இதுவே போலத்தான். கிராமங்களிலும் போதிய அளவு சேமிக்கப்படுகிறது. யார்க்ஷயரைச் சேர்ந்த கிராமம் ஒன்றில் தலைக்கு 185 பவுன் வீதம் சேமிக்கப்படுகிறது. செஷயரிலுள்ள ஒரு கிராமத்தில் தலைக்கு 128 பவுன் வீதம் சேமிக்கப்படுகிறது. உண்மையில் அவர்களின் வருமானம் வாரத்திற்கு 50 பவுன்கள் வீதம் உயர்ந்துமிருக்கிறது. கிராமங்களும் முழு உணர்ச்சியுடனும், திடமான சிந்தையோடும் உரைக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கதே.

இந்த எல்லா முறைகளும், சேனை, கடற்படை, விமானப்படை, இவைகளால் பெரிதும் உதவப்பட்டன. அமெரிக்கப் படைகளும் தளவாடங்களை அளித்தும் இம்முறைகளுக்கு பேருதவி புரிந்துள்ளன. அவைகள் மிகவும் உணர்ச்சியையும், ஊக்கத்தையும் அளித்தன. இந்த "வந்தன முறை வாரம்" முடிந்ததும் இந்த முறைகள் வெற்றியடைந்ததாகும்.

# எட்டாவது இந்தியப் படை.

## (மத்தியதரைக் கடல் ரிவ்யூ.)

இதாலியில் வாலிபமுள்ள இந்தியருக்கு மன்னர்பிரான் விக்டோரியா கிராஸ் பதக்கத்தை வழங்கியதிலிருந்து இதாலியிலுள்ள எட்டாம் படையின் ராணுவச் செய்கைகளை விவரணம் செய்ய அவசியமேற்பட்டிருக்கிறது. இந்தப் பகுதி பிரிடிஷ் துருப்புகளும், இந்தியத் துருப்புகளும் கொண்டது. பீரங்கிப் படையாளரும், காலாட்படை பிரிகேட்டிலுள்ள ஒரு பட்டாளமும், பிரிடிஷ் ஸோல்ஜர்கள் உள்ளவை. இந்தியர்களில், பஞ்சாபிகளும், சீக்கியர்களும், பட்டாணிகளும், குர்க்காக்களும், மதராஸிகளும், டோக்ராக்களும் இதர ஜாதியார்களுமிருக்கிறார்கள். தனிப்பட்ட பகுதிகள் எகிப்திலும், எரிட்ரியாவிலும் வேவலின் தலைமையில் போர் புரிந்தன. ஆகிலும் சென்ற செப்டம்பர் மாதத்தில் இதாலியில் இறங்கிய பின்தான் அவைகள் ஒன்றுபட்டுப் போர்புரிய ஆரம்பித்தன.

அடுத்த ஒன்றிரண்டு மாதங்களில் எட்டாவது இந்தியப்படை பைபர்னோ, டிரிக்னோ, சாங்கிரோ, மோரோ நதிகளைத் தாண்டிற்று. அது எட்டாவது சேனையினுடையவும் ஜெர்மன் குடைத் துருப்புகளுடையவும் மதிப்பைப் பெற்றது. அதன் இரவு நடவடிக்கை, மலைகளில் போர்புரியும் சாமர்த்தியத்தையும், மறைந்து ஊடுருவிச் செல்லும் சாதுர்யத்தையும் டெர்பிலோ, மொன்ஸாகு ரேக்னு முதலிய கிராமங்களிலிருந்து துரத்தியடித்த நடவடிக்கையையும் நண்பர்களும், எதிரிகளும் பாராட்டினார்கள். மாரிகாலம் வந்தபொழுது உஷ்ண பிரதேசத்திலிருந்து வந்த துருப்புகள் இதாலியில் மற்றெந்த டிவிஷனையும்விட குறைவாக நோய்வாய்ப்பட்டது.

### ராபிடோ நதியைத் தாண்டிற்று.

வசந்த கால ஆரம்பத்தில் எட்டாவது இந்தியப் படை படைகளைத் திருத்தியமைக்க உதவி செய்து ஆர்சொக்னு போர்முனையில் 20 மைல் கொண்ட நடவடிக்கையை மேற்கொண்டது. காலக்கிரமத்தில் இந்தப் படை அபினைன் மலைக்கு மேற்குப்பகுதிக்குச் சென்றது. சில வாரங்கள் வரையில் ஜெனரல் ரஸ்ஸல் ஆர் சொக்னு பிராந்தியத்திலும் காசினோவிலும் ஒரு இந்திய பிரிகேட்டுக்குத் தலைமை வகித்தார்.

ஏப்ரல் மாதத்தில் பூராப் படையும் காசினோவுக்கும் விரி, நதிக்கும், நடுவில் ஈடுபடுத்தப்பட்டது. முதலில் ஜெனரல் ரஸ்ஸல் ஒரு சிறிய படையுடன் போரை நடத்திவந்தார். மற்றப் படைகள் கஸ்டாவ் அரணைத் தாக்கவும் ஆற்றில் படகை ஓட்டிச் செல்லவும் பயின்று வந்தன. இந்தப் படைகள்தான் ராபிடோ நதியைப் படகுகளில் தாண்டிச் சென்றன.

### ஹிட்லர் அரணைத் தாக்குதல்.

ராபிடோ நதியைத் தாண்டியபின் எட்டாவது இந்தியப் படை கனேடிய கவசம் பூண்ட சாதனங்களுடன் முன்னேறும் வாசலை விஸ்தாரப்படுத்தியது. அதன்பின் போலிஷ் டாங்கிகளின் உதவிகொண்டு பீடுமாண்டியைப் பிடித்தது. நியூஸீலாந்துப் படைகளின் சாதனங்களுடன் அது ஹிட்லர் அரணை ஊடுருவிச் சென்றது. நியூஸீலாந்துப் படைகளுடன் மெல்பா நதியைத் தாண்ட ஆர்சி பிரதேசத்துக்குச் சென்றது. டாங்கிகள் செல்லமுடியாதென்று நிபுணர்கள் நினைத்த பிரதேசத்தின் வழியாக கிழக்கிலிருந்து முன்னேறி ஆர்சியிலிருந்து எதிரியைத் துரத்தியடித்தார்கள். ஒரு இந்திய பட்டாளம் விலாப்பக்கத்தில் பலமாகத் தாக்குவதுபோல் பாசாங்கு செய்தபொழுது நியூஸீலாந்து டாங்கிகள் புல்டோஜர்கள் சுத்தி செய்த் மார்க்கமாகச் சென்று முன்னேறின.

அதன்பின் இந்திய டிவிஷன் சமகோட்டில் மற்றொரு பகுதியில் சென்றுகொண்டிருந்த பிரிடிஷ் கவசம் பூண்ட படையுடன் பந்தயம் போட்டது. வெரோலி, கொர்ஸினி, ஆர்கோலி வழியாகச் சென்று டெர்னிக்கு அந்தப் படை சென்றது. டெர்னிக்குப் பின் ஜெர்மனி பலமாகப் போராடியது. பெருகியாவுக்கும், அஸிஸிக்கும் நடுவில் அது கடும்போர் செய்தது. டைபர் நதிப் பள்ளத்தாக்கை நோக்கியுள்ள சைப் குன்றைப் பிடிக்க அது மிகவும் கஷ்டப்பட வேண்டியிருந்தது. ஒரு மாதத்தில் அந்தப் படை 220 மைல்கள் முன்னேறி மகத்தான வெற்றியைப் பெற்றது.



# ஜோஸ்யம் தேவையில்லை.

---

சமீப எதிர்காலத்தில் விலைவாசிகள் குறைந்துவிடுமா அல்லது அதிகரிக்குமா என்பதைச் சொல்ல ஜோஸ்யர் தேவையில்லை. 1943-ம் வருஷ அனுபவத்திலிருந்து விலைவாசிகள் குறைந்து வருகின்றனவென்று நிச்சயமாக எல்லோரும் அறியலாம். எங்கு பார்த்தாலும் விலைவாசிகள் குறையக்கூடிய அறிகுறிகள் தோன்றுகின்றன. விலைவாசிகளைக் கட்டுப்படுத்தும் முறைகளும் அநியாய லாபம் சம்பாதிக்கிறவர்களைத் துரிதமாக சிக்ஷைக்குட்படுத்துவதும் இந்த நிலைமையை உண்டுபண்ணியிருக்கிறது. விலைவாசிக் குறைவைக்கண்டு பயந்துவிடாதே.

உற்பத்தி சாமான்களிலும், பண்டங்களிலும், நிலத்திலும், கட்டடங்களிலும், நகைகளிலும் பொருளை முதலீடு செய்வதற்கு இது தருணமல்ல. காலக்கிரமத்தில் அதன் பொருமானங்கள் குறைந்துவிடும். இப்பொழுது 100-க்கு வாங்கிய சமானின் பொருமானம் ஒரு வருஷத்திற்குள் 70 ரூபாய்களுக்குக்குறைந்துவிடும்.

இன்ஷ்யூரென்ஸிலும், கூட்டுறவு சங்கங்களிலும், ஸேவிங்ஸ் பாங்கிகளிலும், போஸ்டாபீஸ், ஸேவிங்ஸ் பாங்கியிலும், அரசாங்கக் கடன் பத்திரங்களிலும், தேசீய சேமிப்பு பத்திரங்களிலும் முதலீடு செய்வது தான் சிறந்த நடவடிக்கையாகும்.

துணிமணி, தோல் சாமான்கள், ஔஷதங்கள், மருந்துகள், உணவுப்பொருள்கள் முதலியவற்றின் விலைவாசி குறைந்து வருகிறது. கட்டுப்பாடு முறைகள் அதிகரித்து வருகின்றன. அமுலும் கடுமையாக நடத்தப்படுகிறது. விலைவாசிகள் இன்னும் இறங்கிவிடுமென்று நிச்சயமாய் நம்புங்கள்.

சாத்தியமானவரையில் சேமித்து அவற்றை முதலீடு செய்யுங்கள்.

இது தான் தேசீய யுத்த முன்னணியின் தேசீய வேண்டுகோள்.

---

# இதுதானா வெற்றி?

## வெண்பா.

நாடழித்து வீடழித்து நல்ல உயிர் போக்கி அவ
கேடிழைத்த ஜெர்மனியின் கீர்த்திகேள்—கூடுடைத்த
அவுட்டு வாணம் போல வாயிற்றே ஆணவஞ் சேர்
குருட்டு ஞாயஞ் செய்த கூத்து.

மின்னலெதிர்ப்பெங்கே வீரமொழிப் போரெங்கே
எண்ணிய பேராசை எல்லா மெங்கெங்கே—தண்ணூழி
மேற்பொங்கி நீரலையை வேகமுடன் வீசிடினுங்
காற்பங்கோ மாறுரை கண்டாக்கால்.

கைவந்த ஓர்பொருளைக் காத்தாள சக்தியில்லா
மெய்வீர மென்னஅது வீரமா—கைகடித்த
உடும்பைவிட்டேன் கைவிடென் றோலமிட்டோடுகின்ற
இடும்பர்க்கு இந்த விதி ஏன்?

வெள்ளை என்று மேதினியில் வித்தைதனில் நம்மைவிட
இல்லை என்று மெத்த இறுமாப்படைந்த—தெல்லாம்போய்
மரம் பிளப்பில் கைநுழைத்த மந்தி போலாயிற்றே
செருத்தொடுத்த ஜெர்மனியின் சீர்.

நாடுமோ நம் நாட்டில் நாஸிகளின் சக்கரம்வந்
தாடுமோ இங்கிலீஷா, ராட்சியிலே—வாடாதீர்
போஜனே வென்னும் புதுவை நகர் நன்னுடன்
ராஜகோபாலன் தயையால்.

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 212. (4-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 26- 8-44 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 |
| 27- 8-44 | கீரப்பழனி | ... ,, | 7.00 |
| ,, | ஆலூர் | ... ,, | 7.30 |
| 28- 8-44 | புத்தாம்பூர் | ... ,, | 7.00 |
| ,, | வைத்திக்கோவில் | ... ,, | 7.30 |
| 29- 8-44 | வடவாளம் | ... ,, | 7.00 |
| ,, | சம்மட்டிவிடுதி | ... ,, | 7.30 |
| 30- 8-44 | காலேஜ் A இங்கிலீஷ் | ... காலை | 11.00 |
| ,, | காலேஜ் B தமிழ் | ... ,, | 11.00 |
| 30- 8-44 | O. S. M. பள்ளிக்கூடம் | ... காலை | 10.00 |
| ,, | ராணி பெண் பாடசாலை | ... ,, | 10.45 |
| ,, | கார்த்தாமலை | ... மாலை | 7.00 |
| ,, | உப்பிலியக்குடி | ... ,, | 7.30 |
| 31- 8-44 | அண்டக்குளம் | ... ,, | 7.00 |
| ,, | கிள்ளனூர் | ... ,, | 7.30 |
| 1- 9-44 | கொடும்பாளூர் | ... ,, | 7.00 |
| ,, | விராலூர் | ... ,, | 7.30 |

### பிரஸங்கம் 213. (5-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 2- 9-44 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 |
| 3- 9-44 | ஆலங்குடி | ... ,, | 7.00 |
| ,, | ராசியமங்கலம் | ... ,, | 7.30 |
| 4- 9-44 | திருமெய்யம் | ... ,, | 7.00 |
| ,, | மேலூர் | ... ,, | 7.30 |
| 5- 9-44 | புலியூர் | ... ,, | 7.00 |
| ,, | கண்ணங்குடி | ... ,, | 7.30 |
| 6- 9-44 | காலேஜ் A இங்கிலீஷ் | ... காலை | 11.00 |
| ,, | காலேஜ் B தமிழ் | ... ,, | 11.00 |
| 6- 9-44 | O. S. M. பள்ளிக்கூடம் | ... காலை | 10.00 |
| ,, | ராணி பெண் பாடசாலை | ... ,, | 10.45 |
| ,, | அன்னவாசல் | ... மாலை | 7.00 |
| ,, | கீழக்குறிச்சி | ... ,, | 7.30 |
| 7- 9-44 | கல்லூர் | ... ,, | 7.00 |
| ,, | மாத்தூர் | ... ,, | 7.30 |
| 8- 9-44 | பொ. புதுப்பட்டி | ... ,, | 7.00 |
| ,, | வேந்தம்பட்டி | ... ,, | 7.30 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | |
|---|---|
| 26—8—44 | திருமெய்யம். |
| 27—8—44 | கீத்தான்விடுதி. |
| 29—8—44 | பேராம்பூர். |
| 31—8—44 | கீழாநிலை. |
| 1—9—44 | புதுக்கோட்டை. |
| 2—9—44 | வெட்டம்விடுதி. |
| 3—9—44 | மருதன்கோன்விடுதி. |
| 5—9—44 | கோனுபட்டு. |
| 7—9—44 | கீழாநிலை. |
| 8—9—44 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai, 1,750—29-8-44.


புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1944-ம் வருஷம் ஸெப்டம்பர்மீ 2உ [ந. 213


தேசீய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CCXIII.

ருஷ்யப்படைகள் ருமேனியாவின் தலைநகரமான
புகாரெஸ்டுக்குள் நுழைந்தன.
ஹங்கேரி சமாதானத்தைக் கோருகிறது.

யுத்தத்துக்குப்பின் உலக புனரமைப்பு.

—6-ம் பக்கம் பார்க்க.

## யுத்தக் குறிப்புகள்.

**ஸெப்டம்பர் 3-ம் தேதி.** நாளையதினம் யுத்தத்தின் ஐந்தாவது வருஷம் பூர்த்தியாகிறது. உலகத்திலுள்ள எல்லாக் கண்டங்களும், தேசங்களும், தேசமக்களும் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அல்லது தியாகங்களைச்செய்து வருகிறார்கள். அநேக நெருக்கடிகளையும், கஷ்டங்களையும் நான்கு வருஷங்களாக அனுபவித்து இப்பொழுது உலகம் சௌகரியமான நிலைமையை அடைந்துவிட்டது. உலகத்தார் இன்னும் அதிக பிரயாசை எடுத்துக்கொள்ளவேண்டும். தியாகங்களைச் செய்யவேண்டும். போரை நடத்த வேண்டும்.

நமக்கு நாளைக்கு பிரார்த்தனை தினமாகும். நாம் தாழ்வரைகளையும், மேடுகளையும், படுகுழிகளையும் தாண்டியபின் மலையின் உச்சி திருஷ்டிகோசரமாகுகிறது. இப்பொழுது குறுகலான பிரதேசத்தில் நின்றுகொண்டிருக்கிறோம். நமக்குமுன் செங்குத்தான மலை இருக்கிறது. ஆகையால் நம்முடைய பிடிப்பை பலப்படுத்தி இறுதி முன்னேற்றத்திற்கு மன உறுதியுடனும், ஈஸ்வர கிருபையுடனும் தயார்செய்து கொள்ளுவோம்.

உண்மையும் நீதி மார்க்கமும், நமது கக்ஷியின் பலமான பிடிப்புகள். டங்கர்க்கிலிருந்து பின் வாங்கியபின் ஈஸ்வர கிருபையால் நாம் மறுபடியும் பாரிஸை விடுவித்துவிட்டோம். தோல்விக்குப்பின் வெற்றி ஏற்பட்டிருக்கிறது. தெய்வானுகூலம் நமக்குக் கிடைத்திருக்கிறது. அவன் திருவருளால் நாம் போர் புரிகிறோம்.

ஒவ்வொரு நாளும் நமக்குப் புதிது புதிதான வெற்றிகள் கிடைத்து வருவதினால் இன்று நாம் விசுவாசத்துடனும், நம்பிக்கையுடனும் நம்முடைய சேவையை அர்பணம் செய்வோம்.

மாதகோவில்களிலும், யூதர்களின் தேவாலயங்களிலும் மசூதிகளிலும், ஆலயங்களிலும் நாம் கடவுளிடம் வழிபடுவோம்.

நான்கு வருடங்களுக்குமுன் ஜெர்மனி நம்பேரில் பாய்ந்தது. துரோக நடவடிக்கை தான் அவனுடைய ஆயுதம். நண்பர்கள் பேரிலும், விரோதிகள் பேரிலும் அவன் பாய்ந்தான். அவன் ஒருகொள்ளைக்கூட்டத்தாரைச்சேர்த்துக்கொண்டான். பிரான்ஸ்வீழ்ச்சிபெற்றபொழுது இதாலி அவனை முதுகில் குத்திற்று. பிறகு பெர்ல் துறைமுக நடவடிக்கைமூலம் ஜப்பானும் போரில் கலந்துகொண்டது. சிலகாலம் வரையில் ஓநாய்களும், நரிகளும் கொள்ளையடித்தன. வெறி பிடித்தவனின் அமுலுக்குட்பட்டு, கொலையாளிகளும், திருடர்களும், பொய்யர்களுமான, ஹிம்லர், ரிப்பன்டிராப், கோபல்ஸ் போன்றவர்கள் உலக ஆதிக்கத்தைக் கோரினார்கள். கொள்ளையடிப்பது மதிப்பிடத்தக்க முறையாகிவிட்டது. துன்புறுத்துவது கியாதிபெற சாதகமாகிவிட்டது. கொடுங்கோன்மை நிர்வாக முறையாகிவிட்டது.

இந்த நடவடிக்கைகள் எல்லாம் நான்கு வருடங்களுக்குமுன் ஹிட்லர் அக்கிரமமாக ஐரோப்பா பூராவையும் ஆக்கிரமித்துவிட்டான். கடல் மத்தியிலுள்ள பிரிடன் மட்டும் பாக்கியாகயிருந்தது. பிரிடிஷ் படைகள், அழிக்கப்பட்டுவரும் ஐரோப்பாவை ரக்ஷிக்க கடல் தாண்டிச் சென்றன. அவர்களையும் ஹிட்லர் தாக்கினான். அதன்பின் டங்கர்க்கிலிருந்து படைகள் பின்வாங்கின.

தெய்வ சங்கல்பம் வேறு விதமாக இருந்தது. டங்கர்க்கில் பிரிடிஷ் படைகள் நிர்மூலமாகிவிடுமென்று எதிரி நினைத்தான். படைகள் பத்திரமாக பிரிடனுக்குத் திரும்பி வந்தன.

ஆனால் பிரிடனுக்கு ஏற்பட்ட அபாயம் நீங்கி விடவில்லை. கப்பல்களைத் திரட்டிக் கொண்டு, கால்வாயைத் தாண்டி பிரிடனைப் படையெடுப்பதென்று எதிரி முயற்சித்தான். யூ படகுகளை கடலுக்குள் அனுப்பி பிரிடனை வறுமைக்குட்படுத்தவும் முயன்றான். ஜெர்மன் வெடி விமானங்களை அனுப்பி பிரிடனைப் பொசுக்கி விடுவதென்றும் எண்ணினான். பிரிடிஷ் கடற்படை கடற்கரையையும், சமுத்திரத்தையும் தற்காப்பு செய்தது. விமானிகள் எதிரிகளின் விமானங்களை எதிர்த்துப் போராடினார்கள்.

பிரிடன் தன்னந்தனியே நின்றது. ஆயினும் தனித்து நின்று போர் புரிய ஊக்கம் கொண்டிருந்தது. இந்த சமயத்தில் உலக ரக்ஷகரான மிஸ்டர் சர்ச்சில் முன் வந்தார். அவர் யுத்த பேரிகையை முழக்கினார். ஜனங்களின் பிரதித்வனி கேட்டது. அவருடைய ஆக்ஞைப் பிரகாரம் பிரிடிஷ் ஆடவர்களும், ஸ்திரீகளும் ஊக்கத்துடன் தங்களுடைய அலுவல்களைச் செய்ய முன் வந்தார்கள். ஆயுதங்களும், சேனைகளும், கடற்படையும் திடீரெனத் தோன்றின. கடற்படை கடலில் ரோந்து செய்தது. உணவுப் பொருள்களும், ஆயுதங்களும் அட்லாண்டிக்கடல் தாண்டி பத்திரமாக வந்துசேர்ந்தன. பிரிடன் பலமான தற்காப்பு அரணாக மாறிவிட்டது.

ஆயினும் எதிரி நமது நாட்டின் வாசற்படியில் நடமாடிக்கொண்டிருந்தான். நமது சாம்ராஜ்யத்திற்கு அபாயம் நேரிடும்போலிருந்தது. இதாலி மத்தியக் கிழக்கை விழுங்கிவிடும்போல தோன்றிற்று. குறைவான மூஸ்தீப்புகளுள்ள ஒரு சிறிய படையுடன் வேவல் பிரபு அபிஸீனியாவை விட்டு இதாலியர்களைத் துரத்தியதினால், இதாலியின் போலி சாம்ராஜ்யம் அழிந்தது. இப்பொழுது பிரிடிஷ் கடற்படை தன்னுடைய அலுவல்களைச் சாவதானமாக நடத்தி வந்தது. மத்தியதரைக்கடல் இதாலியின் ஏரி என்று சொன்ன பேச்சு ஒழிந்தது. மால்டா தீவுக்கு ஜார்ஜ் கிராஸ் பதக்கம் வழங்கப்பட்டது. இவைகளில் அநேக நடவடிக்கைகள் 1940-ம்வருஷ மாரி காலத்தில் நடைபெற்றன. இதுதான் வெற்றியின் முதல் தோற்றம்.



இந்த வெளிச்சம் வெகு சீக்கிரம் மங்கிவிட்டது. எதிரி கிரீஸின் பேரில் படையெடுத்தான். எதிரி கிழக்கிலிருந்து மத்தியதரைக்கடல் பிரதேசத்தில்பிரவேசித்து மத்தியக்கிழக்குக்கு மறுபடியும் அபாயத்தை உண்டுபண்ணினான். தெய்வானுகூலமாக ஹிட்லர் அவனுடைய நடவடிக்கைகளின் மூலமாகவே பிரிடனின் நண்பனாகவும் வீழ்ச்சிக்குக் காரணமாகவும் மாறினான். 1941-ம் வருஷ வேனிற் காலத்தில் ருஷ்யாவைத் தாக்கி அவன் தற்கொலை செய்து கொண்டான்.

இதற்குப் பின் யுத்தப்போக்கு பிரிடனுக்கு சாதகமாக மாறிவிட்டது. அதற்கு ருஷ்யா என்ற ஒரு புது நண்பன் கிடைத்தான்.

மாரி காலத்தில் ஜப்பானும், பிரிடனுக்கு உதவியளிக்க முன்வந்தது. பெர்ல் துறைமுகத்தில் நடைபெற்ற துரோகச் செய்கை மூலம் ஜப்பான் அமெரிக்காவை போரிலீடும்படி செய்தது. அமெரிக்கா இது வரையில் யுத்தத்தில் நேசதேசக் கக்ஷியில் சேர்ந்துகொள்ளத் தயங்கி நின்றது. இப்பொழுது பிரிடன் தன்னந்தனியே நிற்கவில்லை. அதற்குப்பின் 40 தேசங்கள் பிரிடனுடன் சேர்ந்துவிட்டன. ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் நாடுகளும், அவைகளிலுள்ள எதிர்ப்புப் படைகளும் நேசக்கக்ஷியில் சேர்ந்துவிட்டன.

1942-ம் வருஷத்தில் பிரிடன் தற்காப்பு முறையிலிருந்து முன்னேறித் தாக்கும் நிலைமையை அடைந்தது.

வி வி வி வி வி

1942 வருஷத்தில் ஆபிரிக்காவில் நமக்கு வெற்றிகள் கிடைத்தன. வேவல் பிரபுவிடமிருந்த படைகளைவிட இப்பொழுது மத்தியக் கிழக்கிலுள்ள படைகள் அதிக பலம் பொருந்தியதாகிவிட்டன. ஆபிரிக்காவிலுள்ள பிரிடிஷ் படை ரோமலை எதிர்த்துப் போராட சக்தி பெற்றுவிட்டது. பரீக்ஷா காலம் வந்தது. எல் அலமீன் யுத்தத்தில் மாண்ட் காமரி மத்தியதரைக்கடல் பிரதேசத்தில் தெற்கிலும், கிழக்கிலும் ஆதிக்கம் பெறுவதென்ற ஜெர்மனி எண்ணத்தை அடியோடு அழித்துவிட்டார்.

வி வி வி வி வி

1943 வருஷத்தில் அநேக இடங்கள் மீட்கப்பட்டபோதிலும், அநேக வெற்றிகள் கிடைத்தபோதிலும், அவ்வருஷத்தில் இவ்வருஷம் ஏற்பட்ட மகத்தான படையெடுப்புக்கு பலமான ஒத்திகைகள் செய்யப்பட்டனவென்றுதான் நினைக்கவேண்டும். 1943-ம் வருஷம் வசந்தகாலத்தில் பிரிடிஷ் கடற்படையும், அமெரிக்க கடற்படையும் ஒன்றுபட்டு ஆபிரிக்காவிலிறங்கின. அதன் விளைவாக டூனிஸியா விடுவிக்கப்பட்டது. 25,00,000 ஜெர்மன் ஸோல்ஜர்களும் அவர்களின் படைத்தலைவர்களும் சரண் புகுந்தார்கள். அதற்குப்பின் ஸிஸிலியிலும், இதாலியிலும் படைகளிறங்கின. இதாலியின் தெற்கு மத்திய பாகங்களும் பிளாரென்ஸும் நமது வசமாகிவிட்டன. இதாலி சரண் புகுந்தது. முஸோலினி வீழ்ச்சிபெற்றான்.

ஆயினும் 1943-ம் வருஷம் பரீக்ஷாகாலம்தான். அவ்வருஷத்தில் இருவகை, மூன்றுவகை நடவடிக்கையில் படிப்பினைகள் ஏற்பட்டன. இந்த அனுபவத்தின் பயன்கள் நமக்குக் கிடைத்துவிட்டன. நார்மண்டியில் படைகள் வெற்றிகரமாக இறங்கிவிட்டன. ரிவிரியாவிலும் படைகளிறங்கியதற்கு யாதொரு எதிர்ப்புமில்லை.

கிழக்குப் போர்முனை நிகழ்ச்சிகள் புராணத்துக்குறியவை. தேசங்களை இழந்துகொண்டே பின்வாங்கி ருஷ்யா பெரிய படைகளையும் மூஸ்தீப்புகளையும் தயார் செய்தது. ஆர்க்டிக் கடல் வழியாக எதிரிகளின் நீர்மூழ்கி எதிர்ப்பையும் சமாளித்து பிரிடன் உதவி அளித்துவந்தது. அமெரிக்காவும் பாரசீக வளைகுடா வழியாக சரப்பாக்களை அனுப்பி வந்தது. பிரிடிஷ் அமெரிக்க விமானப்படைகள் இரண்டாம் போர்முனையைத் துவக்கி ஜெர்மன் தளவாட உற்பத்தியை அழித்துவந்தன. கார்போரல் ஹிட்லரும், அவனுடைய தவறுதல்கள் மூலம் ஸ்டாலினுக்கும், அவனுடைய சகாக்களுக்கும் ஜெர்மானியர்களை ருஷ்ய பூமியிலிருந்து துரத்தியடிக்க ஒரு சிறிது ஒத்தாசை செய்தான். ஸ்டாலின்கிராட்டில் ஸ்டாலினுக்குக் கிடைத்த வெற்றி பிசாசைப்போல் அவனைப் பின் தொடர்ந்துவிட்டது.

ஆகிலும் அவனுக்குச் சரியான சிக்ஷை ஏற்படவில்லை. செம்படை ஜெர்மனிக்குள் பிரவேசித்து விட்டது. பெர்லினை நோக்கி முன்னேறுகிறது. இந்த சந்தோஷகாலத்தில் நாம் பசிபிக் போர் முனையை மறந்துவிடக்கூடாது. பசிபிக் போரும் மேன்மையாக இருந்துவருகிறது. பிலிப்பைன்ஸுக்குக் கூடிய சீக்கிரம் விடுதலை ஏற்படும். ஜப்பானுக்கே அபாயம் உண்டாகி விட்டது.

ஆபிரிக்காவிலும், இதாலியிலும், இந்தோ-பர்மா எல்லைச் சரகத்திலும் நமது இந்தியப் படைகளின் தீரத்தையும், சேவையையும் நாம் மறந்துவிடக்கூடாது. பர்மாப் போரில் புதிதாகத் திரட்டப்பட்ட இந்திய சேனையும், கடற்படையும், விமானப்படையும் விசேஷப் பங்கெடுத்துக்கொண்டன. அவைகள் ஜெர்மனியின் சிறந்த படைகளைத் தாக்கி அவைகளையும் அவைகளின் தலைவர்களையும் அடி பணியும்படி செய்துவிட்டன. அட்ரியாடிக் பகுதியிலிருந்து ப்ளாரென்ஸ் வரையிலும் கிடைத்த வெற்றிகளுக்கு இந்தியர்கள்தான் ஜவாப்தாரிகள்.

8-வது இந்தியப்படையை எல்லோரும் போற்றுகிறார்கள். மாட்சிமை தங்கிய மன்னர் பிரான் அதை கௌரவித்தார். நேசதேசத்தார்கள் அதைப் பாராட்டுகிறார்கள்.

இறுதி வெற்றிக்காக நாம் பிரார்த்தனை செய்வோம். நமது சிரமங்கள் இன்னும் ஒழிந்து விடவில்லை.

“நமது ரக்ஷகரும் ஊக்கமளிப்பவரும் கடவுள்தான். ஆபத்துக் காலத்தில் அவர் உமக்கு உதவியளிப்பார். அண்டம் பிரண்டாலும் நாம் அஞ்சோம்.”

வி வி வி வி வி

**பாரிஸ்** விடுவிக்கப்பட்டது என்ற செய்தி ஊர்ஜிதமாகிவிட்டது. பிரெஞ்சு உள்நாட்டுப் படைத்தலைவரான ஜெனரல் கோனிக் அசட்டுத்தனமாக இந்தத் தகவலை அவசரமாகப் பகிரங்கப்படுத்திவிட்டு ஜெர்மானியர்கள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைச் செய்துகொண்டார்களென்று வெளியிட்டார். ஜெர்மானியர்கள் இந்த உடன்படிக்கையை உடன்காலத்திலேயே மீறிவிட்டார்கள். கோனிக் இந்தத் தகவலை ஜெனரல் ஐஸன்ஹவருக்கு அனுப்பாததால் அவருடைய காரியாலயம் அதை ஊர்ஜிதப்படுத்தவில்லை. ஆகையினால்தான் சென்ற வாரக் கடைசியில் வெளிவந்த தகவல்களில் குழப்பமும், மாறுதல்களும் காணப்பட்டன.

இப்பொழுது எல்லாம் முடிந்துவிட்டது. ஜெனரல் ஐஸன்ஹவர் பாரிஸுக்கு விஜயம் செய்தார். குதூகலமான வரவேற்பு ஏற்பட்டது. பாரிஸ் ஜனங்கள் தெருக்களில் தோரணங்கள் கட்டி நேசதேசத்தாருக்கு வாழ்த்துடனே அவர்களை வரவேற்றார்கள்.

நான்கு வருஷ அடிமைத் தனத்துக்குப்பின் பாரிஸ் விடுதலை பெற்றது. ஜெனரல் டிகால் பாரிஸுக்குத் திரும்பி வந்தார். விஷி நிர்வாகம் மறைந்தது. விஷி நகரம் நேசதேச வசமாகி விட்டது. பிடேய்னும், லவாலும் ஜெர்மானியர்களால் கைது செய்யப்பட்டார்கள். ஸ்பெயினிலும் ஸ்விட்ஜர்லாந்திலுமுள்ள விஷி அயல்நாட்டு ஸ்தானிகர்கள் திரும்பி வந்து விட்டார்கள். இந்த சமயத்தில் ஜப்பான் பிரெஞ்சு இந்தோ சைனாவை ஆக்கிரமித்து விட்டது.

1940-ம் வருஷம் ஜூன் மாதம் 11-ம் தேதியன்று ஆரம்பமான துயரம் நீங்கிவிட்டது. நாஸிக்கொடி அகற்றப்பட்டு அவமதிப்பை அடைந்தது. இந்த வைபவத்தை உலகத்தார்கள் யாவரும் கொண்டாடுகிறார்கள். பாரிஸ் உலகத்துக்கு முக்கியத்வமுள்ளது. அதன் கலைஞானம் உலகத்தாரின் ஐச்வரியம்.

வி வி வி வி வி

**மாண்ட் காமரியின் வெற்றி.** மாண்ட் காமரியும், ரோமலும் பழைய விரோதிகள். வடக்கு ஆபிரிக்காவில் அவ்விருவரும் எதிர்த்துப் போராடினார்கள். அதன் விளைவு நமக்குப் புலப்படும். ரோமல் வடக்கு ஆபிரிக்காத் தோல்விக்கு இதாலியக் கடற் படையின் பயங்காளித்தனமும் இதாலியின் துரோக புத்தியும் நேசதேசத்தாரின் கடல் நடவடிக்கையும் தான் காரணம் என்று சொல்லப்பட்டது.

இப்பொழுது பிரான்ஸில் ரோமல் மறுபடியும் தாக்கப்பட்டுத் தோல்வியுற்றான். இதற்கு ஜெர்மன் என்ன ஜவாப்புச் சொல்லப்போகிறது. பிரான்ஸுக்கான போரை ஆராய்ச்சி செய்த லெப்டினென்ட் ஜெனரல் ஸர் டக்ளஸ் ப்ரௌன்ரிக் இதில் நான்கு கட்டங்களிருந்தன வென்று சொல்லுகிறார்.



1. **படையெடுப்பு.**—படைகளிறங்குவது, செர்பர்க் பிடிபட்டது. கோடன்டின் தீப கற்பம் ஆக்கிரமிக்கப்பட்டது. எல்லாம் ஒரு மாதத்திற்குள் நிறைவேறின.

2. **விஸ்தாரம்**—மூன்று வாரங்களுக்குள் கேயன், ஸெயிண்டு லோ பிடிபட்டது. ஆர்ன் நதி தாண்டப்பட்டது. அமெரிக்கப் படைகள் ஜெர்மன் படை வரிசைகளைப் பிளந்தன. மாண்ட் கமாரி ரோமலை கேனில் தேக்கி வைத்தார்.

3: இரண்டு வாரங்களுக்குள் சார்தி, லுவர் நதிக்கரையிலுள்ள ஜெர்மன் படை வரிசைகள் ஊடுருவிச் செல்லப்பட்டன.

4. **சுற்றி வளைப்பது.**—இரண்டு வாரத்திற்குள் பலேயில் வெற்றி, பாரீஸ் விடுதலை, டி தினமாகிய ஜூன் 6-லிருந்து 11 வாரத்திற்குள் இவ்வளவு நடவடிக்கைகள் நடந்தேறின.

வி வி வி வி வி

**சமீபத்தில் பிரான்ஸின் விடுதலை.** பிரான்ஸின் பெரும் பாகம் மீட்கப்பட்டுவிட்டது, நார்மண்டிப் போர் வெற்றிகாமாக முடிந்து விட்டதென்று மாண்ட் காமரி சொல்லுகிறார். மாக்விப் படைகள் பிரினீஸ் எல்லைச் சரகத்தைக் காபந்து செய்து வருகிறார்கள். நேசதேசப்படைகள் செனி, லுவார், மார்ன் நதியைத் தாண்டி ஜெர்மனியின் எல்லைச் சரகத்தை நோக்கி முன்னேறுகின்றன. பிரான்ஸில் எந்த இடத்திற்கும் அவைகள் தங்கு தடையன்னியில் செல்லக்கூடுமென்று தோன்றுகிறது.

பிரான்ஸில் எஞ்சியுள்ள ஜெர்மன் படைகள் அழிக்கப்படும். அவைகள் மார்ன், சோம் நதியிலும், மாகினோ, ஸிக்பிரிட் அரணிலும், பெல்ஜியம் ஹாலந்திலும் நின்று போராட முடியாது. தற்காப்பு அரண்களும் இடையூறுகளும் அட்லாண்டிக் அரண் சென்ற வழியே மறைந்து விடும்.

வி வி வி வி வி

**பிரெஞ்சு உள்நாட்டுப்படை.** பிரான்ஸின் விடுதலைப்போரில் ஜெனரல் கோனிக்கிடமுள்ள மாக்விப் படைகள் அரிய சேவை செய்திருக்கின்றன. கோனிக் புதிய தலைவரல்ல. அவர் தான் வடக்கு ஆபிரிக்காவில் ரோமலை பீர்ஹாகிமில் எதிர்த்து முறியடித்தார். அந்தப்படைகள் பாரிஸையும், மார்செல்ஸையும் போர்டோவையும் விடுவித்து விட்டன. கடைசியாக வந்த தகவல்களிலிருந்து 14 பகுதிகளும் 43 நகரங்களும் விடுவிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. இந்தப்படை பிரிடனுக்காக விமானப் போர் நடந்த பொழுது ஆவிர்ப்பவித்தது. பிரிடன் ஆகாயப் போரில் வெற்றி பெற்றதைக் கண்டு ஜெர்மானியர்களை முறியடிக்க முடியுமென்று தோல்வியுற்ற பிரெஞ்சுக்காரர்கள் கண்டு பிடித்தார்கள். கார்சிகாவில் ஒளிந்து கொண்டிருந்த மாக்விப் படைகள் எதிர்ப்பு கோஷ்டியாகத் திரண்டு நடவடிக்கைகளை ஆரம்பித்தார்கள். முதலில் ஜெர்மனிக்கு வேலைக்குச் சென்றவர்களை அப்புறப்படுத்தினார்கள். ஜெர்மன் ரக்ஷகப்படைகள் பேரில் வெடிகுண்டுகளை வீசினார்கள். இன்னும் மற்ற கபடமான வேலைகளையும் மேற்கொண்டார்கள்.

வி வி வி வி வி

**மத்திய ஐரோப்பாவும், பால்கன் நாடுகளும்.** பால்கன் நாடுகளிலும் கிளர்ச்சி ஏற்பட்டு விட்டது. இந்த வாரத்தில் அநேக முக்கியமான சம்பவங்கள் நேரிட்டிருக்கின்றன.

(1) ஸெகோஸ்லாவேகியா நிர்வாகம் 1938-ம் வருஷம் ஸெப்டம்பர் 29-ம் தேதி ஏற்பட்ட மூனிச் ஒப்பந்தத்தை நிராகரித்து விட்டது.

(2) போர் புரியும் நாடென்ற அந்தஸ்துக்குத் தகுந்த சமாதான ஷரத்துகளை ருமேனியா ஒப்புக்கொண்டது. ருஷ்யர்கள் டான்யூப் நதியைத் தாண்டி விட்டார்கள். படைகள் கருங்கடல் கரையில் இறங்கிவிட்டன. போலஸ்தி விழுந்து விட்டது. ஜெர்மானியர்கள் துரத்தியடிக்கப்படுகிறார்கள்.

(3) பல்கேரியாவும் சமாதானத்தைக் கோரிவிட்டது. மாசிடோனியாவிலிருந்தும் திரேஸிலிருந்தும் பல்கேரியப் படைகள் திரும்பி அழைக்கப்படுகின்றன. ஜெர்மானியர்கள் பல்கேரியாவிலிருந்து பின்வாங்குகின்றனர்.

(4) பழைய லாபங்களைக் காப்பாற்றுவதற்காக ஹங்கேரி சிறிது காலம் போர் புரியலாம். அதுவும் நேசநாடுகளை ஆதரிக்க ஆரம்பித்துவிட்டது.

(5) மிஸ்ட்டர் சர்ச்சில் இதாலியில் சுற்றுப் பிரயாணம் செய்து, தலைவர்களைச் சந்தித்தது
வியர்த்தமாகப் போவதில்லை. அவர் யூகோஸ்லாவியாவில் டிடோவை ஸ்தாபித்து விட்டார்.
கிரீஸிலும் எதிர்ப்பு இயக்கத்தை நிலைநாட்ட அவர் முயற்சி செய்தார்.

வி வி வி வி வி

**ரூஸ்வெல்டின் பசிபிக் விஜயம்.** பசிபிக்கில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு ரூஸ்வெல்ட்
திரும்பிவந்து அடுத்தபடியாக பிலிப்பைன்ஸ் விடுவிக்
கப்படுமென்று உற்சாக மூட்டக்கூடிய செய்தியை விடுத்தார். குவாம், ஸைபான், டினியன்
தீவுகளைப் பிடித்தபின் இதற்கு சாதகம் ஏற்பட்டிருக்கிறது. பிலிப்பைன்ஸிலிருந்து குவாம்
1,600 மைல்களிருக்கிறது. இதற்கு முற்போக்கான நடவடிக்கைகள் பின்வருமாறு: பவளக்
கடல் யுத்தத்தில் ஜப்பானியரின் முன்னேற்ற வேகம் தணிக்கப்பட்டது. குடால்கனாலில்
நேசதேசப்படைகள் முதல் முதலாக முன்னேறித் தாக்கின. தென்மேற்கு பசிபிக்கிலுள்ள
ரபால் என்ற ஜப்பானின் கடற்படை தளம் அணிக்கப்பட்டது. கில்பர்ட், மார்ஷல் தீவுகள்
பிடிபட்டபின் டிரக் தீவு துணிக்கப்பட்டது. ஸைபானிலிருந்தும், குவாமிலிருந்தும் பிலிப்
பைன்ஸைத் தாக்கலாம். ஜப்பானையும் சூபர் பறக்கும் கோட்டைகள் தாக்கக்கூடும்.

---

# யுத்தத்துக்குப்பின் உலக புனரமைப்பு.

## (A)

## 4. டம்பார்டன் ஓக்ஸ் மகாநாடு.

இந்த வாரத்தில் டம்பார்டன் ஓக்ஸில் மூன்று வல்லரசுகளின் மகாநாடு நடை
பெறுகிறது. இந்த மகாநாட்டிற்கு அமெரிக்காவின் உதவி காரியதரிசி எட்வர்ட் J. ஸ்டெட்டி
னியஸ் தலைமை வகிப்பார். இந்த மகாநாட்டை அமெரிக்க காரியதரிசி மிஸ்ட்டர் கார்டல்
ஹல் ஆகஸ்ட் 21-ம் தேதி திறந்துவைத்தார். ஸர் அலெக்ஸாண்டர் கடோகனும்,
M. கிராமிகோவும் முறையே பிரிடிஷ், ருஷ்ய பிரதிநிதிகள்.

உலகத்தின் பத்திரத்தை நிலைநாட்டுவதுதான் மகாநாட்டின் லக்ஷியம். உலக பத்திர
மில்லாமல் சமாதானம் நிலைபெறாது. சமாதானமில்லாவிடில் முன்னேற்றம் ஏற்படாது.
மிஸ்ட்டர் கார்டல் ஹல் பின்வருமாறு சொல்லுகிறார். "வெற்றி, சமாதானம், சுதந்திரம்,
முன்னேற்றம் முதலியவை சாசுவதமாக வருங்காலத்தில் நிலைபெறுவதற்கு உலக பத்திரம்
தான் அஸ்திவாரம். உலக பத்திரம் நாகரீகமற்ற தேசங்கள் அக்கிரமப் போரைச் செய்ய
முயன்றால் அவைகளைத் தலை தூக்காமலடிக்க பலம் படைத்திருக்கவேண்டும்.

உலக பத்திரம் சமாதானத்தை விரும்பும் தேசங்கள் ஒன்றுபட்டால்தான் ஏற்படும்.
உலகத்தில் ஒற்றுமைக் குறைவினால்தான் தீங்குகள் ஆவிர்ப்பவித்தன என்ற படிப்பினை மூலம்
இந்த உணர்ச்சி உண்டாகியிருக்கிறது.

அமைதி சாசுவதமாக நிலைபெற்றிருக்கவேண்டுமானால், அநேக தேசங்கள் ஒன்றுபடுவ
துடன், அதைப் போஷிக்கத் தகுந்த நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளவேண்டும்.
சுதந்திரத்தைப் போல சமாதானத்தையும், பயபக்தியுடனும், இடைவிடாத கண்காணிப்
புடனும், ஒற்றுமையுள்ள அண்டை வீட்டார்போல வாழ வேண்டுமென்ற தீர்மானத்துட
னும் பரிபாலித்து வரவேண்டும்.

மகாநாட்டில் வற்புறுத்தப்பட்ட விஷயங்களில், சமாதானத்தை நிலைநாட்ட அக்கிரமப்
போரை பலமாகவும், துரிதமாகவும் அடிக்கவிட படைபலம் அவசியமென்று வற்புறுத்தப்பட்
டது. இது பரஸ்பர விரோதமாகத் தோன்றலாம். சென்ற யுத்த முடிவில் பலாத்கார முறை
ஒழுங்கு முறையல்லவென்று கருதப்பட்டது. உலகத்தில் விரோத மனப்பான்மையும்,
அக்கிரம யுத்தத்தை ஆரம்பிக்கும் நாடுகளும் நிலைபெற்றிருக்கும் வரையில் சாமோபாயம்
உபயோகமற்றதென்றும், உலகத்தின் ஒழுங்கு முறையை நிலைநாட்ட பலாத்காரம் அவசிய
மென்றும் இப்பொழுது தெளிவாகிவிட்டது. தனிப்பட்ட நபர்களைப்போல, சர்வ தேசங்
களுக்கும் காபந்து அவசியமென்ற உணர்ச்சி ஏற்பட்டுவிட்டது.

படைபலம் ஒரு தேசத்திலிருந்து மட்டும் திரட்டப்படக்கூடாது. ஒவ்வொரு தேசமும்
அதற்குள்ள சக்திக்குத் தக்கவாறு படைகளை அனுப்பவேண்டும்.

ஒரு வல்லரசோ அல்லது மூன்று அல்லது நான்கு வல்லரசுகளோ ஏதேச்சாதிகாரம்
நடத்தக்கூடுமென்பதில்லை. உலக சமாதானத்தைக்கோரி உலகப் படைபலம் அமைக்கப்
படுமென்றுதான் பொருள்படும்.



உலக பத்திரத்தைக்கோரி மகாநாடு அமைக்க உத்தேசித்திருக்கும் ஸ்தாபனத்தின்
வலிமை அதில் கலந்துகொள்ளும் நாடுகளின் உறுதியைப் பொருத்தது. அந்நாடுகளின்
உறுதியும் அந்தந்த தேசங்களின ஜன சமூக, பொருளாதார விஷயங்களில் உள்ள முன்னேற்
றத்தையும் அமைதியையும் பொருத்ததாகும்.

டம்பார்டன் ஓக்ஸ் மகாநாட்டின் அறிக்கை பின்வருமாறு. "ஒன்று சேருங்கள்.
சேர்ந்து வாழ்வது சிறந்த வலிமை. தீமையை ஒழிக்க அவசியமானால் பலாத்காரத்தை
உபயோகிக்கவேண்டும். தேசங்கள் அந்யோன்ய பாவத்துடன் வசித்து வந்தால்தான்
தேசங்கள் வலிமையுடனிருக்கலாம். ஒவ்வொரு தேசத்தின் வலிமையும் அதனுடைய
மக்களின் க்ஷேமத்தைப் பொருத்தது."

இத்துடன் டம்பார்டன் மகாநாட்டைப்பற்றிய ஒரு கட்டுரையைப் பிரசுரித்திருக்கிறோம்.

## (B)

# யுத்தத்துக்குப் பின் உலக சமாதான ஏற்பாடு.

இந்த வாரத்தில் டம்பார்டன் ஓக்ஸில் யுத்தத்துக்குப் பின் உலகத்தில் சமாதானத்தை
யும், பத்திரத்தையும் நிலை நாட்டக்கூடிய ஸ்தாபனத்தை அமைப்பதற்கு முற்போக்கான சம்
பாஷணைகள் நேசதேசத்தார்களுக்குள் ஆரம்பமாகி விட்டன.

இந்த பிரச்னையைத் தீர்ப்பதற்கு முதல் நடவடிக்கையாக பிரிடிஷ், அமெரிக்க, ருஷ்ய
தேசங்களின் அயல் நாட்டு மந்திரிகள் சென்ற அக்டோபர் மாதத்தில் மாஸ்கோ மகா
நாட்டில் ஒன்று கூடி முடிவு செய்த கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டு ஒவ்
வொரு தேசத்தின் நிபுணர்களும், ஆராய்ச்சிக்குப்பின் நிறுவியிருக்கும் திட்டங்களை ஒத்துப்
பார்த்துக்கொள்ளுவார்கள். இதே மாதிரியான விவாதங்கள் பிரிடிஷ், அமெரிக்க, சீன பிரதி
நிதிகளிடையேயும் நடைபெறும்.

ஜப்பான், பசிபிக் யுத்தம் சம்பந்தப்பட்ட மட்டில் அதிக ஜாக்கிரதையுடன் நடந்து
கொண்டுவரும் ருஷ்ய நிர்வாகம் ருஷ்ய, சீன பிரதிநிதிகள் கூடிப் பேசாத வகையில் மகா
நாட்டை நடத்த முயன்றுவருகிறது.

அயல் நாட்டுக் காரியாலயத்தின் தலைவரான ஸர். அலெக்ஸாண்டர் காடோகனும், அமெரி
க்க உதவி காரியதரிசியான மிஸ்ட்டர் எட்வர்ட் R. ஸ்டெட்னியஸ் (ஜூனியர்) ஸும், வாஷிங்
டனிலுள்ள ருஷ்ய ஸ்தானீகரான M. கிராமிகோவும் முறையே பிரிடிஷ், அமெரிக்க, ருஷ்ய
பிரதிநிதிகளாவார்கள். அவர்களும் அவர்களுக்கு உதவியாக வந்திருக்கும் பிரதிநிதி கோஷ்டி
யும் அந்தந்த நிர்வாக உத்தியோகஸ்தர்கள். அவர்கள் ராஜீய வாதிகளில்லை. ஆகையால்
தங்களுடைய அரசாங்கங்களின் சார்பாக ராஜீய முறையில் வாக்குறுதி செய்ய அவர்களுக்கு
அதிகாரமுமில்லை. உத்தரவுமில்லை.

இதை நாம் அதிகமாக வற்புறுத்திச்சொல்ல வேண்டியதில்லை. ஆகையால் மகா நாட்
டின் நடவடிக்கைகளைப்பற்றிய தகவல்களையும், வதந்திகளையும் இந்த அபிப்பிராயத்தைக்
கொண்டுதான் மதித்துப் பார்க்க வேண்டும்.

### நிபுணர்களின் உயர்வான திட்டம்.

சென்ற சில வருஷங்களில் நேசதேசத்தாரின் ஒன்றுபட்ட நடவடிக்கைகளில் காணப்
பட்ட யுத்த தந்திரத்தைப்போல் யுத்தத்துக்குப்பின் நடைபெற வேண்டிய உலக சீர்திருத்த
பிரச்னையைத் தீர்ப்பதிலும் அதே விதமான சிறந்த திட்டங்கள் காணப்படும். இதற்கு
உதாரணமாக சென்ற வருஷத்தில் ஹாட்ஸ்பிரிங்ஸில் நடைபெற்ற உணவுப் பொருள் மகா
நாட்டையும். இவ்வருஷத்தில் பிரெட்டன் உட்ஸில் நடைபெற்ற செலாவணி மகா நாட்டையும்
கூறலாம். அதன் முறைகள் பொதுஜன உடன்படிக்கையிலும் காணப்படுகின்றன... நேச
தேச நிர்வாகங்களுக்கும், உயர்தர கமாண்டுக்கும் பிரெஞ்சு தேசீய விடுதலைக் கமிட்டிக்கும்
இடையே ஒரு உடன்படிக்கை சமீப காலத்தில் முடிவு செய்யப்பட்டது.

இந்த முறையை நிபுணர்களின் உயர்தர திட்டமென்று சொல்லலாம். எல்லா ராஜீய
பிரச்னைகளும் நடமுறைக்கு அவசியமானவை, எல்லா ராஜீய அவசியங்களையும் திருப்தி
செய்யக்கூடிய உபயோகமுள்ள திட்டங்களை நிறுவக்கூடியவை என்ற கொள்கையை அடிப்
படையாகக் கொண்டவை. இந்த நடவடிக்கையில் நிபுணர்களின் கோஷ்டி ஒன்று கூடி,

அவரவர்கள் தங்களுடைய அறிவையும், அனுபவத்தையும் சமர்ப்பித்து, ராஜீய நோக்கங்களையும், விளைவுகளையும் பொருட்படுத்தாமல் பிரச்னைகளைத் தீர்க்க உபயோகமுள்ள திட்டங்களை நிறுவ அந்த கோஷ்டி ஆலோசனை செய்யும்.

முடிவான திட்டத்தை நிறுவியபின், அதை அந்தந்த நிர்வாகங்களுக்கும், ஜனங்களுக்கும் சமர்ப்பித்தபின் அவைகள் அவைகளை சர்ச்சை செய்து வியவகரித்து ராஜீய முறையில் அபிப்பிராயத்தை வெளியிட்டு அமுலுக்குக் கொண்டுவர திட்டங்களை வகுப்பார்கள்.

### ஜனநாயக முறை.

இந்த நடவடிக்கைகள் ஜனநாயக முறைகளுக்கு ஒத்தவைகள். இந்த சம்பாஷணைகளை நிபுணர்களின் கோஷ்டி ரகசியமாகவும், அமைதியுள்ள சித்தத்துடனும் நடத்தவேண்டும். அவர்கள் வரக்கூடிய முடிவை பொது ஜன ஆரவாரமும், பொய் வதந்திகளையும், சந்தேகத்தையும் ஆதாரமாகக்கொண்டு ராஜீய வாதிகளின் கட்டாயமும் பாதிக்கக்கூடாது. ஆகையால் விவாதம் செய்வதும், சச்சரவு செய்வதும், நிபுணர்களின் கோஷ்டியின் மகாநாடு முடிந்த பிறகுதான் நடைபெறவேண்டும்.

நேசதேசங்கள் மகாநாட்டில் உள்ளவர்கள் முடிவுக்கு வரும் வரையில் பொய் வதந்திகளை மதிக்காமலும், அபிப்பிராயங்களை வெளியிடாமலும் இருப்பது புத்திசாலித்தனமாயிருக்கும். அதற்குப்பின் விவாதத்துக்கும், ஜனநாயக முறையில் சர்ச்சைக்கும் போதுமான அவகாசம் இருக்கிறது.

ஆயினும் நம்பத்தக்க வட்டாரங்களிலிருந்து கிடைத்த தகவல்களைக்கொண்டு ஒன்று மட்டும் சொல்லலாம். டம்பார்டன் ஓக்ஸில் கூடுமுன் மூன்று நிர்வாகங்களும் தனித்தனி யோசனைகளைப் பரிசீலனை செய்தார்கள். அவர்களுடைய நிபுணர்களின் கோஷ்டிகள் விவாதிப்பதற்குரிய விஷயக் குறிப்புகளையும் தயார் செய்தார்கள். அந்தக் குறிப்புகளின் உள்ளடக்கங்களை பகிரங்கப்படுத்தக் கூடாதெனினும், மூன்றிலும் ஒரே விதமான அபிப்பிராயங்கள் காணப்படுகின்றன. கொள்கைகளிலும் விவரங்களிலும் முக்கியத்வமுள்ள வேற்றுமைகள் காணப்படவில்லை. இந்த மூன்று தஸ்தாவேஜுகளையும் ஒப்பிட்டுப்பார்க்குமளவில், யுத்தத்துக்குப்பின் உலக அமைதிக்குரிய ஸ்தாபனத்தை அமைக்கும் திட்டத்தில் ஒன்றுபட்ட விஸ்தாரமான முடிவுக்கு வருவதில் மகத்தான இடைஞ்சல்கள் தோன்றுமென்று நம்பக்கூடியதாக இருக்கிறது. அந்த முடிவை மற்ற நேசதேசங்கள் பரிசீலனை செய்து, விவாதித்து, அவசியமேற்பட்டால் திருத்தியமைக்கலாம். இறுதியில் அந்த திட்டத்தை எல்லா நாடுகளும் ஒன்று கூடி அங்கீகாரம் செய்யலாம்.

---

## வார யுத்தச் செய்திகள்.

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 20—8—44 (ஞாயிற்றுக்கிழமை). | பிரெஞ்சு தேசாபிமானப் படைகள் தெற்கு பிரான்ஸில் டூலானை விடுவித்தன. |
| 21—8—44 (திங்கட்கிழமை). | ஸர்வதேச உலக க்ஷேம மகாநாடு அமெரிக்காவில் ஆரம்பமாகிறது. |
| | 14-வது சேனை பர்மாவுக்குள் சென்று பின்வாங்கும் ஜப்பானியர்களைத் தாக்கி வருகிறது. |
| 22—8—44 (செவ்வாய்க்கிழமை). | அமெரிக்கப் படைகள் பாரிஸுக்குத் தென் கிழக்கில் 60 மைல் தூரத்திலுள்ள சென்ஸைப் பிடித்தன. |
| | ருஷ்யர்கள் ருமேனியாவில் இரண்டு புதிய தாக்குதல்களைத் துவக்கி ஜாஸ்ஸியைப் பிடித்தார்கள். |
| 23—8—44 (புதன்கிழமை). | பிரெஞ்சு விடுதலைப்படைகள் பாரிஸையும், மார்செல்ஸையும் விடுவித்தன. |
| | ருமேனியா சரணடைந்து அச்சுக் கக்ஷியிலிருந்து விலகிக் கொண்டது. |
| | செம்படை ஆக்கர்மானை ஆக்கிரமித்தது. |
| 24—8—44 (வியாழக்கிழமை). | பிரெஞ்சு உள்நாட்டுப் படைகள் போர்டோவை ஆக்கிரமித்தன. |



### (A)—முக்கியமான சம்பவங்கள்—தொடர்ச்சி.

| | |
|---|---|
| 25—8—44 (வெள்ளிக்கிழமை). | பாரிஸிலிருந்த ஜெர்மன் தளபதி பிரெஞ்சுக்காரரிடம் சரண்புகுந்தார். |
| | நேசதேசப்படைகள் பாரிஸுக்குள் நுழைந்தன. |
| | ருமேனியர்கள் புகாரஸ்டிலிருந்த ஜெர்மானியர்களை அப்புறப்படுத்தினார்கள். |
| 26—8—44 (சனிக்கிழமை). | பல்கேரியா நேசதேசத்தாரிடமிருந்து சமாதான நிபந்தனைகளைக் கோருகிறது. |
| 27—8—44 (ஞாயிற்றுக்கிழமை.) | செம்படை ருமேனியாவிலுள்ள காலாட்ஸைப் பிடித்தது. |
| | நேசதேசப் படைகள் ஸேன் நதிக்குக் கிழக்கிலும், வடக்கிலும் முன்னேறுகின்றன. |
| 28—8—44 (திங்கட்கிழமை). | ருஷ்யர்கள் கருங்கடல் கரையிறங்கி துல்ஸியாவையும், ருமேனியாவுக்குச் சொந்தமான சலினாத்துறைமுகத்தையும் பிடித்தார்கள். |
| 29—8—44 (செவ்வாய்க்கிழமை). | நேசதேசப் படைகள் பிரான்ஸிலுள்ள சாயிஸான்ஸைப் பிடித்தன. |
| | ருஷ்யர்கள் ருமேனியாவிலுள்ள கான்ஸ்டென்ஸாவைக் கைப்பற்றினார்கள். |
| | நேசதேசப்படைகள் ரோன்நதியிலுள்ள மாண்டெலிமாருக்குள் நுழைந்தன. |
| 30—8—44 (புதன்கிழமை). | அமெரிக்கப் படைகள் பிரான்ஸில் ரீம்ஸை ஆக்கிரமித்தன. |
| | செம்படை போலஸ்தி எண்ணெய் பிரதேசங்களைப் பிடித்தது. |
| | பல்கேரிய சமாதான கோஷ்டி கெய்ரோவுக்குச் சென்றது. |

### (B)-செய்திச் சுருக்கம்.

**பிரான்ஸ்.**—பாரிஸ் விடுவிக்கப்பட்டதென்ற செய்தி ஊர்ஜிதமாகி விட்டது. நேசதேசப் படைகள் கால்வாய் கடற்கரையிலிருந்து டிராய்ஸ் வரைக்குமுள்ள 200 மைல் அளவில் ஸேன்நதியைத்தாண்டி, ஸேன் நதியின் கிளைநதியான ஆபி நதிக்கு அருகிலும், டிராயஸுக்கு வடமேற்கில் 15 மைலிலுள்ளதுமான ஆர்ஸிஸுக்குச் சென்றுவிட்டார்கள்.

மார்ன், ஆயின் நதிகளைத்தாண்டி விட்ரி, சாலன்ஸ்—சூர்—மார்னேயும் கடந்து சென்று விட்டார்கள்.

ஸேன், மார்ன் நதிகளுக்கிடையே காலோமியர்ஸும் லாபெர்டிஸேன் ஜோவாரேயும் பிடிபட்டன.

**கடற்கரைப்பகுதி.**—எரியூயிக்ஸ், வெர்னூவில், டிரௌவில்லி, ரௌடாட், லாஹாவர் விழுந்துவிட்டன. படைகள் பறக்கும் வெடிகுண்டுகள் கிளம்பும் இடத்தையும் பெல்ஜியம் ஹாலந்தை நோக்கியும் முன்னேறுகின்றன.

**பாரிஸுக்கு வடக்கு.**—படைகள் நான்ஸி, மெட்ஸ், ரீம்ஸை நோக்கி முன்னேறுகின்றன. இந்த, பிராந்தியத்தில் சாடு தேயிரியும், மாண்டெரியூவும் விழுந்துவிட்டன.

**பாரிஸுக்குக் கிழக்கு.**—முன்னேற்றம் குறையவில்லை. இங்கு சாசேனி, சென்ஸ், ஸாயிஸான்ஸ், பிஸ்மிஸ் நேசதேச வசமாகின.

**தெற்கு பிரான்ஸ்.**—ரோன் நதிக்குக் கிழக்கிலும், அவிக்னன், பிரிட்டன் கோனுக்குத் தெற்கிலுமுள்ள தெற்கு பிரான்ஸ் விடுவிக்கப்பட்டது. டூலனும், மார்செல்ஸும் பூராவாக ஆக்கிரமிக்கப்பட்டன.

தெற்கிலுள்ள படைகள் லேயான்ஸிலுள்ள படைகளுடன் ஒன்றுசேர வடக்கு நோக்கிச் செல்லுகின்றன. இதாலிய எல்லைச்சரகத்தை நோக்கியும் படைகள் முன்னேறுகின்றன.

பிரெஞ்சு தேசாபிமானப்படைகள் லேயான்ஸுக்குள் புகுந்துவிட்டன.

இந்த வாரத்தில் தெற்கு பிரான்ஸில் கீழ்கண்ட இடங்கள் பிடிபட்டன.

கிரேனோபின், பிரியான்கோன், சாதன், கானேஸ், கிராஸி, ஆர்லஸ், டாராஸ்கான், அவிக்னன், நிமிஸ், மாண்டெ பெல்லியர், கார்காஸோன்.

பிரெஞ்சுப் படைகள் மத்தியதரைக் கடல் கடற்கரைக்கு சமீபத்தில் ஸ்பானிஷ் எல்லைச் சரகத்திலுள்ள பெர்பிக்கை விடுவித்தன.

**பிஸ்கே விரிகுடாவில்.**—பிரான்ஸின் நான்காவது பெரிய நகரமான போர்டோ விழுந்தது.

**ருமேனியா.**—புகாரஸ்டுக்கான போர் நடைபெறுகிறது. 400 நேசதேச வெடிவிமானங்களும், சண்டை விமானங்களும் ஈடுபட்டிருக்கின்றன. ஜெர்மானியர்கள் பின்வாங்கிவருகிறார்கள்.

ருமேனியப்படைகள் டிரான்ஸில்வேனியாவுக்குள் நுழைந்துவிட்டார்கள்.

ருஷ்யப்படைகள் காலாட்ஸைப் பிடித்தபின் டான்யூப் நதியைத்தாண்டி கான்ஸ்டன்ஸா என்ற கருங்கடல் துறைமுகத்தைக் கைப்பற்றிவிட்டார்கள். போலஸ்தி பிரதேசத்தில் கடும் போர் நடைபெறுகிறது.

இந்த வாரத்தில் கீழ்கண்ட இடங்கள் பிடிபட்டன. வால்கேனஸ்டி, போஸானி, ராம்நி குசாராத், மாராசெஸ்டி, டார்கு ஒனு.

**ருஷ்யா.**—எஸ்தோனியாவில் டஸ்பாத் விழுந்தது. ஜெர்மனியிலிருந்து கிழக்கு பிரஷ்யாவுக்கு சப்ளைகள் செல்லும் மார்க்கமான ஸ்டெட்டின் கால்வாயில் சுறங்கவெடிகள் பாவப்பட்டுவிட்டன. மார்க்கம் அடைபட்டுவிட்டது. லாட்வியாவிலுள்ள மாடோனுவையும் ஷ்வானென்பர்க்கையும் ஜெர்மானியர்கள் காலிசெய்துவிட்டனர்.

**வார்ஸா பிரதேசம்.**—ஸ்ட்ரோட மாசோ, மாகோவியாக்கி பிடிபட்டது. வார்ஸாவுக்கான போர் நடைபெறுகிறது.

**இதாலி.**—கொதிக் அரணுக்கான போர் துவங்கிவிட்டது. வட்ரியாடிக் கடலுக்கும், அம்பிரியாவிலுள்ள சயினைன் மலைகளுக்கும் மத்தியில் அநேக இடங்களில் நேசதேச பீரங்கிகள் குண்டுகளை வருஷித்தன.

மாண்டி பாரெஸடோ, காஸ்டல்நுமொ, பார்னிகிலா மாண்டாஸினு பிடிபட்டன. பஸ்ஸாரோவுக்கு ஆபத்து அதிகரித்துவிட்டது.

**பஸிபிக்.**—ஆகஸ்ட் 24-ம் தேதியன்று அமெரிக்கப்படைகள் நியூகினியாவுக்கு வடமேற்கிலுள்ள ஸெயிண்ட்டேவிட் அல்லது மெயிபா என்ற தீவில் இறங்கின.

பஸிபிக்கிலுள்ள கடற்படை டச்சு கிழக்கிந்தீஸ் தீவுகளைச் சேர்ந்த சுமத்ரா தீவின் மேற்குகரை பேரில் குண்டுகளைப்போட்டது.

நேசதேச விமானப்படை மொலுக்காஸ் தீவுலுள்ள அம்பாயினுவைத் தாக்கிற்று.

**சைனா.**—சமீபகாலத்தில ஜப்பானியர் கைவசப்படுத்திய ஹெங்யாங்குக்கு வடக்கிலுள்ள காண்டன் ஹாங்கௌ இருப்புப்பாதையை சீனர்கள் துண்டித்துவிட்டார்கள். பூசௌவுக்குச் சமீபத்திலுள்ள சியாட்லிநகைத் தாக்கி வருகிறார்கள்.

**பர்மா.**—மோகாங்குக்குத் தென்மேற்கிலுள்ள பின்பா பிடிபட்டு விட்டதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.



## *சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.*

**20—8—44.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—எண்ணெய்க் கிணறுகள், ஸ்தாபனங்கள்—போலிஷ் (Polish), சைலீஷியா (Silesia), ஸ்லோவாகியா (Slovakia).

இலக்குகள்.—ஹங்கேரி (Hungary).

டாங்கிகள், மோட்டார் வண்டிகள், படகுகள்.-ஸீன் (Seine).

ஈ-படகுகள்.—கால்வாய் (Channel).

இரவு.—எதிரிப் படகுகள், ஸீன் (Seine).

டாங்கித் தொழிற்சாலை.—ஆஸ்திரியாவிலுள்ள செயிண்ட் வாலெண்டின் (St. Valentin).

**இதாலி (Italy).**

எதிரி போக்குவரத்துகள், டாங்கிகள்.-யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

**ருஷ்யா (Russia).**

(88 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

விமானத் தாக்குதல்கள்.-நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul) முதல் பிலிப்பைன்ஸ் (Philippines) வரை.

தரைமீதுள்ள எதிரி விமானங்கள்.—பூயின் (Buin).

ஜப்பானிய சைனியங்கள்.—ஹால்மஹேரா (Halmahera).

**பர்மா (Burma).**

இலக்குகள்.—வட பர்மா (North Burma), டிடிம் ரஸ்தா (Tiddim).

படகுகள்.—மாயு (Mayu) நதி.

படகுகள்.—காதாவிற்கும் (Katha), மாண்டலேக்கும் (Mandalay)க்கும் இடையில்.

**21—8—44.** (திங்கட்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—எதிரி துருப்புகள்.—ஸீன் (Seine), பிரதேசம்.

துருப்பு முகாம்கள்.—டூலன் (Toulon), மார்ஸேல்ஸ் (Marseillos).

இரவு.—இலக்குகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

எண்ணெய் ஸ்தாபனங்கள்.—ஹங்கேரியிலுள்ள கியார் (Gyor).

**இதாலி (Italy).**

**யூகோஸ்லாவியா (Yugoslavia).**

விமான நிலயம்.—யூகோஸ்லாவியா (Yugoslavia).

பாலங்கள், ரஸ்தா போக்குவரத்துகள்.—வட இதாலி (North Italy).

இலக்குகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

**ருஷ்யா (Russia).**

(64 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய சைனியங்கள்.—ஹால்மஹேரா (Halmahera).

ஜப்பானிய தளம் —குரைல்ஸ் (Kuriles).

**பர்மா (Burma).**

எதிரி சைனியங்கள்.—டிடிம் (Tiddim) ரஸ்தா.

படகுகள்.—சிண்ட்வின் (Chindwin).

சேமிப்புகள்.—தாய்லாந்து (Thailand), செய்ங்மாய்-பாடாட் (Chiengmai-Padad) ரயில்வே.

**22—8—44.** (செவ்வாய்க்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்—ருமேனியத் துறைமுகம்—கான்ஸ்டான்ஸா (Canstanza).

எண்ணெய்க் கிணறுகள்.—சைலீஷியா (Silesia), வியென்னு (Vienna).

ரயில்வே இலக்குகள்.—பாரிஸின் தென் கிழக்கு (S. E. Paris).

விமானங்கள் யுத்த தளவாடங்கள் தயார் செய்து சேமிக்குமிடங்கள்.—டிஜன் (Dijon), சாக்னி (Chagny).

இரவு.—இலக்குகள்—மிஸோலோ (Misolo).

**இதாலி(Italy).**

ரஸ்தா, ரயில் இலக்குகள்.—வட இதாலி (N. Italy), யூகோஸ்லாவியா (Yugoslavia).

**ருஷ்யா (Russia).**

(94 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

**பர்மா (Burma).**

படகுகள்.—சிண்ட்வின் (Chindwin), ஐராவதி (Irrawaddy)

**23—8—44.** (புதன்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—ராணுவ இலக்குகள்—வியென்னு (Vienna) பிரதேசம்.

ரயில்வேப் பாலம்.—போ (Po) நதி.

டாங்கிகள் எதிரி போக்குவரத்துகள் ஸப்ளைக் குவியல்கள்.—பிரான்ஸில் யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

இரவு.—ரயில்வே ஜங்ஷன்—டில்ஸிட் (Tilsit).

விமான நிலயங்கள்.—வியென்னு (Vienna) பிரதேசம்.

**இதாலி (Italy).**

(45 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன. 29 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

ரஸ்தாக்கள், ரயில்வேக்கள்.—பிரான்ஸின் தெற்கு (South of France.)

பெர்ரோரா பாலம்.—(Ferrera), பாலம் போ (Po) நதியின் மேல்.

போக்குவரத்துகள்.—வட இதாலி (N. Italy), யூகோஸ்லாவியா (Yugoslavia).

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய தளம்.—பாரா முஷிரோ (Paramushiro).

ஜப்பானிய சைனியங்கள்.—ஹால்மஹோரா (Halmahera) தீவு.

**பர்மா (Burma).**

படகுகள்.—அரக்கான் (Arakan).

ரயில் பாதைகள் சேமிப்புகள் இதர இலக்குகள்.—மத்திய பர்மா (Central Burma).

ஜப்பானிய சைனியங்கள், டாங்கிகள்.—பின்பா (Pinbaw).

**24—8—44.** (வியாழக்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—எண்ணெய்க் கிணறுகள்.—மெர்ஸ்பர்க் (Merseberg), மிஸ்பர்க் (Misbourg), ருலந்து (Ruhland), பிரக்ஸ் (Brux).

எண்ணெய்க் கிணறு.—பிரெய்டால் (Freital).

விமான நிலயம்.—பிரன்ஸ்விக் (Brunswick), கொல்லிடா (Kolleda), லாங்கென்ஹாகென் (Langenhagen).

விமானப் படை ஸ்தலங்கள்.—ஹனோவர் (Hanover), மெர்ஸ்பர்க் (Merseburg).

ரேடியோ தொழிற்சாலைகள்.—வெய்மர் (Weimar).

தொழிற்சாலை இலக்குகள்.—கீல் (Kiel).

எண்ணெய் சுத்தம் செய்யுமிடங்கள்.—கோலின் (Kolin), பார்டுபைஸ் (Pardubice).

ரயில்வேப்பாலங்கள்.—ஹங்கேரி (Hungary), யூகோஸ்லாவியா (Yugoslavia).

கப்பல்கள்.—லெ ஹாவர் (Le Havre).

ஜெர்மன் படைகள்.—ஸீனிலிருந்து பின்வாங்கும் படைகள்.

இரவு.—இலக்குகள்.—பெர்லின் (Berlin).

கடற்கரைப் படைகள்.—பிரெஸ்ட் (Brest).

**இதாலி (Italy).**

ரயில் தளங்கள்.—பெலோனு (Bologna).

போக்குவரத்துகள்.— வட இதாலி (Northern Italy).

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானியக் கப்பல்.—செலிபெஸ் (Celebes).

ஜப்பானியக் கப்பல்கள்.—ஹால்மஹோரா (Halmahera), ஸிரீம் (Ceram), புலோரெஸ் (Flores) கடல்.

**பர்மா (Burma).**

போக்குவரத்துகள்.—சிண்ட்வின் (Chindwin) முதல் இயூ (Yeu) வரை.

**25—8—44.** (வெள்ளிக்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—விமானத் தொழிற்சாலை.—பினுமுண்டி (Peenamunde).

விமானங்கள்.—வெய்னர் (Wienar), லுபெக் (Lubeck), ரோஸ்டாக் (Rostock).

தொடர்ச்சியான எண்ணெய்க்கிணறுகள்.—வட ஜெர்மனி (N. Germany).

விமானத் தொழிற்சாலைகள், விமான நிலயங்கள்.—செக்கோஸ்லோவாக்கியா (Czechoslovakia).

R. படகுகள்.—E. படகுகள் தங்குமிடங்கள்.—ஹாலந்திலுள்ள இஜ்முதின் (Ijmuiden).

இரவு.—இலக்குகள்.—மான்ஹிம் (Mannheim).

**இதாலி (Italy).**

எதிரி போக்குவரத்துகள், போக்குவரத்து சாதனங்கள்.—வட இதாலி (N. Italy).

பீரங்கி ஸ்தாபனங்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

ரயில் தளங்கள்.—ராவென்னு (Ravenna).

எதிரிக் கப்பல்கள்.—ஏஜியான் கடல் (Aegean sea).

**ருஷ்யா (Russia).**

(79 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.



**தூரக்கிழக்கு (Far East).**

கரோலைன்ஸிலுள்ள பாலா (Palau) தீவு.

தரைமீதுள்ள விமானங்கள்.—சீரம் (Ceram), அம்பாய்னு (Amboina).

**பர்மா (Burma).**

போக்குவரத்துகள், இதர இலக்குகள்.—மத்திய பர்மா (Central Burma).

**26—8—44.** (சனிக்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—இலக்குகள் ஜர்மனி (Germany), வட பிரான்ஸ் (North France).

பறக்கும் வெடிகுண்டு ஸ்தலங்கள்.—பாஸ்டி கலே (Pas de Calais)ப் பிரதேசம்.

ஒபல் மோட்டார் தொழிற்சாலைகள்.—ரஸ்ஸல்ஷீம் (Russelsheim).

இலக்குகள்.—டார்ம்ஸ்டாட் (Darmstadt), பொலோன் (Boulogne).

ஜெர்மன் கப்பல்கள்.—டியப் (Dieppe), பொலோன் (Bulogne).

ஜெர்மன் மிகுதிகள்.—ஸீனிலிருந்து பின்வாங்கும் படைகள்.

பறக்கும் வெடிகுண்டு ஸ்தலங்கள்.—வடக்கு பிரான்ஸ் (N. France).

ஜெர்மன் சைனியம்.—பல்கேரியாவிலுள்ள புகாரெஸ்ட் (Bucharest).

இரவு.—இலக்குகள்—கிழக்கு பிரஷ்யா கோனிக்ஸ்பர்க் (Koenigsburg).

ஜெர்மன் கடற்படை தளங்கள்.—கீல் (Kiel), பெர்லின் (Berlin).

**இதாலி (Italy).**

போக்குவரத்துகள்.—வட இதாலி (N. Italy).

பீரங்கி ஸ்தாபனங்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசஙகள்.

**ருஷ்யா ((Russia).**

(89 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய இலக்குகள்.—ஹால்மஹோரா (Halmehera).

லியாங்.—விமான நிலயம், (Liang), அம்பாய்னு (Amboina).

ஜப்பானிய விமான நிலயம், இதர ஸ்தாபனங்கள்.—இவோஜிமா (Iwogima) தீவு, வல்கனோ (Volcano) தீவுகள்.

ஜப்பானிய இலக்குகள்.—யாப் (Yap), டிரக் (Truk).

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—டிமோர் (Timor).

**பர்மா (Burma).**

தரையிலுள்ள இலக்குகள்.—காலிவா (Kalewa).

சில படகுகள்.—தாங்டட் (Thaungdut).

## *விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.*

**21—8—44.** (திங்கட்கிழமை).

**பிரிடன் (Britain).**

லண்டன் (London), பிரதேசம்.

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**22—8—44.** (செவ்வாய்க்கிழமை).

**பிரிடன் (Britain).**

சில இடங்கள்.—தென் கிழக்கு இங்கிலாந்து (South East England).

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**23—8—44.** (புதன்கிழமை).

**பிரிடன் (Britain).**

ஒரு தகவலும் இல்லை.

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**24—8—44.** (வியாழக்கிழமை).

**பிரிடன் (Britain).**

சில இடங்கள்.—தென் கிழக்கு இங்கிலாந்து (South East England), லண்டன் (London) பிரதேசம்.

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு(Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**25—8—44.** (வெள்ளிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

சில இடங்கள்.—தென்கிழக்கு இங்கிலாந்து (S. E. England).

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**26—8—44.** (சனிக்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**27—8—44.** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு(Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

# ஐந்து வேனீர் காலங்கள்.

(ஆஸ்வால்ட் டச்.)

இந்த யுத்தத்தில் மே மாத மத்தியிலிருந்து ஆகஸ்ட் மாதம் முடிய உள்ள வேனீர்கால மாதங்கள் பகட்டான சம்பவங்களுள்ளவை. ஜூன், ஜூலை மாதங்களில் அநேக தேதிகளில் சரித்திரப் புகழ் பெறக்கூடிய அநேக சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. சென்ற ஐந்து வருஷ வேனீர்கால நடவடிக்கைகளை ஆராய்ச்சி செய்தால் யுத்தப்போக்கைப்பற்றிய தெளிவான தோற்றம் உண்டாகும். ஜெர்மனி ராணுவ சக்தி வளர்ச்சிபெற்று உச்சநிலைமையை அடைந்தது. அதன்பின் ஹிட்லரின் யுத்த யந்திரம் அழிவுபட ஆரம்பித்து யுத்தப்போக்கில் மாறுதல் ஏற்பட்டது. சென்ற ஐந்து வருடங்களில் ஜூன், ஜூலை மாதங்களில் நடந்த சில முக்கியமான சம்பவங்களை இங்கு கூறுவோம்.

## 1940.

ஜெர்மன் படைகள் பெல்ஜியத்தையும், ஹாலந்து எல்லைச்சரகங்களையும், தாண்டி பிரான்ஸில் ஸோம் நதியில் போர் நடத்தின. அதன்பின் மே மாதமுடிவிலும், ஜூன் மாத ஆரம்பத்திலும் பிரிடிஷ் துருப்புகள் டங்கர்க்கிலிருந்து பின் வாங்கின. ஜூன் 14-ம் தேதியன்று பாரிஸ் ஆக்கிரமிக்கப்பட்டது. ஜூன் 22-ம் தேதியன்று பிரான்ஸும், ஜெர்மனியும் யுத்த நிறுத்த உடன்படிக்கையைச் செய்துகொண்டன. பிரான்ஸ் பிரிடனின் நேசநாடாக இல்லாமல் விலகிக்கொண்டது. பிரிடன் தன்னந்தனியாக நின்றது. ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் பிரிடனில் ஜெர்மன் படைகள் படையெடுப்பதற்கு முற்போக்காக பிரிடனில் மகத்தான விமானப்போர்கள் நடந்தேறின.

## 1941.

யூகோஸ்லாவியாவையும், கிரீஸையும் அடிபணியச் செய்தபின் மே மாதத்தில் ஜெர்மானியர்கள் கிரீட்டை விமான மூலம் படையெடுத்தார்கள். இங்கிலாந்தில் படையெடுப்பதற்கு இது ஒத்திகை நடவடிக்கை போன்றது. இந்த ஒத்திகை திருப்தியளிக்கவில்லை. ஏனெனில் படைகளை இறக்கி பயன்படச் செய்யவேண்டுமானால் அவைகளுக்கு கடற்படை ஒத்தாசை வேண்டும். ஆகையால் இங்கிலாந்தில் படையெடுக்கும் யோசனையை நிராகரித்து ஹிட்லர் கிழக்கே திரும்பினான். ஜூன் 22-ம் தேதியன்று அவன் ருஷ்யா பேரில் படையெடுத்தான். ஒரு மாதத்திற்குள்ளாக ஜெர்மன் படைகள் ஸ்மாலென்ஸ்க்கையும், கீவையும் அடைந்தன. ருஷ்யப்படை முக்கியமான தற்காப்பு நிலயங்களை இழந்துவிட்டது போல் தோன்றிற்று.

## 1942.

வடக்கு ஆபிரிக்காப் போரில் வெற்றி அநேகம் தடவை கைமாறியபின், ரோமல் பிரிடிஷ் தற்காப்புகளைப் பிளந்து சென்று கெயிரோ, அலெக்ஸாண்டரியா வாசம்படியிலுள்ள எல் அலாமீனுக்குச் சென்றுவிட்டார். டொப்ருக் விழுந்தது. செபாஸ்டபூல் வீழ்ச்சி பெற்றபின் ருஷ்யாவிலுள்ள ஜெர்மன் படைகள் புதிய தாக்குதலை ஆரம்பித்தன. வாரனேஷுக்கும், காகஸஸுக்கும், ஸ்டாலின் கிராட்டுக்கும் முன்னேறிவிட்டன.

தூரக்கிழக்கில் பிலிப்பைன்ஸ். மலேயா, சிங்கப்பூர், பர்மா, நெதர்லாந்து இந்தீஸ் முதலிய இடங்களைப் பிடித்தபின் ஜப்பான் ஆஸ்திரேலியாவைப் படையெடுக்கத் தயாராக இருந்தது. நியூகினியாவில் ஜப்பானியர் இறங்கினார்கள். ஸாலமன் தீவுகளுக்கு முன்னேறினார்கள். டார்வின் துறைமுகத்தை விமானங்களால் தாக்கினார்கள். பவளக்கடலில் கடற்படை மகத்தான தாக்குதல்களை நடத்தியது. இவைகளெல்லாம் ஆஸ்திரேலியாவின் படையெடுப்புக்குப் பாய்ச்சல் ஸ்தலங்கள் போன்றவை.

இதன்பின் நிலைமை தலை கீழாக மாறிவிட்டது.

ஜெர்மன் படைகள் கெயிரோவுக்கும், அலெக்ஸாண்டிரியாவுக்கும் செல்லவில்லை.

ஜெர்மன் படைகள் ஸ்டாலின்கிராட்டைப் பிடிக்க முடியவில்லை.

## 1943.

மூன்றாவது வருஷ ஜெர்மன் வேனீர் கால முன்னேற்றத்தில் குர்ஸ்க்கில் ஜெர்மனி வீழ்ச்சி பெற்றது. ருஷ்யர்கள் முன்னேறித் தாக்கி ஜெர்மன் படைகளை ருமேனியா, போலந்து, எஸ்தோனியாவின் எல்லைச் சரகத்துக்கும், கார்பேதிய மலை அடிவாரத்துக்கும் துரத்தியடித்தன. வடஆபிரிக்காவிலிருந்து ஜெர்மன் இதாலியப் படைகள் துரத்தியடிக்கப்பட்டன. டூனிஸிய வெற்றிக்குப்பின் ஜூலை 10-ம் தேதியன்று நேசதேசப் படைகள் ஸிஸிலியிலிறங்கின. ஐரோப்பாவில் இப்பொழுதுதான் நேசதேசப் படைகள் முதன் முதலில் காலடிவைத்தன. முஸோலினி பதவியைத் துறந்தான். யூகோஸ்லாவியாவிலும், கிரீஸிலும், பிரான்ஸிலும், இதாலியிலும் பலமான கொரில்லாப்படைகள் ஜெர்மனியை எதிர்த்துப் போராட முற்பட்டன.



## 1944.

ரோம் நேசதேச வசமாயிற்று. ஜூன் 6-ம் தேதி யன்று நேசதேசப் படைகள் பிரான்ஸிலிறங்கின. ருஷ்யப்படை பின்னிஷ் தற்காப்புகளை ஊடுருவிச் சென்றது. ஜப்பானியர்கள் அநேக எல்லைச் சரகத் தற்காப்புகளை இழந்தபின் கடல் போரில் ஈடுபடும்படி நேரிட்டது. அவைகள் தோல்வியுற்று பின்காட்டி ஓடின.

---

# பொது ஜனங்கள் வின்ஸ்டன் என்று மதிக்கிறார்கள்.

## மிஸ்டர் சர்ச்சிலைப்பற்றிய கட்டுரை.

(H. நேபியர் மூர்).

(மாக்ளீனுடைய சஞ்சிகையிலுள்ள கட்டுரையின் சுருக்கம்).

1942-ம் வருஷத்தில் பிரிடனுக்கு விஜயம் செய்த கனடிய பத்திரிகாசிரியர்களின் கோஷ்டியைச் சேர்ந்த மிஸ்டர் நேபியர் மூர், மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சிலைப் பேட்டி கண்ட விவரத்தை வர்ணிக்கிறார்.

மாஸ்கோவுக்கும், மத்தியதரைக் கடல் போர்முனைக்கும் விஜயம் செய்துவிட்டு, பிரதம மந்திரி மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில் லண்டனுக்கு வந்தபொழுது பத்திரிகைகளில் காணப்பட்ட தலையங்கங்கள் அற்பமானவையென்று முதலெடுப்பில் தோன்றின. "ஸ்டேஷனிலுள்ள ஆர்க் விளக்குகள் சர்ச்சிலை வரவேற்றன" என்று எழுதப்பட்டிருந்தது. லண்டன் ஸ்டேஷனில் மூன்று வருடங்களுக்குப்பின் இப்பொழுதுதான் ஏராளமான தீபங்கள் ஏற்றப்பட்டன என்று பிறகு வெளிப்பட்டது. மிஸ்டர் சர்ச்சில் ரயிலிலிருந்து இறங்கிய பொழுது ஒளிப்படம் பிடிக்கும் வரையில்தான் இந்த ஜோதி நிலை பெற்றிருந்தது.

அன்றிரவு அவர் எவ்விதம் காணப்பட்டார் என்பதை என்னால் சொல்ல முடியாது. அவரை என்னுடைய கனடிய சகாக்களுடன் சந்தித்த ஒன்று அல்லது இரண்டு வாரத்துக்குப் பின் அவரை தரிசித்தேன் என்று மட்டும் சொல்லுவேன்.

அவர் நல்ல தேக ஆரோக்கியத்துடனிருந்தார். அவர் முகத்தில் உள்ளத்தின் களிப்பும், முகவாட்ட மின்மையும், கவலையின்மையும் காணப்பட்டன. எங்களை வரவேற்க அவர் முன் வந்தபொழுது, அவருடைய நடையில் உல்லாசமும், தலை சாய்வும், உடம்பில் சுறு சுறுப்பும் காணப்பட்டன. அவர் பழைய வின்ஸ்டனென்ற ஞாபகம் திடீரென்று தோன்றிற்று. பிரிடிஷார்கள் அவரை இன்றும் வின்ஸ்டன் என்றே அழைக்கிறார்கள். அவரை மிஸ்டர் சர்ச்சில் என்று கூப்பிட ஆரம்பித்தால் அவர் அவர்களின் அன்பை இழக்க ஆரம்பித்து விட்டார் என்று எண்ணுங்கள்.

அவர் கருப்பு மேல் சட்டையும், கோடிட்ட சாம்பல் வர்ணமுள்ள சல்லடங்களையும் வெஸ்ட்மின்ஸ்டரின் அடையாளமாக பௌ டையையும் அணிந்திருந்தார். அவர் வாயில் சுருட்டு இருந்தது.

### சுருட்டுகள்.

சர்ச்சிலின் சுருட்டுகளைப்பற்றி சில விசித்திரமான எண்ணங்கள் தோன்றும். அவைகள் எப்பொழுதும் புதிது புதிதாக உபயோகப் படுத்தப்பட்டதாக விளங்கும். அவைகளின் நீளம் குறைவதில்லை. அவர் குழாயை உபயோகிப்பதில்லை.

நாங்கள் ஒவ்வொருவராக அறிமுகப்படுத்தப்பட்டோம். மிஸ்டர் சர்ச்சில் ஒவ்வொருவரின் பெயரையும், அறிந்து கொள்ள பிரியப்படுகிறார். கை குலுக்கும் பொழுது அவர் கைகளை கெட்டியாகப் பிடித்துக்கொள்ளுவார். பிறரின் முகத்தைப்பார்த்துத்தான் அவர் பேச ஆரம்பிப்பார்.

அவருடைய மேஜைக்கு முன்வந்து மேஜையில் சாய்ந்து கொண்டு அவர் நிற்பார். அவர் மறுமொழி கூறப்பிரியமில்லாத கேள்வியை எவர் கேட்பார் என்று அவர் முன்கூட்டியே அறிந்துவிடுவார்.

வாயிலுள்ள சுருட்டை எடுத்து விட்டு, புகையைக் கவனித்துவிட்டு பின்பு மெதுவாகவும், அமைதியுடனும் பேசத்துவங்குவார்.

ரேடியோவில் ஒலிபெருக்குவதையும், மேடைகளில் ஏறிப் பேசுவதையும்விட மெல்லிய குரலில் அவர் பேசுவார். வரவர மெல்லிய குரல் மறைந்துவிடும். தத்வதரிசியைப்போல அவர் பேசுவார். தளர்ச்சிபெருத நம்பிக்கையுடன் அவர் பேசுவார்.

---

## பிரிடனின் சிறந்த சேனை.

### ஆர்தர் பிரியாண்ட்.

(ஸண்டே டைம்ஸ் பத்திரிகையின் சுருக்கம்.)

பிரான்ஸில் இப்பொழுது போர் புரியும் பிரிடிஷ் சேனை பிரிடனின் சிறந்த சேனையாகும். அதற்கு சிலாக்கியமான பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. தீபகற்ப யுத்த சரித்திரத்தைப் படித்த எவரும் வெல்லிங்டனுடைய சேனையைவிட உயர்வானது ஒன்றுயிராதென்று நினைக்கலாம். ஆகிலும் சென்ற நான்கு வருஷங்களில் திறமையுள்ள ஒரு சேனை பிரிடனில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அளவு கடந்த நம்பிக்கையும், கற்பனையும், பரிச்ரமும் இந்த சேனையை தயாரித்திருக்கின்றன.

டன்கர்க்கிலிருந்து பிரிடிஷ் படைகள் பின வாங்கியபொழுது, படைத் தலைவர்களில் சொல்பமான படைகள்தானிருந்தன. அவர்களின் முன்னோர்கள் 20 வருட காலமாக அனுஷ்டித்து ஏற்பாடு செய்த முறைகள் யுத்தத்தின் புதிய தந்திரத்திற்குமுன் நிலை பெற முடியவில்லையென்று அவர்கள் கண்டுபிடித்தார்கள்.

1940-ம் வருஷத்திற்குப்பின் பிரிடிஷ் சேனையை தயார் செய்த தலைவர்கள் இரண்டு கொள்கைகளை மேற்கொண்டார்கள். எல்லாப் பயிற்சியும் நிலைமைக் குறியதாகயிருக்கவேண்டும். அவைகள் ஜெர்மனியை முறியடிக்கக்கூடிய வகையில் நிறுவப்பட வேண்டும். கீழ்தரமான ஸோல்ஜருள்பட எல்லோரும் இந்த எண்ணம் கொள்ளவேண்டும். ஒவ்வொருவரும் எதற்காகப் பாடுபடுகிறோம், எவ்விதம் பாடு படுகிறோம் என்பதைப் பூராவாக அறியவேண்டும். நவீன முறையில் தயாரிக்கப்பட்ட சேனைகளுக்கு மின்னல் எதிர்ப்பு மூலம் ஏற்பட்ட சீர்கேட்டிலிருந்து சேனையின் மன உறுதியை நிலை நாட்ட வேண்டுமானுல் சேனையிலுள்ள ஒவ்வொருவரும் அதனுடைய பொருப்பை உணரவேண்டுமென்று 1940-ம் வருஷ சம்பவத்திலிருந்து படிப்பினை ஏற்பட்டது.

இந்தப் படிப்பினையின் பலம் கிட்டிவிட்டது. இதைத்தான் பொதுமக்களும் அறிந்துகொள்ளவேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று. மரியாதையையும், நீதிகளையும் புறக்கணித்து, ஏராளமான படைகளின் உதவிகொண்டு ஆரம்ப காலத்தில் எதிரிகளை முறியடித்த நாஸிகளை அழிக்கும் முறைகளை அவன் அறிந்துகொள்ள விரும்புகிறுன். ஸோல்ஜராகப் பயிற்சி பெறுவதும், தளவாடங்களுக்கு மெருகு போடுவதும், முகாம்களில் தங்கியிருக்கிறதும் எதற்காக என்று அவன் அறிய விரும்பினுன்.

இந்த விஷயங்களைத் தெளிவாகவும், யதார்த்தமாகவும் நாம் போதித்தோம். முதல் முதலாக பொதுமக்கள் அவசியமான ஒரு தொழிலைக் கற்றுக்கொள்ளவேண்டும். இதைக் கற்றபின் அவன படிப்பாளியாகயிருப்பதுடன உண்மையான கல்வி கற்றவனுக மாறிவிட்டான். அதாவது அவன் செய்யும் வேலையில் அவனுக்குப் பெருமையும், சந்தோஷமும் உண்டாகி விட்டன என்ற திருப்தி ஏற்பட்டது.

நவீன சேனையில் அநேக தொழில்கள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. எந்தத் தொழிலாகிலும் சரி அதில் பயிற்சி பெருகிறவர்கள் பிராசீனமான வியாபாரச் சங்கங்களைப் போல் பூர்ணமான அனுபவம் பெறவேண்டும். அதற்கு அணுவளவு குறைவிருந்தாலும் போர் முனைகளுச் செல்லுகிறவர்களுக்குத் தோல்வியும், அழிவுமதான் ஏற்படும். ஹிட்லரின் கதைக்குக் குறைவான பயிற்சி முற்றுப் புள்ளி வைக்கமுடியாது. அதன் பயனுக இன்று உலகில் நல்ல பகுத்தறிவும் லக்ஷியத்தை மதிக்கக்கூடிய சக்தியும் பெற்ற அநேக பயிற்சி பெற்றவர்களிருக்கிறுர்கள். இதேவிதமாக தொழிலாளிகளும் ஏராளமாகத் தோன்றி விட்டார்கள்.

ஒருவனுக்கு ஒரு தொழிலைக் கற்றுக் கொடுப்பது சேனையின் வேலையின் ஒரு அம்சமாகும். அவனுடைய திறமையை நவீன யுத்தத்தின் வேகத்திலும், அதிர்ச்சியிலும், அபாயத்தின் பொழுதும் மற்றவர்களுடன் நெருங்கி எவ்விதம் ஒத்துழைப்பதென்பதையும் அவனுக்குப் போதிக்க வேண்டும். தேகத்தின் திடம், புத்தி, சரீரத்தின் சுறுசுறுப்பு, மற்றவர்களுக்கு புத்திசாலித்தனமாகவும், பெருமையுடனும், மனதாரவும் கீழ்ப்படிதல், கற்பனு சக்தி, தன்னம்பிக்கை, உற்று நோக்குதல், விவரங்களை அறிவது, போர் முனையில் சாமர்த்தியம், யூகபுத்தி, வேகம், பிரயாசை, தன்னை மறப்பது, தைரியம், நம்பிக்கை, உத்சாகம் என்ற குணுதிசயங்களைக் குறிப்பன சிலர் மட்டுமல்லாமல் நமது நாட்டில் உள்ள பொதுஜனங்களும், பள்ளிப் பிள்ளைகளும் பெறவேண்டும்.



இதைவிடக் கஷ்டமான கல்விப் பிரச்னை இது வரையில் தோன்றியதில்லை. இந்த உயர்வான மானிட குணங்களைப் போதிக்க முடியாது. அல்லது மனப் பாடம் செய்யவும் முடியாது. இதற்கு இணங்காதவர்களிடம் இதைப் போதித்துப் பயன்படாது. இந்த ஆத்மீய குணங்கள் ஒவ்வொருவரிடமும் தானுகவே குடி கொண்டிருக்கவேண்டும்.

இந்த பயங்கரமான யுத்தம் முடிவடைந்த பின் போர் முனையிலிருந்து திரும்பி வரும் ஸோல்ஜர்கள் யுத்தத்துக்கு முன் நமது நாட்டில் நிலை பெருத நற்குணங்களையும், அவைகளின் உபயோகத்தையும் விளக்கிக் காட்டுவார்கள். மற்றவர்கள் ஆபிரிக்காவிலும், ஆசியாவிலும் இறந்தவர்களைப்போல் விடுதலை செய்யச் சென்ற நாடுகளில் மண்ணேடு மண்ணுய்ச் சேர்ந்து விடுவார்கள். அவர்கள் உலகத்தை விடுவிக்கவும் புனருத்தாரணம் செய்யவும், உயிர் துறக்கிறுர்கள். அவர்கள் பிரிடனின் ஆன்மாவுக்கு புத்துயுர் உண்டாக்கியிருக்கிறுர்கள். அவர்கள் வருங்காலத்தில் சந்ததியார்களுக்குத் தேடி வைத்த பொருள் ஹிட்லரை முறியடித்ததல்ல. அவர்கள் தங்களுடைய ஆன்மாவை அர்ப்பணம் செய்து உயிர் துறந்து வெற்றி பெற்றது தான். அவர்கள் விடுத்த படிப்பினையை நாம் பயன் படுக்த வேண்டுமானுல் நாமும் அவர்களின் ஊக்கத்தையும். விசுவாசத்தையும் பின்பற்ற வேண்டும்.

---

## ஜெனரல் ஸர் ஹென்ரி மெயிட்லாந்து வில்ஸன்.

### தேகதிடமும் மனுேதிடமும் பெற்றவர்.

(மேஜர் P. கிரிப்பின் எழுதிய கட்டுரை).

மத்தியதரைக்கடல் போர்முனையின் உயர்தர கமாண்டரான ஜெனரல் ஸர் ஹென்ரி மெயிட்லாந்து வில்ஸனுடன் சிறிது நேரம் சம்பாஷணை செய்தபின் அவர் திடகாத்திரமும், திட சித்தமும் உள்ளவரென்று கண்டுபிடித்து விடலாம். பருத்த சரீரமுள்ள இவர், கலக்கமடையாத ஊக்கமுள்ளவர். அவரிடம் பரிகாசப் பேச்சும் மிகுதியாக இருக்கும். இவரைவிட பகுத்தறிவுள்ளவரையும், சமமான அபிப்பிராயமுள்ள வரையும் காண்பதரிதென்று சொல்லப் படுகிறது.

அவருடைய ஸ்நேகிதர்கள் அவரை புத்திசாலி என்று மதிக்கிறுர்கள். மத்தியதரைக் கடல் பிராந்தியத்தில் அவரைப்போல் மற்ற எவரும் அங்கு தீர்க்கப்படவேண்டிய ராணுவ, ராஜீய பிரச்னைகளில் அவ்வளவு நுட்பமான அறிவு பெற்றிருக்கவில்லை.

ஐந்து வருடங்களாக ஒரு கணம்கூட நோய்வாய்ப்படாத இரும்பு போன்ற திடகாத்திரமுள்ள அவருக்கு இப்பொழுது 62 வயதாகிறது.

பருத்த சரீரமுள்ள வில்ஸன் ஈடன் காலேஜில் படித்தவர். 1,900-ம் வருஷத்தில் அவர் கமிஷன் பெற்ற பதவியை ஏற்முர். அவர் படைகளுடன் நிர்வாகத்திலும் சாம்ராஜ்யப் படையிலும், தெற்கு ஆபிரிக்கப் போரில் சேர்ந்து ஈடுபட்டு, இரண்டு கொக்கிகளுள்ள க்வீன் பதக்கத்தையும், கிங்க்ஸ் பதக்கத்தையும் பரிசுபெற்றுர்.

1914-ம் வருஷத்தில் முதல் உலக யுத்தத்தில் யுத்த காரியாலயத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்டார். 1915-ம் வருஷம் டிசம்பர் மாதம் முதல் யுத்தம் முடியும் வரையில் பிரான்ஸில் நிர்வாக ஆபீஸராக இருந்து வேலைபார்த்து வந்தார். அவரைப்பற்றி நான்கு தடவை வெளியீடுகள் அச்சிடப்பட்டன. 1917-ம் வருடத்தில் அவருடைய சேவையைப் பாராட்டி அவருக்கு D. S. O. பட்டம் வழங்கப்பட்டது.

1937-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் படைகளின் தலைவராக மேஜர் ஜெனரல் அந்தஸ்தைப் பெற்றுர். 1939-ம் வருஷம் ஜூன் மாதத்தில் அவர் எகிப்திலுள்ள பிரிடிஷ் துருப்புகளுக்கு சேனுதிபதியாக நியமிக்கப்பட்டார். கிரேசியானியின் சேனை முறிபட்டதற்கும், சிரேனைகாவில் வெற்றி கிடைத்ததற்கும் ஜெனரல் மெயிட்லாந்து வில்ஸனின் யுத்த தந்திரம்தான் காரணமாகும்.

கிரீஸிலிருந்து பிரிடிஷ் துருப்புகளை வாபஸ்பெற்ற அற்புதச் செயல் ஜெனரல் வில்ஸனின் திறமையை வெளிப்படுத்துகிறது. 1941-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் கிரீஸியப் போர் முடிவடைந்தபொழுது முன்யோசனையுடன் வில்ஸன் பின்வருமாறு சொன்னார். "நாம் தோல்வியடைந்ததினால் பாதகமில்லை. ஏனெனில் கிரேக்கப் போரினால் ருஷ்யர்களுக்குத் தயார் செய்துகொள்ள இரண்டு மாத அவகாசம் கிடைத்தது." போலிஷ் எல்லைச் சரகத்தைத் தாண்டி ருஷ்ய யுத்தத்தை ஜெர்மனி ஜுன் மாதம் 22-ம் தேதிதான் துவக்கம் செய்தது.

1942-ம் வருஷத்தில் மெயிட்லாந்து வில்ஸன் பாரசிக, இராக் சேனையின் தளகர்த்தராக நியமிக்கப்பட்ட பொழுதும், அவருடைய புத்திசாலித்தனம் வெளிப்பட்டது. பாரசிக இராக் பிராந்தியம் ருஷ்யாவுக்குப்போகும் சர்பரா மார்க்கமாகத்தானிருக்கக்கூடுமாகையால், இந்த சேனைகளுக்கு Q படைத்தலைவரை சேனாதிபதியாக நியமித்தால் போதுமென்று அவர் அபிப்பிராயப்பட்டார்.

## மாண்ட் காமரியிடமுள்ள வாலிபர்கள்.

**பால் ஹோல்ட்.**

(டெயிலி எக்ஸ்பிரஸின் கட்டுரையின் சுருக்கம்).

மாண்டியிடமுள்ள வாலிபர்களை அவர் தேர்ந்தெடுத்து அவர்களுக்குப் பயிற்சியளித்திருக்கிறார். அவர்கள் எல் அலாமீனிலிருந்து போர் புரிந்து வருகிறார்கள். அந்த ஞாபகமே அவர்களுக்குத் தோன்றுகிறது. இந்தப் போர் மாரத் அரண் யுத்தம் போலிருக்கிறதென்று அவர்கள் சொல்லுகிறார்கள். இது ஸிஸிலியில் படைகளிறங்கியது போலிருக்கிறது. தற்போதய நடவடிக்கைகள் ஸிஸிலிய நடவடிக்கைகளுக்கு ஒப்பிடக்கூடியவை.

மாண்ட் காமரி பிரிடிஷ், கனடியப் படைகளை கடானியாவுக்குக் கொண்டுசென்றார். அமெரிக்கப்படைகள் பாலர்மோ வழியாக முன்னேறினார்கள். இரு படைகளும் மெஸ்ஸினா ஜலசந்திக்குக் குறிப்பிட்ட டயத்தில் சென்றன.

மாண்டியிடமுள்ள படைகள் போரைப்பற்றியும், வெற்றியைப்பற்றியும் பேசுவதில்லை. தேசப்படத்தைச் சுட்டிக்காட்டி இந்த இடத்தில் விருந்து நடக்கப்போகிறதென்று சொல்லுவார்கள். போரில் வெற்றிபெற்றபின் இந்த விருந்து வெற்றிகரமாக நடந்ததென்று சொல்லுகிறார்கள்.

போர் நிலைமையை மதித்துப்பார்க்கும் பொழுது, இது சீருள்ளதாகயிருக்கிறதென்று சொல்லுகிறார்கள். நமது நிலைமை சீருள்ளதாகவும், எதிரியின் நிலைமை சீர்கெட்டுமிருப்பதால் நமக்கு சாதகம் ஏற்படும்.

கெயினில் பிரிடிஷ், கனடியப்படைகளின் நிலைமை சீருள்ளதாயிருக்கிறதென்று மூன்று ஜெனரல்கள் பேசிக்கொள்ளுவதை நான் செவியுற்றேன். அவர்களின் பேச்சின் அர்த்தமென்னவென்று அறிந்துகொள்ளாத பக்ஷத்தில் அவர்கள் கிருஸ்துமஸ் பரிசுகளைப் பற்றிப்பேசிக்கொண்டிருக்கிறார்களென்றுதான் நாம் நினைக்கக்கூடும்.

நார்மண்டியில் நாம் சீருடனிருக்கிறோமென்று, அவர்கள் சொல்லுகிறார்கள். பீரங்கி குண்டுகள் சரியான சமயத்தில் பிரயோகிக்கப்படுகின்றனவென்றும், சர்பராக்கள் நிருதியாக வந்துகொண்டிருக்கின்றனவென்றும் அதன் அர்த்தமாம்.

மாண்ட்காமரியும், அவருடைய ஜெனரல்களும் ரோமல் மிகவும் சீர்கெட்ட ஜெனரல் என்று குறைகூறுகிறார்கள். அவன் அவசரக்குடுக்கை, என்றும், உக்கிரமானவனென்றும் அவருடன் விருந்து சாப்பிட்டிருக்கிறோமென்றும் சொல்லுவார்கள்.

D தினத்துக்கு இரண்டுவாரங்களுக்குமுன் ரோமல் கடற்கரைகளில் போர்புரிவது நிச்சயமென்று மாண்ட்காமரி சொன்னார். அவர் ஏற்பாடான ஒரு போர் முனையில் போரை நடத்தமாட்டார் என்று மாண்டி அபிப்பிராயப்பட்டார். அவருடைய பழைய எதிரியை எதிர்க்கும் சந்தர்ப்பம் மூன்றும் தடவை வாய்த்துவிட்டதென்பதில் அவர் ஆனந்தப்பட்டார்.

ரோமலை மற்றொரு மகத்தான போரில் முறியடிக்க அவர் பிரியப்பட்டபோதிலும், இந்தப்போர் ஒரு சில்லரைச் சண்டையென்று எண்ணி அதற்கு வேண்டிய திட்டங்களை நிறுவினார். இது ஒரு நிரடான விருந்தாகயிருக்குமென்று அவர் மே மாதத்தில் சொன்னார். அவர் சொன்னது உண்மைதான்.



மாண்டியின் ஜெனரல்கள் அவரைப் பின்பற்றுகிறார்கள். அவர்களும் அவர் பேசுவது போலவே பேசுகிறார்கள்.

மாண்டி அடிக்கடி "இதுதான் குறிப்பான விஷயம்" என்று சொல்லுவதுண்டு. அவருடைய ஜெனரல்களும் இதேமாதிரி சில தொடர்களைச் சொல்லிவிட்டுத்தான் அடுத்த வாக்கியத்தைப் பேசுவார்கள்.

அவர் மாதிரியாகவே ஜெனரல்களும் ஆடைஅணிந்து கொள்ளுவார்கள். மேலங்கியுள்ள சட்டைப்பைகளுக்குமத்தியில் அவர்கள் ஒரு தங்கச்சங்கிலியை அணிந்துகொண்டிருக்கிறார்கள். சட்டைகளின் கைகளை அவர்கள் மடக்கிவைத்துக்கொள்ளுகிறார்கள். குல்லாயைக் கையில் எடுத்துச் செல்லுவார்கள்.

அவர்களுடைய ஜோடுகள் பளபளப்பாக இராது. கணுக்கால் ஆபரணங்களில் சேர்படிந்திருக்கும். காகிதங்களைக் கக்கத்திலடக்கிக்கொண்டு தலை நிமிர்ந்தார்போல் அவர்கள் நடந்துசெல்லுவார்கள்.

## நேசதேச படையெடுப்பு விமானப்படை.

**பிரான்ஸ் போரில் நடவடிக்கை.**

(விங் கமாண்டர் L. V. பிரேசர்).

விமானப் போரைப்பற்றி வருங்காலத்தில் எழுதப்படும் புத்தகங்களில், அவ்ரான்சஸை பதில் தாக்குதல் செய்ய ஜெர்மானியர்கள் தயார் செய்திருந்த கவசம்பூண்ட படைகளை பிரிடிஷ் விமானப்படையைச் சேர்ந்த ஆகாச வாணங்களை வீசும் டைபூன் விமானங்கள் ஆகஸ்ட் மாதம் 7-ம் தேதியன்று தாக்கி அழித்த புராணக்கதையும் சேர்க்கப்படும்.

மார்டெனுக்குத் தெற்கில் ஜெர்மன் பான்ஸர் படைகள் அமெரிக்கப்படைகளின் இடது விலாப்பக்கத்தைத் தாக்கக் குவிக்கப்பட்டிருந்தன. வடக்கிலுள்ள பிரிடிஷ் படைகளுக்குப் பின்புறமுள்ள விமான தளங்களிலுள்ள டைபூன் விமானங்களும், வெடிவிமானங்களும், விமான ரக்ஷணையற்ற ஜெர்மன் படைகளைக் கண்டு பிடித்து விட்டன. சில நிமிஷங்களுக்குள்ளாக 10 ஜெர்மன் டாங்கிகள் அழிக்கப்பட்டன. அஸ்தமன சமயத்தில் கணக்கெடுத்த பொழுது 81 டாங்கிகள் அழிக்கப்பட்டிருந்தன. 27 தீப்பற்றி எறிந்துகொண்டிருந்தன. 27 பழுதாக்கப்பட்டிருந்தன. 78 மோட்டார்கள் அழிக்கப்பட்டிருந்தன. 43 தீப்பற்றிக் கொண்டிருந்தன. 74 பழுதுபட்டிருந்தன.

### விமான ஆதிக்கம்.

இவ்வளவு பலமான வெற்றிக்கு விமான ஆதிக்கம் தான் காரணம். ஆகிலும் பிரான்ஸில் வெற்றிபெற்றதற்கு விமானங்களின் சங்கியை மட்டும் காரணமல்ல. நல்ல முறையில் நிறுவப்பட்ட திட்டத்தை விமானப்படை சீப் மார்ஷல் ஸர் டிராபோர்ட் லே மாலோரியிடமுள்ள நேசதேச விமானப்படை நிறைவேற்றியதுதான் காரணமாகும். இந்தத் திட்டப்படி லுவார், ஸேயின், இங்கிலீஷ் கால்வாய், அட்லாண்டிக் கடற்கரைக்குட்பட்ட் நீண்ட சதுரமான பிரான்ஸைத் துண்டித்து விடவேண்டும். இந்த திட்டத்தை நேசதேச விமானப்படை நிறைவேற்றியதால்தான் வடமேற்கு பிரான்ஸிலுள்ள ஜெர்மன் படைகளைத் துண்டித்துவிட சௌகரியமேற்பட்டது.

நேசதேசப்படையெடுப்பு விமானப்படையில் இரண்டாவது டாக்டிகல் விமானப் படையும், ஒன்பதாவது அமெரிக்க விமானப்படையும், பிரிடனின் தற்காப்பு விமானப்படையும் ஒன்றுபட்டிருக்கின்றன. யுத்த சரித்திரத்திலேயே இது பலமான, மகத்தான விமானப் படையாகும். ஐரோப்பாவிலுள்ள ஜெர்மன் படைகளை அழிக்கத் தரைப்படையுடன் ஒத்துழைக்க அது திரட்டப்பட்டது. இந்தப்படை வெற்றிகரமாக வேலை செய்து வருகிறது.

### எதிரி சுற்றிவளைக்கப்படுகிறான்.

அதன் பெரும்பாகமான வேலை D தினத்திற்கு முன்பே முடிந்துவிட்டது. ஸேயின் நதிக்கும், லுவார் நதிக்கும் இடையே எதிரி அடைக்கப்பட்டான். ஆர்லியன்ஸுக்கும், பாரீஸுக்கும் மத்தியிலுள்ள இடைவெளி வழியாகத்தான் படை வரிசைகளுக்கும் சர்பரா, உதவிப்படைகளிருக்கும் ஸ்தானங்களுக்கும் தொடர்பு ஏற்பட்டிருந்தது.

அந்த ஸ்தானங்கள் ஊடுருவிச் செல்லப்பட்டபின் மிட்செல், லைட்னிங், மஸ்கிடோ. தண்டர்போல்ட், மஸ்டாங், டைபூன், ஸ்பிட்பையர், மாராடர், ஹாவக் முதலிய விமான கேம் கள் உள்ள விமானப்படைகள் நடவடிக்கையை ஆரம்பித்துவிட்டன. நடமாடும் ஜெர்மானி யர்களை விமானங்கள் இரக்கமன்னியில் வெடி குண்டுகளால் அடித்து வருகின்றன.

ஜெர்மன் படைகளை அழிப்பதுடன், அழிபடும் விமானங்களை ஈடு செய்யமுடியாதபடிக் கும் விமானங்கள் நொருக்கப்படுகின்றன. இருப்புப் பாதைகளின் பெரும்பாகம் உபயோக மில்லாமல் கெட்டுப்போய் விட்டன. அநேக மாதங்களாக ட்ரூக்ஸ், சார்டர்ஸ், எவ்ரூ, மாண்ட்போர்ட், எல்பீயப், பெர்னே, லிஸியூக்ஸ் என்ற இடங்கள் பேரில் ஆயிரக்கணக்கான விமானங்கள் வெடிகுண்டுகளைப் போடுகின்றன. ஸெயின் பகுதிக்குச் செல்லும் சாமான்களை அனுப்பும் மெக்ஸிடான் ஜங்க்ஷன் முக்கியமாகத் தாக்கப்பட்டிருக்கிறது.

நேச தேசப்படைகள் உள்நாட்டிற்குள் முன்னேறும் பொழுது நேசதேச விமானப் படையின் அலுவல் முக்யத்துவமுள்ளதாக ஆகிவிடும். விமானப்படைகள் பிரெஞ்சு எதிர்ப்பு இயக்கத்தைச் சேர்ந்த மாக்விப் படைகளுக்கும், சாமான்களையும், உதவிப்படைகளையும் வழங்கவேண்டும்.

---

## ஸோல்ஜருக்கு உபதேசம்.

### (பீல்ட் மார்ஷல் வேவல் பிரபு).

**ஸன்டே டைம்ஸ் பத்திரிகையில் வந்த இந்தக் கட்டுரையை வைஸ்ராயாக வருமுன் பீல்ட் மார்ஷல் வேவல் எழுதியுள்ளார்.**

நான் 42 வருஷங்களாக ஸோல்ஜராக யிருந்து வருகிறேன். 9½ வருஷங்களில் நான் இரண்டு பெரிய போர்களிலும், ஒரு கடுத்தரமான தெற்கு ஆபிரிக்கப் போரிலும், இரண்டு சிறிய போர்களிலும் ஈடுபட்டேன்.

நான் பிரான்ஸ், பெல்ஜியம், ருஷ்யா, ஆசியா மைனர், ஸிரியா, பாலஸ்தீனம், இராக், வடக்கு ஆபிரிக்கா, கிழக்கு ஆபிரிக்கா, தெற்கு ஆபிரிக்கா, இந்தியாவின் வடமேற்கு எல்லைச் சரகம், டச்சு கிழக்கிந்தியத் தீவுகள், மலேயா, பர்மா முதலிய இடங்களில் போர் புரிந்திருக் கிறேன். எனக்குச் சிறந்த அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. படை ஆபீஸராக நான் வேலை பார்த்திருக்கிறேன். சோம்பேறிகளாகவும், உல்லாசமாகவுமுள்ள வேலைக்காரர்கள் அபத்த மான நடவடிக்கைகளைச் செய்திருப்பதையும் கண்டிருக்கிறேன். யுத்தத்தில் நிர்வாக அதி காரியாகயிருந்து படை ஆபீஸருக்கு ஒத்தாசை செய்து அவரை நல்வழிக்குக் கொண்டுவர முயன்றிருக்கிறேன். நான் சேனாதிபதியாக வேலை பார்த்திருக்கிறேன். எல்லா உத்தியோகஸ் தர்களிடமும் எனக்கு அனுதாபம் உண்டு.

என்னுடைய உத்தியோக காலத்தில் படைவரிசைகளிலுள்ள மனிதர்களின் க்ஷேமத் தையும் அபிப்பிராயங்களையும் பற்றி சிந்தனை செய்திருக்கிறேன்.

என்னுடைய அனுபவத்திலிருந்து சில விஷயங்களை வெளியிட விரும்புகிறேன். நான்கு படிப்பினைகளை நான் போதிக்கக்கூடும். சிக்கலான நவீன யுத்தமுறைக்கு அவைகள் அதிக உபயோகமில்லாதபோதிலும் அவைகளை நீங்கள் மனதில் இருத்தி வைப்பது நலம்.

1. யுத்தத்தின் போக்கு படைகளின் நிர்வாகத்தையும் போக்குவரத்து அமைப்பையும் பொருத்தது. இதை அமெரிக்கர்கள் படைகளின் சலன சக்தி என்று சொல்லுவார்கள். படைகளை எங்கு வைப்பது, அங்கே எவ்விதம் அவைகளை போஷிப்பதென்பதுதான் கடின மான பிரச்னையே ஒழிய படைகளை எந்த முனைக்கு அனுப்புவதென்பது அவ்வளவு சிரம சாத்யமானதல்ல. தலைவரின் திட்டத்தில் சப்ளைகளை எவ்விதம் கொண்டுபோவது, எவ்விதம் படைகளைச் சலனம் செய்வது என்ற முடிவுகள் காணப்படவேண்டும். அப்பொழுதுதான் துணிவுகரமான நடவடிக்கைகளை எப்படி, எப்பொழுது ஆரம்பிப்பதென்று அவனுக்கு தெளிவுபடும். சில்லரைச் சண்டைகளும், யுத்தங்களும் துணிவான நடவடிக்கையினால்தான் வெற்றிகரமாக முடிவடைகின்றன.

2. அது குழப்பமான யுத்தமாகத்தான் இருக்கும். நிச்சயமற்ற இந்தப் போரில் அநேக அகஸ்மாத்தான நடவடிக்கைகளை நாம் மதித்து விடமுடியாது. காலநிலை திடீரென்று



மாறிவிடக்கூடும். ஒரு தகவல் தவறிவிடும். நெருக்கடியான சமயத்தில் தலைவர் விழுந்து விடுவார். சிறந்ததிட்டங்களும் தங்கு தடையில்லாமல் நடைபெறாது. இந்த இன்னல்களை யும் பொருள்படுத்தி அதற்கு வேண்டிய பரிகாரங்களை முன்கூட்டியே தேடிவைக்க வேண்டும். அவைகளைக் கண்டு அதைரியப்படக்கூடாது. உன்னுடைய அலுவலை உறுதியுடன் செய்து பகுத்தறிவை உபயோகித்தால் மிகவும் கடினமான சங்கடங்களும் தீர்ந்துவிடும்.

3. எல்லா சில்லரைச் சண்டைகளிலும், போர்களிலும், யுத்தத்திலும் படைகளின் மனோ திடம்தான் இறுதிப்போருக்கு அனுகூலமானவை. உயர்வான ஆயுதங்களும், ஆகார வசதி களும், அதிக சக்தியையும் மனஉறுதியைப் பலப்படுத்தும். ஆகிலும் புரோத்சாகத்தின் பேரில் வெற்றி பெற வேண்டுமென்ற ஊக்கம்தான் இறுதி வெற்றியை அளிக்கும். அழகிய இறக்கை களிருந்தால் பறவைக் கழகுதான், அழகான யுத்தக்கப்பல்கள் இருந்தால் திறமையுள்ள மாலுமிகள் கிடைத்துவிடமாட்டார்கள். அவர்கள் இல்லாதிருந்தால் நாம் மத்தியதரைக் கடலில் இதாலியக் கடற்படையை முறியடித்திருக்கமுடியாது. ஆகையால் மனிதர்களின் குணாதிசயங்களையும் அவர்களின் மனஉறுதியையும் நாம் பரிசீலனை செய்யவேண்டும்.

4. உன்னுடைய நிலைமை கெடுதலாகத் தோன்றும்பொழுது எதிரியின் சங்கடங்களை நாம் மதித்துப் பார்க்கவேண்டும். உன்னைவிட அவனுக்கு பலமான கெடுதல்கள் இருக்கக் கூடும். அவ்விதம் தானிருக்கவேண்டுமென்ற எண்ணத்துடனிருக்கவேண்டும். "மூலப்படை யில் அநேக ஸோல்ஜர்கள்" இருப்பதைவிட நம்பிக்கை கொண்டிருப்பது சிறந்த பக்கபலம் என்று நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.

---

## ஆக்கிரமிப்பு நாடுகளிலிருந்து வந்த விமானிகள்.

### விசுவாசமுள்ள வட்டம்.

(ஒன்றுபட்ட படை).

வட்டமிடும் கருவியின் ஒரு முனையை பெர்லினில் ஊன்றி, மற்றொரு முனையை ஐஸ்லாந் தில் தொட்டு, அதிலிருந்து தெற்கு முகமாக வட்டம் வரைந்தால், வட்டத்தின் கோடு பிரிடிஷ் தீவுகள், பிரெஞ்சு மொராக்கோ, ஆல்ஜியர்ஸ், லிபியா, எகிப்து, ஸிரியா, இரான், காஸ்பியன் கடல், மத்திய ருஷ்ய சமவெளி, ஸ்டாலின்கிராட், மாஸ்கோ, லெனின்கிராட் வழியாகச் சென்று மர்மான்ஸ்கிலிருந்து வெளியேறும். இந்த வட்டத்திற்குள் ஜெர்மனி, இதாலி, ஆஸ் திரியா, ருமேனியா, மற்றும் ஆறு அடிபணிந்த நாடுகள் அகப்பட்டுவிடும். வட்டத்தின் ஓரத்திலும் அதற்குச் சமீபத்திலும் சக்திவாய்ந்த எதிர்ப்புப் படைகளிருக்கின்றன. இந்த வட்டத்தில்தான் ஐரோப்பியப் போரின் யுத்த தந்திரம் நிறுவப்பட்டிருக்கிறது.

யுத்த ஆரம்பத்தில் இவ்விதமான வட்டம் கிடையாது. குழப்பமான அக்கிரமச் செய் கைகள் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத அநேக இடங்களில் நடைபெற்றன. போலந்து, நார்வே, பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலந்து, கிரீஸ், யூகோஸ்லாவியா விழுந்தன. பிரிடன் வெடி விமானங்களால் பலமாகத் தாக்கப்பட்டது. யுத்தம் முன்னேற ஏற ஒரு சிறிய வட்டம் அமைக்கப்பட்டது. இந்த வட்டத்தில் ஜெர்மனி ஆதிக்கம் பெற்றிருந்தது. இந்த வட்டத் திற்குள்ளிருந்து கொடுந் துன்பத்துக்கும், ஜெர்மன் ரகசியப் போலீஸின் அமுலுக்கும், பிணையாளிகளுக்கும், கடுமையான இரவு நடமாட்டத் தடை உத்திரவுக்கும், நாகரீகமற்ற பழிவாங்குதலுக்கும் உட்படாமல் ஒன்று, இரண்டு, நூறு, ஆயிரக்கணக்கானவர்கள் தப்பி ஓடினார்கள். அவர்களைப் பற்றித்தான் இந்தக் கட்டுரையில் எழுதுகிறோம். தப்பி வந்தவர் கள் பெரிய வளையத்தை அமைக்க உதவியளித்தார்கள். இது பேருக்கும் மட்டுமில்லாமல் உண்மையாகவே அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் சக்தியை வளர்ச்சி செய்விப்பவை கடற் படையும், ஸ்பிட்பயர், வெல்லிங்டன், ஹாலிபாக்ஸ், லங்காஸ்டர், ஸ்டர்லிங், மஸ்கிடோ, போஸ்டன், ஹட்ஸன், பறக்கும் கோட்டை விமானங்கள், மனிதர்களும், பீரங்கிகளுமாம். ஐரோப்பாவின் சிறிய வளையத்தில் இப்பொழுது பிரசார மாளிகை சூழ்ந்திருக்கவில்லை. இனிமேல் அந்த வட்டாரத்திலிருந்து ஜெர்மனி பிரிடனை தாக்க முடியாது. அது உண்மை யான வட்டமாகி விட்டது.

நேசதேச விமானிகள் இந்த வட்டாரத்தின் ஒரு பகுதியில் தான் காணப்படுகிறார்கள். அவைகளுக்கு உதவியாக அமெரிக்க விமானப்படை வந்துள்ளது. காரியத்தைப் பூர்த்தி

செய்ததில் அவர்களுக்குப் பெருமையும் கீர்த்தியும் ஏற்படவில்லை. இந்த நடவடிக்கையில் அவர்கள் பங்கெடுத்துக்கொண்டார்களென்பதுதான் போற்றத் தக்கது. யுத்தத்தில் குழப்பமும், நெருக்கடியான நிலைமையும் ஏற்பட்டு, தோல்வி கிடைக்கும் போலிருந்தபொழுதும் அவர்கள் போர்புரிந்து சுயநலத்தை மறந்திருக்கிறார்கள். அவர்கள் தன்னுடைய க்ஷேமத்தையும் பொறுப்பையும் உதறிவிட்டு, தானாகவே அபாயத்துக்குட்பட்ட வெளிநாடுகளுக்குச் சென்றதில்தான் அவர்களின் புகழ் ஓங்கியிருக்கிறது. மேலும் அவர்கள் தங்களுடைய குடும்பங்களையும், தாய் தகப்பன்மார்களையும், நண்பர்களையும் எதிரி வசமுள்ள நாடுகளிலும் எதிரியின் கொடுமைகளுக்குட்படும்படிக்கும் விட்டு வந்தார்கள். தங்களுக்காக அவர்கள் துன்பப்படுவார்களென்றும் அவர்கள் அறிவார்கள். இந்த அவமானத்தை ஆகாயமார்க்கத்திலிருந்து பழிக்குப் பழி வாங்குவோமென்றும் அவர்கள் நம்பவில்லை.

விமானிகள், விமானங்களின் அற்புதச்செய்கைகள் திரும்பித் திரும்பி நடைபெறக்கூடும். ஸ்பிட்பயர் விமானங்களின் நடவடிக்கை ஒரே மாதிரியாகயிருக்கும். அட்லாண்டிக்கில் கடாலினா கடல் விமானங்களின் சலனமும், கப்பல்களின் பிரயாணத்துக்கு ஒப்பிடக்கூடியதாகயிருக்கும். ஆகாயப் போரைப் பற்றிவரும் ஆயிரக்கணக்கான ரிப்போர்ட்டுகளிலிருந்து எது முக்கியத்துவமுள்ளது, சிறப்புள்ளதென்று நிர்த்தாரணம் செய்வது கஷ்ட சாத்தியமாகிவிட்டது. ஏற்கனவே நடைபெற்ற ஒரு சம்பவத்தை ஒப்புக்கொள்ளுவது சகஜமாகிவிட்டது. ஆகையினால் மற்ற போர்ப்படைகளைப் போல நேசதேச விமானிகளின் அரிய செய்கைகளும் ஒரே மாதிரியாகத் தான் தோன்றுகின்றன. ஆனால் அவர்களுடைய செய்கைகளுக்கும் மற்றவைகளுக்கும் வித்தியாசமுண்டு. விமானிகள் விசேஷமான தியாகம் செய்யவேண்டும். அவர்கள் புத்திசாலிகளாகயிருக்கவேண்டும். விமானிக்கும் அவனுடைய சுற்றத்தாருக்கும் அதிக மனக்கிலேசத்தை இந்த நடவடிக்கை உண்டுபண்ணும். அதில் சகிப்புத் தன்மை மிகுதியாகவேண்டும். இந்த கஷ்டத்தை சுற்றத்தாரும், சொந்த வீட்டிலுள்ள சுகபோகங்களும் தீர்த்து வைக்கமுடியாது. மேலும் அயல் நாட்டில் வசித்து வருகிறவருக்குப் பொறுமை மிகுதியாக இருக்கவேண்டும்.

இந்த பிரயாசையின் எதிர் கால நிலை என்ன? இந்த தியாகத்தின் விளைவு தாற்காலிகமாக இருக்கக்கூடாது. போலந்து, செகோஸ்லவேகியா, நார்வே, ஹாலந்து பெல்ஜியம் பிரான்ஸ் முதலிய தேசங்களிலிருந்து ஆயிரக்கணக்கானவர்கள் பிரிடனில் குடியேறியிருப்பதால் பிரிடனின் வாழ்க்கை ஒருவாறு பாதிக்கப்படலாம். சமாதானம் நிலவும் பொழுது நாம் யுத்தத்தைப் பற்றிப் பேசுகிறோம். யுத்த மத்தியில் நாம் சமாதானத்தைப் பற்றிப் பேசுகிறோம். சமாதான காலத்துக்காக, ஆடம்பரமான, ஸ்பஷ்டமாகயில்லாத, மாயாமயமான அநேக திட்டங்கள் போடப்படுகின்றன. ஆகிலும், பிரிடனில் ஆயிரக்கணக்கான அயல் நாட்டு விமானிகளிருப்பதால் உலகத்தின க்ஷேமத்திற்காக ஒன்றுக்கொன்று முரண்படாத சர்வ தேச நல்லுணர்ச்சியை வளர்ச்சி செய்ய போதுமான ஆதாரங்களிருக்கின்றன. இந்த விமானிகள் பிரிடனில் வாசம் செய்திருக்கிறார்கள். தங்களுடைய நாட்டிற்காகவும், பிரிடனுக்காகவும், பிரிடனின் லக்ஷியங்களுக்காகவும் அவர்கள் போர் புரிந்திருக்கிறார்கள்.

நாம் இதை ஒரு பொழுதும் மறந்துவிடக்கூடாது. ஆகிலும் பிரிடிஷ் நிலக்கரியினாலும் எஃகினாலும், பிரிடிஷ் நிபுணர்களாலும், தொழிலாளிகளாலும் கட்டப்பட்டு பிரிடிஷ் விமான தளங்களிலிருந்து புறப்படக் கூடிய பிரிடிஷ் விமானங்களின் உதவிகொண்டு தான் அவர்கள் போர் புரிந்திருக்கிறார்கள். அவர்களும் இந்த உண்மையை மறக்கமாட்டார்கள்.

பிரிடனில் வசித்ததினால் அவர்கள் நம்முடைய வாழ்க்கை முறைகளை அறியக்கூடும். அவர்கள் பிரிடிஷ் குடும்பங்களுடன் கலந்து, பிரிடிஷாரின் பழக்க வழங்களையும் அறிந்திருக்கிறார்கள். அவர்கள் பிரிடிஷ் பெண் மணிகளைக் கல்யாணம் செய்துகொண்டிருக்கிறார்கள், சிலருக்குச் சந்ததியும் உண்டாகியிருக்கிறது. நார்வேயிலிருந்தும், மத்திய ஐரோப்பாவிலிருந்தும் வந்த ஜனங்கள் பிரிடனில் மிட்லாந்திலும், எடின்பரோவிலும், லண்டனிலும், ஸ்காட்லாந்து, வேல்ஸ்மலை பிரதேசங்களிலும், மின்னல் தாக்குதலுக்குட்பட்ட நகரங்களிலும் நிலைபெற்றுவிட்டார்கள். அமெரிக்கர்களும் இங்கிலாந்தில் அநேக இடங்களில் குடியேறிவிட்டார்கள். இவர்களை பிரிடிஷ் மக்கள் வரவேற்று உபசரணை செய்கிறார்கள். தூர தேசங்களான டெக்ஸாஸிலிருந்தும், கோலராடோவிலிருந்தும் இங்கிலாந்தின் பேரில் விமானங்களில் பறந்து செல்லுகிறார்கள். மத்திய மேற்கிலிருந்து வந்த அநேகர்கள் இங்கிலாந்தில் அறுவடை செய்ய ஒத்தாசை செய்துவருகிறார்கள்.



வருங்காலத்தில் சர்வ தேச நல்லுணர்ச்சி ஏற்படுவதற்கு இது தான் அடிப்படையாகும். இங்கிலாந்திலுள்ள பல தேசத்தார்கள் இதை ஸ்தாபிக்க முடியும். போர்களில் போர்முனையிலும், கடலிலும் ஆகாயத்திலும் வெற்றி பெறலாம். ஆகிலும் மகாநாடுகள் மூலம் அவைகளில் தோல்வி கிடைத்துவிடும். சரித்திரத்திலேயே இந்த யுத்தத்தில் தான் தேசங்கள் பொதுப்படையான அனுபவம் பெற்றிருக்கிறார்கள். வெடி குண்டுகள் ஆஸ்லோவிலிருந்து லண்டன் வரைக்கும், வார்ஸாவிலிருந் பிளிமத்து வரைக்கும், பெல்கிராடிலிருந்து லிவர்பூல் வரைக்கும், ராட்டர்டாமிலிருந்து கவெண்ட்ரி வரைக்கும், ஸ்டாலின்கிராட்டிலிருந்து காண்டர்பரி வரைக்கும் விழுகின்றன. மாதாகோவிலும், வீடும், பொட்டலும், சிற்றுண்டிசாலையும், ஆஸ்பத்திரியும், பள்ளிக்கூடமும், எல்லாம் குண்டு வீச்சுக் குட்பட்டுவிட்டன, இதுவரையில் போரில் ஈடுபடாதவர்களும், நடுநிலைமை வகிப்பவர்களும் இவ்வளவு குறைவாக இருந்ததில்லை. நாம் எல்லோரும் தியாகங்களைச் செய்யவேண்டியதாகிவிட்டது.

விமானிகளின் சரித்திரம் 20-வது நூற்றாண்டின் புரட்சி புராணத்தில் அற்பமானதென்றாலும், தியாகம் என்ற முறையில் முக்கியத்துவம் பொருந்தியது.

1940-ம் வருஷத்தில் ஒரு நாட்டிலுள்ளவர் மற்றொரு நாட்டில் குடியேறும் பாத்தியதை உள்ள முறையில் பிராங்கோ பிரிடிஷ் ஒப்பந்தம் ஏற்படவேண்டுமென்று மிஸ்டர் சர்ச்சில் பிரான்ஸுக்குச் சிபார்சு செய்தார். நேசதேச விமானிகள் டிப்பியில் 170 ஜெர்மன் விமானங்களை சுட்டு வீழ்த்தினார்கள். போலிஷ் விமானிகள் வெல்லிங்டன் விமான உதவிகொண்டு ஜெர்மனிபேரில் குண்டுகளை வீசுகிறார்கள். நார்வேயின் படை பலம் அதிகரித்துவருகிறது. செகோஸ்லவேகியா, பெல்ஜியம், கிரீஸ், ஹாலந்து, பிரான்ஸ், யூகோஸ்லேவியாவிலிருந்து வந்த விமானிகள் மத்தியதரைக் கடற்கரையிலுள்ள தளங்களிலிருந்து நார்வேயிலுள்ள வளைகுடாக்களைத் தாக்கிவருகிறார்கள். இதன்மூலம் உலகில் புதிய ஒற்றுமை ஏற்பட சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. வெறும் பேச்சுடன் இல்லாமல் மனிதர்களின் ஒற்றுமை ஏற்படக்கூடும் சொத்து சுகங்களை இழந்த ஒரு சிலர் உலகத்திற்கு ஒரு ஐஸ்வர்யத்தைச் சம்பாதித்துக் கொடுக்கலாம்.

---

## பூர்ண வெற்றியில் இதாலியின் ஸ்தானம்.

(லிபரேடர்.)

இருதரப்பாரும் இறுதிவரையில் போராடுவதென்ற உத்தேசத்துடன் நடைபெறும் போருக்கும் ஒருவர் இறுதிவரையில் போராட மனமில்லாமல், நஷ்டமில்லாமலும், அகௌரவமில்லாமலும், போரிலிருந்து விலகிக்கொள்ளும் போருக்கும் அதிக வித்தியாசமுண்டு. ஜட்லாந்து யுத்தத்தில் மிஸ்டர் சர்ச்சில் இவ்விதம் சொன்னார். இதாலியப்போருக்கும் இது அன்வயிக்கும். இங்கு நேசதேசத்தாருக்குப் பலவிதமான சௌகரியங்களிருக்கின்றன. நமக்குப் படைபலமும், தளவாட மிகுதியும் விமான ஆதிக்கமும், ஏராளமான மூலபலமும், தொந்திரவற்ற சர்பரா மார்க்கங்களுமிருக்கின்றன. நாம் ஸ்நேகபாவமுள்ள தேசத்தில் போர் புரிகிறோம். எதிரிக்கு பின்புறமுள்ள பிராந்தியத்திற்கு விலாப்பக்கங்களிலுள்ள கடல் மார்க்கங்கள் நமது வசமிருக்கின்றன, மலைப்பாங்கான பிரதேசம்தான் எதிரியின் தற்காப்புக்கு சாதகமளித்து வருகிறது. ஒருவகையில் இது நமக்கும் சாதகமளிக்கிறது. எதிரியின் தற்காப்புகள் அழிக்கப்பட்டால் எதிரிக்குப் பின்வாங்க குறைவாக ரஸ்தாக்கள்தான் கிடைக்கும். எதிரி தப்பி ஓடவும் மார்க்கமிருக்காது.

எவ்வித சௌகரியமிருப்பினும் யுத்த தந்திரம் இருதரப்பின் படைத்தலைவர்களின் திறமையைப்பொருத்ததாகும். முடிவான போரை இருதரப்பாரும் நடத்தும்பக்ஷத்தில் நேசதேசத்தாரின் மேன்மையினால் அவர்களுக்குப் பூர்ணமான வெற்றிகிடைக்கக்கூடும். ஆனால் கெஸல்ரிங் முடிவான போரை நடத்த உத்தேசிக்கவில்லை. அதைத்தவிர்க்க அவன் முயலுகிறான். எதிரிகளை நாசம்செய்துதான் பிழைத்திருக்கவேண்டுமென்பதுதான் அவனுடைய லக்ஷியம். நேசதேசப்படைகள் முன்னேறித்தாக்க ஆரம்பித்து அவனுடைய தற்காப்புகளை ஊடுருவிச்சென்றதுமுதல் அவன தாற்காலிகமாக சமாளித்து நிற்கக்கூடிய ஸ்தானங்களையும் பின்வாங்குவதற்குச் சரியான காலத்தை பிரதீக்ஷிப்பதும்தான் அவனுடைய அலுவல்களாகிவிட்டன.

பான்டைன் சதுப்பு நிலங்களிலிருந்து அவன் துரிதமாகப் பின்வாங்கியதும் ஆல்பன் குன்றுகளிலும், வால்மாண்டோனிலும், கடும்போர் செய்ததும் எட்டாம் படையின் தாக்குதலுக்குமுன் கொஞ்சம் கொஞ்சமாகப் பின்வாங்குவதும் நெருக்கடியின்பொழுது கால ஹரணம் செய்வதென்ற அவனுடைய தந்திரத்தை வெளிப்படுத்துகின்றன. அவனிடம் ஏராளமான படைகளிருக்கின்றன. அவன் பின்வாங்கின சில ஸ்தானங்களில் அவன் படைகளின் சமமான பலத்தை நிலைநாட்டியிருக்கக்கூடும். நேசதேசத்தாரின் பல ஆதிக்கம் தப்பியோட முன் ஜாக்ரதையுள்ள எதிரியை வளைத்துக்கொள்ளப் போதுமானதல்ல.

18, 19-வது நூற்றாண்டுகளில் இருதரப்பாரும் முடிவான யுத்தத்தை நடத்துவதென்ற சங்கேதத்துடன் போரை நடத்தியதற்கும் இந்தத் தரைப்போருக்கும் வித்தியாசமுண்டு. சென்ற யுத்தத்தில் தற்காப்பிலுள்ளவர் எதிரியின் ஆரம்ப நடவடிக்கையை எதிர்த்து வெற்றி பெற்று வெகுகாலம் அநேக ஸ்தானங்களில் போரை நடத்தியதற்கும், இந்தப் போருக்கும் வித்தியாசமுண்டு. ருஷ்யப் போர்முனையில் அடிகளைச் சகிக்கமுடியாமல் மான்ஸ்டீனும், கிளீஸ்டும் தங்களால்இயன்றதைக் காப்பாற்ற முயலுவதை மதித்துப்பார்த்தால் இதாலியிலும் ஜெர்மனியின் உத்தேசம் யாதென்று நுட்பமாகச் சொல்லிவிடலாம்.

கால்வாயின் கடற்கரையிலுள்ள தற்காப்புகள் சிலாக்யமானவை என்று ஜெர்மனி பிரசாரம் செய்துவருவதால் அங்கு வெற்றிகரமாகத் தற்காப்பு செய்துவிடலாமென்று ஜெர்மனி நம்பியிருக்கக்கூடும். மற்றப் போர்முனைகளைப்பற்றி இவ்வித பிரசாரம் நடைபெறவில்லை. ராஜ்யங்களின் நிலைமையை நிலைநாட்டுவோம் என்று ஜெர்மனி சொல்லிவரும் உறுதியைப்பற்றி அவர்கள் பீதிகொள்ளுகிறார்கள். யூக்ரேன் பூராவிலும் ருஷ்யர்களைத் தாக்குதல் செய்யும்படி அவர்கள் கட்டாயப்படுத்திவிட்டார்கள். இதாலியிலும் நாம் போர் நடத்த வேண்டுமென்று அவர்கள் எண்ணுகிறார்கள். இவ்விதமான போர் ஜெர்மனிக்குள் பரவுவதற்குள் அவர்கள் அநேக ராஜ்யங்களைக் காவுகொடுத்துவிடுவார்கள். ஜெர்மனி தோல்வியடையுமுன் அவர்கள் ஐரோப்பாவை நாசம்செய்துவிடுவார்கள். இவ்விதம் சாவதானமாக நடைபெறும் ஐரோப்பிய அழிவைக்கண்டு நேசதேசத்தார்கள் மனம் கலங்கிவிடுவார்களென்றும் ஜெர்மனி எதிர்பார்க்கிறது.

ஜெர்மனியின் திட்டத்துக்குப் பதில் நடவடிக்கை என்னவென்று கவனிப்போம். இது டெஹரான் மகாநாட்டில் உருவாகியிருக்கிறது. மேற்கிலிருந்தும், தெற்கிலிருந்தும், கிழக்கிலிருந்தும், ஜெர்மனியை பலமாகத் தாக்கினால் அதன் யுத்த தந்திரம் அழிந்துவிடும். ஆபிரிக்காவில் வெகுதூரம் பின்வாங்கியபின் கேப்பான் தீபகற்பத்தில் ஜெர்மன் படைகள் வளைக்கப்பட்டதுபோல், ஐரோப்பிய நடவடிக்கையிலும் படைகள் குவிந்து ஒன்றுசேர்ந்து மத்திய ஜெர்மனியில் கேனேக்கு ஒப்பிடக்கூடிய ஒரு இடத்தில் படைகளை வளைத்துவிடும். இந்த மகத்தான திட்டத்தில் அலெக்ஸாண்டரின் இதாலிய நடவடிக்கையும் ஒரு அம்சமாகும். கெஸல்ரிங் கூடுமானவரையில் முடிவான போரைத் தொடுக்காமல் தப்பி ஓடிக்கொண்டிருக்கிறான். டெஹரானில் வெளியிடப்பட்ட அறிக்கையின் லக்ஷியமான ஜெர்மன் படைகளை அழிப்பதென்ற எண்ணம் பூர்த்தியாகுவதற்கு இதுதான் அடிப்படையான யுத்த தந்திரம்

இந்த நடவடிக்கையைக் குறைத்துவிடுவது சிலாக்யமானதுதான். கேனேபோன்ற யுத்தம் நடைபெறுதபடி ஐரோப்பிய நாடுகளைக் காப்பாற்றுவதும், ஐரோப்பியக் கோட்டையின் எல்லைப்புறங்களிலேயே முடிவான யுத்தம் நடத்துவதும் உசிதமான காரியமாகும். ஆன்ஸியோவில் அவ்விதப்போர் நடைபெற்றது. நமது எண்ணம் பூர்த்தியாகாவிட்டாலும், அதற்குப்பின் கெஸல்ரிங் துரிதமாகப் பின்வாங்கும்படி நேரிட்டது. இப்பொழுது நேர்முகமாகத் தாக்கும் வசதி நமது படைகளுக்கு ஏற்பட்டுவிட்டது.

நேர்முகமாகத் தாக்குவதுடன் நமது படைகள் அசைந்துசென்று முன்னேறித் தாக்கவும் ஆரம்பித்துவிட்டன. இந்த நடவடிக்கையில் மாரிகாலத்தில் சந்தர்ப்பமேற்படாத எதிரியைத் தாக்கும் போரை இப்பொழுது நடத்த மற்றொரு அவகாசம் ஏற்படக்கூடும். இதேசமயத்தில் கிழக்குப் போர்முனையில் ருஷ்ய சேனையும், பால்கன் நாட்டிலுள்ள ஜனங்களும் ஜெர்மனியைத் துறத்தியடிக்கக்கூடும். இவ்விதமாக மேற்கில் ஐசன்ஹவருடனும், தெற்கில் அலெக்ஸாண்டருடனும், கிழக்கில் ருஷ்யர்களுடனும் யுத்தங்களை அனுபவித்துவரும் ஐரோப்பிய நாடுகளிலேயே முடிவான போரை நடத்தும்படி ஜெர்மனியைக் கட்டாயப்படுத்திவிடலாம்.



# நியூகினியா மீட்கப்பட்டது.

## ஜப்பானுக்குச் சமீபத்தில் போரைத்துவக்க முற்போக்கான நடவடிக்கை.

(டைம்ஸ் பத்திரிகை.)

நியூகினியாவில் ஜப்பானின் அந்திய காலம் வந்துவிட்டது. அலெக்ஸிஷேபனுக்கு வடமேற்கிலுள்ள ஆஸ்திரேலியர்களுக்கும், அயிடாபியிலும், ஹாலந்தியாவிலுமுள்ள அமெரிக்கர்களுக்கும், நடுவிலுள்ள கடற்கரை பிரதேசத்தில் சில பகுதிகளில் ஜப்பானியப் படைப் பகுதிகளிருக்கின்றன. அவைகளும் அழிந்து வருகின்றன. நியூகினியாவிலுள்ள விமான தளங்களிலிருந்து நேசதேசக் கடற்படை வட்டமாக எதிர்ப்பன்னியில் முன்னேறி வருகிறது. ஜெனரல் மாக் ஆர்தரின் படைகள் மேற்கு முகமாக உறுதியுடன் கேந்திரஸ்தானங்களுக்கு முன்னேறி ஜப்பானைத் தாக்கத் தயாராகி வருகின்றன.

நியூபிரிடனில் கிளஸ்டர் முனையில் அமெரிக்க மாரீன் படைகளிறங்கியபின் ஐந்து மாதங்களுக்குள் நியூகினியாப் போர் தலைகீழாக மாறிவிட்டது. யுத்த தந்திரத்தை மாற்றித் துரிதமாக முன்னேறி ஜெனரல் மாக் ஆர்தர் அட்மிரால்டி தீவுகளில் கனமான வெடி விமான தளத்தை சம்பாதித்தார். அதன்பின் எமிராத் தீவும் விழுந்தது. மத்திய பஸிபிக்கில் எதிரியைத் தாக்குவதற்கும் டிரக் தீவில் வெடிகுண்டுகளை வீசுவதற்கும் சௌகரியம் ஏற்பட்டது. ஆகிலும் சென்ற இரண்டு மாதத்திய போரைக் கவனித்தால் ஜெனரல் மாக் ஆர்தர் குறுக்கு வழியாக பிலிப்பைன் ஸுக்குப் போக உத்தேசித்திருக்கிறானென்று புலப்படுகிறது. பிலிப்பைன்ஸை விடுவிக்கும் நடவடிக்கையில் அவன்தான் முகான்மையான பங்கெடுத்துக்கொள்ளுவானென்று எல்லோரும் நினைக்கிறார்கள்.

### எஞ்சினியர்களின் யுத்தம்.

பின்வாங்கும் போரை நடத்தும்படி நேரிட்ட ஜப்பான் பின்ஷேப்னிலிருந்து ஹாலந்தியாவுக்கு 500 மைல்கள் முன்னேறின மாக் ஆர்தரின் நடவடிக்கையைக் கண்டு பிரமை கொண்டது. அடுத்த அடி ஜப்பானிய 18-வது சேனை நன்றாய் ஊன்றியிருந்த வேவாக், ஹான்ஸா விரிகுடாவுக்குச் சமீபத்திலுள்ள கடற்கரையில் விழுமென்று எதிரி எதிர்பார்த்திருந்தான். ஜெனரல் மாக் ஆர்தர் அந்த இடங்களைத் தாண்டிச் சென்று படைகளைத் துண்டித்துவிட்டான்.

ஹாலந்தியாவில் தற்காப்புகளை அமைக்க எதிரி முற்பட்டான். அநேக விமான எஞ்சின்களும் விமான தளத்துக்குச் சமீபத்தில் நூற்றுக்கணக்கான டன்கள் எடைமானமுள்ள எண்ணெயும் வைக்கப்பட்டிருந்தன. அவை நேசதேச வசமாகின. 300 விமானங்கள் அழிக்கப்பட்டிருந்தன. நேசதேசப் படைகள் திடீர் தாக்குதல் செய்யாதிருந்தால் ஜப்பான் ஹாலந்தியாவை பலமான தளமாக அமைத்திருக்கும்.

இந்த பிரதேசத்தில் அமெரிக்கர்கள் அபாரமான வேலைகளைச் செய்து வருகிறார்கள். அமெரிக்காவில் உற்பத்தியாகும் விமான யந்திரங்கள், படைகளை இறக்கும் படகுகள் மூலம் ஆழமில்லா கரைகளில் இறங்குகின்றன. இது சிறந்த எஞ்சினியர்களின் துணிவு நடவடிக்கையே ஒழிய யுத்த தந்திரமில்லை.

நியூகினியாப் போரின் கடைசி கட்டங்களில் ஸோல்ஜர்களின் உயிரைக் காப்பாற்றுவதற்கு உத்தம பக்ஷமான வெடி மருந்துகளையும், வெடிகுண்டுகளையும், சர்பராக்களையும், விநியோகம் செய்யுமென்று அமெரிக்கப் படை வெளிப்படுத்தியிருக்கிறது. ஆயுதங்களாலும், யந்திரங்களினாலும் சாதிக்கக்கூடிய ஒரு காரியத்தில் மனித பலத்தை அபாயத்துக்குட்படுத்தக்கூடாதென்று அமெரிக்கா நம்புகிறது.

மலைகளிலும் சதுப்பு நிலங்களிலும் ரஸ்தாக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மகத்தான புல்டோஜர் யந்திரங்கள் காபோக் செடிகளும், கோகோ செடிகளுமுள்ள தோட்டங்கள் வழியே சென்று நதி மார்க்கங்களைத் திருப்பிவிட்டிருக்கின்றன. சமுத்திரத்துக்குச் செல்லத் தயாராகயிருந்த படகுகளைச் செல்லவொட்டாமல் தடுத்துவிட்டன. போக்குவரத்துகளுக்காக கரடு முரடான ரஸ்தாக்களும் அமைக்கப்பட்டன. பகல் இரவாக, மோட்டார் டிரக்குகளும், மோட்டார்களும் தூசிப்படலத்தை உண்டுபண்ணிக்கொண்டு காட்டுமார்க்கங்கள் வழியாகச் செல்லுகின்றன. தரையிலும், கடலிலும் செல்லும் கலங்கள் கப்பலிலிருந்து கரைக்கும் அங்கிருந்து விமான தளத்திற்கும் ஸெண்டானி ஏரி வழியாகவும், நதிகள் மூலமாகவும், சர்பராக்களைக் கொண்டுபோகின்றன. விமானமிறங்கும் இடங்களும் துரிதமாக அமைக்கப்படுகின்றன. அவைகள் உபயோகப்பட்டபின் கைவிடப்படுகின்றன.

### தனியாகயிருக்கும் ரபாலின் அதோகதி.

இப்பேற்பட்ட முன்னணி விமான தளங்கள் நமக்குக் கிடைத்திருப்பதால் கனமான, நடுத்தரமான வெடிவிமானங்களும் சண்டை விமானங்களும் எதிரியின் தேசங்களை எந்த நேரத்திலும் தாக்குகின்றன. ஹாலந்தியா பிராந்தியத்தில் நேசதேச விமானப்படையில் பிரிடிஷ் சண்டை விமானக் கூட்டமும் இருக்கிறது. பின் பக்கத்தில் அடர்த்தியான காடுகளும், கடற்கரை ஓரமாக நேசதேசப் படைகளின் முன்னேற்றமுள்ள ஆஸ்திரேலிய நியூகினியாவில் எஞ்சியிருக்கும் ஜப்பானியப் படைகள் நிச்சயமாய் அழிக்கப்பட்டுவிடும். அவன் ஸடான்லி பிரதேசத்தைத் தாண்டி மோர்ஸ்பீ துறைமுகத்துக்கு 1942-ம் வருஷத்தில் சென்று பூனாவில் கடும்போர் செய்து பாபுவாவிலுள்ள முன்னேறும் வாசலுக்குத் துரத்தியடிக்கப்பட்ட ஜப்பானியர்களின் போர்த் திறமை இப்பொழுது இங்கு காணப்படும் ஜப்பானியரிடம் காணப்படவில்லை. ஹாலந்தியாவில் அவர்கள் தந்திரசாலிகளாக யிருந்தாலும் பயங்காளிகளாக யிருந்து ஓட முயலுகிறார்களே ஒழிய முன்போல் உயிரைத் துறக்கும் வெறி பிடித்தவர்களாகக் காணப்படவில்லை.

மலைகளிலிருந்து வறுமையினால் உடல் மெலிந்த அநேக ஜப்பானியர்கள் கொண்டுவரப் படுகிறார்கள். அநேகர்கள் நேசதேச சேர்ந்து படைகளிடம் அகப்பட்டுக் கொள்ளாமல் தப்பி ஓடுகிறார்கள். அவர்கள் சென்ற வழியில் சவங்களின் துர்நாற்றமும், முகாம்களில் ருசியற்ற உணவுப் பொருள்களும், காகிதங்களும், தேச படங்களும், புத்தகங்களும், காகிதச் செலாவணியும் காணப்படுகின்றன. ஆஸ்திரேலியாவைப் படையெடுக்க ஜப்பான் ஆசை கொண்டிருந்ததென்று இதன்மூலம் வெளிப்படுகிறது. பிரசாரப் பிரசுரங்களைப் பார்த்தால் அவர்கள் அமெரிக்கர்களையும், ஆஸ்திரேலியர்களையும் சேரழித்துப் பிரிவினை செய்துவிடுவதென்று நம்பியிருந்ததாகத் தெரியவருகிறது. அவர்கள் அநேக தேசங்களின் பாதிரிகளைத் துன்புறுத்தி வேலை செய்யும்படி கட்டாயப்படுத்தியிருக்கிறார்கள். இந்தியர்களையும், ஜாவா வாசிகளையும் அடிமைவேலைக்குட்படுத்தியிருக்கிறார்கள். உள்நாட்டு மக்களைக் கடுந்துன்பத்துக் குள்ளாக்கிக் கசையாலும் அடித்திருக்கிறார்கள், ஆகையால் உள் நாட்டு ஜனங்கள் அமெரிக்கப் படையோடும் ஹாலந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் டச்சு நிர்வாகத்துடனும் ஒத்துழைக்கத் தயாராக இருப்பதில் ஒரு ஆச்சரியமுமில்லை.

நியூகினியாவின் மற்றொரு கோடியில் ரபால் தனிக்கப்பட்டு நாசமாகும் நிலையை அடைந்துவிட்டது. இதை நேசதேசத்தார்கள் சுற்றி வளைத்து வருகிறார்கள். ஆஸ்திரேலியாவையும், ஸாலமன்ஸ் தீவுகளையும் கைப்பற்ற அதை மத்திய ஸ்தலமாக ஏற்படுத்துவதாக ஜப்பானியர்கள் திட்டம் போட்டிருந்தார்கள். கடல் மார்க்கமாகத் தனிக்கப்படும் விமானப் படை உதவியை இழந்துமிருக்கும், ரபாலை நேசதேச வெடிகுண்டுகள் சதாகாலமும் தாக்கி வருகின்றன. ரபாலின் ஜீவன் போய்விட்டது. இதே விதமாகத்தான் ஆஸ்திரேலியாவுக்கு வடக்கில் ஜப்பான் ஆக்கிரமித்திருக்கும் ஒவ்வொரு தீவிலும் பலஹீனம் ஏற்பட்டிருக்கிறது. பஸிபிக்கில் இனிமேல் நடைபெறப் போகும் நடவடிக்கைகள் ஜப்பானுக்கு சமீபத்தில்தான் நடைபெறும்.

---

## யுத்தப் பாடல்கள்.

### ஹிட்லரின் தற்போதைய நிலை.

(*By Mr. P. Maria Michael Pillai, Head Teacher, State School, Killukottai*).

(வட்டமிட்டுப் பறக்குது பார், என்ற மெட்டு).

பிரிட்டிஷ் கொடி முழங்குதே—இன்று
பெரிய வெற்றி தான் விளங்குதே நம் (பிரிட்டிஷ்)

1. பொட்டுருட்டுக்கள் செய்த பேதையான் ஹிட்லர் தான்
பித்தனைப் போல் ரெத்தவெறி பிடித்தலைந்த ஹிட்லர் தான்
அரட்டி மிரட்டி நாட்டை அபகரித்த ஹிட்லர் தான்
அக்கம் பக்கத்தோர் சிரிக்க
வெட்கி யொடுங்கிட லாச்சு (பிரிட்டிஷ்)



2. எத்திசை யோரும் நடுங்க ஏரோப்பிளேனேறியே
எரிகுண்டு வெடிகுண்டை இடிமழைப் போல் வீசியே
மெத்தவே பயங்கொடுக்கும் டாங்கிகளால் நாசியே
மின்னல் முறை போர் தொடுத்து
இன்று பின்னமே புரிந்தான் (பிரிட்டிஷ்)

3. கடலிலே காந்தற் கண்ணி வலைகளை வீசினான்
கப்பலை யுடைத்திட யூ படகுகளை ஏவினான்
அடலேறனைய செருக்காலே மதி மயங்கினான்
அத்தனையுந் தானிழந்து
பித்தனைப் போல் தயங்குகிறான் (பிரிட்டிஷ்)

4. ஆயிரத் தொளாயிரத்து நாலுபத்தாம் ஆண்டிலே
ஆகஸ்டு பதினைந்தில் லண்டன் நகர் வீதிலே
தீரமாய் நாஸிக் கொடியை நாட்டிடுவே னென்றானே
திட்டங்கள் யாவுமழிந்து
பெட்டிப் பாம்பானானே ஹிட்லர் (பிரிட்டிஷ்)

5. ஆரவாரத் தோடெழுந்து ரஷ்ஷியாவை நோக்கினான்
ஆழமறியாமல் காலை ஐயோ அங்கு நீட்டினான்
பேர் பெரிய சேனைகளைத் தானழிய வாட்டினான்.
பிடித்த பிடி நழுவி
துடித்து ஓட்டம் பிடித்தான் (பிரிட்டிஷ்)

---

## இரண்டாம் போர்முனையின் அமர்க்களம்.

(*By Mr. P. Maria Michael Pillai, Head Teacher, State School, Killukottai*).

(அஞ்சிப்பயந்து ஓட வேண்டாம், என்ற மெட்டு).

பல்லவி.

திடுக்கிடப் போர் தொடுத்தாரே—நேரே
திடுக்கிடப் போர் தொடுத்தாரே (திடுக்கிட)

அநுபல்லவி.

தீய நாசிவாழ்வுக் காயுள்முடிவே (திடுக்கிட)

சரணங்கள்.

1. இகத்தில் மகிமையுற்ற இங்கிலீஷ் சால்வாயே
எதிரிலே பார்நார்மண்டி எனும் கடல் கரையே
யாவரும் பிரமிக்க அடைந்தாரத் துறையே (திடுக்கிட)

2. பதினொன்றாயிர விமானம் பறந்ததே மேலே
படைக் கப்பல் நாலாயிரம் தொடர்ந்ததே கீழே
பாரிலுள்ளோர் புகழ ஆகாய வெடியாலே (திடுக்கிட)

3. வானத்தைப் பிளந்ததே விமானத்தின் கூட்டம்
மனத்தைக் கலக்கியதே படைக ளார்ப்பாட்டம்
வந்தடைந்ததே ஹிட்லர் சேனையில் ஆட்டம் (திடுக்கிட)

4. வேகமுடன் கிழக்கில் ரஷ்ஷிய பூதம்
விரட்டுதே தெற்கில் நேசக் கட்சியால் நாசம்
வேட்டை யாடுதே மேற்கில் ஆங்கில சிங்கம் (திடுக்கிட)

5. ஆப்பைப் பிடித்திழுத்த அறிவில்லாக் குரங்கோ
அகப்பட்டான் ஹிட்லரது போலறிந் திடுங்கோ
அடைகுவோம் வெற்றி நாமே இனும் சற்று பொறுங்கோ (திடுக்கிட)

# தேசீய சேமிப்புப் பத்திரங்கள்.

நல்ல வட்டி : பொருளும் பத்திரம்.

விவரம்.—ரூ. 10, ரூ. 50, ரூ. 100, ரூ. 500, ரூ. 1,000 எல்லா போஸ்டாபீஸுகளிலும் கிடைக்கும்.

12 வருஷத்தில் பூர்த்தியாகும். நடுவில் வேண்டுமானால் மூன்று வருஷத்துக்குப்பின் கூடிய தொகையை பெற்றுக்கொள்ளலாம்.

வட்டி :—4⅙ சத விகிதம். வருமானவரி (இன்கம்டாக்ஸ்) கிடையாது. ரூ. 10 12-வருஷத்தில் ரூ. 15 ஆகிறது.

தேசீய சேமிப்பு பத்திரங்களின் மூலம் நீங்களும் சேமித்து இந்தியாவிற்கும் நல்ல செல்வமளிக்கிறீர்கள்.

**எதிர்காலத்தின் க்ஷேமத்தை இன்றே கோருங்கள்.**

**தேசீய சேமிப்புப் பத்திரங்களை உடனே வாங்குங்கள்.**

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 213. (5-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 4- 9-44 | திருமெய்யம் | ... ,, | 7.00 |
| ,, | மேலூர் | ... ,, | 7.30 |
| 5- 9-44 | புலியூர் | ... ,, | 7.00 |
| ,, | கண்ணங்குடி | ... ,, | 7.30 |
| 6- 9-44 | காலேஜ் A இங்கிலீஷ் | ... காலை | 11.00 |
| ,, | காலேஜ் B தமிழ் | ... ,, | 11.00 |
| 6- 9-44 | C. S. M. பள்ளிக்கூடம் | ... காலை | 10.00 |
| ,, | ராணி பெண் பாடசாலை | ... ,, | 10.45 |
| ,, | அன்னவாசல் | ... மாலை | 7.00 |
| ,, | கிழக்குரிச்சி | ... ,, | 7.30 |
| 7- 9-44 | கல்லூர் | ... ,, | 7.00 |
| ,, | மாத்தூர் | ... ,, | 7.30 |
| 8- 9-44 | பொ. புதுப்பட்டி | ... ,, | 7.00 |
| ,, | வேந்தம்பட்டி | ... ,, | 7.30 |

### பிரஸங்கம் 214. (1-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 9- 9-44 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 |
| 10- 9-44 | கோவிலூர் புதுப்பட்டி | ... ,, | 7.00 |
| ,, | கோவிலூர்க்கோட்டை | ... ,, | 7.30 |
| 11- 9-44 | மலம்பட்டி | ... ,, | 7.00 |
| ,, | போரம்பூர் | ... ,, | 7.30 |
| 12- 9-44 | சடயம்பட்டி | ... ,, | 7.00 |
| ,, | ஒலியமங்கலம் | ... ,, | 7.30 |
| 13- 9-44 | காலேஜ் A இங்கிலீஷ் | ... காலை | 11.00 |
| ,, | காலேஜ் B தமிழ் | ... ,, | 11.00 |
| 13- 9-44 | C. S. M. பள்ளிக்கூடம் | ... காலை | 10.00 |
| ,, | ராணி பெண் பாடசாலை | ... ,, | 10.45 |
| ,, | பெருமாநாடு | ... மாலை | 7.00 |
| ,, | புல்வயல் | ... ,, | 7.30 |
| 14- 9-44 | மலைக்குடிப்பட்டி | ... ,, | 7.00 |
| ,, | தயிலாநூர் | ... ,, | 7.30 |
| 15- 9-44 | பள்ளிவாசல் | ... ,, | 7.00 |
| ,, | பில்லமங்கலம் | ... ,, | 7.30 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | |
|---|---|
| 2—9—44 | வெட்டன்விடுதி. |
| 5—9—44 | கோனாபட்டு. |
| 7—9—44 | ஆலங்குடி. |
| 8—9—44 | புதுக்கோட்டை. |
| 9—9—44 | பொன்னமராவதி. |
| 10—9—44 | மருதன்கோன்விடுதி. |
| 12—9—44 | ராமச்சந்திரபுரம். |
| 14—9—44 | குழிபிறை. |
| 15—9—44 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—7-9-44.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1944-ம் ஸெப்டம்பர் 9உ [ந. 214

தேசீய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CCXIV.

## யுத்தத்தின் ஐந்தாவது வருஷ விழா.

### 3—9—44-ம் தேதியன்று புதுக்கோட்டையில் டவுன் ஹாலில் ஸமஸ்தான இரண்டாவது கௌன்ஸிலரான மிஸ்டர் M. பரமசிவம் பிள்ளை அவர்கள், B.A., B.L., ஆற்றிய சொற்பொழிவு.

**சீமாட்டிகளே! சீமான்களே!!**

யுத்தத்தின் ஐந்தாவது வருஷ பூர்த்தி தினத்தைக் கொண்டாட தெய்வ பக்தியுடனும், நன்றி அறிவுடனும் நாம் இங்கு குழுமியிருக்கிறோம். இந்த உணர்ச்சியுடன்தான் நமது திவான் அவர்களும் மாதாக் கோவிலுக்குச் சென்றிருக்கிறார். அவர் வராததைக்கண்டு நாம் வருந்துகிறோம். 1939-ம் வருஷம் ஸெப்டம்பர் 1-ம் தேதியன்று ஜெர்மனி போலந்தைப் படையெடுத்தது. ஐந்து வருஷங்களுக்கு முன் ஸெப்டம்பர் 3-ம் தேதியன்று பிரிடனும், பிரான்ஸும் ஜெர்மனி பேரில் போர் தொடுத்தன. இன்று யுத்தத்தின் ஆறுவது வருஷம் ஆரம்பமாகும். நாம் நன்றி அறிவுடனிருக்கத் தகுந்த முகாந்திரங்களிருக்கின்றன. அநேக வருஷங்களாக ஆயத்தங்கள் செய்தும், பிரசாரம் செய்த பின்னரும் ஹிட்லர் அகாரணமாக தேசங்களை ஒன்றன் பின் ஒன்றாகத் தாக்கினான். அவனுடைய முறைகளில் இவிலை கூட இரக்கம் கிடையாது. ராணுவ முறையில் தயாராக இல்லாததும் யுத்தத்தைக் கூடுமான வரையில் தவிர்க்கவேண்டுமென்று எண்ணம் கொண்டிருந்ததுமான தேசங்களுடன் வலுவுச் சண்டைக்குப் போகிறோமென்றும் ஹிட்லர் அறிந்திருந்தான்.

ஹிட்லரும், அவனுடைய கூட்டத்தாரும் செய்த அநேக அக்கிரமச் செய்கைகளை ஆதி முதல் விவரமாகச் சொல்லவேண்டியது அவசியம் இல்லை. செகோஸ்லாவேகியாவை விழுங்கியதும், போலந்தின்பேரில் பாய்ந்ததும், உடன்படிக்கை ஷரத்துக்களை மீறி முஸோலினி ஹிட்லர் கக்ஷியில் சேர்ந்துகொண்டதும், நமது ஞாபகத்திலிருந்து மறைந்துவிடவில்லை. கிழக்கு எல்லைச் சரகத்தை ஸ்தாபித்துக் கொண்டபின் ஹிட்லர் மேற்கு ஐரோப்பாவைத் தாக்க முற்பட்டான். பிரான்ஸ் ஹிட்லரிடம் சரணாகதி அடைந்தது. பிரிடனும் அதைப்பின் பற்றும் நிலைமையிலிருந்தது. ஆயினும் தெய்வானுகூலமாக ஹிட்லரின் திட்டங்கள் முறிந்துவிட்டன. பிரிடிஷ் மக்கள் நெஞ்சு ஊக்கமுள்ளவர்கள். தெய்வாதீனமாக, ஹிட்லர் ராணுவ முறையில் மகத்தான முதல் தவறுதலைச் செய்தான். டங்கர்க்குப்பின் அவனுக்கு சௌகரியமான நிலைமை இருப்பதாகத் தோன்றிற்று. அவன் அப்பொழுது பிரிடனில் படைகளையிறக்கியிருந்தால் அவனுக்கு வெற்றி கிடைத்திருக்கக்கூடும். பருவக்காற்று அவனுக்கு பிரதிகூலமாகிவிட்டது. பிரிடிஷாரின் மன உறுதியைக் குலைத்துவிடுவதென்று, அவன் செய்த முயற்சியும் பயன்படவில்லை. ஏமாற்றமடைந்து அவன் மத்திய, தென்கிழக்கு ஐரோப்பா

பக்கம் திரும்பி சிலவெற்றிகளைச் சம்பாதித்தான். பால்கன் நாடுகள் பிடிபட்டன. அதற்குப் பிறகு மேற்கு ஆபிரிக்காவிலும், கிரீஸிலும், யூகோஸ்லாவியாவிலும், கிரீட்டிலும் அவன் போரை நடத்தினான். வெற்றிகள் மேல்மேலும் கிடைத்து வந்தன. ஹிட்லரையும், அவனுடைய கொள்ளைக் கூட்டத்தாரையும் சிக்ஷிக்க ஈஸ்வரன் இவ்விதம் கட்டளையிட்டார் போல் தோன்றுகிறது. சுதந்திரத்தை விரும்பும் நாடுகளை அடக்கியாள விரும்பும் நாடுகளுக்குக் கேடு விளைவதற்கு அஸ்திவாரம் போட்டது போலாகிவிட்டது. ஆக்கிரமித்த நாடுகளெல்லாம் கூடிய சீக்கிரத்தில் கலகம் செய்துவிடும். சமீபகாலத்தில் ருமேனியாவிலும், பல்கேரியாவிலும் நடைபெற்ற வீழ்ச்சிகளைக் கவனித்தால் அவைகள் வழிகாட்டிகளென்பதுடன் இந்த நாடுகளில் ஜெர்மன் பிடிப்பும் பலஹீனமடைந்துவிட்டதென்பதும் வெளிப்படும். ஹங்கேரியும் ரகசியமாக சமாதானப் பேச்சுக்களைத் துவக்கியிருக்கிறது. பின்லாந்தும் இத்துறையில் இறங்கிவிடும்.

தூரக்கிழக்கில் ஜப்பான் அச்சுநாடுகளின் கக்ஷியில் சேர்ந்துகொண்டு அயோக்கியத்தனமாகவும், கபடமாகவும் அநேக தேசங்களைப் பிடித்தது. மலேயாவும், பர்மாவும் ஜப்பான் வசமாயின. இந்தியாவுக்கும் படையெடுப்பு பயம் ஏற்படும் போலிருந்தது. இங்கும் தெய்வம் குறுக்கிட்டது. 1942-ம் வருஷம் வசந்த காலத்தில் ஜப்பான் இந்தியாவில் படைகளை இறக்கியிருந்தால் அது வெற்றி பெற்றிருக்கலாம். ஜப்பானும் சந்தர்ப்பத்தை நழுவ விட்டது.

ஆகிலும் அச்சமயம் நிலைமை திருப்திகரமாக இருக்கவில்லை. நமக்குச் சில வெற்றிகள் கிடைத்தபோதிலும், யுத்தப்போக்கு நமக்கு பாதகமாகவேயிருந்து வந்தது. ஆகிலும் நாம் மனத்தளர்ச்சியடையவில்லை. அஞ்சா நெஞ்சமும், புத்தி கூர்மையும் உள்ள பிரதம மந்திரியான மிஸ்டர் சர்ச்சில் நமது மன உறுதியை நிலைநாட்டி உத்சாகத்தை ஊட்டினார். அவருடன் தைரியமும் ஊக்கமுமுள்ள அநேகர்கள் ஒத்துழைத்தார்கள். சேனைகள் எவ்விதப் படைகளையும் எதிர்த்துப் போராடத் தயாராக இருந்தன. கொடுங்கோன்மையையும், எதேச்சாதிகார ஆக்ஷியையும் ஒழிக்க நேசதேசத்தார்கள் போர் புரிகிறார்கள் என்ற எண்ணம் நேசதேசத்தார்களின் லக்ஷியத்தை அடைவதற்குத் தேவையான விடாமுயற்சியை அவர்களிடம் வளர்ச்சி செய்தது. தோல்வி ஏற்படக்கூடுமென்ற தோற்றத்தைக்கூட அவர்கள் சிந்திக்கவில்லை.

கொஞ்சம் கொஞ்சமாக நிலைமையில் பிரகாசம் ஏற்பட்டது. லிபியா நேசதேச வசமாயிற்று. டுனிஸியாவில் வெற்றிபெற்றோம். அதன் பிறகு, ஸிஸிலியும், ஸார்டினியாவும் நேசதேச வசமாயின. மத்தியதரைக் கடற்கரைப் பிரதேசங்கள் அநேகமாக நமது ஆதிக்கத் துக்குட்பட்டன. இதே சமயத்தில் நாம் யூ படகு அபாயத்தை வெற்றிகரமாக நிவர்த்தி செய்தோம். நேசதேச விமானப்படைகள் அற்புதமான விமானப்போரை நடத்தி புகழ் பெற்று வந்தன. இப்பொழுது மேற்கு ஐரோப்பாவில் தரைப்படைகள் இறங்கியது போலில்லாவிட்டாலும், அப்பொழுதும் ஐரோப்பியப் படையெடுப்பு நடைபெற்றது. பகட்டாக இல்லாமலும், சாவதானமாகவும் ஆனால் உபயோகமுள்ள வகையிலும் நேசதேச வெடிவிமானங்கள் ஜெர்மனி பேரிலும், பிரெஞ்சு கடற்கரையிலுள்ள ஜெர்மனி வசமுள்ள பிரதேசங்கள் பேரிலும் வெடிகுண்டுகளைப் பொழிந்து, பெட்ரோல் எண்ணெய்க் கிடங்குகளையும், யுத்த தளவாட உற்பத்திசாலைகளையும், தருப்பு சேமிப்புகளையும், அழித்து வந்தன. மத்திய தரைக்கடல் பிராந்தியம் ஜெர்மன் பூண்டில்லாமல் சுத்தி செய்யப்பட்டபின் நேசதேசப் படைகள் இதாலியைப் படையெடுத்தன. அதன் பின் பிரான்ஸில் படைகளிறங்கின. முன் ஜாக்கிரதையுடன் நிறுவப்பட்ட திட்டம் திறம்பட நடத்தப்பட்டது. ஹிட்லர் ஒப்பற்ற தலை தொழுத்து நின்றபொழுது நேசதேசத்தார்கள் ஐரோப்பாவில் இறங்கத்துணிய மாட்டார்களென்று சொன்ன காலமுமுண்டு. ஹிட்லரின் அரட்டலைக்கண்டு நேசதேசத்தார்கள் பீதியடையவில்லை. அவர்கள் காலத்தை பிரதிக்ஷித்துக்கொண்டிருந்தார்கள். ஹிட்லரின் சவாலை அவர்கள் ஒப்புக்கொண்டு பிரான்ஸில் படைகளை இறக்கி ஜெர்மன் படைகளை ஒவ்வொரு இடத்திலிருந்தும் துறத்தியடித்து வருகிறார்கள். செர்பர்க் தீபகற்பத்தி லிறங்கி அவர்கள் பாரிஸுக்குச் சென்றுவிட்டார்கள். பாரிஸின் விடுதலையைக் கேட்டு சுதந்திரத்தை விரும்பும் எவரும் குதூகலமடையாமலிருக்கமுடியாது. நிலைமை மோசமாகயிருந்தபொழுதும் தைரியத்தை இழக்காத ஜெனரல் டி காலிடம் பிரான்ஸ் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. பாரிஸின் வீழ்ச்சிக்குப்பின் நேசதேசத்தாரின் முன்னேற்ற வேகம் பிரமிக்கக்கூடியதாக இருக்கிறது. கனேடியர்கள் டிப்பியை விடுவித்திருக்கிறார்கள். ஜெனரல் பாட்டனின் படைகள் பெல்ஜியத்திற்குள் புகுந்துவிட்டன. ஜெர்மானியர்கள் தலைவிதி கோலமாகப் பின்வாங்கி ஓடுகிறார்கள். ஒருவர் அபிப்பிராயப்பட்டதுபோல் நேசதேசப் படைகள் பிரேக் இல்லாத மோட்டார்களில் ஓய்வு நாட்களில் சவாரி செய்வதுபோல் உல்லாசமாக முன்னேறி வருகிறார்கள். ஜெர்மானியர்கள் எல்லாத் திசைகளிலும் பின் வாங்குகிறார்கள். தெற்கிலும் கிழக்கிலும் அவர்கள் துடைக்கப்படுகிறார்கள். எல்லா நடவடிக்கைகளும்



மின்னல் வேகத்துடன் நடைபெறுகின்றன. சுருங்கச் சொன்னால் பிரான்ஸுக்காக நடைபெற்ற போரில் நேசதேசப் படைகள் வெற்றி பெற்றுவிட்டன.

இதாலியிலும் நமக்குச் சிறந்த வெற்றிகள் கிடைத்திருக்கின்றன. ரோமும் பிளாரென்ஸும் வீழ்ச்சி பெற்றபின் நேசதேசப்படைகள் முன்னேறுகின்றன. கோதிக் அரண் இரண்டு ஓரங்களிலும் நொருக்கப்பட்டுவிட்டது. ஏட்ரியாடிக் போர்முனையில் ஒரு புதிய தாக்குதல் ஆரம்பித்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

நமது வல்லமையுள்ள அஞ்சா நெஞ்சம்படைத்த ருஷ்யர்களுக்குக் கிடைத்திருக்கும் மகத்தான வெற்றிகள் நம்மை பிரமிக்கச் செய்கின்றன. அவர்கள் புகாரெஸ்டுக்கு வந்து விட்டார்கள். ருமேனிய எல்லைச் சரகத்தையும் அடைந்துவிட்டார்கள். அநேகமாக போலந்து விடுவிக்கப்பட்டுவிட்டது. ஜெர்மனியின் எல்லைச் சரகத்துக்கு இப்பொழுது நிச்சயமாக அபாயம் ஏற்பட்டுவிட்டது. எல்லாப் பக்கங்களிலும் ஹிட்லர் தாக்கப்படுகிறான். பெர்லினுக்குள் வெற்றிகரமாக நுழைவதென்ற வெற்றிகளின் உச்சநிலைமையை நேசதேசப் படைகள் அதிக வேகத்துடன் அடைந்துவருகிறார்களென்பதில் சந்தேகமில்லை.

தூரக்கிழக்கிலும் நிலைமை திருப்திகரமாகயிருக்கிறது. பஸிபிக் தீவுகளிலிருந்து ஒன்றன்பின் ஒன்றாக ஜப்பானியர்கள் துறத்தியடிக்கப்படுகிறார்கள். ஜப்பானும் நேசதேச விமானங்களின் தாக்கும் வட்டாரத்துக்குட்பட்டுவிட்டது. ஜெனரல் ஸ்டில்வெல்லின் சேனையும், 14-வது இந்தியப்படையும் கடினமான பூ பிரதேச அமைப்பை மதித்துப் பார்க்கும்பொழுது துரிதமாக முன்னேறுகின்றனவென்றுதான் சொல்லவேண்டும். இரண்டு படைகளும் கூடிய சீக்கிரத்தில் ஒன்றுசேர்ந்துவிடும். அதற்குப்பின் பர்மாவை மீட்கும் இறுதிப்போர் துவக்கமாகும். அதன்பின் ஜப்பான் சீர்கேடடைந்து நொருங்கிவிடும். தூரக்கிழக்கு யுத்தமும் முடிவடையும்.

இவையெல்லாம் நமக்கு ஆறுதலளிக்கின்றன. அளவு கடந்த நம்பிக்கை கொண்டிருக்கக்கூடாதென்பது உண்மையாகிலும், யுத்தத்தின்முடிவு புலப்படுகிறதென்றும், எதிர்பார்ப்பதற்கு முன்னதாகவே யுத்தம் முடிவடைந்துவிடுமென்றும் நான் துணிவுகரமாகச் சொல்ல விரும்புகிறேன்.

இவ்விதமாக நாம் குதூகலப்பட நியாயமிருக்கிறது. இந்த யுத்தத்தில் நமது இந்தியப் படைகளின் அரிய சேவையையும் நாம் பெருமையுடன் கொண்டாடவேண்டும். பர்மாவின் காடுகளிலும், அஸ்ஸாமின் மலைப் பிரதேசங்களிலும், லிபியாவின் உஷ்ணமான மணல்பாங்கான இடங்களிலும், இதாலியின் கனிவர்க்கங்களுள்ள தோட்டங்களிலும், ஸிரியாவிலும், எரிட்ரியாவிலும், ஸோமாலிலாந்திலும் அப்படைகள் திறமையுடன் போர்புரிந்திருக்கின்றன; மதராஸ் மாகாணத்தைச் சேர்ந்த படையும் அதன் போர்புரியும் திறமையினால் இந்தியாவின் மற்ற பாகங்களிலிருந்து சென்றிருக்கும் படைகளுடன் சமமான கௌரவம் பெற லாயக்குள்ளவர்களென்று ருஜு செய்திருக்கிறார்கள்.

யுத்த முயற்சிக்கு நமது ஸமஸ்தானமும் பேருதவி செய்திருக்கிறது. சாவதானமாகவும், ஆடம்பரமன்னியிலும் நாம் சந்தோஷத்துடன் ஒரு சிறிது கைமாறு செய்திருக்கிறோம்.

இதுவரையில் நமக்குக் கிடைத்த வெற்றிகளுக்காக நாம் நன்றியறிவுள்ளவர்களாகயிருக்கிறோம். எதிர்காலத்தில் அதிக பிரகாசமான நிலைமை ஏற்படக்கூடுமென்பதற்கும் நாம் நன்றி செலுத்துகிறோம். ஹிட்லரும், அவனுடைய கொள்ளைக் கூட்டத்தாரும் இரக்கமன்னியில் அழிக்க முயன்ற ஸ்வதந்திரத்தையும், மானிட வர்க்கத்தின் அடிப்படையான உரிமைகளையும் உலகத்தில் பத்திரமாக நிலைபெரும்படி நாம் செய்யாவிட்டால் ஐந்து வருடங்களாக நாம் செய்த தியாகங்கள் பிரயோஜனமற்றதாக ஆகிவிடும். வெற்றிசீக்கிரம் கிட்டவேண்டுமென்றும், உலகத்தில் சாசுவதமான சமாதானமும், க்ஷேமமும் நிலைநாட்டப்படவேண்டுமென்றும் இன்று மாதாக் கோவில்களிலும், தேவாலயங்களிலும், மசூதிகளிலும், கிறிஸ்துவர்களும், ஹிந்துக்களும், முகம்மதியர்களும் மனதார பிரார்த்தனை செய்துவருகிறார்கள். இந்தப் பிரார்த்தனைகளுக்கு கூடிய சீக்கிரம் பலனேற்படுமென்று நான் நம்புகிறேன்.

## யுத்தத்துக்குப்பின் உலக சீர்திருத்தம்.

### 5. ஆரம்பத் திறப்புகள்.

தோற்றங்கள் உண்மையானால் யுத்தம் நீடித்து நடக்காது. யுத்தத்துக்கும் சமாதானத்துக்கு மிடையே கால அளவு எவ்விதமிருப்பினும் உலகத்தின் வருங்கால உலக சீர்திருத்தத்தை இனிமேல் ஒத்திவைக்கமுடியாது. அதமபக்ஷமாக முற்போக்கான நடவடிக்கைகளையாவது நாம் துவக்கவேண்டும்.

இதை விளக்கிச் செல்லுவோம். இரண்டு வேறுபட்ட அலுவல்களில் நம்முடைய புத்தியையும் பிரயாசையையும் ஈடுபடுத்தவேண்டும். யுத்தத்தினால் அக்ரமச் செய்கைகளால் ஏற்பட்ட அழிவை புனருத்தாரணம் செய்வது ஒன்று. இந்தியாவின் வருங்கால க்ஷேமத்திற்கு சீர்திருத்தம் செய்வது மற்றொன்று. நம்முடைய பழமையான இந்தியாவில் மாறுதல் நிச்சயமாக ஏற்படப்போகிறது.

உதாரணமாக ரஸ்தாக்களை கவனிப்போம். புனருத்தாரணம் செய்ய யுத்தப் போக்குவரத்தினால் சீர்கேடடைந்த ரஸ்தாக்களைத் திருத்தியமைக்கவேண்டும். இந்தியாவின் நாட்டுப்புறங்களைத் திருத்தியமைக்க புதிய ரஸ்தாக்கள் அமைக்கப்படவேண்டும்.

அடுத்தபடியாக போர்முனையில் 20-லக்ஷம் இந்தியர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் அதிக நாகரீகம்படைத்துத் திரும்பி கூடிய சீக்கிரம் வந்துவிடுவார்கள். இந்திய அவர்களுக்கு அலுவல்களைத் தேடவேண்டும். அவர்களின் சுகமான வாழ்க்கைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

புனருத்தாரணமும், சீர்திருத்தமும் ஒன்றேதான். யுத்த தளவாட உற்பத்தி சாலைகளில் 20-லக்ஷம் பேர்கள் தொழில் செய்துவருகிறார்கள். சேனைகளுக்காக அவர்கள் செய்துவரும் உற்பத்தியின் அவசியம் கூடிய சீக்கிரத்தில் குறைந்துவிடும். பொதுஜனங்களுக்குரிய தொழில்களில் அவர்கள் ஈடுபடவேண்டும். ஈடுபடுத்துவதற்குப் போதுமான வசதிகளும் தேவைப்படும். அவர்களை சமாதான கால தொழிலபிவிருத்திக்கு லாயக்குள்ளவர்களாகத் திருத்தியமைத்து பயிற்சி அளிக்கவேண்டும். இதுதான் புனருத்தாரணம்.

ஆகஸ்ட் 24-ம் தேதியன்று கல்கத்தாவில் இந்திய அரசாங்கத்தாரின் தொழிலாளர் இலாகா மெம்பரான டாக்டர் அம்பேத்கார் பின்வருமாறு சொன்னார்:—"இந்த யுத்தத்தில் யந்திர ஆதிக்கம்தான் மிகுதியானது. யுத்தம் முடிவடைந்தபின் ஜனங்களின் கௌரவமான வாழ்க்கையை நிலைநாட்டுவதற்காக ஆரம்பமாகப்போகும் நெருக்கடியில் தொழிலபிவிருத்தி, விஞ்ஞானசாஸ்திரப் பயிற்சிபெற்றவர்களுள்ள நாடுகள்தான் ஜீவித்திருக்கமுடியும்."

இதுதான் உலக சீர்திருத்தம்.

இதைத்தவிர யுத்தத்தின்பின் உலகத்தின் குறைவுகள் உண்டாகும். பஞ்சம், செலாவணிக் குறைவு, மற்ற தீங்குகளும் தோன்றும். யுத்தத்துக்கு முன்னிருந்த நிலைமைக்கு பொருளாதாரத்தையும், வியாபாரத்தையும் தொழில்முறையும் திருத்தியமைக்கவேண்டும்.

சீர்திருத்த மேற்படுவதற்கு செலாவணி பிரச்னை முக்கியத்துவமுள்ளது. திட்டங்களும் அறிக்கைகளும் வண்டிக்கணக்காகத் தயாரிக்கப்படலாம். அந்த திட்டங்கள் கால்நடைப் போஷணை முதல் விமானப் போக்குவரத்து வரைக்கும் எட்டலாம். ஆனால் எந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கும் பொருள் அவசியமாகும். மூன்று பகுதிகளாகப் பதினைந்து வருடங்களில் செலவுசெய்ய 1,000-கோடி ரூபாய்கள் தேவைப்படுமென்று இந்திய நிர்வாகத்தைச் சேர்ந்த நிபுணர்கள் சொல்லுகிறார்கள். இதற்கு யாராவது ஒருவர் அடிகோலவேண்டும்.

இந்த தேசமுன்னேற்றத்துக்குரிய திட்டங்கள் மத்திய அரசாங்கத்தாரைக் காட்டிலும் மாகாண நிர்வாகங்களால் கவனிக்கப்படவேண்டியவை. ஆகிலும் மத்திய நிர்வாகத்தின் தூண்டுதலில்லாவிடில் திட்டங்களும் அறிக்கைகளும் அலமாரிகளில் வைத்துப் பூஜை செய்ய வேண்டியவைகளாகிவிடும். ஆகையால் மாகாணங்களும், ஸமஸ்தானங்களும் இலாகாக்களும் ஒன்றுபட்டு ஒத்துழைக்கவேண்டும்.

மேலும் தேசிய பொருளாதாரத்தில் சமத்வம் ஏற்படவேண்டும். முக்கியமாக விவசாயத்துக்கும் தொழில் முறைகளுக்கும் பொருளாதார சமத்வம் உண்டாகவேண்டும். இந்தப் பிரச்னையைத் தீர்க்கும் விஷயத்தில் அநேக சச்சரவுகள் ஏற்படும்.

அடுத்தபடியாக உலோகங்களைப்பற்றிய உரிமைகள், நிலக்கரி விநியோகம் செய்யும் பாத்தியதை, மின்சார சக்தி, ரயில்வே விகிதம் சம்பந்தமான உரிமைகள் கவனிக்கப்பட வேண்டும்.

இந்தியாவில் தொழிலபிவிருத்தி செய்வது மகத்தான பிரச்னை. மிகுந்த சிரமங்களுள்ளது. தொழிற்சாலைகளை அரசாங்கத்தாரின் ஸ்வாதீனத்தில் வைப்பதா அல்லது தனிப்பட்ட நபர்களின் அமுலுக்குட்படுத்துவதா, வெளிநாடுகளிலுள்ள தொழிலாளிகளுக்கும் முதலாளிக்கும் உள்நாட்டிலுள்ளவர்களுக்கும் எவ்வித சம்பந்தங்களிருக்கவேண்டும், சுங்கவரி எவ்வளவு போடவேண்டும், செலாவணி எவ்வளவு இருக்கவேண்டும் என்ற அநேக பிரச்னைகள் தீர்க்கப் படவேண்டும்.

இந்தியாவின் நிர்வாக அமைப்பு பிரச்னையும் தீர்க்கப்படவேண்டும். வருங்கால முன்னேற்றத்தை பொதுஜனங்களும் நிர்வாகமும் ஒன்றுபட்டுத்தான் நிலைநாட்டவேண்டும். சுதந்திரம் கிடைக்கவேண்டுமென்று நாம் பாடுபடுகிறோம். ஆனால் தியாகம் செய்வதன்



மூலம்தான் சுதந்திரம் சித்திக்கும். நமது முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாகயிருக்கக் கூடிய பழைய பழக்கவழக்கங்களைத் துறக்கவேண்டும். அடக்குமுறைகளுக்கு நாம் உட்பட வேண்டும். பொதுஜன நன்மைக்காக நாம் பாடுபடத் தயாராக இருக்கவேண்டும். யுத்தத்துக்குப் பிந்திய உலக அமைப்பில் சகலவிதமான வழிகளிலும் ஜன சமூக, பொதுஜன ஊழியர்களுக்கு அபாரமான வேலை யிருக்கிறதென்று மதராஸ் கவர்னரின் ஆலோசகரான ஸர் நார்மான் ஸ்டாதி அபிப்பிராயப்பட்டார்.

இவ்விதமாக அநேக திறப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. புனருத்தாரண, சீர்திருத்த வேலைகள் பகுளமாகயிருக்கின்றன. ஆகையால் அரசாங்கத்தார் இன்னமும் திட்டங்களைப் போட்டுவருகிறார்களென்பதிலும் விஷயங்களை அறிய முற்படுகிறார்களென்பதிலும், மகத்தான வேலையைத்துவக்க ஆயத்தம் செய்துவருகிறார்களென்பதிலும் ஒரு விந்தையுமில்லை.

---

## வார யுத்தச் செய்திகள்.

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

**31—8—44 (வியாழக்கிழமை).**
- பிரிடிஷ் படைகள் ஸோம் நதியைத் தாண்டி எமியன்ஸை விடுவித்தன.
- அமெரிக்கப் படைகள் வடக்கு பிரான்ஸிலுள்ள வெர்டனையும், தெற்கு பிரான்ஸிலுள்ள ஆலனெஸையும் பிடித்தன.
- ஜெனரல் மாண்ட் காமெரிக்கு பீல்ட் மார்ஷல் என்ற பதவி அளிக்கப்பட்டது.
- ருஷ்யர்கள் ருமேனியாவின் தலைநகரமான புகாரெஸ்டைப் பிடித்தார்கள்.

**1—9—44 (வெள்ளிக்கிழமை).**
- பிரிடிஷ் படைகள் பாஸ் டி கலேக்குள் புகுந்தன.
- அமெரிக்கப் படைகள் பெல்ஜியத்திற்குள் புகுந்தன.
- நேசதேசப் படைகள் தெற்கு பிரான்ஸிலிருந்து இதாலிக்குள் பிரவேசித்தன.
- ருஷ்யர்கள் பல்கேரியாவின் எல்லைச் சரகத்தை அடைந்தார்கள்.

**2—9—44 (சனிக்கிழமை).**
- அமெரிக்கப் படைகள் பெல்ஜியத்திற்குள் முன்னேறுகின்றன.
- நேசதேசப் படைகள் ஜெர்மன் எல்லைக்கு 11 மைல்களுக்குள் வந்துவிட்டன.
- பின்லாந்தைக் காலி செய்யும்படி நாஸிப் படைகளுக்கு உத்தரவிடப்பட்டுவிட்டது.
- நேசதேசப் படைகள் கோதிக் அரணைப் பிளந்துவிட்டன. எட்ரியாடிக் கடற்கரையிலுள்ள பெசாரோவும் மேற்கு கரையிலுள்ள பைஸாவும் பிடிபட்டன.

**3—9—44 (ஞாயிற்றுக்கிழமை.)**
- பிரிடிஷ் துருப்புகள் பெல்ஜியத்திற்குள் நுழைந்தன. அதன் தலைநகரமான ப்ருஸெல்ஸ் ஆக்கிரமிக்கப்பட்டது. சானல் கடற்கரையிலுள்ள அபிவில்லியை கனேடியர்கள் பிடித்தார்கள்.
- பின்லாந்து ஜெர்மனியுடன் உறவை ரத்து செய்தது.
- அமெரிக்கர்கள் தெற்கு பிரான்ஸிலுள்ள லையான்ஸைப் பிடித்தார்கள்.

**4—9—44 (திங்கட்கிழமை).**
- பிரிடிஷ் துருப்புகள் பெல்ஜியத்திலுள்ள ஆண்ட்வெர்ப்பை ஆக்கிரமித்தன.
- நேசதேசப் படைகள் ஹாலந்திற்குள் நுழைந்து ப்ரெடாவைப் பிடித்தன.

**5—9—44 (செவ்வாய்க்கிழமை).**
- நேசதேசப் படைகள் லக்ஸம்பர்க்குக்குள் புகுந்தன.
- ருஷ்யர்கள் பல்கேரியாவுக்குள் புகுந்தார்கள்.

## (B)-செய்திச் சுருக்கம்.

*பிரான்ஸ் :—*

வடக்கு பிரான்ஸ்—வலது பார்ஸ்வம் (அமெரிக்கப் படைகள்).—அமெரிக்கப் படைகள் விசிறிபோல் வடக்கிலும், கிழக்கிலும் பரவி மார்ன், ம்யூஸ், மோஸல் நதியைத் தாண்டி, வெர்டன், சேடான், லெயான், லாங்வி, மெட்ஸ், நான்ஸி, தியான்வில் முதலிய இடங்களைப் பிடித்தன. அவைகள் மாகினோ அரணைப் பிளந்து லக்ஸம்பர்க்குக்குள்ளும் ஜெர்மனிக்குள்ளும் புகுந்தன. ஜெர்மனிக்குள் எயிலா செபலும், சார்ப்ரக்கனும் பிடிபட்டன.

வடக்கு பிரான்ஸ்—இடது பார்ஸ்வம் (பிரிடிஷ், கனேடியப் படைகள்).—ஸைன் நதியைத் தாண்டியபின் கனேடியர்கள் ரூவன், அபிவில்லியையும் பிரிடிஷார்கள் எமியன்ஸ், ஆராஸ், டிப்பி, லில், டௌலன்ஸையும் பிடித்தார்கள். பெல்ஜியத்தின் தலைநகரமான ப்ருஸல்ஸும், நாமுரும், டுனண்டும் விடுவிக்கப்பட்டன. ஹாலந்தில் ஷெல்டி நதியின் முகத்துவாரத்திலுள்ள ப்ரேடாவும் ஆன்ட்வெர்ப்பும் விடுவிக்கப்பட்டன.

லாஹாவர், டன்கர்க், போலோன் முதலியவற்றை விடுவிக்க முயற்சி செய்யப்படுகிறது. பாஸ்டி கலே பிரதேசம் துண்டிக்கப்பட்டுவிட்டது.

தெற்கு பிரான்ஸ்.—வடக்கு பிரான்ஸிலிருந்து டிஜான் வழியாக தெற்கு நோக்கியும், தெற்கு பிரான்ஸிலிருந்து மாகன், சாலன்ஸ்-ஆர்-சாலோனிலிருந்து வடக்கு நோக்கியும் நேசதேசப் படைகள் முன்னேறுகின்றன. இரு படைகளுக்குமிடையே 55 மைல்கள் தான் இருக்கின்றன.

வடகிழக்கை நோக்கி முன்னேறிய படைகள் லியான்ஸைப் பிடித்தபின் ஜெர்மனிக்குப் போகும் மார்க்கமான பெல் போர்ட் கணவாயை நோக்கிச் செல்லுகின்றன.

ரீவிரா ஓரமாகக் கிழக்கு நோக்கிச்சென்று வெண்டி மிக்ளியா என்றுமிடத்தில் படைகள் இதாலிக்குள் புகுந்துவிட்டன.

மேற்கிலும் டூலூஸுக்குச் சென்று பிரனீஸ் பகுதியை விடுவிக்க முயன்றுவரும் பிரெஞ்சு உள்நாட்டுப் படைகளுக்கு நேசப்படைகள் உதவியளித்துவருகின்றன.

ஆல்ட்டன் ஃபிஜோர்டுவில் ஒளிந்துகொண்டிருக்கும் 41,000 டன்கள் எடைமானமுள்ள டிர்பிட்ஸ் என்ற ஜெர்மன் யுத்தக் கப்பல் பிரிடிஷ் கடல் விமானங்களால் அநேகம் தடவைகள் தாக்கப்பட்டிருக்கிறது. இந்த நடவடிக்கைகளில் 9 ஜெர்மன் விமானங்கள் அழிந்தன. விமானம் நிற்குமிடங்களும், முகாம்களும், வெயர்லஸ் நிலயங்களும் தீக்கிரையாயின. 2 யூ-படகுகள், 4 நாசகாரிகள், 5 சாமான் கப்பல்கள், 2 எண்ணெய்க் கப்பல்கள், 2 கவசம் பூண்ட இழுப்புக் கப்பல்கள், இரண்டு படைகளை இறக்கும் படகுகள் நாசமாயின அல்லது பழுதுபட்டன.

கிழக்குப் போர்முனை.—ருஷ்யப் படைகள் பால்கன் நாடுகளை விழுங்கி வருகின்றன. அவைகள் டான்யூப் நதிப்பள்ளத்தாக்கை வெற்றிகரமாகத் தாண்டின. அவைகள் ருமேனியாவில் புகாரெஸ்ட், போலஸ்தி, கான்ஸ்டென்ஸா, ஒல்டென்டா, போடண்டி, பிராசாவ் (குரோன்ஸ்டட்), சினேயா முதலியவற்றைப் பிடித்தன.

வார்ஸாப் பகுதியில் வசாகௌ பிடிபட்டது. பியாலிஸ்டாக்குக்கு மேற்கில் நாரு நதி தாண்டப்பட்டது. கார்பேதியன் மலைகளைத்தாண்டி படைகள் ஹங்கேரியை நோக்கி முன்னேறுகின்றன. பல்கேரியாவின் ஆக்கிரமணம் துவங்கிவிட்டது.

இதாலி.—ஜெனரல் அலெக்ஸாண்டர் மேற்கே பைஸாவிலிருந்து கிழக்கே பெசாரோ வரையில் கோதிக் அரணை வெற்றிகரமாகத் தாக்கிவருகிறார்கள். எதிரி எதிர்பார்த்த வண்ணம் பைஸாமுனையில் தாக்காமல் படைகள் பெசாரோ பக்கத்தில் தாக்குதலைத் துவக்கின. இதற்குமுன் காசினோவில் ஏமாற்றமடைந்த எதிரி மறுபடியும் திகைப்புற்றான். ஜெனரல் அலெக்ஸாண்டரின் படைகள் மெடாரோ நதியிலிருந்து பெசாரோ இருக்கும் பாக்லியா நதியின் முகத்துவாரத்திற்கு முன்னேறி கோதிக் அரணைப் பிளந்துவிட்டன. அதற்கு வடக்கிலுள்ள மிசானோவும் பிடிபட்டது. படைகள் போ நதிப் பள்ளத்தாக்கில் முக்கியமான நகரமான ரிமினியையும், லம்பார்டி சமவெளியையும் நோக்கி முன்னேறுகின்றன.

தூரக்கிழக்கு.—பார்மோசா, பிலிப்பைன்ஸ் தீவுகள் மறுபடியும் தாக்கப்பட்டன. சீனப் படைகள் இசாங், சாலீன், டெஞ்சங்கில் போர் புரிந்துவருகின்றன.

பர்மா.—சின் மலைப் பகுதிகளில் நேசதேசப்படைகள் டிடிம் ரஸ்தா வழியாக 110 மைல்கள் முன்னேறியிருக்கின்றன. சிண்ட்வின் நகரத்தைப் பிடித்தபின் படைகள் மிட்டாங்கைட், டாங்கட்டையும் அடைந்துவிட்டன.



## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**27—8—44.** (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—இலக்குகள்—வடமேற்கு ஜெர்மனி (N. W. Germany), ஜெர்மனியர் ஆக்கிரமித்த டேனிஷ் தீபகற்பம், பிராங்கோ ஜெர்மன் (Franco—German) எல்லைப் பிரதேசம்.
தொடர்ச்சியான எண்ணெய்க்கிணறுகள்.—ஹாம்பர்க் (Hamburg).
பறக்கும் வெடிகுண்டு ஸ்தலங்கள்.—பாஸ்டி கலே (Pas De Calais) பிரதேசம்.
இரண்டு தொடர்ச்சியான எண்ணெய்க் கிணறுகள்.—சைலீஷியா (Silesia).
பீரங்கி ஸ்தாபனங்கள் அரண் கட்டப்பட்ட இலக்குகள்.—பிரெஸ்ட் (Brest).
எதிரி போக்குவரத்துகள்.—வடகிழக்கு பிரான்ஸ் (N. E. France).
சேனைகள் யுத்த தளவாடங்கள் தயார்செய்து சேகரிக்குமிடங்கள்.—கிஸார்ஸ் (Gisors), சார்லிராய் (Charleroi).
ரயில் ஸ்தாபனங்கள்.—லில்லி (Lille), அமீன்ஸ் (Amiens), டியப் (Dieppe).
இரவு.—கண்ணிவெடி பாவுதல்—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.

இதாலி (Italy).

கடற்கரைக் கப்பல்கள், துறைமுக ஸ்தாபனங்கள்.—வடமேற்கு இதாலி (N. W. Italy), ஏட்ரியாடிக் (Adriatic).
இலக்குகள்.—பெஸாரோ (Pesaro) பிரதேசம்.

கிழக்கு யுத்த அரங்கம் (Eastern Front).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியக் கப்பல்கள்.—செலிபெஸ் (Celebes).
ஜப்பானிய சைனியங்கள்.—ஹால்மஹேரா (Halmahera).

பர்மா (Burma).

ஒரு தகவலும் இல்லை.

**28—8—44.** (திங்கட்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

எண்ணெய்க் கிடங்குகள்.—பாய்லெஸ் பியெர்ரிபாண்ட் (Buoy Les Pierrepont) போரேட் டு ஸாமோஸி (Foret Du Samousey).
ரேடியோ ஸ்தாபனங்கள்.—பொலோன் (Bulogne).
நீராவி யந்திரங்கள், ராணுவ வண்டிகள், நூற்றுக்கணக்கான ரயில் வண்டிகள்.—ஸீன் முகத்துவாரம் முதல் லக்ஸம்பர்க் (Luxembourg) வரை.
கடற்கரை இலக்குகள்.—பிரெஸ்ட் (Brest).
ரயில்வேப் பாலங்கள்.—லியான்ஸ் (Lyons) பிரதேசம்.
பீரங்கி ஸ்தாபனங்கள்.—மார்ஸேல்ஸ் (Marseilles) பிரதேசம்.
இரவு.—ராணுவ இலக்குகள்—வடகிழக்கு பிரான்ஸ் (N. E. France).
ரயில்வே இலக்குகள்.—அப்பிவில்லி (Abbeville), டௌலென்ஸ் (Doullens), அர்ராஸ் (Arras).
எதிரி ஸ்தாபனங்கள்.—பாஸ் டி கலே (Pas De Calais)ப் பிரதேசம்.

இதாலி (Italy).

எதிரி சைனியங்கள்.—கோதிக் (Gothic) அரண்.
போக்குவரத்துகள்.—வட இதாலி (N. Italy).

கிழக்கு யுத்த அரங்கம் (Eastern Front).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ரயில்வே.—மோல்மீன் (Moulmein), பாங்காக் (Bangkok).

பர்மா (Burma).

எதிரி போக்குவரத்துகள்.—வட பர்மா (North Burma).
நேசதேசத் துருப்புகளுக்கு தரைப்படை உதவி.—டிடிம் (Tiddim) சிண்ட்வின் (Chindwin) சமவெளி.

**29—8—44.** (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—பாலங்கள்—யூகோஸ்லாவியா (Yugoslavia), போரோவ்னிகா (Borovnica).
இலக்குகள்.—ஹங்கேரி (Hungary).
ரயில்வே தளங்கள்.—ஸோலனோக் (Szolnok).
எண்ணெய்க் கிணறு ஸ்தாபனங்கள் போக்குவரத்துகள்.—ஆஸ்திரியா (Austria), ஹங்கேரி (Hungary).
தொடர்ச்சியான எண்ணெய்க் கிணறுகள்.—ஆஸ்திரியாவிலுள்ள வியென்னா (Vienna).
இரண்டு பாலங்கள்.—பிரென்னர் கணவாயிலுள்ள இரு (Brenner Pass) பாலங்கள்.
ரயில்வே லயன்களின் மேல் வெடி குண்டு தாக்குதல்.—ஸீன் (Seine) முதல் ஸோம் (Somme) வரை.

எண்ணெய்க் கிணறுகள்.—ஹாம் (Ham), டௌலென்ஸ் (Doullens), அமீன்ஸ் (South of Amiens).

கப்பல்கள்.—பாஸ் டி கலே (Pas De Calais), பிரெஸ்ட் (Brest).

இரவு.—(41 ரேசதேச விமானங்கள் காணப் படவில்லை).

இலக்குகள்.—பெர்லின் (Berlin), ஸ்டெட்டின் (Stettin), கோனிக்ஸ்பர்க் (Koenigsburg).

ஹாம்பர்க் (Hamburg).

சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.

**இதாலி (Italy).**

போக்குவரத்துகள்.—வட இதாலி (N. Italy).

எண்ணெய்க் கிணறு ஸ்தாபனங்கள்.—வட இதாலி (N. Italy).

எதிரி சைனியங்கள்.—பெஸாரோ (Pesaro) பிரதேசம்.

**கிழக்கு அரங்கம் (Eastern Front).**

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.— யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ராணுவ நிலயங்கள், துறைமுக நிலயங்கள்.—அம்பாய்னு (Amboina).

ஜப்பானிய தளங்கள்.—குரைல்ஸிலுள்ள பாராமுஷிரோ (Paramushiro).

வியாபாரக் கப்பல்கள்.—சூரிபாக் (Suribach).

இலக்குகள்.—டிமோர் (Timor), ஹால்மஹேரா (Halmahera), பிலிப்பைன்ஸிலுள்ள டாவுவா (Dauao).

**பர்மா (Burma).**

பாலம்.—பிங்கெய்ங் (Pyingaing)கிற்கு மேற்கு.

மோட்டார் போக்குவரத்துகள் படகுகள்.—மேல் சிண்ட்வின் (Chindwin).

**30—8—44.** (புதன்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—இலக்குகள்—கீல் (Kiel), பிரெமன் (Bremen).

எதிரி ரஸ்தா ரயில் மூலம் செல்லும் படைகள்.—லோ கண்ட்ரீஸ் (Low Countries), மேற்கு ஜெர்மனி (Germany), பிரான்ஸ் (France).

பறக்கும் குண்டு ஸ்தாபனங்கள்.—பாஸ் டி கலே (Pas De Calais)ப் பிரதேசம்.

செயின்ட் மாலோவிற்கருகிலுள்ள சிஸெம்பர் (Cezembre).

ரயில் பாலங்கள்.—யூகோஸ்லாவியா (Yugoslavia).

எதிரி படகுகள்.—ருமேனியாவிலுள்ள இரு விமான நிலயங்கள்—ஹங்கேரி(Hungary).

இரவு.—சுரங்க வெடி பாவுதல்—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.

**இதாலி (Italy).**

பெர்ராரா (Ferrara).

ரயில் ரஸ்தாக்கள், ரஸ்தாக்கள்.—கோதிக் அரண் முதல் (Gothic line), போ (Po) சமவெளி வரை.

துறைமுகங்கள், கப்பல்கள்.—அட்ரியாடிக் (Adriatic)முதல் ஜினோவாக் கடற்கரை (Genoa) வரையிலும்.

**கிழக்கு அரங்கம் (Eastern Front).**

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

**பர்மா (Burma).**

மோட்டார் போக்குவரத்துகள் படகுகள்.—லோயர் சிண்ட்வின் (Lower Chindwin).

**31—8—44.** (வியாழக்கிழமை).

பகல்.—எதிரி சைனியங்கள்—செயிண்ட் மாலோக்கருகிலுள்ள சிஸெம்பர் (Cezembre).

எண்ணெய்க் கிணறு ஸ்தாபனங்கள்.—டியப்பிற்கருகில் (Dieppe).

எதிரி விமான நிலயங்கள்.—ஸ்காஜெர்ராக் (Skagerrak)கிற்கருகில்.

எதிரி படைகள்.—ரூவன் (Rouen), அப்பிவில்லி (Abbeville), கோர்னே (Gournay) பிரதேசம்.

மோட்டார் போக்குவரத்துகள் ரயில்வே லயன்கள்.—ரோன் (Rhone) சமவெளி.

இரவு.—கப்பல்கள்—டியப் (Dieppe), டன்கர்க் (Dunkirk).

இலக்குகள்.—டஸ்ஸல்டார்ப் (Dusseldorf).

**இதாலி (Italy).**

பாலங்கள், ரஸ்தாக்கள், ரயில் போக்குவரத்துகள்.—வட இதாலி (N. Italy).

எதிரி சைனியங்கள் ஸப்ளைக் குவியல்கள், போக்குவரத்துகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

கடற்கரைக் கப்பல்கள்.—ஜினோவா வளைகுடா (Gulf of Genoa).

ரயில் தளங்கள்.—பெர்ராரா (Ferrara).

**கிழக்கு யுத்த அரங்கம் (Eastern Front).**

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய சைனியங்கள்.—பார்மோஸா (Formosa).

ஜப்பானியக்கப்பல்கள்.—ஸெலிபஸ் (Celebes).

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—டிமோர் (Timor) அலார் (Alor) தீவு.

ஜப்பானிய போக்குவரத்துகள்.—டச்சு நியூகினியாவிலுள்ள வோகல்காப் (Vogelkop).

**பர்மா (Burma).**

படகுகள்.—சாக்கிற்கும் (Chauk) யெனங்யாட் (Yenangyat) டிற்குமிடையில்.



**1—9—44.** (வெள்ளிக்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—எதிரி ரஸ்தா, ரயில் நடமாட்டம்—வடக்கு பிரான்ஸ் (N. France), பெல்ஜியம் (Belgium).

மோட்டார் போக்குவரத்துகள், நீராவி யந்திரங்கள், வண்டிகள்.—வடக்கு பிரான்ஸ் (N. France), பெல்ஜியம் (Belgium).

கடற்கரையிலுள்ள பீரங்கிகள்.—சிஸெம்பர் (Cezember).

எண்ணெய் குவியல்கள்.-போர்ட் டிஆர்குவிஸ் (Foret'd Arques), நோமெக்ஸி (Nomexy).

ஸப்ளைக் குவியல்கள்.—வடக்கு பிரான்ஸ் (N. France).

கப்பல்கள்.—டோவருக்கு அருகில்.

எண்ணெய்க் குவியல்கள்.—யூகோஸ்லாவியா (Yugoslavia).

இரவு.—எதிரி விமான நிலயங்கள், துருப்புகள்—பெல்ஜியம் (Belgium).

**இதாலி (Italy).**

துறைமுகப் பாலங்கள்.—போ (Po) நதி.

பாலங்கள்.—பெர்ராரா (Ferrara).

எதிரி சைனியங்கள்.—கோதிக் (Gothic) அரண்.

**கிழக்கு யுத்த அரங்கம் (Eastern Front).**

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

**பர்மா (Burma).**

ஒரு தகவலும் இல்லை.

**2—9—44.** (சனிக்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்—போக்குவரத்து இலக்குகள்.—பெல்ஜியம் (Belgium), ஹாலந்து (Holland), பிரான்ஸ் (France).

தாக்கப்படும் பிரதேசங்கள்.—பிரெஸ்ட் (Brest).

துருப்பு முகாம்கள்.—அபிவில்லி (Abbeville).

ரயில்வே தளங்கள்.—கிவெட் (Givet), சிஸெம்பர் (Cezembre).

எதிரிக் கப்பல்கள்.—பெல்ஜியம் துறைமுகம்.

பின்வாங்கும் ஜெர்மன் படைகள்.—ரோன் (Rhone) சமவெளி.

இரவு.—ஜெர்மன் நிலைகள்—பிரெமன்.

**இதாலி (Italy).**

எதிரி பீரங்கி ஸ்தாபனங்கள், துருப்புகள், டாங்கி போக்குவரத்து ஸ்தாபனங்கள்.—தெற்கு (South), தென்மேற்கு ரிமினி (S. W. Rimini.)

ரயில் தளங்கள்.—சிஸெண்ட் (Cesent), பட்ரிய்யா (Budrio).

இலக்குகள்.—பொலோனு (Bologna), பெர்ராரா (Ferrara).

**கிழக்கு அரங்கம் (Eastern Front).**

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்—யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

விமான நிலயங்கள், நீர்நில ஸ்தாபனங்கள்.—பாலா (Palau).

ஸப்ளைஸ்.—ஹாகாகாங்கிற்குத் தெற்கு.

ஜப்பானிய சைனியங்கள்.—போனின் (Ponin) தீவு.

**பர்மா (Burma).**

இலக்குகள்.—மத்திய பர்மா (Central Burma).

சேமிப்புகள் நீராவி யந்திரங்கள்.—ஐராவதி நதியின்மேல் புரோம் (Prome) முதல் சாக் (Chauk) வரை.

ரயில்வே ஸாகெய்ங் (Sagaing).

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**28—8—44.** (திங்கட்கிழமை).

**பிரிடன் (Britain).**

சில இடங்கள்.—தென் கிழக்கு இங்கிலாந்து.

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**29—8—44.** (செவ்வாய்க்கிழமை).

**பிரிடன் (Britain).**

சில இடங்கள்.-தென் இங்கிலாந்து, லண்டன் (London) பிரதேசம்.

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**30—8—44.** (புதன்கிழமை).

**பிரிடன் (Britain).**

ஒரு தகவலும் இல்லை.

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**31—8—44.** (வியாழக்கிழமை).

**பிரிடன் (Britain).**

சில இடங்கள்.—தென் இங்கிலாந்து.

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு(Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**1—9—44.** (வெள்ளிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

காலை.—தென் கிழக்கு இங்கிலாந்தில் சில நடவடிக்கைகள்.

மாலை.—பறக்கும் குண்டுகள் நடவடிக்கை நின்றது.

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**2—9—44.** (சனிக்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**3—9—44.** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு(Far East).**

எதிரிவிமான நடவடிக்கை இல்லை.

# யுத்தக் குறிப்புகள்.

**ஓட்டம்.** பின்வாங்குவதென்று இனிமேல் சொல்லக்கூடாது. மேற்கு போர்முனையில் ஸென், சோம், எயின், மோஸல், ரோன் நதி வழியாக ஜெர்மன் படைகள் நிலைகுலைந்து ஓடுகின்றன. சரித்திரத்தில் இவ்விதமாகத் துரிதமான பின்வாங்குதல் நடைபெற்றதில்லை.

அடிமையாக்கப்பட்டதைவிட துரிதமாக ஐரோப்பிய நாடுகளின் விடுதலை நடைபெற்று வருகிறது. பிரான்ஸ், பெல்ஜியம், லக்ஸம்பர்க் அநேகமாக விடுதலை பெற்றுவிட்டன. ஹாலந்து விடுவிக்கப்படுகிறது.

கிழக்குப் போர்முனையிலும் ருஷ்யர்களின் முன்னேற்றம் திருப்திகரமாக நடைபெற்று வருகிறது. சில நாட்களுக்குள்ளாக ருமேனியா ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டது. பல்கேரியாவில் படையெடுப்பு துவங்கிவிட்டது. வார்ஸாவின் வீழ்ச்சி வெகு தூரத்திலில்லை. பின்லாந்து ஜெர்மனியைக் கைவிட்டுவிட்டது. தெற்கு முனையில் குறிப்பிடத்தக்க சம்பவங்கள் நடைபெறக்கூடும். ருஷ்யப்படைகள் டிடோவின் படைகளுடன் சேர மேற்கு நோக்கிச் செல்லுகின்றன. கிரீஸிலிருந்து ஜெர்மன் ஆக்கிரமிப்புப் படைகள் காலியாகுகின்றன. டொடிகானீஸையும் கூடிய சீக்கிரம் காலிசெய்து விடுவார்கள். வடக்கு இதாலியில் போ நதியைத் தாண்டி வடக்கு இதாலிக்குச் செல்லும் ஜெனரல் அலெக்ஸாண்டரின் படைகள் ஒரு பக்கம் டிடோவின் படைகளுடனும் மற்றொரு பக்கத்தில் அமெரிக்க 7-வது படைகளுடனும் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளும்.

இவ்விதமாக ஹிட்லரைச் சுற்றி நேசதேச வளையம் நெருங்கி வருகிறது. அவன் இனிமேல் ஐரோப்பாவைக் காப்பாற்ற முடியாது. அதற்காகப் போர் புரியவும் முடியாது. ஐரோப்பியக் கோட்டையின் சுவர்கள் பல இடங்களில் நொறுங்கிவிட்டன. இனிமேல் ஜெர்மனிக்காகத்தான் போர் பாக்கியிருக்கிறது.

வி வி வி வி வி

**ஜெர்மனிக்கு அபாயம்.** ஜெர்மனிக்கு அபாயம் ஏற்பட்டுவிட்டது. கோதிக், கஸ்டாவ், அடால்ப் ஹிட்லர், மாகினோ அரண்களின் வழியாகத்தான் ஸீக்பிரட் அரணும் சென்றுவிடும். நேசதேசப் படைகள் ஜெர்மனிக்குள் புகுந்துவிடும். ஜெர்மனியைப் படையெடுத்து இறுதியில் ஆக்கிரமித்தவுடன் ராணுவ நிர்வாகத்தை நடத்த மிஸ்டர் ராபர்ட் D. மர்பி ஸ்தானிகராக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று வாஷிங்டனிலிருந்து வெளியிடப்பட்டிருக்கிறது. உசிதகாலம் வந்துவிட்டது.

வி வி வி வி வி

**கொரில்லாச் சண்டை.** ஜெர்மன் சேனைகள் வலிமையை இழந்துவிட்டன என்று நாஸிகள் அறிகிறார்கள். நேசதேசப் படையெடுப்பு அபாயத்தைத் தடுக்க கொரில்லாச் சண்டையை மேற்கொள்ளவேண்டுமென்று கோயபல்ஸ் உத்தியோக முறையில் அறிக்கையை வெளியிட்டிருக்கிறான். ஜெர்மனிக்கு என்ன துர்தசை ஏற்பட்டுவிட்டது. கோயபல்ஸ் இதைப்பற்றி பின்வருமாறு ஒலிபெருக்கியிருக்கிறார்.

"நாம் புதிய தாக்குதல்களை சமாளிக்கவேண்டியிருப்பதால் புதிய யுத்த முறைகளை நாம் கையாளவேண்டும். நமது மக்களின் ஊக்கமும் வலிமையும் மிகுதியாகயிருக்கிறது. இது பொது மக்களின் யுத்தம். அவர்கள் ஒருபொழுதும் முறியடிக்கப்படமாட்டார்கள். ருஷ்யர்களோ அல்லது அமெரிக்கர்களோ நமது நாட்டிற்குள் காலை வைத்தால் ஒவ்வொரு கிராமமும், குன்றும், வயலும், குடிசையும் பலமாக எதிர்த்துப் போராடும். விவசாயிகளும், தொழிலாளர்களும், கலப்பைகளையும், யந்திரங்களையும் போட்டு யுத்த சன்னத்தத்துடன் இருப்பார்கள். ஜெர்மனியைப் பாதுகாக்க விருத்தர்களும், வாலிபர்களும் மனதார முன்வரவேண்டும். எதிரிக்கு ஒரு திவலை உணவுப்பொருள்கூட கிடைக்காது. ஜெர்மானியர்கள் ஒரு தகவலையும் கொடுக்கமாட்டார்கள். ஒருவரும் எதிரிக்கு உதவியளிக்கமாட்டார்கள். எதிரிக்கு உதவாதபடி ஒவ்வொரு ரஸ்தாவையும் நடைபாதையையும் அழித்துவிடவேண்டும். எங்கு பார்த்தாலும் வெறுப்பும் அழிவும்தான் காணப்படும். நாட்டை அபகரிக்க வருகிறவர்களை அழிக்க பொது ஜனங்கள் முன்வரவேண்டும்." அதாவது பொசுக்கல் வேலை கையாளப்படுமென்று தோன்றுகிறது. ஜெர்மன் சேனையும், S. S. படைகளும், பான்ஸர் படைகளும், ஜெர்மன் விமானப் படையும் எங்கு சென்றன. அவைகள் உயிருடனிருக்கின்றனவாவென்பது புலப்படவில்லை.



**பூதப்படை.** டெயிலி ஹெரால்ட் சொல்லுவதுபோல் வடக்கு பிரான்ஸிலிருந்த ஜெர்மன் படை சிதறுண்டுவிட்டது. அவைகள் இப்பொழுது தூக்குத்தூக்காகத் திரிகின்றன. பாலே ஆர்கென்டான் இடைவெளியிலிருந்து தப்பி ஓடியவர்கள்தான் இந்த கோஷ்டிகளிலிருக்கிறார்கள். அழுக்கான உடுப்புகளைப் போட்டுக்கொண்டு அவர்கள் அங்குமிங்கும் திரிந்து யுத்த நிறுத்தகாலம் வரையில் ஒளிந்துகொள்ள முயன்று வருகிறார்கள். ஜெர்மனி கூடிய சீக்கிரத்தில் யுத்தத்தை நிறுத்திவிடுமென்று அவர்கள் நம்புகிறார்கள். அதன் பிறகு அவர்கள் தங்களுடைய நாட்டிற்குத் திரும்பி அழைக்கப்படுவோராகள்.

நேசதேசத்தார்கள் இவை எல்லாவற்றையும் அறிவார்கள். ஆகிலும் அவர்களைத் தேடிச் செல்லுவதில்லை. ஜெர்மன் படைகள் தானாகவே சரண் புகுந்துவிடுகின்றன. அவர்களுக்கு வேறு வழியில்லை. சிலருக்கு பிரெஞ்சு பாஷை தெரியாது. உணவுப்பொருளை யாசிக்கவும், வாஹனங்களில் ஏற்றிக்கொள்ளவும் அவர்கள் சம்பாஷணை செய்யமுடியாது. அவர்களிடம் செல்வமும் கிடையாது. அவர்களிடம் ஆயுதங்களும் இல்லை. அவர்கள் சக்தியையும் இழந்துவிட்டார்கள்.

வி வி வி வி வி

**பீத்தல்.** இதற்குமுன் ஜெர்மனி பீத்திக்கொண்டதற்கும் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் நிலைமைக்கும் எவ்வளவு வித்தியாசம் பாருங்கள்.

"ஐரோப்பாவின் விதியை அடால்ப் ஹிட்லரும், டூசே பெனிடோ முஸோலினியும் தான் நிர்ணயிக்கக்கூடும். (1940-ம் வருஷம் ஸெப்டம்பர் 3-ம் தேதி.)

"இங்கிலாந்து அதனுடைய தற்காப்புகளைப் பலப்படுத்தி வருகிறது. ஆகிலும் அதை முறியடிப்பது ஜெர்மன் ராணுவத்துக்குப் பிரமாதமான காரியமல்ல. பிரிடன் முறியடிக்கப்படும். இந்த நம்பிக்கையுடன் ஜெர்மனி 1941-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் 3-ம் தேதியாகிய இன்று மூன்றுவது வருஷ யுத்தத்தைத் துவக்குகிறது. (1941-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் 3-ம் தேதி).

"அமெரிக்கப்படைகள் அயல்நாடுகளில் போர் புரியாது."

ஜெர்மனியின் ஜோஸ்யம் எல்லாம் புழுகாகிவிட்டது. ஆகையால் இப்பொழுது ஜெர்மனி ஒன்றும் சொல்லுவதில்லை. இந்த வருஷம் ஸெப்டம்பர் 4-ம் தேதியன்று ஹிட்லர் வழக்கம் போல் பேசவில்லை.

வி வி வி வி வி

**சீர்கேட்டிற்குக் காரணம் என்ன?** நேசதேசப் படைகளின் வேகமான முன்னேற்றத்திற்கு யாது காரணம்? பிரான்ஸுக்கான போரில் முக்கியமாக நார்மண்டி பாலெப்பகுதியிலுள்ள கேயன், ஸென் நதி முதலிய போர்களில் நேசதேசத்தாருக்குக் கிடைத்த வெற்றிதான் காரணம். இவைகள் சாவுப் பொறிகளாக ஆகிவிட்டன. தப்பி ஓடியவர்கள் நிலைத்துநின்று எதிர்த்துப் போராடவில்லை. ஓடுவதைத் தவிர அவர்களுக்கு வேறு கதியில்லை. இந்தக் காரணத்தினால்தான் இந்த வாரத்தில் நேசதேசப் படைகள் துரிதமாக முன்னேறின. பெல்ஜியம், ஹாலந்து ஜெர்மன் எல்லைக்குள்ளும்புகுந்தன.

பிரான்ஸில் கிடைத்த வெற்றி மூலம் செம்படைக்கும் சௌகரியமேற்பட்டிருக்கிறது. தோல்வி பெற்றுவரும் கக்ஷியை ஆதரிப்பதில் பயனில்லையென்று அறிந்த கிழக்குப் போர் முனையிலுள்ள நாடுகள் மூழ்கிக்கொண்டிருக்கும் கப்பலிலுள்ள எலிகள் தப்பி ஓடுவதுபோல் நழுவி வருகிறார்கள். செம்படையும் பிரமாதமாக முன்னேறி வருகிறது.

வி வி வி வி வி

**மற்ற காரணங்கள்.** பிரான்ஸில் ஏற்பட்ட வெற்றிகள்தான் ஜெர்மனியின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணங்களென்றாலும் இன்னும் சில காரணங்களுண்டென்பதையும் நாம் மறக்கக்கூடாது.

1940-ம் வருஷத்தில் ஐரோப்பா பூராவையும் நாஸிமயமாக்கிவிடுவதென்று ஹிட்லர் எண்ணம் கொண்டிருந்தான். மற்ற எல்லா ஜாதியார்களையும் நிர்மூலமாக்கிவிடவேண்டும் அல்லது அடிமைகளாக்கிவிடவேண்டும். ஆத்மீக குணங்களையும், மனித அறிவையும் ஹெட்ரிக், ஹிம்லர், கோயபெல்ஸ் போன்றவர்கள் நடத்திவரவேண்டும். ஆகிலும் போர் முனையில் தோல்வியுற்ற ஐரோப்பாவின் உள்நாட்டு உணர்ச்சி அழிந்துவிடவில்லை. அது எப்பொழுதும் பொங்கிக்கொண்டிருந்தது. இப்பொழுது விடுதலைகாலம் சமீபித்துவிட்டதால் அவைகள் பகிரங்கமாகக் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்துவிட்டன. ருமேனியா விடுதலைப் போரைத் துவக்க முன்வந்துவிட்டது. பிரெஞ்சு உள்நாட்டுப் படைகள் பிரான்ஸின் விடுதலையைச் சம்பாதிக்க ஒத்தாசை செய்தார்கள்.

**பிழைத்திருக்கப் போர்.** ஜெர்மனியில் போர் மூண்டுவிட்டது. ஸயிலேசியாவும், சார்பிரக்கனும் பிடிபட்டன. ஜெர்மனியின் தற்போதைய நிலைமையை மாகினோ அரண் பிளக்கப்பட்டபின் பிரான்ஸ் இருந்த நிலைமைக்கு ஒப்பிடலாமென்று ஜெர்மன் வியாக்யானியான டிட்மார் சொல்லுகிறான். ஜெர்மனி உற்பத்தி செய்த ஆயுதங்களே அதை முறியடித்து விட்டனவென்று அவர் சொல்லுகிறார். கெடுவான் கேடு நினைப்பான் என்ற பழமொழி ருஜுவாகி விட்டது. ஜெர்மானியர்கள் அவிவேகிகளாகயிருந்தால் பிழைத்திருப்பதற்காகக் கடும் போரை நடத்துவார்களென்றுதான் தோன்றுகிறது. யுத்த நிலைமையை மதித்துப்பார்த்தால் இதுவும் நடைபெறாது. ஜெனரல் ஈசன் ஹவர் ஜெர்மனியிலுள்ள தொழிலாளர்களுக்கு விடுத்த அறிக்கையை பிரிடிஷ் ஒலிபரப்பு நிலையம் வெளியிட்டிருக்கிறது. அதன் வாசகம் பின்வருமாறு "நேசதேசத்தார் ஜெர்மனியை பலமாகத் தாக்கும் சமயம் வந்துவிட்டதால் ஜெர்மனியின் வெற்றியை துரிதப்படுத்தவும், உங்களைக் காப்பாற்றிக்கொள்ளவும் நீங்கள் நடவடிக்கைகளை ஆரம்பிக்க இதுதான் நல்ல தருணம். தொழிற்சாலைகளை விட்டுக்கிளம்பி நாட்டுப்புறங்களுக்குச் செல்லுங்கள். உங்களைத் துரத்திச் செல்ல நாஸிகளிடம் போதுமான மனித பலம் கிடையாது. உங்களுக்கும் ஜெர்மானியர்களுக்கும் தொடர்பு ஏற்படுத்தும் குயிஸ்லிங்குகளைப் பகிஷ்காரம் செய்யுங்கள்."

சக்திவேகத்தை நன்கு மதித்த ஸ்வீடனும் அர்ஜென்டைனும் யுத்தக் குற்றவாளிகளுக்கும், குயிஸ்லிங்குகளுக்கும் அடைக்கலம் தரமறுத்துவிட்டன. ஹிட்லரும், முஸோலினியும், லவாலும் எங்கு செல்லுவார்கள்.

வி வி வி வி வி

**பல்கேரியா.** இந்தச் சிறிய தேசத்தின் நிலைமை பரிதாபமாயும், பரிகசிக்கக்கூடியதாகவும் இருக்கிறது. ருஷ்யா, பல்கேரியாவை உதைத்துத் தள்ளும்பொழுது பல்கேரியா ருஷ்யாவை நேசிக்கிறது. 1941-ம் வருஷத்தில் ஜெர்மன் படைகள் ருஷ்யாவைத் தாக்கியபொழுது பல்கேரியா நடுநிலைமை வகிப்பதுபோல் பாசாங்கு செய்து ஜெர்மனிக்கு உதவியளித்துவந்தது. இப்பொழுதுங்கூட சமாதானத்தைக் கோரிக்கொண்டே அது ஜெர்மன் அகதிகளுக்கு ரகசியமாக ரக்ஷணையளித்து வருகிறது. தளகர்த்தர்களையும் கடன்கொடுத்துவருகிறது. ருஷ்யா, பல்கேரியாவுக்குள் பிரவேசித்து போரைத்துவக்கிவிட்டதால் பல்கேரியா சரணாகதிசெய்து ருஷ்யாவிடம் சமாதான ஷரத்துக்களைக் கோருகிறது. இது மிகவும் இழிவான நடவடிக்கை.

வி வி வி வி வி

**ஜெர்மன் கப்பல்களின் கதி.** பிரெஞ்சுக் கடற்கரையில் எஞ்சியிருக்கும் ஜெர்மன் கப்பல்களுக்கு மூன்றுவித அபாயங்கள் ஏற்பட்டுள்ளன. ஒரு பக்கத்தில் கடற்கரையை நோக்கி நேசதேசப்படைகள் முன்னேறுகின்றன. லாறாவெலிருந்து ஹாலந்து வரையிலும் பிரிடிஷ் யுத்தக் கப்பல்கள் அவைகளுக்குத் தொந்தரவளிக்கின்றன. விமானங்கள் இரவு பகலாக வெடிகுண்டுகளைப் போடுகின்றன. அவைகள் சாத்தியமானால் இராக்காலத்தில் பர்ஸியன் நிலைவச்சுற்றிச் சென்றுவிட உத்திரவு பெற்றிருக்கின்றன. ஆனால் அவைகள் துறைமுகத்தைவிட்டுப் புறப்பட்ட மாத்திரத்தில் பூனைகள் எலியைக் கவ்வுவதுபோல பிரிடிஷ் கப்பல்கள் அவைகளின் பேரில் பாய்ந்துவிடுகின்றன.

ஆல்டன் வளைகுடாவிலிருந்த 41,000 டன்கள் எடைமானமுள்ள ஜெர்மன் யுத்தகப்பல் இதுவரையில் ஆறு தடவைகள் தாக்கப்பட்டிருக்கிறது. கடைசியாக பிரிடிஷ் விமானந்தாங்கிக் கப்பல்களால் சென்ற விமானங்கள் கடுமையான நடவடிக்கையை மேற்கொண்டன. இதே கடைசித் தாக்குதலாக இருந்தாலும் இருக்கலாம்.

வி வி வி வி வி

**அடிமேல் அடி.** போலந்தின் எண்ணெய்ப் பிரதேசத்தை ஜெர்மனி இழந்தது ஒரு புறமிருக்க நார்வேயிலும் அநேக நாச வேலைகள் நடந்துவருகின்றனவென்று கேள்விப்படுகிறோம். சென்ற வாரத்தில் ஆஸ்லோ போர்டில் உள்ள எண்ணெய் ஸ்தபானங்களும், டிராம்பானிலுள்ள பெட்ரோல் கிடங்குகளும் நிர்மூலமாயின. ஆஸ்லோவிலிருந்து பொங்கிய எண்ணெய் பல கிராமங்களை அழித்தது. 3,50,000 காலன் எண்ணெய் நஷ்டமானதென்று சொல்லப்படுகிறது. ஜெர்மனி நார்வேயில் நிலை பெற்றிருப்பதற்கு துரிதமாகச் செல்லக்கூடிய போக்குவரத்து அவசியமாகும். எண்ணெய் அற்றுப்போய்விட்டால் நார்வேயில் ஜெர்மனியின் தற்காப்புகள் எளிதில் நொறுங்கிவிடும்.

வி வி வி வி வி

**இதாலியப் போர்முனை.** ஜெனரல் அலெக்ஸாண்டரின் படைகள் முன்னேறித்தாக்க ஆரம்பித்துவிட்டன. அவர் மறுமுறை எதிரியை ஏமாற்றிவிட்டார். எதிர் பார்த்ததற்கு மாறாக ஏராளமான படைகளை அட்ரியாடிக் பகுதிக்கு அனுப்பி அங்கு தாக்குதலைத் துவக்கினார். இங்கும் இந்தியப் படைகள்தான் போர்புரி



கின்றன. இதாலியில் நேசதேசப் படைகள் கோதிக் அரணைத்தாக்கும்பொழுதும் பிரான்ஸிலுள்ளப் படைகள் ஆல்ப்ஸ் மலைகளைத் தாக்கும்பொழுதும் பீட்மாண்ட், லம்பார்டி, லிகினியா முதலிய இடங்களிலுள்ள இதாலிய தேசாபிமானப் படைகளும், நகரவாசிகளும், கிராமவாசிகளும் கலகம் செய்ய ஆரம்பித்துப் போர்புரிய ஆரம்பித்திருக்கிறார்கள். கோபாவேசம் கொண்டு ஜெர்மானியர்கள் கிராமங்களையும் நகரங்களையும் தாக்கி அங்குள்ள பிணையாளிகளைக் கொலைசெய்து வருகிறார்கள்.

வி வி வி வி வி

**தூரக்கிழக்குப் போர்.** பருவகால அசௌகரியத்தை பொருட்படுத்தாமலும் நேசதேசப் படைகள் பர்மாவில் டிடிம் ரோடு வழியாக 100 மைல்கள் முன்னேறிவிட்டன. ஏராளமான ஜப்பானியப் படைகளை எதிர்த்து சீனப்படைகள் முன்னேறுகின்றன. யுத்தம் ஜப்பானை அணுகிவிட்டது. பார்மோஸா மறுபடியும் தாக்கப்பட்டது. பிலிப்பைன்ஸ் பேரிலும் வெடிகுண்டுகள் வீசப்பட்டன. ஜப்பானிய பிரமுகர் சொன்ன பிரகாரம் ஜப்பான் எதற்கும் தயாராக இருப்பதற்காக எல்லா ஜப்பானியர்களும் அடங்கிய தற்காப்புப் படையைத் தயாரித்துவிட்டது.

வி வி வி வி வி

**விசேஷ கௌரவம்.** ஆபிரிக்காவின் போர்வீரரும், டுனிஸியா வடக்கு பிரான்ஸ் தீரரும், எல் அலாமீன் முதல் கேன் வரை வரையில் எல்லாப் போர் முனைகளிலும் வெற்றி பெற்றவரும் 8-வது சேனையின் தலைவரும் பிரான்ஸில் படையெடுத்த சேனையின தலைவருமான ஜெனரல் மாண்ட் காமரி இப்பொழுது பீல்ட் மார்ஷல் பதவி அளிக்கப்பட்டிருக்கிறார். ஜெர்மனியிலிருப்பதுபோல பிரிடிஷ் சேனையில் பீல்ட் மார்ஷல் பதவி பெற்றவர்கள் அநேகர் இருக்கவில்லை. பிரிடனில் இந்த கௌரவம் குறிப்பிட்டவர்களுக்குத்தான் அளிக்கப்படுகிறது. இது வரையில் போர்முனையிலிருப்பவர்களுக்கு அவர்கள் சாம்ராஜ்யத்தின் நிர்வாக இலாகாத் தலைவர் பதவியை ஏற்றுக்கொள்ளும் வரையில் இந்த கௌரவம் வழங்கப்படவில்லை. 57-வயதுள்ள மாண்ட் காமரிக்கு இந்த கௌரவம் வழங்கப்பட்டது பாராட்டத்தக்கது.

## ருமேனியா.

சுதேச ஆட்சியை நெடுநாள் கொண்டிராததும், சிக்கலினின்றும் விடுபட்ட போர்வேதுமான ருமேனியா, தென்கிழக்கு ஐரோப்பாவில் உள்ள சிறிய ஸமஸ்தானங்களில் ஒன்றாகும். 1919-ம் வருஷம் செய்த சமாதான ஏற்பாட்டின்படி வாலக்கியா, மால்டாவியா ஆகிய இப்பிரதேசங்களைக்கொண்டிருந்த ருமேனியாவுடன் புகோவினா, டொப்ருஜா, பெஸ்ஸாரபியா, டிரான்ஸில்வேனியா ஆகிய இவைகளும் சேர்ந்து "பெரிய ருமேனியா" வாக ஆகிறது.

கிழக்கு கார்பேதிய மலையின் தென் பகுதியையும், டான்யூப் வரையிலும் உள்ள சமவெளியையும் கொண்டது. விலாக்கியா கிழக்கு பகுதியையும், கிழக்கு நோக்கி பிரத் வரையுள்ள அதைச் சேர்ந்த சமவெளியையும் கொண்டது. மால்டாவியா (Maldavia) புகோவினா போலீஷ் எல்லையைச் சேர்க்கும் மால்டாவியாவின் வட பரப்பைச் சேர்ந்ததாகும். நீஸ்டர் சமவெளி வழியாய் கிழக்குப் பாகத்தில் பரந்துள்ளது பெஸ்ஸாரபியா; டான்யூபிற்குக் கிழக்கிலுள்ள டொப்ருஜா, வட முகத்தில் கருங்கடலின் ருமேனியக் கடற்கரையைக் கொண்டது. டிரான்ஸில்வேனியா கார்பேதிய மத்திய பீடபூமியையும், மேற்குப் பகுதிகளையும் கொண்டது.

வலாக்கியா, மால்டாவியா இப்பிரதேசங்களுக்குச் செல்லும் பிரயாணி இந்த மாகாணங்களில் கிராமாந்திர வாழ்க்கையையும், பால்கனிய முறைகளையும் காணலாம். மணற்பாதைகளைக்கொண்ட அதே கரடுமுரடான பாதைகளும், பச்சைவெட்டுக் கற்களாலான குடில்களும் கொண்டது. ஆனாலும் இதர பால்கன் பிரதேசங்களைவிட இங்குள்ள குடில்கள் வர்ணம் தீட்டப்பட்டு அலங்கரிக்கப்பட்டுள்ளது. கைத்தறிகளில் நெய்யப்பட்ட உடைகளைக் கொண்டும், இதர பால்கன் நாடுகளில் இருப்பதைவிட பகட்டானதும் லேசானதுமான உடைகளைக்கொண்டும், மரக்கட்டையாலான ஏர்களை பழைய குடும்ப வாழ்க்கையுமே கொண்டுள்ளது.

வலாக்கியாவின் நிலத்தோற்றம் மலைப்பாங்கான பால்கன் நாடுகளின் தோற்றத்தினின்றும் மாறுபட்டுள்ளது. பெரிதானதும் கோடை காலங்களில் கோதுமை கதிர் பிடித்து தளிர்ந்து காற்றில் அசைவதுமான பலபெரிய சமவெளிகளைக்கொண்டது. கார்பேதிய சமவெளிகளில், பால்கன் நாடுகளில் காணமுடியாத அத்தகைய எண்ணெய்க் கிணறுகளைக் காணலாம். அவைகளில் புலோயெஸ்டி சிறந்ததாகும். இவைகளால் ருமேனியா செல்வமுடையதாய் அருகிலுள்ள நாடுகளைவிட ராணுவ முக்யத்துவமுள்ள இலக்காய் நிற்கின்றது.

முடிவாய் இதன் தலைநகரான புகாரெஸ்ட் இந்நாட்டில் வாழ்வோர்களால் கிழக்கு பாரிஸ் என்று சொல்லப்பட்டு, இதர பால்கன் நாடுகளின் தலைநகர் எதும் அடைந்திராத அந்நிலையில் மேல் நாட்டைப்போல் நாகரீகம் அடைந்துள்ளது.

மலைகள் நிறைந்த டொப்ருஜா பால்கன் நாடுகள் போன்றதே. அங்குள்ள மேடுபள்ளங்கள் சின்னாட்களுக்கு முன் தான் நிரவப்பட்டது. சின்னாட்கள் முன்வரை, துருக்கியர்களும் டார்டார்களும் தங்கள் ஆடுமாடுகளை இங்கு தான் மேய்த்து வந்தனர். ஊர் ஊராய் செல்லும் ஜாதியினர்கள் இங்கு யாதொரு தடங்கலின்றி சென்றிருக்கின்றனர்.

பெஸ்ஸராபியாவில், திரண்ட சிகரங்களையுடைய மாதாகோவில்களும், கெட்டியாய் கட்டப்பட்ட குடிசைகளும், விவசாயிகளின் சாவகாச வாழ்க்கையுமான, ருஷ்ய, உக்ரேனிய பழக்கவழக்கங்கள் காணப்படுகிறது.

புகோவினாவில் ஆஸ்திரிய காட்சியின் சின்னங்களைக் காணலாம். இதன் தலைநகரான செர்நாடியிலும் இன்னும் சில கிராமங்களும், நல்ல வீடுகளும், சுத்தமான பண்ணைகளும், வியென்னாவில் கிளை ஸ்தாபனங்களும் உள. டிரான்ஸில்வேனியாவில் கார்பேதிய மலைகளில் வெளிப்பகுதியினின்றும் சில மாறுபாடுகள் மலைப்பாங்கான கிராமங்களில் உள. இருப்பினும் சில ஹங்கேரிய பிரபுக்களின் அரண்மனைகளும் காணப்படுகின்றன. ருமேனிய சரித்திரத்தில் 1914—18-ம் வருஷ யுத்தம் மிகவும் முக்கியமானது. ருமேனியா நேசதேசத்தினரின் உதவியால், சமாதான ஏற்பாட்டின் பின் இரட்டிப்பான நிலப்பரப்புடனும் ஜனத்தொகையுடன் பெரும் நாடாய் வெளிவந்தது. இந்த யுத்தம் ஆரம்பமாகும் வரையில் இதே நிலையில் இருக்கும் விருப்புடன் இருந்தது.

1938-ம் வருஷம் ருமேனிய அரசரான கரோல் ஒரு புது அரசியலை உண்டு பண்ணி தன் அதிகாரங்களின்படி நடத்தினான். அதனால் ஜனநாயகம் மறைந்து சர்வாதிகார ஆட்சி நடக்க ஆரம்பித்தது. அவரது வாழ்க்கை ரகசியங்களும், யூதப் பெண்ணான மாக்டா லூபெஸ்குவிடம் அவருக்குள்ள உறவும் அவர்பால் ஜனங்களிடம் வெறுப்பு உண்டாக்கியது. 1940-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் 6-ந் தேதி அவர் முடிதுறந்து நாடுவிட்டுச் சென்றார். அவர் மைந்தன் மைக்கேல் பட்டத்திற்கு வந்தார். ஐயோன் அன்டொனெஸ்கு என்பவர் கரோலால் பதவிக்கு கொண்டுவரப்பட்டு ருமேனியாவின் சர்வாதிகாரியாயினர்.

அன்டோனெஸ்குவின் பதவியேற்றத்திற்குப்பின் 1933 முதல் ஜெர்மானிய அமுல் அதிகப்பட்டது. ஆட்சிகளின் குறைவு ஏற்படாதிருக்கவும் கிரீஸ், யூகோஸ்லாவியா போல் ஜெர்மனியைப்போரிடத்தயாராயில்லாமல் ருமேனியா ஜெர்மானியருடன் சேர்ந்து 1941-ம் வருஷம் ஜூன் மாதம் யுத்தத்தில் ஈடுபட்டது.

---

## ஈசன்ஹவரின் விடுதலை நோக்கு.

(லுக் என்னும் பத்திரிகையிலுள்ள கட்டுரையின் சுருக்கம்.)

நேசதேச விடுதலைப் படைகளின் உயர்தர சேனாதிபதியான ஜெனரல் ட்வைட் E. ஈசன்ஹவர் நேசதேசப் பொதுமக்களுக்கும், போர்முனையிலுள்ள மிலியன் கணக்கானவர்களுக்கும் ஜவாப்புச் சொல்லவேண்டும். அவருடைய முடிவுகளும், உத்திரவுகளும் ஹிட்லரின் வீழ்ச்சியை இழைக்கும்.

ஆனால் இந்த தத்துவங்களை ஈசன்ஹவர் சிறந்த நம்பிக்கையுடன் நிர்வகித்து வருகிறார். தரை, கடல், விமானப்படைகளுக்குத் தலைமை வகிப்பதிலுள்ள சிரமங்களை அவரைப்போல் மற்றவர்களறியமாட்டார்கள்.

அவருடைய வியூகம் பின்வருமாறு. நுட்பமான எல்லா சாதனங்களையும் தயார் செய்துகொண்டு பின்பு பலமாகத் தாக்கவேண்டும்.

மேலும் அவருக்கு உதவ பிரிட்டனிலும் அமெரிக்காவிலுமுள்ள உயர்தரமான ராணுவ நிபுணர்கள் முயன்றிருக்கிறார்கள். இரு தேசங்களிலிருந்து கூடியுள்ள படைகளை ஒன்று சேர்த்துத் திறம்படப்போர் செய்யும்படி செய்துவிடும் சக்தியுள்ளவரென்று அவர் ருஜுச் செய்திருக்கிறார்.

### ஸர் ஆர்தர் W. டெட்டர்.

அவருக்கு அடுத்தபடியாக டெட்டர் என்பவர் அதிகாரம் வகிக்கிறார். இதுவரையில் இவ்வளவு உயர்வான பதவி எந்த நேசதேச விமானப்படை அதிகாரிக்கும் அளிக்கப்பட்டதில்லை. அவருடைய நியமனத்திலிருந்து விமானப் படைக்கு யுத்தத்தில் எவ்வளவு கௌரவம் பாராட்டப்படுகிறதென்பது விளங்கும். மேலும் நேசதேசப்படை கோஷ்டியில் கஷ்டப்பட்டு வேலை செய்யக்கூடியவரும் திறமையுமுள்ளவருமான ஒருவரை கௌரவத்திருக்கிறார்கள்.



சிறிய உருவமுள்ளவர், மெல்லிய குரலுள்ளவர், தோற்றத்தில் விகாரமான ரூபமுள்ளவர் போல் தோன்றக்கூடியவர். ஸ்காட்லாந்திலுண்டான டெட்டர் வடக்கு பிரதேசத்தினருக்குள்ள முறுக்கான உல்லாசப் பேச்சும், சகிப்புத் தன்மையும் உள்ளவர். 1890-ம் வருஷத்தில் பிரபுவின் குடும்பத்தில் பிறந்தவர். 1912-ல் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் பட்டம் பெற்றார். பிறகு சிறிது காலம் ரக்பி விளையாட்டில் ஈடுபட்டிருந்தார். 1916-ம் வருஷத்தில் அவர் பிரிடிஷ் விமானப் படையில் சேர்ந்துகொண்டார். அதின் பின் விமானப் படையிடம் அவருக்கு விசுவாசம் குறையவே இல்லை.

முதல் உலக யுத்தத்தில் அவருடைய சேவை பிரான்ஸிலும் எகிப்திலும் ஏற்பட்டது. அதன் பின் அவர் பிரிடிஷ் விமானப்படையில் சேர்ந்து படிப்படியாகப் பெரிய பதவியை அடைந்து 1928-ம் வருஷத்தில் விமானப் பயிற்சி கலாசாலையில் டிரக்டராக வேலை பார்த்தார். 10 வருடங்களுக்குப்பின் அவர் விமான இலாகா ஆராய்ச்சி, அபிவிருத்தி ஸ்தாபனத்தில் டிரெக்டர் ஜெனராலாக நியமிக்கப்பட்டார். இன்று விமானப்படை சீப் மார்ஷல் பதவியை ஒரு சிலர் தான் வகித்து வருகிறார்கள்.

1941-ம் வருஷத்தில் கிரீட் விழுந்த பின் மத்தியதரைக்கடலில் பிரிட்டனின் நிலமைக்கு அபாயம் ஏற்பட்டபொழுது டெட்டர் மத்திய கிழக்கு பிரதேசத்தில் விமானப்படைத் தலைவராக நியமிக்கப்பட்டார். சில மாதங்களுக்குள் அவர் படைகளைத் திருத்தியமைத்து புத்துயிர் அளித்தார். கிழக்கு மத்தியதரைக்கடல் பிரதேசத்தில் நேசதேச விமானப் படைக்கு ஆதிக்கம் ஏற்பட்டது. ஒரு வருடத்திற்குப் பின் ரோமலை முறியடித்த எட்டாவது சேனைக்கு அவருடைய விமானப்படை பேருதவி செய்தது.

சென்ற வருடத்தில் அவர் ஈசன்ஹவரின் தலைமைக்குட்பட்டு மத்தியதரைக்கடல் போர் பிராந்தியத்தில் நேசதேச விமான நடவடிக்கையைத் துவக்கினார். தரைப் படைகளுடன் விமானப்படை ஒத்துழைத்ததன் காரணமாக நேசதேசத்தாரின் முன்னேற்றத்தை ஜெர்மன் விமானப்படை தடுத்துவிடாதபடி செய்யப்பட்டது.

விமானப்படையில் டெட்டர் புகழ் பெற்றபோதிலும், அவருக்குச் சில கஷ்டங்களும் நேர்ந்தன. இங்கிலாந்தில் வந்த ஜெர்மன் விமானங்களை எதிர்த்துப் போராடிய நடவடிக்கையில் அவருடைய மூத்த குமாரன் கொல்லப்பட்டார். அவருடைய மனைவி எகிப்தில் விமானம் நொருங்கியதன் காரணமாக சென்ற வருஷத்தில் இறந்தார். ஆகிலும் இந்த துக்கங்களை அவர் பாராட்டுகிறதில்லை. இன்று அவர் உலகத்தின் மகத்தான சேவையில்தான் கவனம் செலுத்தி வருகிறார்.

### ஸர் பெர்ட்ராம் H. ராம்ஸே.

1940-ம் வருஷம் மே மாதத்தில் ஹிட்லரின் முன்னேறும் பான்ஸர் படைகள் வடக்கு பிரான்ஸுக்குள் முன்னேறி பிரிடிஷ் படைகளை டன்கர்க் கடற்கரைக்கருகில் வளைத்துக் கொண்டன. சரணடைவதா அல்லது நிர்மூலமாவதா என்னும் நிலமை ஏற்பட்டது. எவ்விதமாகவோ, அநாமதேயமான ஒரு கடற்படை பிரிட்டனிலுள்ள துறைமுகங்களிலிருந்தும், வளைகுடாக்களிலிருந்தும் இங்லீஷ் கால்வாயைத் தாண்டிச் சென்றது. சில நாட்களுக்குள் 3,35,000 சோர்வடைந்த ஸோல்ஜர்கள் அபாயத்திலிருந்து விலகிக்கொண்டார்கள்.

இந்த நடவடிக்கைக்கு ஒருவர் ஜவாப்தாரி. அவர்தான் தலையில் வழும்பலும், நீண்ட மூக்கும் உதவிக் கடற்தளபதி உத்தியோகம் வகித்து இரண்டு வருடங்களுக்குமுன் வேலையிலிருந்து விலகியவர். பிரிடிஷ் கடற்படையில் அனுபவம் வாய்ந்தவர்களின் குறைவினால் திடீரென்று அவர் மறுபடியும் வேலைக்கு அழைக்கப்பட்டார். டன்கர்க் மீட்சியிலிருந்து அவருக்கு டைனமோ என்ற காரணப்பெயர் கிடைத்தது. டன்கர்க்கிலிருந்து வாபஸ் பெறப்பட்ட படைகளைவிட மிகவும் பெரிய சேனையை மறுபடி போர் செய்ய மேற்கு ஐரோப்பாவுக்குக் கொண்டுபோகும் பொறுப்பு அவருக்கு ஏற்பட்டது.

தீர்க்கதரிசியும், பழைய அனுபவங்களின் படிப்பினையை பயன்படுத்தும் இந்த அனுபவ காரமுள்ள மேதாவி பிரிடிஷ் கடற்படையின் சிறந்த ஐதீகங்களைக் காப்பாற்றி வருகிறார். அனுபவம் அவசியமென்று தோன்றக்கூடிய விஷயங்களில் அவருக்குத் தகுந்த யோக்கியதாம்சமிருக்கிறது. ஏனெனில் அவர் வாலியப் பருவம் பூராவும் மாலுமியாக இருந்திருக்கிறார்.

அவர் கடற்படையில் சேவை செய்ய 15 வயதில் சென்றார். அதாவது 1898-ம் வருஷத்தில் முதல் உலக யுத்தத்தில் இங்கிலீஷ் கால்வாயில் ரோந்து செய்துவந்த கப்பல்களுக்கு அவர் கமாண்டராக இருந்தார். அதன் பின் அவர் பெரிய கப்பல்களில் வேலை பார்த்தார். சைனா ஸ்டேஷனிலும், பிரிடிஷ் கடற்படை யுத்தக் கலாசாலையில் ஆசிரியராகவும் வேலை பார்த்தார். அவர் உத்தியோகத்திலிருந்து விலகியபொழுது அவர் கடலிலும் தரையிலும் 40 வருடங்களாக வேலை பார்த்திருந்தார்.

கடைசி இரண்டு வருஷங்களில் அவருக்கு அதிகப் புகழ் உண்டாகிவிட்டது. 1912-ம் வருஷத்தில் வடக்கு ஆபிரிக்காவில் நேசதேசப்படைகளை இறக்குவதற்கு அவர் திட்டங்களைப் போட்டார். அதன்பின் துணைக்காவல் கப்பல்களுக்குத் தலைமை வகித்தார். 1943-ம் வருஷத்தில் ஸிஸிலிய, இதாலியப் படையெடுப்பு ஏற்பட்டபொழுதும் கடற்படைப் பகுதிகளுக்கு அவர் தலைமை வகித்தார்.

### ஸர் டிராப்போர்ட் L. லே-மாலோரி.

30 வருஷங்களுக்குமுன் அவர் சட்ட சம்பந்தமான படிப்பை நிறுத்திவிட்டு பிரிடனின் குழந்தைப் பருவமுள்ள விமானப்படையில் சேர்ந்து கொண்டார். அவரை நியாயவாதியென்று நாம் இன்னும் அழைக்கக் கூடுமானாலும் அவர் வாழ் நாள் முழுவதும் ஆகாயப்படையில் கழிக்கப்பட்டிருக்கிறது.

லே மாலோரி அளவுகடந்த துணிவுள்ள விமானியல்ல. ஆகாயப் போரில் அமைதியும் ஆலோசனையும் சிறந்த முன் ஜாக்கிரதையுள்ள திட்டமும் காணக்கூடும். தரைப்படைகளுடன் விமானப்படை ஒத்துழைத்தால் சிறந்த பயனேற்படுமென்பது அவருடைய அபிப்பிராயம். 1942-ம் வருஷ வேனிற் காலத்தில் நேசதேசப்படைகள் டிப்பியைத் தாக்கியபொழுது அவரிடமுள்ள விமானிகள் எல்லாத் தகவல்களையும் முன் கூட்டியே அறிந்து தரைப்படைகளுக்கு ரக்ஷணை அளித்தார்கள். இந்தத் தாக்குதல் முற்றிலும் வெற்றிகரமாக முடியாவிட்டாலும், லே மாலோரியின் சண்டை விமானப்படைகள் ஏராளமாகக் குவிந்துவந்த ஜெர்மன் விமானங்களை சமாளித்துப் போராடின.

விமானப்படை சீப் மார்ஷல் பதவி கிடைப்பது துர்லபம் என்று லே மாலோரி கண்டு கொண்டார். பாதிரியின் புதல்வனாக ஜனித்து அவர் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் கல்வி கற்று வந்தார். முதல் உலக யுத்த ஆரம்பத்தில் அவர் சேனையில் சேர்ந்து D. S. O. பட்டம் பெற்றார். அதன் பின் அநேக வருடங்கள் வரையில் அவர் அநேக ராணுவப் பள்ளிக்கூடங்களில் ஆசிரியராக இருந்தார். ஈராக்கில் சிறிது காலம் விமானப்படை ஆபீஸராக வேலை பார்த்தார். 1937-ம் வருஷம் முதல் 1942-ம் வருஷம் வரையில் அவர் பிரிடிஷ் சண்டை விமானப்படைகளின் தலைவராக இருந்தார். ஹிட்லரின் தாக்குதலுக்குப்பின் போலந்து வீழ்ச்சி பெற்றபொழுது பிரிடனிலுள்ள போலிஷ் விமானப் படையைத் திருத்தியமைத்து எதிரியைத் தாக்கத் தயார் செய்தார்.

விமானப்படைத் தலைவரின் கையெழுத்து மனிதனின் உயர்வை விளக்குகிறது. அவைகள் குறிப்பாகவும், சுத்தமாகவும் அவருடைய தத்துவத்தை பிரகடனம் செய்யும்படியாகவுமிருக்கின்றன. ஆகிலும் அவருடைய அமைதியான தோற்றத்தின் எண்ணத்தில் கற்பனா சக்தி மிகுதியாக இருக்கிறது. "பலமாகத் தாக்குங்கள்" என்று அவர் அடிக்கடி சொல்லுவார். அவருடைய மனோபாவத்திற்கு ஒரு காரணம் உண்டு. அவருடைய சகோதரர் சில வருஷங்களுக்குமுன் எவரெஸ்ட் பருவதத்தை அடையத் துணிகரமாகச் செய்த முயற்சியில் உயிர் துறந்தார். அந்தக் குடும்பத்தாரின் துணிகரமான மனப்பான்மை காணப்படுகிறது.

55-வது வயதில்கூட லே மாலோரி மிகவும் கடுமையான நடவடிக்கைகளைக் கையாள வேண்டியிருக்கிறது. ஹிட்லரின் வலிமைக்கு ஆதாரமானவைகளை நொருக்க அவர் நேசதேச வெடிவிமானங்களுக்கு உத்திரவிடவேண்டும். ஆகாயத்தில் ஜெர்மன் விமானப்படை தலை காட்டாமலும், நேசதேச சண்டை விமானங்களை ஏவி விடவேண்டும்.

### ஸர் ஆர்தர் T. ஹாரிஸ்.

வெடிகுண்டுகள்தான் யுத்தத்தில் வெற்றியளிக்குமென்று ஹாரிஸ் நிச்சயமாக நம்புகிறார்.

பிரிடிஷ் பாம்பர் படைக்குத் தலைமை வகிக்கும் பதவியை 1942-ம் வருஷம் மார்ச் மாதத்தில் ஏற்றது முதல் அவருடைய கொள்கையை விமானப்படை சீப் மார்ஷல் ஹாரிஸ் பரிசை செய்து வருகிறார். அது முதல் ஸ்தம்பிக்கச் செய்யும் விமானத்தாக்குதல் நடைபெறவேண்டுமென்று அவர் சொல்லி வருகிறார். அதாவது ஒரு குறிப்பிட்ட நகரத்தை ஏராளமான வெடிவிமானங்கள் எல்லா திசைகளிலிருந்தும் ஒன்றுபட்டு, பலமாகவும், துரிதமாகவும் தாக்கவேண்டும். இவ்விதமாக 50 ஜெர்மன் நகரங்களை அழித்துவிட்டால் ஹிட்லர் போரை நடத்தும் சக்தியை இழந்துவிடுவான்.

ஸ்தம்பிக்கச் செய்யும் தாக்குதல்கள் கொலோனை 1,000 விமானங்கள் தாக்கியபொழுது துவக்கமாயிற்று. அதன் பின் எஸ்ஸன், ஹாம்பர்க், மற்ற நகரங்கள் தாக்கப்பட்டன.

யுத்தத்தைப் பற்றிய அவருடைய அபிப்பிராயமும் அவருடைய தன்மையை விளக்கிக் காட்டுகிறது. கடுமையாகப் பேசக்கூடியவர். சூக்ஷ்ம புத்தியுள்ளவர். அவரை விமானப் படையில் உள்ளவர்களில் முரடர் என்று ஒரு சமயம் சொன்னார்கள். அவர் வழவழப்பாகப் பேசுவதில்லை. விஷயத்தைக் குறிப்பாகச் சொல்லிவிடுவார். நேசதேச வெடிவிமானங்கள்



ஜெர்மனியிலுள்ள தொழிற்சாலை இலக்ஷியங்களைத்தான் முக்கியமாகத் தாக்கும் என்று
சொல்லும்பொழுது அவைகளுக்கு சமீபத்திலுள்ள தொழிலாளர்களுக்கும் அபாயம்
ஏற்படுமென்று அவர் ஸ்பஷ்டமாகச் சொல்லிவிட்டார். அவருக்குட்பட்ட கீழ்தர உத்தி
யோகஸ்தர் பின்வருமாறு சொல்லுகிறார். "நாங்கள் அவரை நேசிக்கிறோம். அவர் மானிட
வர்க்கத்தினிடம் தயையற்றவர்."

ஹாரிஸ் 1892-ல் பிறந்தவர். முதல் உலக யுத்தத்தில் அவர் பிரிடிஷ் விமானப்
படையில் சேர்ந்து வேலை செய்தார். அதன் பின் அவர் ஈராக்கிலும் மத்திய கிழக்கிலும்
நடவடிக்கைகளில் ஈடுபட்டார். 1933-ம் வருஷத்தில் அவர் ஆகாயப்படை இலாகாவில்
பதவி ஏற்றார்.

### ஓமார் N. பிராட்லி.

1915-ல் உயரமான, கெச்சலான சரீரமுள்ள மிஸ்ஸூரியைச் சேர்ந்த வாலிபர் வெஸ்ட்
பாயிண்ட் கல்லூரியில் பட்டம் பெற்றார். அவர் நல்லொழுக்கமுள்ளவர், கீர்த்திபெற்ற
திடசாலி. அவருடைய வகுப்புப் புத்தகத்தில் அவர் சேனைக்குச் செல்லுகிறார் என்ற
குறிப்பும் காணப்படுகிறது.

பிராட்லியன் ராணுவ வாழ்க்கை பகட்டானதல்ல. சாதாரணமான காலாட்படை
யாளாகச் சேர்ந்து சாவதானமாகவும் அதிக பிரயாசையின் பேரிலும் அவர் முன்னேற்ற
மடைந்தார். 1915-ம் வருஷம் முதல் 1942-ம் வருஷம் வரையில் அவர் 33 தடவை அயல்
நாடுகளுக்குச் சென்றிருக்கிறார். ஆகிலும் ஒரு தடவையிலும் அவர் ஹாவாயைத் தாண்டிச்
செல்லவில்லை. 1941-ம் வருஷத்தில் 48-வது வயதில் அவர் பிரிகேடியர் ஜெனரலாக
நியமிக்கப்பட்டார்.

காலக்கிரமத்தில் பிராட்லி தரைப் போரைப்பற்றியும், காலாட்படையின் யுத்த தந்திரங்
களைப் பற்றியும் அநேக விஷயங்களை அறிந்துகொண்டார். இந்த ஆராய்ச்சியுடன் அவரிடம்
மிகுந்த ஆத்ம சக்தியுமிருந்து வருகிறது.

மற்ற ருசிகரமான விஷயங்களிலும் அவர் நிபுணர்.
சிறந்த யுத்த தந்திரி என்பதுடன் மற்ற ருசிகரமான விஷயங்களிலும் அவர் நிபுணர்.
சீட்டாட்டம், கால்ப், வேட்டை, மீன் பிடிப்பது போன்ற பொழுதுபோக்குகளில் அவருக்கு
ஆசை உண்டு. அவர் அநேக புத்தகங்களைப் படித்திருக்கிறார். ஒவ்வொரு வருஷமும் அவர்
"ஐவன்ஹோ" என்னும் கதைப் புத்தகத்தைப் படிக்கத் தவறமாட்டார்.

பெரிய சம்சாரியான அவர் பிறந்த தினங்களைக் கொண்டாடுகிறார். ஈஸ்டர் தினத்
தன்றும், அன்னை தினத்தன்றும் அவர் புஷ்பங்களை அனுப்புவார். அவருடைய படைகளைப்
போல அவருடைய மனைவியும், மகனும் அவரைப் போற்றுகிறார்கள். ஹிட்லரை முறியடிக்
கும் வரையில் அவர் கருமத்தில் கண்ணுள்ளவராகயிருப்பார். 51 வயதுள்ள இந்த
ஜெனரலுக்குப் படைகளை நேராக பெர்லினுக்குக் கொண்டு போகவேண்டுமென்ற எண்ணம்
இருந்துவருகிறது. அங்கே செல்லவும் அவர் ஊக்கம் கொண்டிருக்கிறார்.

### ஸர் பெர்னுட் L. மான்ட் காமரி.

ஸோல்ஜர் தொழிலுள்ளவர், மிருகங்களின் தொகுதிக்கு புரோப்ரைடர், கற்கசர்,
மந்திரியின் குமாரரான எல் அலாமீனின் மாண்டி ரோமலை தந்திரத்தினால் வென்று பிரிடிஷ்
8-வது படையை எகிப்திலிருந்து 1,400 மைல்கள் நடத்தி இதாலிக்கு அழைத்துச் சென்றார்.
இந்த நடவடிக்கை மட்டும் அவருக்கு கௌரவமளிக்கக்கூடும். ஆனால் அவர் எடுத்துக்
கொண்ட காரியம் முடிவடையவில்லை.

மாண்டி கலப்பான குணங்களுள்ளவர். அவருக்காக மனிதர்கள் உயிரை விடத்தயாராக
இருக்கிறார்கள். தனிப்பட்டவர்கள் அவரை வெறுக்கிறார்கள். எல்லவகையிலும் அவர் யுத்தத்
துக்காக ஜீவித்திருப்பதாக நினைத்திருக்கிறார்கள். உறுதியுள்ளவர், சந்நியாசி போன்றவர்,
சொந்த சுகபோகங்களைவிட தன்னுடைய வேலையில் அதிக கவனம் செலுத்துகிறவர். அவ
ரிடமுள்ள படைகளும் அவரைப் பின்பற்றவேண்டுமென்று அவர் பிரியப்படுகிறார். இந்த
குணங்களை அவர்கள் பாராட்டுகிறார்கள். ஆகிலும் நிருபர்கள் அவரைப் பார்க்கும்பொழுது
அவர் அகம்பாவமுள்ளவர்போலவும், தற்புகழ்ச்சி உள்ளவர் போலவும் தோன்றுகிறார். ஆகிலும்
அவருடைய சாதாரண ஆசையும் விநோதமான குல்லாயும் மான்ட்காமரியின் அந்தஸ்தைக்
குறிக்கக்கூடியதாகயில்லையென்றும் ஆனால் அவருடைய சௌக்கியத்துக்கு ஒத்ததென்றும்
அவர்கள் அறிவார்கள்.

இப்பொழுது அவருக்கு 56 வயதாகுகிறது. 21 வயதில் அவர் ஸோல்ஜரானார்.
முதல் உலக யுத்தத்தில் D. S. O. பட்டம் பெற்றார். அதன் பின் ரைன் நதி, அயர்லாந்து,
பாலஸ்தீனம் முதலிய இடங்களில் சேவை செய்தார். நாஸிகளின் மின்னல் எதிர்ப்புக்கு
முன் பிரான்ஸில் படைத்தலைவராகயிருந்தார். டங்கர்க் நடவடிக்கையில் கலந்து கொண்
டார். 1941-ம் வருஷத்தில் ஜெர்மன் படையெடுப்புக்காகத் தயாரிக்கப்பட்ட படைகளின்

தலைவரானார். இந்த காலத்தில் ஸோல்ஜர் முதல் பிரிகேடியர் வரைக்குமுள்ள அனைவரும் ஒவ்வொரு வாரத்திலும் ஏழு மைல்கள் ஓடவேண்டுமென்று கட்டளையிட்டார். 1942-ம் வருஷம் ஆகஸ்ட் மாதத்தில் எட்டாவது சேனையின் தலைவராக அவர் நியமிக்கப்பட்டார்.

பெண்சாதியை இழந்தவர், ஆழ்ந்த மதாபிமானி, பைபிள், யுத்த தந்திரம் முதலிய புத்தகங்களைப் படிப்பவர். மாண்ட் காமரி ஆலிவர் கிராம்வெலைப் பாராட்டி அவரைப் பின்பற்றுகிறவர். அவர் சாராயம் குடிப்பதில்லை. சுருட்டுப் பிடிப்பதில்லை. தன்னம்பிக்கை உள்ளவர். அவரை அவருடைய துருப்புகளும் பின்பற்றுகின்றன. அவருடைய ராணுவ தந்திரம் மிகவும் சிலாக்கியமானது.

### கார்ல் ஏ. ஸ்பாட்ஸ்.

இவருடைய ஆகாயப்படை கீர்த்தி 1915-ல் ஆரம்பமாகும். வெஸ்ட்பாயிண்டிலிருந்து வெளிவந்த ஒரு வருஷத்திற்குப்பின் ஸான்டீகோவிலுள்ள விமானப்படை பயிற்சி பள்ளிக்கூடத்தில் விமானத்தில் செல்லப் பயிற்சி பெற்றார். இரண்டு வருஷங்களுக்குப்பின் அவர் படைகளுடன் பிரான்ஸுக்குச் சென்றார். 1918-ம் வருஷம் செப்டம்பர் மாதம் வரையில் அவர் ஒரு நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. அதன் பின் விமானப்போரில் தீரத்துக்காக D. S. O. பட்டம் பெற்றார்.

சமாதான காலத்திலும் விமானத்தில் பறந்து செல்லுவது ஸ்பாட்ஸுக்கு ஜீவனாடி போலிருந்தது. 1929-ம் வருஷத்தில் மேஜராக இருந்த ஸ்பாட்ஸுக்கும் இராயேகருக்கும் "Question மார்க்" என்ற விமானத்தை 150 மணி நேரம் ஓட்டியதற்காக D. F. C. பதக்கம் வழங்கப்பட்டது. 1939-ம் வருஷத்தில் விமானப்படைத் தலைவரான ஹாப் ஆர்னால்டுக்கு உதவி நிர்வாகியாக அவர் வாஷிங்டனில் நியமிக்கப்பட்டார்.

ஆபீஸ் வேலையைவிட அவருக்கு விமானத்தில் செல்லுவதுதான் பிரியமானது. வெகுளி, ஸ்நேகபாவமுள்ளவர், ஆடம்பரமற்றவர், எல்லாப் பிரச்னைகளையும் அவர் நேர்முகமாக கவனித்து வருவார். விமானிகள் தாக்குதலுக்குச் செல்லும்பொழுது அவர்களைப்பற்றி அவர் கவலைப்படுவார். ஏராளமாக காபி குடிப்பார். சிகரெட்டுகளை ஊதுவார். பிறகு ஆச்வாசமடைவார். ஆகிலும் அவர் லக்ஷியத்தை மறந்து விடுவதில்லை.

### ஜேம்ஸ் H. டுலிட்டில்.

டோக்கியோவை முதல் முதலில் தாக்கியபின் அவர் கீர்த்தி ஓங்கிவிட்டது. 1942-ம் வருஷத்துக்கு முன்னும் ஜிம்மி டூலிட்டில் ஒரு சிறந்த விமானியென்றும், விமான எஞ்ஜினியரென்றும் பெயர் பெற்றவர். அவருடைய சரிதை புராணத்துக்குறியது.

1896-ல் அவர் காலிபோர்னியாவில் பிறந்தார். அவருடைய தகப்பனார் அவரை மூன்றும் வயதில் அலாஸ்காவுக்கு அழைத்துச் சென்றார். அங்கே நோமிள் பள்ளிக்கூடத்தில் சேர்ந்தார். முதல் உலக யுத்த ஆரம்பத்தில் அவர் காலிபோர்னியாவில் சர்வ கலாசாலையில் கல்வி கற்று வந்தார். உடனே சேனையில் காடட்டாக அமர்ந்தார். 1930-ம் வருஷத்தில் படையிலிருந்து ராஜிநாமாச் செய்துவிட்டு எண்ணெய்க் கம்பெனியில் விமான இலாகாவுக்கு மானேஜர் என்ற உத்தியோகத்தை வகித்தார். 1940-ல் மேஜர் என்ற அந்தஸ்துடன் மறுபடியும் சேனையில் சேர்ந்தார். இரண்டு வருடங்களுக்குப்பின் பிரிகேடியர் ஜெனரல் பதவிக்கு வந்தார்.

ஜிம்மி டூலிட்டிலுடன் வேலை செய்தவர்கள் அவரை அமைதியுள்ளவரென்றும், சாதியென்றும், ஊக்கமுள்ளவரென்றும் வர்ணிக்கிறார்கள். ஆபீஸ் வேலையை விட்டு திடீரென்று புறப்பட்டு பாம்பர் படைகளுடன் சென்றுவிடுவார். குட்டையாகவும் பருமனாகவுமிருப்பார். அவருடைய நடைமுறையில் உறுதியும் உணர்ச்சியும் காணப்படும். அவர் சாராயம் குடிப்பதில்லை, சுருட்டுப் பிடிப்பதில்லை. அவருக்கு மூட பக்தி கிடையாது—"பயங்காளி ஆட்டம் பரம் செய்து வந்தால் அதை நான் மதிக்கமாட்டேன்" என்று அவர் சொல்லுவதுண்டு. விமானிகளைப்போல் விதியின் பயனென்று நினைப்பவரானாலும் அவருடைய மனைவியையும், இரண்டு குமாரர்களையும் அன்புடன் ஆதரித்து வருகிறார்.

---

## பிரான்ஸுக்கு நேசதேச ஸப்ளை தாரை.

### ஜெர்மன் கடற்படை ஒன்றும் செய்யக்கூடவில்லை.

(A. J. மாக்லின்னி).

பிரான்ஸுக்கு நேசதேசக் கப்பல்கள் ஏராளமான உதவிப்படைகளையும், சப்ளைகளையும் கொண்டுபோகும்பொழுதும் பிரிட்டிஷ் அமெரிக்கப் படைகளின் மிகுதியால் சமாளித்து நிற்கமுடியாமல் ஜெர்மனி பின்வாங்கும்படி நேர்ந்துவிட்டதென்று ஜெர்மன் ராணுவ அதி-



காரிகள் ஒப்புக்கொள்ளும்பொழுதும் ஜெர்மன் அறிக்கை நிலயம் பின்வருமாறு சொல்லுகிறது. "ஆயிரக்கணக்கானவர்கள், நோயாளிகள், கைகால்முறிந்தவர்கள் எல்லாம் ஒருவர் கையாளக்கூடிய மீன்வெடிகளை ஓட்டத் தானாக முன்வருகிறார்கள்."

அதைரியப்பட்டுக்கொண்டும் ஹிட்லர் மாயை தெளிந்த ஜெர்மன் மக்களிடையே "ஒன்று இறக்கவேண்டும் அல்லது புகழ்பெறவேண்டும்" என்ற மனப்பான்மையை உண்டு பண்ண பகிரங்கப்படுத்தப்பட்ட ஒரு அபத்த புராணம் என்றுமட்டும் நினைத்து இதைத் தள்ளிவிடக்கூடாது. இந்த அறிக்கையிலிருந்து மற்றொன்று வெளிப்படுகிறது. பிரான்ஸுக்கு நேசதேசத்தார் அனுப்பும் ஸப்ளைகளைத்தடுக்க தங்களாலியன்றதைச் செய்துவருகிறோமென்றும், மனித மீன்வெடிகளைக் கடைசியாக உபயோகித்து வெற்றிபெற்றுவிடலாமென்றும் குறைகூறுகிறவர்களுக்கு சமாதானம் சொல்ல ஜெர்மன் கடற்படை பிரமுகர்கள் பிரயத்தனம் செய்துவருகிறார்கள் என்று புலப்படுகிறது.

### இரண்டுமுகமுள்ள பாத்தியங்கள்.

ஒரு பக்கம் ஜெர்மன் கடற்படை பீத்திக்கொள்ளுவதிலிருந்தும் மற்றொரு பக்கத்தில் ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் ஒப்புக்கொள்ளுவதிலிருந்தும் ஜெர்மனியில் குழப்பமான நிலைமை உண்டாகியிருக்கிறது. டாக்டர் கோயபல்ஸின் தூண்டுதலின்பேரில் கடற்படை பிரசாரகர்கள் நேசதேசத்தாருக்கு ஒவ்வொரு மாதமும் சண்டைக் கப்பல்களும், சஞ்சாரிகளும், நாசகாரிகளும், போர்க்கப்பல்களும், சிறிய கப்பல்களும், நீர்மூழ்கிகளைத் தாக்கும் கப்பல்களும் ஏராளமாக நஷ்டமாகிவிட்டன என்று சொல்லுகிறார்கள். ஜெர்மன் கடற்படை ரகசிய ஆயுதங்கள், முக்கியமாக மனித மீன்வெடி ஒன்று, சுரங்க வெடிகள், முதலியவற்றின் உதவியுடன் பலமாகத்தாக்குவதுதான் இதற்குக் காரணம்.

பிரான்ஸில் நேசதேசத்தாருக்கு மிகுதியான படைகளிருப்பதால் ஜெர்மன் படைகள் பின்வாங்கவேண்டி நேரிட்டது என்று அவர்கள் ஒப்புக்கொள்வதினால் ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் பின்கண்ட உண்மையை வெளிப்படுத்துகிறார்கள். "பிரான்ஸுக்கு வரும் சப்ளைகளை ஜெர்மன் கடற்படையையும், விமானப்படையையும் வழிமறிக்க முடியாததினால், தரைப்போரில் ஈடுபட்டிருக்கும் நாம் முறியடிக்கப்படுகிறோம்."

மகத்தான படையெடுப்புத் துவக்கியபின் 68 நாட்களுக்குள் பிரிடிஷ் கடற்படையில் 14 யுத்தக் கப்பல்கள் தான் நஷ்டமாகினவென்று சொல்லப்படுகிறது. இந்த 14 கப்பல்களும் கால்வாயில் நஷ்டமானவை. லேசான ரகத்தைச்சேர்ந்தவை. நான்கு நாசகாரிகளும் மூன்று சுரங்க வாரிக்கப்பல்களும், மூன்று போர்க்கப்பல்களும், மூன்று டிராலர்களும், ஒரு உதவிக்கப்பலும் நஷ்டமாயின.

இந்த உண்மையை ஜெர்மன் கடற்படை வியாக்கியானிகள் எவ்விதம் மறைப்பார்களென்பது விளங்கவில்லை. யூ-படகுகள், ஈ-படகுகள், சுரங்கவெடிகள், மனித மீன்வெடிகள் இன்னும் ஜெர்மனி பீத்திக்கொள்ளும் அநேக ரகசிய ஆயுதங்களிருந்தபோதிலும், பிரான்ஸுக்கு நேசதேசத்தார் அனுப்பும் ஸப்ளைகளைத்தடுக்க ஜெர்மனி ஒரு உபாயத்தையும் கண்டுபிடிக்கவில்லை.

உத்தியோகமுறையில் பிரிடனுக்குக் குறைவான கப்பல் நஷ்டம் ஏற்பட்டதென்று சொல்லும்பொழுது மனித டார்பிடோக்களை ஓட்ட முடவர்களை ஜெர்மனி திரட்டுகிறதென்று சொல்லும் கதை எவ்விதம் கவலைப்படும் ஜெர்மானியர்களுக்கு ஆறுதலளிக்கப்போகிறதென்றும் புலப்படவில்லை.

### ஜெர்மன் நஷ்டங்கள்.

கப்பல்கள் நஷ்டமாகிவிட்டனவென்று ஜெர்மனி ஒருபொழுதும் ஒப்புக்கொள்ளுவதில்லை. யுத்தம் ஆரம்பித்ததற்குப்பின் நேசதேசத்தார்கள் 500-க்கு மேற்பட்ட யூ-படகுகளை அழித்திருக்கிறார்களென்று பெர்லின் ஒருபொழுதும் அறிக்கையை வெளியிடவில்லை. அவைகளின் நஷ்டத்தின் மூலம் 25,000 பயிற்சிபெற்ற அனுபவம் வாய்ந்த யூ-படகோட்டிகள் நஷ்டமாகிவிட்டனவென்றும் ஜெர்மனி ஒப்புக்கொள்ளவில்லை.

D. தினத்திலிருந்து பிரிடனுக்கு ஏராளமான கப்பல்கள் நஷ்டமாகிவிட்டனவென்று ஜெர்மனி அபாண்டமாகச் சொல்லிவரும்பொழுது, இதே சமயத்தில் ஜெர்மனிக்கு ஏற்பட்ட கப்பல் நஷ்டங்களைப்பற்றி ஜெர்மனி மௌனம் சாதித்து வருகிறது.

பிரிடிஷ் நாசகாரிகளும், சஞ்சாரிகளும், போர்க் கப்பல்களும், மோட்டார் பீரங்கிப் படகுகளும், மீன் வெடிப் படகுகளும் பிஸ்கே விரிகுடாவுக்குப் போகும் வழியில் கடற்கரை ஓரமாகச் செல்லும் கப்பல்களைத் தாக்கிவருகின்றன. பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்த

விமானத் தாங்கிக் கப்பல்களில் செல்லும் மீன் வெடிகளைப் போடும் பருந்துப் பாய்ச்சல் விமானங்கள் நார்வே கடற்கரை ஓரமாகக் கபடமாகச் செல்லும் ஜெர்மன் துணைக்காவல் கப்பல்களைத் தாக்கி வருகின்றன. நேசதேச விமானப் படையும், யுத்தக் கப்பல்களும் வடக்குக் கடலில் ஒரு துறைமுகத்திலிருந்து மற்றொரு துறைமுகத்துக்குச் செல்லும் ஜெர்மன் கப்பல்களைத் தாக்கி வருகின்றன. பிரிடிஷ் நீர்மூழ்கிகளும், நேசதேச விமானப்படையும் மத்தியதரைக்கடலில் காணப்படும் எந்த ஜெர்மன் கப்பலையும் தாக்கி வருகின்றன. ஒவ்வொரு நாளும் ஜெர்மன் துணைக்காவல் கப்பல்கள் தரைப்படைகளுக்கு சாமான்களைக் கொண்டு போக முயற்சி செய்தது பயன்படவில்லையென்று கேள்விப்படுகிறோம்.

பிரிடன் 14 கப்பல்களை இழந்த பொழுது ஜெர்மனி எல்லா விதமான நடவடிக்கையிலும் எல்லா சமுத்திரங்களிலும் 99 கப்பல்களை இழந்திருக்கிறது. அவைகள் மூழ்கடிக்கப்பட்டன. மற்றும் 30 கப்பல்கள் மூழ்கியிருக்கக்கூடும். குறைந்த பக்ஷம் 140 ஜெர்மன் கப்பல்கள் பழுதுபட்டிருக்கலாம். இன்னும் அநேக சாமான் கப்பல்களும் நஷ்டமாகியிருக்கின்றன.

ஜெர்மன் கப்பற்படையின் கோரமான நிலைமையை ஜெர்மனியிலுள்ள அநேகர்கள் அறியக்கூடாவிட்டாலும் ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் இதை நன்கு அறிவார்கள். வெடிகுண்டுகளால் தகர்க்கப்பட்ட ரஸ்தாக்கள் இருப்புப் பாதைகள் வழியாக சாமான்களும், படைகளும், தளவாடங்களும் உதவிக்குவருமென்று அவர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து வருகிறார்கள். ஜெர்மன் கப்பல்கள் நேசதேச கடல், ஆகாய அபாயத்தைத் தாண்டிச் சென்றுவிடுமென்று ஜெர்மனி நம்பியிருக்கிறது. தற்பொழுது பிரான்ஸில் போர் நடக்கும் பிராந்தியத்தைச் சுற்றியுள்ள கடற்கரைக் கருகில் இந்த யோசனைகள் பயன்படமுடியாது.

### ஒரு கப்பல் ஒரு சேனையைக் காப்பாற்றக்கூடும்.

முன்பு அறியாத அநேக உண்மைகளை ஆயிரக்கணக்கான ஜெர்மானியர்கள் இப்பொழுது அறிகிறார்கள். உணவுப் பொருள்களை ஏற்றிச் செல்லும் ஒரு சாமான் கப்பல் ஆயிரக்கணக்கானவர்களின் பசிப்பிணியை நிவர்த்தி செய்துவிடும். ஆயுதங்களையும், வெடிமருந்துகளையும் ஏற்றிச் செல்லக் கூடிய ஒரு பெரிய சாமான் கப்பல் ஒரு சேனையை தாத்காலிகமாகவாவது காப்பாற்றக் கூடும்.

10,000 டன்கள் எடைமானமுள்ள ஒரு கப்பல், 50 பத்து டன் கனமுள்ள சாமான் வண்டிகளுள்ள 18 ரெயில் வண்டித் தொடரில் கொண்டு போகக்கூடிய சாமான்களை ஏற்றிச் செல்லும். அந்த சாமான்களை தரைமார்க்கத்தில் கொண்டுபோக பத்து டன்கள் கனமுள்ள 900 லாரிகள் தேவைப்படும். ஒரு எண்ணெய்க் கப்பல்கள் 25,00,000 காலன் பெட்ரோலைக் கொண்டு போகக் கூடும். இந்த யுத்தத்தில் 60, 70 கப்பல்கள் கொண்ட அநேகம் துணைக்காவல் கூட்டங்கள் சென்றிருக்கின்றன.

இந்தப் புள்ளி விபரங்களையும் உண்மைகளையும் கவனித்தால் கடல் தாண்டிச் செல்லும் நேசதேச சப்லைகள் ஜெர்மன் போக்குவரத்து மார்க்கங்களை இகழ்ச்சி செய்யக்கூடுமென்பது நிச்சயமாகத் தோன்றுகிறது. ஜெர்மன் கடற்படையின் பரிதாபமான நிலைமையை சீர்படுத்த மனித மீன் வெடிகளைவிட அதிக பலமான ஆயுதங்கள் வேண்டும்.

---

## சாமான் கப்பற்படை மாலுமிகள்.

### ஸர் ஆர்கிபால்ட் ஹர்ட்.

(டெயிலி எக்ஸ்பிரஸில் வந்த கட்டுரையின் சுருக்கம்).

நமது சாமான் கப்பற்படை மாலுமிகளுக்கு நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறோம். அவர்களின் சேவை பின்வருமாறு.

சரித்திரத்திலேயே காணப்படாத கோரமான போரில் வெகு காலமாக அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். போர்களும் 141 மிலியன் சதுர மைல்கள் கொண்ட பரப்பில் நடைபெற்றன.

இந்தப் போரில் அவர்களுக்குச் சற்று நேரம்கூட ஓய்வு கிடையாது. இரவு பகலாகவும், மூடுபனியிலும், புயல் காற்றிலும் 1939-ம் வருஷம் ஸெப்டம்பர் 3-ம் தேதியன்று யுத்த ஆரம்பத்தில் ஆதீனியா மூழ்கியதிலிருந்து ஓய்வன்னியில் நடைபெற்றுவருகிறது.



பிரிடிஷ் மாலுமிகள் அதைரியமடைந்து தயங்கி நின்றிருந்தால் எதிரி எல்லாப் போர் முனைகளிலும் வெற்றி பெற்றிருப்பான். ஏனெனில் நமது உணவுப்பொருள் பிரச்னை நமக்கு கஷ்டத்தை விளைவித்திருக்கும்.

இது தவறான அபிப்பிராயம் இல்லை. பிரிடனுக்காக நடைபெற்ற விமானப்போரில் நாம் வெற்றி பெற்றிருந்தபோதிலும், அது நம்மைக் காப்பாற்றி இருக்கமுடியாது. ஏனெனில் நாம் வறுமைக்குள்ளாகி யிருப்போம்.

நமது விமானிகள் அனுபவித்திருக்கும் கஷ்டங்களை நாம் நன்றாய் பாராட்டக்கூடவில்லையென்பதற்கு நாம் வருத்தப்பட வேண்டியதில்லை. அவர்களுக்கு இயற்கைச் சிரமங்கள்தான் உண்டென்று என்னுடைய அனுபவத்தில் தெரியவரும். புயல் காற்றும்; மூடுபனியும், இடியும், மின்னலும் அவர்களுக்கு எக்காலத்திலும் விரோதிகள்.

இந்த நிரந்தரமான அபாயங்களுடன் மீன்வெடி, வெடிகுண்டுகள், சுரங்கவெடி உபத்திரவமும் ஏற்பட்டது. ஜெர்மானியர்கள் பயங்காளிகளல்ல. அவர்கள் பிரிடிஷ் கடற்படை மாலுமிகளைப்போல் நடிக்க முயன்று எதிரிகள் தாக்குதலை சமாளிக்க சக்தியற்றவர்களென்றும் அறிந்துவிட்டார்கள்.

சென்ற யுத்தத்தில் நமது சாமான் கப்பற்படை மாலுமிகளின் சேவையைப்பற்றி உத்தியோக முறையில் நான் சரித்திரம் எழுதியபொழுது கடற்படை இலாகாவின் தஸ்தாவேஜிகளையும், வியாபாரச் சங்கத்தின் குறிப்புகளையும் பார்த்தபொழுது மாலுமிகளின் ஆயிரக்கணக்கான தீரச் செய்கைகளும், சகிப்புத் தன்மையும் நன்கு புலப்பட்டன. அவைகளிலிருந்து ஒரு சிலவற்றைப் பொறுக்கியெடுத்தபோதிலும் அவைகள் மூன்று புத்தகங்களை நிரப்பக்கூடியதாகயிருந்தன.

பிரகிருத யுத்தத்தின் சரித்திரத்தை எழுதுகிறவனாகக் கண்டு நான் வருத்தப்படவில்லை. ஏனெனில் அவருடைய வேலை அதிக சிரம சாத்தியமானது. போர் நீடித்து நடைபெற்றிருக்கிறது. விசாலமான பரப்பில் நடைபெற்றிருக்கிறது. சில சம்பவங்கள் மிகவும் அற்புதமானவை.

ஒரு விஷயத்தை மட்டும் வற்புறுத்திச் சொல்லவேண்டும். பிரிடிஷ் கடற்படைக்கும் சாமான் கப்பற்படைக்கும் வித்தியாசம் உண்டு. போர்க் கப்பலில் செல்லும் மாலுமிகள் யுத்த சிரமங்களை அனுபவிக்கக்கூடிய கப்பல்களில் சென்று வருகிறார்கள். அவர்களுக்கு யுத்த தந்திரத்தில் அநேக வருஷங்களாகப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது.

சாமான் கப்பல்களில் செல்லும் மாலுமிகள் சாதாரணமானவர்கள். அவர்கள் ஆபீஸர்களாகயிருந்தாலும் சரி, வேலைக்காரர்களாக இருந்தாலும் சரி, மற்றவர்களைப்போல் அவர்கள் வியாபாரச் சங்கங்களைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தீரர்களைப்போலிருக்கவில்லை. கண்ணுக்குக் குளிமையான ஆடைகளை அவர்கள் அணிந்து கொள்ளவில்லை. அவர்கள் போர் செய்கிறவர்களல்ல, வியாபார முறையில் ஒவ்வொரு துறைமுகத்துக்கும் சென்று தங்களுடைய தொழிலை நடத்தி வருகிறவர்கள். அவர்களின் சுயநல மறுப்பும், விசுவாசமும், மாசற்ற தைரியமும் அவர்களை தீரர்களாகச் செய்துவிட்டன.

---

## தெற்கு பிரான்ஸில் பகலில் சிலேடர்கள் மூலம் படையெடுப்பு.

### ஜெர்மன் விமானப் படையின் சிதைவு.

(விங் கமாண்டர் L. V. பிரேசர்).

பிரான்ஸின் குறுக்கே படைகள் அதிக வேகமாக முன்னேறிவருவதினால் சம்பவங்களைப் பற்றிய தகவல்கள் எல்லாவற்றையும் வெளியிடமுடியவில்லை. கட்டை விரலை வைக்கக்கூடப் போதாத காலத்திற்குள் நேசதேசத்தார்கள் பிரான்ஸின் தெற்குக் கரையில் இரண்டு கால்களையும் ஊன்றிக்கொண்டு விட்டார்கள். கவசம் பூண்ட படைகளும், முன்னணியாகச் சென்றிருக்கும் பாரசூட் துருப்புகளும், மாக்விப் படைகளும் பிடித்த ஸ்தாபனங்களை பலப்படுத்திக்கொண்டு முன்னேறி வருகின்றன.

நேசதேச விமானத் தாக்குதலின் பயனாக வடக்கு, தெற்கு பிரான்ஸில் ஜெர்மனியின் தற்காப்பு முறைகள் பாதிக்கப்பட்டுவிட்டன. ஒவ்வொரு பகுதியிலும் பிரிடிஷ் அமெரிக்க விமானங்கள் நேசதேசப் படைகளின் முன்னேற்றத்திற்குப் பேருதவி செய்து வருகின்றன.

இரண்டு பிராந்தியங்களிலும் அவைகள் உதவிப் படைகளும், சாமான்களும் ஜெர்மானியர்களுக்கு வந்து சேராதபடி பலமாகத் தடுத்து வருகின்றன. இரண்டு போர் பிராந்தியங்களிலும் பான்ஸர் படைகள், தரைப்படைகளுக்கு சங்கடம் விளைவிக்கின்றன. ஆகிலும் இரண்டு பிராந்தியங்களிலும் வெவ்வேறு சிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

### கடற்கரைகளில் ஆதிக்கம்.

தெற்கில் திடீர் தாக்குதல் மூலம் ஜெர்மானியர்களை பிரமிக்கச்செய்து பின்காட்டி ஓடும்படி செய்தோம். ஜெர்மன் விமானங்கள் தலைகாட்டுவது அபூர்வமாகிவிட்டது. இப்பொழுது நேசதேசத்தாருக்கு தெற்கு பிரான்ஸில் பலமான ஆதிக்கமிருப்பதினால் பட்டப்பகலிலும்கூட கிளைடர் விமானங்கள் நிர்ப்பயமாக வேலை செய்யக்கூடும். கடற்படையும் ஆகாயத்திலும், கடலிலும் எதிரிகளின் சேஷ்டையன்னியில் உதவியளிக்கக்கூடும். தரைப் படைகளும் ஜெர்மன் விமானப்படையின் தாக்குதலன்னியில் முன்னேறித் தாக்கத் தயாராக இருக்கக்கூடும். இந்த திருப்திகரமான நிலைமை பிரான்ஸின் வடக்குக் கடற்கரையில் காணப்படுகிறது. உள்நாட்டில் எதிரியின் விமான நடவடிக்கை அதிகரித்திருக்கிறது. நேசதேச விமானங்கள் எதிரியின் பீரங்கிகளின் அழுத்தமான தாக்குதலை சமாளிக்கவேண்டியிருக்கிறது.

வடக்கில் ஜெர்மன் விமானப் படை கடற்கரையிலுள்ள நேசதேசப் படைகளைத் தாக்க முயன்றது. ஆனால் நாம் எதிர் பார்த்த அளவிற்கு நமக்கு அபாயம் ஏற்படவில்லை. வடக்கில் ஜெர்மன் விமானங்கள் மிகுதியாக இருந்தபோதிலும் அவைகளுக்கு சக்தி கிடையாது. ஸெவார் நதி ஓரமாகவும் பிரிட்டனியிலும் ஏராளமான முன்னணி தளங்களை இழந்துவிட்டு ஜெர்மன் சண்டை விமானங்கள் போர்முனைக்கு வெகு தூரத்திலுள்ள தளங்களுக்குப் பின் வாங்கிச் சென்றன. அதாவது பாலெப் போர்முனை வரையில்தான் அவைகள் அதமபக்ஷமாக நடமாடக்கூடும். அங்கு வந்த விமானங்களும் போர்முனையில் அதிக நேரம் நிலைபெற்றிருக்க முடியவில்லை.

நேசதேசத்தாரின் விமான பலம் இப்பொழுது உச்சநிலைமையை அடைந்திருப்பதால், அவைகள் பின்வாங்கிவரும் மோட்டார்களையும், டாங்கிகளையும் இரவு பகலாக அழித்துவரும் பொழுது ஜெர்மன் விமானப் படை ஒன்றும் செய்ய சக்தியற்று பார்த்துக்கொண்டேயிருக்கின்றன. போர்முனையிலிருந்து அகஸ்மாத்தாகத் தப்பி ஓடும் படைகளையும் நேசதேச சண்டை விமானங்களும் இரக்கமன்னியில் நொருக்கி வருகின்றன.

தெற்கு பிரான்ஸில் படையெடுப்பு நடவடிக்கையை கவனிப்போம். D. தினத்தன்று போர் பிராந்தியத்தில் 25 எதிரி விமானங்கள்தான் தென்பட்டன. அதற்குப் பின் இந்த எண்ணிக்கையும் குறைந்துவிட்டது. அப்பொழுதுதான் முதன் முதலாக பட்டப்பகலில் துருப்புகள் கிளைடர் மூலமாக இறக்கப்பட்டன. யுத்த காலத்துக்கு முன் நடைபெறும் தமாஷாவைப்போலிருந்ததே ஒழிய அது எதிரியைத் தாக்க ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கையைப்போல் தோன்றவில்லை. இது வரையில் கிளைடர் விமானங்களை இழுத்துக்கொண்டு போக்குவரத்து விமானங்கள் இவ்வளவு தூரம் சென்றதே கிடையாது.

பிரிடனில் கட்டப்பட்ட ஹோர்ஸாஸும் அமெரிக்க வாகோஸும் டாகோடா விமானங்களுடன் பிணைக்கப்பட்டு ரோமுக்குச் சுற்றிலுமுள்ள விமான தளங்களிலிருந்து காலையில் புறப்பட்டுத் தெற்கு பிரான்ஸுக்குச் சென்றன. அவைகளுக்குத் துணைக்காவல் செய்த சண்டை விமானங்களுக்கு எதிர்ப்பே கிடையாது.

### எதிர்ப்பற்ற கிளைடர் விமானங்கள்.

விமானங்கள் மூன்றரை மணிகளுக்குப்பின் முன்னேறும் வாசலுக்கு வந்தபொழுது மேக சஞ்சாரம் அதிகமாகயிருந்ததால் கிளைடர்களை இறக்குவதற்கு அதிக சிரமமும் அபாயமும் ஏற்படுமென்று விமானிகள் நினைத்தார்கள். விமானிகள் இதாலிக்குத் திரும்பிச் சென்ற பொழுது யாதொரு தடங்கலும் ஏற்படவில்லை. பிறகு இருட்டடி கோசரம் தெளிவு பட்ட பொழுது அவைகள் நல்ல சூரிய வெளிச்சத்தில் மறுபடியும் சென்றன. கவசமில்லாத போக்குவரத்து விமானத்தில் சென்ற விமானப் படை உற்று நோக்காளர் கிளைடர் விமானங்கள் பிரான்ஸின் வயல்களில் பறவைகளைப்போல் அழகாக இறங்கின என்று சொன்னார். அவைகளை சண்டை விமானங்களும் எதிரியின் விமானம் சுடும். பீரங்கிகளும் எதிர்க்கவில்லை. காலாட்படைகள் ஹார்ஸாஸிலிருந்தும், வாகோஸிலிருந்தும் இறங்கி முஸ்தீப்புகளைத் தயார் செய்துகொண்டபொழுதும் ஒரு தோட்டா சத்தம்கூட கேட்கவில்லை.

படைகளையிறக்கும் படகுகள், சாமான் கப்பல்கள், துணைக்காவல் கப்பல்கள் கொண்ட 800 கப்பல்கள் சில மணி நேரங்களுக்குமுன் அமைதியாகக் கடலில் சென்றிருக்கின்றன.



கப்பல்களைத் தாக்கும் சாதனங்களையும், உபாயங்களையும் ஒரு வருஷ காலமாக ஜெர்மானியர்கள் தயார் செய்திருக்கிறார்கள். அவைகளைப் பரிக்ஷை செய்து பார்ப்பதற்கு மத்தியதரைக்கடல் போரில் தெற்கு பிரான்ஸில் படைகளை இறக்கக் குவிக்கப்பட்டிருந்த கப்பல்கள் தான் சிறந்த லக்ஷியமானவை. ஆகிலும் ஜெர்மன் விமானப் படையை ஆகாயத்தில் தலைகாட்டவொட்டாமல் நேசதேச விமானப் படை செய்து விட்டதினால், எதிரிகள் ஒன்றும் செய்யக்கூடவில்லை.

தெற்கு பிரான்ஸில் சமீப எதிர் காலத்தில் படைகளிறங்குமென்று ஜெர்மனிக்கு நன்றாய்த் தெரியும். சென்ற ஆறு மாதங்களாக ஜெர்மன் விமானிகள் ஆகாய மார்க்கமாக துறைமுகங்களையும் கப்பற்துறைகளையும் வேவு பார்த்து வந்திருக்கின்றன. நேசதேசக் கப்பல்கள் எங்கு குவிக்கப்படுகின்றனவென்றும் ஜெர்மனி ஊகித்திருக்கக்கூடும். வேவு பார்க்கும் விமானிகள் ஒன்று அல்லது இரண்டு ஒளிப்படங்களைப் பிடித்து வந்தபோதிலும் அவைகள் ஜெர்மன் ராணுவ அதிகாரிகளுக்கு உபயோகப்படவில்லை.

மேலும் தாக்குவதற்கு ஜெர்மன் விமானிகளிடம் வெடி குண்டுகளும் கிடையாது.

### ஓய்வில்லாத ரோந்துகள்.

கடற்கரை விமானப்படையினுடையவும், கடற்படையினுடையவும் ஓய்வற்ற ரோந்து நடவடிக்கையின் மூலம் மத்தியதரைக்கடலிலுள்ள சில யூ-படகுகள் கடலுக்குள் சென்று தப்பிப்பிழைக்க முடியவில்லை. டூலனிலுள்ள பிரெஞ்சுக் கடற்படை தளத்தை நேசதேச விமானங்கள் அடிக்கடி வெடி குண்டுகளால் தாக்கி வந்ததால் நீர்மூழ்கிகளின் அபாயம் குறைந்துவிட்டது. மேலும் நேசதேசப் படைகள் எந்த இடத்தில் முன்னேறும் வாசலை ஏற்படுத்துவார்கள் என்ற தோற்றம் ஜெர்மானியர்களுக்குப் புலப்படவில்லை. நேசதேசத்தார்களின் குண்டு வீச்சு அநேக இடங்களில் ஏற்பட்டதினால் ஜெர்மானியர்கள் குறிப்பான இடங்களை நிர்த்தாரணம் செய்யக்கூடவில்லை. ஏப்ரல் மாதக் கடைசியில் டூலன் துறைமுகத்தைத் தாக்குவதன் மூலமாகத் தெற்கு பிரான்ஸைத் தாக்கும் விமான நடவடிக்கை ஆரம்பித்தபோதிலும், அது தெற்கு, தென்கிழக்கு ஐரோப்பாவைத் தாக்கும் நடவடிக்கையின் ஒரு அம்சம்தான். நேசதேச யுத்த தந்திரத்தின் ஒரு அம்சமாக இந்த நடவடிக்கையை அமைக்கவேண்டும்.

D தினத்திற்கு ஐந்து நாட்களுக்கு முன்னதாக ரிவீரா கடற்கரையில் விமானத் தாக்குதல்கள் அதிகரித்துவிட்டன. விமானத் தாக்குதல்கள் வடமேற்கு இதாலியிலுள்ள ஜெனோவாவிலிருந்து ரோன் நதிப் பள்ளத்தாக்குக்கு மேற்கு வரையில் பறவியிருந்தன. இவையெல்லாம் ஜெர்மனியின் எதிர்த்து நிற்கும் சக்தியைக் குறைத்துவிட்டன.

உசித காலத்தில் ஜெர்மனியின் சண்டை விமானங்களின் எதிர்ப்பு ஒன்றுமேயில்லாமல் போய்விட்டது. முக்கியமான லக்ஷியங்களுள்ள இடங்களிலும் விமானம் சுடும் பீரங்கிகளின் நடவடிக்கை பலஹீனமாகயிருந்தது.

கடைசியாக அந்த பிராந்தியங்களிலுள்ள பீரங்கி நிலயங்களும் வெடி குண்டுகளால் நொருக்கப்பட்டன. இந்த முறையிலும் ஜெர்மன் தற்காப்புகள் நொருங்கிவிட்டன. நார்மண்டியில் படைகளை இறக்குவதற்கு முன் பாம்பர் கமாண்டைச்சேர்ந்த படைகள் பாஸ் டி கலேயைத் தாக்கியதுபோல இந்தத் தாக்குதலும் ஒரு சிறிது உதவி செய்திருக்கிறது.

---

## பசிபிக்கில் ஆகாய, கடல் நடவடிக்கைகள்.

### டோக்கியோவுக்குச் செல்லும் மார்க்கம்.

பெர்ல் துறைமுகத்தைத் துரோக புத்தியுடன் தாக்கவும், துரிதமாக அநேக போர்களை நடத்தி ஆஸ்திரேலியாவைத் தாக்கக்கூடிய வசதியைப் பெறவும், ஜப்பானுக்கு உதவியளித்த கடலாதிக்கமும், விமான ஆதிக்கமும் இப்பொழுது ஜப்பானை அதன் எல்லைப்புற தற்காப்புகளிலிருந்து உள்நாட்டு அரண்களுக்குப் பின்வாங்கும்படி சாவதானமாகவும், உறுதியுடனும் துரத்தியடித்துவருகின்றன. ஆஸ்திரேலியாவிலுள்ள தளங்களிலிருந்து புறப்பட்டு ஒவ்வொரு தீவாகத் தாவிச் செல்லுவது பஸிபிக்கில் நேசதேசத்தாரின் யுத்த தந்திரமாகயிருந்தது. கடல், ஆகாய ஆதிக்கமூலம் அவைகள் இப்பொழுது வெகுதூரம் முன்னேறி ஜப்பானைத் தாக்க சௌகரியமளிக்கக்கூடிய தீவுகளுக்குச் சென்றுவிட்டன. குவாமும், ஸைபானும் நேசதேச வசமாகிய பின்னும், ஹால்மஹோரா விமானதளம் நேசதேச வசமாகிய பின்னும், டச்சுநியூகினியாவில் நமக்கு விமான தளங்கள் கிடைத்த பின்னும் பிலிப்பைன்ஸை

நோக்கி முன்னேற நமக்குச் சாதகமேற்பட்டிருக்கிறது. பிலிப்பைன்ஸ், ஸெலிபிஸ், ஸெராம் தீவுகளைத் தாண்டி ஜப்பான் அதன் கப்பற்படையை அனுப்பத்துணியாது. பிலிப்பைன்ஸி லுள்ள விமான தளங்களில் நாம் ஆதிக்கம்பெற்றுவிட்டால் ஜப்பானியக் கடற்படையை ஜப்பானுக்கு மேற்குப்புறத்திலுள்ள கடல்களுக்குத் துரத்திவிடலாம். நமது படைகள் மரியனஸ் தீவுகளிலிறங்கியபொழுது டோக்கியோவில் கலக்கம் ஏற்பட்டது. அதன்மூலம் தென்கிழக்கு சமுத்திரங்களில் நடமாடிக்கொண்டிருக்கும் ஜப்பானியக் கப்பற்படைக்கும், ஜப்பானுக்கும் ஆபத்து உண்டாகிவிட்டது.

விமான பலத்தையும், கடற்படை பலத்தையும், உபயோகப்படுத்துவதின்மூலம் ஜப்பான் ஆக்கிரமித்திருக்கும் தீவுகள் ஒவ்வொன்றுகப் பிடிக்கவேண்டிய அவசியமேற்படாது. ஜப்பானிய ஸ்தானங்களை நாம் சுலபமாகத் தாண்டிச் சென்றுவிடலாம். எட்டுக்கால் பூச்சியைத் தலையில் அடித்தால் அதன் கொடுக்குகள் சீர் கெட்டுவிடும். நேசதேசப் படைகள் முன்னேறியிருக்கும் ஸ்தானங்களுக்குத் தெற்கிலுள்ள ஜப்பானியத் துருப்புகளுக்கு உதவிப் படைகளும், சர்பராக்களும் வராதுபோனால் அவைகள் திறம்படப் போர்புரிய முடியாது. அவைகள் நோய்வாய்ப்பட்டும், வறுமைக்குட்பட்டும் மடிந்துபோகவேண்டியதுதான். பலம்பொருந்திய விமானப்படை அவர்களுக்கு உதவியளிக்கக்கூடும். ஜப்பானிய விமானப் படை இப்பொழுது பலஹீனமடைந்துவிட்டது.

நேசதேசத்தாருக்குச் சமீபகாலத்தில் கிடைத்த வெற்றிகள் ஜப்பானியர்களுக்கு அதைரியம் உண்டாக்குகின்றன. அவர்களின் பத்திரமாகயிருக்கிறோம் என்ற மனபான்மையை அமெரிக்க சூபர் பறக்கும் கோட்டை விமானங்கள் ஜப்பானைத் தாக்குவதின்மூலம் தளர்ச்சி செய்துவருகின்றன. ஜப்பானின் இறுதியில் உள்ள நம்பிக்கை முன்போல் திடமாக இல்லை என்று ஜப்பானிய பிரமுகர்கள் வெளிப்படுத்தியபோதிலும், நேசதேசத்தார்களுக்கு வெற்றி சுலபமாகக்கிடைத்துவிடாது. நாஸிகளைப்போல் ஜப்பானியர்களும் வெறிகொண்டு போர் புரிகிறார்கள். சரணுகதி செய்தவர்களின் தொகை சமீபகாலத்தில் அதிகரித்திருக்கிற தென்றுலும் அவர்களில் அநேகர் சரணடைவதைவிட உயிரைத் துறக்கத் தயாராகயிருக்கிறார் கள். அவர்களை முறியடிக்கவேண்டுமானுல் நாம் ஜப்பானையே தாக்கவேண்டும். பிலிப்பைன்ஸை நோக்கி முன்னேறும் நடவடிக்கைகளும், ஜப்பானிலுள்ள ராணுவ, கடற்படை நிலயங்களை விமானமூலம் தாக்குவதும், ஜப்பானைத் தாக்க முற்போக்கான நடவடிக்கைகள்.

## போது ஜனங்களின் மோட்டார்.

இதுவரையில் தலைமறைவாக யிருந்த ஜெர்மன் மோட்டார் நார்மண்டியில் தென்பட்டு விட்டது.

நியூஸ் குரானிகள் பத்திரிகையில் அதன் ஒளிப்படம் அச்சிடப்பட்டிருக்கிறது. வண்டியில் எட்டு ஜெர்மன் ஸோல்ஜர்கள் செல்லுகிறார்கள். அதன் பின்பக்கத்தில் ஒரு வெண்மையான தகடு அமைக்கப்பட்டிருந்தது. சரணடைவதற்காக அந்த மோட்டார் நேசதேசப்படை வரிசைகளுக்குச் சென்றிருந்தது.

1938-ல் ஒவ்வொரு ஜெர்மன் தொழிலாளிக்கும் ஒரு மோட்டாரைத் தருவதாக ஹிட்லர் வாக்குறுதி செய்தான். அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு நாளைக்கு 5 ஷில்லிங்குகள் சந்தா கொடுக்கவேண்டும். இதை நம்பி ஆறுமில்லியன் ஜெர்மானியர்கள் சந்தா செலுத்தினார்கள். அவர்கள் எவ்வளவு காலம் வரையில் சந்தாகொடுக்கவேண்டுமென்றும், மோட்டார் என்ன கிரயமாகுமென்றும் சொல்லப்படவில்லை. பொதுமக்களுக்கு ஒரு கார்கூட கொடுக்கப்பட வில்லை. நாஸிகளின் யுத்தநிதிக்கு மில்லியன் கணக்கான மார்க்குகள் சேர்ந்துவிட்டன.

அவர்கள் சிறந்த திட்டங்களைப் போட்டிருந்தார்கள். பதினுபிரக்கணக்கான மோட்டார்கள் அந்தத் தொழிலகயிலிருந்து கட்டப்பட்டன. அவைகள் வெற்றிக்குதவக் கூடியவையல்ல. அவைகளில் சந்தா கொடுத்தவர்களின் புதல்வர்கள் போர்முனைக்குக் கொண்டுபோகப்பட்டார்கள். அந்த வண்டிகள் இப்பொழுது காயம்பட்டவர்களையும், யுத்த வெறுப்புற்றவர்களையும் நேசதேச யுத்தமுகாம்களுக்குக் கொண்டுபோக உபயோகப் படுகின்றன.



## ஜெர்மனி V-5ஆயுதத்தை உபயோகித்து வருகிறது.

### நீண்ட துவஜஸ்தம்பத்தில் பெரிய வெண்மையான கொடி.

வெண்மையான கொடிகளுடன் நார்மண்டியில் பிரிடிஷ் துருப்புகளிடம் சமீபத்தில் சரணடைந்த இரண்டு ஜெர்மன் கைதிகள் லங்காஸ்டர் வெடிவிமான வீச்சிலிருந்து தப்பித் தவர்கள் என்று டெயிலி டெலகிராப் பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கிறது.

ஜெர்மானியர்கள் இனிமேல் V-5 ஆயுதத்தைத்தான் உபயோகிக்கவேண்டுமென்று அவ்விருவரும் சொன்னார்கள்.

V-5 என்பது என்னவென்று பிரிடிஷார்கள் வினவினார்கள். "நாங்கள் இதை இப்பொழுது உபயோகித்துவருகிறோம். நீண்ட துவஜஸ்தம்பத்தில் கட்டிய பெரிய வெண்மையான கொடிதான் அது" என்று அவர்கள் பதிலுரைத்தார்கள்.

## ஜெர்மனியில் துயரம்.

மேற்குப் போர்முனையில் துன்பப்படும் படைகளை ஹிட்லர் போய்ப் பார்க்கவில்லை என்று சாதாரண ஜெர்மானியர்கள் வருத்தப்படுகிறார்கள்.

இறக்கும் வரையில் போர்புரியவேண்டுமென்று ஹிட்லர் உத்திரவனுப்புவது குறைய வில்லை. ஆகிலும் அவன் போர்முனைக்குச் செல்லவில்லை. இதுதான் ஜெர்மனியின் துயரத்தை அதிகரித்துவிட்டது.

அவர்களை உத்தேசித்து என்று செய்யப்பட்ட அநேக அக்கிரமச் செய்கைகளை அறியும் பொதுஜனங்களிடையே நம்முடைய அதோகதி நிச்சயம் என்ற தோற்றம் உண்டாகியிருக்கிற தென்று உற்றுநோக்காளர்கள் சொல்லுகிறார்கள். ஹிட்லரின் ஐரோப்பியக் கோட்டையும், ஹிட்லரின் ஐரோப்பாவின் சர்வாதிகாரி என்ற எண்ணமும் தவறுனதென்றும் அவர்கள் அறிவார்கள். இப்பொழுது பாக்கியிருப்பது ஜெர்மனிக்கோட்டைதான்.

இதை அறிந்துதான் நாஸி பிரசாரகர்கள் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் அவசியம் ஏற்பட்டுவிட்டதென்று பிரசாரம் செயதுவருகிறார்கள். இந்த உணர்ச்சியையும், விதியின் பயன் என்ற முறையில் அழித்துவிடலாம்.

## பிரிடிஷ் கடற்படை.

### நஷ்டங்களுக்குப்பின்னும் அதிக சக்தி வாய்ந்தது.

வெற்றிக்கு பிரிடிஷ் கடற்படை ஏராளமான பேருதவி செய்திருக்கிறதென்று சொல்லி விட்டு, பிரிடிஷ் அறிக்கை நிலயம் யுத்த ஆரம்பத்திலிருந்து பிரிடிஷ் கடற்படைக்கு ஏற்பட்ட நஷ்டங்களின் பூரா விவரங்களையும் அமெரிக்க பத்திராதிபர்களுக்கு அனுப்பி யிருக்கிறதென்று டெயிலி டெலகிராபின் வாஷிங்டன் நிருபர் சொல்லுகிறார்.

நஷ்ட விபரம் பின்வருமாறு:—

மூன்று யுத்தக் கப்பல்கள், இரண்டு யுத்த சஞ்சாரிகள், ஐந்து விமானந்தாங்கிக் கப்பல்கள், இரண்டு சிறிய விமானந்தாங்கிக் கப்பல்கள், 28 சஞ்சாரிகள், 14 கவசம் உள்ள சாமான் சஞ்சாரிகள், 124 நாசகாரிகள், 64 நீர்மூழ்கிகள், 7 போர்க் கப்பல்கள், 23 நீர் மூழ்கியை அழிக்கும் கப்பல்கள், 289 இல்லரைப்படகுகள்.

இந்த நஷ்டங்களுக்குப்பின்னும், பிரிடிஷ் கடற்படையின் வலிமை யுத்த ஆரம்பத்தி லிருந்ததைவிட அதிகமாகயிருக்கிறது. ஜெர்மன் விமானத் தாக்குதலின் பொழுதும் பிரிடனில் புதிய கப்பல்கள் கட்டப்பட்டுவந்தன.

## தேசீய சேமிப்புப் பத்திரங்கள்.

*நல்ல வட்டி: பொருளும் பத்திரம்.*

விவரம்.—ரூ. 10, ரூ. 50, ரூ. 100, ரூ. 500, ரூ. 1,000 எல்லா போஸ்டாபீஸுகளிலும் கிடைக்கும்.

12 வருஷத்தில் பூர்த்தியாகும். நடுவில் வேண்டுமானால் மூன்று வருஷத்துக்குப்பின் கூடிய தொகையை பெற்றுக்கொள்ளலாம்.

வட்டி:—4 1/6 சத விகிதம். வருமானவரி (இன்கம்டாக்ஸ்) கிடையாது. ரூ. 10 12-வருஷத்தில் ரூ. 15 ஆகிறது.

தேசீய சேமிப்பு பத்திரங்களின் மூலம் நீங்களும் சேமித்து இந்தியாவிற்கும் நல்ல செல்வமளிக்கிறீர்கள்.

எதிர்காலத்தின் க்ஷேமத்தை இன்றே கோருங்கள்.

தேசீய சேமிப்புப் பத்திரங்களை உடனே வாங்குங்கள்.

---

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

---

### புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் 214. (5-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9-9-44 | முனிஸிபல் ஆபீஸ் ... மாலை | 6.00 | 13-9-44 | C. S. M. பள்ளிக்கூடம் ... காலை | 10.00 |
| 10-9-44 | கீழாநிலை-புதுப்பட்டி ... ,, | 7.00 | ,, | ராணி பெண் பாடசாலை ... ,, | 10.45 |
| ,, | கீழாநிலைக்கோட்டை ... ,, | 7.30 | ,, | பெருமாநாடு ... மாலை | 7.00 |
| 11-9-44 | மலம்பட்டி ... ,, | 7.00 | ,, | புல்வயல் ... ,, | 7.30 |
| ,, | பேராம்பூர் ... ,, | 7.30 | 14-9-44 | மலைக்குடிப்பட்டி ... ,, | 7.00 |
| 12-9-44 | சடயம்பட்டி ... ,, | 7.00 | ,, | மலையானூர் ... ,, | 7.30 |
| ,, | ஒலியமங்கலம் ... ,, | 7.30 | 15-9-44 | பள்ளிவாசல் ... ,, | 7.00 |
| 13-9-44 | காலேஜ் A இங்கிலீஷ் ... காலை | 11.00 | ,, | நல்லமங்கலம் ... ,, | 7.30 |
| ,, | காலேஜ் B தமிழ் ... ,, | 11.00 | | | |

பிரஸங்கம் 215. (6-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 16-9-44 | முனிஸிபல் ஆபீஸ் ... மாலை | 6.00 | 20-9-44 | பூக்குடி ... மாலை | 7.00 |
| 17-9-44 | கீரனூர் ... ,, | 7.00 | ,, | சத்தியமங்கலம் ... ,, | 7.30 |
| ,, | காஞ்சூர் ... ,, | 7.30 | 21-9-44 | மிரட்டுநிலை ... ,, | 7.00 |
| 18-9-44 | குடுமியாமலை ... ,, | 7.00 | ,, | அரிமளம் ... ,, | 7.30 |
| ,, | பரம்பூர் ... ,, | 7.30 | 22-9-44 | உடையாளிப்பட்டி ... ,, | 7.00 |
| 19-9-44 | பெருங்களூர் ... ,, | 7.00 | ,, | கிள்ளுக்கோட்டை ... ,, | 7.30 |
| ,, | ஆதனக்கோட்டை ... ,, | 7.30 | | | |

யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 9—9—44 | பொன்னமராவதி. | 16—9—44 | திருமெய்யம். |
| 10—9—44 | மருதன்கோன்விடுதி. | 17—9—44 | எம்பல். |
| 12—9—44 | ராமச்சந்திரபுரம். | 19—9—44 | வடகாடு. |
| 14—9—44 | குழிபிறை. | 21—9—44 | கீழாநிலை. |
| 15—9—44 | புதுக்கோட்டை. | 22—9—44 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—13-9-44.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1944-ம் ஞு ஸெப்டம்பர் மீ 16வ [ந. 215

தேசீய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

---

## லா ஹாவரிலுள்ள ஜெர்மானியர்கள் சரணடைந்தார்கள்.

## ருமேனியா யுத்த நிறுத்த உடன்படிக்கையைச் செய்துகொண்டது.

---

### யுத்தத்துக்குப்பின் உலக சீர்திருத்தம்.

—2-ம் பக்கம் பார்க்க.

பிரஸங்கம் CCXV.

## வெற்றி நமக்கு கைகூடி விட்டது.

*(கூனூரில் மேன்மை தங்கிய மதராஸ் கவர்னர் ஆற்றிய சொற்பொழிவு).*

ஐரோப்பாவில் நமக்கு வெற்றி கைகூடி விட்டது. கூடிய சீக்கிரத்தில் ஆசியாவிலும் வெற்றி கிட்டிவிடும். ஜெர்மன் தேசத்தைப்போல் அழுக்கான ஒரு தேசம் நம்மை முறியடிக்க முடியாதென்று நமக்கு ஒரு உணர்ச்சி ஏற்பட்டது. நாமும் தனியாக நின்று இந்த யுத்தத்தில் வெற்றி பெறவில்லை. இந்த வெற்றியில் எல்லா தேசங்களும் பங்கெடுத்துக் கொண்டன. ஒவ்வொரு தேசத்துக்கும் ஒரு லக்ஷியம் உண்டு. யுத்தம் முடிந்தபின் அவர்களின் வித்தியாசங்கள் புலப்படும். எல்லா தேசங்களிலும் வித்தியாசங்களும் சிரமங்களும் காணப்படுகின்றன. ஆகிலும் அவர்கள் ஜெர்மனியையும், ஜப்பானையும் மீளமுடியாமல் முறியடிப்பதற்கு எல்லோரும் இப்பொழுது ஒன்றுபட்டிருக்கிறார்கள்.

### எதிர்பார்த்ததற்கு அதிகம்.

வெற்றி கிடைத்துவிட்டதென்றுதான் நாம் சொல்லவேண்டும். ஒரு மாதத்திற்குமுன் தொழிலாளர் சங்கத்தில் நான் பேசிய பொழுது நான் அதிக நம்பிக்கையுடனிருந்தேன். சென்ற மாதத்தில் எதிர் பார்த்ததற்கு அதிகமாக நமக்கு வெற்றிகள் கிடைத்து விட்டன. பிரான்ஸும் பெல்ஜியமும் இவ்வளவு சீக்கிரத்தில் விழுந்துவிடு மென்று நாம் எதிர்பார்க்கவில்லை. ஐரோப்பிய யுத்தம் சில வாரங்களுக்குள் முடிந்து விடுமென்று நாம் நம்பலாம். என்னுடைய அபிப்பிராயம் தவருகயிருக்கக்கூடும். ஒரு காலத்தில் வலிமையும் தீரமும் பொருந்திய ஜெர்மன் எதிர்ப்பு இப்பொழுது நொருங்கிவிட்டது. 1918-ம் வருஷத்தைப் போல பல்கேரியா, ருமேனியா போன்ற மற்ற நாடுகள் அச்சுக் கட்சியிலிருந்து விலகி நேசதேசக்கக்ஷியில் சேர்ந்துவிட்டன. நேசதேசத்தார்கள் உலகத்தின் வருங்கால க்ஷேமத்தை நிலைநாட்டப்போகிறர்களென்று அவர்களுக்குத் தெரியும். ஜெர்மனி தோல்விபெற்று விட்டதென்று கண்டு கொண்டது. ஜெர்மனியை நாம் கூடிய சீக்கிரத்தில் படை யெடுப்போம். கூடிய சீக்கிரத்தில் அது சமாதானத்தைக் கோரும். அவர்களுக்கு எவ்வித சமாதானம் கிடைக்கப்போகிறது. 1918-ம் வருஷத்தில் பிரெஞ்சு பூமியில் யுத்தம் நிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டது. இறுதி வரையில் ஆக்கிரமிப்புப் படையின் ஆக்கிரமணம் என்பது என்னவென்று ஜெர்மனி அறியவில்லை. இந்த யுத்தத்தில் யுத்த முடிவுக்குள்ளாகவே இந்த நடவடிக்கையின் பயனை ஜெர்மனி உணர்ந்து விடும். ஹிட்லர்தான் இதற்கு ஜவாப்தாரி," நாங்கள் ஒன்றும் செய்யவில்லை என்று ஜெர்மானியர் சொல்லுவதினால் பிரயோஜனமில்லை. நாம் ஜெர்மனிக்குட்சென்று பெர்லினில் யுத்த நிறுத்த உடன்படிக்கையில் கையொப்பமிடுவோம். பெர்லினில்தான் இறுதிப்போர்கள் நடைபெறும். நாஸிகளும், ஜனசமூக சமத்வக் கக்ஷியார்களும், தாராளக்கக்ஷியைச் சேர்ந்தவர்களும், பொது உடமைக்கக்ஷிக்காரர்களும் தோல்வியின் அர்த்தத்தை நன்கு உணரும்படி செய்யப்படுவார்கள். அவ்விதம் செய்யாவிடில் அநேக யுகங்கள் வரையில் ஜெர்மன் ராணுவம் புத்துயிர் பெற்றுவிடும். இந்த யுத்தத்தில் ஜெர்மனியைப் பூராவாக முறியடிக்க வேண்டும். அதை நிராயுதபாணியாக்கிவிடவேண்டும். அதைச் சேதித்துவிட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஜெர்மனி போன்ற ஒரு பெரிய வல்லரசை நாம் சேதித்துவிட முடியாது. ஜெர்மனியின் ராணுவ வெறியை நாம் அறவே ஒழித்துவிடவேண்டும். எந்த தேசத்தாரும் இக்கடமையை உணரவேண்டும். நமக்கு ஏராளமான செலவும் தொந்தரவும் ஏற்படக்கூடும். அநேக வருடங்கள் வரையில் நமது படைகள் ஜெர்மனியை ஆக்கிரமித்திருக்கவேண்டும். அவ்விதம் நாம் செய்யாவிடில் நமது வாழ்நாளில் இரண்டு தடவை ஏற்பட்டதுபோல் மறுபடியும் அவஸ்தைப் படவேண்டியிருக்கும். அறிவுள்ள எவரும் இந்த முயற்சியில் பின்வாங்க முடியாது. இந்தத் தியாகங்களை நாம் செய்தே தீரவேண்டும்.

---

# யுத்தத்துக்குப்பின் உலக சீர்திருத்தம்.

## 6. ரம்மியமான தோற்றங்கள்—நாட்டுப்புற இந்தியா.

மதராஸ் மாகாணம் யுத்தத்துக்குப் பின் உலக சீர்திருத்த நடவடிக்கைகளுக்காக ஆயத்தம் செய்துவிட்டது. மேன்மைதங்கிய கவர்னர் அதை ஆரம்பித்திருக்கிறார். கமிட்டிகளும் சப் கமிட்டிகளும் பிரச்னைகளை ஆராய்ச்சி செய்ய நியமிக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுடைய நோக்கங்கள் விரிவானவை. எல்லா இலாகாக்களையும் தழுவக்கூடியவை.

மற்ற எல்லா விஷயங்களையும் ஒத்திவைத்துவிட்டு இந்தியாவின் கிராமங்களை மேன்மைக்குக் கொண்டுவரும் யோசனையைக் கவனிப்போம். இந்தியாவின் க்ஷேமம் கிராமங்களின் க்ஷேமத்தைப் பொருத்ததென்றும், கிராம வாழ்க்கையை அபிவிருத்தி செய்தால்தான் இந்தியாவின் நிலைமைகள் ஒழியுமென்றும் நாம் சொல்ல விரும்புகிறோம். நமது கிராமங்களில் விவசாயம் பழைய முறைகளிலேயே நடைபெற்று வருகிறது. விஞ்ஞான சாஸ்திர முறைகளும், உலக அனுபவமும் அங்கு இன்னும் எட்டவில்லை. உலகத்தில் சுபிக்ஷம் காணப்பட்டபோதிலும் கிராமங்களில் ஏழ்மைத்தனம் காணப்படுகிறது. மனிதர்களும், கால்நடைகளும் சேர்ந்து வாழ்கின்றனர். வீடுகளெல்லாம் நல்ல வெளிச்சமும் காற்றுமில்லாமல் இருட்டறைகளாகக் காணப்படுகின்றன. ஆடவர்களும், ஸ்திரீகளும், குழந்தைகளும் கல்வியறிவின்றி வளர்ந்து வருகிறார்கள். மூட பக்தி அவர்களிடம் குடிகொண்டிருக்கிறது. பயிற்சியற்றவர்கள் வைத்தியம் செய்துவருகிறார்கள். அவர்களுக்கு அடிக்கடி ஒருவரோடொருவர் கலகம் செய்வதுதான் வேலை.



இதற்கு மாறாக நமது கிராமச் சீர்திருத்த நிபுணர் பின்கண்ட அமைப்பை வற்புறுத்துகிறார்.

ரஸ்தாக்கள் வயல்களின் மட்டத்துக்கு மேல் நேராகச் செல்லுகின்றன. எல்லா வண்டிகளுக்கும் ரப்பர் டையர் உபயோகப்படுத்தப்படுகின்றன. சக்கரங்களும், அச்சுகளும் ஏராளமாக யந்திர மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன.

"கிராமத்தைச் சுற்றி கொசுக்களை விருத்தி செய்யக்கூடிய குட்டைகளும், குளங்களும் காணப்படவில்லை. மாவு அரைப்பது கால்நடையின் சக்தியால் நடைபெறுகிறது. ஸ்திரீகள் அந்த வேலையில் ஈடுபடுவதில்லை. மலஜல விமோசனத்துக்கு சாதாரணமான சிலாக்கியமான வசதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தெருக்களில் சரளை பரப்பப்பட்டு மழை ஜலம் சுலபமாக வழிந்து ஓடுகிறது. கிணற்றுக்குக் கைபிடி சுவர்களும், சுற்றிலும் தளங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

"விளையாட்டுகள் ஏற்பாடாக நடக்கின்றன. பொழுது போக்குக்காக பொட்டலும் அமைக்கப்பட்டிருக்கிறது. அநேகக் குடும்பத்தார்களுக்கு வாரப் பத்திரிகைகள் வருகின்றன. ஒரு புத்தகசாலையும், வாசகசாலையும் கிராமத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது.

அங்கு கிராம நிகழ்ச்சிகளை அறிவிக்கும் ஒலிபெருக்கும் கருவி ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

"இங்கு பலவகைப்பட்டக் கூட்டுறவு சங்கங்களும் மேன்மையான விதைகள், விவசாயக் கருவிகளுள்ள ஸ்டோரும், சில்லரைத் தொழில்களும், கிராம போஸ்டாபீஸும், ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. கிராமப் பஞ்சாயத்து அதன் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறது. கூட்டுறவு முறையிலோ அல்லது மற்ற ஏற்பாட்டினாலோ வைத்திய வசதியும், பிரசவத்துக்கு உதவும் வசதியும் வழங்கப்படுகின்றன. பொட்டல்களில் அநேக விருக்ஷஜாதிகள் பயிர் செய்யப்படுகின்றன. எங்குபார்த்தாலும் பிரகாசமும் சுத்தமும் காணப்படுகின்றன.

"வீடுகள் புதிய முறையில் அமைக்கப்பட்டு நல்ல வெளிச்சமும், காற்றோட்டமும் கூடியதாகக் காணப்படுகின்றன. சுவர்களில் படங்களும் மற்ற அலங்காரங்களும் புலப்படுகின்றன.

"வெளிப்புறத்திலுள்ள கொட்டில் சுத்தமாகவும், ரமணீயமாகவும் இருக்கிறது. குழந்தைகள் சுத்தமாகவும், அழகாகவும், நல்லொழுக்கத்துடனும், தேக ஆரோக்கியத்துடனும் சுகமாகவும் வாழ்ந்து வருகிறார்கள். பெண்களும், பிள்ளைகளும் பள்ளிக்கூடத்துக்குச் செல்லுகின்றன.

"புருஷன் சாகுபடி செய்த தான்யத்தை மனைவி நல்ல முறையில் ஆகாரமாகத் தயார் செய்கிறாள். அவள் ஆடைகளைத் தயாரிக்கிறாள். அவைகளைப் பழுது பார்க்கிறாள். அவளிடம் சில மருந்துகளிருக்கின்றன. அவளுக்கு எழுதப் படிக்கத் தெரியும். அவள் ஸ்திரீகளின் கூட்டுறவு சங்கத்தின் அங்கத்தினராகயிருக்கிறாள்.

"அவளுடைய புருஷன் குடும்பத்திலும், வயலிலும் அக்கரை கொண்டு ஒரு நிமிஷம்கூட சோம்பித் திரிவதில்லை. அவன் ஸேவிங்ஸ் பாங்கியில் சிறிது தொகையைப் போட்டிருக்கிறான்."

இவ்விதமான பூலோக சுவர்க்கம் அழகாகத்தானிருக்கிறது. மனிதர்கள் மன உறுதியுடன் இதை அமைக்க முயன்றால் இந்த நிலைமையை உண்டுபண்ணிவிடலாம். இந்த வர்ணனையில் ஒன்றும் ஆகாசக் கோட்டையில்லை, கனவு போன்றதில்லை. எல்லோரும் ஊக்கமாக ஒத்துழைத்தால் இவைகள் கிராம சீர்திருத்தத்துக் குறியவையென்று கண்டுகொள்ளலாம். மேன்மைதங்கிய மதராஸ் கவர்னர் பின் வருமாறு சொல்லுகிறார்.

"சில விஷயங்கள் நூதனமானவை யென்பதென்று நினைத்து அவைகளை மேற்கொள்ளாமலிருக்க முடியாது. மூப்பாட்டன்மார்களுக்குச் சிலாக்கியமாகயிருந்த அம்சங்கள் நமக்குப் போதுமானதென்று நினைத்து வந்தால் உண்மையான முன்னேற்றம் ஏற்படமுடியாது. கலைக்கப்படும் படைகளும், பொது மக்களும் யுத்தத்துக்குப்பின் சிறந்த வாழ்க்கை முறைகளில் இருக்கவேண்டுமென்று வற்புறுத்துவார்களென்பதில் சந்தேகமில்லை."

# வார யுத்தச் செய்திகள்.

## (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 5—9—44 (செவ்வாய்க்கிழமை). | நேசதேசப் படைகள் பர்மாவில் சிட்டாங்கைப் பிடித்தன. |
| 6—9—44 (புதன்கிழமை). | பல்கேரியா ருஷ்யாவிடமிருந்து சமாதான ஷரத்துக்களைக் கோருகிறது. |
| | ஐந்து வருஷங்களுக்குப்பின் பிரிடனில் விளக்கணைப்பு ஓய்ந்தது. |
| | ருஷ்ய சேனை யூகோஸ்லாவ் எல்லைச் சரகத்தை அடைந்தது. |
| 7—9—44 (வியாழக்கிழமை). | அமெரிக்கர்கள் மோசல் நதியைத் தாண்டினார்கள். |
| | நேசதேசப்படைகள் நியூகினியாவுக்குச் சமீபத்திலுள்ள கில்விங்க் தீவிலிறங்கின. |
| 8—9—44 (வெள்ளிக்கிழமை). | பல்கேரியா சரணடைந்தது. |
| | சூபர் பறக்கும் கோட்டை விமானங்கள் மஞ்சூரியாவிலுள்ள ஜப்பானிய எஃகுத்தொழிற்சாலை பேரில் வெடிகுண்டுகளைப் பொழிந்தன. அமெரிக்கர்கள் பெல்ஜியத்திலுள்ள லீஜைப் பிடித்தார்கள். |
| | பிலிப்பைன்ஸுக்கருகில் எதிரியின் துணைக்காவல் சப்பல் படை பூராவும் அழிந்தது. |
| 9—9—44 (சனிக்கிழமை). | ருஷ்யர்கள் கிழக்குப் பிரஷ்யாவுக்குள் நுழைந்தார்கள். |
| | நேசதேசப் படைகள் பெல்ஜியத்திலுள்ள ஆல்பர்ட் கால்வாயைத் தாண்டினார்கள். |
| | நேசதேசப் படைகள் பிரான்ஸில் பெசான்கோனைப் பிடித்தார்கள். |
| 10—9—44 (ஞாயிற்றுக்கிழமை.) | நேசதேச பீரங்கிகள் ஜெர்மனிபேரில் வெடிகுண்டுகளைப் போட்டன. |
| | கோதிக் அரணின் மேற்குப் பகுதியில் நேசதேசப் படைகள் முன்னேறுகின்றன. |
| 11—9—44 (திங்கட்கிழமை). | நேசதேசப் படைகள் லக்ஸம்பர்க்கை விடுவித்தன. |
| 12—9—44 (செவ்வாய்க்கிழமை). | லாஹாவரில் ஜெர்மானியர்கள் சரண் புகுந்தார்கள். |
| | நேசதேசப் படைகள் ஜெர்மனிக்குள் புகுந்தன. |
| | ருமேனியா நேசதேசத்தாருடன் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்தது. |
| | பர்மாவுக்குச் சென்றுகொண்டிருந்த ஜப்பானிய ஸப்ளைக் கப்பல் கூட்டத்தை போர்படர் விமானங்கள் அழித்தன. |
| 13—9—44 (புதன்கிழமை). | நேசதேசப் படைகள் நியூபெலாடனை ஆக்கிரமித்தன. |

## (B)-செய்திச் சுருக்கம்.

**பிரான்ஸ் :—**

இந்த வாரத்தில் நேசதேசத்தாரின் முன்னேற்றம் அதிசமாகயிருந்தது. ஜெனரல் டெம்ப்ஸியிடமுள்ள இரண்டாவது சேனை தினசரி 35-மைல்கள் வீதம் சென்று ஸெயின் நதியிலிருந்து ஆண்ட்வெர்ப்புக்கு முன்னேறிற்று.

ஆண்ட்வெர்ப்பிலிருந்து பெல்போர்ட் வழிவரைக்கும் ஜெர்மன் எல்லையை நோக்கி மூன்று பகுதிகளாக நேசதேசப் படைகள் முன்னேறுகின்றன. லக்ஸம்பர்க்கில் இரண்டு இடங்களில் தாக்குதல் ஏற்பட்டிருக்கிறது. 8 சேனைகள் ஈடுபட்டிருக்கின்றன. கடலுக்கருகில் பீல்டு மார்ஷல் மாண்ட்காமரியின் படைகளும், ஜெனரல் க்ரரிடமுள்ள கனேடியப்படைகளும்,



ஆண்ட்வெர்ப்பில் பிரிடிஷ் இரண்டாவது சேனை, லீஜ் போர்முனையில் ஜெனரல் ஹாட்ஜ்ஸிடமுள்ள 1-வது சேனை, லோரேனில் ஜெனரல் பாட்டனிடமிருக்கும் அமெரிக்க நான்காவது படை, ஸ்விட்ஸர்லாந்து ஜெர்மன் எல்லையில் மற்றொரு நேசதேசப் படை, பெல்போர்ட் வழியில் அமெரிக்க 7-வது சேனை. லக்ஸம்பர்க் விடுவிக்கப்பட்டது. ஸீக்பிரட் அரணின் மத்தியிலுள்ள டிரியருக்குச் சமீபத்தில் ஜெர்மன் எல்லையை நேசப்படைகள் கடந்தன. ஜெர்மனிக்குள் 10-மைல்கள் சென்றுவிட்டார்கள். நேசதேச பீரங்கிகள் ஜெர்மனியில் பில்ட்சன்பேரில் பீரங்கிப் பிரயோகம் செய்தன. பிரிடிஷ் ரோந்துப் படைகள் டச்சு எல்லைச் சரகத்தைத் தாண்டின. ஆண்ட்வெர்ப் பிடிபட்டபின் காஸலும் பிடிபட்டது. நாமூவிலிருந்து முன்னேறி நேசப்படைகள் ஹூயி, நோவல் ராம்ஸி, லீஜ், ஆஸ்டண்ட் முதலிய இடங்களைப் பிடித்தன. ஆல்பர்ட் கால்வாய்க்காக கடும்போர் நடைபெறுகிறது. அதற்கு வடக்கிலுள்ள போர்க் லெபால்ட் பிடிபட்டது. கால்வாயில் கடற்கரையில் லாஹாவர், நியூபோர்ட், டிக்ஸ்மூடி பிடிபட்டன.

— கிழக்குப் பிரான்ஸில் பெல்போர்ட் வழிக்குப்போகும் மார்க்கத்திலுள்ள பெசான்கான் பிடிபட்டது. படைகள் ஜூராமலையில் அடிவாரத்துக்கு முன்னேறிவிட்டன.

கேன்நதிப் பள்ளத்தாக்கு வழியாக முன்னேறிய பிரெஞ்சுப் படைகள் சாலன்-சூர் சோனை ஆக்கிரமித்தன.

தெற்கில் டி ஜான் பிடிபட்டது. சோனுக்கு மேற்கில் பாமி பிடிபட்டது.

பிரெஞ்சு உள்நாட்டுப் படைகள் தென் மேற்கு பிரான்ஸில் சாப்ரிஸ், செலஸ்-சூர்-சேரை ஆக்கிரமித்தன.

**ருஷ்யா.—கிழக்கு பிரஷ்யா.**—ருஷ்யர்கள் புதிய தாக்குதலைத் துவக்கி ஷீஸப்பி நதியைத் தாண்டிவிட்டார்கள். இது லித்வேனியாவுக்கும் ஜெர்மனிக்கும் மத்தியில் ஓடுகிறது.

**செகோஸ்லாவேக்கியா.**—ஸிலினுவிருட்கி பிராந்தியத்தில் கடும் போர் நடைபெறுகிறது. ஸிலினு பிடிப்பட்டது.

**போலந்து.**—பெர்ஸிமிகில், குரோஸ்னோ பகுதியில் புதியதாக்குதல் ஆரம்பமாகிவிட்டது.

**ருமேனியா.**—ருஷ்யர்கள் காம்புலங்க், காராகால், அலெக்ஸாண்டிரியா, ஜிம்னிகா, டானு செவரின், டார்குல், ஆல்பாஜூலியா, ஸ்விண்டு—ஜார்ஜ் முதலிய இடங்களைப் பிடித்தார்கள்.

**பல்கேரியா.**—செம்படை பல்கேரியாவுக்குள் நுழைந்து வார்னுபர்கஸ், ரஷ்சிங்க், ஸிலிஸ்ட்ரா முதலியவற்றை ஆக்கிரமித்தது. பல்கேரியா யுத்த நிறுத்தத்தைக் கோரிற்று. ருஷ்யா போரை நிறுத்திவிட்டது.

**டிரான்ஸில்வேனியா.**—கோஸ்ஸாக் படைகள் தலைநகரமான க்ளுஜைப் பிடித்தன.

**இதாலி.**—நேசதேசப் படைகள் அபிசியா, ஜெம்மானோ, குரோசி, பிராடோ, பிஸ்டோலியா முதலிய இடங்களைப் பிடித்தன. பிளாரென்ஸுக்கு வடக்கில் ஆர்னோ நதிக்கரை வழியாக படைகள் முன்னேறுகின்றன. ஜெர்மானியார்கள் கோதிக் அரணுக்குள் துரத்தியடிக்கப்பட்டார்கள்.

**தூரக்கிழக்கு.**—சூபர் பறக்கும் கோட்டைகள் மஞ்சூரியாவிலுள்ள ஆன்ஷான் பேரில் குண்டுகளை வீசின. இது ஜப்பானின் இரண்டாவது முக்கிய எஃகுத் தொழிற்சாலை.

லிபரேடர்கள் பிலிப்பைன்ஸ் தீவிலுள்ள டாவோ பிரதேசத்தின் பேரில் குண்டுகளைப் போட்டன.

நேசதேசப்படைகள் நியூகினியாவுக் கருகில் உள்ள ஷோண்டன் கூட்டத்தைச் சேர்ந்த வியாக் தீவிக் கருகிலுள்ள சோப்ரியாரி தீவிலிறங்கின.

**பர்மா.**—மேற்கு யூனானிலுள்ள சீனப்படைகள் பர்மா ரஸ்தாவிலுள்ள சன்சுவானைப் பிடித்தன.

மாண்டலேயிலிருந்து முன்னேறிய பிரிடிஷ் படைகள் பின்பாவிலிருந்து ஹோபினுக்கு முன்னேறிவிட்டன. அரக்கானில் மாயூமலைகள் பிராந்தியத்தில் புதிய தாக்குதல் துவங்கியிருக்கிறது.

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்ரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

3—9—44. (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).
பகல்.—இலக்குகள்—லட்விக்ஷாபன் (Ludwigshafen) பிரதேசம்.
எதிர்ரஸ்தா, ரயில் நடவடிக்கைகள்.—பெல்ஜியம் (Belgium), பாஸ் டி கலே (Pas De Calais) பிரதேசம்.
கப்பல்கள்.—பிரெஸ்ட் (Brest).
6 விமான நிலயங்கள்.—ஹாலந்து (Holland).
இரவு.—சுரங்கவெடி பாவுதல்—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.

இதாலி (Italy).
ரயில் தளங்கள், ரயில்வேப் போக்குவரத்துகள்.—வட இதாலி (N. Italy).
துறைமுகம்.—ஜினோவா (Genoa).
பாலங்கள்.—மிலான் (Milan) பிரதேசம்.
பல ரஸ்தாக்கள்.—போ (Po) சமவெளி.

கிழக்கு யுத்த அரங்கம் (Eastern Front).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).
மாரியான்ஸிலுள்ள ரோட்டா (Rota), மாக் (Maug).
குரைல்ஸிலுள்ள பாராமுஷிரோ (Paramushiro).
காரோலைன்ஸிலுள்ள டிரக் (Truk), பொனாபி (Ponape).
நாரு (Nauru) தீவு.
ஜப்பானியக் கப்பல்கள்.—மிண்டானோ (Mindanao).

பர்மா (Burma).
படகுகள், தளவாடக் துவியல்கள் துருப்பு முகாம்கள்.—டிடிம் (Tiddim), ரஸ்தா, மேல சின்ட்வின் (Upper Chindwin).
ரயில்வேப் பாலம்.—கியாக்ஸே (Kyaukse).
ரஸ்தாப் பாலம்.—யூ (Yeu).

4—9—44. (திங்கட்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).
பகல்—எதிரி டாங்கிகள், பீரங்கிகள் துருப்பு நடவடிக்கைகள்.—பெல்ஜியம் (Belgium), வட கிழக்கு பிரான்ஸ் (North-Eastern France).
இலக்குகள்.—பிரான்ஸிலும் (France), ஹாலந்திலும் (Holland) யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.
இரவு.—போக்குவரத்து ஸ்தலம்—கார்ல்ஸ்ரு (Karlsruhe).

இதாலி (Italy).
பாலங்கள்.—வட இதாலி (Northern Italy).
துறைமுகம்.—ஜினோவா (Genoa).
பீரங்கி ஸ்தாபனங்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.
தொழிற்சாலைகள்.—வடக்கு ஸ்பெஸியா (Spezia).
தளவாடக் துவியல்கள்.—போ (Po) சமவெளி.
ரயில்வே பாலம்.—பெர்ரார (Ferrara).
சேமிப்புகள்.—ஜினோவா (Genoa), டூரின் (Turin) பாதை.

கிழக்கு யுத்த அரங்கம் (Eastern Front).
விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).
கப்பல்கள்.—செலிபஸ் (Celebes).
ஜப்பானிய படகுகள்.—ஹால்மஹேரா (Halmahera).

பர்மா (Burma).
எதிரி முகாம்கள், சைனியங்கள்.—ஆக்யாப் (Akyab), மாயு (Mayu), நதி, கலடான் (Kaladan) நதிப் பிரதேசங்கள்.
பாலங்கள்.—யூ (Yeu), கியாக்ஸே (Kyaukse).
ரயில்வேப் போக்குவரத்துகள்.—மத்திய பர்மா (Central Burma).
மோல்மீன் (Moulmein).

5—9—44. (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).
ரயில் ரஸ்தாக்கள், ரயில் தளங்கள்.—கார்ல்ஸ்ருகி (Karlsruhe).
தொழிற்சாலை இலக்குகள்.—லட்விக்ஷாபன் (Ludwigshafen).
விமான எஞ்சின் தொழிற்சாலைகள்.—ஸ்டட்கார்ட் (Stuttgart).
ஹங்கேரியின் தலைநகரான புடாபெஸ்ட் (Budapest).
இரவு.—இலக்குகள்—லீஜிற்கும் (Liege), கோலோனுக்குமிடையே யுள்ள பிரதேசங்களும், லீஜிற்கும் (Liege), ரூர் (Ruhr) சமவெளிக்குமிடையே யுள்ள பிரதேசங்களும்.
ரயில் தளங்கள்.—கிரெபெல்டு (Krefeld), மாஸ்டிர்ச்ட் (Maastricht).
இதர ரயில்வே இலக்குகள்.—ஹாலந்து (Holland), ஜெர்மனி (Germany).
ஜெர்மனியிலுள்ள ஹனோவர் (Hanover).

இதாலி (Italy).
எதிரி போக்குவரத்துகள்.—வட இதாலி (N. Italy).
ரயில் ரோட் பாலங்கள்.—புடாபெஸ்ட் (Budapest), ஸாலால்னோ (Salalno), ...லியிலுள்ள பெர்ரார (Ferrara).
க...ல்கள்.—ஜினோவா (Genoa) வரைகுடா.



இலக்குகள்.—யூகோஸ்லாவியா (Yugoslavia).

கிழக்கு யுத்த அரங்கம் (Eastern Front).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).
ஜப்பானிய படகுகள்.—பிலிப்பைன்ஸிலுள்ள மிண்டானோ (Mindanao).

பர்மா (Burma).
ஒரு தகவலும் இல்லை.

6—9—44. (புதன்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).
பகல்.—கடற்படை தளம்—எம்டன் (Emden).
எதிரி சைனியங்கள்.—லெஹாவர் (Lehavre).
போக்குவரத்து சாதனங்கள்.—பால்கனிலிருந்து வடமுகமாய்ச் செல்லும் ஜெர்மன் படைகள்.
எதிரி விமான நிலயங்கள், ரஸ்தா போக்குவரத்துகள் ரயில்வேக்கள்.—ஹாலந்து (Holland), மேற்கு ஜெர்மனி (Western Germany).
எதிரிக் கப்பல்கள்.—டச்சுக் கடற்கரை (Dutch coast).
ரயில்வே இலக்குகள்.—ஹாலந்து (Holland), ஜெர்மனி (Germany).
அரண் கட்டப்பட்ட பிரதேசம்.—பிரெஸ்ட் (Brest).
இரவு.—இலக்குகள்—ஜெர்மனியிலுள்ள ஹாம்பர்க் (Hamburg).

இதாலி (Italy).
பீரங்கி ஸ்தாபனங்கள், ரயில் பாலங்கள், மோட்டார் ரயில் போக்குவரத்துகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள், போ (Po) சமவெளி.

கிழக்கு யுத்த அரங்கம் (Eastern Front).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.— யுத்த அரங்கம் முழுவதும்.
ரயில் தளங்கள்.—பொலோனா (Bologna).

தூரக்கிழக்கு (Far East).
பீரங்கி ஸ்தாபனங்கள், களஞ்சியங்கள், கப்பல்கள்.—பாலா (Palau).
செலிபெஸ் (Celebes), (15 ஜப்பானிய விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

பர்மா (Burma).
ஒரு தகவலும் இல்லை.

7—9—44. (வியாழக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).
பகல்.—ஜெர்மன் வண்டிகள்—மான் (Mons)லிலிருந்து செல்லுபவை.
ஜெர்மன் சைனியங்கள்—லெ ஹாவர் (Lehavre).
துருப்பு முகாம்கள், டாங்கிகள், மோட்டார் போக்குவரத்துகள்.—லெஸ்கோவாக் (Leskovac).
ரயில் தளங்கள்.—நோவிஸாட் (Novisad).
ரயில் தளங்கள், பாலங்கள்.—வடகிழக்கு ருமேனியா (N. E. Rumania).
பிரான்ஸிலுள்ள பிரெஸ்ட் (Brest).
இரவு.—இலக்குகள்—ரைன்லாந்திலுள்ள கார்ல்ஸ்ருகி (Karlsruhe).

இதாலி (Italy).
பீரங்கி ஸ்தாபனங்கள்.—ரிமினி (Rimini).
ரயில் பாதைகள், பாலங்கள்.—ரிமினி (Rimini) பிரதேசம்.

கிழக்கு யுத்த அரங்கம் (Eastern Front).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—யுத்த அரங்கம் முழுவதும்.
இலக்குகள்.—டாவோ (Davao) பிரதேசம்.
துறைமுக ஸ்தாபனங்கள்.—மிண்டானோ (Mindanao).

பர்மா (Burma).
மோட்டார் போக்குவரத்துகள்.—சின்ட்வின் (Chindwin) நதிப் பிரதேசம்.
ரயில்வே இலக்குகள்.—மொகாங் (Mogaung), மாண்டலே (Mandalay) ரயில்வே.
துவியல் பிரதேசம்.—இண்டா (Indaw).

8—9—44. (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).
பகல்.—ரஸாயனத் தொழிற்சாலை—லட்விக்ஷாபன் (Ludwigshafen).
சேனைகள் யுத்த தளவாடங்கள் தயார் செய்து சேமிக்குமிடங்கள்.—கார்ல்ஸ்ருகி (Karlsruhe).
டாங்கித் தொழிற்சாலைகள்.—மெய்ன்ஸ் (Mainz).
மோட்டார் தொழிற்சாலைகள்.—குஸ்டாவ்பர்க் (Gustavburg).
ஜெர்மன் சைனியங்கள்.—பெல்ஜியத்திலுள்ள ஆல்பர்ட் கால்வாயின் (Albert Canel) கீழ் கரை.
போக்குவரத்துகள், ரஸ்தா ரயில் பாலங்கள், மோட்டார் போக்குவரத்துகள்.—பால்கன்ஸ் (Balkans).
ரயில்வே லயன்கள்.—புடாபெஸ்டிற்கும் (Budapest), பல்கேரியா (Bulgaria)விற்குமிடையில்.
ஜெர்மன் சைனியங்கள்.—பிரெஸ்ட் (Brest).
இரவு.—நூரம்பர்க் (Nuremburg).

இதாலி (Italy).
பாலங்கள்.—போ (Po) நதி.
போக்குவரத்துகள் படகுகள், சைனியங்கள்.—வட இதாலியில் யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

கிழக்கு யுத்த அரங்கம் (Eastern Front).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்—யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).
ஒரு தகவலும் இல்லை.

**பர்மா (Burma).**

எதிரி இலக்குகள்.—சிண்ட்வின் மேல்உள்ள டிடிம் ரஸ்தா (Tiddim road).

நகரங்கள், ரயில்வேக்கள்.—முனிவா (Monywa).

வேட்டை விமானத் தாக்குதல்கள்.—லாஷியோ (Lashio) முதல் மதண்டலே (Mandalay) வரை.

9—9—44. (சனிக்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—ரஸ்தாக்கள், ரயில் இலக்குகள். மெய்ன்ஸ் (Mainz), மான்ஹீம் (Mannheim), டஸ்ஸல்டார்ப் (Dusseldorf).

துறைமுகத் தற்காப்புகள்.-பிரெஸ்ட் (Brest), லெஹாவர் (Le havre).

எதிரி நடவடிக்கைகள் போக்குவரத்து சாதனங்கள்.—லோ கண்ட்ரீஸ் (Low Countries), மேற்கு ஜெர்மனி.

எதிரி அரண்கள்.—பொலோன் (Boulogne).

ரஸ்தா பாலங்கள்.—ராட்டர்டாம் (Rotterdam).

இரவு.—இலக்குகள்—மன்சன் கிலாட்பர்க் (Munchen Gladbach), பிரன்ஸ்விக் (Brunswick).

**இதாலி (Italy).**

துறைமுகம்.—டிரையெஸ்ட்டி (Trieste).

ஜெர்மன் துருப்புகள், ஸப்ளைகள்.—கோதிக் (Gothic) அரண்.

மாரிஸ்கா (Maresca).

யுத்த தளவாடக் கிடங்குகள்.—லாஸ்பீஸியா (Laspezia).

**கிழக்கு யுத்த அரங்கம் (Eastern Front).**

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்—யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

இலக்குகள்.-கீல்விங்க் (Geelvink) வளைகுடா.

விமான நிலயம்.—டச்சு நியூ கினியிலுள்ள ஸ்கோரிங் (Scoring).

ஸ்தாபனங்கள்.—டச்சு நியூ கினி (D. New Guinea).

ஜப்பானிய வண்டிகள்.—மிண்டானோ (Mindanao).

**பர்மா (Burma).**

மோட்டார் வண்டிகள்.—டெனஸரீம் (Tenasserim) கடற்கரை.

யுத்த தளவாடக் கிடங்குகள்.—டிடிமிற்கும் (Tiddim), டொங்ஸாங்கிற்கும் (Tongzang) அருகிலுள்ள பிரதேசங்கள்.

ஸப்ளை தளங்கள், சிண்ட்வின் (Chindwin) நதி.

சேமிப்புகள்.-மோல்மீனிற்குத் (Moulmein) தெற்கு.

கப்பல்கள்.—பாங்காக் (Bangkok) சிற்சருகில்.

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

4—9—44. (திங்கட்கிழமை).

**பிரிடன் (Britain).**

சில இடங்கள்.—தென் இங்கிலாந்து (Southern England), லண்டன் (London) பிரதேசம்.

**கிழக்கு யுத்த அரங்கம் (Eastern Front), தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

5—9—44. (செவ்வாய்க்கிழமை).

**பிரிடன் (Britain).**

சில இடங்கள்.-தென் கிழக்கு இங்கிலாந்து, (South-Eastern England).

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

6—9—44. (புதன்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

7—9—44. (வியாழக்கிழமை).

**பிரிடன் (Britain).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

8—9—44. (வெள்ளிக்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

9—9—44. (சனிக்கிழமை) and 10—9—44. (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

---

# யுத்தக் குறிப்புகள்.

**ஜெர்மனிக்காகப் போர்.** ஜெர்மனி பேரில் படையெடுக்கக்கூடுமென்பதைப்பற்றி ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் பேசியபொழுது "இது ஸ்வர்க்கத்தின் வாசற்படியைத் தாக்குவது போல் கஷ்டசாத்யமாயிருக்குமென்று சொன்னார்கள்

நேசதேசப்படைகள் இப்பொழுது ஜெர்மனிக்குள் சென்றுவிட்டன. அங்கு போரை நடத்தி முன்னேறுகின்றன. லித்வேனியா, லக்ஸம்பர்க் வழியாக அவர்கள் நுழைந்து விட்டார்கள். ஆல்பர்ட் கால்வாய் வழியாகவும், பெல்போர்ட் வழியாகவும் படைகள் தாக்கி வருகின்றன.



**மத்தியதரைக்கடல் போர்முனை.** தென்கிழக்கு மத்தியதரைக்கடல் பிரதேசத்தில் ஐந்து படைகள் தாக்கிவருகின்றன. மார்ஷல் டிட்டோவின் விடுதலைப்படை, அட்ரியாடிக் கடற்கரையில் தரைப்படைகள், பால்கன் விமானப்படை, 15-வது விமானப்படை, நேசதேசக் கடற்படை. ருஷ்யப்படைகள் யூகோஸ்லாவியாவுக்குள் முன்னேறுகின்றன.

வி வி வி வி வி

**டான்யூப் நதிப்போர்.** இந்தப் போருக்குத் திட்டம் உருவாகிறது. இதில் வெற்றி பெற்றால் ஜெர்மனிக்குப்போகும் மற்றொரு மார்க்கம் திறக்கப்படும். இதன் வழியாக மத்திய ஐரோப்பாவிலிருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் போக்குவரத்து மார்க்கங்கள் செல்லுகின்றன. இங்கே தான் சக்ரவர்த்திகளும், சிலுவை யுத்தக்காரர்களும், துருக்கியின் சுல்தான்களும் போர் நடத்தினார்கள். இதை ஒட்டி கார்பேதியன் மலைகளுக்குப்பின் ஹங்கேரி நிலைபெற்றிருக்கிறது இதன் வழியாக கிரீஸிலும், ஆல்பேனியாவிலும் அகப்பட்டுக்கொண்டிருக்கும் ஜெர்மன் துருப்புகள் பின் வாங்கிச்செல்லுகின்றன. ஆனால் பின்வாங்கும் ரஸ்தாக்களும், இருப்புப்பாதைகளும் ஒன்றன் பின் ஒன்றாக அழிக்கப்படுகின்றன.

வி வி வி வி வி

**சுதந்திரம்.** இதாலியைப்போல பிரான்ஸ், பெல்ஜியம், லக்ஸம்பர்க், ருமேனியா, பல்கேரியா, பால்டிக் நாடுகள் விடுதலை பெற்றுவிட்டன. ஹாலந்து, டென்மார்க், நார்வே, ஹங்கேரி, ஆஸ்திரியா, கடைசியாக ஜெர்மனி, சீக்கிரத்தில் விடுதலை பெற்றுவிடும். ஹிட்லரின் புதிய உலக அமைப்பு மறைந்தது. ஐரோப்பாவில் பிரகாசமான, புதிய, சந்தோஷகரமான அமைப்பு தோன்றிவிட்டது.

இந்த திருப்திகரமான முடிவான நிலைமை ஏற்படுமுன் நாம் அதிகப்பிரயாசை எடுத்துக் கொள்ளவேண்டும். பிரான்ஸில் நேசதேச விமான ஸ்தலங்கள் கிடைத்துவிட்டதால் ஜெர்மனிபேரில் வெடிகுண்டு வீச்சு அதிகரிக்கும். கேன் நதி வெற்றிதான் இதற்கு சாதகம் அளித்தது. இந்தத் தாக்குதல்கள் பெர்லினுக்குள் நேசதேசப் படைகள் நுழையும் வரையிலும் ஜெர்மன் படைகள் ஐசன்ஹவரிடம் நிபந்தனையற்ற சரணாகதி செய்யும்வரையிலும் தொடரும். ஜெர்மனிக்கு உலகத்தின் மற்ற பாகங்களிலிருந்து ஒரு உதவியும் கிடைக்காது.

இவ்விதமாக, அநாதையாய், வெறுக்கப்பட்டு, தூஷிக்கப்பட்டு, அவமதிபெற்று ஜெர்மனி மறைந்துவிடப்போகிறது.

உலக ஆதிக்கம் பெற முயற்சித்த ஜெர்மனி ஐந்து வருஷப்போருக்குப்பின் கஷ்டத்துக்குள்ளாகப்போகிறது.

வி வி வி வி வி

**இனி நம்பிக்கைக்கு இடமில்லை.** ஆனால் ஹிட்லர் போரை நிறுத்தமாட்டான். சமாதானப் பேச்சை ஆரம்பிக்கலாமென்று அவன் எண்ணமுடியாது. அல்லது தப்பியும் ஓடமுடியாது. ஏனெனில் நடு நிலைமை வகிக்கும் எந்த நாடும் அவனுக்கு இடம் கொடுக்காது. புதிய சேனைகளைத் திரட்டலாமென்றும் அல்லது புதிய ஆயுதங்களை உற்பத்தி செய்யலாமென்றும் அவன் நினைக்க முடியாது. அவன் போர் புரிவதற்குக் காரணங்கள் என்ன?

துர்தேவதையைப் போல் ஸ்வர்க்கத்திலிருந்து நரகத்துக்குத் தள்ளப்பட்டாலும் அவன் போரை நடத்துவான். பைத்தியக்காரர்களுக்கும் பிடிவாதம் தான் அதிகம். தோல்வி பெற்றாலும் அவன் எதிர்த்துத் தான் போராடுவான்.

இந்தப் பைத்தியக்காரனை எதிர்த்துப் போராட ஜெர்மனியில் ஒருவரும் சக்திபெற்றிருக்கவில்லை. ஜெர்மனியின் தற்போதிய நிலைமையை யோசிக்குமளவில் பொதுஜனங்கள் கலகம் செய்யமாட்டார்கள். ஜெர்மன் பிரபுக்களும், ஜெனரல்களும், தொழிலாளிகளும் உபயோகமுள்ள வகையில் எதிர்த்துப்போராட மாட்டார்கள். நாஸி தத்துவம் ஓங்கி நிற்கிறது. ஹிட்லர் பூரண அதிகாரத்துடன் அந்திய காலத்தில் அக்கிரமங்களைச் செய்துவருகிறான். லண்டன் பேரில் குண்டுகளை வீசுகிறான். ஆகிலும் தெய்வாதீனத்தினால்தான் ஜெர்மனி தப்பிப் பிழைக்க முடியும்.

வி வி வி வி வி

**ஸீக்பிரட் அரண்.** ஹிட்லரின் மேற்கு அரண்களில் இது ஒன்று தான் பாக்கி இருக்கிறது. கால்வாய் கடற்கரையிலிருந்த அரண்களும் மாகினோ அரணும் நொருங்கிவிட்டன. ஸீக்பிரட் அரண் மிகவும் பலமானதென்று ஜெர்மனி பீத்திக்கொள்கிறது. இந்த அரண் ஸ்விட்ஸர்லாந்திலுள்ள பேஸலிலிருந்து டச்சு எல்லைச் சரகத்திலுள்ள ஆர்ன்ஹீம் வரையில் பரவி இருக்கிறது. இதில் இஸ்டன், கேஹல்,

ஸார், கலோன் கோட்டைகளும் இவை விர 17,000 காங்க்ரீட் கோட்டைகளும், பின்புறத்தில் நான்கு வரிசை தற்காப்பு அரண்களும், முள்ளுக்கம்பி அமைப்புகளும், அகழ்களும் தற்காப்புப் பெட்டிகளும், யந்திர பீரங்கி நிலயங்களும், விமான எதிர்ப்பு பீரங்கிகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இது பிரமாதமாக இருந்தபோதிலும் அவைகளின் பலம் அதைத் தற்காப்பு செய்யும் மனித பலத்தைப் பொருத்திருக்கிறது. இப்பொழுது ஜெர்மனிக்குச் சிறந்த முஸ்தீப்புகளுள்ள சலனப் படைகள் குறைவே ஒழிய காங்க்ரீட் அரண்கள் குறைவில்லை. போர்முனைகளிலிருந்து இந்த அரணுக்குப் பின்வாங்குகிறவர்கள் மன உறுதி குலைந்து சிதைவுற்று இருக்கிறார்கள். உதவியாக வரும் படைகளில் சிறு பிள்ளைகளும் விருத்தர்களும் வருகிறார்கள். இந்த அரணின் பலத்தை நேசதேச பீரங்கிகள் கூடிய சீக்கிரம் பரீக்ஷை பார்த்துவிடும்.

வி வி வி வி வி

**கொரில்லாச் சண்டை.** நேசதேசப் படைகள் ஸீக்பிரட் அரணைத் தாண்டிச் சென்றால் ஹிட்லர் கொரில்லாப்போரைத் துவக்குவதாக உத்தேசித்திருக்கிறான். இந்தப் போர் முறையை ஸண்டர்மேன் விளக்கிக் காட்டியிருக்கிறார். வீடுகள் பொசுக்கப்படும். ரஸ்தாக்கள் அழிக்கப்படும். எதிரியை வெறுத்து அழித்து விடுவார்கள். ஒவ்வொரு அங்குல தேசத்திலும் கடும்போர் நடைபெறும்.

இந்த நடவடிக்கைகள் வெற்றிகொண்டதுபோதும் அபத்தமாகவும் இருக்கின்றன. எந்நிலைமையிலும் இவை எதிரியின் கடைசி பிரயத்தனத்தைக் குறிப்பிடுகின்றன.

இந்தப் பைத்தியக்கார நடவடிக்கையை மேற்கொண்டாலும் ஜெர்மனியில் குழப்பமும் அராஜகமும் ஏற்பட்டுவிடும். அதற்கு ஜெர்மனியில் உள்ள அயல் நாட்டு தொழிலாளர்கள் ஒத்தாசை செய்வார்கள். அதன் மூலம் ஜெர்மனி பூராவும் அழிபட்டுவிடும்.

இதையெல்லாம் ஹிட்லர் பொருட்படுத்த மாட்டான். ஸாம்ஸனைப் போல் அவன் தன் தலையிலேயே மண்ணைப்போட்டுக்கொள்வான்.

வி வி வி வி வி

**விச்சியின் மறைவு.** விச்சி மறைந்துவிட்டது. விச்சி மந்திரிகள் ராஜினாமா செய்யவில்லை. அதிகாரத்தைத் துறக்கவில்லை. நேசதேசப்படைகள் விச்சிக்குள் நுழைந்தவுடன் அங்கிருந்த குவிஸ்லிங் நிர்வாகிகளை ஜெர்மன் ரகசியப்போலீஸ் வெளிதேசங்களுக்கு கொண்டுபோய்விட்டது, லவால், இப்போது பெல்போர்ட்டில் அடைபட்டிருக்கிறான். பிடெய்ன் மட்டும் சிறிது ஆக்ஷேபித்தான். ஆனால் அது பயன்படவில்லை.

இதுவரையில் எந்த நிர்வாகமும் இந்த முறையில் மறைந்ததில்லை. அந்த நிர்வாகத்தை ஹிட்லர்கூட மதிக்கவில்லை. ஆகிலும் வீழ்ச்சி பெற்ற பிரான்ஸிடம் அநுதாபம் காட்டியும் அதன் புகழ்பெற்ற தலைவரை மதித்தும் பிரான்ஸ் யுத்தத்தை நிறுத்திய பிறகும், அந்த நிர்வாகத்திற்கு பிரிடன் ஒரு அந்தஸ்தைக் கொடுத்தது. யுத்த ஆரம்பத்தில் அதுதான் பிரான்ஸின் நியாயமான நிர்வாகமென்று அமெரிக்காவும் மதித்தது.

விச்சி வெகு சுலபமாக மறைந்ததிலிருந்து அச்சு நாட்டார் ஸ்தாபித்திருக்கும் குவிஸ்லிங் நிர்வாகங்களின் பலஹீனம் நன்றாய் வெளிப்படுகிறது.

வெர்டன் யுத்தத்தில் கீர்த்தி பெற்ற பிரெஞ்சு வீரர்கள் பிடெய்னை தங்கள் கட்சியில் சேர்த்துக்கொள்ளவில்லை. அவனை ராஜத்துரோகி, பயங்காளி, பராதீனன் என்று தூஷித்து சென்ற யுத்தத்துக்குப்பின் அவனுக்கு வழங்கப்பட்டிருந்த கௌரவத்தைப் பிடுங்கிவிட்டார்கள். அவன் இறந்தால் அவனுடைய சவம் பிரெஞ்சு வீரர்கள் புதைக்கப்படும் டோமண்ட் மாதாகோவிலில் அடக்கம் செய்யப்படமாட்டாது. துரோகிகளுக்கு படிப்பினை ஏற்படும் வகையில் அவனுடைய சவப்பெட்டிக்கு அலங்காரம் செய்யப்படமாட்டாது.

வி வி வி வி வி

**ஒருநாள் யுத்தம்.** பல்கேரியா ஒரு நாள் யுத்தம் செய்தது. கெய்ரோவில் சமாதானத்தை பல்கேரியா கோரிற்று. ஆயினும் அது ஜெர்மனியுடன் உறவாடி வந்ததால் நேசதேசத்தார்கள் இணங்க மறுத்தார்கள். ருஷ்யா, பல்கேரியா பேரில் படையெடுத்தது. 24 மணி நேரத்துக்குள் பல்கேரியா யுத்தத்தை நிறுத்திவிடுவதாகவும் ஜெர்மனியை எதிர்த்துப் போர் செய்யத் தயார் என்றும் வெளியிட்டது.

விச்சியும் பல்கேரியாவும் இரண்டு மாறுபாடான குவிஸ்லிங் நிர்வாகங்கள். ஹிட்லரின் வெற்றியைக்கண்டு மயங்கி வஞ்சகமாகவும் அயோக்கியத்தனமாகவும் நடந்துகொண்ட நாடுகளுக்கு நல்லதொரு உதாரணமாகும். முதலில் அது ஜெர்மனியின் அமுலுக்கு உட்பட்டது.



ஆனால் சுறுசுறுப்பான நடவடிக்கையை ஆரம்பிக்கவில்லை. ருமேனியாவின் சில பாகங்களைக் கவர்ந்து அது தேசங்களை மிரட்டியது. ருஷ்யாவில் தாக்கப்பட்டபின்னும் இதாலியிலிருந்து குண்டுவீச்சுக்குட்பட்டதுமான பல்கேரியா 24 மணி நேரங்களுக்குள் கட்சி மாறிவிட்டது. ஜனநாயகக் கொள்கைகளை ஆதரிக்கிறது.

வி வி வி வி வி

**வார்ஸாவுக்கான போர்.** இதைப்பற்றி டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகையில் பின் கண்ட குறிப்பு காணப்படுகிறது.

"போலிஷ் ஜனங்கள் அவஸ்தைப்படுகிறார்கள். எதிர்ப்புப்படைகள் காலந்தப்பி வார்ஸாவில் கலகம் செய்து அழிக்கப்பட்டு வருகின்றன. இந்த நெருக்கடியில் போலிஷ் மக்களின் ஆலசியத்தை நாம் மன்னிக்க முடியாது. அவைகளின் குண பாகங்கள் எவ்விதமிருப்பினும் இரண்டு முக்கிய விஷயங்கள் தோன்றுகின்றன. ருஷ்ய உதவியன்னியில் போலந்து பலம் படைத்திருக்க முடியாது. கர்ஸான் கோட்டை ஒப்புக்கொள்ளாவிட்டால் ருஷ்யாவின் நட்பை பெறமுடியாது. கார்ஸான் கோட்டை பிரிடிஷ் அமெரிக்க நிபுணர்கள் அமைத்தனர். வார்ஸாவிலுள்ள போலிஷ் கலகக்காரர்கள் கர்ஸான் கோட்டை தூஷித்து வருகிறார்கள். போலந்துக்குச் சொந்தமான வில்னாவையும், லூவாவையும் திருப்பிப்பிடிக்க இறுதி வரையில் போர் செய்வோம் என்று அவர்கள் முழங்கிக்கொண்டிருக்கிறார்கள். இதே சமயத்தில் ருஷ்யா போலிஷ் கலகக்காரர்களை துரோகிகள் என்று நிந்தித்து வருகிறது. அன்பப்படும் படைகளுக்கு உதவியளிக்க விமானப்படையை அனுப்பவும் மறுத்துவிட்டது. போலிஷ் பிரதம மந்திரி லண்டனிலிருந்து மாஸ்கோவுக்கும், லூவாவுக்கும் சென்று உடன்படிக்கை ஏற்படுத்த முயலுகிறார். போலிஷ் சேனாதிபதி பிரிடன் அதிக உதவி அனுப்பவில்லை என்று குறைகூறுகிறார். இந்த முயற்சியில் நமக்கு ஏராளமான நஷ்டமேற்பட்டிருக்கிறது".

வி வி வி வி வி

**க்யூபெக் மஹாநாடு.** மிஸ்டர் சர்ச்சிலும், ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டும் க்யூபெக்கில் மறுபடி சந்தித்துப்பேசுகிறார்கள். ஜப்பானை முறியடிக்கும் பேச்சு முக்கியமாக நடைபெறுகிறது. தூரக்கிழக்குப் போரை நடத்துவதில் பிரிடன் பூராவாக ஒத்துழைக்குமென்று மிஸ்டர் சர்ச்சில் உறுதிகூறுவார்

வடக்கு பர்மாவில் அமெரிக்கர்கள் பயிற்சி அளித்த சீனப்படைகளின் தலைவரான ஜெனரல் ஸ்டில்வெல் அமெரிக்க யுத்த உற்பத்தி இலாகா தலைவரான டோனால்டு நெல்சன், ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டின் சொந்தப் பிரதிநிதியான பிரிகேடியர் ஜெனரல் பாட்ரிக் ஹார்லி முதலியவர்கள் கூடிய சீக்கிரம் திறக்கப்படும் பர்மா ரஸ்தா வழியாக சப்ளைகளைக்கொண்டு வருவதற்காக ஆலோசனை செய்ய சுங்கிங்குக்கு வந்திருக்கிறார்கள். சீனர்கள் பர்மா ரஸ்தாவில் ஜிப்ரால்டர் போன்ற ஜங்ஷனைப் பிடித்தார்கள். \யுத்தம் ஜப்பானை நெருங்கிவிட்டதென்று ஜப்பானியர்கள் அறிந்து வருத்தப்படுகிறார்கள். பிரயாணிகளும், மாலுமிகளும் சதாகாலமும் உயிரைக்காப்பாற்றும் அரைக்கச்சைகளையும் அணிந்துகொண்டிருக்கிறார்கள்.

ஜப்பானிய சக்ரவர்த்தியும் பிரதம மந்திரியும் நிலைமை மோசமாக இருக்கிறது என்று எச்சரித்திருக்கிறார்கள்.

வி வி வி வி வி

**அரக்கான்.** ஆறுமாத அமைதிக்குப்பின் அரக்கான் போர் ஆரம்பமாயிற்று. பூதே டாங்கிற்கு தென்மேற்கே மாயூ மலைப் பிராந்தியத்தில் தாக்குதல்கள் ஆரம்பமாகிவிட்டன.

வி வி வி வி வி

**லண்டன்பேரில் விமான நடவடிக்கை.** பறக்கும் குண்டுகளின் அட்டகாசம் ஓய்ந்தது. பிரெஞ்சுக் கடற்கரையிலுள்ள பறக்கும் குண்டுகள் புறப்படும் ஸ்தானங்கள் பிடிபட்டு அழிக்கப்பட்டபின், இந்த மோட்டார்ப் பூச்சிகளின் உபத்திரவம் குறைந்தது. சில அற்பமான நடவடிக்கைகளைத் தவிர குழந்தைகளைக்கொல்லும் இந்தக்குண்டுகள் இப்போது புலப்படவில்லை.

குடைத்துருப்புகளின் தாக்குதலும் விமான நடவடிக்கையும் ஆகாசவானங்களின் தாக்குதலும் ஓய்ந்தன.

அபாயத்தின் போது லண்டனில் உள்ளவர்கள் தைரியமாக இருந்தார்கள். நான்கு வருடமாக அவர்கள் பொறுமையுடன் இருந்தார்கள். இப்போது குதூகலப்படும் சமயம் வந்துவிட்டது. விளக்கணைப்பிலிருந்து வெளிச்ச மறைவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. லண்டனைவிட்டு ஜனங்கள் வெளியேறுவது நின்றுவிட்டது. பொதுஜன தற்காப்புப் படைகள் கலைக்கப்பட்டன. உள்நாட்டு ரக்ஷணைப்படைகள் இனிமேல் தயாரிக்கப்படமாட்டா.

# 1918-ம் வருஷத்திய சம்பவம்.

*H. C. பெயிலி.*

(டெயிலி டெலிகிராப் பத்திரிகை).

1918-ம் வருஷப்போரில் ஜெர்மனிக்கும் உலகத்தாருக்கும் என்ன நேர்ந்ததென்று நாம் ஞாபகப்படுத்திக்கொள்ளுவோம். 1918-ம் வருஷம் ஜூலை மாதம் 20-ம் தேதியன்று ஜெர்மன் சேனைகளின் உயர்தர கமாண்டரான லூடன்டார்ப் மேற்கு முனையில் முன்னேறித்தாக்கும் போரை நிறுத்தினார். எதிரிகளுக்கு மிகுதியான படைபல மிருக்கிறதென்றும், மற்றொரு தாக்குதலை நடத்தமுடியாதென்றும் அவர் முடிவு செய்துவிட்டார்.

1944-ம் வருஷம் ஜூலைமாதம் 20-ம் தேதியன்று தன்னைக்கொல்ல முயற்சிசெய்யப் பட்டதாகவும், தளகர்த்தர்கள் கலகஞ்செய்ய ஆரம்பித்துவிட்டதாகவும் ஹிட்லர் பிரகடனம் செய்தான்.

1918-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 8-ம் தேதியன்று லூடன்டார்ப் மனோதைரியத்தை இழந்தான். பிரிடிஷ், பிரெஞ்சுப்படைகள் யார்ன்நதியிலிருந்து ஏமியன்ஸ் வரையிலுள்ள ஜெர்மன் படை வரிசைகளைப் பிளந்துவிட்டன. அதற்குச் சமாதானம் கூறும்வகையில் அவன் பின்வருமாறு வெகுகாலம் கழித்து எழுதினான். "பிரிடன் தாக்குதல் செய்த ஆகஸ்ட் 8-ம் தேதி யுத்தத்தின் கரிநாளாகும். அன்றுமுதல் நமது போர்புரியும் சக்தி சிதைவுற்றது. யுத்தத்தை நாம் நிறுத்திவிடவேண்டும்."

லூடன்டார்ப்பும், அவருடைய தலைவரான ஹிண்டன்பர்க்கும் கெய்ஸர், சர்வாதிகாரி ஹெர்ட்லிங், அயல்நாட்டு காரியதரிசி ஹின்ட்ஸ் முதலியவர்களுடன் ஸ்பாவில் கூடிப் பேசினார்கள். இரண்டு ராணுவ அதிகாரிகளும், கெய்ஸரையும், மற்ற ராஜீய நிபுணர்களையும் சமாதானப் பேச்சுக்களைத் துவக்கும்படி ஆலோசனை விடுத்தார்கள். நமது சேனைகள் எதிரியை இறுதியில் முறியடிக்க முடியுமென்று ஹிண்டன்பர்க் சொன்னதாகக் கேள்விப் படுகிறோம். ஆனால் இதை நிறைவேற்ற லூடன்டார்ப்பும் குறிப்பான திட்டத்தை கூறவக்கூட வில்லை.

ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் நேசதேசத்தார்கள் அநேக இடங்களில் தாக்குதல் செய்து துரிதமாக முன்னேறி வந்தார்கள். அப்பொழுதும் அநேக போர்முனைகளிருந்தன.

செப்டம்பர் 29-ம் தேதியன்று பல்கேரியப்படைகள் பிராங்கெட் டி எஸ்பரிஸிடமுள்ள பிரெஞ்சு செர்பியப் படைகளால் முறியடிக்கப்பட்டபின் யுத்த நிறுத்த உடன்பாட்டில் கையெழுத்திட்டன. அதன்பின் பால்கன்நாடுகள் நேசதேசவசமாயின. டான்யூப் நதிப் பள்ளத்தாக்குக்கும், ஆஸ்திரியாவுக்கும் போகும் ரஸ்தா திறக்கப்பட்டுவிட்டது. இது லூடன்டார்ப் சொன்னபிரகாரம் 1918-ம் வருஷத்திலிருந்த அச்சுநாட்டாரின் நால்வர் ஒப்பந்தத்துக்கு உலைவைத்துவிட்டது.

இதே சமயத்தில் பாக், ட்யூன் நதியிலிருந்து ப்ளாண்டர்ஸ் வரையில் தாக்குதலைத் துவக்கினான். ராலின்ஸன் ஹிண்டன்பர்க் அரணைப் பலமாகத் தாக்கினான்.

இந்த நடவடிக்கை அரணைப் பிளந்ததுடன், லூடன்டார்பின் மனோதைரியத்தையும் குலைத்துவிட்டது. லூடன்டார்ப்புக்கு வெறிபிடித்தது. ஸ்பாவில் நடந்த மற்றொரு மகாநாட்டில் அவன் கெய்ஸர், மற்ற ஜெனரல்கள், கடற்படை, நிர்வாகம், ஜெர்மன் மக்கள், முதலிய எல்லோரையும் தூஷிக்கத் துவங்கினான்.

அவ்வளவு ஆவேசமில்லாவிட்டாலும் ஹிண்டன்பர்க்கும் அவனுடன் சேர்ந்துகொண்டு மேற்குப் போர்முனை கூடிய சீக்கிரத்தில் முறிபட்டுவிடுமென்றும் சேனைகளையும், படைத் தலைவர்களின் கௌரவத்தையும் காப்பாற்ற வேண்டுமானால் நிர்வாகம் உடன்காலத்திலேயே ஜனாதிபதி வில்ஸனிடம் வேண்டுகோள் செய்துகொள்ள வேண்டுமென்றும் கெய்ஸருடன் சொன்னான்.

ஜெனரல்களின் இஷ்டப்படி கெய்ஸரும், அயல்நாட்டுக் காரியதரிசியும் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். ஜெர்மனியின் வாழ்வை நிலைநாட்டுவதற்கு ஜெர்மன் மக்கள் திறம்பட ஒத்துழைக்கவேண்டுமென்பதற்காகத்தான் அவர்கள் நீக்கப்பட்டார்களென்று கெய்ஸர் சொன்னான். ஜெர்மன் ராணுவ அதிகாரியான ஹிண்டன்பர்க்கின் அபிப்பிராயப்படி உயர்தர சேனாதிபதியாய் ஹோஹன் சாலர்ன் வம்சத்தாரின் ஆட்சியும் விலகிக்கொள்ளவேண்டிய தாயிற்று. கெய்ஸரும் காவுகொடுக்கப்பட்டான்.

இத்துடன் லூடன்டார்ப் திருப்தியடையவில்லை. 24-மணிநேரத்திற்குள் யுத்தத்தை நிறுத்த ஏற்பாடு செய்யக்கூடிய ஒரு நிர்வாகம் அமைக்கப்படவேண்டுமென்று அவன்



வற்புறுத்தினான். சரணாகதி செய்ததில் சேனைத்தலைவர்கள் பொறுப்பாளிகள் அல்லவென்று வெளிப்படுத்திவிடவேண்டுமாம்.

இந்த வேலையை பொதுஜனங்களில் ஒருவரும் ஒப்புக்கொள்ளவில்லை. சிறிய வம்சத்தைச் சேர்ந்தவரும், நேசதேசத்தாரை ஏமாற்றுவதற்காக பாசாங்கு செய்யப்பட்டதென்று ராணுவ அதிகாரிகள் எண்ணக்கூடியவகையில் கொடுமைகளை ஆக்ஷேபித்தவருமான பாடனின் மாக்ஸ் இளவரசர் சான்ஸலர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

சமாதான ஷரத்துகளைத் தயாரிப்பதற்கும், எதிரியிடம் சிபார்சு செய்வதற்கும் ஒருவார டயம் வேண்டுமென்று மாக்ஸ் கெஞ்சிக்கேட்டார். அதுவரையில் சேனைகள் சமாளித்து நிற்குமென்றும் அவர் கூறினார். சேனை கதியற்றுப் போய்விட்டதென்று நன்கு அறிந்த ஹிண்டன்பர்க் அக்டோபர் 3-ம் தேதியன்று மறுநாள் காலைக்கு முன்னதாகவே சமாதானம் செய்துகொள்ள முயற்சிக்கவேண்டுமென்று கடுமையாக உத்திரவிட்டான்.

அக்டோபர் 4-ம் தேதியன்று மாக்ஸ் இளவரசர், ஜனாதிபதி வில்ஸனுக்கு ஒரு செய்தியை அனுப்பினார். "ஜெர்மன் நிர்வாகம் தரையிலும், கடலிலும், ஆகாயத்திலும் யுத்த நிறுத்தம் ஏற்படவேண்டுமென்று வேண்டுகிறது." என்று எழுதப்பட்டிருந்தது. ஜெர்மனி யுத்தத்தில் தோற்றுவிட்டதென்று இதன்மூலம் உலகத்தாரிடம் ஜெர்மனி ஒப்புக்கொண்டது. இதற்குப் பொறுப்பாளி நிர்வாகம் தானென்று ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் தந்திரமாக வேலைசெய்துவிட்டார்கள். ராணுவ உயர்தர அதிகாரிகள் தோல்வியை ஒப்புக்கொள்ளவில்லை. உசித காலத்தில் தளகர்த்தர்களும், ஜெர்மன் சேனையும் தோல்வியடையவில்லையென்றும் நிர்வாகமும் பொதுஜனங்களும் சேனையைக் காட்டிக்கொடுத்துவிட்டதென்றும் அடுத்த யுத்தத்தில் சேனை வெற்றி பெற்றுவிடுமென்றும் சொல்ல அவர்களுக்குத் திறப்பு ஏற்பட்டது.

அக்டோபர் மாதத்தில் ஜெர்மன் கமாண்டர்கள் தங்களுடைய அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ளுவதுபோல் பாசாங்கு செய்தார்கள். படைகளை மற்றொரு இடத்திற்குத் திருப்பி அழைத்து அமைத்துவிடக்கூடுமென்று லூடன்டார்ப் மார் தட்டிக்கொண்டார். மாக்ஸை தோல்வியை ஒப்புக்கொள்ளும்படி கட்டளையிட்டிருக்கிறோமென்பதை மறந்து ஹிண்டன்பர்க் சேனைகளில் மன உறுதியை பலப்படுத்த மாக்ஸ் ஒன்றும் செய்யவில்லையென்று தூஷித்தான்.

ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் அசம்பாவமாகப் பேசினார்களேயொழிய காரியம் சைகையில் ஒன்றும் குணப்படவில்லை. அந்த மாத முடிவிலேயே பூர்ணமான இகழ்ச்சி ஏற்பட்டது. அந்த மாத முடிவில் ஜெர்மன் படைகள் பிரான்ஸிலிருந்தும், பெல்ஜியத்தின் கடற்கரையிலிருந்தும் துரத்தியடிக்கப்பட்டன. ஜெர்மனி போரிலிருந்து விலகிக்கொள்ள முடியவில்லை.

லூடன்டார்ப்பிடம் ஒரு புதிய டிவிஷன் படைமட்டும் இருந்தது. அதிலும் 1,000 பேர்கள் தானிருந்தார்கள். அவர் ராஜினாமாச் செய்து சரணாகதிக்குப் பொறுப்பைத் தவிர்த்துவிட்டார். ஆஸ்திரியா விழுந்தது. நேசதேசத்தார்கள் கான்ஸ்டான்டிநோபிளைத் துருக்கியிடமிருந்து கைப்பற்றினார்கள்.

ஒருவாரத்துக்குள் ஹிண்டன்பர்க்கின் சேனைகள் முதுகுகாட்டி ஓடின. ஜெர்மனி படையெடுக்கப்பட்டது. ராணுவத் தலைவர்கள் கெய்ஸரைக் காப்பாற்ற மறுத்துவிட்டார்கள். கெய்ஸர் பத்திரத்துக்காகத் தலைமை காரியாலயத்துக்கு ஓடினான். புதிய நிர்வாகத்தை அமைக்க வசதி கிடைத்தது. எவர் தலைவராக யிருந்தாலும் ராணுவ அமுல்தான் நடைபெறும். ராணுவ ஜாதியார் நிர்வாகத்தில் செல்வாக்குடையவர்களாக யிருப்பார்கள்.

1918-ம் வருஷம் தோல்வி ஏற்படும்போல் தோன்றியபொழுது ஜெனரல்கள் கெய்ஸரையும், நிர்வாகத்தையும் அப்புறப்படுத்தினார்கள். அவர்கள் புதிய சான்ஸலரை நியமித்தார்கள். அவர் தாராள மனப்பான்மையுள்ளவராக நடிக்கவேண்டும். அவர் சீர்திருத்த முள்ள ஜெர்மனியின் உணர்ச்சியைப் பின்பற்றவேண்டும். தோல்விக்குப் பொறுப்பை அவரும் அவருடைய கோஷ்டியும் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஹிண்டன்பர்க்கைக் காப்பாற்றி ஜன சமூகத்தை மறுமுறை பலமாகவும், விரிவாகவும் தாக்க ஜெர்மானியர்களுக்குத் தலைமை வகிக்க அவருக்கு வசதியளிக்கவேண்டும்.

1918-ம் வருஷத்தில் நடைபெற்ற சம்பவங்களை நோக்குங்கால் இதேமாதிரியாக மற்றொரு தடவை நடைபெறுமென்று கீர்த்திவாய்ந்த சரித்திரம் எழுதுகிறவர்கள் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள்.

## ஜெயமடைவதற்கு வேண்டிய முக்கிய சாதனங்கள்.

(ஜெனரல் ஸர் பெர்னுட் மாண்ட் கோமரி.)

பீல்டு மார்ஷல் மாண்ட் கோமரி முறைகளும், யுத்த திட்டங்களும் ஆகிய இந்த விஷயமானது "நியூஸ்க்ரானிகிள்" என்ற பத்திரிகையில் வெளிவந்தது. இதனை பீல்ட் மார்ஷல் மாண்ட் கோமரி ஆபிரிக்காவிலும், இதாலியிலும், எட்டாம் படையை வெற்றிகரமாய் நடத்தியபின் இங்கிலாந்துக்குத் திரும்பி வந்தபொழுது யுத்த நிருபர்களுக்குக் கொடுத்தார்.

யுத்தமிடும்போது, யுத்தமிடும் கக்ஷியினிடம் சில படைகள் கையில் உள. அவைகள் சேனையும், விமானப் படையும் எந்தக் கக்ஷி இவைகளையும் மிகவும் பயன் படுத்துகின்றதோ அக் கட்சி யுத்தத்தில் வெற்றியடையும்.

இதைப் பற்றி விவரமாய் சிந்திக்கவேண்டும். யுத்தத்தின் அடிப்படையில் பெரிதானவைகளைப் பொருத்தவரையில் சரியாயிருக்கவேண்டும். இதில் சிறிது தவறு ஏற்பட்டால், அத் தவறு மேலே மேலே தவறுகவேதான் நடந்து கொண்டுவரும்.

உண்மையில், ஜெயமளித்த முக்கிய தத்துவங்களாவன :—

தரைப் போரையோ அல்லது கடற் போரையோ நடத்துமுன் விமானப் போரை நடத்துதல் முக்கியம். யுத்தம் நடந்தவைகளை சிறிது சிந்தித்தால் பிரிடனின் எட்டாம் படை அலமீன் முதல் டுனிஷியா, ஸிஸிலி, இதாலி இவைகள் வழியாய் யுத்தம் நடத்தியபோது, விமானச் சண்டையை ஜெயிக்குமுன் நாங்கள் தரைப்போர் நடத்தவேயில்லை என்பதைக் காணலாம். இதுதான் யுத்தத்தின் முதல் தத்துவமாகும். நாங்கள் (சேனை), எதிரிகளின் விமானங்களைப் பற்றிக் கவலை யடைந்ததே கிடையாது. எங்களுக்காக ராயல் விமானப்படை போரிட்டது.

இரண்டாவதாகத் தரைப் படையும், விமானப் படையும் ஒன்றுசேர்ந்து ஒரே படைபோல் இருக்கவேண்டும். அப்படி செய்தால் ராணுவ முயற்சி அதிகமாகி வேறு எவரும் இந்த ஒற்றுமையுடன் எதிர்த்து நிற்க முடியாது.

தரைப்படை, விமானப் படையாகிய இரண்டும் யுத்தமிடும் பெரும் சாதனமாகும். இந்த யுத்தமிடும் பகுதியில் விமானப் படைப் பகுதியை ஸ்திரப்படுத்தி விமானப் படைத் தலைவரின் கீழ் வைக்கவேண்டும். இது யுத்த முறையின் 3-வது தத்துவமாகும்.

இந்த ஒற்றுமைப்பட்ட திட்டப்படி, தரைப் படைத்தலைவர் ராணுவ முயற்சிகளையும், ராயல் விமானப்படைத் தலைவர் விமான முயற்சிகளையும் செய்தல் அடுத்த தத்துவம். அதாவது சேனை, விமானப்படைத் தலைவர் விமான முயற்சிகளையும் செய்தல் அடுத்த தத்துவம். அதாவது சேனை, விமானப்படை என்ற இரு திட்டங்கள் இல்லை, ஒரே திட்டம்தான். தரைப் படை அத்துடன் விமானப்படை அந்தந்தப் படைத்தலைவர் அந்தந்த படையின் வேலைகளைக் கவனிக்கவேண்டும். சேனை விமானப் படையை தலைமை வகிப்பதில்லை. எனவே சேனை, விமானப்படை ஆகிய இரண்டும் ஒரே தலைமை ஆபீஸில் இருந்து, ஒருவருக்கொருவர் நல்ல நம்பிக்கையோடும் இருக்கவேண்டும். ஒருவரின் கஷ்டங்களை மற்றவர் உணரவேண்டும். அந்த நம்பிக்கை, ஒற்றுமை ஆகிய இவைகள் மிகவும் முக்கியம். விமானப் படைத் தலைமை ஆபீஸரும், தரைப் படை ஆபீஸரும் நெருங்கிய சிநேகிதர்களாயிருக்கவேண்டும். அதாவது தகராறு இருப்பின் பயனில்லை. ஒன்றாய் வேலை பார்ப்பதன்றியில் நல்ல சிநேகிதர்களாய் எப்போதும் வாழவேண்டும். யுத்த இயந்திரம் மிகவும் மெல்லிதானது. அது எந்த நேரத்திலும் உடைக்கலாம். ஒன்றுபட்ட நம்பிக்கை இருப்பின் இம்மாதிரி கஷ்டம் வராது.

ஒவ்வொருவரும் மற்றவரின் கஷ்டங்களை உணரவேண்டும். ராணுவ வீரன், விமானிக்கும் சில பிரச்னைகள் உள என்பதை உணரவேண்டும். உதாரணமாக நல்ல விமான தளமின்றி விமானப் படை வேலை செய்யமுடியாது. அந்த நாட்டில் தளத்தை உண்டாக்குதல் சேனையின் வேலை. விமானத்தின் வேலைகளும் இத்திட்டங்களுக்கு அவசியமாகும். ராணுவ வீரன் விமான நிலயங்களை உண்டு செய்து ஒப்புவித்தால் மட்டும போதாது என்பதை உணரவேண்டும். போக்குவரத்து சாதனங்களை ஏற்படுத்தவேண்டும். அதற்கு சிலகாலம் பிடிக்கும். இதனை ராணுவ வீரன் உணராமல் தளர்ந்தால் இந்த வேலைகள் செவ்வனே நடைபெறாது.

ராயல் விமானப் படையின் தளங்கள் காக்கப்படவேண்டும். அது சேனையாகிய நம் வேலை. விமானிகள் விமானதளத்தைப் பற்றி கண்ணுங் கருத்துமாயுளர். இதை விட்டு விட்டால் எதிர்த் தாக்குதல்கள் இருக்கும்.



அடுத்தாற்போல், சேனையைச் சேர்ந்தவன் மிகவும் விழிப்பாய் உள்ளவன் என்பதை விமானி உணரவேண்டும். உதாரணமாக வேவு பார்த்தலில் நாம் தீவிர முயற்சிகள் எடுத்துக் கொள்கிறோம். அவைகள் சரியாய்க் காக்கப்படவேண்டும் என்பது நம் குறிகோள். அவைகளுக்குத் தக்க நல்ல விமானங்கள் இல்லையேல் பயனில்லை. எனவே இந்த வேவுபார்த்தலுக்கு நல்ல விமானங்களை அளிப்பது நம் வேலை. இதனை விமானப்படை உணருதல் மெத்த அவசியம். 20,000 அடிகள் பறக்கக்கூடிய விமானங்கள்தான் வேண்டும். கீழே பறந்தால் சுடப்படும் என்பதெல்லாம் பயனில்லை.

15,000 அடிகளுக்கு மேலிருந்துகொண்டு வேவு பார்த்தல் முடியாத காரியமாகும். வேவு பார்த்தலன்றியும் பயனில்லை. அப்போது ஒரு கண்ணின்றி வேலைபார்ப்பது போலத்தான்.

தரைப் போரில் விமானங்களை உபயோகித்தல்பற்றி கவனிப்போம். இதனை வட ஆபிரிக்க யுத்தத்தில் உபயோகித்தோம். இது ஒரு முக்கியமான காரியம். அதாவது தரைப் போரில் குண்டுபோடும் வேட்டை விமானங்களின் வேலை மிகவும் முக்கியமாகும். சில சந்தர்ப்பங்களில் அகஸ்மாத்தாக நம் விமானங்கள் நம் ஜனங்களின் மேல் குண்டுகளைப் போடலாம். சேனையிலுள்ள நாம் இதை விரும்பா விட்டாலும், எதிர்பார்த்துத்தான் இருக்கிறோம். அப்படி நேர்ந்தும் தரைப்படையைச் சேர்ந்த வீரன் இதைப்பற்றி குறைகூறுவதுமில்லை. நாம் இக்கஷ்டங்களை உணருகிறோம். எனவே தரைப்போரில் விமானப் படைவேண்டாம் என்று சொல்லுவதும் இல்லை. நாம் அவைகளின் உதவியை நாடுகிறோம்.

தேர்ந்த வீரர்களோடு, முக்கியமாய், தேர்ந்த பயிற்சியோடு திறம்படைத்த வீரர்களுடைய ஜெர்மனியப்படைகளை எதிர்த்துப் போர் புரியும்போது முழுதான விமான உதவியன்றி வேறொன்றும் செய்வதற்கில்லை. விமானச்சண்டையை ஜெயிக்காவிடில் தரைப் போரில் தோல்வி நிச்சயம். எல்லோரும் ஒன்றுபட்டு ஒப்புக்கொண்டது ஒன்றுண்டு "சேனை ஒற்றுமை" என்பது. நாம் அதைப்பற்றிப் பேசுவதற்கில்லை. பாலைவன விமானப் படையும், எட்டாம் படையும், ஒன்றுபட்டு போரிட்டது. "சேனை ஒற்றுமை" என்பது வேறொன்றுமில்லை. நமக்கு இது புரியவுமில்லை. எங்கு ஒன்றுபடவில்லையோ அங்கு நடவடிக்கைகள் நடத்த முடியாது.

முடிவாய் தரைமீதுள்ள படைகளையும், ஆகாயத்திலுள்ள விமானங்களையும் ஒன்றுபடுத்தினல் அப்பொழுது யாரும் எதிர்க்க முடியாது. ஒத்தாசையில் எந்த யுத்தமும் தோல்வியுறாது.

---

## ஸீக் பிரட் அரண்.

(நியூஸ்கிரானிகிள் பத்திரிகையின் ராணுவ வியாக்யானியான மேஜர் பிலிப் கிரிப்பின்).

1937-ம் வருஷம் வசந்தகாலத்தில் ஸீக்பிரட் அரணைக் கட்டத் துவங்கினர்கள். ஸார் நதி பிரதேசத்தில் ஆரம்பமாகி, அது லக்ஸம்பர்க் எல்லை வரையிலும் பரவியது. முதல் முதலில் மாரிஸ், அபாசி, பிரெவிஸ் (டிரியர்) வரையில் அது கட்டிமுடிக்கப்பட்டது. நடு நிலைமை வகிக்கும் லக்ஸம்பர்க் வரையில் ராணுவத் தற்காப்புகள் அமைக்கப்படுவதைக் கண்டு பிரெஞ்சுக்காரர்கள் சாமர்த்தியமாகத் தங்களுடைய ஆச்சரியத்தை வெளியிட்டார்கள். 1940-ம் வருஷ முடிவில் ஸீக்பிரட் அரணின் கோட்டைகள் ஸ்விட்ஸர்லாந்தின் எல்லையிலுள்ள பாஸிலின் வெளிப்புறங்களிலிருந்து ரைன்நதி ஓரமாக கார்ல்ஸ்ரூஹி வரைக்கும் பரவி விட்டன. அங்கிருந்து அரண் மேற்கு முகமாக ஸார்நதி வழியாகச் சென்று லக்ஸம்பர்க் எல்லைக்குச் சென்றது. அதன் பெல்ஜிய, ஹாலந்து எல்லைச் சரகங்களுக்கு சமகோடாக, வடக்கு முகமாக ரைன் நதி வரையில் சென்று பிறகு ஜெர்மன் எல்லைச் சரகத்தைத் தாண்டி ஹாலந்துக்குள் சென்றது.

அதற்கு வடக்கிலும் இந்த அரண் கட்டப்பட்டிருக்கிறதென்று எனக்குத் தகவலில்லை. அப்படி அரண் கட்டப்பட்டிருந்தால், அது ரைன் நதியின் வடக்குக் கரை ஓரமாகச் சென்று டார்டிரெக் வரையில் அமைக்கப்பட்டிருக்கவேண்டும். அங்கு லரன் நதி சங்கமமாகிறது.

### ஜலாசய இடுக்கண்.

ம்யூஸ் நதியின் தாழ்வரைகளுக்கு பெல்ஜியத்திலும், ஹாலந்திலும் மாஸ் என்று பெயர் வழங்கப்படுகிறது. லரன் நதிக்கும் வால்நதிக்கும் சமகோடாக வால் நதியின் முகத்துவாரத்தில் எட்டு மைல் தாண்டியுள்ள கோரிங்கெமுக்கும் டச்சு—ஜெர்மன் எல்லைச்சரகத்திலுள்ள கென்னப்புக்கும் மத்தியில் மாஸ்முக்கிய இடையூராகயிருக்கிறது. டார்டிரெக்டுக்கும், ஜெர்மன்

எல்லைச் சாகத்துக்கும் மத்தியிலுள்ள 50 மைல்கள் கொண்ட பிரதேசத்தில் 40 மைல்களில் இரண்டு நதிகள் ஓடுகின்றன. அவ்விரண்டு நதிகளுக்கு மிடையே சில இடங்களில் மூன்று அல்லது எட்டு மைல்களுள்ள இடைவெளிதானிருக்கிறது. ரைன், வால் நதிகளுக்கு வடக்கில் சில மைல்கள் தூரத்தில் ரெடர் ரிஜன் என்னும் நதி மேற்கு முகமாக ஓடி ராட்டர்டாமுக் கருகில் சங்கமமாகுகிறது.

1941 முதல் 1943-ம் வருஷத்திற்குள்ளாக மாகிநோ அரணிலிருந்த தற்காப்புகள் கலைக்கப்பட்டன. மாகிநோ அரணிலிருந்த பெரிய பீரங்கிகளும், ஸீக் பிரட்டிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட சிறிய பீரங்கிகளும், நார்வேயிலும், டென்மார்க்கிலுமுள்ள ஐரோப்பியக் கோட்டையின் வட்டத்தைத் தற்காப்பு செய்ய வடக்கு பிரதேசத்துக்குக் கொண்டு போகப்பட்டன. மாகிநோ அரணிலிருந்த பீரங்கிகளுக்கு ஈடு செய்யவும், ஸீக்பிரட் அரணின் தற்காப்புகளை உச்ச நிலைக்கு அதிகரிக்கவும் அநேக வாரங்கள் வரையில் திட்டம்போட்டு அதைச் செய்து முடிக்கவேண்டும்.

வெஸ்ட் பேலிஷர் லாண்டஸ்—ஸீடங் பத்திரிகையில் மேற்கு அரணைக் கட்டும் வேலையைப் பற்றி பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது. ஸ்விஸ் எல்லைச் சாகத்துக்கும், வடக்குக் கடலுக்கும் மத்தியில் 1939-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் ஸீக்பிரட் அரணில் 900 தொழிலாளர்கள் கூட்டங்கள் வேலை செய்து வந்தன.

கவசங்கள் அகற்றப்பட்டன.

ஸீக்பிரட் அரண் சாச்வதமான இடையூறாக இருக்குமா அல்லது தகர்ந்து விடுமா வென்று அநேகர்கள் கேட்கிறார்கள். ஸீக்பிரட் அரண் 400 மைல்கள் நீளமுள்ளது. சாதாரணமாக அந்தக் கோட்டையில் வைக்கப்பட்டிருக்கும் தற்காப்புப் படைகளுடன் பத்து சதவிகிதம் கவசம் பூண்ட படைகளுள்ள 150 முதல்தரமான ஜெர்மன் படைப் பகுதிகள் மேற்கு ஜெர்மனியிலுள்ள ராணுவ உபயோகமுள்ள இருப்புப் பாதை, ரஸ்தா மார்க்கங்களைக் காபந்து செய்ய முற்பட்டால் ஸீக்பிரட் அரண் சாசுவதமான இடையூறாக இருக்குமென்று நாம் சொல்லக்கூடும்.

ஜெர்மனியின் ராணுவ அவசியத்தைக் கவனித்தால் மாறுபாடான தோற்றம் ஏற்படக் கூடும். 30 டிவிஷன்கள் கொண்ட ஜெர்மனியில் 7-வது, 15-வது சேனைகளில் எஞ்சியிருக்கும் படைகளைத் தவிர, கோட்டைகளிலிருக்கும் தொப்புகள் உள்பட ஜெர்மனி புதிதாக 20 டிவிஷன் படைகளுக்கு உபரியாகத் திரட்ட முடியாது. அவைகளுக்கு உதவிசெய்ய கவசம் பூண்ட சாதனங்களும் கிடையாது. அவைகளுக்கு விமானப் படையின் ஒத்தாசையும் அதிகமாகக் கிடைக்காது. திரட்டப்படும் உபரிப் படைகளும் நார்வேயிலிருந்தும் டென்மார்க்கிலிருந்தும் திருப்பி அழைக்கப் பட்டவைகளாகத்தானிருக்கும். ஆகையால் ரைன் நதியின் தாழ்வரைகளிலும், வால் நதிக் கரையிலும் எதிர்ப்பு பலமாக யிருக்கும்.

ஜெர்மனிக்குள் பலமாக ஊடுருவிச் செல்லுவதற்கு எவ்வளவு படை பலத்தை ஜெனரல் ஐசன்ஹவர் திரட்டக்கூடுமென்பதை நாம் யூகிக்கத்தான் முடியும். நேசதேசப்படைகளின் முன்னேற்றம் படைகளின் சலன சக்தியைப் பொருத்தது. சப்ளை பிரச்னையை நாம் எளிதில் தீர்த்துவிடலாம் ஆகையால் ஸீக்பிரட் அரண் பலமான தற்காப்பாக இராதென்று நான் அபிப்பிராயப்படுகிறேன்.

---

## உயர்வான திட்டமும் அமுலும்.

### மான்ட் கோமரியின் அரிய சேவைகள்.

(டைம்ஸ் பத்திரிகை).

வடக்கு பிரான்ஸிலுள்ள இரண்டு நேசதேசப் படைகளின் கமான்டைத் தானே எடுத்துக்கொள்ளப்போவதாக ஜெனரல் ஐசன் ஹவர் வெளியிட்டிருக்கிறார். உசித காலத்தில் தெற்கிலுள்ள படைகளும் அவருடைய கமாண்டுக்குட்பட்டு விடுமென்று புலப்படுகிறது. அமெரிக்க 1, 3-வது சேனைகளடங்கிய 12-வது சேனைத் தலைவராக உள்ள பிராட்லி, மாண்ட் காமரிக்குட்படாமல் தனிப்பட்ட சேனாதிபதியாகவும், சமமான அந்தஸ்துடனும் 21-வது சேனையை நடத்துவார்.

பிரெஞ்சுப் போரின் தகுதியான கட்டத்தில் இவ்வித மாறுதல்கள் ஏற்படவேண்டுமென்று ஆதிமுதற்கொண்டு முடிவு செய்யப்பட்டிருந்தது. முதல் கட்டத்தில் ஒரே போர் பகுதியில் எல்லாப்படைகளும் மாண்ட் காமரியின் நேர்முகமான கமாண்டுக்குட்பட்டிருந்தன. நடவடிக்கைகள் விருத்தியடைந்து உபரிப்படைகள் குவிக்கப்பட்டபின் பிரிடிஷ்,



அமெரிக்கப்படைப் பகுதிகள் தனித்தனியாக அமைக்கப்பட்டன. ஆகிலும் வடக்குப்போர் முனையில் மாண்ட் கோமரிதான் தலைமை வகித்தார்.

இந்தப்போர் முனையில் போருக்குத் திட்டம் வகுத்ததும், உசித காலத்தை நிர்மாணம் செய்ததும் மாண்ட் காமரி யாதலால் அவரே தலைமை வகிக்கும் ஏற்பாடு நடைபெற்றது.

ஸேயின் நதியின் தாழ்வரைகளிலிருந்து ஜெர்மனி பின்வாங்கியபொழுது புதிய நிர்வாகத்தை ஏற்படுத்த தருணம் கிட்டிவிட்டது. எல்லா முனைகளிலும் ஜெர்மானியர்களைப் பின்பற்றிச்செல்லும் நடவடிக்கையில் தன்னுடைய படைகளை நடத்துவதற்கும், அமெரிக்கப் படைகளின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கும் மாண்ட் காமரிக்கு இரண்டு இலாகாக்கள் தேவைப்பட்டிருக்கும். வடக்கில் ஜெர்மன் சேனையின் தோல்விக்கும், அதன் பின் அது பின்வாங்கி ஓடியதற்கும் மாண்ட் காமரியின் உயர்வான திட்டம்தான் காரணமென்று உலகம் பூராவும் அறியக்கூடும். இந்தப் போரில் அவர் எடுத்துக்கொண்ட பங்கு ராணுவ சரித்திரத்தில் உயர்வான திட்டத்தைப்போட்டு உசித காலத்தில் அதை அமுல் நடத்திச் சென்ற புகழை அளிக்கக்கூடும், அவருக்கு பீல்டு மார்ஷல் பதவி அளித்திருப்பதைக்கண்டு எல்லோரும் குதூகலமடைவார்கள். இது ஒரு குறிப்பான அசைக்க முடியாத திட்டமென்று நினைப்பது தவறு. இது அபத்தமான அபிப்பிராயமென்பது பின்பட்ட நடவடிக்கைகளைக் கவனித்தால் தெரியவரும். படைகளிறங்கியபொழுது அச்சு நாட்டார்கள் எந்த இடத்தில் எதிர்ப்புப் போரைத் துவக்குவார்களென்றும் தோல்வி பெற்றால் ஸேயின் நதியின் தாழ்வரைகளைத்தாண்டி வடகிழக்கு நோக்கியோ அல்லது பாரிஸ் வழியாக கிழக்கு நோக்கியோ பின் வாங்குவார்களோ என்று புலப்படவில்லை. எதிரியின்படை அமைப்புகளுக்கு ஒத்தவாறு மாண்ட் காமரி போரை நடத்த வேண்டியிருந்தது. இந்த சிரமங்களை சமாளித்து அவர் எதிரியையும் வெற்றிகரமாக முறியடித்து விட்டார்.

---

## விடுதலைபெற்ற நாடுகளின் பிரச்னை.

### பொதுஜன சங்கத்தாரின் அலுவல்கள்.

(டைம்ஸ் பத்திரிகை).

நேசதேசப் படைகளின் பொதுஜன இலாகா போர்முனைக்குப்பின் செய்துவரும் அரிய சேவையைப்பற்றிச் சில தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

ராணுவ வெற்றி விடுதலையின் முதல் கட்டமென்றும் படைகள் அவர்களுடைய வேலையை முடித்தபின் யுத்தத்தினால் ஏற்பட்ட அழிவுகளைத்திருத்தி பொதுஜன வாழ்க்கையை புனருத்தாரணம் செய்யும் வேலையை மற்றவர்கள் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று வெகு காலமாக அபிப்பிராயம் உலாவி வருகிறது. சேனையின் பொதுஜன இலாகா இந்த வேலையைத் தான் மேற்கொள்ளவேண்டும். இந்தச் சங்கத்திலுள்ள ஆயிரக்கணக்கான அமெரிக்க, பிரிடிஷ் ஆபீஸர்களும், மனிதர்களும் விசேஷமான உயர்தரப் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். அவர்கள் வேலை செய்யக்கூடிய நாடுகளைப்பற்றி அவர்களுக்குச் சிறந்த அனுபவம் பெற்றிருப்பதினால் தான் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய வேலைகளில் அவர்கள் சாதுர்யத்தையும், நல்லறிவையும், அளவு கடந்த பொறுமையையும் காண்பிக்கவேண்டும். பிரான்ஸில் படிப்பினை ஏற்பட்டதுபோல் அவர்கள் பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களை சமாளிக்க வேண்டும். நேசதேச ராணுவ அதிகாரிகளின் அநேக அலுவல்களை மேற்கொண்டு, ராணுவத்தை எதிரியை மறுமுறை முறியடிக்கும் முயற்சியில் ஈடுபடத்தூண்டி விட்டார்கள். ஆகிலும் உள்நாட்டு சங்கங்களின் ஒத்துழைப்பில்லாதிருந்தால் அவர்கள் வெற்றிகரமாக வேலை செய்திருக்க முடியாது. ஒத்துழைப்பிலிருந்து விஷி சர்க்காரின் எண்ணங்களுக்கும், ஸ்தாபனங்களுக்கும் பிரெஞ்சு மக்கள் எவ்வளவு ஆதரவளித்தார்களென்றும், ஜெர்மானியர்கள் வெளியேறுவதை அவர்கள் எவ்வளவு மனதார ஆதரித்தார்களென்றும் எதிர்ப்பு இயக்கத்தார் விடுதலையையும், ஸ்வதந்திரத்தையும் துரிதமாகவும் சுலபமாகவும் பெற எவ்வித ஏற்பாடுகள் செய்திருந்தார்களென்றும் வெளிப்படுகின்றன.

தங்கள் தேசத்தின் சுற்றுப்புறத்திற்கு அப்பாலிலுள்ள இடங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளை அறிய விடுதலைபெற்ற ஜனங்கள் மிகவும் ஆசைப்படுகிறார்களென்பது குறிப்பிடத்தக்கது. அடக்கு முறைக்குட்பட்டு அநேக வருஷங்களாக கபடமாக வெளிவரும் பத்திரிகைகள் மூலம் அதிக அபாயத்துக்குட்பட்டு, பொதுஜனங்கள் பிரான்ஸில் நடை பெற்றுவரும் உள்நாட்டு எதிர்ப்பைப்பற்றிய தகவல்களை அறிந்து வந்தார்கள். நேசதேச ஒலிபெருக்கி

கன்தான் உலக நடவடிக்கைகளை அவர்களுக்கு அறிமுகப்படுத்தின. ஆகிலும் இன்னும் அநேக தகவல்களை அறியவேண்டியிருக்கிறது. குடும்ப சம்பந்தமான அநேக தகவல்கள் தெளிவுபடவேயில்லை. இந்த வேலையையும் பொதுஜன ஊழிய இலாகா மேற்கொள்ளும். நான்கு வருடங்களாக பிரெஞ்சு மக்கள் கலைஞான, அறிவிற்குறிய போதனைகளிலிருந்து துணிக்கப்பட்டிருந்தார்கள். பிரசுரிக்கப்பட்ட புத்தகங்களும், உற்பத்தி செய்யப்பட்ட ஸினிமாப்படங்களும் ஜெர்மனிக்கு உபயோகப்படக்கூடிய வகையிலிருக்க வேண்டுமென்று ஜெர்மன் அதிகாரிகள் கட்டளையிட்டிருந்தார்கள். இன்று பிரான்ஸிலும், இதற்குப்பின் விடுதலை பெறப்போகும் நாடுகளிலும் ஸ்வதந்திர உலகம் எவ்வளவு தூரம் சகித்து நின்றிருந்ததென்றும், உலகக்ஷேமத்திற்காக எவ்வளவு தூரம் தயார் செய்து வருகிறதென்றும் வெளியிடக்கூடிய புத்தகங்களும் ஸினிமாப்படங்களும் தேவைப்படும். தண்ணீர் ஸப்ளை வசதிகள் சரியாக வேலை செய்யும்படிக்கும், வாசஸ்தல மில்லாதவர்களுக்கு வீடுகளையும், பசிப்பிணியால் வாடுகிறவர்களுக்கு உணவுப்பொருள்களையும் வழங்குவதற்கும் பொதுஜன ஊழிய இலாகா உள்நாட்டு அதிகாரிகளுடன் ஒத்துழைக்கவேண்டும். புத்தி விஸ்தாரத்துக் குறிய விஷயங்களை வழங்குவதற்கு யார் ஜவாப்தாரியென்று விளங்கவில்லை. விடுதலைபெற்ற பிரான்ஸின் பிரச்னைகளில் இது ஒன்றாகும். ஐரோப்பாவை விடுவிக்கும் நடவடிக்கை ஸ்தம்பிக்கக்கூடிய முறையில் துரிதமாக நடைபெற்று வருகிறது. நேசதேசப் படைகளைச் சேர்ந்த பொதுஜன ஊழிய இலாகா திறம்பட வேலைசெய்து வருவதுடன் சமீபகாலத்தில் நேசதேச கஷ்ட நிவாரண, புனருத்தாரண நிர்வாகத்தையும் விடுதலைபெற்ற நாடுகளில் அமைப்பது சாவதானமாகும்.

# தேசம் புத்துயிர் பெற்றது.

## முக்கியமான சம்பவம்.

(டைம்ஸ் பத்திரிகை).

ராணுவ முறையில் பாரிஸை நேசதேசத்தார்கள் ஆக்கிரமித்ததென்பது வெற்றிகரமான நடவடிக்கையில் முக்கிய சம்பவமாகும். தலைநகரத்தின் முக்கியத்துவத்தைவிட வெற்றிதான் பிரகாசமானது. ராஜீய முறையில் அவமானத்தையும், அபாரமான கஷ்டங்களையும் மனச் சோர்வன்னியில் சகித்து வந்த ஒரு தேசம் புத்துயிர் பெற்றிருக்கிறது. பொதுவான காரியத்தில் பங்கெடுத்துக்கொள்ள அதற்கு இப்பொழுது ஏராளமான சந்தர்ப்பங்கள் கிடைத்துவிட்டன.

ஐந்து வருஷங்களுக்குமுன் இந்த வேலையில்தான் பிரான்ஸ் ஈடுபட்டது. பிரான்ஸின் உதவி வெற்றிபெறுவதற்கு அத்தியாவசியமானது. பாரிஸின் ஐதிகப்படி சந்தோஷத்துடனும், குதூகலத்துடனும் விடுதலையைக் கொண்டாடிய பாரிஸ் ஜனங்கள், மகத்தான போரில் இது தாத்காலிகமான ஓய்வென்று அறிவார்கள். இந்த அறிவு ஏற்பட்டிருக்காவிட்டாலும் வைபவங்களுக்குக் குந்தகம் விளைவித்த கோர சம்பவங்கள் அவர்களுக்கு தத்வபோதம் உண்டுபண்ணியிருக்கும்.

ஜெர்மன் படைகள் இறுதியில் முறியடிக்கப்பட்டால் என்ன சம்பவிக்குமென்பதற்கும் அறிகுறிகள் காணப்படுகின்றன. மன்னிப்பு எதிர் பார்க்க முடியாத அநேக குற்றங்களைச் செய்த தனிப்பட்ட நபர்கள் கொரில்லாப் போரில் ஈடுபட்டு தங்கள் உயிரை அர்ப்பணம் செய்து விடுவார்கள்.

ஜெர்மன் ராணுவ சக்தியைப் பலமாக அழிக்கும் போரின் இறுதித் திட்டத்திற்கு எல்லா பிரெஞ்சு மக்களும் உதவிபுரிய ஆசைப்படுகிறார்கள். இப்பொழுது போரில் அமைதியான நிலைமை காணப்படுகிறது. வடக்கில் ஏற்பட்ட வெற்றிகளின் பலன்களைச் சேமித்து வருகிறோம். அடுத்த போரைத் துவக்கப் படைகள் தயாராகி வருகின்றன.

# நேசதேச பலம் செர்பர்க்கில் குவிக்கப்படுகிறது.

## யுத்தத்தின் அற்புதச் செய்கை.

(A. J. மாக்வின்னி).

செர்பர்க் அழிபட்ட இரண்டு மாதங்களுக்குப்பின் விடுதலைப் படைகளுக்கு அனுப்பக் கூடிய ஸப்ளைகளை வழங்கும் துறைமுகமாக அமைக்கப்பட்டுவிட்டது. பிரிடனின் கடலாதிக்கத்தின் மூலம் பிரான்ஸுக்கும், உலகத்தின் பண்டகசாலைகளுக்கும் தொடர்பு ஏற்பட்டுவிட்டது.



வெடிகுண்டு மூலமாகவும், சுரங்கவெடிகள் மூலமாகவும் அழிக்கப்பட்டுவரும் துறைமுகங்களையும், கப்பற் துறைகளையும், ஜெர்மனி த்வம்சம் செய்துவிட்டாலும், நேசதேசத்தாரின் புத்திகூர்மையும், பிரயாசையும் அவைகளை துரிதமாகப் பழுதுபார்த்துவிடுமென்பது நிச்சயம். போதுமான படைகளையும், தளவாடங்களையும் நேசதேசத்தார்கள் இறக்குவதற்கும் அதன்பின் முன்னேறி பிரெஞ்சுத் துறைமுகங்களைக் கைப்பற்றுவதற்கும் நார்மண்டியின் கடற்கரைகள் சௌகரியமளிக்காததால் விடுதலைக்கு இடையூறுகள் ஏற்படுமென்று ஜெர்மனி நம்பியிருந்தது.

கடற்கரைகளில் ஸ்தாபிக்கக்கூடிய கப்பற்துறைகளை பிரிடன் முன்னதாகவே தயாரித்து, அவைகளை பிரான்ஸுக்குக் கொண்டுவந்துவிடுமென்று பெர்லின் எதிர்பார்க்கவில்லை. மணற்பாங்கான பொட்டல்கள் வெகு சீக்கிரத்தில் ஸப்ளை நிலயங்களாக மாறிவிட்டன. புதிதாக அமைக்கப்பட்ட கப்பற் துறைகளில் ஏராளமான படைகளையும், சர்பராக்களையும் குவிக்க நேசதேசத்தாருக்குக் கடலாதிக்கமிருக்கிறதென்று தென்பட்டவுடன் பெர்லினில் புதிய பீதி உண்டாயிற்று. நேசதேசத்தார்கள் கூடிய சீக்கிரத்தில் துறைமுகங்களைப்பிடித்து அதன் வழியாக ஏராளமான தளவாடங்களைக் குவித்துவிடுவார்களென்ற எண்ணம் தோன்றிவிட்டது.

### பூராவாக திருத்தியமைக்கப்பட்டது.

செர்பர்க் நேசதேசவசமாகிவிட்டால் அதை முக்கியமான கப்பற் துறையாக உபயோகிப்பார்கள் என்று ஜெர்மனி கவலைகொண்டிருந்தது. செர்பர்க்கைக் காலிசெய்யும்படி நிர்ப்பந்தம் ஏற்பட்டால் அதைப் பூராவாக அழித்துவிடவேண்டுமென்று உத்திரவிடப்பட்டிருந்தது. செர்பர்க் பலமாக தகர்க்கப்பட்டிருந்ததால் அதைக் கைப்பற்றிய நேசதேசப்படைகளுக்கு, அது சிறிதும்கூட உபயோகப்படாதென்று ஜெர்மனி நினைத்தது.

ஆனால் இன்று அந்தக் கப்பல்துறை நன்கு உபயோகமுள்ளதாக ஆகிவிட்டது. அதில் ஏராளமான கப்பல்கள் சாமான்களை இறக்குவதும், பின்பு திரும்பி பிரிடனுக்கு வருவதும் சிறப்புடன் நடைபெறுகின்றன. உடைபட்ட துறைமுகங்களைப் பழுதுபார்க்க முன் கூட்டியே திட்டம்போட்ட ஆங்கிலோ—அமெரிக்கக் கடற்படை இலாகாவினுடையவும், இஞ்ஜினியரிங் நிபுணர்களுடையவும் புத்திசாலித்தனம் இதிலிருந்து வெளிப்படுகிறது.

இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குள் சமாதான காலத்தைப்போல் இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிகமான இறக்குமதியை மேற்கொள்ளக்கூடிய வகையில் செர்பர்க் அமைக்கப்படுமென்று நான் நினைக்கிறேன். தினசரி ஏராளமான பிரிடிஷ், அமெரிக்க, நேசதேச சாமான் கப்பல்கள் செர்பர்க்குக்குவந்து கப்பற்துறையில் டாங்கிகளையும், பீரங்கிகளையும், படைகளையும், வண்டிகளையும் விடுதலைபெற்ற பிரெஞ்சு மக்களுக்கு உணவுப்பொருள்களையும் இறக்கிவருகின்றன. செர்பர்க்கின் புனருத்தாரணம் யுத்தத்தில் அற்புதச் செய்கையாகும்.

இந்த பிராந்தியத்தில் இவ்வளவு கப்பல்கள் வருவதையும், துறைமுகத்தை பிரயோஜனமற்றதாகச் செய்த தங்களுடைய முயற்சி வீணாகப்போனதையும் கண்டு ஜெர்மன் யுத்தக் கைதிகள் திகைத்து நிற்கிறார்கள். ஹிட்லருக்காகப் போர்புரிந்தபொழுது அவர்கள் அறியக் கூடாவிட்டாலும், கடலாதிக்கம் உலகத்திலுள்ள ஸப்ளை நிலயங்களுக்கும், ஆயுதசாலைகளுக்கும் தேசங்களுக்குமிடையே தொடர்பு ஏற்படுத்திவிடுமென்றும், கடலாதிக்கமில்லாவிட்டால் உலகத்திலிருந்து எந்த தேசமும் துணிக்கப்பட்டுவிடுமென்றும் அவர்கள் இப்பொழுது அறிந்துவிட்டார்கள்.

### சுரங்கவெடிகள் அழிக்கப்பட்டன.

சுரங்கவெடிகளை அழிக்க நேசதேச நிபுணர்கள் செய்திருக்கும் ஏற்பாடுகளை ஒழிக்க ஜெர்மனி சக்தியற்றுவிட்டதென்று கண்டு ஜெர்மன் சுரங்கவெடி தலைமை காரியாலயத்தில் தீவிர மாற்றம் உண்டாகிவிட்டது. பிரிடிஷ், அமெரிக்க சுரங்கவாரிக் கப்பல்களும், துறைமுகத்தை சுத்திசெய்யும் நிபுணர்களும் செர்பர்க்கில் மகத்தான வேலையைப் பூர்த்தி செய்திருக்கிறார்கள். அவர்களின் வேலைத்திறமையின் மூலம் துறைமுகத்திற்கு ஏராளமான கப்பல்கள் வருவதுடன் அவைகள் பெர்லின் சொல்லுகிறபடி ஏராளமாகப் பாவப்பட்ட ஜெர்மனியின் சுரங்கவெடிகளையும் அழித்திருக்கின்றனவென்றும் ருஜுவாகிறது.

செர்பர்க்கில் நிகழ்ந்ததைப்போல் பிரெஸ்டிலும், பிஸ்கே விரிகுடாவிலுள்ள மற்ற துறைமுகங்களிலும் நடைபெறவேண்டும். செர்பர்க்கை புனருத்தாரணம் செய்த அற்புதச் செய்கை பிரெஸ்ட், லோரியான், ஸெயிண்ட் நாஸரே, மார்ஸேல்ஸ், லேனிலும் நடைபெறும். கடலாதிக்கம் இதைப் பூர்த்திசெய்துவிடும்.

# தென்கிழக்கு ஐரோப்பாவில் ஜெர்மனியின் சிதைவு.

## பல்கேரியா கட்சி மாறியதின் விளைவு.

(டைம்ஸ் பத்திரிகை.)

தென்கிழக்கு ஐரோப்பாவில் ஜெர்மனியின் அக்ககரமான நடவடிக்கை முடிவடைந்து வருகிறது என்று டைம்ஸ் பத்திரிகை எழுதியிருக்கிறது. இந்தத் துணிவு நடவடிக்கைக்கு அநேக லக்ஷியங்கள் இருந்தன. உதாரணமாக, சில உபயோகமுள்ள யுத்த தளவாடங்கள் ஜெர்மனிக்குக் கிடைத்தன. ருமேனிய எண்ணெயைத்தவிர பாக்கி எல்லாம் ராஜதந்திர முறையில் அகஸ்மாத்தாக கிடைத்த லாபங்கள்தான்.

ஜெர்மனியின் சிதைவு ஆரம்பமாகி விட்டது. இது வரவர விருத்தியடையும்போல் தோன்றுகிறது. யுத்தங்களின் இறுதிக்கட்டங்களின் குணபாகமான ராணுவ, ராஜிய அவசியங்களின் கட்டாயத்தின் பேரில் இந்த அழிவு ஏற்பட்டுவருகிறது. இது தென்கிழக்கு ஐரோப்பாவின் விசேஷ குணமாகும்.

ராணுவ அவசியமென்பது தெளிவாகவும் முடிவான முறையிலும் காணப்படுகிறது. தெற்குப் பகுதியிலுள்ள ஜெர்மன் சேனைகளின் கதி ஏற்கனவே மோசமாகி விட்டது. 24 ருமேனிய டிவிஷன்களை இழந்தபின் ஜெர்மன் படையின் நிலைமை இன்னும் மோசமாகி விட்டது.

பின்வாங்கும் ஜெர்மானியர்களுக்கு மற்றொரு அவகேடும் ஏற்பட்டிருக்கிறது. பல்கேரியா கட்சி மாறிவிட்டது. ருமேனியாவைப்போலவே ஜெர்மனியின் தோல்வி நிச்சயம் என்று கண்டுபிடித்து யுத்த நிறுத்த வேண்டுகோளை விடுத்திருக்கிறது. ராணுவ முறையில் ஜெர்மனியிடமிருந்து பல்கேரியா இனிமேல் ஒன்றும் பயப்படுவதற்கில்லை. ஜெர்மனியை விட்டு அது கட்சி மாறிவிட்டதால் தென்கிழக்கு ஐரோப்பாவில் ஜெர்மன் ஆதிக்கத்தைக் குலைக்க மற்றொரு திறப்பும் உண்டாகிவிட்டது. இந்த சம்பவங்களிலிருந்து அநேக விளைவுகள் உண்டாகலாம்.

யூகோஸ்லாவியாவிலிருந்தும், கிரீஸிலிருந்தும் ஜெர்மன் துருப்புகள் துரிதமாகப் பின்வாங்காவிட்டால் ஜெர்மனிக்குச் செல்லும் மார்க்கம் வழி மறிக்கப்பட்டுவிடும். அவைகள் பின்வாங்குவதும் சிரமசாத்தியமானவை. வெகுதூரத்திலுள்ள ஜெர்மனியின் எல்லைச்சரகத் தற்காப்புகளுக்கு அபாயம் ஏற்படுமென்று ஜெர்மனி எதிர்பார்த்திருக்கலாம். ஆனால் அந்த அபாயம் எதிர்பார்த்ததற்கு முன்னதாகவும் கோரமாகவும் தோன்றிவிட்டது.

உள்நாட்டுக் கோட்டைக்குள் ஜெர்மனி இறுதியில் பின்வாங்கிவிடும் என்று எல்லோரும் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் அந்த அவசியம் ஏற்படும் பொழுது அதைச் சாதித்துக்கொள்ள அதற்கு சௌகரியம் இருக்குமா என்பதை ஒருவரும் நினைத்துப்பார்க்கவில்லை. இந்தச் சங்கடம் தென்கிழக்குப் போர்முனையிலும், பிரான்ஸின் வடகிழக்கு மூலையிலும் ஏற்பட்டிருக்கிறது. ஜெர்மனியைத் தற்காப்பு செய்ய பின்வாங்கி வரக்கூடிய ஜெர்மன் சோல்ஜர்களை மார்க்கங்களில் கடுமையாகத்தாக்கி அழித்து அவர்களின் முஸ்தீப்புகளையும், தளவாடங்களையும் குறைத்து விட்டோமானால் ஐரோப்பிய யுத்தத்தின் இறுதி கட்டத்தில் ஏற்படும் அழிவு குறைவுபடக்கூடும். இவ்விதமான முயற்சியில் ஈடுபடுவது அவசியமென்று நேச தேசப்படைகள் முழுவதும் அறிகின்றன.

ருமேனியாவைப் பின்பற்றிய பல்கேரியா கட்சி மாறியதின் காரணமாக பொதுவான லக்ஷியத்தின் இறுதி நடவடிக்கைக்கு ருஷ்யாவின் பேருதவியும் கிடைப்பதற்கு வசதி கிடைத்துவிட்டது.

---

# பின்லாந்தின் ராணுவ முக்கியத்துவம்.

இதுவரையில் பின்லாந்து ஜெர்மனிக்கு எவ்வளவு ராணுவ முக்கியத்துவமுள்ளதாக யிருந்தது? அது இப்பொழுது யுத்தத்திலிருந்து விலகிக்கொண்டுவிட்டதால் ராணுவ முறையில் என்ன விளைவுகள் ஏற்படக்கூடுமென்பதையும் விளக்கிக் காட்டுவோம்.

பின்லாந்து சிறிய நாடுகளில் ஒன்றென்று கருதப்படுகிறது. அதன் ஜனத்தொகை 4 மிலியன்தான். 60-வது டிகிரி முதல் 70-வது டிகிரி வரையில் ஆர்டிக் வட்டத்திற்குள் வெகுதூரம் செல்லும் பின்லாந்து, பிரிடன், வடக்கு அயர்லாந்து இரண்டையும் விட அதிக விஸ்தாரமுள்ளது. லெனின்கிராட்டுக்குச் சமீபத்திலுள்ள பின்லாந்து வளைகுடாவிலிருந்து



வடக்கு ஆர்டிக்கிலுள்ள ரிபாசி தீபகற்பம் வரையிலும் 700 மைல்கள் தூரமிருக்கிறது. இந்த பரப்பு ஓரமாக ருஷ்ய பின்னிஷ் எல்லைச் சரகம் அமைக்கப்பட்டிருப்பதால் பின்லாந்து யுத்தத்தில் பங்கெடுத்துக்கொண்டதில் விசேஷமிருக்கிறது.

1941-ம் வருஷம் ஜூன் மாதத்தில் வெளிப்படையாகத் தானாகவும் உண்மையில் நிராக்ஷேபணையாக ஜெர்மனியின் நேசநாடாகவும், பின்லாந்து யுத்தத்தில் கலந்துகொண்ட பொழுது ருஷ்யாவுக்கு அபாயம் ஏற்பட்டது. இதே விதமான அபாயத்தை 1939-ம் வருஷம் மாரிகாலத்தில் பின்லாந்துடன் பேரத்தினாலும், மாரிகால யுத்தத்துக்குப் பின் சமாதானத்தினாலும் குறைத்துவிட ருஷ்யா முயற்சித்தது. பின்லாந்து நடுநிலைமை வகித்திருந்தால் லெனின்கிராடின் பின்பக்கம் அபாயத்துக் குட்பட்டிராது. ருஷ்யாவிலிருந்து லெனின் கிராட் இவ்வளவு பரிஷ்காரமாக துணிக்கப்பட்டிராது. மிலியன்கள் கணக்கான ஜனத்தொகையுள்ளதும், நிவா நதிக்கரையிலுள்ளதுமான நகரம் அளவுகடந்த சிரமங்களை அனுபவிக்கவேண்டியதில்லை.

ஜெர்மனிக்கு பின்லாந்தின் உதவி இத்துடன் நின்றுவிடவில்லை. பின்லாந்து போரில் ஈடுபட்டதால் பின்லாந்து வளைகுடாவில் ஜெர்மன் விமானங்களும், கடல் படைகளும் நடமாட வசதி ஏற்பட்டது. பால்டிக் நாடுகளை, முக்கியமாக எஸ்தோனியாவைப், பிடிக்க பின்லாந்திலிருந்த விமான தளங்களிலிருந்து புறப்பட்ட ஜெர்மன் விமானங்கள் பேருதவி செய்தன.

அதற்கும் வடக்கில் பின்னிஷ் போர்முனையில் தாக்குதல் ஏற்பட்டதால் வடக்கிலுள்ள பனிக்கட்டியில்லாத மர்மான்ஸ்க் துறைமுகத்துக்கும், ருஷ்யாவுக்கும் உள்ள போக்குவரத்துக்கு அபாயம் ஏற்பட்டது. லெனின்கிராடிலிருந்து லடோகா, ஒனிகா, ஏரிகள் வழியாக மர்மான்ஸுக்குப் போகும் இருப்புப் பாதை சில காலத்துக்குத் துணிக்கப்பட்டது. ஆர்க்கேஞ்சலில் பனி உறைந்திருந்தபொழுது முதல் வருஷ யுத்தத்தின் மாரிகாலத்தில் ருஷ்யாவுக்கு நேசதேசத்தார்கள் அனுப்பிவந்த ஆயுதங்களின் ஸப்ளை மார்க்கம் அடைபட்டுவிட்டது. மர்மான்ஸ்க் கோட்டின் வடக்குப் பகுதியிலிருந்து ஆர்க்கேஞ்சல்-மாஸ்கோ இருப்புப் பாதைக்கு கிளை மார்க்கம் அமைக்கப்பட்டபின்தான் போக்குவரத்து ஆரம்பமாயிற்று. அதிக சிரமத்துடனும், ஜல சலன சாஸ்திரத்தின் அற்புதச் செய்கையாகவும் அமைக்கப்பட்ட ஸ்டாலின் கால்வாய்க்கும் பின்லாந்திலிருந்து ஆபத்து ஏற்பட்டது. மேலும் அதன்பேரில் அச்சுநாட்டுத் துருப்புகள் குண்டுகளை வீசின.

கடைசியாக மர்மான்ஸ்க் துறைமுகத்துக்கும் அபாயம் நேரிட்டது. வடக்குக் கோடியிலுள்ள நீண்ட ஆர்டிக் போர்முனையில் ஜெர்மன் ஜெனரல் டீடலின் கமாண்டுக்குட்பட்டு பலமான படைகளை வைத்திருந்தது. ருஷ்யப் படைகளுடையவும், கடற் படையினுடையவும் ஊக்கமான எதிர்ப்பினாலும் ஆர்டிக் கடற்படையைச் சேர்ந்த மாரின் படைகளின் நடவடிக்கையினாலும் மர்மான்ஸ்கில் ருஷ்யப்படைகள் சமாளித்து நின்றன. முதலில் ஹரிகேன் விமானங்களும், பின்பு ருஷ்ய விமானப்படையும் வெற்றிகரமான தற்காப்பில் விசேஷப் பங்கெடுத்துக்கொண்டன.

---

# 1944-ம் வருஷம் வேனிற் காலத்தில் போர் புரியும் ஜெர்மன் ஸோல்ஜரின் நிலைமை.

(அலெக்ஸாண்டர் வெளிப்போர்ட்).

1944-ம் வருஷ வேனிற் காலத்தில் பிரான்ஸில் போர் புரியும் ஜெர்மன் மாதிரி ஸோல்ஜரை கேயன் முனையில் போர் புரிந்த கைதிகளில் தேடினேன். ஒருவரும் அகப்படவில்லை.

பிரிடிஷ் ஸோல்ஜர்களைப்போல் ஜெர்மன் ஸோல்ஜர்களைப்பற்றி நாம் பொதுப்படையாக ஒன்றும் சொல்லுவதற்கில்லை. யுத்தத்தைப் பற்றியும், ஜெர்மனியைப் பற்றியும் ஜெர்மன் ஸோல்ஜர் என்ன நினைக்கிறானென்றும், இவன்தான் ஜெர்மனியின் சிறந்த ஸோல்ஜரென்றும் சொல்லுவதற்கில்லை.

வெறி கொண்டவர்களைத் தள்ளி விடவேண்டும். விசுவாசமுள்ள அநேக நாஸிகள் இருக்கிறார்கள். சிலர் ஜெர்மனி வெற்றி பெறும் ஜெர்மனியின் பூரா சாமர்த்தியமும் வெளியாகவில்லை, என்று சொல்லுகிறார்கள். சிலர் "நாம் உபயோகமற்ற போரை நடத்தி வருகிறோம். ஆகிலும் நல்ல விஷயத்தில் நாம் உயிரை விடத்தயாராக இருக்கவேண்டும்" என்று சொல்லுகிறார்கள். உண்மையை உரைப்பவர்களையும் நாம் விலக்கிவிடவேண்டும்.

சில புத்திசாலிகளும், கஷ்டங்களை அனுபவித்தவர்களும், சுதந்திரத்தை விரும்புகிறவர்களும், முன்பு பொது உடமைக் கக்ஷியைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். ஆனால் அவர்களும் சரியான ஜெர்மன் ஸோல்ஜர்களல்ல.

### சாமானிய சிப்பாய்கள் சமூகம்.

திகைப்புற்று, மன உறுதி குலைந்து உத்சாகமற்றிருக்கும் ஜெர்மன் சேனையிலிருந்து தான் மாதிரி ஜெர்மன் ஸோல்ஜரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

1940-ம் வருஷத்தில் அகம்பாவத்துடன் அவர்கள் நாஸிகளை ஆதரித்தார்கள். அப்பொழுது ஜெர்மனிக்கு வெற்றிகள் கிடைத்துவந்தன. அவர்களுக்கு சிலாக்கியமான முஸ்தீப்புகளும் இருந்தன.

கைது செய்யப்பட்டால் பாதகமில்லையென்று அவர்கள் நினைத்தார்கள். யுத்தம் முடிந்தவுடன் அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்ற எண்ணம் அவர்களுக்கு உண்டாகி இருந்தது.

அப்பொழுது அவர்களுக்கு வெற்றி கிடைத்து வந்ததால், அவர்கள் ஹிட்லரை ஆதரித்து வந்தார்கள்.

அவர் உத்சாகம் ஊட்டினார். ஸோல்ஜர்களும் போர் புரிந்து உயிர் துறக்கத்தயாராக இருந்தார்கள், ஆகையால் கைது செய்யப்பட்டாலும் நாங்கள் ஹிட்லருக்காக போர் புரிகிறோமென்று அவர்கள் சொல்லி வந்தார்கள்.

### நம்பக்கூடியதில்லை.

இந்த உத்சாகம் குறைந்துவிட்டது. ஆனால் சாவதானமாக இது நடைபெற்றது.

இப்பொழுதுதான் சாதாரண ஜெர்மன் ஸோல்ஜர்கள் ஜெர்மனி யுத்தத்தில் தோற்றுவிடுமென்று உணருகிறார்கள்.

நார்மண்டியில் போர் புரியும் ஸோல்ஜர்கள் இது வரையில் ஆக்கிரமிப்பு நாட்டில் அமுல் நடத்தி வந்தார்கள்.

அவர்களுக்கு அழகாக சிருஷ்டி செய்யப்பட்ட தகவல்கள்தான் அனுப்பப்பட்டன. தங்களுடைய நிலைமை வலுவாகவும், சிறப்பாகவும் இருக்கிறதென்று அவர்களுக்குத் தோன்றிற்று.

அவர்கள் தங்களுடைய முகாம்களில் வாழ் நாளைக் கழித்து வந்தார்கள். நேசதேசத்தாரின் சக்தி ஓங்குகிறதென்று அவர்களுக்கு ஒரு அடையாளமும் கிடைக்கவில்லை.

இவ்வளவு திறமையுடன் போரை ஆரம்பித்து வெற்றி பெற்ற பின் போரில் தோல்வியடையப் போகிறோமென்பதை அவர்கள் சுலபமாக நம்பவில்லை.

காலக்கிரமத்தில் உண்மைகள் புலப்பட்டன. அதன் பின் அவர்கள் நம்முடன் போர் புரிந்து நம்முடைய வலிமையை உணர்ந்துவிட்டார்கள்.

### இன்னும் போர் புரிகிறார்கள்.

அநேகர்கள் இன்றும் கடுமையாகப் போர் புரிகிறார்கள். ஹிட்லர் அவர்களைக் கைவிட்டுவிட்ட போதிலும் அவர்கள் போரை நிறுத்தவில்லை. அவர்கள் தாய் நாட்டைக் காப்பாற்றப் போர் புரிகிறார்கள் அவர்களுக்குப் போர் புரிவதுதான் இயல்பு.

இன்று ஜெர்மன் ஸோல்ஜர் திகைப்படைகிறான். என்ன நேரிடுமோவென்று அஞ்சுகிறான்.

உண்மையை அவனுக்கு உரைப்பவர் ஒருவருமில்லை. ஜெர்மனி அற்புதமான நடவடிக்கையால் தான் காப்பாற்றப்படுமென்று அவன் நினைக்கிறான். ஆகிலும் அற்புதங்கள் அபூர்வமென்றும் அவன் அறிவான்.

### உபயோகமற்றவர்கள்.

1944-ம் வருஷத்தில் காணப்படும் ஜெர்மன் ஸோல்ஜர்கள் 1940-ம் வருஷத்திய ஸோல்ஜர்களைவிட மெல்லிய சரீரமுள்ளவர். சிறிய ஆகிருதி உள்ளவர். போஷணைக்குறைவு ஏற்பட்டிருப்பதென்பதில்லை. இப்பொழுது காணப்படும் ஸோல்ஜர்கள் உபயோகமற்றவர்கள்.

சக்தியுள்ளவர்களும் வெறி பிடித்தவர்களும் அநேகமாக இறந்திருப்பார்கள் அல்லது ஜெர்மன் ரகசியப் போலீஸில் கலந்து ஜெர்மனியைத் தற்காப்பு செய்து வருகிறார்கள்.

அவனுடைய ஆடைகள் கோரமாகயிருக்கின்றன. அவைகள் முன்னைவிட அதிக காலம் நீடித்திருக்கவேண்டும். ஒன்றையும் வீணாக்கக்கூடாது.

இந்தத் துணிகளில் அதிகமான சேர்மானமிருக்கிறது. இதை மறைத்துக்கொள்ள 1941-ம் வருஷத்திய ஜெர்மன் ஸோல்ஜர் இரண்டு துண்டுள்ள ஒரு ஆடையை அணிந்து கொண்டிருக்கிறான்.



நார்மண்டியிலுள்ள ஸோல்ஜர்கள் இன்று
அவருடைய பழக்க வழக்கங்கள் மாறிவிட்டன.
குறுகலான அகழ்களைத்
வேலிகளுக்கும் சுவர்களுக்கும் பின் புறத்தில் மிகவும் ஆழமான,
தோண்டிக்கொண்டிருக்கிறார்கள்.

நாம், பருந்துப் பாய்ச்சல் விமானங்கள் நம்மைத் தாக்கியபொழுது குழிகளைத் தோண்டியதைவிட அதிக சிரமப்பட்டு அவர்கள் குழிகளைத் தோண்டி வருகிறார்கள்.

அவனுடைய முஸ்தீப்புகளும் மாறிவிட்டன. ஏற்கனவே வழங்கிய முஸ்தீப்புகள் இப்பொழுது வழங்கப்படுவதில்லை.

### யுத்த தந்திரத்திலும் மாறுதல்.

அவனுடைய ஆயுதங்களும் மாறிவிட்டன. சட்டி பீரங்கிகள் அதிகமாக உபயோகப்படுகின்றன.

1944-ம் வருஷத்திய ஜெர்மன் சட்டி பீரங்கிப்படை ஓடிக்கொண்டேயிருக்கவேண்டும்.
இல்லாவிட்டால் அவைகளை பிரிடிஷ் பீரங்கிகள் நொருக்கிவிடும்.

கவசம் பூண்ட மோட்டார்
அவனுடைய போக்குவரத்து சாதனங்களும் மாறிவிட்டன.
அநேக சாமான் வண்டிகள் ரஸ்தாக்களில் சுட்டுத்தள்ளப்
கள் அழிக்கப்பட்டுவிட்டன.
வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டன.
பட்டன. அநேக எண்ணெய் சுத்திகரிக்கும் சாலைகள்

இப்பொழுது போக்குவரத்து வண்டிகளைக் குதிரைகள் இழுத்துச் செல்லுவதால்
நார்மண்டியிலுள்ள ஜெர்மானியர்களுக்கு அதிக சங்கடம் ஏற்பட்டிருக்கிறது.

அவனுக்கு அனுப்பப்படும் உணவுப்பொருள்கள் சொல்பமாகவும், நிகுதியில்லாமலும்
வந்து கொண்டிருக்கின்றன.

அவனுக்குக் கடிதங்கள் அநேக வாரங்கள் கிரமித்து வருகின்றன. அவனுக்குப்போதுமான வெடிமருந்துகள் கிடைப்பதில்லை.

பிரிடனைப் போலவும், அமெரிக்காவைப் போலவும் ஜெர்மனி பெரிய பீரங்கிகளை உற்பத்தி செய்திருக்கவேண்டுமென்று 1944-ம் வருஷத்திய ஜெர்மன் ஸோல்ஜர் அபிப்பிராயப்படுகிறான்.

### விளையாட்டல்ல.

ஜெர்மனியில் டாங்கிகள் சிறந்தவையென்று அவன் ஆச்வாசமடைகிறான். ஆகிலும் அவைகளை அழிக்கக்கூடிய ஏராளமான ஆயுதங்களும் தயாராகயிருக்கின்றன.

ஆகாயப்படை நிலைமையும் திருப்தியாக இல்லை. விமானப்படை உதவியன்னியில் போர்புரிய ஜெர்மன் ஸோல்ஜர் திறம் படைத்தவன். ஆகிலும் இது சுலபமானதல்ல.

ஜெர்மன் சேனை ஆரம்பம் முதல் பெற்றிருந்த சக்தியை இன்னும் அது பரிபாலித்து வருகிறது. அநேக பாகங்கள் அபாரமாகயிருக்கின்றன. பிளவுகள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகள் சோர்வடைந்து விட்டன.

ஆகிலும் அவைகள் திறமையுடன் வேலை செய்து வருகின்றன.

அதன் யந்திரங்களும் வேலைக்காரர்களும் உபயோக மற்றவை.

அதன் தளகர்த்தர்களும் திரம்
பயிற்சி அளிக்கும் காலம் குறைக்கப்பட்டு விட்டது.
பெற்றவர்களல்ல.

### உபயோகமற்ற ஆயுதங்கள்.

தூரத்திலிருந்து கண்ட்ரோல் செய்யப்பட்ட சிறிய ஆயுதங்களைக் கொண்டு சரிப்படுத்த முயலுகிறார்கள். இந்தக் குறையை
தரத்தின் குறைவை இந்த அற்ப யந்திரங்கள்
சரிப்படுத்த முடியாது.

அதிக பிரயாசை பேரில்தான் படைகள் ஒன்றுபடுத்திவைக்கப் பட்டிருக்கின்றன.
அநேக பாகங்களில் அவைகள் உறுதியுடனிருப்பதால் அவைகளைச் சரியானபடி தகர்த்து
விடவேண்டும். அவைகள் இன்னும் அபாரமான நஷ்டத்தை உண்டு பண்ணக்கூடும்.

ஜெர்மனியின் முயற்சிகளை முறியடித்து விடுவோமென்று நாமும் 1944-ம் வருஷத்திலுள்ள ஜெர்மன் ஸோல்ஜரும் அறியக்கூடும்.

# இந்தோ-சைனுவில் ஜப்பானின் பீதி.

## டெகோவுக்கு ஏதேச்சாதிகாரம்.

(ஜோஸப் கால்மர்).

விஷி அரசாங்கத்தாரின் தீர்மானப்படி பிரெஞ்சு இந்தோ-சைனுவின் கவர்னர் ஜெனரலான உதவி கடற் தளபதி டெகோவுக்கு யுத்த சம்பந்தமாக அத்தியாவசியமான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள பூரண அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறதென்று 1941-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 20-ம் தேதியன்று செய்கோனுக்கு உத்தியோகமுறையில் தகவல் எட்டியது. விஷி நிர்வாகம் தலை நகரைவிட்டு ஓடும் நிலைமையிலிருந்ததாலும், அதற்கு அச்சமயத்தில் அநேக இதர கவலைகளிருந்ததாலும், இந்த உத்தரவு பெர்லினிலிருந்தாவது அல்லது டோக்கியோவின் ஆலோசனைப்படியாவது சாதார செய்யப்பட்டிருக்கும் என்று தோன்றுகிறது.

தெற்கு பிரான்ஸில் ஜெனரல் பாட்ச் படைகளை இறக்கியபொழுது, ஜப்பானிய அயல் நாட்டு ஸ்தானிகரும் அவருடைய சிப்பந்திகளும் உடன் காலத்திலேயே ஜெர்மனிக்குப் புறப்பட்டுவிட்டார்கள். விஷி முடிவு செய்தது என்ற ஒரு உத்தரவை அவர் ஜெர்மனியிடமிருந்து பெற்றிருக்கலாம். இந்த முடிவுக்கு விஷி நிர்வாகத்தின் அங்கத்தினர் வந்திருந்தால் அவர் ஒரு ஏமாற்றத்தின் பேரில்தான் அவ்விதம் செய்திருக்கவேண்டும். ஏனென்றால் இந்தோ-சைனுவின் ஏதேச்சாதிகாரியாக டெகோ நியமிக்கப்பட்டபின் பிரெஞ்சு குடியேற்ற நாட்டில் ஜப்பானின் பேராசைக்கு இருந்த முட்டுக்கட்டை எடுபட்டுவிட்டது.

இதுவரையில் ஜப்பான் விடுத்த வேண்டுகோளை மறுதளிக்கக் கூடிய சமயத்தில் அவர் விஷி நிர்வாகத்தின் ரக்ஷணையைப் பெற்றிருந்தார். அங்கே ஜெர்மனியின் உதவிகொண்டு பிரெஞ்சு அதிகாரிகளிடமிருந்து சலுகைகளையும், சட்டமறுப்பு உத்தரவுகளையும் ஜப்பானிய ஸ்தானிகர் பெறவேண்டியிருந்தது. இந்த நடவடிக்கைகள் சம்பந்தமாக டெகோ பொருப்பேற்றுக்கொள்ள மறுத்தார். இப்பொழுது அவ்வித நடவடிக்கைகளின் அவசியம் மறைந்துவிட்டது. இந்தோ-சைனு டோக்கியோவிலிருந்து வரும் உத்தரவுகளுக்குக் கீழ்படிந்து நடக்கவேண்டும்.

### பாதகமான நடவடிக்கை.

பிரான்ஸ் வீழ்ச்சி பெற்றபின் ஜப்பான் இந்தோ-சைனுவை விழுங்குவதற்கு ஜெர்மனிதான் வழியைக் கற்பித்தது. பேர்ல் துறைமுக நடவடிக்கைக்கும் தூரக்கிழக்கிலுள்ள பிரிடிஷ், டச்சு நாடுகளை ஆக்கிரமிப்பதற்கு முன்னும், பிரெஞ்சு குடியேற்ற நாடுகளில் தளங்களை ஜப்பான் ஏற்படுத்தி துருப்புகளை ஏராளமாகக் குவித்ததினால்தான் 1941-ம் வருஷம் டிசம்பர் மாதம் 8-ம் தேதிக்குப்பின் ஜப்பானின் மேற்கொண்ட ராணுவ நடவடிக்கைகளுக்கு அதிக சாதகம் ஏற்பட்டது. நாட்டைக் கொள்ளையடிக்கக்கூடியவகையில் இந்தோ-சைனு அதனுடன் பொருளாதார ஒப்பந்தத்தைச் செய்யும்படி நிர்ப்பந்தப்படுத்தப்பட்டதென்பது ஜப்பானியப் படைகள் அங்கு ஏராளமாகக்குவிந்திருந்ததால் முன்கூடியே செய்யப்பட்டதாகும். ஒன்றுபட்ட தற்காப்புக்காக நிறுவப்பட்ட உடன்படிக்கையும் மிகவும் முக்கியத்துவமுள்ளது. அதற்கு சில குறைபாடுகளிருந்தன. பிரெஞ்சு இந்தோ-சைனுத் துருப்புகள் தெற்கு சைனுவின் எல்லைச் சரகங்களைத் தற்காப்பு செய்ய ஏவப்பட்டார்கள். அவர்கள் ஒரு பொழுதும் ஜப்பானுடன் நன்றாய் ஒத்துழைக்கவில்லை. இதே நடவடிக்கை தொடருமாவென்பது வியவகரிக்கக்கூடியது. ஏனெனில் ஜப்பானுக்கு முக்கியத்துவமுள்ள சிங்கப்பூருக்குச் செல்லும் தரைமார்க்கங்களை ஜப்பான் தற்காப்புச் செய்யவேண்டுமானால் ஜப்பானுக்குத் தெற்கு சைனுவில்தான் அதிக உதவிவேண்டும்.

கிழக்கு ஆசிய சமஷ்டியில் ஒரு அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ள இந்தோ-சைனுவின் முன்னேற்றத்துக்காக உதவி கடற் தளபதிக்கு அளிக்கப்பட்ட பூரணமான அதிகாரத்தைப் பற்றி டோமி அறிக்கை நிலயம் வெளியிடும் வியாக்யானத்தில் இந்தோ-சைனு அபாரமான தியாகங்களைச் செய்யவேண்டியிருக்குமென்று தெரியவருகிறது.

### புதிய அதிகாரங்கள்.

சமீபத்தில் ஏற்பட்ட உத்தியோக உயர்வுக்கு முன் டெகோ புதிதாக நியமிக்கப்பட்ட உயர்தர கௌன்ஸிலர்களையும், மாகாண கவர்னர்களையும், டாலாட்டிலுள்ள அவருடைய வேனிர்காலத் தலைமைக் காரியாலயத்திற்கு வரவழைத்தார். தற்பொழுது ஏற்பட்டுள்ள முக்கியமான பிரச்சனைகளும் முக்கியமாக ஜப்பானுடன் ஒத்துழைக்கும் நடவடிக்கைகளை அதிகப்படுத்தும் திட்டங்களும் விவாதிக்கபட்டன. டோக்கியோவுக்கும் சைகோனுக்கும் நேர்முகமாகப் பேச்சுக்கள் நடைபெற முடியாதவை. கிழக்கு ஆசியா சமஷ்டியின் அங்கத்



தினர் என்ற முறையில் இந்தோ-சைனு இப்பொழுது சுதந்திரத்துடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும்.

சுதந்திர நடவடிக்கை என்பது எவ்வகைப்பட்டதென்று கவர்னர் ஜெனரலின் புதிய அதிகாரங்களைப்பற்றி சைகோன் பத்திரிக்கைகள் வியாக்கியானம் செய்யாமல் மௌனம் சாதிப்பதிலிருந்து ஊகித்துக்கொள்ளலாம். மௌனத்திற்குக் காரணங்கள் தெளிவாக இருக்கின்றன. நாட்டின் பொதுஜன உணர்ச்சி ஜப்பானுக்கு விரோதமாக இருந்துவருகிறது. நேசதேசப் படைகள் வெற்றிகரமாக ஆசியாவிலும், ஐரோப்பாவிலும், பிரான்ஸிலும் முன்னேறிவருவதால் இந்த விரோத மனப்பான்மை வலுவடைந்துவருகிறது.

விடுதலை பெற்ற தாய் நாட்டிலிருந்து இந்தோ-சைனுவைத் துணித்துவிட ஜப்பான் இன்னும் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். புதிய பிரதம மந்திரியான குனியாகி காயிஸோவின் கண்காணிப்புக்குட்பட்ட சபு ஜப்பான் பத்திரிகையில் ஆகஸ்ட் 22-ம் தேதியன்று வெளிவந்த கட்டுரையில் கடுமையான நடவடிக்கைகள் நடைபெறுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஜப்பானுடன் இந்தோ-சைனு ஒத்துழைப்பதற்கு இடையூறுகளை உண்டு பண்ணக்கூடிய அநேக கலகக்காரர்கள் இந்தோ-சைனுவிலிருக்கிறார்களென்று அது வெளியிடுகிறது. எதிர்ப்புக் கோஷ்டியாரை ஒழித்துவிடவேண்டியது அவசியம்.

### கலகம் செய்யும் கக்ஷிகள்.

பத்திரிகையில் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது. "ஒத்துழைப்பு பூராவும் ஏற்படவில்லை. ஏனெனில் நிர்வாகத்திலுள்ள சந்தர்ப்பவாதிகள், கிழக்கு ஆசியா சாம்ராஜ்ய நாடுகளில் இந்தோ-சைனு ஒன்ருகயிருப்பினும், கலகக் கோஷ்டியாராகச் சேர்ந்து, பிரிட்டனுடனும், அமெரிக்காவுடனும், சுங்கிங்குடனும் தொடர்பு வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தோ-சைனுவில் ராஜ துரோகிகள் நிலைத்திருப்பதை ஜப்பான் சகித்து நிற்கமுடியாது. டெகோவுக்குப் பூரணமான அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதால் அவர் இந்த விஷயத்தை அதிக சிரத்தையுடன் கவனித்துவரவேண்டுமென்று சொல்லுகிறோம்".

கட்டுரையின் முடிவில் ஜப்பானின் பீதியை வெளிப்படுத்தக்கூடிய பின்கண்ட வாக்கியம் காணப்படுகிறது. "பிரெஞ்சு டார்லானைப் போல் மற்றொருவர் இந்தோ-சைனுவிலிருக்க முடியாது."

இந்தோ-சைனுவின் மாறுபட்ட நிலைமையானது ஜெர்மனியின் கௌரவத்துக்கு அவமானத்தை அளித்துவிட்டது. ஜெர்மனி அனுமதிக்காத எந்த சலுகைகளையும் இந்தோ-சைனுவில் விஷி நிர்வாகம் இதுவரையில் காட்டிவரவில்லை. ஆகையால் ஜப்பான், அநேக லாபங்களைப் பெற்ற போதிலும் எல்லாவற்றையும் அடையமுடியவில்லை. இப்பொழுது இந்தோ-சைனுவில் பிரெஞ்சு நிர்வாகத்துக்கு ஒரு அதிகாரமும் கிடையாது. நேசதேசத்தார்கள் அதை விடுவிக்கும் வரையில் இந்த நிலைமை நீடித்துத்தானிருக்கும்.

---

இந்தியாவில் உண்டாக்கப்பட்ட ஐரோப்பிய காய்கறிகளின் விதைகளை வியாபாரிகள் விற்கவேண்டிய விலையை, புதுக்கோட்டை 44-ம் வருஷத்திய சேமிப்பு, அதிக லாபம் சம்பாதித்தலைத் தடுக்கும் சட்டம் III-ல் 3-வது செக்ஷன், கிளைபிரிவு (1)-ல் சட்டம் (c)-யின்படி அரசாங்கத்தார் கட்டுப்படுத்தியுள்ளார்கள்.

| ந. | காய்கறி. | | பவுண்டுக்கு விலை. ரூ. அ. ப. | அவுன்ஸுக்கு விலை. ரூ. அ. ப. |
|---|---|---|---|---|
| 1 | முட்டை கோஸ் | ... | 50 0 0 | 3 8 0 |
| 2 | பிரஸெல்ஸ் கிழங்கு | ... | 75 0 0 | 4 12 0 |
| 3 | பீட் கிழங்கு | ... | 24 0 0 | 2 0 0 |
| 4 | காரட் கிழங்கு | ... | 18 0 0 | 1 8 0 |
| 5 | நூல்கோல் | ... | 24 0 0 | 2 0 0 |
| 6 | உயர்ந்த முள்ளங்கி | ... | 20 0 0 | 1 8 0 |
| 7 | முள்ளங்கி இதரவகை | ... | 15 0 0 | 1 4 0 |
| 8 | சிவப்பு முள்ளங்கி | ... | 15 0 0 | 1 4 0 |

| ந. | காய்கறி. | பவுன்டுக்கு விலை. ரூ. அ. ப. | அவுன்ஸுக்கு விலை. ரூ. அ. ப. |
|---|---|---|---|
| 9 | இதர முள்ளங்கி ... | 5 0 0 | 0 6 0 |
| 10 | லெட்டேஸ் கீரை ... | 25 0 0 | 2 0 0 |
| 11 | பிரெஞ்சு பீன்ஸ் ... | 1 14 0 | 0 2 6 |
| 12 | மாரோபேட் பட்டாணி ... | 3 12 0 | 0 5 0 |
| 13 | இதர பட்டாணி ... | 1 14 0 | 0 2 6 |
| 14 | பெரியாசம் பாண்டர்லோசா, அல்லயன்ஸ் போன்ற தக்காளி. | 45 0 0 | 3 8 0 |
| 15 | இதர தக்காளி ... | 15 0 0 | 1 4 0 |
| 16 | செலரி ... | 20 0 0 | 0 1 8 |
| 17 | லீக் ... | 25 0 0 | 1 12 0 |
| 18 | பெரிய அவரை ... | 1 14 0 | 0 2 9 |

பிரமிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டென்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 215. (1-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 16- 9-44 | முனிஸிபல் ஆபீஸ் ... | மாலை 6.00 | 20- 9-44 | சத்தியமங்கலம் ... | மாலை 7.30 |
| 18- 9-44 | குடுமியாமலை ... | ,, 7.00 | 21- 9-44 | மிரட்டுநிலை ... | ,, 7.00 |
| ,, | பரம்பூர் ... | ,, 7.30 | ,, | அரிமளம் ... | ,, 7.30 |
| 19- 9-44 | பெருங்களூர் ... | ,, 7.00 | 22- 9-44 | வடையாளிப்பட்டி ... | ,, 7.00 |
| ,, | ஆதனக்கோட்டை ... | ,, 7.30 | ,, | மென்றுகோட்டை ... | ,, 7.30 |
| 20- 9-44 | புக்குடி ... | ,, 7.00 | | | |

### பிரஸங்கம் 216. (2-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 23- 9-44 | மேல சன்னதி சந்தை ... | மாலை 7.00 | 26- 9-44 | விராச்சிலை ... | மாலை 7.30 |
| 24- 9-44 | பூவரசகுடி ... | ,, 7.00 | 28- 9-44 | கல்லூர் ... | ,, 7.00 |
| ,, | வெங்கடக்குளம் ... | ,, 7.30 | ,, | மாத்தூர் ... | ,, 7.30 |
| 25- 9-44 | வெள்ளனூர் ... | ,, 7.00 | 29- 9-44 | பனையப்பட்டி ... | ,, 7.00 |
| ,, | சோனுபட்டு ... | ,, 7.80 | ,, | ராங்கியம் ... | ,, 7.30 |
| 26- 9-44 | கச்சாத்தப்பட்டி ... | ,, 7.00 | | | |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 16— 9—44 | திருமெய்யம். | 23— 9—44 | வெட்டன்விடுதி. |
| 19— 9—44 | வடகாடு. | 24— 9—44 | எம்பல். |
| 21— 9—44 | கீழாநிலை. | 26— 9—44 | குடுமியாமலை. |
| 22— 9—44 | [illegible]க்கோட்டை. | 28— 9—44 | ஆலங்குடி. |
| | | 29— 9—44 | புதுக்கோட்டை. |

144706

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—21-9-44.

3L
V21:54:13 (3m) m.n35
N44